பின்தொடரும்
நிழலின் குரல்

ஜெயமோகன்

பின்தொடரும் நிழலின் குரல்

ஜெயமோகன்

தமிழினி

பின்தொடரும் நிழலின் குரல்

நாவல்

ஜெயமோகன்

தமிழினி

Pinthodarum Nizhalin Kural - Novel - Jeyamohan

முதல் பதிப்பு : 1999

நான்காம் பதிப்பு : 2015

விற்பனையகம் : 25-ஏ, தரைத்தளம், முதல் பகுதி, ஸ்பென்சர் பிளாஸா, 769, அண்ணா சாலை, சென்னை - 2. *தொலைபேசி* : 044-28490027

அலுவலகம் : 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை - 51.

tamizhininool@yahoo.co.in 9344290920

அச்சாக்கம் : ஆர்.கே. பிரிண்ட்ஸ், சென்னை - 14.

ரூ. 630

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

லேவ் தல்ஸ்தோய்க்கும்
அன்னா மிகாய்லோவ்னா லாறினாவுக்கும்
அடிபணிந்து

வணக்கங்களும் நன்றிகளும்

ஒரு படைப்பிலக்கியம் கண்ணுக்குத் தெரியாத நதியொன்றின் கண்ணுக்குத் தெரியும் சிறு பகுதி. வணக்கங்களும் நன்றிகளும் உண்மையில் அந்தப் பிரவாகத்தை அடையாளம் செய்யும் முயற்சியே.

என் அம்மாவின் அண்ணா மறைந்த கேசவபிள்ளை அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தார் கட்சி உடைந்தபோது வலது கம்யூனிஸ்ட் கட்சிக்குப் போனார். சிறு பெண்ணாக என் அம்மாவுக்கு கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் பழக்கமும் சித்தாந்த அறிமுகமும் இருந்தது அது அவளை ஒரு முதல்தர வாசகியாக்கியது. அவர்களைப் பற்றிய பற்பல சித்திரங்களை அம்மாவிடமிருந்து பெற்றுக் கொண்டேன் அவற்றில் ஒன்று கட்சியால் வெளியேற்றப்பட்டு மார்த்தாண்டம் சந்தையில் அனாதைப் பிச்சைக்காரனாக இறந்த இளம் கவிஞனின் கதை.

என் அரசியல் ஈடுபாட்டின் இரண்டாம் கட்டமாக 1984 முதல் 1986 வரை கேரளாவில் காசர்கோடு நகரில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய தொலைத்தொடர்பு ஊழியர் சங்கத்தின் மிகப் பெரிய கம்யூனில் தங்கும் வாய்ப்பு கிடைத்தது சித்தாந்த வகுப்புகளில் பங்கு பெறவும் பல மூத்த தோழர்களுடன் உரையாடவும் சந்தர்ப்பம் அமைந்தது கம்யூனில் இருந்த சிறந்த நூலகத்தின் கம்யூனிச இலக்கிய சித்தாந்த நூல்களில் கணிசமானவற்றைப் பயிலவும் முடிந்தது அதைவிட முக்கியமானது கம்யூனில் இரவுதோறும் நிகழும் நீண்ட விவாதங்கள் விடியும்வரை பேசிவிட்டு கறுப்பு டீ சாப்பிட சந்தைக்குப் போவோம் கூட்டமாக விவாதம் செய்தபடி தெருக்களில் நாங்கள் நடக்கும் சித்திரம் மனதில் எழுகிறது நம்பிக்கையும் ஆர்வமும் போதையேற்றியிருந்த நாட்கள் தோழர்கள் நந்தகுமார், பரதன், கெ ஜி ஜான், நாராயண நாயக், கெ.வி சந்திரன், கெ.கெ.வி நாராயணன் ஆகியோரை நட்புடன் நினைவு கூர்கிறேன். முற்போக்கு எழுத்தை அறிமுகம் செய்த நண்பர் அப்துல் ரசாக் கையும் (ரசாக் குற்றிக்ககம்). குறைந்த காலம் கட்சியின் முதல்நிலை உறுப்பினராக இருந்தேன் எனினும் அது எனக்கு உவப்பூட்டும் அனுபவமாக இருக்கவில்லை

இடதுசாரி அறிவுலகில் இத்தனை பரிச்சயமிருந்தும் ஸ்டாலினிச அழிவுகள் பற்றிய எளிய தகவல்கள்கூட எனக்கு சுந்தர ராமசாமியின் அறிமுகம் மூலமே கிடைத்தன. பிற்பாடு அவர் மகன்

கண்ணனுடனான உரையாடல்கள் உதவின பிறகு நூல்கள் நூற்பட்டியலை இங்கு தர விரும்ப வில்லையென்றாலும் சேரன் தொகுத்த 'ரெஜிசிரிவர்த்தனே'யின் சோவியத் ருஷ்யாவின் உடைவு என்ற கட்டுரை நூல் இந்நாவலுக்கு நேரடி யான தூண்டுதலாக அமைந்ததைக் குறிப்பிட்டாக வேண்டும்.

சுந்தர ராமசாமி, ஆற்றூர் ரவிவர்மா, ஞானி ஆகியோருடனான நட்புக்கு இந்நாவலின் ஆக்கத்தில் மறைமுகமான பெரும் பங்கு உண்டு. மூவருமே கம்யூனிஸ இயக்கத்தில் பங்காற்றி மீண்டவர்கள் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எனது எல்லா படைப்புகளும் அவர்களுடனான உறவின் விளைவுகளே

டாக்டர் எம் கங்காதரன், பி.கெ.பாலகிருஷ்ணன், கே சச்சிதானந்தன் முதலிய மலையாளச் சிந்தனை யாளர்களுடனான உரையாடல்களும் கடிதங்களும் எனக்கு பல திறப்புகளை அளித்துள்ளன. எம். கோவிந்தனின் ஆளுமை எனது அரசியல் பிரக்ஞையில் ஏற்படுத்திய தாக்கம் பெரிது. குறைந்த தருணங்களிலேயே அவரை சந்தித்திருக்கிறேன். அவரது எழுத்துக்கள் என்னை அதிகம் கவர்ந்தது மில்லை எனினும் எப்படி இது நிகழ்ந்தது என்பது புரியவில்லை. படைப்பாளியின் அரசியல் வேறு வகையானது என்ற செய்தி அவரிடமிருந்து அவரது தொடர்ச்சிகளான சுந்தர ராமசாமி, ஆற்றூர் ஆகியோர் வழியாக எனக்கு வந்திருக்கலாம். தருக்கத்தை உதறி உள்ளுணர்வை சார்ந்து நிற்கும் அரசியல் அது. அதிகாரத்திற்குப் பதிலாக கருணையை இலக்காகக் கொண்டது

இலங்கைக் கவிஞர்கள் பலருடைய வரிகள் - பல சமயம் எளிய வரிகள்கூட - எனக்கு மிகுந்த மன் உத்வேகத்தை அளித்துள்ளன. இந்நாவலின் பல பகுதிகளைப் படிக்கையில் அவர்களுடைய உணர்வுநிலைகளின் நீட்சியைக் காணமுடிகிறது.

இந்நாவலின் பிரதியைச் சரிபார்த்த நண்பர் எம் எஸ். அவர்களுக்கு நன்றி.

எழுதத் தொடங்கினால் தடைகளின்றி எழுதுவது என் பாணி ஒரு கட்டுப்படுத்தும் முன்னிலையாக எப்போதும் அருண்மொழி நங்கை இருந்து வந்திருக்கிறார். இந்நாவலில் நண்பர் வசந்தகுமார் ஒரு தூண்டும் முன்னிலையாக விளங்கினார். அவர்

இல்லையேல் இந்நாவல் இவ்வாறு விரிவு கொண்டிருக்காது. இருவருக்கும் என் மனம் நிறைந்த அன்பு.

இதன் கரு விரிவடையத் தொடங்கும் நேரத்தில் இயல்பாக என் மனதில் விரிந்த இரு குறள்கள் மெல்ல மெல்ல என் தியான மந்திரங்களாக மாறின. மீண்டும் மீண்டும் அவற்றை மனதில் ஓடவிட்டபடி தக்கலை-பத்மநாபபுரம் சாலையில் வேகமாக நடக்கும் தருணங்களில் அறச்சீற்றத்துடன் என் மனம் பொங்கும். அல்லது குற்றவுணர்வுடன் சரியும். அபூர்வமாக ஆழ்ந்த துயரத்தில் தன்னை இழக்கும். எழுதி முடித்தபின்பு இப்போதுகூட அவ்வரிகள் அதேயளவு தீவிரத்துடன் என்னை அதிர வைக்கின்றன. இன்னும் ஒரு நாவலை அவற்றிலிருந்து படைத்துவிடலாம் என்று மனம் தாவுகிறது. நமது அறவுணர்வின் சாரமாக என்றுமிருப்பவை வள்ளுவ மாமுனியின் சொற்கள்

ஆளற்ற தேவாலயங்களின் சாளரங்களில் காற்று பீறிடும் ஓங்காரமாக கிறிஸ்துவை இளவயதில் அறிந்ததுண்டு எனது கிறிஸ்துவிற்கு முகம் தந்தவர் தல்ஸ்தோய். என் அகங்காரம் மண்டியிடும் ஒரே இலக்கிய ஆளுமையும் அவர்தான் இந்நூல் அவருக்கும் அன்னா புகாரினினாவுக்கும் சமர்ப்பணம் செய்யப்படுகிறது தல்ஸ்தோய் எழுதாத அவருடைய மாபெரும் கதாபாத்திரம் அன்னா புகாரினினா பெரும் படைப்புகள்தான் வாழ்வை உருவாக்குகின்றன

அவர்களிருவருக்கும் சமர்ப்பணம் செய்யத் தகுதி படைத்ததே இந்நாவல் என்று இதை முடித்த கணம் தோன்றியது இத்தகைய நிறைவின் தருணங்களே படைப்பாளியைத் தன் வாழ்வு குறித்து திருப்தி கொள்ள வைக்கின்றன. தன் பலவீனங்களையும், சிறுமைகளையும், கர்வத்தையும், மூர்க்கத்தையும், சமநிலையின்மையையும் மன்னித்துக்கொள்ள வைக்கின்றன. அவனை நம்பிக்கையின் உச்சியில் சில கணங்களுக்கேனும் நிறுத்துகின்றன இது அப்படிப்பட்ட தருணம்

பத்மநாபபுரம்
26-8-99

வணக்கத்துடன்
ஜெயமோகன்



நிலைக்கண்ணாடியுடன் விவாதித்தல்

1

இடது காலை எடுத்து வைத்துவிட்ட விஷயம், வைத்த மறுகணமே மனதைக் குத்தியது. அருணாசலம் தயங்கினான். அவன் பார்வையை சந்தித்த கௌரி இரு கைகளையும் வீசியபடி, கண்களில் சிரிப்பின் ஒளியுடன், இரண்டு பால்பற்கள் தெரிய, விரிந்த செவ்விதழ்களுடன் தாவ முயன்றது. அதன் குட்டிக்கால்கள் நெளிந்தன. மீண்டும் வீட்டுக்குப் போய் அதை வாரியெடுத்து முத்தமிட்டுவிட்டுக் கிளம்பலாம். மனம் சற்று ஆறுதல் கொள்ளக்கூடும். நாகம்மை அவன் நகர்ந்தபிறகு வாசலைச் சாத்தத் துரிதப்படுபவள் போலத் தெரிந்தாள். சமையலறையில் அடுப்பில் எதையாவது வைத்திருப்பாள். ஒருசில நொடிகளில் பல்வேறு தருக்கங்களின் முனைகளில் தவித்துத் திரும்பிய பிறகு, அருணாசலம் மீண்டும் ஒருமுறை நாகம்மையிடம் ''வாறேன்'' என்று சொல்லி விட்டுப் படியிறங்கினான்.

டி.வி.எஸ். 50 வழக்கம்போல் பற்றிக்கொள்ள மறுத்தது. பல்வேறு விதங்களில் மாற்றியும் சரித்தும் உதைத்தான். ஒருமுறை 'உர்ர்' என்று உதறிக் கொண்ட பிறகு அடங்கிவிட்டது. கீழே அமர்ந்து பெட்ரோல் குழாயில் அடைப்பு ஏதும் இருக்கிறதா என்று பார்த்தான். திட்டவட்டமாக ஏதும் தெரியவில்லை. ஆறு வருடமாக தினம் ஐம்பது கிலோ மீட்டருக்குக் குறையாமல் இந்த வண்டியில் பயணம் செய்கிறான். ஆனால் அதுபற்றி ஏதும் தெரியாது. செந்தகடுபோல தூசி கனத்து ஒட்டியிருந்த அதன் யந்திரப் பகுதிகளில் கையை வைக்கவும் தயக்கமாக இருந்தது. மீண்டும் இருமுறை உதைத்தான். ஏதோ ஒரு கணத்தில் அது பற்றிக் கொண்டதும் மனம் துள்ளியது. அத்தகைய எதிர்பாராத கணத்திற்காகவே அது சிறிது அடம் பிடிக்கலாம்.

உருட்டிவந்து, சாலையை அடைந்ததும் ஏறி, கிளம்பினான். எதிர்காற்று சட்டையை ஊடுருவி, வியர்வையைக் குளிர வைத்தது. மனம் விடுதலை பெற்று வண்டியின் சீரான இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொள்வது தெரிந்தது. காலையில் இடதுகாலை வைத்துக் கிளம்பியதுபற்றி ஞாபகம் வந்தது. சந்தடி அடங்கட்டும் என்று அவ்வெண்

ணம் ஓரமாகக் காத்துநின்றது போலும். இடதுகாலை எடுத்துவைத்தபோது மனம் என் எச்சரிக்கை அடைய வேண்டும்? எப்போதும் அப்படித்தான். கிளம்பும் தருணத்து அவசரங்களும் அன்றைய தினத்திற்கான எதிர்பார்ப்புகளும் கலந்த பரபரப்பில் படியைக் கால் தாண்டும்வரை அவ்விஷயம் ஞாபகம் வருவதில்லை. வந்த உடன் 'சே' என்று உள்ளே ஒரு சலிப்பு ஒலிக்கும். அம்மாவிடமிருந்து வந்த நம்பிக்கை அது. அம்மாவிற்கு சகலவிதமான சகுனங்களிலும் நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் போகும்போது 'வலது கால வச்சுப் போயிட்டு வா. நல்லா படி' என்று தவறாமல் கூறுவாள். தவறாக எடுத்து வைத்துவிட்டால் திரும்பி வந்து அமர்ந்து ஒரு வாய் தண்ணீர் சாப்பிட்டுவிட்டுத்தான் கிளம்ப வேண்டும். அம்மாவைச் சீண்டுவதற்காக வேண்டுமென்றே இடதுகாலை எடுத்து வைத்து வெளியேறி ஓடிவிடுவது உண்டு. இந்த நாற்பது வருட காலத்தில் வாழ்வின் எதிர்பார்க்க முடியாத இயல்பு பற்றி ஆழ்ந்த அச்சம் ஒன்று உள்ளூரக் குடியேறிவிட்டிருக்கிறது. ஒவ்வொரு நினைவுடனும் அது மௌனமாக இணைந்துகொள்கிறது. ஏதோ ஒன்று நிகழவிருக்கிறது, இதுநாள்வரை தப்பிவிட்டோம், ஆனால் அது நிகழ்ந்துவிடும் - எத்தனை அபத்தமான சஞ்சலம் என்று சிரிக்கும் பிரக்ஞையுடன் அந்த அச்சம் மௌனமான குளிராகக் கலந்துவிடுகிறது. இதோ இந்த லாரியின் பின்புறம் வரும்போது ஏன் கைகளிலும் கால்களிலும் அந்த பயம் படர்கிறது?

முதன்முதலாக வலதுகால் சகுனம் ஒரு பிரச்சினையாக ஆன நாள் நினைவிருக்கிறது. ஸ்ரீவனம் தோட்டத்திற்கு வேலை தேடிப்போன நாள். அப்போது நிறைய வாசல்களைத் தட்டித்தட்டி சலித்து வேலை என்பது ஒருபோதும் கிடைக்காமலேயே போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு விட்டிருந்தது. காலையில் இடதுகால் முந்திவிட்ட விஷயம் பேருந்தில் ஏறிய பிறகுதான் ஞாபகம் வந்தது. மீண்டும் வீடுபோக நேரமில்லை. பேருந்தில் உட்கார முடியவில்லை. வாதகதிகளை அடுக்கிஅடுக்கி அச்சஞ்சலங்களை வெல்ல முயன்று களைத்து, நினைவோட்டத்தைத் திசைதிருப்பி, மீண்டும் அதற்கே திரும்பி, அப்பயணம் முழுக்க ஒரு நீண்ட வதையாக இருந்தது. வாழ்வின் மர்மமான இயங்குமுறைக்கும் அவன் கால்களுக்கும் என்ன தொடர்பு? உலக மக்களில் துளியினும் துளியான ஒரு பகுதியினரிடம் உள்ள ஒரு நம்பிக்கை இது. ஆனால் அன்று வேலை கிடைக்கவில்லை. அது எதிர்பார்த்திருந்ததுதான். அவர்களுக்கு விவசாயப் படிப்பில் ஒரு சான்றிதழும் இருந்திருந்தால் நல்லது என்ற அபிப்பிராயம் இருப்பது நேர்முகத்திலேயே தெரிந்தது. ஆனால் பல நாட்கள் மனம் ஆறவில்லை. பிறகு தன் மனதை ஆறுதல் கொள்ளச் செய்வதற்காக அதைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தான். அதை அவனன்றி வேறு எவரும் அறியமாட்டார்கள்; நாகம்மைகூட. நம்பிக்கையினால் அல்ல, தேவையற்ற மன அலைவாட்டத்தைத் தவிர்க்கவே என்று கூறிக்கொள்வான். இப்போது அவன் அந்தப் பழைய அருணாசலம் அல்ல. தயக்கமும் பயமும் நிரம்பிய இளம் குமாஸ்தாவாக நுழைந்து, தொழிற்சங்கத்தில் ஈடுபட்டு, சித்தாந்த

வகுப்புகளினூடாக சிந்தனை விரிவு பெற்று, அன்றாடப் போராட்டங்களினூடாக அழுத்தம் பெற்று, தோழர் அருணாவாக மாறிவிட்டிருக்கிறான். அவனை ஓர் உதாரண கம்யூனிஸ்டாகக் கருதும் சில நூறு பேராவது இன்று உள்ளனர். அத்தகைய மூடநம்பிக்கைக்கு எதிராக ஒரு ஐந்நூறு பக்கப் புத்தகத்தை அவன் இப்போது எழுதிவிட முடியும். பத்துப் பேருரைகளை நடத்த முடியும். அவற்றில் மனிதகுலம் தோன்றிய நாள்முதல் மானுட மனதை இயற்கையின் மர்மங்களும் வாழ்வின் இலக்கின்மையும் எப்படியெப்படி அலைக்கழித்துள்ளன என்று கூற முடியும். எப்படி அச்சம் மிகுந்த அறியாமையிலிருந்து நம்பிக்கைகள் பிறந்து குறியீட்டுச் செயல்பாடுகளாகவும் மாறுகின்றன என்று விளக்க முடியும். மனித மனம் தருக்கங்களினூடாக இயங்கவில்லை; பழக்கங்களினூடாகவும், ஆழ்மனதுடன் சம்பந்தப்பட்ட பலவிதமான குறியீட்டியக்கங் களினூடாகவும்தான் இயங்குகிறது என்று நிறுவ எத்தனையோ நவீன உளவியல் ஆதாரங்கள் உள்ளன. ஒவ்வொரு தனிமனித மனமும் சமூகக் கூட்டுமனதின் ஒரு பகுதியாகவே உள்ளது என்றும், அடிப்படையில் சமூக மனதின் இயக்கமே விஷயங்களைத் தீர்மானிப்பதாக உள்ளது என்றும், எத்தனையோ சந்தர்ப்பங்களை முன்னிறுத்தி அவன் விரிவாக வாதிட்டது உண்டு. அந்தத் தனிமனித மனங்களில் சில மனங்கள் மட்டும் வரலாற்றின் ஒரு துளியாக இருக்கும்போதே வரலாற்றை விலகி நின்று பார்க்கக்கூடிய திறனையும் வளர்த்துக்கொள்கின்றன. அதன்மூலம் வரலாற்றின் போக்குகளையும் அதன் இயங்குவிதிகளையும் அறிகின்றன. அத்திறனை அவர்களிடமிருந்து கற்பதனூடாக சமூகத்தின் ஒரு பகுதியினர் வரலாற்றின் இயங்குவிதிகளை அறிகிறார்கள். சமூகப் பொதுமனதின் இயல்பான ஒட்டுமொத்த இயக்கத்திலிருந்து தங்கள் மனதை விலக்கவும், சமூக மனதின் இயக்கத்தைத் தங்கள் செயல்பாடுகள்மூலம் மாற்றியமைக்கவும் முயன்று வெற்றி காண்கிறார்கள்.

வரலாறு என்பது இயற்கையின் இயக்கத்தில் ஒரு பகுதி. வரலாற்றில் சமூக மனம் ஒரு துளி. மாபெரும் தத்துவ மேதைகளினூடாகவே வரலாற்றின் நோக்கம் சமூக மனதை ஊருடுவுகிறது. யேசுவும், நபியும், சாக்ரடீஸும், ஹெகலும், பாயர்பாகும், மார்க்ஸும், எங்கல்சும் அத்தகையவர்கள். செயிண்ட் தாமஸ் அக்வினாவும், அரிஸ்டாடிலும், லெனினும், ஸ்டாலினும், மாவோவும், நமது தலைவர்கள் ராமசுந்தரமும், எஸ். கேயும், கே.ஆர்.எஸ்ஸும் அம்மேதைகளினூடாக வரலாற்றின் நியதியைக் கண்டடைந்த அடுத்த கட்டத்து மேதைகள். அவர்களைக் கற்றறிந்து பின்பற்றும் நாமே இச்சமூகத்தின் அறிவார்ந்த பகுதியினர். நம்மை புரலட்டேரியன்கள் என்றார் மார்க்ஸ். உயிர்நிலை அறிவுஜீவிகள் என்றார் கிராம்ஷி. ஆம் தோழர், சமூகத்தை வரலாற்றின் பெரும் பிரவாகத்துடன் இணைப்பதுதான் நமது பணி. தருக்க சிந்தனையைக் கூர்மைப்படுத்தி நாம் வரலாற்றின் இயங்குமுறையை அறிகிறோம். அவ்வறிதலை சமூகத்திற்கு எடுத்துச் செல்லவும் அத்தருக்கத்தைப் பயன்படுத்துகிறோம்.

கம்யூனிஸ்ட்டின் ஆயுதம் தருக்கம். கம்யூனிஸ்ட் முதலில் தன் மனதை தருக்கபூர்வமானதாக மாற்றிக் கொள்ளவேண்டும். நம்பிக்கைகள், பழக்கங்கள், உணர்வுகள் அனைத்தையும் தருக்கத்தின் பெரும் திட்டத்திற்குள் உரிய இடங்களில் அவன் உறுதியாகப் பிணைத்து நிறுத்த வேண்டும். பிறகு அவை தருக்கமாகவே நம்மிலிருந்து வெளிப்பட வேண்டும். தோழர், ஒன்று கவனிக்க வேண்டும் நீங்கள். நாம் வரலாற்றின் கருவிகள். நமது பேராசான்களும் வரலாற்றின் கருவிகளே. வரலாறு தன்னை மாற்றிக்கொள்ளும் பொருட்டு நம்மைப் பயன்படுத்திக்கொள்கிறது. வரலாறு என்பது அனைத்து மனிதர்களின் பிரக்ஞைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்ட பெரும்பிரக்ஞை. அனைத்து ஜடங்களினூடாகவும் தன்னை நிகழ்த்தும் ஒரு பெரும் முன்னகர்வு. தோழர், நம்மைவிடவும், நமது இயக்கங்களைவிடவும், அவற்றின் மூல ஊற்றான நமது பேராசான்களை விடவும் பெரியது நாமனைவரின் ஊடாகவும் இயங்கும் வரலாற்றின் நியதி. இதை ஒருபோதும் மறக்கக் கூடாது...

அருணாசலம் புன்னகைத்தான். மனதின் சஞ்சலங்கள் மறைந்து புத்துணர்ச்சி பரவியது. அவன் சிந்திக்க ஆரம்பித்த நாட்களில் அவனிடம் மூத்த தோழர்கள் நீண்ட உரைகளை நிகழ்த்தினார்கள். பிறகு அச்சிந்தனைகளை மட்டுமல்ல, அதன் பாணியையும் அவன் பின்பற்றத் தொடங்கினான். அவன் யோசிப்பது எப்போதும் முன்னால் நிற்கும் இளம் தோழனின் ஐயத்தைப் போக்கும் பாணியிலேயே இருக்கும். அந்த இளம்தோழனின் இடத்தில் அவன் தன்னை வைத்துக்கொள்வதும் எப்போதும் நிகழ்வதுதான். அந்த இளைஞனின் நம்பிக்கைகளையும் அச்சங்களையும் சஞ்சலங்களையும் இவன் சென்ற பத்து வருடங்களாக தொடர்ந்து தன் வாதங்களினால் மோதிக் கொண்டிருக்கிறான். காலப் போக்கில் அந்த மோதல் ஓர் இனிய விளையாட்டாக ஆகிவிட்டிருக்கிறது. படிக்கும் நூல்களை எல்லாம் அந்த மன விவாதம் மூலமாகத்தான் தனக்குள் பிரித்து அடுக்கிக்கொள்ள முடிகிறது. அந்த தொடர் உரையாடலின் ஒரு பகுதியை எப்போது வேண்டுமானாலும் பிய்த்தெடுத்து உரையாகவோ கட்டுரையாகவோ மாற்றிக்கொள்ள முடியும். அவனுடைய உரைகளுக்கு என்றும் ஒரு மரியாதை இருந்து வருகிறது. சித்தாந்த வகுப்புகளில் அவன் பேச எழுந்ததும் எப்போதும் ஆர்வம்மிக்க மௌனம் ஒன்று ஏற்படுகிறது. சலசலப்பை ஏற்படுத்தும் ஐயங்கள் சபையை ஊடுருவும்போது தன்னம்பிக்கை மிகுந்த உறுதியுடன் அவன் பேச எழும்போது தலைவர்கள் முகத்தில் இறுக்கம் தளர்கிறது.

ஆனால் அந்த இளம் அருணாசலம் ஒருபோதும் திருப்தி அடைவதும் தோற்பதும் இல்லை. அனைத்து சொற்களையும் மீறிய ஒரு கணத்தில் அவன் வெளிப்பட்டுவிடுகிறான். வெளிப்பட்ட பிறகு, கோட்பாடுகளில் அவ்வெளிப்பாட்டை அள்ளிய பிறகு, வியப்பும் சில சமயம் அச்சமும் சில சமயம் அருவருப்பும் ஏற்படும். சுகந்தி கல்யாணத்தில் நாகம்மை தன் தங்கையின் கொழுந்தனிடம் பேசியபடி சிரிப்பதைக் கண்டபோது கைகளும்

கால்களும் வெடவெடக்குமளவு உடலில் ஏறிய பதற்றம் ஞாபகம் வந்தது. அன்று மாலை நாகம்மை ''குழந்தையைக் கொஞ்சம் வைத்துக்கொள்ள முடியுமா'' என்று கேட்டபோது, ''ஏன் அப்பதான் கல்யாணமாகாத கன்னின்னு பயக்க நெனப்பாவளா?'' என்று கேட்டுவிட்டான். நாகம்மை கண்கள் சுருங்க படபடப்புடன் கூர்ந்து பார்த்து, ''என்ன சொல்லுதிய?'' என்று அடக்கப்பட்ட குரலில் கேட்டாள். அவன் உடனே கூசி, அதை மறைக்க கடும்கோபத்தை முகத்தில் காட்டியபடி திரும்பிக் கொண்டான். ஆனால் நாகம்மை உடனே இலகுவாகி, சிரித்து, ''இதாக்கும் அப்பம் காரியம்? செரி கௌம்புங்க, வீட்டுக்குப் போகலாம்'' என்றாள். அவனுக்குப் பதற்றம் வடிந்து தவிப்பு ஏற்பட்டது. அவனைப்பற்றி அவள் மனதில் அப்போது என்ன சித்திரம் உருவாகும் என்று எண்ணியபோது அத்தவிப்பு பெருகியது. அவளிடம் பேச வேண்டும் என்று துடிப்பும், பேச முடியாதபடி மனத்தடையும் இருந்தது. அவள் அவனுடைய வெளிப்பாடுகள் எதையும் அப்படியே ஏற்பதில்லை. அவளுக்கென்று அவற்றில் தனித்த அர்த்தம் உண்டு. சோர்வும் தனிமையும் ஏற்பட்டது. ஆனால் திரும்பும் வழிநெடுக அவள் மிகுந்த உல்லாசத்துடன் இருந்தாள். அவனுடைய கோபத்தைச் சீண்டி விளையாடினாள். அவளுடைய உல்லாசத்தின் காரணம் புரிந்தபோது நெருடலாக இருந்தது. ஆனால் அந்தக் கொஞ்சல் தேவையாகவும் இருந்தது.

அன்றிரவு உடல்கள் புணர்ந்து நெளியும்போது வியர்வையும், உடல் வெப்பமும், இருளும் விரித்த திரையினூடாக அவள் குரல் மெல்லிய ஆவி மணம்வீசும் வாயின் அருகாமையிலிருந்து வந்தது, ''என்ன கோவம் என் ராஜாக்கு?'' அவன் சுருங்கிப்போய் அவள் தோளில் முகம் புதைத்தான். அவனைப் பற்றி பிற அத்தனை பேரும் கொண்டுள்ள மனச்சித்திரம் ஏன் அவளில் இல்லை? ஏன் அவனை வெறும் ஆண்மகனாக மட்டும் அவள் எண்ணுகிறாள்? ''நான் உனக்குள்ளவதானே, இப்பிடியெல்லாம் நெனைக்கலாமா'' என்றாள் அவள். அவன் மூளைக்குள் அவளைத் துடிக்கத் துடிக்கத் திரை உரித்து வீச வேண்டும் என்று இம்சை வதைத்தது. ஆனால் அது அவனையும் வீழ்த்திவிடும் என்று உணர்ந்தவன்போல மனதைத் திருப்பிக் கொண்டான். ''நீ எனக்கு மட்டும்தான் வேணும்'' என்றான். அவள் அவனை முத்தமிட்டு ''மூடம், மூடக்குழந்தை'' என்றாள். அவள் மனநெகிழ்வு வெறியான முத்தங்களாக மாறியது. அதைத் தொடர்ந்து அத்தருணங்களில் எப்போதும் வரும் காமவேகம் அவள் உடலை அதிரவைத்தது. அவன் உடல் நெரிபட்டது. அவனுடைய உச்சம் முன்பே வந்துவிட்டிருந்ததனால் மனம் தருக்கத்தின் வடிவத்தைக் கொண்டிருந்தது. அவளுடைய வேகத்தை அது அதிர்ச்சி கலந்த பரபரப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது.

தொய்ந்து அவன் தோள்களில் அவள் சரிந்தபோது உடலைத் தளர்த்தியவனாக எதன் பொருட்டு இந்தப் பரவசம் என்று கேட்டுக் கொண்டான். மனதின் இருண்ட மூலையிலிருந்து ஒரு குரல் அது அவள் காலையில் பேசிக்கொண்டிருந்த இளைஞனின் ஞாபகத்தாலா என்று கேட்டது. அக்கேள்வி எழுப்பிய சுயவதையும் அப்போது தேவையாக

இருந்தது. தன்னிரக்கத்தின் சில படிகளில் வலிந்து இறங்கிய பிறகு சலித்து மீண்டான். அது உண்மையல்ல என்று அறிவான். அவளை வருடங்களினூடாக நெருங்கி அறிந்திருக்கிறான். அவளுக்கு அந்த இளைஞன் மட்டுமல்ல, எந்த ஆணுமே ஒரு பொருட்டு அல்ல. அவளுக்கு அவள் மட்டுமே முக்கியம். அவளுடைய உடல்தான் பெரும்பாலும் அவள். ஆண்கள் அவளை, அவள் உடலை, அடையாளம் கண்டு அங்கீகரிக்கும் புள்ளிகள் மட்டும்தான். அவளைக் கிளர்ச்சியுற வைப்பது ஆண்கள் அல்ல, அவள் உடலை ஆண்கள் அங்கீகரிக்கும் விதம்தான். வர்ணனைகளும் புகழ்ச்சிகளுமே அவளை காமப்பரவசம் அடைய வைக்கின்றன. தன் உடலை அவள் கண்ணாடியிலும் ஆண்களிலும் பிரதிபலித்துப் பார்த்துக்கொள்கிறாள். முடிவின்றி கண்ணாடி முன் நிற்க அவளால் முடியும். இன்று அந்த இளைஞன் அவளைச் சற்று அங்கீகரித்திருக்கலாம். ஒரு குழந்தைக்குத் தாய் என்ற வீழ்ச்சியிலிருந்து ஒரு சில படிகள் மேலேற அது உதவியிருக்கலாம். ஆனால் அந்த இளைஞனின் அங்கீகாரம் எந்த அளவு உண்மையானது என்ற ஐயமும் அவளை அரித்துக்கொண்டிருக்கும். ஏனெனில் அந்த ஒரு தருணத்தில் மட்டும் ஆண்களின் மனதை முடிவின்றி ஊடுருவ அவளால் முடியும். ஆனால் இவனுடைய பொறாமை பல மடங்கு உக்கிரமானது. ஒவ்வொரு துளியிலும் உண்மையானது. அது அவளை சஞ்சலங்களை அழித்துப் பறக்க வைத்திருக்கும். அதன் கடைசிக் கொண்டாட்டம் இன்றிரவில் அவள் அடைந்த இரு உறவுச்சங்கள். இனி அவள் பூமிக்கு இறங்க வேண்டும். அவன் எண்ணத்தை ஆமோதிப்பவள்போல அவள், ''பாப்பாக்கு பால் சூடு பண்ணணும், இப்ப அழும் அது'' என்றாள்.

அருணாசலம் பாலத்தைக் கடந்து மையச் சாலைக்கு வந்தான். பழக்கம் காரணமாக உடலின் இயக்கம் வண்டியைச் செலுத்தியது. காலையின் சாய்வான ஒளியில் கட்டிடங்களின் கண்ணாடிச் சன்னல்கள் மின்னிக்கொண்டிருந்தன. கனரா வங்கியின் முன்பக்கம் துப்புரவுப் பணி நடந்து கொண்டிருந்தது. கூட்டமே இல்லாத தடிக்காரன்கோணம் பேருந்து, உலோகம் தடதடக்கச் சென்றது. தபால்நிலைய மூலையில் மலைபோல வாழைக்குலைகள். தொழிலாளிகள் சிலர் முண்டாசுடன் நின்றிருந்தனர். ஒருவன் அவனுக்கு வணக்கம் சொன்னான். ஆசீர்வாதம் நாடாரின் சாயாக்கடை திறந்திருப்பதைப் பார்த்தான். ஒரு டீ சாப்பிட்டால் பரவாயில்லை என்று பட்டது. நாகம்மை டீ போட்டாலும் காபி போட்டாலும் சகிக்காது. எப்போதுமே எதிர்பாராது வந்து பாலுக்குச் செலவு வைக்கும் விருந்தினர் பற்றிய பீதி அவளுக்கு. ஆனால் உள்ளே போனால் நேரமாகிவிடும். இந்நேரத்தில் அங்கு தொழிலாளிகள் நிரம்பியிருப்பார்கள். டாக்டரைப் பார்த்ததும் அவரவர் நோய் ஞாபகம் வருவதுபோல ஒவ்வொருவராக ஆரம்பித்துவிடுவார்கள்.

செங்கொடிச் சாலை என்று மரப்பலகை காட்டிய சரிவான பாதையில் பிரேக் பிடித்தபடி மெல்ல இறங்கினான். இருபது நிமிடப் பயணத்தில் எத்தனை தூரம் மனம் ஓடியிருக்கிறது என்று எண்ணிக்கொண்டான்.

இடதுகால் முதல் நாகம்மைவரை. அவளுக்கு அவனுடை ய அந்தப் பழக்கம் தெரியாது. அவளில் அப்படி அவனறியாத எத்தனையோ விஷயங்கள் இருக்கலாம். ஒருவேளை அவளுக்குத் தெரியுமோ என்னவோ. திடீரென அவள்மீது ஒரு பிரியம் ஏற்பட்டது. அவனை அவள் ஒருபோதும் தர்மசங்கடமான முனைகளை நோக்கித் தள்ளுவதில்லை. பூமிமீது அவள் ஒருத்தியை மட்டும் அவன் முழுமையாக நம்பலாம். அவனைப் பற்றிய பிரமைகள் ஏதும் அவளுக்கு இல்லை. ஆனால் சிலசமயம் அவளை ஓடஓடத் துரத்துவான். அவளுடைய எல்லையை அறிவதனூடாக தன்னுடைய வாழ்வின் நுட்பமான உண்மையொன்றை அறிந்துகொள்ள முடியும் என்று எண்ணுபவன்போல. உணர்ச்சிகரமான கொஞ்சல் மூலமோ, நுட்பமானதோர் தளுக்கினூடாகவோ நழுவிவிடுவாள். அன்றிரவு அவள் பாலைச் சூடு பண்ணும்போது ''உன்கிட்ட எவனாவது பேசினா நான் அப்பிடியே பொறாமையில புழுங்கிடப் போறேன்னு நெனைக்கிறியா?'' என்று நேரடியாகக் கேட்டான். ''அப்படி நினைச்சுக்கிட்டா என்னவாம், சந்தோஷமா இருக்கில்ல'' என்று கூறிவிட்டு ''கேள்வியப் பாரு, அசடு மாதிரி'' என்று சிணுங்கியபடி பாலுடன் நகர்ந்துவிட்டாள். ஆனால் சிலசமயம் பிளக்க முடியாத மௌனத்தில் அவள் போய் நின்றுவிடுவதுண்டு. அதற்குமேல் அவனால் நகர முடியாது. அந்த எல்லை அவனுக்கும் முன்கூட்டியே தெரியும். அவளுடைய லாகவத்தின்முன் தன் மூளை தோற்றுவிடவில்லை என்று தனக்குத்தானே நிரூபித்துக் கொள்ளும் முயற்சி மட்டும்தான் அது. அதற்கும் அப்பால் அவனுடைய அடிப்படைகளையே அவன் தருக்கம் தகர்த்துவிடக்கூடும் என்று தோன்றும் எல்லைகளுக்கு அவனால் நகர முடியாது. அவற்றை நிர்ணயித்துக்கொள்வதுகூட அவற்றைத் தகர்த்துவிடும் என்று அஞ்சுபவன்போல அவன் மூளை திரும்பிவிடும். இளம் அருணாசலமாக உடனடியாகத் தன்னை மாற்றிக்கொள்வதன் மூலம் அவன் ஒரு கணத்தில் எல்லாவற்றையும் உதறிவிட முடியும். அத்தருணங்களில் எல்லாம் அவனை அணைத்துக்கொள்ள விரிந்த கரங்களுடனும், தொடைகளுடனும் அவள் தயாராக இருப்பதை உணர்ந்ததுண்டு. தடுக்கி விழுந்த குழந்தை அழுதபடி திரும்புகையில் அணைத்துக்கொள்ளும் தாய்போல. அப்படியானால் அவளுக்கும் அவன் எல்லை தெரியும். அவன் மனதை அவள் மனமும் வேறு ஒரு தளத்தில் மிக அருகாமையில் பின்தொடர்கிறது.

தோழர் பி.வி.கெ. நினைவு இல்லம் என்ற சிவந்த பலகையின் கீழாக பெரிய வாசல் திறந்து கிடந்தது. அருணாசலம் உள்ளே வண்டியை ஏற்றிச் சென்று இறங்கிப் பூட்டினான். தலையைக் கையால் சீவி அழுத்தியபடி படிகளில் ஏறும்போது 'அப்படியானால் தருக்கம்' என்ற ஒற்றைச் சொல்லாக மனம் இருந்தது. உள்ளே சென்று, வலது பக்க அறையில் நுழைந்து, மேஜை மீதிருந்த செங்கதிர் தினசரியை எடுத்தபடி தன் நாற்காலியில் அமர்ந்து கொண்டான். கட்டற்ற மனப்பாய்ச்சல் ஒடுங்கி வேறு ஒரு தளத்தை எண்ணங்கள் மேற்கொண்டன. தொடர்ந்து அவ்வறையில் புழுங்கியதனால்

அவ்வறையே அவ்வெண்ண ஒழுங்கின் புறவடிவமாக ஆகிவிட்டிருந்தது. மூன்று பக்கமும் சிமிட்டிப் பரண்களில் தூசி படிந்த புத்தகங்களும், மூட்டையாக கட்டப்பட்ட பழைய ரசீதுப் புத்தகங்களும், கொடிக் கம்புகளும், சுருட்டப்பட்ட கொடிகளும், பானர்களும், போஸ்டர்களும் அடைத்திருந்தன. தரையில் பலவகையான வண்ணங்கள் சிந்தி உலர்ந்திருந்தன. இரண்டு விளம்பரத் தட்டிகள் பெரிய சிவப்பு எழுத்துகளுடன் சாய்ந்து நின்றிருந்தன. பெஞ்சுமீது தூரிகைகளும் சாயப் புட்டிகளும் இருந்தன. தரை கூட்டப்பட்டு, மேஜை ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தது. வசதியாகத் தளர்த்திக் கொண்டான். மெல்லமெல்ல அவ்வறையுடன் மனம் இசைவு பெற்றது. நாளிதழைப் பிரித்தான். 'விவசாயிகளுக்கு மானியம்! வங்க முதல்வர் அறிவிப்பு' என்று தலைப்புச் செய்தி. மூன்றாம் பக்கத்தில் 'முப்பத்தாறாவது ரப்பர் தோட்டத் தொழிலாளர் மாநில மாநாடு! வேலைகள் மும்முரம்' என்று செய்தி இருந்தது. பென்சிலை எடுத்து அதை வட்டமிட்டு அடையாளமிட்டான். நெட்டா பாலன் மாளிகையிலிருந்து துவங்கிய கொடிக்கம்ப ஊர்வலத்தை வாழ்த்தி மாவட்ட அரசு ஊழியர் சங்கச் செயலர் வினாயகமூர்த்தி பேசியதன் மங்கலான புகைப்படம். அருகே அருணாசலம் கைகட்டி நின்றிருந்தான். செய்தியைப் படித்த பிறகு டீ சாப்பிட்டால் நல்லது என்று பட்டது. ஆனால் எவரும் கண்ணில் படவில்லை. இரவெல்லாம் தட்டி எழுதும் வேலை நடந்திருக்கலாம். மேஜைமீது ஓரிரு ஃபைல்களை எடுத்து வைத்தான். மேஜை கலைய ஆரம்பித்துவிட்டது. இனி பகலெல்லாம் அது உருமாறியபடியே இருக்கும். பைலைப் படித்தபோது, 'அப்படியானால் தருக்கம்?' என்ற சொற்கள் மனதில் ஓடியபடியே இருப்பது கவனத்திற்கு வந்தது. அதுவரை யோசித்த எதுவும் கோர்வையாக ஞாபகம் வரவில்லை. அப்படியானால் தருக்கம் என்று மனம் யந்திரம்போல ஒலித்தது. அன்று முழுக்க அனைத்து மன ஓட்டங்களுக்கும் பல்லவியாக இருக்கப் போகும் வரி அது என்று பட்டது.

✦

2

கலைசலான குரல்களுடன் ஏழெட்டு பேர் உள்ளே வந்தார்கள். ஓரிருவர் வெளியே நின்று ஏதோ வேடிக்கையாகப் பேசி உரக்கச் சிரிப்பது கேட்டது. நாராயணன் அருணாசலத்திடம் ''செய்தி வந்திருக்கு பாத்தியளா தோழர்?'' என்றான். ''எல்லாம் எங்கேருந்து வாறிய?'' என்று அருணாசலம் கேட்டான். ''இன்னைக்கு முஸ்தபா கணக்கில சாயா'' என்றான் சதாசிவன். அருணாசலம் வாட்சைப் பார்த்தான். ''இன்னைக்குக் களியல்ல கூட்டம் இருக்கு தோழர்.''

அருணாசலம் செய்தித்தாளை மடித்து மேஜை மீது வைத்தான். ''வசூல் கணக்க சாயந்தரமா எழுதித் தந்துட்டுப் போங்க மணி'' என்றான். ''யாரும் மத்தியானத்துக்குப் பிறவு இங்க நிக்க வேண்டாம். களியலுக்குப் போங்க.''

நாராயணன் ''சாயா சொல்லட்டா தோழர்'' என்றான். அருணாசலம் ''உம்'' என்றான். நாராயணன் ஒருவனிடம் ''மாதவன் நாயரே ஒரு சாயா, கடுப்பம் அதிகமாய். பிறவு ஒரு எட்டுகெட்டு தினேஷ் பீடி'' என்றான்.

அருணாசலம் மேஜையைத் திறந்து சிறிய தொலைபேசிப் புத்தகத்தை எடுத்தான். எண்ணைத் தேடி சுட்டுவிரலால் அழுத்தியபடி, போனை சுழற்றினான். மறுமுனையில் மணியடிக்கையில் தோளால் ரிசீவரை அழுத்திப் பிடித்தபடி ''தின மணி, மலர் ரெண்டும் பாத்தியளா யாராவது?'' என்றான். சங்கடமான முகக்குறிகளுக்குப் பிறகு நாராயணன் ''இல்லை தோழர்'' என்றான்.

''என்னமாம் வாசிக்கப் பழகுங்கடே முதல்ல'', என்றான் அருணாசலம் சலிப்புடன். நாராயணன் ரகசியக் குரலில் ''எல்லா நியூஸ்பேப்பரும் ஒரு காப்பி வீதம் வாங்கிட்டு வாரும்'' என்று மாதவன் நாயரிடம் சொன்னான். அருணாசலத்திடம் மன்னிப்புக் கேட்கும் குரலில் ''தினம்மணி மத்தியான்னம்தான் வரும்'' என்றான்.

அருணாசலம் மலர்ந்து ''வணக்கம் தோழர். நான் அருணா பேசறேன். மாநில ரப்பர் தோட்டத் தொழிலாளர் சங்கம். இல்லை தோழர் இப்பதான் வந்தேன். ஆமா, செங்கதிர்ல பாத்திருப்பிய.

குடுங்க. இல்லையில்லை லைன்ல இருக்கேன்... நல்லா நடக்குது தோழர். ஜரூரா நடக்குதுன்னு பத்திரிகை பாஷைல சொல்லணும் ஹெஹெஹெ...'' என்றான்.

நாராயணன் ''யார் அண்ணாச்சியா?'' என்றான்.

எதிர்முனையில் துறைமுகத் தொழிலாளர் சங்க மாநிலச் செயலர் துரை.ஷண்முகம் அண்ணாச்சியின் கனத்த குரல் ஒலித்தது. ''வணக்கம் தோழர், இப்பதான் முழிச்சேன். நேத்து காரியக் கமிட்டி. தூக்கம் இங்கதான். சொல்லுங்க.''

''தொந்தரவு பண்ணிட்டேனா?''

''சேச்சே, நீங்க வேற. சொல்லுங்க, எப்பிடிப் போவுது?''

''பரவாயில்லை. செலவுதான் நினைச்ச இடத்தில நிக்கேல்ல.''

'மாநில மாநாடுன்னா அப்பிடித்தான்.''

''ரிசர்வ் பண்ணிட்டியளா?''

''மெட்ராஸ் மெயில்ல பண்ணியாச்சுன்னு பையன் சொன்னான். திருவனந்தபுரத்துக்குப் பேசினிகளா?''

''இல்லை, திருவனந்தபுரம் விஷயங்களை வேற ஒருத்தர ஏல்பிச்சிருக்கேன். சி.எம்.வாறது சந்தேகம்தான்.''

''எலக்ஷன் உண்டில்ல? ஏதாவது மாற்றம் வருமா?''

''என்ன எலக்ஷன்? கெ.கெ.எம்முக்குப் போட்டி உண்டா? வருஷா வருஷம் அது ஒரு சடங்குதானே.''

எதிர்முனையில் ஒரு சிறு சிரிப்பு. ''பேச்சில கில்லாடிங்கய்யா நீங்க. கன்னியாகுமரி வட்டார வழக்கிலேயே சமாளிச்சிடுவீங்க. வாழ்த்துக்கள்.''

அருணாசலம் ''எதுக்கு?'' என்றான்.

''எல்லாத்துக்கும்தான்.'' அண்ணாச்சி உரக்கச் சிரித்தார்.

''மாநாட்டில நேரில வந்து வாழ்த்தப் போறீங்க.''

''இது தனிப்பட்ட முறையில...''

''நான் சங்கத்தில ஒரு உறுப்பு. அவ்வளவுதான்.''

''அடடா, பொலிட்பீரோவில இருக்க வேண்டிய ஆளய்யா நீ...''

அருணாசலம் குழப்பமாக போனை வைத்தான். மீண்டும் தொலைபேசி எண்ணை சுழற்றும்போது வாசலில் நிழலாடியது. போனை வைத்துவிட்டு ''வணக்கம் தோழர்'' என்றான். அறைக்குள் பணிவு ஓர் மெல்லிய உடலசைவாகப் பரவியது. காலர் இல்லாத பழங்கால ஜிப்பா அணிந்து,

கைகளை புஜம்வரை சுருட் டி விட் டிருந்த முதியவர் உள்ளே வந்தார். நரைத்த அடர்த்தியான ஸ்ட ாலின் மீசை கூர்மையாகத் திருகப்பட்டிருந்தது. நடுவகிடு எடுத்து வாரிய நரைத்த தலை. நிறம் மங்கிய தவிட்டுநிற பிரேம் கொண்ட மூக்குக்கண்ணாடி. அவர் தூங்கி எழுந்து வருவது போலிருந்தது. ஆனால் அவர் எப்போதும் அதிகாலையில் எழுவார் என்பது அனைவருக்கும் தெரியும்.

டீ வந்தது. அதை வாங்கி உள்ளங்கைகளில் வைத்து உருட்டி சூட்டை அனுபவித்தார். அது மலைப்பகுதிகளில் உ ள்ள பழக்கம். அவர் விரல்கள் தடித்து முரடுதட் டி இருந்தன. அனைவரும் மௌனமாகப் பார்த்திருக்க மெதுவாக டீயை சாப்பிட் டார். ஒரு பீடி எடுத்துப் பற்றவைத்து மூக்குவழியாகப் புகைவிட்டதும் அவர் சகஜநிலைக்கு வருவது போலிருந்தது. அருணாசலம் பீடியைப் பற்றவைத்துக் கொண்டதும் மற்றவர்களும் பீடியைப் பற்றவைத்துக் கொண்டனர்.

''ஏம்பா அர்ணாசலம், மேல தண்ணியே வரேல்லியே, ராத்திரி ரொம்ப இம்சையா போச்சுப்பா'' என்றார் கெ.கெ எம். ''ராத்ரி நம்ம பாஸ்கரலிங்கம் வந்து பாத்தான். டாங்க்ல தண்ணி ஏறல்லன்னு சொன்னான்.''

''பார்க்கிறேன் தோழர்.''

''நீ இண்ணு வேலைக்குப் போகல்லியா?''

''இல்லை தோழர்; எட்டு நாள் லீவு. மாநாடு முடியற வரைக்கும்.''

''ஓகோ'' என்றார் கெ.கெ.எம். ஆர்வமின்றி மெல்ல ஏப்பம்விட் டார். இன்னொரு பீடியைப் பற்றவைத்துக்கொண்டு அமைதியில் ஆழ்ந்தார். அவரைச் சுற்றித் தனிமையும் மௌனமும் எப்போதும் உண்டு. தொழிலாளர்கள் சகஜமாக இருக்க முடியாது. ஒவ்வொருவராக நழுவினர். செய்தித்தாள்களுடன் வந்த அப்புக்குட்டன் ''எதிலயும் நூஸ் இல்ல தோழர். அந்த...'' என்று தொடங்கி, கெ.கெ.எம்மைக் கண்டதும் தயங்கி, செய்தித்தாள்களை மேஜைமீது மௌனமாக வைத்தான். அருணாசலம் அவற்றை அப்படியே கெ.கெ.எம்மை நோக்கித் தள்ளினான். அவர் அதை கவனிக்கவில்லை. விழித்தபடி தூங்குபவர் போலிருந்தார். பல வருடங்களாகவே அவருக்குத் தூக்கமின்மை நோய் உண்டு. என்ன பெயர் அதற்கு - அருணாசலம் நினைவைத் துழாவினான் - இன்சோம்னியா. சிறு வயதில் இரவுபகலாக அலைந்ததன் மூலம் உருவான நோய் என்பார். ஆனால் அப்போதெல்லாம் எந்நேரத்திலும் நினைத்தால் நினைத்த இடத்தில் படுத்துத் தூங்க முடியும். இப்போது நோய் முற்றி, பல நாட்கள் முழு இரவும் தூங்காமல் அமர்ந்திருப்பார். பகலெல்லாம் அவரைச் சுற்றித் தூக்கம் கனத்த அமைதியான படலம்போல பரவியிருப்பதாகப்படும்.

நாராயணன் வருகிறேன் என்று சைகை காட்டிவிட்டு நகர்ந்தான். அருணாசலம் செய்தித் தாள்களைப் பார்த்தான். மீண்டும் கெ.கெ.எம்-ஐப் பார்த்தான். விழித்த கண்களுடன் அப்படியே உறைந்திருந்தார். அவர் ஒரு

படம் போலிருப்பதாக அவனுக்குப் பட்டது. சுவரில் தொங்கும் பெரிய லெனின், மார்க்ஸ், எங்கல்ஸ், ஸ்டாலின் படங்களுடன் இன்னொரு படம். இன்னும் சில நாட்களில் அவர் அங்கு படமாகத் தொங்கப் போகிறவர்தான். ஒருவேளை படிப்படியாக அவர் படமாக மாறி வருகிறார் போலும். கூரிய நாசியும் சிறிய அழுத்தமான உதடுகளும் இரட்டை மோவாயும் கொண்ட அவருடைய சிவந்த முகத்தைக் கூர்ந்து பார்த்தான். சிறுவயதில் உயரமான, திடமான, அழகிய மனிதராக அவர் இருந்திருக்கக் கூடும்.

கெ.கெ.எம் பொதுவாகப் படிப்பாளி அல்ல. பேச்சாளரும் அல்ல. மிகுந்த தைரியசாலி என்று இளம்வயதிலேயே பெயரெடுத்தவர். திருவிதாங்கூர் அரசு அவரைத் திருவனந்தபுரம் ஜெயிலில் அடைத்திருந்தபோது லாண்டிரி மூட்டைகளுடன் அமர்ந்து தப்பினார். அது ஒரு புராணக்கதைபோலப் பரவி வளர்ந்தது. அது ஓர் ஒளிவட்டம்போல அவரது பின்னணியில் இருந்தது. இயல்பாகவே தன்னம்பிக்கையும் திடமும்கொண்ட பேச்சுமுறை அவருக்கு. பிரபலமான 'கெடாவிளக்கத்துக் கீழ்த்தடத்தில்' குடும்பத்தில் பிறந்தவர் மாதவன் நாயர். சிறுவயதிலேயே கட்டளையிட்டுப் பழகியவர். அந்தப் புகழும், சாதியும், தோரணையும்தான் வெற்றிகரமான இயக்க ஒருங்கிணைப் பாளராக அவரை மாற்றியதுபோலும். தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர் ஒரு அமானுடன். முதலாளிகள் உள்ளூர அவரைத் தங்களுக்குச் சமானமானவர் என்று எண்ணுவதிலிருந்து விலக்கிக் கொள்ள முடியவில்லை. தோட்டங்களை நடத்தி வந்த கங்காணிகளும் ரௌடிகளும் அவரை உள்ளூர அஞ்சினர். தோழர் கெ.கெ.எம். தனிமனிதனாக இருண்ட காடுகளை ஊடுருவி, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களை இணைத்து, சங்கத்தை உருவாக்கி வளர்த்தெடுத்தார். இன்று ஒன்றரை இலட்சம் உறுப்பினர்களுடன் விரிந்து கிடக்கும் சங்கம் உண்மையில் அவருடைய தனிப்பட்ட சாதனைதான். அறுபது வருடகால உழைப்புக்குப் பிறகு இன்று அவருக்கு உடைமை என்று உடைகளைத் தவிர ஏதும் இல்லை.

பதினைந்து வருடம் முன்பு, அப்போதே ஆயிரக்கணக்கான தொழிலாளிகளால் கடவுளுக்கு நிகராகக் கருதப்பட்டுவந்த அவர் அவனுடைய ஊழியர் குடியிருப்பு அறைக்கு வாரம் இருமுறை வந்து இரவெல்லாம் பேசுவார். அவருடைய பேச்சுகளில் புதுக்கருத்துகள் இருப்பதில்லை. முரட்டுத்தனமானதும் நட்பார்ந்ததுமான ஒருவகைத் தன்னம்பிக்கையும் தீவிரமும்தான் இருக்கும். அன்று கூச்சமும் பதற்றமும் நிரம்பிய இளைஞனாக இருந்த அருணாசலத்திற்கு அவரது பேச்சு மிகவும் கவர்ச்சியூட்டுவதாக இருந்தது. பிறகு அவன் படிப்பாளியாகவும், சுயமாக சிந்திப்பவனாகவும், அவருக்கு அடுத்தபடியாக சங்கத்தில் முக்கியத்துவம் உடையவனாகவும் மாறியபோது கெ.கெ.எம்முக்கும் அவனுக்குமான உறவில் ஓர் இடைவெளி உருவாயிற்று. அவருக்கு அவனுடைய படிப்புமீதும், அவனுக்கு அவருடைய தோரணைமீதும் கவர்ச்சியும் அவநம்பிக்கையும் ஒரே சமயம் இருந்தன. சில தருணங்களிலேனும்

கெ.கெ.எம். சித்தாந்தப் படிப்பின் அபத்தம் பற்றிக் குறிப்பிட்டு அவனை ஏளனம் செய்ததுண்டு. ஆனால் தொழிற்சங்க நடவடிக்கையில் நேரடிக் களப்பணியின் இடம் குறைந்து, பெரிதும் அறிவுசார்ந்த ஒன்றாக அது ஆவதை கெ.கெ.எம். உணராமலிருக்க முடியவில்லை. ''இப்பம் இது புரட்சியாளனுக்க வேலை இல்லை. வக்கீலுக்க வேலை'' என்பார்.

மெல்ல கெ.கெ.எம். அவனைச் சார்ந்து இருந்தாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அதை அவர் மேலோட்டமான பார்வைக்கு நட்பான கிண்டல் என்று தோன்றும் ஒரு சிரிப்புடன் ஏற்பார். பேச்சுவார்த்தைகளின்போதும், சட்டப் போர்களின் போதும், சித்தாந்த விவாதங்களின்போதும் தன் முதன்மைச் சீடனை முன்னிறுத்திவிட்டு மௌனமாகப் பின்னகர்ந்துவிட்ட குருநாதரின் பாணியில் அமர்ந்திருப்பார். அந்த உதவிக்கு நன்றிக்கடன்போல சபையில் முக்கியமான கருத்துகள் எழுகையில், அவன் அவருடைய வெளிப்படையான ஆமோதிப்பைக் கேட்டுப் பெறுவான். அல்லது தன் பேச்சில் அவருடைய வரி ஒன்றையோ செய்கையையோ மேற்கோள் காட்டுவான். மெதுவாக அவர்களுடைய உறவு ஒருவகையான இசைவைக் கொள்ள ஆரம்பித்தது. ஆனால் எக்கணமும் எதிர்பாராதபடி விரிசல் அல்லது உரசல் ஏற்படும் வாய்ப்பு இருந்தது. கொதிக்கக் கொதிக்க லாவா பீறிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. சங்கத்திற்குப் புதுக்கட்டிட இணைப்பு உருவாக்கியபோது அங்கு ஒரு நூலகம் அமைக்க அவன் விரும்பினான். அதைக் கோபவெறியுடன் அவர் எதிர்த்துத் தடுத்துவிட்டார். அதைச் சரிசெய்ய அவனுக்கு ஒரு மலர் வெளியிட வாய்ப்புத் தந்து அனைத்து உதவிகளையும் செய்தார்.

அவர் மாநிலக் கட்சியில் எஸ்.கெ.ராமசுந்தரத்தின் தலைமையை உணர்வு பூர்வமாக ஏற்றவர். கட்சியில் நுழைந்த காலம் முதல் கடந்த அறுபது வருடங்களாகத் தொடரும் நட்பின் விளைவு அது. விசுவாசம் என்றுதான் அதைக் கூற வேண்டும். கட்சிக்குள் ராமசுந்தரத்தின் அனுமார் என்று அவரைக் குறிப்பிடுவார்கள். ராமசுந்தரத்தின் கருத்துகள் விவாதிக்கப் படுவதுகூட கெ.கெ.எம்மைக் கோபம்கொள்ள வைத்துவிடும். ரப்பர் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வலிமை ராமசுந்தரத்திற்குப் பற்பல உட்கட்சிப் போர்களில் பெரிய ஆயுதமாக இருந்து வந்துள்ளது. அவனையும் ராமசுந்தரத்தின் ஆட்களில் ஒருவராக கெ.கெ.எம். எண்ணுவதை மாற்றும் விதத்தில் அவன் எதுவுமே செய்தது இல்லை. அதுபற்றிய வெட்கம் எப்போதும் அவனுக்கு உண்டு. அது பலசமயம் ராமசுந்தரம்மீதான கோபமாக மாறிவிடும். ஆனால் மாநிலக் கமிட்டியில் தன்னை நன்கு அறிந்து வைத்திருந்தனர் என்று அவனுக்குத் தெரியும்.

கெ.கெ.எம். திடீரென்று எழுந்தார். வேட்டியைச் சரிசெய்தபடி அறையை அப்போதுதான் பார்ப்பவர்போலப் பார்த்தார். ஸ்டாலின் படத்தில் அவர் கண்கள் பதிந்தன. முகம் சுளித்தபடி ''எம்பா அந்தப் படங்களை கொஞ்சம் தொடச்சு வச்சா என்ன?'' என்றார். அருணாசலம் திரும்பிப் பார்த்தான்.

மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் எல்லாப் படங்களும் தூசடைந்திருந்தன.

''துடைக்கச் சொல்றேன்.''

''சொல்லித்தான் செய்வானுவளா?'' என்றார் கெ.கெ.எம். அவர் மனம் எப்படி ஓடியதோ ''அப்புக்குட்டன் எப்படி இருக்கிறான்?'' என்றார். அப்புக்குட்டன் நாராயணனின் அப்பா. பேணு தோட்டத்தில் சங்கக் கிளைத் தலைவராக இருந்தவர். இறந்து ஏழு வருடங்கள் தாண்டிவிட்டன. அருணாசலம் பதில் கூறவில்லை.

கெ.கெ.எம். ''குளிச்சிட்டு வாறேன். அந்தக் கோனாருக்கு ஒரு லெட்டர் எழுதணும் இல்லியா?'' என்றார். கோனார் ஜாதியைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர்.

''எழுதியாச்சு தோழர். நீங்க நேத்து கையெழுத்துப் போட்டிய. நீங்க குளிச்சிட்டு வாங்க.''

''அந்த பைப்ப செரி பண்ணுடே. நாத்தம் வயித்தப் பிடிக்குது.''

கிழவர் மெல்ல நடந்தார். அவர் போனதும் இரண்டு தொழிலாளர்கள் எட்டிப் பார்த்தனர். ''ஏம்பா தினம் யாராவது இந்தப் படங்களை துடைச்சு வச்சா என்னப்பா? இத்தனை பேர் இருக்கிய'' என்றான் அருணாசலம்.

''துடைக்கிறோம் தோழர்.''

''நல்லா துடைச்சீங்க போங்க. கெ.கெ.எம். வந்ததும் அதைத்தான் பாப்பார்னு தெரியுமே. எங்கேப்பா பி.பி.?''

''இன்னும் வரலை.''

''களியலுக்குப் போறவங்க போகலாம். பேனர் கட்டறவங்க மட்டும் இங்க இருந்தாப் போரும்.''

கும்பல் கலைந்தது. நாராயணன் பெஞ்சில் அமர்ந்து பீடியைப் பற்றவைத்தான். புகைவிட்டபடி ''இந்த தடவை கெ.கெ.எம்மைக் கழட்டி விட்டுடுவாங்கன்னு கேள்விப்பட்டேன் தோழர்'' என்றான்.

அருணாசலம் மனம் அதிர அவனைக் கூர்ந்து பார்த்தான். அவ்விஷயத்தை அவன் தன்னிடமிருந்தே தவிர்த்து வந்திருப்பதாக அறிந்தான் ''யார் சொன்னது?''

''கீர்த்தி மெட்ராஸ் போயிருந்தப்ப கேட்டவதந்தி, உண்மையா?''

''எங்கிட்டே யாரும் சொல்லல்ல.''

''ராமசுந்தரம் இறந்த மறுநாளே சொல்ல ஆரம்பிச்சிட்டாங்க. மூணு வருஷம் தாக்குப் பிடிச்சிட்டார். இந்தத் தடவ மாநிலக் குழுவில எல்லாரும் ரொம்பத் தீவிரமா இருக்கிறதாக் கேள்வி.''

''நமக்கு எதுக்கு அதெல்லாம்? நம்ம கடமையை நாம செய்றோம்.''

''இருந்தாலும்...''

''என்ன இருந்தாலும்?'' அருணாசலத்தின் குரல் சட்டென்று உயர்ந்தது. ''உங்களுக்கு என்ன தெரியும் கெ.கெ.எம்.மப் பத்தி? பல்லக்கில போற குடும்பம் அவருடையது. அந்தக் காலத்தில் இன்டர்மீடியட் படிச்சவர். அவர்கூட படிச்சவங்க இன்னைக்கு எங்கியோ இருக்காங்க. துண்டு பீடியும் கடும் சாயாவும் குடிச்சிட்டு கெ.கெ.எம் மலைமலையா ஏறி இறங்காம இருந்திருந்தா இன்னைக்கு நீயும் நானும் முதலாளி வீட்டுப் பொம்பிளைகளுக்குத் தண்ணி இறைச்சு ஊத்திக்கிட்டு, புறத்திண்ணையில இருந்து பழங்கஞ்சி குடிச்சுகிட்டு இருப்போம். அத மறந்திரக் கூடாது.''

''இல்லை தோழர், அதையெல்லாம் மறக்க முடியுமா? நான் சொல்ல வந்தது...''

''மறந்துட்டிங்க. இண்ணைக்கு அவரு உபயோகமில்லாத கௌவன். மாநிலக் கமிட்டிக்குள்ள இருக்கிற அரசியல் எதிரிகள் அவரை தூக்கிட்டாவண்ணு சொன்னா பாரம் ஒழியுதுண்ணு நெனைப்பிய. வண்டி மாட்டுக்கு வயசானா கசாப்புக் கடைதானே?''

''தோழர் நீங்க என்னைத் தப்பா புரிஞ்சுக்கிட்டிய'' என்றான் நாராயணன். ''நான் ஏன் இப்ப இதைச் சொல்ல வந்தேன்னா...'' அவன் தயங்கினான். அவன் கண்களும் அருணாசலம் கண்களும் சந்தித்து விலகின.

அருணாசலம் குரலைத் தணித்தான். ''அம்பத்தொண்ணில குழித்துறை ஸ்பெஷல் போலீஸ் கேம்பில பதினொரு நாள் கெ.கெ.எம்மை சித்ரவதை செய்தாவ. மூத்திரத்தக் குடிக்க வச்சாவ. கை நகங்களைப் பிய்ச்சு எடுத்தாங்க. எதுக்கு? தோட்டத் தொழிலாளர் போராட்டத்த நசுக்க. அண்ணய்க்குத் தோழர் ஒரு நிமிஷம் அவரைப் பத்தி நினைச்சிருந்தாருண்ணா நாம இண்ணைக்கும் அடிப்படை உரிமையாட்டு கொண்டாடிட்டிருக்குத பணிப்பாதுகாப்பு கிடைச்சிருக்காது. அதுக்க மேலநிண்ணுட்டுதான் மீதி எல்லாத்தயும் போராடி அடை ஞ்சோம். கெ.கெ.எம்முக்கு நாமளும் நம்ம தலைமுறைகளும் பட்டிருக்கக்கூடிய கடனை ஒரு நாளைக்கும் தீர்க்க முடியாது.'' அருணாசலத்தின் குரல் தழுதழுத்தது. முகம் சிறுத்துச் சிவந்தது. சட்டென்று மேஜையை இழுத்துத் திறந்து டைரியை எடுத்துப் பிரித்தான். நாராயணன் கண்களும் கலங்கிவிட்டன. சில நிமிடங்கள் அருணாசலம் டைரியை புரட்டும் ஓசை மட்டும் கேட்டது.

மெதுவாக அருணாசலம் சுதாரித்துக்கொண்டான். ''மாநாட்டில சில புது ஆளுக சேருயதாட்டு சொன்னிய. என்ன ஆச்சு காரியம்?''

''எ.ஐ.பி.எல்.யூ.வில் இருந்து ஆறு பேரு வாறது உறப்பு. பந்தலுக்கு ஊர்வலமாட்டு வந்து மனுக்கொடுத்து உறுப்பினர் கார்டு வாங்குவாவ. சுப்ரமணியம் எல்லாத்துக்கும் பொறுப்பு.''

''பி.எல்.யூ.ஐ.யில இருந்து?''

''அது இன்னும் படியேல்ல. ஒரு புதுப்பையன். இங்க வந்து ஒரு வருஷம்தான் ஆவுது. அங்க ஒட்டாம இருக்கான்னு கேள்விப்பட்டு போயிப் பார்த்துப் பேசினேன். பிடிதராம இருக்கான்.''

''விடப்பிடாது. எ.ஐ.பி.எல்.யு. ஒரு கலகலா கூட்டம். அங்கேயிருந்து நாலுபேர் வாறது ஒரு பெரிய விஷயம் இல்லை. பி.எல்.யூ.ஐ. இப்பம் வளர்ந்துட்டு வாற இயக்கம். போன வருஷம் நம்ம ஆளு எட்டுபேரு அங்க போயிருக்காவ. ஒராளாவது அவன் ஆளு இங்க வரணும்.''

''இந்தப் பயலைத் தவிர வேற ஸ்கோப் இல்லை.''

''இவன் வீடு எங்க?''

''கருங்கல் பக்கமா எலந்தடியடின்னு ஒரு ஊரு.''

''நாளைக்கு காலம்பற ஏழு மணிக்கு வீட்டுப் பக்கமா வந்தா ரெண்டு பேருமாட்டு போயிப் பார்க்கலாம்.''

''இங்க நோயல் தோட்டத்திலதான் பயலுக்கு வேல.''

''இல்ல, நாம வீட்டில போயிப் பார்க்கலாம்.''

''வீட்டிலே போயா, அவனயா?''

''பார்க்கணும். வீட்டுக்குப் போறதுல நிறைய நன்மை இருக்கு. நம்ம ஆளுகள் வீட்டயும் வேலயயும் பிரிச்சுத் தனித்தனியா வச்சிருக்காவ. இங்க கம்யூனிஸ்டா இருக்கவன் அங்க பரம பக்தனா, சாதியாளா இருப்பான். வீட்டுக்குப் போறது அவனுக்கச் சொந்த உலகத்தில நுழையிறது மாதிரி. கொஞ்சம் மனம் கலைஞ்சு போய் இருப்பான். அப்ப தனிப்பட்ட முறையில கொஞ்சம் உருக்கமா பேசினா காரியம் நடந்திடும்.''

நாராயணன் புன்னகைத்தான்.

''இது கெ.கெ.எம். டெக்னிக்'' என்றான் அருணாசலம்.

''ஆமா'' என்றான் நாராயணன். ''எங்க அம்மா இண்ணைக்கும் கெ.கெ.எம்முக்கு மீனும் கிழங்கும் செய்து போட்ட காலங்களைப் பத்தி பேசிட்டிருப்பா.''

கெ.கெ.எம் வந்தார். குளித்து உடைமாற்றியிருந்தார். தலையில் நரைத்த மயிர்கள் மெழுகுபோல ஒட்டியிருந்தன. மெதுவாக பெஞ்சில் அமர்ந்ததும் ஏறிட்டு ஸ்டாலின் படத்தைப் பார்த்தார். அவர் முகம் மாறியது ''இந்தப் படத்தைத் துடைக்கச் சொன்னேன்...'' என்றார்.

அருணாசலம் சற்று சீண்டப்பட்டான். ''இங்க அவனவன் ஆலாப் பறந்திட்டிருக்கான் தோழர். இண்ணைக்குக் கொடிமர யாத்திரை கனியலுக்கு வருது.''

''இதுக்கு எத்தனை நேரம் ஆயிடும்? தலைவர்கள் மேல மரியாத இல்ல, அம்பிடுதான். சம்பளம், போனஸ், அரியர்ஸ்... வேற என்ன தெரியும் இவனுவளுக்கு.''

நாளைக்குத் தன் படமும் இதேபோலத் தூசி படியும் என்று கிழவர் பயப்படுகிறாரா என்று எண்ணிக்கொண்டான் அருணாசலம். சற்று முன் வரை அவன் பேசிய நெகிழ்வான பேச்சு ஒரு சுயஎமாற்று என்று பட்டது. மனஆழத்தில் அவன் அறிந்த ஒரு விஷயத்தை ஒத்திபோடும் முயற்சி அது. இந்த மனிதர் அவனைப் பொறுத்தவரை ஒரு படம். அவருடைய தியாகங்கள் அனைத்தும் இறந்தகாலம் சார்ந்தவை. மனம் என்பது நிகழ்காலத்திலிருந்து எதிர்காலம் நோக்கித் தாவும் ஒரு தொடர்சலனம். அதற்கு இறந்தகாலத்தின் ஒவ்வொரு விஷயமும் தூரம். இன்றும் நாளையும் ஒரு விஷயம் எப்படிப் பயன்படும் என்பதில் மட்டும்தான் அதற்கு அக்கறை. அது இயற்கைதான். இறந்த காலத்தை உதறாது வாழ்க்கை இயங்க முடியாது. இறந்தகாலம் அத்தனை பிரம்மாண்டமானது. மேற்கொண்டு யோசிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு போனை எடுத்தான். ''கோனாருக்கு ஒரு லைன்போடு, நானும் ஒரு வார்த்தை சொல்லுதேன்'' என்றார் கெ.கெ.எம். அருணாசலம் அவரைப் பார்ப்பதைத் தவிர்த்தான். தனக்குள் எழும் எரிச்சலை செரித்துக்கொள்ள முயன்றான். அதற்குரிய வரிகளை உருவாக்க முயன்றான். மூளை எங்கோ தடுக்கி நின்றுவிட்டிருந்தது. 'அப்படியானால் தருக்கம்' என்ற வரியில் மீண்டும் மனம் உரசிச் சென்றது.

◆

3

காலையில் அருணாசலம் எழுந்து ஏழுமணிச் செய்திக்காக ரேடியோவைத் துழாவிக்கொண்டிருக்கும்போது வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது. படி ஏறி வந்த இளைஞனை எங்கோ பார்த்தது போலிருந்தது. குளித்து ஈரமாகத் தலைசீவியிருந்தான். ஏறத்தாழ மயிரின் நிறம்தான் முகமும். ''வாங்க'' என்றான் அருணாசலம். ''தோழர் நாராயணன் அனுப்பினாவ'' என்றான் அவன். ''கருங்கல் பக்கம் போவணும் எண்ணு சொன்னியளாம். எனக்க வீடு அங்கதான்.''

''நீங்க எந்தத் தோட்டம்?''

அவன் புரிந்துகொண்டு ''என் பேரு கோலப்பன். தடிக்காரன்கோணம் எல்.எம். தோட்டம்'' என்றான்.

''ஓகோ. கிளைக் கூட்டங்களில் பார்த்திருக்கம் இல்லியா?'' அருணாசலத்திற்கு வெட்கமாக இருந்தது. ஒரு கிளைச் செயலாளரின் முகமே நினைவில்லை என்றால்... கெ.கெ.எம். இப்போதும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடக் கூடியவர்.

கோலப்பன் ஸ்டூலில் அமர்ந்தான். ''காலமே கிளம்பணும்னு சொன்னியளாம். தோழர் சொன்னார்.''

''இப்பம் ஒரு நிமிஷத்தில வந்திடுதேன். காப்பி குடிக்குதியளா?''

''இல்ல இப்பம்தான் குடிச்சேன்.''

''பரவாயில்ல. வீடுவரை வந்திட்டியள்ல? நாகம் ஒரு காப்பி எடு சாருக்கு.''

நாகம்மை மெட்டி ஒலிக்க வந்து எட்டிப் பார்த்து ''வாங்க'' என்றாள். கோலப்பன் பிரமை பிடித்ததுபோல வணங்கினான்.

''சார் தடிக்காரன்கோணம் எல்.எம். எஸ்டேட்ல வேல பாக்கிறார்'' என்றான் அருணாசலம். நாகம்மை புன்னகையுடன் ''இரியுங்க'' என்றாள்.

வேகமாக பின்புறம் போய் கிணற்றிலிருந்து நான்கு வாளி நீரை மொண்டு நேரடியாகத்

தலையில் விட்டுக்கொண்டான். தலை துவட்டும்போதுதான் பல் தேய்க்கவில்லை என்பது ஞாபகம் வந்தது.தகர டப்பாவில் சிவப்புப் பல்பொடி இருந்தது. வேகமாக தேய்த்துக் கொண்டிருந்தபோது நாகம்மை எட்டிப் பார்த்து 'இட்லி தின்னுட்டுதானே போறிய?'' என்றாள்.

''இல்லல்ல நேரமாயிட்டுது. போற வழியில ரெண்டு தோசை திங்குதேன். காப்பி குடுத்தியா?''

நாகம்மை பேசாமல் உள்ளே போனாள். சங்கம் சார்ந்த யார் வந்தாலும் அவள் முகம் மாறிவிடும். உள்ளே அவள் என்னவோ கூறுவது கேட்டது.

ஈரத்தலையுடன் அவன் வந்தபோது கோலப்பன் தினமலர் வாரமலரில் ஈடுபட்டிருந்தான். வைத்துவிட்டு ''நீங்க சாப்பிட்டு வாங்க தோழர்'' என்றான்.

''நேரமாயிட்டுது, இரியுங்க ஒரு நிமிஷம்'' என்று உள்ளே போனான். காதில் தண்ணீர் புகுந்துவிட்டிருந்தது. நடக்கும்போது குலுங்கியது. சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டான். பாண்ட் காலோரம் அழுக்காக இருந்தது. வேறு பாண்ட் ஏதும் தென்படவில்லை. மாட்டியபிறகு சீப்பைத் தேடினான். கிடைக்கவில்லை. வாரமலர், சிறுவர் மலர் என்று பழைய இதழ்கள்தாம் சிக்கின. அவனுடைய புத்தக அடுக்கின்மீது எண்ணைப் புட்டியும் பவுடர் டப்பாவும் இருந்தன. விர்ரென்று கோபம் வந்தது. அவ்வளவையும் அள்ளி வெளியே போட வேண்டும் போலிருந்தது. அவசரம் தான் கோபத்தைத் தாண்டிச் செல்ல வைத்தது. தலையைக் கையால் வாரியபடி அவற்றை எடுத்து ஜன்னல் கட்டைமீது வைத்தான். கைப்பையை எடுத்து டைரியும் பிற குறிப்புத்தாள்களும் சாவியும் இருக்கிறதா என்று பார்த்தான். கோலப்பன் மீண்டும் வாரமலரில் மூழ்கியிருந்தான். ''ஒரு நிமிஷம்'' என்று புன்னகைத்தபிறகு சமையலறைக்குப் போனான். நாகம் புகைக்குள் நின்றிருந்தாள். பின் வராந்தாவில் தூளியில் கௌரி தூங்கியது.

''நாகம் ஒரு பத்து ரூபா இருக்குமா?''

''பத்து ரூபாயா? என்னக்ககிட்ட ஏது அம்பிடு பணம்? அதும் மாசக் கடைசியில?''

''இல்லாம இருக்காது. உன்னை எனக்குத் தெரியும். குடுமே. ரொம்ப அவசரம்மே...''

''சங்க வேலைண்ணா சங்கப் பணத்தில செலவழிக்கிறதுக்கு என்ன?''

சங்கப்பணம் மாதம் இருநூறு ரூபாய். அது பத்து நாளுக்குக்கூட வராது. மாநாட்டு அலைச்சல். அதை சொல்லப் போனால் நாகம் பொங்கிவிடுவாள்.

''குடுக்கிறதுண்ணா குடு.''

''குடுக்கல்ல போங்க.''

அருணாசலம் கோபத்துடன் வெளியே வந்தான். கோலப்பனிடம் பணம் இருக்கும். ஆனால் பெட்ரோல் தீர்ந்துவிட்டால் அவனிடம் கையேந்த முடியாது. கைவசம் ஏழு ரூபாய்தான் இருந்தது. திரும்பிச் சென்று மேஜை இழுப்பையும் புத்தக அடுக்கின் இடுக்குகளையும் துழாவினான். எண்பது பைசாதான் கிடைத்தது. ஒரு வாரமாகத் தேடியபடி இருந்த ஒரு சாவியும் கிடைத்தது. வேறு வழியில்லை. போகும்போது நாயர்கடையில் கேட்டுப் பார்க்க வேண்டியதுதான்.

''போலாம் தோழர்'' என்றான்.

கோலப்பன் வாரமலரை வைத்துவிட்டுப் பின்னால் வந்தான். ''ஏன் தோழர், குஷ்புவுக்கெல்லாம் நாற்பது லட்சம் ரூபாய் தருவாவளா?'' என்றான்.

''ஏன், எதுக்கு இப்ப?''

''இல்ல, போட்டிருக்கான். நம்ம மாநாட்டு பட்ஜெட் ஒண்ணரை லட்சம். அதுக்கு மூணு மாசமா தமிழ்நாடு முழுக்க வசூல் பண்றம்.''

''நாம உழைக்கும் வர்க்கம் தோழர்'' என்றபடி அருணாசலம் வண்டியை எடுத்தான். ''இந்த வண்டியை எண்ணூறு ரூபாய்க்கு வாங்கினேன். நாலு கை மாறின வண்டி. இதை ஓவர் ஆயில் பண்ண முடியல்ல. களட்டினா திரும்ப மாட்ட முடியாது. ஓடுத வரைக்கும் லாபம் சார்னு ஒர்க்ஷாப்ல சொல்றான். என்னைக் கேட்டா இதுமேல இருக்கிற அழுக்குக்க பெலத்திலதான் வண்டியே ஓடுது.'' வண்டி இயங்க வழக்கம்போல முரண்டு பிடித்தது. ''ஒரு மாருதி கார் எத்தனை லட்சம் ரூபாய் தெரியுமா? ஒரு ஏரோப்ளேன் என்ன விலை இருக்கும்? எல்லாம் நம்ம உழைப்பு... நம்ம ரத்தம்.''

இடுப்பில் தூங்கி வழிந்து சிணுங்கிக்கொண்டிருந்த கௌரியுடன் நாகம்மை எட்டிப் பார்த்தாள். ''என்ன?'' என்றான் கடுமையாக.

''வந்திட்டுப் போங்க.''

உள்ளே போனான். அவள் ஒன்பது ரூபாய் தந்தாள். இரண்டு ரூபாய் நாணயங்கள் இரண்டு. ஒரு ஐந்து ரூபாய். முகம் வியர்த்திருந்தது. மூச்சு வாங்கியது.

''எங்கேருந்து ரூபா?''

''பகவதி அக்கா கிட்டே கேட்டேன்.''

அவனுக்கு சற்று சோர்வு ஏற்பட்டது. அதை எதிர்பார்த்திருந்தான். அவளைச் சுரண்டுவதுதான் அது. வழக்கமாக அத்தருணங்களில் செய்வது போல முகத்தை சிடுசிடுப்பாக வைத்துக்கொண்டு மௌனமாக வெளியே வந்து வண்டியை உதைத்தான். அவனை பயந்ததுபோல அது கிளம்பியது.

பாதை வழக்கம்போல அவனுடைய தத்தளிப்புகளை விலக்கி விடுதலையுணர்வைத் தந்தது. கோலப்பன் குறுக்குவழி தெரிந்து

வைத்திருந்தான். வெயிலின் வெக்கையை உணர ஆரம்பித்தபோது கருங்கல் தாண்டி விட்டிருந்தது. சாலையோரத்தில் சிறிய சாயாக்கடை இருந்தது. கிராமத்துக் கடைகளுக்குரிய கண்ணாடிப் பெட்டி. உள்ளே புட்டு, ஆப்பம், பப்படம். தொங்கும் வாழைக்குலைகள். பிசுக்குப் படிந்த மேஜைகள். ரேடியோவில் இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவை. அருணாசலம் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கிப் படியேறினான். ஒட்டு வராந்தாவில் அமர்ந்திருந்தவர்களில் ஓர் இளைஞன் ''வணக்கம் தோழர்'' என்றான்.

''வணக்கம் தம்பி. உங்க பேரு?''

''கணேசன், முற்போக்கு இளைஞர் சங்கத்திலே இருக்கேன்.''

''ஓகோ, வாங்க டீ சாப்பிடலாம்.''

''இல்லை தோழர் நீங்க சாப்பிடுங்க.''

உள்ளேயிருந்து ஒருவர் எட்டிப் பார்த்து ''வாங்க தோழர் இரியுங்க, இரியுங்க'' என்றார். அவர்கள் அமர்ந்ததும் ''டேய் நாணப்பா, சாருக்கு புட்டும் பப்படமும் பயறும் எடுடே'' என்று உத்தரவிட்டார்.

''இல்லல்ல, இட்லி போரும். நீங்க இரியுங்க'' என்றான் அருணாசலம்.

''இருக்கட்டும். சீக்கிரம் எடுடே'' என்றார் அவர் ''எனக்க பேரு கொச்சன். பீடித் தொழிலாளியாக்கும்.''

''நீங்க சாப்பிட்டியளா?''

''இப்பம்தேன்.''

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது கடை முதலாளியிடம் தன் கணக்கில் அதை எழுதச் சொன்னார் கொச்சன். அருணாசலம் மறுக்க முடியவில்லை.

''அப்ப நான் எறங்குதேன் சகாவே. இண்ணு ஒரிடம் வரெ போணும். சகாவு கெ.கெ.எம். சொகமாட்டு இருக்கியாரா?''

''ஆமா.''

''கெ.கெ.எம். எனக்க கல்யாணத்துக்கு வந்தாரு தோழர். மூத்தபெய வயறு கலங்கி செத்தப்பளும் ஓடிவந்து உனக்கு நானுண்டுடா கொச்சா எண்ணு சொன்னது சகாவுதான். இப்பம் வரியம் இருவதாச்சு. கேட்டியாடே கெணேசா, உனக்கொக்கே அறியாது இக்காரியங்க. சகாவு கெ.கெ.எம். பிரிட்டிஷ்காரனுக்க தோக்க தோல்ப்பிச்ச ஆளாக்கும். சகாவுக்கு மரணம் இல்ல கேட்டியளா. எங்கள மாதிரி சங்கில சகாவுக்க பேரை எழுதி வச்சிருக்குத ஆயிரம்பேரு இந்த நாட்டில உண்டும்.'' கொச்சனின் குரல் இடறியது. வெட்கியவர்போல வேறுபக்கம் திரும்பினார். விடுவிடென்று இறங்கி நடந்தார்.

அருணாசலம் மௌனமாக சாப்பிட்டான். கோலப்பன் ''கெ.கெ.எம் கூட இந்தப் பக்கமா வந்திருக்கியளா தோழர்'' என்றான். கெ.கெ.எம் பற்றிப்பேச அவன் ஆசைப்படுவது போலிருந்தது.

''வந்ததுண்டு, ஆனா எனக்கு எடங்களையும் மனுஷங்களையும் ஞாபகம் வச்சுக்கிடுயது ரொம்பக் கஷ்டம்.''

''கெ.கெ.எம் ஆரையும் மறக்கமாட்டார்னு சொல்லுவாவ'' என்றான் கோலப்பன்.

''அவருக்க தலைக்குள்ள ஊருகளும் பேருகளும் மட்டும்தான் எண்ணு கட்சியில ஒரு பேச்சு உண்டு'' என்றான் அருணாசலம்.

அந்த பதில் கோலப்பனை சற்று அதிர்ச்சிகொள்ளச் செய்தது. அந்த முகமாற்றம் அருணாசலத்திற்கு எச்சரிக்கையாயிற்று. ''ஆனா ஒரு கம்யூனிஸ்டுக்க மனசில இருக்க வேண்டியது அதெல்லாம்தான். இந்த மக்கள் - இவங்களுக்காகத்தான் கெ.கெ.எம். இதுவரை வாழ்ந்தாரு. தத்துவமும் சித்தாந்தமும் எல்லாம் நமக்குத்தான். கெ.கெ.எம். தெருவில இருந்து அதையெல்லாம் படிச்ச மனிதர்.''

கோலப்பன் எளிய மனிதன். அவன் முகம் மலர்ந்தது. ''ஆமாம் தோழர். அவரைப் பாக்கிறப்பவே மனசில ஒரு... ஒரு இது... என்ன சொல்லுயது. ஒரு மாதிரியா ஆயிடுது. நாம சொத்து சுகம் சேக்கிறது, குழந்தை குட்டி எண்ணு இருக்கியது எல்லாம் பெரிய பாவம் எண்ணு ஆயிடுது. முப்பத்தி ஆறாம் மாவட்ட மாநாட்டில் அவரு மேடைல ஏறும்பம் நான்தான் கைபிடிச்ச ஏத்திவிட்டேன். அவர தொட்டப்பம் எனக்கு அப்பிடியே குளிரு கேறிப் போச்சு தோழர். கண்ல தண்ணி வந்துபோட்டு. பிடிக்க முடியல்ல. விட்டுப்போடுவேன் எண்ணு தோணிப்போட்டு. அவருதான் கம்யூனிஸ்டு. நாமெல்லாம் சாமானிய மனுசங்க... ரொம்ப சாதாரண மனுசங்க. என்ன சொல்றிய?''

''உண்மைதான்'' என்ற அருணாசலம் இலையை எடுத்தபடி எழுந்தான்.

கைகழுவி பீடி பற்றவைத்துவிட்டு நடக்கையில் ''தோழர் கெ.கெ.எம். சைக்கிள் ஓட்ட மாட்டாராமே'' என்றான் கோலப்பன்.

''ஆமா... நான்தான் அவரை வச்சு சவிட்டுவேன்.'' அருணாசலத்தின் மனம் மலர்ந்தது. ''கெ.கெ.எம் எப்பவுமே நடக்க சலிக்கமாட்டார். ஒரு நாளைக்கு எப்படியும் இருபது மைல் நடந்திடுவாரு. ஐம்பது மைல் மலையேறி காடுதாண்டிப் போனதும் உண்டு. அவருக்கு சைக்கிள்லு சொன்னா தீராத்த ஆச்சரியம். எப்பிடிடே விளாம ஓட்டுதாங்க எண்ணு திருப்பித் திருப்பி கேட்பார். சின்ன பயலுககூட ஓட்டுதாங்கடேய் எண்ணு சொல்லுவார். ஏரோப்ளேன் ஓட்டுதது அவருக்குப் பெரிய வித்தை இல்லை.''

கோலப்பன் சிரித்தான்.

''சைக்கிள்ல உக்காந்து எஸ்டேட்களுக்குப் போவம். வழியில நூறு பேராவது வணக்கம் சொல்லுவாங்க. ஒவ்வொருத்தரப் பத்தியும் பேசிக்கிட்டே வருவார். ஒரு புஸ்தகத்தை மறிச்சு பக்கம் பக்கமாட்டு

படிச்சிட்டே போறமாதிரி இருக்கும். அவருக்க புஸ்தகத்துக்கு முடிவே இல்லை. காரியங்கள் ஒண்ணும் பெரிசா இருக்காது. இவன் இன்ன தோட்டம், இன்ன இடத்தில பெண்ணெடுத்திருக்கான், இன்னசாதி, இன்னாருக்கு இன்ன மொறை, இப்பிடி. அவருக்கு நான் புஸ்தகம் வாசிச்சா அதிசயம். என்னடே அப்பிடி படிக்குதே, அப்பிடி என்னதான் இருக்குடே இந்த எளுத்து வரிசையில, எளவு எறும்பு வரி மாதிரியில்லா போவுது எண்ணு கேட்பார். ஒரு நாளைக்கு நான் 'குடும்பம் தனிச்சொத்து சமூகம்' வச்சு படிச்சிட்டிருந்தேன். என்ன புஸ்தகம்டே அதுண்ணு கேட்டார். சொன்னேன். எதைப் பத்திண்ணார். புரட்சி பத்திண்ணு சொன்னேன். புரட்சி பத்தி புஸ்தகத்தில படிச்சு என்னடே செய்யப் போறே? பட்டினிப் பாவங்களை ஒண்ணு சேத்து, நிலத்தையெல்லாம் பிடிச்செடுத்து, சேந்து க்ருஷியிறக்கி, வெளைச்சலைப் பங்கு போட்டா கத தீர்ந்து போச்சுண்ணு சொன்னார். கொஞ்ச நேரம் எனக்குப் பேச்சே ஓடல்ல.''

வண்டியைக் கிளப்பி ஏறியமர்ந்து கொண்டதும் அருணாசலம் சிரிப்புடன் ''தோழர் கெ.கெ.எம் பின்னால உக்காந்து வந்தா நல்லாத் தெரியும். அவர் உக்காந்திருக்கிற விதத்திலயே அவருக்கு சைக்கிள் ஓட்டத் தெரியாதுன்னு தெரியும்...''

வேகம் குளிர்காற்றாக முகத்தை அறைந்தபோது அருணாசலம் பல வருடங்களுக்கு முன்பு ஒரு பின்னிரவின் நிலவில், திற்பரப்பு களியல் சாலையின் இறக்கத்தில், அவருடன் விரைந்திறங்கியதை நினைவு கூர்ந்தான். திடீரென்று கெ.கெ.எம். உரத்த குரலில் பாட ஆரம்பித்தார். ''மரணம் ஞங்கள்க்கு பலிதானம்! ஜனனம் ஞங்கள்க்கு வரதானம்! சமத்வ சுந்தரலோகம் ஞங்கள்க்கு வாக்தானம்...'' அவரது குரல் ஆண்மையும் கார்வையும் நிரம்பியது. அதிலிருந்த உணர்ச்சி அடியாழத்திலிருந்து எழுவது. அவனுடைய முதுகுத்தண்டு சிலிர்த்தது. சாம்பல் நிற வானத்தில் ஒளிவிட்ட மேகங்களுக்குக் கீழே ஒங்கி நின்ற மலைமுகடுகள் அக்குரலை ஏற்று முழங்குவது போலிருந்தது. காலத்தின் ஊடாக அம்புபோல முன்னோக்கிப் பாய்வது போலிருந்தது. கெ.கெ.எம்மின் குரல் தூலவிழிகளால் பார்க்க முடியாததும், முதுகுக்குப் பின்னால் எப்போதும் உணரமுடிவதுமான பெரும் சக்தியொன்றின் அறைகூவல்போல ஒலித்து அடங்கியது. மரப்பாலம் வருவதுவரை அக்கனவுநிலை நீடித்தது.

சிறிய மண் வீடு அது. முற்றத்தில் நெல் காயப் போடப்பட்டிருந்தது. ஒரு பாட்டி கையில் பனையோலை மட்டையுடன் அமர்ந்திருந்தாள். சாலையில் வண்டியை நிறுத்திவிட்டு, சாணியிலும் மூத்திரத்திலும் ஊறிப்போய்ப் படுத்திருந்த எருமையின் சந்தேகமான பார்வையைத் தாண்டி, முற்றத்தை அடைந்தார்கள். பாட்டி எழுந்து ''வாருங்கய்யா'' என்றாள். அவர்களை ரேஷன் கார்டுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று அவள் எண்ணுவது போலிருந்தது. உள்ளே அழைக்கவில்லை. சிறு பதற்றத்துடன் ''நாராயணியே எடியே'' என்று உள்பக்கம் நோக்கிக் கூப்பிட்டாள்.

''பாஸ்கரன் இருக்கிறாரா''என்றான் கோலப்பன்.

''இருக்கானே பாஸ்கரா லேய்...''

உள்ளேயிருந்து சட்டை போடாத பாஸ்கரன் வெளிவந்தான். அருணாசலத்தை அடையாளம் கண்டதும் உடனே உள்ளே போய் கசங்கிய சட்டையுடன் பித்தான் மாட்டியபடி திரும்பி வந்தான். ''வாங்க சார்'' என்றான். சாணி மெழுகப்பட்ட உயரமான திண்ணைக்கு ஏற கல்லாலான படிகள் இருந்தன. அருணாசலம் இரும்பு நாற்காலியில் அமர்ந்தான். கோலப்பன் சாணி மெழுகப்பட்ட திண்ணையில் அமர்ந்தான். ''நீங்க உக்காருங்க பாஸ்கரன்'' என்றான் அருணாசலம். தயங்கியபடி எதிர்ப்பக்க கைச்சுவரில் பாஸ்கரன் அமர்ந்தான். பாட்டி திரும்பவும் அமர்ந்துவிட்டாள்.

''யாரது பாட்டியா?'' என்றான் அருணாசலம்.

''ஆமாம், அம்மாவுக்கு அம்மா.''

''அப்பா அம்மால்லாம்...?''

''அப்பா சின்ன வயசிலயே எறந்துட்டாங்க. அம்மா எறந்து எட்டு வரிசம் ஆவுது.''

''நீங்க எப்ப இங்க வந்து சேர்ந்திங்க?''

''ஏழெட்டு வரிசம் பல எடங்களிலாட்டு கைவேலகள் செய்திட்டுண்டு. நாலு வரிசம் ஓட்டல் வேல.''

'வயசென்ன ஆவுது ஒங்கிளுக்கு.''

''அது ஆவுது நாப்பதுக்கு மேலே.''

''அப்பிடியா... பாத்தா தெரியாது. கல்யாணம்?''

''இப்பம்தான் ஸ்திரம் சோலி கிட்டியிருக்கு. இந்த வருஷம் பாக்கணும்.''

''பாப்பம். நம்ம கையிலயும் வசமாட்டு நாலஞ்சண்ணம் உண்டு.''

கோலப்பன் உரக்க சிரித்தான். பாஸ்கரன் புன்னகைத்தான்.

''சாய குடிப்பம் சார். பக்கத்தில நல்ல கடை உண்டு. வீட்டில...''

''இருக்கட்டும். இங்க சௌகரியமாட்டு பேசலாம்.''

பாஸ்கரன் முகம் கவனம் பெற்றது.

''பாஸ்கரனுக்கு இப்ப உள்ள யூனியனுக்கு நெலைபாடுகள் பற்றி என்ன அபிப்பிராயம்?''

''எனக்கு ஒரபிப்பிராயமும் இல்ல. இங்க பக்கத்து வீட்டில சசி அண்ணல் அதில இருந்தாவ. என்னயும் சேத்துவிட்டாவ.'' பாஸ்கரன் சற்று தயங்கி ''எனக்கு அரசியல் பிடிக்கேல்ல...'' என்றான்.

''அந்த யூனியன்ல இருக்கிய. அரசியல் உங்களுக்கு இல்லைண்ணாலும் அதுக்க அரசியலில நீங்களும் பங்கு வாங்கியாச்சு இல்லியா?''

''தெரியல்ல.''

''அவிய ஹிந்துத்துவவாதிகளாக்கும். நாம எல்லாரும் ஹிந்துக்கள்தான். நானும் சாமி கும்பிடுறவன்தான். ஆனா அதுக்காவ முஸ்லீமயும் கிறிஸ்தவனையும் நாட்டவிட்டுத்துரத்தணும் எண்ணு சொல்லுததில எனக்கு சம்மதம் இல்ல. அதுக்கு நான் கூட்டு நிக்க மாட்டேன். நீங்க கூட்டு நிப்பியளா?''

பாஸ்கரன் ''அவிய அதொண்ணும் சொல்லேல்லியே'' என்றான்.

''சொல்ல மாட்டாவ. செய்வாவ. இவியளுக்கு சரித்திரம் உங்களுக்கு தெரிஞ்சிருக்கணும். காந்திண்ணா யாரு? கடவுளுக்க அவதாரம், அதுக்காவத்தான் அவர மகாத்மாண்ணு கும்பிட்டாவ. அந்த காந்திய கொண்ணது யாரு? ஒரு பி.எல்.யூ.ஐ.க்காரன். அது தெரியுமா உங்களுக்கு?''

பாஸ்கரன் தலை குனிந்திருந்தது.

''நீங்க அறிஞ்சிருக்க மாட்டிய தோழர். ரெத்தம் சிந்தி தொழிலாளர்கள் உண்டாக்கினதாக்கும் யூனியன். யூனியன் இல்லாத காலத்தில மொதலாளி சாட்டையால அடிச்சு வேல வாங்கினான். நாறவார்த்த கேக்காத நாள் இல்லை. வேலைக்கோ கூலிக்கோ ஒரு உத்தரவாதமும் இல்ல. தொழிலாளிப் பிள்ளிய பட்டினி கிடந்து செத்தது உண்டு. நம்ம தலைவர்கள் ரெத்தம் சிந்தி, பாடுபட்டு யூனியன் உண்டாக்கி, போராடி அடைஞ்சதாக்கும் நாம இண்ணைக்கு அனுபவிக்குத எல்லா சௌகரியங்களும். அவங்க ரெத்தம் இப்பளும் காயேல்ல. அத நாம மறக்கப்பிடாது. அந்த தியாகத்துக்க நண்ணி நமக்கு வேணும்..''

''நான் தினக்கூலியாட்டு இருந்தப்பம் நீங்க சொன்ன எல்லா கஷ்டமும் இருந்தது.அடியும் கிட்டும், பேச்சும் கிட்டும். கூலில நாலில் ஒரு பங்கு மேஸ்திரிக்கு கைப்பணம் குடுக்கணும்...''

அருணாசலம் சற்று தயங்கினான். நினைத்ததுபோல இவன் பாமரன் அல்ல. ''செரியா சொன்னீங்க. நம்ம வேலை இப்பம்தான் தொடங்கியிருக்கு. இந்த தேசத்தில தொண்ணூறு சதவீதம் தொழிலாளியளும் இன்னும் யூனியன் இல்லாம அடிமயாட்டுத்தான் இருக்காவ. அவங்களை ஒண்ணுசேத்துப் போராட சொல்லித்தாறது நம்ம வேல. நமக்கு நம்ம தலைவர்கள் தந்துட்டுப் போன கடம அது.''

''பேங்கில ஒரு பியூனுக்கு மாசம் நாலாயிரம் ரூவா சம்பளம். சம்பளம் இகயேல்லண்ணு அவன் தெருவில நிண்ணு ஸ்ட்ரைக் பண்ணுதான். அவிய எண்ணைக்கு கைவண்டிக்காரனுவனுக்கு சங்கம் வச்சுக் குடுக்கியது...''

அருணாசலம் உள்ளூர நிதானமடைந்தான். ''இங்க நாம யதார்த்தமாட்டு யோசிக்கணும் தோழர். அந்த இடத்தில உங்களை வச்சுப் பாருங்க. கூலிக்காரனுக்கு சங்கம் வேணும்னு போராடுவோம் வாருங்க எண்ணு கூப்பிட்டா நீங்க வருவியளா? உங்க சம்பளமும் போனஸும்தானே உங்களுக்கு முக்கியம்? அதை வாங்கித் தாறோம்னு சொன்னாத்தான் நீங்க வருவிய. சொல்லாம இருந்தா அப்பிடி சொல்லுத யூனியனுக்குப் போயிடுவிய. முதல்ல உங்களை நம்ம பக்கம் இளுக்கணும். உங்களுக்கு நம்ம கொள்கய சொல்லித் தரணும். அதுக்கப்பிறவு நீங்க வேலை செய்விய..''

''மூணுமுக்கு எஸ்டேட்ல நூறு ஏக்கர் புதுத்தோட்டம் வந்தப்பம் நாங்க எழுபதாளு கான்ட்ராக்ட் லேபராட்டு போனம். எங்களை எடுக்கப்பிடாதுன்னு இருபது நாள் ஸ்ட்ரைக் செய்தாவ.''

''ஆமா, அது எங்க யூனியன் ஏற்பாடு செய்த போராட்டம்தான். யோசிச்சுப் பாருங்க; தொழிலாளிய சுரண்டி, பாதிக் கூலிக்கு அவனை வேலை செய்ய வச்சு, மிச்சத்த அந்த கான்ட்ராக்ட்காரன் எடுத்துக்கிடுதான். அத எப்பிடி நாங்க அனுமதிக்க முடியும்?''

''பெறகு சமரசம் ஆச்சு. அந்த எழுபது ஆள் வேலயயும் ஓவர் டைமாட்டு பிரிச்சு மத்தவியளுக்குக் குடுக்க ஒணர் சம்மதிச்சாரு. ஸ்டிரைக் நின்னு எல்லாரும் ஜாலியாட்டு வேலைக்கு வந்தாவ. எங்கிளுக்கு வேலை போச்சு. நான் பழையபடி சில்லறைக் கூலிக்கு ஓட்டல் வேலைக்குப் போனேன்.''

அருணாசலம் ஆழ்ந்த குரலில் ''அதுக்கான காரணங்கள் நிறைய இருக்கு தோழர். வெளியே இருந்து பாத்தா அது புரியாது. ஆனா ஒண்ணு மட்டும் சொல்லுதேன். தொழிலாளி வர்க்கத்தப் பத்தி நீங்க புரிஞ்சு வச்சிருக்குத விதம் செரியில்ல. அது நீங்க இப்பம் இருக்குத மதவெறிசங்கம் செய்யுத பொய்ப் பிரச்சாரம் வழியாட்டு நீங்க படிச்சது...''

''நான் எனக்கு சம்பவிச்சத சொன்னேன்.''

''ஆனா அதை நீங்க பாக்கிற விதம் அவிய கத்துக் குடுத்தது.''

''நான் ஒரு கட்சிக்கும், சங்கத்துக்கும் ஆதரவு இல்லை. வேலை செய்யத் தொடங்கினது பத்து வயசில. இப்பம் முப்பதுவருஷம் கழியுது. வேல செய்தா சோறு. கூடுதல் வேலை செய்யுதவனுக்கு குறவாட்டு சோறு. இதாக்கும் உலக நீதி. இத நீங்க படிக்கணுமானா எனக்ககூட தெருவில வந்து நிண்ணு வேலை செய்யணும்...''

''செரி ஒரு சங்கத்திலயும் நம்பிக்கை இல்லை எண்ணு சொல்லுதிய... பின்ன ஏன் அங்க இருக்கணும்?''

''சங்கம்ணா ஒரு பாதுகாப்பு.''

''அதுக்கு நம்ம சங்கத்திலயும் இருக்கலாமே.''

''இதிலயும் இருக்கலாமே.''

அருணாசலம் வேகமாகக் கணக்குப் போட்டான். குரலை மாற்றினான். ''செரி தோழர், இப்பம் நீங்க எங்க சங்கத்துக்கு வரணுமானா நாங்க என்ன செய்யணும்.''

பாஸ்கரன் இலேசாகச் சிரித்து ''இந்த வீட்டைப் பிரிச்சு ஓடு போடணும் எண்ணு ஒரு திட்டம் உண்டு. கிளவிக்க ஆசை.''

''உங்ககிட்ட தெளிவா சொல்லிடுதேன் தோழர். எங்க சங்கத்து ஆளுகதான் கூட்டுறவு சங்க நிர்வாகக் கமிட்டில இருக்காங்க. ஹவுசிங் லோன் நாங்க பாத்து குடுக்கிறதுதான்.''

''இந்த மனையடியில ஒரு செறிய வில்லங்கம் உண்டு.''

''அது பரவாயில்லை, காதும் காதும் வச்சதுபோல் செய்து போடலாம்.''

''ஒரு ஆறு மாசத்தில ஏற்பாடு செய்தா கொள்ளாம். அதுக்குப் பிறவுதான் கல்யாணம்...''

''கண்டிப்பாட்டு, செரி அப்பம் முடிவு செய்தாச்சு.''

''பாப்பம்.''

''பாக்கிறதுக்கு என்ன? முடிவு செய்தாச்சு. நீங்க மாநாட்டுப் பந்தலுக்கு வாறிய. எங்க யூனியனில சேருதிய...''

பாஸ்கரன் தயங்கி ''பின்ன ஒரு விஷயம் உண்டு'' என்றான்.

''சொல்லுங்க.''

''பிறகு பிரச்சினை வரப்பிடாது. அதுக்காகத்தான் இப்பமே சொல்லுதேன்.''

''சொல்லுங்க...'' அருணாசலம் உள்ளூர எச்சரிக்கை அடைந்தான்.

''எனக்க அப்பா ஒரு பழைய கம்யூனிஸ்டாக்கும். கட்சியில இருந்து அவர நீக்கியதாட்டு கேட்டிட்டுண்டு.''

''ஓகோ'' என்றான் அருணாசலம் மையமாக.

''கட்சிக்க திட்டங்கள போலீஸுக்கு சொல்லுத ஒற்றுவேலைக் காரனாட்டு இருந்திருக்காரு. விஷயம் தெரிஞ்சப்பம் கட்சியிலிருந்து தூக்கினாவ. மார்த்தாண்டம் சந்தையில குறெநாள் இருந்தாவ. அங்கயே செத்தும் போனாவ. நாலு வரிசம் பிச்சையெடுத்துப் பிழைச்சாவ எண்ணு கேட்டிட்டுண்டு. சாக்கடையில பிணமா கிடக்குததக் கண்டு முனுசிப்பாலிட்டிகாரனுவ எடுத்து எங்கியோ அடக்கம் செஞ்சானுவளாம். எங்கேண்ணு தெரியாது.''

''நீங்க பாத்ததுண்டா?''

''இல்ல. அம்மை நான் வயிற்றில இருக்கும்பளே பிரிஞ்சு வந்திட்டா. இங்க கூலி வேல செய்து என்னை வளத்தா. அப்பாவைப் பத்தி அம்மை ஒரு

வார்த்தைகூடப் பேசினதில்ல. தாத்தா இருக்கிறதுவரை அடிக்கடி வாயில வந்ததைச் சொல்லி திட்டுவாரு. போட்டோ எல்லாம் கண்டிட்டுண்டு. நல்ல கெம்பீரமான ஆளாக்கும். ஹிட்லர் மீசையும், நடு வகுப்பும், காலர் இல்லாத ஜிப்பாவும் எல்லாமாட்டு நல்ல தோரணையா இருப்பாவ. அந்தக் காலத்தில பி.ஏ. படிச்சவரு. அம்மையக் கண்டு சினேகிச்சு சாதி மாறிக் கெட்டினது. அதுகொண்டு அவருக்க குடும்பத்தில வலிய கலகம் வந்து, ஒரு சொத்துகூடக் குடுக்காம விரட்டிட்டு, ஐயரைக் கூட்டிட்டு வந்து பலிபோட்டு தலைக்குத் தண்ணி ஊத்தி அறுத்துக்கிட்டாவன்னு சொல்லிக் கேட்டிட்டுண்டு. எனக்க தாத்தாவுக்கும் பாட்டிக்கும் அவரு மேல பயங்கர விரோதம். மகள வச்சு காப்பாத்தேல்லண்ணு நினைப்பு. அப்பாண்ணு ஒரு வார்த்தை சொல்லிட்டா மதி, தாத்தா கம்ப எடுத்துப் போடுவாரு. அம்மை என்ன நினைச்சாள்னு தெரியாது. ஒண்ணுமே காட்டிக்கிடுயது இல்ல அவ.''

''அப்பா பேரு என்ன?'' என்றான் அருணாசலம். அவனுக்கு ஏனோ மிக அசௌகரியமான ஓர் உணர்வு ஏற்பட்டது. இது ஒரு பெரிய விஷயமல்லதான். ஆனாலும்...

''வீரபத்ரபிள்ளை.. கேள்விப்பட்டிருப்பியளா?''

''இல்லை, எப்பம் கட்சியில இருந்தார்?''

''நாம் பிறக்கியதுக்கு முன்னால, அம்பதுகளில.''

''அப்பாவுக்க படம் வல்லதும் கைவசம் உண்டா?''

''இல்ல, அம்மா ஒண்ணு வச்சிருந்தா. பாட்டி பிடுங்கி அடுப்பில போட்டிட்டா.''

''பழைய கட்சி ஆளுகள் யாரிட்டயாவது கேட்டுப் பாக்குதேன்.''

''அப்பாவுக்க காரியம் எப்பிடியும் வெளியே தெரிஞ்சிடும்...''

''அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை. இன்னும் சொல்லப் போனா நீங்க எங்க கட்சிக்கு வாறது ஒரு பெரிய மாற்றம்தானே? பிராயச்சித்தம் மாதிரி...''

''எனக்கு அப்பாமேல கோவமோ வருத்தமோ இல்ல'' என்றான் பாஸ்கரன். ''அப்பாவுக்க சொரியும் தெற்றும் கணக்குப் போட பிள்ளையளுக்கு அதிகாரம் இல்லை.'' அவன் சற்று நிதானித்தான். தயங்கிய பிறகு ''ஆனா ஒரு விஷயம் உண்டு. எனக்க அப்பாவுக்க ஆத்மாவுக்கு சாந்தி இல்ல. அதை செய்து குடுக்க வேண்டிய கடமை எனக்கு உண்டு. அதை நான் செய்ய முடியல்ல... உங்களுக்கு நம்பிக்க இருக்காது.''

''நம்பிக்கை இல்லைன்னு சொல்ல முடியாது.''

''எனக்கு முதல் ஞாபகம் பத்து முப்பது வருஷம் முன்ன. எனக்குப் பத்து வயசு. ஆடி அமாவாசைக்கு பலி போட ஆத்துக்குப் போனேன். கூட

இருந்தது யாருன்னு ஞாபகம் இல்ல. இங்கெயெல்லாம் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு நாளில் திவசபலி குடுக்கியதில்ல. எல்லாரும் ஆடி அமாவாசைக்கு குடுப்பாவ. நாகர்கோவில் பக்கம் அப்பிடி இல்ல...''

''ஆமாம், தெரியும்...''

''அண்ணைக்கு ஆற்றில ஆயிரக் கணக்கா காக்கா. எங்கபாத்தாலும் கறுப்பு சிறகுகளும் காகான்னு குரலும். நெருக்கியடிச்சு பலிச்சோறு சமைக்கிறாங்க. பலி போடுதாங்க. பலிச் சோத்தில காக்கா வாய வச்சதும் செத்துப் போனவங்களை நினைச்சு கும்பிடுதாங்க. ஆனா நான் வச்ச சோத்துமேல மட்டும் காக்கா வரல்ல. ஈரக் கையத் தட்டிக்கிட்டே இருந்தேன். பிறவு யாரோ சொன்னாங்கண்ணு தள்ளி நிண்ணு தட்டினேன். காக்கா வரல்ல. கொஞ்சம் தள்ளி கைதை இலைமேல ஒரு காக்கா உக்காந்து என்னைப் பாத்துகிட்டிருந்தது. ஒரு அசைவுகூட இல்லை. அதுக்க கண் என் மேலத்தான். அந்தக் கண்ண பாத்ததும் எனக்க உள்ளு நடுங்கிப்போச்சு. வெறும் சோத்த விட்டுட்டு அப்பிடியே திரும்பி வந்தம். அது முதல் இந்த முப்பது வருஷமாட்டு நான் அப்பாவுக்கு பெலி போட்டுட்டு வாறேன். ஒரு வருஷம்கூட முடங்கினதில்லை. இதுவரை ஒரு தடவகூட காக்கா வாய வச்சதில்ல...''

அருணாசலத்திற்கு வியப்பாக இருந்தது. மனம் படபடவென்று அடிப்பது வேறு தெரிந்தது. ''நம்மால புரிஞ்சுக்க முடியாத விஷயங்கள் உலகத்தில நிறைய இருக்கு'' என்றான்.

''முதல் நாள் ஏன் காக்கா வரேல்ல எண்ணு கேட்டப்பம் பூமியில இன்னும் அப்பாவுக்க கர்மம் தீரேல்ல அதுதான்னு கூடவந்த ஒரு தாத்தா சொன்னாவ. பிறவு பலதடவ அந்தக் காக்கா எனக்க கனவில வந்திட்டுண்டு. என்னவோ பேசப் போறது மாதிரி இருக்கும். பேச வாய் திறந்ததும் கனவு கலைஞ்சிடும்.''

கோலப்பன் ''சாந்தி இல்லாத ஆத்மா'' என்றான்.

''பாக்காத சோசியமும் இல்ல, செய்யாத்த கருமவும் இல்ல. ஒரு பிரயோசனமும் இல்ல. சில சமயம் ஒரு வாய் சோறு எடுத்து வாயில் வைக்கும்பம் நினைப்பு வரும். எனக்க அப்பா எங்கயோ வேற ஒரு உலகத்தில பசியும் தாகமுமாட்டு அலையுத மாதிரி. பிறகு சோறு எறங்காது. விடியற்காலையில முழிப்பு தட்டினா அந்த ஞாபகம் வரும். சங்கு உடைஞ்சு போவுமோண்ணு தோணும்...''

''செய்த தப்புக்கு பிராயச்சித்தம் செய்யாம செத்துப் போயிட்டார் போல. அதுதான் மனசு அடங்கேல்ல'' என்றான் கோலப்பன். ''ஒரு துரோகம்னு ஒண்ணை நாம செய்தா பின்ன நம்ம மனசு நம்மை சும்மா விடாது. சில்லறை துரோகமா செய்திருக்காரு. தோழர்களை போலீஸுக்குக் காட்டிக் குடுக்கியதுண்ணு சொன்னா...''

''பூமியில எங்க அப்பா மேல யாருக்கும் பிரியம் இல்லை. அவரைத் திட்டி சாபம் போடத்தான் ஆளிருக்கு. காக்கா வராம நான் நிண்ணு கண்ணீர் விடும்பம் நல்லா வேணும், செய்ததுக்கு கூலி இல்லாமப் போகுமாண்ணுதான் கூட உள்ளவங்க சொல்லுவாவ. ஆனா நான் எனக்க அப்பாவை வெறுத்தது இல்ல. சின்ன வயசு முதலே எனக்கு அவருமேல பிரியம்தான். நான் கேட்டதெல்லாம் சதியன், போக்கிரி, குடிகாரன், பொறுக்கி இப்பிடித்தான். ஆனா இப்பிடி எல்லாரும் சேந்து சபிக்கிறதுக்குள்ளான ஒரு மனிசன் ரொம்ப பாவப்பட்டவன் அப்பிடீன்னு எனக்குத் தோணும். நான் யாரிட்டயும் அப்பாவைப்பத்திப் பேசினது இல்லை. ஆனா மனசுக்குள்ளே எப்பவும் நினைச்சுக்கிடுவேன். ராத்ரி தூங்கியதுக்கு முன்னால இருட்டில கண்ண மூடினா அவரு ரொம்பப் பக்கதில எங்கயோ நிக்கிறது மாதிரி தோணும். முகம்கூடத் தெரியாத ஒரு மனிசன். ஆனா அவ்வளவு பக்கமா இருப்பார். அப்பா, எல்லாரும் உங்கள சாபம் போடுதாவ. நான் உங்களக் கும்பிடுதேன். உங்க மேல எனக்கு ரொம்ப ரொம்ப அன்பா இருக்கு அப்பா. நீங்க எங்க இருந்தாலும் சந்தோஷமா இருங்க அப்பா, அப்பிடீன்னு சொல்லுவேன்...''

பாஸ்கரன் கண்களில் கண்ணீர் கசிந்து இமை மயிர்கள்மீது துளிகளாக நின்றது. பார்வையைத் திருப்பி முற்றத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அருணாசலத்தின் மனம் நிதானம்கொண்டு பல்வேறு கணிப்புகளினூடாகத் தாவிச் சென்றது. ''தோழர் நீங்க ஒரு விஷயம் யோசிச்சுப் பாக்கல்லியா?'' என்றான். ''உங்க அப்பா ஒரு பெரிய தப்பு செய்தார். அதுக்க பாரம் தாங்காம உடைஞ்சுபோய் இறந்தார். இப்ப அதுக்கு நீங்கதானே பிராயச்சித்தம் செய்யணும்? உங்கப்பா செய்த தப்பைத் திருத்த வேண்டியது நீங்கதானே? அப்பதானே அவருக்க ஆத்மா சாந்தியடையும்?''

''ஆனா நான்...''

''பேசாம வந்து கட்சியில சேருங்க. கட்சிக்கு உங்க வியர்வையையும் ரத்தத்தையும் குடுங்க. அதுக்கப் பிறகு பாருங்க...''

பாஸ்கரன் முகம் சற்று வெட்கியது. ''எனக்கு இதில் எல்லாம் முழு நம்பிக்கை இருக்குண்ணும் சொல்ல முடியாது.''

''காக்கா வராதது ஏன்னு நாம இப்ப யோசிக்க வேண்டாம். உங்க அப்பா மேல உள்ள பழி உங்க மனசில ஒரு கறையா இருக்கு. அது இருக்கிற வரைக்கும் காக்கா வராதுன்னு தோணுது. அதை முதலில அழியுங்க.''

பாஸ்கரன் பெருமூச்சு விட்டான்.

''நாளைக்கு நம்ம தோழர்கள் வந்து உங்ககிட்ட பேசுவாங்க. மத்தத அப்பம் முடிவு செய்வம். என்ன சம்மதமா?''

''சரி'' என்றான் பாஸ்கரன்.

''சரி வாங்க, கூடா ஒரு டீ சாப்பிடலாம்.''

''சார் ஒரு விஷயம்'' என்றபடி பாஸ்கரன் உள்ளே போனான். ஒரு பழைய புத்தகத்துடன் திரும்பி வந்தான். 'இது எங்க அப்பா எழுதின புஸ்தகம். மலையாள பாஷை. அம்மாவுக்க பெட்டிக்குள்ள இருந்தது. அவ செத்தபிறகுதான் இதைக் கண்டுபிடிச்சேன். யாரிட்டயும் காட்டல்ல. உங்களுக்கு மலையாளம் தெரியுமா?''

''தெரியும்'' என்றபடி அருணாசலம் அதை வாங்கினான். மிகப் பழைய புத்தகம். மட்டமான தாள் மட்கிப்போய் அப்பளம்போல ஆகிவிட்டிருந்தது. கல்லில் வெட்டிய பெரிய வளைவுகள் கொண்ட பழைய மலையாள லிபி. 'பனை பாடினால்...'' என்றிருந்தது தலைப்பு. அது ஒரு சிறுகதைத் தொகுப்பு. மொத்தம் இருபத்தெட்டு பக்கம். நான்கு கதைகள். விலை ஒரு அணா. அச்சிட்டது கருணாவிலாசம் பிரஸ், மார்த்தாண்டம். அதன் முன்னுரை ''ஏழகளுடெ எழுதப்பெடாத்த சரித்ரம்'' என்றிருந்தது. இரண்டு பக்க முன்னுரைக்குக் கீழே இருந்த பெயர் அருணாசலத்தை சற்று அதிர்ச்சி கொள்ளச் செய்தது. கெ.ஆர்.எஸ். நம்பூதிரிப்பாட்டு. மத்திய செயற்குழு உறுப்பினர். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி. 1951-ல் திருவனந்தபுரத்தில் எழுதப்பட்ட முன்னுரை.

''என்ன புஸ்தகம் இது?'' என்றான் பாஸ்கரன்.

''கதைகள்.''

''கதையா?'' என்றான் பாஸ்கரன் சற்று ஏமாற்றத்துடன்.

''உங்க அம்மாவுக்கு மலையாளம் தெரியுமா?''

''ஒரு பாஷையும் தெரியாது.''

அருணாசலத்திற்கு சற்று வியப்பு ஏற்பட்டது.

''வெறும் கதைகளா?''

''ஆமா எப்பிடியோ வர வேண்டிய இடத்துக்கு உங்க புஸ்தகமும் நீங்களும் வந்து சேந்துட்டிய. வாங்க டீ சாப்பிடலாம்'' என்றான் அருணாசலம். அவன் மனம் ஏன் அத்தனை பரபரப்புகொண்டு சுற்றி வருகிறது என்று அவனுக்கே வியப்பாக இருந்தது. ◆

4

தூக்கம் பிடிக்காமல் இரவு நீண்டுநீண்டு சென்றது. உடம்பில் வலியும் குடைச்சலும் இருப்பது போலிருந்தது. அருணாசலம் எழுந்து விளக்கைப் போடாமல் ஓசையின்றி நடந்து தன் அறைக்கு வந்து விளக்கைப் போட்டான். கண் கூசியது. இரு எலிகள் சலசலப்புடன் பதுங்கி ஓடின. நாற்காலியில் அமர்ந்து கலைந்து குப்பைமேடுபோலக் கிடந்த படிப்பு மேஜையைப் பெருமூச்சுடன் பார்த்தான். தீவிரமாகப் படித்து வெகுநாளாகிறது என்று ஞாபகம் வந்தது. தொழிற்சங்க வேலைபோலப் படிப்பைக் கொல்லும் ஒரு தளம் வேறு இல்லை. அதில் பிரச்சினைகள் முடிவதோ, ஒய்வுகொள்வதோ இல்லை. படிப்பு, சிந்தனை என்றால் இன்னதென்று அறியாத ஒரு பெரும்கூட்டம் தொழிற்சங்கம். அதில் புழங்கும் ஒருவன் கடலில் வெகுதூரம் அடித்துச் செல்லப்பட்டுவிட்டவன் திரும்பிக் கரையைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்வையே அறிவுலகைப் பார்க்கும்போது அடைகிறான். அருணாசலத்திற்கு அந்தப் படிமம் பிடித்திருந்தது. அந்தக் கடல்வாசியின் கண் களுக்குக் கரை ஒரு கப்பல்போல ஏறியிறங்கி மிதப்பதாய்ப் படும். அது அவனிருக்கும் கடலின் அலைகள் உருவாக்கும் மாயத் தோற்றம் என்பதை அவன் அறியமாட்டான்.

கைக்கு சிக்கிய ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரித்தான். ''கீழைமார்க்ஸியம்'' எஸ்.என்.நாக ராசன். 'மிகவும் படைப்பூக்கம் கொண்ட, ஆனால் ஒழுங்கற்ற, சிந்தனை. ஒழுங்குடன் சிந்திப்பவர் களில் ஏற்படுத்தும் விளைவுகளினூடாகவே இது ஏதாவது ஒருவகையில் பங்காற்ற முடியும்' என்று அவன் எழுதிய குறிப்பு முன்பக்கத்தில் இருந்தது. புத்தகத்தை எடுத்ததுமே பசி மந்தித்தவனுக்கு உணவைப் பார்க்கும்போது ஏற்படுவதுபோன்ற சலிப்பு ஏற்படுவது சமீப வழக்கம். நூலை வைத்துவிட்டு ரேடியோவை எடுத்தான். மெல்ல அதை உயிர்பெறச் செய்து துழாவ ஆரம்பித்தான். அலைவரிசைமீது, வானத்தின் மின்அலைக் கடல்மீது, அவனுடைய தேடல் துழாவித் துழாவி சென்றது. குரல்கள்; சட்சட்டென்று அவை

மாறுபட்டன. வேறுபட்ட மொழிகளின் வேறுபட்ட உச்சரிப்புகளில் பாடலாக, விம்மலாக, அறிவிப்பாக, இசைத்துளியாக. தலைக்கு மேல் இருண்டு விரிந்திருக்கும் வானம் முடிவற்ற குரல்களிலானது. அக்குரல்களில் மிகச்சில குரல்கள் மட்டுமே பொறுக்கியெடுக்கப்படுகின்றன. அடையாளம் காணப்படுகின்றன. பிற குரல்கள் வெட்டவெளியில் பரவி அதிர்ந்தபடி காத்திருக்கின்றன. ஆனால் அவன் தேடும் குரல் இந்த வானொலியினூடாக வெளிவருவதில்லை. ஒரு நீண்ட தேடலுக்குப் பிறகு ஏதோ ஒரு குரலில் திருப்திகொண்டு அதைக் கேட்க ஆரம்பிக்கிறான். ஒரிரு கணங்களில் அக்குரல் பிரக்ஞையிலிருந்து நழுவி வெளியே பௌதிகமான ஒரு இடத்தில் மட்டும் ஒலித்தபடி இருக்கிறது. எத்தனை விசித்திரமான சிந்தனைகள். இவற்றைப் பதிவு செய்தால் ஒருவேளை இலக்கியத் தகுதி இவற்றுக்கு இருக்கக் கூடும். ஆனால் பதிவு செய்வதற்கு முயன்றால் இச்சிந்தனைகள் விரலால் தொடப்பட்ட நீர்ப்படல பிம்பம் போலக் கலைந்துவிடும். இவற்றை நேர்த்தியாகக் கோதி அடுக்கிப் பிறகு எழுதினால் அவை மிகமிக செயற்கையான பிரசங்கம் போலிருக்கும். இவற்றின் சிதைந்ததும், கணம்தோறும் மாறுவதுமான, இந்த நிழல்கூத்தை இதேபோன்று நிழலாக நெளியும் ஒரு மொழியில் பதிவுசெய்ய முடிபவன் இலக்கியவாதி. மௌனி, புதுமைப்பித்தன்... அலுப்புடன் வானொலியை அணைத்தான். அந்த மௌனத்தில் சில்வண்டுகளின் ஒலி உரக்கக் கேட்டது. MD

நேற்றிரவு வீடு திரும்பப் பிந்திவிட்டது. நாகம்மை அரைத் தூக்கத்தில் வந்து கதவைத் திறந்தாள். ''சாப்பிட்டிங்களா?'' என்று தலையைச் சொறிந்தபடி கேட்டாள். புடவையை அள்ளிப் போட்டபடி, ஒரு மார்பகம் பிதுங்கி வெளியே வழிந்திருக்க, செருகும் கண்களுடன் நின்றாள். அவனுக்கு அவள்மீது ஒரு தீவிரமான ஈர்ப்பு ஏற்பட்டது. அதற்கு அப்போது அவளிடமிருந்து எழுந்த மெல்லிய சரும மணம்தான் காரணம் என்று தெரிந்தது. எச்சிலும், வியர்வையும், தூங்கும்போது சருமத்தில் உருவாகும் ஒரு வெம்மை மணமும். ''சாப்பிட்டாச்சு'' என்றான். உள்ளே போய் சட்டையைக் கழட்டிவிட்டு லுங்கிக்கு மாறியபோது அவள் முற்றத்துத் தென்னைமரத்தடியில் சிறுநீர் கழிக்கும் ஒலி கேட்டது. அந்த ஒலியும் அவனுக்கு அந்தரங்கமாக ஓர் உவப்பைத் தந்தது. அவள் கால்களைத் தேய்த்தபடி உள்ளே வந்து ''தண்ணி பிறையில இருக்கு'' என்றாள். ''இங்க வா'' என்றான். ''தூக்கம் வருது'' என்று சிணுங்கியபடி அருகே வந்தாள். அவளை அணைத்து முத்தமிட்டான். ''படுங்க, ராத்திரி ஏறியாச்சி'' என்றாள்.

படுத்துக்கொண்டதும் அவள் அவனை மெல்ல அணைத்து ''நான் தூங்கட்டுமா''என்றாள். அவன் ''சரி'' என்றான். மிகவும் களைப்பாக இருந்தது. உடனே தூக்கம் வந்துவிடும் என்றுதான் பட்டது. மனம் மூழ்கி மூழ்கிப் போனபோது எதிலோ தட்டுப்பட்டு விழித்துக்கொண்டது. வெகு தொலைவில் மிகப் பழைய மலையாளத் திரைப்படப் பாடல் ஒன்று கலைந்து கலைந்து கேட்டது. அந்த சோகமான ரீங்காரம் மனதை ஏக்கத்தால் நிரப்பியது. வெகுவேகமாகக் காலத்தைத் தாண்டி வந்துவிட்டது போலவும்,

அருமையான தினங்களெல்லாம் எப்போதைக்குமாகப் பின்னகர்ந்துவிட்டது போலவும் இருந்தது. கெ.கெ.எம்முக்கு பழைய திரைப்படப் பாடல்கள் பிடிக்கும். கமுகறை புருஷோத்தமன் குரலில் அவருக்கு ஒரு மோகம். அவனுக்குத் தன் மனதின் உறுத்தல் புரிந்தது. கெ.கெ.எம் வினோதமான மௌனத்துடன் இருந்ததை கவனித்திருந்தான். அவரது பார்வை சுவரிலிருந்த படங்கள்மீதே பதிந்தபடி இருந்தது. அவருக்கு விஷயம் தெரியுமா? நடுங்கியபடி மனதை மூர்க்கமாக அறுத்து வேறுபக்கம் திருப்பிக் கொண்டான். வெளியே தென்னைமர ஓலைகள் மெதுவாகச் சிறகடித்தன. தவிப்புடன் திரும்பி அவளை அணைத்துக் கொண்டான். அவள் உடைகளைப் பிரித்து மார்பகங்களுக்கு நடுவே முகம் புதைத்துக் கொண்டான். அவை சூடாக மென்மையாக இருந்தன. மூச்சு உள்ளே ஒலிக்க மெல்ல அசைந்தன. அவளுடைய தூக்கத்திற்குள் புகுந்துவிட வேண்டும் என்றும், அவளுடைய அந்தரங்கமான கனவுக்குள் நடக்க வேண்டும் என்றும் விரும்பினான். ஆனால் எத்தனை அசாத்தியம் அது. இறுக இறுக அணைக்கலாம். ஆனால் உடல் எனும் தடைச்சுவர் மேலும் மேலும் வலுப்பட்டபடிதான் போகும். சில சமயம் மெல்ல அவள் கன்னங்களை வருடியபடி இருக்கையில், கண்களைக் கூர்ந்து பார்த்து முத்தமிடுகையில், உடலுறவின் உச்சிக்கு முந்தைய சில கணங்களில் அந்தச் சுவர் கண்ணாடியாலான ஒன்றாக மாறிவிட்டிருப்பதாகப் படும். சில கணங்களுக்கு மட்டும். அவன் உள்ளூர முழுக்க நம்பித் தன்னை முன்வைக்கும் ஒரே உயிர் அவள். அறிவுஜீவி என்ற அவனுடைய பாசாங்கை இம்மிகூடப் பொருட்படுத்தாதவள். ஆகவே அங்கு அவன் மாற்றிமாற்றிப் புனையும் முகங்கள் எதையும் அணியாமல் அவனால் நிற்க முடிகிறது. ஆனால் அவன் சிந்தனையில் ஓடும் இந்த இம்சையான இயந்திர இயக்கத்தை அவள் முற்றிலும் அறியாமல் இருக்கிறாள். அவனுடைய சஞ்சலங்களும் பயங்களும் துக்கங்களும் பெரும்பாலும் அவள் அறியாதவை. அவளருகே படுத்திருக்கும்போது தனிமையுணர்வின் கனம் குறைகிறது; தாயருகே படுத்திருக்கும் குழந்தைபோல. அவள் தாய்தான். அவள் சகல பாவனைகளிலும் எப்போதும் தாய்மை உள்ளது. ஆனால் இன்னும் கொஞ்சம் தன் எண்ண ஓட்டங்களை அவள் புரிந்துகொள்ளக் கூடாதா? இன்னும் சற்று விரிவாக அவளிடம் பேச முடியும் நிலை இருந்தால் எப்படி இருக்கும்!

ஆனால் இப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் பெற்ற குழந்தைகள் கொல்கிறார்கள், கொல்லப்படுகிறார்கள். அதிகாரங்களைக் கட்டியெழுப்பு கிறார்கள். அவற்றை எதிர்த்துப் புரட்சியும் செய்கிறார்கள். அவர்களுடைய வியர்வையும் ரத்தமும் பூமியைப் புரட்டிப் புரட்டிப் போடுகின்றன. சம்பந்தமற்ற வேறு ஓர் உலகில் கருணையுடன் சமைத்துப் பசியாற்றி, தட்டித் தூங்கவைத்து, அபயமும் தைரியமும் தந்து இவர்கள் வாழ்கிறார்கள். அன்னையரை இணைத்துக்கொள்ளும்போதுதான் புரட்சி தோற்கடிக்க முடியாததாக ஆகிறது என்று கார்க்கி கருதினான். கொந்தளிப்பு

மேலோட்டமானது என்றும் அமைதியான ஆழமே சிருஷ்டிகரமானது என்றும் அவன் அறிந்திருந்தான்போலும். பாவம் கார்க்கி. அது வெறும் கனவாகப் போயிற்று. உலகின் எந்தப் புரட்சியிலும், எந்த ஆட்சியிலும், பெண்கள் பங்கேற்றதில்லை. போல்ஷவிக் புரட்சியும் அது போலத்தான். அது பெண்களைப் பயன்படுத்தியது. ஆனால் அது ஆண்களின் உலகில் நடந்த புரட்சி. உலகில் இதுவரை நடந்த அத்தனை அரசியல் சம்பவங்களும் ஆண்களின் உலகில் நடந்து முடிந்த அலைகள். பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளார்கள். கொன்று குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அனாதையாக்கப்பட்டிருக்கிறார்கள். 'நமது பெண்கள் வீரப் புதல்வர்களைப் பெறட்டும்.' ஸ்டாலின் சொன்னது. ராணுவம் நகர்கையில் பின்னணியில் கூடாரக் கட்டுகளை இழுக்கும் வண்டிகளும், அதற்குப் பின்னால் உணவாகப்போகும் மிருகங்களும், அதற்குப் பின்னால் மிருகங்களின் உணவும் நகரும் என்பார்கள். அதற்குப் பின்னால் ராணுவத்தைப் புணர்ந்து ராணுவத்தைப் பெற்றெடுக்கும் யோனியேந்திய பெண்கள் நகர்கிறார்கள். ராணுவம்தான் உலகில் இன்றுவரை அரசியலாக இருந்துள்ளது. போரிடும் ராணுவம், பேசும் ராணுவம். அங்கு நுழையும் பெண்கள் தங்களையும் ஆண்களாக மாற்றிக் கொண்டவர்கள். ஆண்களின் சீருடைகளை அணிந்த பெண்சிப்பாய்கள். ஆண்குரலில் அடித்தொண்டையில் சொற்பெருக்காற்றும் மக்கள் பிரதிநிதிகள். அன்னையராக, தங்கள் இயல்பான மென்மையுடனும் கருணையுடனும், அவர்கள் அங்கு நுழைய முடிவதில்லை. பெண்களால் நடத்தப்பட்டால் புரட்சிகள் இவ்வாறு ரத்தவாடை வீசியிருக்குமா? கண்டிப்பாக இத்தனை குழந்தைகள் கொல்லப்பட்டிருக்காது. ஆண்களின் அமைப்புகளும் அரசுகளும் ஆண்களைப்போலவே இருக்கின்றன. வெளித் தோற்றத்தில் இரும்புக் கோட்டைகள். உள்ளே நெளிந்து உருகும் லாவா. ஆண்களால் நடத்தப்படும் புரட்சிகள் அவர்களுடைய உடலில் காமம் வெளிப்படும் விதத்தையே கொண்டுள்ளன. எழுச்சி, பின் படிப்படியாக உத்வேகம், உச்சகட்ட வெடிப்பு, பின்பு சோர்வு. பெண்களின் புரட்சி ஒரு முழுமையை நோக்கி நகரும் சிறிய அலைகளின் வட்டங்களாக இருக்கலாம். அவர்களுடைய அரசாங்கம் மென்மையான தசைகளாலும் உதிர நீரினாலும் கட்டப்பட்ட கருப்பை போலிருக்கலாம். எல்லா எதிர்மறைகளையும் செரித்துக் கொள்ளும் உயிர்த்துடிப்புடன், தன்னுள்ளிருந்து இன்னொன்றைப் பிறப்பித்து வளர்த்து முடிவின்றி நீண்டு பெருகுவதாக இருக்கலாம். அதை ஒருபோதும் ஆண்கள் புரிந்துகொண்டதில்லை. மார்க்ஸ்... லெனின்... ஸ்டாலின்... அவர்களா? வேடிக்கைதான். ஹெலன் டெமுத்தை படுக்கையறைக்குப் பயன்படுத்திவிட்டுக் கூசாமல் தூக்கியெறிந்த மார்க்ஸுக்கு ஜென்னிமீது என்ன மரியாதை இருந்திருக்க முடியும்? பிரெஞ்சுக் காதலிக்காக குரூப்ஸ்கயாவை துரத்திவிடத் தயாராக இருந்த லெனினுக்குப் பெண்கள் மாற்றியணியும் உடைகளன்றி வேறு என்ன? ஸ்டாலின் தன் மனைவியைக் கொன்றவர். இவை முதலாளித்துவ அவதூறுகள். இவற்றை நம்புகிறேனா? இல்லை நம்பவில்லை. ஆனால்... கார்க்கி மட்டும் என்ன? தன் கனவில் உருவான புரட்சிக்கு ஒரு அன்னையின்

ஆசியும் பங்கேற்பும் தேவை என்று மட்டும்தானே அவரும் எண்ணினார். பாவெலின் துண்டுப் பிரசுரங்களைச் சுமந்து செல்பவள்தானே அன்னை? அன்னையின் புரட்சிபற்றி அவர் அறியவில்லை. பெண்களுக்கு என்று ஒரு தனிப் புரட்சித்தன்மை இருக்கக்கூடும் என்று அவர் ஊகிக்கவில்லை. இவை புரட்சிகள் அல்ல. இவை உள்ளூரப் பெரும் இடைவெளிகளால் அவதிப்படும் எளிய மனிதர்களின் அதிகார விளையாட்டுகள். கருவில் எதையும் சுமந்து வளர்க்க முடியாத அர்த்தமற்ற உடல்கள் வெறும் வெளியில் தங்கள் தூலங்களை ஊதிப் பெருக்கிக்கொள்ள செய்யும் ஜம்பம். தாங்களே எழுதிக்கொள்ளும் வரலாற்றில் தங்கள் பெயரை அடிக்கோடிட ஆண்கள் கொள்ளும் முண்டியடித்தல். மூடத்தனம் மூடத்தனம்... இவர்களுக்குப் பின்னால் மௌனமாக கருச்சுமந்து, பால் ஊட்டி, மானுட குலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது பெண்மை. அது நிலம். அதில் முளைத்த மரங்கள் கைநீட்டிக் கூத்தாடுகின்றன. வானை அள்ளிவிடுவோம் என்று கனவு காண்கின்றன. ஒன்றோடு ஒன்று உரசி அழிகின்றன. மிகுந்த கருணையுடன் இந்த இரண்டாயிரம் ஆண்டுகாலத் திமிர் விளையாட்டை பெண்மை சகித்து வந்துள்ளது. காயங்களுக்குக் கட்டுப்போட்டு, ஆறுதலும் ஊக்கமும் அளித்து, உணவூட்டி, கருக்கொண்டு போஷித்து வருகிறது. ஆனால் அதற்குத் தெரியும். சிவனும் விஷ்ணுவும் சக்தியின் இரு துளிகள். சிருஷ்டி ஸ்திதி சம்கார விளையாட்டு அவர்களுடைய பலவீனங்களின் விளைவு. அவள் மிக பிரமாண்டமாக அவர்களைப் பார்த்தபடி விலகி இருக்கும் ஒரு மௌனவெளி. ஆதிசக்தி.

என்ன இது என்று திடுக்கிட்டபடி விழித்துக்கொண்டு அவளைவிட்டு விலகிப் படுத்தான். மேலே மின்விசிறி சுற்றுவதைச் சற்று நேரம் கவனித்தான். இருளில் அவன் மனம்போல ஓசையிட்டபடி முடிவின்றி, அர்த்தமின்றி, அது இயங்கிக் கொண்டிருந்தது. இது என்ன சிந்தனைகள்? எத்தனை பலவீனமும் அச்சமும் கலந்த எண்ணங்கள். பகல் முழுக்க அறிவுத்திமிருடன், நிதானத்துடன், உள்ளார்ந்த வேகத்துடன், இயங்கும் எனக்குள் இவையும் உள்ளனவா? ஒளியில் ஒரு முகமும் இருளில் மறுமுகமும் கொள்ளும் இரட்டை மனிதனா நான்? இரண்டில் எது உண்மை? இரண்டும்தான். இரண்டிலும் சிறிது பாசாங்கும் உள்ளது. ஒன்றில் இருக்கும்போது இன்னொன்றை முற்றிலும் மறுத்து உள்ளே அழுத்திவிடும் பொருட்டு கொள்ளும் பாசாங்கு. இன்று இவ்விரவில் நான் கொள்ளும் இந்த அதீத நெகிழ்வு எனது இன்றைய பகலை என்னிடமிருந்து மறைப்பதற்கான ஒரு மனத்தந்திரம் மட்டும்தானோ? இன்று கெ.கெ.எம்... மீண்டும் மலம் அதிர்ந்து சுருங்குவதை உணர்ந்தான். தலையைக் கைகளால் அழுத்திக் கொண்டான்.

வெளியே இருள் அலைகளில்லாத கடல்போல நிரம்பியிருந்தது. கண்மூடியபடி எண்ணமுடியாத விஷயங்களை கண்களைத் திறந்தபடி எண்ண தைரியம் வந்ததுபோல இருந்தது. என்ன தைரியம். இதோ நேரடியாக அனைத்தையும் எண்ணுகிறேன். எவரும் என்னைக்

கவனிக்கவில்லை. கெ.கெ.எம், ஆம், அவர் தூக்கி வீசப்படுவது உண்மை. அவரை மத்தியில் எவருக்கும் பிடிக்கவில்லை. இடதுசாரிக் கட்சிகளின் தற்போதைய கூட்டணி அரசியலை அவர் ஒரு சூதாட்டமாகவே பார்த்தார். சூதாட்டம் ஓர் ஒழுக்கக்கேடு என்று நம்பும் தலைமுறை அவர். தொழிற்சங்க நலன்கள் இந்தச் சூதாட்டத்தில் பகடைகளாக உருட்டப்படுகின்றன என்று கருதினார். அதை முடிந்தவரை எதிர்த்தார். ''வாலுக்காக நாய் ஆடுதது மாதிரில்லடே இருக்கு? ரண்டுபேரு மந்திரியும் நாப்பது பேரு எம்பியும் ஆறதுக்கு நாட்டில உள்ள எல்லா யூனியனும் சேந்து தலையை வெட்டிக் குடுக்கணும்கியானுவ'' என்பார். பழைய மனிதர். வாழ்வின் அடுத்த கணம் கடவுளின் கையில் இருப்பதாக எண்ணிய பழங்குடிகளுக்குத்தான் சூதாட்டம் ஓர் ஒழுக்கக் கேடு. கடவுளின் நியதியை சீண்டிப் பார்க்கும் அதிகப் பிரசங்கித்தனம். கடவுள் பழிவாங்கிவிடுவார் என்று அவர்கள் அஞ்சினர். இதுவோ ஒவ்வொரு அறிவுத்துறையும் தருக்கங்களினூடாக முடிவின்மை யின் சாத்தியங்களைக் கலைத்துக் கலைத்து அடுக்குவதாக மாறி விட்டிருக்கும் காலம். தோழர், இன்று சூதாட்டமே நவீன வாழ்வின் மிகப் பொருத்தமான குறியீடு. சூதாட்டமே அனைத்தையும் தீர்மானிக்கிறது. அரசியல், உறவுகள், பொருளாதாரம் எல்லாமே சூதாட்டங்கள். வாளும் வாளும் வேலும் வேலும் மோதும் தர்மயுத்தங்களின் காலம் கடந்துவிட்டது. இந்த ஆட்டத்திற்கு விதிகள் இல்லை. வெற்றி மட்டுமே தீர்மானிக்கும் சக்தி. இந்த ஆட்டத்தை விட்டு நாம் ஒதுங்க முடியாது. நமது கனவுகளை நாம் இழக்க முடியாது. நமக்கு இழக்க ஏதும் இல்லை. எனவே நாம் ஆடியே ஆக வேண்டும். கெ.கெ.எம். வானைத் திறந்து பிரமித்த கண்களுடன் கேட்டிருப்பார். பிறகு நிராதரவு நிரம்பிய குரலில் ''என்னமோ போங்கப்பா; எனக்க காலம்வரை ஓடினா செரி'' என்பார். உண்மையில் அவரது பிரச்சினை அதுதான். இளமையில் அவரை இயக்கிய கனவுகளுக்கும் இலட்சியங் களுக்கும் இப்போது ஒரு அர்த்தமும் இல்லை. எனவே, அவர் செய்த தியாகங்களுக்கும் அர்த்தமில்லாமலாகிவிட்டது. இந்த உண்மையை ஒருமுறைகூட நேருக்குநேர் பார்க்கும்படி நேராமல் பழைய, பழகிய உலகில் அப்படியே வாழ்ந்துவிட்டு இறந்தால் போதும் அவருக்கு.

ஸ்டாலின்மீது கெ.கெ.எம்முக்கு உள்ள தீவிரமான விசுவாசம் அவரது உலகைத் தாங்கும் தூண்போல. ஸ்டாலினை விமரிசனம் செய்யும் எந்தக் குரலையும் அவரால் தாங்க முடியாது. ஸ்டாலின் இடம் சரிகிறது என்று ஓர் ஆழ்ந்த பிரக்ஞையால் அவர் அறிந்தார் போலும். எப்போதும் எந்த பேனரிலும் போஸ்டரிலும் ஸ்டாலின் படம் இருக்கிறதா என்று தனிப்பட்ட முறையில் பார்ப்பார். ''ஸ்டாலினைப் பத்திப் பேசற அளவுக்கு கொட்டைக் கனம் உள்ளவன் எவன்டே?'' என்று எகிறுவார். அவருடைய அறையில் ஸ்டாலினின் பெரிய வண்ணப்படம் ஒன்று உண்டு. ஆழ்ந்த பச்சை நிற ராணுவ உடைகளும், சிவப்புநிறப் பட்டைகளும், பதக்கங்களும், தொப்பியும் அணிந்த ஸ்டாலின். சிரிப்பில்லாத கனத்த முகத்தில் இடுங்கிய கண்களில் மட்டும் ஒளி. அந்தப் பிர' 'லமான மீசை. கெ.கெ.எம். அந்தப்

படத்தை நோக்கித் தன் சாய்வு நாற்காலியைத் திருப்பி வைத்துக் கொண்டிருப்பார். அவரை அந்தப் படம் தன் வலிமையான, மர்மமான ஒளிகொண்ட, கண்களால் உற்று பார்த்தது. ''ஸ்டாலினுக்குள்ள இந்தப் புஞ்சிரியப் பாத்தியா? இது கம்யூனிசத்துக்க வெற்றிச் சிரிப்பாக்கும்'' என்றார் கெ.கெ.எம். ஒரு முறை. பார்த்துப் பார்த்து அப்படம் நெகிழ்ந்து அவருக்கென ஒரு புன்னகையை தர ஆரம்பித்துவிட்டது.

ஏன் இப்போது ஸ்டாலினுக்கு வந்திருக்கிறது என் எண்ண ஓட்டம்? இப்படி பலமுறை பல இரவுகளில் நிகழ்ந்திருக்கிறது. ஸ்டாலினை ஒரு வீம்புக்காகவே கட்சி இப்போதும் தூக்கிப் பிடிக்கிறது என்று தெரியாத கட்சி ஊழியன் இல்லை. ஸ்டாலினை நிராகரிப்பது கட்சியின் மிக விரிவான இறந்தக்காலத்தை, பல்லாயிரம் அறிக்கைகளை, பிரசங்கங்களை, நிராகரிப்பதற்குச் சமம். ஸ்டாலினை உருவியெடுத்தால் கட்சி சரியும். அதை தொடக்கம் முதல் புதிதாகக் கட்டி எழுப்ப வேண்டும். இப்போது கட்சிக்கு வயதாகிவிட்டது. இன்று அது ஒரு வெகுஜன இயக்கம் அல்ல. அது ஒரு தொழிற்சங்கக் கூட்டமைப்பு மட்டுமே. சித்தாந்தக் கல்வி இல்லாதவர் களும், காரியவாதிகளுமான தொழிலாளர்களினால் ஆனது அது. அத்தனை வரிகளை, அத்தனை கோஷங்களைச் செரித்துக்கொண்டு புதிதாக சிலவற்றைச் சொல்ல வைக்கும் திறன் அதற்கு இல்லை. இறுதிவரை ஓயாமல் ஸ்டாலின் பெயரைச் சொன்னவர் ராமகந்தரம் மட்டுமே. சோவியத் ரஷ்யா சிதைந்தபோது ஸ்டாலின் சிலைகளை மக்கள் நொறுக்கும் காட்சியை தொலைக்காட்சியில் கண்டு இரத்தக் கொதிப்பு வந்து மருத்துவமனைக்குப் போய் அங்கேயே உயிர் துறந்தார் என்பார்கள். 'தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் படைத்தளபதியை இன்று விமரிசனம் செய்பவர்கள் அதிகரித்துவிட்டார்கள்; இறந்தயானையை எறும்புகள் தின்ன முயல்வது போல. ஆனால் வரலாறு இவர்கள் வீட்டு சமையலறையில் உண்டு பண்ணப்படும் கறிச்சோறு அல்ல. வரலாற்றுக்கு அதற்கேயுரிய இச்சை உண்டு என்றனர் ஹெகலும் மார்க்ஸும். வரலாற்றுக்கு அதற்கேயுரிய தர்ம நியாயங்களும் உண்டு. வரலாறு ஓர் அன்னை என்றால் தன் பிரியத்திற்குரிய புதல்வர்களில் ஒருவனைத் தன் மடியிலேயே வைத்திருக்கும். ஒருபோதும் கைவிட்டு விடாது. ஸ்டாலினின் சிம்மாசனங்கள் சோவியத் ருஷ்யாவில் சிதையலாம். ஏன் உலகம் முழுக்க சிதையலாம். அவரது உண்மையான வைரச் சிம்மாசனம் வரலாற்றின் மடி. அங்கு அவர் தன் மணிமுடியுடன் எப்போதும் வீற்றிருப்பார்' என்று செங்கதிர் அக்டோபர் புரட்சி நினைவுப்பதிப்பில் எழுதினார் அவர். அது அவர் தனக்கே கூறிக் கொண்டது; ஆம், கம்யூனிஸ்டுகள் தங்களுக்கே சொற்பொழிவாற்றிக் கொள்கிறார்கள்.

கெ.கெ.எம். தூக்கப்படுவது பற்றி மூன்று வருடங்களாக நிறையப் பேசப்பட்டுவிட்டது. தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப் பாளராக எம்.ஏ.ராஜப்பா வந்ததும் ஏறத்தாழ அது உறுதியாயிற்று. ஆனால் அதை எளிதில் நம்ப முடியவில்லை. கெ.கெ.எம்மின் பொதுச்சித்திரம் மகத்தானது. அவர் படம் தொங்காத ரப்பர்த் தொழிலாளர் வீடுகள் குறைவு

அவரைத் தூக்கினால் சங்கம் என்ன ஆகும். அதுதான் கட்சியும் தயங்குகிறது போலும். கெ.கெ.எம்மிடம் விசுவாசம் கொண்ட இரண்டாம்நிலைத் தலைவர்கள் எவரும் இல்லை. அவருடைய ஆரோக்கியமும் சீராக இல்லை. ஏன் அவர் இறக்கும்வரை கட்சி காத்திருக்கக் கூடாது? கட்சிக்குப் பொறுமை இல்லை. அதைக் கூட்டணி அரசியலின் கவர்ச்சி இழுக்கிறது.

கெ.கெ.எம் இப்போது என்ன செய்துகொண்டிருப்பார்? தூக்கமில்லாமல் சாய்வு நாற்காலியில் படுத்தபடி முடிவில்லாத இருட்டு விரியும் வானத்தையும், ஸ்டாலின் படத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருப்பார். ஸ்டாலினும் அவரும் உரையாடிக் கொண்டிருக்கக் கூடும். இரு புகைப்படங்களின் உரையாடல். ஏன் எல்லாம் இப்படியாயிற்று என்று கெ.கெ.எம். ஸ்டாலினிடம் கேட்கக் கூடும். தனிமையைப் பற்றி ஸ்டாலினை விடவும் தெரிந்தவர் யார்? அதிகாரமும் மகத்துவமும் தனிமையை உண்டு பண்ணுகின்றன. பெரும் கண்ணாடிக்கூண்டுபோல மனிதனைச் சுற்றி இறுகிவிடுகின்றன. வயோதிகமும் தனிமையை ஏற்படுத்துகிறது. ஸ்டாலின் தன் மனைவியின் மரணத்திற்குக் காரணமாக இருந்தார் என்கிறார்கள். மகள் ஸ்வெட்லேனாவை வெறிபிடித்தவர் போல விரும்பினார். அவரது தனிமையை ஊடுருவும் ஒரே ஒளிக்கதிராக அவள் இருந்திருக்கலாம். ஆனால் ஸ்வெட்லேனா அவரை அஞ்சி விட்டுவிட்டு ஓடினாள். இந்தியாவுக்கு வந்துவிட்டு அமெரிக்காவுக்குத் தப்பியோடி அடைக்கலம் புகுந்தாள். இரவின் ஆழத்தில், போர்வைக்குள், ஸ்டாலின் அழுதிருப்பாரா? அவரால் கண்ணீர்விட முடியுமா? தான் ஒரு இரும்பு மனிதர் என்ற ஞாபகம் அப்போது அவருக்கு வந்திருக்குமா? ஒருவேளை ஸ்டாலினும் தன் அறையில் ஒரு புகைப்படத்தை மாட்டியிருந்திருப்பார். அது பயங்கர இவானின் படம். ஜயமே இல்லை. பயங்கர இவானை எதிர்மறையாகச் சித்தரித்த திரைப்படமொன்றைக் கண்டு அவர் கோபம் கொண்டார் என்றும், பயங்கர இவான் பெரும் தேசியத் தலைவன் என்று கூறி அதன்படி அத்திரைப்படத்தை மாற்றி எடுக்கச் சொன்னார் என்று எங்கோ படித்தது ஞாபகம் வந்தது. பயங்கர இவானிடம் ஸ்டாலின் எதைப்பற்றி உரையாடியிருக்க முடியும்? வேறு எதைப் பற்றி, தனிமையைப் பற்றியன்றி?

கெ.கெ.எம்முக்கு மனைவியும் குழந்தைகளும் இல்லை பெண் தொடர்புகள் நிறைய உண்டு என்பது ரகசியம் அல்ல. பல வருட காலம் தொழிலாளர் பெண்களின் கனவு நாயகனாக அவர் இருந்திருக்கிறார். காமத்தை மட்டுமல்ல, காதலையும் அவர் அறிந்திருக்கக்கூடும். அனைத்தையும் நிராகரித்தபடி முன்னோக்கி நகர்ந்தபடியே இருந்திருக்கிறார். கெ.கெ.எம்மையும் அவரது உதிரம் கைவிட்டுவிட்டது. ஒரு புகைப்படச் சட்டத்திற்குள் புகுந்து விடுவதே இனி அவருக்குப் பாதுகாப்பு. ஆனால் காலம் அதையும் அரிக்கும். மங்க வைக்கும். ஏன் வெறிகொண்ட கரங்களைக்கொண்டு உடைத்து வீசவும் வைக்கும். இப்போது அவர் இறந்தால் எத்தனை மகத்தான மரணமாக இருக்கும் அது. ஆனால் அவர் இறக்க விரும்பவில்லை. இத்தனை பெரிய தனிமையில்

இறக்க எவர்தான் விரும்புவார்? எதுவோ ஒன்று நிகழ்ந்து எல்லாம் நேர்மாறாக மாறிவிடும் என எதிர்பார்ப்பவர்போல பிடிவாதமாக உயிரோடிருக்கிறார். பாவம் கெ.கெ.எம். பெண்மை தரும் பாதுகாப்புபற்றி அவர் அறியமாட்டார். மனைவியின் மடியிலோ, மகள் மடியிலோதான் மனிதன் நிம்மதியாகச் சாகமுடியும். இந்த இரவில் நாகம்மையின் உடலின் வெம்மையால் அணைக்கப்பட்டவனாக இறந்தால் எனக்கு நிறைவுதான். எல்லாப் புரட்சியாளர்களும் திரும்பிவர கருணைமிகுந்த ஒரு பெண்மடி இருக்க வேண்டும். தாயின் முந்தானையின் பிடியை விடாமல் செய்யும் சிறுவர் சாகசங்களாகவே புரட்சிகள் இருக்க வேண்டும். புரட்சியாளனுக்குத் தனிமை விதிக்கப்பட்டிருக்கிறது. கருணையின்மை அவன்மீது பாயக் காத்திருக்கிறது. இலட்சிய வேகத்தால் மறைக்கப்பட்ட, புறக்கணிக்கப் பட்ட, ஒவ்வொன்றும் அவனை அணுகி கணக்குத் தீர்க்கக் காத்திருக்கின்றன. காலம் ஒரு தருணத்தில் அவனை உதிர்த்துவிட்டுத்தான் அடுத்த அடியைத் தூக்கி வைக்க முடியும். பாவம் மார்க்ஸ்! பாவம் லெனின்! பாவம் ஸ்டாலின்! பாவம் கெ.கெ.எம்! அவர்கள் அடைந்த துக்கங்களை வரலாறு பதிவு செய்யவில்லை. அவர்கள் பெண்மையால் கைவிடப்பட்ட ஆண்கள். தனிமையில் மட்கி இறந்த பேதை மனிதர்கள். கார்க்கி அன்னையை புரட்சிக்கு ஆசியளிக்குமாறு வேண்டியது இதற்காகத்தான்! உள்ளூர அவனறிந்திருந்தானா? திரும்பி வர அன்னைமடி இருக்க வேண்டுமென எண்ணினானா? ஆனால் விஷம் தின்று வெளிநாட்டு விடுதி ஒன்றின் அறையில் தனிமையில் செத்தான். அல்லது கொல்லப்பட்டான். பாவம் கார்க்கி! பாவம் மயகோவ்ஸ்கி! பாவம் அலக்சாண்டர் குப்ரின்! எளிய மனிதர்கள். எளிய மனிதர்கள்.

அஞ்சியவன்போல எழுந்து விளக்கை அணைத்துவிட்டு நாகம்மையின் அருகே படுத்து அவளை அணைத்துக்கொண்டான். அவள் கலங்கலான குரலில் ''தூங்குங்க'' என்றாள். அவளை மீண்டும் இறுக்கினான். இரவில் தூக்கமில்லாது இருக்கும்போது வரும் எண்ணங்கள்தாம் எத்தனை அபாயகரமானவை. ஒருவனை தன்னையே முற்றிலும் மறுதலிக்க வைப்பவை. எதிரியினுடைய எண்ணங்கள் ஏதோ மந்திரசக்தியால் தனக்குள் குடியேறியதுபோல. ஒருவேளை அது நாகம்மையின் எண்ணங்கள் தாமா? அவளா எதிரி? மண்ணில் அவளன்றி துணையெனயார் உண்டு? எதிரியல்ல, எதிர்த்தரப்பு அவள். ஏன் அவளுக்கு அவனுடைய ஈடுபாடுகள் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை? அவற்றை அவனுடைய சபலமோ பலவீனமோ போலத்தான் மதிப்பிடுகிறாள். பசியையும், பிணியையும், சிறுமையையும், அன்றாடம் அவற்றைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் மேன்மக்களையும் அவள் பார்ப்பதில்லையா? நல்ல கதை. அவளுக்குப் புரிவது போல் பசியின் வெப்பம் ஒருபோதும் அவனுக்குப் புரிந்ததில்லை. முன்பின் தெரியாத பிச்சைக்காரிக்காக காலை உணவை எடுத்துத் தந்துவிட அவளால் முடியும். சோறிடும்போது அவள் கண்களில் தெரியும் பரிவு உலகைப் புரக்கும் அன்னபூரணிக்கு உரியது. அந்த

மனவிரிவு அவனுடைய மன எழுச்சிகளை ஏற்க ஏன் மறுக்க வேண்டும்? அவள் அவனை ஓர் ஆணாகவும் கணவனாகவும் அன்றி வேறு எவ்வகையிலும் காண மறுப்பதனாலா? ஆம், அதனால்தான். முட்டாள்; யாரை ஏமாற்றுகிறாய். உனக்குத் தெரியும். உன் இலட்சிய வேகத்தில் அதிகார இச்சை கலந்துள்ளது. அதிகார இச்சை இன்று உன் கனவுகளுக்கே அடித்தளமாக ஆகிவிட்டிருக்கிறது. அதிகாரம்...அதுதானா? இலட்சியக் கனவுகளுக்குள் முளைத்து, அந்த இலட்சியங்களைத் தின்று வளர்ந்து, பெரும்புற்றுபோல உருவாகி நிற்கும் அதிகார இச்சை. லெனினும் ஸ்டாலினும் அதிகார இச்சையின் மூர்த்திகரணங்கள் மட்டும்தானா? புரட்சிகள் எல்லாமே அப்படித்தானா? இல்லையேல் புரட்சி அமைப்புகளுக்குள் ஏன் அத்தனை தனிமனிதத் துவேஷங்களும் போட்டிகளும் முளைக்க வேண்டும்? நாகம்மையின் தோள்களில் முகம் புதைத்துக் கொண்டான். தலைக்குள் ஒரு சிக்கலான இயந்திரம் விதவிதமான தருக்கங்களை வாரியிறைத்தபடி அவனை மீறி இயங்குவது போலிருந்தது.

நாகம்மையின் கரங்கள் அவனை வளைத்தன. ''இன்னும் தூங்கேல்லியா?''

''இல்ல.''

''என்ன காரியம்?''

''ஒண்ணுமில்ல, ஏதோ நினைப்பு.''

அவள் தன் மார்புகளை நன்றாகத் திறந்து அவனை அணைத்துப் புதைத்துக் கொண்டாள் ''என்ன வீண் யோசனை? ...ம்?'' என்றாள்.

திடீரென்று எழுந்து தீவிரத்துடன் அவள்மீது பரவினான். அவள் உடலின் மெல்லிய வெப்பம் பரவிய வளைவுகளுக்குள் தன்னைப் புதைத்துக் கொண்டான். மீண்டும் கருவறை புகுதல். சதையாலான ஒரு கோட்டைக்குள் ஆனந்தமான நித்திரை. மீண்டும் மீண்டும். உடல் எவ்வளவு பெரிய தடை. தடையல்ல இது. இதுவே ஊடகம். எல்லா ஊடகங்களுக்கும் தடை உண்டு. ஓர் எல்லை வரைதான் அவை கடத்தும். பின் இறுகித் தடையாக ஆகும். பெண்ணின் உடல் கருணையால் ஆக்கப்பட்டிருக்கிறது. அழுத்தமான திரண்ட தொடைகள், நடுவே யோனியின் வற்றாத கருணை. அதன் முடிவற்ற சிருஷ்டிகரம். இந்த மார்பகங்கள்தாம் எத்தனை மகத்தான உறுப்புகள். ஆத்மாவில் பொங்கும் கருணையை பௌதிகமாக வெளியேற்றும் ஊற்றுகள். மென்மையாக உயிரின் துடிப்புடன் பிறரை அவள் அதில் அணைத்துக் கொள்ளலாம். ஏன் இவ்வுறுப்புகள் ஆணுக்கு இல்லை? கோட்டை மதில்போல தட்டையான மார்பு. வெறியெழுந்ததும் தாக்கத் துடிக்கும், ஊடுருவத் துடிக்கும் ஆண்குறி. பெண்கள் நடத்த வேண்டும் புரட்சியை. அது இடித்துத் தள்ளாது. கட்டி எழுப்பாது. பிறிதின் சாரத்தை உண்டு தன்னுள்ளிருந்து உதிரமும் உயிரும் தந்து புதிய ஒன்றை பிறக்க வைக்கும். ஆம்...பெண்கள்...

சோர்ந்து அவள் உடல்மீது அவன் படுத்திருந்தான். எண்ணங்களின் வேகம் மட்டுப்பட்டு துண்டுதுண்டு சொற்களாக மனம் ஓடிக் கொண்டிருந்தது. என்ன எண்ணிக் கொண்டிருந்தோம் என நினைவுகூர்ந்தும் பயனின்றி இருந்தது. அவள் அவனை செல்லமாகக் கொஞ்சி சமாதானப்படுத்தினான். எப்போதோ அவள் உடலில் ஒடுங்கி அவன் தூங்கிவிட்டிருந்தான்.

♦

5

காலையில் வீட்டை விட்டுக் கிளம்பும்போதே சண்டை வந்துவிட்டது. அருணாசலம் தலைசீவிக் கொண்டிருந்தபோது நாகம்மை டீயுடன் வந்தாள். ஜன்னல் கட்டைமீது டம்ளரை வைத்துவிட்டு ''நேத்தய்க்குத் தேங்காயெண்ணைக் குப்பியை எடுத்து ஜன்னல்ல வச்சது யாரு?'' என்றாள்.

அந்த தோரணை அவனுக்கு ஆத்திரமூட்டியது. ''ஏன், எதுக்கு?'' என்றான்.

''பாப்பா குப்பியை இழுத்துப் போட்டுட்டுது. ஒரு குப்பி எண்ணை போச்சு. அவ கைகால் கிளியாம இருந்தது யோகம். உங்ககிட்ட எத்தன தடவ சொல்லியாச்சு?''

''உனக்க கிட்ட நான் எத்தன தடவ சொல்லி யிருக்கேன், புஸ்தகம் மேல எண்ணையும் பவுடரும் வைக்காதேண்ணு.''

''பின்ன, பங்களா இல்லை கட்டி வச்சிருக்கு, ரூமுக்கு ஏழு அலமாராவோட? எங்க பாத்தாலும் புஸ்தகம். இந்த சவத்தெளவுகளை மண் ணெண்ணை ஊத்தி எரிச்சாத்தான் இந்த வீடு உருப்படும்.''

''அதுக்க முன்னால உன்னை தூக்கிப் போட்டு எரிக்கணும். வாய மூடுதியா?''

''எரியுங்க. உங்ககிட்ட எறங்கி வந்திட்டு அடுப்புச் சூட்டில எரிஞ்சதில்லாம என்னத்தக் கண்டேன். ஒரேயடியாட்டு எரிஞ்சாத்தான் எனக்கு நிம்மதி'' என்று குரல் உடைந்து விசும்ப ஆரம்பித்தாள்.

''எவனையாவது கொண்ணுட்டோ திருடிக் கிட்டோ உனக்குப் பட்டும் நகயும் கொண்டு வாறவனை தேடிப்பிடிக்க வேண்டியதுதானே? உன்னை நான் கையப்பிடிச்சு இழுத்தனா, எனக்க பெண்டாட்டியா வாண்ணு...''

''சும்மா வரேல்ல, பதினாறு பவுனும் பத்தாயிரம் ரூவாயும் கொண்டுதான் வந்தேன்.''

''பெரிய பதினாறு பவுன்... போடி.''

''அதில இப்பம் எத்தனை பவுன் மிச்சம்?''

அருணாசலம் புண்பட்டான். அந்தப் பணத்தையும் பவுனையும் வைத்துத்தான் சித்ராவை அனுப்பியது. அவனுக்குத் தாக்கும் வெறி ஏற்பட்டது. ''அவ்வளவு போக்கு இருந்தா ஏண்டி இருபத்தேழு வயசுவரை தாழக்குடில மூத்து நரைச்சு இருந்தே? ராஜகுமாரன்மாரு குதிரைல வாறப்ப ஆத்தில தண்ணி வந்துட்டோவ்?''

அவள் மனதின் நுட்பமான பகுதி அது என அவன் அறிவான். அவள் உடலில் ஓடிய தவிப்பில் வலி தெரிந்தது. முகத்தில் தெரிந்த மாறுதல் அவனை நடுங்க வைத்தது. மிக ஆக்ரோஷமாக எதைப் பற்றிக் கூறப் போகிறாள் என்பது தெரிந்தது. அதற்குள் அவள் உணர்ச்சியால் கிரீச்சிட்ட குரலில் ''எனக்கு தலையில் எழுதியிருக்கே, கம்யூனிஸ்டுகாரகிட்ட வெந்து சாவ்ணும் எண்ணு. கம்யூனிஸ்டாம் கம்யூனிஸ்டு. வேற சோலியில்ல. அங்க ஒடைய தேசங்களில எல்லாத்தயும் வாரி எருக்குளியில போட்டாச்சு. இங்க கொறெ பேரு வேலையத்து சொமந்துகிட்டு திரியினும். புஸ்தகக் கெட்டும் அதுவும். வேலை மினக்கெட்டு அவன் அடிச்சு சும்மா குடுத்தான். வாங்கி அடுக்கி வச்சிட்டு இருக்கிணும். நான் போறப்ப எனக்க கட்டயில அடுக்க...''

''வாய மூடுடி நாயே.''

''வாய மூடிக்கிட்டு இருக்க அங்க உங்க சங்கத்தில சென்ணு சொல்லுங்க. மொந்தம்பளம் மாதிரி இருக்கியானுவளே. வாய மூடிக் கேட்டுப்போட்டு சிந்தாபாத் அடிப்பானுவ...''

''அய்யோ அம்மா, எனக்க அம்மா...''

அடித்த பிறகுதான் மனம் துணுக்குற்றது. மேலும் தாக்க வேண்டும் என்ற இச்சை உடலில் துடித்தது. அவள் கைகளால் முகம் பொத்தி அப்படியே கீழே அமர்ந்து ஓவென்று அழுதாள். அருணாசலம் பாய்ந்து இறங்கி வந்து வண்டியை எடுத்தான். அது முனகியது. ஓங்கி அதன் விலாவில் மாறிமாறி உதைத்தான். கையால் இருக்கையில் குத்தினான். வண்டி கிளம்பியதும் ஏறி அமர்ந்தான். காற்றுமீது பறக்கத் தொடங்கியதும் மனம் பதற்றமிழந்தது. ஆனால் அதைச் சமாதானம் செய்யவே முடியவில்லை.

எத்தனை கூர்மையாக இடம்பார்த்துத் தாக்குகிறாள். அவளுக்கு சோவியத் ரஷ்யாவின் உடைவின் நாட்களில் அவன்பட்ட அவஸ்தை தெரியும். ஒரு நெருங்கிய மரணம்போல, ஒரு பேரிழப்புபோல. தலை கலைந்து கிடக்க, கண்களில் பதற்றமும் தவிப்புகளும் சுரமடிக்க, எவருடனும் எதுவும் பேசப் பிடிக்காமல் அவன் வீட்டில் அடைந்து கிடந்த நாட்கள் அவை. வெகு நாட்களாக காதில் விழுந்த உதிரிச் செய்திகளை மனம் ஏற்க மறுத்துக் கொண்டிருந்தது. அவற்றை மறுக்கும் வாதங்களை உண்டுபண்ணும் பொருட்டு மூளை தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்தது. பிறரிடம் விவாதிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக்கூட அவன் அந்நாட்களில் தவிர்க்கவில்லை. அவர்களை வாதாடி மடங்க வைப்பான். தனிமையில் அந்த வாதங்களைத் தன்னை நோக்கித் திருப்பிக்கொள்வான். எண்ண

ஓட்டத்தின் உச்சியில் சூடேறிப் பழுத்த மூளை அசைவின்றி நின்றுவிடும். ஓய்ந்து தளர்ந்து கண்மூடி அமர்ந்திருக்கையில் சுயபரிதாபமும் தனிமையும் எழும். அவை வளர்ந்து உலகின்மீதே வெறுப்பாக மாறும். அழித்து மிதித்து துவைத்துத் தள்ள வெறி பொங்கும். அவள் அந்த வேகத்தைக் கச்சிதமாக ஊகித்து விலகிவிடுவாள்.

மெல்லமெல்ல சோவியத் ரஷ்யாபற்றிய எந்த கேள்விக்கும் பலமுறை சொல்லப்பட்டு கூர்மையாக்கப்பட்ட பதில்கள் அவனிடம் இருக்கத் தொடங்கின. ''சோவியத் ரஷ்யாவில் நடந்தது என்ன? ஒரு போல்ஷவிக் புரட்சி லெனின் தலைமையில் நடந்தது. தொடர்ந்து கம்யூனிச சமூகம் ஒன்றை கட்டியெழுப்பும் முயற்சி. அம் முயற்சிதான் தோற்றுப் போயிற்று. கம்யூனிசம் தோற்கவில்லை. இந்த வித்தியாசத்தை நம்மைப் போன்று சிந்திக்கும் பழக்கம் உடையவர்கள் கட்டாயம் புரிந்துகொள்ள வேண்டும். சோவியத் ரஷ்யாவும் சீனாவும் கியூபாவும் வியட்நாமும் அம்முயற்சியின் பல்வேறு படிநிலைகளில் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் கம்யூனிசத்தை அணுகுகின்றன. தவறுகள் நடைபெறலாம். சரிவுகள் ஏற்படலாம். ஏனெனில் இது ஒன்றும் பழக்கப்பட்ட பாதையோ, நிரூபிக்கப்பட்ட வெற்றிமுறையோ அல்ல. இந்நாடுகளுக்கு எதிராக அணிவகுத்துள்ளவை விரோதம்கொண்ட பெரும் சாம்ராஜ்யத்துவ சக்திகள். அவற்றின் சமூக அமைப்புகளும் கருத்துநிலைகளும் பல நூற்றாண்டு காலப் பழக்கம் உடையவை. ஆகவே மானுட மனதில் திடமாக வேரூன்றியவை. சோஷலிச சமூக அமைப்புக்கு இரண்டு தலைமுறைகூட காலப் பழக்கம் இல்லை. அதன் கருத்துநிலைகள் இன்னமும் அதன் குடிமக்களின் மனதில் வேரூன்றி, ஆழ்மனதை பாதித்து, அன்றாடப் பழக்கமாக ஆகிவிடவில்லை. சோஷலிச சமூகம் ஒன்று ஒரு வகையில் தன் சமகால வரலாற்றில் எதிர்நீச்சல் போடுகிறது என்பதை மறக்க வேண்டாம் தோழர். சோவியத் ரஷ்யாவின் நெருக்கடி மிகத் தீவிரமான ஒன்றுதான். அதை மார்க்ஸியர்கள் அனைவரும் கூர்ந்துகவனிக்கவேண்டும். இதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இதே போன்றோ இதைவிடவோ எத்தனை பெரிய பெரிய சரிவுகளும் சிதைவுகளும் முதலாளித்துவ அமைப்புக்கு நேர்ந்துள்ளன! சோஷலிச அமைப்பால் ரஷ்யா சரிந்தது. சரி அப்படியானால் இதோ தாய்லாந்தும் கொரியாவும் உட்பட உள்ள தெற்கு ஆசிய தேசங்கள் சரிந்து கொண்டிருக்கின்றனவே? அமெரிக்கா அதன் வரலாற்றில் எத்தனை சரிவுகளைச் சந்தித்துள்ளது. சோவியத் ரஷ்யாவின் சரிவினால் சோஷலிச அமைப்பு தவறானது என்றும், முதலாளித்துவ அமைப்பு சரியானது என்றும் நிரூபிக்கப்பட்டுவிட்டதாகக் கூறுவது எத்தனை பெரிய மோசடி! ரஷ்யாவில் நடந்தது என்ன? சோவியத் ரஷ்யா சாம்ராஜ்யத்துவ தேசங்களுக்கு எதிராக தன்னந்தனியாக ஒரு பெரும் ஆயுதப் போட்டியை மேற்கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டன. தொழில்களிலும் விவசாயத்திலும் முதலீடு குறைந்ததனால் பற்றாக்குறை ஏற்பட்டது. சோஷலிச சமூகத்தில் பிறந்து

வளர்ந்த புதிய தலைமுறைக்கு தாங்கள் அடைந்த சமூக அமைப்பின் அருமை தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் சுரண்டலை அறிந்ததில்லை. முதலாளித்துவ அமைப்பில் கட்டுப்பாடில்லாத களியாட்டம் உள்ளதாகவும், அதுவே வாழ்வின் பேரின்பம் என்றும் அவர்கள் நம்ப வைக்கப்பட்டனர். அதை நிகழ்த்தியது சாம்ராஜ்யத்துவக் கைக்கூலிகளால் ஊடுருவப்பட்ட காட்சித் தொடர்பு ஊடகங்கள். ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சிக்குள்ளும் ஏன், தலைமையிலும் கூட, ஐந்தாம்படை ஊடுருவியது. கோர்பசேவ் ஒரு ஏகாதிபத்திய உளவாளி. இளம் தலைமுறை தங்களுக்குள் உருவாக்கிக் கொண்ட அதிருப்தியை தூண்டிவிட்டனர் துரோக சக்திகள். அதன் விளைவே நாம் கண்ட அந்தத் துயரமான பெரும் சரிவு. இன்னொரு முக்கியமான விஷயமும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். நம்முடைய கட்சி கடந்த இருபது வருடங்களாகக் கூறி வருவதுதான் இது. சீனாவும் ரஷ்யாவும் இணைந்து ஏகாதிபத்தியத்தை எதிர்கொண்டிருந்தால் இன்றைய சரிவு ஏற்பட்டிருக்காது. அவ்விரு நாடுகளிலும் உள்ள கட்சிகள் தேசிய வாதமெனும் மாயையால் கண்கள் கட்டப்பட்டவையாக இருந்தன. அதை ஏகாதிபத்தியம் நன்கு பயன்படுத்திக் கொண்டது. இங்கு ஒரு தத்துவப் பிரச்சினை உள்ளது. மார்க்ஸியம் சர்வ தேசியவாதம். ஆகவே அது அனைத்து தேசியவாதங்களுக்கும் எதிரானது. ஒரு மார்க்ஸிஸ்ட் ஒருபோதும் ஒரு உத்தியாகக்கூட சர்வதேசியத்தை மறுக்கவோ தேசியத்தை மேலும் அழுத்திக் காட்டவோ முயலக் கூடாது. ரஷ்யாவிலும் சீனாவிலும் நடந்த முக்கியமான தவறு இது. அங்கு புரட்சி நடந்தபோது, மக்களின் உணர்ச்சிகளை தூண்டிவிட்டு, கட்சிக்கு வலு சேர்ப்பதற்காகத் தேசியவாதம் பயன் படுத்தப்பட்டது. தோழர் லெனினும் தோழர் மாவோவும் செய்த தவறு இது. அந்த தருணங்களில் மிக அற்புதமான விளைவுகளைத் தந்த உத்தியாக இது இருந்தது. போரில் தோற்று அவமானப்பட்டு நின்ற ரஷ்யாவின் ஆன்மாவைப் பார்த்து லெனின் தாய்நாட்டுக்காகப் போராட வரும்படி அழைத்தார். அந்த அழைப்பை ஏற்றுப் படைவீரர்களும் தொழிலாளிகளும் திரண்டு வந்ததனால்தான் போல்ஷவிக் புரட்சி நடைபெற்றது. ஜப்பானிடம் தோற்று, எல்லைகளைப் பல்வேறு போர்களில் இழந்து, சிதையத் தொடங்கியிருந்த சீனாவில் புரட்சிக்கு அறைகூவல்விட்ட மாவோ சீனதேசியம் என்ற புராதனமான நெருப்பை ஊதி வளர்க்க முயன்றது ஒருவகையில் வெற்றிகரமான தந்திரம்தான். ஆனால் பிற்பாடு, புரட்சி நடந்து சோஷலிச சமூக உருவாக்கம் நடைபெறும் போது, இவ்வாறு தூண்டிவிடப்பட்ட தேசிய உணர்வுகள் பெரும் தடையாக வந்துநின்றன. லெனினும் ஸ்டாலினும் மாவோவும்கூட அதை வெல்ல முடியவில்லை. இன்னும் கூறப்போனால் முதல் போல்ஷவிக் புரட்சியில் இருந்த ரஷ்ய தேசிய அம்சமே அடுத்து சீனப் புரட்சி ஏற்பட்டபோதும் சீன தேசிய அம்சம் அதில் இருந்தாக வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியது. தோழர் ஸ்டாலின் உட்பட்ட ரஷ்யப் புரட்சித் தலைவர்களிடம் இருந்த ரஷ்ய தேசியவாத அம்சமே சீனாவை ஐயப்பட வைத்தது. அந்த ஐயத்தை ஏகாதிபத்தியம் பூதாகரமாக வளர்த்தெடுத்தது. இந்தக் குறைகள் எல்லாம்

இன்று உலக மார்க்ஸியர்கள் முன் பிரம்மாண்டமாக எழுந்து நிற்கின்றன. அவற்றை விரிவாக விவாதிக்க மார்க்ஸியர் முயல வேண்டும். ஆம் தோழர், இந்த நெருக்கடிகூட நன்மைக்குத்தான். தங்கள் தவறுகளை ஆராயவும், தங்கள் நடைமுறைகளை மறுபரிசீலனை செய்யவும் மார்க்ஸியர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்தப் பாடங்கள் மார்க்ஸியத்தை மேலும் வலுப்படுத்தும். குறைகள் களையப்பட்டுப் புதிதாக எழும் மார்க்ஸியத்தை அதன் எதிரிகள் ஒன்றும் செய்ய முடியாது. ரஷ்யாவைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் தோழர். அங்கு மார்க்ஸியம் கண்டிப்பாகத் திரும்பி வரும். லெனின் பிறந்த மண் அது. இங்கும் ஒரு கம்யூனிச சமூகம் கண்டிப்பாக அமையும். நாம் இல்லாவிட்டாலும் நமது குழந்தைகள் அதைக் காண்பார்கள். ஏனெனில் கம்யூனிசம் ஒரு கனவு இல்லை. அது ஓர் அரசியல் திட்டம் கூட இல்லை. அது ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி. ஒரு தவிர்க்க முடியாத சாத்தியம். கம்யூனிசத்தைக் கொண்டு வரப் போவது நீங்களோ நானோ இல்லை. தொழிலாளி வர்க்கமோ விவசாயிகளோ இல்லை. வரலாறுதான் அதைக் கொண்டு வரப்போகிறது. வரலாறு என்பது நம்மை அடித்துக் கொண்டு போகும் ஒரு பெரும் பிரவாகம். இந்தப் பின்னடைவு தற்காலிகம்தான். வரலாற்றின் ஓட்டத்தில் இது ஒரு நிமிடம் போலத்தான். கம்யூனிசம் தோற்காது தோழர். தோற்கவேண்டும் என்றால் வரலாறு அப்படியே உறைந்து நிற்கவேண்டும். ஏகாதிபத்தியம் நம்முடன் போரிடவில்லை. வரலாற்றுடன் போரிடுகிறது. வரலாற்றை அது ஒரு போதும் வெல்ல முடியாது. ஏனெனில் அனைத்தும் வரலாற்றின் சிறுசிறு துளிகளே. வரலாற்றின் திட்டமே பிரபஞ்சத்தை ஆள்கிறது...

ஆனால் உள்ளூர அவனுடைய நம்பிக்கைகள் பலவீனமடைந்திருப்பதை அவள் அறிவாள், அவள் மட்டுமே அறிவாள். ஒருவேளை பிற தோழர்களும் அறிவார்களோ? தங்களை வைத்துப் பிறரை மதிப்பிட அவர்களால் முடியுமோ என்னவோ. அவனுடைய பேச்சிலும் செயலிலும் முன்பைவிட உறுதியும் வேகமும் மட்டும்தான் தெரியும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவன் பொறுமை இழந்துவிடுவது உண்டு. கம்யூனிச எதிர்ப்பாளர்களின் கொண்டாட்டங்களை அனுதாபம் நிரம்பிய புன்னகையுடன் அவனால் தாண்டிப் போய்விடமுடியும். தொழிலாளர்கள் சிலரின் அசட்டுக் கேள்விகள்தான் அவனை உசுப்பிவிடும். ஒருமுறை சங்க வட்டாரத்தில் பிற்பாடு மிகவும் பிரபலமாக ஆன ஒரு சம்பவம் நடந்தது. மோகனசந்திரன் நாயர் என்று கடிதப் போக்குவரத்துப் பகுதியில் ஒருவன் இருந்தான். அவன் மண்டைக்குள் பதினைந்து வருடங்களாக அவன் எழுதி ஒட்டி அனுப்பியும், கையெழுத்திட்டுப் பெற்று வரவு வைத்தும், புழங்கிய கடிதங்களன்றி வேறு ஒன்றும் இல்லை என்பதை முகத்தைப் பார்த்தே தெரிந்துகொள்ள முடியும். அத்தனை வருடங்களில் அவன் எதைப்பற்றியும் கருத்து சொன்னதில்லை, டீ டிபன் விவகாரங்களைத் தவிர. அருணாசலம் அவனிடம் அதிகபட்சம் மூன்றுமுறைகூடப் பேசியிருக்க மாட்டான். எந்த யூனியனிலும் உறுப்பினனல்ல. முதலாளிக்கு விசுவாசமான ஊழியன். அன்று அருணாசலம்

ஆபீஸில் நுழைந்தபோது மோகனசந்திரன் நாயர் அவனைப் பார்த்து வெற்றிலைக்காவி படிந்த பெரிய உதடுகளைத் திறந்து கரிய பற்களைக் காட்டிப் புன்னகைத்து, வணக்கம் சொன்னான். அருணாசலம் அவன் கண்களிலும் வெற்றிலைக்காவி ஏறியிருப்பதாக எண்ணுவதுண்டு. அரை மனதுடன் அவன் மறுவணக்கம் சொன்னதும் நாயர் ''என்ன சாரே, சோவியத் ரஷ்யாவில் கம்யூனிசம் ஒடஞ்சு போயல்லோ'' என்றான். அருணாசலம் வெறி கொண்டான். தலைமைக் குமாஸ்தாவின் இருக்கைக்கு மேலே ஓர் உலக வரைபடம் உண்டு. அதை எடுத்து மோகனசந்திரன் நாயரின் மேஜை மீது போட்டு ''இதில சோவியத் ரஷ்யா எங்கே இருக்குண்ணு சொல்லுடா நாயே'' என்று கூவினான். ''இல்லேண்ணா இப்பம் நீ எனக்க காலில விளுந்து மன்னிப்பு கேக்கணும். காட்டுடா'' என்று சட்டையை பிடித்துக் கொண்டான். ''நான் தமாஷுக்குக் கேட்டது சாரே. எனக்குத் தெரியாது சாரே'' என்று நாயர் பரிதவித்தான். ஏழெட்டு பேர் ஓடிவந்து அருணாசலத்தைப் பிடித்துக் கொண்டார்கள். ''மரமாந்தை நாயே, உனக்கு சிரிப்பா இருக்கா? நியூஸ் பேப்பர்ல குண்டி தொடைக்குத உனக்கு சிரிப்பாட்டா இருக்கு? களுவேறிக்க மோனே..'' என்று அருணாசலம் கொதிக்க, பிறர் பிடித்து விலக்கினார்கள். நாயர் மெதுவாக ஆசுவாசமடைந்தான். பீதியுடன் வரைபடத்தைப் பார்த்தான். சட்டென்று கமலம்மை வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள். அலுவலகமே சிரிக்க ஆரம்பித்தது.

சங்க அலுவலகத்தின் முகப்பிலும் சாலையிலும் சைக்கிள்களும் மொபெட்டுகளும் நிரம்பியிருந்தன. ஒரு தள்ளுவண்டிமீது டீக்கடைகூட வந்துவிட்டிருந்தது. அந்தச் சாலை முழுக்க செங்கொடிக் கம்பங்கள் வரிசையாக இருபக்கமும் நின்றன. கொடித்துணிகள் புறாச் சிறகுகள்போல படபடக்க, தோரணத் தாள்கள் தட்டாரப்பூச்சி இறகுகள் போல விர்ரிட்டன. அருணாசலத்தைக் கண்டபோது பரபரப்பு ஏற்பட்டது. அவன் வண்டியை நிறுத்தியபோது ஒரு தொழிலாளி வந்து அதைப் பிடித்துக்கொண்டான். ஏழெட்டு பேர் பின்னால் வந்தார்கள்.

''நாராயணன் வந்தாச்சா?''

''வந்தாச்சு தோழர்.''

''கொடி வேலை ஏதாவது பாக்கி கெடக்கா?''

''இல்ல தோழர். இனிம மண்டப அலங்காரம் மட்டும்தான். நேத்து ஒரு கல்யாணம். இன்னைக்குக் காலம்பறதான் வேலை தொடங்கினது.''

''அங்க ஆரு பொறுப்பு?''

''ராகவன்.''

''சேரும் சாமானும் எடுக்க ஆரு போறது?''

''ரெவீந்திரனும் ரெமேசனும் போயாச்சு.''

அறைக்குள் நாராயணன் போனில் பேசிக் கொண்டிருந்தான். ஒரு கையால் வணக்கம் கூறிவிட்டுத் தொடர்ந்தான். அருணாசலம் அமர்ந்ததும் பெருமூச்சு விட்டான். கால்களை நீட்டி உடம்பைத் தளர்த்திக்கொண்டான். நாராயணன் பேசியபடியே கையைக் காட்டி கடிதங்களைச் சுட்டினான். கலை இலக்கிய அமர்வுக்கு வரும் நான்கு எழுத்தாளர்கள் அதை உறுதிப்படுத்த கடிதம் எழுதியிருந்தார்கள். ஒருவர் மனைவியுடன் வருவதாகத் தெரிந்தது. சமையற்காரர் மளிகைப் பட்டியலை அனுப்பி யிருந்தார். ஏறத்தாழ முப்பத்தேழாயிரம் ரூபாய்வரை பலசரக்கு மட்டும் ஆகும். விறகும் அரிசியும் தனியாக. தொழிற்சங்கக் கருத்தரங்கிற்கு பதினேழு மாநில சங்கப் பொறுப்பாளர்களும் அறுபது மாவட்ட சங்கப் பொறுப்பாளர்களும் வருவதாக நாராயணன் ஒரு பட்டியலிட்டிருந்தான். எட்டு பேர் கூட்டணிக் கட்சிகளின் தொழிற்சங்க உறுப்பினர்கள்.

நாராயணன் பேசி முடித்து ''மோட்டாரை மாத்த ஆளுக்கு சொல்லி யிருக்கேன் தோழர்'' என்றான்.

''இந்த அட்டவணை ரொம்ப நல்லாயிருக்கு நாராயணன். யாரு போட்டது?''

''ரெவின்னு ஒரு பய, நல்ல புத்திசாலி.''

''அவனிட்ட மாநாட்டுக்கு வாற விருந்தினர் எல்லாருக்கும் சேத்து இதேமாதிரி ஒரு அட்டவணை போடச் சொல்லுங்க. கடைசியில ரெண்டு கட்டம் கூடுதலாட்டு வேணும். அவங்க தங்கிற இடமும் போன் நம்பரும் ஒரு கட்டத்தில. அவங்க பங்கெடுத்துக்கிற நிகழ்ச்சிகள் அடுத்த கட்டத்தில. வேணுமின்னா இன்னொரு கட்டமும் போட்டு அதில அவங்க பயண சௌகரியங்கள் மத்த அவசியங்களுக்கு யாரு பொறுப்புன்னு எழுதலாம். அந்த அட்டவணைய இந்த சுவரில ஒட்டிட்டோமானா எப்ப வேணுமின்னாலும் பாத்துக்கிடலாம்.''

''செஞ்சிடலாம்.''

''இன்னொண்ணு சொல்லணும்னு நினைச்சேன். இனிம டீ வாங்கி கட்டுப்படியாகாது. ஒரு இருபது லிட்டர் பால் வாங்கச் சொல்லி, பின்பக்கமாட்டு அடுப்பு போட்டு, டீ போட ஏற்பாடு செய்யுங்க. குரியன்கிட்டே சொன்னா பாத்துகிடுவான். டம்ளர் வாடகைச் சாமான் லிஸ்டில உண்டுல்ல?''

''உண்டு, சொல்லிடலாம். போன் ரெண்டு வந்தது. திருவனந்தபுரம் சி.எம். ஆபீஸ்லயிருந்து ஒண்ணு. சி.எம். வர முடியர்து. கலக்டர் மீட்டிங் இருக்காம்.''

''அது எதிர்பார்த்ததுதான், அப்புறம்?''

''ஆர். ஷண்முகப்பாண்டி நிகழ்ச்சியன்னைக்கு காலைலதான் வருவாராம் பஸ்ல. அவங்க தொழிற்சாலைல ஒரு ஆளுக்கு ஆக்ஸிடென்ட் ஆயி உடனடிப் போராட்டம் ஒண்ணு ஏற்பாடாயிடுச்சு.''

''இந்த அட்ட வணையில இன்னொரு கட்டம் சேத்துக்கிடுங்க. யார் யாரு வந்து சேந்தாச்சு சேரலைண்ணு ஒரு அடையாளம் போடுயதுக்கு.''

''அட்டவணையே போஸ்டர் மாதிரி ஆயிடும்போல இருக்கே.''

''ரொம்ப சௌகரியம். யாரு வேணுமானாலும் எப்ப வேணுமானாலும் பார்த்துக்கிடலாம். வரவேற்புக் குழுவில உள்ள பத்து பேருக்கும் ஒரு டூட்டி சார்ட் மாதிரி போட்டுக்கிடுங்க. அவங்க செய்ய வேண்டிய வேலைப் பொறுப்புகளை கிளீனாட்டு எழுதிக் குடுத்திடுங்க. பிறகு குழப்பம் வரப்பிடாது.''

''சரி தோழர்.''

''சரி. ஒரு தோழரக் கூப்பிட்டு இதுவரை வந்த பில் எல்லாத்தையும் தேதி வாரியா அடுக்கி ஒரு ஃபைல்ல போட்டு இன்டெக்ஸ் பண்ணி ஒரு ரெஜிஸ்டர்லயும் வரிசையாட்டு எழுதச் சொல்லிடுங்க. அமௌன்ட் மொத்தமாட்டும் தெரியணும். தேதி வாரியாட்டும் தெரியணும். பணம் குடுத்த தகவலுக்கு ஒரு கட்டம், மிச்சம் எவ்வளவுங்கிறது ஒரு கட்டம். குடுத்த பணங்களுக்குண்டான ரசீதும் வவுச்சரும் வேற ஒரு ஃபைல்ல தனியாட்டுபோட்டு இன்டெக்ஸ் பண்ணிருங்க. பணம் குடுத்த தகவல் எழுதறப்ப கண்டிப்பாட்டு வவுச்சர் அல்லது ரசீது நம்பர் எழுதணும். அதுக்குண்ணு ஆளு போட்டாத்தான் நடக்கும். பிரபாகரன் எங்க?''

''இப்பம்தான் பேங்குக்கு போனான்.''

''எல்லா பில்லுலயும் வவுச்சர்லயும் ரசீதிலயும் பின்பக்கம் அவனுக்க கையெழுத்து கண்டிப்பாட்டு வேணும். வந்த ஒடன என்னைப் பாக்கச் சொல்லுங்க.''

''செரி, தோழர்.''

''ஸ்டோருக்கு யாரு பொறுப்பு?''

''ராமதாஸ், போன தடவயும் அவன்தான். கூட்டுக்கு மணி உண்டு.''

''பரவாயில்ல. ரயில்வே ஸ்டேஷன் கூப்பிட்டு ரயில் வாற நேரங்கள கேட்டுக்கிடுங்க.''

''தோழர், கெ.கெ.எம்முக்கு உடம்பு சரியில்ல. காச்சல்ணு சொன்னாவ.''

''வாறது உறுதியான சிறப்பு விருந்தினர்கள் எத்தனை? அவங்க அனுப்பின கடிதங்களை மட்டும் தனி பைல்ல போட்டு வைக்கணும். எதுக்கு மத்த குப்பையெல்லாம்? பைல் எல்லாம் இன்னைக்கே ரெடியாயிடணும். பிறகு நேரமிருக்காது.''

''கெ.கெ.எம்ம டாக்டர்ட்ட காட்டினா...''

''என்ன அவருக்கு?''

''காச்சல். லேசாத்தான். ஆனா நல்ல தலைச்சுத்து இருக்கு.''

''வம்பாப் போயிடும்போல இருக்கே.''

''கெ.கெ.எம். ரொம்ப டல்லா இருக்காரு தோழர்.''

''உடம்பு சரியில்லைன்னா?''

''அதில்லை.''

''சரி போங்க. போயி வேலையைக் கவனியுங்க'' என்றபடி அருணாசலம் போனை எடுத்தான். டைரிக்காகத் துழாவுகையில் அந்தப் புத்தகம் கிடைத்தது – 'பனை பாடினால்.' அவசரத்தில் படிக்கவேயில்லை. புரட்டிப் பார்த்தபோது முதல் வரியிலும் கடைசி வரியிலும் ஆங்காங்கு தென்பட்ட மொழிப் பிரயோகங்களில் ஐம்பது வருடப் பழைமையோ முதிர்ச்சியின்மையோ தெரியவில்லை.

அருணாசலம் அந்தப் புத்தகத்துடன் எழுந்தான். படி ஏறி மாடிக்குப் போனான். மாடியில் இரண்டு அறைகள். ஒன்று விசேஷ விருந்தினர் அறை. அனேகமாக கட்சி மேலிட நிர்வாகிகளுக்கு மட்டும் உரியது. அது திறந்திருந்தது. மெத்தையுறையும் ஜன்னல் திரைச்சீலைகளும் மாற்றப் பட்டிருந்தன. இன்னொன்று கெ.கெ.எம்மின் சிறிய அறை. அதன் ஜன்னலுக்கு வெளியே மண்டபத்தின் அஸ்பெஸ்டாஸ் கூரையின் சாம்பல் நிறப் பரப்பில் வெயில் பளீரென்று எரிந்து கொண்டிருந்தது. கதவு ஒருக்களித்திருந்தது. உள்ளே மின்விசிறி கடக்கடக் என்று சுழன்று கொண்டிருந்தது. மெதுவாகத் தட்டினான். ''வாடே வா'' என்று கெ.கெ.எம் சொன்னார். திறந்தான். கெ.கெ.எம் சஸிசேரில்தான் படுத்திருந்தார். அருணாசலம் முதலில் ஸ்டாலின் படத்தைத்தான் பார்த்தான். சட்டமிடப்பட்ட வண்ணப் போஸ்டர். அது பழுப்பேறியிருந்தது. எத்தனை வலுவான கண்கள். இடுங்கலானவை. நகைச்சுவையற்ற கூர்மை ஒன்று ஒளிர்பவை.

''உடம்பு எப்படியிருக்கு தோழர்?'' அறையில் தரையெல்லாம் எரிந்த பீடித் துணுக்குகளும், தீக்குச்சிகளும், தாள்களும் நிரம்பியிருந்தன. மேஜைமீது தூசுபடிந்த சோவியத் பிரசுர நூல்கள். ஏழெட்டு டைரிகள். ஒரு மண் கூஜா, பழைய பவுண்டன் பேனா, மைப்புட்டி, அருகே ஒரு மரப்பெட்டியில் ரப்பர் ஸ்டாம்புகள். கெ.கெ.எம். மூக்குப்பாலத்தில் கரிய கண்ணாடித் தழும்புடன், கண்ணாடியின்மையால் சிறிது மாறுகண்போலத் தெரிந்த விழிகளுடன் எழுந்து மேஜையை அணுகி கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு திரும்பினார். முகம் உயிர்க்களை பெற்றது.

''உட்காருடே'' என்றார் கெ.கெ.எம். ''இந்த சன்னலை ராத்திரி மூடவே முடியல்ல. கீல் இளகிப் போச்சு. விடிகாலைல நல்ல குளிர். அதுதான் கொஞ்சம்போல காய்ச்சல்.''

''இப்ப பரவாயில்லையா?''

''ஒண்ணுமில்ல, ரெண்டு மாத்திரை சாப்பிட்டேன்.''

''தலைசுத்துதுண்ணு சொன்னாவ.''

''அது எப்பவும் உள்ளதுதானே? பிரஷர் இருக்கு. உப்பு குறைக்கணும்னு பூதலிங்கம் டாக்டர் சொல்லி ஏழெட்டு வருஷம் ஆச்சு. எங்க முடியுது! நாயர் கடை சாப்பாட்டில எப்பவும் ஒரு பிடி உப்பு அதிகம்தான். ராத்திரியானா குழம்பும் கறியும் கொஞ்சம் புளிச்சுப் போயிடுதுண்ணு இன்னும் நாலுபிடி உப்பு வாரிப் போட்டுருதான். பொதுவாக இப்ப எல்லாருமே கொஞ்சம் உப்பு அதிகமாட்டுதான் சாப்பிடுதாவ. உன் வீட்டிலகூட உப்பு கொஞ்சம் அதிகம்தான். நீ இப்பவே உப்ப குறைச்சுக்க, கேட்டியா?''

''ஆமா தோழர்'' என்றான் அருணாசலம். அவனுக்கு ஒரு மாதிரி இருந்தது. ''ராத்ரியில சோறா சாப்பிடறீங்க?''

''இட்டிலி வேணுமானா தியேட்டர் பக்கம் போகணும். இப்பண்ணா ஆளு இருக்கு. சாதாரணமா இங்க நான் மட்டும்தானே இருப்பேன். ராத்ரில அவ்வளவுதூரம் போறது கஷ்டம். வழிவிளக்கும் இல்லை. ஒருமுறை போயி பாதில இருட்டில வழி தடுமாறி ஒரு கடைத் திண்ணைலயே படுத்துத் தூங்கிட்டேன்.'' கெ.கெ.எம். சிரித்தார். ''கடைத் திண்ணையில படுத்த காலம் மறந்தாச்சு. அப்ப வந்த தூக்கம் இப்பம் இல்லை. நம்ம உடம்புக்கு கடைத்திண்ணைதான் சேருது பாத்துக்க...''

அவர் அப்படி மகிழ்ந்து சிரித்து அருணாசலம் சமீபமாகப் பார்த்ததில்லை. அவன் அவரைப் பார்க்க வந்தது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது என்று ஊகித்தான். மனம் குற்ற உணர்வால் நெளிந்தது. அவன் அங்கு வந்து ஏழெட்டு மாதம் இருக்கும்.

''ரேடியோ இப்ப எடுக்கல்ல அருணாசலம். எலிமினேட்டர்ல விளக்கு எரியல்ல. இல்லேண்ணா பாட்டு கேக்கலாம். ராத்ரி பத்து மணிக்கு மேல ஒரு ம்ணி நேரம் பழைய பாட்டு உண்டு பாத்துக்க. நாம ஒரு சினிமா பாத்தம் ஞாபமிருக்கா? மூலதனம். தோப்பில் பாசி படம். சத்யனும் பிரேம் நசீரும் நடிச்சது. இந்த ரேடியோ கெட்டுப் போறதுக்கும் முந்தின நாள் அதில ஒரு பாட்டு போட்டான் பாத்துக்க. 'ஸ்வர்க காயிகே இதிலே இதிலே. ஸ்வப்ன லோலுபே இதிலே இதிலே' ஞாபகமிருக்கா? என்ன கம்பீரமான பாட்டு இல்லையா? பாட்ட கேட்டுட்டு வானத்தையே பாத்துட்டிருந்தேன் அன்னைக்குப் பாதி நிலாதான். இருந்தாலும் ரொம்ப சந்தோஷமாட்டு இருந்தது. அருணாசலம் என்னத்துக்காக சந்தோஷம் எண்ணு தெரியல்ல. சினிமால சத்யன் நிலாவப் பாத்துட்டுதான் பாடுவான். சத்யனும் பாசியும் போயாச்சு. நீயும் நானும் போயிடுவோம். ஆனா நிலாவும் வானமும் இருக்கும். வேற யாரோ அதப் பாத்துட்டு பாடுவாங்க. இப்ப சொல்லும்ப ரொம்ப சாதாரணமாட்டு இருக்கு. ஆனா ராத்திரி தனியாட்டு உக்காந்து யோசிச்சப்ப மனசு அலையலையா கெடந்து பளபளத்தது'' கெ.கெ.எம். சிரித்தார். ''ஆனா உனக்கு இந்த மாதிரி யோசிக்க இன்னும் வயசு கெடக்கு

''மாநாட்டு ஏற்பாடுகளப் பத்திப் பேசலாம்னு வந்தேன் தோழர்.''

''அதுதான் நீயும் நாராயணனும் இருக்கிறீங்களே. லெட்டர் ஏதாவது இருந்தா கொண்டுவா. கையெழுத்து போடுறேன்.''

''சரி.''

''இப்ப சிறப்பு விருந்தினராட்டு மாசிலாமணி உண்டு இல்லியா? அவன் வேண்டாம் எண்ணு சொன்னேன்.''

''மத்தியக்குழு உத்தரவு...''

''ஆமா, அவன் மாணிக்கத்துக்கு ரொம்ப நெருக்கம். முன்னாடி ராமசுந்தரம் இந்தப் பயலைப்பத்தி என்ன சொன்னார் தெரியுமா? புரட்சி வந்தா இவன் ரொம்ப உதவியாட்டு இருப்பான் தோழர். சிந்துற ரத்தத்த கடசீல கழுவிவிட ஆளு வேணுமே... ஹெஹெஹெஹெ... அதாவது ஜெயிக்கிற கட்சில ஆசாமி இருப்பான்... ஹெஹெஹெஹெ. ஆனா ஜாக்ரதையா இல்லேன்னா காலிடுக்கு வழியாட்டு நழுவிப்போய் செங்கோட்டை சிம்மாசனத்தில ஏறி உக்காந்திடுவான்னு அம்புரோஸ் – யாரு நம்ப கெ.ஸி.டி.யூ. அம்புரோஸ் – சொன்னான். ஒரே சிரிப்பு அண்ணைக்கு.''

''ஆனா அவருக்கு நல்ல சப்போர்ட் இருக்கு இப்பம்...''

''இருக்கும். ஏன் இருக்காது? ரெண்டு வருஷம் முன்னால மேட்டூர் கெ.டி.ஆர்.எஸ். மில்லில ஸ்டிரைக்கு. முதலாளி நேரா டெல்லிக்குப் போயி ஒரு தேசிய ஜனதா துணை மந்திரியைப் பிடிச்சு தள்ள வேண்டியதைத் தள்ளிட்டான். அந்த மந்திரி நம்ம மேலிடத்தில அதை ஒரு கூட்டணிப் பிரச்சினை மாதிரி சொல்லிட்டான். கட்சி மாசிலாளுக்கு ஒரு சைகை காட்டிச்சு. மாசிலாளுக்கு தேசபக்தி குண்டூலயிருந்து கெளம்பி மண்டைல நெரம்பிடுச்சு. தேசிய நஷ்டத்தபத்தி ஒரு பிரசங்கமடிச்சுட்டு ஸ்டிரைக்க வாபஸ் பண்ணிட்டான்.''

''அப்ப நம்ம கூட்டு சர்க்கார் இருந்தது தோழர்.''

''நம்ம சர்க்காரா? தொழிலாளி வர்க்க ஆட்சியா? செங்கொடியா கோட்டைல பறந்தது? நாம சப்போர்ட் பண்ணின கூட்டணிதானே? ஏன் அவுங்க நமக்கு விட்டுக் குடுக்கக் கூடாதா? அந்த பத்தொன்பது மாசமும் ஒவ்வொரு போராட்டமும் இப்படித்தான் முடிஞ்சது. அவங்க விட்டுக் குடுக்கமாட்டாங்க. நாமதான் இடுப்புத்துணிவரை விட்டுக்குடுக்கணும். மதச்சார்பின்மைக்கும் தேசிய ஒருமைப்பாடுக்கும் தொழிலாளிதான் கஞ்சிச் சட்டியை மலத்தி வைக்கணும். அவன் பஞ்சுத் தலையணைய சரிக்க மாட்டான். நல்லா கூட்டணி வச்சுகிட்டாவ. ஆடும் ஓநாயும் கூட்டணி. தாயோளிப் பயலுவளுக்க சனநாயகம்.''

''நமக்குப் பிடிச்சாலும் இல்லாட்டியும் அது ஒரு யதார்த்தம். அதப்பத்தி இப்ப நாம பேசவேண்டாம் தோழர்.''

''பேசாம? போன வருஷம் நம்ம யூனியன் ஸ்டிரைக் செஞ்சப்ப இதே கூட்டணி விசயத்தைச் சொல்லி கூட்டமைப்பில நமக்கு எதிராட்டு பேசி ஸ்டிரைக்க முறிச்சவன் இந்த மாசிலாமணி. இப்ப மாநாட்டுக்கு மாலயும் போட்டுட்டு மாப்பிள்ளை சமைஞ்சு வாறான். அதுக்கு மத்தியக் கமிட்டி ஒல அனுப்புது. என்ன நெனைச்சானுவ, இங்க உள்ளவன்லாம் மொந்தம்பழம் முழுங்குதவன்னா? இல்ல கேக்குதேன்...?''

பேச்சை மாற்றியே ஆக வேண்டும் என்று அருணாசலம் உணர்ந்தான். சற்றுமுன் ஏற்பட்ட குற்றவுணர்வும் நெகிழ்ச்சியும் விலகி, கிழவரின் பிடிவாதம்பற்றி எரிச்சல் ஏற்பட்டது. தன் பொருத்தமின்மையை, தன் அவசியமின்மையை, ஒருகணம்கூட ஏன் இது உணரவில்லை. மூளையும் சுரணையும் மழுங்கிவிட்டனவா என்ன? அவர் இறந்துவிட வேண்டும்என்று தீவிரமாக விருப்பம் ஏற்பட்டது. அதைத் தவிர அவர் செய்யக் கூடிய உகந்த விஷயம் ஏதுமில்லை. அவருக்கு ஆகப் பெரிய கௌரவத்தையும் அங்கீகாரத்தையும் தர இனி அது ஒன்றைத் தவிர வேறு வழியில்லை. துவேஷத்தினால் அல்ல, அவர் மீதுள்ள பிரியத்தினாலும் மரியாதை யினாலும்கூட ஒருவன் அதைத்தான் ஆசைப்படக்கூடும். ஆனால் கிழவர் வேறு ஒரு உலகத்தில், மிக நிதானமானதோர் சுழற்சியாக காலம் இயங்கும் ஒரு தளத்தில், சுய திருப்தியுடனும் பிற அனைத்திலும் அதிருப்தியுடனும் மரணமேயில்லாதவராக அமர்ந்திருப்பது போலப்பட்டது.

''மாசிலான் அண்ணைக்கு ஸ்டாலினைப் பத்தி என்ன சொன்னேன் தெரியுமா? ஸ்டாலினைப் பத்தி நாம வெளிய என்ன சொன்னாலும் சரி, உள்ளூர ஸ்டாலினிசத்த வேரோட பிடுங்கி வீசியாகணும்னு சொல்லுதான். ஸ்டாலின் இல்லைண்ணா இவன் தூக்கிப் பிடிக்குத செங்கொடியை அமெரிக்காக்காரன் கோமணமாட்டு கெட்டிப்போட்டுப் போயிருப்பான் தெரிஞ்சுக்க. பரதேசிப் பயல் வேரறுக்கப் போறானாம். ஸ்டாலினுக்க வேரு இவன் நெனச்சா அத்துப்போற சங்கதியொண்ணுமில்லை. ஸ்டாலினுக்க வேரு இவன் அம்மைக்க... நான் ஒண்ணும் சொல்லல்ல. ஸ்டாலினப்பத்தி பேசற அளவுக்கு இந்தக் கொடிதூக்கிப் பெயல வளந்துட்டானுவளா? எந்தப் பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தைல தீர்வு உண்டுண்ணு பேசுதான். சனநாயகமாட்டு போயி பேச்சுவார்த்தை நடத்தி கம்யூனிசத்தை கொண்டுவந்து காட்டட்டுமே. முதலாளி, முதலாளி, நல்ல பிள்ளைல்லா மூலதனத்தை குடுத்துப்போடும். உமக்கு பென்ஷன் தாறம்... சனநாயகமும் மயிரும். பேச்சுவார்த்தை நடத்தி அடயாறில வீடு கெட்டினானில்ல பிள்ளையளை கான்வென்டில படிக்க வச்சான். அவன் பெண்சாதி மாநாட்டுக்கு பட்டுப்புடவயும், அம்பது பவுன் உருப்படியுமாட்டி குண்டியத்தூக்கிட்டு வாறா. கம்யூனிஸ்டு கெட்ட கேடு. ஏம்டேய் அர்ணாசலம் அவன் கெட்டியிருக்க வாச்சு என்ன விலைடேய் வரும்?''

''தோழர் நாம அதைப்பத்தி பிறவு விரிவாட்டு பேசுவம். இப்பம் ஒரு சின்ன சந்தேகம். இந்த புஸ்தகத்தைப் பாத்தியளா?''

கெ.கெ.எம். புத்தகத்தைப் பார்த்துவிட்டு ''என்ன புத்தகம்'' என்று வாங்கினார். மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்து பக்கங்களை கூர்ந்து படித்தார். முகத்தில் உணர்ச்சி ஏதும் தெரியவில்லை.

''இதுக்கு முன்னால இந்த புஸ்தகத்தை பார்த்ததுண்டா?''

''இல்லியே. எங்க போட்டது? மார்த்தாண்டமா? பார்த்ததில்லையே.''

''இந்த ஆளத் தெரியுமா?''

''கேள்விப்பட்டதில்லை. வீரபத்திரபிள்ளை. பி.ஏக்காரன். மாடசாமி பிள்ளைண்ணு ஒருத்தன் இருந்தான். ஆருவாமொழிக்காரன்.''

''மாவட்டக் கமிட்டில இருந்திருக்காரு. கெ.ஆர்.எஸ். முன்னுரை குடுத்திருக்காரு.''

''பாத்தேன். அதாக்கும் எனக்கும் குளப்பம், கேட்டியா? இவனை நான் கேட்டதில்லை.''

''அதெப்படி?''

''இது என்னமோ திரிபு வேலை பாத்துக்க. அந்தக் காலத்தில எதிர்க் கட்சிகளும் சர்க்காரும் ஜனங்களைத் திசைதிருப்ப இப்படிப் பல புஸ்தகங் களை இறக்கினதுண்டு. அம்பத்து மூணில ஒரு புஸ்தகம். கெ.கெ.எம். பேரிலயே, கேட்டுக்க. அதுக்கும் முன்னுரை கெ.ஆர்.எஸ்.தான். கம்யூனிசம் வந்தா சர்ச்சுகளை இடிக்கணும்னு அதில எழுதியிருந்தான். கேக்கணுமா? கம்யூனிஸ்டுகாரன கண்ட இடத்தில அடிக்கத் தடியோட ஆளுகள் இறங்கிட்டானுவ. ரெண்டு அடியும் கிடச்சதுன்னு வச்சுக்க. இண்ணுவரை அந்த புஸ்தகம் ஆரு போட்டதுண்ணு தெரியாது. அதுக்கு பேரில மத்தியக் கமிட்டிலயிருந்து ஆளுவந்து என்னை விசாரிச்சாங்கன்னா பாத்துக்க.''

''இவரு கட்சில இருந்திருக்காரா?''

''நானறிய இப்பிடி ஒரு ஆள் இல்லை.''

''அப்பம் இவர் பேர புஸ்தகத்தில போடுததில என்ன அர்த்தம் இருக்கு?''

''அது சொன்னா இப்பம் புரியாதுடே அருணாசலம். அண்ணைக்கு பேப்பரும் ரேடியோவும் ஒண்ணும் இல்லை. அச்சடிச்சதொக்கெ வேதமின்னு மக்கள் நம்பின காலம். இது எவனோ விளையாடியிருக்குதான். இது என்ன புஸ்தகம்?''

''கதை.''

''கதையா? அப்பம் கீழ்மட்டத்தில ஆளுகள் படிப்பாங்க. கேட்டியா, அந்தக் காலத்தில ஒருத்தன் இப்பிடித்தான் ஒரு புஸ்தகம் எழுதிப் போட்டான். கம்யூனிசம் வரும்பம் மண்ணையும் பொன்னையும் மட்டுமில்ல பெண்ணையும் பொதுவாட்டு ஆக்குவோம்ணு. ஆளு நம்ம

ஆளுதான். அண்ணைக்கு ஆரு மூலதனமும், குடும்பம் தனிச்சொத்தும் படிக்கிறது? 'கேட்டது கம்யூனிசம்'னு சொல்லுவோம் அப்ப. பெரிய கேஸாட்டு போச்சு. மலைக்குப் போனா பெண்டுக விளக்குமாறு எடுத்துட்டு அடிக்க வாறாளுக. பெயகளுக்கு வலிய குஷி. ஒருத்தன் கேக்குதான் அப்பம் நம்ம வலிய தம்புராட்டியும் பொதுச் சொத்துதானா தோழரேன்னு. அவனுக்கு அப்பிடியொரு ஆசை... ஹெஹெஹெ...''

''சரி நான் வாறேன் தோழர், நேரமாயிட்டுது.''

''செரி, மாசிலாளுக்க பேச்ச எழுதி வாங்கி, ஒரு காப்பி கொண்டு வந்து காட்டு. ஸ்டாலினைப் பத்திப் பேசினான்னு சொன்னா பெயலுக்கு செருப்படி இருக்கு.''

''இது தொழிற்சங்க விவாதம்தானே?''

''அவன் எங்கயும் பேசுவான்.''

'''அப்ப நான் வாறேன் தோழர்.''

''வா, உனக்ககிட்ட மனம்விட்டுப் பேசி ஒருபாடு நாளாச்சு கேட்டியா? நீ இங்க வாறதுமில்லை. நானும் நீயும் சேர்ந்து ஏறின மலைகளிலெல்லாம் நான் இப்பம் மனசால ஏறிக்கிட்டிருக்கேன். அந்த எடமெல்லாம் இப்பம் நம்ம மனசில மட்டும்தான் இருக்கு இல்லியா?''

அருணாசலம் சலிப்புடன் 'ஆமாம்'' என்றான்.

''இந்த ரேடியோவை மட்டும் கொஞ்சம் செரிபாக்கச் சொல்லு. அது இல்லாம இருக்கிறது ஜன்னலும் வாசலும் இல்லாத ரூமில அடச்சுப் போட்டது மாதிரி இருக்கு.''

''சொல்றேன் தோழர்.''

கெ.கெ.எம். மூக்குக் கண்ணாடியைக் கழட்டினார். அவர் முகம் களையிழந்தது. மனித முகம் சிலையாவது போல. திரும்பவும் படிகளில் இறங்கும்போது அருணாசலம் அந்த புத்தகத்தைப் பார்த்தான் 'பனை பாடினால்?' அது பிரச்சார நூல்போலத் தெரியவில்லை. அவனுக்கு குழப்பமாக இருந்தது.

''சிந்தாபாத் சிந்தாபாத் ஜபிடபிள்யூ சிந்தாபாத்
சிந்தாபாத் சிந்தாபாத் மாநில மாநாடு சிந்தாபாத்''

ஒரு சிறு கூட்டம் நெருங்கி வந்தது. ஏதோ தோட்டக் கிளையைச் சேர்ந்த தோழர்கள். சிவப்புக் கொடியுடன் கெச்சலாக ஒருவர் கைவீசி உரத்த குரலில் கூவியபடி முன்னால் வந்தார். அரங்க வாசலை அடைந்ததும் குரல் உரக்க ஒலித்தது.

''இன்குலாப் சிந்தாபாத்
இன்குலாப் இன்குலாப் இன்குலாப் சிந்தாபாத்''

'ஒங்க இன்கிலா சிந்தாப்பு ஒண்ணும் எனக்ககிட்ட வேண்டாம்' என்று நாகம்மையின் குரல் கேட்பது போலிருந்தது. அவன் புன்னகைத்தான். அவளுக்கு அச்சொற்கள் பிறரைப் பொருட்படுத்தாத தன்மை, புரியாத பேச்சு, போதை, பிழைக்கத் தெரியாத தன்மைபோல பற்பல பொருட்களைத் தருபவை. பாவம் காலையில் அவளை அவன் மிகவும் கடுமையாகப் புண்படுத்திவிட்டான். பகலெல்லாம் அவள் மனம் புகைந்தபடியே இருக்கும். அவன் அவள் முகத்திலுள்ள தழும்புகள் பற்றியோ, கூந்தல் குறைவாக இருப்பது பற்றியோ, அவளுடைய கிராமியத் தன்மை பற்றியோ ஏதாவது சொன்னால் அது எத்தனை பிரியமான கணத்தில் எத்தனை மென்மையாகச் சொல்லப்பட்டாலும் சரி, எத்தனை வேடிக்கையாக கூறப்பட்டாலும் சரி, அது அவளைக் கோபவெறி கொள்ள வைத்துவிடும். அது திருமணமான புதிதில் அவனுக்குப் புரிந்துகொள்ள முடியாத மர்மமாக இருந்தது. நகைச்சுவை உணர்வு இல்லாத தொட்டால் சுருங்கி என்று அவளைப் பற்றி எண்ணினான். பிறகுதான் அவ்வகை விஷயங்கள் அவனால் ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாதபடி அவளுக்கு மிகமிக அந்தரங்கமானவை என்று அறிந்தான். எட்டுமுறை நிராகரிக்கப்பட்டபடி அவள் ஆறு வருடம் திருமணத்திற்குக் காத்திருக்க நேரிட்டது. அதன் பிறகு அவ்விஷயத்தை மிகமிகக் கவனமாகவே கையாளுவான். அதே சமயம் அவளுக்கு எதிரான மிக நுட்பமான ஆயுதமாகவும் அதை அடையாளம் கண்டுகொண்டிருந்தான்.

செல்வ வினாயகம் வீட்டில் போன் உண்டு. சொன்னால் கூப்பிட்டுத் தருவார்கள். நாகம்மையைக் கூப்பிட்டு சமாதானம் செய்யவேண்டும். உன் ஞாபகமாகவே இருக்கிறது என்று மட்டும் சொன்னால் போதும். போனிலேயே மலர்ந்துவிடுவாள். நடந்து திரும்ப முடியாதபடி உடலில் துள்ளல் குடியேறிவிடும். அருணாசலம் புன்னகையுடன் நடந்தான்.

◆

2

புதைவில் எழும் மூச்சு

АПИ
ТАЛИСТ

1

நள்ளிரவுக்குப் பிறகு திடீரென்று அருணாசலத்திற்கு தூக்கம் கொக்கியது. அது பரவி மூடி இறுகியது. நாராயணன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தான்.

கொட்டாவி விட்டபடி எழுந்தான். நாற்காலியை நகர்த்தியபோது எழுந்த நாராசமான ஒலி தூக்கத்தின் மெல்லிய படலத்தை அதிர வைத்தது. அலுவலகம், களேபரம் ஓய்ந்து நிதானமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அரங்கில் திரைப்படப் பாடல்களின் அடிவயிறு அதிரும் ஒலி. வெளியேயிருந்து அம்புரோஸ் எட்டிப் பார்த்து ''தோழர், மெட்ராஸிலேருந்து தோழர் தீர்த்தமலை வாறாரு'' என்றான்.

''எப்ப?'' என்றான் அருணாசலம். தூக்கத்தின் அடர்த்தியான திரையைத் தாண்டி ஏதும் மனதில் ஏறவில்லை.

''வந்திட்டாரு. இங்கதான் வந்திட்டிருக்காரு.''

அருணாசலம் விழித்துக் கொண்டான். தீர்த்தமலை வரும் திட்டமேதும் இல்லை. பார்வையாளராக வருவதாக இருந்தால் இன்னும் முழுசாக ஒருநாள் இருக்கிறது.

தீர்த்தமலை வணங்கியபடி உள்ளே வந்து உரக்கச் சிரித்தார். கரிய முகத்தில் வழக்கம்போல் முள்தாடி, கலைந்த சிகை. கெட்டியான கண்ணாடி பாதி இறங்கியிருந்தது. ''என்னய்யா பேயடிச்சாப் பில முழிக்கிறே? நானேதான் தீர்த்தம்.''

''வாங்க தோழர்'' என்றான் அருணாசலம். ''அறிவிப்பே இல்லாம வாறிய.''

''வந்துட்டேன்டேய். வராதேன்றியா? என்னய்யா நாராயணா, தொப்பை வளந்துட்டே போறது.''

''உட்காருங்க தோழர். டீ சாப்டறீங்களா?''

''இப்பதான் பஸ் ஸ்டான்டில சாப்பிட்டேன். என்ன பீடிடேய்?''

''காஜா பீடி.''

''செதைக்கொள்ளி. சனியன். ஏம்பா டீசென்டா சொக்கலால் மாதிரி எதுனா இருக்கா?''

''சொக்கலால் இருக்கு தோழர்'' என்றான் அம்புரோஸ். தீர்த்தமலை பொட்டலத்துடன் வாங்கி ஒன்றை உருவிப் பற்றவைத்து நாற்காலியில் சாய்ந்து காலை நீட்டிக்கொண்டு ''உஸ் அப்பாடா'' என்றார். புகைவிட்டபடி ''எப்படியிருக்கு வேலைகள்?'' என்றார்.

''போயிட்டிருக்கு'' என்றான் நாராயணன்.

''அடாடா, லெனினுக்கு ஸ்டாலின் மாதிரிப்பா இவன் உனக்கு. மலையைப் புரட்டிடுவான் எமகாதகப் பயல்'' என்றார் தீர்த்தமலை. சட்டென்று உரக்கச் சிரித்து ''வேற அர்த்தத்தில சொல்லலைடா சாமி'' என்றார்.

நாராயணன் ''லாட்ஜில ரூம் இருக்கு தோழர்'' என்றான்.

''இருக்கட்டும். எப்படியிருக்கு பெரிசு?''

''முன்னை மாதிரி உடம்பு கேக்கல்ல.''

தீர்த்தமலை முகம் மாறி பிற தொழிலாளர்களைப் பார்த்தார். அவர்கள் வெளியேற, கதவு மூடியது.

''அவர் விஷயமாத்தான் பேச வந்தேன். மாநிலக் கமிட்டி அதிகாரபூர்வப் பார்வையாளரா என்னை அனுப்பியிருக்கு.''

''என்ன திமிர்ஸு'' என்று நாராயணன் விழிப்படைந்து அருணாசலத்தைக் கூர்ந்து பார்த்தான்.

''எல்லாம் இருக்கு. கடைசி நிமிஷம்வரை மேலிடத்தில கொஞ்சம் இழுபறி இருந்திச்சு. மாநாட்டில தேர்தல் உண்டில்ல?''

அருணாசலத்தின் மனம் ஜிவ்வென்று இழுத்துக்கொண்டது. ''சொல்லுங்க'' என்றான் அமைதியாக.

''இந்தத் தடவை போட்டி இருக்கலாம்னு மாநிலக் கமிட்டிக்க அபிப்பிராயம். எல்லாம் ஒரு ஜனநாயக முறைப்படி போகட்டுமே, என்ன?''

''போட்டின்னா...'' என்றான் நாராயணன்.

''அருணாசலம் போட்டியிடணும்னு மேலிடத்தில விருப்பம்.''

அருணாசலம் முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டான்.

''நல்ல முடிவுதான்'' என்றான் நாராயணன். ''தொழிலாளிங்க ரொம்ப நாளாட்டு எதிர்பார்க்கிற மாற்றம்.''

''மாற்றம்தானே இயற்கையோட முதல் விதி.''

''கெ.கெ.எம். சம்மதிப்பாரா?''

''போட்டியிடக் கூடாதும்பாரா?''

''இல்லை'' என்றான் அருணாசலம். ''அவர் சங்கப் பொறுப்பிலயிருந்து விலகுறது அப்படியொண்ணும்...''

''அவர் என்ன விலகிறது? இது தொழிலாளிகளுடைய சங்கம். அவங்க தீர்மானிக்கிறாங்க.''

''கெ.கெ.எம்மையும் சங்கத்தயும் இதுவரை யாரும் பிரிச்சுப் பார்த்ததில்லை.''

''என்ன பேச்சுய்யா இது? யாரும் நினைக்கல்ல சரி. இனிமே நினைக்கக் கூடாதா? சங்கம்னா ஒரு தனிமனிதன் இல்லை. அது காலம் கடந்த ஒரு அமைப்பு. மனுஷன் வருவான் போவான்.''

''தொழிலாளிகள் ஒத்துக்கிடணுமே?''

''அதுக்குத்தான் நான் வந்திருக்கேன். வாக்குரிமையுள்ள கிளைச் செயலாளர்கள் மொத்தம் நூற்று எண்பது பேர். மாவட்டப் பொறுப்பாளர்கள் ஒன்பது பேர். அவங்களை நான் சந்திச்சுப் பேசறேன். மாநிலக்குழுவோட ரகசியக் கட்டளை இருக்கு. லெட்டர் கொண்டு வந்திருக்கேன். மீறிடுவானுங்களா?''

''ஆனா அவங்களை சங்கத்துக்கும் கட்சிக்கும் கொண்டு வந்ததே கெ.கெ.எம்.தான்.''

''அதனால?''

அருணாசலம் ஒன்றும் சொல்லவில்லை.

''செம்படய ஒவ்வொரு ஆளாகச் சேத்து கட்டியெழுப்பினவன் ட்ராட்ஸ்கி. புரட்சிக்கு அவன் தடையர் மாறினப்ப அதே செம்படை அவனை தூக்கி வீசிச்சு.''

அருணாசலம் கோபமடைந்தான். ''ஆகிற பேச்சு பேசுங்க தோழர். ஒண்ணும் அவ்வளவு சுலபம் இல்லை. இந்த சங்கத்தக் கட்ட கெ.கெ.எம். செய்த தியாகம் சாதாரணமானதில்லை. அதை மறக்க தொழிலாளி ஒண்ணும் நன்றி கெட்டவனும் இல்லை.''

தீர்த்தமலை அடுத்த பீடியை பற்ற வைத்தார். ''சரி தோழர், நீங்க சொல்றது மாதிரி தரைல நின்னுட்டு பேசுவம். முதல் விஷயம் இப்ப நாம எடுக்கிற முடிவுக்குக் கட்டுப்படக் கூடியவங்க, கட்சியிலயும் பொறுப்பில இருக்கக் கூடியவங்க, மொத்தம் எத்தனை தேறும்?''

''ஒரு எம்பது'' என்றான் நாராயணன்.

''எத்தனை ஓட்டு?''

''நூற்று அறுபத்தேழு. ஒம்பது கௌைகள் பெரிசு. அரசாங்கத் தோட்டங்கள்.''

''அப்ப என்ன பிரச்சினை? மெஜாரிட்டி வந்திடுதே.''

''ஜெயிக்கிறதில்லை பிரச்சினை'' என்றான் அருணாசலம்.

''இருங்க சொல்ல வாறேன். கெ.கெ.எம். எதுத்துட்டு வெளியேறினா உறுதியா அவர் கூட போவாங்கனு நாம எத்தனை பேரைச் சொல்ல முடியும்?''

''அறுபது பேர், எப்பிடியும்'' என்றான் அருணாசலம்.

''அஹ்ஹஹா இதுதான் கூத்துங்கிறது. முப்பது பேர் குறைஞ்சது-நாப்பது பேர் மிஞ்சிப் போனா'' என்றார் தீர்த்தமலை. ''நானும் இதே சங்கத்தில பொறுப்பில இருந்திருக்கேன் தோழர்.''

''கெ.கெ.எம்மை நீங்க குறைச்சு மதிப்பிடறீங்க.''

''அதில்லை தோழர். அவரைத் தூக்கினா வருத்தப்பட்டு உள்ளூர எதிர்க்கிறவங்க நூத்தி எண்பத்தி எட்டுல நூறு பேராவது இருப்பாங்க. ஆனா நம்ம கட்சி ஜெயிச்சா நிறைய பேர் பேசாம ஆயிடுவாங்க. ஏன்னா அதிகாரம் இங்க இருக்கு. சிலர் அங்க இங்கன்னு அலைமோதுவாங்க. ஆனா நாப்பது பேருக்கு மேல யாரும் கண்டிப்பா உறுதியான முடி வெடுக்க மாட்டாங்க.''

''அதெப்படி சொல்ல முடியும்?'' என்றான் நாராயணன்.

''சொல்லலாம் தோழர். சங்கத்தில ஒரு பொறுப்பில இருக்கிறான் ஒருத்தன். அதில அவனுக்கு ஆயிரம் கஷ்டமும் நஷ்டமும் இருந்தாலும் அது ஒரு பதவி. ஒரு அடையாளம். நாலுபேர் பாத்து வணக்கம் சொல்ற கவுரவம். அப்படி இல்லைண்ணு மனசில கையவச்சு சொல்லுங்க பாப்பம்.''

நாராயணன் புன்னகைத்தான்.

''அப்ப அதை இழக்கணும்னா எல்லாரும் தயாரா இருக்க மாட்டாங்க. தப்பு சரின்னு சொல்லறது ரொம்ப எளிய விஷயம். சரின்னு பட்டதை சொல்றதுக்காகத் தன் கையிலிருக்கிற ஒண்ணை இழக்கிறது லேசான காரியம் இல்லை.''

''சரி, அப்பிடிப் பார்த்தாலும் கெ.கெ.எம். நாற்பது கிளையைப் பிடிச்சிட முடியும். எப்பிடிப் பார்த்தாலும் இருபது சதவீதம் உறுப்பினர் போயிடுவாங்க. நம்ம சங்கம் இன்னைக்கு இருக்கிற நிலைமை உங்களுக்குத் தெரியும். நாமதான் பெரிய சங்கம். ஆனா நம்மகிட்ட மொத்தம் ஊழியர்களில முப்பது சதவீதம் பேர்கூட இல்லை. நம்ம கிட்டேருந்து ஒரு ஆள் போறதுகூட பெரிய இழப்புதான். போறவங்களில சிலரை மத்தவன் இழுத்திட்டான்னா பல கணக்குகள் மாறிடும்.''

''அதெப்படி இங்க இருக்கிறவன் போயி அங்க சேந்திடுவானா?'' நாராயணன் வியப்புடன் கேட்டான்.

''அது அப்படித்தான். ஒரு சங்கத்தில இருந்து போறவங்க நேரா எதிர் சங்கத்திலதான் சேருவாங்க. அதுதான் அதிகாரத்தோட மன தத்துவம். ஒட்டி உரசிட்டு இருக்கிற சங்கத்தில கண்டிப்பா போய்ச் சேரமாட்டாங்க. போறவங்களில முக்காவாசிப்பேர் அங்க போய் பிரெய்ன்வாஷ் ஆயிடுவாங்க. புதுவேகத்தில இருக்கிறவங்களை பிரெய்ன்வாஷ் செய்றது ரொம்ப ஈஸி. அவனுங்களைத் திருப்பி இழுக்க முடியாது.''

''அப்ப நம்மகிட்ட இருக்கிறப்ப போட்ட கோஷம்லாம் எங்க போச்சு? நம்ம கொள்கைகள்... அவங்களோட மதவாதம்...'' என்றான் நாராயணன்.

''தொழிலாளிக்கு என்ன கொள்கை'' என்றான் அருணாசலம். ''எட்டு வருஷம் சங்க வேலை செய்தாச்சு. இன்னும் இதுகூட புரியல்லைண்ணு சொன்னா கஷ்டம்தான்.''

''அப்பவும் நான் சொன்ன இடத்துக்குதான் வாறீங்க தோழர். தொழிலாளிக்கு வேண்டியது ஒரு சங்கத்துக்க பாதுகாப்பு. அது போராடிக் குடுக்கிற பொருளாதார லாபங்கள். அதை குடுக்கிற சங்கம் எதுவோ அதிலதானே அவன் இருப்பான்.''

''கொள்கை வேற, விசுவாசம் வேற. கெ.கெ.எம். கிட்ட தொழிலாளிக்கு இருக்கிறது விசுவாசம்.''

''அப்பிடியும் வரமாட்டிங்க. இப்படியும் வரமாட்டிங்க.''

''கிளைச் செயலாளர்கள் எடுக்கிற முடிவக்கூட அந்தந்தக் கிளைகளில உள்ள தொழிலாளிகள் ஏத்துக்கிடணும்னு இல்லை.''

''இங்க பாருங்க தோழர், ஒரு பிளவு எண்ணு வந்தா கதை வேற மாதிரி. கெ.கெ.எம். இருக்கணுமா போகணுமாண்ணு ஒரு தேர்தல் நடத்தினா அத்தனை பேரும் அவர்தான் இருக்கணும்னு ஓட்டுப் போடுவாங்க. அவர் போயிட்டார்னா கூடப்போக அதிகம் பேர் இருக்க மாட்டாங்க. தொழிலாளி வேறயும் பல விஷயங்களை கணக்குப் போடணும்.''

''ஆனாலும் கெ.கெ.எம். குரலுக்கு ஒரு சக்தி இருக்கு. அந்த சக்தி நம்ம யாரிட்டயும் இல்லை. அவர் எந்திரிச்சு நின்னு பேசினா இண்ணைக்கும் தொழிலாளியோட கண் கலங்கிடும்.''

''உண்மைதான். ஆனா யோசிச்சுப் பாருங்க. தோட்டங்களில விரிவாக்கம் வாறப்ப புது ஆளைத்தான் எடுக்கணும், ஓவர்டைம் குடுக்கப்பிடாதுண்ணு கெ.கெ.எம். சொன்னப்ப எத்தனை தொழிலாளிகள் ஏத்துக்கிட்டாங்க?''

''அது உண்மைதான்.''

''இது சமரசத்தோட காலம் தோழர். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே இப்ப போராட்டம் இல்லை, பேரம்தான் நடக்குது. தெரிஞ்ச விஷயம்தான். பெரும்பாலான தோட்டங்களில கஞ்சா உண்டு. அனுமதியில்லாத மரம் வெட்டு உண்டு. நாம கண்டுக்கிறதில்லை. பதிலுக்கு

நம்ம ஆளு வீட்டுக்கு வாறப்ப அஞ்சு கிலோ பாழ் ரப்பர் எடுத்துக்கிடுவான். ரெண்டு லோடு விறகு அடிப்பான். அவனும் அதை கண்டுக்கிடறதில்லை. ஊழல் இல்லாத தொழில் இல்லை. அதுக்கெதிரா இன்னைக்குத் தேதிவரை தொழிலாளி போராடினதுமில்லை. இதெல்லாம் கெ.கெ.எம்முக்கு புரியாது. மேடையில பேசறத நம்புறவர் அவர்''

''ஆனா...''

''ஒரு ஆனாவும்இல்லை. மாநாட்டில ஒரு தீர்மானம் வரும். விரிவாக்கம் வாறப்ப அதிகபட்ச ஓவர் டைம் குடுத்த பிறகுதான் புது ஆள் எடுக்கணும்னு. கெ.கெ.எம். எதிர்ப்பார். நம்ம ஆளுகள் சிலர் கெ.கெ.எம்மை எதுக்கணும். கெ.கெ.எம். ரொம்ப மீறிப் போவார். தீர்மானம் நிறைவேறினாலும் விடமாட்டார். அந்த சூடோட தேர்தலை அறிவிச்சுட்டா கெ.கெ.எம். விழுந்துடுவார். ஒரு வேகத்தில முப்பது பேர் அவர்கூட போவானுங்க. படிப்படியா மடக்கிடலாம்.''

''கெ.கெ.எம்மைத் தூக்கணும்னு இப்ப என்ன அவசரம்? அவருக்கு வேற உடம்பும் சரியில்லை.'' இரு வரிகளுக்கு இடையே தன் மனம் ஓடிய விதம் அருணாசலத்திற்கே கசப்பு தந்தது.

''நம்ப முடியாது, கம்யூனிஸ்டுகளுக்கு ஆயுள் அதிகம்.''

அருணாசலம் தன் கசப்பைத் தீர்த்தமலை மீதான துவேஷமாக மாற்றிக் கொண்டான்.

''நீங்க சங்கடப்பட வேண்டாம் தோழர். கெ.கெ.எம்மை மாநில தொழிற்சங்க ஆலோசனைக் குழுவில தலைவராப் போடலாம்னு கட்சில எண்ணம். ஒரு பெரிய விழா நடத்தி அவரை நியமிக்கிறாப்பில.''

''ரப்பர் தொழிற்சங்கத்தை விட்டு அவர் வெளியே வரமாட்டார். அவருக்க மூச்சு இதில இருக்கு.''

''இங்க அவரைத் தொடர விட முடியாது. மாநிலக் கமிட்டி அதில ரொம்பத் தெளிவா இருக்கு. வயசான காலத்தில கவுரவமா விலக ஒரு வாய்ப்பு தாறோம். கெ.கெ.எம். மூத்த தலைவர். அதை யாரும் மறக்கலை.''

''கெ.கெ.எம். விடமாட்டார்.''

''சொல்ல முடியாது, பொதுவாக வயசாளிகள் போராட விரும்ப மாட்டார்கள். தெம்பு இருக்காது மனசிலயும் உடம்பிலயும். வீம்பு மட்டும்தான் இருக்கும். கவுரவம் – போலிக் கவுரவம்கூட போரும். குடுத்திட்டா மசிஞ்சிருவாங்க. எம்.ஆர்.கெ. என்ன செய்தார்?''

''கெ.கெ.எம். அவரை மாதிரி தந்திரசாலி இல்லை. மூர்க்கமானவர். உலகம் தெரியாதவர்.''

''இதைவிட நாம எறங்க முடியாது.''

''சங்கம் உடைஞ்சா?''

''உடையாது. அங்கதான் கெ.கெ.எம்முக்க பலவீனம் இருக்கு. அவராலவேற எங்கயும் போயி சேரவோ உதவி கேக்கவோ முடியாது. கொஞ்ச நாள் பார்ப்பார். படிப்படியா அவருக்க கும்பல் கலைஞ்சிடும்.''

அருணாசலம் தன் மனசஞ்சலம் விலகித் தெளிவு ஏற்படுவதை உணர்ந்தான்.

நிகழப் போவதன் முக்கியத்துவம் மனதில் மெதுவாக விரிந்தது. உற்சாகமும் பதற்றமும் சேர்ந்து எழுந்தது.

''இன்னைக்கு மொதலில மாவட்டச் செயலாளர்களைப் பார்க்கிறேன். மாநாடுக்குள்ள எல்லாரையும் ஒருமுறை சந்திச்சிடலாம். நீங்க எதுக்கும் கெ.கெ.எம். கிட்ட இந்த திட்டத்த கூறிப் பாருங்க.''

அருணாசலம் திடுக்கிட்டான் ''நானா?''

''ஆமா, பெரிசுக்கு நேரடியாப் பேசினா பிடிக்கும். மூணாவது ஆள் போனா குழப்பமாயிடும். நேரா போய் விஷயத்தை சொல்லுங்க. வரிக்குவரி முகஸ்துதி கலந்துக்கிடுங்க. ஸ்டாலினைப் பத்தி ஒரு நாலு பாட்டுப் பாடுங்க. உங்க மாதிரி அதுகிட்ட யாரும் பேசிட முடியாது, பாப்பம்.''

அருணாசலம் பெருமூச்சு விட்டான்.

◆

2

அருணாசலம் கட்டிடத்தின் பின்புறம் கழிப்பறைகளின் வரிசைக்குச் சென்றான். உடைந்த பகுதிகளைப் புதிதாக சிமிட்டி போட்டு சரி செய்திருந்தார்கள். ஈரம் இன்னும் காயவில்லை. விளக்குகள் எல்லாம் எரிந்துகொண்டிருந்தன. ஸ்டோர் ரூமில் சாமான்கள் வந்திறங்கும் ஒலிகள் கேட்டன. புழக்கடை வராண்டாவில் சமையல் பாத்திரங்களும் பெரிய இரும்பு அகப்பைகளும் கடவங்களும் இருந்தன. விடிந்தால் சமையல் ஆரம்பித்துவிடும். விறகு இன்னும் வரவில்லை என்று நாராயணன் கூறியது ஞாபகம் வந்தது. மனக்கிளர்ச்சி காரணமாக அவனால் எங்கும் சரிவர அமர்ந்திருக்க முடியவில்லை. இன்னொரு பக்கம் ஏதோ தவறு செய்துவிட்டு அனைவரிடமும் இருந்து மறைந்திருப்பவன்போல ஒருவிதமான உள்தவிப்பு இருந்தது. விடிந்ததும் கெ.கெ.எம்மை சந்தித்துப் பேச வேண்டும். அவர் எப்படி எதிர்வினையாற்றுவார்? கோபமோ வசையோ ஆத்திரமோ என்றால்கூடத் தாங்கிக் கொள்ளலாம். அவற்றை அவன் முன்கூட்டியே எதிர்பார்த்து விதவிதமாகக் கற்பனை செய்திருந்தமையால் அவை நிகழும்போது கண்டிப்பாக சற்றுக் குறைவாக நிகழ்ந்து மனதை எளிதாக்கிவிடும். அவர் எதிர்பாராத ஏதோ ஒருவகையில்தான் எதிர் வினை செய்யப் போகிறார். அவர் அவனைப் போன்றவரல்ல. தீவிரம் (அதனால் குரூரமும்) அதிகமான இன்னொரு காலகட்டத்தைச் சார்ந்தவர். அவன் கற்பனைகூட செய்ய முடியாத வாழ்க்கைச் சந்தர்ப்பங்களினூடாகக் கடந்து வந்தவர். சட்டென்று மனம் இளகியது. கெ.கெ.எம்மின் பழைய தோற்றங்கள் மனதில் ஓடின. முழுக்கைச் சட்டை போட்டு முறுக்கிய மீசையுடன் காலரில் சிவப்புக் கைக்குட்டை செருகி நிமிர்ந்து நின்று உரத்த குரலில் பேசி கடகடவென்று சிரிக்கும் கெ.கெ.எம். ஜிப்பாவின் கையை கனத்த முண்டாவரை இறுகச் சுருட்டி வைத்து காதில் பீடியுடன் - மூக்கடை பெஞ்சில் அமர்ந்து கனத்த மௌனத்துடன் பேப்பர் படிக்கப்படுவதை கவனிக்கும் கெ.கெ.எம். மேடையில் பேச்சுமொழியில் உரையாடும் கெ.கெ.எம்.

காற்று குளிராகக் கடந்து சென்றபோது அருணாசலம் மீண்டான். பெருமூச்சுடன் மெதுவாகத் திரும்பி நடந்தான். கெ.கெ.எம்மின் அறையில் விளக்கு எரிவதைக் கண்டு தயங்கி நின்றான். மெதுவாகப் படியேறினான். கால்கள் குளிர்ந்து கனமாக இருந்தன. மனம் படபடத்தது. அறைக்குள் ரேடியோ கரகரவென்று ஒலித்தது. திடீரென்று புரியாத மொழியில் ஓர் அதட்டல். பிறகு ஓர் இசைவீச்சு. மீண்டும் புரியாத வேறு மொழிக்கீற்று, ஓர் இசைப்படலம், ஆங்கிலத்தில் ஒரு சொல், ஒரு சித்தப் பிரமை மனம் ஒலிப்பதுபோல. அருணாசலம் கதவைத் தள்ளினான்.

கெ.கெ.எம் திரும்பிப் பார்த்தார். அவரால் அவனை உடனடியாக அடையாளம் காண முடியவில்லை. விளக்கு அருணாசலத்தின் கண்களைக் கூசவைத்தது. ''வணக்கம் தோழர், தூங்கலியா?''

''அருணாசலமா? வாவா. எங்க தூக்கம் வருது...''

கெ.கெ.எம். கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டார்.

''உடம்பு எப்படி இருக்கு?''

''ஒண்ணுமில்ல. மதியம் கொஞ்சம்போலத் தூங்கினேன். இப்பம் தூக்கமில்லை. ரேடியோவில எங்கியாவது பாட்டு இருக்குமான்னு பாத்தேன். சிக்க மாட்டேங்குது.''

''இப்பம் விடிகாலை ரெண்டு மணி. இப்ப எந்த ஸ்டேஷன் திறந்திருக்கும்?''

''அதுதான் தப்பு. இங்க பாரு இது பழைய ஜெர்மன் ரேடியோ. உலகம் முழுக்க எடுக்கும். ராத்திரி நம்ம ஊரு ஸ்டேஷன்கள் மூடின பிறகு பல தேசத்து ரேடியோ கிடைக்கும். அம்பத்தி ஒண்ணுல ஸ்டாலின் பேச்சை இதில பல தடவை கேட்டிருக்கேன். நடுராத்திரியில சில சமயம் நல்ல சங்கீதம் கேக்கும்.''

''நம்ம ஊரு சங்கீதம் கேக்காதே!''

''எனக்கு எல்லாப் பாட்டும் பிடிக்கும். எல்லாம் ஒண்ணுதாமிடே. போன மாசம் ஒரு நாளைக்கு ஒரு சங்கீதம் அகப்பட்டுது கேட்டியா. அலையலையா பொங்கி வருது. மழைக் காலத்தில திற்பரப்பு அருவியப் பாத்தா தண்ணி கூடிக்கூடி வாற மாதிரி தோணுமே அதுமாதிரி. ஒரு பெரிய பட்டாளம் சிவப்பு யூனிபாம் போட்டுட்டு, செங்கொடி பறக்க, ரைபிளும் பாட்ஜூம் பளபளக்க மார்ச் பண்ணிப் போறது மாதிரி இருந்தது. வெளிய பார்த்தேன். ஊரு தூங்கிகிட்டு இருந்தது. செம்படை வருதுடா பாவி மட்டைகளா. எந்திரிங்கடா எந்திரிங்கடான்னு கத்தணும்னு தோணிச்சு. அழுதிட்டேன் அர்ணாசலம்'' கெ.கெ.எம். அமைதியானார். ''அது ஒரு பெரிய கனவு அப்ப. செம்படை கைபர் கணவாயத்தாண்டி வாற மாதிரி. நாம ஆர்ப்பரிச்சுட்டு போயி சேந்துக்கிற மாதிரி. உம்.''

சோவியத் ரஷ்யாவின் உடைவைச் சொன்ன தன் டிரான்ஸிஸ்டரின் நினைவு அருணாசலத்திற்கு வந்தது. அந்நாட்களில் அதன்மீது கண் படும்போதே மனம் அதிரும். ஆனால் செய்தி நேரங்களில் அதைக் கேட்காமலிருக்க முடியாது. ஒரு செய்தி அறிக்கை முடிந்ததும், வேறு ஸ்டேஷனில் வேறு மொழியில் அதே செய்தியறிக்கையை மீண்டும் கேட்பான். ரேடியோ நிகழ்ச்சிகள் முடிந்து ரீங்கரிக்கும்போது மனம் சோர்வின் பெருவெளியாக நீண்டுநீண்டு போகும். அருணாசலத்திற்கு இந்த வால்வு ரேடியோவின் கரகரப்பு அந்த ரீங்காரத்தைவிட மேல் என்று பட்டது. இதில் வெறுமை இல்லை. இது ஒரு யந்திர ஒலி போலிருக்கிறது. எதையும் உற்பத்தி செய்யாத யந்திரம்தான். ஆனாலும் அது இயங்குகிறது.

கெ.கெ.எம். ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். பழைய விஷயங்கள். அவை அன்றி வேறு என்ன இருக்கிறது அவரிடம்? அவனுக்கு வெறுப்பும் வதைக்க வேண்டும் என்ற தினவும் ஏற்பட்டது. கூறிவிட வேண்டும். இதுதான் தருணம். அவருடைய கற்பனைக் கோட்டையை இடித்துச் சரித்து விட வேண்டும்...

கெ.கெ.எம் ''இந்த மாநாட்டில நான் ஒரு முக்கியமான விஷயம் பேசப்போறேன்டே அருணாசலம்'' என்றார்.

''என்ன தோழர்?''

''தொழிலாளிக்க தொழில் ஒழுக்கம் பற்றி சில விஷயங்கள் நான சொல்லியாகணும். ரொம்ப நாளா நினைக்கிற விஷயம். நாம கூலி வேணும்னு கேக்கணுமின்னா அதுக்கான தார்மீக உரிமை நமக்கு இருக்கணும். அதாவது நம்ம வேலைய நாம ஒழுங்காட்டு செய்யணும். அப்பத்தான் நம்ம குரலுக்கு ஒரு தார்மீக கனம் வரும். அதுதான் நம்ம அடிப்படை பலம். என்ன பேசாம இருக்குதே?''

:''சொல்லுங்க தோழர்.''

''தொழிலாளி வர்க்கம் சுரண்டப்பட்ட வர்க்கம். திருடப்பட்ட வர்க்கம். அநீதிக்கு எதிரா அது போராடணும். அப்படிப் போராடணும்னா நான் நியாயவான்னு ஒவ்வொரு தொழிலாளியும் நெஞ்சு நிமித்தி சொல்லுத மாதிரி இருக்கணும். இங்குலாப் சிந்தாபாத்னு அடிவயித்திலயிருந்து அப்பதான் குரல் கௌம்பும். என்ன சொல்லுதே?''

''உண்மைதான்.''

''புரிஞ்சுதா? சிலவங்க கேட்கிறாங்க, முதலாளிட்டயிருந்து நம்ம சொத்த நாம எடுத்துக்கிட்டா என்ன தப்பு எண்ணு. அத நாம போராடி எடுப்போம் அது நம்ம உரிமை. திருடினோம்னா அது முதலாளிக்க சொத்து. அவனுக்க உரிமை எண்ணு நாமளே சம்மதிக்கிற மாதிரியாக்கும். பிறவு வர்க்க போராட்டம் இல்லை. திருட்டுப் போட்டிதான். அவன் நம்மள திருடுவான். நாம அவனை திருடுவோம். யாரு சாமர்த்தியமா திருடுறானோ

அவனுக்கு அதிகாரம். கடைசில தொழிலாளி ஜெயிச்சிட்டான்னு வச்சுக்க இன்னொரு திருடனுக்க ஆட்சிதானே வரும்? இன்னும் பெரிய திருடனுக்க ஆட்சி. அதுதான் கம்யூனிசமா? சித்தாந்தம் படிச்சவன்தானே நீ? சொல்லு?''

அருணாசலம் கோபத்தை அடக்கியபடி ''தொழிலாளி வர்க்கத்துக்கு ஒட்டு மொத்தமா திருட்டுப்பட்டம் கட்டிட்டிங்க தோழர்'' என்றான்.

''வேலையில கள்ளம் செய்தா அதுக்குப் பெயர் திருட்டு இல்லாம வேற என்ன? ஒழுங்கா சட்டப்படி வேலை செய்யுத எத்தனை தொழிலாளிடே நம்மகிட்ட உண்டு?''

''தொழிலாளி அடிமைப் பட்டயம் ஒண்ணும் தரலியே.''

''இல்லை. ஆனா ஒப்பந்தம் போட்டிருக்கான். இன்ன வேலைய இவ்வளவு நேரம் இப்பிடியிப்பிடி செய்றேன்னு ஒப்பந்தம் போட்டுட்டு, அதுக்கு ஈடா சம்பளம் வாங்குகிறான். மேலும் இவ்வளவு குடுத்தாத்தான் வேலை செய்வேன்னு பேரம்பேச அவனுக்கு உரிமை உண்டு. ஆனால் ஏமாத்த உரிமை இல்லை.''

அருணாசலம் வெறுப்புடன் பேசாமலிருந்தான்.

''நாம இப்ப எதுக்கு சங்கம் வச்சிருக்கோம்? மனதைத் தொட்டுச் சொல்லு நாம தொழிலாளிக்கு உரிமைகளையா கத்துக் குடுக்கிறோம்? வர்க்கப் போராட்டத்துக்காகவா அணி திரட்டுறோம்? பாதிநாள் திருட்டுத் தொழிலாளிக்காக முதலாளிகிட்ட வக்காலத்து வாங்கிட்டிருக்கோம். இல்லேன்னு சொல்லு பாக்கலாம்.''

''இதெல்லாம் உண்மைதான் தோழர். ஆனா இப்ப உள்ள நிலைமையை நீங்க புரிஞ்சுக்கல்ல. இப்பம், மொத்தம் எட்டு பெரிய சங்கங்கள் நம்ம துறையில இருக்கு. தொழிலாளி எதிர்பார்க்கிற மாதிரி நாம இல்லாட்டா அவன் அந்தப் பக்கம் போயிடுவான். இப்ப நாம போயி அவன்கிட்ட தர்மமும் நியாயமும் பேச முடியாது. எந்த சங்கமும் தொழிலாளியை அனுசரிச்சுதான் போகணும். அவனுக்கு நாம உத்தரவு போட முடியாது.''

''அப்பம் சங்கம் எதுக்கு?''

''நம்ம சங்கம் இல்லாட்டி இப்ப இருக்கிற குறைஞ்ச அளவு இடதுசாரிப் போக்குகூட இல்லாம ஆயிடும். இந்தத் துறையையே முதலாளித்துவத்துக்க ஜந்தாம்படை சுருட்டிக்கிட்டுப் போகும். உங்களை மாதிரி தோழர்கள் சிந்தின கண்ணீர் வீணாகிடும்.''

''இந்த மாதிரி சங்கத்தை உண்டாக்கிறதுக்காக நாங்க பாடுபடல்ல.''

''உங்க ஆதங்கம் புரியுது தோழர். ஆனா காலத்தோடு ஒட்டி நிக்க சில சின்ன சமரசங்கள் இல்லாம முடியாது. இன்னைக்கு ரப்பர் தொழில்ல நம்ம சங்கத்த கலந்தாலோசிக்காம ஒரு முடிவு எடுக்க எவருக்கும் துணிச்சல் வராது. அதனாலதான் இன்னும் இங்க தொழிலாளிக்கு மரியாதை இருக்கு.

''அப்பம் சங்கம் எதுக்கு?''

''நம்ம சங்கம் இல்லாட்டி இப்ப இருக்கிற குறைஞ்ச அளவு இடதுசாரிப் போக்குகூட இல்லாம ஆயிடும். இந்தத் துறையையே முதலாளித்துவத்துக்க ஜந்தாம்படை சுருட்டிக்கிட்டுப் போகும். உங்களை மாதிரி தோழர்கள் சிந்தின கண்ணீர் வீணாகிடும்.''

''இந்த மாதிரி சங்கத்தை உண்டாக்கிறதுக்காக நாங்க பாடுபடல்ல.''

''உங்க ஆதங்கம் புரியுது தோழர். ஆனா காலத்தோடு ஒட்டி நிக்க சில சின்ன சமரசங்கள் இல்லாம முடியாது. இன்னைக்கு ரப்பர் தொழில்ல நம்ம சங்கத்த கலந்தாலோசிக்காம ஒரு முடிவு எடுக்க எவருக்கும் துணிச்சல் வராது. அதனாலதான் இன்னும் இங்க தொழிலாளிக்கு மரியாதை இருக்கு.

பிடிவாதமா இருந்தா நம்ம சங்கம் பலவீனப்படும். அதுக்க நஷ்டமும் தொழிலாளிக்குத்தான்.''

''அது தொழிலாளிதானே தீர்மானிக்கணும்?''

''தொழிற்சங்கங்கள் இல்லைன்னா கட்சியே இல்லை தோழர்.''

''கட்சி யாருக்காக? தொழிலாளிக்காகத்தானே? அவனை வழிநடத்தத் தானே? அவனுக்க பின்னால போறதுக்கா?''

''படிப்படியாகத்தான் அதெல்லாம் சாத்தியம்.''

கெ.கெ.எம். சற்று நேரம் பேசாமல் இருந்தார். ''அருணாசலம் நீ நினைக்கிறதுக்கும் நான் நினைக்கிறதுக்கும் உள்ள வித்தியாசம் உன் கண்ணுக்குப் படுதா?''

''சொல்லுங்க.''

''நீ தொழிலாளிக்க சம்பளம் வாங்கிட்டு சேவகம் செய்றவன் மாதிரி பேசுறே. நான் தொழிலாளியை வழிநடத்திட்டுப் போறவன் மாதிரி பேசுறேன்.''

அருணாசலத்தின் தலைக்குள் ரத்தம் பீறிட்டது. மிகவும் சிரமப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டான்.

''தொழிலாளி விரும்புறத செய்து தாறதுக்குப் பேரு சங்கம் இல்லை. தொழிலாளிக்கு வரலாற்றையும் புரட்சியையும் கத்துக்குடுக்கிறதுதான் சங்கம்.'' கெ.கெ.எம்மின் தலை நடுங்கியது. அவர் புன்னகைத்தார். ''நீ சொன்னியே தொழிலாளிகள் பிரிஞ்க போயிடுவங்கன்னு. உனக்குத் தெரியாது. அம்பதுகளிலே நம்ம சங்கத்தில பத்து பேருண்ணா, மொதலாளிகள் பணம் குடுத்து நடத்தின திருவிதாங்கூர் ரப்பர் தொழிலாளி ஐக்கியத்தில நூறு பேர் இருப்பான். அங்க போறவனுகளுக்கு தோட்டங்களில பல சலுகைகள். நம்ம பக்கம் இருக்கிறவனுக்கு உயிரும்கூட சொந்தம் இல்லை. பத்து மாதம் பாடுபட்டு ஓரிடத்தில சங்கம் தொடங்கி, பத்து பேரை சேத்து கொடியேத்திகிட்டு, ஒருவாரம் மாறி நின்னுட்டு திரும்பி வந்தா நாலுபேர் இருப்பான். எப்பிடிடே நாம வளந்தோம்? நம்மகிட்ட நியாயம் இருந்தது. தர்மம் இருந்தது. நம்ம எதிரிகளுக்கும் அது தெரிஞ்சிருந்தது. அந்த நியாயத்துக்காக உயிரக் குடுக்கவும் தொழிலாளிகள் தயாரா இருந்தாங்க. குண்டடிபெட்டும் தடியடிபெட்டும் செத்தவங்க எத்தனை பேருடே? இன்னைக்கு எப்பிடிடே இத்தனை சங்கம் வந்தது? இன்னைக்கு அஞ்சு ரூபா நஷ்டம் வந்தா சங்கத்தவிட்டு மறு சங்கம் போறவனா எப்பிடிடே தொழிலாளி மாறினான்? எங்கடே தப்பு நடந்திருக்கு, சொல்லுடே...''

அருணாசலம் சலிப்புடன் பெருமூச்சு விட்டான். ''நீங்க எவ்வளவு சொன்னாலும் தொழிலாளிகள் உங்க தீர்மானத்தை ஆதரிக்கமாட்டாங்க தோழர்.''

''உனக்குத் தெரியாது தொழிலாளிகளை. நன்மையோ தீமையோ எதை புதிசாட்டு சொன்னாலும் அவன் எதிர்ப்பான். அறுபத்து மூணில போனஸ் குடுண்ணு கேட்டப்பம் முதலாளி எதிர்க்கிறதுக்கு முன்னால தொழிலாளிதான் எதிர்த்தான். சொல்லுற விதத்திலே சொன்னாப் போரும்...''

''இது அந்தமாதிரி இல்ல.''

''தொழிலாளியை சொல்லிப் புரியவைக்கத் தெரிஞ்சவன்தான்டே தலைவன். பின்ன, சந்தா பிரிக்கத் தெரிஞ்சா தலைவனாயிடலாம்னு நினைக்கிறியா?''

'''இனி உங்க இஷ்டம் தோழர். எனக்கு பட்டதச் சொன்னேன்.''

''நெஞ்சில தீ வேணும்டே அருணாச்சலம். அதை அணைய விட்டிரப்பிடாது. நீ இப்பம் செய்யிற ஆள் பிடிக்குத வேலைய எல்.ஐ.சி.க்கு செய்தா இன்னைக்கு உனக்கு எத்தனை லட்சம் தேறியிருக்கும், சொல்லுடே. தீ வேணும்டே. பேச்சில அதுக்கச் சூடு வேணும். அந்த சூடுதான் தொழிலாளிக்கு நம்மமேல நம்பிக்கையும் மரியாதையும் உண்டாக்குது. அது நம்ம ஆசான்கள்கிட்டேயிருந்து நாம எடுத்துக்கிட்ட தீ. அறுபத்து மூணில இந்த சங்கில உள்ள தீயை நம்பித்தான் எனக்கப் பின்னால அறுபதினாயிரம் தொழிலாளிகள் போராட்டத்துக்கு வந்தாங்க. பதினெட்டு பேர் குண்டடிபெட்டு செத்தாங்க. பதினேழு மாசம் பட்டினி கெடந்தாங்க. தீ வேணும்டே. அதை அணைய விட்டுடாதே.''

''நான் வாறேன் தோழர். நேரமாயிட்டுது.''

''செரி வா, காலைல பாப்பம். நான் ஒரு குறிப்பு மாதிரி தீர்மானத்தை எழுதி வச்சிருக்கேன். நாம உக்காந்து பேசி அதை சரிபண்ணுவோம்.''

அருணாசலம் படியிறங்கும்போதே திரும்பி ஸ்டாலினைப் பார்த்தான் அவர் கண்களை இடுக்கி கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். கீழே வந்தபிறகுதான் கெ.கெ.எம்மிடம் பேச வேண்டியதைப் பேசாதது ஞாபகம் வந்தது.

அறையில் தீர்த்தமலை இருந்தார் ''வாங்க தோழர் எங்கே போனீங்க. நாராயணன் தேடினான்.''

''மேலே.''

''கெ.கெ.எம்மிட்டயா? பேசிட்டீங்களா?''

''இல்ல, அவர்தான் பேசிட்டிருந்தார்.''

''சொல்லலியா?''

''இல்லை.''

''அப்பா?''

''சொல்ல வேண்டாம். அவசியம் இல்லை. அவரு சம்மதிக்க மாட்டார்.''

''நான் வேணுமானால்...''

''கெ.கெ.எம். மாநாட்டில ஒரு தீர்மானம் கொண்டு வரப் போறார். தொழிலாளிக திருடக் கூடாதுண்ணு.''

தீர்த்தமலை சிரித்தபடி ''விளையாடாதேய்யா'' என்றார்.

''கூட்டிக்கழிச்சுப் பார்த்தா அதுதான் அதுக்க அர்த்தம். அதை நாம எதிர்த்தா போரும். கெ.கெ.எம். விழுந்திடுவார்.''

''அப்ப பேச வேணாமா?''

''வேண்டாம், இந்த தீர்மானத்தை அவர் கொண்டுவாறது நமக்கு ஒரு பெரிய வாய்ப்பு. அதைக் கெடுத்திட வேண்டாம்.''

தீர்த்தமலை இன்னொரு பீடியைப் பற்ற வைத்தார். அருணாசலம் மிகவும் களைப்பாக உணர்ந்தான். எழுந்து, ''வீட்டுக்குப் போய் குளிச்சிட்டு வாரேன் தோழர். ஒரே கசகசான்னு இருக்கு. நாராயணன் கிட்டே சொல்லிடுங்க'' என்றான்.

♦

3

அருணாசலம் வீட்டுக்குமுன் வண்டியைத் தூக்கி நிறுத்தும்போது ஒலிகேட்டு நாகம்மை வந்து வாசலைத் திறந்தாள். குளித்துவிட்டுத் தலை மயிரை விரித்துப் போட்டிருந்தாள். முகம் மஞ்சள் மினுமினுக்க வழவழப்பாக இருந்தது. காதோர மயிர்கள் செம்பட்டையாக மின்னின.

''என்ன சொல்லாம வாறிய?''

''வரப்பிடாதா? பாப்பா முழிக்கேல்லியா?''

''ராத்திரி ஒரே கரச்சில். மூணு தடவ எழும்பி இருந்து அழுதாச்சு... இப்பம் தூக்கம்.''

''என்ன இண்ணைக்கு குளியல், காலைலயே?''

''வெலக்கு.''

''ஓகோ'' என்றபடி சட்டையைக் கழற்றினான். நாகம்மை ''தோசைக்குப் போடேல்லியே. உப்புமாவு கிண்டட்டா?'' என்றாள்.

''வேண்டாம், பழையது இருந்தா போறும்.''

''பழையதா? ராத்திரி கண்முழிச்சுட்டு பழையது தின்னா காய்ச்சல் வராதா? ரவா தோசை மாதிரி செய்யட்டா? பச்சை மிளகாய் போட்டு, சூடா?''

''வேண்டாம், எனக்கு ரவாவே செரிக்காது.''

''கோதுமை மாவு இருக்கு.''

''என்னமாம் செய்யி. முதலிலே நான் குளிக்கணும். எண்ணெய் எங்க?''

எண்ணெயும் சீப்பும் பவுடரும் வழக்கம்போல் 'மூலதனம்' மீதுதான் இருந்தன. அருணாசலம் கோபத்துடன் திரும்பினான். அவளைக் காண வில்லை. பெருமூச்சுடன் குளிக்கப் போனான். குளிர்ந்த நீரில் உடலில் இருந்த அசதி கரைந்து ஓடியது போலிருந்தது. தோசை வார்க்கும் முறுகல் மணம் எழுந்தது. வேட்டியை சுருட்டிக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தான். மனம் ஏன் நிலை கொள்ளாது தவிக்கிறது என்று புரியவில்லை. கை நீட்டி ஒரு புத்தகத்தை எடுத்தான். 'இரண்டாவது உலகமகா யுத்தம்' ஜெனரல் மிஷிக்கியேவ்

எழுதியது. செம்பிழம்பு ஒரு குமிழ்போல எழுந்து நிற்கும் அட்டைப்படம். உள் அட்டையில் ''மாபெரும் ஜனநாயக சோஷலிசப் போர் சோவியத் மக்கள் தொகையின் மூன்றில் ஒரு பங்கை பலிகொண்டது. பல ஆயிரம் கிராமங்கள் அழிந்தன...''

நாகம்மை தோசையுடன் வந்தாள். ''மாவு இல்லைன்னு சொன்னே?'' என்றான்.

''அக்காகிட்ட ஒரு டம்ளர் வாங்கினேன்.''

''எதுக்கெடுத்தாலும் அங்க போயிட்டிருக்காதே.''

''அவுங்க இங்க வரலியா? நேத்துகூட ஒரு டம்ளர் சீனி குடுத்தேன்.''

தோசை மணமாக, சுவையாக இருந்தது.

''சாப்பிட்டுட்டு படிச்சா என்ன?''

'கீவ் முனையிலிருந்து துருப்புகளை வெளியேற்றும் உடன்பாடு...' அருணாசலம் சலிப்புடன் புத்தகத்தை மூடினான். நாகம்மை மறு தோசையுடன் வந்தாள். ''நாகம், ஒரு விஷயம் உங்கிட்ட சொல்லணும்'' என்றான்.

''என்னது? எண்ணெக் குப்பிய இப்படியா வைக்கிறது?''

''சொல்றதக் கேளு.''

''சொல்லுங்க'' என்றபடி புறங்கையால் நெற்றி மயிரைச் சரிசெய்தாள். முகமும் கழுத்தும் வியர்வை படர்ந்திருந்தன. அவள் சருமம்தான் எத்தனை மென்மையாக, எத்தனை உயிர்த் தீவிரத்துடன் இருக்கிறது. புதிய பாளைக் குருத்துபோல. அவளை அணைத்து முத்தமிட வேண்டும் போலிருந்தது.

''நாகம் நான் நம்ம சங்கத்துக்கு செயலாளர் ஆகப்போறேன்.''

''இப்பகூட நீங்கதானே செயலாளர்?''

''இப்ப துணைச்செயலாளர். இனிமே நான் பொதுச்செயலாளர். நாராயணன் எனக்கு கீழே.''

''அய்யோ தோசை கருகுது. இருங்க வாறேன்'' என்றாள். சூடான தோசையுடன் அவள் திரும்பி வருவதுவரை அவன் பொறுமையின்றி அமர்ந்திருந்தான். ''தோசை போதும். நீ கொஞ்சம் நில்லேன்.''

''போதுமா? ரெண்டு தோசையா? மதியம் எப்ப சாப்பிட்டு போறியளோ!''

''நாகம் நான் சொன்னது உனக்குப் புரிஞ்சுதா?''

''சங்கத்திலே ஆபீஸர் ஆகப் போறிய அதுதானே? அதிலே என்ன இப்பம் சங்கத்துக்கு இவ்வளவு செய்திருக்கீங்க. அவங்க புரமோஷன் குடுத்த

வேண்டாமா? மறந்துட்டேன். அந்த கறுத்தப் பய, அவன் பேரு கோலப்பன்தானே? முகத்தபாத்தா நம்ம பக்க பிள்ளைமார் மாதிரிதான் இருக்கு இல்லியா?''

''ஆமா, அவனுக்கு என்ன?''

''நம்ம பெரிய பிளாஸ்க்கை அவன் வாங்கிட்டுப் போனான். ஞாபகம் வச்சுகிடுங்க. செவப்பு பிளாஸ்க். வெள்ளை மூடி. அங்க வல்லவனும் உடைச்சுப் போடப் போறான். அப்பப்ப பாத்துக்கிடுங்க. இந்த கோலப்பன் பய எப்படி நல்ல மரியாதிக்காரனா?''

''எதுக்கு?''

''ஒரு காரியமாட்டு... இருங்க'' என்றபடி போய் மீண்டும் தோசையுடன் வந்தாள்.

''நாகம் உன்கிட்ட நான் ஒரு விஷயம் பேசணும்டி'' என்று அவளைப் பிடித்தான்.

''அய்யோ, விடுங்க என்ன இது'' என்று திமிறியபின் மேஜையில் சாய்ந்து நின்று முந்தானையால் வியர்வையைத் துடைத்தாள்.

''நாகம் நான் இனிம கெ.கெ.எம். எடத்துக்கு போறேன்.''

நாகம்மை புரியாமல்''அப்ப கெ.கெ.எம்?'' என்றாள்.

''அவரை நீக்கிட்டாங்க.''

''ஆரு?''

''கட்சி.''

''அவருக்க கட்சிதானே?''

''நம்ம கட்சி. மேலிடத்தில அவர்மேல திருப்தி இல்ல.''

''அவர மாத்திட்டு உங்களைப் போட்டாச்சா?''

''இன்னும் தேர்தல் நடக்கல்ல.''

நாகம்மை குழப்பத்துடன் நின்றாள். பிறகு ''என்னமோ போங்க, உங்க சந்தோஷம்தான் எனக்கு முக்கியம்'' என்றாள்.

அருணாசலம் கோபமடைந்தான். ''எனக்கு சந்தோஷம்னு யாரு சொன்னது?''

''இதென்ன வம்பாப் போச்சு!''

''கெ.கெ.எம்மைத் தூக்கிட்டு என்னைப் போட்டா எனக்குச் சந்தோஷமா?''

''வேணாம்னுட்டியளா?'' என்றாள் நாகம்மை திமிர் ஆசுவாசத்துடன்.

அருணாசலம் தணிந்தான். ''கட்சிக்க உத்தரவை எப்பிடி மீற முடியும்? தொழிலாளிகளோட விருப்பம்தான் கட்சிக்கு முக்கியம்'' என்றான். உடனே எரிச்சல் எழுந்தது. எதற்கு இதையெல்லாம் போய் இவளிடம் சொல்கிறோம் என்றுபட்டது. எதற்கு இந்தக் குற்ற உணர்வு இவள்முன்?

''அப்பம் செரி.''

''என்ன செரி?''

''உங்களுக்கு சவுகரியமானபடி செய்யுங்க...''

''உன் பேச்சு செரியில்ல. நான் என்ன செய்ய முடியும்? எனக்க இஷ்டம் எண்ணு சொன்னா என்ன அர்த்தம்?''

''காலம்பற எனக்ககிட்ட சண்டைக்கு வர வேண்டாம். நீங்க கேட்டிய, நான் சொன்னேன்.''

''அப்பம் உனக்கு இதில ஒரு காரியமும் இல்லியா?''

''எனக்கென்ன காரியம்?''

''விளையாடாதே. கெ.கெ.எம்முக்க பதிலா நான்னு சொன்னப்பம் உனக்கு கோபம் வந்ததா வரலியா? என் முகத்த பாத்து சொல்லு.''

''எனக்கு என்ன கோவம்?''

''அப்பம் கோவம் இருக்கு.''

''நான் அப்பிடி சொல்லல்ல.''

''நீ சொல்லமாட்டே, நினைப்பே.''

''நான் ஏன் நினைக்கப் போறேன். உங்க சங்கம், உங்க தொழிலாளிமாரு எனக்ககிட்ட ஒண்ணும் சொல்லுயதில்லை. இதை மட்டும் ஏன் சொல்லுதிய?''

ஆமாம், இதை மட்டும் ஏன் சொல்கிறேன் என்று வியந்தான். மறுகணம் கோபம் கொண்டான். ''எதுக்குச் சொல்லல்லேண்ணா உனக்க தலைக்குள்ள சோறும் தோசையும் மீன்குளம்பும் இருக்கிறதனால. பெரிசா பேச வந்திட்டாள். போடி.''

''அப்பிடி இருந்தா தானே உங்களுக்கு பிடிக்கும். நக்கி நக்கித் திம்பிய.''

''போடி, சோலிய பாத்துக்கிட்டு.''

''போறேன். தலைக்குள்ள தீய வச்சுக்கிட்டு அலையுதவங்களுக்க காரியத்திலெ எனக்க என்ன வேலை?''

''என்னடி சொன்னே?''

''உங்க தலை ஒரு அடுப்புண்ணு.''

அவன் அயர்ந்தான். மிகச் சரியான உவமை அது என்று பட்டது. எழுந்து சட்டையைப் போட்டான்.

''இருங்க, டீ கொண்டு வாறேன்.''

''ஒண்ணும் வேண்டாம்.''

''என் ராஜா இல்லை? என் மேல உள்ள கோபத்துக்கு வயித்தக் காயப் போடணுமா?''

''போடி உள்ள.''

''தப்பு. தெரியாம சொல்லிட்டேன்.''

''என்ன சொல்லிட்டே?''

''எல்லாம்தான். தெரியாம சொல்லிட்டேன். பொம்புளைப் புத்திதானே? இருங்க டீ கொண்டு வாறேன்.''

''எனக்கு நேரமாச்சு, போ.''

அவள் கண்களில் கண்ணீர் பரவியது.

''எதுக்கு இப்பம் அழுது காட்டுறே?''

கண்ணீர் உருண்டு சரிந்தது. அவன் அவள் முகத்தின் தூய்மையைப் பார்த்தான். பிடிவாதங்களைத் தாண்டி மனம் இளகியது. அவளை நெருங்கி இடையை வளைத்து அணைத்து, கண்ணீரைத் துடைத்தான். ''செரி விடு, ஏதோ கோவம்.''

''சாப்பிடாமல் போறிய...''

''செரி, கொண்டு வா.''

அவள் புன்னகையுடன் உள்ளே போனாள். அவனுக்கு இன்னும் ஏதோ மீதியிருந்தது. அவள் டீயுடன் வந்தாள். அவளுடைய துல்லியமான கண்களைப் பார்த்தபடி சாப்பிட்டான். பிறகு ''உடனே அழுதிருவா?'' என்றான்.

''பின்ன கோச்சுட்டுப் போனா? நீங்க போயிடுவீங்க. வீட்டுல இருக்கியவளுக்கு நாள் முழுக்க மனசு கெடந்து அனத்தும்.''

''ஏதோ கோபம்.''

''யாரு மேல'' என்று அவள் சிரித்தபடி கேட்டாள். அவன் மனம் அதிர்ந்தது. அவன் கண்மாறுதலைப் பார்த்த அவள் ''சும்மா சொன்னேன்'' என்றாள்.

வண்டியை எடுக்கும்போது பாப்பாவைப் பார்க்காமலேயே கிளம்புகிறோம் என்பது ஞாபகம் வந்தது. ◆

4

அருணாசலம் சுவரில் ஒட்டப்பட்டிருந்த அட்டவணையைப் பார்த்தான். விருந்தினர்களில் வரச் சாத்தியமுள்ள அனைவரும் வந்து விட்டிருந்தனர். மூன்று தனித்தனிக் கோப்புகள் தயாராக இருந்தன. மேஜைமீது ஒரு குறிப்பு இருந்தது, அவனை மாசிலாமணி சந்திக்க விரும்புவதாக. தொலைபேசியில் கங்கா லாட்ஜைக் கூப்பிட்டான். மாசிலாமணி குளித்துக் கொண்டிருந்தார். தொலைபேசியை எடுத்த இளைஞன் அவனை அவர் உடனே வரச் சொன்னதாகச் சொன்னான்.

கங்கா லாட்ஜ் பெரிய வசதியான அறைகளினாலானது. தேக்குமரக் கதவைத் தட்டுவதற்குமுன் அருணாசலம் ஒரு கணம் நின்று தன்னைத் தொகுத்துக் கொண்டான். கதவைத் திறந்த இளைஞனின் பெயர் கதிர். கட்சியின் முழு நேர ஊழியன். அருணாசலம் அவனிடம் அதிகம் பழகியதில்லை. மிகவும் படித்தவன் என்று கூறிக் கேட்டதுண்டு. கட்சிக்குள் புது தலைமுறையில் படிப்பாளிகள் மிகமிகக் குறைவு.

''வாங்க தோழர்'' என்றான் கதிர். சுத்தமாக சவரம் செய்யப்பட்ட முகமும் கச்சிதமான மீசையும், தரமான உடைகளும், பளபளக்கும் செருப்புமாக அழகாக இருந்தான். ''தலைவர் ரெண்டுமுறை கேட்டார்'' என்றான்.

உள்ளே மாசிலாமணி சட்டையின்றி, நரைமயிர் தொப்பையுடன் சோபாவில் அமர்ந்து செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார். டீபாய் மீது செய்தித்தாள்கள், காலியான டீக் கோப்பைகள். திறந்த ஜன்னலில் செயற்கை நூலிழைத்திரை சுடர்போல ஒளிவிட்டது. மேடைமீது இரு பிரம்மாண்டமான சூட்கேஸ்கள். மின்சவரக்கருவி ஒன்று மின்னேற்றம் பெற்றபடி இருந்தது. மிஷ் விசிறி ஓசையின்றி சுழன்றது.

''உட்காருங்க தோழர்'' என்றார் மாசிலாமணி. ''காபி, சிகரெட்?''

''வேண்டாம்.''

மாசிலாமணி விஸ்கி பில்டர் பற்றவைத்து அமைதியாக இழுத்தார். பிறகு ''சொல்லுங்க தோழர்'' என்றார்.

''எல்லாம் நல்லபடியா போகுது.''

''அப்ப தலைவர் ஆயிடறீங்க. வாழ்த்துக்கள். கட்சியிலயும் ஒரு ஏத்தம் இருக்கும்னு கேள்விப்பட்டேன்.''

அருணாசலத்திற்கு ஏனோ அசௌகரியமாக இருந்தது.

''கெ.கெ.எம். என்ன சொல்லறார்?''

''அவருக்குத் தெரியாது.''

''உடைவு வருமா?''

''வரலாம்.''

''மிஞ்சிப் போனா ஒரு எட்டுபேர் கூடப் போவானுங்க. அது ஒரு உடைவா?''

''உங்களுக்கு கெ.கெ.எம்மைத் தெரியாது.''

''எனக்குத் தொழிலாளர்களைத் தெரியும். நான் இதில இறங்கி வருஷம் இருபத்தியெட்டு தாண்டியாச்சு.''

அருணாசலம் ஒன்றும் பேசவில்லை.

''கிளைச் செயலாளர்களில நாயர் சாதிக்காரங்க எவ்வளவு?''

அருணாசலம் அதிர்ந்தான். ''அந்த மாதிரிப் பார்வையே இங்க இல்லை தோழர்.''

மாசிலாமணி புன்னகைத்தார். ''நம்மகிட்ட இல்லை.''

அருணாசலம் யோசித்து, ''மொத்தம் பதினெட்டு பேர் இருப்பாங்க'' என்றான்.

மாசிலாமணி சிரித்தார். ''பாத்தீங்களா இப்ப நீங்களே சாதிக்கணக்கு சரியா வச்சிருக்கீங்க. நீங்க மக்கள் வழிப் பிள்ளையா, மருமக்கள் வழியா?''

''மக்கள் வழி.''

''கஷ்டம்தான்.'' மாசிலாமணி சிகரெட்டை குத்தி அணைத்தார். ''இப்ப சாதி வெளியே வந்திருக்கு. முன்ன அடங்கி இருந்தது. எப்படிச் சித்தாந்தம் பேசினாலும் நம்பூதிரிதானே தலைவனாக முடிஞ்சது, இல்லியா?''

அருணாசலம் பதற்றமாகத் தலையை ஆட்டினான்.

மாசிலாமணி ''நாராயணனைப் பிடிச்சுக்கிடுங்க, விடாதீங்க'' என்றார்.

அருணாசலம் உடம்பெங்கும் வெப்பமாக உணர்ந்தான். அவன் மனதைப் புரிந்துகொண்டவர்போல மாசிலாமணி புன்னகைத்தார். ''நாராயணன் மாதிரி இருக்கிறதிலயும் ஆபத்து இருக்கு தோழர். கெ.கெ.எம். மாதிரி அவனுக்கும் தனிச் செல்வாக்கு வந்திடும். நாடாக்கமாருக்கு கொஞ்சம்

சாதிப்பற்று அதிகம்னும் தெரியாதவங்க இல்லை. தனிச்செல்வாக்கு வராம இருந்தாலும்கூட கட்சி சந்தேகப்பட்டுட்டேதான் இருக்கும். முதலிடத்துக்கு வர விடவே மாட்டாங்க. அதிகாரத்துக்கு செக் வச்சுக்கிட்டே இருப்பாங்க. பாருங்க கோவையில ஒரு கவுண்டரோ செங்குந்தரோ சங்கத்தில முதலிடத்துக்கு வர முடியலை. உங்க இடம்தான் பாதுகாப்பு. என்ன நாராயணனை மட்டும் அணைச்சுப் போகணும்.''

அருணாசலம் அந்தப் பேச்சையே கசப்பாக எண்ணினான்.

''ஏம்பா கதிர், மணியக் கூப்பிட்டு தோழருக்கு டீ கொண்டுவரச் சொல்லுப்பா. சிகரெட்டும் சொல்லு.''

''கெ.கெ.எம்மை இப்ப தூக்கியே ஆகணும்னு என்ன கட்டாயம்?'' என்றான் அருணாசலம்.

''உனக்கே ஜகிக்கக் கூடிய விஷயம்தான். கூட்டணி அரசுதான் இனிமே. நாம உள்ளேயோ வெளியேயோ இருந்து ஆட்சில பங்கெடுக்கிற வாய்ப்பு நிறைய இருக்கு.''

''காங்கிரஸ் கூடவா?''

''எவனா இருந்தா என்ன?''

''காங்கிரஸ் சம்மதிக்குமா?''

''காங்கிரஸுக்கும் சரி, பி.ஜெ.பிக்கும் சரி, இனி தனி மெஜாரிட்டி கிடைக்கிறது கஷ்டம்தான். நம்ம ஆதரவு இல்லாம அரசாங்கம் இருக்காது. இருக்க விடக்கூடாது. இதுமாதிரி சந்தர்ப்பங்கள் வரலாற்றில ரொம்ப அபூர்வமாத்தான் கிடைக்கும். கட்சி அதை நழுவ விடாது.''

''காங்கிரஸ் ஒத்துக்கலேன்னா?''

''மதவாதத்தைவிட அன்னிய தேசத்துச் சதி பெரிசாப் போகும். தேசத்தைக் காக்க பி.ஜெ.பி.கூட சேந்துக்கிறதுதான்'' என்றபடி மாசிலாமணி உரக்கச் சிரித்தார்.

அருணாசலம் புண்பட்டவனாக ''விளையாடாதீங்க தோழர்'' என்றான்.

''விளையாட்டில்லை. ரெண்டு பூதம் நம்மகிட்ட இருக்கு. ஒண்ணு ஏகாதிபத்தியம். இன்னொண்ணு மதவாதம். ஒரு பூதத்தை கொஞ்சம் காத்தடிச்சு பெரிசு பண்ணினா மத்த பூதத்துக்ககூட சேந்துக்கலாம். ஏன் நாம் ஏகாதிபத்திய பூதத்தை எதுக்க எம்பத்தெட்டில பி.ஜெ.பிகூட சேந்து அமைச்சு அதிகாரத்தில பங்கு வாங்கிக்கலையா? இதெல்லாம் ஒரு சூதாட்டம் தோழர். இந்த சூதாட்டத்தை நாம எதுக்கு ஆடறோம்ங்கிறதுதான் முக்கியம்.''

''எதுக்கு, அதிகாரத்துக்கா?''

''கண்டிப்பா அதிகாரத்துக்குத்தான். வேற எதுக்கு? எம்பத்தெட்டில வி.பி.சிங் ஆட்சி அமைச்சப்ப நாம வாரந்தோறும் பிரதம மந்திரியை சந்திச்சுப் பேசியிருக்கோம். காபினட் கூட்டம்கூட அப்படி நடக்கிறதில்லை.

கொள்கையில உறுதியாட்டு இருந்தா, இந்த அரசாங்கங்கள் எதையும் நாம தாங்கிப் பிடிச்சிருக்கக் கூடாது. எல்லாமே முதலாளிகளுக்க பணத்துக்கமேல நடத்துத ஆட்சிகள்தானே.''

''ஆனா மதவாதம்...''

''மதவாதமும் மயிரும். ஓய் உமக்கும் தெரியும், எனக்கும் தெரியும். எல்லாம் ஒரே கட்சிகள். சும்மா கதைய எங்கிட்ட விடாதீரும். தொண்ணூறில்தான் ராமஜன்ம பூமி விஷயம் அனலாட்டு அடிச்சது. அப்ப பிஜெபி பக்கத்தில உக்காந்து அதிகாரத்தப் பங்கு போட்டப்ப எங்க போச்சு மதவாதம்?''

''அப்படீன்னா...?''

''யோசித்துப் பாரும். இருபது வருஷம் முன்னே நம்ம கட்சி இதை செய்திருக்குமா?''

அருணாசலம் தலையசைத்தான்.

''ஏன்னா அப்ப நமக்கு ஒரு கனவு இருந்தது. செங்கோட்டைல ஒருநாள் செங்கொடி பறக்கும்னு நாம நம்பினோம். அதுக்காகக் கஷ்டப்படவும், வேண்டி வந்தா சாகவும் தயாராக இருந்தோம். இப்ப உனக்கும் எனக்கும் தெரியும். இனி இந்தியாவில அது நடக்கப் போறதில்லை.''

''அப்படியில்ல; நம்மகிட்ட லட்சோபலட்சம் தொழிலாளிங்க இருக்காங்க.''

''பூசாரிகிட்டயே பேயோட்டாதடேய் அருணாசலம்...''

கதிர் சிரித்தான்.

''சரி, அதுக்காக?''

''எந்த ஒரு கட்சியிலயும் தொண்டர்கள் என்னைக்காவது ஒரு நாள் அதிகாரத்துக்கு வந்திடுவோம்கிற நம்பிக்கையிலத்தான் சேருறாங்க, வேலை செய்றாங்க. அதிகாரம் இல்லைன்னா கட்சி மட்டும் எப்பிடி இருக்கும்? இப்பவே கட்சி ஒரு மாதிரி பிராந்தியக் கட்சியா மாறியாச்சு. அதுதான் யோசிக்கணும்.''

''அப்ப இனிமே கூட்டணிக் கட்சியா ஒத்து ஊதுறதுதானா?''

''ஏன் கூட்டணியில பெரிய கட்சியா நாம வர முடியாதா? நம் தலைவர் ஒருத்தர் பிரதமரா வர முடியாதா? அப்படி ஒரு கனவு சாத்தியம்தானே?''

''அப்படி ஒரு பிரதமர் நமக்கு எதுக்கு?''

''உனக்கே தெரியும் அருணாசலம். எப்படியிருந்தாலும் பிரதமர் பதவி ஒரு சமரச மையம்தான். நம்ம கட்சி மட்டும் ஆட்சியப் புடிச்சாலும்கூட, நமக்குள்ளேயே எத்தனை எத்தனை உட்போக்குகள் இருக்கு, சொல்லு.''

அருணாசலம் ஆயாசமாக உணர்ந்தான். திடீரென்று ஒரு பயம் வயிற்றைக் கவ்வியது. எதையோ இழந்துகொண்டிருப்பவன் போலிருந்தது. பெருமூச்சுடன் வாட்சைப் பார்த்தான்.

''கூட்டணி அரசியல் வேற மாதிரியான விளையாட்டு தோழர். அதுக்குப் பொருத்தமா கட்சியும் மாறியாகணும். இப்ப தேசம் முழுக்க கட்சிக்கு வந்திருக்கிற நெருக்கடி இதுதான்.''

''அம்பத்துநாலுல நாம ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு தேர்தல் ஜனநாயக முறைக்கு திரும்பினபோதும் இதை மாதிரி ஒரு நெருக்கடி வந்தது தோழர்'' என்றான் கதிர். இதுவரை மாசிலாமணி பேசியவைகூட கதிரின் சொற்கள்தாம் என்ற எண்ணம் இயல்பாக அவன் உட்புகுந்தவிதம் மூலம் ஏற்பட்டது. ''அதுவரை நம்ம கட்சி ஒரு போராட்ட இயக்கமா இருந்தது. தொண்டர்களுக்கு ராணுவம் மாதிரியான பயிற்சி தந்தோம். நம்ம கட்சிக்கே ஒரு ரகசியத் தன்மை இருந்தது. கட்சிக்குள்ள ஒருத்தரை எடுக்கிறதுக்கு மூணு வருஷம் கண்காணிப்பு வேணும். பிறகு முதல்கட்ட உறுப்பினர். இரண்டு வருஷம் அதில ஆளைக் கவனிச்ச பிறகுதான் கட்சிக் கார்டு. கட்சிக் கார்டு ஒரு பெரிய கவுரவமா இருந்த காலம் இருந்தது. கட்சியோட உறுப்பினர் பட்டியலை மாநிலக் கமிட்டி உறுப்பினர் தவிர இன்னொருத்தர் பாத்துட முடியாது. கட்சி புல்லட்டின்கூட ரகசியமானதாகுமென்டா இருந்த காலம் உண்டு. நமக்கு இப்ப இதெல்லாம் ஆச்சரியமா வேடிக்கையாக்கூட இருக்கும். எவ்வளவு பெரிய மாற்றம் இல்லையா?''

''ஆமா, அது சரித்திரபூர்வமான ஒரு தேவை.''

''கண்டிப்பா, அதுபோல இப்ப வாற இந்த மாற்றமும் ஒரு வரலாற்றுத் தேவைதான். ஆனா பாருங்க, நம் கட்சியோட விதிமுறைகள் அதே தலைமறைவு இயக்க பாணியிலதான் இப்பவும் இருக்கு. உங்களுக்கும் எனக்குங்கூட கட்சிப் பெயர்கள் உண்டு. ரகசிய எண்கள் உண்டு. ஆனா மாசாமாசம் லெவி தரத் தயாரா உள்ள எந்தக் கழுதையையும் இன்னைக்கு கட்சியில சேத்துக்கிறோம். அதாவது ஜனநாயகம். இங்க தலைகளுக்கு உள்ள என்ன இருக்குங்கிறதுக்கு மதிப்பில்லை. தலைகளோட எண்ணிக்கைதான் முக்கியம். இந்த மாற்றம் வந்ததனாலதான் கெ.ஆர்.எஸ். மாதிரி அறிவிஜீவிகள், சமரசவாதிகள், சூதாடிகள் முதலிடத்துக்கு வந்தாங்க. காரணம் ஜனநாயகத்தில் அடிப்படை விஷயம் பேச்சுவார்த்தைதான். எப்பவும் நான் சொல்றதுதான் இது. பேச்சுவார்த்தைதான் மனித நாகரிகம் உருவாகக் காரணம். மனிதனோட மிகப்பெரிய கண்டுபிடிப்பும் அதுதான்.

மாசிலாமணி தனக்குச் சம்பந்தமில்லாத விஷயம்போல ஜன்னல் பார்த்துப் புகைவிட்டபடி இருந்தார். சீடனின் இந்த சொற்பெருக்கை அவர் பலமுறை கேட்டிருக்கக் கூடும்.

''அப்ப போராட்டம் இல்லை, சமரசம்தான்னு சொல்வீங்க'' என்றான் அருணாசலம்.

''ரெண்டுக்கும் நடுவில இருக்கு பேச்சுவார்த்தை. உலகத்தில் போர் குறைஞ்சிட்டு வருது. விஞ்ஞான வளர்ச்சியால எண்ணிக்கைக்கும் போர் வெற்றிக்கும் சம்பந்தமில்லைன்னு ஆச்சு. பேரழிவு இல்லாம இனிமே போர் சாத்தியமில்லை. போரில் வெற்றியும் தோல்வியும்கூட இல்லை. அழிவு மட்டும்தான். இன்னைக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு சமூகத்திற்கும் என்ன தேவைன்னு தெளிவாத் தெரியும். எல்லாரும் இந்த பூமியிலதான் வாழ்ந்தாகணும்னும் தெரியும். அதனால பேச்சுவார்த்தை தவிர வேறு வழியே இல்லை. இன்னைக்கு ஒவ்வொரு துறையிலயும் ஒவ்வொரு விஷயத்தையும் பேச்சுவார்த்தைதான் தீர்மானிக்குது. இன்னைக்கு இந்த நிமிஷத்தில உலகத்தில எத்தனை கோடி மேஜைகளில் பேச்சுவார்த்தைகள் நடக்குதுன்னு யோசிச்சுப் பாருங்க. உலகம் இப்படி இருக்கிறதுக்குக் காரணம் இந்தப் பல்லாயிரம் கோடி பேச்சுவார்த்தைகளோட சமரசப் புள்ளிகள்தான். ஒவ்வொரு அமைப்பும் ஒவ்வொரு கணமும் ஒரே சமயம் சமரசத்திலயும் இருக்கு, போராட்டத்திலயும் இருக்கு. இரண்டுக்கும் நடுவில பேச்சுவார்த்தை மேஜை தொடர்ந்து நகர்ந்துட்டே இருக்கு. அந்தச் சலனம்தான் மனிதக் கலாச்சாரத்தோட சலனம். கடைசிப் போராட்டம், கடைசி சமரசம்னு பேசிய காலமெல்லாம் போயாச்சு. கடைசிப் புள்ளின்னு ஒண்ணு இல்லை. இருந்தா அது மனிதகுலத்தோட அழிவுதான்.''

''அப்ப இனி ஆயுதங்களுக்கு இடமில்லையா?''

''எப்பவுமே ஆயுதம் பேச்சு வார்த்தைல ஒரு நிர்ப்பந்தத்துக்குப் பயன்படற சக்திதான். இதோ பாருங்க தோழர், சுருக்கமா இப்படிச் சொல்றேன். ஒவ்வொரு போராட்டமும் சமரசத்திற்காக. ஒவ்வொரு சமரசமும் போராட்டத்திற்காக.'' கதிர் சிகரெட் பற்றவைத்தான். ''நான் ஒரு உதாரணம் அடிக்கடி சொல்வேன். இப்ப உலகப் படத்தை எடுத்துக்கிடுங்க. அதை ஒரு பூதக்கண்ணாடியால பாத்தா பல்லாயிரம் ஆப்செட் புள்ளி களினால அது உருவாகியிருக்கிறது தெரியும். அந்த ஒவ்வொரு புள்ளியையும் ஒவ்வொரு கயிறிழுப்புப் போட்டியுடைய நடுவில உள்ள புள்ளியா நினைச்சுக்குங்க. இதுதான் இன்னைக்குள்ள உலகத்தோட சரியான படிமம்.''

''ரொம்பத் தத்துவார்த்தமா இருக்கு'' என்றான் அருணாசலம்.

''அப்படிச் சொன்னா இவனுக்கு இன்னமும் ரொம்ப உற்சாகமாயிடும். மடப்பய'' என்றார் மாசிலாமணி. ''நான் கொஞ்சம் கீழ போயிட்டு வாரேன். பேசிக்கிட்டிருங்க'' என்றபடி சட்டையை மாட்டிக் கிளம்பினார்.

கதிர் அவர் போவதைப் பார்த்தபிறகு ''ரொம்ப அறுக்கிறேனா?'' என்றான்.

''இல்லல்ல, நான் நடைமுறையோட சம்பந்தப்படுத்திக்கிறேன்.''

''நடைமுறையைப் பத்தித்தான் பேச வந்தேன். இப்ப நாம பேச்சு வார்த்தையோட காலகட்டத்திற்கு வந்தாச்சு. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயகத்துக்கு வந்து நாற்பது வருஷமாச்சு. இன்னும் நமக்கு

ஜனநாயகம்னா என்னான்னு புரியலை. ஜனநாயகம் வழியா சர்வாதிகாரம்னு பொட்டைக்கனவு கண்டுட்டு இருக்கோம். ஸ்டாலினும் மாவோவும் நம்மை ஜனநாயகத்துக்குள்ள வர அனுமதிக்கலை. நமக்குத் தேர்தல் உண்டு. ஆனா சர்வாதிகாரிதான் மறுபடியும் மறுபடியும் ஜெயிச்சு வருவார். கெ.கெ.எம். மாதிரி.''

''அவங்க செய்த தியாகங்கள் அப்பிடி.''

''அதை மறுக்கல்ல. ஆனா இப்ப காலம் மாறியாச்சு. நேத்தைக்குள்ள நம்ம தலைவர்கள் மண்ணிலேருந்து வந்தவங்க, தொழிலாளிபோட தொழிலாளியா வாழ்ந்தவங்க. காரணம் அண்ணைக்குத் தொழிலாளிக்குத் தேவை ஒரு தோழன். இன்னிக்குத் தொழிலாளிக்கு தேவை ஒரு வக்கீல், பச்சையா சொல்லப் போனா தரகன்.''

அருணாசலம் ''ரொம்பக் கேவலப்படுத்தறீங்க'' என்றான்.

''நமக்குள்ள என்ன?'' என்றான் கதிர். ''இன்னைக்கு எந்த தொழிலாள கிட்ட சங்கம் உத்தரவிட முடியும்? உங்க சங்கப் பொறுப்பாளர்கள கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ படிச்சவங்க எத்தனை பேரு? தொழிலாளிக்கு என்ன வேணும்னு தெரிஞ்சுக்கிட்டு குறைஞ்ச நஷ்டத்தில அதை வாங்கித்தாற சங்கம் ஜெயிக்கும். நாம மத்திய அரசில பல வருஷமா பங்கேற்கலை. அதனால படிப்படியா நம்ம சங்கங்கள் தேய்ஞ்சு முதலிடத்திலேருந்து மூணாமிடத்துக்கு வந்திட்டோம். அதனால இப்ப கூட்டணி அரசுக்காகப் பாடுபடறோம். பின்னே, நாம சர்வதேசியம் பேசறதும் சரி, அவனுங்க ஹிந்து தேசியம் பேசறதும் சரி, எல்லாம் இந்தத் தரகு வேலைக்கு ஒரு போலிக்கவுரவம் தேவைப்படுதுங்கிறதனாலதான். இன்னைக்கும் ஆவேசமான கோஷங்களும் தெருமுனைக் கூட்டங்களும் தேவையா இருக்கு. ரொம்பப் பெரிய ஒண்ணுக்காகத்தான் போராட நோம்ங்கிற பாவனை இன்னைக்கும் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கவாதிகளுக்கும் வேண்டியிருக்கு. நீங்களே பாக்கலாம், இப்ப நம்ம கட்சிக்குத் தலைவர்களா வரக் கூடியவங்க முன்னை மாதிரி ஜிப்பாவ சுருட்டிவிட்டுக்கிட்டு, காதில பீடிய வச்சுக்கிட்டு, முரட்டு பாஷைல பேச கிராமத்துத் தோழர்கள் இல்லை. வெளிநாட்டுலயோ உள்நாட்டு முத கல்லூரிகளிலயோ படிச்ச இளைய தலைமுறைக்காரங்க. அழகா இங்கிலீஷில நாசுக்கா பேசக்கூடியவங்க..மீடியாவ ஜாலமா சமாளிக்க கூடியவங்க. கார்லயும் பங்களாவிலயும் வாழறவங்க. ஒவ்வொ தொழிற்சங்கத்திலயும் அவுங்களை மாதிரி ஆட்கள்தான் வந்திட்டிருக்காங் அவங்க தொழிலாளியோட தொழிலாளியா தெருவில நின்ற போராடறவங்க இல்லை. அவனோட பிரதிநிதியா முகலாளியோ உக்காந்து பேச்சுவார்த்தை நடத்தறவங்க.''

''இருக்கலாம், ஆனால் கட்சியோட வேர் இவங்களில இல்லை.''

''இது வெறும் பேச்சு. இது மரமில்லை. இது ஒரு அமைப்பு. ஒரு பகுதியை இடிச்சு மாத்திக் கட்டறோம். அம்பத்தாறில கட்சில வந்த மாற்றத்தில ஒரு பெரியபங்கு தோழர்கள் வெளியே போனாங்க. அதில் சிந்தனையாளர்கள் உண்டு, கட்சியைக் கட்டி வளர்த்த ஒருங்கிணைப் பாளர்கள் உண்டு. பெரிய புரட்சி வீரர்கள் உண்டு. என்ன ஆச்சு? கட்சி புதியவங்களை சேத்துக்கிட்டு வளர்ந்தது. விரிவான மக்கள் பங்கேற்பு கெடைச்சது. அப்பிடி ஒவ்வொரு கட்டத்திலும் பல முக்கியமானவங்க போயிருக்காங்க. கட்சிக்கு வரலாற்றுரீதியான அவசியம் இருக்கிறவரை அது இருக்கும். வரலாற்று ரீதியா தன் கடமையை செய்றவரைக்கும் வளரும்.''

பேச்சின் தீவிரம் குறைந்தது. அருணாசலம் மௌனமாக அமர்ந்திருந்தான். கதிரின் ஒவ்வொரு சொல்லும் மறுக்க முடியாதபடி வலுக் கொண்டிருந்தது. அவனே நன்கு அறிந்திருந்த விஷயங்களுக்கு கதிர் கச்சிதமான சொல்வடிவம் தருவது போலிருந்தது. எனினும் அவன் எதிர்த்துப் பேச ஆசைப்பட்டான்; அவனுள் எதையோ பேணிக்கொள்ள விரும்புபவன்போல. அல்லது கதிர் ஆணித்தரமாகப் பேசித் தன் சஞ்சலங்களை உடைக்க வேண்டும் என்று விரும்புபவன்போல.

''தோழர், நீங்க இப்ப பேசினது ஒரு வகையில மார்க்ஸியத்தை நிராகரிக்கிறதுக்கு சமம் இல்லையா?''

''மார்க்ஸியம் மதம் இல்லை. அருளுரையும் இல்லை. நாம் அதை வழிபட வேண்டிய அவசியம் இல்லை. மார்க்ஸியம் வந்து இப்ப நூறு வருஷம் ஆயாச்சு. அதோட பரிசோதனைக் காலம் முடிஞ்சாச்சு. இன்னமும் அது பூமிமேல அற்புதங்களை நடத்தும்னு நம்பிட்டிருக்கிறது மூடத்தனம். அதனால என்ன செய்ய முடியும் என்ன செய்ய முடியாதுன்னு இந்த நூறு வருஷ வரலாற்றிலிருந்து நாம படிக்கணும். மார்க்ஸியம் உருவாக்கின அரசாங்கங்களெல்லாம் பழைய சக்ரவர்த்திகளோட அரசாங்களைவிட மோசமானவைன்னு அப்பட்டமா தெளிவாயாச்சு. மார்க்ஸியத்தால ஒரு புதிய சமூக அமைப்பையோ, பொருளாதார அமைப்பையோ, கலாச்சார அமைப்பையோ உருவாக்க முடியாது. அப்படி அது உண்டு பண்ணிக் காட்டிய அமைப்புகளெல்லாம் ஏற்கனவே இருந்த அமைப்புகளைவிட மோசமானவை மட்டுமல்ல, அவை மோசமான பழைய அமைப்புகளோட நகல்கள். இனிமே இம்மாதிரிக் கனவுகளை ஒருத்தன் வச்சிட்டிருந்தான்னா அவன் தொண்டனா கொடிபிடிக்கத்தான் லாயக்கு. ஆனா மார்க்ஸியம் உலகம் முழுக்க பல வெற்றிகரமான மாற்றங்களை உண்டு பண்ணியிருக்கு. ஒரு ஜனநாயக அமைப்பில, சுதந்திரப் பொருளாதார அமைப்பில, முக்கியமான ஒரு சக்தியா அது செயல்பட முடியும். முழுமையான மாற்று சமூகத்தை அது உருவாக்க முயலறப்பதான் பிரச்சினை வருது. ஏன்னா மார்க்ஸியத்துக்கு அதுக்கான சக்தி இல்லை. எந்த சித்தாந்தத்துக்கும் அந்த சக்தி கிடையாது. தெரிஞ்சும் தெரியாமலும் இயங்கக் கூடிய பல்லாயிரம்,

ஏன் பலகோடி சக்திகள் இணைஞ்சு சமூகமும் கலாச்சாரமும் பொருளாதார அமைப்பும் உருவாகுது. அதை எந்த சித்தாந்தமும் முழுமையா அணுகிட முடியாது. அதன் ஒரு பகுதியை மட்டும்தான் ஒரு சித்தாந்தம் தொட முடியும். அப்படி ஆய்வு செய்து அது முழுமையா நிரூபிச்ச உண்மைகளை முழு அபத்தமா ஆக்கக் கூடிய பல நூறு தளங்கள் மீதி இருக்கும். மார்க்ஸியம்தான் மானுடமனம் உருவாக்கின சித்தாந்தங்களிலேயே பெரியதுன்னு நான் நம்பறேன். சித்தாந்தங்களிலேயே உபயோகமான சித்தாந்தமும் அதுதான். ஒரு பேச்சு வார்த்தை மேஜையில மார்க்ஸியம் ஏழைகளோட பிரதிநிதியா உக்காந்து பேச முடியும். இன்னைக்கு தொழிலாளி வர்க்கம் அடைஞ்சிருக்கிற எல்லா லாபங்களும் மார்க்ஸியம் வழியா கிடைச்சதுதான். மார்க்ஸியம் இல்லைன்னா உலகத்தில உள்ள எந்த வெல்ஃபேர் ஸ்டேட்டும் இன்னைக்குள்ள கருணையோட இருந்திருக்காது. சமூக அமைப்பில சுரண்டப்பட்ட வர்க்கம் மார்க்ஸியக் கருத்தியலின் அடிப்படையில்தான் ஒன்று சேர்ந்து போராட முடியும். மார்க்ஸியத்தோட பணி இங்கதான். ஒன்று சேர்ந்து போராடறதுக்குத் தவிர்க்க முடியாத பெரும் கனவை அது உண்டு பண்ணித் தருது. அந்தக் கனவை தருக்கபூர்வமானதா மாத்தற தத்துவ அடிப்படைகளை உருவாக்கிக் காட்டுது. அந்த தருக்கம்தான் பேச்சு வார்த்தையில தொழிலாளி வர்க்கத்தோட மிகப்பெரிய துருப்புச்சீட்டு. எந்தத் தொழிலாளியும் பேச்சுவார்த்தைக்காகச் சாகமாட்டான். பெரிய கனவுகளுக்காகத்தான் சாவான். தொழிலாளி சாகத் தயாராக இருந்தாத்தான் பேச்சுவார்த்தையில எதையாவது சாதிக்க முடியும். மார்க்ஸியத்தோட இடம் இதுதான்.''

''அப்ப இனி வர்க்கப் போராட்டம் இல்லையா?''

''இப்ப நான் பேசினதே வர்க்கப் போராட்டம்தானே? ஆனா மார்க்ஸ் சொன்ன கடைசிப் புரட்சி இனி சாத்தியமில்லை. அது தொழிலாளிக்கு நாம குடுக்க வேண்டிய ஒரு இலட்சியப் புள்ளி, குதிரைக்கு காரட் மாதிரி.''

அருணாசலம் பெருமூச்சு விட்டான். பிறகு ''ஒண்ணு கேட்கிறேன். தோழர், இப்ப நீங்க சொன்ன பேச்சுவார்த்தை மேஜைக்கு ஒருவகையில பங்குச் சந்தை அமைப்பு சமம்தானே?''

''ஆமாம்'' என்றான் கதிர். ''தொழிலாளர்கள் கூட்டாகப் பங்குகளை வாங்கித் தொழில்களைக் கைப்பற்ற முடியும். குறைஞ்சது தத்துவார்த்தமா இது சாத்தியம்தான். ஸ்வீடன் பெல்ஜியம் சுவிட்சர்லாந்து முதலான நாடுகளில நடந்திருக்குன்னு சொல்றாங்க.''

''உலகத்தில பங்கு மார்க்கெட் இன்னைக்கு மிகப் பெரிய ஒரு நிறுவனம். ஆனா அது மிக இயல்பா ஒரு துளி ரத்தம்கூட சிந்தாம உருவாகி வந்திருக்கு. வரலாறு அதை உருட்டி கடைஞ்சி எடுத்திருக்கு.''

''ஆமா.''

''ஆனா உங்க பேச்சுவார்த்தை மேஜை உண்டாகிறதுக்கு எத்தனை கோடி பேர் செத்திருக்காங்க. எத்தனை பேர் கண்ணீரும் ரத்தமும் சிந்தி மட்கிப் போயிருக்காங்க. அவங்க செத்தது சுரண்டலும் ஒடுக்குமுறையும் இல்லாத ஒரு புதிய உலகம் பிறக்கணும்கிறதுக்காக. அவங்களோட வாழ்க்கைய காரணமில்லாத சித்ரவதையா மாத்தின அநீதிகரமான சமூக அமைப்பு அவங்க பிள்ளைங்க காலத்திலயாவது இல்லாம ஆகணும்கிறதுக்காக. இன்னைக்கு சுரண்டல் சக்திகளுக்ககிட்ட பேரம் பேச ஒரு மேஜையை உருவாக்கி வச்சிட்டு இதுதான் மார்க்ஸிசத்துக்க உச்சகட்ட சாதனைன்னு சொன்னோம்னா அவங்க பண்ணின தியாகங்களுக்கு என்ன அர்த்தம்? நாம ஒவ்வொருவருக்கும் அந்த ரத்தத்துக்குப் பதில் சொல்ற பொறுப்பு இருக்கு தோழர். அந்த ஆத்மாக்கள்...'' தன் குரல் இடறித் தழுதழுப்பதை உள்ளார்ந்த வியப்புடன் அருணாசலம் கண்டான். தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு ''நாம அவ்வளவு லகுவா விஷயங்களை முடிச்சுட முடியாது'' என்றான்.

''நீங்க ரொம்ப உணர்ச்சி வசப்படுறீங்க. உங்ககிட்ட தத்துவம் இல்லை.''

அருணாசலம் வெகுண்டான். ஆனால் பதிலளிக்க முடியவில்லை.

''உணர்ச்சி நல்லதுதான். மூளைக்குத் தெரியாத விஷயங்களை அதுதான் நமக்கு காட்டும். ஆனா அது சென்டிமெண்டா ஆனா எல்லாத்தயும் மறச்சிடும். நீங்க நம்ம பழைய தோழர்களை மாதிரி. வெளிப் பார்வைக்கு கரடுமுரடானவங்களா, உறுதியானவங்களா இருப்பாங்க. உள்ளூர மென்மையானவங்களா இருப்பாங்க.''

''நான் கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லலை.''

''இழப்புகளைப் பத்தியா? அப்படிப் பாத்தா இப்ப பூமியில வாழுற ஒவ்வொரு மனிதனும் எத்தனை பலிகளுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும்னு யோசிச்சுப் பாருங்க. குடும்பம்ங்கிற அமைப்பு உருவாகிறதுக்கு, தேசம்ங்கிற அமைப்பு உருவாகிறதுக்கு, சட்டம்ங்கிற அமைப்பு உருவாகிறதுக்கு எத்தனை கோடிப்பேர் வரலாற்றிலே சாக வேண்டியிருந்தது! ரோம சாம்ராஜ்யம் மட்டும் எத்தனை கோடி மனித உயிர்களை சாப்பிட்டிருக்கும். இஸ்லாம் எத்தனை நூற்றாண்டுகளுக்கு உலகம் முழுக்க ரத்த வெள்ளத்தை உண்டு பண்ணியிருக்கு. கிறிஸ்தவம் நிலைபெற எத்தனை கோடிப் பலிகளும் தியாகங்களும் தேவையாகியிருக்கு. நம்ப சனாதன தர்மம் 'போர் புரிக பார்த்தா' அப்டீன்னு மூவாயிரம் வருஷமா அறைகூவின தர்மம். ஆனா மனித நாகரிக வரலாற்றில் இந்த சாம்ராஜ்யங்களுக்குப் பெரிய பங்களிப்பு இருக்கு. இந்த மதங்கள் இல்லைன்னா மனிதன் இன்னைக்குள்ள மாதிரி பண்பட்டவனா ஒரு நாளும் ஆகியிருக்க மாட்டான்.''

''நீங்க பேசறது ஏதோ கணக்கு வழக்கு மாதிரி இருக்கு.''

''ஸ்டாலின் சொன்னது மாதிரி ஒரு மனிதர் செத்தா அது துக்கம். ஒரு கோடி பேர் செத்தா அது புள்ளி விவரம். உண்மைதான் தோழர், ஒரு கோடி

துக்கம்னு அதை பிரிச்சுப் பாக்க ஆரம்பிச்சா இந்த பூமி துக்கம் தாளாம வெடிச்சிடும்.''

''ஆனா மனித உயிர்கள்...''

''ஆமா மனித உயிர்கள்தான். மார்க்ஸியம் பலகோடி உயிர்களை பலி வாங்கியிருக்கு. மறுக்கலை. ஆனா பலி வாங்காத சிந்தாந்தம் உண்டா? நிறுவப்பட்ட எந்த ஒரு சித்தாந்தமும் அடுத்த கணம் முதல் உயிர்பலி கேட்கிற புராதன போர்தேவதையா ஆயிடுது. மனிதாபிமானத்துக்காக, உலகளாவிய அன்புக்காக, முடிவில்லாத கருணைக்காகக்கூட உலக வரலாற்றில பெரும் போர்கள் நடந்து மனிதக் கூட்டங்கள் செத்து அழிஞ்சிருக்கு. எந்த ஒரு மூல நூலையும் எடுத்துக்கிடுங்க -- குரான், பைபிள், கீதை அதில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஆயிரம் பேராவது செத்திருப்பாங்க. குர்ஆனையும் மூலதனத்தையும் எடுத்துப் பாத்து எந்த புஸ்தகத்தில மரணபாவத்தோட கனம் குறைவுன்னு பாத்தா மூலதனம் காத்து மாதிரி இருக்கும்னு தோணுது. இப்ப மூலதனம் பசியடங்கியாச்சு. குர்ஆனுக்கு இன்னும் ஒரு நூற்றாண்டுக்காவது ரத்ததாகம் தணியாது. ஒரு நூலும் இதுக்கு விதிவிலக்கு இல்லை தோழர். கருணையே உருவான புத்த பெருமானின் தம்மபதம் கூட.''

அருணாசலம் பெருமூச்சு விட்டான். எழுந்து அறைக்குள் ஒருமுறை நடந்தான். மனம் பெரிய கல்குண்டுபோல கனத்தது. இறக்கி வைக்க முடியாத பாரம். ஏதாவது பேச வேண்டும். பேசாதபோது மனதை அணுவணுவாக சுமக்க வேண்டியுள்ளது. பேச்சு மனதை ஒலியாலான ஒரு திரையால் மூடிவிடுகிறது. ''மார்க்ஸியம் தோத்துப் போச்சுன்னு எதிரிகள் சொல்லிக் கேட்கிறப்ப மனசில ஒரு வீம்பும் தைரியமும் வரும். ஆனா இப்ப நீங்க சொல்றப்ப...''

''மனதைத் தொட்டுச் சொல்லுங்க, மார்க்ஸ் சொன்ன கம்யூனிச சமூகம் அமையும்கிற நம்பிக்கை இப்ப உங்களுக்கு உண்டா?''

''அமையணும்.''

''அதில்லை, உங்களுக்கு உள்ளூர நம்பிக்கை உண்டா?''

அருணாசலம் கண்களைத் தாழ்த்திக்கொண்டான்.

''எனக்கு இல்லை. யாருக்கும் இல்லை. கெ.கெ.எம். மாதிரி பழைய ஆட்களுக்கும் இல்லைன்னு என்னால உறுதியாச் சொல்ல முடியும்.''

அருணாசலம் பெருமூச்சுவிட்டான். மனதை மூச்சாக ஊதிஊதி வெளியே தள்ள விரும்புகிறவன்போல மீண்டும் பெருமூச்சுவிட்டான். தலையை கைகளில் தாங்கிக்கொண்டு ஆஷ் டிரேயை சம்பந்தமின்றி வெறித்துப் பார்த்தான். வெளியேயிருந்து மாசிலாமணி உள்ளே வந்தார். ''முடிச்சாச்சா மணி எட்டரை'' என்றார்.

''புறப்படறேன் தோழர். பத்து மணிக்குக் கொடி ஏற்றம்'' என்றான் அருணாசலம்.

''பாத்திங்களா? எல்லாம் ஒரு கோவில் திருவிழாவோட சடங்குகளோடத்தான் நடக்கிறது. கொடியேற்றம், தேரோட்டம், மந்திரங்கள்'' என்றான் கதிர்.

மாசிலாமணி சிரித்தார்.

அருணாசலம் விடைபெற்றுப் படியிறங்கித் தெருவுக்கு வந்தான். புதுக்காற்று உடம்புமீது பட்டது. தெரு ஒழுங்கற்ற இரைச்சலாக இருந்தது. அவனுக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது. சித்தாந்தங்களின் இரும்புத்தனமான ஒழுங்கு இல்லாததும், உயிர்த் துடிப்பானதும், ஒழுங்கற்ற சலனம் நிரம்பியதுமான தெரு. இதில் நானும் கரைந்துவிட வேண்டும். சற்றும் சிந்தனையின்றி ஆகிவிட வேண்டும். சித்தாந்தங்கள் பயமுறுத்துகின்றன என்னை. அவை சதுர அறைகளில் சதுரத் தாள்களில் உருவாக்கப்படுகின்றன. வானத்தின் முடிவின்மைக்கு கீழே வடிவமற்ற மலைகளும், ஒழுங்கற்ற நகரங்களுமாக கலாச்சாரம் உயிர்கொண்டு இயங்குகிறது. எதை நான் தேர்வு செய்ய வேண்டும்? இதைத்தான். இந்தத் தெருவை, இந்தப் புழுதியை, இந்தச் சாக்கடையை, முட்டி மோதும் மனிதர்களை, ஓலமிடும் வாகனங்களை. ஆம், இங்குதான் நான் இயல்பாக இருக்க முடிகிறது. இந்தத் தெருவில். அப்பாடா, எத்தனை ஆறுதல். அறைகளுக்குள் பதைத்த எலிபோல என் பிரக்ஞை சுவர்களை முட்டி முட்டி ஓடுகிறது. ஆனால் எப்போது வேண்டுமானாலும் வாசலைத் திறந்து வெளியே, புதிய காற்று வீசும் இந்தத் தெருவுக்கு நான் இறங்கிவிட முடியும். அறையின் அனைத்துப் புழுக்கங்களையும் உலர வைத்துவிட முடியும். அருணாசலம் மெல்ல அமைதியடைந்தான். நிதானமாக நடந்தான். மார்க்ஸியமும் எதிர் மார்க்ஸியமும் சித்தாந்தங்கள். இரண்டும் இரண்டு குருட்டு யானைகள். மத்தகங்களால் அவை மோதிக் கொள்கின்றன என்று பட்டது. அந்த சிந்தனையை அவன் ஒருபோதும் எவரிடமும் கூறப் போவதில்லை. நாகம்மையிடம்கூட. ஆனால் அது அவனுக்கு அந்தரங்கமாக உறுதியாகிவிட்ட உண்மை. அவனுக்கு ஏனோ சிறிது மகிழ்ச்சி ஏற்பட்டது. சந்தடி நிரம்பிய டீக்கடையொன்றில் நுழைந்து பிசுக்குப்படர்ந்த பெஞ்சில் அமர்ந்து ஒரு டீக்கு உத்தரவிட்டான்.

5

"எங்கே போயிருந்திங்க?" என்றபடி நாராயணன் எதிரே வந்தான்.

"ஏன்?" என்றான் அருணாசலம்.

"தில்லை வந்திருக்கார்."

"மாசிலாமணியைப் பார்க்கப் போயிருந்தேன்."

"கூடவே ஒரு பையன் வருவானே, அறிவுஜீவி. அவன் உண்டா?"

"கதிர்?"

"ஆமா, அவனுக்கு மார்க்ஸ் ரேஞ்சில யோசிக்கிறதா நினைப்பு."

அருணாசலம் புன்னகைத்தான். நாராயணனைப் போன்றவர்கள் எப்போதும் கதிர் போன்றவர்களை அஞ்சுவார்கள், அந்தரங்கமாக வெறுப்பார்கள். ஆகவே கதிர் போன்றவர்களால் நுட்பமாக ஓர் எல்லைக்கோட்டுக்கு உள்ளே அடக்கி வைக்கப் படுவார்கள். ஒருபோதும் நாராயணன் உண்மையான அதிகாரத்தை அடைய அனுமதிக்கப்பட மாட்டான். உண்மையான அதிகாரம் கதிர் போன்றவர்களிடம்தான் இருக்கும். அவர்களுடைய திட்டங்களுக்கு ஏற்ப நடைமுறையில் தலைகளைத் திரட்டும் பணி மட்டுமே நாராயணனுக்குக் கிடைக்கும்.

"மாசிலாவுக்கப் பேச்சயெல்லாம் கதிர்தான் எழுதித் தாறதாப் பேச்சு" என்றான் நாராயணன்.

"ஆமா, அதில என்ன தப்பு?"

"அவன்தான் உள்ள இருக்கிற மிஷின்."

"ஆமா, மாசிலாவுக்குக் கதிர் வேணும். கதிருக்கு மாசிலா வேணும். மாசிலாவோட தலைமுறையைச் சேந்தவுங்க புதிய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாற முடியலை. கதிரோட உதவியால் மாசிலா சுலபமா மத்தவங்களைத் தாண்டி முன்னால போயிட்டார். கதிருக்குத் தொழிலாளிகளை ஒருங்கிணைக்கவோ அமைப்புகளை உண்டு பண்ணி நிர்வாகம் பண்ணவோ முடியாது. அதுக்கு அவனுக்கும் மாசிலா மாதிரி ஒருத்தர் வேணும்."

"மாசிலா குதிரை. அந்தப் பயல்தான் பிரயாணம் பண்றான்."

''உண்மைதான். ஏதோ ஒரு இடத்தில அவன் இன்னும் பெரிய குதிரை மேலே ஏறிடுவான். அவன் ரொம்ப முக்கியமான ஆளு. ஒரு நாளைக்கு இந்தியாவையே அவன் கட்டுப்படுத்தினால்கூட ஆச்சரியமில்லை.''

அலுவலக அறையில் ஏழெட்டு தொலைபேசிச் செய்திகள் குறிப்புகளாக இருந்தன. அருணாசலம் ஒவ்வொன்றாக டைரியில் குறித்துக் கொண்டான். தொலைபேசியில் ஒவ்வொருவராகப் பேசி வரவேற்பும் குசலமும் கூறினான். எபனேசர் உள்ளே வந்து ''வணக்கம் தோழர்'' என்றான்.

''என்ன எபி?''

''கெ.கெ.எம். ஒரு பிரச்சினை பண்ணிட்டாரு.''

''என்ன?''

''விடிகாலைல பொறவாசல் பக்கமாட்டுப் போனவர் விறகுக் குவியலைப் பார்த்துட்டார். ரப்பர் விறகாச்சே எப்படி வந்ததுண்ணு கேட்டார். தமிழ்நாடு அரசு தோட்டத்திலயிருந்து கிளைத் தோழர்கள் நன்கொடையாட்டு குடுத்ததுண்ணு சொன்னோம். பணம் குடுத்தியளா, ரசீது இருக்கா அப்டீன்னு கேட்டார். காய்ஞ்சு கிடந்த மரம்தானேன்னு சொன்னோம். அனுமதிக் கடிதம் இருக்கான்னார். இல்லைன்னோம். கோபத்தில வாய்க்கு வந்தது மாதிரி பேசிட்டார்.''

''என்னன்னு?''

''திருட்டுப் பயல்கள்னு.''

''ஓகோ.''

''ரொம்பக் கஷ்டமாப் போயிட்டுது தோழர். பலருக்கு ரொம்ப மனவருத்தம். மாநாட்டில இதைப்பத்திப் பேசப் போறதா வேறு கெ.கெ.எம். சொன்னார்.''

''பாப்பம். நீங்க போங்க.''

''கெ.கெ.எம். போற போக்கு சரியில்ல தோழர்.''

''சரி பாப்பம்'' என்றான் அருணாசலம். தோழர்கள் சந்தேகமாகக் கலைந்தனர். மேலும் சில ஃபோன்கள் பேசியபிறகு அவன் கட்டிட முகப்புக்கு வந்தான். அங்கு தொழிலாளர்கள் கூடி நின்றிருந்தனர். கொடிக் கம்பம் நாட்டப்பட்டிருந்தது. நிறையத் தொழிலாளர்கள் வெயிலில் கண்களைக் கூசவைக்கும் செஞ்சட்டை அணிந்திருந்தனர். பலர் அவற்றை சுருட்டி எங்கோ பலகாலமாக வைத்திருந்து, அவசரமாக எடுத்தணிந்ததன் வாசனையும் சுருக்கங்களும் இருந்தன. எங்கும் கசகசவென்று பேச்சொலி களாக இருந்தன. கார் வந்து நிற்க மாசிலாமணியும் கதிரும் வந்தனர். கூட்டமே அவர்களை நோக்கித் திரும்பியது. அனேகமாக அனைவரும் வரவேற்றுச் சிரித்தனர்.

மாசிலாமணி ''தோழர் கெ.கெ.எம். எங்கே?'' என்றார்.

''வாறார்.''

விருந்தினர் ஒவ்வொருவராக வந்தனர். கெ.கெ.எம். ஒரு இளம் தொழிலாளரின் உதவியுடன் வந்தார். புதிய கதர் ஜிப்பாவும் ஈரமான நரைத்த தலையும் ஒரே நிறத்தில் இருந்தன. முகச் சவரத்தில் விடுபட்ட பகுதிகள் மோவாயிலும் மீசைப் பகுதியிலும் நுரை போல ஒட்டியிருந்தன. முகத்தில் ஒரு விசித்திரமான தீவிரம் இருந்தது. கெ.கெ.எம். கொடி மரத்தருகே வந்ததும் அனைவரும் வழிவிட்டு விலகினர். ஒரு தொழிலாளி அவரை சரியாக இடம்விட்டு நிற்கவைத்தார்.

அருணாசலம் நாராயணனைப் பார்த்து ரகசியமாகத் தலையசைத்துவிட்டு முன்னகர்ந்து கெ.கெ.எம். அருகே நின்றான். உரத்த குரலில் ''தோழர்களுக்குப் புரட்சி வணக்கங்கள்'' என்றான். பேச்சொலிகள் அடங்கின. கவனம் ஏற்பட்டது. ''இது தமிழக ரப்பர் தோட்டத் தொழிலாளர் சங்க நாற்பத்தெட்டாவது மாநில மாநாட்டுத் துவக்க விழா. இந்த மகத்தான தினத்தின் முதல் நிகழ்ச்சியாக நமது புரட்சிப் பதாகையை நமது சங்கத்தின் நிறுவனரும் பொதுச்செயலருமான தோழர் கெ.கெ.எம் ஏற்றி வைத்து உரையாற்றுவார்கள். தொடர்ந்து மாநாட்டை பஞ்சாலைத் தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச் செயலரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பொது வுடைமையின் மத்தியக் குழு உறுப்பினருமான தோழர் மாசிலாமணி துவக்கி வைத்து பேருரையாற்றுவார்கள். மதியம் வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விவாதித்து நிறைவேற்றப்படும். பிறகு சங்கத்தின் செயல்பாடுகள், இனிவரும் ஆண்டுக்கான திட்டங்கள் விவாதிக்கப்படும். இறுதியில் சங்கத் தேர்தல் நிகழ்த்தப் பெறும்.

''தோழர்களே, சிகாகோவின் தெருக்களில் விழுந்த உதிரத்திலிருந்து மலர்ந்தெழுந்த தூயமலர் இந்தச் செங்கொடி. இன்று இந்த நெருப்புமலர்தன் ஒற்றையிதழ் விரித்துச் சிரிக்காத மூலையேதும் உலகில் இல்லை. அது வாடி உதிரும் என ஏகாதிபத்தியம் அதன் முதல் புலரிமுதல் இன்றுவரை கனவு காண்கிறது. ஆனால் அது நெருப்புமலர். முதலாளித்துவக் குப்பைகளே இதன் உணவு. வைக்கோற்போரால் நெருப்பை மூடிவிட முயல்கிறது ஏகாதிபத்தியம். வரலாறு திரும்ப ஆரம்பித்துவிட்டது தோழர்களே. போலந்தில், ருமேனியாவில், ஏன் சிதறிய சோவியத் ரஷ்யக் குடியரசுகளில் கூட இன்று கம்யூனிஸப் பேரியக்கம் மீண்டும் புதிய சக்தியுடன் எழுந்து நின்றுவிட்டிருக்கிறது. இளமையுடன், புது வலிமையுடன் சமூக அநீதிகளுக்கு எதிரான தன் நூறாண்டுகால அறைகூவலை அது மீண்டும் எழுப்புகிறது.''

கைதட்டலுக்கு இடைவெளிவிட்டு அருணாசலம் தொடர்ந்தான். ''செங்கொடிக்குத் தோல்வியில்லை. தோற்றுவிட்டதெனில் தர்மம் தோற்றுவிட்டது என்று பொருள். மனிதாபிமானம் தோற்றுவிட்டது என்று பொருள். அன்பு, கருணை, நீதி, சமத்துவம், மனிதாபிமானம் என்ற எந்த

சொற்களுக்கும் இனி அர்த்தமில்லை என்று பொருள். செங்கொடி இறங்கிவிட்டதெனக் கூத்தாடுபவர்கள் இனி சூதுக்கே காலமென குதூகலிக்கும் சகுனிகள், துச்சாதனர்கள்! ஆனால் தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும் என அறைகூவுகிறது வரலாறு. அவர்கள் மார்பைப் பிளந்து உதிரம் குடிக்கப் பொங்கி எழுகிறது புதிய தலைமுறை, தோழர்களே.''

நீண்ட கைதட்டலுக்குப் பிறகு அதே ஆவேசம் குறையாது அருணாசலம் தொடர்ந்தான். ''இதோ செங்கொடியை ஏற்றுகிறோம். எம் வேள்விக்கூடம் மீது ஏறுதே தீ என்று ஆர்ப்பரிக்கிறோம். முதலாளித்துவத்தின் மட்கிய பெருங்காட்டில் இவ்வக்கினிக் குஞ்சை வைக்கிறோம். வெந்து தணியட்டும் அக்காடு. நெருப்புக்குக் களங்கமில்லை தோழர்களே. மண்ணில் முளைத்து விண்ணைத் தொடும் வல்லமை அது. அதை மலினப்படுத்தக் கூடிய எதுவும் இப்பிரபஞ்சத்தில் இல்லை. ஆர்ப்பரிக்கும் வீணர்களுக்குச் சொல்கிறோம் தொடாதீர் சுட்டுவிடும்.''

கைதட்டல் ஓய்ந்ததும் அருணாசலம் ஆவேசமாகக் கூவினான். ''நெருப்புக் கொடி, உதிரக் கொடி, தியாகக் கொடி, வீரச் செங்கொடி நம் அனைவரின் இதயங்களிலுமிருந்து இதோ புறப்படுகிறது. இதோ வானில் பறந்தேறுகிறது. அது வெல்க! அதன்கீழ் புத்தம்புதிய சமத்துவ சுதந்திரப் பொன்னுலகு பொலிக! இன்குலாப் சிந்தாபாத், இன்குலாப் சிந்தாபாத்! இன்குலாப் இன்குலாப் இன்குலாப் சிந்தாபாத்'' கோஷங்கள் எழுந்து காற்றை உலுக்கின.

கெ.கெ.எம். தடுமாறியபடி முன்னகர்ந்தார். அவர் உதடுகள் நடுங்கியபடி அழுந்தியிருந்தன. கைகள் வெடவெடத்தன. ஒரு தொழிலாளி கொடியை அவிழ்த்து, கயிறை அவரிடம் தந்தார். நடுங்கும் விரல்களால் கெ.கெ.எம். கயிறை இழுத்தார். அது உயர்ந்ததும் அண்ணாந்தார். அவர் முகம் நடுங்கியது. கண்ணாடி வெயிலில் சுடர்விட, முகம் எரிவது போலிருந்தது. யாரோ மெல்ல ''இழுங்கள் தோழர்'' என்றார். இழுத்தபோது கொடி மலர்ந்து செவ்விதழ்கள் கொட்டின. கொடி உயிர்பெற்று மெல்ல படபடத்தது. கெ.கெ.எம். தன்னை மறந்து மேலே பார்த்தபடியிருந்தார்.

''பேசுங்கள் தோழர்'' என்றான் அருணாசலம்.

''ஏங்?'' என்று கெ.கெ.எம். பதறித் திரும்பினார்.

''பேசுங்க.''

''என்னது?''

''கொடியேத்தி பேசணுமே, பேசுங்க.''

''ஆங்.. ஆ'' என்று கெ.கெ.எம். மெதுவாக நிதானமடைந்தார் கண்ணாடியைச் சரி செய்தார். ''தோழர்களே'' என்று கிழக்குரலில் அழைத்தார். அந்த ஒற்றைச் சொல்லில்கூட மலையாள வாசம் இருந்தது.

''இன்னைக்கு இங்க நம்ம மாநாடு... நம்ம தொழிலாளிகளுக்க மாநில மாநாடு...'' என்று குரல் கரகரத்தார். பேச முடியாது சிறிது நேரம் நின்றார். கூட்டம் தர்மசங்கடமான அமைதியுடன் காத்து நின்றது. ''தோழர்களே'' என்றார் கெ.கெ.எம். சட்டென்று வந்த உத்வேகத்துடன். ''காட்டுப் பொத்தைண்ணு ஒரு ஊரு. சிற்றாறு அணைக்கு அந்தப்பக்கம் இருக்கு. நாப்பத்திரண்டில அங்க ஒரு சின்ன குன்று மேலே நான் இதேமாதிரி செங்கொடியை ஏத்தினேன். அந்தக் கொடியை மடக்கி கோமணமா கட்டிக்கிட்டு அறுபது மைல் நடந்து அங்க கொண்டு வந்தேன். வழியில எட்டு இடத்தில போலீசு பரிசோதனை. கொடி மரத்தை காட்டு மூங்கில வெட்டி நானே நட்டேன். தனியா நிண்ணு கொடியேத்தி லால்சலாம் சொன்னேன். சிந்தாபாத் போட்டேன். ஒரு பார்லாங் தள்ளி நின்று நாலு தொழிலாளிய அதைப் பாத்தாங்க. நல்ல காத்து அடிக்குத குன்று. கொடி படபடன்னு சிறகடிச்சது. முளங்கம்பு அந்த வேகத்தில திணறித் திணறி ஆடுது. என் மனசும் உடம்பும் மாதிரின்னு பட்டது. இறங்கி வந்து அங்கயிருந்த சுக்குக் காப்பிக் கடையில ஏறி சாயா கேட்டேன். சாயிப்பே உள்ள வராதிய, எங்க மொதலாளி கொண்ணு போடுவார்னு கடைக்காரன் அழுதுகிட்டு வந்து காலில விழுந்தான். அவனுக்க பெண்ணும் பிள்ளையளும் அழுது அலமுறையிட்டாங்க. எனக்க கையில வெறும் எட்டணாதான். நாலு நாள் நடந்த கொடும்பசி உண்டு. ஒருவாய்த் தண்ணி தர அங்க யாருக்கும் தைரியம் இல்லை. காரைக்கா பறிச்சு திண்ணுட்டு ஓடைத்தண்ணி குடிச்சிட்டு ஒரு பாறை மேலே ஏறிப் படுத்தேன். அப்ப ஒரு புலயப் பெண்ணு வந்து சொன்னா, சகாவே ஓடிப் போகணும்; உங்களை கொல்லத் திட்டம் போடுதாங்க எண்ணு. ராத்திரியோட ராத்திரியா மலையிறங்கினேன். அந்தக் கொடியைப் பிடுங்கி எறிஞ்சு அந்தக் குன்றுமேல ஒரு குட்டை பீயக்கொண்டுபோய் தட்டி வச்சாவ முதலாளிக்க குண்டாமார். ஆனா நான் மலையிறங்கும்பம் நெறைஞ்ச மனசோட இறங்கினேன். அந்த புலயப்பெண் அந்த மலைக்க மனசாட்சி மாதிரி. அவ என்ன நெனைக்கிறாளோ அதை நாளை அந்த மலை நினைக்கும். அது எனக்க அனுபவம்.'' கெ.கெ.எம். மூச்சு வாங்கினார். கூட்டம் காத்து நின்றது.

''இப்பம் நம்ம சங்கம் வளந்து போச்சு. ஆனா...'' கெ.கெ.எம். திணறினார். ''நம்ம கொடி வளர்ந்த கதை இது. இந்தக் கொடியைப் பாக்கும்பம் நாம நம்ம அப்பா அம்மா செய்த தியாகங்களை நினைக்கணும். இடியும் அடியும் கொண்டு ரத்தம் கக்கிச் செத்தவங்க, வெட்டுப் புதைக்கப்பட்டவங்க, ஜெயிலில் கிடந்து செத்தவங்க, மலைச் சரிவிலயும் காட்டாறிலயும் தூக்கி வீசப்பட்டவங்க எத்தனை ஆயிரம்! எல்லாம் இந்த கொடிக்காக. அதை நாம மறக்கப்பிடாது. மறந்தா...'' கெ.கெ.எம். கை விரித்தார். சொற்களின்றித் திணறிப் பிறகு கையை முஷ்டி சுருட்டி ''இன்குலாப்'' என்றார்.

''சிந்தாபாத்'' என்று ஆங்காங்கே குரல்கள் எழுந்தன.

நாராயணன் முன்னகர்ந்து, ''இன்குலாப் சிந்தாபாத்'' என்ற உரத்த குரலில் கூவினான்.

''இன்குலாப் சிந்தாபாத்'' என்று கூட்டம் பிளிறியது.

பறக்கட்டும் பறக்கட்டும்
தீரச் செங்கொடி பறக்கட்டும்
பறக்கட்டும் பறக்கட்டும்
வீரச் செங்கொடி பறக்கட்டும்.

கோஷமிட்டபடி கூட்டம் மாநாட்டுத் திடல் நோக்கி நகர்ந்தது.

ஓங்கி உயர்ந்தொரு செங்கோட்டை!
வானம் முட்டும் செங்கோட்டை!
செங்கோட்டையிலே பறக்குதுபார்!
ரத்தச் செங்கொடி பறக்குது பார்!
செங்கொடி பறக்கும் தோழர்களே!
செங்கொடி பறக்கும் தோழர்களே!
டில்லிக் கோட்டை உச்சியிலே,
செங்கொடி செங்கொடி செங்கொடி,
செங்கொடி பறக்கும் தோழர்களே!

◆

6

கே.கே.எம்மின் தீர்மானத்தின் நகலை அருணாசலம் இரண்டாக மடித்து ஒரு தொண்டரைக் கூப்பிட்டு அவரிடமே திருப்பித் தந்துவிடும்படிச் சொன்னான். கே.கே.எம். சுருக்கமான யதார்த்தமான மொழியில் அதை எழுதியிருந்தார். தொழிலாளிகளுக்கு ஒரு கட்டுப்பாட்டு முன்வரைவு தேவை. அவ்விதி முறைகளை மீறும் தொழிலாளிமீது சங்கமே ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளிகளின் உரிமைக்காகப் போராடும் அதே சமயம் தொழிலாளிகள் தங்கள் கடமைகளைச் செய்கிறார்களா என்று கண்காணிக்கும் கவனமும் சங்கத் தலைமைக்குத் தேவை.

அருணாசலம் கே.கே.எம்மைப் பார்த்தான். மாசிலாமணியுடன் ஒரே மேடையில் அமர்ந்திருப்பது அவருக்கு மிகுந்த மனத் தொந்தரவைத் தருகிறது என்று ஊகித்தான். கால்மேல் கால் போட்டபடி மோவாயைச் சற்றுத் தூக்கி, வாயை மெல்வதுபோல அசைத்தபடி அமர்ந்திருந்தார். அவரது தீர்மானம் அரங்கில் வலம் வருகிறது என்ற பிரக்ஞையின் விளைவாக உருவான விரைப்பு அது. மேடையில் மெல்லிய புன்னகை பரவுவதை அவர் அறியவில்லை. தன் ஒவ்வொரு சொல்லும் வேதவாக்காக இருந்த காலகட்டத்தின் ஞாபகத்தில் அவர் வாழ்கிறார் போலும். அவனுக்குக் குற்ற உணர்வும் பரிதாபமும் ஏற்பட்டது.

அருணாசலம் எழுந்து வெளியே நடந்தான். புதிய காற்று வழக்கம்போல சற்று நிம்மதி தந்தது. விவாதங்களில் அவன் கலந்து கொள்ளாமலிருப்பதே எல்லா வகையிலும் நல்லது என்று பட்டது. இந்த விவகாரத்தை அவன்தான் நடத்துகிறான் என்று சிலருக்காவது ஐயம் வரக்கூடும். தீர்மானம் முன்வைக்கப்பட்டதுமே நாராயணன் எழுந்து கடுமையாக எதிர்ப்பான். அதை வாபஸ் பெறும்படி 'கண்ணீருடன்' மன்றாடுவான். அது தொழிலாளி வர்க்கத்தின்மீது அவதூறு வாரியிறைப்பதும், சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் கற்பிப்பதும் ஆகும் என்பான். மாற்றுச் சங்கங்களும் முதலாளிகளும் அதை ஓர் ஆயுதமாக மிக மோசமான முறையில் பயன்படுத்திக் கொள்

வார்கள். அப்பாவித் தொழிலாளர்களைப் பாதுகாப்பின்றி முதலாளிகளின் கொடுங்கோன்மைக்கு விட் டுவிட வே அது வழிவகுக்கும். கெ.கெ.எம்மால் வாதிட முடியாது. மூர்க்கமாக மறுப்பார். அது தொழிலாளர்களைக் கோபமுறச் செய்யும். தீர்மானம் தோல்வியுறும். அது கெ.கெ.எம்மை வீழ்த்தும் முதல் அடி.

கொல்லையில் கோட்டையடுப்புகள் எரிந்துகொண்டிருந்தன. மதிய உணவுக்கு பிரதமனும், போளியும், வடையும் உண்டு. பிரதமன் வார்ப்பில் கொதித்துக் குறுகிக்கொண்டிருந்தது. நெய்யும் வெல்லமும் தேங்காய்ப் பாலும் சேர்ந்து கொதிக்கும் மணம். அருணாசலம் அதைப் பார்த்தபடி நின்றான்.

ரவீந்திரன் வந்து ''வாங்க தோழர்'' என்றான்.

''சும்மா வந்தேன்பா.''

''பிரதமன் சாப்பிடறீங்களா?''

''ஆச்சா?''

''அவ்வளவுதான். தோழர், ஒரு டம்ளர் பிரதமன் எடு தோழருக்கு.''

பிரதமன் சுவையாக இருந்தது. அருணாசலம் திண்ணைமீது அமர்ந்து கொண்டான். ரவீந்திரன், ''கடைவரை போயிட்டு வாறேன் தோழர். பத்து கட்டு அப்பளம் அதிகம் வேணும்'' என்றான்.

''போயிட்டு வா. நான் சும்மா கொஞ்ச நேரம் உக்காந்திருக்கேன்.''

''பிரதமன் எப்பிடி சகாவே?'' என்றார் தலைமைச் சமையற்காரர். மின்னும் சிறு கண்களும், ஆழமாகக் குழிவிழுந்த கன்னங்களும், குடுமியும் கொண்ட திடகாத்திரமான கிழவர். கையிலிருந்த பேனாக்கத்தி யந்திர நுட்பத்துடன் அசைய, பச்சை மிளகாய் சிறு துண்டுகளாகக் குவிந்து கொண்டிருந்தது.

''நல்லாயிருக்கு'' என்றான் அருணாசலம்.

''எல்லா சம்மேளனத்திற்கும் நான்தான் அரிவயப்பு. கோபாலகிருஷ்ணன் சாரும், அற்புதம் சாரும் என்னைத்தான் கூப்பிடுவா. செங்கொடி ஒரு மண்டபத்தில பறந்தா அங்க அய்யப்பன்பிள்ளைக்க அரிவய்ப்பும் உண்டு எண்ணு சொல்லுவாவ.''

''எத்தனை வருஷமா சமைக்கிறிய?''

''அது ஆச்சு பத்து நாப்பது வருஷம். அம்பத்தாறில எம்ஜி தோட்டத்தில டாப்பர் வேல பாத்தன். போராட்டம் நடந்து வேலை போச்சு. எல்லாரும் கூலி வேலைக்குப் போனாங்க. நான் சமையல் கையாளாட்டுப் போனேன். சொந்தமா செய்த முதல் சமையல் போராட்டத் தொழிலாளிகளுக்கு கஞ்சித் தொட்டி காய்ச்சினது. இப்ப முழுநேரம் சமையல். இதில் சுகம்

கண்டுபோட்டேன் சகாவே. நாலு மக்களுக்கும் இதுதான் தொழில். ஒரு குறையும் இல்லை.''

''அதுசரி, நீங்க நம்ம ஆளாக்கும்.''

''நல்ல கதை, கெ.கெ.எம். சங்கம் தொடங்கினப்ப முதலில சேந்தது எட்டு பேர். அதில் ஒருத்தன் நான். இப்பம் நானும் கெ.கெ.எம்மும் மட்டும்தான் மிச்சம். வீரபத்ரபிள்ளை வலங்கை, நான் எடங்கை அப்பிடின்னு அந்த காலத்தில சொல்லுவாவ.''

அருணாசலத்தின் மூளை உசும்பிக்கொண்டது. ''என்ன பேரு சொன்னீய?''

''வீரபத்ரபிள்ளை. பிஏக்காரன், பேச்சு குறைவு. ஆனா அசாத்தியப் படிப்பாளியாக்கும். பாவம் வம்பாப் போனான்.''

''அவர் புஸ்தகம் எழுதியிட்டுண்டா?''

''ஆமா, பனயப்பத்தி கொற கதைகள். பனை என்ன செய்யும் தெரியுமாண்ணு ஒரு புஸ்தகம்...''

''நம்ம சங்கத்திலயா இருந்தாரு?''

''ஆமா, அது வருஷம் குறெ ஆச்ச. எல்லாரும் ஆளை மறந்துப போட்டாவ.''

அருணாசலம் பரபரப்பை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். ''வீரபத்ரபிள்ளை நம்ம கட்சியில எதுவரை இருந்தார்னு தெரியுமா?''

''என்ன ஒரு பத்துவருஷம் இருந்திருப்பான். அவனுக்கும் ஆறுமுகம்பிள்ளை சகாவுக்கும் ஒத்துவரேல்ல. ஆறுமுகம்பிள்ளைக்கு எதிராட்டு பிரசங்கங்கள் செய்தான். பிறகு சொந்தமாட்டு ஒரு கட்சி தொடங்கினான். நமக்கு அதுபற்றி வலிய விவரம் இல்லை. ஒரு நாளைக்கு எனக்க கிட்டவந்து அய்யப்பன்பிள்ளே நீ நம்ம கட்சிக்கு வா என்ஜு கூப்பிட்டான். அவனுக்க கட்சி கம்யூனிஸ்டு கட்சியவிட பழைய கட்சின்னு சொன்னான். எம்.என்.ராஜு வுக்க கட்சி.''

''எம்.என். ராய்? ராடிகல் ஹியூமனிஸ்ட் கட்சி?''

''ஆமா, அந்த எளவுதான்.''

''பிறகு?''

''நான் சொல்லிப் போட்டேன். இந்த பாரும் வீரபத்ரபிள்ளே, உம்ம புஸ்தகம் படிப்ப வச்சுக்கிட்டு நீரு ஆறுமுகம்பிள்ளைகிட்ட மயித்த முடியாது. அவரு சி.பி.ராமசாமி அய்யருகிட்ட விளையாடி பார்ட்டியாக்கும். சி.பி அய்யருன்னா சாமானியப்பட்ட ஆளா? புத்திராட்சசன்லா? அவரு பேரைச் சொன்னா மரமும் செடியும் பலருமே

இண்ணைக்கு மாதிரி கண்டதே கோலம்னா இருந்தது அவரு காலத்தில? அதிகாரிகள் அவரு உம்மிண்ணு சொன்னா திருவனந்தபுரத்துக்கு போயி குப்புற விழுந்து போடுவாங்க. அவ்வளவு பயம். அது போட்டு. நான் என்ன சொன்னேன்...? இவன் வீரபத்ரபிள்ளை... நான் சொன்னேன் வீரபத்ரபிள்ளைட்ட, ஓய் நீரு எங்கூட வாரும், ஆறுமுகம்பிள்ளையப் பாத்து மாப்புண்ணு ஒரு வார்த்தை சொல்லும், கட்சியில திரும்ப சேத்துக்கிட நான் சொல்லுதேன். கேக்கேல்ல. திமிரு. திமிருகூடிப் போயிதானே கட்சியில இருந்து தூக்கிப் போட்டாவ? இப்பம் நான் ஒண்ணு சொல்லட்டா, மனுஷ மனசில அகங்கார வெஷம் ஏறிப்போனா பிறகு மருந்து இல்ல.தானா பழுத்து எறங்கித் தணியணும் கேட்டுதா?''

''வீரபத்ரபிள்ளை என்ன சொன்னார்?''

''அவருக்கும் ஆறுமுகம் பிள்ளைக்கும் ஒத்தைக்கொத்தை பிரச்சினை ஒண்ணுமில்லை அப்படீண்ணாரு.''

''பின்ன?''

''ஸ்டாலினாக்கும் சண்டைக்குக் காரணம். சொன்னா சிரிப்பிய. ஸ்டாலின் அவனுக்க கூட்டுக்காரனை கொண்ணு போட்டாராம். அது தப்புண்ணு இவரு சொல்லுதாரு. அதெல்லாம் முதலாளிமாரு கெட்டின கதை, அப்படி ஒரு கூட்டுக்காரனே இல்லைண்ணு அவரு சொல்லுதாரு. சண்டை வந்து போட்டு. வல்லகாரியமுண்டா? நாம ஸ்டாலினையும் கண்டதில்லை. அவனுக்க கூட்டுக்காரனையும் கண்டதில்லை. தொழி லாளிக்கு கூலி கூட்டிக்குடுண்ணு கேக்குதோம். குடுக்கலைண்ணா சிந்தாபாத் அடிக்குதோம். இந்த மாதிரி வல்லடி வழக்குக்கு வல்ல காரியமும் உண்டா? நான் சொல்லேல்லியா அவுனுக்க மண்டைல அகங்காரம் கேறிப்போட்டு...'' நான் சொல்லேல்லியா அவுனுக்க மண்டைல அகங்காரம் கேறிப்போட்டு...''

''கட்சி தொடங்கினாரா?''

''எங்க? இவன் போனா ஆரு கூட போவா? இவன் பேசினா மனியனுக்கு மனசிலாவாது. ஆறுமுகம்பிள்ளை மத்த கட்சியில இருந்தவரு. ஜஸ்டிஸ் கட்சி. தமிளில நல்ல படிப்பு உண்டு. கம்பராமாயணம் முழுக்க காணாப்பாடம். எந்திரிச்சு நிண்ணு பேசினா கூட்டம் வெறச்சு நின்னு போடும். கடசீல அவருக்கும் கட்சியில கெதியில்லாமப் போச்சு. அதுவேற கதை. கம்யூனிஸ்டுன்னு சொன்னா விதிவிட்டுப் போடுமா?''

''ஆமாம்'' என்றான் அருணாசலம் .

''இந்தப்பெய விதியப் பாருங்க. சந்தைல அனாதையாட்டு செத்துக் கிடந்தான். கொறெ நாள் கட்சி தொடங்குதேன்னு பணம் பிரிச்சான். பிறவு குடி தொடங்கிட்டான். ரெண்டு ரூபா கிட்டினா சாராயம். அம்பது பைசா கிட்டினா அரிஷ்டம். சங்கதி உள்ள போனா பிரசங்கம் தொடங்கிடுவான். பெண்சாதி பிள்ளையத் தூக்கிட்டுப் போயிட்டா. செத்துக் கிடந்தப்ப தூக்க நாதியில்லை. முனிசிப்பாலிட்டியில்லா தூக்கிப் போட்டான். நான் பல

தடவை கண்டிட்டுண்டு. கடைசியா பாத்தப்ப ஆளு உடைஞ்சு போய் பிச்சக்காரக் கபோதி மாதிரி இருந்தான். மனசுகம் உள்ளதுபோல தோணல்ல. லால் சலாம் தோழரேன்னான். சொரிண்ணேன். புரட்சி வருதுண்ணான். ரொம்ப சந்தோஷம்ணேன். ஒரு ரூபா குடு கொண்டாடணும்னான். எட்டணாதான் இருந்தது. குடுத்தேன். பைசா கையில கிட்டினதும் திரும்பியே பாக்கேல்ல. ஒற்ற போக்கு. எல்லாத்தயும் ஆறுமுகம்பிள்ளைக்கிட்ட சொன்னேன். இஞ்சபாரு அய்யப்பம்பிள்ளே மனுஷனுக்கு அறிவுவேணும், ஆனா கூடிப் போயிடப்பிடாதுண்ணார். சத்தியமான வார்த்தை சகாவேண்ணு சொல்லிட்டு வந்தேன். அதாக்கும் கதை.''

''பாட்டா, மிளகு வெட்டியாச்சா?'' என்றபடி ஓர் இளைஞன் வந்தான்.

''இது யாரு?''

''இது எனக்க பேரன். கார்த்திக்குமார்னு பேரு.''

''உங்களுக்கு என்ன வயது?''

''என்ன வயது இருக்குமிண்ணு தோணுது?''

''எழுவது.''

''ஹெஹெஹெ'' என்றார் அய்யப்பன் பிள்ளை. உள்நாக்கு ஆட வாய் பொக்கையாகத் திறந்தது. ''வாற ஆவணியில் தொண்ணூறு. கெ.கெ.எம்மைக் காட்டிலும் நாலு வயசு மூப்பு. ஹெஹெஹெ...''

''உப்பு பாருங்க தாத்தா.''

அருணாசலம் எழுந்து விடைபெற்றுக்கொண்டு வராண்டாவில் நடந்தான். மனதின் பரபரப்பை எப்படி அடக்குவது என்று தெரியவில்லை. டீ குடிக்கத்தான் தோன்றியது – சந்தடியான டீக்கடை பெஞ்சில் தனியாக அமர்ந்து.

7

கெ.கெ.எம்மின் முகம் சிவந்து சிறுத்துப் போயிருப்பதை அருணாசலம் பார்த்தான். ஒரு தருணம் குற்ற உணர்வில் மனம் பதறியது. மறுகணம் வெறுப்புக் குமட்டியது. குற்ற உணர்வின் கணங்களில் அது மிக உக்கிரமான உணர்வாக இருந்தது. உடனே அனைத்திலுமிருந்து பின்வாங்கி விடலாம் என்று தோன்றுமளவு. எழுந்து அதை அறிவித்துவிடுமளவு. உடனே அக்குற்ற உணர்வை தனக்கு ஏற்படுத்தியதன் மூலம் அவர் தன்னை அடிமைப்படுத்தி இருப்பதாகவும், அவருடைய முரட்டு ஆளுமை தன்னை மூர்க்கமாகத் தழுவி இறுக்கிச் சிதைப்பதாகவும் பட்டு, வெறுப்பு கிளர்ந்தது. பொருந்தாத இடத்தில் அசட்டுத் தனமாக ஒட்டியிருக்கும் மட்கிய கிழவர். வெறுப்பின் உச்சத்தில் அப்படி வெறுப்பு எழுவது பற்றிய குற்ற உணர்வு மீண்டும்.

மாசிலாமணி தன் உரையை முடித்தார். மிகச் சாமர்த்தியமான சொற்களாலான உரை. ஒரு பக்கம் அது புரட்சிக்கான அறைகூவலாக இருந்தது. மறுபக்கம் அப்புரட்சியை சமரச வழிகளினூடாக நடத்துவது பற்றியும் பேசியது. கைத்தட்டல் மிகவும் பலமாக இருந்தது. அவரது பேச்சு சரிவரப் புரிந்து கொள்ளப்படாவிடினும் ஏதோ ஒரு வகையில் அனைவரையும் கவர்ந்தது. ஒவ்வொருவரும் தேடும் சுயலாபங்களும், சுய சமாளிப்புகளும் அதில் இருந்தன போலும்.

தீர்த்தமலை பேச எழுந்தார். சபையின் மன ஓட்டம் மாறியது. அது உடலசைவுகளினூடாகத் தெரிந்தது. ஒரு புது விஷயத்தை எதிர்கொள்ளப் போகும் ஆவல். ''தோழர்களே'' என்றார் தீர்த்த மலை. பேனாவை பையில் செருகி, தாள்களை சரியாக அடுக்கியபிறகு மைக்கை இலேசாகத் தட்டிப் பார்த்தார்.

''இங்கே தோழர் மாசிலாமணி பேசும்போது மிக முக்கியமான ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். இது ஜனநாயக யுகம். இனி புரட்சிகளும் ஜனநாயகப் புரட்சிகளாகவே இருக்க முடியும் என்று. அது உண்மை என நாமனைவரும் கைதட்டி ஒப்புதல் தந்தோம். உலக அளவில் ஜனநாயகத்தை

முதன்முதலில் ஏற்ற கம்யூனிஸ்டுகள் இந்திய கம்யூனிஸ்டுகள் என்பதை நாம் அறிவோம். அந்தப் பாதையில் எவ்வளவு தூரம் நாம் முன்னேறியிருக்கிறோம் என்று கணக்கிட்டுப் பார்த்திருக்கிறோமா? அப்படிப் பார்க்கையில் ஒரு பெரும்குறை நமக்குத் தெரியவில்லையா? உட்கட்சி ஜனநாயகம் நமது சங்கங்களில் போதிய அளவு உள்ளதா? நமக்கு ஜனநாயகத்திலும் தேர்தல் முறையிலும் நம்பிக்கை இருந்தால் அதை நமது சங்கத்தில் மேலிருந்து கீழ்வரை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டாமா?

''தோழர்களே, நேற்றுவரை நமக்கு ஜனநாயகத்தில் உண்மையான நம்பிக்கை இருக்கவில்லை. இது ரகசியமும் அல்ல. சர்வாதிகார அரசுகளையே நாம் இலட்சிய அரசுகளாக நம்பி வந்தோம். ஜனநாயகம் இங்குள்ள விசேஷச் சூழலில் வேறு வழியின்றி நாம் ஏற்றுக் கொண்ட ஒரு தற்காலிக உத்தி மட்டுமாக இருந்தது. எனவே நாம் கட்சிக்குள் ஜனநாயகப் போக்குகளை அதிகம் அனுமதித்ததில்லை. கட்சியைத் தத்துவ ஆசான்களும் செயல்வீரர்களுமான நமது தலைவர்கள் தங்கள் விருப்பப்படி நடத்தினார்கள். ஒவ்வொரு மட்டத்திலும் தேர்தல் என்பது ஒரு பாவனையாகவே இருந்தது. மேலிடத்தின் இச்சைகளையே கட்சியும் பிற அமைப்புகளும் பிரதிபலித்தன.

''தோழர்களே, அந்தக் காலம் மாறிவிட்டது. இனி கட்சியைத் தலைவர்களல்ல, தொண்டர்கள்தாம் வழிநடத்த வேண்டும். தலைவர்களின் தரிசனங்களல்ல, லட்சோப லட்சம் தொண்டர்களின் உள்ளுணர்வும் தேவைகளும்தான் இனி நம்மை வழிநடத்த வேண்டும். அதற்கு முழுமையான தேர்தல்கள் அவசியம். கட்சியின் புதிய செயல்திட்டம் இதுவே.

''தோழர்களே, நேர்மையான தேர்தல்களுக்கு இதுவரை நமக்குத் தடையாக இருந்தது எது? வெளியேயிருந்து எவரும் நம்மைத் தடுக்கவில்லை. நமது மனோபாவங்கள்தாம் தடையாக இருந்தன. நாம் தலைவர்களை விமரிசனத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவும் வரலாற்றின் மைந்தர்களாகவும் கருதினோம். எனவே மீண்டும்மீண்டும் அவர்களையே தேர்ந்தெடுத்தோம். அவர்கள்மீதான நம்பிக்கையை உறுதிசெய்வதே நம்மைப் பொறுத்தவரை தேர்தல். நமது தலைவர்கள் அந்த விசுவாசத்திற்கு முற்றிலும் தகுதியானவர்கள் என்பது எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் காலகட்டத்தின் தேவை வேறுமாதிரி உத்தரவிடுகிறது. எனவே இங்கு நாம் முறையான தேர்தல்களை நடத்த வேண்டும்.

''ஒவ்வொரு மட்டத்திலும் தேர்தல்களை நடத்த நாம் வைத்திருக்கும் திட்டம் இது. மாறுபட்ட அணுகுமுறைகள் கொண்ட தலைவர்கள் உள்ள இடங்களில் அவர்களை மோதவிடுவது. இல்லாத இடங்களில் முற்போக்கான தலைவர்களுக்கு எதிராகத் தகுதியான இளைய தலைமுறை தோழர்களை

நிறுத்தித் தேர்தலை நடத்துவது. இவ்வாறு கீழிருந்து மேலாகத் தேர்தல் நடந்து முடியும்போது வரலாற்றின் இச்சைக்கேற்ப கட்சி உருவாக்கப்பட்டு வந்திருக்கும்.

இந்த சங்கத்தைப் பொறுத்தவரை மூத்த தலைமுறைத் தோழரும் சங்க நிறுவனருமான நம் மாபெரும் தலைவர் கெ.கெ.எம்மும், அவரால் கண்டெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அவரது பிரதான மாணவர் தோழர் அருணாசலமும் இணைந்து வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறார்கள். இங்கே நான் கூறிய நடைமுறைப்படி இவர்கள் இருவரையும் எதிரெதிராக தேர்தல்களத்தில் நிறுத்தி போட்டியிட வைக்க மேலிடம் விரும்புகிறது. வேறு எவரேனும் போட்டியிட விரும்பினால் அவர்களும் முன்வரலாம். எல்லா கிளைச் செயலாளர்களுக்கும் போட்டியிட உரிமை உண்டு.''

''இருடே தீர்த்தமலை'' என்றார் கெ.கெ.எம். தன் நடுங்கும் குரலில். ''இப்பம் சொன்னியே தேர்தல்மொறை. அதை யாருடே முடிவெடுத்தது? அதுக்கு அவங்களுக்கு எங்கேருந்துடே அதிகாரம் வந்தது?''

''புதிசா எந்த முடிவும் எடுக்கலை தோழர். எல்லாம் ஏற்கனவே கட்சி செயல்முறை முன்வரைவில உள்ளதுதான். இப்ப நாம அதை நடைமுறைப் படுத்தலாம்னு பாக்கிறோம்.''

''ஏன்? இப்ப அதுக்கு என்ன அவசியம்?''

''ஏன்னா இது ஜனநாயக யுகம்.''

''டேய் எனக்ககிட்ட வெளையாடாத கேட்டியா? என்னடே சனநாயகப் மயிரு?''

''தோழர், இப்ப உள்ள யதார்த்தத்த நீங்க புரிஞ்சுக்கணும்.''

''நீ சொல்லி நான் புரியணும் இல்லியா? நீ எண்ணைக்குடே சங்கத்துக்கு வந்த? என்னடே இந்த சனநாயகம்? வார்த்தையப் போட்டா பயந்துருவேன்னு நெனைச்சியா? தொண்டன் சொல்லி தலைவன் கேக்கணும் இல்லியா? சொல்லுடே, தொண்டனுக்கு என்னடே தெரியும்? அவன் என்ன படிச்சிருக்கான்? அவனுக்கு என்ன அனுபவம் இருக்கு? அவன் செய்த தியாகம் என்ன? நம்ம தொழிலாளிகளில முக்காவாசிப் பேரு படிப்பு ஏறாதவன், வாத்தியார அடிச்சுப்போட்டு ஓடிவந்தவன், தினம் ஒரு சினிமா பாத்துட்டு, பரோட்டா இறைச்சி தின்னுட்டு, தண்ணி போட்டுட்டு, சாயங்காலம் ஊரு சுத்தறவன் நம்ம தொழிலாளி. அஞ்சு ரூவா கூலி கூட்டிக் கொடுத்தா ஆகா இதுதானப்பா கம்யூனிசம்னு சொல்லுறவன் அவன். அவனைக் கட்சியில சேத்து உலக வரலாற சொல்லித் தரணும். பொருளாதாரத்த சொல்லித் தரணும். தத்துவார்த்தமா சிந்திக்கச் சொல்லித் தரணும். யாருடே சொல்லத்தாறது? தலைவனுங்க சொல்லித் தரணும் தொண்டனைத் தலைவன் வழிநடத்தி படிப்படியா வர்க்கப் போராளியா

மாத்தணும். அப்படித்தான் நாங்க வளர்ந்தோம். தொழிலாளியப் போராளியா மாத்தறதுக்குத்தான் கட்சிங்கிற அமைப்பு இருக்கு. மேலயிருந்து கீழ வர அதுல ஆசான்கள் இருக்கணும். நீ என்ன சொல்லுதே, தொழிலாளிக்கு என்ன வேணும்னு மேலிடத்துக்கு எடுத்துச் சொல்லுத இடைநிலையாளுங்களுக்க கூட்டம்தான் கட்சிங்கிறே.'' கெ.கெ.எம்மின் உடல் நடுங்கியது. பேச்ச வேகத்தில எழுந்த அவர் அமர்ந்து கொண்டார்

''பதற்றப்படாம பேசுங்க தோழர். உங்க பேச்சைக் கேக்கத்தான் நாங்க வந்திருக்கிறோம்'' என்றார் மாசிலாமணி.

''பதற்றப்படாம பின்ன என்ன பாட்டா பாடுவாங்க? டேய் தீர்த்தமலை, நம்ம சங்கத்தில இன்னைக்கு எந்த கிளைலடே தத்துவமும் வரலாறும் அரசியலும் சொல்லித்தாறம்? இங்க கூடியிருக்குத கிளைச் செயலாளர்களில எவனாவது ஒருத்தன் எந்திரிச்சு இயங்கியல்னா என்னான்னு ஒரு பத்து நிமிஷம் பேச முடியுமா? என்னடே எவனாவது இருக்கியளா?''

சபையில் இறுக்கமான மௌனம் நிலவியது.

''நான் புஸ்தகம் படிக்காத ஆளு. எனக்குத் தெரிஞ்ச சித்தாந்தம்கூட இன்னைக்கு ஒரு மாவட்டத் தலைவனுக்குத் தெரியல்லை. அப்பம் தொழிலாளி எப்படி இருப்பான்? அந்தத் தொழிலாளிகள் கூடி கட்சிக்க இலட்சியத்தையும் நடைமுறையையும் தீர்மானம் பண்ணினா கட்சி எப்பிடி இருக்கும்? அம்பது ரூபா கூட்டி வாங்கித்தாறேன்னு சொல்லுதறவனை, திருட்டுக்குக் கூட்டு போறவனை தொழிலாளி தலைவனாக்குவான். அவன் கட்சியை முழுங்குவான். இண்ணைக்கு இத்தனை சீரழிஞ்ச பிறகும் கட்சிக்கு ஒரு மரியாதை இருக்குண்ணா அது கட்சியில இண்ணைக்கும் இருக்குற பழைய தலைவர்களாலத்தான். மண்ணில முளைச்சவனுங்க நாங்க நாலுபேரு இன்னும் நம்பிக்கையோட இருக்கிறதனாலதான். அதத் தெரிஞ்சுக்க முதலில. கேக்குதேன் நம்ம தொழிலாளிக்கும் மத்த சங்கத் தொழிலாளிக்கும் என்னடே வித்தியாசம்? ஒண்ணுமில்ல. அவன் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்தா அவனுங்களைமாதிரி ஒருத்தனைத்தான் இங்கயும் தேர்ந்தெடுப்பான். பிறகு என்னடே இடதுசாரி தொழிற்சங்கம் இளவு?''

''நீங்கள் பேசுறது மக்கள் விரோதப் பேச்சு தோழர். இன்னைக்குள்ள உலகில இந்த மாதிரி மனோபாவங்களுக்கு இடமில்லை.''

''அப்பிடீன்னு ஆருடே சொன்னா? நோயாளிக்கு டாக்டர்தான் மருந்து குடுக்கணும். நோயாளிக்கு என்ன பிடிக்கும்னு கேட்டு குடுக்கப்படாது.''

''நீங்க ஜனங்களை வெறும் முட்டாள்களா நினைக்கிறீங்க.''

''ஆமடே, இண்ணைக்கில்ல, சரித்திரம் முழுக்க ஜனங்கள் முட்டாளாத்தான் இருந்திருக்காங்க. அவங்களுக்கு எது நல்லதுண்ணு ஒருநாளும் அவங்களுக்குத் தெரியாது. தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம்னு

சொன்னவன் மடையன் இல்லை. தொழிலாளி வர்க்க ஜனநாயகம்னு சொல்ல அவனுக்குத் தெரியாமலும் இல்லை. ஜனங்களால ஒரு மேலான அரசாங்கத்தை உண்டு பண்ணிக்க முடியாது. தனித்தனியா ஒவ்வொருத்தனும் யோக்கியமாத்தான் இருப்பான். கூட்டாச் சேந்தா அறிவுகெட்ட மந்தையா ஆயிடுவான். புத்தியுள்ளவன் இழுத்த இழுப்புக்குப் போகிற மந்தை. கசாப்புக் கடைக்காரன் பச்சையிலை வச்சு கூப்பிட்டா அந்தப்பக்கமாட்டு போகிற மந்தை. ஜனங்களுக்கு அறிவு கிடையாது. அறிவுள்ள புரலட்டேரியன்தான் அவங்களை வழி நடத்தணும். புரலட்டேரியன்களைக் கட்சி வழி நடத்தணும். கட்சியைத் தலைமை வழி நடத்தணும். தலைமையை தத்துவம் வழி நடத்தணும். அது பிளேட்டோ கண்ட கனவு. அதை நடைமுறைப்படுத்தினது கம்யூனிசம் மட்டும்தான்...''

''தோழர் நீங்க இன்னமும் வரலாற்ற புரிஞ்சுக்கலை...''

''நல்லா தெளிவாப் புரிஞ்சுகிட்டேன்டேய் தீர்த்தமலை. உன்னை மாதிரித்தான் ரஷ்யாவில அந்தத் தேவிடியாமவன் கோர்பசேவ் ஜனநாயகம் பேச்சுரிமை மயிரு மட்டைன்னு ஜனங்களை அவுத்துவிட்டான். சோவியத் ராஜ்யமே தரமட்டமாப் போச்சு. ஆலமரம் மாதிரி நின்ன ராஜ்யம் அது. இங்க இப்பதான் முளைச்சு வருது. வென்னிய ஊத்திப்பிடாதீங்க. அவ்வளவு தான்.'' கெ.கெ.எம். கண்மூடி சரிந்து விட்டார். அவரது ஒரு கால் மட்டும் நடுங்கியது.

கதிர் எழுந்து ''நான் சில விஷயங்கள் சொல்லலாமா?'' என்றான்.

''சொல்லுங்க தோழர்'' என்றான் அருணாசலம் .

''மூத்த தோழர் சொன்ன விஷயங்களை நான் வணக்கத்தோட ஏற்கிறேன். ஆனா அவர் மக்களைப் பத்தி சொன்ன விஷயங்களை என்னால ஏற்க முடியாது.''

''நீ எங்கடே தம்பி மக்களைப் பாத்தே? புஸ்தகத்தில படம் பாத்தியா?'' என்றார் கெ.கெ.எம்.

''மார்க்ஸும் எங்கல்சும்கூட புஸ்தகம்தான் படிச்சாங்க தோழர். தெருவில இறங்கி வேலை செய்யல்லை'' என்றான் கதிர்.

கெ.கெ.எம். அப்படிப்பட்ட கச்சிதமான பதிலை எதிர்பார்க்கவில்லை. அவருடைய வாய் சற்று திறந்தபடி நின்றது.

''தோழர் இப்ப இங்க நோயாளியப் பத்தி சொன்னார். ஒரு டாக்டர் நோயாளிகிட்ட உனக்கு என்ன பண்ணுதுன்னு கேட்கவேயில்லைன்னு வச்சுக்கிடுங்க, மருந்து சாப்பிட்டா குணமில்லையான்னுகூட கேட்க லைன்னு வச்சுக்கிடுங்க, அவரு எப்படிப்பட்ட டாக்டர்?''

சபையில் சிரிப்பு பரவியது.

''நாங்க தத்துவ ஆசான்களின் பங்க மறக்கலை. மறுக்கலை. ஆனா அவங்க மக்கள்கிட்ட நேரடியா பேசணும்னு சொல்றோம். மக்களுக்கு என்ன பிரச்சினை, அவங்க தேவை என்ன அப்படீன்னு மக்கள்கிட்டேயிருந்து நேரடியா அவங்க தெரிஞ்சுக்கணும். அவங்க என்ன சொல்றாங்கன்னு மக்களும் தெரிஞ்சுக்கிடணும். அதுக்கு நடுவில ஒரு டெலிபோன் மாதிரி கட்சி இருக்கணும். இப்ப உள்ள கட்சி ஒரு வழிப்பாதை மாதிரி மேலேயிருந்து கீழே செய்தி வரும். கீழேயிருந்து மேலே ஒண்ணும் போகாது. அதை மாத்தணும். அதுக்குத்தான் தேர்தல்முறை வேணும்கிறோம்.''

கெ.கெ.எம். அதிருப்தியுடன் தலையை ஆட்டினார். ஆனால் அவருக்கு பதிலிருக்கவில்லை.

''நான் இப்ப அதிகமாகப் பேச விரும்பலை. ஒரு விஷயத்தை மட்டும் விளக்கிடறேன். சோவியத் ரஷ்யா விழுந்ததுக்குக் காரணம் ஜனநாயகம்தான்னு தோழர் சொன்னார். அங்க ஒரு கம்யூனிஸ்ட்டு அரசு இருந்தது. உலகத்திலேயே பெரிய உளவுத்துறை இருந்தது. உலகத்திலேயே பெரிய கட்சி இருந்தது. உரிமைகளைக் கொடுக்கத் தொடங்கின உடனே இப்படிப் பெரிய அலை கிளம்பி அமைப்பே சிதறிப் போகும்னு எப்படி அவங்களுக்குத் தெரியாமப் போச்சு? நல்லா யோசிக்கணும் தோழர், மக்கள் என்ன நினைக்கிறாங்கன்னு அங்க உள்ள கட்சியோ, அரசாங்கமோ கவலையே படலை. மக்கள் விருப்பத்துக்கு ஒரு மரியாதையும் குடுக்கலை. கதவயும் ஜன்னலையும் எல்லாம் மூடிக்கிட்டு இருந்தாங்க. ஒரேயொரு ஜன்னலை மட்டும் கடைசியில கோர்பசேவ் திறந்து போட்டார். காத்தடிச்சு வீடே இடிஞ்சு போச்சு. அம்பது வருஷமா அவ்வளவு பெரிய மௌன வெறுப்பு மக்கள்கிட்ட உருத்திரண்டு இருந்திருக்கு. அது ஸ்டாலினுக்குத் தெரியவில்லை. குருஷ்சேவுக்கும் பிரஷ்னேவுக்கும் கோர்பசேவுக்கும் தெரியவில்லை. அந்தமாதிரி நெலைமை இங்கயும் வந்திடக்கூடாது. அதுக்குத்தான் உண்மையான ஜனநாயகம் உண்மையான தேர்தல் முறைன்னு நாங்க சொல்றோம். அப்ப நாம தேங்கிட முடியாது. மக்கள் மாறுறப்ப நாமும் மாறியே ஆகணும்கிற நிலைமை வரும். காலத்துக்கேற்ப கட்சி மாறும். உயிர்த்துடிப்பான செயல் வேகம் கட்சியிலயும் சங்கங்களிலயும் உண்டாகும்.''

''உண்டாவும் உண்டாவும். அப்ப செய்து காட்டுறவன் ஓரமா வாயடைச்சு நிப்பான். உன்னை மாதிரி வாயாடிகள் ஓட்டுவாங்கித் தலைவனாவான். ஜனநாயகம்னா வாயாடிகளோட அதிகாரம்னு சொன்னான் ஹிட்லர்.''

''உண்மைதான். மக்கள்கிட்ட தெளிவா தீர்மானமா பேசக்கூடியவங்க யாரோ அவங்கதான் ஜனநாயகத்தில தலைவர்கள். செய்துகாட்ட வேண்டிய அவசியம் தலைவர்களுக்கு இல்லை. எந்த தலைவனும் எதுவும் செய்வது இல்லை. எல்லாவற்றையும் செய்வது மக்களின் மனம் வழியா தன்னை

நிகழ்த்திக்கிற வரலாறு. அதைப் புரிஞ்சு அதுக்கேற்ப கட்சியை வழிநடத்துற வன்தான் தலைவன்.''

''திருடிப் பங்கு போடுவோம்னுதான் வரலாறு சொல்லுதா, டேய்...''

''தோழர் நீங்க இங்க முன்வைச்சது அப்பட்ட மான பழைமைவாதப் பார்வை. நாம ஒத்துகிட்டாலும் இல்லேன்னாலும் ஸ்டாலினிசம் செத்து மண்ணோடு மண்ணாயாச்சு. மக்களுக்காகத்தான் கட்சி, தலைமை, சித்தாந்தம் எல்லாமே. ஏதோ ஒரு கட்டத்தில நம்ம தலைவர்களுக்கு அது நேர்மாறா ஆயிப்போச்சு. இல்லேண்ணா பத்து லட்சம் பேரு செத்தா அது வெறும் புளளி விபரம்னு ஒரு கம்யூனிஸ்டு சொல்லியிருக்க மாட்டான். தோழர்களே, கம்யூனிசம்னா இரும்பாலான ஒரு சித்தாந்தம் இல்லை. அது மனிதாபிமானத்தாலான ஒரு தரிசனம். இதை நாம மறந்திட்டோம். தோழர், தத்துவமும் வரலாறும் தெரிஞ்ச புரலட்டேரியன்கள்தான் சித்தாந்தத்துக்காக மக்களைப் புதைகுழிக்கு அனுப்பினாங்க – லட்சக்கணக்கில, கோடிக் கணக்கில. இதை மறந்துட்டு இனிமே பேச முடியாது. தோழரை மாதிரித் தலைவர்கள் வரலாறுன்னு சொல்றப்ப ஏதோ அவங்களால மட்டும் புரிஞ்சுக்க முடியற மர்மமான ஒரு ஞானம்னு உத்தேசிக்கிறாங்க. மக்கள்தான் வரலாறு. அதைத் தெரிஞ்சுக்குங்க முதலில். உங்களை மாதிரி ஆட்களுக்கு சாமானிய மக்கள் வரலாற்றில மிதக்கிறவங்க. நீங்க வரலாற்றை உருவாக்குகிறவங்க, திசை திருப்பறவங்க. தோழர், நீங்களும் நானும் இந்த மரமும் செடியும் கட்டிடங்களும்கூட வரலாற்றில உள்ள துளிகள்தான். இந்த எல்லாத் துளிகளும் சேந்துதான் வரலாறுங்கிற பெருவெள்ளம் உண்டாகுது. உங்ககிட்ட வரலாற்று ஞானம் இருக்குன்னா சாமானிய தொழிலாளி கிட்டயும் அது உண்டு. உங்களால அதை சரியாச் சொல்ல முடியும், அவனால முடியாது. வரலாற்றின் இச்சைக்கு எதிரா கல்லால கோட்டை கட்டி வச்சிட்டு நிக்க முடியாது. சித்தாந்தத்தால் அணைகட்டிகிட்டும் நிக்க முடியாது. நூறு வருஷம் கம்யூனிசம் அந்தத் தப்பை செய்தது. நாம அதைச் செய்ய மாட்டோம். நாம வரலாறு என்ன நினைக்குதுன்னு நேரடியா வரலாறுகிட்டயே கேட்டுத் தெரிஞ்சுக்குவோம். மக்கள்தான் வரலாறு. ஆம், ஜனநாயகத்தோட அடிப்படையே அதுதான். மக்களே வரலாறு.''

''போதும், இப்ப நாம தேர்தல் பத்தி பேசலாம். தோழர் கெ.கெ.எம். நீங்க தேர்தலில நிக்கிறீங்களா இல்லையா?'' என்றார் தீர்த்தமலை.

''இது எனக்க சங்கம்.''

''அப்ப நீங்க ஒரு வேட்பாளர், அருணாசலம் இன்னொரு வேட்பாளர். வேற யாராவது உண்டா?''

யாரும் எழவில்லை.

''வேற வேட்பாளர் இல்லாததனால தேர்தலைத் தொடங்கலாம். எல்லாருக்கும் ஒரு சீட்டு தருவோம். அதில் உங்க பேரு கிளையோட பேரு உறுப்பினர் எண்ணிக்கை, எத்தனை ஓட்டு, உங்க ஓட்டு யாருக்கு இவ்வளவையும் எழுதி திருப்பிக் குடுத்திடுங்க.''

தாள்கள் வினியோகமாயின. தாள் புழங்கும் ஒலி மட்டும் கேட்டது. எங்கும் பதற்றமான அமைதி நிலவியது.

தீர்த்தமலையும் சுப்புராஜனும் வாக்குச்சீட்டுகளை சேர்த்து எண்ணினர். அடுக்கியபிறகு தீர்த்தமலை ஒலிபெருக்கியை மெல்லத் தட்டினார்.

அருணாசலத்திற்கு வயிறு அதிர்ந்தபடி இருந்தது. சிறுநீர் வருவது போலிருந்தது. கெ.கெ.எம். விரைப்பாக இருப்பது போலிருந்தார்.

அவரிடம் தன்னம்பிக்கையும் அலட்சியமும் மட்டும்தான் தெரிந்தன. திடீரென அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. என்ன நிகழப் போகிறது என்று கிஞ்சித்தும் அவரால் ஊகிக்க முடியவில்லை என அவன் அறிந்தான். இதோ அவர் இதுவரை வாழ்ந்து வந்த மாய உலகம் உடைந்து சிதறப் போகிறது.

தீர்த்தமலை ''தோழர்களே, ஓட்டெடுப்பில் முடிவு வந்திருக்கிறது. எல்.எம். தோட்டத்துக் கிளைச் செயலர் தோழர் கோலப்பன் மட்டும்தான் தோழர் கெ.கெ.எம்முக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார். அவருடைய ஓட்டு போக மீதி எல்லாம் அருணாசலத்திற்கு வந்திருக்கு.''

அவையில் கைத்தட்டல் முழங்கியது. கெ.கெ.எம். புரியாது விழித்தார். தீர்த்தமலை கையமர்த்தி கைத்தட்டலை நிறுத்திவிட்டு ''வாக்குச் சீட்டுகள் ஒரு வருஷம்வரை ஆவணங்களாக இருக்கும். யார் வேணுமானாலும் சரிபார்த்துக் கொள்ளலாம்'' என்றார். அருணாசலத்தை நோக்கி சைகை காண்பித்துவிட்டு ''ஆகவே மத்தியப் பார்வையாளர் என்ற முறையில் தோழர் கெ. அருணாசலம் தமிழக ரப்பர் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கிறேன்.''

கைதட்டல் மீண்டும் அதிர்ந்தது. அருணாசலம் நினைப்பற்று அமர்ந்திருந்தான். மாசிலாமணி ''முன்னால போங்க தோழர்'' என்றார்.

''தோழர் அருணாசலம் இனிமேல் மாநிலத் தொழிற்சங்க ஒருங்கிணைப்புக் குழு, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க ஒருங்கிணைப்புக் குழு, தேசிய தொழிற்சங்கப் பொதுக்குழு ஆகியவற்றிலும் உறுப்பினராக இருப்பார்.''

அதுவரை எதுவுமே புரியாமல் அரங்கையும் தீர்த்தமலையையும் பார்த்தபடி இருந்த கெ.கெ.எம். கைநீட்டி ஏதோ சொல்ல முற்பட்டார். குரல் எழவில்லை. பிறகு அவசரமாக எழுந்தார். வேட்டி சரிய, அதை அள்ளிப் பற்றிக் கொண்டார். தள்ளாடியபடி நடந்தார். மரப்படிகளில் இறங்கும்போது

தடுமாறி விழப் பார்த்தார். அரங்கு அமைதியாக அவரைக் கவனித்தது. யாரும் உதவிக்கு வரவில்லை. கெ.கெ.எம். சுவரை ஒரு கையால் பற்றியபடி மெல்ல நடந்தார். கோலப்பன் ஓடிவந்து அவரைப் பிடித்துக்கொண்டான். அவர் நடுங்கும் முதிய கரங்களினால் அவனுடைய தோள்களை அணைத்தார். நடக்கவே முடியவில்லை. கோலப்பன் கிட்டத்தட்ட அவரைச் சுமந்து சென்றான்.

அவர் வெளியேறிய பிறகு சில கணங்களுக்கு அமைதி நிலவியது. ராமன் குட்டி ''டி பி எல் யூ சிந்தாபாத்'' என்று கூவினான். வாழ்த்தொலிகள் எழுந்தன. அருணாசலம் சோகமா, மகிழ்ச்சியா, தத்தளிப்பா என்றில்லாத ஒரு அழுத்தத்தை மார்பில் உணர்ந்தான். அதைத் தவிர்க்கும் பொருட்டு எண்ணங்களை சம்பந்தமில்லாமல் எங்கெங்கோ துரத்தினான். கௌரியின் வெள்ளைச்சிரிப்பு திடீரென்று ஞாபகத்தில் வர ஒரு கணம் மலர்ந்தான். மறுகணம் நாகம்மை நினைவில் வந்தாள். அச்சமும், குற்றவுணர்வும், தொடர்ந்து உடல் பதறும் கோபமும் அவனுள் ஏற்பட்டன.

✦

3

கரும்பனைமீது காற்று


МАШИНА

1

'உழைத்துக் காய்த்த உடல்போல கருமையாக, திடமாக, மண்ணில் வேரூன்றி, வானில் தலைதூக்கிப் பனைமரங்கள் நிற்கின்றன. வன்மம் மிக்க முனகல்கள் அவற்றிலிருந்து எப்போதும் எழுந்து கொண்டிருக்கின்றன. பனையேறிகளைப்போல பனைகளும் அதிகம் பேசுவதில்லை. அவை அபூர்வமாக வெறி கொள்வதுண்டு; மதுவுண்டு போதையேறிய பனையேறிகளைப்போல. அவை அப்போது ஊளையிட்டு அலறி தலைசுற்றித் தாண்டவமாடும். அப்போதுகூட அடிமரம் திடமான கருங்கல் கோபுரம் போல அசைவற்று நிற்கும். தொட்டுப் பார்த்தால் அவற்றின் சிரம் வழியாகக் கடந்துபோகும் புயலின் வேகம் சிறு அதிர்வாகத் தெரியும். இந்தத் திடத்துடனும் இதே வேகத்துடனும் அவை பேச ஆரம்பித்தால் என்ன ஆகும் என்ற கற்பனை எனக்கு எழுவதுண்டு. பவளமலை உச்சியிலிருந்து பார்த்தால் கண்ணெட்டும் தூரம்வரை பனை மண்டைகளைப் பார்க்கலாம். சிதறிப் பரந்து கிடக்கும் அவை அணிவகுக்கும் ஒரு காலம் வரும் என்று அந்நாட்களில் கற்பனை செய்வேன்.'

அருணாசலம் புத்தகத்தை மூடிவிட்டுத் தலையைப் பின்னால் சரித்து மல்லாந்தான். சொற்களின் ரீங்காரம் மண்டைக்குள் சுழன்றது. எம். வீரபத்ரபிள்ளை பி.ஏ. என்ற பழையபாணி ஈயவெட்டு எழுத்துக்களை கண்மூடினாலும் பார்க்க முடிந்தது. கதைகள் பழைய பாணியிலானவை. தலைப்புகள்கூட. பனைத்தொழிலாளர்களின் வாழ்வின் வறுமை, மண்ணிலிருந்து அவர்கள் பெற்ற திடம், உழைப்பிலிருந்து பெற்ற விவேகம், அவர்களுடைய முடிவற்ற பொறுமை, அனைத்தையும் ஒரே சிறுகதையில் கூறிவிட வேண்டும் என்ற துடிப்பு தெரிந்தது. கதைச் சந்தர்ப்பம் ஒத்து வராதபோது ஆசிரியரே நேரடியாகப் பேச ஆரம்பித்துவிடுகிறார். ஆயினும் சொற்களில் உயிரும், சித்தரிப்பில் கற்பனை வீச்சும் இருந்தது. அருணாசலத்திற்கு வியப்பாக இருந்தது அக்கதைகளில் இருந்த லேவ் தல்ஸ்தோயின் பாதிப்புதான். அறுபதுகளுக்கு முன்பு தமிழிலும் சரி, மலையாளத்திலும் சரி தல்ஸ்தோயின் பாதிப்பு

மிகமிகக் குறைவு. முற்போக்கு முகாமைப் பொறுத்தவரை எழுபதுகளில் கூட கார்க்கியின் பாதிப்புதான் அதிகம். ஆசிரியர் ரஷ்யப் பேரிலக்கியங்களை – குறிப்பாகத் தல்ஸ்தோயை - மிக விரும்பிக் கற்றிருக்க வேண்டும். தல்ஸ்தோய்போல மகத்துவமிக்க சொற்களை மானுடகுலம் நோக்கிக் கூற வேண்டும் என்ற துடிப்பு அவரிடம் இருந்தது.

நிச்சயமாக மிக முக்கியமான ஒரு மனம் மிகுந்த தீவிரத்துடன் எழுதிய படைப்புதான் அது. ஆனால் கட்சியின் ஆவணங்களில், ரப்பர் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வரலாற்றுப் பதிவுகளில், கட்சியும் சங்கமும் வெளியிட்ட பல்வேறு மலர்களில், தொகுப்பு நூல்களில் எதிலும் அப்படியொரு பெயரே குறிப்பிடவில்லை. கெ.கெ.எம். 'தோட்டத் தொழிலாளி' மாத இதழில் நூற்றியெண்பத்தெட்டு அத்தியாயங்களாக 'எழுதிய' மிக நீண்ட சங்க சரித்திரத்திலும் - அது அவருடைய சுய சரிதையும் கூட – அந்தப் பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை. என்ன நடந்தது? ஒரு பெரும் துரோகம் என்றால் அதன் பதிவு வரலாற்றில் இன்னும் முக்கியமானதல்லவா? அது தலைமுறைகளுக்கு ஒரு பாடமல்லவா? வரலாறு இங்கு அழிக்கப்பட்டிருக்கிறது. ஆர்வெலின் நாவலில் வருவதுபோல ஓர் ஆளை அப்படியே 'வரலாற்றுத் துளைகள்' வழியாக நழுவி வெளியே விழுந்துவிட்டிருக்கிறது. அப்படி ரஷ்ய வரலாற்றில் 'இல்லாமலாக்கப்பட்ட' வரலாறுகள் தொடர்ந்து வெளிவந்தபடியுள்ளன. என்னென்ன நடந்திருக்கிறது! அந்த நபர்களுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் அழிக்கப்பட்டனர். அனைத்துப் பொருட்களும் அழிக்கப்பட்டன. நூல்கள் மாற்றியெழுதப் பட்டன. புகைப்படங்கள் மாற்றியமைக்கப்பட்டன. பல்லாயிரம் பேர் அவ்வாறு ஒருபோதும் திரும்பக் கண்டடையப்பட முடியாதபடி வரலாற்றிலிருந்து மறைந்து போனார்கள். மிகச் சிலர்மீதுதான் அடுத்த தலைமுறையினரின் பார்வைபடும் அதிர்ஷ்டம் நிகழ்ந்தது. பெரும்பாலும் தற்செயல்கள் மூலம். ஆனால் அங்கு இருந்தது ஒரு சர்வாதிகார ஆட்சி மறுதரப்பு இல்லாத பிரம்மாண்டமான அரசு யந்திரமும், செய்தி ஊடகங்களும். இங்கு...

அவ்வப்போது அருணாசலத்திற்கு ஒன்று தோன்றியது. கெ.கெ.எம் வெளியேற்றப்பட்ட நாட்களின் சங்கடமிக்க இரவுநேரத் தனிமையை திசைதிருப்ப அவன் இப்பிரச்சினையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதுண்டு. பழைய கட்சிஆவணங்களையும், பிரசுரங்களையும், பிற தொகுப்பு நூல்களையும் படித்துக்கொண்டே இருந்தான். அந்த முழுமையான இருட்டடிப்பு அவனை உள்ளூர பீதியடைய வைத்தது. தாக்கப்படும் தரப்புடன் தன்னை ஏன் அவன் அடையாளம் கண்டுகொள்கிறான் என்று எவ்வளவு யோசித்தும் புரியவில்லை. அந்த மர்மம் அவனைக் கவர்ந்து உள்ளே இழுத்தது. ஒரு கட்டத்தில் கெ.கெ.எம். பற்றிய விஷயங்களே அவனைப் பொறுத்தவரை முக்கியத்துவமிழந்தன. அவற்றை நாராயணப்

திறமையாக மேலிட உத்தரவுகளின்படி கவனித்துக் கொண்டான். நாராயணன் கெ.கெ.எம்மின் கடும் விமரிசகனாகவும் அருணாசலத்தின் அதி தீவிர ஆதரவாளனாகவும் அரங்கில் தோன்றினான். அருணாசலத்தின் மௌனம் கெ.கெ.எம். மீதுள்ள அவனுடைய குருபக்தியின் விளைவு என நாராயணனால் சுட்டிக் காட்டப்பட்டது. அது ஓர் உயர்ந்த நாகரிகத்தின் அடையாளமாகக் கூறப்பட்டது. நாராயணனின் பேச்சுகளினூடாக தனக்கென உருவாகி வரும் அடையாளத்தை மறுக்கமுடியாத நிலையில் தான் இருப்பதை அருணாசலம் மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தான். நாராயணனால் உருவாக்கப்பட்ட அருணாசலத்தின் வேடத்தில் அதிக சிரமமின்றி அவன் நடிக்கத் தொடங்கியபோது ஆட்டம் ஏறத்தாழ முடிவுக்கு வந்து விட்டிருந்தது.

கெ.கெ.எம்மை வீழ்த்த கிசுகிசுப் பிரச்சாரமே பெரிதும் பயன்படுத்தப்பட்டது. கெ.கெ.எம். தோட்டங்களுக்குப் போய் நேரடியாகத் தொழிலாளர்களிடம் பேசினார். தேர்தலைத் தான் ஒப்புக்கொள்ளவில்லை என்றார். அவரைத் தேர்ந்தெடுத்தது தொழிலாளர்களேயொழிய சில கட்சிப் பிரதிநிதிகள் அல்ல. தொழிலாளர்கள் சொல்லட்டும், அவர் வெளியேறத் தயார். சதியில் தோற்று அவர் வெளியேற முடியாது.

தொடக்கத்தில் அவருக்குக் கூடிய கூட்டம் கட்சியை அச்சுறுத்தியது. கூட்டங்களைக் கோலப்பன்தான் ஏற்பாடு செய்தான். செலவுக்காகத் தன் வீட்டை அவன் அடமானம் வைத்துவிட்டதாகத் தெரிந்தது. அவனைப் பின் திரும்பச் செய்ய நாராயணனும் அருணாசலமும் நேரடியாகப் போய்ப் பார்த்துப் பேசினார்கள். கோலப்பன் கோபமும் வெறுப்புமாக கொதிநிலையில் இருந்தான். ஆனால் மெல்ல ஒன்றும் நடக்காது என்று தெரிந்தது. கெ.கெ.எம். மீது பற்றுக்கொண்டு அவர் கூட்டங்களுக்குச் சென்று கண்ணீர் விட்ட தொழிலாளர்கள்கூட தங்கள் சங்கக் கிளைப் பொறுப்பாளர்களுக்கு எதிராகத் திரும்பவில்லை. பதவியிலிருந்து வெளியேறி நாற்பது நாட்கள் கழிந்து கெ.கெ.எம். தனிச் சங்கம் தொடங்கினார். உடனே கட்சியும் அவரை உறுப்பினர் பொறுப்பில் இருந்து வெளியேற்றி அறிக்கை விட்டது.

கெ.கெ.எம். மீதான கடும் எதிர்ப் பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது.

இருபது வருடங்களாக முக்கியமான சந்தர்ப்பங்களில் கெ.கெ.எம். எப்படி தொழிலாளர் விரோதப் போக்கை மேற்கொண்டு வந்தார் என்று விளக்கியது கட்சியின் அறிக்கை. பலமுறை கெ.கெ.எம். கடுமையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டார். அவருடைய வயது, அனுபவம் ஆகியவை கணக்கில் கொள்ளப்பட்டு மன்னிக்கப்பட்டார். ஆனால் இறுதியில் முதலாளித்துவ சக்திகள் அவரை விலைக்கு வாங்கின. அவர்கள் தீட்டித்தந்த ஒரு தீர்மானத்தை அவர் சங்க மாநாட்டில் நிறைவேற்ற முற்பட்ட போது மேலும் பொறுப்பதில் அர்த்தமில்லை என்று முடிவு செய்யப்பட்டது. அந்தச்

தீர்மானத்தின் ஆபத்துக்கள் தனியாக விளக்கப்பட்டுள்ளன. அது நிறைவேற்றப்பட்டிருந்தால் முதலாளித்துவ சக்திகள் தொழிற்சங்க இயக்கத்தையே நசுக்கியழித்திருக்கும். சங்கமும் கட்சியும் தியாகிகளை மதிக்கின்றன. ஆனால் ஐந்தாம்படை வேலையை எப்படி மன்னிக்க முடியும்?

அந்த அறிக்கை மக்களிடம் எடுபடுகிறது என்று தெரிய வந்தபோது அடுத்தகட்டத் தீவிரத்துடன் இரண்டாவது அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கெ.கெ.எம்மின் தனிப்பட்ட கோணல்கள் பல சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அவர் கட்சித் தலைமைமீது பொறாமையும் சிலர்மீது காழ்ப்பும் கொண்டிருந்தார். கட்சிப் பொறுப்பாளர் சிலருக்கு அவர் லஞ்சம் கொடுத்துத் தன் பக்கம் சேர்த்துக்கொள்ள முயன்றதும் உண்டு. கட்சி ரகசியங்களை முக்கியமான சந்தர்ப்பங்களில் அரசுக்கும் எதிரிகளுக்கும் விற்றதும் உண்டு. அவருடைய தனிப்பட்ட ஒழுக்கம் பற்றி நாகரிகம் காரணமாக கட்சி அதிகம் பேச விரும்பவில்லை.

கிசுகிசுப் பிரச்சாரத்தை நாராயணனும் தோழர்களும் உச்சக் கட்டத்திற்குக் கொண்டு சென்றனர். கெ.கெ.எம்மின் பெண் பித்து என்றுமே கட்சிக்குப் பெரிய தலைவேதனை என்று அவர்கள் கூறினார்கள். அவரது சபலத்தைப் பயன்படுத்தி பலர் சங்கத்தைச் சுரண்டி இலாபம் அடைந்தனர். தொழிலாளிப் பெண்களை அவர் தொந்தரவு செய்தபோது சங்க நிர்வாகம் பலமுறை அவரை எச்சரித்துக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. மரத்தடிக்கோணம் கிளையிலிருந்து எட்டு தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையில் சங்கத்திற்கும் கட்சிக்கும் அளித்த மனு துண்டுப்பிரசுரமாகவும் வெளியிடப்பட்டது. அது 1972-ல் கெ.கெ.எம். நடத்திய வேலைநிறுத்தம் பற்றி விசாரிக்க வேண்டும் என்றது. டன்லப் கம்பெனியின் கொள்முதல் குறைந்ததனால் ரப்பர் விலைகள் சரிய ஆரம்பித்தபோது நடந்த அந்த வேலைநிறுத்தம் மூலம் தொழிலாளர்களுக்கு ஊதிய இழப்பும் முதலாளிகளுக்கு இலாபமும் ஏற்பட்டது உள்ளங்கை நெல்லிக்கனி. தொழிலாளிகளின் உதிரத்தை உறிஞ்சும் எவரும் அதற்குரிய தண்டனையைப் பெற்றே ஆகவேண்டும். முதலாறு கிளையைச் சேர்ந்த இரு தொழிலாளர்கள் கெ.கெ.எம். காலகட்டத்து சங்கக் கணக்குகள் முழுக்க மறு தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று கோரி ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். தன் கள்ளக் காதலிகளின் பிள்ளைகளுக்கு கெ.கெ.எம். முதலாளிகளிடம் பேசி வேலை வாங்கித் தந்தார் என்று பெத்லகேம் தோட்டத் தொழிலாளர் மடலில் ஒரு குறிப்பு இருந்தது. நாம் எந்நிலையிலும் நாகரிக வரம்பை மீறலாகாது; உண்மைகளேயானாலும் அநாகரிகமான விஷயங்களை அச்சிடக் கூடாது என்று நாராயணன் 'ரப்பர் உலகம்' மடலில் எழுதினார்.

கெ.கெ.எம். முதல் சில அடிகளிலேயே சுருண்டுவிட்டார். அவருடைய கூட்டங்களில் தொழிலாளிகள் கூடி கண்டனக் கோஷங்கள் எழுப்ப

ஆரம்பித்ததும் கூட்டங்கள் நடப்பது குறைந்தது. அவர் முழு மௌனத்திற்குத் திரும்பிய பிறகும் ஒரு சில மாதங்கள் பிரச்சாரம் தொடர்ந்தது. அதற்குள் போனஸ் மாதம் வந்தது. ரப்பர் விலை குறைவு காரணமாக போனஸ் போன வருடத்தளவுக்குத் தரப்படமாட்டாது என்று தோட்ட முதலாளிகளின் சம்மேளனம் அறிவித்ததும் தொழிலாளர்களின் ஒற்றுமை ஓங்கியது. சங்கங்கள் கொள்கை வேறுபாடுகளை மறந்து போராட்டக் களத்தில் குதித்தன. தர்ணாக்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், தெருமுனைக் கூட்டங்கள், அடையாள வேலை நிறுத்தம், பிறகு சமரசம். போனஸ் வாங்கும்போது அனைவரும் கெ.கெ.எம்மை மறந்துவிட்டிருந்தனர்.

கெ.கெ.எம். அதுவரை தடிக்காரன்கோணத்தில் கோலப்பன் ஏற்பாட்டில் ஒரு சிறு அறையில் தங்கியிருந்தார். ஒருநாள் அவர் காலி செய்துவிட்டு எங்கோ கிளம்பிச் சென்றுவிட்டார் என்று தெரிந்தது. சூடு அடங்கியதும் நாராயணன் கோலப்பனைத் திரும்ப வரும்படி அழைத்தான். கோலப் பனுக்கு மட்டும் வேகம் அடங்கவில்லை. தோட்டத்தில் அவன் நிம்மதியாக வேலை செய்ய முடியாத நிலையை நாராயணன் பிற தொழிலாளர் மூலம் உருவாக்கினான். இரு அடிதடி வழக்குகள் பதிவாயின. மறைமுகமாக கோலப்பனின் உயிருக்கும் மிரட்டல் விடுத்தான். திரும்பி வந்தால் ஒரு வருடம் கழித்து மாவட்டப் பொறுப்புக்குத் தூக்குவதாக ஆசையும் காட்டினான். கோலப்பனின் வருகை கெ.கெ.எம். அத்தியாயத்தின் இறுதி வார்த்தையாக அமைந்து, தனக்குப் புகழ் சேர்க்கும் என்று நாராயணன் கருதினான். ஆனால் சிறிது அதிகமாக செயல்பட்டுவிட்டான். கோலப்பன் தன்சகாக்களுடன் போய் பாரதிய ரப்பர் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்துவிட் டான். சங்கக் கிளையே அந்தப் பக்கம் நகர்ந்துவிட்டது. அதையும் நாராயணன் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். கெ.கெ.எம். உண்மையில் வகுப்புவாத சக்திகளின் கையாளாகவே இதுவரை இயங்கி வந்தார் என்பதற்கு அதுவே ஆதாரம் என்று அவன் ஓர் அறிக்கை வெளி யிட்டான். ஆனால் அதற்குள் கெ.கெ.எம். விஷயத்தில் எவருக்கும் ஆர்வமில்லாத நிலை ஏற்பட்டுவிட்டிருந்தது.

தன் உள் ஒடுங்குதலில் இருந்து அருணாசலம் மீறிவந்தபோது சங்கம் முழுமையாகவே நாராயணனின் கட்டுப்பாட்டில் இருந்தது. சங்கத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் அவன் நாராயணனூடாகவே செய்ய முடிந்தது. நாராயணன் அவனை மிதமிஞ்சிய பவ்யத்துடன் நடத்தினான். அந்த பவ்யமும் மரியாதையும் தொழிலாளர்களிடம் பிரதிபலித்தது. அது அவர்களை அவனிடமிருந்து பிரித்தது. அவர்கள் அவனிடம் நேரடியாகப் பேசாமலானார்கள். அவன் வந்ததும் எழுந்து மௌனமாக நின்று மெல்ல மெல்லக் கலைந்தனர். அவன் நாராயணனிடம் மட்டுமே பேச முடியும் என்ற நிலை ஏற்பட்டது. அதை அருணாசலம் வெறுத்தான். நாராயணனை உள்ளூர அஞ்சினான். ஆனால் எதுவும் செய்ய முடியவில்லை. மிக நுட்பமாக

நாராயணன் தன் இடத்தை நிறுவுவதைக் காணும் தோறும் அருணாசலத்திற்கு வியப்பு ஏற்பட்டது. தேரடித் தோட்டத்தில் சாதாரணமான டாப்பிங் தொழிலாளியாக இருந்தவன் நாராயணன். ஆனால் விடாது செய்தித்தாள் படிப்பான். உரத்த குரலில் முரட்டுத்தனமாகப் பேசுவான். அவனுடைய முரட்டுத்தனம்தான் அருணாசலத்தைக் கவர்ந்தது. அவனை அலுவலக உதவியாளனாக வைத்துக்கொண்டான். கவனமாக அருணாசலத்தைப் பிரதியெடுக்க ஆரம்பித்தான் நாராயணன். அது முதலில் மிக வேடிக்கையாக, கிண்டலுக்குரியதாக இருந்தது. படிப்படியாக அந்த பாவனை அருணாசலத்துக்கு அடுத்தபடியானவன் என்ற இடத்தை அவனுக்கு உருவாக்கித் தந்தது. அவ்வனைப் பிற சங்கத் தலைவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான். சித்தாந்தமோ, தொழிற்சட்டமோ, சங்க நடைமுறையோ இம்மிகூடத் தெரியாதவனாக இருந்தான் நாராயணன். அந்த அறியாமையையே ஒரு நகைச்சுவையாக மாற்றித் தலைவர்களை மகிழ்விப்பான். வேண்டுமென்றே தன்னை வடிகட்டிய மூடனாக சித்தரித்துக் கொள்வான். அந்த பாவனையே தலைவர்களுடன் அவனுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தித் தந்தது. அவனைத் தங்களுக்கு சவாலாக வரமுடியாத, எளிய மனமுடைய, நம்பத்தக்க கிராமத்து மனிதனாக அவர்கள் சித்தரித்துக் கொண்டார்கள். ஆனால் மறுமுனையில் நாராயணன் மிக வேகமாக மேடை மொழியையும், சிந்தாந்தச் சொற்களையும், அவசியமான நேரங்களில் கடைப்பிடிக்க வேண்டிய அமுத்தலான மௌனத்தையும் கற்றுக் கொண்டான். ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்திப் பேச ஆரம்பித்தான். ஆனால் நாராயணனை கெ.கெ.எம். நம்பவில்லை, ஏற்கவுமில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவனை விமரிசிக்க அவர் தயங்கியதில்லை. அவனை உருவாகிவரும் வெறுக்கத்தக்க புதிய போக்குகளின் பிரதிநிதியாக அவர் கண்டார். சங்க இயக்கத்தை வியாபார மாகவும் சூதாட்டமாகவும் பார்க்கும் சரித்திரப் பிரக்ஞை இல்லாத தலைமையின் குறியீடு அவன். அதற்கேற்ப நாராயணனும் கெ.கெ.எம்மை வெறுத்தான். அவ்வெறுப்புதான் தன்மீது மிதமிஞ்சிய பணிவாகவும் பிரியமாகவும் மாறியுள்ளதா என்ற சந்தேகம் அடிக்கடி அருணாசலத்திற்கு எழும். ஆனால் அருணாசலம் புதுப்பொறுப்பேற்ற பிறகு நாராயணனிடம் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. அருணாசலத்தின் உச்சரிப்பையும் சொற்களையும் கைவிட்டு மிகக் கிராமியமான, நாடார் ஜாதியடையான வெளிப்படையாக உள்ள தமிழை அவன் பேச ஆரம்பித்தான். அவனும் அருணாசலமும் இருக்கும்போது அந்தத் தமிழ் மேலும் மெருகு ஏறும். அந்த நாடார் தொழிலாளர்களைத் தங்களையறியாமலேயே அதே மொழியில் பே வைத்துவிடும். அவர்களுடைய தடைகள் நீங்கி அவர்கள் நாராயணனுடன் சகஜமாகப் பேச ஆரம்பிப்பார்கள். தன் மொழியுடன் அருணாசலம் தனித்து விடப்படுவான். இது காலப்போக்கில் அவன் மனதையும் திரிபடை வைத்து அவனுடைய உச்சரிப்பில் பேசக் கூடிய நாயர் அல்லது பிள்ளைமார் சாதியைச் சேர்ந்த தொழிலாளர்களிடம் மட்டும் இயல்பாகப் பேச வைத்து

ஒரு கட்டத்தில் திரும்பிப் போக முடியாதபடி அவன் ஒரு குறிப்பிட்ட பாதையில் செலுத்தப்பட்டிருப்பதை உணர்ந்தான். சங்கத்தில் வெறுமொரு அடையாளமாக அவன் ஆகிவிட்டிருந்தான். அலுவலகம் வந்து கடிதங்களில் கையெழுத்திட்டுவிட்டு, ஓரிரு போன்கள் செய்துவிட்டுக் கிளம்புவதே அவன் வழக்கம் ஆயிற்று.

அந்தத் தனிமை அந்த நூலை நோக்கி அவனை மேலும்மேலும் ஈர்த்தது. அந்த நூல் அச்சிடப்பட்ட இடத்தில் டயோசீசன் கட்டியெழுப்பிய நீண்ட கடை வரிசை மட்டுமே இருந்தது. அங்கு அவ்வச்சகத்தின் ஞாபகம்கூட இருக்கவில்லை. அவன் தேடிப் போய் விசாரித்த மூத்த தொழிலாளர் எவருக்கும் வீரபத்ரபிள்ளை பற்றி ஏதும் தெரிந்திருக்கவில்லை. ஒரு கட்டத்தில் அந்த நூல் இட்டுச் சென்ற பாதை சுவரில் முட்டி நின்றுவிட்டது. ஆனாலும் அதை உதற முடியவில்லை. அதன் கவர்ச்சி எதனால் என்று யோசித்துப் பார்த்தான். ஒரு தருணத்தில் தோன்றியது, அந்த எழுத்தாளருடன் அவன் தன்னை அடையாளம் கண்டுகொள்வதனால்தான் என்று. அவர் கெ.கெ.எம்முக்கு வலங்கையாக இருந்தவர். அவரது இடத்திற்குதான் கெ.கெ.எம். அவனைத் தேர்வு செய்தார்போலும். அவருடைய தடயமற்ற மறைவு அவனுக்கு சாத்தியமான முடிவை எச்சரிக்கிறது என அவன் உள் மனம் அஞ்சியது போலும். மிகப் பயங்கரமான முடிவு அதுதான். இந்த சங்க வேலையில் மிஞ்சுவது என்ன? பணமல்ல. அதிகாரமும் அல்ல. கட்சி மேலிடத்தின் குறிப்பறிந்து செயலாற்றும் இப்பொறுப்பில் உண்மையில் அதிகாரம் ஏதுமில்லை; அதிகார பாவனை மட்டுமே உள்ளது. மிஞ்சுவது என்ன? புகழ். அதைப் புகழ் என்று கூற முடியாது. ஓர் இடம். வரலாற்றின் ஞாபகங்களில் அந்த இடம் மறுக்கப்படும்போது எதுவுமே இல்லை என்று ஆகிவிடுகிறது. மகத்தான தியாகம்; ஆனால் அது யாருக்கும் தெரியவில்லை. கருணை; ஆனால் அது அடையாளம் காணப்படவில்லை. அதுதான் வெறுமை. அவ்வெறுமையின் முடிவற்ற வெளியில் தூக்கி வீசப்படுதலே ஒரு பொதுச் சேவையாளனின் நரகம். வீரபத்ரபிள்ளை அந்நரகத்தின் இருளில் எங்கோ வீழ்ந்து கிடக்கக் கூடும். அவன் அவரை ஒருவேளை தேடிக் கண்டடையக் கூடும். மீண்டும் ஒளி வட்டத்திற்குள் அவரை இட்டு வந்து நிறுத்தக் கூடும். அப்போது காவியத் தனமான நீதியொன்று நிறைவேறுகிறது. மகத்துவங்களை ஒருபோதும் மறைத்து விடமுடியாது என்றாகிறது. தியாகங்களை மறந்துவிட முடியாது என்றாகிறது. நாளை அந்த நீதி அவனுடைய இடத்தையும் உறுதிப்படுத்தக் கூடும். அவனுக்கு அவனே அளித்துக் கொள்ளும் ஓர் உறுதிப்பாடு அது.

அருணாசலம் புன்னகைத்தான். எவ்வளவு அபத்தமான எண்ணம். எவ்வளவு சுயநலமிக்க எண்ணம். ஒருவேளை அந்தரங்கமான எண்ணங் களெல்லாம் சுயமையம் கொண்ட, அபத்தமான எண்ணங்களாகவே இருக்கும் போலும். மீண்டும் அந்தப் பகுதியை வாசித்தான். தலையில் புயல்

விசுகையில் கற்கோபுரம்போல மண்ணில் ஊன்றி நிற்கும் பனைமரங்களின் மீது அந்த எழுத்தாளர்கொண்ட மோகம் அவருடைய ஆத்மாவின் தணியாத ஆசையின் வெளிப்பாடு என்று பட்டது. உறுதிக்கான ஆசை. உறுதியின்றித் தாவும் மனம் கொண்டவர்களிடம் ஓயாது எழும் ஆசை. அந்த ஆசையைத் தன்னிடமும் அவன் கண்டுகொண்டான். கெ.கெ.எம்மை அவன் மதிக்கவும் பின்பற்றவும் காரணம் அந்த உறுதிதான். நாராயணனிடம் அவன் அஞ்சுவதும் அதுதான். ஒருவேளை நாராயணனை அவன் உள்ளூர விரும்புகிறானா? கெ.கெ.எம். மீது உள்ளூர துவேஷமும் இருந்ததுபோல? அருணாசலம் கண்களை மூடிக் கொண்டு தன் எண்ணங்களைக் கட்டுப்படுத்த மீண்டும் மீண்டும் முயன்றான்.

♦

2

வெளியே வண்டிச்சத்தம் கேட்டது. நாராயணன் புது யமஹா பைக்கை உந்தித் திண்ணைமீது ஏற்றி நிறுத்தினான். கறுப்புக் கண்ணாடியைக் கழட்டியபடி ''வணக்கம் தோழர்'' என்றான்.

''வணக்கம் நாராயணன்'' என்றான் அருணாசலம்.

நாராயணன் கைக்குட்டையால் வியர்வையைத் துடைத்தபடி வந்து அமர்ந்தான். ''முன்னமே வந்திட்டியளா?''

''இப்பதான்.''

''எடக்காட்டில ஒரு சின்ன தர்க்கம். மஸ்டர் ரோல் போடுதவன் ஒரு மேனன். மண்டைக்கனம் பிடிச்ச ஆள். ஒரு தொழிலாளி அம்மைக்கு உடம்பு சரியில்லைண்ணு மூணு மணிக்குக் கிளம்பியிருக்கான். ஒரு நாலு நாள் இப்பிடிப் போயிருக்கான். இவன் பாதிநாள் வேலைன்னு குறிச்சுப் போட்டான். சம்பளம் வந்தப்பம்தான் விஷயம் தெரிஞ்சது. பெரிய பெகளம். பெர்மிஷன் வாங்கினியான்னு அவன். ரெண்டு மணி நேரத்துக்கு என்ன பெர்மிஷன்னு தொழிலாளிங்க கேட்கிறானுவ. லீவு லெட்டர் இல்லாம எப்படி நீ அரைநாள் லீவுண்ணு குறிக்கலாமின்னு சத்தம் போடுதானுவ. ஆளப் பாத்தேன் காணல்ல. குறிச்சேன்னு அவன் சொல்லுதான்.''

''சட்டப்படி அவன் சொல்றதுதான் சரி.''

''ஓகோ'' என்றான் நாராயணன்.

''அப்புறம் என்ன ஆச்சு?''

''முழுச் சம்பளம்; இல்லைண்ணா வேலை செய்யமாட்டோம்னு சொன்னேன்.''

''ஸ்டிரைக்கா, இதுக்கா?''

''ஸ்டிரைக் இல்ல. வேலை செய்யமாட்டோம். வேலை செய்ய மாட்டோம்னு சொல்லவும் மாட்டம். வேலை செய்ய முடியாதபடி பல கஷ்டங்கள் வரும். கத்தி அறாது, சிலசமயம் பட்டைய கிறிடும். பாலில பாதி சருகில கைதவறி விழும். அப்புறம் உனக்க இஷ்டம்னு சொன்னேன். மசிஞ்சிட்டான். எழுதிப் போட்டனே, சட்டப்படி இனி ஒண்ணும் செய்ய முடியாதேன்னான். சரி

ஒரு நாள் ஓவர் டைம் போடு. அண்ணைக்குத் தொழிலாளி வேலைக்கு வரமாட்டான், சரியான்னேன். சம்மதிச்சான். பிரச்சினை முடிஞ்சுது.''

அருணாசலம் வியப்புடன் நாராயணனைப் பார்த்தான். நாராயணன் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து இழுத்துப் புகைவிட்டான். அந்தத் தன்னம்பிக்கை அருணாசலத்தை அசவுகரியம் கொள்ளச் செய்தது.

''டி.பி.முகம்மது சர்க்குலர் அனுப்பியிருக்கார் பாத்திங்களா தோழர்?'' என்றான் நாராயணன் ''ஓவர் டைம் விஷயமாட்டு.''

''பார்த்தேன்.''

''என்ன சொல்றீய?''

''என்ன?''

''அது நடக்குற காரியமா? ஓவர் டைம் செய்யாதேன்னு சொன்னா நம்ம ஆளுக கேட்பாங்களா? இவங்களைக் கூட்டித் தீர்மானம் போட்டு அனுப்பறது எல்லாம் பேச நல்லாயிருக்கும்...''

''இல்லை தோழர். அதில் காரியம் உண்டு. எல்லாத் தொழிலிலயும் யந்திரங்கள் வந்திட்டிருக்கு. ஒரு தொழிற்சாலைல புது யந்திரம் வாறதுக்கு உற்பத்தி ஒரு அளவை எட்டணும். இல்லைண்ணா முதலீடு அந்த அளவ உயரணும். அதுவரை உயர்ந்திட்டே போற தேவைய எப்படி சமாளிக்கிறது? புதுசா ஆள் எடுத்தா நாளைக்கு அவன் மிஷின் வாங்கிறப்ப அவங்களை வீட்டுக்கு அனுப்பறதில பிரச்சினை வரும். அதனால ஓவர்டைம் தந்து சமாளிக்கிறான். இது தொழிலாளிக்கே எதிராப் போற விஷயம். சங்க நடவடிக்கைகளையும் பாதிக்கப் போற விஷயம். அதனால இப்ப நாம ஓவர் டைம மறுக்கணும். புதிசா ஆள் எடுன்னு அவன்கிட்ட சொல்லணும்.''

''வாங்கிற பணத்தை வேண்டாம்னு சொல்வானா தொழிலாளி?''

''நாம விஷயங்களை சொல்லிப் புரிய வைக்கணும். புதிசா இப்ப ஆள் எடுக்கிறது ரொம்ப ரொம்பக் குறைவு. இருக்கிற தொழிலாளிகளுக்கு வயசாயிட்டு வருது. கொஞ்ச நாள்ல எல்லா சங்கத்திலயும் கொஞ்சம் கொஞ்சம் கிழவங்க மட்டும்தான் இருப்பாங்க. நாளைக்குப் புதுப்புது யந்திரங்கள் வாறப்ப தொழிலாளிகளை வீட்டுக்கு அனுப்பினான்னா அதுக்கு எதிராப் போராட சங்கங்களுக்கு எண்ணிக்கைபலமும் இருக்காது, மனபலமும் இருக்காது. யந்திரங்கள் முக்கியமான வேலைகளை செய்யுந்தோறும் தொழிலாளியோட பேரம் பேசற சக்தி இல்லாம ஆகிறது.''

''நம்ம தொழில்ல எப்படி யந்திரம் வரும்னு கேக்கிறான்.''

''எல்லாத் தொழில்லயும் வரும். ஒரு தொழிலில யந்திரம் வாறப்ப அது அவன் தலைவிதின்னு மத்தவன் சும்மா இருக்கான் பாருங்க, அங்கதான் பிரச்சினையே இருக்கு. நம்ம தொழில்ல யந்திரம் வர வாய்ப்பில்ல, அதனால நாம நம்ம வேலையைப் பார்ப்பம்னு நம்ம ஆளும்

நினைக்கிறாங்க, பேசுதாங்க. ஒட்டுமொத்தமா வரக்கூடிய நெருக்கடி எல்லாரையும்தான் பாதிக்கும். தொழிற்சங்கங்கள் பலவீனமானா அதில நமக்கு இழப்பு இல்லையா? இப்பம் ரப்பர் பால் உடனடியா உறையறதனாலதானே தினம் தினம் பட்டையைக் கீறிவிட வேண்டி யிருக்கு? உறையாம இருக்கச் செய்ற ஒரு ரசாயனம் வந்திட்டதின்னா என்ன பண்ணுவீங்க? பாலை சேகரிக்க கன்வேயர் பெல்ட் வைக்கிற திட்டம் இப்பவே பாதியாயாச்சு.''

நாராயணன் அலட்சியமாக சிகரெட் குச்சியை குத்தினான் ''நீங்க ரொம்ப தூரம் கற்பனை செய்றீங்க தோழர்'' என்றான். பிறகு திடீர்ச் சிரிப்புடன் குரலைத் தாழ்த்தி, ''அதிகம் போனா பத்து வருஷம் இந்தப் பதவியில நாம இருக்கப் போறம். பத்து வருஷத்தில இதெல்லாம் கண்டிப்பா வரப்போறதில்லை. பிறகு அது புதிசா வாறவன் தலையெழுத்து. யார் கண்டது அப்ப சங்க அளவிலயும் என்னென்ன மாற்றம் இருக்கும்னு...'' என்றான்.

அருணாசலம் கோபம் கொண்டான். ஆனால் பதில் கூற முடியவில்லை.

''எப்படியிருந்தாலும் தொழிலாளிகள் ஓவர்டைம் பணத்தை விட்டுக் குடுக்க மாட்டாங்க. அவனுக்கு எப்பவும் கடன்தான். வீட்டுக்கடன், டிவி கடன், பாத்திரச் சீட்டு, துணிச் சீட்டு. அவனுக்ககிட்ட நம்ம நியாயங்களை சொல்லி புரியவைக்க முடியாது. கட்டாயப்படுத்தினா மறுபக்கம் சாடுவான். அன்னைக்குச் சொன்னியளே உடனடி லாபத்துக்காக முதலாளித்துவம் தன்னையே அழிச்சுக்கிடும்னு. தொழிலாளியும் அப்பிடித்தான். மனுஷ சுபாவமே அப்பிடித்தான்.''

''அப்பம் விஷயம் தெரிந்தும் அவனை அழியவிட வேண்டியதுதானா?''

''நாம என்ன செய்ய முடியும்? அவன்தானே நம்மைக் கூட்டிக்கிட்டுப் போறான்? எதுவேணுமின்னு அவன்தானே முடிவெடுக்கிறான். அதுக்கு அவன்தானே பொறுப்பு?''

''அவனுக்கு நிலைமையை நாமதானே கத்துக் குடுக்கணும்?'' அருணா சலத்திற்கு அவன் அபத்தமாக வாதாடுவதாகப் பட்டது. அவனுக்கு என்ன வேண்டும்? இந்த முரடனை வாதில் தோற்கடிப்பதில் என்ன லாபம்? பேசப் பேச அசடாகவும், காலம் புரியாதவனாகவும் அவன் மாறிக் கொண்டிருப்ப தாகப்பட்டது. தொலைநோக்குள்ளவனாகவும், அறிவுபூர்வமாக விஷயங் களை அணுகுபவனாகவும் நாராயணன் முன் தன்னைக் காட்டிக்கொள்ளும் இச்சையே தன்னை இயக்குகிறது என்று பட்டது. அந்த தோரணை மூலமே அவனால் நாராயணனைத் தாண்டிச் செல்லமுடிகிறது. ஆனால் நாராயணன் மிகநுட்பமாக இத்தகைய வேடங்களைப் புரிந்துகொண்டு விட்டிருக்கிறான். நடைமுறைத் தன்மையுள்ள பார்வையும், செயலூக்கமும் உள்ளவனாகத் தன்னை முன்வைத்து, அருணாசலத்தை அவன் லாகவமாகத் தாண்டிச் சென்றுவிட்டான். சோர்வுடன் அருணாசலம் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்து. அலுவலகத்திற்குக் கிளம்ப வேண்டியதுதான்.

''நமக்கு என்ன தோழர் பொறுப்பு? உலகம் நம்ம தலைமேலயா ஓடுது? என்ன நீங்களும் வரவர கெ.கெ.எம். மாதிரிப் பேச ஆரம்பிச்சிட்டிய? உலகம் அதுக்க பாட்டில போகுது. நாம அதில ஒரு அம்சம். தொழிலாளிதான் வரலாறுன்னுட்டு கதிர் சொன்னார். வரலாறு எங்க போகுதோ அங்க போகட்டும். நாம என்ன செய்ய முடியும்?''

''வரலாற்றை மாத்தறது மார்க்ஸிஸ்டின் கடமை. அது மார்க்ஸ் சொன்னது.''

''நூறு வருஷத்தில எதை மாத்துனாங்க? மாத்துறோம் மாத்திப் போடலாம்னு சொல்லி அந்த தேசத்தில பாதிப்பேரை பொலி போட்டது மிச்சம். அந்தக் காலமும் போயாச்சு. அந்தத் தலைவர்களும் போயாச்சு.''

''நாம் தலைவர்கள் இல்லை; வக்கீல்கள். இல்லையா?''

''கதிர் சொல்றதுதானே, சரிதான்.''

''நல்ல பீஸ் வாங்குற வக்கீல்கள்'' என்றான் அருணாசலம், அது நாராயணனைக் குத்தும் என்ற எதிர்பார்ப்புடன்.

''ஆமா, ஃபீஸ வச்சுத்தான் தொழிலாளி வக்கீல மதிக்கிறான். மாசிலா மணி கிட்ட இப்ப இருக்கிறது ஒரு டாட்டா சுமோ. தொழிலாளிங்க வாங்கிக் குடுத்தது. கசங்கின சட்டை போட்டுகிட்டு நம்ம பழைய தலைவர்கள் முதலாளிகளைப் பாக்கப்போனா மூஞ்சிய களிப்பாங்க. மாசிலாமணி போனா இங்கிலீஷ் பேசிட்டு வந்து கட்டிப் பிடிச்சுக் கூட்டிட்டு போவான்.''

''நாமளும் கார் வாங்கிடுவோம்'' என்றான் அருணாசலம்.

அதிலிருந்த நக்கலை நாராயணன் பொருட்படுத்தவில்லை. ''ஆமா, ஒரு டீசல் அம்பாசிடர் அவசியம் வேணும். அப்பதான் எதுக்கும் சௌகரியம். அவசியம்னா தொழிலாளிக்கும் ஒரு உதவி...''

அருணாசலம் புன்னகைத்தான்.

''சங்கத்துக்க அம்பத்தெட்டாம் ஆண்டுவிழா வரப்போகுது. இனிமே ஒரு மாசம்தான் இருக்கு.''

''ஆமா, நானும் யோசிச்சேன்.''

''பழைய மாதிரி கருத்தரங்கு மாநாடுன்னு நடத்துறதில அர்த்தமில்லை. மத்த சங்கங்களில திருவிழா மாதிரி நடத்துறான். நாமளும் அதேமாதிரி நடத்தணும்.''

''என்ன பிளான்?''

''ஒரு நாடகப் போட்டி ஒவ்வொரு கிளைக்கும். பிறகு பாட்டுப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் – தொழிலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் குழந்தைகளுக்கும் தனித்தனியா. நல்லதா ரெண்டு புரபஷனல் நாடகம் ரெண்டு ஆர்க்கெஸ்ட்ராப் பாட்டு. ஒரு நாளைக்கு முடிஞ்சா ஏதாவது ஒரு சினிமா ஸ்டார் மம்முட்டி, மோகன்லால், பிரபு, கார்த்திக்னு இப்படியே தொழிலாளிகள் பேச ஆரம்பிச்சாச்சு...''

''லட்சக்கணக்கா வேணுமே.''

''வசூல் பண்ணலாம்.''

''ஒரு தொழிலாளி மிஞ்சிப் போனா என்ன தர முடியும்?''

''முடியறது தரட்டும். மிச்சத்தைத் தோட்ட முதலாளிமார்கிட்ட வாங்கலாம். ரப்பர் மூலர்களிட்டயும் வசூல் பண்ணலாம்.''

''ஆனா...''

''ஏன்?''

''இல்ல...''

''தருவாங்களான்னு சந்தேகப்படறீங்க. கேக்கிறவங்க கேட்கிற மாதிரி கேட்டா தராம இருக்க அவனால முடியாது. தந்தாகணும். கேட்ட தொகை தந்தாகணும்.'' நாராயணன் மீண்டும் அந்தத் தன்னம்பிக்கை நிரம்பிய சிரிப்பை சிரித்தான். சமீபமாக அவனில் குடியேறிய சிரிப்பு அது. அருணாசலம் பேசாமல் பார்த்திருந்தான்.

''இதனால நாம என்ன முதலாளிகிட்ட தணிஞ்சா போறம்? ஒரு பைசாவுக்குவிட்டுத் குடுத்திடுவமா? அதுவேற இதுவேற. முதலாளி நமக்கு எதிரி இல்லை, எதிர்த் தரப்பு அப்டீன்னு கதிர் சொல்லுவாரு.''

''கதிர் பேச்சு தலையில ஏறிட்டுது.''

''திமிர் பிடிச்சவன். ஆனா பேசறதில காரியம் உண்டு.''

''மாநாட்டில ஒரு கலாச்சார விழா வேணும். பெரிய எழுத்தாளர் சிலரை கூப்பிடணும்.''

''தூள் கிளப்பிடலாம் தோழர். கவலையே படாதீங்க.''

''ஒரு நல்ல சுவனீர் கொண்டு வரணும். இதுவரை வந்த சுவனீர் எல்லாம் கட்சிப் பத்திரிகைகளுக்க பைன்ட் வால்யூம் மாதிரி இருக்கு. நம்ம சுவனீர் ஒரு முக்கியமான தொகுப்பா இருக்கணும். கலை, இலக்கியம், அரசியல் எல்லாம். நான் அதில ஒரு முக்கியமான கட்டுரை எழுதறேன். நம்ம சங்கத்தோட வளர்ச்சி பற்றி, சில முன்னோடிகள் பத்தி.''

''பின்னிப் போடலாம் தோழர். ஏ.கே.ஆர். போன் பண்ணினாரா?''

அருணாசலம் தன் மனம் கிளர்ச்சியடைந்திருப்பதை உணர்ந்தான். ஏன் என்று ஒரு கணம் கழித்தே புரிந்தது. அவன் எழுதப் போகும் கட்டுரை. அது எப்படித் தன் வாயில் வந்தது? அப்படி ஒரு எண்ணம் துளிகூட இருக்க வில்லை. ஆனால் சொல்லியாகிவிட்டது. அக்கட்டுரையில் வீரபத்ரபிள்ளை பற்றி எழுதப் போகிறானா என்ன? என்ன முட்டாள்தனம். எத்தனை அபாயகரமான விளையாட்டு. மனம் தயங்கியது. ஆவலுடன் முன்னால் பாய்ந்தது. அஞ்சிக் குளிர்ந்தது. உத்வேகத்துடன் துள்ளியது. டைரியை எடுத்துப் பிரித்து அர்த்தமின்றிப் பக்கங்களைப் புரட்டினான்.

◆

3

பாவாடைக் கட்டைத் தளர்த்தி, கூந்தலை சுருட்டிக் கொண்டை போட்டு, ''அப்பாடா'' என்று நாகம்மை பாயில் அவனருகே படுத்தாள். அவளுடைய வியர்வை மணம் இதமாக இருந்தது. திரும்பி அவளை அணைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. ஆனால் உடல் செயலற்றுக் கிடந்தது.

நாகம்மை ஏதோ பிரார்த்தனை சொன்னாள். புரண்டு படுத்தாள். அவன் விழித்திருப்பதை உணர்ந்து ''உறங்கேல்லியா?'' என்றாள்.

''இல்ல.''

''ஒம்பது மணிக்கே படுத்திய.''

''தூக்கம் வரேல்ல.''

''வயிறு சரியில்லையா?''

''இல்லடி.''

நாகம்மை அவன்மீது கைபோட்டு தலைதூக்கி ஒருக்களித்தாள். ''நானும் பாத்துகிட்டுதான் இருக்கேன். உங்க மனசு கொஞ்ச நாளாட்டு செரியில்ல.''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை.''

''எனக்குத் தெரியும்.'' நாகம்மை சற்றுத் தயங்கினாள். ''பிடிக்காத்த காரியத்துக்கு எதுக்கு எறங்கினிய? பதவி வேணும், அதுக்காக மனநிம்மதியை விடணுமா?''

''அதில்லட்டி, நீ பாட்டுக்கு என்னமாம் யோசிச்சுகிட்டே போகாதே.''

''கெ.கெ.எம்மைப் பிறவு பாத்தியளா?''

''இல்ல.''

''அவரு எங்க இருக்காரு?''

''விசாரிச்சேன். யாருக்கும் தெளிவாட்டுத் தெரியல்ல.''

நாகம்மை பெருமூச்சு விட்டாள். ''நான் கேட்டுப் பாக்கவா? நான் கேட்டா சொல்லுவாவ. ரெண்டு பேருமா பாப்பாவ தூக்கிட்டுப் போயி பாப்பம். கெ.கெ.எம்முக்கு எனக்ககிட்ட வலிய காரியமாக்கும். பாப்பாவப் பாத்தா உருகிப் போயிடுவாரு.''

''போயிப் பார்த்தா...''

''போயிப் பார்த்தா எல்லாம் செரியாயிடும். கெ.கெ.எம். நிறைஞ்ச மனுஷன். கோவமும் வருத்தமும் அவரு மனசில நிக்காது. அவரு நாலு வார்த்தை உங்க கிட்டே பேசினாப் போரும், எல்லாம் செரியாயிடும்.''

''நாகம் நீ ரொம்ப தப்பா நினைச்சிட்டே. கெ.கெ.எம்.ஐ நீக்கிட்டு நான் வந்ததில எனக்கு ஒரு துக்கமும் இல்ல. அதெல்லாம் நான் எப்பவோ மறந்தாச்சு. இது வேற விஷயம்.''

''என்ன விசயம்?''

அருணாசலம் சுருக்கமாக விளக்கிச் சொன்னான்.

நாகம்மை ''கெ.கெ.எம் அப்பிடிச் சொன்னா அதுக்கு என்னமாம் காரணம் இருக்கும். இல்லாமப் போயி அப்பிடியொரு கூட்டுக்காரனை தெரியவே தெரியாதுன்னு சொல்லிடுவாரா?''

''என்ன காரியம் இருந்தாலும் உயிரோட இருந்த ஒரு மனுஷனை அப்பிடியே மூடி மறைச்சுப் போடுயதுண்ணா அது சாதாரணமான பாவமா?''

''அதுக்கு இப்ப என்ன செய்யப் போறிய?''

''நம்ம சங்கத்துக்க அம்பத்தேழாம் வருஷ நிறைவுவிழா வருது. ஒரு மலர் போடப்போறம். அதில நான் வீரபத்ரபிள்ளையைப் பத்தி ஒரு கட்டுரை எளுதப் போறேன்.''

''இப்பம் எதுக்கு அதெல்லாம்?''

''அந்த மனுஷனுக்கு நியாயம் கிட்டேல்ல. அது என் மனசைப் போட்டு அரிக்குது. உண்மையில என்ன நடந்ததுண்ணு எல்லாருக்கும் தெரியட்டும். யாரு செய்தது சரிண்ணு புதிய தலைமுறை தீருமானிக்கட்டும். வீரபத்ரபிள்ளை துரோகம் செய்திருந்தா அது எல்லாருக்கும் ஒரு நல்ல பாடம். கட்சி செய்தது தப்பா இருந்தா நாம அதுக்கு மன்னிப்புக் கேட்டு அந்த தப்பைத் திருத்தி பிராயச்சித்தம் செய்யணும்.''

''எதுக்கு இப்பம் அவ்வளவு பழைய கதையொக்க?''

''உயிரோடு இருக்கிறவங்களுக்கு இறந்து போனவங்களுக்க கிட்ட ஒரு கடன் இருக்கு. அவங்க செய்த தியாகங்கள் மேலதான் நம்ம வாழ்க்கை. அவங்க விதைச்சதை நாம அறுவடை செய்றோம்.''

நாகம்மை ஒன்றும் பேசாமல் படுத்திருந்தாள். இருளில் கடிகாரம் மட்டும் டிக்டிக்டிக் என்று ஒலித்தது. ரேடியம் பச்சை ஒளிர அது தூக்கமின்றி இரவைத் தாண்டுவது போலிருந்தது.

''ஆனா இதுவரை எனக்க கையில ஆதாரபூர்வமா ஒரு விஷயம்கூட இல்லை. அய்யப்பன்பிள்ளை கட்சிக்கெதிரா ஒண்ணும் சொல்லமாட்டார். அவருக்க தொழில் கட்சிய சார்ந்திருக்கு.''

நாகம்மை ஒன்றும் சொல்லவில்லை. தூங்கிவிட்டாளா என்று சந்தேகம் ஏற்பட்டது.

''தூங்கிட்டியா?''

''இல்ல.''

''பின்ன?''

''நான் என்ன சொல்லுயது? உங்க இஷ்டம். இதனால உங்க மன சடங்குமெங்கில் செரி.''

''என்ன மனசடங்குதது?''

'''இல்ல சமாதானம் இல்லைண்ணு சொன்னிய...''

''அதுக்கு ஒரு வழி பிறக்காம இருக்காது. அப்பிடி ஒண்ணையும் இங்க மூடி மறைச்சிட முடியாது.''

''என்னமோம் செய்யுங்க. பாப்பாவுக்கு வெள்ளிக் கொலுசு ஒண்ணு வாங்கணும்னு சொன்னேன்.''

''ஏன், பழசு எங்க?''

''அது அண்ணைக்கே உடைஞ்சு போயிட்டதுண்ணு சொன்னேனே.''

''அதைப் போட்டா புதிசு கிட்டாதா?''

''நல்ல கூத்து. சேதாரமும் செய்கூலியும் போனா பாதி தேறுமாண்ணே சந்தேகம்.''

''ஏமிட்டி, அத வாங்கும்போ சேதாரமும் செய்கூலியும் தந்தமே.''

''ஆமா, அதுக்கு?''

''ரெண்டு தடவை எதுக்கு தரணும்? ஒரு தடவதானே உருக்கி மாத்தி செய்யுதான்.''

''அது அவங்க வச்சிருக்குத சட்டம். அதுக்க நாம என்ன செய்ய முடியும்?''

''அவனுக்கு தோணின மாதிரி செய்யுததா? கேட்க ஆளில்லையா?''

''எந்தக் கடயில போனாலும் இதேதான். வெள்ளியும் தங்கமும் வேணுமின்னா அவன் சொல்லுதத கேட்டுத்தான் ஆகணும்.''

''பகல் கொள்ளையாட்டு இல்ல இருக்கு.''

''அவங்க எல்லாம் சேந்து சங்கம் வச்சிருக்காங்க. இப்பம் எல்லாருக்கும் சங்கம் இருக்கு. சங்கம் இல்லாதவிய மீன்காரிய மட்டும்தான். அவியகிட்ட மட்டும்தான் ஒண்ணுக்குப் பாதிவிலை பேசி வாங்க முடியுது.''

''உடன சங்கத்த சொல்லு. எடம் பாத்துட்டு இருப்பியே.''

''பின்ன, நீங்க சங்கம் கூடி மிரட்டுவிய; மத்தவனும் செய்ய மாட்டானா?''

''நாம பேச வேண்டாம், சரிவராது.''

''ரொம்ப சரி'' என்று நாகம்மை திரும்பிப் படுத்தாள்.

அருணாசலம் அவள் முதுகை அரையிருளில் பார்த்தான். அவள் என்ன நினைக்கிறாள், ஏன் அவனைத் தவிர்க்கிறாள்?

''நாகம்.''

''உம்.''

''இங்க பாரு.''

''சொல்லுங்க.''

''இங்க பாருடி'' என்று திருப்பினான். அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்து ''எதுக்கு நாம சண்டை போடணும்?'' என்றான்.

''நாம பேசினா சண்டைதான் வருது.''

''எனக்கு உம்மேல பிரியம் இல்லைண்ணு நினைச்சியா?''

''பிரியம் இருக்கு...''

''என்ன இழுக்குதே?''

''இல்ல, ஆம்பிளயளுக்கு என்னமாம் ஒண்ணு இருக்கும் எப்பமும், தூரத்திப் பிடிக்கிறதுக்கு. அதில் உள்ள ஜெயம்தான் அவியளுக்கு முக்கியம். பெண்டுபிள்ளியள் அதுக்குப் பிறவுதான்.''

அருணாசலத்தால் உடனே பதில் கூற முடியவில்லை.

''உங்களுக்கு சங்கம்...'' என்றாள் அவள்.

அவள் அவனுடைய நீவிரமான மறுப்பை எதிர்பார்க்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது. அதைச் சொல்லாவிடில் கோபமடைவாள். அந்த மறுப்பு பொய் என அவளுக்குத் தெரியும். ஆகவே அதை உக்கிரமாக அவன் சொல்ல வேண்டும் என எதிர்பார்ப்பாள். ''உனக்க நினைப்பு அப்பிடி'' என்றான். ஆனால் அந்த வார்த்தைகளில் உத்தேசித்த அழுத்தம் ஏற்படவில்லை.

''அப்பிடி இல்லையா? சொல்லுங்க.''

''எனக்க மனசில உனக்குள்ள இடம் வேற எதுக்கும் இல்ல.''

''சங்கத்துக்கும்?''

''கண்டிப்பா இல்ல. சங்கவேலை கொஞ்சம் பரபரப்பா இருக்கும். அதனால அதுக்க பின்னால ஓடுயது, அவ்வளவுதான். உன்னை நினைக்காத நாள் எனக்கு இல்லை.''

''பொய்.''

''உண்மைடி, இதபாரு, சங்கவேலைல உன்னை நினைப்பேன். ஆனா உன்கிட்ட பேசும்ப சங்கத்த நினைக்கிறதில்லை.''

''என் ராஜா'' என்று கட்டிக்கொண்டாள். அவளுடைய மென்மையான முகம் மார்பின் முடிப்பரப்பில் அழுந்தியது. மூச்சு சூடாகப்பட்டது. ''எனக்கு நீங்க சந்தோஷமா இருந்தா போரும். நான் தினம் சாமிகிட்ட வேண்டுயதும் அதுதான். எனக்கு வேறு ஒண்ணும் வேண்டாம்.'' அவள் குரல் தழுதழுத்தது.

''என்ன வேண்டுவே?''

'''என் ராஜாவுக்கு ஜெயமும் மனநிம்மதியும் வேணுமின்னு.''

''இப்ப எனக்கு வந்த ஜெயத்தில உனக்கு சந்தோஷமா?''

''சந்தோஷம்தான்.''

''பொய், உனக்கு கெ.கெ.எம். மேல எப்பவும் பிரியம்தான்.''

''ஆமா, அதுக்கென்ன? இப்பவும் பிரியம்தான். கெ.கெ.எம்முக்கும் அது தெரியும். எனக்க கிட்ட ஒரு நாளும் அவரு சங்கம்பத்திப் பேசினது இல்ல.''

''பின்ன வேற என்ன பேசுவாரு?''

''வீட்டுச் சாப்பாடு பத்தி பேசுவாரு, உப்பு போடாம ஏதாவது சமைச்சுக் குடும்பாரு. பின்ன அவருக்க உடம்பு பத்தி பேசுவாரு.''

''நான் செய்தது தப்புண்ணுதான் நீ நெனைக்குதே.''

''இல்ல.''

''என்கிட்டே மறைக்காதே.''

''முதல்ல அப்படி தோணிச்சு. பிறவு அது எனக்க காரியம் இல்லைண்ணு விட்டுட்டேன். வயசானவங்க மாறுவதும் எளமுறைக்காரங்க வாறதும் எங்கயுமுள்ள நியாயம்தானே? பெத்த அப்பனை பாகம் வைக்கச் சொல்லி வாங்கிட்டு, திண்ணைல இருத்தினாவ எனக்க அண்ணம்மாரு. எல்லாம் உலக நடைமொறை. எனக்கு அண்ணம்மாரும் வேணும். நான் ஆருக்க தப்புசரிய சொல்ல முடியும்?''

''அது ஒரு தந்திரம்.''

''அப்படித் தோணினா அப்பிடி'' என்றாள் நாகம்மை புன் படாமல். ''பொம்பளைய அப்பிடிப் பல தந்திரங்கள் செய்தாத்தான் வாழ முடியும். எனக்கு எல்லாரும் வேணும். யாரையும் நான் வெறுக்க மாட்டேன். ஆம்பிளைய எல்லாருமே ஒருத்தருக்கு பின்னால ஒருத்தர் கத்தி வைச்சுகிட்டுதான் இருக்காவ. அவுங்களுக்கு என்னதான் வேணுமின்னு

பொம்பளைய எவ்வளவு யோசிச்சாலும் புரியாது... அதனால நான் அதில தலைமிடறதுமில்லை.''

அருணாசலம் அவள் கன்னத்தை வெறுமே தடவிக் கொண்டிருந்தான். ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அவள் சொன்ன ஒவ்வொரு விஷயமும் எவ்வளவு உண்மை என்று அவன் அவளை அறிவது போலவே அறிவான்.

''ஏன் பேசாம இருக்குதிய?''

''ஒண்ணுமில்லை.''

''ஒரு காரியம் சொல்லட்டா? கோவம் வரப்பிடாது?''

''இல்ல சொல்லு.''

''கோவம் வரப்பிடாது.''

''இல்லட்டி.''

''இந்த பலபத்திர பிள்ளைக்க கத வேண்டாம்.''

''ஏன்?''

''அதில உங்க மனசு சமாதானப்படாது.''

''என்ன சொல்லுதே?''

''சொன்னதுதான். பேசாம நீங்க கெ.கெ.எம்மைப் பாத்து அனுக்கிரகம் வாங்கிப்பிடுங்க. அவரு உங்க அப்பா மாதிரி. அவருக்கு நீங்க பிள்ளை மாதிரி. அப்பாவுக்கும் பிள்ளைக்கும் கோவம் வருவதும் எளுப்பம், பந்தம் உடையியதும் எளுப்பம். ஆனா ஒரு சொல்லு போதும், எல்லாம் செரியாயிடும். அதை சொல்லேல்லன்னா காலம் போகப்போக இறுகிப் போயிடும். பிறவு மாப்பு சொல்ல ஆள் இருக்க மாட்டாரு.''

''நீ என்ன உளறிட்டிருக்கேன்னே புரியல்ல.''

''அப்பம் செரி.''

''என்ன செரி?''

''நான் தெரிஞ்சத சொன்னேன். பிறவு உங்க இஷ்டம்.''

அருணாசலம் இருட்டை ஊடுருவி சுவரில் மாட்டப்பட்ட மார்க்ஸின் படத்தைப் பார்த்தான். கனவு நிரம்பிய கண்கள் தெளிவது போலிருந்தது.

''நாகம்...''

''உம்...''

''நீ என்ன நினைக்குதேன்னு சொல்லட்டா? கெ.கெ.எம்முக்குக்கிட்ட நான் பெரிய தப்பு செய்து போட்டேன்னு எனக்கு மனசு குத்துது. எனக்கு

நிம்மதியில்லை. அதனால கெ.கெ.எம் செய்த ஒரு அநீதியை கண்டுபிடிச்சு சரிக்கட்டப் பாக்குதேன், இல்லியா?''

''அப்பிடி நான் சொல்லல்ல.''

''அப்பிடித்தான் சொன்னே.''

''அப்பிடியானா அப்பிடி.''

''கெ.கெ.எம். தப்பு செய்திட்டாருண்ணு காட்டினா நான் செய்த தப்பு மறைஞ்சிடாது; அந்தக் குற்ற உணர்வு கூடத்தான் செய்யுமின்னு சொல்லுதே இல்லியா?''

''உங்களுக்கு தோணுயது மாதிரி.''

''இங்க பாரு, இப்பம் நீ சொன்னது மாதிரி நான் யோசிக்கல்லைண்ணு நினைச்சியா? யோசிச்சேன். எனக்கு திரும்பத்திரும்ப அது அப்பிடியில்லைண்ணுதான் தோணுது. இந்த விஷயத்தை நான் எடுத்துக்கிடுயதுக்கு கெ.கெ.எம். கண்டிப்பா காரணமில்லை. அதுல எனக்கு சந்தேகமே இல்லை.''

''பின்ன?''

''அதுதான் எனக்குத் தெரியல்ல. யாரோ மந்திரம் போட்ட மாதிரி இருக்கு. என் மனசு என்னைமீறி இது மேல போயி ஒட்டிக்கிட்டே இருக்கு. மனசில வேற நினைப்பு நிக்க மாட்டேங்குது. உன் நினைப்பும் சங்கு நினைப்பும் ... ஒண்ணும்...''

நாகம்மை அவன் மார்பில் கை வைத்தாள் ''எனக்கும் இப்பம் அதுதான் தோணுது.''

''என்ன?''

''உண்மையிலேயே யாராவது செய்வினை செய்திருப்பாவளோ? உம் பதவி பிடிக்காதவங்க உண்டு. போட்டியாட்டு ஆராவது...''

''சீச்சி, உளறாதே.''

''இல்ல, அப்பிடி விடப்படாது.''

''எனக்குப் பேய் பிடிச்சிருக்குன்னு நினைக்குதே இல்லையா?''

''அப்பிடியில்ல, மந்திரம்.''

''ஆமா மந்திரம்தான். அங்க பாத்தியா அது யாருண்ணு தெரியுமா?''

''அதுதான் சொன்னியளே, மார்க்கு.''

''மார்க்கு எழுதின சுவிசேஷம். மடக்கழுதை. மார்க்ஸ். சொல்லி பார்க்கலாம் மார்க்ஸ்.''

''ஆமா.''

''என்ன ஆமா?''

''இப்ப சொன்னியளே, அது.''

''மார்க்ஸ்.''

''செரி.''

''சொல்லுடி, மார்க்ஸ்.''

''போங்க'' என்றாள் அவள் கோபத்துடன்.

''செரி விடு. நீ சொல்லாட்டி அந்த மட்டுக்கும் மார்க்ஸுக்கு லாபம். இந்த மார்க்ஸ் ஒரு புஸ்தகத்தில எழுதினாரு – ஐரோப்பாவை ஒரு பூதம் பிடிச்சு ஆட்டி வைக்குது. அந்தப் பூதத்துக்க பேரு கம்யூனிசம். இந்தப் பூமியில உண்டானதிலேயே பெரிய பூதம். அதுக்ககிட்ட ஒரு பேயும் நிக்காது.''

''அது இங்கிலீஷ் பூதம். நம்ம ஊரு வேதாளங்கள் அதை உப்புப் போட்டு தின்னுடும்.''

''பேச்சு மட்டும் பேசு வக்கணையா.''

''சொல்லுததக் கேளுங்க. அச்சுதன் ஆசானிட்ட சொல்லி ஒரு தாயத்து வாங்கிட்டு வாறேன். இடுப்பில கெட்டிக்கிடுங்க. ஆருக்கும் தெரியாது.''

''ஆனா எனக்குத் தெரியுமே. அதைக் கையில கெட்டிக்கிட்டு நான் எப்பிடி பிறகு மார்க்ஸிஸம் பேச முடியும்?''

''அதுக்கும் சேத்து கொஞ்சம் சத்தமா பேசினாப் போரும்'' என்றாள் அவள். ''சும்மா கிடயுங்க. நான் போயி வாங்கத்தான் போறேன். இந்தச் சித்தப்பிரம தொடங்கி இப்பம் மாதம் ஒண்ணாயிடுச்சு. உறக்கமும் இல்ல, ஊணும் இல்ல.''

அருணாசலத்தின் மனம் பதறியது. உண்மைதான். அவனுடைய மனம் ஒரு கணம்கூட நிலைகொள்வதில்லை இப்போது. எப்போது தொடங்கியது இது? கெ.கெ.எம். தோற்கடிக்கப்பட்ட அன்று முதலா? ஆம். அப்படித்தான். ஆனால்...

''இப்பம் தூக்கம் வாற மருந்து ஏதும் வேணுமா?'' என்று அவள் அவன காதருகே மிக அந்தரங்கமாகக் கேட்டாள். பிறகு அவளால் இருளில் மட்டும் சிரிக்க முடிந்த அந்தக் கிளுகிளுப்பான சிரிப்பை எழுப்பினாள்.

◆

4

அருணாசலம் அலுவலகத்திற்கு வந்தபோது அது பூட்டியிருந்தது. தன்னிடமிருந்த சாவியால் திறந்து உள்ளே போய் அமர்ந்தான். செய்வதற்கு ஒன்றுமில்லை என்று முதலில் சோர்வும் பிறகு ஆசுவாசமும் ஏற்பட்டது. செய்தித்தாள்கள் விழுந்து கிடந்தன. ஒன்று செங்கதிர். எடுத்துப் பிரித்தான். ஜகஜித்சிங்கின் கட்டுரை இருந்தது. இந்தியாவிற்கு உகந்தது கூட்டணி ஆட்சி முறையே என்றிருந்தார். உலகின் பல்வேறு தேசங்களில் கம்யூனிஸ்டுகள் இன்று இடதுசாரிப் போக்கோ அனுதாபமோ கொண்ட கட்சிகளுடன் இணைந்து ஆட்சி நடத்துகின்றன. ரஷ்யாவில்கூட அப்படி ஓர் ஆட்சி சீக்கிரம் உருவாகக்கூடும். இந்தியாவின் பன்முகக் கலாச்சாரம் எவ்விதமான மையப் படுத்தலுக்கும் எதிரானது. இந்தியா என்பது ஒரு பெரும் தொகுப்பு. அத்தொகுப்புத் தன்மையை அரசு சரியானபடி பிரதிநிதிகரிக்க வேண்டுமெனில் எல்லாத் தரப்புகளுக்கும் இடமுள்ள கூட்டணி ஆட்சிமுறையே சரியானது. ஒற்றை மையத்தை வலியுறுத்தும் ஓர் அரசு இந்தியாவின் பல்வேறு உபகலாச்சாரக் கூறுகளை அழிக்கிறது. அவை அடக்குமுறைக்கு எதிராகத் தங்களை வலுப் படுத்திக் கொள்கின்றன. விளைவாக பிராந்திய அரசியல் சக்திகள் உருவாகி இந்திய ஒருமைப் பாட்டுக்கே ஆபத்தாகின்றன.

அருணாசலம் பாதி படித்த கட்டுரையை மேஜைமீது போட்டான். அலுப்புடன் சோம்பல் முறித்தான். தொடர்ந்து இதேபாணி கட்டுரைகள், உரைகள் செங்கதிரில் இடம் பெற ஆரம்பித்து விட்டன. ஜகஜித்சிங்கேகூட ஒரு சமரசவாதியாக, இன்னும் கூறப் போனால் அதிகாரத் தரகராக மாறிவிட்டார். எவரும் தெளிவுபடுத்தாத ஒரு விஷயம் ஒவ்வொரு தொண்டன் மனதிலும் ஊசலாடியபடி இருந்தது. இடதுசாரிகளை அனைத்து உட்கூறுகளின் அம்சங்களும் கொண்ட ஒரு மையமாகவா அல்லது ஒரு தரப்பின் பிரதிநிதியாகவா – இத்தலைவர்கள் எப்படிக் கருதுகிறார்கள்? தேசியக் கட்சியாக அவர்கள் தங்களைக் கருதினால் அனைத்து உப கலாச்சாரக் கூறுகளும் ஒரு மையத்தைச் சுற்றி இயங்க முடியும் என்று கூறுகிறார்கள். ஒரு தரப்பாக மட்டும் தங்களைக் கருதுகிறார்கள் என்றால் புரட்சி பற்றிய

கனவுகள் கைவிடப்பட்டாயிற்று என்று பொருள். சமூக மாற்றம் பற்றிய கனவுகளேகூட கைவிடப்பட்டாயிற்று என்றும், இனி கட்சி புரட்சியைத் தயாரிக்கும் புரலட்டேரியன்களின் அமைப்பல்ல. புரலட்டேரியன்களின் நலனுக்காகப் போராடும் ஓர் அமைப்பு. தொழிற் சங்கங்களின் அரசியல் கூட்டமைப்பாகவே இப்போது கட்சி உள்ளது. இனி அதற்கு மானுட குலத்தின் எதிர்காலம் பற்றிய திட்டங்கள் இல்லை. இனி அது கம்யூனிஸ்ட் கட்சியே அல்ல. பெயரில் தவிர மார்க்ஸிடம் அதற்குத் தொடர்பே இல்லை போலும்.

அருணாசலம் தன்னுள் எழும் ஐயங்களுக்கு எதிராக உக்கிரமாக வாதாடும் அந்தக் கற்றறிந்த குரல் மிகவும் பலவீனமடைந்திருப்பதை உணர்ந்தான். முன்னகர்வதில் அவன் நம்பிக்கையிழந்துவிட்டானா என்ன? அல்லது தன் மூளைத்திறன் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டானா? முன்னகர்வதில் ஓர் இழப்பு எப்போதும் உள்ளது. நுட்பமான கூர்மையான அந்த அக இழப்பை தருக்கங்கள் மறைக்க முடியாது. இப்போது அவன் வீரபத்ரபிள்ளையைப் பிடித்துக்கொண்டிருப்பது அதனால்தான் போலும். ஆனால் அதன் மூலம்கூட தன் இடைவெளியைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியாது என்று பட்டது.

மீண்டும் செய்தித்தாள் எடுத்தான். தினமணி. நாகர்கோயில் பக்கத்தில் வழக்கம்போல உதவாக்கரைச் செய்திகள். அம்மன் கொடைகள்; அரசாங்க வளர்ச்சிக் கூட்டங்களில் அதிகாரிகளின் உரைகள், ஓர் இலக்கியக் கூட்டம். ஓர் இரங்கல் கூட்டம். அவனுடைய வேகமான பார்வையில் ஒரு சொல் தட்டுப்பட்டது. எம்.என்.ராய். ''ஆர்.நீலகண்டபிள்ளையைப் பொறுத்தவரை எம்.என். ராய் ஓர் தலைவரும் வழிகாட்டியும் மட்டுமல்ல, வாதிடும் எதிர்த்தரப்பும்கூட. அவர்களிடையே அத்தகைய நட்பார்ந்த உறவு இருந்தது.'' தொண்ணூறாவது வயதில் மறைந்த ஆர்.நீலகண்டபிள்ளையின் இரங்கல் கூட்டத்தில் எழுத்தாளர் எஸ்.எம்.ராமசாமியின் உரை. நீலகண்ட பிள்ளை மாநில ராடிகல் ஹ்யூமனிஸ்ட் கட்சியின் துணைத்தலைவராக பத்து வருடங்கள், கட்சி அதிகாரபூர்வமாகக் கலைக்கப்படுவது வரை இருந்தார். எம்.கோவிந்தன் முதலிய மலையாளப் படைப்பாளிகளிடமும் அவருக்கு நெருக்கமான நட்பு இருந்தது. கேரள சோஷலிஸ்ட்டான மறைந்த ஸ்ரீகண்டன் நாயரின் தனிப்பட்ட நண்பர்களில் ஒருவர். லோஹியாவிடமும் இறுதிவரை நட்பு இருந்தது. திருவிதாங்கூர் காங்கிரஸிலிருந்து, தமிழக சோஷலிஸ்ட் கட்சி வழியாக, ராயிடம் போய்ச் சேர்ந்தார். மொத்தம் மூன்று நூல்கள் எழுதியிருந்தார். இரண்டு ராய் பற்றி. ஒன்று புராதனமான வெண்கல விளக்குகள் பற்றி. பிள்ளை ஒரு பாரிஸ்டர். ஆனால், இறுதிவரை தொழில் செய்யவில்லை. இறுதி நாட்களில் குமரி மாவட்ட வரலாற்று ஆராய்ச்சியில் அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. ஓரிரு கட்டுரைகள் எழுதினார். பிள்ளையின் முதிர்ந்த படம் ஒன்று பிரசுரமாகியிருந்தது. அதில் அவர் புன்னகையின்றி வெறித்துப் பார்த்தார்.

''மார்க்ஸியர் சூழலைக் கருத்தில் கொள்ளாமல் மேலைதேசத்துக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் இங்கு கொண்டுவர முயல்
நார்கள். காந்தியம் இந்த மண்ணிலிருந்து முளைத்ததாயினும் மாறிவரும்

உலகச் சூழலின் அடிப்படை இயல்புகள் சிலவற்றைக் காணமறுக்கக்கூடிய இயல்பு கொண்டதாக இருந்தது. விஞ்ஞானம் மனிதனின் புலனின்பம் சார்ந்த பேராசைக்குப் பயன்படுத்தப்படுவதை காந்தியம் கண்டறிந்தது. ஆனால் மாற்று வழியாக அது தனிநபர் சார்ந்த இலட்சியவாதக் கண்ணோட்டத்தை முன்வைத்தது. காந்தியத்தின் பரிதாபகரமான தோல்வியையே சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவின் சித்திரம் காட்டுகிறது. இவ்விரு எல்லைகளுக்கும் நடுவே முற்றிலும் இந்திய நடைமுறை சார்ந்த ஒரு தரிசனத்தை முன் வைக்க ராயால் முடிந்தது. நேருவுக்கும், ஒருவேளை லோஹியாவிற்கும், இருந்த அறிவு சார்ந்த தாழ்வுணர்வின் விளைவாக ராய் இங்கு புறக்கணிக்கப்பட்டார். மார்க்ஸியர்களின் புத்தக அடிமைத்தனமே அவருக்கு எதிரான சக்தியாக இருந்தது. இன்று நாம் அவரை மறுகண்டுபிடிப்பு செய்து விமரிசனபூர்வமாக அணுக வேண்டியுள்ளது. காந்தியமும் மார்க்ஸியமும் தங்கள் போதாமைகளைக் காட்டிவிட்ட இன்று நாம் ராயிடம் திரும்பும் போது பல ஆச்சரியமான உள்வெளிச்சங்களை அடைய முடியும்..."

எஸ்.எம்.ராமசாமி எப்போது ராயிஸ்ட் ஆனார் என்று புன்னகையுடன் அருணாசலம் எண்ணிக் கொண்டான். அவருக்கு எம்.கோவிந்தன்மீது உள்ள ஈடுபாடு தெரியும். பழைய 'காலநிழல்' இதழில் ராய் பற்றிய ஓரிரு கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. அவன் அந்த இதழை ஊன்றிப் படிக்கவில்லை. நீலகண்டபிள்ளையைச் சந்தித்தால் ஒருவேளை வீரபத்ரபிள்ளை பற்றித் தெரிந்து கொள்ள முடிந்திருக்கும். ஒருவேளை ஆதாரபூர்வமான சில தகவல்கள்கூடக் கிடைத்திருக்கலாம். வீரபத்ர பிள்ளைக்கு ராயிடம் ஈடுபாடு ஏற்படுவதற்குக் கூட அவர் காரணமாய் இருந்திருக்கலாம்.

இப்போதுகூட வாய்ப்பு இல்லாமலில்லை. நீலகண்டபிள்ளையின் குறிப்புகள் கடிதங்கள் ஆகியவை சில மிஞ்சியிருக்கக் கூடும். உடனே ஒரு குறிப்பு எழுதி வைத்துவிட்டு எஸ்.எம். ராமசாமியை சந்திக்கக் கிளம்பினான்.

5

எஸ்.எம்.ராமசாமியின் வீடு, அடையாளமாகச் சொல்லப்பட்ட அம்மன் கோயிலுக்கு முன்னால் இருந்தது. பெரிய வீடு. முகப்பில் ஒரு பெரிய மூங்கில் புதர் இருந்தது. அதன் மஞ்சள் நிறம் மிகவும் மனதைக் கவர்வதாக இருந்தது. பெரிய கரிய வாசற் கதவருகே பெயர்ப்பலகையில் எஸ்.எம்.ராமசாமி என்று மட்டும் இருந்தது. தயங்கிவிட்டு வாசலைத் திறந்து உள்ளே போனான். தொலைபேசியில் சொல்லிவிட்டு வந்திருக்கலாமோ என்று அப்போதுதான் பட்டது. வீட்டுக்கு மேல் ஒரு பழைய கிருஷ்ணன் சிலை இருந்தது. பழைய பாணியிலான பங்களா. இரட்டைத் தூண்களும் அலங்கார உத்தரமும் கொண்ட முகப்புத் திண்ணை. அதிலிருந்து அஸ்பெஸ்டாஸ் கூரையொன்று இறங்கி ஒரு முகப்பு வளைவை அமைத்திருந்தது. அதன்மீது அடர்த்தியாக ஏதோ கொடி படர்ந்திருந்தது. இரண்டு இருசக்கர வாகனங்கள் நின்றன. திண்ணையில் செருப்புகள் கிடந்தன. தன் செருப்பைக் கழற்றிவிட்டு இடதுபக்க அழைப்பு மணியை அழுத்தினான். உள்ளே மணியொலி கேட்டது. டி.வி. ஓடுவதும் கேட்டது.

உள்ளிருந்து ஒரு பெண் - உதவியாளர் என்று தெரிந்தது - எட்டிப் பார்த்து ''யாரு'' என்றாள். வராண்டாவின் இருபக்க அறைகளிலும் ஆட்கள் வேலை செய்வது கதவிடுக்கு வழியாகத் தெரிந்தது. இடது பக்கம் கம்ப்யூட்டர் திரை. அதன்முன் ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். வலது பக்கம் நரைத்த வெண்முடி விரிந்து நிற்கும் தலையுடைய ஒரு மனிதர் எதையோ கூர்ந்து படித்துத் திருத்திக் கொண்டிருந்தார். ''எம்பேரு அருணாசலம். மாநிலத் தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளர். சாரைப் பார்க்கணும்''

''இரியுங்க'' என்று உட்புறமாகக் கையைக் காட்டிவிட்டு உள்ளே போனாள். அவன் வெளியே நின்றான். முதியவர் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்தார். அது புத்தகமில்லை, ஏதோ புரூஃப். பெண் திரும்பி வந்து ''உள்ளே கூப்பிடறார். வலது பக்கம் கண்ணாடி போட்ட ரூம்ல இருக்கார்'' என்றாள். உள் அறை அரையிருட்டாக இருந்தது. காரின் இருக்கை போன்ற, ஆழ்ந்த மண் நிறமான

சோபாக்கள் கிடந்தன. ஒல்லியான, சுறுசுறுப்பான சிறுவன் லயித்துப்போய் தொலைக்காட்சிப் பெட்டியில் கார்ட்டூன் பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ விசித்திரமான பிராணி உறுமலாகப் பேசியபடி வாலை சுழற்றியது. பையன் மறைக்காதே போ என்பதுபோல கண்களை விலக்காமலே கையை காட்டினான். விருந்தாளிகளைப் பார்த்து சலித்துப் போயிருப்பான் போலிருக்கிறது. உள்ளே போனபோது வீட்டின் அமைப்பு மாறியது சற்று வியப்பு தந்தது. வெளிச்சமான விரிவான ஹால். இடதுபக்கம் பெரிய சாப்பாட்டு மேஜை. அதன்மீது சில புத்தகங்கள். அதன்மேல் சுவரில் பச்சை மஞ்சள் நிறத்தில் பைத்தியக்களை கொண்ட தொப்பிக்காரனின் ஓவியம். நேர் எதிரே ஓர் ஒப்பனை மேஜை. பழங்கால மேஜை. கண்ணாடி ஓவல் வடிவில் சற்று மங்கலாக இருந்தது. மூங்கில் பின்னப்பட்ட ஒரு வளைந்த நாற்காலியும் ஒரு மூங்கில் டீபாயும் கிடந்தன. இடதுபக்கம் ஒரு அங்கணம். மேலே கண்ணாடிக் கூரை. அங்கணத்தில் சிறு செடிகள் இருந்தன. கூரையினூடாக வெயில் அவற்றின்மீது கொட்டி அவை பச்சை விளக்குகள் போல ஒளிவிட்டன.

அருணாசலம் தயங்கி நின்றான். சாப்பாட்டு மேஜையில் வந்து அமர்ந்த பாண்ட் டி ஷர்ட் அணிந்த பெண் ''உள்ளே போங்க'' என்று கண்ணாடி அறையைக் காட்டினாள். அவள் அவருடைய மகளாக இருக்கக் கூடும். நடை தோரணை அனைத்திலும் சற்று ஆண்மை கலந்த கம்பீரம் இருந்தது. மூக்கு பிரதானமாக இருந்த நீள முகம். கண்ணாடி அறைக்குப் போகும் வராண்டாவில் இடது பக்கம் புத்தக அடுக்குகள். மூலதனம் ருஷ்யப் பதிப்பு. கலைக் களஞ்சியங்கள். வலது பக்கம் கைப்பிடிச் சுவரில் கூடையில் செய்தித்தாள்கள். தவிட்டு நிறமான கனத்த திரைச்சீலை அலையலையாக நெளிந்து கண்ணாடிச் சுவரை மூடியிருந்தது. உள்ளே ஒரு கம்ப்யூட்டர் மேஜையும் இரு நாற்காலிகளும் கிடந்தன. கம்ப்யூட்டர் மூடப்பட்டிருந்தது. உயரம் குறைவான அகலமான கட்டிலில் மெத்தைமீது ஒருவர் படுத்திருந்தார். சுமார் அறுபது வயதானவர். பனியனும் வேட்டியும் அணிந்திருந்தார். அருகே மூக்குக் கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணின் சாயல் தெரிந்தது; குறிப்பாக மூக்கு. அவர் புன்னகையுடன் ''வாங்க'' என்றார். அவரது தோற்றம் வட இந்தியருடையது போல. சட்டென்று அவர் தமிழ் பேசியது வியப்புத் தருவதுபோல இருந்தது. மீசையில்லாத சிவந்த முகத்தில் துல்லியமான பற்களுடன் கூடிய சிரிப்பின் நட்பும் அழகும் அவனை மிகவும் கவர்ந்தன. அவர் அமரச் சொன்னார். தயங்கியபடி உட்கார்ந்தான். அவருடைய நட்பு நிரம்பிய புன்னகைக்கு அப்பால் அவரது முகபாவனையும் கண்களும் எதையும் அதிகமாக கவனிக்காமல் தனக்குள் யோசித்தபடி, உழன்றபடி, இருப்பவருடையவை போலிருந்தன. காதோர மயிர் சாம்பல் நிற நரையுடன் சிலுப்பியபடி நின்றது.

அவருடன் இருந்த இளைஞன் மிகுந்த உற்சாகத்துடன், கேட்பவர் பற்றிய கவலை கிஞ்சித்தும் இல்லாமல், ஏதோ பேசியபடி இருந்து, அவன் வருகையால் அது அறுபட்டுபோய், சற்றுப் பொறுமையிழந்தவனாக இருந்தான். அருணாசலம் அமரக் காத்திருந்தவன்போல அவன் ''நான் போனப்ப யாருமேயில்லை சார். மூணுபேர் இருந்தாங்க. இவரு மைக்கை

நின்னு பயங்கரமா கைகாலையெல்லாம் ஆட்டிக்கிட்டு பேசிட்டிருக்காரு...''

எஸ். எம். ராமசாமி அவனை அதிகம் பொருட்படுத்தவில்லை என்று தெரிந்தது. அவன் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவுமில்லை. அவனுக்கு அவனுடைய பேச்சு தவிர வேறு எதுவும் முக்கியமில்லாதது போலிருந்தது.

ராமசாமி அகலமான கட்டிலின் மெத்தைமீது படுத்துக் கொண்டார். அருணாசலத்தை அமரச் சொன்னார். தயங்கியபடி அவன் அமர்ந்தான்.

''இவரைத் தெரியுமா?'' என்றார் ராமசாமி.

''தெரியல்லியே.''

''இவரு முக்கியமான தமிழ் எழுத்தாளர். சமீபமா இவர்தான் ஸ்டார்'' ராமசாமியின் குரலில் சிறு கேலி இருந்தது. ''பேரு ஜெயமோகன். தருமபுரியில் டெலிபோன்ல வேலை பார்க்கிறார். ரப்பர்னு ஒரு நாவலும் திசைகளின் நடுவேன்னு ஒரு சிறுகதைத் தொகுப்பும் வந்திருக்கு. புதிசா பெரிசா ஒரு நாவல் எழுதிட்டிருக்கார். விஷ்ணுபுரம்னு பேரு...''

''நீங்கதானா?'' என்றான் அருணாசலம் ''சந்திச்சதில சந்தோஷம். ரப்பர் படிச்சிருக்கேன். மத்த புஸ்தகங்கள் கிடைக்கல்ல. ரப்பர் பின் அட்டைல உங்க படம் ரொம்ப சின்னப் பையனாட்டு இருந்ததா ஞாபகம்...''

''அப்ப சின்னப் பையனாத்தான் இருந்தேன்'' என்றான் ஜெயமோகன். அந்த இடக்கு அருணாசலத்திற்குக் கோபத்தை வரவழைத்தது.

''ரப்பர் உங்களுக்கு பிடிச்சிருக்கா?'' என்றார் ராமசாமி.

''பிடிக்காம இல்ல...'' அருணாசலம் இழுத்தான்.

''ரப்பர் தொழிலாளிகள் சங்கம் வைச்சுப் போராடுற விஷயம் நாவல்ல இல்லைண்ணு தோணிச்சா?'' என்றான் ஜெயமோகன்.

பிறரை எடுத்த எடுப்பிலேயே குறைத்து மதிப்பிடும் அந்த அகங்காரம் முதிர்ச்சியின்மையின் விளைவு என்று பட்டது அருணாசலத்திற்கு. இந்த இளைஞன் தன்னைப் பற்றிய மிதமிஞ்சிய சுயமதிப்பு கொண்டவனாக இருக்கக்கூடும். அவன் தன் எரிச்சலை உள்ளே அடக்கிக்கொண்டு ராமசாமியிடம் ''ரப்பர் ஒரு குறியீடுன்னு எடுத்துக்கொண்டாக்கூட ரப்பரைச் சுத்தி நடக்குற அந்த வாழ்க்கையில ரப்பர்த் தொழிலாளிக்கு ஓர் இடம் இருக்கு. அவன் இல்லாத நாவல் முழுமையாயிட்டுதுண்ணு சொல்ல முடியாது'' என்றான்.

''முக்கியமான ஒரு கருத்துதான்'' என்றார் ராமசாமி, ஜெயமோகனிடம்.

ஆனால் விமர்சனங்களையெல்லாம் எதிர்ப்பாக தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்டுவிடுபவன் ஜெயமோகன் என்பது அவன் அடைந்த பதற்றம் மூலம் தெரிந்தது. ''நடுநடுவில நாலு சிந்தாபாத் இருந்திருக்கலாம்னு சொல்றியளா?'' என்று அவன் ஏளனத்துடன் கேட்டான்.

''ஆமா, என்ன தப்பு? ரப்பர்த் தோட்டங்களில எப்பவும் சிந்தாபாத் கேட்டுட்டுதான் இருக்கு. ஏன் நீங்க காதைப் பொத்திக்கிடறீங்க?''

ராமசாமி ஒரு சுமுகத்தன்மையை உருவாக்கும்பொருட்டு மறு புகுந்தார். ''உங்க வீடு எங்க?''

''பார்வதிபுரம்.''

''வேலை பார்க்கறீங்களா?''

''ஆமா. எம்.இ.எஸ். தோட்டத்து ஆபீஸ்ல கிளார்க்.''

''எத்தனை குழந்தைகள்?''

''ஒண்ணு. பேரு கௌரி.''

''ஏன் கௌரீண்ணு பேரு?''

அருணாசலம் வெட்கி ''தோழர் கௌரி ஞாபகமாத்தான்....'' என்றான்.

அவர் புன்னகை புரிந்தார். அந்தப் புன்னகை அவரை அவன் பார்த்தவர்களிலேயே அழகானவராகக் காட்டிற்று. அது கல்வியினூடாக வரும் அழகு என்று தோன்றியது. மார்க்ஸ் அப்படி அழகாக இருந்திருக்கக் கூடும்...

''கட்சி உறுப்பினரா?''

''ஆமா'' என்றான். அவரே பேசுவதை உணர்ந்து ''உங்க கதைகள் சிலதுதான் படிச்சிருக்கேன். வேப்பம் தெருவின் கதை அப்ப ரொம்ப பிடிச்சிருந்தது. இப்ப வந்ததே கெ.கெ.சரித்திரம் அது அவ்வளவு பிடிக்கல்ல.''

''ஏன்?''

''அதிப்பம் கரெட்டாட்டு சொல்ல முடியாது.''

''மார்க்ஸியத்தை எதுக்குதுண்ணா?''

''இல்லை. கண்டிப்பா இல்லை. எனக்கு பட்டத்துவிளை கருணாகரன் கதைகள்லாம்கூட ரொம்பப் பிடிக்கும். இது அதில்ல. இது ஒரு மாதிரி செயற்கையாட்டு இருக்குத மாதிரி...''

''கதையிலயா?''

''இல்ல. கதாபாத்திரங்கள்லாம் கார்ட்டூன் மாதிரி ஆயிப்போட்டி கார்ட்டூன்களுக்கு ஒரே அர்த்தம்தான். மனுஷங்க மாதிரி தெளிவில்லாமலே மாறிட்டேயிருக்கிற மாதிரியோ அதுங்க இருக்கிறதில்ல. பின்ன அந்த நாவல்ல உள்ள கிண்டலும் வேடிக்கையுமெல்லாம் கொஞ்சம் வலிந்து செய்றது மாதிரி இருந்தது. கௌரவமான பெரியவங்க சின்னப்பையன்ங்க கிட்ட பேசறப்ப ஜோக் அடிக்குதது மாதிரி. பையன்களுக்குத்தான் சங்கட மா இருக்கும்...''

ராமசாமி சிரித்துவிட்டார்.

''அதில உள்ள சிந்தனைகள்கூட எனக்கு அவ்வளவாட்டு உறைக்கல்ல பல வரிகளை சாமர்த்தியமான பேச்சுகள்ளுதான் சொல்லணுமேயொழி அதில இருந்து மேக்கொண்டு யோசிச்சுப் போறது மாதிரி இல்ல. எனக்கு

தோணின காரணம் தத்துவத்திலயோ அரசியல் சித்தாந்தங்களிலேயோ தேவையான் அளவுக்குப் படிப்பு இல்லாம சொந்த சிந்தனைய மட்டும் நம்பி எழுதின வரிகள்தான் அதெல்லாம்முனு...''

''ஏன் அப்பிடி இருக்கப்பிடாது...''

''எப்பிடி இருந்தாலும் சிந்தனை ஒரு தொடர்ச்சிதான். தத்துவம், அரசியல், மதம் விஞ்ஞானம் எல்லாத்தயும் போதுமான அளவுக்குப் படிச்சா சிந்தனைக்க காலப்பொருத்தம் கூடுது. படிக்கல்லேண்ணா தற்செயலாட்டு தெரியவந்த விஷயங்களுக்க தொடர்ச்சியாட்டு சிந்தனை இருக்கும். உங்க நாவலில் நீங்க ரொம்ப அழுத்திச் சொல்லுத பல இடங்கள் ரொம்ப சாதாரணமாட்டு இருக்கு...''

''உதாரணமா?'' என்றார் ராமசாமி கூர்ந்த பார்வையுடன்.

''இப்ப ஒரு இடத்தில் இப்பிடி சொல்றீங்க. நேத்தைய புரட்சியாளனை இன்றைய புரட்சியாளன் தாண்டிச் செல்கிறான். இந்தமாதிரி வரிகள் தத்துவப் பழக்கம் உள்ளவங்களுக்கு உறைக்காது. இதுமாதிரி வரிகள் நம்ம தினசரிப் பேச்சிலயே நிறைய வரும். தத்துவார்த்தமான கருத்துக்கு எப்பவும் ஒரு அபூர்வத் தன்மை இருக்கு. ரொம்ப நல்லா தெரிஞ்ச விஷயமா இருந்தாக்கூட தத்துவார்த்தமா சொல்றப்ப அபூர்வத் தன்மை வந்திடுது. அதைச் சொல்ற முறைல வரக்கூடிய ஆச்சரியத்த சொல்லல்ல. அந்தக் கருத்து சட்டுண்னு ஒரு குறிப்பிட்ட விதத்தில மொத்த வாழ்க்கையையும் அளந்து வகுத்துடறதனால வாற அபூர்வத்தன்மை அது. இப்ப உதாரணமா சார்த்தோட ஒரு வரி இருக்கே. ரெண்டு மனுஷங்களுக்கு மத்தியில இருக்கிற உறவு ஒத்துமையால இல்ல மோதலினாலத்தான் தீர்மானிக்கப்படுதுண்னு. நான் அதை ஏத்துக்கிடலை. ஆனா அதைக் கேட்ட உடனே வாழ்க்கை மளமளன்னு ஒரு குறிப்பிட்ட வரிசையில வந்து நிண்ணு அணி வகுக்க ஆரம்பிச்சிடுது.''

ராமசாமியின் கண்கள் மங்கின. ஜெயமோகன் அருணாசலத்தின் பேச்சால் சற்று அரண்டுவிட்டவன் போலவோ, சீண்டப்பட்டவன் போலவோ தோன்றினான். ஆவேசமாக விவாதித்து அருணாசலத்தை மடக்க விரும்பு கிறவன்போல ''நீங்க நாவலை நாவலாப் படிக்கல்ல; தத்துவ நூலாட்டு படிக்கிறீங்க. நாவல்ல அப்பிடி வரிகள் வரக் கூடாதுன்னு யாரு சொன்னது?'' என்றான்.

''வரலாம். ஒரு கதாபாத்திரம் இல்லாட்டி ஒரு கதைச் சந்தர்ப்பத்துக்ககூட ஒட்டி வாற வரிக்கு நாவலுக்குள்ள புதிசுபுதிசா அர்த்தங்கள் வந்திட்டே இருக்கும். இப்ப ஒரு கதாபாத்திரம் வாழ்க்கையில ஒண்ணுக்கும் அர்த்தமில்லைண்ணு சொல்லுது. அந்த வரி ரொம்ப சாதாரணமானது. ஆனா அந்த கதாபாத்திரம் தற்கொலை செஞ்சுகிடுததுக்கு முன்னாடி அதை சொல்லுதப்ப நாம அப்பிடியே அதிர்ந்து போயிடலாம் இல்லியா? இந்த நாவலில இந்த மாதிரி வரியெல்லாம் அந்த வரிகளுக்க பெலத்திலயே நிக்குக மாதிரித்தானே வருது? அங்கதான் பிரச்சினை.''

''நாவல வச்சிக்கிட்டு கற்பனை பண்ணப் படிக்கணும். தர்க்கம் பண்ணக்கூடாது...'' ஜெயமோகன் மிகவும் சீண்டப்பட்டவனாக பேச ஆரம்பித்தான்.

ராமசாமி ''அவர் சொன்னதுதான் சரி, ஜெயமோகன்'' என்றார் ''தத்துவத்துக்கும் நாவலுக்கும் இடையில் அப்பிடி ஒரு பிரச்சினை இருக்கு அது சம்பந்தமா ஒரு விவாதத்துக்கு இடமிருக்கு. ஆனா நாவல் வந்து இத்தனை காலம் ஆன பிறகும் இந்தமாதிரி ஒரு கேள்வி யாரும் கேட்கல்ல அருணாசலம்.''

அவர் தன் பெயரைச் சொன்னது அருணாசலத்திற்கு மிக இனிமையாக இருந்தது.

''தத்துவம் தருக்க சாத்தியங்களைக் கோருது. இலக்கியம் கற்பனை சாத்தியங்களைக் கோருது. ரெண்டையும் ஒரு நாவல் அடையணும். அதுக்கு நாவல் படிமத்தன்மைய அடையணும். கெ.கெ.சரித்திரத்தில் சில இடங்களில படிமத்தன்மை இருக்கு. மொத்தமா படிமத்தன்மை இல்ல அதான் அதோட பிரச்சினை, இல்லையா?'' என்றார் ராமசாமி.

அருணாசலம் ''எனக்கு இலக்கியம் பத்தி அதிகமா சொல்லத் தெரியல்ல எனக்க ஆர்வம் தத்துவம், அரசியல் சித்தாந்தம் ரெண்டிலயும்தான்...'' என்றான்.

''ஆனா அதிலயும் பிரச்சினைகள் இருக்கு. தத்துவத்தில் வாறது உருவகம் இலக்கியத்தில படிமம். முன்னதுக்கு திட்டவட்டமான அர்த்தம் உண்டு அப்பிடிப் பார்க்கிறப்ப ஒரு நாவல் தத்துவார்த்தமான பிரச்சினைகளை எடுத்துக்கிடலாமேயொழிய விவாதிக்க முடியாதுண்ணு படுது.''

''புரியல்ல.''

''தத்துவப் பிரச்சினைல தொடங்கி கற்பனைகள் வழியா ஒரு கனவைப் போய் அடையலாம். அவ்வளவுதான் சாத்தியம்.'' ராமசாமி பெருமூச்சு விட்டார் ''சும்மா இப்போதைக்கு அப்பிடிப் படுது...''

ஜெயமோகன் ஒரிருமுறை பேச்சில் ஊடுருவ முயல்வதை அருணாசலம் கவனித்தான். ராமசாமி அதைத் தவிர்த்தபோது அவன் விலகி ஒரு இதழை எடுத்து புரட்ட ஆரம்பித்தான். தன் குரலைத் தவிர வேறு எதையும் அவன் கேட்க விரும்பவில்லை என்று பட்டது. ஓர் இலக்கியவாதி இத்தனை உதாசீனமான சிரத்தை கொண்டிருப்பது அவனுக்கு வியப்பாகவும் எரிச்சலாகவும் இருந்தது.

ராமசாமி எதையோ ஆமோதிப்பவர்போல ஜன்னலைப் பார்த்தவாறு தலையை ஆட்டினார். மார்பின் மயிர்களினூடாக விரல்களை ஓட்டியபடி மெத்தையின் விரிப்புமீது சுட்டுவிரலால் வட்டமாக ஏதோ வரைந்தார்.

''நீங்க கட்சியில இருந்தியளா?' என்றான் அருணாசலம்.

''கட்சிக்கு அனுதாபியா இருந்தேன். தலைவர்களைத் தெரியும்.''

''ஏன் விலகினீங்க?''

''இதைக் கேக்கத்தான் வந்திங்களா?'' என்று சிரித்தார்.

''இல்லை சும்மா கேட்டேன்.''

''எங்கப்பாவுக்க சர்வாதிகாரத்தை எதுக்கத்தான் நான் கட்சி அனுதாபி ஆனேன். அங்க ஸ்டாலின் எங்கப்பாவவிட பெரிய சர்வாதிகாரியா இருந்தார். தாங்க முடியாம வந்துட்டேன்.''

''இப்ப கட்சிமேல அனுதாபம் உண்டா?'' என்றான் அருணாசலம்.

''அவங்களுக்குத்தான் என்மேல அனுதாபம் இல்லை.''

ஜெயமோகன் உரக்கச் சிரித்தான். அருணாசலம் அவனை மேலும் வெறுத்தான்.

''இப்ப கட்சிக்குள்ள நிறைய மாற்றங்கள் வந்திட்டிருக்கு. சர்வாதிகாரத்தை இப்ப யாரும் ஒத்துக்கிறதில்லை. சொல்லப் போனா ஜனநாயகபூர்வமா கட்சியையும் கட்சியோட மனோபாவத்தையும் மாத்தறது எப்படிங்கிறதுதான் இப்ப முக்கியமான பிரச்சினையாட்டு இருக்கு. எங்க சங்கத்திலகூட மாற்றம் வந்தாச்சு.''

''கெ.கெ.எம். உங்க சங்கம்தானே?''

''அவருதான் நாலுமாசம் முன்ன வரைக்கும் எங்க தலைவர். இப்ப அவர் இல்லை. அவருக்கு ஸ்டாலின்தான் ஒரே வழிகாட்டி. ஸ்டாலினிஸ்டுகள் இப்ப கட்சியில இருந்து உதிர்ந்து விழுந்துட்டு இருக்காங்க.''

''கெ.கெ.எம் ஸ்டாலினிஸ்டு இல்லை. அவரு ஒரு காரணவர். பழைய நாயர் தறவாடுகளில இருக்க வேண்டிய ஆள்.''

''கெ.கெ.எம்மை எப்படித் தெரியும்?''

''நானும் அவரும் சேந்துதான் தோப்பில் பாசியோட 'நிங்கள் என்னை கம்யூனிஸ்டாக்கி' நாடகம் பாத்தோம். சேந்து சுத்தியிருக்கம்.''

''கெ.கெ.எம்முக்கு நாடகம் ரொம்ப பிடிக்கும்னு சொல்லுவார்.''

''நாடகம், சினிமா, கதாபிரசங்கம், பாட்டு எல்லாமே பிடிக்கும். பைத்தியம் மாதிரிப் பார்ப்பார். கூசாம பத்து மைல் நடந்து போயிப் பார்ப்பார். ஒரு தடவை கேட்டேன் தோப்பில் பாசி நாடகங்களைவிட கெ.டி.குட்டி நாடகங்கள் நல்லாயிருக்கேன்னு. அப்ப அவரு ரகசியமா எங்கிட்ட கேட்டார். என்னடே ராமசாமி இந்த மாதிரி நல்ல நாடகம் கெட்ட நாடகம்னு சொல்லுதானுவளே அப்படீன்னா என்ன? எல்லா நாடகமும் நல்லாத்தானேடே இருக்கு அப்டீன்னு. நாடகத்தில நடிக்கணும்னும் பாடணும்னும் பயங்கர ஆசை. ஆனா அந்தக் காலத்தில கம்யூனிஸ்டுகள் மத்தியில நாடகம், சினிமா, பாட்டு எல்லாம் ரெண்டாம்பட்சமான விஷயங்கள்; கட்சியில உள்ள சாமானிய ஆட்கள் செய்ய வேண்டியவைன்னு ஒரு எண்ணம் இருந்தது.'' எஸ்.எம்.ராமசாமி திடீரென்று பெரிதாகச் சிரித்தார். ''ஒரு நாளைக்கு கெ.கெ.எம். எங்கிட்டே கேட்டார், என்னடே ராமசாமி, இந்த திக்குறிச்சி சுகுமாரன் நாயர் என்னைவிட அழகான்னு... ஹெஹெஹெ.''

''இப்ப கெ.கெ.எம். பழைய காரணவர்னு சொன்னிங்க. அதுக்கும் ஸ்டாலினிசத்துக்கும் என்ன வித்தியாசம்?''

''நாம பாத்ததெல்லாம் முதல் கேசுதான். அது நிலபிரபுத்துவகால மனோபாவத்தால உருவாறது. நிலப்பிரபுத்துவத்தில எப்பவுமே மூத்தார் வழிபாடு உண்டு. நீத்தார் வழிபாடோட தொடர்ச்சி அது.''

''அல்லது இதுக்க தொடர்ச்சி அது'' என்றான் ஜெயமோகன். எஸ்.எம்.ராமசாமி அதைக் கவனிக்கவில்லை.

''குலமுறை, ஆச்சாரம் எல்லாம் சேந்து உருவாகிற ஒரு சமூக அதிகாரம் அது. அதில ஒரு ஒழுங்கு முறையும் உண்டு. அதே சடங்கும் ஆசாரமும் அவனுக்கு சில கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிச்சிருக்கு. அதை அவன் மீற முடியாது. ஆனா பாசிசமும், நாசிசமும், ஸ்டாலினிசமும் கூத்தமா வேறவகையான அடிப்படை உள்ள விஷயங்கள். தொழிற்புரட்சி இல்லேன்னா இந்த வகையான பரிபூர்ணமான சர்வாதிகாரம் வந்திருக்காது. பழையகால மன்னர்கள் மிஞ்சிப்போனா கடவுளோட பிரதிநிதிகள்தான். கடவுளுக்குக் கட்டுப்பட்டுதான் அவங்க செயல்பட முடியும். கடவுள்னா ஒரு மதிப்பீடு அல்லது மதிப்பீடுகளோட தொகுப்புதானே? ஆனா நவீன சர்வாதிகாரிங்கிறவன் அவனே கடவுள். சமூகத்தோட மையமே அவன்தான்...''

''நாசிசம், பாசிசம், ஸ்டாலினிசம் மூணையும் ஒண்ணா சேத்துச் சொல்ல முடியுமா?''

''கண்டிப்பா. பேருதான் வேறவேற. மத்தபடி கொள்கை நடைமுறை எல்லாமே இந்த மூணிலயும் ஒண்ணுதான். சமூகத்தையும் பிரபஞ்சத்தையும் பெரிய யந்திரமா உருவகிக்கிற போக்கு இது மூணுக்கும் அடிப்படை. அந்த எந்திரத்தோட இயங்குமுறை என்னான்னு புரிஞ்சுக்கிட்டு அதை இஷ்டப்படி ஆட்டி வைக்கலாம், மாத்தியமைக்கலாம்னு இந்த சர்வாதிகாரிகள் நம்பினாங்க. முஸ்தபா கமால் பாஷா, மாவோ, கரிபால்டி எல்லாரும் இந்த வம்சம்தான். இடி அமீனும், போல்பாட்டும்கூட இந்த வம்சத்திலே உதிச்சவங்கதான்.''

அருணாசலம் அவருடைய குரலில் வாதிடுபவர்களுக்குரிய ஆர்வத்துக்குப் பதிலாக உள்ளார்ந்த கோபம் மட்டும் இருப்பதை அறிந்தான். அது அவனது சித்தாந்தியை வாயடையச் செய்துவிட்டது என்று பட்டது.

''அப்ப சமூகத்தை மாத்த முடியாது, அதுக்கு முயற்சி பண்ணக் கூடாதுங்கிறியளா?''

''சமூகத்தை அதனுடைய ஒண்ணோ ரெண்டோ நூறோ ஆயிரமோ விதிகளை வச்சு ஒரு நாளைக்கும் முழுசா புரிஞ்சுகிட முடியாது. நமக்குத் தெரிஞ்சதும் தெரியாததும், தெரிஞ்சுக்கவே முடியாததுமான பல லட்சம் கோடி விதிகளினால அது உருவாகி இயங்கிட்டிருக்கு. அத நாம ஆராய்ச்சி பண்றப்ப நம்ம தேவை எதுவோ அதைத்தான் தேடறோம். நம்ம கற்பனை எவ்வளவு தூரம் விரியுமோ அதுக்குள்ளதான் ஊகங்களை உருவாக்கிக் கறோம். அந்த ஊகங்களில சிலதுதான் விதிமுறையா நிரூபிக்கப்படுது. இதனால எப்பவுமே நாம பாக்கிறது ஒரு சில பக்கங்களை மட்டும்தான்.

அதனடிப்படையில நாம சமூகத்தை மாத்தியமைக்கப் போனா அது அழிவைத்தான் தரும். அந்த அழிவுதான் சர்வாதிகார நாடுகளில உண்டான போல்பாட்டுக்க கம்போடியாவுக்கும் அழிவுக்க அளவிலதான் வித்தியாசம்.''

''அப்ப சமூகத்தை மாற்றக் கூடாதா?''

''சமூகத்தை அந்த சமூகத்துக்க ஒரு பகுதியா இருந்துட்டு மாற்ற முயற்சி பண்ணலாம். எல்லா சமூகக் கூறும் அதிலதான் தொடர்ந்து ஈடுபட்டிருக்கு. பிற கூறுகள் அதை எதுக்கும். அப்ப இயல்பான போட்டி ஒண்ணு உருவாகுது. ஒரு சாலையை ஒரு வழிப்பாதையா ஆக்கினா வியாபாரிகள் எதுப்பாங்க. வண்டி ஓட்டறவங்க ஆதரிப்பாங்க. சில பாதசாரிகள் எதுப்பாங்க. கடைசியில உருவாகிறது ஒரு சமரசம். அந்த சமரசப் புள்ளிதான் எல்லாருக்கும் பொதுவானது. நல்ல சமூகம் அந்த மாதிரி சமரசப் புள்ளிகள் சேந்து உருவான ஒரு அமைப்பா இருக்கும்...''

அருணாசலத்திற்கு கதிர் ஞாபகம் வந்தது.

''ஆனா, சர்வாதிகாரம் செயல்பட்ற முறை இது இல்லை. அது சமூகத்துக்க மேல ஏறி உக்காந்திருக்கு. நினைச்சா சமூகத்தை நிர்மூலம் பண்ற சக்தி அதன் கையில இருக்கு. சமூகம் இப்பிடி இருக்கணும்னு அது ஒரு திட்டத்தைப் போடுது. அதுக்கேற்ப சமூகத்தை அழிச்சு மறுபடியும் உருவாக்குது. அழிக்கத்தான் முடியும். மறுபடியும் உருவாக்க முடியல்லை. இதுதான் உலக வரலாற்றில மறுபடியும் மறுபடியும் நிரூபணமாகியிருக்கு. ஒரு டாக்டர் தன்னோட நோயாளியோட உடம்பில உறுப்புகள் வேற மாதிரி இணைஞ்சிருக்கலாம்னு நினைச்சு வெட்டி வெட்டி ஒட்ட ஆரம்பிச்சா என்ன ஆகும்? சமூகங்கிறது ஒரு யந்திரமில்லை. அது ஒரு உயிர். அதை தொழிற் புரட்சியோட வாரிசுகள் இன்னும் புரிஞ்சுக்கல...''

''ஆனா ஸ்டாலின் பெரிய முன்னேற்றங்களைக் கொண்டு வந்தார்.''

''அது ஒரு தோற்றம்தான்னு இப்ப நிரூபணமாயிடுச்சே. ஸ்டாலினால கம்யூனிசத்துக்க அடிப்படையான நிலச் சீர்திருத்தத்தையே நடைமுறைப் படுத்தமுடியல்ல. ஒன்றரைகோடி விவசாயிகளைக் கொண்ணுபோட்டு விவசாய அமைப்பை நாசம் பண்ணினதுதான் பலன். அவர் காலத்திலதான் உலகத்திலேயே பெரிய தானியக் களஞ்சியங்களில ஒண்ணான உக்ரேய்னில பஞ்சம் வந்து பல லட்சம் பேர் இறந்தாங்க. இன்னைக்கும் உக்ரேன் மீளலை.'' எஸ்.எம்.ராமசாமி பெருமூச்சுடன் சரிந்து படுத்தார். சிந்தனை யுடன் சுட்டுவிரலால் காற்றில் எதையோ எழுதினார். ''சர்வாதிகாரிகள் ஒரு விஷயத்தை அமுல்படுத்த முயற்சி பண்ணுவாங்க. அவங்க நிட்டப்படி அது ரொம்ப எளிமையான விஷயமா இருக்கும். நினைச்சிருக்காத இடங்களில இருந்தெல்லாம் அதுக்கு எதிர்ப்பு வரும். எதிர்ப்புகளைத் தனக்கு எதிரான சதியாகத்தான் அவங்க எடுத்துக்குவாங்க. மேலும்மேலும் கோபவெறி வரும். மேலும்மேலும் அடக்குமுறையை ஏவிவிடுவாங்க. மலையை உடைச்சு புரட்டி, காட்ட அழிச்சு, கடைசில செத்த எலியை பிடிச்சுட்டு

சாதனை சாதனைன்னு கூப்பாடு போடுவாங்க. வரலாற்றயும் எழுதி
கிடுவாங்க. மாவோ இரும்பு உருக்கும் தொழிலை குடிசைத் தொழில் மாதி
நாடெங்கும் பரவலா நடத்தறதுக்கு ஒரு திட்டம் போட்டு நடைமுறை
படுத்தினார் தெரியுமா? இப்ப அதைப் பத்தி பல புஸ்தகங்கள் வந்தாச்
ஏதோ ஒரு காரணத்தினாலத்தான் இரும்புத்தொழில் கனரகத் தொழிலா ஒ
சில குறிப்பிட்ட இடங்களில மட்டும் இருந்து வந்திருக்கு. அந்தக் காரண
என்னன்னு யோசிக்காம ஒரு அரசாங்க உத்தரவு மூலம் எல்லாத்தையு
தலைகீழா மாத்த முயற்சி பண்ணினார் மாவோ. இப்ப படிக்கிறப்ப
பைத்தியக்காரத்தனமா இருக்கு ஒவ்வொண்ணும். எத்தனை பெரிய அழிவ
மனுஷ உயிர்சும்மா எறும்பு உயிர் மாதிரி ஆகியிருக்கு அவரோட கலாச்சார
புரட்சி காலத்தில. எல்லாம் எதுக்கு? அந்த ஒரு மனிதனோட அக
காரத்துக்குப் பலி. வாழ்க்கையையும் சமூகத்தையும் தன் மூளையால முழு
புரிஞ்சுகிட்டாச்சுன்னு அவன் நம்பினான். அவன் பேரறிஞன்தான்.
அகங்காரம் உள்ள அறிஞன்தான் உலகத்தில பெரிய முட்டாள். அவனால
தான் மத்தவங்களால நினைச்சுப் பாக்க முடியாத குரூரங்களைப் பண்ண
முடியும். ஏன்னா ஒவ்வொரு செயலையும் மனுஷன் தனக்குத்தானே
நியாயப்படுத்தியாகணும். அறிஞன் எதையும் தருக்கபூர்வமா, நியாய
மானதாக மாத்திக்கிடுவான். பேரறிஞன் பூமியையே பெரும் பாவத்தில
மூழ்கடிச்சிடுவான். ஸ்டாலின், ஹிட்லர் எல்லாருமே பெரிய அறிஞர்
கள்தான்.'' எஸ்.எம்.ராமசாமி சில கணங்கள் தன் சிந்தனைகளில் மூழ்கினார்.
''எதையும் நியாயப்படுத்திக்கிற பேரறிஞனாகவும், பெரும் பேச்சா
னாகவும்தான் பைபிள் சாத்தானை உருவகப்படுத்துது தெரியுமா?''

அருணாசலம் தலையசைத்தான்.

''கிறிஸ்து அறிஞன் இல்லை. அவன் பெரிய முட்டாள். பிற
துன்பங்களைக் கண்டு கண்ணீர் விட்டான். தன் இயலாமைக்காகக் கத்தி
அழுதான். ஒண்ணையும் நியாயப்படுத்திக்க முடியலை அவனால. அதனால
எல்லாமே சூடாகி சிவந்து கணகணன்னு கொதிக்க ஆரம்பிச்சிட்டுது
எங்கயும் நிக்க முடியலை. எதையும் தொட முடியலை. முப்பது வயசுக்கு
மேலே இந்த உலகில வாழ முடியலை. சிலுவைல தன்னை பல
குடுத்தப்பதான் அவனுக்கு நிறைவு கிடைச்சது. தருக்க நியாயங்கள்
இல்லாததனால அவன் இதயம் திறந்து கிடந்தது. முள்ளும் கல்லும் பட்டு
ரத்தம் வடிஞ்சது அதில. அந்த ரத்தம்தான் இந்தப் பூமியை கருணையாலயும்
அன்பாலயும் கழுவியது. ஏசு கிறிஸ்துவின் ரத்தம்தான் சகல பாவங்களையும்
நீக்கி உலகை சுத்தப்படுத்தறது. கவனியுங்க, அவரோட சொற்கள் இல்லை
ரத்தம். ஆமா அதுதான் முக்கியம்.'' எஸ்.எம். ராமசாமியின் முகம்
அப்போது சிவந்து ஒளிவிட்டது. அவர் கண்களிலும், அழுத்தமான கோடுகள்
விழுந்த முகவாயிலும் தீவிரமான ஏதோ ஒன்று குடியேறியது போலிருந்தது.
பிரமை பிடித்தவன்போல அருணாசலம் அவரைப் பார்த்தவாறு
அமர்ந்திருந்தான்.

6

"தொழிற்புரட்சிக்கு முன்னாலும் பேரழிவுகளை உண்டு பண்ணின ஆட்சியாளர்கள் இருந்திருக்காங்க. அதிகாரத்துக்காக மண்ணில் ஓடின ரத்தமிருக்கே, அது பெரிய கடல். செங்கிஸ்கானும், சேரும், ஹானிபாலும், தைமூரும், நெப்போலியனும் கொன்று குவிச்ச மக்கள் தொகை புதுசா ஒரு உலகம் செய்யவே காணும். ஆனா அதுக்குக் காரணம் வேற. மத்த தரப்பு மக்களை அவங்க மனுஷங்களாகவே மதிக்கலை. எல்லா மதமும் மாற்று மதத்து மனுஷங்களைக் குறிப்பிட இழிவான சொல்லை கண்டுபிடிச்சு வச்சிருக்கு. காஃபிர், பாகன், பார்பேரியன், மிலேச்சன், மூர்... எவ்வளவு வார்த்தைகள். ஒவ்வொண்ணும் இன்னும் ரெண்டு தடவை இந்த உலகை அழிக்கக்கூடிய அளவு வெறுப்பு குமிஞ்சிருக்கக்கூடிய மையங்கள். துவேஷம் அவங்களை கொலைகாரர்களாக்கிச்சு. ஆனா இந்த யுகத்து சர்வாதிகாரிகள் இந்த மாதிரி அடையாளங்களை மீறி யோசிக்கக் கூடியவங்க. வரலாறு தெரிஞ்சவங்க. ஹிட்லருக்கு யூதர்கள் மேலயோ, ஸ்டாலினுக்கு கொசாக்குகள் மேலயோ தனிப்பட்ட துவேஷம் ஏதும் இருந்திருக்கும்னு எனக்குத் தோணல்ல. அவங்களுக்குத் தேவை அதிகாரம். அதிகாரம் ஒருமுகப்படுத்தப்பட்ட உணர்ச்சி வழியாகத்தான் உருவாகுது. எளிதாக ஒருமுகப்படுத்தக்கூடிய உணர்ச்சி வெறுப்புதான். அதனால வெறுப்பைத் திட்டமிட்டு வளர்த்தாங்க. அந்த வெறுப்புக்குப் பலி குடுத்தாங்க. எல்லாம் விஞ்ஞானபூர்வமா கச்சிதமா நடந்தது. ஜனங்களை வெறிகொள்ளச் செய்யறது மாதிரி மேடையில பேசறதும் சரி, அப்பாவிகளை கொன்னு குவிக்கிறதும் சரி, கச்சிதமா அழகா செய்யப் பட்டது. ஹிட்லருக்கும் தைமூருக்கும் என்ன வித்தியாசம்? ஹிட்லர் துல்லியமா திட்டம் போடறான். எப்படி மேடையை அமைக்கிறது, எப்படி அதில ஒளி விழணும், ஒலிபெருக்கி எப்படி அமையணும், எல்லாத்தயும் எழுதி வச்சிருக்கான் மெய்ன் காம்ப் புஸ்தகத்தில. பாசிசத்தோட வளர்ச்சியில ஒலிபெருக்கியோட இடம் என்னான்னு மட்டும் யோசிச்சா பிரமிச்சு போயிடுவம்."

சாப்பாட்டு மேஜையில் எஸ்.எம்.ராமசாமி உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார். இப்போது அவர் வேறு ராமசாமி என்று பட்டது. வரலாற்றை தன் பார்வைக்கு ஏற்ப சித்தரிக்க முயலும் அறிஞரான ராமசாமி உற்சாகத்தில் முகம் மலர்ந்து கண்களில் ஊசிமுனை போல ஒளி தெரிந்தது.

''வரலாற்றில் எந்தக் கொடுங்கோலன் தன் கைதிகளை கடைசித்துள் வரைக்கும் வேலை வாங்கிட்டு கொன்னிருக்கான்? தைமூரும் நாதிர்ஷாவும் மூடர்கள், டெல்லியில ஜனங்களைக் கூட்டி நிறுத்தி தலைகளை வெட்டி கோபுரம் செய்தாங்க. ஹிட்லர் தோலையும் எலும்பையும் தலைமுடியையும் கூட பயன்படுத்திக்கிட்டான். உடலுக்குக் கேடு வராம கொல்லறதுக்கு விஷ வாயு அறைகளைக் கண்டுபிடிச்சான். படுகொலைகளைக்கூட பாக்டரி வைச்சு செய்தான். போர் கூட பாக்டரி வேலைதான். தனித்தனியா வேலைப் பங்கீடு செய்து, கட்டுப்பாட்டு அமைப்பை உண்டுபண்ணி, மையத்தில் இணைச்சிடுவான். கட்டளையிட்டா யந்திரம் போர் செய்ய ஆரம்பிக்கும். ஒரு யுத்தத்தை அப்படியே புளூ பிரின்ட்ல போட்டுக் காட்டிடுவான்னு சொல்வாங்க. அவனுக்கு எல்லாம் மிஷின்தான். சமூகம், ராணுவம், பிரபஞ்சம், இயற்கை எல்லாம். ஸ்டாலின் ரஷ்யாவில விவசாயிகளை சேர்த்து கூட்டுப் பண்ணைகளை உண்டு பண்ணினார். அங்க துல்லியமான வேலை பங்கீடும் வேலை விதிகளும் இருந்தது. அதாவது விவசாயத்தையே ஒரு தொழிற்சாலை வேலையா மாத்தினார். விவசாயிகளைத் தொழிலாளிகளா மாத்தினார். ஆனா மண்ணை அதுக்கேற்ப மாத்த முடியலை. ஏன்னா மண் உயிர். அதில இருந்துதான் மத்த எல்லா உயிர்களும் பிறக்குது. மண் அதை ஒத்துக்கலை. விவசாயம் அங்க குட்டிச்சுவராப் போச்சு. இன்னைக்குவரை எழுந்திருக்கலை. இந்த எந்திரப் புத்திதான் நவீன சர்வாதிகாரங்களோட ஆதார தத்துவம். அது தொழிற்புரட்சியோட விளைவு. அரசாங்கம் என்கிறது ஒரு சமூகத்தோட இதயம் மாதிரி. உடலோட ரத்த ஓட்டத்தை நிர்வாகம் பண்றது அது. அதுக்கு ஓய்வு கிடையாது. உடம்பிலேயே ரொம்ப நெகிழ்வான உறுப்பு அதுதான். அது திடீர்னு இறுகி ஒரு யந்திரமா ஆயிட்டா என்ன ஆகும்?''

''அரசாங்கம்ங்கிறது ஒரு சமரசப் புள்ளிங்கிறாங்க சிலர்'' என்றார் அருணாசலம்.

''கண்டிப்பா. ஒரு அரசாங்கம் யாரு எப்படி என்ன சொன்னாலும் அது சமரசப் புள்ளிதான். சமூகத்தில பலவிதமான போக்குகள், பலவிதமான சக்திகள் இயங்கிட்டிருக்கு. அதையெல்லாம் சரியானபடி இணைச்சு மத்தியஸ்தம் பண்ணி ஒழுங்கா செயல்பட வைக்கிறதுதான் அரசாங்கம். நீதிமன்றம், ராணுவம், நிர்வாக அமைப்பு எல்லாமே இதுக்காகத்தான்.''

''ராணுவம் எதுக்கு?''

''மத்தியஸ்தம் பண்ணனும்னா ஒரு கையில தடி வேணுமே.'' ராமசாமி மெல்லிய குரலில் சிரித்தார். ''வன்முறை இல்லாம அரசாங்கம் இல்லை. ஆனா ஒரு அரசு எந்த அளவுக்குக் குறைவா வன்முறையைப் பிரயோகிக்கிறதோ அந்த அளவு அது நல்ல அரசுன்னு நான் சொல்வேன்.''

வன்முறை குறையக் குறைய கருத்தியல் வன்முறை அதிகரிக்கும். உளவியல் வன்முறை அதிகரிக்கும். அது ரெண்டும்தான் ஒரு நாகரிக சமூகத்திற்கு அடையாளம்.'' ராமசாமி புன்னகைத்தார். ''விசித்திரமா இருக்கா?''

''நீங்க சொல்றப்ப விசித்திரம் அடிபட்டுப் போயிடுது.''

ராமசாமியின் மனைவி அருணாசலத்திற்கு தோசை பரிமாறினாள். கண்ணாடி போட்ட, குள்ளமான, இனிய முகமுள்ள பெண்மணி. ''தோசை நீங்க சாப்பிடவே இல்லை'' என்றாள். அவன் சற்று கூச்சமடைந்து அவசரமாக சாப்பிட ஆரம்பித்தான்.

''அரசாங்கம்ங்கறது ஒரு ஒழுங்குபடுத்தும் சக்தியும்கூட. அதனால அது சில விஷயங்களை ஒடுக்கியாகணும். அதுக்கு அது ஆயுதத்தைப் பயன்படுத்தியாகணும்.''

''எந்தமாதிரி சக்திகளை ஒடுக்கணும்னு சொல்றீங்க?''

''எல்லா அரசாங்கங்களுக்கும் கருத்தியல் அடிப்படை உண்டு. சிறப்பான அரசாங்கத்தோட கருத்தியல் அடிப்படை மிகமிக விரிவானதா, நெகிழ்வானதா இருக்கும். ஆனா அது எத்தனை பெரிசா இருந்தாலும் சில விஷயங்களை அது ஏத்துக்க முடியாம இருக்கும். அதை அந்த அரசு ஒடுக்கியே தீரணும்.''

''உதாரணமா?''

''உதாரணமா எந்த ஒரு நாகரிக அரசாங்கமும் ஒருவன் சக குடிமகனைக் கொல்லறதை அனுமதிக்காது. புராதன அரசாங்கங்கள்ல துவந்த யுத்தம், குடிப்பகை எல்லாத்தயும் அனுமதிச்ச சில அரசாங்க அமைப்புகள் உண்டு. இப்பசாத்தியமில்லை. அந்த மாதிரி ஆட்களை அரசு ஒடுக்கித்தான்ஆகணும். அதாவது தன் சொந்தக் குடிமக்கள் மேல வன்முறையப் பிரயோகிக்காத, அவங்களில ஒரு பகுதியை ஒடுக்காத, ஒரு அரசாங்கம் சாத்தியமே இல்லை. ஆனா இந்த வன்முறையோட அளவு, இயல்பு இதையெல்லாம் வச்சுதான் ஒரு அரசாங்கம் எப்படிப்பட்டதுண்ணு நாம மதிப்பிடணும். நாகரிக அரசாங்கங்கள் இந்த வன்முறையை முடிஞ்சவரை ஒத்திப்போடும் ஒத்திப்போடுறதுக்கு அவசியமான அமைப்புகளை உருவாக்கி வச்சிருக்கும். மாற்றுத் தரப்பை முன்வைக்கிறதுக்கும் முறையிடறதுக்கும் ஏகப்பட்ட வாய்ப்புகளைக் கொடுக்கும். எல்லாத்துக்கும்மேல நிஜ வன்முறையை பிரயோகிக்கிறதுக்கு முன்னாடி, முடிஞ்ச அளவு கருத்தியல் வன்முறையை பிரயோகிக்கும். இப்ப இந்தியாவில உள்ள பல பழங்குடி சமூகங்களில குடிப்பகைன்னு ஒரு மரபு இருக்கு. ஒரு கோத்திரம் இன்னொண்ணுக்கு பரம்பரை பரம்பரையா எதிரி. ஒருத்தனுக்கு இன்னொருத்தனைக் கொல்றது புனிதமான கடங்கு. அதுக்கு அவங்க மதத்திலயும் கலாச்சாரத்திலயும் ஆழமான வேர் இருக்கு. அவங்க தரப்பில இருந்து பாத்தா நிறைய நியாயங்களும் இருக்கலாம். ஆனா இந்திய அரசு அதை அனுமதிக்க முடியாது. அப்ப அரசு என்ன பண்ணுது? அவங்களைக் கட்டாயப்படுத்துது. மிரட்டுது. குழந்தைகளுக்குக் கல்வி வழியாக வேற மாதிரியான மதிப்பீடு

களைப் புகட்டுது. இது ஒரு பெரிய கலாச்சார வன்முறை. ஒரு எல்லைவ ஆ
சிலரைப் பிடிச்சு ஜெயிலில போடும். சிலரைத் தூக்கிலயும் போடும். நா
இப்ப உதாரணமா சொல்றது அந்தமான் நிகோபார் தீவுகளில உள்
ஓங்கிகளைப் பத்தி. பல ஓங்கிகளுக்கு தூக்கு மேடை ஏறும்போதுகூட அவ
செய்த குற்றம் என்னன்னு தெரியாது. இந்தப் பிரச்சினை அரசாங்கம்
அமைப்போட பிரச்சினை. மிகச் சிறந்த அரசாங்கம் தன்னோட ஆகப்பெ
வன்முறையை கல்வியிலதான் காட்டும்னு படுது. இதெல்லாம் போ
போக்கிலபடற விஷயங்கள். சித்தாந்தம் இல்லை. எனக்கு சித்தாந்தங்க
நம்பிக்கை இல்லை.''

அருணாசலம் புன்னகைத்தான். சித்தாந்தங்களை உருவாக்குவது ஒ
தேவை. சித்தாந்தங்களை மறுப்பது ஒரு நிலைபாடு. இந்த 'சுதந்
அறிவுஜீவி'களுக்கு இரண்டும் தேவை.

''அப்ப நீங்க ஏன் சோவியத் அரசாங்கத்தை மறுக்கணும்?'' என்றா
அருணாசலம். அவர் என்ன கூறப் போகிறார் என்று உள்ளூ
தெரிந்திருந்தது.

''ஒரு தேசத்துக் குடிமக்களில பாதிப் பேர் எந்தவிதமான விசாரணை
இல்லாம புழு பூச்சிகள் மாதிரி அழிக்கப்படறாங்க. மீதி பேர் சொ
வீடுகளில சிறையிருக்காங்கன்னா அது எந்த வகையான அரசாங்க
ஸ்டாலின் நடத்தினது அரசாங்கமில்லை. ஒரு வன்முறை முகாம். அ
நாற்பது வருஷம் இங்கேயுள்ள அறிவுஜீவிகளும் புரட்சிக்காரர்க
மனிதாபிமானிகளும் நியாயப்படுத்திப் பேசினாங்க. அதுக்கு எதி
பேசறவங்களை அவதூறு செய்து ஒழிச்சுக் கட்டினாங்க. அதைப்பத்தி
உண்மைகளைத் திரிச்சாங்க. குருஷ்சேவ் காலம்வரை உண்மை தெரியா
நம்பினவங்க இருந்திருக்கலாம். ஆனா பிறகு உள்ளவங்க அத்தன
பேருக்கும் உள்ளூர என்ன நடக்குதுண்ணு தெரியும். இதில எவ
சந்தேகமே இல்லை. ஏன்னா இது என் சொந்த அனுபவத்திலேருந்
சொல்றது. தெரிஞ்சுக்கிட்டே, தங்கள் அரசியல் தேவைகளுக்காகவே, அந்
பேரழிவுகளை ஆதரிச்சாங்க. வரலாறு இண்ணைக்குத் திரும்பி நின்
நியாயம் கேட்குது. இவங்களுக்கு பதில் சொல்றதுக்கு வாய் இல்லை
தங்களோட பழைய தியாகங்களோட கணக்கை எடுத்துவிட்டுதான்
சமாதானம் சொல்ல வேண்டியிருக்கு.''

''இப்ப கட்சியில ஸ்டாலினிசத்துக்கு இடமில்லை. புதிய தலைமுறை
வந்திருக்கு. ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவங்க. கட்சிக்க அடி
ஜனநாயக ரீதியா மாறிட்டிருக்கு. ஜனநாயகத்தை மதிக்காத தலை
கள் அவங்க எத்தனை பெரியவங்களா இருந்தாலும் வெளில
வேண்டியிருக்கு.'' அருணாசலத்திற்கு அச்சொற்கள் தனக்கு அளிக்கும்
திருப்தி வியப்பாக இருந்தது.

''சரி, கட்சி அதிகாரபூர்வமா ஸ்டாலினை நிராகரிச்சாச்சா''

''அதுக்கு சில பிரச்சினைகள் இருக்கு.''

''என்ன பிரச்சினைகள்? கட்சி மன்னிப்பு கேட்க வேண்டியிருக்கும். இதுவரை சொன்னதெல்லாம் பொய், எங்க தலைவர்கள் பேசினதெல்லாம் பசப்புன்னு ஒத்துக்க வேண்டியிருக்கும். அப்ப மக்களுக்கு இனிமே இவங்க பேசறது மேலயும் நம்பிக்கை போயிடும் இல்லையா? கட்சி மாறிடிச்சுண்ணா அதை வெளிப்படையாச் சொல்லட்டும். சொல்லாதவரைக்கும் அது ஜனங்களோட விஷயம் இல்லை. தலைவர்களோட அதிகாரப் போட்டிதான். கட்சியோட உள் விவகாரம்தான்.'' எஸ்.எம்.ராமசாமி மீண்டும் உணர்ச்சி வசப்பட்டார், குரல் உயர்ந்தது. ''ஸ்டாலினைக் குறை சொன்னதுக்காக எத்தனை பேரை உங்க கட்சி அவதூறு செய்து ஒழிச்சுக் கட்டியிருக்கு? எத்தனை தியாகங்கள் மேல மண்ணைப் போட்டு ஒரேயடியா மூடியிருக்கு? எத்தனை மகத்தான மனிதர்களை அவமானப்படுத்தி சாகடிச்சிருக்கு? அதெல்லாம் வரலாற்றில இல்லைண்ணு ஆயிடுமா? நேத்தைக்கு ஸ்டாலின் பண்ணின கொடுமைகளை சத்தமில்லாம குழிதோண்டிப் புதைக்க நினைச்சீங்க, இண்ணைக்கு அந்தக் குழியில சந்தடியில்லாம ஸ்டாலினையும் போட்டு மூட நினைக்கிறீங்க. சரித்திரத்தைப் புதைச்சிடலாம்கிற கட்சியோட நம்பிக்கையிருக்கே, அதில எந்த மாற்றமும் இல்லை. எதிலயுமே மாற்றம் இல்லை. கட்சிக்கு நீதியிலயும் சத்தியத்திலயும் நம்பிக்கை இருந்ததே இல்லை. மனதைத் தொட்டுச் சொல்லுங்க. ஒரு விஷயம் உண்மை; ஆனா கட்சிக்கு எதிரானதுன்னு படுது. அதை கட்சி ஏத்துக்கிடுமா? அதை அறிவுபூர்வமா பேசி மறைக்க முடியும்னா அந்த வாய்ப்பைக் கட்சி தவற விடுமா? இங்கதான் காந்திக்கும் உங்களுக்கும் வித்தியாசம். காந்தி அசட்டுத்தனம்னு பிறருக்கு தோணற அளவுக்கு நெஞ்சத் திறந்துட்டு அந்த உண்மையைத் தேடிப் போவார். அதோட அவர் அழிஞ்சாலும் சரின்னு போவார். ஆனா உண்மை எவரையும் அழிச்சதில்லை. பொய் எதையும் வாழவிட்டதுமில்லை. பொய், அதைச் சொன்னவங்க எத்தனை மகத்தான மனிதாபிமானிகளா இருந்தாலும், எத்தனை பெரிய மேதைகளா இருந்தாலும், எதையும் உருவாக்காதுங்கிறதுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஒரு வாழும் உதாரணம்.'' ராமசாமி எழுந்து வாஷ்பேசினில் கைகழுவினார். ''இப்ப ஒண்ணு சொல்றேன். நீங்க ஸ்டாலினிஸ்டுகளை இப்ப எப்பிடி வெளியே தள்றீங்க? எப்பிடி நேத்தைக்கு ஸ்டாலினை எதித்தவங்களை வெளியே தள்ளினீங்களோ அதே மாதிரி. இல்லேன்னு சொல்லுங்க பாக்கலாம். அவதூறு ஒரு ஆயுதம்னு நினைக்கிற ஒரு கட்சி, எந்தத் தரப்பை எடுத்தா என்ன? இன்னைக்கு என் அனுதாபம் அந்த ஸ்டாலினிஸ்டுகள் மேலதான். இன்னைக்கு பாதிக்கப்படற தரப்பு அவங்கதான்.''

மீண்டும் அந்தக் கண்ணாடி அறையில் அமர்ந்தார்கள். அருணாசலம் மிகவும் இறுக்கமாக உணர்ந்தான். சற்று நேரம் அமைதி நிலவியது. பேச்சை உருவாக்கும் பொருட்டு அவன் மீண்டும் தொடங்கினான். ''நீங்க எம்.என்.ராய் பத்தி பேசினது பாத்தேன் தினமணியில. ராய் மேல உங்களுக்கு ஈடுபாடு உண்டா?''

''கொஞ்சம். கோவிந்தன் வழியா வந்த ஈடுபாடுதான். எனக்கு நவீன விஞ்ஞானத்தை வழிபடக் கூடியவங்க யார் மேலயும் முழு மரியாதை இல்லை; மார்க்ஸானாலும் சரி, எம்.என்.ராயானாலும் சரி.''

''நீலகண்ட பிள்ளையை ரொம்ப நாளா தெரியுமா?''

''தெரியும். பெரிய நெருக்கம் இல்லை. கோவிந்தன் இவரைப் பத்தி விசாரிப்பார். உங்களுக்கு அவரைத் தெரியுமா?''

''இல்லை, அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தர் எங்க சங்கத்தில இருந்தார். இப்ப அவரைப் பத்தி எந்தவிதமான தகவலும் இல்லை. அவரைப் பார்த்துக் கேட்கலாம்னு நினைச்சிருந்தேன். அதுக்குள்ள...''

''யாரு அவரு?''

''வீரபத்ரபிள்ளைன்னு பேரு...''

''பனை பேசினால்னு ஒரு தொகுப்பு வந்ததே?''

''ஆமா அவர்தான். தெரியுமா?''

''அந்த தொகுப்பு முதல்பிரதி எனக்குத்தான் தந்தார்.''

''உண்மையாகவா?''

''ஆமா.''

''அவரைக் கட்சியிலயிருந்து நீக்கிட்டாங்க இல்லையா?''

''ஆமா, அம்பத்திமூணுண்ணு ஞாபகம். எனக்கு ஸ்டாலினிசம் அறிமுகமானதே அந்த சம்பவங்கள் வழியாத்தான்.''

''என்ன சம்பவங்கள்?''

''கட்சியில இருந்து அவரை ஏன் வெளியேத்தினாங்கன்னு தெரியுமா?''

''தெரியாது. ஏதோ கட்சி விரோத நடவடிக்கை...''

''உங்க ரெகார்டுகளில எப்பிடி இருக்கு?''

அருணாசலம் தயங்கி, ''ரெகார்டுகளில எதுவுமே இல்லை'' என்றான்.

''அப்டீன்னா?''

''அப்பிடியொரு ஆளே இல்லை. ஒரு தடயம்கூட இல்லை. கே.கே.எம் கூட அப்படியொரு ஆளே இல்லைன்னுட்டார்.''

''அதுக்கு கே.ஆர்.எஸ். முன்னுரை எழுதியிருந்தார் இல்லியோ?''

''அது ஏதோ முதலாளித்துவ தந்திரம்னு கே கே எம். சொன்னார்.''

''ஓகோ'' என்றார் ராமசாமி. அவன் நினைத்தபடி அவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டவில்லை என்று தெரிந்தது. ''தற்செயலா எனக்கு இந்த புஸ்தகம் கிடைச்சது. என்ன ஏதுண்ணு தெரியாம ஒரே குழப்பம்'' என்றான்.

''வீரபத்ரபிள்ளைக்கு சுசீந்திரம்தான் சொந்த ஊர். மார்த்தாண்டம் பக்கமா ஏதோ தொழிலாளிப் பெண்ணை கல்யாணம் பண்ணிட்டார். அது அப்ப பெரிய பரபரப்பான செய்தி. அவங்க உறவு பின்னாடி ரொம்ப மோசமாப் போயிடுச்சு. கெ.கெ.எம்மோட ஆஸ்தான அறிவுஜீவி இவர்தான். இங்கிலீஷ் புஸ்தகம் படிப்பார்னு அந்த வட்டாரத்தில ரொம்ப மரியாதை. கெ.கெ.எம்முக்கே இவர் மேல மரியாதை, பொறாமை, இளக்காரம் எல்லாம் சரிசமமா உண்டு.''

ராமசாமி நினைவுகளில் ஆழ்ந்தார். அவர் முகம் மாறியது. ''இங்க ஒரு கூட்டத்துக்கு பாலசுப்ரமணியம் வந்திருந்தார். அதுக்கு கட்சிக்காரர்கள் எல்லாரும் வந்திருந்தாங்க. கெ.கெ.எம். வந்து வடிவீஸ்வரத்தில ஒரு அறையில தங்கியிருக்கிறதா கேள்விப்பட்டு நானும் நண்பர் நம்பிராஜனும் சேந்து பாக்கப் போனோம். அப்ப கெ.கெ.எம். சத்யன், பிரேம் நசீர் மாதிரி பெரிய ஹீரோ. வடிவீஸ்வரத்தில கெ.கெ.எம். தங்கியிருந்தது ஒரு பீடிக் கம்பெனியோட அறை. அதுக்கு மூணு ஜன்னல் ஒருவாசல். எல்லாத்தயும் அடச்சுக்கிட்டு ஒரே பெண்கள் கூட்டம். எல்லாருக்கும் ஒரே பரவசம், பரபரப்பு. பெண்களை இடிச்சுகிட்டு நாங்களும் எட்டிப் பார்த்தோம். கெ.கெ.எம். நடுவில உரக்கச் சிரிச்சுகிட்டு பேசிட்டிருந்தார். ரூம்ல ஒரேயொரு நாற்காலி. அதில அவர் மட்டும் உக்காந்திருந்தார். கையை ஆட்டிஆட்டி பேசறார். ஏதோ முதலாளியை மிரட்டினது பத்தி சொல்லிட்டிருந்தார்னு ஞாபகம். எல்லாரும் சிரிக்கிறாங்க. சுத்தி ஏழெட்டுத் தொழிலாளிகள். எல்லார் முகத்திலயும் கோயில் துவாரபாலகர் முகத்தில பார்ப்பமே அதுமாதிரி ஒரு பக்திப் பரவச பாவம். கெ.கெ.எம். பக்கத்தில ஒல்லியா, மாநிறமா, முன் வழுக்கையோட, கண்ணாடி போட்டுட்டு நின்னுட்டிருந்தவர்தான் வீரபத்ரபிள்ளை. அப்ப எங்களுக்கு ஆளைத் தெரியாது. அவர் வெளியே வந்தபோது நம்பி அவர் கையில ஒரு புஸ்தகம் இருக்கிறதக் காட்டினான். புதிய ஆங்கிலப் புஸ்தகம். பின்னால போனோம். எங்களை அறிமுகம் செய்துகிட்டோம். நம்பி ஊரு பூதப்பாண்டி பக்கம்னு சொன்னப்ப ரொம்ப மகிழ்ந்து போயிட்டார். அவருடைய ஒண்ணுவிட்ட தங்கைய அங்கதான் குடுத்திருக்கிறதா சொன்னார். மூணு பேருமா நடந்து அம்மன் கோயில் முற்றத்தில இருந்த போத்தி கிளப்புக்கு போனோம். அப்ப காப்பி போடுறதில அந்த போத்தி ரொம்ப பிரபலம். வீரபத்ரபிள்ளை ஒரு காபிப் பைத்தியம். கெ.கெ.எம்முக்கு நேர் எதிர் இவரு. குனிஞ்ச தலை, அடங்கின குரல். ஆனா சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். கெ.கெ.எம். மாதிரி சுயதம்பட்டம், மத்தவங்களை மட்டப்படுத்தறது எல்லாம் கிடையாது. கிண்டல்கூட ரொம்ப மறைமுகமா இருக்கும்.''

''அப்ப அவர் எழுதுவார்னு தெரியுமா?''

''அப்ப அவர் ஒண்ணும் எழுதலை. ஆனா நிறைய படிப்பார். அன்னைக்கு அவர் கையில வச்சிருந்தது தல்ஸ்தோயோட 'புத்துயிர்ப்பு' லண்டன் எடிஷன். நான் அப்பதான் தல்ஸ்தோய் பத்தி கேள்விப்பட்டேன். படிக்கிறது அதுக்குப் பிறகு அஞ்சு வருஷம் கழிஞ்சு. வீரபத்ர பிள்ளைய அதுக்கு பிறகு

ஏழெட்டு தடவை பாத்திருக்கோம். இலக்கியம் பத்தி நிறையப் பேசுவோம். தகுழி, பஷீர் பத்தி நிறைய பேசியிருக்கார். முல்க்ராஜ் ஆனந்த் பத்தி ஒரு நாளைக்கு எஸ்.எல்.பி. ஸ்கூல் மைதானத்தில வச்சுப் பேசினது ஞாபகம் இருக்கு. ஒருமுறை தோப்பில் பாசி நாடகங்களைப் பத்தி பேச்சு வந்தது. அதெல்லாம் பாமர நாடகங்கள்னு சொன்னார். எனக்கும் நம்பிக்கும் பரமானந்தம். கம்யூனிஸ்டுகள் அப்பிடி சொல்வாங்கன்னு அன்னைக்கு நினைக்கவே முடியாது. அப்பதான் இப்சன் பத்தி சொன்னார். பெரிய நாடகாசிரியனா வரணும்கிறதுதான் தன்னோட கனவுன்னு சொன்னார். கிரேக்க நாடகங்கள் மேலே பெரிய ஈடுபாடு உண்டு. ஸ்பார்டகஸ் நாடகம் பத்தி சொன்னார். அதைத் தழுவி தமிழில ஒரு நாடகம் எழுதப் போறதா சொன்னார். தல்ஸ்தோயோட இருட்டின் வலிமை பத்தி சொன்னார். படிச்சதப்பத்தி பேசறதில கூச்சம் ஜாஸ்தி. கம்யூனிஸ்டுகள் மத்தியில அண்ணைக்கு இலக்கியம்மேல மரியாதை இல்லை – எப்பதான் இருந்தது? பேச ஆள் இல்லாம தவிச்சிட்டிருந்தார்னு நினைக்கிறேன். படிச்சது தொகுத்துக்கிறதுக்காகத்தான் பாதி எழுத்தாளர்கள் பேசறாங்க. அவரும் அப்படித்தான். பேச ஆரம்பிச்சா பேசிட்டே இருப்பார்.''

''கெ.கெ.எம்முக்கும் அவருக்கும் உறவு எப்பிடி?''

''ரொம்ப சிக்கலான உறவுன்னு சொல்லணும். ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் சார்ந்து இருந்தாங்க. ரெண்டு பேருடைய ரசனையும், பார்வையும், வாழ்க்கை முறையும், சுபாவமும் வேறவேற. கெ.கெ.எம்முக்கு இவர்தான் எல்லாம் சொல்லிக்குடுப்பார். இவரோட தினசரிச் செலவுக்கு கெ.கெ.எம்தான் பணம் தருவார். ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பயம்னும் படும். அவசியம் முடிஞ்சா தன்னை தூக்கிப் போட்டுருவார்னு வீரபத்ரபிள்ளைக்கு பயம். சந்தர்ப்பம் கிடைச்சா தன் இடத்தைப் பிடுங்கிடுவான்னு கெ.கெ.எம்முக்கு பயம். பயத்தை ரெண்டு பேரும் மாறி மாறிமட்டம் தட்டறது வழியா வெளிக்காட்டுவாங்க. கெ.கெ.எம். இவரை எப்பவுமே பொது இடத்தில வச்சு மட்டம்தட்டுவார். இவருக்கு லௌகீக விஷயங்களில சாமர்த்தியம் கம்மி. பல்பொடி வாங்கப் போனா பால்பொடி வாங்கிட்டு வந்திடுவார். அதை கெ.கெ.எம். சொல்லிட்டே இருப்பார். இவர் எங்களை மாதிரி பையன்க கிடைச்சா கெ.கெ.எம்மை மட்டம் தட்டுவார். தோப்பில் பாசி நாடகத்தில புலையப் பெண் கதாநாயகியா வருவாளே - அவ பேரு கூட மாலான்னு நினைக்கிறேன் - அதப் பாத்ததும் கெ.கெ.எம். எப்படி புரட்சிப் பரவசமானார்னு ஒருமுறை சொன்னார். வீரபத்ரபிள்ளைக்கு கம்யூனிசம், புரட்சி இதிலயெல்லாம் எந்தளவு நம்பிக்கை இருந்ததுன்னு இப்ப சொல்ல முடியலை. மார்க்ஸ், எங்கல்ஸ்மேல பெரிய மரியாதை உண்டு. அதைவிட தல்ஸ்தோய் மேல மதிப்பு. முதலில் ரஜனிபாமிதத், முல்க்ராஜ் ஆனந்த் இவங்கமேல ஈடுபாடு இருந்தது. பிறகு தல்ஸ்தோய் படிக்கப் படிக்க வேற எதுவும் பிடிக்காம ஆயிட்டது. தல்ஸ்தோய் மாதிரி உலகம் முழுக்க கேட்கிற மாதிரி மெதுவா பேசணும்னு சொல்வார். ஒரு சில கதைகள் எழுதினார். மங்களோதயம், ஜயகேரளம் இதழ்களில வந்தது.''

''அவர் ஏன் மலையாளத்தில எழுதினார்?''

''அப்ப இங்க பொதுமொழி மலையாளம்தானே? வீரபத்ரபிள்ளை படிச்சதும் மலையாளம்தான்.''

''அது சரி.''

''கம்யூனிஸ்டுகள் வீரபத்ரபிள்ளைய உள்ளூரக் கிண்டல் செய்தாங்க. அது அவருக்கும் தெரியும். ஒரு நாள் நான் மார்த்தாண்டம் போனபோது மாதாகோயில் முன்னாடி பிளட்சர் ஆஸ்பத்திரி வாசலிலே அவரைப் பார்த்தேன். வா ஒரு விஷயம்னு கூட்டிட்டுப் போனார். பிரஸ்ஸுக்கு போனோம். அப்பதான் இந்த கதைத்தொகுப்பு அச்சாகி அட்டை ரெடியாயிட்டிருந்தது. இருநூறு காப்பி. முதல் பிரதியை எடுத்து 'நாளைய எழுத்தாளன் எஸ். எம். ஆருக்கு' என்று எழுதிக் குடுத்தார். புஸ்தகம் வந்ததும் அவனவன் அலறப் போறான் பாருன்னார். ஏன்னு கேட்டேன். முன்னுரையைப் பார்னார். எனக்கும் ஆச்சரியமா இருந்தது.''

''கதைகள் உங்களுக்கு பிடிச்சிருந்ததா?''

''ரொம்ப. முற்போக்கு எழுத்தில அந்த மாதிரிக் கவித்துவமான எழுத்தை நான் படிச்சதில்லை. தமிழில மொழிபெயர்த்துக் காட்டுன்னு நம்பி நச்சரிப்பான்.''

''புஸ்தகம் பிரபலமாச்சா?''

''ஓரளவு, சில நல்ல ரிவ்யூ வந்தது. அதில நாடார் வாய்மொழியை பயன்படுத்தியிருந்தது அவங்களை கிண்டல் பண்றது மாதிரி இருக்குண்ணு ஒரு புகார் வந்தது. பொதுவா பலருக்கும் பிடிச்சிருந்ததுண்ணுதான் சொல்லணும். அதுக்கு பிறகு எல்லாருக்கும் அவர் பேர் தெரிஞ்சுட்டது. அதுக்கு பிறகு தான் இந்த பிரச்சினையெல்லாம். அதுபத்தி உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?''

''இல்லை. யாரும் சொல்லல்ல.''

''கே.ஆர்.எஸ் ஒரு முறை இங்க வந்தப்ப வீரபத்ரபிள்ளையைக் கூப்பிட்டுப் பேசியிருக்கார். அப்போ படிச்ச இளைஞர்கள் கட்சிக்கு வரணும்; அவங்களை கவர்ற மாதிரி புஸ்தகங்கள் சிலது எழுதணும்னு ஒரு திட்டத்தை சொல்லியிருக்கார். மார்க்ஸ் எங்கல்ஸ் வாழ்க்கை வரலாறு, உலக கம்யூனிஸ வரலாறு, கம்யூனிஸ சித்தாந்த அறிமுகம், ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சியின் வரலாறுன்னு நான்கு புஸ்தகம் உடனடியா எழுதறதா திட்டம். அதில ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சியின் வரலாறை வீரபத்ரபிள்ளை எழுதினா நல்லாயிருக்கும்னு சொல்லியிருக்கார்.''

''இவர் சம்மதிச்சாரா?''

''கேக்கணுமா? தலைகால் புரியலை. தன் வாழ்க்கையோட இலட்சியமே அதுதான்ங்கிற மாதிரி பரவசமாயிட்டார். நாடகம் சிறுகதையெல்லாம் பறந்து போச்சு. முழு மூச்சா அதில இறங்கிட்டார். அப்ப நல்ல லைப்ரரி

எங்கயும் இல்ல. மூல நூல்கள் கிடைக்கிறது ரொம்பக் கஷ்டம். குறிப்பா கம்யூனிஸ புஸ்தகங்களில பெரும்பாலும் எல்லா புஸ்தகங்களும் தடை செய்யப்பட்ட புஸ்தகங்கள்தான். திடீர்னு ஒரு நாள் அவரை திருவனந்தபுரம் சாலை பஜார்ல பார்த்தேன். என்னைப் பாத்ததில பரம சந்தோஷம். மனசில நிறைஞ்சிருக்கிற உற்சாகத்தைக் கொட்ட ஒரு மனுஷ ஜென்மம் கிடைக்க சந்தோஷம்தான். மனுஷன் காத்தில பறந்திட்டிருக்கார். பேசிக் கேட்டப்ப எனக்கு பயங்கர ஆச்சரியம். எட்டு மாசத்தில ரஷ்ய மொழியை சகஜமா படிக்கக் கத்துகிட்டு, மூல நூல்களை வரவழைச்சுப் படிச்சிட்டிருந்தார். புஸ்தகம் பாதிக்கு மேலே எழுதியாச்சு. இந்திய மொழிகளில அசலாக போல்ஷவிக் புரட்சிபத்தி எழுதப்பட்ட முதல் புஸ்தகம் அதுதான்னு சொன் னார். ஒரு கிளாசிக் அப்டீன்னு பலதடவை சொன்னார். காபியிலகூட ஆர்வம் குறைஞ்சு போச்சு. பிறகு ரொம்ப நாள் அவரைப் பாக்கவேயில்லை.''

''அந்த புஸ்தகம் வந்ததா?''

''வரலை. அவரைக் கட்சியைவிட்டே நீக்கிட்டதா சொன்னாங்க. எனக்குத் தகவல் சொன்னவர் ஒரு வயசான கம்யூனிஸ்ட். தையல்கடை வச்சிருந்தார். ரொம்ப நேர்மையானவர். கெ.கெ.எம்மை அவருக்கு அவ்வளவா பிடிக்காது. வீரபத்ரபிள்ளை மேல மதிப்பும் உண்டு. அவர் சொன்னப்ப ஆச்சரியமா இருந்தது. வீரபத்ரபிள்ளை கட்சி ரகசியங்களை வித்துட்டார், போலீஸுக்கு உளவு சொல்லிட்டார், கட்சிப் பணத்தை கையாடல் பண்ணிட்டார், கடைசியில கையும் களவுமா பிடிச்சு நீக்கிட்டாங் கன்னு சொன்னார். ஆனா தொடர்ந்து அதுமாதிரி செய்திகளா வந்தது. கட்சிப் பணத்தை எடுத்து புஸ்தகம் போட்டுட்டார்னு கேட்டப்ப உண்மையா இருக்கலாம்னு தோணிச்சு. பிறகு ரெண்டு வருஷம் கழிஞ்சுதான் உண்மையான தகவல்கள் வந்தது. ரொம்ப ரகசியமா ஒரு தோழர் சொன்னார்.''

''ஸ்டாலின் பத்தின ஏதோ தகவல்தான் காரணம்னு கேள்விப் பட்டேன்.''

''ஸ்டாலின் இல்லை. புகாரின். நிகலாய் புகாரின்னு கேள்விப் பட்டிருக்கீங்களா?''

''இல்லை'' என்றான் அருணாசலம்.

''நிஜமாகவா? யாரும் சொல்லிக்கூட கேள்விப்பட்டதில்லையா?''

''இல்லை'' என்றான் அருணாசலம். அவனுக்கு மிகவும் சங்கடமாகவே இருந்தது.

''இப்ப நிறைய புஸ்தகங்கள் கிடைக்குது அவரைப்பத்தி. நீங்க வேணா ஒரு புஸ்தகம் வாசிக்கலாம். ஆர்தர் கோஸ்லர் எழுதின 'நடுப்பகலில் இருட்டு'ங்கிற நாவல்கூட புகாரினைப் பத்தினதுதான்னு சொல்வாங்க. அம்பதுகளில அது ரொம்ப பரபரப்பா பேசப்பட்ட புஸ்தகம். எனக்கு ஸ்டாலினை அடையாளம் காட்டின புஸ்தகம் அது... ராமசாமி

தொடர்ந்தார். ''நிகலாய் இவானோவிச் புகாரின்னு அவரோட முழுப் பெயர். 1917-ல அக்டோபர் புரட்சியை லெனின்கூட நின்று நடத்தின தலைவர்களில மூன்றாவது இடத்தில இருந்தவர் புகாரின். முதலிடம் லெனின், பிறகு ட்ராட்ஸ்கி. புகாரின் பெரிய படிப்பாளி. தத்துவ ஆசிரியர். பொருளாதார நிபுணர். லெனினுக்கு அடுத்தபடியா மதிக்கப்பட்ட சித்தாந்தி அவர்தான். அவருக்கு ட்ராட்ஸ்கியோட ஒத்துப்போக முடியலை. அதனால ஸ்டாலின் பதவிக்கு வர ஒத்துழைச்சார். பின்னாடி ஸ்டாலினோட கொடுமைகள் ஆரம்பிச்சப்ப ஸ்டாலினை கடுமையா எதிர்த்தார். குறிப்பா குளக்குகள்ங்கிற சிறுவிவசாயிகள் லட்சக்கணக்கா கொல்லப்பட்டதை புகாரினால தாங்கிக்க முடியலை. ஸ்டாலின் அவரை புரட்சிக்கு எதிரானவர்னு குற்றம்சாட்டிக் கைது பண்ணினார். 1938-ல் நடந்த புகழ் பெற்ற மாஸ்கோ விசாரணைகளில பிரதான குற்றவாளி அவர்தான். குற்றங்களை அவர் நீதிமன்றத்தில ஒப்புக் கொண்டார். அதுக்குக் காரணம் அவரோட இளம் மனைவி. அவ பேரு அன்னா மிக்காயெலேவ்னா லாரினா. அப்ப அவளுக்கு இருபது வயது. புகாரினுக்கு நாப்பதுக்கும் மேல. அவளைக் கொன்னுடுவோம்னு கெ.ஜி.பி. மிரட்டினதனாலதான் புகாரின் குற்றங்களை செய்ததா வாக்குமூலம் குடுத்தார்னு சொல்றாங்க. மரண தண்டனை விதிச்சு அவரைத் தூக்கில போட்டாங்க. ஆனா புகாரினுக்கு வாக்குறுதி குடுத்தது மாதிரி அன்னாவை விடுதலை செய்யாம நேரா சைபீரியாவுக்கு அனுப்பிட்டாங்க. அம்பது வருஷம் அந்த அம்மா சைபீரியாவில வதைமுகாம்களிலயும் கட்டாய உழைப்பு முகாம்களிலயும் வாழ்ந்தாங்க. புகாரின் சாகிறதுக்கு முன்னாடி ஒரு வாக்குமூலத்தை எழுதி அதை தன் மனைவிகிட்ட குடுத்து மனப்பாடம் செய்யச் சொல்லியிருந்தார். எதிர்கால சந்ததிக்கு முன்னாடி ஒரு சந்தர்ப்பம் வரும்போது அந்த உண்மைகளை முன்வைக்கணும்னு சொல்லியிருந்தார். அந்த அம்மா அம்பது வருஷம் ஒரு நாள் கூட விடாம அந்த வரிகளை மனசில சொல்லிட்டிருந்திருக்கிறாங்க. கிட்டத்தட்ட பிரார்த்தனை மாதிரி. ருஷ்யாவில கோர்பசேவ் பதவிக்கு வந்த பிறகு 1988-ல புகாரின் வழக்கு மறுபடியும் ரஷ்ய உச்சநீதி மன்றத்துக்கு விசாரணைக்கு வந்தது. அன்னா கூண்டில ஏறி புகாரினோட வாக்குமூலத்தைக் கண்ணீரோட சொன்னாங்க. எதிர்காலத் தலைமுறை மேலே அசையாத நம்பிக்கையோட அதில புகாரின் தன்னோட நிரபராதித்துவத்தைப் பத்தி சொல்லியிருந்தார். ரஷ்யாவை மட்டுமல்ல, உலகத்தையே பாதிச்ச வழக்கு அது. கொல்லப்பட்டு அம்பது வருஷம் கழிச்சு, புகாரின் நிரபராதின்னு நீதிமன்றம் தீர்ப்பு சொல்லிச்சு.''

அருணாசலம் தன் உடலுள் இன்னொரு உடல் புரள்வதுபோல் உணர்ந்தான்.

''அம்பது அறுபதுகளில புகாரின் பேர் இங்க யாருக்குமே தெரியாது. அப்படியே வரலாற்றில இருந்து அவர் பேர அழிச்சிட்டாங்க. அப்ப வீரபத்ரபிள்ளைக்கு ஒரு லெட்டர் வந்தது. அதில புகாரின் விசாரிக்கப்பட்ட சம்பவம் பத்தியும், அவருடைய மனைவி சைபீரிய வதைமுகாம்ல அப்பவும் உயிரோட இருக்கிறது பத்தியும் எழுதியிருந்தது.''

''எப்படி வந்தது அந்த கடிதம்?''

''தெரியாது. வீரபத்ரபிள்ளைக்கு ரஷ்ய மக்கள் தொடர்பு அமைச்சகம் வாரா வாரம் எக்கச்சக்கமா தகவல்களை அனுப்பும். அதுக்குள்ள இந்தக் கடிதமும் இருந்திருக்கு. அதிகார அமைப்புக்குள்ள யாரோ செய்த வேலை. அவங்களுக்கு வீரபத்ரபிள்ளையோட இடம் சக்தி பத்தி ஒண்ணும் தெரிஞ்சிருக்காது. ஏதோ ஒரு நம்பிக்கையில அனுப்பிட்டாங்க. இருக்கிற அபாயத்தை வைச்சுப் பாத்தா பூட்டியிருக்கிற இரும்புக் கதவில மண்டையை ஒங்கி முட்டுறது மாதிரிதான் அதைச் செய்திருக்காங்க.''

''வீரபத்ரபிள்ளை என்ன பண்ணினார்?''

''அவருக்கு இலக்கியவாதியோட மனம் இருந்தது. அதனால ஒரு ஆதாரமும் இல்லாமலேயே அது உண்மைன்னு உறுதியா தெரிஞ்சிட்டது. மேற்கொண்டு தகவல்களை மேற்கத்திய மீடியா வழியா திரட்டியிருக்கார். அதுகூட ரொம்ப குறைச்சலான தகவல்தான். கிடைச்ச தகவல்களை வைச்சு தன் புஸ்தகத்தில் ஒரு அத்தியாயம் எழுதியிருக்கிறார். அது கட்சிக்கு தெரிஞ்சிட்டது.''

''கட்சி எப்படி எம்பிக் குதிச்சிருக்கும்னு ஊகிக்க முடியுது.'' ஜெயமோகன் சிரித்தான்.

''கட்சிக்கு இவரைப் புரிஞ்சுக்கவே முடியலை. என்கிட்ட பேசின தோழர்கூட வீரபத்ரபிள்ளை சம்பந்தமில்லாத விஷயத்துக்காக வாழ்க்கையையே அழிச்சுகிட்டதா சொல்லி ரொம்ப வருத்தப்பட்டார். கட்சி புகாரின்னு ஒரு நபர் இல்லை, அது முதலாளித்துவ மீடியா கட்டின கதைன்னு மறுத்தது. பிறகு புகாரின் முக்கியமானவர் இல்லை ஒரு சாதாரண செம்படைவீரர்தான்னு சொல்லிச்சு அதுக்குப் பல ஆதாரங்களை காட்டிச்சு. மாத்தி மாத்தி பலர் வீரபத்ரபிள்ளைட்ட பேசினாங்க. வற்புறுத்தினாங்க. உபதேசம் பண்ணினாங்க. பயமுறுத்தினாங்க. ஏன் கெஞ்சிகூட பாத்தாங்க. அவர் இறங்கி வரல்லை. உண்மைல அவராலயும் அதுக்கு முடியலை. ஒரு மூத்த தோழர் அவர்கிட்ட பேசினா எல்லாத்தயும் விட்டுடறதா சொல்லுவார். மறுநாள் காலைல முடிவு மாறிடும். குடிச்சிட்டு புகாரினையே கண்டபடி திட்டுவார்னு கேள்விப்பட்டிருக்கேன். அவரோட வாழ்க்கைய புகாரின் அழிக்கிறதாச் சொல்லி அழுவாராம்.''

''அப்பதான் குடிக்க ஆரம்பிச்சாரா?''

''முன்னாடியே கொஞ்சம் ரகசியமா சாப்பிடுவார். இந்த மாதிரி நெருக்கடி வந்த பிறகு சாதாரணமா எல்லாரும் போற இடம் மதுக்கடைதானே?''

''அப்புறம்?''

''அப்புறமென்ன, கட்சி அவரை வெளியேத்திச்சு. அவதூறுகளை அள்ளி வீசிச்சு. அவரால நிக்க முடியலை. வருமானம் இல்லை. மனைவிகூட உறவு சரியில்லை. நண்பர்கள்னு யாரும் இல்லை. அப்பதான் நீலகண்ட பிள்ளைக்க

தொடர்பு கிடைச்சது. ஒரு உற்சாகத்திலெ ராடிகல் ஹ்யூமனிஸ்ட் கட்சியை தொடங்கப் போறேன்னு கொஞ்ச நாள் அலைஞ்சார்.''

''ராய் மேல ஈடுபாடு எப்படி?''

''அப்படி ஒரு ஈடுபாடும் இல்லை. ராய் ஸ்டாலினை எதித்தார்னு ஒரு காரணம். கம்யூனிஸ்டுகளை எதிர்க்கணும்னு இன்னொரு காரணம். ஆரம்பத்திலெ உண்மையாத்தான் நன்கொடை வசூல் பண்ணினார். பிறகு அதுவே தொழிலா ஆச்சு. குடிவேற. கடைசிலெ பிச்சையெல்லாம் எடுத்ததா சொல்றாங்க, நான் பாத்ததில்லை. எனக்கும் கட்சிமேல அவநம்பிக்கை வந்த காலகட்டம் அது. கட்சி சம்பந்தமா ஒரு தகவலையும் கேக்க அப்ப நான் பிரியப்படலை.''

''அவருக்கு யாரு நன்கொடை கொடுத்திருப்பாங்க?''

''வேற யார், தொழிலாளிகள்தான். யாரும் கட்சிக் கட்டுப்பாட்டை மீற மாட்டாங்க. ஆனா அவங்க மனசு கட்சிக்குக் கட்டுப்படாது. தொழிலாளிகளை கம்யூனிஸத்தை வச்சு ஒரு நாளைக்கும் புரிஞ்சுக்கிட முடியாது. ஒரு நாள் ஒரு தொழிலாளி - அவன் பேரு சம்முகம்பிள்ளையோ என்னவோ - பெரிய மீசையும் குடுமியுமா தாட்டியா இருப்பான் - ரொம்ப அப்பாவி, கெ.கெ.எம்முக்கு பாடிகாட் மாதிரி வருவான். பிறகு பெரிய சமையற்காரனா ஆயி ரொம்ப சம்பாதிச்சிட்டதா கேள்விப் பட்டேன்...''

''அய்யப்பன் பிள்ளை?''

''அவன்தான். அவனை ஒரு தடவை சந்திச்சேன். வீரபத்ரபிள்ளைய ஆஸ்பத்திரில சேக்க பணம் வேணும்னான். வீரபத்ரபிள்ளை கட்சிக்கு எதிரி தானேன்னு கேட்டேன். 'இத பாருங்க அய்யிரே, ஸ்டாலின் மத்தவனைக் கொன்னா அது தப்பு. மனுஷனுக்கு மனுஷனைக் கொல்ல அதிகாரம் இல்லை. அது கடவுள் பொறுக்காத குற்றம். அது இப்பம் கட்சிக்கு புரியல்லை. வீரபத்ரபிள்ளைக்கு சாஸ்திரம் தெரியும். அதனால அப்படிச் சொல்றாரு. நமக்கு தர்மநியாய விஷயங்களில படிப்பு இல்ல. நம்ம ஆத்மாவுக்கு சரின்னு பட்டத நாம செய்வம்'னு சொன்னான். ரொம்ப ஆச்சரியமா இருந்தது. அவனை கட்சி தூக்க முடியாது. தூக்கினா அத்தனை தொழிலாளர்களையும் தூக்க வேண்டியிருக்கும்.''

''வீரபத்ரபிள்ளை தெருவில செத்துக் கிடந்தார்னு சொன்னாங்க'' என்றான் அருணாசலம்.

''முனிசிப்பாலிட்டிக்கு யாராவது ஒரு செங்கொடி வாங்கித் தந்தாங்களா?'' என்றான் ஜெயமோகன்.

அருணாசலம் அவனைத் தீவிரமாக அப்போது வெறுத்தான்.

''வீரபத்ரபிள்ளைக்கு என்ன ஆச்சுன்னு அப்ப ரொம்ப ஆச்சரியமா இருந்தது. இப்ப அந்த ஆச்சரியம் இல்லை'' என்றார் எஸ்.எம்.ராமசாமி.

..தருக்க ரீதியாகப் பாத்தா அவருடைய தீவிரம் வெறும் மடத்தனம். தற்கொலை மாதிரி. சைக்கியாட்ரிஸ்டுகள் அதை அப்ஸெஷன்னு சொல்லலாம். ஏதாவது மேனியான்னு பேரும் குடுக்கலாம். சில சமயம் உண்மையிலேயே ஏதாவது நரம்புப் பிரச்சினை அதில இருக்கலாம். ஆனா அவ்வளவு எளிதா அதை நாம வரையறுத்துட முடியாது. அந்தப் பிடிவாதத்துக்குள்ள எவ்வளவோ விஷயங்கள் இருக்கு. நம்ப ஆழ்மனசுக்குள்ள நாம எவ்வளவு தூரம் இறங்கிப் போறமோ அவ்வளவு தூரம்தான் அதைப் புரிஞ்சுக்க முடியும். என்னைக் கேட்டா இன்னைக்கு வரைக்கும் மனிதக் கலாச்சாரத்தைக் காப்பாத்திட்டிருக்கிற ஆதி உத்வேகம் அது. இன்னொருத்தனுக்காக மனுஷன் தன்னை பலியிடறான். இன்னும் பிறக்காத தலைமுறைக்காகத் தியாகங்கள் பண்றான். இன்னதுன்னு வரையறுத்துவிட முடியாத ஒரு நீதிக்காகத் தன்னையே தந்துடறான். ஐயாயிரம் வருஷமா பேரிலக்கியங்கள் இந்த அடிப்படை உணர்வைப் பத்தித்தான் பேசிட்டிருக்கு. இலக்கியத்தைப் பொறுத்தவரை உன்னதம்ன இந்த மகத்தான உணர்வு எங்க தீவிரமாகவும், அதே சமயம் நம்பும் படியாகவும் வெளிப்படுதோ அந்தப் பகுதிதான். மனுஷங்க பூமியில இடத்தால, காலத்தால, தேவைகளினால, ரத்த உறவினால, இன்னும் எவ்வளவோ விஷயங்களினால ஒண்ணா சேத்துக் கட்டப்பட்டிருக்காங்க. ஆனா எல்லாத்தயும்விட மகத்தான பிணைப்பு நீதிதான். அந்த நீதிய நிர்ணயிக்கவோ விளக்கவோ முடியாது. ஆனா கண்ணுக்குத் தெரியாத அந்த சரடு மானுட குலத்தைச் சேத்துக் கட்டியிருக்கு. மத்தக்கட்டுகள் எல்லாம் இயற்கை போட்டது. இது மட்டும்தான் மனுஷன் போட்டது. இத இல்லைண்ணா இயற்கையோட நியதிகள் மட்டும்தான் உலகத்தை ஆளும். பிறகு மனுஷனுக்குக் கலாச்சாரமே இல்லை. கலாச்சாரம்னா இந்த நீதிதான. பல்லாயிரம் வருஷமா இந்த நீதி மேலதான் மனுஷனோட அதிகார இச்ச சுயநலம், மூர்க்கம், இனத்துவேஷம் எல்லாம் வந்து அலையலைய மோதிட்டிருக்கு. இன்னும் அது தோத்துடலை. தோக்காது. இந்த எழுபத வயசில நான் கத்துக்கிட்ட பாடம்னா இதுதான்.'' ராமசாமியின் முகம் சிவந்து தளதளத்தது. உடனே தன் தீவிரத்தையே கூசியவர்போல சிரித்தார். ஜெயமோகனிடம் ''ஏன் நீங்க ஒரு நாவல் எழுதக்கூடாது இதைப்பத்தி? ரப்பருக்குத் தொடர்ச்சி மாதிரி எழுதுங்க'' என்றார்.

''நீங்க எழுதலாமே..''

''என்னால இனிமே இன்னொரு உலகத்தில கூடுமாறி குடி போ முடியும்னு தோணலை. இனி ஒரு நாவல்தான். சுயசரிதை மாதிரி...''

''எனக்குக் கதைமேல முடிவில்லாத நம்பிக்கை இருக்கு. கதை வழியா நான் வாழற உலகங்களை மாத்திக்கிட்டே இருக்கணும் போலிருக்கு. இந்த உலகம் அற்பமா, மூர்க்கமா, மடத்தனமா இருக்கு. கதைகளில நான் எனக்கு பிடிச்ச உலகத்தை உண்டு பண்ணிக்கலாமே'' என்றான் ஜெயமோகன்.

''அப்ப நீங்க எழுதணும்..''

''எழுதலாம்'' என்றபடி அவன் சிரித்தான்.

''நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''எதைப் பத்தி?'' என்றான் அருணாசலம்.

''வீரபத்ரபிள்ளைபத்தி!''

''அந்த வேகம் பயமுறுத்துது'' என்றான் அருணாசலம்.

''அன்னைக்கு பல கம்யூனிஸ்டுகள் அவருக்கு ஏதோ பேய் பிடிச்சிருக்கிறதாகச் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுக்கு ஆதாரமா எல்லாத்தயும் சொல்வாங்க.''

அருணாசலம் தன்னுள் அந்த இன்னொரு உடல் திமிறி எழுவதை உணர்ந்தான்.

''நீங்க நீலகண்டபிள்ளை வீட்டுக்குப் போய் அவருடைய ஃபைல்களைப் பாக்கலாம். நீங்க தேடற ஆதாரம் கிடைச்சாலும் கிடைக்கும். வீரபத்ரபிள்ளை ஏதாவது கடிதங்கள் எழுதியிருப்பார். நீலகண்டபிள்ளை பொதுவா எந்த வரலாற்று ஆதாரத்தையும் அழிக்க மாட்டார். ஆனா அதை வச்சுகிட்டு நீங்க என்ன பண்ணப் போறீங்க?''

''தெரியல்லை.''

''நீங்க அதிகமா பேசவே இல்லை.''

''பேசறபடி எனக்கு எதுவும் தெளிவா இல்லை முதல் விஷயம் ஃபாசிசத்தயும், நாசிசத்தயும், ஸ்டாலினிசத்தையும் நீங்க ஒண்ணா சேத்து சொன்னதை என்னால ஏத்துக்கவே முடியலை. ஸ்டாலின் தப்புகள் செய்திருக்கலாம். ஆனால் நீங்க அவர் செய்ததெல்லாம் அது மட்டும்தான்னு சொன்னீங்க. கட்சி நிறைய தப்பு செய்திருக்கலாம். ஆனா எனக்குத் தெரிஞ்சவரைக்கும் கட்சி அயோக்கியர்களும் கோழைகளும் மட்டும் நிரம்பின ஒண்ணு இல்லை.''

''நான் ஆட்களைப்பத்திச் சொல்லலை.''

''கட்சிக்குத் தன் தவறுகளைத் திருத்திக்ககூடிய ஆன்மபலம் உண்டு ன்னுதான் நம்பறேன்.''

''வீரபத்ரபிள்ளைய வச்சு அதை நிரூபிக்கப் போறீங்களா?''

''இல்லை, இது வெறும் ஆர்வம்தான். இந்த அளவு அவருக்கு எப்படி முன்பின் தெரியாத, வேறு தேசத்து மனிதர் ஒருத்தர்மேல ஆர்வம் வந்ததுங்கிற கேள்வி. அதே மாதிரி ஒரு ஆர்வம் எனக்கும் இவர்மேலே வருதோங்கிற பயம். அவ்வளவுதான்.''

''கெ.கெ.எம். எங்க இருக்கார்?'' என்றார் ராமசாமி சகஜமான பாவனையுடன்.

அருணாசலம் அதிர்ந்தான். ''தெரியல்ல'' என்றான்.

''வந்ததுமே எதிர்பார்த்தேன் அவரு வெளியேற்றப்பட்டதைப் பற்றி நீங்களாவே சொல்வீங்கன்னு'' ராமசாமி புன்னகைத்தார். அவன் மனதை அவர் படித்துவிட்டது தெரிந்தது. ஆத்திரம் வந்தது.

''நான் கிளம்பறேன். ரொம்ப சிரமப்படுத்திட்டேன்.''

''பரவாயில்லை. நீங்க வந்ததினால நானும் நிறைய பழைய விஷயங்களை ஞாபகப்படுத்திக்க முடிஞ்சது.''

அருணாசலத்தை ராமசாமி வாசல்வரை கொண்டுவந்து வழியனுப்பினார். ஜெயமோகன் தலையசைத்து வழியனுப்பிவிட்டு ஏதோ இதழைப் புரட்ட ஆரம்பித்தான்.

வண்டி கிளம்ப மறுத்தது. உதைத்தபோதுதான் தன் மனமும் உடலும் மிகவும் சோர்ந்திருப்பதை உணர்ந்தான். மெல்ல அது பற்றிக் கொண்டது.

7

''பொங்கும் பூம்புனல் வைக்கவா?'' என்று நாகம்மை கேட்டாள்.

''என்னது?''

''பாட்டு, சிலோன் ரேடியோ.''

''வை.''

ரேடியோவை அரை வெளிச்சத்தில் கரகரவென்று திருப்பினாள். அவள் முகம் அதன் துளி வெளிச்சத்தில் சிவந்த புகையாலான ஓவியம் போலிருந்தது. ரேடியோ ''கனவு காணும் வாழ்க்கை யாவும் கலைந்து போகும் மேகங்கள்...'' என்ற பாட ஆரம்பித்தது. மிக மெலிதாக வைத்து தலையணைக்கருகே வைத்துக் கொண்டாள். ''எவ்வளவு சிறிதா சௌகரியமா இருக்கு. நாமளே மனசுக்குள்ள பாடிக்கிற மாதிரி'' என்றாள்.

அருணாசலம் ''உம்'' என்றான்.

''சின்ன வயசில எங்க வீட்டு முன்னால சோடாக்காரர் வீட்லதான் ரேடியோ உண்டு. திண்ணைல போயி நின்னுட்டு பாட்டு கேப்பம். அப்பல்லாம் 'மல்லிகை என் மன்னன் மயங்கும்' பாட்டுதான் ரொம்பப் பைத்தியம். அதைப் போடாத நாளே இல்லை. அதுக்குப் பிறகு...''

''உம்...''

நாகம்மை பேச்சை நிறுத்திவிட்டு ''தூக்கம் வருதா?'' என்றாள்.

''ஆமா...''

''சரி தூங்குங்க.''

இப்போது கெ.கெ.எம். என்ன செய்கிறார்? அவருடைய பழைய வால்வ் ரேடியோ உடைசல் களுடன் சேர்ந்துவிட்டது. கெ.கெ.எம். தன் உடை களைத் தவிர வேறு எதையும் எடுத்துக் கொள்ள வில்லை. எங்கு போயிருப்பார்? தூக்கமற்ற இரவுகளில் எதை எண்ணிக் கொண்டிருப் பார்? அவரது முழு வாழ்வுக்கும் சமானமான தோட்டத் தொழிலாளர் சங்கத்தைத்தானா? ஒருவேளை

வேறு ஒரு ரேடியோ வழியாக அவரும் இருண்ட வானைத் துழாவக் கூடிய பிரபஞ்சத்தின் ஏதோ அறியாத புள்ளியில் அவர்களிருவரின் அலைவரிசை களும் சந்தித்துக்கொள்ளலாம். அப்போது பேச முடியாது. மௌனம் மட்டும்தான். அவன் கெ.கெ.எம்மை சந்தித்தால் ஒருவேளை கண்ணீர் விடக்கூடும். எளிதில் இளகிவிடுபவர்தான் அவரும். ஒருமுறை அவனுடைய சைக்கிள் சரிந்து கால்முட்டு பிசகி ஆஸ்பத்திரியில் இருந்த போது கெ.கெ.எம். பார்க்க வந்தார். தாங்க முடியாத வலியில் கண்கள் சிவந்திருக்க முனகலை வாய்க்குள் அடக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். கெ.கெ.எம் அவனைப் பார்த்ததும் பதறிப் போய்விட்டார். ஓடிவந்து கைகளைப் பற்றிக் கொண்டார். அவருக்குக் கண்ணீர் வந்துவிட்டது. அந்தத் தொடுஉணர்ச்சி அவனில் வெகுநாள் இருந்தது.

இருளில் எண்ணங்கள் கலந்து பரவின. கழிவிரக்கமா தன்னிரக்கமா என்று யோசித்தான். தொண்டை அடைக்கும் ஒரு துக்கம். என்ன இது என்று தெரியவில்லை. ஆனால் ஒருநாள்கூட மனதின் இந்தப் பொங்கி அலைபாய்தல் இல்லாமல் தூங்க முடிவதில்லை. என்ன இம்சை இது என்று கணம் அவனுக்கு கெ.கெ.எம்.மீது துவேஷம் ஏற்பட்டது. பிரதி நாகம்மைமீது. பாட்டு என்ன பாட்டு வேண்டியிருக்கிறது? மீன்கொடி தேரில் மன்மத ராஜன் ஊர்வலம் போகும் நேரத்தைப்பார்... மீண்டும் கெ.கெ.எம். மீண்டும் பழைய நினைவுகள். கெ.கெ.எம். இப்போது ஸ்டாலினுடன் உரையாடிக் கொண்டிருப்பார். ஸ்டாலினுக்கு முன் இருந்தாள். கற்பனையில் அவர் அவளைக் கொஞ்ச முடியும். அவர் ஸ்டாலினை நியாயப்படுத்தி எஸ்.எம்.ராமசாமியிடம் பேசினால். அப்படி அவனால் அவனுக்குள்ளே நியாயப்படுத்த முடியுமா? முடியாது. ஆனால் ஒன்று தெளிவாகத் தெரியும். அவனும் ஸ்டாலின் செய்த அனைத்தையும் செய்திருக்கக் கூடும். கெ.கெ.எம்முக்கு அவன் செய்தது வேறு என்னால் வேறு இது வேறு. இது ஒரு அரசியல் நாடகம். இல்லை. மனம் அறியும் இதுவும் அதுதான். அதிகார வேட்டை. அதிகார வேட்டையின் நியதிகள் எங்கும் எப்போதும் ஒன்றுதான்.

''தூங்கலியா?'' என்றாள் நாகம்மை.

''இல்லை.''

''என்ன நினைப்பு?''

''ஒண்ணுமில்லை.''

''தினம் இப்பிடியே ஒண்ணுமில்லாதத நினைச்சு நினைச்சு உங்களுக்கு என்ன அர்த்தம்? நானும் பாத்துட்டுதான் வாறேன். என்ன உங்களுக்கு?''

''இல்லட்டி, நீ தூங்கு.''

அவள் அவனைத் தழுவி ''எனக்கு ரொம்ப பயமா இருக்கு'' என்றாள்

''என்ன பயம்?''

''தெரியல்ல.''

''தூங்கு பேசாம.'' அவளைத் தட்டிக் கொடுத்தான். அதிகாரம் கவர்ந்திழுக்கிறது. முடிவற்ற சவால்களுடன் வாழ்வை உத்வேகமிக்க விளையாட்டாக ஆக்குகிறது. தன்னம்பிக்கையையும் முழுமையுணர்வையும் தருகிறது. கூடவே இந்த இழப்புணர்வு, குற்ற உணர்வு. அப்படியானால் தியாகிகள்? அவர்கள் அடைவது என்ன?

''ஏன் நாகம்மை, நீ ரொம்ப முக்கியம்னு நினைக்கிற ஒரு விஷயத்துக்காக சாகணும்னா சாவியா?''

''அய்ய, நல்ல கேள்வி நடு ராத்திரியில.''

''அதில்லை, சொல்லு பாக்கலாம்.''

''என் புருஷனுக்கும் பிள்ளைக்கும் ஒண்ணுண்ணா சந்தோஷமா சாவேன்.''

''வேற விஷயத்துக்காக?''

''வேற ஆளுகளுக்காக நான் எதுக்கு சாகணும்?''

''உனக்கு ஒரு விஷயம் நியாயம்னு தோணுது. அதை செய்யக் கூடாதுண்ணு சொல்லுதாங்க. செய்தா கொன்னுடுவோம்கிறாங்க செய்வியா?''

''உலகத்தில தினம் ஆயிரம் கொடுமைகள் நடக்குது.''

''சரி, இப்படி வச்சுக்க. நீ தனியா போறே. ஒரு குழந்தைய முரடன் ஒருத்தன் அடிச்சே கொல்லப் போறான். நீ என்ன பண்ணுவே. அவன்கிட்ட வாள் இருக்கு. கிட்ட போனா கொன்னுடுவான்.''

''அடப்பாவி! பேதில போவான். அப்படியா மனுஷங்க செய்வாங்க?''

''செய்தா நீ என்ன பண்ணுவே?''

''அவன் குரவளையக் கடிச்சுட மாட்டேன்? ரத்தத்தக் குடிச்சுட மாட்டேன்? பாவிப்பயல்.'' அவள் குரல் அசாதாரணமான உக்கிரத்துடன் ஒலித்தது. அருணாசலத்திற்கு உடம்பு புல்லரித்தது. ஒவ்வொரு உறுப்பும் உத்வேகத்தில் நடுங்கின. மெல்லக் கட்டுப்படுத்திக் கொண்டான். ''ஏன் நாகம் அது யாரோ குழந்தை. உனக்கு என்ன?''

''நல்ல கூத்து. அப்படி விட்டுறதா? தெய்வம் பொறுக்குமா?''

''அவன் உன்னைக் கொண்ணுடுவானே. உன் குழந்தை அனாதை யாயிடும்.''

''என் குழந்தைக்கு தெய்வம் துணை. என்ன பேச்சு இது? ராத்திரிலே வயத்தக் கலக்கிற மாதிரி.''

''இல்லை நாகம், உனக்கு தெரிஞ்சிருக்காது. ஜெர்மனின்னு ஒரு நாடு அவங்க ஹிட்லர்னு ஒரு ராஜா இருந்தான்.''

''மணி வீட்டு நாய்பேரு ஹிட்லர்.''

''ஆமா, அவன் ஒரு மோசமான ராஜா. அவன அவனுக்குட பிடிக்காதவங்களை லட்சக்கணக்கா கொன்னு குவிச்சான். தோலை உரிச்சு செருப்பு செய்ஞ்சான்.''

''சொல்லாதீங்க, கேக்க கூசுது.''

''அங்க உள்ள ஜனங்க அதைத் தட்டிக் கேக்கலை.''

''அவனுவளைப் பெத்த அம்மாமாரு சும்மாவா இருந்தாளுவ? தூங்குதப்ப குரவளையை அறுத்துப் போடாம விட்டாவளா? சுத்த அவிசாரி ராஜ்யமா இருக்கும் போலிருக்கே...''

''ஆமா அவிசாரி ராஜ்யம்தான். அம்மா இல்லாத ராஜ்யம்தான்.''

''எவனா இருந்தாலும் முலைப்பால் குடிச்சு வளந்தவன்தானே? அந்த ஒரு கடமை அவனுக்கு இல்லியா?''

''பகைய வளர்த்துட்டா எல்லாம் செய்ய முடியும். குழந்தைகளைக் கொல்ல முடியும், கிழவங்களைக் கொல்ல முடியும்... மனுஷன் பல வழியா எங்க வேணும்னாலும் போக முடியும்.''

''நீங்க இப்ப இதையெல்லாம் யோசிக்க வேண்டாம், தூங்குங்க.''

''நாகம்'' என்றான் அருணாசலம்.

''என்ன?''

''என்னைக் கட்டிப் பிடிச்சுக்க.''

''எதுக்கு என் ராஜா?''

''தூக்கம் வரல்லை நாகம். தூங்கவே முடியல்லை. எவ்வெவ்வளோ நினைப்பு. நினைப்புகளை என்னால பிடிக்க முடியல்லை. திரும்ப முடியல்லை.''

அவள் அவனை அணைத்தாள். ''கண்ணை மூடிக்கிடுங்க. குழந்தைய நினைச்சுக்கிடுங்க.''

அருணாசலம் கௌரியின் குட்டிக்காலை எடுத்துத் தொட்டான். தொண்டை குலுங்கியது. திடீரென்று பீதியுடன் வயிறு கலங்கியது. எவ்வெவ்வளோ தெரியவில்லை, உடம்பு நடுங்கியது.

''எனக்கு ரொம்ப பயமா இருக்கு நாகம். எப்ப பாத்தாலும் வயத்தை கலக்கிட்டே இருக்கு. ஏன்னே தெரியாத பயம்.''

''என்ன பயம்? நான் இருக்கேன்ல? நான் சாமிகிட்டே வேண்டிக்கிடுதேன்...''

அவன் அவள் மார்புகளுக்குள் முகம் புதைத்துக் கொண்டான். ''என்னை விட்டுராத நாகம். கெட்டியா பிடிச்சுக்கோ'' என்று உளறினான்.

''தூங்கு ராஜா, கண்ணுல்ல...'' என்றாள்.

இருட்டு அவனைச் சூழ்ந்து மௌனமாக நின்றது. அதற்குள் ஆயிரக் கணக்கான கூரிய பார்வைகளை உணர முடிந்தது. கண்களை மூடிக் கொண்டான். அவள் இதயத்தின் சத்தம் மட்டும் மெல்லக் கேட்டது.

◆

8

வண்டி வழியில் மக்கர் செய்ததனால் அருணாசலம் தன் அலுவலகம் வர மிகவும் பிந்திவிட்டது. காலையில் ஏழுமணிக்கே அவன் போவது வழக்கம். வாரத்தில் மூன்று நாள் தோட்ட அலுவலகத்திற்கு வந்து ஏழு மணி நேரம் வீதம் வேலை செய்தால் போதும் என்ற எழுதப்படாத ஒப்பந்தம் அவனுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே இருந்தது. ஒரு தற்காலிக ஊழியர் அவன் மேஜையின் வேலையைச் செய்வார். ஆனால் அலுவலகம் போய் பல நாட்களாகி விட்டிருந்தன. குற்ற உணர்வுடன்தான் உள்ளே நுழைந்தான். வேலை குவிந்திருந்தது. வெறிபிடித்தவன் போல வேலை செய்தான். பத்து மணிக்குப் பிறர் வந்தனர். பதினொரு மணிக்கு மேலாளர் அழைத்தார்.

அவனிடம் மேலாளர் மிகவும் மரியாதையுடன்தான் பேசுவது வழக்கம். வயதானவர். ''வணக்கம் அருணாசலம், உடம்பு எப்படியிருக்கு? நாராயணன் கூப்பிட்டுச் சொன்னார்.''

''பரவாயில்லை'' நாராயணனின் அந்த சிரத்தை அவ்வேளையில் ஏனோ எரிச்சல் தருவதாக இருந்தது. அவனது கவனக் குறைவை நாராயணன் நிரப்புகிறான்.

''ஒரு முக்கியமான விஷயம் பேசணும்னு கூப்பிட்டேன்'' என்றார் மேலாளர்.

''சொல்லுங்க.''

''இங்க கெமிகல் மிக்ஸிங் செக்ஷன்ல எட்டு தற்காலிக ஊழியர்கள் வேலை பாக்கிற விஷயம் தெரியுமே.''

''சொல்லுங்க.''

''இனிமே மிக்ஸ் பண்ணின கெமிக்கலை நேரடியா வாங்கிடலாம்னு மேலிட உத்தரவு. மிக்ஸிங் குளறுபடிகளினால நைட்ரிக் ஆசிட் சரியா வரல்ல. ரப்பர் நஷ்டமாகுது. நோ நோ, நான் தொழிலாளிகளைக் குற்றம் சொல்லேல்ல. இந்த சின்ன அளவில அதை செய்றது சரியா வராது. ஃபாக்டரி மிக்ஸிங்தான் தரமா இருக்கும். நைட்ரிக் ஆசிட் சரியா பதமாகலேன்னா ரப்பர் உறையறதில பிரச்சினை இருக்கு. உங்களுக்குத் தெரியும். நாம பதமில்லாத ரப்பரைத் திருப்பி எடுத்துக்

கிறதாத்தான் ஒப்பந்தம் போட்டிருக்கோம். மேலிடத்தில கேட்டாங்க ஏன் இவ்வளவு வேஸ்டுன்னு. அதோட ஆசிட் திருட்டுப் போறதா ஒரு புகார் இல்லை. நான் தொழிலாளிகளைக் குத்தம் சொல்லல்ல. புகார் பொதுவா வந்தது. இப்படி பல பிரச்சினைகள்.''

''இப்ப என்ன ஆச்சு?''

''ஆஸிட் வேலைய கான்ட்ராக்ட் விட்டுட்டாங்க.''

''அதனால?''

''அமைதியா கேட்கணும் ப்ளீஸ்... இப்ப இந்தத் தற்காலிக ஊழியர்களை இங்க வச்சுக்கிட முடியாது. தோட்டத்துக்கு மாத்திடலாம்னு ஒரு திட்டம். வேலை நடுவில முறியாம குடுப்பம். தோட்ட வேலைக்குண்டான எல்லா பெனிஃபிட்ஸும் உண்டு.''

''அப்ப பிரச்சினை இல்லையே.''

''மிஸ்டர் நாராயணன் ஒப்புத்துக்க மாட்டேன்றார்.''

''எதுக்கு?''

''தொழிலாளிகள் இங்கியே செட்டிலாயிட்டாங்க. அதனால நினைச்சப்ப மாத்த முடியாதுன்னு சொல்றார். மே மாசத்தில மாத்து, அப்பதான் ஸ்கூல் விடுமுறை வரும்ங்கிறார். கெமிகல் மிக்ஸிங் இல்லாதப்ப தொழிலாளிகளை மட்டும் எப்பிடி இங்க வச்சுக்கிறது? ஆறு மாசம் வேலை இல்லாம எப்பிடி மஸ்டர்ரோல் போட முடியும்?''

அருணாசலத்திற்கு அது உள்ளூர அதிர்ச்சியாக இருந்தது. அவனறிய அப்படி ஒரு விஷயம் இதுவரை நடந்ததில்லை. ஆனாலும் எதையும் காட்டிக்கொள்ளாமல், ''நாராயணன் என்ன சொல்றார்?'' என்றார்.

''இங்கியே அவங்களை அட்டன்டர், வாட்டர்பாய், கிளீனர்னு போடச் சொல்றார். ஏற்கனவே இங்க ரெண்டுபேர் ஜாஸ்தி. ஜெனரல் பர்ச்சேஸிங் செக்ஷனை மூடின பிறகு மிஞ்சினவங்க ரெண்டு பேர் வேற இருக்காங்க. எட்டுபேரை எப்படிப் போட முடியும்? நீங்களே சொல்லுங்க.''

''நாராயணன்கிட்டே சொல்றேன். அவங்களுக்கு இங்கேருந்து தோட்டம் வரை போய்வாற கன்வேயன்ஸ் செலவு கொடுத்தாப் போரும்.''

''டெபுடேஷனா ஆறுமாசம் போடறோம். அப்ப எல்லா அலவன்சும் வரும். பிறகு நிரந்தரமா போடறோம். இதை ஏற்கனவே அவரிட்ட சொல்லியாச்சு. ஒத்து வரமாட்டேங்கிறார். தொழிலாளிங்க ஒரு மாதிரிதான் இருப்பாங்க. யூனியன்தான் சொல்லிப் புரியவைக்கணும். நான் என்ன செய்ய முடியும்? எனக்கு மேலிடத்தில பதில் சொல்லணுமே. இது தனியார் தோட்டம்...''

''பாக்கிறேன், நீங்க கவலைப்படாதீங்க.''

மதியம் வரை மனம் அதிலேயே ஊசலாடியது. என்ன நடக்கிறது என்று புரியாமலில்லை. அருணாசலத்தைவிட தீவிரமான தொழிலாளர் சார்பு உடையவனாகத் தன்னைக் காட்டிக்கொள்ள முயல்கிறான் நாராயணன். அதுவும் அருணாசலம் வேலை செய்யும் நிறுவனத்திலேயே. கசப்பாக இருந்தது. ஆனால் இதே விளையாட்டை அவனும் ஆடியிருக்கிறான் என்பதே அக்கசப்பின் காரணம் என்பதும் தெரிந்தது.

மதியம் தபாலில் ஒரு பொட்டலம் வந்தது. எஸ்.எம்.ராமசாமி அனுப்பியிருந்தார். கூட ஒரு சிறு கடிதம் இருந்தது.

''அன்புள்ள அருணாசலம் அவர்களுக்கு, நேற்று முன்தினம் நீலகண்டபிள்ளையின் மகனைச் சந்தித்தேன். அவருக்கு ஒரே மகன் என்று தெரியுமே. சென்னையில் ஒரு தனியார் நிறுவன உயரதிகாரியாக இருக்கிறார். அவர் நீலகண்டபிள்ளையின் உடைமைகளை எடுத்துக்கொண்டு சென்னை செல்லவிருந்தார். வீட்டை விற்கவும் திட்டம் உண்டு. நீலகண்டபிள்ளையின் டைரிகள், கடிதங்கள் முதலியவற்றின் முக்கியத்துவம் நல்லவேளையாக அவருக்குப் புரிகிறது; தந்தைமீது பெரிய மரியாதை இல்லையெனினும். இங்கு கொண்டுவந்து நண்பர் எம்.எஸ். உதவியுடன் அவற்றை ஒழுங்குபடுத்தினோம். கடிதங்களில் பதினேழு கடிதங்கள் வீரபத்ரபிள்ளை நீலகண்டபிள்ளைக்கு எழுதினது. அவை முக்கியமானவை என்று படுகிறது. ஆனால் நீலகண்டபிள்ளையின் டைரியில் வீரபத்ரபிள்ளை பற்றி சிறுசிறு எளிய குறிப்புகள் தவிர வேறு ஏதும் இல்லை. அவருக்கு வீரபத்ர பிள்ளை மேல் பெரிய ஈடுபாடு இல்லை போலும். ஓர் ஆச்சரியமான விஷயம் வீரபத்ரபிள்ளையின் கைப்பிரதிகள் சில கிடைத்தன. எதற்கு அவற்றை நீலகண்டபிள்ளைக்கு அனுப்பினார் என்று தெரியவில்லை. நீலகண்டபிள்ளைக்கு இலக்கியம்பற்றி உயர்வான அபிப்பிராயம் இல்லை என்பதொன்றும் ரகசியமல்ல. கைப்பிரதியில் நான்கு நாடகங்கள், நான்கு சிறுகதைகள், இரண்டு மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், ஒரு சுயசரிதையின் சில பகுதிகள் ஆகியவை உள்ளன என்று மேலோட்டமான பார்வைக்குத் தெரிகிறது. ஒளிப்பிரதிகளை இத்துடன் அனுப்பியுள்ளேன். அசல் அவர் மகனிடம் உள்ளது. உங்கள் ஆய்வுக்கு இவை உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.''

அருணாசலம் ஒளிப்பிரதிகளைப் புரட்டிப் பார்த்தான். வீரபத்ர பிள்ளையின் கையெழுத்து மிகவும் பதற்றம் மிக்கதாக இருந்தது. நிறைய செல்லும் எழுத்துக்கள். நிறைய அடித்தல்கள், அம்புக்குறியால் இணைக்கப்பட்ட உபரி வரிகள். படிக்கத் தோன்றவில்லை. மூடிக் கட்டிவைத்திருந்த சற்றுப் பதற்றமாக இருந்தது. வேலையில் மனம் குவியவில்லை. ஒருமுகப்படுத்தி தன்னை அழுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. மாலைவரை கழுத்து வலியுடன் ஓரளவு திருப்திகரமாக வேலைகளை முடித்தபோது நிறைவு ஏற்பட்டது. கிளம்பலாம் என்று எண்ணியபோது தொலைபேசி ஒலித்தது. நாராயணன்தான். அந்தக் குரல் உருவாக்கியதுவேஷம் அவனுக்கு சகஜமாக இருந்தது.

''இண்ணைக்கு அஞ்சு மணிக்கு களியல் அரசு ரப்பர் தோட்டத்தில ஒரு சிறப்புச் செயற்குழுக் கூட்டம் இருக்கு தோழர்.''

''சிறப்புக் கூட்டமா, எதுக்கு?''

''ஓவர் டைம் சம்பந்தமா. நீங்க வந்தா நல்லாயிருக்கும்.''

முள்போலக் குத்தியது அந்த வார்த்தை. வந்தால் நல்லது, அவ்வளவு தான். ''வாறேன்.''

களியலை அடைந்தபோது இருட்டிவிட்டது. சலிப்பும் கோபமுமாக மனம் பொருமிக் கொண்டிருந்தது. சங்கக் கூட்டம் நடந்தது பழைய கட்டிடமொன்றில். அது குடோனாக முன்பு இருந்திருக்க வேண்டும். ரப்பர்ப் பௌடரின் வாசனை வீசியது. நாராயணன் கூட்டம் தொடங்கிய பிறகு மூன்று தோழர்களுடன் வந்தான். அவர்களில் இருவர் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள். ஒருவன் ரவீந்திரன். அருணாசலத்தின் கண்கள் ரவீந்திரனை அளவிட்டன. அவனுடைய தோரணை மாறியிருந்தது. கையில் ஒரு புத்தகம் இருந்தது. அருணாசலம் அதன் தலைப்பைக் கூர்ந்து படித்தான். 'மார்க்ஸியமும் கீழைச் சமூகங்களும்' நாராயணன் அருணாசலத்தை அணுகி பவ்யமாக வணங்கி முகமன் சொன்னான். ரவீந்திரன் நாராயணனை ஒட்டியே நின்றான். ''இது ரெவி தோழர். ஞாபகமிருக்கில்ல. மாநாட்டு வேலைகளை இவருதான் ஒழுங்கு பண்ணினாரு.''

''ஆமாமா, ஒரு சார்ட் கூட போட்டாரே'' என்றான் அருணாசலம். ''எப்படி இருக்கீங்க தோழர்?''

ரவீந்திரன் பவ்யமாக ''நல்லாயிருக்கேன் தோழர்'' என்றான். கட்சிக் காரர்கள் வழக்கம்போல தேர்ந்த நட்புத் தோரணையுடன் இருந்தனர். கூட்டம் தொடங்கி, சம்பிரதாயங்கள் முடிந்ததும், பிரச்சினை எழுப்பப் பட்டது. அரசு ரப்பர் தோட்டம் களியலில் புதிதாக எழுபத்தெட்டு ஏக்கரில் பயிரிட்டிருந்த ரப்பரை பால்வெட்டுக்குக் கொண்டு வரவிருக்கிறது. அந்த உபரி வேலையை இப்போதிருக்கும் தோழர்களே ஓவர்டைமாகச் செய்ய முடியுமா என்று நிர்வாகத் தரப்பில் கோரப்பட்டிருந்தது.

அருணாசலம் நிதானமாகப் பேசினான். ''இது ஒரு முக்கியமான சந்தர்ப்பம் தோழர்களே. சில விஷயங்களை இப்ப நாம தெளிவுபடுத்திக்க வேண்டியிருக்கு. இதுவரை இந்த முக்கியமான பிரச்சினையை நடைமுறைச் சிக்கல்களை காரணம் காட்டி நாம ஒத்திப் போட்டுட்டு வந்தோம். இப்ப அது வழிமறிச்சு நிக்குது. இப்ப நாம எடுக்கிற முடிவு முன்னோடியான முடிவு. ஓவர்டைம் செய்றதா வேண்டாமா? அதுக்கு பதில் சொல்றதுக்கு முன்னாடி சில விஷயங்களைத் தெளிவுபடுத்திக்க வேண்டியிருக்கு. புதிய தொழிலாளர்களை நியமிப்பதனால நிர்வாகத்துக்கு வாற செலவு என்ன? ஏக்கருக்கு ஒன்றரை ஊழியர்ங்கற கணக்கில் நூத்தி முப்பத்திரண்டு புது ஊழியர்கள் நியமிக்கப்படணும். அப்ப இன்னைக்குள்ள கணக்கில மாசம் ரெண்டு லெட்சத்து அம்பதினாயிரம் ரூபா செலவாகும். அதே வேலையை ஓவர் டைமா நாம செய்தா அஞ்சு லெட்சத்து எழுபத்தேழாயிரம் ரூபாய்

செலவு. மாதம் ரெண்டரை லெட்சம்வரை அதிக செலவு. எதுக்காக இந்த இழப்புக்கு நிர்வாகம் தயாராகுது? அஞ்சு பைசா கூட்டிக் கேட்டா ஆயிரம் நியாயம் பேசற நிர்வாகம் இதுன்னு நமக்கு தெரியும். விஷயம் இதுதான். யந்திரமயமாக்கல் எப்படியும் பத்து வருஷத்திலே வரப்போகுது. இப்ப ஆளெடுத்தா அப்ப அவங்க உபரியாயிடுவாங்க. அப்ப நம்மளிலகூட பாதிப்பேர் உபரியாயிடுவோம். இது நிர்வாகமே தாற கணக்கு தொழிற்சங்கத்துக்க எதிர்காலம், போராடும் சக்தி எல்லாமே காலப் போக்கில சிதைஞ்சு போயிடும். இது உழைக்க வாய்ப்பில்லாம லட்சக் கணக்கான இளைஞர்கள் மனமுடைஞ்சு அலையுற தேசம். தொழிலாளி வர்க்கம் இந்த சதிக்கு உடந்தையாயிடக் கூடாது. பணத்துக்கு ஆசைப்பட்டு தொழிலாளி வர்க்க சக்தியை உடைக்கிற இந்த திட்டத்தை நாம ஏத்துக்க கூடாது. புதிசா ஆள் எடுக்கட்டும். அந்தத் தொழிலாளர்களையும் சேத்துகிட்டு நாம யந்திரமயமாக்கலுக்கு எதிரா போராடுவோம். நாம வெறுமே கூலிக்காக கூப்பாடு போடுற கூட்டமல்ல. நாம பாட்டாளிகள். இந்த உலகைப் படைப்பவர்கள். நாளை இதை ஆளப் போகிறவர்கள். நாம் சங்கம் வைப்பதும், போராடுவதும் நீண்டகால அடிப்படையில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காகத்தானே ஒழிய கூலிக்காக அல்ல. நாம் மானுட விடுதலைக்காகப் போராடுகிறோம் தோழர்களே. இந்தப் போராட்டத்தில் உழைக்கிறவர்கள், உடைமையற்றவர்கள் அத்தனை பேரும் நம்முடைய தோழர்கள். நமது ரத்தம் அவுங்க. நம்ம கையப் பிடிச்சு நம்ம கண்ணையே குத்துறத நாம அனுமதிக்க கூடாது. எச்சில் கைய வீசினா வந்து கூடுற காக்கா கூட்டமல்ல தொழிலாளி. இந்த அருமையான பூமிக்குச் சொந்தக்காரன் அவன். அதை நாம மறக்கக் கூடாது. நம்ம பேராசான்கள் நமக்குக் குடுத்த கோஷம் இதுதான். நமக்கு இழக்க ஏதுமில்லை. அடையறதுக்கு ஒரு பொன்னுலகம் இருக்கு. இன்குலாப் சிந்தாபாத்.''

பதில் கோஷம் சன்னமாகவே இருந்தது. சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிரபாகரன் எழுந்து ''அப்ப இப்ப என்னதான் தீர்மானம்?'' என்றான்.

''ஓவர் டைம் தேவையில்லை. புது ஆளை எடு. இதுதான் நம்ம கோஷம்.''

''அவன் கான்ட்ராக்ட் குடுத்தா?''

''தோட்டத்திலே கான்ட்ராக்ட்காரன் நுழைஞ்சிடுவானா? வேற வேலை நடக்குமா? புது ஆள் முறைப்படி எடுத்தாகணும்.''

''இப்பம் ஓவர்டைம் வாங்காத தொழிலாளி வேற எங்கயும் இல்ல தெரியுமா?'' என்றான் அற்புதகுணமணி.

''அது தற்காலிகமான சிறிய வேலைகள். இது பெரிய வேலை. நிரந்தர வேலை. மட்டுமில்லை, இது சர்க்கார் தோட்டம். இங்கேதான் நம்ம போராட்டத்தை தொடங்கி முதல் வெற்றியை நாம அடையணும்'' என்றான் அருணாசலம்.

''நீங்க சொல்வீய்க. தொழிலாளி சம்மதிக்கணுமே. மத்த தோட்டத்தில ஓவர் டைம் உண்டு. இங்க புரட்சி மட்டும்தான்; ஓவர் டைம் இல்லைண்ணு சொன்னா அவன் கேப்பானா?'' என்றான் பிரபாகரன்.

''எல்லா கிளைகளிலயும் தீர்மானம் போடத்தான் போறம்.''

''நிறைவேத்திக்கிட்டு வாங்க. அப்பம் பேசுவம். தொழிலாளி என்ன மயிரானாவே, உங்க சித்தாந்தத்த தூக்கி சுமக்கியதுக்கு?''

''பாத்துப் பேசும் தோழர்.''

''நீரு பாத்துப் பேசும்வேய். ஓட்டி வேண்டாம்னு சொல்ல ஒரு சங்கமாம். சங்கத்துக்கு ஆளு குறைஞ்சிருமாம். உங்களுக்கு சந்தாப் பணம் குறையும். தூக்கி சொமக்க கை குறையும். அது உங்க பாடு. சம்பளக் கமிஷன் போட்டு எட்டு வருஷம் ஆயாச்சு. தேங்காத் தோட்டத்தில மூணு ஆர்பிட்டரேஷன் அவார்டு வந்தாச்சு. அதைக் கேக்க ஒரு மயிரானுமில்லை. பைசா வரும்பம் வாங்காதேன்னு சொல்ல செம்புலக்கைய தூக்கிக்கிட்டு வந்திருவானுவ.''

அருணாசலம் அயர்ந்துவிட்டான். அவனுடைய நீண்ட அனுபவத்தில் அத்தகைய மூர்க்கத்தைக் கண்டதில்லை.

''மனுவேல், நீரு இரியும்'' என்றான் நாராயணன்.

''இருக்கியது போட்டும். ஓட்டி வாங்காண்டாம்னு சொல்ல இவரு ஆருவே?''

''இரியும் தோழர்'' என்றார் கட்சித் தோழர்.

''பேச்சு வேண்டாம். நடக்குத வேலயிருந்தா சொல்லுங்க.''

''மனுவேல் உக்காருங்க'' என்றான் ரவீந்திரன் ''உங்க தரப்பைச் சொல்லிட்டிங்க.''

மனுவேல் திட்டியபடி அமர்ந்தார்.

நாராயணன் ''தோழர்களே நாம இன்னும் பொறுப்பா பேசணும். இங்க ஒரு கருத்து சொல்லப்பட்டது. அது தப்புண்ணா அதைச் சொல்லுங்க. எதுக்கு அனாவசிய வார்த்தைகளை போடணும்?''

''ஓட்டி வேண்டாமாம். இவரு சம்பளம் வாங்காமயா ஒலத்துதாரு?''

''அவரு சொன்னது தேசிய அளவில நம்ம கொள்கை.''

''அதப் பள்ளில சென்னு சொல்லுங்க. பஞ்சாலைத் தொழிலாளிக்கு மாசம் ஆறாயிரம் ரூபா சம்பளம். வருஷம் மூப்பதாயிரம் ரூவா போனஸ். அவனிட்ட சொல்லட்டுமே நியாயங்களை.''

''என்னத்துக்கு வெறும் பேச்சு? ஓட்டி இல்லேண்ணா சங்கமும் வேண்டாம்.''

''தோழர்களே கொஞ்சம் அடங்குங்க'' என்றான் கிளைச் செயலாளர் தங்கராஜ். ''இங்க சங்கத்துக்க கொள்கையைச் சொன்னாங்க. கொள்கை யளவில அதை நாங்களும் ஏத்துக்கிடுதோம். ஆனா நடைமுறையில வேற சில விஷயங்களையும் பாக்க வேண்டியிருக்கு. இந்த மாவட்டத்திலேயே மிகக் குறைவா போனஸ் வாங்கிற தோட்டம் இதுதான். மத்த தோட்டங்களில பல சட்டபூர்வமில்லாத விஷயங்கள் வழியா தொழிலாளர் களுக்கு லாபமிருக்கு. அதை இங்க சொல்ல விரும்பேல்ல. இதெல்லாம் இங்க உள்ள தொழிலாளிகள் மனசில குமுறிகிட்டே இருக்கிற விஷயங்கள். இப்ப இந்த ஓவர் டைம் வந்தது ஒரு பெரிய அதிர்ஷ்டம் மாதிரி அவங்களுக்குப் படுது. தோட்டத்தில ஒரு வாரமா இதுதான் பேச்சு. ஜனங்க எங்க பாத்தாலும் பேப்பரும் கையுமா கணக்கு போட்டுட்டு இருக்காங்க. பலர் கடன்கூட வாங்கியாச்சு. இப்ப போயி ஓ.டி. வாண்டாம்னு சொன்னா, வாங்கிக் குடுக்கிறோம்னு சொல்லுத சங்கம் மட்டும்தான் இங்க இருக்கும். அதனால நடைமுறைல அந்தப் பேச்சே இங்க சாத்தியமில்லை. தொழி லாளிக்கு என்ன வேணும்னு அவனுக்கே தெரியும். தொழிலாளி ஒரு வரலாற்று சக்தி. அவனுக்கு பாடம் படிப்பிக்க யாரும் வர வேண்டாம். பாடம் படிப்பிக்க வந்தவங்க எவ்வளவு பெரியவங்களானாலும் பாடம் படிச்சிட்டுதான் போவாங்க. அது தோழர் அருணாசலத்துக்கும் நல்லா தெரியும். எனக்கும் தெரியும்.''

அருணாசலம் தன் முதுகுத் தண்டில் கூரிய ஊசி ஏற்றப்பட்டதாக உணர்ந்தான்.

''அதனால இப்ப ஓ.டி. போடற விதம், சீனியாரிட்டி எப்பிடி, லீவு நாட்களை எப்பிடிக் கணக்கு போடுறது - அதைப் பத்தியெல்லாம் பேசலாம்.''

''உங்க பேச்ச என்னால ஏத்துக்க முடியல்ல தோழர்'' என்றான் நாராயணன். ''தனிப்பட்ட முறைல தோழர் அருணா இங்க சொன்ன கருத்துதான் என்னோட கருத்து. ஏன்னா அது கட்சிக் கருத்து.''

''நான் ஒரு விஷயம் சொல்லலாமா?'' என்றான் ரவீந்திரன். ''தோழர் அருணா கூறிய விஷயம் முழுக்க முழுக்க உண்மை. ஆனா அது தத்துவரீதியா சரி. நடைமுறைல இப்போதைக்கு சரிவராது. தொழிலாளியை விலைக்கு வாங்க முதலாளி முயற்சி பண்ணுதான். அதுக்கு அவன் இந்தப் பூமியையே தூக்கி வந்தாலும் கட்டாது. இப்ப நாம ஒரு தற்காலிகத் தீர்வா ஓ.டி.யை ஏத்துக்கிடுதோம். மாநில அளவில தோட்டத் தொழிலில ஓ.டி. இருக்கக் கூடாதுங்கிறதுதான் நம்ம கொள்கை. அந்த கொள்கையை சங்கக் கிளைலயும் தீர்மானமா நிறைவேத்தி கட்சிக்கும் நிர்வாகத்துக்கும் அனுப்பிடுவோம். மாநிலக்குழு கூடி இதுபத்தி பேசட்டும். தேசிய அளவில் உறுதியா ஒரு தீர்மானம் வரட்டும். அப்ப நம்ம தொழிலாளி ஓவர் டைம உதறிட்டு போருக்குத் தயாரா களத்தில இறங்குவான். அதுக்கு முன்னால நாம ஓ.டி. பத்தின நம்ம கருத்தை தொழிலாளர் மத்தியில பிரச்சாரம் பண்ணணும். அதுக்க அரசியல்ரீதியான குறைநிறைகளை அவனுக்கு எடுத்துச் சொல்லணும். தொழிலாளர்களை நாம ஒத்துக்கிட வைச்சிட்டா பிறகு

பிரச்சினையே இல்லியே. அதுக்கு கிளைதோறும் விளக்கக் கூட்டங்கள் போடணும். துண்டுப் பிரசுரம் வெளியிடணும். தட்டி எழுதி வைக்கணும். ஓ.டி. ஒழியணும், அதுதான் நம்ம கோரிக்கை. ஆனா அது தேசிய அளவில் ஒரு பெரிய இயக்கமா நடைபெறணும். அதுவரை தற்காலிகமா நம்ம எதிர்ப்பைப் பதிவு செஞ்சுட்டு ஓ.டி.யை ஒத்துக்கிடலாம். இதுதான் என் கருத்து.''

அனைவரும் கைதட்டினர்.

நாராயணன் ''தோழர் அருணாவுக்கு இதில மாற்றுக் கருத்து இருக்கா?'' என்றான்.

அருணாசலம் தலையசைத்தான். ரவீந்திரனின் குரலும் பேச்சுத் தோரணையும் தன்னுடைய பிம்பத்தையே கண்ணாடியில் பார்ப்பது போலிருந்தது அவனுக்கு. இனி நாராயணனுக்கு அருணாசலம் தேவை யில்லை. ரவீந்திரனுக்கு வேறு ஒரு செயல்வீரனின் துணை கிடைப்பதுவரை அவனுக்கு எந்தப் பயமும் இல்லை. அருணாசலம் புன்னகைத்தான்.

◆

9

ஆலஞ்சோலையில் கிளைக்கூட்டம் முடிந்து திரும்பும் வழியில் கடையாலுமூடு சந்திப்பில் சாயாக் கடைமுன் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே நுழையும்போது துணைக்கு வந்த தொழிலாளி ''கெ.கெ.எம். இங்கதான் இருக்காரு தோழர்'' என்றார். அருணாசலம் அதிர்ந்து விட்டான்.

''என்ன தோழர்'' என்றார் அவர்.

''இல்லை, இங்கேன்னா?''

''இங்க, அவருக்க பழைய அச்சி வீட்டில.''

''அச்சியா?''

''ஆமா, எசிலின்னு பேரு. நம்ப சமுதாயமாக்கும். எஸ்.டி.எல். தோட்டத்தில வேலை செய்தாள். பத்து நாப்பது வருஷம் முன்னால. அப்பம் கெ.கெ.எம்முக்கும் அதுக்கும் உறவு இருந்ததுண்ணு கேட்டிருப்பிய. ஒரு பிள்ளையும் உண்டு. பய இப்பம் என்.டி.சி.ல கண்டக்டர். கிளவிக்கு வேற கெட்டினவன் இருந்து, செத்துப் போட்டான். அதில் பிள்ளை இல்லை. அந்தப் பய கெ.கெ.எம்முக்கு மகனாக்கும்ணு கும்மா பார்த்தாலே தெரியும்.''

''கெ.கெ.எம். எவ்வளவு நாளா இங்க இருக்கார்?''

''ஒரு நாலு மாசமா. இங்கதான் இனிமே இருப்பாருன்னு சொல்லுதாவ. ஆனா இப்ப ஆருகிட்டயும் தொடர்பு இல்லை. அந்தப் பய அவரை நல்லா வச்சுக்கிடுதான்னு பேச்சு.''

''நீங்க பாக்கிறதுண்டா?''

''சிலப்பம். இப்பம் பாத்தா வயசு ஒரு பத்து பதினைஞ்சு கூடிப் போனமாதிரி தோணுது. பழைய எடுப்பு இல்லை.''

''நான் அவரைப் பாக்கணுமே..''

''அவருக்க மகன் தொழிலாளிகள் வந்து விரட்டுதான்னு சொன்னாவ.''

''பரவாயில்லை, பாப்பம்.''

ரு சாப்பிட்டபிறகு இருவரும் ஒரே ஒற்றையடிப் பாதை வழியாக வண்டியில்

போனார்கள். அடர்ந்த ரப்பர் மரங்களுக்கு இடையே சற்று புதிய கான்கிரீட் வீடு நின்றது. வீட்டு முகப்பில் ஒட்டுக் கறை ரப்பர் காய்ந்தது. ஒரு பசு நின்றது. யாரும் தென்படவில்லை. வீட்டு முகப்பில் 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாக இருக்கிறேன்' என்ற வரியுடன் கிறிஸ்துவின் படம் இருந்தது. வீடு புதிதாக இருப்பினும், விவசாய வீடுகளுக்குரிய பொருட்களுடன், வாசனைகளுடன், அழுக்குகளுடன் இருந்தது. மரத்தாலான இரு நாற்காலிகள் கிடந்தன.

''ஆருண்டு வீட்டில?'' என்றார் தொழிலாளி. உள்ளே அசைவு தெரியவில்லை. அருணாசலம் தயங்கியபடி சுற்றிலும் பார்த்தான். ஒரு வெள்ளாடு பின்தொடர கயிறைப் பிடித்தபடி கிழவி ஒருத்தி வருவது தெரிந்தது. வெயிலுக்கு கண்களைச் சுருக்கி உற்றுப் பார்த்தபடி வந்து, ''ஆஸ்டின் வேலைக்கு போயிட்டானே. நீங்க ஆரு?'' என்றாள்.

''இவிய சங்கத்து ஆளாக்கும். சகாவை பாக்க வந்திருக்காவ.''

''வாருங்க இரியுங்க'' என்று கிழவி ஆட்டை ஜன்னல் கம்பியில் கட்டினாள். அது வாலை ஆட்டியபடி ஒண்டுத் திண்ணைமீது ஏறி நின்று புழுக்கை போட்டது. ''இரியுங்க, சகாவு இல்லை. கோவிலுக்கு போயிருக்கு. வாற நேரந்தான். கடுங்காப்பி குடிக்கியளா?''

''இல்ல இப்பம்தான் குடிச்சம்.''

கிழவி ''யேசுவே ராஜாவே'' என்று அமர்ந்தது. ''மருமவ இல்லை. பயலைக் கூட்டிட்டு டாக்டரிட்ட போயிருக்கா. பயலுக்கு ஒரு காச்சலு. உங்கிளுக்கு வீடு தூரமா?''

''நாகர்கோவில்.''

''இங்க என்ன காரியம்?''

''ஒரு கூட்டம்'' என்றார் தொழிலாளி.

''கெ.கெ.எம் எனக்க தலைவராக்கும்'' என்றான் அருணாசலம்

''உள்ளதா? வலிய காரியம். நானும் பண்டு சங்கத்துக்கு சுவா குடுத்திட்டிருந்தேன். சிந்தாபாதும் விளிப்பேன். அப்பம் நல்லா சோலி செய்து கஷ்டப்பட்டேன். இப்பம் கர்த்தர் புண்ணியத்திலை ஒரு குறவும் இல்ல.''

''கெ.கெ.எம்மை எப்பிடித் தெரியும்?''

''தோட்டத்திலை வேலை செய்யுதப்பம் தெரியும். சங்கம் சேக்க வருவாவ.''

மேற்கொண்டு என்ன கேட்பது என அருணாசலம் தயங்கினான். அதற்குள் கிழவியே ''கல்யாணம் கெட்டியிட்டுண்டா என்னை கேக்கப் போறிய. இல்ல அது அப்பம் நடக்குத காரியமில்லை. அப்பம் உள்ள சகாவை ரோமன் கத்தோலிக்கா பாதிரியாரை மாதிரியாக்கும் கெட்டிப்பிடிது ?''

நாலு வருஷம் வந்திட்டு போயிட்டு இருந்தாரு. பிள்ளையும் பிறந்தாச்சு. அப்பம் எனக்க அம்மையும் அப்பனும் சொன்னாவ, எடியே, உனக்கு நாப்பது போனா என்னடி கெதி; அனாதயாட்டு ஆயிடுவியேன்னாவ. சகாவும் வேறு கெட்டு எசிலியே, எனக்கு இப்பம் அதுக்குள்ள கெதியில்ல; போலீசு கையில மாட்டுனா உயிரு எனக்கில்லைண்ணு சொன்னாவ. அப்பம்தான் இவிட ஆலோசனையுமாட்டு வந்தது. சங்கத்துக்க ஆளுதான். எனக்கு கெட்டு முறையும் உண்டு. சகாவுண்ணா வலிய காரியம். அப்பிடி கெட்டி இரு பொறுதியானோம். அப்பம் இஞ்ச ஒரு வலிய புளிமரம். அதுக்கு கீளே ஒரு ஓலைக் குடிலு. இந்த வீடு இவன் ஆஸ்டின் கெட்டினது. இப்பம் ஒரு குறவு இல்ல. நல்ல சௌகரியம். அப்ப நல்ல கஷ்டப்பெட்டிட்டுண்டு கேட்டியளா?''

''கெ.கெ.எம். நல்லா இருக்காரா?''

''செறிய தலைசுத்தல் உண்டு. பிளஷறுக்க ரோகம். ராபேல் டாக்டரிட்ட காட்டி ஊசி மருந்து போட்டம். மாத்திரை உண்டு. முடங்காம குடுக்கணும். எனக்க முன்ன மாதிரி களிவில்ல. நடுவில ஒரு பிடி. இருந்தா இருந்த எடம். நின்னா நின்ன எடம். எல்லாம் மருமவதான் பாத்து செய்யியது. சும்மா சொல்லப்பிடாது தங்கக் கொடமாக்கும்... கேட்டிட்டுண்டா, அம்புரோஸ் மூக்கனாரை? அவருக்க ரண்டாமத்த மவளாக்கும்.''

''ஆஸ்டினுக்கும் தோழருக்கும் உறவு எப்படி?'' என்றான் அருணாசலம். அதை அடக்கி வைத்தும் கேட்காமலிருக்க முடியவில்லை.

''முன்ன வலிய விரோதமாக்கும். சகாவு பேச்சை எடுக்கப்பிடாது. வெரி பிடிச்சிடுவான். நீயொக்கெ கிறிஸ்தவச்சியா, கர்த்தாவுக்கு விசுவாசம் உள்ளவளான்னு கேட்டு அடிக்கச் சாடி வருவான். ஆரெங்கிலும் நீ சகாவுக்கு மகனாடேன்னு கேட்டாப் போரும், அண்ணு சட்டியும் கலமும் உடையும். பயலுக்கு விசுவாசம் கூடுதல். ஜெபம் செய்யாம உறங்கின நாள் இல்லை. நான் அஞ்ஞானிக்க மகனில்லை, கர்த்தருக்க மகனாக்கும்னு சொல்லி ஒரு சமயம் கண்ணீர்விடுவான். என்ன சொல்ல முடியும் சாரே? இப்பம் உண்மை பிள்ளியளுக்குப் பழைய காரியங்கள் சொன்னா புரியல்ல. அண்ணைக்கே சகாவுண்ணு சொன்னா மாடன்சாமி மாதிரி. நெனைச்சா ஈரக்கொலை நடுங்கி தரிப்பு கேறும். காட்டுவழி போனாலும், கங்காணியப் பாத்தாலும் சகாவுண்ணு நினைச்சா மதி ஒரு தைரியம் கிட்டும். கர்த்தர் ஆட்டுக்குட்டியை தூக்கிக்கிட்டது மாதிரியாக்கும் சகாவு இந்த ஏழைகளை எடுத்து காப்பாத்தினது. அதெல்லாம் இண்ணைக்குள்ள பயலுவ மனசிலாகிக்கிட மாட்டானுவ. அதொக்கெ ஒரு காலம்.''

''இப்பம் ஆஸ்டின் என்ன சொல்லுதாரு?''

''அது கேளுங்க. அண்ணு மருமவ இல்ல. அவளுக்க வீட்டுக்கு போயிருந்தா. ராத்திரி எட்டு மணி. சின்ன மழை உண்டு. அப்பம்தான் கஞ்சி குடிச்சுட்டு, ஜெபம் செய்துட்டு, பாயை விரிச்சேன். கதவைத் தட்டுத சத்தம் தொறந்து பாத்தா ஆளை மனசிலாவேல்ல. எசிலி இது நாலஞ்சு வர்ஷம் சொன்னாவ. அப்பவும் நம்பிக்கை வரேல்ல. எசிலி எனக்கு ஆருமில்லாம

எல்லாரும் விரட்டிட்டாவன்னு சொன்னாரு. யேசுவே இது சகாவுல்லா எண்ணு நான் நிலவிளிச்சுப் போட்டேன். சகாவு மழையில நனைஞ்சு போட்டே. சகாவு வரணும், சகாவு உள்ள கேறணும்னு சொல்லுதேன். எலி எனக்க ஆருமில்லை எலிலின்னு மாறியும் சொல்லுதாரு. அப்பம்தான் அவரு சொன்னது எனக்கு மனசிலாச்சு. சகாவே இது சகாவுக்க வீடு. கேறிவரணும். நானும் எனக்க மகனும் உள்ளவரை சகாவுக்கு ஒரு குறவும் இல்லை, வரணும்னு சொன்னேன். வந்து கசேரயில இருந்தார். கையில ஒரு முண்டும் ஜிப்பாவும் பேப்பர்ல பொதிஞ்சு வச்சிருந்தார். லேய் ஆஸ்டின், சகாவுக்கு ஒரு வேட்டி எடுத்துக் குடுலேன்னேன். பேசாம எடுத்துக்கொண்டு வந்து குடுத்தான். துவர்த்து எடுத்து தலையை தோர்த்தினேன். சகாவு கஞ்சி குடிச்சுதாண்ணு கேட்டேன். கொண்டு வாண்ணு சொல்லி அருமயாட்டு குடிச்சாரு. லேய் ஆஸ்டின், இது உனக்கு அப்பனாக்கும், நீ ஏழு சென்மத்தில செய்த சுகிர்தமாக்கும் வயசான காலத்தில உனக்ககிட்ட கொண்டுவந்து சேத்திருக்கு, வந்து நமஸ்காரம் பண்ணுலேண்ணேன். பய அழுதுக்கிட்டு வந்து காலைத் தொட்டான். சகாவு அழுவத அண்ணுதான் பாத்தேன். ரண்டு பேரும் கெட்டிப் பிடிச்சுட்டு நின்னப்ப எனக்கு வானத்திலேருந்து கர்த்தர் எறங்கி வந்தது மாதிரி இருந்தது. சகாவுக்கு பயலை தடவித் தடவி மதியாவேல்ல. சொந்த ரெத்தமாக்கும். மனுசனுக்கு தெரிஞ்சதக் காட்டிலும் ரத்தத்துக்கு கூடுதல் கத தெரியும், கேட்டியளா?''

''ஆமா'' என்றார் தொழிலாளி ஆத்மார்த்தமாக. ''யோகம் செய்த பெயதான்.''

''தோழர் கோவிலுக்குப் போயிருக்காருண்ணு சொன்னீங்க.''

''ஆமா, இப்பம் வலிய பக்தியாக்கும். இங்க ஒரு கிருஷ்ணன் கோயில் உண்டு. தினமும் ரண்டு நேரம் போயி கும்பிடுவார். ராத்திரி கொஞ்ச நேரம் நாம ஜபம் உண்டு. பாட்டு கேக்கணும்னு சொன்னாருண்ணு ஒரு நாளைக்கு பெய ஒரு ரேடியோ வாங்கிட்டு வந்து குடுத்தான். சகாவுக்கு உறக்கம் குறவு. ராத்ரில கிருஷ்ணா கிருஷ்ணான்னு பாட்டு வச்சு கேப்பாரு. அப்பமே பாட்டுன்னா வலிய காரியமாக்கும் சகாவுக்கு.''

அருணாசலம் என்ன பேசுவது என்று தெரியாமல் சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

''காப்பி குடிச்சுதியளா?''

''இல்லை, வேண்டாம்.''

''சகாவு வாற நேரம். இண்ணைக்குப் பவுர்ணமியில்லா? கோவிலில வன்னமோ பூசெ.''

''தோழருக்க ரூம் எது? அதுவா?''

''ஆமா, உள்ளே செண்ணு இரியுங்க. உச்சயக்கு சாப்பிட வாற நேரம். ஒண்ணும் இன்னப்பிடாது. பத்தியம். உப்பு சேக்கப்பிடாது. இம்பிடு உப்புகூட சேக்கப்படாது. அதனால இப்பம் இங்க ரெண்டு சமையல்.

எனக்கும் இப்பம் உப்பு வேண்டாம். சகாவுக்க சோற கூட இருந்து திண்ணு உப்பு பிடிக்காம ஆயிப் போச்சு. மனுஷனுக்கு உப்புக்க அவசியமே இல்லை கேட்டியளா?''

அருணாசலம் அந்த அறைக்குள் போனான். சிறிய அறை. நடுவே ஒரு தூளி நாற்காலி. மேஜைமீது கெ.கெ. எம்மின் கண்ணாடி. அவரது கண்களை சந்திக்கும் உணர்வு ஏற்பட்டுத் திரும்பிக்கொண்டான். அறை சுத்தமாக இருந்தது. எதிர்ச் சுவரில் சங்கு சக்கர ஆயுதங்களுடன், பொற்கவசங்களுடன் விசுவரூபத் தோற்றம்கொண்ட கிருஷ்ணன் படம். கீழே கிருஷ்ண கிருஷ்ண என்று மலையாள எழுத்துக்கள். ஏழெட்டு தோத்திர நூல்கள். அருணாசலம் தன் பேனாவை எடுத்து மேஜை மீதிருந்த தாள்மீது வைத்து எழுத முற்பட்டான். சொற்களே வரவில்லை. மிகுந்த பிரயாசையுடன் உந்தியும் மனம் நகர மறுத்தது. பெருமூச்சுடன் சகஜப்படுத்திக் கொண்டு யந்திரத் தனமாக ''மன்னிக்க வேண்டும் தோழர்– அருணாசலம்'' என்று எழுதினான்.

கிழவி கறுப்பு நிறமான காபி தயார் செய்துவிட்டாள். சாப்பிட்டுவிட்டு கிளம்பும்போது ஆற்றாமையுடன் ''இம்பிடு தூரம் வந்துட்டு, சகாவை பாக்காமப் போறிய'' என்றாள்.

''பரவாயில்லை, உங்களைப் பாக்க முடிஞ்சதே.''

கிழவிக்கு வெட்கம் வந்தது. ''என்னைப் பாத்தியளாக்கும். நல்ல கூத்து

வண்டி ஒற்றையடிப் பாதையைத் தாண்டும்போது மறுபக்க சரிவில் கெ.கெ.எம். குரல் கேட்டது. இன்னொரு முதியவரிடம் பேசியபடி தட்டு ஊன்றி நடந்து வந்தார். காதில் துளசி இலை. உடலில் சந்தனக் கீற்றுகள்.

''அதோ வாறார்'' என்றார் தொழிலாளி.

''நாம போயிடலாம்.''

''ஏன்?''

''இன்னொரு முறை பாத்தா போச்சு.''

கெ.கெ.எம். அவர்களைப் பார்க்கவில்லை. அவர் கையில் இலைகள் தெற்றிப் பூக்கள் இருந்தன.

அருணாசலம் வெகுநேரம் அர்த்தமற்ற சிந்தனைகளில் அலைந்தான். பிறகு ஊமைக் கோபத்தில் மனம் எரிய தன்னை உணர்ந்தான்.

10

அருணாசலம் இரவில் வெகுவாகப் பிந்தி சியாமளா லாட்ஜின் கதவைத் தட்டினான். திறந்த போது உள்ளே நான்கு இளைஞர்களும் கதிரும் இருந்தனர். கதிர் எழுந்து ''வாங்க தோழர். நாராயணன் இப்பதான் போனார்'' என்றான்.

''லேட்டாயிட்டுது'' என்றான் அருணாசலம். காலையின் நாகம்மையின் அண்ணாவும் மனைவி குழந்தைகளும் வந்திருந்தனர். அண்ணா கேரள அரசு ஊழியர். அதனால் தான் விசேஷமான ஒரு பிறவி என்று அவர் நம்பினார். அண்ணா வந்துவிட்டால் நாகம்மை அப்படியே மாறி விடுவாள். கணவன் அண்ணாவுக்குப் பணிவிடை செய்தபடியே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாள். கூடவே கணவனைப் பற்றி மிகையாகப் புகழ்ந்தபடியும் இருப்பாள். அவனுடைய வேலைச்சுமை, குடும்பத்தில் கவனம் செலுத்தமுடியாத அவசரம், அவனைத் தேடிவரும் தொழிலாளர்கள் அனைத்துமே அப்போது அவளுக்கு பெருமைக்குரிய விஷயமாகி விடும் அவள் அண்ணி பதிலுக்கு தன் கணவரின் இளகிகமான நிறமை, அதே சமயம் இளகிய குணம் மூலம் அதை வீணடித்து விடும் தன்மை ஆகியவை பற்றிப் பேசுவாள். மொத்தச் சூழலிலும் இருந்த நடிப்பை ஒரு கட்டத்திற்கு மேல் தாங்க முடியாமல் அருணாசலம் காலையிலேயே கிளம்பி ஆலஞ்சோலை போய்விட்டான். அங்குதான் கதிர் வந்திருக்கும் தகவல் கிடைத்தது. ஆலஞ்சோலை யிலிருந்து கிளம்ப இருட்டிவிட்டது. வீட்டுக்கு ஒரு தொழிலாளியை அனுப்பிவிட்டு நேராக வந்துவிட்டான். ''ஆலஞ்சோலை போயிருந்தேன்'' என்றபடி அமர்ந்தான்.

''நாராயணன் சொன்னார்.''

அருணாசலம் வசதியாக அமர்ந்தான்.

''இவரு பேரு கங்காதரன். இளைஞர் இயக்கத்தில இருக்கார். இவரு மாணிக்கராஜ். மாணவர் இயக்கம். இவரு செங்கதிருக்கு மதுரை நிருபர் சண்முகம்.''

அருணாசலம் வணங்கினான். உடனே கிளம்பிவிட வேண்டும் என்று பட்டது. அரட்டையடிக்கும் மனநிலை இல்லை. மனதில்

வீரபத்ரபிள்ளையின் கைப்பிரதிகளே நிரம்பி நின்றன. இன்னும் முழுசாகப் படிக்கவில்லை.

''மலர்வேலைகள் எதுவரை ஆச்சு தோழர்?''

''நடக்குது. சில கட்டுரைகள் கிடைச்சிருக்கு.''

''நாராயணன் எக்கச்சக்கமா விளம்பரம் சேகரிச்சுட்டார் போலிருக்கே. பேசாம விளம்பர மலர்னே போட்டுரலாம்.''

''சாமர்த்தியசாலி'' என்றான் கங்காதரன்.

''ஆனா படிக்க மாட்டார். குறைஞ்சது கம்யூனிஸ்ட் அறிக்கையையாவது படியுங்கன்னு ஆறு வருஷமா சொல்றேன்'' என்றான் அருணாசலம்.

''மேடையில நல்லா பேசறார்.''

''மேடைப் பேச்சுக்கென்ன? கேட்டுப் பழகினா பேசிடலாம்.''

''பேச்சு வார்த்தைகளிலகூட சோடை போகிறதில்லை'' என்றான் கதிர்.

''அதுக்கு ரவீந்திரன்னு ஒருத்தனை உதவிக்கு வச்சிருக்கான்.''

''வேற என்ன வேணும்? தொழிலாளிகளை ஒருங்கிணைக்க முடியுது. பேச முடியுது. வாதாட முடியுது. அப்புறமென்ன?''

அருணாசலம் கதிரை உற்றுப் பார்த்தான் ''வேற ஒண்ணும் வேண்டாமா?''

''என்ன வேணும்?''

''சொல்லுங்க.''

''லட்சியவாதம் வேணும்கிறீங்க இல்லையா?''

அருணாசலம் கூசினான். ஏன் அப்படிக் கூசுகிறோம் என்ற வியப்பும் ஏற்பட்டது.

''இலட்சியவாதம் இன்னைக்குப் பெரிய பழஞ்சுமை தோழர். அது உள்ளவங்களை படிப்படியா எல்லா அரசியல்கட்சியும் வெளியேத் திட்டிருக்கு. இது யதார்த்தவாதத்தின் நூற்றாண்டு. இப்ப நியாகம் பண்ற தொழிலாளி இல்லை. கணக்குப் பாத்து வாங்கிற தொழிலாளிதான் இருக்கான்.''

''இப்பவும் இலட்சியத்துக்காக சாகிறாங்க...''

''எங்க? இலங்கையிலயா? இலங்கை மானசீகமா ஒரு அம்பது வருஷம் பின்னால இருக்கிற தேசம். எனக்கு என்னமோ அதை ஒரு ஆப்ரிக்க நாடாத்தான் நினைக்கத் தோணுது.''

''சீக்கிரமே உகாண்டா, எத்தியோப்பியா மாதிரி ஆயிடும்'' என்றான் சண்முகம். மற்ற இருவரும் சிரித்தனர்.

''நாராயணன் நடந்ததைச் சொன்னார் தோழர். நீங்க இத்தனை அப்பாவியா இருப்பீங்கன்னு நான் நினைக்கலை. சமயங்களில நீங்க கெ.கெ.எம். சிஷ்யர்னு காட்டிடறீங்க.''

''நாராயணன் எதுக்கு என்னை அப்படி ஒரு சந்தர்ப்பத்தில கொண்டு போயி விட்டான்?''

''நீங்க சொன்னா கேப்பாங்கன்னு நினைச்சானாம்.''

''பொய். அவனுக்கு உண்மை தெரியும். என்னை கவுக்க போட்ட திட்டம் அது.''

''சரி, அதில என்ன தப்பு? நீங்க கெ.கெ.எம்மை கவுக்கலியா?''

அருணாசலம் முகம் சிவந்தான். எழ முயன்றான்.

''மன்னிச்சிடுங்க தோழர். என்னால எப்பவும் நேரடியாத்தான் பேச முடியும். ஒரு உயிருள்ள அமைப்பு அப்பிடித்தானே இருக்கணும்? உங்க குறைபாடுகளைப் பூர்த்தி செய்து உங்க இடத்தை நிரப்ப எப்பவும் பின்னாடி ஆள் இருக்கணும். ஒவ்வொரு தளத்திலயும் ஆரோக்கியமான போட்டி இருந்துட்டே இருக்கணும். அப்பதானே அந்த அமைப்பு தேங்காம இருக்கும்? தன்னோட சிறந்த பணிகளை செய்ய முடியும்? சிறுநீரகம்கூட நமக்கு ரெண்டு இருக்கே?''

''போட்டியா?''

''ஆமா, தொழிற்சங்கம்கிறது ஒரு சேவைன்னு நினைக்கிற பழங்கதைய கொஞ்சம் மறந்திடுங்க. இப்ப தொழிற்சங்கம் ஒரு தொழில். ஒரு மிகச் சிறந்த ஊழியம். நம்மகிட்டேருந்து இன்னைக்குள்ள தொழிலாளி எதிர்பார்க்கிறது அதுதான். நாராயணனுக்கு அது தெரியும். உங்களை மாதிரி அவனுக்கு லட்சியவாதப் புளிச்ச ஏப்பம் இல்லை.''

''சரி. ஓவர் டைம் விஷயத்தில நீங்க என்ன நிலைப்பாடு எடுப்பீங்க?''

''நாராயணன் எடுத்த நிலைப்பாடுதான். ஏத்துக்கிட்டே எதுக்கிறது. கொள்கை வேற, நடைமுறை வேற. மேலே மத்தியில ஜகஜித்சிங் வருஷா வருஷம் அதை நடத்திக் காட்டுறாரே.''

''ஆனா...''

''இருங்க, தொழிற்சங்க எதிர்காலம்பத்திப் பேசறீங்க. அஞ்சு வருஷம் முன்னால சோவியத் ரஷ்யா உடையும்னு உங்களுக்குத் தெரியுமா? யாராவது சொன்னா சிரிச்சிருப்பீங்க. இப்ப? எதிர்காலத்தை விடுங்க. இன்னைக்குள்ள அதிவேக உலகில எதிர்காலத்தில என்ன வேணுமானாலும் நடக்கும். கான்ட்ராக்ட் முறை வளரக் கூடிய வேகத்தைப் பாத்தா தொழிற்சங்கம்ங்கிற அமைப்பே இல்லாம போயிடலாம். வர்க்கேர்ஸ் கில்ட் மாதிரி நிபுணர் குழுக்கள் உருவாயிடலாம். ரொம்ப அலட்டிக்காதீங்க.''

''நம்ம கட்சிக்கு ஒரு இலட்சியம் இருக்கு. கனவு இருக்கு'' என்றான் அருணாசலம். தன் குரல் ஏனிப்படி தயங்கியும் கூசியும் ஒலிக்கிறது என்று வியப்புடன் உள்ளூரக் கேட்டுக் கொண்டான்.

''என்ன இலட்சியம்?'' என்றான் கதிர். அதுவரை அவனிடமிருந்த சாந்த பாவனை விலகியது. ''எத்தனையோ நூற்றாண்டுகளா மனிதகுலம் இலட்சியங்களைப்பத்திப் பேசிட்டிருக்கு. இந்த இலட்சியவாதம்னா தன்னளவில என்னன்னு எப்பவாவது பேசியிருக்கமா? பிளேட்டோ பேசியிருக்கார். நீட்சே பேசியிருக்கார். அது யார் காதிலயும் விழுகை விழுந்தவங்க அதையும் புதுவித இலட்சியவாதமா வழிபட ஆரம்சாங்க. ஆயிரம் ரெண்டாயிரம் வருஷமா இலட்சியம் தியாகம்னு மனிதக் கூட்டங்களைத் தத்துவஞானிகள் பலிபீடத்துக்கு அனுப்பிட்டிருக்காங்க. இப்ப மானுட குலம் ஒரு முட்டுச் சந்துக்கு வந்தாச்சு. நம்ம காலத்திலே உள்ள ஆகப் பெரிய இலட்சியவாதம்னா மார்க்ஸியம்தான். அதும் இப்ப தோத்துப் போச்சு. மனுஷ குலத்தைப் பெரிய கேள்விகள் முன்னாடி நிக்கவிட்டுட்டு அது உதிர்ந்து போச்சு.''

''நான் அதை ஒத்துக்கலை'' என்றான். அருணாசலம் கோபத்துடன்.

''இலட்சியவாதங்கிற முறைல அது தோத்துப் போச்சுன்னுதான் சொல்றேன். மார்க்ஸிசத்திலே மூணு அடிப்படைகள் உண்டு. ஒண்ணு இலட்சியவாதம், மானுடகுலத்தின் எதிர்காலம் பத்தின பெரும் கனவு. இப்ப இல்லை. உண்டுண்ணு சொல்றவன் மூடன், இல்லாட்டி அயோக்கியன், இல்லாட்டி அரசியல் நிபுணன் – என்னை மாதிரி. இன்னொண்ணு அதோட தத்துவக் கட்டுமானம்; அதாவது முரண்நிலை இயங்கியல். ஜன்ஸ்டூனோட சார்புநிலைத் தத்துவமும் இரட்டை இருப்புத் தத்துவமும் வந்தபிறகு அதோட அடிப்படை இளகிட்டிருக்கு. உயர்தத்துவ விவாதங்களில இப்ப அது செல்லுபடியாகிறதில்லை. நடைமுறைக் கோட்பாடுகளில இன்னும் கொஞ்ச நாள் இருந்திட்டிருக்கும். மூணாவது அம்சம் அதனோட அரசியல் கோட்பாடும் நடைமுறையும். வர்க்கப் போர் இப்ப குறியீட்டுரீதியான போரா ஆயிடுச்சி. அன்தானிபோ கிராம்ஷிக்கு பிறகு நிஜப் போரே ஒரு குறியீடுதான்னு எல்லோரும் புரிஞ்சுகிட்டாச்சு. நாம நடத்துறது நிலையுத்தம். அக்டோபர் புரட்சி நேர யுத்தம். அதாவது சமரசமும் யுத்தம்தான். இந்த அரசியல் அடிப்படை மட்டும் இந்த நூற்றாண்டிலயும் அடுத்த நூற்றாண்டிலயும் இருக்கும். எப்ப உலகத்தில் வறுமையும் பட்டினியும் இல்லாம ஆகுதோ அப்ப இதுவும் இல்லாம ஆகும்...''

அருணாசலம் ஏதும் பேச முடியாதவனாக அமர்ந்திருந்தான்.

''இலட்சியவாதம்பத்தி பேசிட்டிருந்தோம் இல்லியா? அதை எப்படி வரையறுக்கிறது? சொல்லுங்க.''

அருணாசலம் சற்றுத் தயங்கினான். ''சரியா சொல்ல முடியுமான்னு தோணல்ல. ஒரு மேலான விஷயத்துக்காக தியாகம் பண்றதுதான் இலட்சியவாதம்.''

''இப்ப நீங்க சொன்னதில இரண்டு பார்வைகள் அடங்கியிருக்கு. ஒண்ணு இப்ப இருக்கிற வாழ்க்கை சரியில்லை. அல்லது போதலை. அதை மாத்தணும்கிற கனவு முதல் அம்சம். அதுதான் லட்சியம். ரெண்டாவது விஷயம் தியாகம். என்னையும் உள்ளடக்கின இந்த வாழ்க்கையை நான் மாத்தியமைக்க முயற்சி பண்றேன். ஆனா அதன் பலன்களை நான் அனுபவிக்க முடியாது, என்னோட அடுத்த தலைமுறைக்கு அதை குடுத்திட்டுப் போறேன். இதான் தியாகத்துக்கு அடிப்படை மனோபாவம், இல்லையா?''

''ஆமா.''

''வாழ்க்கையை எதன் அடிப்படைல மாத்தியமைக்கணும்னு நினைக்கிறோம்?''

''வாழ்க்கையை பரிசீலிச்சுப் பாத்து... அதுக்க போதாமைகளை உணர்ந்து.''

''இருங்க தோழர். நமக்கு இப்ப இருக்கிற வாழ்க்கை ஏன் போதாம இருக்கு? ஏன் குறைபாடு உள்ளதாப் படுது?''

''ஏன்னா நமக்கு கஷ்டங்கள் இருக்கு.''

''வறுமை இல்லியா?''

''ஆமா?''

''நம்மைவிடப் பலமடங்கு வறுமை பழங்குடிகளிட்ட இருக்கு. ஆனா அவங்களுக்கு சமூக மாற்றம்கிற கனவு ஏதும் இல்லை.''

அருணாசலம் மனம் தூண்டப்பட்டான்.

''வாழ்க்கையைப் பத்தின எதிர்பார்ப்புகள் இருக்கிற இடத்தில்தானே ஏமாற்றம் இருக்கும்? மேலான வாழ்க்கையைப் பத்தின கனவுகள் உருவான பிறகுதான் வாழ்க்கை போதாம ஆகுது. இலட்சியவாதத்துக்க அடிப்படை வாழ்க்கை பத்தின அதிருப்தி. எங்கேருந்து வருது அது?''

அமைதி நிலவியது. கதிர் கூர்ந்து பார்த்தான். பிறகு மேடைப் பாணியில் ''தோழர்களே, சொர்க்கம்னா என்ன?'' என்று கேட்டான். புன்னகையுடன், ''பூமில மனுஷங்க உருவாக்க விரும்பின ஒரு உலகம்தானே அது? சொர்க்கம் பத்தின கனவு இல்லாம மதம் உண்டா? மார்க்ஸிய மதத்தில் சொர்க்கம்கம்யூனிச சமூகம். மதங்களுக்கு அந்தக் கனவு எங்கேருந்து வந்தது? அதுக்கான தேவை என்ன?''

அருணாசலம் சற்றே பொறுமை இழந்தான். கதிரின் மேடைப் பேச்சுத் தோரணை அலுப்பூட்டியது.

''மதங்களுக்கு இந்த உலகை, இந்த வாழ்வை, நிராகரித்தாகணும் தோழர். அப்பதான் புனிதம்னு ஒண்ணை உருவாக்க முடியும். இந்த உலகப் பகைவிட உசத்தியான பசு காமதேனு. இந்த உலகத்து மரத்தவிட

உசத்தியானது கற்பக விருட்சம். இந்த உலகத்தைவிட உசத்தியானது சொர்க்கம். இப்பிடியே இந்த உலகத்தைப் போதாததா, குறைபாடு நிறைஞ்சதா கற்பிச்சிட்டாங்க மதவாதிகள். பரத்தை நிலை நாட்டறதுக்காக இகத்தை நிராகரிச்சிட்டாங்க. இந்த உலகத்தையும் உலக சுகங்களையும் நிந்திக்காத மதம் இல்லை. ஆனா பூமிமீது மனுஷனுக்கு ஆதியான ஒரு ஈர்ப்பு உண்டு. அதன் மடியில அவன் வாழ்க்கை சந்தோஷமானதுதான். எல்லாப் பழங்குடிகளும் சந்தோஷமாத்தான் இருக்காங்க. பரத்துக்காக யாரும் இகத்தை இழந்துடறதில்லை. வாழ்க்கையோட கடைசித் துளியையும் நக்கிட்டு சாகத்தான் ஒவ்வொரு மனுஷனும் ஆசைப்படறான். எதுக்கு புனிதம்னு ஒண்ணை உருவாக்குது மதம்? மனிதக் கலாச்சாரம்னு ஒண்ணு உருவாக ஆரம்பிச்சப்ப உருவான சிக்கல் அது. மனுஷனுக்குள்ள உள்ள இச்சை கட்டற்றது. அதுக்கு உலகமே வேணும். அப்ப மனுஷனுக்கு மனுஷன் எதிரியாதான் இருக்க முடியும். கூடி வாழணும்னா ஒவ்வொரு மனுஷனும் கொஞ்சம் இழந்தாகணும். கொஞ்சம் இச்சைகளைக் கட்டுப்படுத்தி யாகணும். எதன் பேரில இழக்கிறது? எதை எதிர்பார்த்து தியாகம் பண்றது? அப்பதான் இந்த மாதிரி இதவிட மேலான ஒண்ணு அங்க இருக்கு, இதை விட்டுக்கொடுத்தா உனக்கு அங்க அது கிடைக்கும்னு சொல்ல ஆரம்பிச்சாங்க. புனிதம் பிறந்தது. சொர்க்கம் பிறந்தது. தியாகம்தான் மகத்தான மானுட உணர்வுண்ணு கொள்கை பிறந்தது. மதங்கள் அந்த அடிப்படைகளை வளர்த்து எடுத்துத் தங்கள் அதிகாரத்தை உருவாக்கிக் கொண்டன. பல்லாயிரம் வருஷமா இந்தப் பூமிமேல பூமியைவிட மேலான ஒரு புனித பூமி பத்தின கற்பனையை நிலைநிறுத்தி, அது வழியா தன் ஆதிக்கத்தை உருவாக்கிச்சு மதம். அதுக்காக வாழ்க்கையை நிராகரிக்கும்படி மனுஷனுக்குக் கத்துக் குடுத்தது. ருசியா சாப்பிடாம, நல்ல உடை உடுக்காம எத்தனை துறவிகள் செத்து அழிஞ்சிருக்காங்க. உடல் இன்பம் தருது, அதனால உடலை நிராகரிக்கணும், முள் மேல படுக்கணும், இருட்டறையில புழுங்கணும்... தியாகத்தின் பெயராலதான் உலகில இதுவரை கோடானு கோடி பேர் அநியாயமா செத்திருக்காங்க. தன்னை வதைச்சு செத்த துறவிகள், எரிச்சுக்கிட்டவங்க, போர்ல செத்து விழுந்தவங்க... எந்த இன்பத்திலயும் ஊடாக ஒரு அதிருப்தியும் குற்ற உணர்வும் ஓடறாப்பில பண்ணிடுச்சு மதம். மனம்விட்டுச் சிரிச்சா, வயிறாரச் சாப்பிட்டா, ஆசைதீரப் பெண்ணை அனுபவிச்சா நாம கூசிக் குறுகிப் போயிடறோம். இல்லைன்னு சொல்லுங்க தோழர். இதையெல்லாம் துறந்தவர்னு ஒருத்தரைப் பாத்தா குற்ற உணர்வால சுருங்கிப் போய் அவர் முன்னால மண்டியிடறோம். தியாகம்னாலே கண்ணீர் விடறோம். தியாகம் பண்ண முடியலையேன்னு வருத்தப்படறோம். எல்லா மதத்துக்கும் தியாகம்தான் துருப்புச் சீட்டு, மார்க்ஸிசத்துக்கும் அப்பிடித்தான். இல்லையா?''

கதிர் தொடர்ந்தான்: ''இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள சகஜமான உறவை மதம் சிதிலப்படுத்திடுச்சு. இயற்கையை இயற்கை இல்லைன்னு சொல்லுது மதம். அது மேலும் மகத்தான இன்னொண்ணோட நிழலோ குறியீடோ, பதிலோதான்னு நமக்குக் கற்பிக்குது. அதுக்காக நாம இதை விட்டுடணும். அற்புதமான மலைச்சரிவைப் பார்த்ததும்

கடவுளேன்னு கூவுறான் மனுஷன். கடவுளுக்காக உடனடியா இந்தப் புலன் இன்பத்தைத் துறந்து இருட்டறைல அடைபடணும்னு நினைக்கிறான். மலைமுகடுகளில ஹெர்மிட்டேஜ் கட்டி வச்சிருக்கான் பாருங்க, காத்தும் வெளிச்சமும் இல்லாத இருண்ட அறை. அஜந்தாவிலயும் நீங்க இதைப் பாக்கலாம். இயற்கையில காத்தும் வெளிச்சமும் இருக்கே. அப்ப அதைத் துறந்தாகணுமே. எது உனக்கு மிக முக்கியம்னு படுதோ அதை விட்டுடு. அதுதான் பேரின்பம். எப்படி நியாயம்? ஆனா இதைத்தான் இருபது நூற்றாண்டா பேரிலக்கியங்கள் பிரச்சாரம் பண்ணுது. மதங்கள் ஒங்கிச் சொல்லுது. ஆக, இப்ப சொன்னீங்களே தோழர் அதிருப்தி, கனவு, தியாகம்னு இலட்சியவாதத்தோட மூணு நிலைகள். மூணும் மதத்திலயிருந்து முளைச்சு வந்த விஷயங்கள். மார்க்ஸிசம் ஒரு விஞ்ஞானம். ஆனா அதை ஒரு மதமா மாத்திட்டாங்க. மேற்கில அதை கிறிஸ்தவம் மாதிரி ஒரு மதமா மாத்தினாங்க. இங்க அதை பௌத்தம் மாதிரி ஒரு மதமா மாத்தினாங்க. அறிவு சார்ந்த மதம். துக்க நிவாரணத்துக்காக சங்கம் சேரக் கூடிய மதம். எப்பிடி இந்திய கம்யூனிசத்தில துறவுக்கும் பிரம்மசரியத்துக்கும் இப்ப உள்ள முக்கியத்துவம் வந்தது? பௌத்தத் துறவி காரை இலையும், கருணைக் கிழங்கும் சாப்பிடுவான். நம்ம தோழர் பொறையும் டீயும் பீடியும் சாப்பிட்டு உயிர் வாழ்வார். அரைப்பட்டினி கிடக்கக்கூடிய தொழிலாளிக்குக் கூட நம்ம தோழரைப் பார்த்தா குற்ற உணர்ச்சி வந்துடும். கடன் வாங்கி சோறு போடுவான். குறைஞ்சது ஒரு கட்டு பீடியாவது வாங்கித் தருவான். நம்ம பழைய தோழர்களுடைய பெரிய ஆயுதம் அவங்களோட தியாகம்தான். மதத்திலிருந்து கிடைச்ச அந்த நாணயம் இன்றுவரை செலவாணியாயிட்டு தான் இருக்கு. இலட்சியவாதம்னா தியாகத்தோட இன்னொரு பேரு. அவ்வளவுதான்.''

''இன்னைக்கு தியாகத்துக்கு அர்த்தமே கிடையாதா?''

''கண்டிப்பா உண்டு. ஒரு தனிமனித விஷயம் அது. ஒருத்தனுக்குத் தன் வாழ்க்கை தியாகத்தில பூரணமடையுதுன்னு பட்டா தாராளமா செய்யலாம். ஆனா இனிமே அது ஒரு நிறுவனம் இல்லை. செல்லுபடியாகிற நாணயமும் இல்லை. ஒரு சமூகமே தியாகத்தில வாழறது இனிமே சாத்தியம் இல்லை. ஏன்னா இன்னைக்கு நாளைங்கிறது சுத்தமா புரிஞ்சுக்க முடியாத ஒண்ணா, கற்பனைகூட செய்ய முடியாத ஒண்ணா மாறிட்டுது. நாளைக்கு உலகம் அழியலாம். பிரபஞ்சம் அழியலாம். இன்னைக்குள்ள எல்லாமே நாளைக்கு மாறிடலாம். நவீன விஞ்ஞானம் மனுஷனுக்குக் குடுக்கிற முதல் பாடம் இது. இன்றுதான் நிஜம். இன்றுதான் ஒரே சாத்தியம். போகத்துமேல இருக்கிற குற்ற உணர்வை இதனால படிப்படியா மனுஷன் இழந்துட்டு வாறான். வேணும் இன்னும் வேணும்னு இயற்கையைப் பாத்து மனுஷ குலமே முறையிட்ட மாதிரி இருக்கு. பூமி போதாம ஆனப்ப கண் விண்வெளி நோக்கித் திரும்பியாச்சு. இப்பதான் குற்றவுணர்வு இல்லாம மனுஷன் இயற்கையையும் வாழ்க்கையையும் அனுபவிக்கிறான். காமம் எப்படி விஸ்வரூபம் எடுத்திருக்கு பாத்திங்களா? அதுமேல போடப்பட்ட எல்லா கட்டுப்பாடுகளும் தெறிக்குது. இனிமே அது காதல் இல்லை, ஆத்ம சங்கமம்

உசத்தியானது கற்பக விருட்சம். இந்த உலகத்தைவிட உசத்தியானது சொர்க்கம். இப்பிடியே இந்த உலகத்தைப் போதாததா, குறைபாடு நிறைஞ்சதா கற்பிச்சிட்டாங்க மதவாதிகள். பரத்தை நிலை நாட்டறதுக்காக இகத்தை நிராகரிச்சிட்டாங்க. இந்த உலகத்தையும் உலக சுகங்களையும் நிந்திக்காத மதம் இல்லை. ஆனா பூமிமீது மனுஷனுக்கு ஆதியான ஒரு ஈர்ப்பு உண்டு. அதன் மடியில அவன் வாழ்க்கை சந்தோஷமானதுதான். எல்லாப் பழங்குடிகளும் சந்தோஷமாத்தான் இருக்காங்க. பரத்துக்காக யாரும் இகத்தை இழந்துடறதில்லை. வாழ்க்கையோட கடைசித் துளியையும் நக்கிட்டு சாகத்தான் ஒவ்வொரு மனுஷனும் ஆசைப்படறான். எதுக்கு புனிதம்னு ஒண்ணை உருவாக்குது மதம்? மனிதக் கலாச்சாரம்னு ஒண்ணு உருவாக ஆரம்பிச்சப்ப உருவான சிக்கல் அது. மனுஷனுக்குள்ள உள்ள இச்சை கட்டற்றது. அதுக்கு உலகமே வேணும். அப்ப மனுஷனுக்கு மனுஷன் எதிரியாதான் இருக்க முடியும். கூடி வாழணும்னா ஒவ்வொரு மனுஷனும் கொஞ்சம் இழந்தாகணும். கொஞ்சம் இச்சைகளைக் கட்டுப்படுத்தியாகணும். எதன் பேரில இழக்கிறது? எதை எதிர்பார்த்து தியாகம் பண்றது? அப்பதான் இந்த மாதிரி இதவிட மேலான ஒண்ணு அங்க இருக்கு, இதை விட்டுக்கொடுத்தா உனக்கு அங்க அது கிடைக்கும்னு சொல்ல ஆரம்பிச்சாங்க. புனிதம் பிறந்தது. சொர்க்கம் பிறந்தது. தியாகம்தான் மகத்தான மானுட உணர்வுண்ணு கொள்கை பிறந்தது. மதங்கள் அந்த அடிப்படைகளை வளர்த்து எடுத்துத் தங்கள் அதிகாரத்தை உருவாக்கிக் கொண்டன. பல்லாயிரம் வருஷமா இந்தப் பூமிமேல பூமியைவிட மேலான ஒரு புனித பூமி பத்தின கற்பனையை நிலைநிறுத்தி, அது வழியா தன் ஆதிக்கத்தை உருவாக்கிச்சு மதம். அதுக்காக வாழ்க்கையை நிராகரிக்கும்படி மனுஷனுக்குக் கத்துக் குடுத்தது. ருசியா சாப்பிடாம, நல்ல உடை உடுக்காம எத்தனை துறவிகள் செத்து அழிஞ்சிருக்காங்க. உடல் இன்பம் தருது, அதனால உடலை நிராகரிக்கணும், முள் மேல படுக்கணும், இருட்டறையில புழுங்கணும்... தியாகத்தின் பெயராலதான் உலகில இதுவரை கோடானு கோடி பேர் அநியாயமா செத்திருக்காங்க. தன்னை வதைச்சு செத்த துறவிகள், எரிச்சுக்கிட்டவங்க, போர்ல செத்து விழுந்தவங்க... எந்த இன்பத்திலயும் ஊடாக ஒரு அதிருப்தியும் குற்ற உணர்வும் ஓடறாப்பில பண்ணிடுச்சு மதம். மனம்விட்டுச் சிரிச்சா, வயிறாரச் சாப்பிட்டா, ஆசைதீரப் பெண்ணை அனுபவிச்சா நாம கூசிக் குறுகிப் போயிடறோம். இல்லைன்னு சொல்லுங்க தோழர். இதையெல்லாம் துறந்தவர்னு ஒருத்தரைப் பாத்தா குற்ற உணர்வால சுருங்கிப் போய் அவர் முன்னால மண்டியிடறோம். தியாகம்னாலே கண்ணீர் விடறோம். தியாகம் பண்ண முடியலையேன்னு வருத்தப்படறோம். எல்லா மதத்துக்கும் தியாகம்தான் துருப்புச் சீட்டு. மார்க்ஸிசத்துக்கும் அப்படித்தான். இல்லையா?..

கதிர் தொடர்ந்தான்: ''இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே உன்ன சகஜமான உறவை மதம் சிதிலப்படுத்திடுச்சு. இயற்கையை இயற்கை இல்லைன்னு சொல்லுது மதம். அது மேலும் மகத்தான இன்னொண்னோட நிழலோ குறியீடோ, பதிலோதான்னு நமக்குக் கற்பிக்குது. அதுக்காக நாம இதை விட்டுட முடியும். அற்புதமான மலைச்சரிவைப் பார்த்ததும்

கடவுளேன்னு கூவுறான் மனுஷன். கடவுளுக்காக உடனடியா இந்தப் புலன் இன்பத்தைத் துறந்து இருட்டறைல அடைபடணும்னு நினைக்கிறான். மலைமுகடுகளில ஹெர்மிட்டேஜ் கட்டி வச்சிருக்கான் பாருங்க, காத்தும் வெளிச்சமும் இல்லாத இருண்ட அறை. அஜந்தாவிலயும் நீங்க இதைப் பாக்கலாம். இயற்கையில காத்தும் வெளிச்சமும் இருக்கே. அப்ப அதைத் துறந்தாகணுமே. எது உனக்கு மிக முக்கியம்னு படுதோ அதை விட்டுடு. அதுதான் பேரின்பம். எப்படி நியாயம்? ஆனா இதைத்தான் இருபது நூற்றாண்டா பேரிலக்கியங்கள் பிரச்சாரம் பண்ணுது. மதங்கள் ஒங்கிச் சொல்லுது. ஆக, இப்ப சொன்னீங்களே தோழர் அதிருப்தி, கனவு, தியாகம்னு இலட்சியவாதத்தோட மூணு நிலைகள். மூணும் மதத்திலயிருந்து முளைச்சு வந்த விஷயங்கள். மார்க்ஸிசம் ஒரு விஞ்ஞானம். ஆனா அதை ஒரு மதமா மாத்திட்டாங்க. மேற்கில அதை கிறிஸ்தவம் மாதிரி ஒரு மதமா மாத்தினாங்க. இங்க அதை பௌத்தம் மாதிரி ஒரு மதமா மாத்தினாங்க. அறிவு சார்ந்த மதம். துக்க நிவாரணத்துக்காக சங்கம் சேரக் கூடிய மதம். எப்பிடி இந்திய கம்யூனிசத்தில துறவுக்கும் பிரம்மசரியத்துக்கும் இப்ப உள்ள முக்கியத்துவம் வந்தது? பௌத்தத் துறவி காரை இலையும், கருணைக் கிழங்கும் சாப்பிடுவான். நம்ம தோழர் பொறையும் டீயும் பீடியும் சாப்பிட்டு உயிர் வாழ்வார். அரைப்பட்டினி கிடக்கக்கூடிய தொழிலாளிக்குக் கூட நம்ம தோழரைப் பார்த்தா குற்ற உணர்ச்சி வந்துடும். கடன் வாங்கி சோறு போடுவான். குறைஞ்சது ஒரு கட்டு பீடியாவது வாங்கித் தருவான். நம்ம பழைய தோழர்களுடைய பெரிய ஆயுதம் அவங்களோட தியாகம்தான். மதத்திலிருந்து கிடைச்ச அந்த நாணயம் இன்றுவரை செலவாணியாயிட்டு தான் இருக்கு. இலட்சியவாதம்னா தியாகத்தோட இன்னொரு பேரு. அவ்வளவுதான்.''

''இன்னைக்கு தியாகத்துக்கு அர்த்தமே கிடையாதா?''

''கண்டிப்பா உண்டு. ஒரு தனிமனித விஷயம் அது. ஒருத்தனுக்குத் தன் வாழ்க்கை தியாகத்தில பூரணமடையுதுன்னு பட்டா தாராளமா செய்யலாம். ஆனா இனிமே அது ஒரு நிறுவனம் இல்லை. செல்லுபடியாகிற நாணயமும் இல்லை. ஒரு சமூகமே தியாகத்தில வாழறது இனிமே சாத்தியம் இல்லை. என்னா இன்னைக்கு நாளைங்கிறது சுத்தமா புரிஞ்சுக்க முடியாத ஒண்ணா, கற்பனைகூட செய்ய முடியாத ஒண்ணா மாறிட்டுது. நாளைக்கு உலகம் அழியலாம். பிரபஞ்சம் அழியலாம். இன்னைக்குள்ள எல்லாமே நாளைக்கு மாறிடலாம். நவீன விஞ்ஞானம் மனுஷனுக்குக் குடுக்கிற முதல் பாடம் இது. இன்றுதான் நிஜம். இன்றுதான் ஒரே சாத்தியம். போகத்துமேல இருக்கிற குற்ற உணர்வை இதனால படிப்படியா மனுஷன் இழந்துட்டு வாறான். வேணும் இன்னும் வேணும்னு இயற்கையைப் பாத்து மனுஷ குலமே முறையிட்ட மாதிரி இருக்கு. பூமி போதாம ஆனப்ப கண் விண்வெளி நோக்கித் திரும்பியாச்சு. இப்பதான் குற்றவுணர்வு இல்லாம மனுஷன் இயற்கையையும் வாழ்க்கையையும் அனுபவிக்கிறான். காமம் எப்படி விஸ்வரூபம் எடுத்திருக்கு பாத்திங்களா? அதுமேல போடப்பட்ட எல்லா கட்டுப்பாடுகளும் தெறிக்குது. இனிமே அது காதல் இல்லை, ஆத்ம சங்கமம்

இல்லை, சிருஷ்டி கர்மம் இல்லை, வெறும் காமம்தான். கூடவே இந்த எல்லாமும்தான். இனிமே எங்கயுமே தியாகிகளுக்கு இடமில்லை. அவங்க வரலாற்று ஞாபகச் சின்னங்கள், அவ்வளவுதான். சென்னைல அண்ணா சாலைல ஒருமுறை ஒரு இடது தீவிர இயக்கத் தோழர் ஒருத்தரைப் பாத்தேன். கிழிஞ்ச சட்டை, துணிப்பையில துண்டுப் பிரசுரங்கள். கண்களில வெறி. வாய் பசியில உலந்து போயிருந்தது. ஆவேசமா சித்தாந்தம் பேசினார். அவரைச் சுத்தி நகரம் இரவு வெளிச்சத்தில ஜகஜ்ஜோதியா இயங்கிட்டிருக்கு. திரும்ப அவரைப் பார்க்க பரிதாபமா இருந்தது. ஒரு டைனோசர் அங்க வந்து முழிச்சிட்டு நிக்கிற மாதிரி இருந்தது. காந்தியத் தியாகிகளும் சரி, செம்படைத் தியாகிகளும் சரி, மதத் தியாகிகளும் சரி, இப்ப பொருந்தாத பழைய ஆட்கள்தான்.''

அருணாசலம் வாட்சைப் பார்த்தான்.

''நேரமாயிட்டதா?''

''ஆமா, ரொம்ப தூரம் போகணுமே.''

''போகலாம். உங்களை நிராசைப்படுத்தணும்னு இதையெல்லாம் சொல்லலை தோழர். நாம நிதரிசனத்தைப் புரிஞ்சுக்கிடணும்கிறதுக்காகச் சொன்னேன். பழைய கோஷங்கள் இன்னைக்கு சடங்கு மாதிரி. செங்கொடி, சிகாகோ நகரத்தெரு, இன்குலாப் சிந்தாபாத், பொலிவியக் காடுகளில விழுந்த சே–குவேராவோட ரத்தம் எல்லாம். எந்த ஒரு சமூகமும் இறந்த காலத்தை முழுக்க நிராகரிக்கிறதில்லை. அப்படியே ஏத்துக்கிறதுமில்லை. தன் நிகழ்காலத் தேவைக்காக வரலாற்றை வேகவச்சு, உலர்த்தி, தூளாக்கி, தனித்தனி பாட்டில்களில் அடைச்சு, பத்திரமா பாதுகாக்குது. வரலாறு சமூகத்துக்குக் குறியீடுகளின் களஞ்சியம்; அவ்வளவுதான். இன்குலாப் சிந்தாபாத், புரட்சி ஓங்குக அப்படீன்னு தினம் கோடிமுறை தொழிலாளி கத்தறான். அதுக்கு என்ன அர்த்தம்? எல்லாமே குறியீடாயிடும் தோழர். போர்க்களத்தில விழுந்த ரத்தம் செங்கொடிங்கிற குறியீடாச்சு. செங்கொடிங்கிற நிறம் சிவப்பு நிறப் பூவா ஆச்சு. அர்த்தங்கள் மாறிட்டே போகுது. ஒருவேளை இப்பிடி அர்த்தங்களை மாத்தத்தான் மனுஷன் குறியீடுகளையே கண்டுபிடிச்சானோ என்னவோ? இன்னைக்கு நான் மேடைல பேசற உரைக்கு நேத்து நேரடி அர்த்தம் இருந்தது. இப்ப அது ஒரு மந்திரம். வேத மந்திரங்கள் மாதிரி. ஒரு சத்தம். அர்த்தம் சொல்லி விளக்கினா எந்த பிராமணனும் வேதம் சொல்லமாட்டான். அதனால் சொல்றேன் தோழர், உங்க பேச்சை நீங்களே கேட்டு மயங்கிட வேண்டாம். நாம இந்த நூற்றாண்டில இருப்போம். தொல்பொருள்களா மாறாம, உயிரோட இருப்போம்.''

அருணாசலம் தன் எண்ணங்களினூடாக அந்தக் குரலைக் கேட்டபடி இருந்தான். ஒரு தருணம் அவை எண்ணங்களுடன் கலந்து அவனுடைய சொந்த சிந்தனைகள்போலவே ஆயின.

''மார்க்ஸியம் தொழிற்புரட்சியின் மதம்னு சரியாத்தான் சொன்னான். யந்திரங்கள் இயற்கையின் இடத்தை எடுத்துக்கிட்ட பிறகு பழைய

மதங்களுக்கு அதிக இடமில்லைன்னு ஆயிடிச்சு. இயந்திரங்களையும் கணக்கிலெடுத்துப் பேசுற ஒரு மதம் தேவையா இருந்தது. இயற்கையோட மர்மங்களும் நிலையின்மையும் முடிவின்மையும் இல்லாதவை யந்திரங்கள். திட்டவட்டமான உறுதியான பொருட்கள். அதாவது மனுஷ தருக்கத்துக்குக் கட்டுப்பட்டவை. அதனால இன்னும் திட்டவட்டமான, இன்னும் தருக்க பூர்வமான ஒரு மதம் மனுஷனுக்குத் தேவைப்பட்டது. தேவையிலிருந்து அதுக்கான தேவகுமாரன் வந்தார். பூர்ஷுவாங்கிற சாத்தான், உடைமைங்கிற ஆதிபாபம், புரட்சிங்கிற நியாயத் தீர்ப்பு நாள், கம்யூனிச சொர்க்கம் எல்லாம் வந்தது. புதிய பைபிள்... புதிய அப்போஸ்தலர்கள்... அப்புறம் நடந்ததெல்லாம் வரலாற்றில எப்பவும் நடக்கிறதுதான். கிறிஸ்துவுக்கு பீட்டர், நபிக்கு உமர், மார்க்ஸுக்கு லெனின். பிறகு தேவதூதன் உண்மையில என்ன சொன்னார்னு நான் விளக்குவேன்; நீ அதைக் கேளுன்னு சொல்ற உரையாசிரியங்க வந்தாங்க. மார்க்ஸிய சரிஅத், மார்க்ஸிய பத்வா, மார்க்ஸிய சிலுவைப் போர், புனிதத் திருப்பலிகள்... ஏன் புனிதஸ்தலங்கள்கூட. நம்ம அமைப்பில உள்ள முக்கியமானவங்க எல்லாருமே மார்க்ஸிய மெக்காவுக்குப் போயிட்டு வந்திருக்காங்க. நானும் மாஸ்கோவுக்கு போய் என் புனித கடமையைச் செய்தேன்.''

''நீங்க இழிவுபடுத்துறீங்க தோழர்.''

''நீங்க அப்பிடி நினைச்சா நான் என்ன செய்ய முடியும் சொல்லுங்க. நான் சொன்னது ஒருவகையான புரிதல். எந்த மதமும் வாழ்க்கையைவிட மேலான ஒண்ணுக்காக வாழ்க்கைத் துறக்கறதுக்குதான் அறைகூவுது. எல்லா மதமும் பலியாடுகளை ரத்தசாட்சிகளை நம்பித்தான் இருக்கு. வரலாற்றில மிக அதிகமா பலிகளை வாங்கினது மதம் இஸ்லாம். அடுத்தபடியா நாம. சோவியத் நாட்டில மட்டும் இரண்டரை கோடி பேர். அதில ஒரு கோடி பேர் தியாகிகள். புனிதப் பலிகள். மீதிப்பேர் பலியாடுகள். இப்பிடி உலகம் முழுக்க, அவங்களுக்கெல்லாம் தியாகத்தோட மகத்துவத்தைப்பத்தி சொல்லிக் குடுக்க வேண்டிய அவசியமே இருக்கலை. ஏற்கனவே கிறிஸ்தவம் சொல்லிக் குடுத்திருந்தது. அங்க போய் அப்பிடி சாகிறதைவிட இங்க போய் இப்பிடி சாகிறதுதான் இன்னமும் மகத்துவம்னு மார்க்ஸியம் சொல்லிக் குடுத்தது. ஒரு தலைமுறையே வரலாற்றின் இருண்ட குகையில இறங்கி மறைஞ்சது.'' கதிர் மூச்சு வாங்க சற்று நிறுத்தினான். பிறகு அழுத்தமான குரலில் ''ஆமா தோழர், கனவு, தியாகம், இலட்சியவாதம் எல்லாம் போன நூற்றாண்டு சமாச்சாரங்கள். இனிமே அதுக்கு இடமில்லை.''

அறையில் அமைதி நிலவியது. ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு விதமாக ஆழ்ந்து போயிருந்தது. அருணாசலம் அப்பேச்சை அருவருப்பான, பயமுறுத்தக் கூடிய, விஷமயமான, ஒரு பெரிய புழுபோல உருவகித்துக் கொண்டான். ஆனால் அது கனவு இல்லை. தோற்றம் இல்லை. நிதரிசனம். அதை மறுக்க முடியாது. ஏனெனில் அந்தப் புழு ஏற்கனவே அவனுடைய உள்மனதில் உயிர் வாழ்ந்திருந்தது. அவன் வெளியேற விரும்பினான். ஆனால் முடியவில்லை. அங்கேயே அமர்ந்து அந்த வதையை

அனுபவிக்கவே உள்மனம் விரும்பியது. புண்ணைக் கிண்டும்போது ஏற்படும் தினவுபோல ஓர் அனுபவம் அது.

கங்காதரன் கலைந்து ''தோழர் ரொம்ப நேரமாச்சு. ஆரம்பிக்கலாமே'' என்றான்.

''என்ன?'' என்றான் அருணாசலம்.

''ஒண்ணுமில்லை. சாத்தானின் புனித திரவம். கங்காதரன் கணக்கு'' என்றான் கதிர்.

செய்தித்தாளில் பொதியப்பட்ட ஸ்காட்ச் விஸ்கி பாட்டில்களை கங்காதரன் எடுத்தான். பிஸ்லேரி மினரல் வாட்டர் புட்டிகள் இரண்டை எடுத்துத் திறக்க முயன்றான். திறக்கவில்லை. மாணிக்கராஜ் வாங்கி கட்டை விரல் நகத்தால் கீறித் திறந்தான். சண்முகம் கண்ணாடித் தம்ளர்களை மேஜைமீது வைத்தான். சில கணங்களில் மனநிலை மாறுபட்டு ய மையம் கொண்டது. பாலித்தீன் உறைகளைக் கிழித்து காரம் போட்டு வறுத்த முந்திரிப் பருப்பை ஒரு பிளாஸ்டிக் தட்டில் கொட்டி வைத்தான் மாணிக்கராஜ்.

''சிக்கன் பிரை இருந்தா சூப்பரா இருக்கும்'' என்றான் மாணிக்கராஜ்.

''எவன்டாவன், இதென்ன லோக்கல் சரக்கா? ஸ்காட்ச். ராயல். அதை ராஜமரியாதையோடத்தான் அணுகணும். மென்மையா, கரிசனமா... என் தோழர்?'' என்றான் கதிர்.

''நான் கிளம்பறேன் தோழர்'' என்றான் அருணாசலம்.

''நல்ல கதை. உக்காருங்க தோழர். உங்களை அனுப்பிட்டா நாங்க சாப்பிடறது?''

''இல்லை, பழக்கமில்லை.''

''உக்காருங்கன்னா, என்னவோ கற்பைக் காப்பாத்திக்கிறது மாதிரியில்ல பதறுறீங்க.''

''இல்ல நான்...''

மாணிக்கராஜ் அருணாசலத்தின் தோளைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்தான். ''உட்காரய்யா. என்னமோ இவரு புத்தரு, நாங்கள்லாம் பாவிகள். அட உக்காருன்னா...''

''எதுவுமே சாப்பிட்டதில்லியா?'' என்றான் சண்முகம்.

''கள்ளு சாப்பிட்டிருக்கேன்.''

''இது பிரிட்டிஷ் கள்ளு. அவ்வளவுதான். தோழர், பேரைக் கேட்டு மிரண்டுட்டிங்கபோல, சும்மா எறும்பு கடிச்ச மாதிரி இருக்கும்.''

''எனக்கு இந்த ஃபாரின் குடிச்சாலே வெறிநாய் வந்து நக்கிட்டுப் போயிட்டாப்ல இருக்கு. நமக்கு மத்ததுதான் சரி. கடின்னா கடிக்கணும். நாய் எதுக்கு, கடிக்கத்தானே? ஏன்யா கதிரு?''

''இது ஸ்காட்லன்ட் கள்ளு. உபதேசியங்களை நாம அங்கீகரிக்கணும் தோழர்'' என்றான் கதிர். ''சாப்பிடுங்க தோழர். இன்னும் மதரீதியான இறுக்கத்தோடவே இருக்கறீங்க.''

''நீங்க ஒண்ணு, இப்பல்லாம் பாதிரிமார் போடறாளுங்க பாரு...''

''நான் அதுக்கு சொல்லலை.''

''கம்யூனிஸ்டு குடிக்கலாமாங்கிறீங்க... அய்யா மார்க்ஸும் எங்கல்சும் லெனினும் மாவோவும் குடிப்பாங்க.''

''விடுங்க தோழர், சும்மா பெரிசுங்க பேரைச் சொல்லி ரவுசு பண்ணிட்டு. உடைங்க.''

மது இன்னமும் உடைபடாமலிருக்க சொற்கள் மூலம் அவர்கள் தங்களைத் தளர்த்திக்கொள்வதாகப் பட்டது. அருணாசலம் நேர்மாறாக படபடப்பாக உணர்ந்தான். மடத்தனமாக தன் முகம் இருக்கிறது என்று பட்டது. வாயில் எச்சில் வேறு ஊறியது.

கதிர் புட்டியைத் திறமையாக உடைத்தான். புதிய மதுவின் வாடை எழுந்தது.

''ஸ்காட்ச்னா ஸ்காட்ச்தான்'' என்றான் மாணிக்கராஜ்.

''நீ சொல்லு, கோவாப்பக்கம் ஃபெனினு ஒண்ணு கிடைக்கும். முந்திரியிலிருந்து பிழிஞ்சு, புளிக்க வச்சு, டிசூசாக்கள் தயார் பண்றது. அதுக்க மணமிருக்கே, அது மணம்.''

''சுதேசிப் பொருளாதாரம் சிந்தாபாத்.''

''சாப்பிடுங்க தோழர்.''

அருணாசலம் வாங்கிக்கொண்டான். அதன் நிறம் வசீகரமான பளிங்குப் பழுப்புடன் இருந்தது.

கதிர் மென்மையாக உறிஞ்சினான். அந்த பாவனை அருணாசலத்திற்கு பிடித்திருந்தது. அது அவன் உறுதியை இளக வைத்தது.

''யோவ் என்னய்யா, பட்டை ஊத்திக்கிற மாதிரி. நிதானமா சாப்பிடுய்யா. இது ஸ்காட்ச்.''

''என்ன பெரிய ஸ்காட்ச். மூத்திரம் மாதிரி. மாம்பட்டைன்னா மாம்பட்டைதான்.''

''குன்னங்குளத்தில என்ன பண்றாங்கன்னா பழைய ஸ்காட்ச் குப்பில ஃபென்னிய நிரப்பி நாலுமூடி ஸ்காட்ச் ஊத்தி மூடி விக்கிறான். அசல் கம்பெனிக்கே வித்துடலாம் அப்பிடி இருக்கும்.''

''குன்னங்குளம் சேட்டனுங்க யமகாதகப்பயல்கள். கெ.ஆர்.எஸ்ஸுக்கே ஒரு டிப்ளிகேட் செய்து வச்சிருக்கிறதா பேச்சு உண்டு.''

அருணாசலம் மெல்ல வாயருகே கொண்டு வந்து ஒரு சொட்டு அருந்தினான். கசப்பும் துவர்ப்பும் கலந்த ருசி. அழுகிய பழ வாசனை.

குமட்டியது. தயங்கினான். பிறகு சட்டென்று விழுங்கினான். குமட்டியபடி வந்தது. ஒரு கொப்புளமாக ஸ்காட்சின் ஆவி வெளியேறியது. மீண்டும் ஒரு அர்த்தமற்ற ஏப்பம். இருமுறை உடம்பு உலுக்கிக் கொண்டது. என்ன ஆகிறது என்று கவனித்தான். ஒன்றும் ஆகவில்லை. வெகுநேரம் கழித்து இன்னொரு சிறு குமட்டல் மட்டும் இருந்தது.

பேச்சுக்கள் அர்த்தமற்ற ஒலிகளாக மாறின. மின்விசிறியின் கடக்கடக் ஒலி வலுத்துக் கேட்டது. ஆனால் காற்று போதவில்லை. புறந்தலையில் ஏதோ கனம் ஏற்பட்டது. முதுகு வியர்வையில் குளிர்ந்தது. மிகவும் அசௌகரியமாக உணர்ந்தான். உடம்பு தூக்கத்தை நோக்கிப் போவதுபோலத் தளர்ந்தது. 'எதிர்பாராத கணம் தலை ஒருபக்கமாகத் தள்ளியது. கண்ணிமைகளை தூக்கி சரியாக அமர்ந்தான். போதை ஏறவில்லை என்று காட்டிக் கொள்ள வேண்டும் என விரும்பினான். அதற்கு சகஜமாக, நிறையப் பேச வேண்டும் என்று பட்டது. அவன் உளே புகுந்தான். ''தோழர் கதிர், இல்லை மிஸ்டர் கதிர், திருவாளர் கதிர், ஆமா நான் அப்பிடித்தான் கூப்பிடுவேன். எனக்கு ஒரு சந்தேகம்.''

''சொல்லுங்க தோழர்.''

''எனக்கு ஒரு சந்தேகம்.''

''இயற்கை மணம்தான் தோழர்; விட்ருங்க.''

''நீ போடா எடுபிடிப் பையா. திருவாளர், தோழர் கதிர். இப்ப நான் கேக்கிறேன். நாம நடத்துற இந்த வக்கீல் யாவாரம் இருக்கே இது...'' அருணாசலம் திடீரென்று அதிதீவிரமாகக் கோபமடைந்தான். அதை அவன் உணர்ந்தும்கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. ''இந்தத் தரகு வேலை இருக்கே... இந்த வேலைக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? அந்த தாடிக்காரப்பய. அவன் பேரு என்ன? மார்க்ஸ். ஆங் மார்க்ஸ். தொழிலாளி வர்க்கத்துக்கு அரசாங்கம் இல்லைடா போடான்னுட்டிய. சரி போயிட்டுப் போகுதுண்ணு நானும் விட்டுட்டேன். தொழிலாளி வர்க்கம் சமூகத்தை மாத்த முடியாதுண்ணுட்டிங்க, அதையும் விட்டுட்டேன். அப்ப நான் கேக்கிறேன். ஐயாம் நௌ ஆஸ்கிங், அப்பிடீண்ணா மார்க்ஸிசத்துக்கு என்னாடா அர்த்தம்?''

''மார்க்ஸ் இல்லாட்டி நாம இப்பிடி சங்கம் வச்சிருக்க மாட்டோம் பிரதர்'' என்றான் மாணிக்கராஜ்.

''நீ பேசாதே. எடுபிடி நீ. நாங்க அறிவுஜீவிகள். இன்டெலக்சுவல்ஸ். பேசிக்குவம். கதிர் சொல்லு என்னய்யா அர்த்தம்?''

''சங்கம் வய்க்க சொன்னவரே பெரிசுதானே அருணாசலம்'' என்றான் கதிர்.

''இப்ப வியாபாரிங்க தொழிலதிபருங்க வச்சிருக்காங்கடா சங்கம். டேய் தேவடியாளுங்க வச்சிருக்காங்கடா சங்கம். அதுக்கும் நமக்கும் என்னடா வித்தியாசம்?''

"ஒரு வித்தியாசமும் இல்லை."

"அப்பிடி இல்லை. நாம மேல, அவுங்க கீழ அவ்வளவுதா" என்றான் சண்முகம்.

"நாமெல்லாம் சரிசமம்" என்று மாணிக்கராஜ் கோபமாகச் சொன்னான்.

அருணாசலம் எழுந்தான். அறை மிதந்தது. "அப்டீன்னா தொழிலாளி தேவடியாளா? கேக்கிறேன் சொல்லுடா."

"இல்லை தோழர், ஆனா தேவடியா ஒரு தொழிலாளி."

"மார்க்ஸ் சொன்னான். தொழிலாளிக்கு ஒரு பொன்னுலகம் கெடைக்கியதுக்கு இருக்குன்னு என்னது, பொன்னுலகம்! எங்கேடா பாவிகளா அந்தப் பொன்னுலகம்? அரசாங்கம் இல்லாத எட மிடா அது. ஏற்றத்தாழ்வு இல்லாத, பொய்யில்லாத, சுரண்டல் இல்லாத எடமிடா. பிச்சக்காரன் இல்லாத, விபசாரி இல்லாத எட மிடா. அது தொழிலாளிக்கு ஒரு நறையும் இல்லாத பொன்னுலகம்டா. நான் எம்மவளுக்கு வெள்ளில ஒரு கொலுசு வாங்க கணக்குப் பாத்தன்டா மாருதி கார்ல பண்ணி மாதிரி பொம்பிளைய கிலோ கிலோவாட்டு தங்கம் போட்டுட்டு போறாளுக. எனக்க மவ, என் தங்கம், அவ எனக்க ஜீவன்டா, நாளைக்கு உனக்க கம்யூனிசம் எனக்கு சோறு போடாது கேட்டுக்க என் மவ எனக்கு சோறு போடுவா. அவளுக்க ஒரு வெள்ளி கொலுசுக்த நான்..." அருணாசலம் பயங்கரமாகக் கேவினான். "எனக்க செல்லமே! எனக்க வாளக்குருத்தே! எனக்க ராணியே..." குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தான்.

கதிர் தவிர பிறர் சற்று அரண்டுவிட்டார்கள். மாணிக்கராஜ் "தோழர் என்ன இது" என்று பிடித்தான்.

"கையை எடுடா, தொட்டுப் பேச வாறியா?" என்று அருணாசலம் உறுமினான். "எல்லாரும் சேந்து சதி பண்ணிட்டியளேடா, பொன்னுலகம்னு சொல்லானே. மண்ணை வாரிப் போட்டுட்டியளே. பொன்னுலகம்னு சொல்லானே. பாவியளா.. மண்ணை அள்ளிப் போட்டிட்டியளே... பொன்னுலகம்னு சொன்னான்டா..."

அருணாசலம் கேவியழுதான். அவனை கதிர் பிடித்து படுக்கையில் படுக்க வைத்தான். அவன் வாந்தி போல இருமுறை உலுக்கினான்.

"ஒரு பெக் ஸ்காட்சுக்கு இந்தப்பாடு. இந்த லெச்சணத்தில புரட்சி வேற வேகது. பப்படக் கம்பெனி."

"பிள்ளைமாரு உளுந்தம் கஞ்சி குடிச்சாலே கிக் ஆயிடுவானுவ."

"பிள்ளைமாரைப் பத்தி பேசினது எவன்டா?" என்று அருணாசலம் வேறு பக்கம் பார்த்துக் கேட்டான். "வக்காளி, செண்பகராமன்பிள்ளை வம்சம்டா. பொன்னூறு கோட்ட வெதப்பாடு வச்சு ஆண்ட குடும்பம்டா. வீட்டுப்படி ஏறி வாசல் காவுமேல காவு போட்டுப் பேசுறியா நீ?"

''மது மனுஷனுக்கு உள்ள இருக்கிற விஷயங்களை வெளியே கொண்டு வருது'' என்றான் கதிர். அருணாசலம் ஓங்கரித்து வாந்தி எடுத்தான். மூவரும் பாய்ந்து எழுந்தனர். மாணிக்கராஜ் சிரித்தான்.

''பய்யனைக் கூப்பிட்டு கழுவச் சொல்லு. வேற ரூம் இருந்தா ஒண்ணு கேளு'' என்றான் கதிர்.

''பிள்ளைவாள், இனிமே கனமில்லாம தூங்கலாமே.''

''மனசாட்சிக்க கனமிருக்கே.''

''நாளைக்கு மாமிக்கு ஒரு பாகம் சோப்புப் போட்டுவிட்டா தீந்தது.''

''நாகம், பொன்னுலகம்னு சொன்னான்டி! மண்ணை வாரிப் போட்டுட்டானுவளே!'' என்று புலம்பியபடி அருணாசலம் எச்சிலோடு சேர்த்து குறட்டைவிட ஆரம்பித்தான்.

கதிர் ''என்னய்யா இப்பிடி தேசத்தக் காட்டிக் குடுத்திட்டம்? சுத்த சுதேசி - எவனாம் பி.ஜெ.பி.காரன் காச்சற சரக்கு - கிடைக்குமான்னு பாருய்யா'' என்றான்.

''அதான் மக்கா, நான் அப்பமே சொல்லுதேன், வாறியா?''

அவர்கள் கிளம்பும்போது திடீரென அருணாசலம் தூக்கத்தில் வெடித்து அழுதான். ''பொன்னுலகம்னு சொன்னானே. பொன்னுலகம்னு சொன்னானே, மண்ணை வாரிப் போட்டுட்டானுவளே...''

11

ஸ்ரீ கிருஷ்ண பாத சரணம்

அன்புள்ள அருணாசலம்,

நீ வந்துவிட்டுப்போன விஷயத்தை அறிந்தேன். உன்னைப் பார்க்க முடியாதது குறித்து மிகவும் வருத்தம். உன் கடிதத்தைப் பார்த்தேன். உடனடியாக உன்மீது எனக்குக் கோபமும் வருத்தமும் இல்லை என்று எழுத நினைத்தேன். உண்மையிலேயே கோபம் இல்லையா என்று ஸ்ரீ கிருஷ்ணன் சன்னதியில் வைத்து கண்மூடி ஆத்மார்த்தமாக கேட்டபிறகு எழுதலாம் என்று தள்ளிப் போட்டேன். உண்மையிலேயே கோபம் இல்லை. நீ என் மகன் மாதிரி. உனக்கும் உன் மனைவிக்கும் குழந்தைக்கும் என் பரிபூரணமான ஆசி என்றும் உண்டு. நீ மனதைப் போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாம்.

நீ வீரபத்ரபிள்ளையைப் பற்றி ஆராய்ச்சி செய்வதாக கோலப்பன் முன்பு சொன்னான். நான் சொன்ன பொய்யெல்லாம் உனக்கு இப்போது தெரிந்திருக்கும். அப்படி நிறையப் பொய் சொல்லி யிருக்கிறேன். லௌகீகமான எந்த விஷயத்தையும் பொய்யின் உதவி கொஞ்சமாவது இல்லாமல் செய்ய முடியாது. நீ நாகம்மையுடன் கொண்டுள்ள உறவு எத்தனை ஆத்மார்த்தமானது. அதில்கூட பொய் உண்டுதானே? மனுஷனுக்கு பகவானு டனான உறவு மட்டுமே உண்மையானது. ஏனெ னில் பகவான் அவரவர் மனதுக்குள்தான் இருக்கிறார்.

வீரபத்ரனை நான் எவ்வளவு விரும்பி யிருந்தேன் என்று உன்னால் புரிந்துகொள்ள முடியாது. அவன்மீது இருந்த பிரியம்தான் உன்மீதும் தொடர்ந்தது. என் கட்சி ஊழியத்தில் தனிப்பட்ட முறையில் எனக்கு எவர்மீதும் பெரிய பிரியம் இருந்தது இல்லை. நான் அதிகம் படிப்பவன் இல்லை. பழைய கம்யூனிஸ்டுகள் நடுவே என்னை ஒரு பாமரன் என்றே கூற வேண்டும். ஆனால் எனக்குப் படிப்புமீதும் படிப்பாளிகள்மீதும் எப்போதும் மிகுந்த பிரேமை உண்டு. ராமசுந்தரத்திற்கு நான் அடிமை என்று பலர் என்னை கிண்டல் செய்தது உண்டு.

அவருடைய படிப்புக்குதான் நான் அடிமை. மறு ஜென்மம் எடுத்தால் ராமசுந்தரமாகப் பிறக்க வேண்டும் என்று நினைப்பேன். படிப்பாளியல்லாத எவரையும் நான் எனக்கு வேண்டியவர்களாக எண்ணியதில்லை. என்னைப் போன்ற இன்னொருவனை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்தப் பயல் நாராயணனைப் பார்த்தாலே எனக்கு எரிச்சல்தான் வரும். கவனமாக இரு. அவன் ஆள் சரியில்லை.

வீரபத்ரபிள்ளையை அவனுடைய படிப்புக்காகத்தான் முதலில் இஷ்டப்பட்டேன். பிறகு அவனுடைய அமைதியான குணம், பயந்து பயந்து பேசும் பேச்சு எல்லாமே எனக்குப் பிடித்திருந்தது. நான் இருபது இட்டிலி சாப்பிட்ட நாட்களில் அவன் மூன்று இட்லியை முக்கிமுக்கிச் சாப்பிடுவான். அதுகூட எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவனைக் கிண்டல் பண்ணுவேன். மட்டம் தட்டுவேன். பெரும்பாலான சமயங்களில் அது வேடிக்கை: சில சமயங்களில் என்னை மீறிப்போய் சற்று குரூரமாக ஆகிவிடும். அப்போது எனக்கு ஒருவிதமான திருப்தியும் ஏற்படும். பிறகு மிகவும் குற்ற உணர்வு வரும். அதற்குக் காரணம் எனது தாழ்வு மனப்பான்மைதான். அவன் அறிவை என் நடைமுறை புத்திசாலிதனம் மூலம் அபத்தமாக மாற்றிக் காட்டும்போது ஒரு வெற்றி கிடைத்துவிட்டது போலத் தோன்றும். படிப்பாளிகளை எனக்கு பயம்தான். அவர்கள் என் இடத்தைப் பிடித்து விடுவார்களோ என்றல்ல. படிப்பாளிகள் தொழிற்சங்கத்தில் ஒன்றும் செய்ய முடியாது. பொதுமக்களுக்கு அறிவாளிகளையல்ல, வீரர்களையே வேண்டும். பாலசுப்ரமணியம் பொதுமக்களிடம் பெற்ற செல்வாக்கில் நூறில் ஒரு பகுதிகூட ராமசுந்தரம் பெறவில்லை. ராமசுந்தரத்தின் செல்வாக்கெல்லாம் என்னைப் போன்ற தொண்டர்களிடம்தான். பொதுமக்களுக்கு அறிவாளிகள்மீது பயம். தங்களால் புரிந்துகொள்ள முடியாத விஷயங்களைக் கூறுகிறான் என்ற பயம். தங்களை விட வித்தியாசமானவனாக இருக்கிறான் என்ற பயம். சில சமயம் தாழ்வுணர்ச்சியாகவும், சில சமயம் சந்தேகமாகவும், சில சமயம் ஏளனமாகவும், சிலசமயம் மரியாதையாகவும் வெளிப்படுவது இந்த பயம்தான். எனக்கு அறிவாளிகள்மீது இருந்தது லௌகீகமான பயம் இல்லை. அவர்கள் எதையோ செய்து இந்த உலகில் நான் மிகவும் மதிக்கக் கூடிய, மிகவும் சார்ந்திருக்கக் கூடிய, சில விஷயங்களை இல்லாமல் செய்து விடுவார்கள் என்ற பயம். உனக்கு எப்படித் தோன்றுகிறதோ என்னவோ. யோசித்துப்பார், வீரம் என்பதற்கு அர்த்தம் இல்லை என்று ஆகிவிட்டால் பிறகு நான் உயிரோடிருப்பதே அர்த்தமற்றதாக ஆகிவிடுமே. அறிவாளிகள்தான் உலகத்தை உருவாக்குகிறார்கள். பழையகாலப் பூசாரிகளைப்போல இன்று அறிவாளிகள். அவர்களால் பொதுமக்களுடன் கலக்க முடியாது. அவர்கள் கலக்க விரும்புகிறார்களா என்பது வேறு விஷயம்.

வீரபத்ரனை நான் சினேகித்தது இதையெல்லாம் மீறி. அவனை என் உடம்பின் ஒரு பகுதிபோல நினைத்தேன். அவன் எழுதினால் எனக்குக் கோபம் வரும். ஆனால் அவன் எழுத்தை வரிவரியாகப் படிப்பேன். ஊர் ஊராகக் கொண்டுபோய்க் காட்டுவேன். அவன் புஸ்தகம் போட்ட போது

பெரிய சண்டை வந்தது. காரணம் அவன் அதையும் என் வழியாகவே செய்ய வேண்டும் என்ற ஆசைதான். அவனுக்கும் கெ.ஆர்.எஸ்ஸுக்கும் ஏற்பட்ட உறவுகூட அவனை என்னிடமிருந்து அகற்றிவிடும் என்பதால்தான் எனக்கு பிடிக்கவில்லை. ரஷ்யப் புரட்சி பற்றி அவன் எழுதத் தொடங்கிய உடனே என்னைவிட்டு விலகிப் போய்விட்டான் என்று தெரிந்தது. லௌகீகமான பாரம் இருந்தால் என்னை அவனால் உதறிவிட முடியாது என்று நினைத்துத்தான் அவனுக்குத் திருமணம் செய்து வைத்தேன் அவனுக்கு அப்பெண்மீது ஏற்கனவே பிரியம் இருந்தது. இசக்கியம்மை என்று பெயர். உயரமாக, கறுப்பாக இருப்பாள். ஒரு மாதிரி ஆணைச்சந்தம் உண்டு யாரையும் மதிக்காத குணம். எஸ்.எஸ். தோட்டத்தில் கூலி வேலைக்கு வருவாள். எப்படி இரண்டு பேருக்கும் ஒத்துப் போயிற்று என்று அப்போது எனக்குப் பெரிய மர்மம்தான். இப்போது வயதான பிறகு எல்லாம் புரிகிறது. எல்லாம் பகவானின் நாடகம். எசிலி தொட்டால்வாடிச் செடி மாதிரி மென்மையானவள். கண்ணைப்பார்த்துப் பேச முடியாது அவளால். எனக்கு அவளுடைய வெட்கம்தான் பிடித்திருந்தது. அவளுடன் பேசும்போதுதான் என் வீரத்துக்கு அர்த்தம் கிடைப்பது போலிருக்கும். இசக்கியம்மைமேல் வீரபத்ரனுக்கு அன்பு வரவும் இதே மாயாவிலாசம்தான் காரணம். இல்லை ஒருவேளை வீரபத்ரனுக்குத் தொழிலாளி வர்க்கத்துடன் இன்னும் கலந்துவிட வேண்டும் என்று தோன்றியதோ என்னவோ. தன்னை ஒரு கம்யூனிஸ்ட்டு என்று தனக்குதானே நிரூபித்துக்கொள்ள இப்படிச் செய்தானோ என்னவோ. பல பழைய கம்யூனிஸ்டுகாரர்கள், படிப்பாளிகள், இதேபோலச் செய்தது உண்டு. எல்லாக் கல்யாணமும் உடைந்துதான் போயிருக்கிறது. இதுவும் நிற்காது என்று எனக்கு அப்போதே தெரியும். ஆனால் வீரபத்ரன் என் பேச்சு கேட்கும் மனநிலையில் இல்லை. அவன் அப்படித்தான். திடீர் திடீர் என்று வேகம் கிளம்பும். அதை அவனால் பிடித்து நிறுத்த முடியாது. இசக்கியம்மை அவனை லௌகீகமாக அடக்கிக் கட்டிப்போட்டாலும் போடுவாள் என்று அன்று நம்பினேன். எனக்குப் பெண்களைப்பற்றித் தெரியும். ஆண்களின் பதவியோ, அழகோ, பணமோ, பெண்களை அதிகம் மயக்குவதில்லை. பேச்சுதான். பேசிப்பேசியே ஒருவன் ஒரு பெண்ணின் கண்ணில் மன்மதனாகவும் நவாப் ஆகவும் மாறிவிட முடியும். வீரபத்ரன் பேச்சு இசக்கிக்குப் புரியாது; அதனால் அவன் அவளைக் கட்டுப்படுத்த முடியாது. அவன்தான் அவளை அனுசரித்துப் போவான் என்று எண்ணினேன். அப்படி நடக்கவில்லை. கல்யாணமான மூன்றாம் மாதத்திலேயே இருவருக்கும் ஒருவரை ஒருவர் சலித்துவிட்டது. அவன் சரியான ஆண்பிள்ளை இல்லை என்று அவளுக்கும், அவள் ஒரு மிருகம் என்று அவனுக்கும் தோன்றிவிட்டது. பூச்சி என்றுதான் இவனைப்பற்றி இசக்கி சொல்லுவாள். இவன் எருமை என்று சொல்லுவான். இருவரும் பரஸ்பரம் அறிய முயற்சியே செய்யவில்லை. கல்யாணத்திற்கு முன்னர் அவளை டால்ஸ்டாய் கதைகளில் வருகிற கசாக்கு தொழிலாளப் பெண் என்று அவன் கற்பனை செய்துகொள்வான். என்னிடமும் சொல்வான். அந்த மாதிரிப் பெண்களை கதைப் புஸ்தகங்களில் மட்டும்தான் பார்க்க முடியுமா என்று அவனுக்குப் புரியவில்லை. இசக்கியம்மை குடும்பத்தில் படிப்பு

வாசனை இல்லை. அதனால் அவளுக்கு இவனது சோடாப்புட்டி கண்ணாடிமீது பெரிய மோகம். இப்படிக் கல்யாணம் கட்டினால் எப்படி ஒத்துப் போகும்?

கடைசியில் அந்தப் புகாரின் விஷயம் வந்தது. முதலில் கட்சி எதிர்த்த போது வீரபத்ரன் அந்த வேலையை விட்டுவிடுவான் என்றுதான் நினைத்தேன். அவனுடைய அந்தப் பிடிவாதமும் வேகமும் எனக்கு கொஞ்சம்கூடப் புரியவில்லை. அவனிடம் யார் யாரெல்லாம் பேசினார்கள் ராமசுந்தரமும், கே.ஆர்.எஸ்ஸும் நேரில் பார்த்துப் பேசினார்கள். நான் பலதடவை பேசினேன். ஒரு தடவை கண்ணீர்விட்டு அழுதுவிட்டேன். அவனைப் பிடித்துக்கொண்டு என்னை விட்டுப்போய்விடாதே என்று மன்றாடினேன். அவன் பிடிவாதம் மாறவில்லை. அவர்கள் பேச்சு அவனுக்கும், அவன் பேச்சு மற்றவர்களுக்கும் கொஞ்சம்கூடப் புரியவில்லை. அற்ப விஷயம், இதைப் போய் பெரிது பண்ணி கட்சியின் இலட்சியங்களை கொச்சைப்படுத்தலாமா என்று இவர்கள் கேட்டார்கள். என் நிழலை நான் எப்படி உதற முடியும், அதன் பேச்சை நான் எப்படி தட்டிவிட்டுப் போக முடியும் என்று அவன் சொன்னான். திருப்பித் திருப்பி இதையே சொன்னான். நிழலை எப்படி உதற முடியும்? கட்சி அவனைப் பைத்தியம் என்று சொல்லித் தூக்கி எறிந்தது. அவதூறுப் பிரச்சாரம் செய்து ஒழித்துக் கட்டியது. அது கட்சியின் வழக்கம்தான், அன்றும் இன்றும். உனக்கும் அது தெரியும். நானும் அதைச் செய்தேன். அதுபற்றி இப்போது பகவானுக்கு மட்டும்தான் நான் பதில்கூற வேண்டும்.

ஆறுமாதம் கழிந்து என் அண்ணா என் குடும்பச் சொத்து பங்குபோட்ட விகிதமாக பதினெட்டாயிரம் ரூபாய் தந்தார். அன்று அது மிகப் பெரிய தொகை. ஒரு சில வீடுகள் வாங்கி வாடகைக்கு விடும்படி அண்ணா நேரிலும் ஆள் மூலமாகவும் வற்புறுத்தினார். அன்றைக்கு ஐந்து வீடு வாங்கியிருக்கலாம். நான் முழுத் தொகையையும் வீரபத்ரனுக்குத்தான் அனுப்பினேன். கொண்டுபோய்க் கொடுத்தவன் இப்போதும் இருக்கிறான். அய்யப்பன் பிள்ளை என்று பெயர். சமையல் வேலை செய்கிறான். நீ போய் விசாரித்துப் பார். வீரபத்ரன் ரூபாயைத் தூக்கி தெருவில் வீசிவிட்டான். என்னை ஸ்டாலினின் வேட்டை நாய் என்று திட்டினான். அதைத் தொட்டால் புகாரினின் ரத்தத்தில் கை நனைத்தது ஆகும் என்று சொன்னான். நான் புகாரினின் தலையை வெட்டின பாவிக்கு நிகர் என்றான். வாழ்நாளில் நான் எந்த மனிதனுடையவும், ஒரு துளி ரத்தத்தைக்கூட சிந்தியதில்லை. இன்றைக்கு பகவான்முன் தலைநிமிர்த்தி நிற்க முடிகிறது என்றால் அதுதான் காரணம். என்ன செய்வது என்று தெரியாமல் அந்தப் பணத்தை வைத்திருந்தேன். உடைமைகள் கம்யூனிஸ்டுக்குப் பெரும் பாவம் என்று நம்பினவன் நான். எனக்கு உடைமைகள் இல்லை என்று நினைப்பது எனக்கு மிகவும் தன்னம்பிக்கையும், திருப்தியும் தருகிற விஷயம். அந்த உணர்வு இருந்ததனால்தான் எந்த அரைப்பட்டினித் தொழிலாளி வீட்டிலும் நுழைந்து தைரியமாக சோறு போடு என்று நான் கேட்க முடிந்தது. அந்த கர்வம் பெரிய உடைமை. பணத்துக்காக அதை இழக்க முடியுமா? கடைசிக் காலத்தில் உலை சாய்க்க ஒரு வீடு வேண்டாமா என்று அண்ணா கேட்டார். நான் ஒ

புரட்சியில் குண்டடிபட்டுத் தெருவில் சாகப் போகிறவன் என்று சொன்னேன். எல்லாம் மாயை என்று நினைக்கும்போது கிருஷ்ணனின் மாயச்சிரிப்பு கண்ணில் படுகிறது. இப்போது எனக்கு என்ன குறை? என் கட்டை இந்த மண்ணில்தான் சீக்கிரம் வேகும். அன்று அந்தப் பணத்தில்தான் சங்கம் இன்று இருக்கும் இடமும் பிற பழைய கட்டடங்களும் வாங்கினோம்.

வீரபத்ரன் இறந்த செய்தி மூன்று நாள் கழித்துதான் எனக்குத் தெரிந்தது. அவன் உடலைக்கூட நான் பார்க்கவில்லை. அவனைப் பார்க்க அடிக்கடி நான் மார்த்தாண்டம் போவது உண்டு. ஒளிந்திருந்து பார்த்துவிட்டு வருவேன். என் மகனையும் அதுபோல ஒளிந்து நின்று பார்ப்பது உண்டு. எல்லாம் கிருஷ்ண லீலை. எனக்கு இப்போது ஒரேயொரு மனக்குறைதான். என் பையனுக்கு என் சம்பாத்தியமாகத் தந்துவிட்டுப் போக ஏதும் இல்லை. ஒரு சென்ட் மண்ணாவது அவனுக்குத் தந்துவிட்டுப் போக வேண்டும். ஆனால் இந்தப் பழைய பார்க்கர் பேனா மட்டும்தான் என்னிடம் இருக்கிறது. இது கெட்டுவிடக் கூடாது என்று எதையும் எழுதுவதில்லை. இந்தக் கடிதத்தைக் கூட வேறு பேனாவால் எழுதிப் பார்த்தேன். வேறு பேனா வேறு ஆள் மாதிரி இருக்கிறது. அது நான் நினைப்பதை எழுதுவதில்லை. உனக்கு ஒன்று மட்டும் சொல்கிறேன். நீ உன் குழந்தையை கொஞ்சுவதே இல்லை. பிடிபிடியென்று அவள் வளர்ந்துவிடுவாள். பிறகு நீ அவளைத் தொடக்கூட முடியாது. குழந்தையைத் தொட்டு மார்போடு அணைப்பது பெரும் பாக்கியம் அருணாசலம். குழந்தையெல்லாம் கிருஷ்ண ரூபம்தான். என் பேரப் பையனைத் தொட்டு அணைக்கும்போது எனக்கு மனம் முழுக்க கிருஷ்ணனின் புல்லாங்குழல் நாதம்தான் கேட்கும். பிரசங்கம் செய்து புத்தகம் படித்து, கிருஷ்ணனின் முரளியின் தேனை இழந்துவிடாதே. அதைத்தவிர வேறு அர்த்தம் ஏதும் மானுட வாழ்வுக்கு இல்லை.

நாகம்மையைக் கேட்டதாகச் சொல்லு. அவள் உனக்கு ஒரு பெரிய வரம். அவளைக் கேட்காமல் ஏதும் செய்யாதே. அவளை மீறி எங்கும் போகாதே. மனசுக்குள் தேவிபகவதி என்று அவளைக் கும்பிடு. அவளைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. முடிந்தால் குழந்தையோடு ஒருமுறை இங்கு வாருங்கள் இருவரும்.

எசிலி உன்னை ரொம்ப விசாரித்ததாகச் சொன்னாள்.

ஆசிகளுடன்,

கெ.கெ.மாதவன் நாயர்

✦

12

ஆற்றுப் பாலத்தின்மீது வண்டியில் போகும் போது கீழே கேட்ட மனித இரைச்சல் அருணாசலத்தின் கவனத்தைக் கவர்ந்தது. வண்டியை மெதுவாகச் செலுத்தியபடி கவனித்தான். மணற்கரை முழுக்க மனிதத் தலைகள். நீரிலும் மனிதர்கள். நிறைய செங்கல் அடுப்புகள் புகைவிட்டபடி எரிந்தன. நெருப்புகள் பகல் ஒளியில் வெண்மஞ்சள் நிறமாக உக்கிரமின்றி நெளிந்தன. பிறகுதான் அது வாவுபலிநாள் என்று புரிந்தது. அதற்காகத்தான் அலுவலக விடுமுறை போலும். மூதாதையர் ஆவிகள் நதிமீது கண்காணா ஒளி மண்டலத்தில் நின்றபடி அவனைப் போலவே அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்று எண்ணியபோது வேடிக்கையாக இருந்தது. காகங்கள் இன்னும் வரவில்லை.

வண்டியைக் கிளப்பினான். பாஸ்கரன் ஞாபகம் வந்தது. வீரபத்ரபிள்ளைக்கு இன்று அவன் பலி கொடுக்கிறானா? பாஸ்கரன் வீட்டுக்குப் போகும் பாதை மனதில் மிக மங்கலாக இருந்தது. ஒரு கணம் தயங்கிய பிறகு வண்டியைத் திருப்பினான். வண்டி சீரான வேகம் கொண்டதும் அவனால் யோசிக்க முடிந்தது. ஏன் இத்தனை யோசித்தபோதும்கூட அவனுக்கு இணையானவர்களிடம் விவாதிக்க முடியவில்லை? பிறர் பேசும்போது அவன் மனம் கூடவே ஓடுகிறது. அவ்வேகத்திலும் ஒரு மனம் பிரிந்து, தனித்து வளர்கிறது. ஓடும் மோட்டார் சைக்கிளைப் பார்த்தபடி இதோ கூடவே பேசப்படும் பறந்துவரும் பறவை போல. தருக்கங்களையும், பேசுபவனின் அகமனம் அதனுடன் கொள்ளும் நுட்பமான விளையாட்டுகளையும், கேட்கும் பிறர் கொள்ளும் எதிர்விளைவுகளையும், அந்நாடகத்தின் ஒவ்வொரு சலனத்தையும் அந்தப் பறவை மனம் கவனித்துக்கொள்கிறது. நிராகரிக்கிறது, ஐயத்துடன் ஓரமாக ஒதுக்கி வைத்து அவ்வப்போது திரும்பிப் பார்க்கிறது. திடீரென்று ஒரு வரி அதன் இதயத்தில் படபடத்து எழுந்து, விர்ரென்று எல்லைகிட்டி வானில் சுழன்று சுழன்று, திசை தொலைத்து, பின் தன்னை உணர்ந்து, மெல்ல இறங்கிப் படிகிறது. அது போகும் உயரத்திலிருந்து கீழே பார்க்கும்போது அச்சிறு கணங்களில் உலகம் மர்ம முனைகளில்லாத எளிய பொருட்களின் சிறு குவியலாகத்

கிடக்கிறது. அவை எண்ணங்களல்ல. கருத்துகளல்ல. வெறும் படங்கள். அந்த சில கணங்களின் படங்களை பல நூல்களாகத் தொகுத்து கருத்துகளாக்கலாம். பெரும் கவிதைத் தொடர்களாக ஆக்கலாம். ஆனால் தரையிறங்கிய கணம் அவை வேறு எங்கோ, கீழ்த்திசை மலைத் தொடர்களுக்கு அப்பால் வான் சரிவில் எங்கோ, எழுதியடுக்கப்பட்டு மறைந்து விடுகின்றன. ஆனால் விவாதிக்க முடியவில்லை. அவனுள் விவாதித்துக் கொள்ளும்போது போதை ஏறுகிறது. விவாதம் சூடுபிடித்து உச்சங்களை அடைகிறது. பிறருடன் விவாதிக்கும்போது ஒரு சந்தர்ப்பத்தில் அவன் குரலே அவனுக்குக் கேட்கிறது. அக்கணம் உடம்பு கூசிப் போகிறது. மனம் விலகி எங்கோ அலைய, சொற்களால் வெறுமே போலித்தனமாக விளையாடிக் கொண்டிருப்பதாகத் தோன்றிவிடுகிறது. முன்பு இப்படி நிகழ்ந்ததில்லை. சமீப காலமாகத்தான். பேசுபவர்களுக்குப் பேச்சு தரும் போதை அபாரமானது. அந்தப் பசி கொண்ட மிருகம் ஓரத்திலிருந்து உலகைத் தின்ன ஆரம்பிக்கிறது. சில நொடிகளில் பாதி உலகை விழுங்கி விடுகிறது. பிறகுதான் மீதிப்பகுதியை உணர்ந்து மலைத்து நிற்கிறது. எஸ்.எம்.ராமசாமி மௌனத்திற்குத் திரும்புகிறார். கதிர் உடனே தன் பேச்சையும் கேட்பவர்களையும் சேர்த்து மெல்லிய பரிகாசத்துக்கு ஆளாக்குகிறான். எவ்வளவு நேர்த்தியாகப் பேசுகிறார்கள் இருவரும்! துல்லியமான சொற்கள். அசைக்க முடியாத தருக்கம். மனிதர்கள் இந்த அளவு தெளிவுடனும் நேர்த்தியுடனும் யோசிக்கலாமா? அதுவே ஒரு பாவம் என்று பட்டது. அதற்குப் பின்னால் அகம்பாவம் உள்ளது. அது இயற்கையை - கடவுளையா? அருணாசலம் புன்னகை புரிந்தான் - அவமரியாதை செய்வது போல உள்ளது. இந்த அளவுக்குப் புத்திசாலியாக இருக்க, இந்த அளவுக்குத் தெளிவுடன் யோசிக்க, மனிதனுக்கு உரிமை இல்லை. இந்த அளவு கூர்மையுடன் இருக்கும் ஒருவனை எவையும் நெருங்காது... என்ன அபத்தமான சிந்தனை. இப்படி யோசிப்பது ஒரு கம்யூனிஸ்டின் குணமாக இருக்க முடியுமா? நான் மதவாதிதானா...

அருணாசலம் பிரேக்கை அழுத்தி வேகத்தைக் குறைத்து வண்டியை நிறுத்தினான். சிந்தனைகளும் வேகம் குறைந்து நின்றன. மீண்டும் வேகமெடுத்தான். புதிய பாதையில் சிந்தனைகள் விரைந்தன. இன்று பல்லாயிரம் பேர் நீத்தார்பலி செய்கிறார்கள். எத்தனை அபத்தமான சடங்கு அது. கதிர் கூறியது ஞாபகம் வந்தது. ஒரு காலகட்டத்தின் அர்த்தபூர்வமான செயல்கள் இன்னொரு காலகட்டத்தில் சடங்குகளாக மாறுகின்றன. குறியீடுகளாகின்றன. குறியீடு மாறியபடியே உள்ளது. பித்ருக்களுக்கு உணவூட்டும் சடங்கின் ஆதிவேர் எது? முதிர்ந்து நோயுற்ற தந்தைக்கு உணவூட்டும் மைந்தர்களின் உணர்வு மரணத்திற்குப் பிறகும் நீண்டதுதானா? இயற்பு படுக்கையில் உணவு உட்கொள்ள முடியாது தவித்து இறந்தவரை இருப்பிப்படுத்தும் நோக்கமா இல்லை, இன்னும் தூரமாக வரலாற்றைப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் மூதாதையர், வயதாகி வலிமை குறைந்தவர்களாக ஆகிவிட்டமையால், பசித்து சாகும்படி விட்டிருக்க வேண்டும். மிருகக் கூட்டங்களில் உள்ள வழக்கம் அது. அது பிற்பாடு குற்ற உணர்வாக வளர்ந்து விட்டிருக்க வேண்டும். இது பிராய்டு சொன்னது

போலிருக்கிறது. ஏதோ ஒரு காலகட்டத்தில் தந்தையைக் கொல்லும் பழக்கம் தனயர்களுக்கு இருந்திருக்கிறது; தந்தைமீது குற்ற உணர்வு கலந்த பாசம் இன்றும் தொடர இதுதான் காரணம் என்றார் ஃபிராய்ட். இல்லை, தன் நினைவை எதிர்காலத் தலைமுறையில் விட்டுவிட்டுப் போகும் தந்திரமாக முதியவர்கள் இதைக் கொண்டு வந்தார்களா? ஆனால் இது இந்த நூற்றாண்டிலும் பல்லாயிரம் மக்களை ஈர்க்கிறது. இவர்களில் தங்கள் மூதாதையர் உண்மையிலேயே பலி ஏற்க வருவதாக நம்பக்கூடிய எத்தனை பேர் இருப்பார்கள்? இந்தச் சடங்கு ஒரு குறியீடு. எனவே இது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அர்த்தம் தருகிறது. இன்று சென்ற தலைமுறையை நினைவுகூரக் கூடிய ஒரு முகாந்திரம் இது. இன்னொரு கோணத்தில் சென்ற தலைமுறையுடனான உறவைக் குறியீடாக மாற்றுவதனூடாக உணர்வுரீதியாகத் தன்னைத் துண்டித்துக் கொள்ளும் நிகழ்ச்சிதான் இது. எப்படி வேண்டுமானாலும் யோசிக்கலாம். எல்லாமே தவறு. எல்லாமே சரி.

கதிர் போலவே தானும் சிந்திப்பதாக அருணாசலத்துக்குப் பட்டது. நூல் திரிப்பதுபோல நாலாபக்கமிருந்தும் சரடுகளை இழுத்து, முறுக்கிமுறுக்கி, நீட்டிச் செல்வது. சிந்தனை என்பது இந்த தருக்க முறுக்கம்தானா? ராமசாமியும் கதிரும் வேறுவேறு பாணியில் சிந்திக்கிறார்கள். ராமசாமி தட்டித் தடுமாறி நடந்து, சட்டென்று பறந்து, பின்பு கீழே இறங்குகிறார். பறக்கும் கணத்தில் அவருடைய தருக்க மூளையும், தொடர்பு மொழியும் சரிவர இணைந்து கொள்கின்றன, அவ்வளவுதான். ஆனால் அவர் உள்ளுணர்வின் சன்னத வெளிப்பாடாக அதைக் கருதுகிறார். கதிர் படிகளைத் தீர்மானமாக மிதித்து ஏறிஏறிச் செல்கிறான். ஒவ்வொரு சொல்லும் திடமானவை. அடுத்ததற்கு இட்டுச் செல்பவை. கதிருக்கு முன்னிலையை வெற்றி கொள்ளும்போதுதான் திருப்தி. ராமசாமிக்கு முன்னிலை ஒரு பொருட்டு அல்ல. தருக்கம் மூலம் மொழியைப் புணர்ந்து, உச்சமடைந்து விட்டால் களைத்துப் பின்னகர்ந்து விடுகிறார். அவருடைய சிந்தனை படிக்கட்டு அல்ல, ஊஞ்சல். ஆகவே அது எத்தனை வேகமாக ஆடினாலும் முன்னகர்வதில்லை.

அலுப்பாக இருந்தது. சிந்தனை என்பதே அபத்தமான ஒரு பிரயத்தனம் என்று தோன்றியது. எல்லா கம்யூனிஸ்டுகளுக்கும் உள்ளூர இவநம்பிக்கைதான் அது. கம்யூனிஸ்டுகளைப்போல சிந்தனைமீது ஈடுபாடு உடையவர்களும் இல்லை, உள்ளூர சிந்தனைமீது அவநம்பிக்கை கொண்டவர்களும் வேறு இல்லை. இது விசித்திரமான முரண்பாடுதான். வரலாறு படிப்பினாலோ சித்தாந்தத்தினாலோ உருவாக்கப்படுவது அல்ல; அது தற்செயல்களினாலும், அந்தத் தற்செயல்களை உடனடியாகப் பயன் படுத்திக்கொள்ளும் தைரியத்தினாலும்தான் உருவாக்கப்படுகிறது என்று அவர்கள் அப்படிப்பின் மூலமே அறிந்துகொள்கிறார்கள் போலும். கம்யூனிஸ்டுக் கட்சியின் அடிப்படைத் தொண்டர்கள் அத்தனை பேருமே யதார்த்தவாதிகள், நடைமுறைவாதிகள். ஆனால் அவர்களுக்குத் தாழ்வுணர்வு. ஆகவே ஏட்டுப் படிப்பாளிகளைத் தங்கள் தலைவர்களாக ஏற்கிறார்கள். ஜோஷி ஆகட்டும், பி.டி.ரணதிவே ஆகட்டும், கே.ஆர்.எஸ்.

நம்பூதிரிப்பாடு ஆகட்டும், பெரும் படிப்பாளிகள். ஆனால் வேரற்றவர்கள். வரலாற்றுத் தருணங்களில் ஏட்டுக் கல்வியின் அனைத்து சாத்தியங் களினூடாகவும் நகர்ந்து அவர்கள் அடைவது மிகமிக அபத்தமான முடிவுகளை. ஜோஷி உலகப் போரில் பிரிட்டிஷாரை ஆதரிக்க முடிவெடுத் தார். ரணதிவே சுதந்திரப் போரின் வேகம் அடங்காமலிருக்கும்போதே பட்டேலுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்திற்கு அறைகூவல் விட்டார். கே.ஆர்.எஸ். இந்திய சீன யுத்தத்தில் நடுநிலைமை வகிக்க முடிவெடுத்தார். அவை அபத்தத்தின் எல்லை நுனி முடிவுகள் என ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அறிவான். அவையே இந்தியாவில் கம்யூனிஸ இயக்கம் சிதறிச் சுருங்கக் காரணம். இன்று ஜகஜீத் சிங் டெல்லியில் உட்கார்ந்து அரண்மனைச் சதிகள், தரகு வேலைகள் மூலம் செங்கொடியைப் பறக்கவிடலாம் என்று கனவு காண்கிறார். வெறும் சித்தாந்தவாதிகள். கதிரும் அவர்களில் ஒருவன்தான். ஆனால் அவனுள் ஓர் உள்ளுணர்வு எச்சரித்தபடியே உள்ளது. எனவே தான் தன் தருக்கத்தைத் தானே செப்பனிட்டுக் கொள்கிறான். முடிவில்லாமல் ஓட்டைகளை அடைத்தபடியே இருக்கிறான். அவன் சீக்கிரமே டெல்லி போய்விடுவான். அது கம்யூனிஸ்டுகளின் பலவீனம். அவர்களுக்கு மார்க்ஸும் தேவை ஸ்டாலினும் தேவை. இரண்டுக்குமிடையே அவர்கள் முடிவின்றி ஊசலாடுவார்கள்.

கருங்கல் தாண்டியதும் அருணாசலம் வழிக்காக சற்றுத் தடுமாறினான். விசாரித்துக்கொண்டு மண்பாதைகளினூடாகச் சென்றான். பாஸ்கரனின் வீட்டில் பாட்டி இல்லை. தின்னைமீது பாட்டியின் துண்டு மட்டும் கிடந்தது. பாஸ்கரன் என்று இரண்டுமுறை மட்டும் கூப்பிட்டான். பதில் இல்லை. தயங்கியபடி நின்றபோது கிழவி பின்னாலிருந்து வந்தாள். 'ஆரு?' என்றாள்.

''பாஸ்கரன் இருக்காரா?''

''நீங்க?''

''அவருக்க தோட்டத்தில வேல பாக்குறேன்.''

''அவன் இங்க இல்லியே. இண்ணைக்கு வாவுபெலியில்லா; ஆத்துக்கு போயிருக்கான்.''

''ஆறு எங்க?''

''இரியுங்க, வாறநேரம்தான்.''

''இல்ல, நான் போணும். ஆறு எங்க இருக்கு?''

''இப்பிடியே எறங்கிப் போனா மதி. தூரமுண்டு. நடந்துபோனா ரொம்ப தூரம்.''

''பரவாயில்லை, வண்டி இருக்கு...''

ஆறு சற்றுத் தள்ளித்தான் இருந்தது. ஆற்றை நோக்கி இறங்கும் செம்மண் பாதையில் நிறையக் கூட்டம் இருந்தது. மணலில் இறங்கியதும்

அருணாசலம் தயங்கி நின்றான். மணற்பரப்பு விரிந்து கிடந்தது. இருபுறமும் கைதைச் செடிகள் தழைத்து கோட்டை போல நின்றன. மணற்பரப்பெங்கும் கூட்டம் கூட்டமாக ஆண்கள், சிறுவர்கள், வயோதிகர்கள் நின்றனர். காகங்கள் கைதைச் செடியின் வாள் போல நீண்ட இலைகளில் அமர்ந்து ஆடின. மணல்மீது படைக்கப்பட்ட சாதங்களின் அருகே சிற்றடி வைத்து வலாட்டி நடந்தன. மாறிமாறிக் கூவி அழைத்தன. ஓரிருமுறை கொத்திவிட்டு, வாயில் சாதத்துடன் பறந்து சென்று கைதை இலைமீது அமர்ந்து தின்றுவிட்டு, பறந்து இறங்கின. எழுந்தும் அமர்ந்தும் மணல்மீது சிறகடித்தன. கரிய சிறகடிப்புகளினூடாக அருணாசலம் நடந்தான். கழுத்து சாம்பல் நிறமான சாதாரண காக்கைகள், அளவில் பெரிய அண்டங்காக்கைகள், கழுத்துமுடி உதிர்ந்த வயோதிகக் காக்கைகள். கரிய பாசிமணிக்கண்களில் எந்த உணர்வும் தெரியவில்லை.

எல்லா முகங்களும் ஒரே பாவத்தில் இருந்தன. சலிப்பும் திகைப்பும் கலந்த, பவ்யமும் குழப்பமும் ஊடுருவிய, பதற்றம் பரவிய முகங்கள். பலவகையான குழப்பங்கள். மூத்தவர்கள் கூறியதை பொம்மைபோல செய்பவர்கள், புரிந்துகொள்ளாமல் தடுமாறுபவர்கள். பலருக்கு மூளை அடைத்துக் கொண்டுவிட்ட்துபோல அசட்டுத்தனமான கைநடுக்கமும் குளறுபடியான செயல்களும் இருந்தன. காய்களும் எள்ளும் சேர்த்து உப்பில்லாமல் சமைக்கப்பட்ட பலிச் சோறின் விநோதமான வாசனை. யாரும் உரக்கப் பேசவில்லை. ஆனால் ஒலி ஓலமாக எழுந்து கொண்டிருந்தது. அருணாசலம் பாஸ்கரனை அடையாளம் கண்டான். அருகே போய் நின்றான். கால்சட்டையுடன் அவன் நின்றது கவனத்தை ஈர்க்கவே பாஸ்கரன் திரும்பிப் பார்த்தான். அடையாளம் கண்டு புன்னகை செய்தான். அதற்குமேல் அவன்மீது அவன் மனம் படியவில்லை.

பலிச்சாதம் வெந்துவிட்டது. செந்நிறமான புதுப்பானை கரிந்து போயிருந்தது. உள்ளேசாதம் சிறிது அடிப்பிடித்திருக்கலாம், அதன் வாசனை வந்தது. தீயை இழுத்து விட்டபிறகு பாஸ்கரன் ஒரு பெரியவரை ஏறிட்டுப் பார்த்தான். சாதத்தை ஒரு வாழை இலையில் கொட்டுமாறு அவர் சொன்னார். இலையில் கொட்டப்பட்ட சாதத்தை மூன்று உருளைகளாக உருட்டும்படி சொன்னார். மூன்று உருளைகளிலும் அருகம்புல்லின் இதழ்களை செருகினான். அந்தச் சாதம் உடனடியாக உண்ணும் பொருள் அல்லாமல் ஆகி ஒரு அமங்கலத் தோற்றத்தைக் கொண்டது. பாஸ்கரன் முகத்தில் அரைத் தூக்கத்தில் இருப்பதுபோல ஒரு மந்த களை இருந்தது. இந்த உப்பில்லாத சாதத்திற்காக வீரபத்ரபிள்ளை காற்று வெளியில் வந்திருக்கிறாரா? முன்னாள் கம்யூனிஸ்டு? ஒரு வேளை... சட்டென்று அருணாசலத்திற்கு முதுகுத்தண்டு ஜில்லிட்டது. தொடர்ந்து உடம்பெங்கும் புல்லரிப்பு பரவியது. அந்த மன எழுச்சியின் அபத்தத்தை உணர்ந்து தலையை வியந்தான். இந்தச் சடங்குமேல் அவனுக்கும் உள்ளூர நம்பிக்கை உண்டா? அவனுடைய அப்பாவுக்கு அவன்தான் மூத்தமகன். ஆனால் இதுவரை சடங்கு செய்ததில்லை. அம்மா இருந்தவரை அழுது மன்றாடிப் பார்த்தான். அவனால் முடியவில்லை. நம்பிக்கை ஆழத்தில்கூட இருப்பதாகத் தெரியவில்லை. எத்தனை கோணங்களில் மனதை ஊடுருவிப் பார்த்த

போதிலும் அப்படித்தான் பட்டது. ஆனால் ஏன் இந்தப் புல்லரிப்பு ஏற்பட்டது? அது ஒரு விநோதமான தீவிரம். வீரபத்ரபிள்ளையின் நினைவு தீவிரமாக ஏற்பட்டதன் விளைவு. அல்லது அவரை முதன்முதலாக ஓர் இருப்பாக உருவகிக்க முடிந்ததன் மன எழுச்சி. அல்லது இந்தச் சூழல் அவனைப் பாதிக்கிறது. இதெல்லாம் என் போதமனம் கொள்ளும் சமாதானங்கள். இதையெல்லாம் கொண்டு நான் என்னை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது.

பாஸ்கரன் ஓர் உருளைச் சாதத்தை இலையில் எடுத்து மணலோரமாகக் கொண்டு போய் வைத்தான். விலகி நின்று ஈரக் கரங்களை மும்முறை அடித்தான். அருணாசலத்தின் மனம் படபடத்தது. காகங்கள் பறந்து இறங்கி, பற்பல இலைகளிலிருந்து சாதத்தைக் கொத்திக் கிளறி அள்ளியபடி எழுந்து, இலைகள்மீது அமர்ந்து ஆடின. கூவின. ஒரு காகம்கூட பாஸ்கரனின் இலையை நோக்கி வரவில்லை. அவன் மீண்டும் மீண்டும் தட்டினான். ஓரிரு காகங்கள் அதிருப்தியுடன் திரும்பிப் பார்த்தன.

''எல்லாம் ஒரோருத்தருக்க யோகமாக்கும் கேட்டியா'' என்றார் கிழவர். ''நானும் ஒம்பது வருஷமாட்டு பாக்குதேன். இதுவரை ஒருக்காகூட காக்கா வந்து பலி எடுத்ததில்லை. வராது.'' அருணாசலம் அவரை அர்த்தமின்றி பார்த்தான். அவர் உரக்க ''பாஸ்கரா இன்னும் ஒருக்கா கையடிச்சுப் பாரும். வரல்லங்கி விட்டுப் போடும். பித்ருக்களுக்கு சாந்தி இல்லைண்ணா நாம என்ன செய்யியது?'' என்றார்.

பாஸ்கரன் திரும்பி அருணாசலத்தைப் பார்த்தான். அவனுடைய இருப்பு அவன் மூளைக்கு ஏறினதுபோல தீவிரமான வலியின் முகச்சுளிப்பு அவனிடத்தில் ஏற்பட்டது. அவன் சற்று வளைந்து நின்ற விதத்தில்கூட மனதின் இம்சை தெரிந்தது.

''கெதி கிட்டாத்த ஆத்மாவாக்கும்'' என்றார் கிழவர். ''சந்ததி பரம்பரையில ஒரு ஆத்மாவுக்கு கெதி கிட்டேல்லண்ணா ஆயிரம் வருஷம் எறைச்ச எள்ளும் நீரும் வீணாப் போச்சுண்ணு அர்த்தம். பித்ரு லோகத்தில பின்ன ஆருக்கும் எடமில்லை.''

''ஏனால சாந்தியடையல்ல?''

அது ஆருக்கு தெரியும்? மனுஷனுக்கு பூமியில ஒரு வாழ்க்கை விதிச்சிட்டுண்டு. வாழ்ந்து நெறைஞ்சு சாகப்படுத்தவன் ஆருமில்லை. ஆனா ஊர்த்துவ வாயு பிரிஞ்சு, அபான வர்யு எடுக்கும்பம் ஒரு சுஷுப்தி உண்டாகும். அப்ப ஒவ்வொரு மனுஷனுக்கும் அவனுக்க அதுவரையிலான வாழ்க்கைக்க வரவு என்ன, செலவு என்ன, மிச்சம் என்ன எண்ணு தெரிஞ்சு போயிடும். அப்பம் மனசு அடங்கும். அதுக்குப்பிறகுதான் சப்தநாடியும் அடங்கி மரணம் சுகப்படும். ஆனா அப்படியும் ஒருத்தனுக்கு அவனுக்க வாழ்க்கை வீணாப் போச்சு எண்ணு தோணினா பின்ன அவனுக்கு மேல்கதி இல்லை. பொதுவா தற்கொலை செய்துக்கிட்டுப் போறவனுவதான் இப்படி ஆத்மா முதிராம சாவுயது. கொலைக்கேசில அப்பிடி இல்லை. பலசமயம் உனக்க தப்புகளுக்கு அதுதான் நல்ல முடிவுண்ணு ஆத்மா நிறையியதும்

உண்டு. ஆனா இதுக்க காரணம்தான் எனக்கு தீரெ மனசிலாவேல்ல. பத்துப் பனிரெண்டு வருஷம் குடிச்சு, அத்து அலைஞ்சு, நாறி, ரோகம் வந்து கிடந்து, பாக்க ஆளில்லாம புளுத்து செத்த ஆத்மாவாக்கும். இனி அதுக்கு பூமியில என்ன கொறவு எண்ணு தெரியல்லியே.''

அருணாசலத்தின் வயிறு கனமாக இருந்தது.

''ஒருக்கா கூடி கடைசியா தட்டிப் பாப்பம் பாஸ்கரா'' என்றார் கிழவர்.

பாஸ்கரன் திரும்பி அருணாசலத்தைப் பார்த்தான். அந்தப் பார்வையில் இருந்த குரோதம் நடுங்க வைத்தது.

''தட்டுங்க பிள்ளை.''

பாஸ்கரன் மிகுந்த ஆத்திரத்துடன் ஆங்காரத்துடன் ஓங்கி தட்டினான். தட்டியபடியே இருந்தான்.

''மதி மதி. நில்லு பாஸ்கரா! என்னவாக்கும் இது?'' என்று கிழவர் அவனைப் பிடித்து நிறுத்தினார். அவன் முகம் சுளித்தது. உதடுகளை அழுத்தி கடித்தான். கண்ணீர் உருண்டு உருண்டு விழுந்தது.

''மதி பிள்ளை. நமக்கு யோகமில்லை. ஓடிச் செண்ணு பலியெடுத்து வெள்ளத்திலெ போடு. கர்மம் முடிக்கணுமே...''

பாஸ்கரன் தலையில் பலிச்சோறுடன் அழுதபடி நீரில் இறங்கினான். அதற்குள் அந்தப் பகுதி முழுக்க அவன்மீது கவனம் அடைந்து விட்டிருந்தது. குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள். இலை சரிந்து நீரில் விழ, சாதம் மிதந்து பிரிந்து கரைந்தது. மீன்கள் துள்ளித் துள்ளிக் கொத்தின. ஈரத்துடன் எழுந்த பாஸ்கரன் நேராகக் கரைக்கு ஓடி, உடை மாற்றாமல் துண்டை எடுத்து தோளில் போட்டபடி, துரத்தப்பட்டவன்போல ஓடினான்.

''நீங்க ஆரு பிள்ளே?'' என்றார் கிழவர்.

''அவனுக்கக் கூட்டுக்காரன்.''

''பிள்ளைகிட்ட சொல்லணும். இது மகா பாப ஆத்மாவாக்கும். யாரோ இதுக்கு மகா அபராதம் செய்து போட்டிணும். செத்துப் போன ஆத்மாவால அதை மறக்கவோ மன்னிக்கவோ முடியல்ல. கதிகிட்டாம அது பித்ருலோகத்திலெ ஏற முடியாது.''

''அதுக்கு என்ன செய்யணும்?''

''சமஸ்தாபராத பூஜைன்னு ஒண்ணு உண்டு. ஒரு ஆத்மாவுக்கு மனம் அடங்கல்லைண்ணு சொன்னா குடும்பத்திலெ உள்ளவங்க எல்லாரும் சேந்து தப்பு செய்திட்டோம் மன்னிப்பு தரணும் எண்ணு அந்த ஆத்மாக்கிட்ட கேட்டு நடத்துத பூஜையாக்கும் அது.''

''யாரு செய்யணும் அதை?''

''உள்ளதைச் சொன்னா யாரு தப்பு செய்தாவளோ அவிய செய்யணும். அவிய கண்ணீரு விட்டு, செய்த துரோகத்துக்கு மன்னிப்புக் கேட்டா அந்த

ஆத்மாவுக்க தீ அடங்கும். ஆனா அந்த ஆளை எப்பிடிக் கண்டுபிடிக்கியது? கண்டுபிடிச்சாலும் அவனுக்ககிட்ட சொல்ல முடியுமா? அந்த மகாபழியை யாரு ஒத்துக்கிடுவாங்க? அதனாலதான் குடும்பத்திலயும் நெருக்கத்திலயும் உள்ள எல்லாரும் சேந்து சமஸ்தாபராத பலி போடுவது. அதில அந்த பாபியும் இருப்பான் இல்லையா?''

''இவங்க குடும்பத்தில இப்பம் இவனும் இவனுக்க பாட்டியும் மட்டும்தான்.''

''அப்ப காரியமில்லை. இது வருஷம் குறை ஆச்சு. அந்த ஆத்மாவுக்கு கெதி இல்லை. வேணுமானா ஒரு பிரச்னம் வச்சு பாக்கலாம். நீங்க சொல்லிப் பாருங்க.''

''செரி.''

அருணாசலம் மணலில் கால் புதைய நடந்தான். காலடிகளுக்குப் பலமில்லாமலிருக்கக் காரணம் மணல்தானா? பாஸ்கரன் வைத்த பலிச்சோறு வெயிலில் காய்ந்து கிடந்தது. அதன் மேலே ஒரு காகம் மரக்கிளையில் அமர்ந்திருந்தது. பஞ்சடைக்கப்பட்ட பொம்மை போல.

திரும்ப அவன் பாஸ்கரனின் வீட்டை அடைந்தபோது அவன் நின்னைமீது வந்த கோலத்தில் ஈர உடையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டான். அருகே போய் அமர்ந்தான்.

''மன்னிக்கணும் பாஸ்கரன். இண்ணைக்கு நான் வந்திருக்கப் பிடாது. உங்களுக்குப் பிடிக்கேல்ல எண்ணு தோணுது.''

''அப்பிடியில்ல.''

''அப்ப நான் வாறேன்.''

''காப்பி குடிச்சுட்டு...''

''பரவாயில்லை. லோன் கிடைச்சுதா?''

''ஆமா.''

''வீட்டுப் பணி எப்ப?''

''தொடங்கணும்.''

அருணாசலம் தன் விரல்களைப் பார்த்தான். கிளம்பத் தோன்றவில்லை. ஏதோ மீதியிருப்பதுபோல உணர்ந்தான்.

''கண்டுதா, எனக்க அப்பன் கெதியில்லாம அலையுதத்க் கண்டுதா?'' பாஸ்கரன் திடீரென்று உரத்த உடைந்த குரலில் கேட்டான். ''கெதிகிட்டாத்த நகப்பனுக்க மகனாக்கும் நான். எனக்கும் கெதியில்லை. நான் ஜீவிச்சிருக் றதில ஒரு அர்த்தமும் இல்ல. வயது நாப்பாதாகியும் நான் கல்லியாணம் கேட்டாத்தது அதுக்காக்கும். எனக்கும் கெதியில்ல நானும் கெதியில்லாத ஆத்மாவாக்கும்...''

''இதெல்லாம் என்ன தோழர்?'' என்று தொடங்கிய அருணாசலம் தயங்கினான். எந்த வாதமும் அவனை சமாதானப்படுத்தாது என்று புரிந்தது.

''அப்பனை இந்த உலகத்தில ஆரும் விரும்பல்ல. எங்க போனாலும் சவிட்டி எறிஞ்சாவ. அனாதையாட்டு புளுத்து செத்தாரு. எனக்க அம்மை அவரை வெறுத்தா. பாட்டியும் தாத்தாவும் வெறுத்தாவ. பழைய கூட்டுக்காரங்க பாத்தா காறித்துப்பிட்டு போனாவ. ஆருக்கும் வேண்டாத்த ஆத்மாவுக்கு ஏது கெதி? அவரு வாழ்ந்ததுக்கு அர்த்தம் இல்ல. செத்ததுக்கும் அர்த்தம் இல்ல. நாப்பது வருசம் பூமியில கெதிகிட்டாம அலைஞ்சாவ. முப்பது வருசமா வானத்தில அலையுதாவ. இனி இப்பிடியே கடசிவரைக் கும்...'' அவன் வினோதமான கேவல்களுடன் அழ ஆரம்பித்தான்.

அருணாசலம் பேசாமல் பார்த்திருந்தான். எத்தனை தீவிரமானதுக்கமாக இருப்பினும் ஒருவர் அழ ஆரம்பிக்கும்போது சற்று கோமாளி ஆகிவிடுகிறார். அழுகை நம்மை அவரிடமிருந்து உடனடியாக விலக்கி விடுகிறது.

பாஸ்கரன் மெல்ல அடங்கி கண்களைத் துடைத்தான். மீண்டும் பேசிய போது குரல் சற்று சமநிலையடைந்திருந்தது. ''இண்ணு நான் சொன்னேன். அப்பா இப்பளெங்கிலும் நீங்க வரணும். நான் உங்க ரெத்தம். உங்க மேல எனக்கு உயிராக்கும். நான் உங்க போட்டோவப் பாத்து அப்பா அப்பாண்ணு மனசுக்குள்ள விளிச்சு வளந்த மகனாக்கும். நீங்க மார்த்தாண்டத்தில தெருவில அலைஞ்ச நாளிலகூட நான் எனக்க அப்பா, உங்களை எனக்கு வேணுமே எண்ணுதான் மனசுக்குள்ள நினைச்சு அழுவேன். ரெண்டு ரூவா கிட்டினா மார்த்தாண்டம் போயி அப்பனைப் பாக்கலாமே எண்ணு நான் ஆசைப்பட்டிட்டுண்டு. அப்பனுக்ககூட ஒவ்வொரு நல்ல காரியத்தையும் கெட்ட காரியத்தையும் நான் சொல்லியிட்டுண்டு. வாங்க அப்பா, வந்து ஒரு வாய் சோறு எடுங்க. எனக்கு ஒரு கெதி குடுங்க... ஆனா இண்ணும் அப்பன் எனக்க கண்ணீர காணல்ல. எனக்க விளி கேக்கல்ல...''

கிழவி ஒரு செம்பு நிறைய எருமைப் பால் டீ கொண்டு வந்து வைத்தாள். கூடவே ஒரு சிறு டம்ளரும்.

''சொல்லுங்க சார், அப்பிடி எனக்க அப்பன் செய்த தப்பு என்ன? பதினாறு கொல்லம் மனசுருகி புழுத்து செத்தாலும் தீராத்த அந்தப் பாவம் என்ன? யாருக்க குரவளைய அறுத்தாவ? யாருக்க குடியக் கெடுத்தாவ? துரோகிண்ணு கொல்லுதாவளே அப்பிடி அவரு செய்த துரோகம் என்ன?''

அருணாசலம் ஒருகணம் எல்லாவற்றையும் கூறிவிடத் தயாரானான். ஆனால் ஒரு பீதி வந்து தொண்டையை மூடியது.

''என்ன செய்திருந்தாலும் என் மனசில என் அப்பாவுக்கு சமானமா ஒருத்தரும் இல்லை. எனக்க தெய்வம் அவருதான். பூலோகத்தில உள்ள அத்தனை பேரும் கூடி மறிச்சு சொல்லட்டு. நான் மட்டும் நிண்ணு எனக்க அப்பன் தெய்வமிண்ணு சொல்லுவேன். எனக்கு கையுறச்ச பிறகு ஒரு பெ என் முன்னால நின்னது அப்பனைப்பத்தி ஒருவார்த்தை சொல்ல நான் விட்டதில்லை.''

அருணாசலம் டீயை சிறிது குடித்தான். கிழவியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான். வண்டியை மெல்ல உருட்டியபடி நடந்தான். வீடு மறைந்த போது மெதுவாக பதற்றம் விலகியது. எண்ணங்கள் கோர்வை அடைந்தன. எத்தனை புராதனமான சடங்கு. எத்தனை உள் மடிப்புகள் உள்ள நம்பிக்கை. வாழ்பவர் வாழப் போகிறவர் வாழ்ந்தவர் அனைவரையும் அது ஒரே இடத்தில், ஒரே காலத்தில், முடிவின்றி இருப்பவர்களாக மாற்றிவிடுகிறது. மறுக்க முடியாத ஒரு சங்கிலி மூலம் அனைவரையும் பிணைத்துவிடுகிறது. தலைமுறைகள் காலமின்றி உரையாடும் ஒரு வெளி அது. சடங்கு ஓர் தாற்காலிக மன எழுச்சியை உருவாக்குகிறது. தோழர், யதார்த்தம் வேறு ஒரு அடுக்கு. அங்கு நீங்கள் வந்துதான் ஆக வேண்டும். அது வேறு யுகம். அப்படியா? அப்படியா? யுகப்பிரிவினை சாத்தியம்தானா? மானுடப் பிரக்ஞை காலத்தால் கட்டமிடப்பட்ட ஒன்றா என்ன? அலைகள், வெவ்வேறு கரைகள். வெவ்வேறு ஒளி நிழல்கள். பூமியிலுள்ள மானுடரையெல்லாம் பிணைக்கும் நீதியின் சரடு. இல்லை ராமசாமி, நீங்கள் வெறும் சித்தாந்தி. உங்களால் கோபப்பட முடியும். விவாதிக்கச் செய்ய முடியும். அழ முடியாது. நீங்கள் அறிஞர். அசடுகள்தான் அழ முடியும். ஆனால் அசடுகளுக்குத்தான் மெய்மை தட்டுப்படுகிறது. மெய்மை ஒரு பயந்த பறவை. அது தயங்கியும் அஞ்சியும் காலடி வைத்து நெருங்குவது. நாம் மௌனமாக இருக்க வேண்டும். நம்மில் எளிமையும் கருணையும் நிரம்பியிருக்க வேண்டும். பரிபூரணமான நம்பிக்கையை நாம் அதற்குத் தர வேண்டும். ராமசாமி நீங்கள் அதி கூர்மையுள்ள அம்புகளுடன், கிண்ணென்று ஒலிக்கும் வில்லுடன், துல்லியமான கண்களுடன், வியப்பூட்டும் பயிற்சித் திறனுடன் வனமெல்லாம் அலைகிறீர்கள். பறவை இங்கிருக்கிறது. நீதியின் சரடு! அப்படியல்ல. அது ரத்தம். யந்திரங்களுக்கு ரத்தமில்லை. அவற்றின் சக்தி முடிவற்றது. ஆனால் ரத்தம் இல்லை. இது யந்திர யுகம். ஆனால் யுகப் பிரிவினை என்பது அபத்தமான ஒரு கோடு. பிளவற்றது மானுடப் பிரக்ஞையின் பிரவாகம். அதில் நீயும் நானும் அவனும். நாம் அனைவரும். ஆனால் நான் உன்னை அஞ்சுகிறேன். அவனைக் கொல்கிறேன். என்ன சிந்தனை அது? கொல்லும் அராஜகம் நிரம்பிய சொற்புகை மூட்டம். ஆனால் மனிதன் சாகத் தயார் என்கிறான். முன்பின் தெரியாத எவனுக்கோ தன் முன் வாழ்வையும் தூக்கித் தந்து விடுகிறான். தன்னால் விளக்க முடியாத ஒரு தார்மீகத்துக்காக பதினாறு வருடம் இம்மியிம்மியாக சாகத் தயாராக இருக்கிறான். ராமசாமி நீங்கள் சொல்வது சரி. நீதியின் சரடு. ஆனால் நீதி அல்ல. நீதி என்பது ஒரு மானுட ஏற்பாடு. இது மானுடத் தருக்கத்தால் விளக்க முடியாத ஓர் உத்வேகம்.

என்ன சிந்தனை இது? கோவையற்ற சொற்றொடர்கள். இது வெறும் மனக் கூத்து. ஆனால் இதில்தான் என் மனசக்தி மிச்சமின்றி செலவாக முடிகிறது. கோவையாக சிந்திக்கப்படும் எதுவும் பாதிப்பங்கு உண்மை நிலிருந்து விலகி நிற்கிறது. ஒரு வரியை அழுத்தம் தந்து, மறு வரியை மறைத்து, அடுத்தவரியை முதல் வரியுடன் இணைத்துத்தான் நாம் கோவையான சிந்தனைகளை உருவாக்குகிறோம். கோவையான சிந்தனை ஏன் நம் உள்மனதில் அவநம்பிக்கையை உருவாக்குகின்றன? எந்த

விதியும் அதன் எதிர்விதியை உள்ளே விழுங்கி செரிக்க முடியாது நெளிந்தபடி உள்ளது. எந்த சிந்தாந்தியும் தருவது தனிமையை. அது ராமசாமியாக இருந்தாலும் சரி, கதிராக இருந்தாலும் சரி, டால்ஸ்டாயாக இருந்தாலும் சரி. எண்ணங்கள் சிதறிப் போகும்போதுதான் இயல்பாக நகர்கின்றன. ஆனால் அவை அப்போது எதையும் மிச்சம் வைப்பதில்லை. அவற்றால் பயன் ஏதுமில்லை.

ஏதோ ஒலி கேட்டு அருணாசலம் நின்றான். வழி தவறிவிட்டிருந்தது. தூரத்தில் சாலை தெரிந்தது. ஆனால் அப்பகுதி செம்மண்ணாலான மரங்களில்லாத வெளியாக இருந்தது. மீண்டும் அந்த ஒலி. ஒரு உறுமல் போல. அல்லது தனக்குள் பேசப்பட்ட ஓர் ஒற்றைச்சொல் போல. மீண்டும் கேட்டபோது அந்த ஒலியை அடையாளம் கண்டான். அருகே நின்ற பெரிய கரிய பனைமரத்தின் மண்டை சிறிய ஒலி அது. படபடப்பு தணிந்தது. வண்டியைத் திரும்பியபோது பனைமரம் மீண்டும் சிறியது. இப்போது அது மிக அறிமுகமான ஒரு குரலாக இருந்தது. அருணாசலம் பீதியில் உறைந்து போய் நின்றான். எத்தனையோ காலங்களுக்குப் பிறகு பிரக்ஞை மீண்டு, வண்டியைத் தள்ளியபடி சாலைநோக்கி ஓடினான்.

♦

4

நடுகல் வாழ்க்கை


BACTHAD

1

'என்னால் வாதிட முடியவில்லை. பிறர் தருக்க உறுதியுடன் பேசும்போது அவர்கள் பேசுபவை எல்லாம் சரி என்று உறுதியாகத் தோன்றிவிடுகிறது. அவர்கள் பேசி முடித்த கணம் முதல் அப்பேச்சின் முடிச்சுகளை அவிழ்க்க ஆரம்பித்து விடுவேன். சில கணங்களுக்குள் அது கரைந்து மறைந்துவிடும். பிறகு நான் எடுக்கும் முடிவு என்னுடன் பேசியவர்களுக்கு வியப்பும், ஆத்திரமும் தருவதாக இருக்கும். அவர்களை உதாசீனம் செய்வதாக எண்ணுவார்கள். அவர்கள் பார்வையில் நான் மூர்க்கனாகவும், கனவு லகவாசியாகவும் தென்படுகிறேன். அதைவிட மோசம், என்னை மோசமான அகங்காரியாக அவர்கள் எண்ணுவது. அவர்களிடம் கூற எனக்கு எவ்வளவோ விஷயங்கள் உள்ளன. முதல் விஷயம், தோழர்களே உங்களை நான் மிகவும் மதிக்கிறேன்; உங்களை கலப்பட மில்லாத மனதுடன் நேசிக்கிறேன் என்பது தான்...'

அருணாசலம் பக்கங்களை மூடிவிட்டு கண்களை விரலால் அழுத்திவிட்டபடி பின்னால் சாய்ந்து கொண்டான். சுவர் கடிகாரம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. ஒரு மனிதன் தன் முன் அமர்ந்திருப்பதுபோல, மிச்சத்தையும் பேசிவிடப் பொறுமையற்றிருப்பதுபோல, உணர்ந்தான். அரை நூற்றாண்டுக்குமுன் அவன் புகைப்படத்தில் கூடப் பார்த்திராத ஒரு மனிதர், அவரை இம்மிகூட பொருட்படுத்தாத ஒருவருக்கு, மனம் திறந்து எழுதிய கடிதம். அதன் வரிகள் அவன் மனதின் எண்ணங்கள்போல இருந்தன. எந்த புறவரியும் இதுபோல அவன் வரியாக ஆனது இல்லை.

இருட்டு ஜன்னலுக்கு வெளியே நிரம்பி ரீங்கரித்துக் கொண்டிருந்தது. அந்த மொத்தப் பக்கங்களையும் ஏற்கனவே ஒருமுறை படித் திருந்தான். அப்போது எதிர்பார்ப்பும் பதற்றமும் இருந்தன. இப்போது மீதமின்றி அவற்றில் ஆழ்ந்து போனான். அவற்றை அவனால் தொகுக்க முடியவில்லை. முக்கியமானவை, முக்கிய மற்றவை என்று பகுக்க முடியவில்லை. மனம் எப்போதும் அதைச் சுற்றியே வாழ்ந்து கொண் டிருந்தது. பிற எண்ணங்களின் இடை வெளியில் அடிப்பிரவாகமாக அந்த வரிகள் ஓடுவதைக்

கண்டான். திடீரென்று காலத்தில் ஓட்டை விழுந்து மறுபக்கம் தெரிவது போலப் பட்டது. அந்தப் பக்கமோ அவன் வாழும் பக்கத்தின் கண்ணாடிப் பிரதிபலிப்புப் போலிருந்தது.

'எப்போதுமே என்னை முழுமையான தனிமையில்தான் உணர்ந்திருக்கிறேன். என் தனிமை எனக்குக் கழிவிரக்கத்தைத் தந்தது. அதை வெல்லக் கர்வத்தை பயிரிட்டுக் கொண்டேன். நான் புறக்கணிக்கப் பட்டவன் என்ற துயரம்; நான் அசாதாரணமானவன் என்ற கர்வம். என் பெரியம்மாவின் தயவில் நான் வாழ்ந்தேன். பழைய மாவுச் சாக்குகளை வாங்கி மூன்று வருடங்களுக்குப் போதுமான உடைகளை தைத்து தருவார் என் பெரியப்பா. பெரியப்பாவின் குழந்தைகள் லங்காஷயர் மில் துணியில் ஆடையணிவார்கள். எனாமல் தகட்டுப் பாத்திரத்தில் பழைய சோறும் நார்த்தங்காய் ஊறுகாயும் எடுத்துக் கொண்டு, பாவாடை போல அலைபாயும் காற்சட்டையுடன், வாய்ப்புண்ணுடன், கால்களிலும் கைகளிலும் சிரங்குடன், வெடித்துக் காய்ந்த பாதங்களுடன், மெல்லிய உடலில் பெரிய தலையுடன், அண்ணன்களுக்குப் பணிவிடை செய்யும் பொருட்டு பள்ளிக்கு வரும் ஒருவனை சகமாணவர்கள் ஒதுக்கியதில் என்ன வியப்பு? படிப்பிலும் மிகவும் சாதாரணம். என்னால் கணிதத்தை வெல்ல முடியவில்லை. தோற்றால் படிப்பை நிறுத்திவிடுவார்கள், படிப்பு நின்றால் ஏரோட்ட வேண்டும் என்ற பயத்தால், உயிரைக் கொடுத்துப் படித்து மெட்ரிகுலேஷன் எழுதினேன். என் பள்ளியில் முதலாமவனாக வென்றேன். என்னைக் கல்லூரிக்கு அனுப்புவது சாதிக் கவுரவம் சம்பந்தப்பட்ட விஷயமாகிவிட்டது. தர்மகர்த்தா பிள்ளை பண உதவி செய்ய ஒப்புக்கொண்டார். நான் படிக்க நேர்ந்தது வரலாறும் பொருளாதாரமும். என்னால் பிரிட்டிஷ் வரலாற்றின் தகவல்களை நினைவுகூர முடியவில்லை. வரலாறு எனக்கு ரத்தமும், கண்ணீரும், வீணாகிப்போன மனித வாழ்வுகளும் நிரம்பிய ஒரு உயிருள்ள படலமாக இருந்தது. பிரெஞ்சுப் புரட்சி பற்றிய கார்லைலின் நூலைப்படித்துவிட்டு உத்வேகத்தால் உடல் நடுங்க மொட்டை மாடியில் நடந்துநடந்து இரவைக் கழித்தது ஞாபகம் உள்ளது. பாளையங்கோட்டையில் கோடையில் வானம் மிகவும் துல்லியமாக இருக்கும். நட்சத்திர வெளியை நோக்கி அமர்ந்து 'நான் என்ன செய்ய வேண்டும்' என்று ஆயிரம் முறை கேட்டுக் கொண்டேன். ஏதோ செய்ய வேண்டும். காமக்குடியிலும் சுசீந்திரத்திலும் பிறந்து, திண்ணைகளில் குண்டிக்கடத்தையும் தலைமுறை ஞாபகங்களில் பட்டப் பெயரையும் விட்டுவிட்டுச் சாகும் சாதாரண வெள்ளாளப் பிறவியாக இருக்கக் கூடாது. ஆனால் என்ன செய்வது? கிப்பனின் 'ரோம சாம்ராஜ்யத்தின் சரிவும் மூடியும்' நூலைப் படித்துவிட்டுப் புராதன மனம் லயம் நெல்லையப்பர் சன்னதித் தெருக்களில் சுரமடித்த கண்களுடன் அலைந்தேன். நாகரிகங்கள், மூடிவற்ற ஒரு பெரும் நூலின் நுனி அந்தியாயங்கள். இந்தத் தெருவின் அடியில் இன்னொரு தெரு உள்ளது. அதற்கு அடியில் இன்னொரு தெரு. வரலாற்றின் மையத்தில் உள்ள வெற்றிடக்கை. அங்கு இருளும் மௌனத்தை. கிப்பனைப்போல எந்த

வரலாற்றாசிரியனும் சொன்னதில்லை. மானுட குலத்தின் பெரும் காவியகர்த்தர்களின் வரிசையில் கிப்பனை கண்டிப்பாக வைப்பேன். ஆனால் என் வரலாற்று தரிசனம் மதிப்பெண்கள் பெற உதவவில்லை. உக்கிரமாக வரலாற்றுடன் உரையாடிய என்னால் அருகே அமர்ந்திருப் பவர்களுடன் உரையாட முடியவில்லை.

அப்போதுதான் எங்கள் கல்லூரிக்கு ராமசுந்தரம் வந்தார். மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த சிறு உரையாடலில் பேசினார். வரலாற்றை அவர் அணுகிய கோணம் எனக்குப் புதுமையாக இருந்தது. வரலாறு என்பது வீரர்களின் கதையல்ல என்றார். மானுட குலத்தின் தொடர்ந்த சுய மேம்பாட்டிற்கான போராட்டத்தின் கதையாக அதைக் காட்டினார். வரலாறு விடுக்கும் மகத்தான அறைகூவலைப் பற்றிச் சொன்னார். பிற்பாடு நான் வெறும் சொற்கோவையாக அன்றிப் பார்க்க முடியாது ஆன அந்த வரிகள் அன்று என் ஆத்மாவை சவுக்கால் சுண்டி எழுப்பின. உரையாடல் முடிந்ததும் அவரைச் சந்தித்தேன். புன்னகையுடன் ஓரிரு சொற்கள் பேசி, என்னை மறுநாள் பஞ்சாலைத் தொழிலாளர் சங்க அலுவலகத்திற்கு வரச் சொன்னார்.

அன்றிரவு தூங்கவில்லை. பொழுது விடிகிறதா என்று ஜன்னல் வழியாகப் பார்த்தபடியே இருந்தேன். லட்சம் நட்சத்திரங்களுடன், காலமே இன்றி, இரவு உறைந்து நின்றது. வெந்த செம்மண் மணத்துடன் காற்று அவ்வப்போது கடந்து சென்றது. எதை எதிர்பார்க் கிறேன்; என்ன செய்யப் போகிறேன்? ஆனால் ஒரு தொடக்கத்தின் விளிம்பு அது. என் எதிர்காலத்தை அது தீர்மானிக்கக் கூடும். பொறுமை இழந்து கதவைத் திறந்து ஊமையொளி பரவிய தெருவைப் பார்த்தேன். ஏழெட்டு தூங்கும் கழுதைகள். நான்கு கைவண்டிகள், கைதூக்கிய நிலையில். வாழைத்தாரின் தண்டுகளும் குப்பைத்தாள்களும் பரவிய காலித்தெரு. நயினார் கடைமுன் காத்திருந்த வெற்றிலைக்கட்டு. எல்லாம் மிக அபத்தமான வேறு ஒரு உலகில் இருந்தன. கனவுகள் இல்லாத, உத்வேகங்கள் இல்லாத, யதார்த்த உலகில். எனக்கு இந்தத் தெருவில் இடமில்லை. எனக்கு இவர்களுடன் உறவில்லை. நான் மகத்துவங்கள் விளையும் ஒரு பொன்னுலகைப் படைக்கும் இலட்சியவாதி. என் கவிப்பை அறிந்தவள்போல சாம்பவசிவ அய்யரின் மனைவி கையில் சாணிச் சட்டியுடன் வாசலைத் திறந்து வெளிவந்தாள்.

உடனே கீழிறங்கிக் குளிர்ந்த நீரில் குளித்தேன். உடல் நடுங்க உடையணிந்தேன். விபூதியணியப் போனவன் தயங்கினேன். போடுவது பொருத்தமில்லை என்று பட்டது. ஆனால் நெற்றியின் காலியிடம் என்னை தொந்தரவு செய்தபடியே இருந்தது. நான் பக்தன் இல்லை. ஆனால் விபூதி ஒரு பழக்கம். காலப்போக்கில் எல்லாப் பழக்கங்களும் சிறுசிறு இனிமைகளைக் கொண்டுவிடுகின்றன. ஈரச் சருமத்தில் விபூதி உலர்வதைப் பார்ப்பது இப்போதும் எனக்கு பெரிய உவகையைக் கருகிறது. பழனி விபூதியின் மணம் சன்னமாக இருப்பினும் வெகுதூரம் நம்மைத் தொடரக் கூடியது. அந்தக் குறையை நடுசெய்ய எனக்குப் பிடித்தமான ஷேக்ஸ்பியர் நூல் ஒன்றை எடுத்துக் கொண்டேன். ஹாம்லட் அன்றுமின்றும் என் அந்தரங்க உணர்வு

களால் பின்னப்பட்ட காவியம். ஒரு குழந்தை முகம்போல இன்றும் அந்த நூலின் முகப்பு அட்டை ஞாபகம் இருக்கிறது.

சாணி நீர் தெளிக்கப்பட்டும், கோலமிடப்பட்டுக் கொண்டும் இருந்த செம்மண் சாலை வழியாக, இளம் குளிரை உணர்ந்தபடி நடந்து ராமசுந்தரத்தைப் பார்க்கப் போனேன். அந்தப் பழைய கட்டிடத்தின் ஜன்னல்கள் இல்லாத சிறு அறைதான் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம். செய்தித்தாள் விரிக்கப்பட்ட தரையிலும், புல் பாயிலுமாக அந்த அறையில் நாலு பேர் தூங்கிக்கொண்டிருந்தார்கள். கதவு திறந்து கிடந்தது. "சார், சார்!" என்று கூப்பிட்டேன். வேறு பக்கமிருந்து ஒருவர் உள்ளே வந்து, 'வாங்க" என்றார். அது ராமசுந்தரம். துண்டு மட்டும் கட்டியிருந்தார். உள்ளே வரச் சொன்னார். அமர ஏதுமில்லாத அறை. தூங்குபவர்களைத் தாண்டிச் சென்று அமர்ந்தோம். "குளிக்கப் போகிறீர்களா?" என்றேன். "குளித்தாயிற்று" என்றார். "துண்டு கட்டியிருப்பது பற்றி கேட்கிறீர்களா? வேட்டியும் ஜிப்பாவும் துவைத்துக் காயப் போட்டிருக்கிறேன். காயவில்லை" என்றார். எனக்குப் புரியவில்லை. அவரிடம் வேறு ஆடை இல்லை என்றார். எனக்கு அது அதிர்ச்சியாகவே இருந்தது. புத்தகப் படிப்பையும் வறுமையையும் இணைத்துப் பார்க்க கிராமிய மனங்களால் எளிதில் முடிவதில்லை. "நீங்கள் ஒரு படிப்பாளி என்று அப்போதே தெரிந்தது" என்றார். "ஏன்" என்றேன். "நீங்கள் கேட்ட கேள்வியில் உங்கள் படிப்பறிவை குறிப்பாலுணர்த்த பிரயாசைகொண்டீர்கள்" என்றார். அதைப் பிறர் கூறியிருந்தால் கடும்கோபம் அடைந்திருப்பேன். ராமசுந்தரம்மீது எவரும் கோபம் கொள்ள முடியாது. அவர் சாந்த சொரூபி. என் கையிலிருந்த நூலை வாங்கிப் புரட்டிவிட்டு "டு பி, ஆர் நாட் டு பி" என்றார் சிரித்தபடி. நானும் சிரித்தபடி "டு பி ஷ்யூர்" என்றேன். தொடர்ந்து கூல்ரிட்ஜ், ஜான்சன் ஆகியோர் ஷேக்ஸ்பியர் பற்றி என்னென்ன சொல்லியிருக்கிறார்கள் என்று விளக்க ஆரம்பித்தார். ஷேக்ஸ்பியர் பெருங்காவியம் எழுதாததனால் அவனை ஒரு பெருங்கவிஞன் என்று கூற முடியாது என்று விமரிசகர் கூறுவதுபற்றிக் கேட்டேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று என்னைக் கேட்டார். அவனுடைய எல்லா நாடகங்களுக்கும் உள் இணைப்பு உள்ளது. 'தி டெம்பஸ்ட்' ஒரு காவிய முடிவுக்கான அமைதியையும் கொண்டுள்ளது. எனவே எல்லா நாடகங்களையும் இணைத்து ஒரு காவியமாகக் கருதலாம் என்றேன். "பலே, பலே!" என்று சிரித்தார். "ஆகா!" என்று மகிழ்ந்தார். கிண்டல் செய்கிறாரா என்று எண்ணினேன். பிறகுதான் அவரிடமிருந்து டி.எஸ்.எலியட் பெயரை முதன்முதலாகக் கேட்டேன். இலக்கிய உலகை மாற்றியமைக்கப் போகும் மேதை அவன் என்றார் ராமசுந்தரம். அவன் கருத்துக்கு இணையாக என் கருத்து இருக்கிறது என்றார். ஒவ்வொருவராக எழுந்தனர். முகம் பல் கழுவி வந்தனர். "டீ சாப்பிடப் பணமிருக்கிறதா?" என்றார் ராமசுந்தரம். எட்டணாதான் தேறியது. "என்னிடம் மூன்றணா இருக்கிறது" என்றேன். "பலே, டிபனே சாப்பிடலாம்" என்று மகிழ்ந்தார். மதிய உணவு பஞ்சாலை கேண்டீனில். எனவே கவலையின்றி ஷேக்ஸ்பியரை விவாதித்தபடி அம்பிஸ் கபேக்குப்போய் இட்லி சாப்பிட்டோம். அப்

வந்த ஒரு தொழிலாளி அனைவருக்கும் ஆளுக்கொரு ரசவடை வீதம் வாங்கித் தந்தார். ராமசுந்தரம் ரசவடையை வழிபட்டபடி ரசித்துச் சாப்பிட்டார். என் அகத்தனிமை அன்று கலைந்தது. என் திறமை எங்கு இருக்கிறது என்றும் புரிந்தது. அந்த நாளின் பரவசம் இப்போதும் மறக்கவில்லை.

நான் கம்யூனிஸ்ட் ஆனதற்குக் காரணமே அதுதான். அந்தத் தீவிரம் என் தனிமையைக் கலைக்கும் என்ற எண்ணம்தான். குறுகிய காலத்திற்கு அப்படி ஒரு பிரமையும் இருந்தது. கூட்டங்கள் நடத்துவது, துண்டுப் பிரசுரம் எழுதுவது என்று தலைநிமிர முடியாமல் வேலை. தோழர் என்ற சொல்தான் அப்போது எத்தனை பரவசமூட்டுவதாக இருந்தது. ஆனால் எல்லாம் கொஞ்ச நாள்தான். மீண்டும் என்னைச் சுற்றி மௌனம் கவிய ஆரம்பித்தது. தினம் ஒரு சந்திப்பில் பேசி, நூறு பேரிடம் விவாதித்து, ஐம்பது பக்கங்கள் எழுதி, சலித்த பிறகும் தனிமை அப்படியே இருந்தது. ராமசுந்தரம் பிறகு ஒருபோதும் அந்த அளவு நெருங்கிவரவில்லை. கே.கே.எம். ஒருபோதும் என் மனதைத் தொட்டதில்லை. அவர் எனக்குத் தேவையாக இருந்தார். அவரை நான் சகித்துக்கொண்டேன். மன்னிக்க வேண்டும், நீங்களும் எனக்குத் தொலைவில்தான் இருக்கிறீர்கள். எப்போதும் என்னுடன் இருப்பது என் நிழல்தான். இரவின் இருளில் அது இருளோடு கலந்து மறைந்து அருகே நிற்கும். சில சமயம் இருளாகப் பரந்து வான்வெளியை நிரப்பிவிடும். பகலில் பணிவாகப் பிரியமாக என்னைத் தொடர்கிறது அது. உங்களுக்குத் தெரிந்திருக்கும் இங்கு என்னை நிழலுடன் பேசுபவன் என்கிறார்கள்...'

அருணாசலம் அந்தக் கடிதத்தை மூடிவிட்டு எழுந்தான். இரவு வெகுநேரம் ஆகிவிட்டிருந்தது. நாகம் நன்றாகத் தூங்கும் மூச்சொலி கேட்டது. குண்டுக்கரங்களை முஷ்டி பிடித்தபடி கொளரி தூங்க, அதனருகே நித்திரம் மணந்தது. எழுந்தான். தலை இலேசாகச் சுழன்றது. கண்களை மூடியபோது மாய எழுத்துக்கள் உள் விழிகளில் தத்தி நகர்ந்தன. திடீரென்று அவனை யாரோ பார்ப்பதுபோல உணர்ந்தான். கண்கள் மிளிர்ந்தன. ''யார்?'' என்றான். பதிலுக்கு சிறல் ஒலி கேட்டது. கரும்பனையின் சிறல். அருணாசலம் ''யாரு'' என்று உரத்த குரலில் கத்தினான். எழுந்து விளக்கைப் போட்டான்.

''என்ன, என்ன?'' என்று நாகம் வாரிச் சுருட்டி எழுந்தாள்.

''ஒன்றுமில்லை ஏதோ சத்தம்.''

''பூனையா இருக்கும். படுங்க.. கழுதை எப்படி சூத்திரம் பெய்ஞ்சிருக்கு. நாளது சூரை கழுதையாட்டம்.''

நாகம்..

''படுங்க பேசாம, நடுராத்திலை...''

நாகம் பின்னலைத் தூக்கிவிட்டுக்கொண்டு படுத்துக்கொண்டாள். அவன் விளக்கை அணைத்தான். இருளில் வெகுநேரம் செவி கூர்ந்தான். அந்த

◆

2

''ஒரு காரியம் சொன்னா கேப்பியளா?'' என்றாள் நாகம்மை, கையில் டீயுடன்.

''சொல்லு.''

டீயை மேஜைமீது வைத்தாள் ''இந்த எளவு வேண்டாம், விட்டுருங்க.''

''எது?''

''இந்த சனியன். ராத்ரி பகலா படிக்குதியளே, இது.''

''நீ நினைக்கிற மாதிரி இது பெரிய விஷயம் ஒண்ணும் இல்லை. ஒரு கட்டுரை எழுதணும் அவ்வளவுதான்.''

''அதுக்கு ஏன் இந்தப்பாடு?''

''அதுக்கு சில காரியங்கள் அறிய வேண்டியிருக்கு.''

நாகம்மை பெருமூச்சு விட்டாள். ''சொன்னா கோவிக்கப்பிடாது.''

''சொல்லு.''

தயங்கிவிட்டு, ''நீங்க ரொம்ப மாறிட்டிய'' என்றாள்.

''எப்பிடி?''

''சங்கத்துக்குப் போயி எம்பிடு நாளாவுது?''

அருணாசலம் சற்று திடுக்கிட்டான். ''வேலை நிறைய இருக்கு. ஒரு சுவனீர் இறக்கப் போறம். அதுக்க பொறுப்பு இருக்கு...''

''அது எப்பிடியேம் போகட்டும். இப்பம் நான் சொல்ல வாறது அதில்லை'' நாகம்மை தடுமாறி, பிறகு துணிந்து ''நாம ஒரு டாக்டரிட்ட போலாம்'' என்றாள்.

அருணாசலம் மார்பைப் பற்றிய பயத்துடன் ''என்னட்டி உளறிட்டிருக்கே?'' என்றான்.

''நீங்க தனியா இருக்கும்பம் என்னமோ பேசுறிய. சும்மா இருக்கும்பம் பாத்தா உங்க வாய் மட்டும் பேசிட்டிருக்கு.''

''என்ன பேசறேன்'' பீதியில் தன் முகம் வலிப்பதை அடக்க அவன் பெரிதும் சிரமப்பட்டான்.

''ஒண்ணும் சத்தம் வாறதில்ல. சில சமயம் சில வார்த்தைகள் கேக்கும். ஒரு தடவை இசக்கி எண்ணு கூப்பிட்ட மாதிரி இருந்தது. எனக்கு என்னமோ ரொம்ப பயமாட்டு இருக்கு.''

அருணாசலம் உரக்கச் சிரித்தான். சிரிப்பு அவனை மறைத்தது. ''பயப்படாதே. இப்பம் கொஞ்சம் தீவிரமாட்டு யோசிக்குதேன் அதுதான்.''

நாகம்மை கண்ணீர் நிரம்ப அவனைப் பார்த்தாள்.

''பயராதேண்ணு சொன்னா கேக்கணும்.''

''எம்பிடு நாளில கட்டுரை எழுதுவிய?''

''ஒரு வாரத்தில்.''

''சத்தியமா?''

''சத்தியமா. போருமா?''

''அதுக்கு பிறகு இந்த எளவ தொடப்பிடாது.''

''இல்லை, தொடமாட்டேன்.''

நாகம்மை சற்று ஆறுதல் பெற்றாள். ''அதாராக்கும் இசக்கி?''

''அவளா? அவள் வீரபத்ரபிள்ளைக்க கெட்டினவள். இப்ப ஆள் இல்லை.''

நாகம்மை போனதும் அருணாசலம் அச்சத்துடன் அந்தக் கைப்பிரதியைப் பார்த்தான். என்ன ஆயிற்று அவனுக்கு? அவனும் நிழலுடன் பேச ஆரம்பித்து விட்டானா? ஒரு கணம் அந்தத் தாள்களை வீசியெறிந்து விடவேண்டும் என்று வெறி ஏற்பட்டது. அத்துடன் இந்த இம்சை முடிந்துவிடும். தூக்கத்திலும் ஊடுருவி ஒலிக்கும் வீரபத்ரபிள்ளையின் குரல் இல்லாமலாகிவிடும். அவன் பழைய அருணாசலமாகத் திரும்பிவிடுவான். ஆனால் அந்த வாழ்வு வெறிச்சிட்டுக் கிடக்கும். அபத்தமாக நீண்டுநீண்டு போகும். இந்தக் கணங்களில் துடிக்கும் வலி இதை மிகமிக முக்கியமான அனுபவமாக ஆக்குகிறது. அவன் வாழ்வுக்குப் பொருள் தருவதே இந்த வலிதான். இதை ஒருபோதும் அவன் இழக்க முடியாது.

தாள்களைப் புரட்டினான். வீரபத்ரபிள்ளைக்கும் மனைவிக்கும் சமரசம் செய்து வைக்க நீலகண்ட பிள்ளை முயன்றபோது எழுதப்பட்ட நீண்ட கடிதம் அது.

'எவ்வளவோ முறை யோசித்த விஷயம். ஆதலால் எழுதும்போது குழப்பம் இல்லை. எனக்கும் அவளுக்கும் பொதுவான விஷயம் என்ன? எதை முன்வைத்து நாங்களிருவரும் உரையாடிக்கொள்ள முடியும்? திருமணமான இந்த நான்கு வருடங்களில் அப்படி எதையுமே கண்டு சொல்ல முடியவில்லை. இப்படி கூறிய உடனே என் தோழர்கள், அதாவது முன்னாள் தோழர்கள், அது எனது அகங்காரத்தையே காட்டுகிறது என்று கூற ஆரம்பித்துவிடுவார்கள். எனக்கு ஆர்வமுள்ள

துறைகளில் உள்ள அறிவு மட்டுமே அறிவு என்று நினைக்கிறேன் என்பார்கள். சாமானிய மக்களின்பால் புத்திஜீவிகளுக்கு உள்ள அலட்சியத்தின் வெளிப்பாடு அது என்பார்கள். அவர்கள் அப்படிக் கூறும்போது என்னாலும் நம்பாமல் இருக்கமுடியாது. ஒரு காலத்தில் அப்படி நானும் நினைத்தவன்தான். மக்களை நோக்கி 'இறங்கிச்' செல்ல முடியாமைக்காக நான் வருந்திய நாட்கள் உண்டு. இப்போது அந்த வருத்தம் இல்லை. கல்வியறிவு இல்லாதவர்களில் ஆழ்ந்த ஆன்மீக வலிமை உடையவர்களை நான் கண்டதுண்டு. அவர்களிடம் பேசும் ஒவ்வொரு கணமும் மனதிற்கு இனிமை தருகிறது. அவர்கள்மீது ஏற்படும் மதிப்பும் பிரியமும் கணக்கிலடங்குவதல்ல. அவர்களிடம் நான் எதைவேண்டுமானாலும் பேசலாம். அவர்கள் மனதின் வாசல்கள் எல்லாம் என் தொடுகைக்குக் காத்திருப்பதுபோல திறந்துகொள்கின்றன. உதாரணமாக சக்கிலியன் நாமக்கண்ணு. ஒருநாள்கூட விடாமல் அவனிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். ஒருநாள் அவனிருக்கும் இடம் காலியாக இருந்தால் என் பார்வை ஏமாற்றத்துடன் மீள்கிறது. துயரங்களிலும் சந்தோஷங்களிலும் அவனிடம் அதைப் பகிர வேண்டும் என்று படுகிறது. அவனிடம் நான் கூறமுடியாத ஏதும் இல்லை. பேரிலக்கியங்கள் பற்றிக் கூட. மதியவெயிலில் சாக்குப்பைப் படுதாவின் அடியில் அமர்ந்து பேசிக்கொண்டே இருப்பேன். என் மன எழுச்சியின் ஒவ்வொரு கணத்தையும் அவனால் பின்தொடர முடியும். தல்ஸ்தோய் அப்படிப்பட்ட எளிய விவசாயிகளைப் பற்றி எழுதியுள்ளார். ஆனால் பெரும் படிப்பாளிகளை (பெயர்களைக் கூறுவது சங்கடம்) தாங்க முடியாதபடி அலுப்பூட்டுபவர்களாக, மூடப்பட்ட வழிகளாக, நான் பலமுறை உணர்ந்தது உண்டு. உதாரணமாக தோழர் கெ.ஆர்.எஸ். (பெயரைச் சொல்லுவதில் என்ன இருக்கிறது?) பெரும் படிப்பாளி யல்லவா? ஷேக்ஸ்பியரைப் பற்றியே பத்துநாள் விடாமல் பேச முடியும் அவரால். என்ன பயன்? முதல் இரண்டு வரிகளிலேயே அவரது மூளையின் இரும்புப் பற்சக்கரங்கள் கிரீச்சிட ஆரம்பித்து விடுகின்றன. பிறகு அப்பேச்சு ஒரு ஆபாசமான ஓசை. யார் யார் தொழிலாளி பற்றி என்னென்ன எழுதியிருக்கிறார்கள் என்று பட்டியலிட்டபடியே போவார் மனிதர். இப்போது இப்படிக் கூறுகிறேன்; மனிதர்கள் இரண்டு வகை. பிறவியிலேயே அப்படி இருக்கிறார்கள். ஆன்மிகமானவர்கள், லௌகீகமானவர்கள். உலகின் அனைத்து மதநூல்களையும், காவியங் களையும் படித்தாலும் லௌகீகவாதி அவற்றிலிருந்து ஆன்மிகமாக எதையும் பெறுவதில்லை. அவனுடைய பேச்சும், உணர்வுகளும், கனவுகளும் மட்டுமல்ல, அவன் உடலும்கூட லௌகீகமானது. ஆன்மிகவாதி எதையும் படிக்காதவனாக இருந்தால்கூட எளிய அன்றாட வாழ்வினூடாகவே ஆன்மீகமான தருணங்களை அடைந்தவனாக இருப்பான். எழுதப் படிக்கத் தெரியாத ஆன்மீக மனம் எளிதாக ஷேக்ஸ்பியருடனும் தல்ஸ்தோயுடனும் ஒட்டி நகர முடியும். இவ்விரு சாராரும் இந்த உலகில் இரு வேறு பகுதிகளில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு இடையே உரையாடலே சாத்தியமில்லை. அவர்கள்

ஒருவரையொருவர் மூடர்களாகவும் அலுப்புத் தருபவர் களாகவும் எண்ணிக் கொள்கிறார்கள். நானும் நாமக்கண்ணுவும் ஒரு பக்கம் என்றால் கே.ஆர்.எஸ்ஸும் இசக்கியம்மையும் மறுபக்கம். அவர்களிடம் பேச என்னால் முடிவதில்லை.

நான் மனிதாபிமானி இல்லை என்று நீங்கள் கூறக்கூடும். இவ்வரிகளை என் மனித வெறுப்புக்கான சால்ஜாப்புகளாகக் கருதவும் கூடும். மனிதர்கள்மீது பொதுவான பிரியம் கொள்ள நான் வெகுகாலம் முயன்றதுண்டு. என்னை நானே தூண்டித்தூண்டி, மன நெகிழ்வை உருவாக்கி, உச்சத்திற்குக் கொண்டுபோய், அடைந்த மன உச்சங்கள் இப்போது அபத்தமாகப்படுகின்றன. அதற்கு அற்புதமான வழிமுறை களை நமது முற்போக்கு இலக்கியவாதிகள் உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு தொழிலாளியை, அல்லது வேசியை, அல்லது பிச்சைக்காரனை, அல்லது குற்றவாளியை நாம் நம்முடன் அடையாளம் கண்டுகொள்ளும் கதாபாத்திரம் (நாம் என்றால் மத்திய வர்க்கம், படித்த முற்போக்கு ஜென்மங்கள், ஐயமென்ன?) தோற்றத்தையும் வர்க்கத்தையும் வைத்து மிகமிகத் தவறாக எண்ணும். திடீரென அந்த அழுக்குக் கதாபாத்திரத்தின் தோலைப் பிளந்து மானுட மேன்மையின் கிரணங்கள் பீறிடும். பிறகு கண்ணீர்; நெகிழ்வு. அடாடா. எல்லாம் கார்க்கி செய்த வினை. கார்க்கி நேர்மையானவன். அவனுடைய உணர்வுகள்தான் நேர்மையற்றவை. 'மனிதன் – எத்தனை அற்புதமான சொல்' என்றான். அந்த மன எழுச்சியை அடைய அவன் தனது கனக்கும் மனதைச் சுமந்து சுமந்து, சிகரம்வரை கொண்டுவந்திருக்க வேணடும். அது ஒரு சுயபோகம் போல. தன் முஷ்டியாலேயே எதிர்முனையை உருவாக்கி தன்னைத் தூண்டித் தூண்டி இறுதியில் அந்த உச்சம். அந்த சொற்கள். அவற்றைக் கக்கிய உடனே சற்று நேரம் வெட்டவெளியில் ததும்பிவிட்டு அவனுடைய மனம் சுருதியிழந்து, ஐயங்கள் கொண்டு, படிகளில் தடுமாறி, கீழே வர ஆரம்பித்திருக்கும். பாவம் கார்க்கி. என் பார்வையில் கார்க்கிபோல பரிதாபத்திற்குரிய ஜீவன் வேறு இல்லை. தன் உச்சகட்ட மன நெகிழ்வுகளை ஆன்மிக வெளிப்பாடு என்றும், மெய்மையின் தரிசனம் என்றும் நம்பிய பேதை அவன். வெளிநாட்டு விடுதியறையில் குரூரமாக விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டான். பாவம் கார்க்கி. எத்தனை பெரிய படைப்பாளி. ஆனால் பொய்யின் பிரகாசத்தில் ஆன்ம சக்தியை வீணடித்துவிட்டான். காவிய கர்த்தனாக வேண்டியவன் வெறும் வீரகதைப் பாடகனாக மறைந்தான்.

இசக்கியம்மை பற்றிச் சொல்ல வந்தேன். நான் அவளை மணம் செய்து கொள்ள முடிவு எடுத்தது மிகவும் தற்செயலாக. அவளை பெத்லகேம் தோட்டத்தில் முதலில் பார்த்தேன். பிறகு அவளுடைய தோட்டத்தில். ரப்பருக்கு ஆசிட் ஊற்றி உறைகுத்தும் வேலை அவளுக்கு. அத்தனை கடினமான வேலையை பெண்கள் செய்வது எனக்கு வியப்பாக இருந்தது. அன்று நான் உழைப்பின் உபாசகனாக இருந்தேன். சும்பின என் கைகால்களும் அதற்குக் காரணம். அவளை

ஒரு மகத்தான குறியீடாக உருவகித்துக் கொண்டேன். பிறகு பலமுறை அவளிடம் பேசினேன். அவளுடைய கூச்சமின்மையும், முரட்டுத் தனமும், நேரடித்தன்மையும் எனக்குக் கம்பீரமாகவும், அழுத்தமாகவும், களங்கமின்மையாகவும் தோன்றியது. ஆஜானுபாகுவான கரிய உடல், துவாரபாலகி சிற்பம் போல. பிள்ளைமார் சமூகத்தில் அவளை மாதிரி ஒரு பெண்ணைப் பார்க்கமுடியாது. அதுதான் அவளை மணக்க நான் முடிவெடுத்ததற்குக் காரணம் என்று ஒரு தோழர் ஆய்வு செய்து கூறினார் ஒருமுறை. அதுவும் உண்மைதான். மோகத்தின் தீவிரமான வலியை மெல்லமெல்லப் பெருக்கிக் கொண்டேன். அவளைப் பற்றிக் கற்பனை செய்து சுயபோகம் செய்தேன். அது எனக்குப் பெரும் உற்சாகத்தைத் தந்தது. என்னைக் கவர்ந்த பல கட்சித் தோழியர்களை இருளில் அந்தரங்கமாகக் கற்பனை செய்து கொண்டால் என் உடல் உணர்வு பெற்றெழுவதில்லை. அவர்கள் எனக்குப் பெண்ணாகவே அர்த்தப்படவில்லை. இவள் என் காமத்தைத் தூண்டுகிறாள். ஆகவே என் உடலுக்கு இவள்தான் இணை. உடல் நேரடியானது, நேர்மையானது, திடமானது. உடலுக்கு முன்னுரிமை தந்தே இவ்விஷயங்களைத் தீர்மானிக்க வேண்டும் - இதெல்லாம் அப்போது நான் யோசித்தவை. தோழர், ஒன்று நான் கவனிக்கவில்லை. அவளைப் புணரும் இருளறைக் கற்பனைகளில் என் உடலையும் வலிமையான கரிய கற்சிற்பமாகக் கற்பனை செய்து கொண்டிருந்தேன்.

அவளை மீண்டும் மீண்டும் பார்க்கப் போனேன். கரிய உடலில் வியர்வை வழிய வேலை செய்து கொண்டிருப்பாள். அவளிடம் மிருக உடல்களுக்கான உப்புவாசனை வீசும். அவளுடைய வாயில் இனிய மாமிசவாசனை உண்டு. அவள் சிரிப்பு ஒரு மிருகத்தின் உற்சாகக் குரல் போல் அத்தனை தூயது. அவள்மீது ஒவ்வொரு தருணத்திலும் எனக்கு எழுவது தீவிரமான காமம் தவிர வேறு அல்ல என உணர்ந்தேன். ஆனால் காமம்தான் இயல்பானது; புத்தகங்களினூடாக உருவாக்கப்பட்ட பிற உணர்வுகள் எல்லாம் பொய்யானவை என்று எண்ணிக் கொள்வேன். புத்தகங்களை நிராகரிக்க விரும்பினேனா? இல்லை. ஆனால் நான் வெறும் புத்தகப் புழு அல்ல என்று எண்ணிக்கொள்ள விரும்பினேன். இசக்கியம்மைக்கு என்னையும் பிடித்திருந்தது அப்போது. நான் அவள்மீது கொண்ட பிரேமை அவளுடைய வட்டாரங்களில் அவளுக்கு மிகுந்த மரியாதையைப் பெற்றுத் தந்ததுதான் அதற்குக் காரணம். அவளுடைய சிரிப்பு என்னை மெல்ல ஆட்கொண்டது. உடல் முழுக்க சதை துடிப்பி அலையடிக்கும் சிரிப்பு. கண்களை இடுக்கி, தலையைப் பின்னால் சரித்து, குரல்வளை அசைய, சிரிப்பாள். சிரிப்பு வந்தால் கடைசித்துளிவரை அதை வெளியே கொட்டுவதே பிறகு செய்ய வேண்டியது. பிள்ளைமார் வீட்டுப் பெண்கள் பாதிச் சிரிப்பை நெஞ்சிலே நிரப்பி நிறுத்திவிடுவார்கள். மீதியை கைகளால் பொத்தி தலைகுனிந்து நின்று மறைத்துவிடுவார்கள். (நாஞ்சில் நாட்டுப் பிள்ளைமார்களுக்கு பற்கள் சற்று எத்தினாற்போல இருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.) மாறாக இந்தச் சிரிப்பு ஒரு புதிய வாழ்க்கை முறையின்

அடையாளமாகப் பட்டது. அங்கு எல்லாவற்றுக்கும் சுதந்திரம் உண்டு. அங்கு அடக்கப்பட வேண்டியவை என எதுவும் இல்லை.

கே.கே.எம். முதலிலேயே எல்லாவற்றையும் அறிந்திருந்தார். ஒருமுறை என் நோக்கம் என்ன என்று கேட்டார். அப்படி அவர் கேட்டது என்னைச் சீண்டிவிட்டது. அவருக்குப் பல உறவுகள் உண்டு. பிரச்சினை இல்லாத தாற்காலிக உல்லாசங்கள் மட்டும்தான் அவை. கே.கே.எம். என்னை மக்களுடன் தொடர்பற்ற புத்திஜீவி என்று சித்தரிக்க எப்போதும் முயன்றபடி இருப்பார். நான் செய்யும் ஒவ்வொன்றையும் லௌகீகமாக அபத்தமானதாக மிக சூட்சுமமாக மாற்றிக் காட்டிவிட அவரால் முடியும். நான் எதையாவது செய்தால் அவர் புன்னகை புரிந்தாலே போதும், அது அபத்தமாக ஆகிவிடும். அப்படி நானேகூட நம்பிவிடுவேன். என் கைநூலை வாங்கித் தலைப்பைப் படித்துவிட்டு - கிளாஸ்லெஸ் சொசைட்டி! பள்ளிகூடம் இல்லாத ஊரப்பத்தின கதையாடே? - அவர் வேண்டுமென்றே மடத்தனமாக ஏதோ கூற அந்த நூலும் அதைப் படிக்கும் நானும் பொருந்தாத அசடுகளாக நிற்போம். கே.கே.எம். கேட்டபோது அவரை மூடனாக்க ஒருவழி தெரிந்தது. அவளை முறைப்படி மணம் செய்ய விரும்புவதாகச் சொன்னேன். கே.கே.எம். நான் நினைத்ததுபோல அயர்ந்து விடவில்லை. பிறகு அவரே திருமண விஷயத்தை எடுத்தார். அண்ணாவின் இடத்தை அவரே எடுத்துக் கொண்டார். ஒரு நாள் இரவு அண்ணா மனநிலையில் நிறைய உபதேசம் செய்தார். அவளிடம் நான் உடலுறவு கொண்டிருந்தால் அதன்பொருட்டு அவளை மணம் செய்ய வேண்டியதில்லை என்றார். அது அவர்கள் உலகில் சகஜம். அவள் கன்னியாக இருக்கக்கூட வாய்ப்பில்லை தெரியுமா என்றார். நான் நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளைச் சுமக்கும் கழுதை அல்ல என்றேன். வாயடைத்து போய்விட்டார். திருமணம் நடந்தது. இசக்கியின் வீட்டாருக்குப் போதிய சம்மதம் இல்லை. சாதியின் விதிமுறைகளை மீற அவர்கள் விரும்பவில்லை.

புதுத்திருமண நாட்களில் நான் என் கற்பனை மூலம் உருவாக்கிக் கொண்ட பெண்ணையே மீண்டும்மீண்டும் புணர்ந்து கொண்டிருந்தேன். அவளுடைய வியர்வையின் வீச்சம் என் உள் உறுப்புகளை கொப்பளித்துப் புரள வைக்கும் அந்தரங்கமான நறுமணமாக இருந்தது. அவளுடைய காய்த்த கரங்களை வருடும்போது என் குதத்திலிருந்து ஒரு தளிர்ந்த கூச்சம் படர்ந்து மேலேறும். அவளை நான் புணர்ந்ததை சிட்டுக்குருவிக் காமம் என்று கூற வேண்டும். பகலெல்லாம் வேறு வேலை இல்லை. அவளைச்சுற்றிப் பறப்பது, மொய்ப்பது, எழுவது. அவளுக்கு என் காமம் போதவில்லை என்பதையும், அதிருப்தியையும் கூப்பையும் மறைத்துக் கொண்டு காத்திருக்கிறாள் என்பதையும் கூட அறியாதபடி காமம் என் கண்களை மறைத்திருந்தது. முதல் மாதத்திற்குப் பிறகு என் மோகத் திரையில் இடைவெளிகள் விழத் தொடங்கின. நான் கைவப் பிள்ளையாக மாற ஆரம்பித்தேன். அவள் தெருவில் வைத்து

உரக்கக் கத்திப் பேசுவாள். கூவுவாள். அவளிடம் யார் கொஞ்சினாலும் திருப்பிக் கொஞ்சுவாள். நகைச்சுவை என்பது அவளைப் பொறுத்தவரை ஆபாசமான இரட்டை அர்த்தப் பிரயோகம்தான். நெத்திலிக் கருவாட்டை பச்சையாக மெல்லுவாள். அவளுடைய மண்வீடும், பரட்டைத்தலை குடிகாரத் தந்தையும், ஆடும் மாடும் நாய்களும் சேர்ந்து வாழும் வாழ்வும் எனக்கு தாங்கிக்கொள்ள முடியாதவையாக இருந்தன. அதையெல்லாம் விட அவளுடைய அம்மா. விஷம் பரவிய சொற்களால் அவள் என்னை எப்போதும் சொடுக்கியபடி இருந்தாள். சம்பாத்தியமில்லாத, ஊனமுற்ற (கண்ணாடியை அவளால் ஒரு ஊன்றுகோலாகவே பார்க்க முடிந்தது) உடல் ஆரோக்கியமில்லாத ஒரு மாப்பிள்ளையை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தங்கராஜ் எத்தனை தடவை வந்து தங்கிவிட்டுப் போனான் உன்னுடன். நல்ல தடியுள்ள ஆண்பிள்ளை, அவனை வேண்டாம் என்று சொல்லிவிட்டு இந்த சப்பாணியை கட்டிக் கொண்டாயே. கிழவியின் நிரந்தரமான பாடல் இது. தங்கராஜ் அவள் முதல் காதலன். அதை அய்யப்பன்பிள்ளை சொல்லியிருந்தார். அவள் மறுக்கவுமில்லை. திருமண நாளில்தான் தங்கராஜை நான் முதலில் பார்த்தது. மார்த்தாண்டம் கட்சி அலுவலகத்தில், தலைவர்கள் படத்திற்குக் கீழே, செம்மலர் மாலை மாற்றி நடந்த திருமணம். சிவப்புநிறப் புடவையில் இசக்கி அன்று இசக்கியம்மன் போலத்தான் இருந்தாள். பெரும்பாலான தோழர்கள் அன்று அசௌகரியமான மன உணர்வுடனும், அதை வெல்ல மிகையான உற்சாக நடிப்புடனும் இருந்தார்கள் என்று பட்டது. தங்கராஜ் மட்டும்தான் சுறுசுறுப்பாக இருந்தான். அன்று ஒரே புழுக்கம். எல்லாரும் வியர்த்து வழிந்து கொண்டு, தடுமாறிக்கொண்டு இருந்தோம். இப்போது நினைத்தால் எல்லாம் சிரிப்பாக இருக்கிறது.

சிரிப்பை சற்று நீட்டி, எங்கள் காம உறவைப் பற்றிச் சொல்கிறேன். முதல் நாள் அவள் கற்சிலை போன்ற முழு உடலைப் பார்த்ததுமே பரவசமடைந்து என்னை நழுவ விட்டுவிட்டேன். பிறகு தொடர்ந்து இதுதான் கதி. அவள் உடலின்மீதான தீவிரமான மன உணர்தலே என் கற்பனையை வெகுவாகத் தூண்டி என்னை வெகுதூரத்திற்கு இட்டுச் சென்றுவிடும். நான் மலையுச்சி வெறுமையில் நின்று பொங்கும் போது, அவள் வெகு ஆழத்தில் சிரமப்பட்டுப் படியேறிக்கொண்டிருப்பாள். மூச்சிரைக்க நான் திரும்பி வரும்போது, அவள் நிராசையுடனும் கோபத்துடனும் ஏளனத்துடனும் எதிர்கொள்வாள். படிப்படியாக அந்த நிந்தனை அவளில் நிரந்தரமாகக் குடியேறியது. உறவுக்குப் பிறகு நிஜ நுட்பமான மூர்க்கங்கள் மூலம் என்னை அவள் புழுப்போல உணரச் செய்வாள். ''எறங்கு'' என்று கனத்த குரலில் கூறிவிட்டு, புரண்டு விடுவாள். ''மலை ஏறி எறங்குனது மாதிரிதேன்'' என்று தனக்குள் முனகிக் கொள்வாள். கூந்தலைச் சுழட்டி முடிவது, உடைகளை அணிவது போன்ற சிறு செயல்களில்கூட அவளால் கடும் ஏளனத்தை வெளிப்படுத்த முடியும். பிறகுள்ள நாட்களில் அந்த அவமானத்தில் அச்சமே என் பெருந்தன்மையாக ஆகியது. அந்த வழுவழுப்பான

கண்ணாடிப் பொருளை கவனமாக, மிகக் கவனமாக, பதறிப்பதறி எடுத்து முன் செல்வேன். அது எதிர்பாராத கணத்தில் கைநழுவி விழுந்து உடைந்து சிதறி வழியும். குற்ற உணர்வுடன், அவமானத்துடன், கண்ணீர் மல்க மீள்வேன். அச்சமும் கவனமும் ஏற ஏற, என் பிடி அதன்மீது மேலும் வழுக்க ஆரம்பித்தது. பிறகு அவ்வெறுப்பை நானும் பிரதிபலிக்க ஆரம்பித்தேன். அவள்மீது துவேஷத்தை அடிவயிற்றி லிருந்து காறிக் காறி எடுப்பேன். வாயிலும் தொண்டையிலும் கசக்ககசக்க வைத்திருப்பேன். ஆனால் அவளுடைய உறுதியான திரண்ட கரிய மார்பகங்கள், திடமான தோள்கள், உருண்ட கனத்த தொடைகள் – அவள் எனும் கற்சிலை – என்னை அவளிடம் மீண்டும் இழுக்கும். என் வெறுப்பு ஒரு பாவனை மட்டுமே என்று நானே என்னை சமாதானம் செய்து கொள்வேன். என்மீது அவளுக்கு இருக்கும் வெறுப்புக்குப் பின்னால் அன்பில் கனிந்த மனம் ஒன்று உள்ளது என்றும் கற்பனை செய்து கொள்வேன். மீண்டும் அவளை முகர்ந்து வாலாட்டி, உதைபட்டுத் தெறித்து, எழுந்து மீண்டும் வாலாட்டி, நக்க அனுமதி பெற்று... இம்சை மிக்க ஓர் ஊசலாட்டம் அது. இழிவும், இழிவு மட்டுமே தரும் இன்பமும் கலந்த ஊசலாட்டம். நான் உறவு கொள்ளும்போதுகூட அவள் எதையாவது மென்றபடி இருப்பாள். ஒருமுறை பகலில் நான் அவள்மீது அச்செயலில் இருக்கையில் தன் அம்மாவிடம் பசுவை அவிழ்த்து விடும்படி கூவிச் சொன்னாள். என் உடம்பு சொடுக்கிக் கொண்டதில் அப்படியே சரிந்துவிட்டேன். எதையும் கோர்வையாக எழுத முடியவில்லை. எனக்கு படங்கள் படங்களாக இவை ஞாபகம் வருகின்றன. அருவருப்பு தரும் விஷயங்கள் என இவற்றை ஒதுக்கி விடாதீர்கள். இவைதாம் வாழ்க்கை. உன்னதங்கள் எல்லாம் இந்தப் படுகையிலிருந்துதான் வேர்விட்டு முளைக்கின்றன.

மெல்ல அவள் உடல்கூட எனக்குப் பழகிவிட்டது. சாணி அள்ளும்போது, அல்லது சேறு மிதிக்கும்போது, அழுக்கடைந்து தூளிக்கும்போது பார்த்தால் நம் காமம் எழுந்துவிடக் கூடும். இசக்கியை துளும் ஒரு பெண்மூலை வெறும் சதைத்துண்டுதான். அதே பெண் பெரும்பாலும் எதிர்மறையான சூழல்களிலேயே நான் நிர்வாணமாகப் பார்க்க நேர்ந்தது. ஒருமுறை பசுவிற்குப் புல் பறித்தபிறகு கைகளால் மூலைகள் மீதிருந்த அழுக்கை உருட்டிக் கொண்டிருந்தாள். காமம் அடங்கிய பிறகு வெறுப்பு மட்டுமே எஞ்சியது. அவளையும் அவள் வீட்டையும் சூழலையும் வெறுத்தேன். அதைவிட அவளும் என்னை வெறுத்தாள். என்னுடைய முக்கியத்துவம் வெறும் பாவனையே என்றும், புத்தகம் இக உலகில் மதிப்பில்லாத அசட்டுப் பொருள் மட்டுமே என்றும் அவள் அறிந்தாள் போலும். என் பலவீனமான உடம்பு அவளுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. அதன் பொருள் காமம் மட்டுமல்ல. அதன் ஆழம் நம் ஆண்புத்தியினால் ஒருபோதும் ஊர உணர முடியாத ஒன்று. ஒருமுறை அவள் எதிர்வீட்டுப் பெண்ணின் சுட்டிப்பயல் பற்றிப் பேசுகையில் 'பிள்ளையப் பெத்தா ஆம்பிளைக்குப் பெறணும்' என்றாள். அது மிக ஆதியான ஓர் உயிரியல்

தவிப்பு. அவளுக்குப் பிற ஆண்கள்மீது கவனம் ஏற்பட ஆரம்பித்தது. அதை எப்படி நான் உணர்ந்தறிந்தேன் என்று கூறுவது சிரமம். முன்பே அவள் ஆண்களுடன் கட்டுகளின்றி பழகுபவள்தான். ஆனால் இப்போது பேச்சு தழைவதை, உடல் குழைவதை, கைகள் வினோதமான முறையில் அவள் உடலின் பல இடங்களில் தொட்டு மீள்வதை, அவள் பிற ஆண்களுடன் பேசும்போது கண்டேன். அவள் உடலில் அப்போது மிக மென்மையான ஒரு தளுக்கு குடியேறும். கழுத்துச் சொடுக்கலில், நடையின் துள்ளலில், அது வெளிப்படும். சில சமயம் தனிமையில் ஆழ்ந்த மௌனம் அவளிடம் கூடும். என்னிடம் பழக்கம் ஏற்பட்ட நாட்களில் அவளில் இருந்த உற்சாகம் அல்ல இது. இதில் ஏக்கம் இருந்தது. ஆம், ஏக்கம்தான். அது ஒரு பக்கம் என்னை உருக வைத்தது. பொலிகாளை போன்ற ஆண்மகனாக ஆகும் வரம் பெற்று, அவளுடைய தனிமையின் ஏக்கத்தின் தருணங்களில் அவளிடம் மீள்வதுபற்றிக் கனவு கண்டேன். அக்கனவு முதிர்ந்து, விழித்து, அவள்மீது வெறுப்பும் அருவருப்பும் கொண்டேன். அவ்வெறுப்பு குறித்த குற்ற உணர்வு முதிர்ந்து, மீண்டும் பகற்கனவு நோக்கி நகர்ந்தேன். பிறகு இருவரும் தனித்தனியாக பகற்கனவுகளின் உலகைப் படைத்துக் கொண்டோம். என் கற்பனையில் அச்சமும் மடமும் அடக்கமும் கொண்ட, கைக்கடக்கமான, சிறு பெண்ணை உருவகித்துக் கொண்டேன். அதில் அவள் மிகத் தணிந்த வேட்கை கொண்டவளாகவும், நான் முடிவற்ற தீவிரம் கொண்டவனாகவும் இருந்தோம். என் தனிமையில் பகற்கனவின் சுருதிகளை அந்தரங்கமாக மீட்டியபடி உலவினேன். இசக்கியும் அப்படி அவளுடைய பகற்கனவின் உலகில் வாழ்கிறாள் என்பதை என் மனநிலையை வைத்தே ஊகித்தறிந்தேன். நம்ப மாட்டீர்கள்; இந்தப் பகற்கனவுகளினூடாக முதல்முறையாக ஓரளவு உடல்ரீதியான நெருக்கத்தையும் அடைந்தோம். அவள் உடலில் என் பெண்ணை நானும், என் உடலில் அவள் ஆணை அவளும், வரைந்துகொண்டு மௌனமாகப் புணர்ந்தோம். புணர்ச்சியின் சில தருணங்களில் அந்தப் படங்கள் அழிய, உடல்கள் பரஸ்பரம் அறியும் கணங்களும் வாய்த்தன. ஆனால் விலகிய மறுகணம் ஏமாற்றமும் வெறுமையும்தான் வந்து மூடிக் கொண்டன. ஒருவர் இன்னொருவரை ஏமாற்றுவதாக மனச்சித்திரம் ஏற்பட்டது. நீ இப்போது அனுபவித்தது என்னையல்ல என்பதை நான் அறிவேன் என்று அவளிடம் கூற வேண்டுமென ஒவ்வொரு முறையும் எண்ணுவேன். ஆனால் என் பகற்கனவுகளையே கிழிப்பதுபோல் ஆகிவிடும் அது என்பதால் கூற முடியவில்லை. விலகியபின் இருளில் கண்விழித்துப் படுத்து, அந்தப் பகற்கனவின் துண்டுகளைப் பிடித்திழுத்து இணைத்து ஓவியமாக்க முயன்றபடி, இரவினூடாகத் துழாவிச் செல்கையில் ஒரு கணத்தில் உள்ளிருந்து பீறிட்டு எழுந்து அவள் மீதும் சக மனிதர் அனைவர்மீதும் பரவும் கடும் துவேஷம் இருக்கிறதே அது ஆதிசேடனின் விஷத்திற்கு நிகர். மூவுலகங்களையும் எரிக்கும் தழல் அது.

மிதமிஞ்சிய சுயபோகம் இன்று என் வாழ்வின் பெரும்பகுதியை அடைத்துக் கொள்ளும் ஒன்றாக உள்ளது. இதை விரிவாக எழுத வேண்டும். உங்களை ஒரு எதிர்முனையாக அல்ல எனது மறுபகுதி யாகவே பார்க்கிறேன். எல்லாரையும்போல எனக்கு இளமையில் சுயபோகப் பழக்கம் இருந்தது. சில சமயம் அது என் தனிமையை முழுக்க அடைத்துக் கொள்ளும். வேறு உத்வேகங்கள் என்னை அடித்துச் செல்லும்போது அதை மறந்துவிடுவேன். திருமணமாகிப் பல நாட்கள் கழிந்து ஒருமுறை இசக்கி தூங்கியபிறகு அவளை ஓட்டிப்படுத்தபடி அவளை முகர்ந்தபடி சுயமைதுனம் செய்தேன். அது மிக அற்புதமான ஓர் அனுபவமாக இருந்தது. என் கற்பனையால் வரைந்தெடுக்கப்பட்டு, அவள் நிஜ உடலின் மணத்தால் உயிரூட்டப் பட்ட, அந்த இசக்கியம்மையைப் புணர்ந்தபோதுதான் முழு ஆண்மகனாக என்னை உணர்ந்தேன். பிறகு அது ஒரு பழக்கமாயிற்று. அவள் உடைகள் போதுமென ஆயிற்று. அவளுடனான என் உறவுகள் எல்லாமே பிற்பாடு சுயபோகங்களாயின. அவளை விட்டுவிலகிக் கட்சி அலுவலகங்களில் இரவு தங்க ஆரம்பித்த பிறகு அப்பழக்கம் பெருகி என்னைப் பித்தாக்கிவிட்டது. ஒன்று சொல்கிறேன் தோழர், கற்பனை நிரம்பியவர்கள் தங்கள் ஆகச் சிறந்த காமத்தின் தருணங்களை சுயபோகத்தின் போதுதான் அடைகிறார்கள். எழுதும் கரத்தால் சுயமைதுனம் செய்யும்போதுதான் எழுத்தாளன் பூரண இன்பம் அடைகிறான். என் இளம்பருவம் முதலே மிகவும் தாபத்துடன் பெண்ணுடல்களை பொறுக்கி என் ரகசிய சுரங்கத்தில் நிரப்ப ஆரம்பித்திருந்தேன். பெண்ணுடல்களின் முடிவற்ற பிம்பப் பிரவாகமாக ஆயிற்று என் மனம். பெண்கள், சதைகள், அந்தரங்க மயிர்கள், கசிவுகள், மணங்கள், கசங்கும் ஒலிகள், பெண்கள்... ஆபாசம் என்று இதன் ஓரத்தில் பென்சிலால் குறிக்கப் போகிறீர்கள். தோழர், காமம் என்பது பணிவுள்ள வீட்டு மிருகம் அல்ல. நம்மால் கட்டுப்படுத்த முடியாத ஊர்தி அது. அதில் வேகமூட்டி உண்டு. ஆனால் நிறுத்தக்கருவி இல்லை. எரிபொருள் தீர்ந்து அது நிற்க வேண்டும். காமம் மனிதனை எங்கெங்கு இட்டுச் செல்கிறது! அதை அஞ்சி, எம்பிப் பாய்ந்து, அதிர்ஷ்டவசமாக மெய்ஞானத்தின் கிளையைப் பற்றிக் கொண்டவர்கள் உண்டு; அருணகிரி நாதரைப் போல. அதை அஞ்சி முடிவற்ற சுழற்பாதையில் ஓடி ஓடி, அதன் எதிரே வந்து நின்று மூச்சிரைத்தவர்கள் உண்டு; நல்ஸ்தோயைப்போல. தூங்கும் அதன் காதைப் பிடித்திழுத்து சீண்டி விளையாடி, அதன் உதிரப் பசிக்கு உடலைத் தந்து மகிழ்ந்தவர்கள் உண்டு; மாப்பசானைப் போல. முடிவற்ற மாதிரிகள். காமம் என்பது தூலத்தில் ஒரு சிறு சதைநீட்சி. அதில் திரளும் உதிர அழுத்தம். அது கொப்பளிக்கும்போது எண்ணத்தில் ஏற்படும் இடைவெளியின் ஒரு கணம். அதல்ல காமம். அது அவ்வுறுப்பல்ல. அவ்வுறுப்பு நம் சித்தத்தைக் கலக்கிக் கொப்பளிக்க வைக்கும் பிம்பங்களின் குமுறல் அல்லவா காமம்? முஷ்டி மைதுனத்தின்போது எண்ணிக்கொண்டேன் ஒருமுறை. இந்தக் காற்றடிப்பான் மூலம் என் உடலுக்குள் நான்

செலுத்திக் கொள்ளும் காற்று எது? இதுவரை கோடானு கோடி ஆண்கள் கனவு கண்டு, காற்றில் உதிர்த்துவிட்டுப் போன பிம்பங்களா? ஆனால் வெடிக்கும் ஒரு தருணத்தில் அப்பிம்பங்கள் எங்கு போகின்றன? அப்போது காலம் விடும் சிறு விரிசலினூடாக விரியும் வெட்டவெளி சிறு பிம்ப நிழல்கூட இல்லாத வெண்ணிற வெற்றிடப் பரப்பாக இருக்கிறது. ஈசனும் உமையும் மிருகங்களாக, பறவைகளாக, புழுக்களாக மாறிப் புணர்ந்து மகிழ்ந்த கதையை எப்படி எழுதியிருக்கிறான் குமார சம்பவத் தில் காளிதாசன்! தோழரே, அவர்கள் இன்னும் புணர்ந்து முடிக்கவில்லை. நாமனைவரும் உண்மையில் அந்த ஈசனும் உமையும் ஆக இருக்கிறோம். திருப்தியற்ற ஈசன் லிங்கரூபமாக எழுந்தருளியிருக்கிறான். அவனது துடிக்கும் காம முனைக்கு மேலே பிம்பப் பெருவெளியென இப்பிரபஞ்சம்.

இசக்கியின் மாறுதல்களை நான் கவனிக்காமலில்லை. அவளுடைய சிரிப்பும் உற்சாகமும் மீண்டன. அவள் என்னை தன் சித்தத்திலிருந்து முற்றிலும் கழற்றிவிட்டாள். என் மனதில் அவள் உதிர்த்துவிட்டுப் போன உலர்ந்த உடற்கூடு மட்டுமே இருந்தது. என் கற்பனை ரஷ்யப்பிரபு வர்க்க எழுத்தாளர்களின் தொடர்ச்சி. தொழிலாளியின் உலகம் ஆரோக்கியமான உடலின் உலகம். அதை தல்ஸ்தோயும், தஸ்தயேவ்ஸ்கியும், குப்ரினும், செகாவும் உணர முடியாது. அது வன்முறையின், போட்டியின் உலகம். பலவீனங்களும் தயக்கங்களும் அங்கு இல்லை. இயலாமை கொண்ட உடலின் தர்ம நியாயங்கள் இல்லை. இயலாமையிலிருந்து உருவாகும் கனவுகளும் இல்லை. அங்கு வாழ்வது காட்டில் வாழ்வது போல. காட்டின் உயிர்ப்புமிக்க பசுமைக்கு எதிராகவல்லவா நாம் நமது சாக்கடை நுரைக்கும், புழுதி பரவிய, இடுங்கிய, இருண்ட சந்துகளை உருவாக்கி வைத்திருக்கிறோம்? வீடுகளை அதற்குள் கட்டி, அதில் குஞ்சுபொரித்து வளர்க்கிறோம். நகரங்களாகவும் நாடுகளாகவும் அச்சந்துகளை விரித்துப் பரவ வைக்கிறோம். இப்பொந்துகளின் உலகில் பதுங்கும் திறனே உயிர்வாழ்தலின் அவசியம். சுருங்கிக் கொள்ளுதல், ஒடுங்கிக் கொள்ளுதல், ஒன்றோடொன்று அப்பிக் கொள்ளுதல், குறைந்த பட்சம் தலையையாவது புதைத்துக் கொள்ளுதல். நமது பெண்கள் – ஆம் பிள்ளைமார் வீட்டுப் பெண்கள்தான்; வெள்ளாடிச்சி என்றால் தான் நாக்குக்கு திருப்தி – பெருச்சாளிகளைப் போல. தெருவுக்குக் கோலம் போட வரும் உமையம்மையும் கோலம்மையும் எப்படிக் கூசுகிறார்கள்! விழித்து விழித்துப் பார்க்கிறாள். அன்னியப் பார்வை பட்டால் ஒரு துள்ளலில் பொந்துக்குள் நுழைந்துவிடுகிறாள். இருளில் இருந்துகொண்டு கண்மின்னப் பார்க்கிறாள். கிச் கிச் என்கிறாள். சுவர் ஓரங்களினூடாக நடமாடுகிறாள். ஆனால் அவளுக்குக் கூரிய பல்லும் கைகளும் உண்டு. தன் பொந்துகளை அவள் விரிவுபடுத்தியபடியே போவாள். அந்தப் பொந்து வழியாக நீங்கள் போக முடிந்தால் இருண்ட வெதுவெதுப்பான சதுப்புப் பாதை ரகசியமாக நகரையே சுற்றி வருவதைக் காண முடியும். கிளைகள் பிரிந்து, ஊடுபாதைகள் பின்னி

ஒரு போதும் மீள முடியாத புதிர்ப்பாதையாக அது ஆகவும் கூடும். நல்லவேளை நான் வெள்ளாடிச்சியை 'கெட்டவில்லை'. தோழர், இது வெட்டவெளியின் உலகம். பிரகாசமான புல்வெளி எனலாம். வலுவான கால்களும், நீளக் கழுத்தும் உள்ள உயிரினங்களே இங்கு உயிர்வாழ முடியும். வெயிலும் காற்றும் உண்டு. சுதந்திரம் உண்டு. ஆனால் பலவீனமானவற்றுக்கு இடமில்லை. அவை அங்கு நீதியில்லை என்று ஓலமிட்டபடி சாகக்கூடும். நான் ஒரு புல்வெளி மிருகத்தின் தோள்மீது ஏறி அங்கு, வெட்டவெளியில் விரிந்த வானத்தின்கீழ், வாழ ஆசைப் பட்டேன். அது என்னை உதறிவிட்டது. ஒருமுறை கேள்விப்பட்டேன், அவள் தங்கராஜுடன் வாழ்கிறாள் என்று. அவள் கருவுற்றிருக்கிறாள் என்றும் செய்தி. அப்போது நான் கட்சியிலிருந்து விலக்கப்பட்டு தனிமையை உணர ஆரம்பித்த காலம். ஒரு கட்டத்தில் வலிகளை விரும்பவும் வரவேற்கவும் ஆரம்பித்திருந்தேன். வலியில் உள்ள போதையைத் தேடி என் மனம் அலைந்தது அப்போது. உலகமே என்னை வெறுக்கிறது என நம்பினேன். அதற்கு ருசு தேடி அலைந்தேன். கழிவிரக்கமே என் தனிமைகளை இனிமையாக ஆக்கியது. அக்காலகட்டத்தில் என் பகற்கனவுகளில் சிலுவையில் அறையப் பட்டேன். பின்பு உயிர்த்தெழுந்தேன். பாலைவெளியில் உதிர்க்கப் பட்டு, வெகுநாள் கழித்துக் கண்டெடுக்கப்பட்டேன். ஆம் தோழர், நான் என்னை புகாரினுடன்தான் அடையாளம் கண்டேன். அவருடைய விதியே எனக்கும் நிகழ வேண்டும் என்றும், வரலாற்றில் மீட்புக்காகக் காத்து பனிவெளியில் கிடக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டேன். என் எண்ணங்கள் என் கல்லறை மண்மேடுமீது வண்ணவண்ணக் காட்டு மலர்களாக விரிய வேண்டும். ஆனால் நான் புகாரின் இல்லை. அவரை அவரது இளம் மனைவி சைபீரியப் பனிவெளியில் எங்கோ இடைவிடாது நினைவு கூர்கிறாள். என்னை யார் கண்டடைவார்கள்? எனக்கு மீட்பே இல்லை. என்னைத் தேடி வந்து தொடும் பிரக்ஞை ஏதும் எதிர்காலத்தில் இருப்பதாக இப்போது தெரியவில்லை. இல்லை, இது வெறும் கழிவிரக்கமாக இருக்கலாம். காலவெளி முடிவற்றது. மர்மங்கள் நிரம்பியது. அங்கு என்னைத் தேடிவரும் பிரக்ஞையின் விதை காத்திருக்கக்கூடும். அவனுக்காகவே இந்த அபத்தமான நீண்ட கடிதத்தைக்கூட எழுதுகிறேன் போலும். இந்த உடல் உதிர்ந்ததும் எனக்கு விடுதலை கிடைத்துவிடும். முக்காலமெனும் சட்டத்தில் பிறகு கட்டப்பட்டிருக்க மாட்டேன். எதிர்காலத்திற்குச் சென்று அந்த விதையைத் தேடிக் கண்டுபிடித்து நீரூற்றி உயிர்பெற வைப்பேன்.

இசக்கி கர்ப்பிணியான பிறகு நான் பார்க்கவில்லை. அவள் மகனுக்கு இப்போது மூன்று வயது இருக்கலாம். அவன் என் மகன் என அவள் கூறுவதாகச் சொன்னார்கள். என் வாழ்வு ஏறத்தாழ முடிந்துவிட்டது. இனி ஏதும் மிச்சமில்லை. இன்னும் கொஞ்சம் பிரக்ஞை, அது தங்கி நிற்க கைப்பிடியளவு சதை. இனி எவர்மீதும் எனக்குப் பிரியம் இல்லை எனப் பலமுறை உணர்ந்தது உண்டு. ஆனால் அவளுடைய குழந்தைமீது – இல்லை, என் மகன்மீது – என்னையறியாமலேயே என் பிரியம்

படர்கிறது. அவளுடன் வாழ்ந்த நாட்களில் என்னை அரித்த ஒரு மன
சஞ்சலம் உண்டு. அவள் கன்னி அல்ல. இந்த உடலை, இந்த மார்புகளை,
இந்தத் தொடைகளை, இந்த ரகசியமான வழியைப் பிறர் அனுபவி
திருக்கிறார்கள். அந்த எண்ணம் தரும் அருவருப்பு அந்தப் புணர்ச்சிகளின்
தீவிரத்தை மர்மமான முறையில் அதிகரித்தது என்றால் வியப்பு
ஏற்படலாம். விந்தைதான். ஆனால் மனித மனம் இயங்கும் முறையில்
விந்தையென எதுவும் இல்லை. அதேபோல அந்தப் பையன் வேறு ஒ
ரத்தம் என்ற எண்ணமே அவன்மீது இன்னும் பிரியத்தை
ஏற்படுத்துகிறது. அவன் என்னைவிட மேலான என் பிம்பமொன்றின்
மகன் என கற்பனை செய்வேன். அவன் மீதான பிரியம் மட்டுமே
இப்போது என்னிலிருந்து தடையின்றி ஊறிப் பெருகுகிறது...

3

மதியம் அருணாசலம் சங்க அலுவலகத்திற்கு வந்தான். சுவாமிக்கண்ணு மட்டும் இருந்தான். அலுவலகம் புதிதாக வெள்ளையடிக்கப்பட்டிருந்தது. சுவர்களில் மாட்டப்பட்ட பழைய படங்கள் இல்லை. மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் முகங்கள் கொண்ட ஒரு நவீன ஓவியம் மட்டும் தொங்கியது. அறையின் அழுக்கும் அடைசலும் அகற்றப்பட்டு, எங்கு பார்த்தாலும் சுத்தத்தின் வெறுமை நிறைந்திருந்தது.

அருணாசலம் நாற்காலியில் அமர்ந்தான். எந்தக் கடிதமும் கோப்பும் அவனுக்காகக் காத்திருக்க வில்லை. ஃபைல் அடுக்கில் புதிய அட்டைகளுடன், சரியானபடி பெயர் சூட்டப்பட்ட கோப்புகள் வரிசையாக நின்றன. ஒரு கோப்பை எடுத்துப் பிரித்தான். அதில் மாதாந்திர செலவினங்களின் பட்டியல். எல்லாக் கடிதங்களிலும் நாராயணன் அருணாசலத்தின் பொருட்டு கையெழுத்துப் போட்டிருந்தான்.

ஃபைல்களைத் திரும்ப வைத்துவிட்டு அருணாசலம் கண்மூடி ஒரு நிமிடம் அமர்ந்திருந்தான். எதையுமே ஊன்றிக் கவனிக்க முடியவில்லை. பெரிய ஒரு விஷயம் துவங்குவதற்கு முன்பு இருப்பதுபோல மனம் பரபரவென்று இருந்தது. அடிவயிற்றில் ஒரு தவிப்பு எப்போதும் பின்தொடர்ந்தது. தூங்கப் படுத்தால் அது பெருகி படுக்க விடாதபடி அலைக்கழிக்கும். எழுந்து விளக்கைப் போட்டு அக்கடிதங்களைப் படிப்பான். அல்லது வெறுமே புரட்டுவான். திரும்பப் படுப்பான். மீண்டும் எழுவான். தூக்கம் தற்செயலாக வந்து கீழே சாய்த்தால் உண்டு. பலசமயம் காலையில் மேஜை அருகே விளக் கொளியில் விழித்துக் கொள்வான். ஆனால் அந்தத் தவிப்பில் ஓர் இன்பம் இருந்தது. அது ஒவ்வொரு கணத்தையும் எதிர்பார்ப்பும் சுவாரஸ்யமும் நிரம்பியதாக மாற்றியது. தொடர்ந்த தூக்கக் குலைவால் கண்கள் களைத்துப் போய், பொதுவானதோர் சோர்வு உடலில் பரவியது. பலசமயம் மனம் மிகமெல்லத் தவழ்ந்தபடி இருந்தது. ஏதாவது ஒரு எண்ணம் அதை சூட்டுக்கோல்போல் தொடுகையில் துடித்துப் பிறிட்டுக் கிளம்பி, வால் சுழட்டிக் கனைத்து.

காடும் சரிவும் மேடும் தாண்டி, எங்கெங்கோ ஓடி, களைத்துச் சரிந்தபிறகு மீண்டும் மந்தமடையும். பகலில் வெறுமே மனதைத் தவழவிட்டபடி மணிக்கணக்கில் அமர்ந்திருந்தான். அப்படி அமர்ந்திருப்பது பற்றிய குற்ற உணர்வுகொண்டு தாளை எடுத்து எழுத ஆரம்பிப்பான். ஓரிரு அர்த்தமற்ற சொற்கள். மனதுக்கும் மொழிக்கும் இடையே தொடர்பே இல்லாமல் இருக்கும். சலிப்பும் ஆங்காரமும் கொண்டு தாள்களைக் கிழித்துப் போடுவான். எழுந்து நடக்கக் கிளம்புவான். காத்திருந்ததுபோல வீரபத்ரபிள்ளையின் நினைவுகள் தொடர ஆரம்பித்துவிடும். மிக மெல்ல ஒரு விபரீதம் நிகழத் தொடங்கியதை கவனித்துப் பீதிகொண்டான். அன்று நடந்துகொண்டிருக்கும்போது நாகம்மையின் அண்ணாபற்றி எரிச்சலுடன் எண்ணிக் கொண்டிருந்தான். திடீரென்று ஒன்று கவனத்தில் பட்டது. அவ்வெண்ணங்கள் தீவிரமான சொற்றொடர்களாக வீரபத்ரபிள்ளையின் கடிதங்களில் இருப்பதாகவும், அவற்றை அவன் நினைவு கூர்வதாகவும்தான் எண்ணிக் கொண்டிருந்தான். பீதியில் அவனுக்கு சிறுநீர் ஒரு துளி சொட்டிவிட்டது. தொடை நடுங்க அப்படியே சாலையோரக் கல்வர்ட் சுவர்மீது அமர்ந்துவிட்டான். என்ன குழப்பம் இது என்று மூச்சுத்திணற தன்னைத்தான் கேட்டுக் கொண்டான். பின் திரும்பி யோசித்தபோது கடந்த நாள்களில் தன் பல மன ஓட்டங்களை அவ்வாறு வீரபத்ரபிள்ளையின் வரிகளாக மனம் உருமாற்றிக் கொள்வதை உணர முடிந்தது. அதேபோல வீரபத்ரபிள்ளையின் வரிகள் அவனுடைய எண்ணங்களாகவும் மாறி விட்டிருந்தன. இல்லையேல் அவன் ஏன் இசக்கியம்மையை சந்தித்து சூடாக சில சொற்கள் கேட்பதற்குத் திட்டமிட வேண்டும்? அருணாசலத்திற்குப் பீதியாக இருந்தது. இது மனச்சிதைவின் ஆரம்பமா என்ன? மனச்சிதைவு என்ன, பைத்தியம். இப்படித்தான் பைத்தியங்கள் பிறக்கின்றனவா? படிப்படியாக கனவும் நனவும் பொய்யும் மெய்யும் கலந்து, பிரிவினைக் கோடு மங்கலடைந்து... ஆனால் அவனுக்கு இப்போது அந்த எல்லை துல்லியமாகவே உள்ளது. தனக்குப் பைத்தியம் பிடிக்குமோ என்று அஞ்சுவதே மனத் தெளிவின் தடயமல்லவா? சற்றுத் தீவிரமாக வீரபத்ரபிள்ளையில் ஆழ்ந்துவிட்டான் போலும். கூடவே சரிவரத் தூக்கம் இல்லாதிருத்தலின் மந்தநிலையும். தன்னை சமாதானம் செய்தபடி எழுந்து நடந்தான். வீடு திரும்பியபோது மனம் தெளிவாக துல்லியமாக இருந்தது. வீரபத்ரபிள்ளையின் குறிப்புகளை மீண்டும் எடுத்துப் படித்தான். அதிலிருந்து துல்லியமான சுயப்பிரக்ஞை மூலமும், எதிர்வாதம் மூலமும், தன்னைப் பிரித்து நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணியபடி படித்தான். மிகத்தீவிரமான மன எழுச்சியை அவனுக்குத் தந்த வரிகள் பல வெறும் வார்த்தைகளாகக் கிடந்தன. வீரபத்ரபிள்ளை ஒரு மன எழுச்சியை ஒரு கருத்தாக மாற்றிவிடுகிறார். அவ்வெழுச்சி மேலேற ஏற துல்லிய கருத்துகள் அடுக்கப்பட்டபடிச் செல்கின்றன. ''ஆம் தோழர் மனிதன் எப்போதும் தனிமையானவன். தனிமையை உடைக்க பிரயத்தனப் படுபவன். நட்பு மூலம், பகைமை மூலம், ரத்தம் மூலம் அவன் பிற மனிதரிடம் உறவுகொள்ள முடிகிறது. ஆனால் மிக அதிகபட்ச உறவு தியாகம் மேலே சாத்தியமாகிறது. தியாகத்தை பிறர் அவ்வளவு எளிதாக ஏற்றுக்கிவிட

முடியாது. தியாகம் மூலம் அவன் தன்னை அடையாளப்படுத்தித் தனிமைப் படுத்தும் சுயம் என்ற எல்லைக் கோட்டுச் சட்டத்தை உடைக்கிறான். நான் என்ற சொல்லை விட்டுவிட்டு நாம் என்று சொல்வதற்கான தகுதியைப் பெறுகிறான். தகுதியா? அது அதிகாரமல்லவா? தியாகம் என்பது அதிகார இச்சையின் விளைவல்லவா?'' இதுதான் அவருடைய பாணி. பிறகு உத்வேகம் கிழிறங்குகிறது. சுய நிந்தனை, கிண்டல், நம்பிக்கையற்ற சொற்கள். ஆனால்... அருணாசலம் மீண்டும் அந்த பயங்கரமான அச்சத்தை அடைந்தான். அவன் முதலில் படித்தபோதிருந்த பற்பல வரிகள் இப்போது படித்தபோது காணப்படவில்லை. பிரமையா என மனதைக் கசக்கி சோதித்தான். உண்மைதான். பற்பல பக்கங்கள் இல்லை. அவை இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. அவை அவன் கற்பனைகளா? அப்படியானால்... பீதியுடன் மூடிவைத்துவிட்டு எழுந்து போய் வெயிலில் வெறிச்சிட்ட முற்றத்தைத் பார்த்தான். மரங்களும் சாலையும் செம்மண் தரையும் எரிந்து கொண்டிருந்தன. இவை நிஜம். இவை இருக்கின்றன. இவை என் மூளை கொள்ளும் பிரமைகள் அல்ல. இந்தத் தரைமீது நான் நிற்க முடியும். மரங்களைப் பிடித்துக்கொள்ள முடியும். அப்படியானால் பொய் எது? என் மூளையில் ஓடும் எண்ணங்களா? அருணாசலம் என்ற என் பெயரா? என் சுய அடையாளமா? என் தொழிற்சங்க - ஆம் தொழிற்சங்கத்தை அவன் மறந்துவிட்டான். அங்கு திரும்ப வேண்டும். அதன் இரும்புபோல திட்டவட்டமான செயல்முறைகளினூடாக நகரும் போது எல்லாம் திடமாக பூமியில் பதிந்திருக்கும். எச்.ஜி. வெல்ஸின் நாவலில் ஒருவன் எடையின்றிப் போகும் கஷாயத்தைக் குடித்துவிடுகிறான். அவன் பெயர் என்ன? அது எந்த நூல்? அந்தப் பகுதி மூளையில் காலியாக இருந்தது. திரும்பினான். எடையின்றி ஆன அந்த அப்பாவி மனிதன் பூமியிலிருந்து எழுந்து மிதக்க ஆரம்பித்தான். ஹீலியம் பலூன் போல உயரம் நோக்கி எழ ஆரம்பித்தான். பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் பற்றிக் கொள்ள முயன்றான். வானத்தின் இழுவிசையால் அவன் கரங்கள் தெறித்தன. அவன் பீதியுடனும் துக்கத்துடனும் அபயக்குரல் எழுப்பினான். ''பூமியே என்னைப் பிடித்துக் கொள். என்னை உதறிவிடாதே.'' பிறகு அவனுக்கு அவன் நண்பன் ஓர் ஈயச் சட்டை வாங்கித் தந்தான். அந்தச் சட்டையுடன் பூமியில் பிறரைப் போல நடமாடினான். ஆனால் அதை மறந்தும் கழட்ட முடியாது. கழட்டினால் பறந்து போய்விடுவான். காற்று மண்டலத்தின் மேல் எல்லைக்கு. ஏதுமில்லாத வெட்டவெளிக்கு. அங்கு தனிமையில் மிதந்து கிடக்க வேண்டும். காற்றின் ஓட்டத்திற்கு ஏற்ப முடிவின்றி அலைபாய வேண்டும். எவ்வளவு கொடுமை. என் தொழிற்சங்க ஈடுபாடு எனக்கொரு இரும்புச் சட்டைபோல. அதைக் கழட்டவே கூடாது. சங்கத்திற்குப் போய் பல நாள் ஆகிறது. அதிகாரத்தை நாராயணனுக்குக் கையெழுத்துப் போட்டுத் தந்துவிட்டான். ஏன்? தரவில்லை. நாராயணன் வீடு தேடி வந்து வாங்கிச் சென்றான். அது ஒரு பெரிய சதித்திட்டம். சதிதான். ஒருவேளை அவள் திரும்பிச் செல்லும்போது சங்கமே மாறி விட்டிருக்கும். அவன் இடமில்லாதவனாக வெளியே பதைத்தபடி நிற்க வேண்டியிருக்கும். எழுந்து போய் நாகம்மையிடம் சங்கத்திற்குப் போவதாகச் சொன்னான். அவள்

வியப்புடன் ஏதோ கேட்டாள். பதில் பேசாது சட்டையைப் போட்டுக் கொண்டான். கிளம்பி வண்டியை எடுத்தபோது ஹெச்.ஜி.வெல்ஸ், பைக்ராப்ட்ஸ் என்ற இரு பெயர்கள் வாயில் வந்தன. என்ன அர்த்தம் இவற்றுக்கு? திடீரென்று ஏன் இவை ஞாபகம் வர வேண்டும்? என்னவோ ஆகியிருக்கிறது என் மனதுக்கு. யார் சொன்னது இவற்றை? யாரோ சொன்னார்களே? வண்டியை ஓட்டியபடியே யோசித்தான். திடீரென்று ஞாபகம் வந்தது. அவை ஹெச்.ஜி.வெல்ஸ் என்பவர் அவனுக்கு எழுதிய கடிதத்தில் உள்ள வரிகள். அவர் ஏன் கடிதம் எழுத வேண்டும்? யார் அவர்? யோசித்துப் பார்த்தான். பைக்ராப்ட்ஸ்? அவர் முகம் ஞாபகம் வரவில்லை. சலிப்புற்று அந்தப் பகுதியை அப்படியே மூடிவிட்டு மனதை வேறு பக்கமாக்கத் திருப்பிக் கொண்டான்.

''தோழர், டூ வேணுமுங்களா...?''

அருணாசலம் திடுக்கிட்டான். ''என்னது?''

''டூ வேணுமுங்களா?''

''இல்ல, ஒண்ணுமில்லை.''

சுவாமிக்கண் ஒரு கணம் பேசாமல் பார்த்தான். தயங்கியபடி கிளம்பிப் போனான்.

பாஸ்கரனைப் போய்ப் பார்த்தால் என்ன என்று அருணாசலம் யோசித்தான். ஆனால் அவனிடம் என்ன கூறுவது? அவன் அப்பா உண்மையில் அவனுடைய அப்பா இல்லை என்றா? அதனால் என்ன பயன்? அவன் தன் தந்தைமீதான பிரியத்தையும் அவருக்குச் செய்ய வேண்டிய கடனையும்தான் தன் வாழ்வின் அர்த்தமாக எண்ணி வருகிறான். அந்த அர்த்தத்தை அவனிடமிருந்து பிடுங்கிவிட்டால் அவன் உயிரற்ற பிணம்தான். அது கிட்டத்தட்ட கொலை. அப்படியானால் மனிதர்களைப் பிணைத்திருப்பது உண்மையில் என்ன? ரத்தம் அல்ல. ரத்தத்தைவிட மேலான ஒன்று. அது என்ன? தலையை ஆட்டினான். வெகு தொலைவில் யாரோ யாரிடமோ தீவிரமாகப் பேசுவது கேட்டது. அல்லது யாரோ சொற்பொழிவாற்றுகிறார்கள்.

'நாம் வாழும் பூமி காற்றால் நிரம்பியுள்ளது. இந்தக் காற்றைப் பற்றி நாம் யோசித்ததுண்டா? இது ஒவ்வொரு கணமும் பூமிமீது வாழும் உயிர்களனைத்திற்கும் உள்ளே ஊடுருவி வெளியே வருகிறது. கம்பிளிப் பின்னலில் ஊசிபோல நுழைந்து வெளிவந்து, நுழைந்து வெளிவந்து, பூமியின் உயிரினங்களையெல்லாம் சேர்த்துப் பின்னிப் பெரும் வலையொன்றை உருவாக்குகிறது. இந்தக் காற்றில் நமது மூதாதையரின் மூச்சுக்கள் உள்ளன. தண்ணீரில் பல்லாயிரம் உப்புகளும் வாயுக்களும் கலந்துள்ளன. அவற்றைப் பற்றி ஏதுமறியாத மீன்களை அவற்றை உண்டும் சுவாசித்தும் அதில் வாழ்கின்றன. நாம் காற்றில் வாழ்கிறோம். இது கனவுகளினாலான, எண்ணங்களினாலான, நம்பிக்கைகளினாலான, துக்கங்களினாலான மெல்லிய உயிர்

தேக்கமல்லவா? மெல்ல அலை நுரைத்து, சில சமயம் கொந்தளித்து, சில சமயம் பீறிட்டு ஒரு திசைநோக்கிப் பரவிச் சென்று, சிலசமயம் மௌனமாகச் சுழன்று, சிலசமயம் குளிரில் உறைந்து, கனத்து இது நம்மைச் சுற்றி உள்ளது. ஒவ்வொரு கணமும் இது நம் ரத்தத்தில் பரவி ஊறி நம் உடலின் ஒவ்வொரு செல்லுக்கும் போகிறது. நம் மூளைச் செல்களில் ஊறி நமது எண்ணங்களாக முளைக்கிறது. நம்புங்கள் தோழரே, நாம் எண்ணுவது அவர்கள் எண்ணங்களை. நாம் கருவுறுவது அவர்கள் ஆளுமைகளை. நாம் காமுறுவது அவர்களுடைய தாபங்களை. ஒவ்வொரு பெண்ணையும் மூதாதையர் மௌனமாகப் புணர்ந்து கொண்டிருக்கின்றனர். அவளுடைய கருப்பீடத்தில், முலைப்பாலில், அவளுடைய முத்தங்களின் கருணையில்...'

அருணாசலம் பாய்ந்து எழுந்தான். பக்கத்து அறைக் கதவைத் திறந்தான். அங்கு யாருமில்லை. தரையில் இரண்டு செய்தித்தாள்கள் மட்டும் காற்றில் இறகுகள் மெல்ல அசையக் கிடந்தன. ஒரு கணம் அமைதி. அப்போது அடுத்த அறையில் பேச்சுக்குரல் தொடர்ந்தது. இப்போது வேறு உணர்ச்சி. வேறுவகையான தீவிரம். இது அந்தரங்கமான கிசுகிசுப்பு போலிருந்தது.

'சுயபோகத்தின் கணங்களில் என்னுள் ஊடுருவும் இவர்கள் யார்? இவர்களை வெறும் மனப்பிம்பங்கள் என ஒதுக்கிவிடும் நிபுணர்கள் ஏதுமறியாத மூடர்கள். இவர்கள் இருப்பவர்கள். எத்தனை தெளிவாக அவர்கள் உடல்களைப் பார்க்கிறேன். எத்தனை துல்லியமாக அவர்கள் வாசனையை நுகர்கிறேன். சில சமயம் அவர்கள் என் தனிமையில் வந்து தங்கள் மெல்லிய குளிர்ந்த விரல்களால் என்னைத் தொட்டு உசுப்பி எழுப்புவார்கள். சுயபோகம் செய்யும்படி என்னை அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அப்போதுதான் அவர்கள் திரைவிலக்கி இப்பக்கம் வர முடியும். அரைத்தூக்கத்தில் அவர்களுடைய வியர்வை படிந்த மென் சருமம் என் உடலை உரசி நகர்வதை அறிந்ததுண்டு. அவர்கள் என்னைச் சுற்றி எப்போதும் இருக்கிறார்கள். ஒன்றோ இரண்டோ ஆயிரமோ அல்ல. இலட்சம் கோடி. முடிவற்ற பெண்கள். உடல்களின் சமுத்திரம். அவர்களுக்குக் காலமோ இடமோ பிரச்சினையல்ல. அவர்களுடைய யோனிகளில் ஒன்று என் கையை எடுத்துக் கொள்கிறது. உண்மையில் ஒன்றல்ல. அந்தக் கரக்குவிப்பினூடாகப் பரவிச் செல்பவை கணந்தோறும் வெவ்வேறு யோனிகள். என் இடது கரத்தை அவர்களுக்கு அளித்துவிட்டேன். அவர்கள் உலகில் அது நீண்டு சென்றுவிட்டது. என் கடைசி உயிரும் திரவமாகப் பீறிட்ட பிறகு அவர்கள் திருப்தியின்றி தங்கள் மௌனமான உலகுக்குத் திரும்பிச் செல்கிறார்கள். அவர் களுடைய மெல்லிய மணம் மட்டும் என்னிடம் மிஞ்சுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் நிகழ்வது இதுதான். அவனுக்கு முதலில் அறிமுகமாகும் காமம் இந்த மூதாதையரின் காமமே. மூதாதையருக்கு ஒவ்வொரு ஆணும் செய்யும் பலி கர்மம் இதுவே. பிறகு அவனுக்கு அறிமுகமாகும் மானுடப் பெண் அந்த மூதாதையரின் ஒரு நிழலுருவம் மட்டுமே. அப்பெண்ணின் யோனியில் அவன் உதிர்க்கும் பீஜம் உண்மையில் அமானுடமான அப்பெண்வெளியை அவனுடைய மனம் புணர்வதன் விளைவாக

உதிர்வதேயாகும். முளைப்பது அந்தப் பெண்வெளியின் கருவில் ஏற்கனவே உருவான ஓர் ஆத்மாவின் அன்னமய உடல்.'

அருணாசலம் எழுந்தான். சிறுநீர் கழிக்கத் தோன்றியது. அவனை யாரோ ஏமாற்றுகிறார்கள். வேறுவேறு அறைகளில் மாறி மாறி பேசிக் கொண்டிருக்கிறார்கள். கதவைத் திறந்து வெளியே இறங்கினான். அந்தி ஆகி விட்டிருந்தது. பாதைத் தெரியவில்லை. நடந்தபோது சுவர் முட்டியது. தெரு ஓர் அறைபோல சதுரமாக இருந்தது. திரும்பத் திரும்பச் சுவர்களில் முட்டினான். பீதியுடன் 'சாமிக்கண்ணு' என்று அழைத்தான். ஓங்கிப் பலமுறை கூவினான். சாமிக்கண்ணு ஓடிவந்து விளக்கைப் போட்டான். அது ஸ்டோர் ரூம் என்று தெரிந்தது. இங்கு எப்படி வந்தோம் என்று அருணாசலம் குழம்பினான். சாமிக்கண்ணுவின் துளைக்கும் பார்வை அவன்மீது படிந்திருந்தது.

♦

4

தீர்த்தமலை சந்திக்க விரும்புவதாகக் கூறி நாராயணன் அருணாசலத்தை, வீட்டுக்கு வந்து அழைத்துச் சென்றான். தீர்த்தமலை வழக்கம் போல மேஜைமீது அமர்ந்து சொக்கலால் பீடி பிடித்தபடி எதையோ படித்துக் கொண்டிருந்தார்.

நாராயணன் வண்டியை நிறுத்திவிட்டு ''உள்ளே போங்க தோழர்'' என்றான். வழியில் அவனும் அருணாசலமும் ஏதும் பேசிக் கொள்ள வில்லை.

''வாங்க தோழர்'' என்றார் தீர்த்தமலை. அருணாசலத்தின் தோற்றம் அவரை சற்று மருட்சியடைய வைத்தது. ''என்ன ஆளே மாறிட்டீங்க?''

அருணாசலம் புன்னகைத்தான். அவன் விரல் கள் நடுங்கிக் கொண்டிருப்பதை தீர்த்தமலை கவனித்தார்.

''ரொம்பப் படிக்குறியன்னு கேள்விப் பட்டேன்'' என்றார்.

''ஆமா'' என்றான் அருணாசலம். அப்போது அவன் உதடுகளும் நடுங்க ஆரம்பித்தன.

தீர்த்தமலை அருணாசலத்தின் தோளில் கைவைத்து கனிந்த குரலில் ''என்ன பிரச்சினை தோழர், எங்கிட்ட சொல்லுங்க.''

''பிரச்சினை ஒண்ணும் இல்லியே.''

''விடுங்க தோழர். எல்லாம் நாராயணன் விபரமா எழுதித்தான் நானே வந்திருக்கேன். நீங்க சங்கவேலைக்கு வந்தே அஞ்சு மாசமாவுது.''

''கொஞ்சம் வேலை.''

''என்ன வேலை?''

''படிப்பு.''

''என்ன படிப்பு?''

''பல விஷயங்கள்.''

''வீரபத்ரபிள்ளை பத்தி, இல்லையா?''

வீரபத்ரபிள்ளை நிமிர்ந்து பார்த்தார். அவருக்கு அச்சமாக இருந்தது. மிக ஆழமான ஒரு படுகையின்

விளிம்புக்குக் காற்றால் கடும் குளிர் காற்றால் உந்தித் தள்ளப்படுவது போலிருந்தது.

''சொல்லுங்க தோழர், புகாரின் பத்தித்தானே?''

'அதை ஒரு விசாரணை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் அன்பும் தோழமையும் ஏன் சகஜத்தன்மையும் கலந்த ஒரு பாவனை அதில் இருந்தது. ராமசுந்தரம் கடினமான கண்ணாடி போட்டிருப்பார். அதன் வழியாக அவர் நம்மைப் பார்க்கும்போது விழிகள் இரு கூரிய ஒளி முள் நுனிகள்போலத் தெரியும். தலையை அவர் திருப்பும்போது அவ்விழிகள் நீரில் மிதப்பவைபோல மிதந்து விலகும். ஒரு மனிதனின் கண்களைச் சரியாகப் பார்க்க முடியாதபோது நம்மால் அவரைப் பற்றிய அந்தரங்க உணர்வுடன் உரையாட முடிவதில்லை. ஒரு காலத்தில் இந்த ராமசுந்தரம் தெளிவான குதூகலமான கண்கள் கொண்டவராக இருந்தார். அவருடைய விரிவான சித்தாந்தக் கல்வி, கட்சியின் அதிகாரத்தில் அவர் ஏறிய படிகள், அவருடைய எண்ணற்ற சொற்பொழிவுகள், கட்டுரைகள் அனைத்தும் சேர்ந்து அவரது விழிகளை தடித்து அடர்ந்த கண்ணாடிச் சிறைக்குள் பூட்டிவிட்டன. உள்ளே அந்த விழிகள் குரலின்றித் தவித்தபடி வெளியேறத் துடிக்கின்றன. அவர் என்னிடம் பேசுகையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் அர்த்தமற்ற சதைப் பிண்டமாக என்னை உணர்ந்தேன். என் வழியாக நான் வாசித்த ஒரு நூலின் வரிகள் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தன'. வீரபத்ரபிள்ளை உடல் அதிரத் துணுக்குற்றார். அங்கு நடக்கும் சம்பவம் ஏற்கனவே எழுதப்பட்ட ஒரு நூலில் இருந்து படித்து அவர் நினைவில் ஓடிக் கொண்டிருந்தது.

''புகாரின் மீது உங்களுக்கு என்ன திடீர் ஆர்வம் தோழர், எதனால்?''

''சும்மாதான்'' என்றார் வீரபத்ரபிள்ளை.

தீர்த்தமலை பொறுமையிழக்காமல் ''நீங்கள் சொல்லியே ஆக வேண்டும்'' என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

''என்னால திட்டவட்டமா சொல்ல முடியலை. சும்மா ஒரு ஆர்வம் வந்திச்சு. அப்படியே கேறிப்படந்து போச்சு.''

''உங்க மனசு உங்க கட்டுப்பாட்டில இருக்கா?''

''இருக்கே'' என்றார் வீரபத்ரபிள்ளை, ஐயத்துடன்.

''பின்ன?''

''எனக்கு சொல்வத் தெரியலை தோழர்.''

''இப்பிடிச் சொன்னா போருமா?''

''மன்னிச்சிடுங்க தோழர்''.

''சரி இப்ப சொல்றேன். எல்லாத்தயும் மறந்திடுங்க.''

''ஆனா புகாரின் என்னை மறக்கலியே.''

''என்ன சொல்றீங்க?'' என்றார் தீர்த்தமலை உரத்த குரலில். அருணாசலம் திடுக்கிட்டு உதறிக் கொண்டான். ''என்ன உளறிட்டிருக்கீங்க?''

''என்ன'' என்று விழித்தான் அருணாசலம்.

''வீரபத்ரபிள்ளைன்னு ஒருத்தர் கட்சில எப்பவுமே இருந்தது இல்லை. இதுதான் நம்ம நிலைபாடு. இதுதான் கட்சி நிலைபாடும். என்ன சொல்றீங்க.''

'எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு அது ஒரு வெறும் பெயர் அல்ல. புகாரின். நிகலாய் இவானோவிச் புகாரின். அது ஒரு ஒலி. ஒரு மந்திரம். அந்த ஒலியிலிருந்து தொடர்ந்து மனிதர்கள் பிறந்தபடி இருக்கிறார்கள். பிரியத்திற்குரிய மனிதர்கள். துயரம் நிரம்பிய முகங்களுடன் என்முன் அவர்கள் கணந்தோறும் வந்து நிரம்பிக் கொண்டிருக்கிறார்கள். புகாரினை வரலாற்றிலிருந்து அழித்துவிட்டார்கள் தோழர். ஆனால் அவர் பூமியின் பாதி தூரத்தைத் தாண்டி என்முன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.'

தீர்த்தமலை சற்று குரலைத் தாழ்த்தினார். ''அம்பதுகளில ரணதிவே போலிஸ் வந்தப்ப குமரி மாவட்டத்தில மட்டும் ஆயிரம் பேர் கட்சிய விட்டுப் போயிருக்காங்க. பயங்கரமான அடக்குமுறைகளிலக் கூட கட்சிக்காக ரத்தம் சிந்தின முன்னூறு பேர் நம்ம கட்சி ஜனநாயகத்தை ஏத்துக்கிட்டப்ப விட்டுட்டு போனாங்க. கட்சியைவிட்டுப் போனவங்களில சிலர்தான் தேறினாங்க. மீதியெல்லாம் ஆளுமை கெட்டு, குடிகாரர்களாகி, உதவாக்கரைகளாகி, சீரழிஞ்சு போனாங்க. சிலர் பூர்ஷுவாக்களாகக்கூட ஆனாங்க. ஏன், இப்ப நக்சலைட் இயக்கம் வெடிச்சப்ப கட்சிய விட்டு எண்ணூறு பேர் விலகிப் போகலையா? அதில வேணுகோபாலனை எனக்கு நல்லாத் தெரியும். நாலு வருஷம் நானும் அவனும் ஒரே ரூம்ல தங்கியிருக்கோம். என் நிழலா இருந்தான். அவன் படிச்ச புஸ்தகங்களுக்க பின் அட்டையைப் படிச்சவங்களே நம்ம கட்சியில குறைவு. பெரிய அளவில, தேசிய அளவில, போகப் போறான்னு நம்பினோம். இப்ப பேச்சிப்பாறை டாம் பக்கமா பிச்சை எடுக்கிறான். என்னைப் போன வருஷம் தெரிஞ்சவர் சமயத்தில் வழி மறிச்சு, 'குட்மார்னிங் தோழர், புரட்சி ஓங்குக. ஒரு அம்பது ரூபா குடுங்க'ன்னு கேட்டான். மனசுக்குள்ள நொறுங்கிப் போயிட்டேன். ஆனா என்ன செய்ய முடியும்? சொல்லுங்க...'' மேலும் உணர்ந்த குரலில் ''உங்க துக்கம் எனக்குப் புரியுது தோழர். ஆனா கட்சி முன்னகருறப்ப சிலர் உதிர்ந்தே ஆகணும். திரிபுவாதிகள், கோமைகள், பயநவவாதிகள் உதிருவாங்க. சில சமயம் கட்சியைவிடப் பெரிசா உங்களோட சுகோவை வைச்சிருக்கிற படிப்பாளிகளும், திறமைசாலிகளும் உதிருவாங்க. அபூர்வமா, ஒரு தவறுதலா, முக்கியமானவங்களும் உதிர்ந்துடலாம். ஆனா யாரா இருந்தாலும் உதிர்ந்தா உதிர்ந்ததுதான். ஏன்னா பழங்கிறது புராணங்களில சொல்றதுபோல ஒரு விராட புருஷன். அவருடைய மயிர்க்கால்களாம் அதன் உறுப்புகள். நாம இதைவிட்டுப் பிரிஞ்சுட்டோம்னா அப்புறம் மட்டி இல்லாமப் போக வேண்டியதுதான்.'' தீர்த்தமலை புது பீடியை பற்ற வைத்தார். ''புரியுதுண்ணு நினைக்கிறேன் தோழர்.''

அருணாசலம் திறந்த வாயுடன் அப்படியே பார்த்தபடி இருந்தான்.

''கட்சிங்கிறது ஒரு பெரிய யந்திரம் தோழர். ராமசுந்தரத்தோட உவமை இது. அசுர சக்தி உள்ள ஒரு யந்திரம் இது. நாமெல்லாம் இதில நட்டு ஸ்க்ரூ மாதிரி. ஒவ்வொரு உறுப்புக்கும் அதுக்குள்ள வேலை உண்டு. அதைத்தான் அது செய்யணும். அதை மட்டும்தான் செய்யணும். அது வேலைய தப்பா செய்தா மிஷினுக்க வேகம் அதை உடைச்சிடும். புரியுதா?''

அருணாசலம் தலையசைத்தான்.

''மனுஷன் தன்னை ஒரு யந்திரத்துக்க உறுப்பா மாத்திக்கிறது சுலபம் இல்லை. அதில பெரிய வன்முறை இருக்கு. அந்த சித்திரவதைக்கு ஆளானவங்கதான் நீங்க பார்க்கிற ஒவ்வொரு தோழரும். நிறைய உணர்ச்சிகளை அடக்க வேண்டியிருக்கும். காமம், புகழாசை, பண ஆசை, அதிகாரஆசை, அகங்காரம் இதுமாதிரி உணர்ச்சிகளை மட்டுமல்ல பல சமயம் கருணை, மனிதாபிமானம், தன்மானம் இதெல்லாத்தயும்கூட நாம ஒடுக்க வேண்டியிருக்கும்.''

''நான் தியாகத்துக்குத் தயங்கல்ல தோழர்.''

''பின்ன?''

''என் உயிரைக் கூட நான் குடுக்கத் தயார் தோழர். இது உண்மை.''

''பின்ன என்னதான் பிரச்சினை?''

''இந்த விஷயத்தில என் மனசு ஏன் இப்படித் தவிக்குதுண்ணு புரியல்ல தோழர். வீரபத்ரபிள்ளையை எங்கேயோ எப்பவோ இருந்த ஒருத்தர்னு நினைக்கத் தோணலை. அவர் என்கூடவே இருக்கிற மாதிரி இருக்கு. அவருக்கு நடந்தது எனக்கு நடந்தது மாதிரி இருக்கு.'' அந்த சொற்களை வேறு யாரோ எங்கோ கூறினது போல உணர்ந்தான். ''அவரு எனக்க நிழல் மாதிரி...''

''நீங்க என்ன செய்ய உத்தேசிக்கிறீங்க? ஒரு கட்டுரை எழுதி சங்க சுவனீர்ல போடப் போறீங்க இல்லையா?''

''ஆமாம்.''

''முழு ஆதாரங்களோட நீங்க அதை எழுதியாச்சுண்ணு வச்சுக்கிடுவோம். அதை எத்தனை பேர் படிப்பாங்க? படிச்சவங்களில எத்தனை பேர் அதை ஒரு பொருட்டா நினைப்பாங்க? என்னைக்கோ கட்சில இருந்து வெளியே போன ஒருத்தரைப் பத்தி யாருக்கு என்ன கவலை? அம்பது வருஷம் கூட இருந்தவங்க, தலைமை வகிச்சவங்க, போனப்ப ஒரு தொழிலாளி கவலைப்படலை.''

''அது தெரியும்.''

''அப்ப?''

''என் மனது அடங்கிடும்.''

''அப்ப உங்க திருப்திக்காக இதைப் பண்றீங்க.''

''ஆமா.''

''உங்களுக்கு ஏதோ குற்ற உணர்வு.''

''உங்க வாதத்துக்கெல்லாம் நிண்ணுதர நான் ஆளில்லை'' என்று அருணாசலம் கூவினான். எழுந்து நின்று நடுங்கினான்.

தீர்த்தமலை நிதானமாக ''இப்ப நீங்கதான் சொன்னீங்க உங்க திருப்திக்காகத்தான் இதைச் செய்தீங்கண்ணு.''

''ஆமா.''

''அப்ப கட்சியைவிட சங்கத்தைவிட உங்களுக்கு உங்க சொந்த திருப்திதான் முக்கியம் இல்லையா?''

அருணாசலம் கோபத்துடன் ''இல்லை... ஆமாம்'' என்றான்.

''கட்சிங்கிறது உங்க சொந்த விருப்பங்களை நிறைவேத்திக்கிறதுக்கான அமைப்பு இல்லை.''

''பின்ன என்ன? பலி கேட்கிற துர்தேவதையா?''

''கோபப்படாதீங்க, நிதானமா யோசியுங்க. இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் நினைச்சா பின்னே கட்சி உண்டா? ஒழுங்கு உண்டா? யோசிச்சுப் பாருங்க. கட்சியைவிட்டு வெளியே போனவங்கள்லாம் கட்சி பத்தி எத்தனையோ குறைகள் சொன்னாங்க. ஆனா யாராவது இன்னொரு அமைப்பை உருப்படியா கட்டி எழுப்பினாங்களா? ஒரு குழு, வருஷத்திற்கு அதில ஒம்பொது பிளவு, இப்படித்தானே இருக்கு இவங்களோட அரசியல்? சொல்லுங்க. இவங்க தனிமனிதனுக்கும் இயக்கத்துக்கும் இடையேயான உறவைப்பத்தி புரிஞ்சுக்கிடலை தோழர். இயக்கம்ங்கிறது பல்லாயிரம் மனிதர்களோட விருப்பங்களோட தொகுப்பு. அத்தனை பேருக்கும் பொதுவா உள்ளதுதான் கட்சிக்கு முக்கியம். ஒவ்வொருவருக்கும் விசேஷமா ஒவ்வொரு கருத்து இருக்கலாம்; உணர்வு இருக்கலாம். அதைக் கட்சியோட உரசிப் பாக்கக் கூடாது. கட்சிக்குத் தேவைப்பட்டா அதை உதறவும் ஒவ்வொருவரும் தயாரா இருக்கணும். ஒரு தனி உறுப்பினருக்கு பெரிய அநீதியாகவோ, கேவலமாகவோ தென்படக் கூடிய விஷயம் கட்சிக்கு ஒரு நடைமுறைத் தந்திரமா இருக்கலாம். கட்சி சர்வசாதாரணமா சில உயிர்களை பலி கேட்கலாம். ஒண்ணுரெண்டு தலை உருளும்னு தெரிஞ்சே நாம போலீஸுக்கு நேரா ஊர்வலம் போயிருக்கோம். நம்ம களப்பலிகளில முக்காவாசி திட்டமிட்டு உருவாக்கின மரணங்கள்தான். தனிமனிதனோட நீதி, ஒழுக்கம் இதையெல்லாம் வச்சு இயக்கத்தை மதிப்பிடக் கூடாது. இயக்கங்கிறது சமூகத்தில ஒரு அங்கம் இல்லை. அதுவே ஒரு சமூகம். இயக்கம் வரலாற்றுக்கு மட்டும்தான் கட்டுப்பட்டது. வரலாற்றில அது என்ன பங்காற்றுதுங்கிறத வச்சுத்தான் அதை மதிப்பிடணும்.''

தீர்த்தமலையின் பேச்சையும் அருணாசலம் முன்கூட்டியே படித்திருந்தான். இவர் எப்படி அதைப் படித்தார்? அவன் வியப்புடன் தன் நினைவை அளைந்தான்.

''பெரிய எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் பலரை சோவியத் அரசு தண்டிச்சிருக்கு. அம்பது வருஷம் முதலாளித்துவ சமூகங்கள் அதை வைச்சுப் புழுதி கிளப்பினாங்க. எழுத்தாளர்கள் எதையும் அவங்களை மையமா வச்சுத்தான் மதிப்பிடறாங்க. அவங்களோட அழகுணர்வு, நீதியுணர்வு இதுதான் அவங்க அளவுகோல். அந்த அளவுகோல் ஒரு இயக்கத்துக்குப் பொருந்தாது. அவங்க எந்த இயக்கத்தையும் ஏத்துக்க முடியாம தனி நபர்வாதிகளா, திரிபுவாதிகளா, அராஜகவாதிகளா மாறிச் செத்தாங்க. அந்தப் பார்வை ஒரு கட்சிப் பணியாளனுக்கு இருக்கக் கூடாது. அவனுடைய நீதியுணர்வுக்கு எதிரா இயக்கத்துடைய நீதியுணர்வு இருக்குமுன்னா அவன் தன் சொந்த நீதியுணர்வை அழித்துத்தான் ஆகணும். அப்ப அவன் நீதியுணர்வில்லாதவனாக ஆகிறதில்லை. இன்னும் விரிவான, முழு வரலாற்றையும் கணக்கிலெடுத்துக் கொண்ட, பெரிய ஒரு நீதியுணர்வு உடையவனாகத்தான் ஆகிறான். அப்ப எந்த நீதிமன்றத்திலயும், எந்த மனசாட்சிக் கூண்டிலயும் அவன் தைரியமாக ஏறி நிக்கலாம். வரலாறு என்னை விடுதலை செய்யும்னு தலைதூக்கிச் சொல்லலாம்.'' தீர்த்தமலை தன் சொற்களையே நம்பி உணர்ச்சி வசப்பட்டார். திடீரென அப்படி உணர்ச்சி வசப்பட்டதன் வித்தியாசத்தை உணர்ந்தவர்போல பேச்சை நிறுத்தித் தலை குனிந்தார். பீடியை உருவிக் கைவிரல்களில் வைத்து மீண்டும் மீண்டும் உருட்டினார்.

'நூரம்பர்க் விசாரணைகள் நடக்கின்றன. அங்கு கூண்டில் நிற்கும் நாசிப் படைவீரர்கள் தங்கள் தேசத்தின் அரசு விடுத்த உத்தரவுகளையே நிறைவேற்றினார்கள். தங்கள் ஃபியூரரின் கட்டளைப்படி கடமை யுணர்ச்சியுடன் அவர்கள் மானுடப் பேரழிவுகளை நிகழ்த்தினார்கள். துல்லியமான கணக்குகளை வைத்திருந்தார்கள். அந்த அரசாங்கத்தின் தார்மீக அடிப்படையை நீங்கள் நிராகரிக்கலாம். அந்த ஆட்சியாளர்களை, அந்த சித்தாந்திகளை கழுவிலேற்றலாம். கடமையைச் செய்த - கடமையை முழு மனத்துடன் திறம்படச் செய்த - அந்த வீரர்களை நீங்கள் எப்படித் தண்டிக்க முடியும்? தோழரே; இந்த வாதம் ஒருவகையில் சரிதானே? நேற்றுவரை வரலாற்றில் இப்படிப் பட்ட வீரர்கள் தண்டிக்கப்பட்டதில்லை. போரில் கொல்லப்பட்டது உண்டு. அடிமைகொள்ளப்பட்டதுண்டு. தண்டிக்கப்பட்டதில்லை. போர்க் கைதிகளுக்கான சர்வதேச ஒப்பந்தப்படி அவர்கள் சிறைப்படும்போது மாண்புடன் நடத்தப்பட்டனர். தங்கள் தேசங்களில் தேசிய வீரர்களாக கௌரவிக்கப்பட்டனர். இன்று நாசிகளை நோக்கி குற்றம்சாட்டும் தேசங்கள் திரும்பிப் பார்க்கட்டும். ஏன் இந்தியாவிலேயே சுதந்திரப் போராட்ட வீரர்களை வெள்ளைய அரசின் உத்தரவுக்கு ஏற்ப அடித்துத் துன்புறுத்த அதே காவல்துறைதானே சுதந்திர அரசிலும் தொடர்கிறது?

தான் சார்ந்திருக்கும் அரசின் செயல்களுக்கு ஒரு தனிமனிதன் எத்தனை தூரம் கட்டுப்பட்டவன்? தோழர், இன்றைய நவீன உலகில் ஒவ்வொரு சிந்திக்கும் மனிதனும் ஒரு தடவையாவது இந்தக் கேள்வியை எதிர் கொண்டு மனம் கலங்கியிருப்பான். எளிய பதில்கள் இல்லை தோழர். வரலாறு இதற்கு விடையளிக்காது. ஓர் இயக்கத்தை ஏற்றுக் கொண்டதனாலேயே ஒருவன் அதன் அனைத்துச் செயல்களையும் ஏற்றுக்கொண்டவனாவானா? ஏற்றுக் கொள்ளாவிடில் இயக்கங்களை விட்டு விலகலாம். அதுவே சமூகம் என்றால், தேசம் என்றால், ஏன் மானுடகுலம் என்றால்? ஒவ்வொரு தனிமனிதனும் அவன் சார்ந்துள்ள இயக்கம் அல்லது அமைப்பின் தவறுகளுக்கும் பாபங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டுமா? அப்படியானால் வரலாற்றுக்கு – வரலாறென்பதே ஒரு பாபப் பெரும்வெளியல்லவா? – ஒவ்வொரு மானுடனும் பொறுப்பேற்பதா? அதன்பின் எவன் 'நான்' என்று எண்ணி ஒரு மலரைத் தொடத் தைரியம் பெறுவான்? நாஸிகளை தண்டித்து விட்டார்கள். அவர்கள் செய்த குற்றம் மானுட குலத்திற்கு எதிரானது. ஒரு சமூகமோ, தேசமோ மானுட குலத்திற்கு எதிராக செயல்படுமெனில் அதிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மானுடகுலத்தின் பொருட்டு அதை எதிர்க்கக் கடமைப்பட்டுள்ளார்கள். நீதி என்பது மானுட நீதியே. வரலாற்றில் முதல்முறையாக மானுட நீதியை ஒரு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஸ்டாலினும், ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் மகிழ்ந்து கொண்டாடலாம். ஒருவேளை நாஸிகள் வென்றிருந்தால் ஸ்டாலினும், ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் மானுட விரோதிகள் ஆகியிருப்பார்கள். அணுகுண்டு போட்டு கீழைத்தேயத்தைப் பொசுக்கிய அமெரிக்காவின் ஒவ்வொரு குடிமகன் மீதும் பாபபாரம் ஏற்றப்பட்டிருக்கும். இதைத்தான் வரலாற்றின் நியதி என்கிறீர்களா? அது பத்துவருடம்கூட நீடிப்ப தில்லையே. பத்து அறிவுஜீவிகள் நினைத்தால் அதை மாற்றிப் புனைந்துவிடலாமே. என் தலை அதிர்கிறது. என்னால் இந்த இரவில் என் உடலின் கனத்தைத் தாங்கவே முடியவில்லை. இந்த வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால், இந்தத் தனிமனித மன எழுச்சிகளுக்கும் அப்பால், மானுட குலத்திற்கென நிரந்தரமான தார்மீகம் ஏதும் இல்லையா? அதை எங்கு கண்டடைவது? வரலாற்றைத் திரும்பிப் பார்க்கிறேன். என்னால் எந்த ஒழுங்கையும் காண முடியவில்லை. அப்படியானால் மனிதர்கள் இத்தனை நூற்றாண்டுகளாக வாழ்வைக் கடைந்து எடுத்தது என்ன? ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் இன்னும் எண்ணற்ற போர்க்களங்களிலும் விஷம் கொட்டியதே. அப்படியானால் அமுதம் எங்கே? இல்லை விஷம் மட்டும்தானா? எனக்குத் தெரியவில்லை தோழர். எனக்கு எதுவுமே தெரியவில்லை. என் கண்ணால் அள்ள முடிந்ததெல்லாம் இருள்தான். வரலாற்றின் இருள். இலக்கியத்தின் இருள். ஞானத்தின் இருள். அப்படியானால் நான் எதன் பொருட்டு சாவது? என் வாழ்வை வாழ்வு மூலம் அர்த்தப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எனவே சாவு மூலம் அதை முழுமைப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். எதை எண்ணிச் சாக முடியும்? இந்த

தார்மீகங்களும், இந்த வரலாற்றுத் தருக்கங்களும் என்னை மூடனாக, ஏமாளியாக, ஆக்கிவிடாதென்பதற்கு யார் உத்தரவாதம்? ஆனால் தனிமையில் சுருங்கிச் சரிகையில் என் உள்ளிருந்து ஒரு மெல்லிய குரல் ஊறி எழுகிறது. இறுதி நம்பிக்கையையும் இழந்து, வெறுமை முள் சரணடைந்துவிட்ட பிறகு அந்தக் குரல் மெல்லிய முணுமுணுப்பாக எனக்குக் கேட்கிறது. அது புகாரினைப் பிடித்து மெல்ல என்பால் தள்ளி, துயரமும் ஆதங்கமும் நிரம்பிய தாய்மைக் குரலில், 'இவனை உன்னிடம் ஒப்படைக்கிறேன். இனி நீயன்றி இவனுக்கு யாருமில்லை' என்கிறது. புகாரின் மிரண்ட, துயர் நிரம்பிய பார்வையுடன் என்முன் நிற்கிறார். அவரிடம் நான் எந்த சித்தாந்தத்தையும் கூற முடியாது. தோழர், உங்கள் வரலாறு அவரைக் கைவிட்டுவிட்டது. அந்த நாடகப் பரப்பில் அவர் இல்லை. அவர் பொருட்டு என்னால் வாதிட முடியாது. அவருக்காக நான் சாகலாம். அதுவன்றி வேறு எதற்கும் பொருள் இல்லை...'

''நீங்கள் சொல்ல விரும்புவதை உரக்க நேரடியாகவே சொல்லலாம்'' என்றார் தீர்த்தமலை ஆங்கிலத்தில், மிகக் கடுமையர்க.

அருணாசலம் திடுக்கிட்டு ''இல்லை'' என்றான்.

'' இப்ப நீங்க சொன்னதைச் சத்தமா சொல்லுங்க.''

''நான் சொல்லலை.''

''நான் பேசிட்டிருந்தப்ப நீங்களும் வேகமா உதட்டுக்குள்ளார பேசிட்டிருந்தீங்க.''

''நானா, இல்லையே.''

''உங்க உதடுகள் அசைஞ்சிட்டிருந்தது. வேகமா பேசற மாதிரி.''

அருணாசலம் மலங்க விழித்தான்.

''நான் சொன்னதை நீங்க ஏத்துக்கிட்டிங்களா. இல்லையா?''

''எனக்குத் தெரியலை தோழர்.''

''உலக்கை மூடு! டேய், இந்த வேஷமெல்லாம் எனக்ககிட்டே வேண்டாம் கேட்டியா? தேவடியா மகனே, விளையாடறியா? உங்கிட்ட விளையாடவா இங்க வந்திருக்கேன்?''

'மனநிலை பிசகினவன் என்ற பிரச்சாரம் என்னைப்பற்றி பெரிதும் எடுபடுகிறது என்பதை நானறிவேன். கட்சியில் இருந்தபோதே என்னை அரைவட்டு என்றுதான் சொல்வார்கள். ஏனெனில் நான் மீதி அனைவரையும்போல இல்லை. உண்மையில் மனநிலை பிசகுவது என்றால் என்ன? எங்கோ சில வாசல்கள் திறந்து கிடப்பது. கொல்லைப் பக்கம், அல்லது கூரையில். நாம் விரும்பினால் அதனூடாக சிறிது வெளியேறி புதிய காற்றையும் ஒளியையும் ஏற்றுத் திரும்பலாம். மனநிலை பிசகியவன் வேறு, பைத்தியம்வேறு. பைத்தியம் வெளியேறி [illegible]டவன். பிறகு அவன் திரும்புவது எளிதல்ல. அவனைப் பயமுறுத்தி

மூடமாக்கித் திரும்பிக் கொண்டுவந்து அடைக்கலாம். உள்ளே அவன் கைதியாக எஞ்சுவான். ஆனால் மனநிலை பிசகியவன் இங்கு இருக்க முடியாதவன். அங்கு போகவும் பயப்படுபவன்... அவனுக்கு மனம் என்பது முடிவற்ற ஓர் ஊசலாட்டம். முடிவடையாத கூச்சல்...மன்னிக்க வேண்டும் தோழர்.'

நாராயணன் வண்டியின் பின்புறம் அமரச் செய்து திரும்பக் கூட்டி வருகையில் அருணாசலம் தன் மனதின் சொற்பெருக்கு நிதானமடைவதை உணர்ந்தான். நூரம்பர்க்கில் அணுகுண்டு வெடிக்கிறது. யந்திரம் மூலம் அதை அள்ளுகிறார்கள். ஸ்டாலினுக்கு கட்சிக் கார்டு மறுக்கப்படுகிறது. பேச்சிப் பாறையருகே ஒரு அணுகுண்டை யாரோ கழுவுகிறார்கள். நீர்த்தமலை அதைக் கண்டிக்கிறார். ஆனால் யாரது அழுவது? ஏதோ தீய்ந்து மணக்கிறது. மாமிசம். இறைச்சிப் பொரியலா? ஏதோ வாசல் கிரீச்சிட்டு சாத்தப்படுகிறது. யந்திரங்களை இயக்கப் புத்தகங்கள் வேண்டும். ஆனால் மனநிலை பிறழ்ந்தவர்களை புத்தகங்கள் சாப்பிடுவதில்லை. யாரோ மீண்டும் ஒரு கதவை கிரீச்சென்று முடிவில்லாத ஒலியுடன் சாத்தினார்கள். மூத்திர மணம் அடிக்கிறது. யாரோ ஒரு மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து தூங்குகிறார்கள். அது அருணாசலம்தான். வீடு வந்தபோது அருணாசலம் அப்படியே சாய்ந்து தூங்கிவிட்டிருந்தான்.

◆

5

அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய நீலகண்ட பிள்ளை அவர்களுக்கு,

முந்தைய கடிதத்தில் ராமசுந்தரம்பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அவரைப்பற்றி மேலும் நிறைய எழுத வேண்டும். ஒரு விஷயம்பற்றி மட்டும் இப்போது கூறுகிறேன், இது சந்தர்ப்பம் என்பதால்.

புகாரின் பற்றி என்னிடம் பேச வந்தவர்களில் பாலசுப்ரமணியமும் ராமசுந்தரமும் எடுத்த நிலைப்பாடுகள் மாறுபட்டவை. பாலுவைப் பொருத்தவரை ருஷ்யா சோஷலிசக் கட்டுமானம் நடந்துகொண்டிருக்கும் ஒரு பெரும் தேசம். "அங்கு புரட்சி நிகழ்ந்த கணம் முதல் முதலாளித்துவச் செய்தி ஊடகங்கள் அவதூறுகளைக் கக்கிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்கா லெனினை ஜெர்மன் உளவாளி என்று சித்தரிக்கும் ஸஸ்ஸன் ஆவணங்களை பொய்யாகத் தயாரித்து வெளியிட்டதை மறக்க முடியுமா? சோவியத் நாட்டின் ஒவ்வொரு புரட்சி வீரருக்கும் எதிராக எண்ணற்ற கட்டுக்கதைகளை மேற்கத்தியப் பத்திரிகைகள் இடைவிடாது எழுதின. அங்கு நடந்தது ஒரு போலிப் புரட்சி என்றன. அரசின் ஒரு பலவீனமான தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு போர்முனையிலிருந்து திரும்பிய துருப்புகளும் சில தொழிலாளர்களும் சேர்ந்து தலைநகரை கைப்பற்றிக் கொண்டனர். சோவியத் மக்களுக்கு அதில் எந்தவிதமான பங்கும் இல்லை என அவை கூறின. ஒரு வாரத்தில் புரட்சி நசுக்கப்படும் என்று தெரிவித்தன. குளக்குகளையும் வெண்படையினரையும் தேசபக்த சக்திகள் என்றும், கிறிஸ்தவப் போராளிகள் என்றும் சித்தரித்தன. எதிர்ப்புரட்சி தோற்கடிக்கப்பட்டபோது நேரடியாகப் படைகளை அனுப்பவும் அவை தயங்கவில்லை. புரட்சியைத் தோற்கடிக்கரஷ்ய மண்ணில் யாங்கிப் படைகள் வந்திறங்கியதை மறக்க முடியுமா? சதி, நாசவேலை, துரோகம், பிரிவினைப் பிரச்சாரம், பொருளாதாரக் கெடுபிடி, நேரடித் தாக்குதல் என அனைத்து

முறைகளையும் மேற்கொண்டு சோவியத் புரட்சி அரசை அழிக்க முதலாளித்துவம் முயன்றது. ஏனெனில் ரஷ்யப் புரட்சி தங்கள் தேசங்களிலும் எதிரொலிக்கும் என அது தங்களுக்கு மிக அபாயகரமானது என, அவர்கள் அறிவார்கள். தோழர் சிந்தித்துப் பாருங்கள். அந்த சோதனைக் காலகட்டத்தில் உலகமே திரண்டு எதிர்த்தபோது இரும்புமனம் கொண்ட ஒரு தலைவர் மட்டும் இல்லையென்றால் இன்று உலகில் சோஷலிசம் இருந்திருக்குமா?'' பாலன் கேட்டார்.

நானும் அவரும் அன்று அனந்தன் கால்வாயின் கலுங்குமீது அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அந்தி மயங்கும் வேளை. சுங்கான் கடை வயல்வெளி அறுவடைக்குப் பிறகு தவிட்டு நிறமான கட்டங்களாகப் பரந்து கிடந்தது. அப்பால் நீலநிறமாக வேளிமலை எழுந்து, மௌனமாக மேகமூடிசூடி நின்றிருந்தது. கொக்குகள் துல்லியமான வானில் மிதந்தபடி சென்றன. அந்தநாள் நன்றாக ஞாபகம் இருக்கிறது. அந்த அமைதியான சோகம். அது எனக்கு வேறு எதையோ மௌனமாக வலியுறுத்தியது.

''நீங்கள் சொல்வது எல்லா ஸ்டாலினிஸ்டுகளும் கூறும் அதே விஷயம்தான் தோழர்'' என்றேன். ''இரும்பு மனம் கொண்ட ஸ்டாலின் இல்லையேல் சோஷலிச அமைப்பே இல்லாமலாயிருக்கும் என்றீர்கள். என் சந்தேகம் அது சோஷலிச அமைப்புதானா என்றுதான். படுகொலைகளின், பேரழிவுகளின் கதைகள் வெளிவரும்தோறும் என் அடிவயிறு கலங்குகிறது. உங்களுக்கு அந்தப் பதைப்பு சற்றும் இல்லையா? முதன் முதலாக கார்க்கியின் மரணச் செய்தி - அதில் இருந்த மர்மம் - என்னை அடைந்தபோது ஏற்பட்ட பதைப்பு அது. அன்றிரவு என்னால் தூங்க முடியவில்லை. செக்கோஸ்லோவாகியாவிலிருந்து தப்பி லண்டனில் அபயம் புகுந்த நிருபர் ஒருவர் எழுதிய செய்திக் கட்டுரையின் மறுபிரசுரம் நான் படித்தது. அது ஒருவகையிலும் ஆதார பூர்வமல்ல. இன்றும் கார்க்கியின் மரணம் இயற்கையானது என்றுதான் ரஷ்யா கூறுகிறது. தற்கொலையாக இருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். எனக்கு எப்படியோ - விளக்கவே முடியாத ஓர் உள்ளுணர்வால் - தெரிந்துவிட்டது. அது கொலைதான். உடனே அந்த அமைப்பு மீது தீவிரமான அச்சம் ஏற்பட்டுவிட்டது. பிறகு எத்தனை குற்ற விசாரணைகள், தண்டனைகள், படுகொலைகள், தற்கொலைகள், நாடு கடத்தல்கள். இன்று அங்கு உள்ளது பெரியாவிசமோ, ஸ்டாலினிசமோ அல்ல தோழர். பெரியாவிசம். ஆதார உணர்ச்சி. அந்த தேசத்தை ஆள்கிறது. அச்சமே அதன் ''

''நீங்கள் எழுத்தாளர். உங்களுக்கேயுரியமுறையில் மிகைப்படுத்திக் கொள்கிறீர்கள்'' என்று பாலு சிரித்தபடி சொன்னார். ''கார்க்கியுடன் நீங்கள் உங்களை மானசீகமாக அடையாளம் கண்டுவிட்டீர்கள் போலும். அவரது மரணம் பற்றிய அவதூறுச் செய்தி உங்களை அசைத்துவிட்டது. தொடர்ந்து சோவியத் ரஷ்யாவுக்கு எதிரான எல்லா

அவதூறுகளையும் நம்பும் நிலைக்குச் சென்றுவிட்டீர்கள்... கார்க்கி இறந்த நிமிடம்வரை புரட்சியரசுக்கு ஆதரவாளனாகவே இருந்தான் என்பதை மறக்க வேண்டாம். அலெக்ஸி டால்ஸ்டாயும், ஃபெதினும், சிங்கிஸ் ஐத்மாத்தவும், ஷோலகோவும், செராபிமோவிச்சும், பர்மனோவும் உங்களுக்குப் படைப்பாளிகளாகப் படவில்லையா? அவர்கள் சோவியத் நாட்டில் சோஷலிசக் கட்டுமானத்தில்தானே ஈடுபட்டிருக்கிறார்கள்?''

''அவர்கள் பயமுறுத்தப்பட்டிருக்கலாம்.''

''படைப்பாளிகள் கோழைகள் என்கிறீர்களா?''

''படைப்பாளிகளைப்பற்றி ஒருவிதமான தீர்மானத்துடனும் என்னால் பேச முடியவில்லை. ஒரு சிறிய அநீதிக்கு எதிராக ஒரு படைப்பாளி சாகவும் கூடும். பெரிய அநீதி அவன் கண்களில் படாமலேயே போய்விடலாம். நியாயத்துக்காகத் தூக்கிலேறிய பெரும் படைப்பாளிகளும் உண்டு. அநியாயத்திற்குத் துணைநின்ற பெரும் படைப்பாளிகளும் உண்டு. அவர்களை விளக்கிவிட முடியாது.''

''உங்களிடம் பேச முடியாது தோழர். உங்களால் சாம்ராஜ்யத்துவ அவதூறுகளை எந்தவித ஆதாரமும் இன்றி நம்ப முடிகிறது. சோஷலிச அமைப்பின் திட்டவட்டமான ஆதாரங்களைக்கூட நம்ப முடியவில்லை.''

''இருக்கலாம். என் உள்மனம்...''

''உள்மனம்; மண்ணாங்கட்டி. உங்களுடையது வெறும் அகங்காரம் விசேஷமான உள்ளுணர்வுள்ள அபூர்வ மனிதராக உங்களைக் காட்டிக் கொள்ள விரும்புகிறீர்கள்...''

அந்தச் சொற்கள் என்னை அறைந்தன. அதை உண்மை என என் மனம் உடனே ஏற்றது. தளர்ந்துவிட்டேன். ''தோழர் அங்கே என்னதான் நடக்கிறது?''என்றேன்.

''அங்கே அமைதியான முறையில் சோஷலிசக் கட்டுமானம் நடக்கிறது.''

''புரட்சியின் முதற்கட்டத் தலைவர்களில் எவரும் உயிரோடில்லை. மக்களில் பாதிப் பேர் கட்டாய உழைப்பு முகாம்களிலும் வனை முகாம்களிலும் இருக்கிறார்கள். பல லட்சம் பொதுமக்கள் கொல்லப் பட்டார்கள். ஜார்ஜியாவிலும் உக்ரேய்னிலும் பஞ்சம் பரவி மக்கள் ஆயிரக்கணக்காக செத்து மடிகிறார்கள்...''

''எல்லாம் பச்சையான அவதூறு. நான் நான்கு முறை ரஷ்யாவிற்குப் போனேன். மாஸ்கோவில் மட்டுமல்ல, சைபீரியாவிலும் பயணம் செய்தேன். அங்கு கண்டதெல்லாம் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான

கட்டுப்பாடுள்ள, மக்களை. பெரும் தொழிற்சாலைகளில் உற்பத்தி நடக்கிறது. பெரிய ரயில்பாதைகள், எங்கும் மின்சார வசதி, அற்புதமான குடியிருப்புகள். பூங்காக்கள், கல்வி நிலையங்கள். மண்ணில் ஒரு சொர்க்கம் உண்டு என்றால் அது ரஷ்யாதான். இதில் எனக்கு சந்தேகமே இல்லை. எங்கு வேண்டுமானாலும் இதை நான் சத்தியம் செய்ய முடியும்.''

''படுகொலைகள்?''

''மறுபடியும் அதையே சொல்கிறீர்கள். சுதந்திர இந்தியா கோட்சேயைத் தூக்கிலிட்டதே, அது படுகொலையல்லவா? சில துரோகிகள் கொல்லப்பட்டார்கள். அதுவும் நீதிமன்றத்தில் முறைப்படி விசாரிக்கப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டு, அதை அவர்களும் ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு. அவர்களே குற்றங்களை ஏற்றுக்கொண்ட பிறகும் முதலாளித்துவ செய்தி நிறுவனங்கள் அவர்களை நிரபராதிகள் என்கின்றன. பொது மக்களிலும் சிலர் கொல்லப்பட்டனர், மறுக்க வில்லை. புரட்சிக்கு எதிரிகளும், கலகக்காரர்களும், ஏன் ஐந்தாம்படை யினரும் அங்கு இருந்தனர். அவர்களைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்த அவகாசம் இல்லாதபடி போரில் அந்த தேசம் அலைக்கழிக்கப்பட்டது. போரில் இருக்கும் தேசம் சில கடுமையான நடவடிக்கைகளை எடுத்தே ஆக வேண்டும். ரஷ்யாவில் பஞ்சமா? ருஷ்யா கடந்த பதினெட்டு வருடங்களாக உணவுத் தானியத்தை ஏற்றுமதி செய்கிறது. வேண்டு மானால் ஆதாரம் தருகிறேன். உங்கள் முதலாளித்துவ இதழ்களில் இருந்தே ஆதாரம் தருகிறேன்...''

பாலு பேச ஆரம்பித்தால் கடைசிவரை பேசிவிடுவார். என் மனமோ இருண்டபடியே வந்தது. சொல்ல முடியாத ஒரு துக்கத்தில் வேளிமலை முகடுகள் மௌனமாக மூழ்கி மறைவதைப் பார்த்தபடி இருந்தேன். பாலு பொய்யரல்ல. அவரது மனிதாபிமானம் கேள்விக்கு அப்பாற்பட்டது. சுயநலம் தீண்டாத மகத்தான மனிதர் அவர். இப்போதும் அதையே கூறுகிறேன். அவர் பொய் சொல்லவில்லை என அறிவேன். ஆனால் எனக்கு ஏதோ ஒரு விபரீத மந்திரம் பூமியின் மெய்கள்மீதெல்லாம் யாருமறியாது பொய்யைக் கலந்துவிட்டது என்றும், இனி எவருமே பொய்யையும் மெய்யையும் பிரித்துவிட முடியாது என்றும் பட்டது.

பிறகுதான் ராமசுந்தரம் வந்தார். முதல்நாள் இது பற்றி எதுவுமே பேசவில்லை. மறுநாள் இரவு உணவுக்குப் பிறகு மெல்லப் பேச்சு வளர்ந்தது. ''எனக்கும் இதே சஞ்சலங்கள் இருக்கின்றன தோழர்'' என்றார். ''இந்தப் படுகொலைகள்... ட்ராட்ஸ்கியின் மரணம் என்னை உள்ளூர மிகவும் பாதித்துவிட்டது. எப்போர்ப்பட்ட அறிஞன்! எப்போர்ப்பட்ட அமைப்பாளன்! கோடரியால் பின்மண்டை பிளக்கப் பட்டுச் சாவதென்றால்... பூர்ஷுவாக்களின் குண்டுகள் அவனைக் கொன்றிருக்கலாம். தொழிலாளி வர்க்கத்துக்காக சிந்தித்த மூளை...

வெண்ணை போல சிதறி மண்ணில்... என்னால் மறக்கவே முடிய
வில்லை. கொன்றே ஆக வேண்டுமெனில் அவனுக்கு விஷம் வைத்திரு
கலாம். சாக்ரடீஸுக்குத் தந்த அதே விஷம்...'' காரியாலய அறையில்
இருவரும் வெகுநேரம் அப்படியே மௌனமாக அமர்ந்திருந்தோம்.

''ஒன்றும் புரியவில்லை'' என்றார் ராமசுந்தரம். ''தலைமை
வரிசையில் பதினாறாவதாக இருந்த இந்த மனிதர் எப்படி முதல்வர்
ஆனார்? அத்தனை புரட்சி நாயகர்களையும் எப்படி அவரால் ஒதுக்கித்
தள்ளிவிட முடிந்தது? எப்படி அதைத் தொழிலாளி வர்க்கமும்,
செம்படையும், சோவியத் தேசமும் ஒத்துக் கொண்டன.'' ராமசுந்தரம்
பதறித் தவிக்கும் கண்களுடன் என்னைப் பார்த்தார். ''அப்படியானால்
அங்கு வேறு ஏதோ ஒரு சக்தி வேலை செய்கிறது. கருத்துகளைவிடப்
பெரிய சக்தி. அந்த சக்திமீது அவருக்கு ஆதிக்கம் இருக்கிறது.
கண்ணுக்குத் தெரியாத அந்த சக்தி என்ன?''

''என்ன?''

''அது படித்தவர்களை, சித்தாந்திகளை, கலைஞர்களை பலி
கேட்கிறது. படைப்பாளிகளை அழிக்கிறது.''

எனக்கு பயம் மார்பை அடைத்தது.

''அதை நாம் இங்கும் பார்க்கலாம் தோழர். தொழிலாளர்களுக்கு
அறிவின்மீதுள்ள அவநம்பிக்கையும், அச்சமும், ஏளனமும் கலந்த
உணர்வு. அறிவுக்கு எதிரான சக்தி அதுதான். அதுதான் அந்த மனிதனைத்
தன் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தது. இங்கும் அதுவே தங்கள்
பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அதிகாரத்தை அளிக்கிறது.''

''பாலன்?''

''பாலன், கெ.கெ.எம்., சிவலை பழனிச்சாமி... எத்தனை பேர்.
எனக்குத் தோன்றுகிறது, உலகை ஆக்கும் அடிப்படைச் சக்தியே
அதுதான் என்று. அதுதான் செங்கிஸ்கானையும், அலெக்சாண்டரையும்,
தைமூரையும், நெப்போலியனையும் இயக்கியது. கெதே அதை
எலிமென்டல் பவர் என்கிறார். நாம் நேர் எதிராகக் கற்பனை செய்து
கொள்கிறோம். மார்க்ஸும், எங்கல்சும், லெனினும், ஹெகலும் எல்லாம்
அந்த சக்தியால் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்ட கருவிகளே. அந்த
கருவிகள் பயன்படுத்தப்பட்ட பிறகு தூக்கி வீசப்படுகின்றன.
பயன்படுத்தப்படுதலினூடாக அழிகின்றன. பயனற்றவை அழிக்கப்
படுகின்றன. இதில் புகாரின் யார்?''

''புகாரின் எதிர்த்தார்...''

''இல்லை'' என்றார் ராமசுந்தரம். ''புகாரினின் வாழ்க்கையைக் கூர்ந்து
கவனியுங்கள். புரட்சியின் முக்கியமான தளபதிகளில் ஒருவர் அவர்.
பெரும் படிப்பாளி. தத்துவ அறிஞர். கட்சியில் மூன்றாம் இட அந்தஸ்

இருந்தவர். ஆனால் 1924-ல் லெனின் மறைவுக்குப் பிறகு கட்சியில் அதிகாரப் போட்டி ஏற்பட்டபோது அவர் டிராட்ஸ்கியையோ, காமனேவையோ ஆதரிக்கவில்லை. அவர் ஆதரித்தது ஸ்டாலினை. பதவிக்கு வந்த ஸ்டாலின் மற்றவர்களை ஒழித்துக் கட்டிய போதெல்லாம் புகாரின் மௌனம்தான் சாதித்தார். ஏன், பல சமயம் ஆதரித்தார். புகாரினின் நெருங்கிய நண்பரான யகோதா உள்துறை அமைச்சராக இருந்தபோதுதான் சோவியத் தேசத்தின் வீரபுத்திரர்களில் பாதிப்பேர் ஸ்டாலினால் கொல்லப்பட்டனர். புகாரின் ஸ்டாலினை எப்போது எதிர்க்க ஆரம்பித்தார்? 1934-ல் தேச நிர்மாணத் திட்டத்தில் தன்னுடைய முன்வரைவு நிராகரிக்கப்பட்டபோது. ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டத்தையும், பலாத்கார கூட்டுப் பண்ணை முறையையும், குளக்குகள் அழித்தொழிக்கப்பட்டதையும் மூன்றாவது புரட்சி என்று வர்ணித்தவர் புகாரின். அதற்கான திட்டங்களை வகுத்துத் தந்தவர்கள் புகாரினும், தாம்ஸ்கியும், பாப்பா காலினினும், ரிகோவும். சொல்லப் போனால் ஸ்டாலினின் பிரம்மாண்டமான அரசு யந்திரத்தை வடிவமைத்து இயங்க வைத்தவர்கள் இவர்கள். அந்த இயந்திரத்தின் சாதனைகளுக்கும் அழிவுகளுக்கும் காரணம் இவர்கள்தான். இவர்களுடைய சேவையை அந்த ஆதார சக்தி – எலிமென்டல் பவர் – பயன்படுத்திக் கொண்டது. பணி முடிந்ததும் ஒழித்துக் கட்டியது. இதல்லவா வரலாறு?''

''புகாரின் முன்வைத்த திட்டத்தில் விவசாயிகளை கூட்டுப் பண்ணையிலிருந்து விடுவிக்கவும், கட்டாய உழைப்பு முகாம்களை ரத்து செய்யவும் கோரிக்கை இருந்தது தோழர்'' என்றேன்.

''ஆம், அதனால் என்ன பயன்? பேரழிவு நடந்துவிட்டது. ஸ்டாலினுக்கு திட்டங்களை வகுத்துத் தந்தபோது அது ஏற்படுத்தும் பேரழிவுகளை ஊகிக்கும் திறன் அவர்களுக்கு இருக்கவில்லை. அழிவைக் கண்டு பதறி அவர்கள் மாற்றுத் திட்டத்தைத் தயாரித்தனர். அங்குதான் நாங்கள் மூடத்தனம் அவர்களுக்கு உறைத்தது. அவர்கள் தங்கள் மூளைத்திறன் குறித்துப் பெருமிதம் கொண்டிருந்தனர். அறிவுத்திறன் மூலம் மாறுடசக்தியை கட்டியாள்வதாகப் பகற்கனவு கண்டனர். அந்த உத்தியின் ஆயுதமாகவே தங்கள் மூளைகள் இயங்குவதை அவர்கள் உணரவில்லை. அதற்குக் குறுக்காக அவர்களுடைய மூளைத்திறன் வந்த போது அச்சக்தி அவர்களை நசுக்கி எறிந்தது. அது வரலாற்றின் இயங்குமுறை. இதில் நம்முடைய தர்மநியாயங்களுக்கு என்ன இடம்?''

''நீங்கள் புகாரின் கொலையை நியாயப்படுத்துகிறீர்களா?''

''நமது நியாயப்படுத்தல்களோ, உள்ளக்கொதிப்புகளோ வரலாற்றுக்கு ஒரு பொருட்டே அல்ல என்கிறேன். லட்சக்கணக்கான மனிதர்கள் அழிக்கப்பட்டபோது பதறாத என் மனம் ட்ராட்ஸ்கி கொலையுண்டபோது பதறியது. ஏன்? நான் அவனில் என்னைக் கண்டேன். அவன் மரணத்தில் என் முடிவை ஊகித்தேன். ஆனால்

இங்கு, நமது தேசத்தில், எலிமென்டல் பவர் ஒருபோதும் கம்யூனிஸ்டுகள் கைக்கு வரப் போவதில்லை. அது இங்கு பாமர விவசாயிகளிடம் இருக்கிறது. அவர்கள் ஆலைத் தொழிலாளர்களைப் போல இயந்திரங்களல்ல. அவர்கள் மண்ணாலானவர்கள். ஆகவே என் தலை பிளக்கப் போவதில்லை. என் மூளை வெண்ணைபோல வழிந்து கிடக்காது. ஆனால் காய்க்காத மரம்போல நான் நிற்பேன்; முற்றி, இலையுதிர்ந்து, பட்டு உலர்ந்து போவேன். தடயமின்றி அழிவேன். அதுதான் என் விதி."

அந்த வெளிப்படையான பேச்சு என் மனதை உலுக்கியது.

"அசந்து போய்விட்டாயா?" என்றார் ராமசுந்தரம் வருத்தமான புன்னகையுடன். "உலக வரலாற்றை எடுத்துப் பார்க்கும்போது எனக்கு மேலும் மேலும் தெளிவாகியபடியே வரும் விஷயம் ஒன்றுண்டு. பூமிமீது கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். அவர்களை இயக்குவது இச்சையும், உடலின் சக்தியும். அவையிரண்டும் இணைந்த இயக்கமே நான் கூறும் ஆதார சக்தி. வரலாறு என்பது இந்த இச்சா சக்தியின் கொந்தளிப்பும் பீறிடலும் மட்டுமே. அனைத்து அரசுகளும், கருத்துகளும், நிறுவனங்களும், நம்பிக்கைகளும் அதன் விளைவுகள் தான். வன்முறையே அதன் முதல் ஆயுதம். தருக்கம் அடுத்த ஆயுதம். ஒரு பக்கம் அறிஞர்களையும் மறுபக்கம் வீரர்களையும் அது உருவாக்கியபடி உள்ளது. ஆனால் எப்போதும் வீரர்களே அதன் பிரியத்துக்குரிய குழந்தைகள். ஸ்டாலின் யார்? அவன் மகா பீட்டர் அல்லவா, சீசர் அல்லவா, அலெக்சாண்டர் அல்லவா, அர்ச்சுனன் அல்லவா? அவர்கள் என்றும் இருப்பார்கள். கோடிக் கணக்கான மக்களின் இச்சா சக்தியின் பிரதிநிதிகள் அவர்கள். அவர்கள் வெளிப் படுத்தும் குரூரம் அம்மக்களின் இச்சா சக்தியின் மூர்க்கமேயாகும். ஸ்டாலினின் கொடுமையை இங்குள்ள ஸ்டாலினிஸ்டுகள் மூடி மறைக்கிறார்கள் என்கிறாயா? இல்லை. அவர்கள் அதை ரசிக்கிறார்கள். அதில் மானசீகமாகப் பங்கு பெறுகிறார்கள். ஒரு சைபீரிய வதைமுகாமின் தலைமைக் கமிசாராக பாலன் நியமிக்கப்பட்டால் அவர் ஸ்டாலின் மகிழ்ந்து கட்டித் தழுவும்படியாக வேலை செய்வார்."

"நீங்கள் வரலாற்றை முற்றிலுமாக இருட்டடிப்பு செய்கிறீர்கள். புத்தனும் ஏசுவும்..."

"காந்தியும்..."

நான் மௌனமானேன்.

"அவர்கள் என்ன ஆனார்கள்? இன்றைய ராணுவ இந்தியாவின், தேசிய வெறியின், முதலாளித்துவ அமைப்பின் வெறும் கருவிதான் காந்தி. அத்தனை அறிஞர்களும் வெறும் கருவிகள்தான்."

"ஆனால் நீங்கள் ஸ்டாலினிசத்தை உங்கள் கருவியாகப் பயன்படுத்துகிறீர்கள்."

"இல்லை, நான் அதனுடன் கூடுமானவரை இசைந்து போக முயல்கிறேன். அதற்கு என் சேவை முற்றிலும் முடிந்து போகாமலிருக்க வேண்டுமெனப் பிரயத்தனப்படுகிறேன். இல்லையேல் என்னை அது உதறிவிடும். வெட்டி அழித்துவிடும்." ராமசுந்தரம் பெருமூச்சுவிட்டார். "உனக்கே தெரியும். கெ.கெ.எம். போன்ற சில விசுவாசிகளுக்கு என்மீது உள்ள மாயக் கவர்ச்சியினால்தான் கட்சியில் எனக்கு இடம் இருக்கிறது. நான் பேசினால் மக்கள் செவி கொடுப்பதில்லை. ஸ்டாலினிஸ்டுகள்தான் இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் பிரியத்துக்குரிய தலைவர்கள். முண்டா வரை ஜிப்பா கையைச் சுருட்டி விட்டுக்கொண்டு, மூர்க்கமான சக்தியுடன் பேசும் ஒரு ஸ்டாலினிஸ்டுதான் நம் தொழிலாளியை உளக்கமும் நம்பிக்கையும் கொள்ள வைக்கிறான்."

"அதற்காக நீங்கள் உங்களை மிகப்பெரிய ஸ்டாலினிஸ்ட் என்று காட்டிக் கொள்வதா?"

"புகாரினும் அதைத்தான் செய்தார்."

"புகாரின் அறிந்திருக்கவில்லை. தன் திட்டங்களில் உள்ள மானுட அழிவை உக்ரேனில் மேற்கொண்ட ஒரு ரயில் பயணத்தின்போதுதான் அவர் கண்டார். அதன்பிறகு ஒரு கணம்கூட அவர் ஸ்டாலினை ஏற்கவில்லை. தனக்குப் பெரும் அழிவு ஏற்படக் கூடும் என்று தெரிந்து கொண்டே ஸ்டாலினை எதிர்த்துப் போராடினார்."

"சரி, அதனால் என்ன ஆயிற்று?"

"அதல்ல இங்கு விஷயம். அவர் போராடினார் என்பதுதான்."

"இல்லை, புகாரின் அழிந்தார். ஸ்டாலினிசம் அப்படியே உள்ளது. இனியும் புதுப்புது ஸ்டாலின்கள் வழியாக அது தொடரும். ஸ்டாலின் வரலாற்றுசக்தி, மலைகளைப்போல. அதன்மீது கூழாங்கற்களை விட்டெறிவது அசட்டுத்தனம். புகாரின் மோதி மண்டையை உடைத்துக் கொண்ட மூடர்."

"பின்பு எதில் அர்த்தம் உள்ளது? மண்டியிடுவதிலா? மனச்சாட்சியை விற்றுப் பிரசங்கம் செய்வதிலா?"

"ஆம். இதில்தான் இருத்தல் சாத்தியம். எனக்குத் தற்கொலைகளில் நம்பிக்கை இல்லை."

"ராமசுந்தரம், உங்களுக்கு என்ன வேண்டும்? பணமா, புகழா, அதிகாரமா? இல்லை வரலாற்றில் ஓர் இடமா? என்ன வேண்டும் உங்களுக்கு? இதற்கெல்லாம் ஆசைப்பட்டவராக நீங்கள் இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்கவே வேண்டாமே!"

ராமசுந்தரம் முதன்முறையாகத் தன் கட்டுப்பாட்டை இழந்தார். அவர் முகம் இருண்டது. வேறுபக்கம் திரும்பிப் பேசாமல் அமர்ந்திருந்தார். எனக்கு ஆவேசம் பொங்கி வந்தது "சொல்லுங்கள் தோழர்..."

"அதைப்பற்றி இனிமேல் பேச வேண்டியதில்லை."

"சொல்லுங்கள், உங்களுக்கு என்னதான் வேண்டும்?"

ராமசுந்தரம் தடுமாறிய குரலில் "நிறைய இழந்தாயிற்று. நிறைய. எவ்வளவு என்று கணக்கிட்டால் மனம் பதறுகிற அளவுக்கு. மிக முக்கியமாக இளமையைத் தொலைத்தாயிற்று. கிடைத்தது என்ன? ஆனால் என்னால் திரும்ப முடியாது. முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் அர்த்தமற்ற வெட்டவெளி மட்டும்தான் எனக்கு மிச்சம். இப்படியே இருந்தால் மாற்றம் மூலம் உருவாகும் இம்சைகள் இல்லை. இதில் போலித்தனமான ஒரு தற்காலிக மகிழ்ச்சியும் இருக்கிறது. என்னைத் தோழர் என்றும் தலைவர் என்றும் கூறும் பல்லாயிரம் மக்கள் இன்று இருக்கிறார்கள்."

"அதற்காகவா?"

"ஆம், அதற்காகத்தான். அது மட்டும்தான் சாத்தியமான ஒரே இன்பம் இனி."

"அதற்கு நீங்கள் மேலும் மேலும் தவறு செய்ய வேண்டியிருக்கும். வரலாறு உங்களை..."

"வரலாற்றில் எனக்கோ, உனக்கோ, புகாரினுக்கோ ஒரு மயிரானுக்கும் இடமில்லை" என்று ராமசுந்தரம் திடீரென்று கூவினார். முகம் சிவந்து, மூச்சிரைக்கப் பதறினார். "வரலாறுகளை ஸ்டாலினும், ஹிட்லரும், ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும், பட்டேலும் உருவாக்குகிறார்கள்."

"இல்லை ராமசுந்தரம்."

"நாம் இனி பேசவேண்டாம். நான் வருகிறேன்."

"இந்த இரவிலா?"

"உடனே நான் கிளம்பியாக வேண்டும். நீர் புகாரினோடு சேர்ந்து மட்கி அழியும்." ராமசுந்தரம் உடனே தன் பையை எடுத்துக் கொண்டார். நான் பின்னால் போனேன்.

"ராமசுந்தரம்" என்று கூப்பிட்டேன். இருளில் நின்று திரும்பிப் பார்த்தார். "நீங்கள் அவதூறுக்குத்தானே பயப்படுகிறீர்கள்?" என்றேன்.

ராமசுந்தரம் அப்படியே இறுகிப் போனார். தாளமுடியாத வலியுடன் துடிக்கும் நோயாளியின் முகபாவம் அது. விடுவிடுவென இருளில் இறங்கி நடந்தார். எட்டு மாதம் கழித்து என்னை அவர்தான் விசாரணை செய்தார். கட்சியிலிருந்து என்னை நீக்கும் அறிக்கையை அவர்தான் எழுதினார். ஸ்டாலினிஸ்டுகள் இன்றும் மேற்கோள் காட்டும் வரிகள் பல அதில் இருந்தன. கடைசி நிமிடம் வரை அசைக்க முடியாத ஸ்டாலினிஸ்டாகவே அவர் காட்சி தந்துகொண்டிருந்தார்.

ராமசுந்தரம்பற்றி நான் யோசிக்காத நாள் இல்லை. அவர் புகாரினின் இன்னொரு சாத்தியக் கூறுதான். புகாரின் நாம் வரலாற்று நூல்களில் படிக்க நேரும் இரும்பாலான சிலை அல்ல. தடுமாற்றங்களும் பதற்றங்களும்கொண்ட மனிதர். வரலாற்றுத் தருணங்களில் மாறுபட்ட தரப்புகளைப் பார்க்கும் வலிமை இருந்த காரணத்தினாலேயே முடிவின்றி சஞ்சலம் கொண்டவர். ட்ராட்ஸ்கியை அவர் எதிர்த்தார். அவரை வீழ்த்தவே ஸ்டாலினை ஏற்றார். ஆனால் 1929-ல் ட்ராட்ஸ்கியை நாடுகடத்தும் முடிவை கட்சியின் மத்தியக் குழு எடுத்தபோது ஸ்டாலின் முன்பாக புகாரின் அதை எதிர்த்தார்; போராடினார். தன் முயற்சி தோற்றபோது அழுது புலம்பினார். அவரது ஊசலாட்டங்கள் பற்பல. புரட்சிக்குப் பிந்தைய ஆரம்ப ஆண்டுகளில் அவர் கட்சியின் அதிதீவிர இடதுசாரி அணியைச் சார்ந்து நின்றார். 1918-ல் எதிரிக்கு சாதகமாக சமாதானம் செய்துகொள்ளப்பட்டபோது ஜெர்மனியுடன் போர் தொடர வேண்டும் என்று வாதிட்டார். அடுத்த கட்டத்தில் உள்நாட்டுப் போர் மூண்டு தேசம் அதிர்ந்தபோது ட்ராட்ஸ்கியின் வலதுகரமாக செயல்பட்டார். பொருளாதாரம் ராணுவரீதியாக ஒருமுகப்படுத்தப் படுவது சோஷலிசத்தை நோக்கி நாடு முன்னேறுவதற்கு அவசியமான தேவை என்று ட்ராட்ஸ்கியுடன் சேர்ந்து வாதிட்டு லெனினை ஏற்க வைத்தார். 1918 முதல் 1920 வரை அவர் கட்சியின் தீவிர இடதுசாரிகளை ஆதரித்து தொழில்மயமாக்கத்தையும் மையப்படுத்தப் பட்ட பொருளாதாரத் திட்டமிடலையும் ஆதரித்தார். விவசாயிகளைக் கட்டுப்படுத்தி, தொழில் துறையை வளர்க்க வேண்டும் என்று கருதினார். பிறகு 1921முதல் 1924வரை வலதுசாரிகளின் தலைவராகச் செயல் பட்டார். விவசாயிகள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

புகாரினிசம் என்று ஏதும் இல்லை என்பதே என்னை மேலும் அவர் அருகே ஈர்க்கிறது. சஞ்சலமிக்க, உணர்ச்சிகரமான, நேரடியான மனிதராக அவர் இருக்கிறார். தன்னுடைய அணுகுமுறை இது என ஒன்றை வரையறுத்துக்கொண்டு அதற்கு விசுவாசமாக இறுதிவரை இருக்க முயலவில்லை. அல்லது தன் நிலைப்பாடுகளை மிதமிஞ்சிய தருக்கம் மூலம் நியாயப்படுத்தி, இணைத்து, ஒரு பொதுமையை உருவாக்கிக் காட்டவும் முயலவில்லை. இதெல்லாம் அறிவு சார்ந்த நியாய உணர்வின், நேர்மையின் வெளிப்பாடுகள் என்றே எனக்குப் படுகிறது. புகாரின் தனது எல்லா முடிவுகளையும் உணர்வு பூர்வமாகவும், உள்ளுணர்வு சார்ந்தும்தான் எடுத்தார். எனவே உண்மையின் பாற்பட்டு இருக்க பிற அனைவரையும்விடவும் அவருக்கே வாய்ப்பு அதிகம். அவரது போராட்டங்கள் இந்நூற்றாண்டில் ஓர் அறிவுஜீவி கொள்ளும் போராட்டங்கள். அவரது சஞ்சலங்கள் இந்நூற்றாண்டின் மனசாட்சியின் சலனங்களன்றி வேறல்ல.

தோழர், இப்போது கூறுங்கள். புகாரின் தோற்றார். ராமசுந்தரம் வென்றார். புகாரினுக்கு மரணமும், மறதியும், வரலாற்றில் வெற்றிடமும்

கிடைத்தது. ராமசுந்தரம் தலைவராகப் புகழுடன் இருக்கிறார். அவர் பெயரில் கட்சி அலுவலகங்கள் எழும். அவருக்கு சிலைகள் வரும். அவர் பெயரில் குழந்தைகள் வளரும். நான் இதில் யாரைத் தோற்வு செய்வது? என்னால் புகாரினைத்தான் தோற்வு செய்ய முடிகிறது. சில தருணங்களிலேனும் மனம் கசந்து ராமசுந்தரத்தை தொடர்ந்தாலென்ன என்று எண்ணியதுண்டு. ஆனால் முடியவில்லை. எனக்கு அது சாத்தியமே இல்லை. அப்படியானால் மிஞ்சியிருப்பது ஒரே வழி. புகாரினைத் தொடர்ந்து வரலாற்றுத்துளை வழியாக அந்தப்பக்கம் சென்றுவிடுவது. அங்கு முடிவற்ற இருள். சாந்தியற்ற ஆத்மாக்களின் பெருங்கூட்டம். அங்கு ஒருபோதும் ஒளி வராமல் போகக்கூடும். ஆயினும் எனக்கு வேறு வழியில்லை. என் விதி அதுவே.

தங்கள்,

வீரபத்ரன்

♦

6

"சிலுவையில் அறையப்பட்ட யேசு வாகவோ சுடப்பட்ட காந்தியாகவோ என்னைக் கற்பனை செய்துகொள்கிறேன் என்கிறார்கள். பொய்யான கற்பனைகளுக்காக ஒருவன் எதையும் இழப்பான். உயிரை இழப்பானா? ஒருவன் தன் வாழ்வின் முழுமை என எதை எண்ணுகிறானோ அதன் பொருட்டுத்தான் உயிரைத் தருவான். கோடிக்கணக்கான கம்யூனிஸ்டுகள் உயிரைத் தந்தது அப்படித் தான். அதே மனோபாவமே என்னையும் இயக்குகிறது என்றால் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். ஆனால் ஒருவன் முழுமை குறித்து கொண்டிருக்கும் அந்த நம்பிக்கையே உண்மையில் பொய்யான கற்பனைகளினால் ஆனது என்றால்? என்றாவது ஒரு நாள் கம்யூனிசம் தோற்றுவிட்டது, சாத்தியமற்ற இலட்சியக் கனவு என நிரூபணமாகிவிட்டது என்றால்? பயங்கரம்தான். நினைக்கவே கசக்கும் விஷயம் தான். அப்படியானால் உயிர் துறந்த அத்தனை பேரும் வீணாகிப் போன ஆத்மாக்கள்தானா? எனது இந்த உத்வேகம் அகங்காரமும் தனிமையும் சேர்ந்து உருவாக்கிய பித்து என்றால் நான் இழந்தவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம்? தலை பிளக்கும் அபத்தம். உடனே ஓடிப் போய் குடிக்கிறேன். மனம் சிதறி, உடல் தளர்ந்து, பிரக்ஞை வெறும் படங்களின் ஓட்டமாக மாறும்வரை குடிக்கிறேன். குடிக் காதே என்று எழுதினீர்கள். எனக்கு ஏதாவது ஓர் உறுதியைக் கொடுங்கள். குடிப்பதை விட்டுவிடுகிறேன்."

அருணாசலம் பெருமூச்சுடன் குறிப்புகளை மூடினான். வீடு இருண்டு கிடந்தது. இரவு விளக்கு மட்டும் எரிந்தது. மூச்சொலிகள் கேட்டன. இனியும் தூக்கம் வரவில்லை. பகலில் வெகுநேரம் தூங்கிவிட்டான். டாக்டர் தந்த மாத்திரையின் வலிமை. டாக்டருக்கு அவன் மனநிலை புரிய வில்லை. மலம் சரிவரப் போகிறதா என்றார். நாக்கை நீட்டு என்றார். உடனே மருந்து எழுதி விட்டார். நாகம்மைக்குப் பரம சந்தோஷம். நன்றிப் பெருக்குடன் வணங்கிவிட்டு திரும்பி னாள். மாத்திரையை ஒழுங்காகத் தந்துவிடுவாள். அதைச் சாப்பிட்ட சில நிமிடங்களில் அவன்

மனதின் வேகம் குறையும். ஓரிரு சொற்கள் தேவையின்றி திரும்பத் திரும்ப ஒலிக்கும். சில கிரீச்சிடல்கள், அதிர்வுகள். பிறகு ஒரு ரீங்காரம். தூங்கிவிடுவான். இப்போது தூக்கம் வரவில்லை. இன்னொரு மாத்திரை சாப்பிடலாம். ஆனால் அதற்கு அவளை எழுப்ப வேண்டும்.

ரேடியோவை எடுத்துக் கொண்டான். அதைப் போட்டபோது மூளையைக் கூச வைக்கும் கரகர ஒலி எழுந்தது. ஆனால் மண்டைக்குள் அறுபடாது ஓடிக் கொண்டிருந்த சொற்கள் சட்டென்று அறுபட்டன. அலைவரிசையை உற்றுப் பார்த்தபடி திருகினான். முள் அவன் தலைக்குள் மூளையை வருடியபடி நகர்வதாகப் பட்டது. பல இடங்களில் மூளை செத்து சுண்ணாம்புப் பரப்பாக இருந்தது. சில சதைத் துளிகளில் மட்டும் ஒலிகள் இருந்தன. சில சதைகள் மெல்ல அதிர்ந்தன. கூசவைக்கும் தொடு உணர்வுடன் முள் மூளையை குடைந்து சென்றது. எந்தக் கணமும் ஒரு சதை வெடித்துப் பேரொலி காதை அறையக்கூடும். தலையை உலுக்கிக் கொண்டான். கண்களைக் கொட்டினான். சமீப காலமாக அந்த வெடிப்பொலி பழக்கமாக ஆகிவிட்டிருந்தது. இல்லை. இப்போது அது வராது. இது இரவு. நான் வானைத் துழாவுகிறேன். இல்லை வானில் இருந்தபடி மண்ணைத் துழாவுகிறேன். நிலப்பகுதிகள். அலைக்கும் கடல்கள். தூங்கும் தேசங்கள். ஒளிரும் தேசங்கள். ரீங் என ரேடியோ ஒலி பெற்றது. ஏதோ அன்னிய மொழியில் எவரோ மிக ஆவேசமாகப் பேசுவது கேட்டது. திருப்பினான். சற்றுத் தள்ளியும் அதே குரல். மெல்ல முள்ளை நீக்கினான். எல்லா முனைகளிலும் அதே குரல். பயந்துபோய் ரேடியோவை அணைத்தான். குமிழ் சுழன்றபடியே இருந்தது. ரேடியோ அணையவில்லை. அது அழுத்தமான, வலிமையான குரலில் பேசியது. அதன் அழுத்தமான சிவப்புக்கண் அவனை உற்றுப் பார்த்தது. ஒரு களநடைப்பாடல் ஒலித்தது.

மழை பெய்யும் தெரு வழியாக சேற்றில் பூட்ஸ் கால்கள் அழுந்த அழுந்த அந்த ராணுவம் நகர்ந்தது. இது போர்க்கப்பல் பொடமகினில் ஒரு காட்சி அல்லவா? கண்ணெட்டும் தூரம்வரை நகரும் துருப்புகள். மழையில் சுவரைப் பிளந்து வந்து, அச்சுவரில் நுழைந்து மறைந்துகொண்டிருந்தார்கள். ''இந்த நான்கு மாதகாலப் போரில் நமது மூன்றரை இலட்சம் வீரர்கள் மரணமடைந்துவிட்டனர். மூன்றரை லட்சம் பேர் காணாமலாகிவிட்டனர். பனிரெண்டு லட்சம் பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட மக்கள் எண்ணிக்கை இதைவிடப் பத்து மடங்கு. தோழர்களே, எதற்காக இந்தப் பேரழிவு? இதை நாம் தவிர்த்திருக்க முடியாதா? இது நமது போரல்ல. இது அவர்கள் தொடுத்த போர். போர் அல்லது பூரண அழிவு தவிர வேறு தெரிவு நமக்கு இல்லை. நாம் ஆதிக்கத்துக்காகப் போராடவில்லை. வாழ்வுக்காகப் போராடுகிறோம். நமது தந்தையர் மண்ணுக்காகப் போராடுகிறோம். அழுத்தமான அந்தக் குரல் உள்ளூர நடுக்கத்தையும், தவிப்பையும் ஊட்டியது. யார் குரல் அது என பிரக்ஞை தேடியது. ''இந்த ஜெர்மானிய ரௌடிகள், கொள்ளையர்கள், கொலைகாரர்களுக்கு எதிராக நாம் நடத்த வேண்டியது ஓர் இன அழித்தொழிப்பு. ஆம் தோழர்களே! அந்த இனம்

தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறது என்றால் அப்படியே ஆகட்டும்!'' கைத்தட்டல் சத்தம் காதுகளை அதிர வைத்தது. இது போர்ப் பிரசங்கம் அல்லவா? இப்போது புரிந்தது. இது பதினெட்டாவது தேசிய யுத்தப் பிரசங்கம். மறு ஒலிபரப்பா என்ன? எந்த ஊர் இது? ருஷ்யாவல்ல. அங்கு ஸ்டாலினை ஒலிபரப்ப அவசியம் இல்லை. வேறு எந்த ஊர்? ''நம் வயல்களில் விவசாயிகள் இந்தப் போருக்காக வியர்வை சிந்தட்டும், நமது தொழிற்சாலைகளில் தொழிலாளர் கண்ணீர் சிந்தட்டும். நமது வீரர்கள் போர்க்களத்தில் உதிரம் சிந்தட்டும். நமது தந்தையர் தேசத்திற்காக, நமது சோஷலிச அமைப்பிற்காக, இந்த தேசபக்திப் போரில் இறுதிக் கணம் வரை போராடுவோம்.'' வெறியேறிய கோஷங்கள். போர்க் கூச்சல்கள். வானில் வெடிக்கும் வேட்டுகள். கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் சங்கீதம் ஒலித்தது. தோழர் ஜோசப் விசாரியோவிச் ஸ்டாலின் வாழ்க. விண்முட்டும் வாழ்த்துரைகள். பெரியதோர் ஆயுதவண்டியின்மீது கிரீடமும் செம்பழுப்பு நிற அரச உடையும் அணிந்த உருவம் எழுந்தது. அது பீட்டர் சக்கரவர்த்தி அல்லவா? என்ன பிரமை இது! அந்த உருவம் கையசைத்தது. அதன் முன் விரிந்த பெரும் சதுப்புவெளியில் மங்கலான சாம்பல்வானின் ஊமையொளி பரவியது. பெரிய மண் வண்டிகள் நகர்ந்தன. குதிரைகள்மீது சவுக்குகள் பளீரிட்டு அடித்தன. கூட்டம் கூட்டமாக மக்கள் மண்ணைச் சுமந்து வந்தனர். மரக்கட்டைகளை இழுத்து வந்தனர். குவிந்த மரக்கட்டைகளையும் மண்ணையும் சதுப்பில் குவித்தபடி இருந்தனர். மரக்கட்டைகளல்ல அவை. விரைத்த மனித உடல்கள். அவற்றின் முகம் நீலம் பாரித்திருந்தது. உதடுகள் ஒட்டி இறுகியிருந்தன. கண்கள் பளிச்சிட்டபடி உற்றுப் பார்த்தன. உயிருள்ள பார்வை. ஒரு பிணக்குழந்தை பிணப்பார்வையுடன் புன்னகைத்தது. சதுப்புவெளி மேடாகியது. உடல்கள், மண் குவியல்கள் என எழுந்து வளர்ந்து நிடம் பெற்றது. அதன்மீது யந்திரங்கள் ஓடின. சமதரை செக்கச் செவேலென்று இறுக்கமான வழவழப்புடன் இருந்தது. அதன்மீது மையத்தில் ஸ்மோல்னி மாளிகை மெதுவாக முளைத்து எழுந்து புடைத்து வளர்ந்தது. முகடுகள் வானைத் தொட உன்னின. மெழுகு விளக்குகள் கடர்விட ஆரம்பித்தன. புரவிகளால் இழுபடும் வண்டிகள் பனித்தரைமீது டதடத்து ஓடின. பெரிய உடலை மெல்ல நகர்த்தியபடி. கம்பீர பாவனையுடன் நடந்துவந்த பீட்டர் சக்கரவர்த்தி மாளிகை முகப்பிலிருந்த பீடத்தில் கால்தூக்கி நின்ற குதிரைமீது ஏறி நின்று உறைந்து வெண்கலச் லையானார். கோச் வண்டிகளில் இருந்து பெரிய தொப்பிகளும் மென்மயிர்க் கோட்டுகளும் அணிந்த சீமாட்டிகள் இறங்கினார்கள். ''சீமாட்டி ன்னா கரீனினா''என்று காவலன் கட்டியம் கூவினான். பிரெஞ்சு பேசிய சீமாட்டிகள் பெல்ஜியம் கண்ணாடிக் குடுவைகளில் செந்நிற மதுவுடன் மெல்ல நடந்தார்கள். விருந்து களைகட்டியிருந்தது. மனக்கசப்புடன் பனிபடர்ந்த ஜன்னல் கண்ணாடி வழியாக பனிபரவிய பாதையைப் பார்ப்பவள் இளவரசன் ஆன்ட்ரூ. பீட்டர் சக்கரவர்த்தியின் பெரிய சிலைக்குத் தோள் கிழிந்த பெருங்கோட்டை இறுக மூடி, தொப்பியை இழுத்து விட்டபடி, பிச்சைக்காரர்களும் நாடோடிகளும் அமர்ந்தபடி தூங்கினார்கள். யமிடப்பட்ட காவல் வண்டிகள் வந்து அவர்களை அள்ளிப் போட்டுச்

சென்றன. கும்மட்ட முகடு குவிந்து உயர்ந்து வானம்போல உட்குடைவாக இருந்த பெரிய கூடத்தில் விருந்தினர் மிக மெல்ல உரையாடியபடி நடமாடினர். சிறப்பு விருந்தினர் வருகை தந்தபோது மெல்லக் கைதட்டினர்.

''புதிய சமூக அமைப்பு ஒன்றை இங்கு நான் காண்கிறேன். இது உலகிற்கு ஒரு முன்மாதிரி. சுரண்டல்கள் இல்லாத சமூகம். மனிதனை மனிதன் ஏமாற்றாத சமூகம். தங்களைத் தாங்களே ஆண்டபடி பாட்டாளி வர்க்கம் இங்கு ஆட்சி செய்கிறது. இந்த மகத்தான வெற்றிக்குமுன் தலைவணங்குகிறேன். என் தேசத்துக் கோடானுகோடி ஏழைப் பாட்டாளிகளின் சார்பில் வாழ்த்துக் கூறுகிறேன்.'' கரவொலி, கோஷங்கள். பிறகு மதுக்கிண்ணங்கள் முட்டும் இனிய ஒலி. பெண்களின் மெல்லிய சிணுங்கல் சிரிப்பு. இனிய குளிர்ந்த சாலையில் செம்மலர்கள் ஏந்திய, சிவந்த கன்னம்கொண்ட பள்ளிக் குழந்தைகள் அகன்ற வீதியெங்கும் கையசைக்க கரிய ரப்பர் பாதைமீது லிமோசின் வழுக்கிச் செல்கிறது. மகத்தான கலாச்சாரம் ஒன்றின் தூதுவராக மாமன்னர் ஷாஜகான் இங்கு வருகை தந்துள்ளார். இளமையில் இறந்த தன் மகாராணிக்காக அவர் கட்டிய மாளிகை வரலாற்றின் கன்னங்களில் ஒரு கண்ணீர்த் துளி. பாரசீக ரோஜா மலர்ந்த அவர் மார்பில் அந்த மண்ணின் புனிதமான வைரங்கள் சுடர்விடுகின்றன. இங்கு அவர் வந்தது புனிதமான ஒரு நட்பின் துவக்கம். கைத்தட்டல்களின் இடிமழை. தனிமையில் வெறும் கால்களுடன் சோனியா நடந்து போகிறாள். விபச்சார விடுதி முன்பு அலக்சாண்டர் குப்ரின் தோழர்களுடன் நின்று விசிலடிக்கிறார். மூடப்பட்ட மதுக்கடைமுன் குளிரில் நீலம்பாரித்த கிழிந்த உடைகளுடன் நெல்லி பெண்கள். துயரத்தைக் குழந்தையென உருவகித்தான் தஸ்தயேவ்ஸ்கி. எஸ்.எம்.ராமசாமி பேசுகிறார். மீட்பை ஒரு பெண்ணெனவும். அவள் தாந்தேயின் சுவர்க்க தேவதை. சுவர்க்க தேவதைகளே நீங்கள் ஒரு நாளைக்கு இருபது பேர் என விபச்சரிக்கும் இந்தத் தெருவில் சிலுவையுடன் உதிரம் வழியப் போகிறவன் யார்? ஆ, அவன் பெயர் ஏசு. அவனருகே மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்பவன் - தல்ஸ்தோய். உதறு, பிதற்று இந்நினைவுகளினூடாக அவனது உதிரமணிந்த காலடிச் சுவடு மிளிர்கிறதே மூளை தெறிக்கிறது. வலிக்கிறது. சைபீரியப் பனி விரிவு. இந்த இருண்ட காலையில் அங்கு துயிலெழுப்புபவை பனி ஓநாய்கள். ஷிவாகோ விறைத்த கரங்களுடன் குடிசையைத் திறந்து பார்க்கையில் பனிப்படுகையில் அவற்றின் பாதத்தடங்கள் எழுத்துக்களாகி கொடூரமான, மிகமிகப் கொடூரமான, கவிதையொன்றைப் பார்க்கிறான். தன் தாயின் அடக்கத்திற்குப் பின் இரவில் தேவாலய வாசலைத் திறக்கையில் அவன் கண்ட நீலப்பனிவெளி எங்கே? மூதாதையர் ஆத்மாக்களைச் சுமந்து பரவிய வானம். குளிர்ந்து பனித்தகடுகளாக மண் மீதிறங்குகின்றன மூதாதையர் நினைவுகள். ஒவ்வொரு எண்ணமும் கனிந்து கனத்துச் சரியும் இவ்வுலகப் பெரும்பரப்பில் தனிமை ஒரு பெரும் தியானமாகும். லாராவின் சிரிப்பை நினைவு கூர்கிறான். வெல்க புரட்சி. நமது புரட்சி கீதம் சைபீரியாவை ஊடுருவி ஆர்க்டிக் முனைமீது எதிரொலிக்கிறது தோழர்களே. பூமியின் நெற்றிமீது ஒலிப்பது நம் குரலே. தோழர் யூரி ககாரின் விண்வெளியில் பறந்தபடி அதைக் கேட்டார். தல்ஸ்தோய்: அதை அதன்பொட்டில்

நுகத்திலிருந்து விடுவித்தது புரட்சி. அதை விண்வெளிக்கு அனுப்பியது நாம். சன்னல் வழியாக அது கண்டது இருட்பெரும்வெளி. ஆனால் மர்மம், தோழர்களே... விண்வெளிப் பெரும் வெறுமையில் ஏன் அது களிகூர்ந்தது? ஏன் வாலாட்டியது? முழங்குகின்றன தேவாலய மணிகள். யாருக்காக முழங்குகின்றது மணி? ஆயுதங்களுக்குப் பிரியாவிடை. இந்த உறைந்த கடலில் கிழவன் வலைவிரித்து வீசிவீசித் துழாவி அடைந்த மாபெரும் எலும்புக் கூடு. மண்டை வெடிக்கிறது. இல்லாத தேவாலயச் சுவரில் கால் தூக்கி லைக்கா சிறுநீர் கழிக்கிறது. சிறுநீரல்ல அது. ஓர் கைச்சாத்து. திரும்பி வர ஓர் அடையாளம். இப்போது நான் போகிறேன் வெறுமை விரிந்த விண்வெளிக்கு, என்பிரிய தேசமே. இது விடியல். அவன் விபச்சார விடுதியின் இருண்ட அறையைத் திறந்து உள்ளே காலடி எடுத்துவைத்து அவளைக் கண்டான். முடிவற்ற துயரத்தின்முன் தன்னை சமர்ப்பித்து விட்டான். என் ஆத்மா உயிர்த்தெழுகிறது. இதோ விடியல். இப்பனி இனி உருகும். பொன்வேனில் புதுமுகம்கொண்டு மலரும். தோழர்களே, விடியலின் புரட்சிகீதம். சாம்ராஜ்ய ஒற்றர்கள், துரோகிகள், அவதூறுப் பிரச்சாரகர்கள், வகுப்புவாதிகள், மேட்டிமைவாதிகள், குறுங்குழுவாதிகள், திரிபுவாதிகள், சுரண்டல் பெருச்சாளிகள், தூய அழகியல்வாதிகள், பாசிஸ்டுகள், விபச்சாரர்கள், குடிகாரர்கள், கள்ளச்சந்தைக்காரர்கள், அயோக்கியர்கள், பாவிகள், சாம்ராஜ்யவாதிகள் அனைவருக்கும் எதிராக ஒன்றுபடுவோம். அழுகி நாறுவது என்ன? ஃபாதர் சோஷிமா. தோழர் இவர் புனிதரல்ல. சாம்ராஜ்ய ஒற்றர். புரட்சிக்குப்பின் மனம் தளர்ந்து பாவமன்னிப்புக் கேட்ட ரஸ்கால்நிகாஃப். ஓடு யாஷ்னாபால்யானாவை விட்டு. சைபீரியப் பனிமுகாமில் உன் மசலோவாவுடன் உயிர்த்தெழு. சந்திரனில் செங்கொடி பறக்கும் தோழர்களே. சைபீரிய நாரைகளுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவை செங்கொடியை உலகமெங்கும் கொண்டு செல்லும். நெஹ்ல்யுடோவ் உமக்கு இனி மிகில்னாய் ரயில் நிலையத்தில் மீட்பு. குளக்குகள் சாகும் சைபீரியாவில் முக்தி. அங்கு பிணங்களை அள்ள நாம் பயன்படுத்துவது நாமே தயாரித்த புரட்சி டிராக்டர்களை. புரட்சியின் சின்னம் டிராக்டர் தோழர்களே. உழுதுபுரட்டப்பட்ட கன்னி நிலம்மீது அவை ஓடுவதைப் பாருங்கள். இரும்பு வெள்ளம். சூதாடிகளின் தலைமறைவுக் குறிப்புகளை ரத்தத்தால் அழிப்போம். தோழர் டாவிடோவ் இன்றிரவு இருபது குல்சாரிகளைக் கொன்று பங்கிட மத்தியக் குழு உத்தரவிட்டுள்ளது. ஏனெனில் இது போர். மகத்தான விடுதலைப்போர். ரத்தமுறைந்த மண்மீது புதைந்த பீரங்கிச் சக்கரத்தைத் தூக்க முயலும் கிரிகோர், இன்று போய் நாளை வா. உன் நாகபாணம் குறிதவறிவிட்டது. எங்கள் ஆணைப்படி சூரியனை மறைத்தாகிவிட்டது. நடுப்பகலில் இருள். வரலாறு எங்களை விடுதலை செய்யும். மந்திராலோசனையில் குட்டுசோவ் தூங்க எங்கும் அமைதி. தோழர் பயங்கர இவான் அவர்களே மனித ரத்தத்தைப் பதப்படுத்திப் கண்டடையப்பட்ட புதிய மது இதோ: வெய்யிற்கேற்ற பனியுண்டு வீசும் குடுங்குளிர் காற்றுண்டு கையில் கார்ல்மார்க்ஸ் நூலுண்டு. சொர்க்கம்! பகலில் உள்ளதடா மகுதி. வவ்வால் சிறகடிக்கும் இரவில் பயங்கர இவான்

தன் கறுப்புப் பெருங்கோட்டை சிறகென விரிக்கிறான். காதுகள் நீள, விஷப் பற்கள் மின்ன ஸ்டெப்பிமீது பறக்கிறான். எட்டு மத்திய ஆசியத் தோழர்களின் கழுத்தில் கடித்து உதிரமருந்துகிறான். அவர்கள் வெளவால் கண்களும் விஷப் பற்களும் உதிர தாகமுமாகக் கிளம்புகிறார்கள். பயம், மிகவும் பயம். உடல் வியர்க்கிறது. கனவிலிருந்து எழுவேன். மிகவும் பயம். பயங்கர இவான் தோழரவர்களே, தங்கள் மதிய உணவுக்கு முழுதாகப் பொரித்த ஸ்காண்டிநேவிய குட்டித் தேசமொன்று இதோ. நாளைக் காலைப் பலகாரத்திற்கு கரீபியன் கடலில் ஒரு சிறு தீவு ஊறப் போடப்பட்டுள்ளது. செங்கொடி நுரைக்கும் இச்சதுக்கம் ஒரு மதுக்கிண்ணம். கம்யூனிஸ்ட் இன்ட்டர்நேஷனல் கீதம். இது இறுதி. இன்றைய இனிமையான நினைவுகளுடன் துயிலுக்குச் செல்க. உடைகளைக் களைகிறார் தோழர். பிதாவே அன்றன்று அப்பங்களை எங்களுக்குத் தருக. இன்குலாப் சிந்தாபாத் ஆமென். குளிர்ந்த சவப்பெட்டிக்குள் அவன் தன்னை வைத்து மூடிக் கொள்கிறான். குளிர்ந்த இரவு. இருண்ட இரவு. இருளில் டான் நதி அமைதியாக ஓடுகிறது. மிக அமைதியாக. மிகமிக அமைதியாக.

5

கண்ணீரைப் பின்தொடர்ந்தவன்

1

பாட்டாளி வர்க்கத்தின் கவனத்திற்கு,

உங்கள்முன் துரோகியாகவும் கோழையாகவும் முன்வைக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்ட ஒருவன் எழுதும் திறந்த கடிதம் இது. நூற்றுக் கணக்கான கூட்டங்கள் மூலமும், எண்ணற்ற உரையாடல்கள் மூலமும் என்னை ஓர் இழிபிறவி என்று என் தோழர்கள் நிறுவிவிட்டார்கள். என் தரப்பைக் கூற எனக்கு மேடை இல்லை. நீதிமன்றத்தில் தாயைக் கொன்ற குற்றவாளியிடம்கூட உன் தரப்பு என்ன என்று கேட்பார்கள். என்னிடம் தொழிலாளி வர்க்கம் அப்படிக் கேட்கவில்லை. எனக்குத் தொழிலாளி வர்க்கம் அதனால் முடிந்த மிகப் பெரிய தண்டனையைத் தந்துவிட்டது. என்னை எதிர்கொள்ளும் தொழிலாளி காறித் துப்புகிறான். செய்யத் தொழிலின்றி, உதவிக்கு யாருமில்லாமல், இந்த ஊரில் பட்டினி கிடந்து, நோயுற்று சாகவிடப்பட்டிருக்கிறேன். சில நாட்களில் என் பிணம் தெருவில் கிடந்து கவனிப்பாரின்றி அழுகி நாறும். ஆனால் அதற்கெல்லாம் நான் வருந்தவில்லை. ஏனெனில் நானே தேர்ந்தெடுத்துக்கொண்ட வழிதான் அது. ஒன்றல்ல, பத்தல்ல, ஐம்பது முறைக்குமேல் என் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறேன். தோழர்கள் மன்றாடியிருக்கிறார்கள். அச்சுறுத்தினார்கள். நான் மசியவில்லை. எதற்காக இந்த நிலையைத் தேர்ந்தெடுத்தேன்? அதைப் பாட்டாளி வர்க்கம் அறிய வேண்டும். ஒரு வேளை அறிந்த பிறகும் உங்களால் என் செயலைப் புரிந்துகொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியாது போகலாம். ஆனால் நீங்கள் அறிந்தாக வேண்டும். ஏனெனில் இது உங்கள் குழந்தைகள் பற்றிய விஷயம். அவை எப்படிப்பட்ட சமூகத்தில் வாழவேண்டும் என்பது பற்றிய விஷயம். விரிவான முறையில் இவற்றை எழுதலாம், வரலாற்றில் பொறித்துவிடலாம் என இதுநாள் வரை தீவிரமாக முயன்றேன். பணமில்லாத தனியாளாகிய என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. எனவே இந்தக் கடிதம்.

தோழர்களே, ஒரு பட்டதாரியான நான் மிக எளிதில் ஓர் அரசு வேலைக்குப் போயிருக்கலாம். என் சமூகத்திலும் குடும்பத்திலும் மிகுந்த மரியாதை எனக்கு இருந்திருக்கும். என் நினைவுதெரிந்த நாள்முதல் பட்டினியும் அவமரியாதையும்தான் நான் கண்டது. ஆனால் செங்கொடியை ஏந்தவும், மேலும் பட்டினி கிடக்கவும், மேலும் அவமரியாதைகளை ஏற்கவும் முன்வந்தேன். கட்சிக்காகவும் தொழிலாளி வர்க்கத்திற்காகவும் சற்றும் சுயநலமின்றி உழைத்தேன். வறுமையையும் இழிவையும் எனக்கு மட்டுமல்லாது இந்த பூமியிலிருந்தே நீக்கிவிட வேண்டும் என்று கனவு கண்டேன். கட்சியில் இருந்தவரை என் நேர்மையையும் ஈடுபாட்டையும் எவரும் சந்தேகப்பட்டதில்லை.

நாம் உருவாக்க விரும்பும் சமூகம் எது? எதற்காக இந்தப் பூமியில் இன்று வியர்வையும் கண்ணீரும் சிந்துகிறோம்? அந்தப் பொன்னுலகின் உண்மையான முன்மாதிரியாக சோவியத் ரஷ்யா முன்வைக்கப் படுகிறது. 'சோவியத் ரஷ்யா என்று ஒரு நாடுண்டு. அதில் பிறக்க நேர்ந்தால் எத்தனை அதிர்ஷ்டம்!' என்று இயக்கக் கவிஞர் ஒருவர் மலையாளத்தில் பாடிய வரியைப் பாடாத தோழர்களே இல்லை. நமது கனவு பலித்து, டெல்லியில் செங்கொடி பறந்தால் இங்கும் அதே போன்ற ஒரு சமூகம் உருவாகும் என்று கூறப்படுகிறது. மகத்தான சமூகம். சுரண்டலும் அநீதியும் இல்லாத சமூகம். தோழர்களே, சோவியத் ரஷ்யா உண்மையில் நமது தோழர்கள் கூறுவதுபோல ஓர் உதாரண கம்யூனிச நாடுதானா? நமது தலைவர்கள் ஏமாற்றுகிறார்களா? இல்லை அவர்களும் ஏமாற்றப்படுகிறார்களா? ஆயிரமாண்டு காலம் நமது வாக்கம் ஏமாற்றப்பட்டது. இனியும் ஏமாறலாமா? உங்கள் முன் சில விபரங்களை வைக்கிறேன்.

1924-இல் ஜனவரி 21-ஆம் தேதி தோழர் லெனின் மறைந்த பிறகு அவர் மனைவி நதேஷ்தா குருப்ஸ்கயாவால் வெளியிடப்பட்ட இரண்டு கடிதங்கள் இப்போது வெளியாகியுள்ளன. 1923 டிசம்பர் 24-ம் தேதி எழுதிய முதல் கடிதத்தில் தோழர் லெனின் ருஷ்யக் கம்யூனிஸ்ட்டு கட்சியின் உயர் மட்டத்தில் நடந்த அதிகாரப் போட்டி பற்றிக் குறிப்பிடுகிறார். ட்ராட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும் இடையே நடந்து வரும் அதிகாரப் போட்டி கட்சியைப் பொறுத்தவரை விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கை செய்கிறார். 1924-ம் வருடம், ஜனவரி 4-ம் தேதி, எழுதப்பட்ட இரண்டாவது கடிதத்தில் தோழர் லெனினின் இறுதிக் கடிதம் – ஸ்டாலின் பற்றி மிகவும் கவலைப்பட்டு எச்சரிக்கிறார் லெனின். 'பொதுச் செயலாளர் தோழர் ஸ்டாலின் எல்லையற்ற அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருக்கிறார். அவற்றை அவர் கவனமாகப் பயன்படுத்துவார் என்று தோன்றவில்லை' என்று குறிப்பிடும் லெனின், ஸ்டாலினை மூர்க்கம் மிகுந்த ராணுவவாதி என்றும், உடனடியாக அவர் பதவியிலிருந்தும் அனைத்து கட்சிப் பொறுப்புகளில் இருந்தும் அகற்றப்பட வேண்டும் என்றும் கூறுகிறார்.

இக்கடிதங்கள் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டன. இப்போது இதன் பிரதிகள் உலகக் கம்யூனிஸ்டுகளின் கரங்களுக்கு வந்துள்ளன.

ஆனால் தோழர் லெனின் கூறிய எச்சரிக்கை பலிக்கவில்லை. அதற்கு உயர்மட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கு இடையே இருந்த அதிகாரப் போட்டியே காரணம். ஸ்டாலின் கட்சி உயர்மட்டக்குழு உறுப்பினர்களான ஸினாவியேவ், காமனேவ் இருவருக்கும் ட்ராட்ஸ்கி மீதிருந்த பொறாமையையும், பயத்தையும் வளர்த்தெடுத்து தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். லெனினுக்குப் பிறகு ட்ராட்ஸ்கி பதவிக்கு வந்தால் அவர்களுக்குப் பேரழிவு காத்திருக்கிறது என்றார். ட்ராட்ஸ்கியை அதிகாரத்திற்கு வர விடக்கூடாது என்று எண்ணிய புகாரினும் ஸ்டாலினை ஆதரித்தார். விளைவாக ட்ராட்ஸ்கியை நிராகரித்து ஸ்டாலினை அடுத்த தலைமைப் பொறுப்புக்கு மத்தியக் குழு தேர்ந்தெடுத்தது.

'மகத்தான அறிவிஜீவி' என்றும் 'கலங்காத தத்துவவாதி' என்றும் லெனின் பாராட்டிய தளபதி ட்ராட்ஸ்கி. லெனினுக்கு வலக்கரம். அனைத்து வகையிலும் லெனினுக்கு வாரிசும் அவர்தான். சைபீரியாவெங்கும் பயணம் செய்து, துளித்துளியாக செம்படையை உருவாக்கி, புரட்சியை நடத்திக் காட்டிய மாபெரும் அமைப்பாளன் அவன். அவனே உண்மையில் புரட்சியின் மக்கள் தலைவன். அவனை வீழ்த்த ஸ்டாலின் மிக கவனமாகக் காய்களை நகர்த்தினார். ட்ராட்ஸ்கியால் கண்டெடுக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட ஸினாவியேவும், காமனேவும் ஸ்டாலின் பக்கம் தாவி ட்ராட்ஸ்கிக்கு எதிராகக் கட்சி ஊழியர்களையும் செம்படையையும் திருப்பினார்கள். ட்ராட்ஸ்கிக்கு இணையான அறிவுஜீவிகளான நி.புகாரின், ரைகோவ் ஆகியோர் ட்ராட்ஸ்கியைத் தோற்கடிக்கும் சித்தாந்தத்தளத்தை உருவாக்கினார்கள். ட்ராட்ஸ்கி உலகப் புரட்சி என்ற கருத்தால் பெரிதும் கவரப்பட்டிருந்தார். புரட்சி உலக அளவில் உருவாக்கப்பட்டால் மட்டுமே முழுமையாக நடைபெற முடியும் என எண்ணினார். ரஷ்யாவில் மட்டும் ஒரு சோஷலிச சமூகம் உருவாக்கப்பட்டால் அதை முதலாளித்துவ மேற்குலகம் நெருக்கி அழித்துவிடும் என்று கருதினார். ரஷ்யா தன் முழு சக்தியையும் அந்த ஒருங்கிணைந்த எதிர்ப்பை சமாளிக்கவே செலவிட வேண்டியிருக்கும். மிகப் பிரம்மாண்டமான மூலப்பொருள் வசதி உடைய தேசம் ரஷ்யா. புரட்சி மூலம் அது பாட்டாளி வர்க்கத்துக்குக் கிடைத்துள்ளது. அம்மூலப்பொருட்களை தொழிற்சாலைகளினூடாக ஆயுதங்களாக மாற்ற வேண்டும். உலக மெங்கும் தொழிலாளர்கள் தங்களுக்கு மீட்பு வரப்போகிறது என்று எண்ணி புரட்சியின் விளிம்பில் நிற்கிறார்கள். ஜெர்மனி, பிரிட்டன்,

பிரான்ஸ் முதலிய தேசங்களில் அரசாங்கத்தின் ராணுவ பலமே தொழிலாளர் சக்தியை தினறித் தினறி கட்டுப்படுத்தி வருகிறது. பெரும் ராணுவ பலத்துடன் ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் இந்நாடுகளைத் தாக்கினால் ஒரேயடியாக ஐரோப்பாவெங்கும் புரட்சி உருவாகிவிடும். பிறகு ஐரோப்பிய அளவில் எளிதாக ஒரு சர்வதேசிய அமைப்பையும், கம்யூனிசக் கட்டுமானத்தையும் உருவாக்கிவிடலாம் என்று ட்ராட்ஸ்கி கூறினார். பெருந்தொழில்களை அசுர வேகத்தில் கட்டி எழுப்பி ரஷ்யாவை ராணுவமயமாக்க வேண்டும் என்றார். இதெல்லாம் சரியா தவறா என்பது வேறு விஷயம். இன்று ரஷ்யாவின் வளங்களில் முக்கால் பங்கு மேற்குலகின் ஆயுதப் போட்டிக்கு ஈடுகொடுக்கவே செலவாகிறது என்பதை மட்டும் நாம் கவனிக்க வேண்டும்.

ட்ராட்ஸ்கிக்கு எதிரான சிந்தாந்த நிலைப்பாட்டை முன்வைத்தவர் புகாரின். லெனினால் 'மிக மதிப்பு வாய்ந்த, அபூர்வமான பாட்டாளி வர்க்க சித்தாந்தி' என்று போற்றப்பட்டவர். கட்சியில் மூன்றாமிடத்தில் இருந்த தலைவர். செம்படை உருவாக்கப்பட்டபோது ட்ராட்ஸ்கிக்கு வலக்கையாக இயங்கியவர். அப்போது அவரும் பெருந்தொழில்கள், ராணுவமயமாக்கம் ஆகியவை கம்யூனிச அமைப்புக்கு மிக அவசியமானவை என்றே நம்பினார். பிறகு, புரட்சிக்குப் பின்பு ரஷ்யாவின் விவசாய அமைப்புகளைக் கணக்கில் கொண்டு யோசித்தபோது, அந்நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார். லெனின் விருப்பத்துக்கு ஏற்ப புகாரின் ஒரு தேசிய பொருளாதார செயற்திட்டத்தை உருவாக்கினார். அதைப் புதிய பொருளாதாரக் கொள்கை என்று அழைத்தார். அது பெருந்தொழில்களை மட்டுமே தேசிய உடைமையாக்கி பெரிய அளவில் மூலதனம் செய்து வளர்க்க வேண்டும் என்று கூறியது. கைத்தொழில்களையும் விவசாயத்தையும் உடனடியாகத் தேசிய உடைமையாக ஆக்குவது அவற்றை அழித்துவிடும் என்றார் புகாரின். இவற்றை ஓர் எல்லைவரை சுதந்திரமாக இயங்கவிடலாம் என்றும், அதற்குத் தனியுடைமை முறையே இன்னும் கொஞ்சகாலத்திற்குத் தொடர வேண்டும் என்றும் வாதிட்டார். விவசாயமும் கைத்தொழிலும் அவற்றில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் உதிரித் தொழிலாளர்களின் தனிப்பட்ட ஈடுபாட்டின் மூலமே இலாபகரமாக நடத்தப்படச் சாத்தியமானவை. தனியுடைமை அனுமதிக்கப்பட்டு, உடனடி இலாபத்தை உழைப்பாளிக்கு அந்த ஈடுபாடு உருவாகும் அடைந்தால்தான், விவசாயம் இலாபகரமாகவும் அதிக உற்பத்தித் திறனுடனும் நடப்பது என்பது சோஷலிசக் கட்டுமானத்திற்கு அவசியமான அடித்தளம். அதற்கு அவசர மாறுதல்களை செய்யப் புகுந்தால் உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டு சோஷலிச அமைப்புப் பாதிக்கப்படும் என்றார் புகாரின். இதை லெனினும் ஏற்றுக்கொண்டார். புதிய பொருளாதாரக் கொள்கை 1921 முதல் 1924 வரையிலான காலகட்டத்தில் கணிசமான அளவு செல்வ கண்டது என்பது ஓர் உண்மை.

ட்ராட்ஸ்கி புதிய பொருளாதாரக் கொள்கையை இரண்டு அடிப்படையில் எதிர்த்தார். ஒன்று: தத்துவார்த்தமாக அது பொது வுடைமைச் சித்தாந்தத்திற்கு எதிரானது. அது தனியுடைமையையும் சுதந்திரச் சந்தையையும் ஆதரிக்கிறது. விவசாயம் அபிவிருத்தி அடைந்தால்கூட தனியுடைமையும் சந்தையும்தான் வலுப்படுமே யொழிய கம்யூனிசம் வளராது. இரண்டு: விவசாயிகள் கம்யூனிச அமைப்பின் அடிப்படை சக்தியாக மாறும் நிலை இதன் மூலம் ஏற்படுகிறது. இது உலகளாவிய புரட்சி என்ற கனவைச் சாத்திய மில்லாதாக்கிவிடும். மகத்தான அக்டோபர் புரட்சி தொழிலாளர் களும் போர்வீரர்களும் இணைந்து நிகழ்த்திய ஒன்று. அதில் விவசாயிகளின் பங்கு மிகவும் குறைவு. விவசாயிகள் மானசீகமாகக் கம்யூனிச அமைப்பை ஏற்கவேயில்லை. மார்க்ஸியக் கல்வி பெற்ற தொழிலாளி வர்க்கமே பிற சமூகங்களை முன்னின்று அழைத்துச் செல்ல வேண்டும். மார்க்ஸ் கூறியதும் அதுவே. எனவே விவசாயிகளை சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க முடியாது என்றார் ட்ராட்ஸ்கி.

இந்தத் தத்துவ விவாதத்தை இன்னும் எளிமைப்படுத்திப் பார்க்கலாம். பச்சையாகச் சொல்லப் போனால் விவசாயியை எப்படிப் பிழிவது என்பதில்தான் பிரச்சினையே. விவசாயியை ராணுவம் மூலம் சுரண்டி, அம்மிச்ச மதிப்பை பெருந்தொழில்களில் முதலீடு செய்து, அவற்றில் வரும் இலாபத்தில் பெரும் பகுதியை ஆயுதங்களாக மாற்றினால் மட்டுமே சோவியத் ருஷ்யா பலம் பொருந்திய சக்தியாக மாறி, தன் மீதான எதிர்ப்புகளை சமாளிக்கவும், உலகப் புரட்சிக்கு வழிகாட்டவும் முடியும் என்றார் ட்ராட்ஸ்கி. மாறாக ராணுவத்தால் விவசாயி அடக்கப்பட்டு சுரண்டப்பட்டால் அழிவே விளையும் என்றார் புகாரின். உலகமெங்கும் விவசாயிக்கு மண்மீது தனிப்பட்ட முறையில் பற்று உண்டு. அதைப் பொதுச் சொத்தாக்குவதை அவன் உயிரைக் கொடுத்து எதிர்ப்பான். அவனுடைய மௌனமான எதிர்ப்பு காரணமாகவே விவசாயம் நலிவுறவும் கூடும். எனவே விவசாயியைத் தற்காலிகமாகத் தன் நிலத்தை வைத்துக் கொள்ளவும், சுதந்திரமாகச் செயல்படவும் அனுமதிக்கலாம். அவன் உழைப்பை அவனுடைய சம்மதத்துடன் படிப்படியாகச் சுரண்டி தொழிலுக்கு முதலீடாக மாற்றலாம். இதன் மூலம் விவசாய அடித்தளம் பெரிய அளவில் நிலைகுலையாது. கொழில்துறையும் படிப்படியான நிதான வளர்ச்சிபெறும். ரஷ்ய விவசாயிக்குப் படிப்படியாகச் சித்தாந்தக் கல்வி தந்து புரட்சிக்கு ஆதரவாக மாற்றி கம்யூனிசத்தை ஏற்றுக்கொள்ளவும் செய்ய முடியும் என அவர் கருதினார். ட்ராட்ஸ்கியின் உலகப் புரட்சிக்கு ரஷ்யாவின் வளங்கள் மிக மூர்க்கமாக சுரண்டப்பட்டாக வேண்டும். ருஷ்ய விவசாயியைப் பிழிந்து இறுதிச் சாறுவரை எடுத்தாக வேண்டும். எனவே புகாரின் அதை எதிர்த்தார். ருஷ்யாவுக்குள் படிப்படியாக ஓர் உதாரண,

சோஷலிச சமூகத்தை அமைத்தபிறகு பிற தேசங்களை நோக்கி முன்னேறலாம் என்று அவர் கூறினார். கம்யூனிச அமைப்பை உருவாக்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும் இதன்மூலம் கூர்ந்து ஆராய முடியும் என்றார். ட்ராட்ஸ்கியோ மார்க்ஸின் சித்தாந்த சட்டகத்தில் ஒட்டி நின்றார். தனியுடைமையை அவர் ஏற்கவேயில்லை. புகாரின் மார்க்ஸின் மனம் இயங்கிய விதத்தை அறிந்து, அதன்படி யோசித்தார். நிலப்பிரபுத்துவ காலகட்டம் முதலாளித்துவம் வழியாகவே கம்யூனிசத்தை நோக்கி வர முடியும். ரஷ்ய விவசாயி நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில் நூற்றாண்டுகளாக வாழ்பவன். நிலஅடிமை அவன். நில உடைமையாளன் ஆவதே அவன் கனவு. அது சிறிதுகாலத்திற்காவது சாத்தியப்பட்டாக வேண்டும். அவனை வலுக்கட்டாயமாக நிலப் பொதுவுடைமை அமைப்புக்கு இட்டுச் சென்றால் அதை வேறு ஒரு வகை நிலஅடிமை முறை என்றே எண்ணுவான். ரஷ்ய விவசாயி தயாராவது வரை புரட்சி ரஷ்யாவிற்குள் வளர்ந்து முதிர அனுமதிப்போம் என்றார் புகாரின்.

இந்தத் தத்துவ விவாதத்தில் ஸ்டாலின் அதிகார விளையாட்டை ஆடினார். ஸ்டாலின் புகாரின் நிலைப்பாட்டை ஆதரித்தார். விவசாயிகளின் தனியுடைமை, ஒருதேசப்புரட்சி ஆகியவற்றுக்காக வாதிட்டார். விளைவாக 1927-ல் மத்தியக் குழுவில் ட்ராட்ஸ்கி தோற்கடிக்கப்பட்டு, விரட்டப்பட்டார். மெக்ஸிகோவிற்கு தப்பிச் சென்ற அவரை ரோமன் மெர்காடர் என்ற உளவாளி பனிக் கோடாலியால் பின்மண்டையில் அடித்துக் கொலை செய்தான். பிறகு அவனது அன்னை அதற்கான பாராட்டுப் பத்திரத்தை ஒரு அணிவகுப்பு விழாவில் வைத்து ஸ்டாலினிடமிருந்து பெற்றுக்கொண்டாள். ட்ராட்ஸ்கியின் ஆதரவாளர் என்று கருதப்பட்ட ஒவ்வொருவரும் ஒருவர் கூட மீதமின்றி கொன்றழிக்கப்பட்டனர். ட்ராட்ஸ்கி செம்படைக்கு எதிராகவும் லெனினுக்கு எதிராகவும் புரட்சியின்போதே சதி செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டார். அவர் ஜெர்மானிய உளவாளி என்று 'நிரூபிக்கப்பட்டது.' இன்றுகூட இப்பிரச்சாரம் தொடர்கிறது.

ட்ராட்ஸ்கியை ஒழித்தபிறகு திடீரென்று ஸ்டாலின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகத் திரும்பினார். உடனடியாகப் பெருந்தொழில்கள் உருவாக்கப்பட வேண்டும். அதற்கேற்ப விவசாய முறை மாற்றப்பட வேண்டும் என்று கூற ஆரம்பித்தார். அவர் தன் சந்தேகத்திற்குரிய ஆதரவாளர்களை ஒழிக்க விரும்பினார் என்பது ஒரு விஷயம். மறுபக்கம் ட்ராட்ஸ்கியைப்போலவே ஸ்டாலினும் ஒரு இராணுவத் தளபதி என்பதை நாம் கவனிக்க வேண்டும். களவாடங்களும், ராணுவத்தின் விசுவாசமுமே அவரது பலங்கள். ராணுவம் வலிமைபெற தொழில்துறை வலிமை பெற வேண்டும். தொழில்துறை விவசாயிகளைச் சுரண்டியே வளர முடியும். ஆகவே அவர் புதிய பொருளாதாரக் கொள்கையை ரத்து செய்தார். விவசாய

களின் நிலங்கள் ராணுவத்தால் பிடுங்கப்பட்டு, வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டு, கூட்டுப் பண்ணைகள் உருவாக்கப்பட்டன. எதிர்த்து கலகம் செய்த விவசாயிகள் கூட்டம் கூட்டமாக கொன்று ஒழிக்கப்பட்டனர். சிறு நில உடைமையாளர்களை குளக்குகள் என்ற அடைமொழியால் குறிப்பிட்ட ஸ்டாலின், அவர்கள் வேரோடு பிடுங்கப்பட வேண்டிய களைகள் என்றார். அவர்கள் புரட்சி எதிர்ப்பாளர்கள், கொல்லப்பட வேண்டியவர்கள் என்று இங்குள்ள மகத்தான மனிதாபிமானிகளான நமது தலைவர்களும் திரும்பத் திரும்பக் கூறினார்கள். லட்சக்கணக்கான விவசாயிகள் சைபீரியாவிற்கு நாடுகடத்தப்பட்டு, அங்குள்ள கட்டாய உழைப்பு முகாம்களில் கடும்குளிரில் துப்பாக்கி முனையில் வேலை வாங்கப்பட்டார்கள். பல இலட்சம் பேர் அங்கு குளிரில் வாடி இறந்தார்கள். ஸ்டாலின் காலகட்டத்தை விவசாயிகள்மீது தொழிற்சாலைகள் தொடுத்த பெரும்போர் என்று கூறினால் அது மிகையல்ல. விவசாயிகள் அழிக்கப்பட்டனர்; சிறைப் பிடிக்கப்பட்டனர். வளர்ந்து வந்த பெரும் தொழில் நகரங்களின் புறநகர்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டு, இறுதிச் சொட்டு ரத்தம் இருக்கும்வரை கட்டாயமாக வேலை வாங்கப்பட்டனர். 'மாக்னிட்டோ கார்ஸ்க்' நகரின் வெளியே இருந்த இத்தகைய பெரிய உழைப்பு முகாமின் சித்திரத்தை நார்வே தேசப் பத்திரிகையாளர் ஒருவர் தந்திருப்பது இந்த சிறு நூலில் தனி இணைப்பாக தரப்பட்டுள்ளது. இந்த வன்முறையின் விளைவாக விவசாயம் சீரழிந்தது. உணவு உற்பத்தி குறைந்தது. உற்பத்தியான உணவு ஆயுதமுனையில் சேகரிக்கப்பட்டு, நகரத்துத் தொழிலாளிகளுக்கு அனுப்பப்பட்டது. விளைவாக பெரும் பஞ்சம் சோவியத் நாட்டின் பல பகுதிகளைச் சூறையாடியது. 1933-ல் உக்ரேய்னில் மட்டும் நான்கு லட்சம் பேர் பஞ்சத்தால் மடிந்தார்கள். இது தாது வருடப் பஞ்சத்தில் இங்கு இறந்தவர்களைவிடப் பல மடங்கு அதிகம். பஞ்சம் இல்லை என்று உலகுக்குக் காட்டவும், தொழிற்சாலைக்கு இயந்திரங்களை வாங்கவும், அந்தப் பஞ்சப் பிரதேசங்களிலிருந்தே சேகரிக்கப்பட்ட உணவு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த 'சீர்திருத்தல்' களின் விளைவாக மொத்த மக்கட்தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒருபங்கு அழிக்கப்பட்டது.

ருஷ்ய தேசத்தின் வளர்ச்சி குறித்த புள்ளி விவரங்கள் பெரும்பாலும் தொழில்துறையில் அத்தேசம் அடைந்த வெற்றிகளைப் பற்றியதாகவே உள்ளன. தொழில் வெற்றிகள் உடனடியாக ராணுவ சக்தியாக மாற்றப்பட்டன. விளைவாக சோவியத் நாடு இன்று உலகின் இருபெரும் வல்லரசுகளில் ஒன்றாக மாறியிருக்கிறது. அதை சோஷலிசத்தின் வெற்றியாகச் சித்தரிக்கின்றனர். அதை ஸ்டாலினின் தனிப்பட்ட வெற்றியாகவும் கூறுகின்றனர். அதற்காக ஈவுஇரக்கமின்றி பலி தரப்பட்ட கோடிக்கணக்கான விவசாயிகள் அவர்களுடைய கணக்கில் வருவதே இல்லை.

தோழர்களே, நான் சோவியத் ரஷ்யாவின் வரலாற்றையும் மகத்தான சோஷலிசப் புரட்சியின் கதையையும் எழுத ஆரம்பித்தபோது தற்செயலாக எனக்குப் புகாரினின் மரணம் பற்றிய தகவல் ஒன்று ரஷ்யாவிலிருந்து வந்தது. எப்படி அது வந்தது என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை. ரஷ்ய விவசாயிகளில் சிலர் இன்னும் புகாரினுக்கு உள்ளார்ந்த நன்றியுடன் இருக்கிறார்கள்போலும். என்ன நடந்தது என்று அதனூடாக அறிந்தேன்.

ரஷ்ய விவசாயிகள் கூட்டம் கூட்டமாகக் கொன்றொழிக்கப் படுவதைக் கண்ட புகாரின் அப்போதுதான் தன் தவறை உணர்ந்தார். ஸ்டாலினுக்கு எதிராகக் கடுமையாகப் போராட ஆரம்பித்தார். 1934-ல் ஸ்டாலினுக்கு உறுதுணையாக இருந்த பொலிட்பீரோ உறுப்பினர்களான ஸினோவியேவும், காமனேவும் கட்சிக்கு எதிரானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்களுக்கு எதிராக மிகப் பெரிய அவதூறுப் பிரச்சாரம் முதலில் ஏவிவிடப்பட்டது. அவர்களுடைய ஆதரவுத் தளங்கள் முற்றிலும் அழிக்கப்பட்ட பிறகு, அவர்கள் தேசத் துரோகிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். ட்ராட்ஸ்கியின் உத்தரவுக்கு ஏற்ப ஸ்டாலினைக் கொல்ல அவர்கள் முயற்சி செய்ததாகவும், மத்தியக் குழு உறுப்பினரான கிரோவ் என்பவரைக் கொன்றதாகவும், குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்கு ஆளாக்கப்பட்டனர். சிறையில் கடுமையான சித்திரவதை மூலம் குற்றங்கள்மீது ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அவ்வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் முன்வைத்து, அதனடிப்படையில் மரண தண்டனை விதித்து, உடனடியாக அதை நிறைவேற்றுதல்தான் ஸ்டாலின் காலத்திய நீதி நிர்வாக மரபு! இது பதினாறாம் நூற்றாண்டில் சிந்தனையாளர்களை மதத் துரோகிகள் என்று கூறி எரித்துக் கொன்ற கிறிஸ்தவப் பாதிரிகள் கையாண்ட அணுகுமுறை. கடும் சித்ரவதை மூலம் வலுக்கட்டாயமாகப் பெறப்பட்ட வாக்குமூலத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, வாழ்நாளெல்லாம் ரஷ்யாவுக்காக உழைத்த, ரஷ்யப் புரட்சிக்காக ரத்தம் சிந்திய, தியாகிகளும் பெருவீரர்களுமான பேரறிஞர்களுமாகிய தோழர்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். இங்குள்ள நமது தலைவர்கள் அக்கொலைகளையும் நியாயப்படுத்து கிறார்கள். அல்லது அப்படியேதும் நிகழவே இல்லை, அப்படிப்பட்ட நபர்களே இல்லை, எல்லாம் முதலாளித்துவ அவதூறு என்கிறார்கள். கண்டிக்கப்படும் தோழர்களிடம் பிற தோழர்களைச் சம்பந்தப்படுத்தும் வாக்குமூலம் பெறப்படுவது ஸ்டாலினிச வழக்கம். இதன் மூலம் படுகொலைகள் தொடர்ந்து நிகழும். ஸினோவியேவ் காமனேவ் இருவரிடமிருந்தும் கார்க்கிக்கு விஷமிட்டது, கிரோவைக் கொலை செய்தது ஆகியவை சார்ந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட போது புகாரினுக்கும் இதில் பங்குண்டு என்றும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆனால் மத்தியக்குழு புகாரினைக் கைதுசெய்ய அனுமதி மறுத்துவிட்டது. போதிய ஆதாரமில்லை என்று அது கருதியது. ஸ்டாலின் மத்தியக் கமிட்டியின் மக்கள் கமிசாராக இருந்த யகோதாவை உடனடியாகப் பதவிநீக்கம் செய்தார். அங்கு தனது அடியாளாகிய யகோவை நியமித்தார். யகோவ் பொலிட்பீரோவிற்கு நியமிக்கப் பட்ட பிறகு எதற்கும் தயங்க வேண்டிய அவசியமில்லாமலாயிற்று. படுகொலைகள் தங்குதடையின்றி நடைபெற்றன. உலக வரலாற்றில் எப்போதுமே இதற்கிணையான படுகொலைத் தொடர்கள் நடைபெற்ற தில்லை. இதை ஸ்டாலின் 'களையெடுத்தல்' என்று குறிப்பிட்டார். சதிக் குற்றச்சாட்டும், அக்குற்றம் சாட்டப்பட்டவருடனான தொடர்புக் குற்றச்சாட்டும் அன்றாட நடைமுறையாயின. எவர் குற்றம் சாட்டப் படுவார் என எவருக்கும் தெரிந்திருக்காத நிலையில் ஒவ்வொருவரும் பிறரை அஞ்சும் நிலை ஏற்பட்டது. ஸ்டாலினை எதிர்ப்பது மட்டுமல்ல, எதிர்க்கக் கூடும் என்று தோற்றம் ஏற்படுவதுகூட ஆபத்தாக இருந்தது. முக்கியமானவர்கள் போலி விசாரணைகளுக்குப் பிறகு கொல்லப் பட்டனர். சாதாரணமானவர்கள், கட்சி உறுப்பினர்கள், வெறுமே சுட்டுத்தள்ளப்பட்டனர். நள்ளிரவில் கதவைத் தட்டும் மரண அழைப்புக்காக அஞ்சாது வீட்டில் துயில எவருக்கும் வாய்ப்பிருக்க வில்லை. தோழர்களே, கட்சியின் உறுப்பினர்களில் ஏறத்தாழ பாதிப்பேர் இவ்வாறு கொல்லப்பட்டனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். பதினெட்டாவது கட்சிக் காங்கிரஸுக்கு உறுப்பினராக வந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் மூப்பது வயதுகூட ஆகாத இளைஞர்கள். அப்படியானால் புரட்சிக்காக ஆயுதமேந்திய பழைய செம்படை வீரர்களும் சித்தாந்திகளும் என்ன ஆனார்கள்? இவர்கள் கதி இதுதான் என்றால் பொதுமக்களைப்பற்றி என்ன கூறுவது?

1938-ல் புகாரினும், ரிகோவும், புகாரினின் பிற நண்பர்களும், நண்பர்கள் என்ற ஐயத்திற்குள்ளானவர்களும், கூண்டோடு கைது செய்யப்பட்டனர். அவர்கள்மீது ராஜத் துரோக வழக்கு தொடுக்கப்பட்டது. மாஸ்கோ விசாரணைகள் என்ற பெயரில் இது பிறகு அறியப்படலாயிற்று. புகாரின் 'கடுமையாக' விசாரிக்கப்பட்டார் என்று கூறிக்க முடியும். தன் இளம் மனைவியின் உயிருக்கு விலையாக குற்றத்தை ஒப்புக்கொள்ள அவர் சம்மதித்தார். போலி விசாரணையாக அவர் மனைவி கைது செய்யப்பட்டு சைபீரிய வதைமுகாம்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு கொல்லப்பட்டாள் என்று ஒரு தகவல். அவர் உயிரோடிருப்பதாகவும் கூறப்படுகிறது. இத்தகவல்கள் நான் பல்வேறு செயலி அமைப்புகளினூடாக சிறுகச் சிறுக சேகரித்தவை. ஒவ்வொரு சேர்க்கும் சாத்தியமான ஆதாரங்கள் இத்துடன் பின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவை அங்கு அழிந்து கொண்டிருக்கும் பல கோடி மக்கள் சிறுசிறு தந்திரங்களினூடாக வேறு தேசங்களுக்கு அனுப்பியவை. பிரைப் பணயம் வைத்து நிருபர்கள் திரட்டியவை. இவையெல்லாம்

வெறும் முதலாளித்துவத் தந்திரங்கள் என்றும் முதலாளித்துவ செய்தி அமைப்புகளின் அவதூறுகள் என்றும் உலகம் முழுக்க கம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்கிறார்கள். இவ்வுண்மைகளைக் கூற முயல்பவர்களை கம்யூனிச விரோதிகள் என்றும், முதலாளித்துவக் கைக்கூலிகள் என்றும் கூறி அவதூறு செய்து ஒழித்துக் கட்டுகின்றனர். எத்தனை அறிஞர்கள், படைப்பிலக்கியவாதிகள், அரசியல் முன்னோடிகள் இவ்வாறு இந்தப் பத்து வருடங்களில் இங்கு ஒழிக்கப்பட்டனர் என்பதை நினைவு கூருங்கள். இவற்றைச் செய்பவர்கள் வெறிபிடித்த மானுட விரோதி களல்ல. அப்பழுக்கற்ற நேர்மையும், மனிதாபிமானமும், பெரும் கல்வியறிவும் கொண்ட தோழர்கள். சித்தாந்தத்தின் தீமைக்கு இதைவிட சான்று தேவையா?

எத்தனை பேரழிவு! கணக்குகள் மனம் பதறச் செய்கின்றன. மாபெரும் செம்புரட்சியை நடத்திய தோழர்களில் லெனின் தவிர மீதி அனைவருமே, ஒருவர்கூட மீதியின்றி, புரட்சியின் துரோகிகள் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய குடும்பங்கள் மிச்சமின்றி அழிக்கப்பட்டன. கட்சியின் பொதுக்குழுவில் லெனின் காலத்தில் இருந்த 139 முதல்நிலை உறுப்பினர்களில் 98 பேர் கொல்லப்பட்டனர், 20 பேர் நாடு கடத்தப்பட்டனர். மிஞ்சியவர்கள் வெறும் 11 பேர். கட்சியின் சாதாரண உறுப்பினர்களில் பாதிப் பேர் கொல்லப்பட்டனர். கால் பங்கினர் உழைப்பு முகாம்களுக்கு அனுப்பட்டனர். தோழர்களே, புரட்சியை நடத்தியவர்கள் ஏறத்தாழ அனைவரும் புரட்சியைக் காட்டிக் கொடுத்த துரோகிகளாக புரட்சி நடந்த போதே இருந்திருக்கிறார்கள் என்றால் உண்மையில் அப்புரட்சிக்கு என்ன அர்த்தம்? இன்று அந்த தேசத்தில் ஓடும் உதிரி ஆற்றுக்கு என்ன விளக்கம் கூற முடியும்? ஒரு தேசத்தின் மொத்தக் குடிமக்களில் பாதிப் பேரை அழித்து, மீதியினரை சிறையில் அடைத்து கட்டாய வேலை வாங்கி, கொண்டுவரப்படும் சொர்க்கம் அது என்றால் அதற்கும் கம்யூனிசத்திற்கும் என்ன சம்பந்தம்?

வரலாற்றில் தைமூர்கள் உண்டு. செங்கிஸ்கான்கள் உண்டு. ஹிட்லர்கள் உண்டு. ஆனால் இதற்கிணையான பேரழிவை எந்த ஆட்சியாளனும் நிகழ்த்தியதில்லை. எந்த அதிகார வெறியனும் இப்படிப் பேரழிவின் அச்சத்தில் ஒரு தேசத்தை பரிபூரணமாகக் கட்டிப் போட்டதில்லை. எந்தத் தலைவனும் தன்னை நம்பிய மக்களை இப்படி பரிபூரணமாக நாசம் செய்ததில்லை. இதுதான் நாம் கனவுகாணும் இலட்சிய சமூகமா? இதுதான் சோஷலிசமா? இதுதான் சமத்துவம் பொலியும் பூமியா?

இந்தக் கேள்வியை நான் முன்வைத்தேன் தோழர்களே. முதலில் புகாரின் பெயரை கட்சி வரலாற்றில் எழுதிச் சேர்த்தேன். அப்படி ஒரு மனிதர் இருக்கவே இல்லை, அது முதலாளித்துவ சதி என்று எனக்குச்

கூறப்பட்டது. கட்சியின் அறிக்கையில், அதிகாரபூர்வ வரலாறுகளில், குறிப்புகளில், ஏன் புகைப்படங்களில்கூட புகாரின் முழுமையாக நீக்கப்பட்டிருந்தார். இறந்தவர்களும் கொல்லப்பட்டவர்களும் எவ்வித தடயமும் இல்லாமல் வரலாற்றிலிருந்து பூரணமாக நீக்கம் செய்யப் படுவதை ஒரு விரிவான இயக்கமாகவே நிகழ்த்தியது ஸ்டாலினின் அரசு. அதற்கென நிபுணர்களும் அறிஞர்களும் கொண்ட ஒரு அரசுத் துறையே இயங்கியது. நான் ஆதாரங்களைச் சேகரித்தேன். அப்போது கட்சி என்னைத் தடுத்தது. மிரட்டியது. ஆசைகாட்டியது. பிறகு மன்றாடியது. ஆனால் உண்மை என்னை ஈர்த்தது. இப்போது கூறிய தகவல்களை நான் படிப்படியாக கண்டடைந்ததும் கட்சி என்னை விலக்கியது. என்மீது அவதூறுப் பிரச்சாரம் ஏவப்பட்டது.

இவையெல்லாம் பொய்களாகவும் இருக்கலாம் என்று நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இவற்றைப் பரிசீலிக்கவே கூடாது என்றும், ஸ்டாலின் கறைகளற்ற தூய்மையான கடவுள் வடிவம் என்றும் மூர்க்கமாக நம்பும் மனநிலை மிகவும் அபத்தமானது என்றுபடுகிறது. நாம் இத்தகவல்களை சபைநடுவே முன்வைத்து விவாதிப்போம். ஆதாரங்களைப் பரிசீலிப்போம். தேவைப்பட்டால் ஒரு தூதுக்குழுவை ரஷ்யாவுக்கே அனுப்பி விசாரிப்போம். இவ்விஷயத்தில் நமது நிலைப்பாடு என்ன என்பதை ஒரு பொதுவிவாதம் மூலம் தீர்மானித்து, அதை பகிரங்கமாகவே கடைப்பிடிப்போம். இதுதான் நான் கூறியது. தோழர்களே நீங்கள் இதைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும். அனைத்தையும்விட முக்கியமானது நமது நிலைப்பாடு. கட்சியில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசுகிறார்கள். ஒருவர் அப்படிப்பட்ட எந்த சம்பவமும் நிகழவில்லை என்று அதிகார பூர்வமான நிலைப்பாட்டைத் தானும் கூறுகிறார். இன்னொருவர் ஒரு பெரிய காரியத்திற்காகச் சிறிய பலிகள் தவிர்க்க முடியாதவையே என்கிறார். நூலக்குகளும் கசாக்குகளும் புரட்சியின் எதிரிகள்; நடந்தது போர்; போரில் எதிரியைக் கொல்வது நியாயமே என்று சிலர் கூறுகிறார்கள். எங்கு அழிவில்லை, அமெரிக்கா அடிமை முறையை அழிக்க அரை கோடி பேரை பலி தரவில்லையா என்கிறார்கள். இந்திய சுதந்திரத்தின்போது லவரங்களில் மூப்பது இலட்சம் பேர் சாகவில்லையா என்கிறார்கள். ாம் பலிகளை நியாயப்படுத்துகிறோமா இல்லையா, அதுதான் ன்றால் என்று நான் கூறினேன். நியாயப்படுத்துகிறோம் எதன் அடிப்படையில்? அதைத் தொழிலாளி வர்க்கத்திடம் வெளிப்படையாக முன்வைத்துப் பேச நம்மால் முடியுமா? இதைத்தான் ாம் யோசிக்க வேண்டும் என்றேன். மக்கள் தீர்மானிக்கட்டும். தாங்கள் தாவு செய்வது எதை என அறியும் உரிமை அவர்களுக்கு இல்லையா?

தோழர்களே, அவதூறு மூலம் சிறுமைப்படுத்தப்பட்ட, நடைப் ணமாக மாறிய நான் உங்கள் மனசாட்சிமுன் நின்று நியாயம் கிறேன். என்மீது உள்ள தவறு என்ன? உங்கள் அந்தரங்கம்

நோக்கிக் கேளுங்கள். நீங்கள் என்றால் என்ன செய்திருப்பீர்கள்? சோவியத் ருஷ்யாவில் என்ன நடைபெறுகிறது? அதுபற்றிய உண்மை நிலைகளை எப்படி நாம் ஆதாரபூர்வமாக அறிந்துகொள்வது? அவற்றை நாம் ஏற்கிறோமா? இல்லை என்றால் அவை இங்கும் நடைபெறாது எப்படி தடுப்பது? தோழர்களே, இக்கேள்விகளை இங்கு பாட்டாளி வர்க்கம் அவசியம் எழுப்பியாக வேண்டும். இங்கு சமுதாய மாற்றம் வேண்டும். ஆனால் அது உண்மையான மாற்றமாக இருக்க வேண்டும். சுரண்டலும் அநீதியும் ஒழிய வேண்டும். ஆனால் புதுவகை சுரண்டலாகவும் அநீதியாகவும் அது இருக்கலாகாது. சமதர்ம சமூகம் அமைய வேண்டும். ஆனால் அதன் பெயரில் பேரழிவும் பெரும் பாபமும் நமக்கு வேண்டாம். ஒரு மாற்று அமைப்பை உருவாக்க வேண்டுமெனில் அதுபற்றிய எல்லா விஷயங்களையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

தோழர்களே, பல்லாயிரம் வருடங்களாக நாம் ஒடுக்கப்பட்டோம், சுரண்டப்பட்டோம். ஆனால் நீதி நம் பக்கம் இருந்தது. ஆகவே நாம் தலைநிமிர்ந்து நின்றோம். அந்த நீதியை இழந்துவிட்டோமெனில் இவ்வுலகையே வென்றாலும் எந்தப் பயனும் இல்லை. எதிர்காலத் தலைமுறைமுன் நாம் குற்றவாளிகளாக நிற்க நேரிடலாம். அது நிகழலாகாது. எச்சரிக்கை! தோழர்களே எச்சரிக்கை!

உங்கள் தோழன்,
எம்.வீரபத்ரபிள்ளை

♦

இந்த எழுத்து வடிவம் துண்டுப் பிரசுரமாக வெளியிடப்பட்டிருக்கக் கூடும்
கைப்பிரதியே கிடைத்துள்ளது

2

தோழர்களே,

1917-ல் மாபெரும் ரஷ்யப் புரட்சி நிகழ்ந்தபோது ரஷ்யாவெங்கும ஓர் அவதூறு பரப்பப்பட்டது. லெனின் ஜெர்மானியர்களின் கைக்கூலி என்று. அதற்கான ஆதாரங்கள் வெளியிடப்பட்டன. அது முதல் முயற்சி அல்ல. ரஷ்யாவில் புரட்சியின் விதைகள் ஊன்றப் பட்ட நிமிடம் முதல் உலகப் பூர்ஷுவா வர்க்கம் அவதூறுகளைப் பொழிய ஆரம்பித்துவிட்டது. தொழிலாளர்களைப் பிற மக்களுக்கும், விவசாயி களைத் தொழிலாளர்களுக்கும், ராணுவத்தைத் தொழிலாளர்களுக்கும் எதிராகத் தூண்டிவிடும் சதிகளின் எண்ணிக்கையைக் கூறவே முடியாது. அமெரிக்கா 1915-ல் ஸஸ்ஸன் என்பவரின் தலைமையில் போல்ஷவிக்குகளைப் பற்றிய அவதூறுகளையும், போலி ஆவணங்களை யும், பிற போலி ஆதாரங்களையும் உண்டு பண்ணுவதற்காக நிபுணர்குழு ஒன்றை அமைத்தது. அக்குழு இன்றும் சோவியத் விவகார நிபுணர் குழு என்ற பெயரில் தொடர்கிறது. ஸஸ்ஸன் தயாரித்தவை போலி ஆவணங்கள் என வரலாற்றின் முன் கேலிக்குரியவிதத்தில் வெளிப்படையாக நிரூபிக்கப்பட்டது. தொடர்ந்து இந்த ஏகாதி பத்திய மேதாவிகளின் ஒவ்வொரு சதித் திட்டத்தையும் பாட்டாளிவர்க்கம் தோலுரித்துத் தொங்கவிட்டு வருகிறது. ஆயினும் அவர்கள் சற்றும் கூசவில்லை. ஏனெனில் ஆதிக்க ஆசை முற்றிய அவர்களுக்கு எப்போதும் மான ரோஷம் சுரணை ஏதும் இருந்ததில்லை.

இப்போது உலகமெங்கும் சோவியத் ரஷ்யாவின் புரட்சி அரசு பற்றிய அவதூறுகள் பெருவாரியாகக் கிளப்பி விடப்படுகின்றன. அங்கு கோடிக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டுவிட்டனர், மொத்தக் கட்சி உறுப்பினர் களில் ஏறத்தாழ பாதிப்பேர் கொல்லப்பட்டு விட்டனர், விவசாயிகள் கூண்டோடு அழிக்கப் படுகிறார்கள் என்றெல்லாம் வெட்கமின்றிக் கூவித் திரிகிறார்கள். அதற்கெல்லாம் போலி ஆவணங்களும் அவர்கள் கையில் உள்ளன. ஏகாதிபத்தியத்தின் வரலாறுபற்றி மிக எளிய

புரிதல் உள்ள ஒருவர் இந்த பிரச்சாரத்தில் உள்ள சதியை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

ரஷ்யாவில் ஒரு பெரும் சமூக மாற்றம் நடந்தது. ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த சமூகம் பொங்கியெழுந்து தங்கள் ஆண்டைகளைத் தூக்கி எறிந்தது. சுரண்டலற்ற சமத்துவ சமூகம் ஒன்றை அது அங்கு படிப்படியாகக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறது. அகிம்சை வழியில் அந்த சமூக மாற்றம் நிகழ்கிறது என்று யாரும் கூறவில்லை. எங்களுக்கு அகிம்சையில் நம்பிக்கை இல்லை என்பது ரகசியமும் அல்ல. காலகாலமாக சாட்டையடிபட்டு, பட்டினி கிடந்து, போர்களிலும் பஞ்சங்களிலும் கொன்றொழிக்கப்பட்டு வந்த ஏழைப் பாட்டாளி ஆண்மைகொண்டு நிமிரும்போது அவன் அருள் வழியும் ஞானமூர்த்தியாக இருப்பான் என்று எதிர்பார்ப்பவர்களைப் பற்றி என்ன சொல்ல? புரட்சிக்கு வேட்டுவைக்கத் துடிப்பவர்கள், பதுக்கல் பெருச்சாளிகள், துரோகிகள் கடுமையாகவே அங்கு கையாளப் படுகின்றனர். கட்டாய உழைப்பு மூலம் அவர்களுக்கு பாட்டாளி வர்க்க வாழ்க்கை கற்பிக்கப்படுகிறது. அதற்கு வழிப்படாதவர்கள் அழிக்கப் படுகிறார்கள். அது கொடுமை என்றால், மனித உரிமை மீறல் என்றால், வரலாற்றை முன்வைத்துக் கேட்கிறோம்; எந்த தேசத்தை யோக்கிய மானது என்று கூற முடியும்? அடிமைகளை விடுதலை செய்வதற்காக- இன்னமும் அது அமெரிக்காவில் பூர்த்தி பெறவில்லை – அமெரிக்காஉள் நாட்டுப் போரில் கொண்ட பலி ஐந்து இலட்சம். மிகப் பிற்போக்கான ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள, அது அளிக்கும் ஏட்டுச்சுரைக்காய் சுதந்திரங்களை அடைய, பிரிட்டிஷ் மக்கள் மூன்று இலட்சம் உயிர்களை பலிதந்தார்கள். நெப்போலியனின் சாம்ராஜ்யத்துவ அரசை அமைக்க பிரெஞ்சுப் புரட்சியில் அந்த தேசம் எண்பது லட்சம் பேரைக் காவு வாங்கியது. இந்திய சுதந்திரப் போராட்டத்திலும், அதைத் தொடர்ந்த கலவரத்திலும், மூன்று இலட்சம் பேர் மடிந்தனர். எதற்கு? ஏழைத் தொழிலாளியின் யானைப் பசிக்கு சோளப்பொரி தரக்கூட வக்கற்ற ஓர் அரசைப் பெறுவதற்கு. அப்படியிருக்க ஒரு மகத்தான சமதர்ம அமைப்பை உருவாக்கும் பொருட்டு சிலர் கொல்லப்படுகின்றனர் என்றால் அதை வரலாறு தெரிந்த எவரும் பொருட்படுத்தமாட்டார்கள். தங்கள் கண்ணில் உத்தரத்தை வைத்திருக்கும் முதலாளித்துவ சக்திகள் சோஷலிஸ்டு ரஷ்யாவின் கண்ணில் துரும்பு இருப்பதாக ஆர்ப்பாட்டம் செய்கின்றன.

சோவியத் ரஷ்யாவில் தண்டிக்கப்படுபவர்கள் யார்? புரட்சியை எற்க மறுத்து அரசுடன் போராடும் கசாக்குகள், பொதுவுடைமைக்கு நிலங்களை விட்டுத்தர மறுக்கும் குளக்குகள், புரட்சிக்கு உள்ளிருந்தே துரோகம் செய்யும் கைக்கூலிகள். அவர்கள் கைது செய்யப்பட்டு, முறைப்படி விசாரிக்கப்பட்டு, உரிய ஆதாரங்களுடன் குற்ற நிரூபணம் செய்யப்பட்ட பிறகு, சைபீரியாவிற்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கு உழைத்து வாழ அனுமதிக்கப்படுகிறார்கள். இதை மாபெரும் சித்திரவதை

என்று கூச்சலிடுகிறார்கள் திரிபுவாதிகள். சித்திரவதைதான். ஆயிரம் வருடம் உழைக்காது உண்ட பரம்பரையினருக்கு உழைப்பு என்பது சித்திரவதைதான். ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அமைப்பில் அனைவரும் உழைத்தாக வேண்டும். உழைப்புதான் முதலாளித்துவ விசுவாசிகளுக்கு பாட்டாளி அரசு தரும் தண்டனை தோழர்களே. அது நியாயமா இல்லையா என்று நீங்கள் கூறுங்கள். உழைப்பு முகாமை வதைமுகாம் என்று கூறுபவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நீங்களே புரிந்துகொள்ளுங்கள். எங்களைப் பொறுத்தவரை குழப்பமே இல்லை. எங்கு புரட்சி வருகிறதோ அங்கு அனைவரும் உழைக்கும் நிலை ஏற்படுத்தப்படும். அதில் சமரசமே இல்லை. அது மனிதாபிமானம் இல்லை என்றால் நாங்கள் மனிதாபிமானிகளே இல்லை. சோவியத் நாட்டில் உதவாக்கரை தனிநபர்வாதம் பேசி, பாட்டாளி வர்க்க அரசை எதிர்த்து, கருத்துக் குழப்பம் விளைவிக்கும் எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் கூட உழைப்பு முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். தொழிலாளர்களை முரடர்கள் என்றும் பண்பாடற்றவர்கள் என்றும் கருதும் இந்த மேட்டிமைவாதிகள் மண்ணில் உழைத்து அவர்கள் உண்ணும் சோறு எப்படி எவரால் உருவாக்கப்படுகிறது என்று அறியட்டும். அவர்களுக்கு உண்மையைக் கற்பிக்க வேறு வழியே இல்லை. அவர்களிடம் விவாதம் செய்ய பாட்டாளி வர்க்கத்திற்கு நேரம் இல்லை.

இத்தனை அவதூறும் எதற்கு என நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். சோவியத் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. உழைப்பு அவமதிக்கப்படுவதில்லை. விபச்சாரம், களவு, யாசகம், அடிமை முறை எதுவும் அங்கு இல்லை. உலகின் இரும்பு உற்பத்தியில் நாற்பது விழுக்காட்டை சோவியத் நாடு மட்டும் நிகழ்த்துகிறது. உலகின் உணவு உற்பத்தியில் பதினெட்டு விழுக்காடு அங்குதான். உணவு வல்லரசுகளில் ஒன்றாக மாற்றிய மாமனிதனைப்பற்றி வெளிப்படையாகப் பாகுபாடும் இன்றி அனைவருக்கும் கிடைக்கும் தேசமும் அது ஒன்றுதான். உலகின் எண்ணை உற்பத்தியிலும் நிலக்கரி உற்பத்தியிலும் இரண்டாமிடம் சோவியத் ரஷ்யாவிற்குத்தான். தோழர் ஸ்டாலின் தலைமையில் ரஷ்யா அடைந்த மாபெரும் வளர்ச்சி பற்றி புகழாளித்துவப் பொருளாதார அறிஞர்கள் தீட்டிக் காட்டும் சித்திரம்தான் இது. போரினால் பாழ்பட்டு சீரழிந்து கிடந்த ஒரு தேசத்தை உலகின் மேலான வல்லமைகளில் ஒன்றாக மாற்றிய மாமனிதனைப்பற்றி தோற்றுக்குத் தன் சொந்தக் குடிமக்களில் மூன்றில் இரண்டு பங்கை பலிகொடுத்து விட்டுள்ள இந்த தேசத்துக் குடிமகனுக்கு தார்மீக உரிமை உண்டா?

தோழர் ஸ்டாலின் தலைமையில் 1940-ல் ரஷ்ய அரசு செய்த சாதனைகளைப் பட்டியலிடுவது வேறு யாருமல்ல, அமெரிக்க நுண்ணறிவுப் நிபுணர்களும் பொருளாதார அறிஞர்களும்தான். 1939-ல் நடைபெற்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு உணவு உற்பத்தி 1913லிருந்த உணவு உற்பத்திக்கு இரு மடங்கு. நிலக்கரி

உற்பத்தி 17 மடங்கு. எண்ணை உற்பத்தி 14 மடங்கு. சோவியத் ரஷ்யாவில் 16 குடியரசுகள் தங்களை பெருப் விருப்பத்துடன் இணைத்துக்கொண்டன. கம்யூனிசக் கூட்டமைப்பில் ஐரோப்பிய நாடுகளில் பாதிப் பங்கு தங்களை விரும்பி இணைத்துக் கொண்டன. அதன் பிறகு இரு ஐந்தாண்டுத் திட்டங்களில் இவ்வளர்ச்சி மேலும் அதிகரித்துள்ளது. தோழர்களே, இதற்கு நேர்மாறாக முதலாளித்துவ அமைப்பு சரிந்துகொண்டிருக்கிறது. காலனியாதிக்க நாடுகளான பிரிட்டனும், பிரான்சும், ஹாலந்தும், டென்மார்க்கும், ஸ்பெயினும் சீர்குலைந்துவிட்டன. தன் நிலவளங்களைக்கடுமையாகச் சுரண்டுவதன் மூலம் அமெரிக்கா தன்னை ஓரளவு உறுதிப்படுத்திக் கொண்ட போதிலும், அதன் பல பகுதிகளில் பெரும் பஞ்சங்களும் வறட்சியும் பரவிவருகின்றன. இந்த தேசங்களின் முதலாளித்துவ சக்திகள் சோவியத் ரஷ்யாவின் வளர்ச்சி கண்டு அஞ்சுகின்றன. புதிய சமதர்ம அமைப்பு கண்டு உள்ளம் பொங்கும் தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்கள் தேசங்களிலும் அணி திரள்வதைக் கண்டு அவர்கள்.கலங்குகின்றனர். இன்று கிளப்பிவிடப்பட்டுள்ள அவதூறுகளுக்குக் காரணம் இந்த அச்சம் மட்டுமே.

ஹிட்லரைப் பயன்படுத்தி சோவியத் அரசை அழித்துவிடலாம் என்று கனவு கண்டன முதலாளித்துவ சக்திகள். அந்த நெட்டைக் கனவு பாட்டாளி வர்க்கத்தால் சிதறடிக்கப்பட்டது. இன்று அவதூறுகளால் சோவியத் அரசை அழித்துவிடலாம் என்று பெட்டைக் கனவு காண்கின்றன அவை. இந்தக் கனவும் சிதறடிக்கப்படும். உலகப் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெறும். இந்த அழகிய பூமி உழைப்பாளிகள் சொத்தாக மாறும். அந்த நாள் நெருங்கி வருகிறது. அன்று அவதூறு பரப்பும் துரோகிகளும் கைக்கூலிகளும் உரிய முறையில் தண்டிக்கப்படுவார்கள். அவர்களை ராஜஸ்தான் பாலைவனத்தை சோலைவனமாக்குங்கள் என்று உத்தரவிட்டு அனுப்பிவோம். பாட்டாளி வர்க்கத்தின் தண்டனை அது. அழிக்கத் தெரியாது/ பாட்டாளி வர்க்கத்திற்கு, பண்படுத்தவே தெரியும்.

ஓங்குக சோவியத் புரட்சி சமதர்ம அரசு.
ஓங்குக தோழர் ஸ்டாலின் புகழ்.
வெல்க பாட்டாளி வர்க்க எழுச்சி.

இன்குலாப் சிந்தாபாத்
இன்குலாப் இன்குலாப்
இன்குலாப் சிந்தாபாத்

மாவட்ட செயற்குழு,
இந்திய பொதுவுடமைக் கட்சி.

3

பெருமதிப்பிற்குரிய பிள்ளையவர்களுக்கு,

தங்கள் சிறு கடிதத்தில் இருந்த எள்ளலின் முழுப் பரிமாணத்தையும் ஒரிருமுறை படித்த பிறகுதான் அறிந்தேன். சில மணி நேரம் அது என்னை அமைதியிழக்கச் செய்தது. நீங்கள் குறிப்பிட்டது முற்றிலும் உண்மை. குருஷ்சேவ் மூலம் வெளிவந்த உண்மைகளின் பிரம் மாண்டம் உலக அளவில் கம்யூனிஸ்ட் கட்சிகளை பெரிய அளவில் பாதிக்கவில்லை. இந்தியாவில் அது ஒரு கொசுக்கடிக்குமேல் பொருள்படவில்லை; யானைத்தோலில் கொசுக்கடி. பீரங்கிச் செவிடனுக்குக் கிலுகிலுப்பை ஆட்டிக்காட்டிய முட்டாள்தான் நான். ஐயமேயில்லை. ஆனால் நீங்கள் குறிப்பிடும் இந்த அபத்த நிலையைப் பலவருடங்களுக்கு முன்னதாகவே அதி தீவிரமாக நான் அனுபவித்தறிந்துவிட்டேன். சுயநிந்தையின் உச்சங்களில் பித்தெடுத்து அலைந்த நாட்கள் உண்டு. அதன் உச்சத்தில் நான் தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும். ஆனால் காவிய முடிவுகள் காவியங் களுக்கு வெளியே ஒருபோதும் சாத்தியமாவ தில்லை. எனவேதான் காவியங்களின் தீவிரமோ முழுமையோ ஒழுங்கோ இல்லாமல் வாழ்க்கை வெளிறிக்கிடக்கிறது போலும். வாழ்வின் இந்தக் கூசிக் குறுக வைக்கும் அர்த்தமின்மையிலிருந்து தப்பி இளைப்பாறும் பொருட்டு மனிதன் உருவாக்கிக்கொண்டவையே காவியங்கள்.

என் இளமையை அளித்து நான் பெற்றுக்கொண்ட ஒவ்வொன்றையும் இந்தப் போராட்டத்தில் பணயம் வைத்து இழந்திருக் கிறேன். ஆனால் நாடகம் முடிந்து திரையிறங்கிய கணமே எல்லாம் எத்தனை அபத்தமான கூத்துகள் என்று புரிந்து விட்டது. அதை அகமனம் புரிந்த பிறகும்கூட ஒத்திப்போட முயன்றது புறமனம். கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு தீவிரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு நான் செய்த முயற்சிகள் பல. நம்புவீர்களா, என்னைப்பற்றிய ஒவ்வொரு அவதூறையும் தேடிப் போய்க் கேட்டறிவேன். ரத்தம் நுரைத்து தலைக்கேற அதன் போதையில்

அலைந்து திரிவேன். அவதூறுகளின் தீவிரம் குறைவதையும் அவற்றில் பிறர் காட்டும் ஆர்வம் மங்குவதையும் காணக்காண என் மனம் பதைத்தது. அதன் சரியான பொருளை என் அகம் நன்கறிந்திருந்தது என்பதே அதற்கு காரணம். ஒரு கட்டத்தில் நானே பொய்யான அவதூறுகளைக் கற்பிதம் செய்து அதை பிறர் கூறியதாக வேறு சிலரிடம் சொல்லிப் பரப்பவும் முயன்றேன். ஒன்றும் செய்வதற்கில்லை; திரை சரிந்துசரிந்து வந்து முற்றிலும் மூடியது. திரை மூடிவிட்ட விஷயம் தெரிந்தும் அதை ஏற்காமல் காலி அரங்கில் யாரும் பார்க்காமல் மேலும்சில நாள் நடித்துக் கொண்டிருந்தேன். அதற்கும் முடிவு வந்தது. காளைச்சந்தை பக்கமாகப் போகும்போது அங்கு சுமை தூக்கும் தொழில்காளர்களின் தெருமுனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. செல்லப்பன் நாயர் பேசிக்கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் மிகச் சாதாரணமாக ஒரு புன்னகையை அளித்துவிட்டு தொடர்ந்து பேசினான். சொற்களின் தொடர் ஒரு அடிகூட தடுக்கவில்லை. ஓரிரு தலைகள் சாதாரணமாகத் திரும்பிப் பார்த்துவிட்டுப் பேச்சிலாழ்ந்தன. நம்ப முடியாமல் விலகிநின்று பார்த்தேன். படபடப்பு விலகியதும் அசைக்க முடியாத பாறைபோல அந்த உண்மை என் வழியை மறித்து அமர்ந்திருக்கக் கண்டேன். ஆட்டம் முடிந்துவிட்டது. இறந்த காலத்தைச் சேர்ந்த வெறும் ஒரு பெயராக நான் மாறியாயிற்று. அன்றுதான் முதன்முறையாக மனமுடைந்தேன். கைப்பணம் தீரக் குடித்து ரத்தம் வர வாந்தியெடுத்து சாலையோரம் விழுந்து கிடந்து இரவைக் கழித்தேன்.

அதன்பிறகு எட்டுமாதம் கழித்துதான் இருபதாம் கட்சிக் காங்கிரஸில் குருஷ்சேவ் முன்வைத்த 'இரகசிய' அறிக்கை புயல்போல உலகெங்கும் வெளியாகி பல லட்சம் மனசாட்சிகளை (தற்காலிகமாக) உலுக்கியது. அன்று எம்பரர் தோட்டத்து கிளைச் செயலர் ராஜு நாடார் என்னைத் தேடி வந்திருந்தான். அவன் கையில் உருட்டச்சு செய்யப்பட்ட அறிக்கை நகல் இருந்தது. (டெல்லியில் கட்சிக்குள் இருந்த ஒரு அதிருப்தி கோஷ்டி முழு நேர வேலையாக நகலெடுப்பை நிகழ்த்தி இந்தியா முழுக்கக் கொண்டு சேர்த்துவிட்டது. என்ன வேகம்! எத்தனை நம்பிக்கை! பாவம்!) அன்று என் அறையில் நான் சிறு காய்ச்சலுடன் படுத்திருந்தேன். ராஜுவை அந்நேரத்தில் அங்கு எதிர்பார்க்கவேயில்லை. வரவேற்று அமரச் சொன்னேன். கண்கள் சிவந்து கலங்கி முகம் சுண்டியிருந்தது. குடித்திருக்கிறானா என்று யோசித்தேன், வாசனை வரவில்லை. (எனக்குத்தான் அந்த வாசனை ஒரு மைல் தள்ளியே தெரியுமே) சில கணங்கள் என் கண்களைத் தவிர்த்தபடி அமர்ந்திருந்தான். பிறகு அறிக்கை நகலை என்னை நோக்கிப் போட்டான். எனக்கு உடனே ஏற்பட்ட எண்ணம் – இதை இப்போதும் நம்புவதற்கு சிரமமாகவே இருக்கிறது. மனம் இயங்குவதை கண்ட பிறகே மனதின் அந்த இயக்க ரகசியத்தை நாம் அறிகிறோம் – என்னைக் கட்சிக்குள் திரும்ப எடுத்துக்கொள்ள தீர்மானித்திருக்கிறார்கள் என்பதுதான். ஒரு கணத்திற்குள் கற்பனை தாவித்தாவி ஓடி, எங்கெங்கோ தொட்டு மீண்டது. இனி தனிமை இல்லை, வறுமை இல்லை. இனி அடையாளங்களின்மையின் வெறும்

வெட்டவெளி இ... அவர்களைக் கடுமையாகப் புண்படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். ஆக்ரோஷமாக அவர்கள் மூஞ்சியில் காறித்துப்ப ஒரு சந்தர்ப்பம். அதை எண்ணியபோது இனிய உவகையில் உடல் பரபரத்தது. ஆனால் அறிக்கையைப் படித்தபோது கொஞ்சநேரம் ஏதும் புரியவில்லை. சொற்களில் கண்கள் தத்தி நகர்ந்தன. திடீரென மூளைக்குள் மின்னதிர்ச்சி ஏற்பட்டது. மனம் உடம்பெங்கும் எதிரொலிக்க அறைந்தது. படித்து முடித்ததும் வெகுதூரம் ஓடி நின்ற களைப்பு ஏற்பட்டது. மடித்து தரைமீது போட்டபடி பேசாமல் அமர்ந்திருந்தேன்.

ராஜு அங்கு வந்தது ஏன் என்று வெகுநாள் கழித்து இப்போது புரிகிறது - என் வசைகளையும் வினாக்களையும் எதிர்கொண்டு தன் குற்றவுணர்வுக்கு வடிகால் தேட. அவன் சட்டையைப் பற்றிக் கன்னங்களில் நான்கு அடி போட்டிருந்தால் அல்லது மூஞ்சியில் காறித் துப்பியிருந்தால் அவன் ஆத்மா குளிர்ந்திருக்கும். என் அமைதியை அவனால் தாங்க முடியவில்லை. மெல்ல என் அணையின் ஓரத்தில் துளைபோட முயன்றான் ''ஏமாற்றிவிட்டார்கள் தோழர். பைத்தியக் காரர்களாக ஆக்கிவிட்டார்கள் நம்மையெல்லாம்'' என்றான். நான் தலையை அசைத்தேன். ''நீங்கள் சொன்ன ஒவ்வொன்றுக்கும் பத்து மடங்கு தீவிரமான ஆதாரம் வெளிவந்துவிட்டது தோழர்'' என்றான். அது என்னை களிப்படையச் செய்யும் என்று அவன் எதிர்பார்த்தான் என்றுபடுகிறது. ஆனால் எனக்கு ஏற்பட்டது ஆழ்ந்த ஏமாற்றமும் சலிப்பும்தான். எனது முக்கியத்துவமும் தனித்தன்மையும் அந்த அறிக்கையின் மூலம் இல்லாமலாகிவிட்டது என்று எண்ணினேன். அவ்வறிக்கையை கட்சி ஏற்றுக்கொண்டு சொல்லிவந்த அனைத்தையும் திருத்திக்கொண்டதென்றால் எனது தியாகங்களுக்கு அர்த்தமேயின்றிப் போய்விடும் என்று கற்பனை செய்தேன். பிறகு அந்தத் தன்மையச் சிந்தனையின் அபத்தத்தையும் மறைமுகமான குரூரத்தையும் உணர்ந்து குற்றவுணர்வும் கோபமும் கொண்டேன். கோபம் பிறர்மீது. குற்றவுணர்விலிருந்து எழும் கோபம் தர்ம சங்கடமான நிலைமையை உருவாக்கும் முன்னிலை மனிதர்மீதுதான் உடைத்து பாயும். ராஜுவைக் கட்சி அனுப்பிய உளவாளி என்று கூறி வசைபாடினேன். அந்தக் கோபத்திலும் அத்தனை துல்லியமாக என் மனம் கணக்கிட்டு, மிக மட்டமான இடத்தில் தாக்கியது குறித்து எனக்கு இப்போது வியப்பில்லை. ராஜு என்னுடன் சேர்ந்து கட்சியை வசைபாடும், கரித்துக் கன்னுடைய மழுங்காத மனசாட்சியைப்பற்றி எனக்குத் தெரிந்து என் அங்கீகாரத்தினுடாக அதைத் தனக்குத்தானே உறுதி செய்துகொள்ளவும்தான் அங்கு வந்திருந்தான். எனது தாக்குதல் அவனை மௌனமும் பேச முடியாத மூளைக்கு இட்டுச் சென்றுவிட்டது. என்ன பேசினாலும் அது உளவாளியின் நடிப்பாக மாறிவிடும். மனமுடைந்து ஏதேதோ உளறிவிட்டு எழுந்து போனான். அவன் போன பிறகான எனக்கு நிதானம் திரும்பியது. குருஷ்சேவின் அறிக்கையைக் ஏற்கலாம், நிராகரிக்கலாம்; இரண்டுக்கும் அர்த்தமில்லை. ஏனெனில்

மொத்தத்தில் இந்த விஷயமே கட்சிக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் எந்த வகையிலும் முக்கியமல்ல. எதிரே தானிருக்கிறது கொழும்பு சிவனு நாடார் மளிகை வியாபாரம். அதற்கும் ஸ்டாலின் விவகாரத்திற்கும் என்ன தொடர்போ அதைவிடப் பெரிய அளவு தொடர்பு ஏதும் கட்சிக்கு இல்லை. கொள்கையும் இலட்சியமும் சித்தாந்தமும் எல்லாம் மேல்மட்டத்தில் நடைபெறும் நுட்பமான பாவனைகள் மட்டும்தான். சிவனு நாடார் 'கதிர்வேல் முருகா' என்று கடை முழுக்க எழுதி வைத்திருக்கிறார். 'கதிரை முருகன் துணை' எழுதாமல் கணக்கு எதையும் எழுதத் தொடங்கமாட்டார். முருகனே வந்தாலும் கால்கிலோ புளி காசு வாங்காமல் தந்துவிடுவாரா என்ன?

ஒரு மாசத்தில் குருஷ்சேவும் குப்பைக் கூடைக்குப் போய்ச் சேர்ந்தார். ஸ்டாலின்பற்றி உலகமே விவாதித்துக்கொண்டிருந்தபோது மேலிடத்திலிருந்து பி.டி.ரணதிவே எழுதிய கட்சிக் கடிதம் இங்கு கடைசி வார்த்தையாக அங்கீகரிக்கப்பட்டது. எந்தக் கேள்வியும் எழவில்லை. எந்த ஒழுங்கும் குலையவில்லை. எவரும் கட்சியைவிட்டுப் போகவுமில்லை. இன்னொரு விசித்திரமும் நடந்தது. சஞ்சலப்பட்டவர்களுக்கெல்லாம் ஆறுதல் பரிசுகள் கிடைத்தன. ராஜு நாடார் மாவட்டப் பொறுப்புக்குப் போனது இப்படித்தான்.

குருஷ்சேவ்அறிக்கையின் முக்கியமான பலவீனம் என்ன? அது தார்மீகத்தின் அடிப்படை கொண்டது அல்ல என்பதே. அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, அதைத் தக்க வைத்துக்கொள்ளும் பொருட்டு ஸ்டாலினால் உருவாக்கப்பட்ட அதிகாரப் பேரமைப்பைக் கலைத்து விடும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட அறிக்கை அது. அதில் டிராட்ஸ்கிக்கும் புகாரினுக்கும் எதிராக ஸ்டாலின் சுமத்திய குற்றச்சாட்டுகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டதை இதற்குச் சான்றாகக் கூறுவேன். ஏனெனில் டிராட்ஸ்கியவாதிகளையும் புகாரினியவாதிகளையும் மீண்டும் தலையெடுக்கவிட குருஷ்ஷேவ் விரும்பவில்லை. அது ஒரு மாற்று அறத்தை முன்வைக்கவில்லை. ஒரே விதமான உலகப் பார்வையின் இன்னொரு சாத்தியப்பாட்டை மட்டுமே முன்வைத்தது. தனிமனிதத் துதியை உருவாக்கியதும் தனது தனிப்பட்ட இலாபத்திற்காகப் படுகொலைகளை நிகழ்த்தியதும்தான் ஸ்டாலினின் தவறுகள் என்றார் குருஷ்சேவ். அப்படுகொலைகளைக் கட்சி, கம்யூனிஸ்ட் கொள்கையின் பொருட்டு, பொதுத் தீர்மானத்தின் அடிப்படையில் நிகழ்த்தியிருந்தால் அவர் அதை நியாயப்படுத்தியிருப்பார்.

குருஷ்சேவ் கூறியவையெல்லாம் உண்மை. ஆனால் தீய நோக்கம் கொண்ட உண்மையும் பொய்யே. உலகம் முழுக்க குருஷ்சேவை முன்வைத்து நடந்த விவாதங்களில் அறமும் மனசாட்சியும் பேசும் பொருளாக வரவேயில்லை என்பதற்கான காரணம் இதுவே. உலக கம்யூனிஸ்டுக் கட்சிகளில் பெரும்பாலானவை குருஷ்சேவின் குற்றச் சாட்டுகளை உதாசீனம் [illegible] தக்கவைத்து

கொண்டதற்கு வசதியாக அமைந்த அம்சமும் இதுவே. கருக்கம் தர்மீகத்தின் முன்பு மட்டுமே தோற்கும்.

இப்போது நீங்கள் கேட்பது புரிகிறது. என்னையும்தானே தோற்றடித்துவிட்டார்கள், இல்லையா? இல்லை; நான் தோற்கடிக்கப் படவில்லை. நான் தோற்கடிக்கப்பட்டேனா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியது அவர்களல்ல, நான்தான். ஆம், தோற்றுவிட்டேன் என்று நான் எனக்குள் முழுமையாக ஒத்துக் கொள்ளும்போதுதான் என் தோல்வி நிகழ்கிறது. எல்லாவிதமான சுய நிந்தனைகளுக்கும் சுய எள்ளல்களுக்கும் பிறகு என் மையமான அறவுணர்வு உயிர்த்தீவிரம் குன்றாமலேயே எஞ்சுகிறது. ஒவ்வொரு எதிர் தருக்கமும், ஒவ்வொரு நிதரிசனமும், ஒவ்வொரு திட்டவட்டமான ஆதாரமும் அதற்கு நீரூற்றவே செய்கின்றன. அதுவே என் சாரம். நான் விதை. அது விதையிலுறங்கும் தாவரம். நான் மட்குவது அது முளைப்பதற்காகத்தான். ஒருவிதமான நியாயப்படுத்தலுமின்றி இதை சொல்கிறேன். ஆனால் அந்தரங்கமாக நெஞ்சில் கைவைத்து இதைச் சொல்கிறேன். நான் வீழ்த்தப்பட்ட மரமல்ல; புதைக்கப்பட்ட விதை. இதை நீங்கள் நம்பலாம். நம்பியாக வேண்டும். நம்பவில்லையெனில் நீங்களும் இறந்துவிட்டீர்கள் என்றுதான் பொருள். உங்கள் உடலும் உலகும் ஏற்கனவே மட்க ஆரம்பித்துவிட்டிருக்கின்றன என்றே பொருள்.

வெறும் சொற்கள் இல்லையா? ஆனால் அர்த்தமற்றதும் உத்வேகம் நிரம்பியதுமான வெற்றுச் சொற்கள் தரும் மெய்மையின் தரிசனத்தை ஒழுங்குள்ள தருக்கம் ஒருபோதும் தருவதில்லை.

தங்கள்,
எம்.வீரபத்ரபிள்ளை
18.8.1955

4

...பெரும்பாலான நாட்களில் புகாரினை விட, தர்ம நியாயங்களைவிட அதிகமாகப் பசியைப் பற்றித்தான் எண்ணியிருக்கிறேன் என்று கூறினால் நீங்கள் வியப்படைய மாட்டீர்கள் என்று நம்புகிறேன். பசி என்பது உண்மையில் ஒரேவிதமான அனுபவம் அல்ல. ருசியான உணவு கிடைக்கும் என்ற உறுதி உள்ள ஒருவனுக்குப் பசி என்பது ஓர் இனிய அழைப்பாக இருக்கக்கூடும். கடுமையாக உழைத்தபிறகு பசி உடலெங்கும் ஊறிப் பரவுவது ஓர் இனிய அனுபவம். பசித்த வெகுதூரம் நடக்கும்போது பசி தூரத்தை அளக்கும் முழக்கோல். கணம்தோறும் சுருங்கிவரும் முழக்கோல். தனியறையில் பசித்துப் படுத்திருக்கையில் அது ஒரு ஓயாத சத்தம். காத்திருக்கும்போது நச்சரிப்பு. ஆனால் பசியின் பயங்கரம் அதற்கான உணவு கிடைக்கும் என்பது எவ்விதத்திலும் நிச்சயமற்ற ஒன்றாக இருக்கும்போதுதான் தெரியவரும். அந்தப் பசி அணைக்கப்படாது பெருகி நம் உயிரையே காவு கேட்கும் வாய்ப்பு உள்ளது என்று அறியும்போது பசி என்பது ஒரு பெரும் அச்சம். அப்போது அது மௌனமாக, தந்திரமாகப் பதுங்கி நெருங்குவது போலிருக்கும். முதலிலேயே அதன் தொலைதூரக் காலடியில் மண் நெரிபடும் ஒலி கேட்கும்போது அதை அறிந்துவிடுவோம். ஆனால் மிகவும் புத்திசாலித்தனமாகச் செயல்படும் பாவனையுடன் அதைப் புறக்கணிப்போம். மிகத் தீவிரமான ஒரு நூலை எடுத்து, தீவிரமாக முகத்தை வைத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்து விடுகிறோம். அல்லது வரும் நூற்றாண்டில் மானுட குலத்தில் சமத்துவமும் சுபிட்சமும் விளைய நாம் வைத்திருக்கும் திட்டங்களைப் பற்றிய கனவுகளின் மூட்டையை அவிழ்த்து கிறோம். அல்லது ஜன்னல் வழியாக இயற்கையை ரசிக்கிறோம். சதையின்மீது ஆன்மா தொடுக்கும் போர். வெற்றிவே வீரவேல்! பரிதாபம். பசித்து, அப்பசியை தவிர்க்க நெஞ்சு நிமிர்த்தி வரும் ஒருவனை அடையாளம் மைலுக்கு முன்பாகவே அவனிட கண்டுகொள்வேன். ஆனால்

பேசமாட்டேன். முற்றிலும் புறக்கணித்து முகம் திருப்பி நடந்து போய்விடுவேன். அந்த பரிதாபத்திற்குரிய பிராணி எனக்கு மிகுந்த சுமட்டலைத் தருகிறான். அவன் மீதான பரிதாபம் தரும் குமட்டல் அது. ஆனால் நானும் அவர்களில் ஒருவன்.

என் அனுபவத்தில் பசியை வெல்ல மிகச் சிறந்த வழி காமம் சார்ந்த பகற்கனவுகளில் அமிழ்வதும், உடல் சோர்ந்து நரம்புகள் வலிக்கும்வரை சுயபோகம் செய்வதும்தான். அதிகபட்சம் மூன்று மணி நேரம்வரைகூட கடும்பசியை இவ்வாறு தள்ளிப் போட்டிருக்கிறேன். சதையை ஆத்மாவால் வெல்ல முடியாது. அவை ஒன்றையொன்று சந்திக்க முடியாத இருவேறு உலகங்கள். சதையை சதையால் எதிர்கொள்வதே புத்திசாலித்தனம். பழைய காலத்துச் சாமியார்கள் காமத்தை அடக்க பட்டினியைப் பயன்படுத்தினார்கள். பஞ்சைப்பராரிகள் நேர் எதிராக. பசியின் மிகப் பெரிய கொடுமை நாம் வேறு எதைப்பற்றியும் உண்மையில் யோசிக்க முடியாது என்பதே. அதன் முன் நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், எதை வேண்டுமானாலும் யோசிக்கலாம். ஆனால் அனைத்துமே அதற்கு எதிரான பாவனைகளாகவே இருக்கும். பசியின் கண்களைத் தவிர்ப்போமெனினும் தற்செயலாக அதை நேருக்குநேர் பார்க்கும்போது நம் உடல் முழுக்கப் பரவும் அச்சமிருக்கிறதே, பசியனுபவம் என்றால் அதுதான். பிறகு இறங்கி ஓடுகிறோம். அலைகிறோம். பிஞ்சுக் குழந்தையின் கழுத்தை நெரித்துக்கூட ஒருவேளை உணவைத் தேடிக்கொள்ள நாம் துணியக்கூடும். மலம் கலந்த குப்பையைத் துழாவி உணவைத் தேடவும் முற்படுவோம். ஆம், பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும்.

அது ஞாயிற்றுக்கிழமை. சந்தைத் தெருவில் பசிப்பித்துடன் நடந்தேன். பசிப்பித்து என்பது பசியெனும் புலன் மட்டும் விழித்திருக்கும் ஒரு மோனநிலை. காதும் கண்ணும் மனமும் இணைந்து, ஒரு ரீங்காரமாக இருந்தன. எண்ணற்ற திட்டங்கள் படுவேகத்தில் அதனூடாக ஓடின. கணக்குகள் சரமாரியாகக் குவிந்தன. கடைகள் விடுமுறை. தெருவில் யாருமில்லை; பிச்சைக்காரர்கள்கூட. மழை தூறிக் கொண்டிருந்தது. தெருவெல்லாம் ஈரம். கடைத்திண்ணைகளில் அழுக்குப் போர்வைக்குள் சில உடல்கள். அவர்களில் ஒருவேளை ஆக்கத்தி ராஜுவோ, உடும்பு நாணுவோ இருக்கக் கூடும். கருணையும் பெருந்தன்மையும் மிக்க மனிதர்கள் அவர்கள். பசிக்கிறது என்று அவர்களுடைய கடைசிப் பைசாவையும் நான் வாங்கிவிட முடியும். ஆனால் அம்மூட்டைகளைத் தட்டித் திறந்து பார்க்க எனக்குத் தைரியமில்லை. உள்ளே எரியும் விழிகளுடன் பழுத்த உடலுடன் படுத்திருப்பது பசியாக இருக்கக் கூடும். ஈவிரக்கமில்லா ஈரம் எங்கும் படர்ந்திருந்தது. நகரம் அழுகிக் கிடந்தது. சொறிநாய்களின் கண்களில் கூடப் பசியின் வெறி. எட்டு இடங்களுக்குப் போனேன். எங்கும் எவரும் இல்லை. ஒய்ந்து 'மணிகண்டன் பாத்திர உலக'த்தின் திண்ணைமீது உட்கார்ந்துவிட்டேன். துண்டு பீடியும் தீப்பெட்டியும் இருந்தது. அதிர்ஷ்டம். பீடி பசியை என்ன செய்கிறது? சம்பந்தமில்லாத பாலுதல்கள்

இரண்டுக்கும். ஆனால் பசித்த வர்க்கம் அவற்றை ஒரு மானசீகமான மையப்புள்ளியில் சந்திக்க வைக்கிறது. புகையை விட்டபடி யோசித்தேன். புகையை ஊதும்போது நம்மைப்படுத்தும் அருவமான சிலவற்றை வெளியே ஊதித்தள்ளுகிறோம் என்று உணரும் அனுபவமே புகையின் ரகசியம் போலும். அன்று ஞாயிற்றுக்கிழமை. மாதா கோயிலில் கண்டிப்பாக ஆளிருக்கும். ஆனால் அதைப்பற்றி எண்ணியபோது, கைநீட்டுவது குறித்து முதன்முறையாகக் கூச்சம் ஏற்பட்டது. சந்தைப் பக்கம் நான் கைநீட்டுவதுண்டு. அதைப் பிச்சை என்று கூறிக்கொள்ள மனம் தயங்குகிறது. இந்தக் கட்டத்திலும் இத்தகைய மொழிச் சுரணைகள் தொடர்வது வியப்புதான். ஆட்களை நோட்டம் விடுவேன். தொழிலாளிகள், நடுத்தர வர்க்கத்து ஆண்கள் இவர்கள்தான் எனது அன்னதாதாக்கள். ஏனோ பெண்கள் எனக்கு ஏதும் தருவதில்லை. என் நிலைமை அவர்களுக்குப் பரிதாபத்தைத் தூண்டுவதில்லை போலும். எனக்கு உடல் ஊனம் இல்லை. பிற ஊனங்களைப் பார்க்கும் கண்கள் அவர்களுக்கும் இல்லை. ஆண்கள் போடுவது கருணையினால் அல்ல, கர்வத்தினால். எப்போதும் அந்தரங்கமாகவே அவர்களை அணுகுவேன். அருகே சென்று தாழ்ந்த குரலில், முகத்தில் கூச்சம், சுயபரிதாபம் முதலியவற்றை நிரப்பியவனாக, சாப்பிட்டு இரண்டு நாட்களாகிறது என்று மட்டும் சொல்வேன். தொழிலாளி என்றால் தோழர் என்று கூப்பிட்டு சற்று அதிகாரம் கலந்த குரலில் கேட்பேன். குமாஸ்தா என்றால் சரளமான ஆங்கிலம். எத்தனை மகத்தான மொழி! இரண்டணாவிற்குக் குறையாமல் போட ஒருவனை அது அனுமதிப்பதில்லை. ஆத்மா ஒரு கூம்போல அழுகி நொதித்தபடி இருக்கும் சில பிராணிகள் உண்டு. என்னைக் கண்டதும் அவனில் உவகை பொங்கும். முகம் ஆழ்ந்த கவலையில் உருக, சட்டைப் பையில் கைவிட்டபடி, 'ஏன் தோழரே இப்படிச் சீரழிகிறீர்கள்' என்பது போல் எதையாவது கேட்பான். அருகில் நிற்பவரிடம் "சார் யார் தெரியுமா?" என்று கேட்டு என்னைப்பற்றி மிகையாக ஏதாவது சொல்வான். அந்தக் கணத்தை சில நிமிடங்களாக நீட்டித்துவிடுவான். அது எனக்குத் தரும் இம்சையே என் இன்பம். ஆரம்பகாலத்தில் அந்த ஒரு கணம் இம்சை மிகுந்த ஒரு முழு வாழ்வுபோலவும் அதன்பிறகு நான் செத்து மீண்டும் பிறப்பதாகவும் தோன்றியிருந்தது. அப்போது உள்ளத்தில் பாய்ந்து போகும் சித்திரங்கள்தான் என்னென்ன? ஒருமுறை என் அம்மா ஞாபகம் வந்தது - அவர்களை நான் பார்த்ததே இல்லை - என் கண்கள் கலங்கிவிட்டன. பணம் கிடைத்து சிறிது நேரம் கழிந்துதான் அது இனிய சுமையாகத் தன்னை உணர்த்தும். இன்று எனக்கு அம்மாதிரி அசட்டு உணர்வுகளேதும் இல்லை. எதற்கு வெட்கம்? மார்த்தாண்டத்தில் அனைவருக்கும் என்னைத் தெரியும். என் வாழ்க்கை முழுமையும் தெரியும். இன்றும் அந்தக் கணத்தில் என் முகத்தில் ஆழ்ந்த சுருக்கமும், மரணத்துக்கு இணையான சுயநிந்தையும் தெரியும். ஆனால் அது ஒரு சதை அமைப்புதான். ஆரம்ப நாட்களில் அந்த உணர்வுகள் இருந்தன. அவை பயன் தருபவை என்று கண்டு கொண்டேன். எனவே அவற்றை வரித்துக் கொண்டேன்.

முதன்முதலாகக் கைநீட்டிய அனுபவத்தை இங்கு எழுதியாக வேண்டும். தோழர்கள் கைவிட்டுவிட்ட பிறகு, வாடகை அறையிலிருந்து துரத்தப்பட்டு, தெருவிற்கு வந்து கையிலிருந்த கடைசிப் பணமும் கரைந்தபிறகு, பசியை இனி ஒரு கணமும் தாங்கிக்கொள்ள முடியாது என்று ஆன பிறகு, ஒரு மதியம் கையேந்துவது என்று தீர்மானித்தேன். அந்த எண்ணம் எனக்கு வந்ததுமே முதலில் ஏற்பட்டது ஒருவிடுதலையுணர்வு. ஆம், மனித உயிர்வாழ்தலுக்கு அவ்வளவு தூரம் மனதைச் செலுத்தும் சக்தி உண்டு. எங்கு எப்படி என்று யோசிக்க யோசிக்கத்தான் தயக்கம் விரிந்தது. பிரச்சினைகள் எழுந்தன. என்னால் முடியுமா என்றே ஐயம் ஏற்பட்டது. சிறுமையுணர்வும், சுயநிந்தையும், அச்சமும் எழுந்து மனமுடைந்து அழுதேன். அழஅழ கோபம் தீப்புண் எரிவதுபோல மனதில் எரிந்தது. எல்லார்மீதும், எல்லாவற்றின்மீதும் கோபம். என் படிப்பின்மீது, சித்தாந்தம்மீது, என்னை விடாது தொடரும் புகாரின்மீது கோபம். பிச்சையெடுப்பதனூடாக என் எதிரிகள் அனைவர் முகத்திலும் காறி உமிழ்வது சாத்தியம் என்று பட்டது. புண்ணாகி ரத்தம் கசியும்போதும் சொறியத் தோன்றுமே அதுபோல. ஒருவனை நான் ஒரு சுவர் முலையில் வீழ்த்தி எலும்புகள் நொறுங்க நொறுங்க, சதை பிய்ந்து கூழாக, ரத்தம் மணக்க மணக்கத் தெறிக்க, மிதித்து மிதித்துத் துவைப்பது போல ஒரு திருப்தி. அதெல்லாம் மனப்பாவனைகள்தானா என இப்போது, இதை எழுதும் கணம், தோன்றுகிறது. மனதை பிச்சை யெடுக்கத் தயார் செய்யும் பொருட்டு மனமே போட்டுக்கொண்ட நாடகமா அது? நட்டாலம் சாலையில் நடந்து ஒரு சந்தில் நுழைந்தேன். அது வாணியத்தெரு. திண்ணைகளில் பெண்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். பலர் தூங்கிக் கொண்டிருந்தார்கள். பலர் பேன் பார்த்தபடி பேசிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவராகப் பார்த்தபடி நடந்தேன். ஏன் பெண்களைத் தேர்ந்தெடுத்தேன் என்று எண்ணிக் கொண்டேன். பசிக்கும்போது பெண்கள் நினைவு இயல்பாக வருகிறது. அன்னலட்சுமிகள். பிறர் பசி போக்குவதில் இன்பமடையும் தாய்மார்கள். ஆம், அவர்கள் அன்னையர். முலைகள் என்ற அற்புதமான உறுப்பு களை இயற்கை அவர்களுக்குத் தந்திருக்கிறது. ரத்தத்தை உணவாக்கும் வரம் அது. பெண் என்பவள் முலைகளை மையமாகக் கொண்ட ஓர் இருப்பு. ஆனால் ஒவ்வொரு பெண்ணாக நெருங்கி, திட்டத்தை ஒத்திப்போட்டு, முன்னகர்ந்துகொண்டிருந்தேன். ஒவ்வொரு பெண்ணும் என்னை தயங்கவைக்கும் ஒவ்வொரு அம்சம் கொண்டிருந்தாள். உட்கார்ந்திருந்த விதத்தில் இருந்த தடித்தனம், பேச்சில் இருந்த கூச்சரிப்பு, கண்களைச் சுருக்கிக் கூர்ந்து பார்ப்பதில் இருந்த தந்திரம், கூச்சப்படி பின்னால் பல்லைக்குத்தி எடுக்கும் மிருக பாவனை. அவர்கள் எவரும் தனியாக இல்லை. கூட்டமாக இருக்கும் பெண் தாயல்ல, பம்புப் பேச்சுக்காரி என்று எண்ணினேன். கடைசியில் ஒரு கிழவியைக் கண்டேன். அவள் நார்ப்பெட்டி முடைந்தபடி இருந்தது, பாம்படம் அணிந்திருந்தது, வெற்றிலையை நீட்டித்துப்பியபடி என்னை ஏறிட்டது என்னை அவளை அணுகச் சொன்ன அம்சங்கள் இவை. அவளை காட்டுப்புறத்தவளாக அவை காட்டினவா? கிராமியத்தனமும் கருணை

யும் ஒன்றுதான் என்று கற்பித்துக்கொண்ட அந்த மடத்தனமான நகர் மனோபாவத்தை இப்போது எண்ணிப் பார்க்கையில் வியப்பு ஏற்படுகிறது. படித்த நடுத்தர வர்க்க இளைஞர்களால் எத்தனை அபத்தமான கருத்துகள் சமூகத்தில் பரப்பப்பட்டுள்ளன. அவளை அணுகியபோது தாயை அணுகும் சேய்போல உணர்ந்தேன். மக்கா என்ற அழைப்பையன்றி, கருணையை அன்றி, குளிர்ந்த பழைய சோறையன்றி எதையும் நான் எதிர்பார்க்கவில்லை. "அம்மா" என்றேன். அந்த சொல் என்னை திடீரென இளக வைத்து, தொண்டையில் கரகரப்பைத் தந்தது. அவள் என்ன என்பதுபோலப் பார்த்தாள். என் குரல் 'கம்மி தழுதழுத்தது. "பசிக்கிறது, சாப்பிட்டு இரண்டு நாளாயிற்று" என்றேன். அவள் கண்களும் புருவமும் சுருங்கின .

"அதுக்கு?" என்று கேட்டாள்.

என் உடலில் தீயை அள்ளிக் கொட்டியது போலிருந்தது. எரிந்தபடி ஓடினேன். பெரிய சாலைக்கு வந்தபோது வியர்த்தபடி மூச்சிரைத்தேன். ஒரு வாரம் – ஆம் ஐயா, ஒரு வாரம் – அந்த ஒற்றைச்சொல் என்னைப் பின்தொடர்ந்தது. மனம் வேறு எதிலும் படிய மறுத்து அதிலேயே சுற்றி வந்தது. அதுக்கு? எத்தனை பிரம்மாண்டமான கேள்வி. உனக்குப் பசி, நீ சாகப் போகிறாய், நீ வதைபடுகிறாய், நீ கூண்டோடு அழிவாய், சரி, அதற்கு எனக்கென்ன? உண்மைதான். யாருக்கும் எதுவும் இல்லை. பிறர் துன்பம் ஒரு பொருட்டேயல்ல. ஸ்டாலின் கோடிக்கணக்கில் ஏழை ஜனங்களை, மண்ணில் உழைத்து வயிறாற்றிய விவசாயிகளைக் கொன்று குவித்தபோது பிற கோடி மக்கள் தங்கள் உணவு மேஜைகளில் குடும்பத்துடன் அமர்ந்து அன்றைய அப்பத்திற்கு நன்றி சொல்லி சாப்பிடத் தயங்கவில்லை. மறுநாளைய அப்பத்திற்காக பிரார்த்தனை செய்தபின் நிம்மதியாகத் தூங்கவும் முடிந்தது அவர்களால். எங்கும் மனிதர்கள் அப்படித்தான். மனிதர்கள் சோறிடுவார்கள். அது சக மனிதன் என்பதனால் அல்ல; ஏற்பவன் கீழானவன் என்பதனால்; ஒரு வாய் உணவும், ஒரு செம்பு நாணயமும் தூலமாக அந்த வித்தியாசத்தை உறுதிப்படுத்துகின்றன என்பதால். எனக்கு ஈபவர்களிடம் சற்றும் பிரியம் இல்லை; நன்றியும் இல்லை. அது ஒரு சிறு விளையாட்டு. அல்லது வியாபாரம். எனக்குத் தரப்படுவது அவன் கர்வத்தை நான் திருப்தி செய்ததற்கான கூலி.

அன்று கிறிஸ்தவர்களிடம் கையேந்தக் கூசித்தான் அமர்ந்திருந்தேன். சைவப்பிள்ளையான நான் மாதாகோயில்முன் கையேந்துவது பற்றிய கூச்சம்தான் அது. வயிறு அமிலம் குடித்தது போல எரிந்து, அணைந்து போய், மொண்ணையான ஒரு வலியாக மட்டும் எஞ்சியது. மதுவின்மை யின் பாரத்தை உடலாக உணர்ந்தேன். அருகே ஒரு பொறுக்கிச் சிறுவன் தூங்கிக்கொண்டிருந்தான். கவலையற்ற தூக்கம். இரவு சாப்பிட் டிருப்பான். அதிர்ஷ்டசாலி. என் கவனம் அவன் மென்மையான சருமம்மீது படிந்தது. அதிலிருந்த பெண்மை. வியாசபாரதத்தில் பீமன் துச்சாதனனின் மார்பைப் பிளந்து உதிரம் குடித்தான் என்று வரும்.

முதிர்ந்த கள்போல உதிரம் பீமனை வெறிகொள்ள வைத்தது என்று வியாசர் கூறுகிறார். அந்த சிறுவனைக் கடித்து உதிரம் குடித்தால் என்ன? எப்படிப் போகிறது மனம்! ஏதோ பயங்கர வனவிலங்குபோல அது கவனமாக முகர்ந்தபடி, ஓசையற்ற காலடிகளுடன் உடலின் மயிர்க் கணங்கள் சிலிர்க்க, நகர்கிறது. டிராக்குலாவால் பறக்க முடியும். ஏனெனில் ரத்தம் குடிப்பவன் அவன். ஒரு கணத்தில் உண்மையிலேயே பாய்ந்து விடுவேன் என்று அஞ்சினேன். எழுந்து நேராக மாதாகோயில் நோக்கிப் போனேன். இது அடிக்கடி நிகழ்வதுதான். ஒரு கட்டி பழுத்து முனைகொண்டு வலிக்கிறது. இரவெல்லாம் தூங்கவிடாத வலி. இறுதியில் பொறுமையிழந்து அதன்மீதே ஒங்கியடிப்போம் அல்லவா, அதைப்போல. மாதா கோயிலில் அந்நேரம் திருப்பலி முடிவுற்றிருந்தது. காலியான நாற்காலிகள். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் பெரிய கல்சிற்பம். வெளியே காற்றாடி மரங்களின் மெல்லிய சீறல். தாணிக்கைப் பெட்டியருகே சிறிது நேரம் நின்றேன். ஏதாவது குச்சியைப் போட்டுப் காசுகளை எடுக்க முடியுமா என்று மனம் ஓடியது. பிரார்த்தனை நேரம் தாண்டி அங்கு யாருமில்லாதது எனக்கு ஏமாற்றத்தைத் தரவில்லை. ஓர் இக்கட்டிலிருந்து தப்பிய உணர்வுதான். உண்டியலுக்குள் எப்படி குச்சியைவிட முடியும்? திடீரென்று அடர்காற்று வீசியது. காலியான பெருங்கூடத்தில் காற்று பாய்ந்து சென்றபோது மிக மெலிதான ஒரு ஓங்காரம் எழுந்தது. அந்த நாற்காலியில் கண்ணுக்குத் தெரியாத ஆத்மாக்கள் அமர்ந்திருப்பதுபோல பிரமை எழுந்தது. திரும்ப ஓடிவந்துவிட்டேன்.

வழியில் சிவராம கிருஷ்ணன் எதிர்ப்பட்டான். மிடிச்சல் தோட்டத்து தோஸ்தா. ஆனால் வேறு சங்கம். என்னைப் பார்த்து "என்ன சார் இங்க?" என்றான். "பசிக்கிறது, எட்டணா எடு" என்றேன். அவன் ஒரு நாணம் பதறிவிட்டு "ஏறுங்கள் சார், வீட்டுக்குப் போய் சாப்பிடலாம்" என்றான். ஏறிக் கொண்டேன். சாப்பாடு என் எண்ணங்களை நிரப்பியது. பிள்ளைமார் வீட்டுச் சாப்பாடு. சம்பா அரிசிச் சோறும் புளிமுளமும் பட்டும் போதும். வேறு ஏதும் வேண்டாம். கூச்சம் பார்க்கக் கூடாது. னைப் பற்றியும் தயங்கக் கூடாது. வயிறு முட்டச் சாப்பிட வேண்டும். இன்னும் இரண்டு வேளைக்கு சேர்த்துச் சாப்பிட வேண்டும். வண்டி மிக மெதுவாகப் போவதாகப் பட்டது. உண்ணாமலைக்கடை சாலை சற்று ஏற்றம். மிதிக்க முடியவில்லை. போகும் வழியில் அவனிடம் திரும்பத் திரும்பச் சொல்லி அரையணாவிற்கு அரிஷ்டம் வாங்கிச் சாப்பிட்டேன். ராயம் மெல்ல நரம்புகளில் பரவியது. உண்ணாமலைக்கடையில் வன் வீடு சற்று உள்ளடங்கி இருந்தது. வீட்டில் அவன் அப்பா, யாயா, அண்ணா, அண்ணி, மனைவி எல்லாரும் இருந்தார்கள். ஏதோ விசேஷம் போலிருக்கிறது. என்ன விசேஷம் என்று நான் கேட்கவில்லை. னிக்குச் சொன்னான். என்னிடம் வேறு வேட்டி இல்லை. ஒரு சலவை வேட்டி – சற்றுக் கிழிந்த பழையதுதான் – தந்தான். ஜிப்பாவும். என் டைகள் எப்போபட்ட கந்தல்கள் என்பது அவ்வுடை களைப் பார்க்கும்போதுதான் தெரிந்தது. அதன் பிறகு என் உடைகள் னைத்துமே அருவருப்பூட்டின. கிணற்றடியில் சீயக்காய் தேய்த்து

விரிவாகக் குளித்தேன். உள்ளே ஹாலில் இலை போடப்பட்டிருந்தது. ஆனால் ஒரே இலை. பிறர் சாப்பிட்டிருப்பார்கள் போல. நிறைய பலகாரங்கள். பழம் பப்படம் எல்லாம் உண்டு. சாப்பிட அமர்ந்தேன். இலையின் மூலையில் ஒரு புது வெள்ளி நாணயமும், சில துணுக்குகளும் அருகம்புல்லும் இருந்தன. எனக்கு சந்தேகம் வந்தது. இது என்ன என்றேன். சிவராமகிருஷ்ணன் ஏதோ கூற முற்படும் முன் அவன் அம்மா அவர்கள் தாத்தாவிற்கு 'புரையில்வைப்பு' என்றாள். உணவு ஆறிப் போயிருந்ததன் ரகசியம் புரிந்தது. என் தலையில் ரத்தம் பாய்ந்து குதித்து எழுந்து அவர்கள் முகத்தில் அவ்வுணவை வீசி எறிய வேண்டும் போலிருந்தது. ஆங்காரமாக ஏதோ கூவ வேண்டும் போலிருந்தது. ஆனால் மறுவேளை உணவு பற்றிய சிந்தனை என்னை ஊடுருவியது. அந்த உணவின் மெல்லிய வாசனை என் வயிற்றை குமுறிப் புரள வைத்து விட்டிருந்தது. சோற்றைப் பிசைந்து வாயில் வைத்தேன். அழுகை வந்து மார்பை முட்டியது. மரத்துப்போய்விட்டிருந்த அந்த உணவு இறந்து போன ஆத்மா ஒன்றுக்குப் படைக்கப்பட்டது. பேய் தின்ற மிச்சம். 'தின்னுடா, நீயும் பாதி இறந்துபோன ஆத்மாதானே' என்று என்னை வதைக்கும்படி சொல்லிக்கொண்டேன். ஓரிரு வாய்தான சாப்பிட்டிருப்பேன். பிணம்போல விரைத்துக் குளிர்ந்த உணவு. வயிற நிரம்பிய உணர்வு ஏற்பட்டது. திரும்பத் திரும்ப தண்ணீர் குடித்தேன். உணவு அந்த தண்ணீரில் மிதந்து உள்ளே உணவுக் குழலை வந்து முட்டியது. எழுந்துகொண்டேன். கிழவி நாணயத்தை எடுத்துக்கொள்ளச் சொன்னாள். எடுத்துக்கொண்டேன். சட்டென்று தலை முன்னால் சாய்ந்தது. அரிஷ்டம் வேலையைக் காட்டுகிறது. கைகழுவியபோது கால்களில் மரமரப்பை உணர்ந்தேன். சம்பந்தமின்றி எண்ணங்கள் ஓடின. அந்த தேவாலயம். அதற்குள் கேட்ட அந்த ரீங்காரம். எனக்குப் புல்லரித்தது. அது ஆவிகள் என்னிடம் பேசிய குரலா? ஏதாவது தகவல்தான் எனக்குச் சொல்லப்பட்டதா? கிறிஸ்தவ தேவாலயம் என்றால் புகாரின்தான். கழிப்பறைக்குப் போனேன். சோப்புப் பிறைக்குள் ஒரு வாட்ச் இருந்தது. எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன்.

நேராக நாகர்கோயில்போய் கிரேடடஸ்ட் பேக்கரியில் ரொட்டியும் வெண்ணையும் வாங்கினேன். மாமிசம் விற்கும் கடை தெரியவில்லை. ஒரு ஓட்டலில் இறைச்சிக் கறி வாங்கினேன். புதிய சட்டையும் பிற சிறு பொருட்களும் வாங்கியபோது வாட்சை அடகு வைத்த பணம் கணிசமாக விட்டது. நடுநடுவே குடித்தபடி இருந்தேன். கடைசியாக பாட்டிலில் ஒரு திராம் வாங்கிக் கொண்டேன். நல்ல பனிஜோடுகள் இரண்டு வாங்கியிருக்கலாம். பணமில்லை. கிடைத்தது ஒரு தங்க நகையாக இருந்திருக்கலாம். இரவு மார்த்தாண்டம் திரும்பினேன். மாதா கோயில் முகப்பு இருண்டு கிடந்தது. காவலன் தூங்கும் மாடத்தில் யாரும் இல்லை. பின்பகுதிக்குப் போனேன். நல்ல இருள். தேவாலயம் இருட்டுக்குள் தெரிந்து வடிவமாகத் தெரிந்தது. அப்போது மழை நின்று தேவாலயக் கூரையில் ஈரம் மட்டும் சொட்டிக்கொண்டிருந்தது. அது ஒரு உரையாட போலிருந்தது. வானம் சற்று அதிர்ந்து, ஒளிர்ந்து, அணைந்தது. தூரத்தில் ஒரு பெரிய புளியமரம் தெரிந்தது. இருளைப் பார்த்தபடி நின்றி கொண்டேன். அச்சமாக இருந்ததனால் மிஞ்சிய சாராயத்தையும்

துடித்தேன். சற்று தைரியம் வந்தது "புகாரின்" என்றேன். இருட்டில் மரம் வழியாக சலசலப்பு ஓடும் ஒலி. அது ஒரு பெருமூச்சாகக் கேட்டது. "தோழர் புகாரின், இங்குதான் இருக்கிறீர்களா?" ஒலியில்லை. என் மனம் இளகியது. கண்ணீர் வழிய ஆரம்பித்தது. "தோழர் புகாரின். இது நான்தான் வீரபத்ரபிள்ளை. உங்கள் சிஷ்யன். குருவுக்கு சிஷ்யன் பலி தர சாஸ்திரமுண்டு. என் காணிக்கையை ஏற்றுக்கொள்ளுங்கள். தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றேன். வாழையிலையில் ரொட்டியையும் மாமிசக் கறியையும் உடையையும் படைத்தேன். மெழுகுவர்த்தி ஏற்றிவைத்து வணங்கினேன். சுடரின் செவ்வொளி ஈரமான புதர்களில் பட்டு அசைந்தது. "நிகலாய் இவானோவிச் புகாரின் ஆத்மசாந்திக்கு" என்று மந்திரம்போல நாலைந்து தடவை சொன்னேன். மின்னல் ஒன்று இருளில் சரசரவென்று கொடிவிட்டுக் கிளைபிரிந்து வளர்ந்தழிந்தது. ஈரமான புதர்ச் செடிகளும் தூரத்து மரங்களும் ஓட்டுக் கூரைச் சரிவுகளும் சேற்றுநீர் தேங்கிய பரப்புகளும், சொட்டும் துளிகளும் இடியோசையுடன் ஒளிர்ந்து தகதகத்து அணைந்தன. என் கண் மங்கி, வெண்படலமாகி, நிறங்களாக ஒளிர்ந்து, சுழன்று இருண்டது. மெழுகுவர்த்தி அணைந்துவிட்டிருந்தது. உத்வேகம் பின்னகர்ந்ததனாலோ அல்லது போதை இறங்கியதனாலோ எனக்கு சிந்தனை மீண்டது. இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று எண்ணினேன். அப்போது மிக அருகே ஒரு மூச்சொலி கேட்டது. பிரமையல்ல என்று தெளிந்தபிறகு இன்னொரு மூச்சு கேட்டது. மிருகங்களின் காலடியோசை. மிருக மணம். மிருகவிழிகளின் சுடர்மணிகளைக் கண்டேன். நாய்களா? மாமிச வாடை தேடி வந்த தெருநாய்கள் போலும். மெல்லிய உறுமல் ஒலி கேட்டது. அச்சத்துடன் கையை உதறி "ஓடு! ஓடு!" என்று கூவினேன். உறுமல்கள் வலுத்து இணைந்தன. அவை நெருங்கி வந்தன. என்னைத் தாக்கப் போகின்றன என்று தோன்றியதும் பாய்ந்து தின்னைமீது ஏறிக் கொண்டேன், அவை இருளில் பாய்ந்து விழுந்தன. கடித்துக் குதறிக்கொண்டன; உறுமின, ஊளையிட்டன. மண்ணில் நகப்பாதங்கள் பிராண்டும் ஒலிகள். அடுத்த மின்னலில் கண்ட காட்சி கனவா என்று என்னால் இப்போதும் தீர்மானிக்க முடியவில்லை. வெண்ணிற மென்மயிர் சிலும்பி விரிந்த கடித்த கழுத்துகளுடன், சுடரும் செந்நிறக் கண்களுடன், ரத்தம் மினுங்கும் வாய்க்குள் ஈரமான வெண்பற்களுடன் சாமரம் போன்ற வால்களைச் சுழற்றிய சைபீரியப் பனி ஓநாய்களைக் கண்டேன். உடல்கள் பின்னிக் கலந்த சுழற்சியில் அவை பற்பல தலைகளும் கால்களும் கொண்ட ஒற்றை மிருகமாகத் தெரிந்தன.

◆

5

குடிகாரனின் குறிப்புகள் *

நாகர்கோவிலில் இருந்து சுப்பையாவின் காட்டமான கடிதம் வந்தது. மிக நெருங்கிய நண்பர்கள் பகைவர்களாக ஆகும்போதுதான் இப்படி மிகத் தீவிரமாகப் புண்படுத்தும் கடிதங்கள் எழுதப்படுகின்றன. இரண்டு நாட்கள் தூங்கவே முடியவில்லை. அவனுடனான இனிய தினங்கள் மனதில் திரும்பத் திரும்ப வருகின்றன. இத்தனை துவேஷம் எப்படி முளைத்தது? அவனுக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. எங்கள் நட்புக்கு ஒரு முகாந்திரமாகவே கட்சியும் இலட்சியவாதமும் இருந்து வந்துள்ளது என்று கூட படுகிறது. இப்போது கட்சியின் பொருட்டும், இலட்சியங்களின் பொருட்டும் அவன் என்னை நிராகரிக்கிறான். இல்லை எதிர்க்கிறான்; வெறுக்கிறான். மிகத் தீவிரமாக என்னையே எண்ணிக் கொண்டிருக் கிறான். அதற்குக் காரணம் அரசியல் அல்லது இலட்சியவாதம் என்று நம்ப சிரமமாக இருக்கிறது. மிக அந்தரங்கமாக என் மனதை ஆய்வு செய்வதனூடாகவே அவனைப் புரிந்து கொள்ள முடியும் என்று படுகிறது.

தனிமனித உறவுகளில் எனக்கு எந்த விதமான அரசியலும் சித்தாந்தமும் இலட்சியவாதமும் ஒரு பொருட்டே அல்ல. ஒழுக்கமும் பொது நியாயங்களும்கூட சிறுசிறு சஞ்சலங்களுக்குப் பிறகு ஒதுங்கி வழிவிடக் கூடியவையே. பொருட்படுபவையே வேறு. என் பிம்பங்கள் பற்றிய எனது அச்சங்களும் எதிர்பார்ப்புகளும் முதன்மையானவை. என் பிம்பம் எத்தனை தூரம் பிறரில் செல்லுபடியாகிறது என்பது என் உறவுகளைத் தீர்மானிக்கும் முக்கியமான அம்சம். பாதி உறவுகளை பிம்பங்களை உருவாக்கவும், நிலைநிறுத்தவும், எனக்கு நானே அதை நம்பிக் கொள்ளவும்தான் உருவாக்கி நடத்திச் செல்கிறேனோ என்று படுகிறது. எனது பலவீனங்களின்போது எனக்கு ஊன்றுகோலாகும் உறவுகளை வேறு வழியின்றி சார்ந்திருக்கிறேன். ஆதரவின்றி தவிக்கும் தருணங்களைத் தவிர பிற சமயங்களில் அவற்றை

---

* பிரகடனத்திற்குத் தயாரிக்கப்பட்டவை போல தலைப்பிடப்படாத தொகுக்கப்படாத இக்குறிப்புகள் நாம் குறிப்பின் சாயலில் உள்ளன தொகுத்து பெயர்த்தெழுதப்பட்டவை போலும் ஆனால் முழுமையாக இல்லை

வெறுக்கிறேன், உதாசீனம் செய்ய முயல்கிறேன். பலவீனத்தின் தருணங்களில் நான் அறியும் சுயகீழ்மை உணர்வை வெல்ல அவர்களிடம் (ஓர் எல்லைக்குட்பட்டு) மூரட்டுத்தனமாக நடந்து கொள்கிறேன். அவர்கள் அம்மூரட்டுத்தனத்தை கன்றுக்குட்டியின் முட்டல்போல எடுத்துக்கொள்வது கண்டு கூசுகிறேன். என் ஆளுமை மடங்கித் தலைவணங்கும் உறவுகள் மிக அபூர்வமானவை. அந்த மலைகளை மிதித்து ஏறி உச்சியில் நின்று குனிந்து பார்க்கும் சவாலை உடனடியாக ஏற்றுக்கொள்கிறேன். இவ்வாறு பிரிப்பது என் மூளை. என் உறவுகளில் இந்த மூன்று அம்சங்களும் எப்போதும் கலந்தபடித்தான் உள்ளன. இவையன்றி சகமானுட உறவில் எந்த வகையான அந்தரங்கத்தையும் நான் உணரவில்லை. இதுகுறித்து எனக்கு ஏமாற்றம்தான். மன ஆழத்தில் உள்ள குளிர்ந்த சுனையில் பிரதிபலிக்கும் சில முகங்களையாவது கொண்டிருக்கிறேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்த நாட்கள் உண்டு. அதை எட்டிப் பார்க்க முயன்றால் அவை கலைந்துபோய், என் முகம் மட்டும் தெரியும் என அஞ்சி, பார்ப்பதை ஒத்திப்போட்டு வந்தேன். இன்று அறிகிறேன், அங்கு வேறு எந்த முகமும் பிரதிபலிப்பதில்லை. சுயவதையின் இன்பத்துடன் அதை நேர்நின்று பார்க்கிறேன். அங்கு விரிந்து கிடப்பது என் முகம் மட்டும்தான். இப்பிரபஞ்சம்கூட அங்கு என் முகமாக மாறியே பிரதிபலிக்க முடியும். என்னை நான் விரும்பியபடி பூதாகரப்படுத்தும் ஒரு குழியாடி மட்டும்தான் அது. என்னை அகங்காரி என்று சொல்லுங்கள், பாதகமில்லை. ஆனால் அகம் என்ற சொல்லுக்கு ஒரே சமயம் 'நான்' என்றும் 'உள்' என்றும் பொருள் வைத்த மூதாதை முட்டாள் அல்ல.

சுப்பையாவிற்கு எனக்கும் என்ன உறவு? அவனிடம் நான் என் புரட்சி பிம்பங்களை வினியோகித்தேன். பதிலுக்கு அவனுடையவற்றை வாங்கிக்கொண்டேன். (டீக்கடைகள், சாலையோரப் பாலங்கள், பூங்கா இருக்கைகள், மீண்டும் டீக்கடைகள், பேச்சு... பேச்சு... பேச்சு) அந்த ஒப்பந்தம் முறிய நேரிட்டபோது அவன் தன்னை அநீதி இழைக்கப் பட்டவனாக உணர்கிறான் போலும். இந்தக் கடிதமும் இதிலுள்ள துவேஷமும்கூட ஒரு அர்த்தத்தில் அதே புரட்சி பிம்பங்களை காப்பாற்றிக்கொள்ளவும் திருப்பிப் போட்டு என்னிடம் விற்றுவிடவும் செய்யப்படும் முயற்சிகள் அன்றி வேறல்ல. ஒருவேளை அது அவனுக்கேகூடத் தெரியாது. தன்னை நட்புக்கும் மானுட உணர்வு உனக்கும் அப்பாற்பட்ட இலட்சிய வீரனாக அவன் உண்மையிலேயே உணரக் கூடும். இல்லை அப்படி இல்லை. இக்கடிதமே சாட்சி. இதன் அதீதவிரம் ஒருபோதும் தன்னம்பிக்கையிலிருந்து வராது. மனிதர்கள் அழுவதும், கோபம் கொள்வதும் எப்போதும் ஓர் இடைவெளியை நிரப்பத்தான். பிம்பங்களுக்கும் உண்மைக்கும் இடையேயான இடைவெளி. சகலவிதமான பேச்சுகளும் தருக்கங்களும் நடப்பது அந்த வரண்டாவில் வைத்துதான்.

மார்த்தாண்டம்
12-5-1955

●

சுப்பையாவிற்கு இன்று ஒரு கடிதம் போட்டேன். நீண்ட கடிதம். பத்து பக்கங்கள். மிகக் குரூரமான சுய திருப்தியுடன், மிகவும் திட்டமிட்டு, அமைக்கப்பட்ட சொற்களாலான கடிதம். அது அவனையும் பல நாட்கள் தூங்காமலடிக்கும் என்று தெரியும். மனதிற்குள் என்னை முன்னிறுத்தி எண்ணற்ற பதில்களை மீண்டும் மீண்டும் சொல்லியபடி பித்துப்பிடித்து அலைவான். மிகச் சிறந்த பதிலை உருவாக்கிக்கொண்டதும் அதை எழுதி எனக்கு அனுப்புவான். அது அவனது புரட்சிப் பிம்பத்தை சிதைவு களிலிருந்து மீட்டுக்கொள்ளும் வாதங்கள் கொண்டதாகவும், எனக்கு விஷமூட்களை அளிக்கக் கூடியதாகவும் ஒரே சமயம் இருக்கும். அவனது பிம்பங்களை மூர்க்கமாக நொறுக்கி சிதிலங்களை அவனுக்கு அனுப்பியிருக்கிறேன். அவனுடைய பலவீனங்கள், வேஷங்கள் ஒவ்வொன்றும் அதை எழுதும்போது என்முன் திறந்து கிடந்தன. எழுத எழுத அவை வந்துகொண்டே இருந்தன. அந்த விஷத்தின் ஒவ்வொரு துளியும் அவனுடன் நெருங்கிப் பழகிய அந்த நாட்களிலேயே என்னுள் ஊறிவிட்டிருந்தன என்று அறிந்தது மிக வியப்பூட்டுவதாக இருந்தது.

குமாரகோவிலில் அவனுடைய மூத்த பெண்ணுக்கு முதல் முடியெடுத்தபோது அவன் கண்கலங்கிய சம்பவத்தை அவனது நெகிழ்ந்த மனதின் உதாரணமாக 'போகிற போக்கில்' குறிப்பிட்டி ருந்தேன். அதில் உள்ளடங்கியுள்ள கூர்நுனி அவன் ஆத்மாவின் மிக மென்மையான பகுதியைக் குத்தாமல் போகாது. அதைக் கற்பனை செய்தபோது புன்னகை செய்தபடி எழுதினேன் (பார்க்கும் ஒருவர் நான் ஏதோ காதல் கடிதம் எழுதியதாக எண்ணக் கூடும். எனக்குத் தோன்றுகிறது, பெரும்பாலான காதல் கடிதங்களிலும் இதே முள்விளையாட்டுதான் இருக்கும் என்று.) அந்தக் கோயில் முகப்பும், நாவிதக் கிழவரை சொல்லுக்கொரு முறை 'அடே' போட்டு அழைத்த அவன் தம்பியும், ஒவ்வொருமுறையும் பணத்தை எடுத்துத் தந்தபிறகு மீதியை எண்ணிய அவன் மாமனாரும், சந்தனம் பூசிய பெண்களும், சாதி மணக்கும் பேச்சும், குழந்தையின் தாய்மாமன் போட்ட அரைப்பவுன் கம்மலை மாறிமாறிக் கையால் எடைபார்த்த அவன் உறவினர்களும் எல்லாம் துல்லியமான படங்களாக மீண்டு வந்தன. ஒவ்வொரு படம் பற்றியும் ஒரு பக்கம் நிறைய விஷச் சொற்களை எழுத முடியும். அவன் மனைவி பெரிய விழிகளும், கரிய உதடுகளும், குள்ளமான பருத்த உருவமும், நெற்றி மயிர் பறக்கும் உருண்டை முகமுமாக குடும்பப் பாங்கான களையுடன் இருந்தாள். மௌனமாகத் ததும்பிக் கொண்டிருக்கிறாள் என்று பட்டது. பாப்பாவை அடிக்கடி பொட்டை சரி செய்யும் பாவனையிலும் புது கவுனை இழுத்துவிடும் பாவனையிலும் தொட்டபடி இருந்தாள். அவளை அடிக்கடி மிக உதாசீன பாவத்துடனும், எரிச்சலுடனும் அதட்டியபடி இருந்தான் சுப்பையா. என்முன் அவன் காட்ட வேண்டிய பாவனைகளை (என்ன செய்வது? எல்லாம் குடும்பக் கட்டாயம்) மெல்ல அச்சூழலிலும் பதற்றத்திலும் கரைந்ததனூடாக

இழந்துவிட்டான். ஒரே ஒருமுறை அவள் பார்வை என் கண்களை வந்து தீண்டிச் சென்றது. சில நிமிடங்களுக்குப் பிறகு என்னிடம் பேசிய போது சுப்பையாவில் ஒரு நுட்பமான மாறுதல் தெரிந்தது. நான் அவன் கண்களை சந்தித்தபோது அவை தடுமாறி விலகின. என் மனம் குறுகுறுத்தது. பிறகு அவள் பக்கமே திரும்பவில்லை. ஆனால் அவளை என் உடம்பெங்கும் உணர்ந்தபடி இருந்தேன். படியிறங்கும்போது அவள் நார்ப்பெட்டியை தரையில் வைக்க பித்தளை டம்ளர் கணகணவென உருண்டது. ''சவம் கை வெளங்குதா பாரு'' என்றார் சுப்பையாவின் அம்மா. அந்த ஒலியும் சொற்களும் அவனை நாராசமாகக் குடைந்திருக்க வேண்டும். பளீரென்று ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்துவிட்டான். அவள் தம்பி தலைகுனிந்து விலகிச் செல்ல, அவன் தம்பிதான் வந்து பிடித்து விலக்கினான். 'சுப்பையா என்னலே இது'' என்று அவன் அப்பா சொன்னார். அவன் தாயார் முகத்தில் கவன மின்மையைக் காட்டியபடி, உடம்பில் சிறு துள்ளல் வெளிப்பட, நடந்தாள். மிகுந்த தர்மசங்கடம் ஏற்பட்டு, நம்ப முடியாத அளவு சீக்கிரம் அது சமனப்பட்டது. அவளைத் தவிர பிறர் சகஜமடைந்து, சிரித்துப் பேசத் தலைப்பட்டனர். விடைபெறும்போது ''வரேன்டே சுப்பு'' என்றேன். தலையசைத்தான். காய்ச்சல் கண்டவன் போலிருந்தான்.

அப்படி எத்தனையோ சந்தர்ப்பங்கள். அப்படியானால் அவனுடனான நட்பின் நாட்களிலேயே அவனை நுட்பமாக வேவு பார்த்திருக்கிறேன். அவனும் வேவு பார்த்திருக்கிறான் என்பதற்கு இக்கடிதமே சாட்சி. எதற்கு? அவன் எனக்குமுன் காட்டிய புரட்சிப் பிம்பத்தின் ஓட்டைகளுக்காக என் மனம் துழாவியதுதான் அது. அவனுடைய அப்பிம்பம் நான் அவன்முன் காட்டிய பிம்பத்தின் நகல்தான். நுட்பமாகக் கண்ணாடியில் பார்த்து நரைமயிர் பிடுங்குவது போன்ற செயல்தான் அது.

கடிதத்திற்கு சுப்பையாவின் பதிலை எவ்வளவு பதற்றத்துடன் எதிர் பார்க்கிறேன் என்று வியப்புடன் அறிந்தேன். என் கடிதத்தில் அவனை சீறடித்தபிறகு என் பிம்பத்தை அவன்முன் மீண்டும் நிறுத்துவதற்கான ஒரு தந்திர முயற்சியும் இருந்தது. அதைத் திட்டமிட்டு செய்யவில்லை. இப்போதுதான் அது தெளிவாகத் தெரிகிறது. அவனை நம்பவைப்பதனூடாக எதை அடையப் போகிறேன்? இன்று நான் இம்மிகூடப் பொருட்படுத்தும் ஆசாமியல்ல அவன். கடிதத்தில் நான் அவனிடம் காட்டிய பிம்பம்தான் எத்தனை நுட்பமான மாய்மாலங் களினால் ஆனது! நான் இலட்சியவாதியோ தியாகியோ வரலாற்றுப் புருஷனோ இல்லை என்று எழுதியபோது என்னைத் தோற்கடிக்கப் பட்ட இலட்சியவாதியாக, புறக்கணிக்கப்பட்ட தியாகியாக, நாளைய கலைமுறையால் கண்டெடுக்கப்படும் வரலாற்றுப் புருஷனாகவே கற்பனை செய்துகொண்டிருந்தேன். தன் வரலாற்றுப் பாத்திரத்தைத் தன்னினைவின்றி ஆற்றும் மாமனிதன்! உதாசீனப்படுத்தப்பட்டு கவனிப்பாரற்று நான் தெருவில் இறப்பதன் சித்திரத்தை உணர்ச்சியின்றி

(உணர்ச்சியால் கைகள் நடுங்க) எழுதினேன். என் பிம்பத்தை பூதாகரப்படுத்திவிட்டுப் போகும் பொருட்டுதான் இந்த ஆட்டத்தை ஆடுகிறேனா? என் அந்தரங்கத்திற்கு மிக நன்றாகத் தெரிகிறது, பிறரை ஆழ்ந்து பொருட்படுத்தும் எவரும் எங்கும் இல்லை என்று. இறந்தவர்களை மறந்துவிடவே எப்போதும் மனிதமனம் முயல்கிறது. அடையாளப்படுத்துவதும், வகைப்படுத்துவதும், கவுரவிப்பதும், அஞ்சலி செய்வதும் எல்லாமே குற்ற உணர்வுகளையும், புரிந்துகொள்ள முடியாமைகளையும், நினைவுகளையும் தாண்டி இறந்தவர்களை மறப்பதற்கான மானுட மனதின் உத்திகள்தாம். என்னையும் மறந்து விடுவார்கள். எனது வலியும் துக்கமும் கனவுகளும் எதுவும் எஞ்சாது. எனது பாவனைகளும் தந்திரங்களும்பற்றிக் கேட்கவே வேண்டாம். ஏனெனில் இவை மானுடகுலத்தின் ஒவ்வொரு துளியிலும் ஓயாது கொதித்துக் கொண்டிருப்பவை. முதல் பார்வையிலேயே ஒவ்வொரு மனித மனமும் துல்லியமாக அடையாளம் கண்டுகொள்பவை. இவனை மெல்ல நான் தோற்கடித்துவிடுவேன். எந்தத் தருணத்தில் இவன் தன் ஜாலங்களைத் துறந்து நேரடி வசையிலும் அவதூறிலும் இறங்குகிறானோ அப்போது அவன் தோற்றாகிவிட்டது என்று பொருள். ஆனால் இவ்வெற்றிக்கு என்ன அர்த்தம்? இச்சிறு வெற்றிகளினூடாக எனது முடிவின் அர்த்தமின்மையை மூடிவிட முயல்கிறானா? இல்லை. இவன், இந்த சுப்பையா, ஒரு பிரதிநிதி. சமரசங்களினூடாக லௌகீகத்தில் உழன்றபடி, புரட்சிவேடம் போடும் சராசரிக் கட்சி உறுப்பினன். சராசரிப் பாமரன் இவன். இவனது பெருந்திரளே வரலாறு என்று பெருகி நின்று என்னை நாளை மதிப்பிடும். இவனிடம் என் பிம்பத்தை ஓட்டைகளின்றி விற்றுவிட்டால், நான் வென்றேன். அதன் பொருட்டு – அந்த வெற்றியின் பொருட்டு – நான் சாகவும் தயார். எத்தனை இழிவு! எத்தனை கீழ்மை! எத்தனை அபத்தம்! என் அந்தரங்கம் கூசுகிறது. இந்த பேதமையின், குரூரத்தின், கபடத்தின் அளவுகோல்களுக்குமுன் என் முதுகைத் திருப்பிக் காட்டிவிட்டு வாழ முடிந்தால் – இம்மிகூட இச்சையும் சபலமும் இன்றி இதைச் செய்ய முடிந்தால் – அடையாளமின்றித் தொலைந்து போவதனூடாக என் முழுமையைக் காண முடிந்தால் – அன்று மட்டுமே நான் என் மரியாதைக்குரியவனாக இருப்பேன்.

மார்த்தாண்டம்
16.5.1955

●

உனது மனசாட்சிப் புரட்சி நீ செய்துகொள்ளும் ஒருவித சுயபோகம் என்கிறான் சுப்பையா. என் அடிவயிற்று உப்புவரை கசந்து நுழையும்

சொற்கள். என் வாழ்வின் தர்மசங்கடங்கள், இயலாமைகள், தோல்விகள் அனைத்தையும் சமன் செய்ய இப்பிரச்சினை மூலம் பிறருக்கு நான் அளிக்கும் குற்ற உணர்வைப் பயன்படுத்துகிறேன் என்கிறான். இன்னும் அந்தரங்கமாக, இன்னும் கேவலமாக, எதையெதையோ கூறுகிறான் "உனது புரட்சி ஓர் ஓரினப் புணர்ச்சி" என்று பதில் எழுதினேன். அது அவனை எங்கு தொடும் என அறிவேன்.

அந்த உவமை என்னை விடாது தொடர்கிறது. கட்சியில் பாலில் நெய் போல அனைவரும் அறிந்த, ஆனால் கடையாமல் பிரித்தறிந்துவிட முடியாத, ஒன்றாக ஒருபால் புணர்ச்சி உள்ளது. தொடர்ந்து அது பற்றிய நமட்டுச் சிரிப்புகளும் நகைச்சுவைகளும் அந்தரங்க உரையாடல்களில் வருவதுண்டு. ஏழெட்டுத் தடவை அது தீவிரமான மோதல்களுக்கும் வன்முறைகளுக்கும் வழிவகுத்து, மேலிடத் தலையீடுவரை போயிருக்கிறது. வழக்குகள் பெரும்பாலும் எளிய அகங்கார மோதல்களாகவோ, கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளாகவோ முதல் பார்வையில் படும். அதை ஆராயும்போதுதான் உள்ளே உண்மையான பிரச்சினையாக ஒருபால் புணர்ச்சி இருப்பது தெரியவரும். கீழமூலச்சல் தோட்டத்தில் ராகவன் தம்பியின் வழக்கு ஓர் உதாரணம். அவரிடமிருந்து இரண்டாயிரம் ரூபாய் கட்சிப் பணத்தைப் பெற்றுக்கொண்ட அச்சுதன்பிள்ளை திருப்பித் தரவில்லை என்று புகார். பெறவே இல்லை என்று மறுதரப்பு. சாட்சியங்களை விசாரித்து முன்னகர்ந்தபோது ஒருபால் புணர்ச்சியின்பாற்பட்ட தீவிர நட்பின் விளைவாகவே அந்தப் பணம் ஆதாரங்கள் ஏதுமின்றித் தரப்பட்டது என்று தெரியவந்தது. அச்சுதன் பிள்ளைக்கும் ராமசாமிச் செட்டியாருக்கும் இடையே அரும்பிய புதிய காதலால் பொறாமைகொண்ட தம்பி அதில் தீவிரமாக ஊடுருவியபோதுதான் பணவிஷயம் பிரச்சினை ஆயிற்று. அடிதடியில் செட்டியாரின் மண்டை உடைந்தது. விசாரிக்க ராமசுந்தரம் வந்திருந்தார்.

அன்றிரவு பேசுகையில் ஏன் இந்தப் பிரச்சினை என்று கேட்டேன். ராமசுந்தரம் மிகவும் தயங்கினார். பிறகு மெல்ல எல்லாவிதமான இராணுவ அமைப்புகளிலும் இப்பிரச்சினை உண்டு என்றார். புரட்சிகர / கலைமறைவு இயக்கங்களிலும், அபாயத்திலிருக்கும் . போர்க் குழுக்களிலும் அது அதிதீவிர நிலையை அடைகிறது. இது ஓர் உளவியல் சிக்கல். இதற்கான காரணங்களை எளிதில் வகுத்துவிட முடியாது என்றார். பாலுவிடம் பேசியபோது அவர் கூறியதைச் சொன்னேன். இயக்கத்தில் பெண்கள் அனேகமாக இல்லை என்பதே முக்கியமான காரணம் என்றார் பாலு. வெளிப் பெண்களிடம் நெருங்கிய உறவு கொள்வது பலவகையிலும் ஆபத்தானது. ரகசியங்கள் வெளியேறும். தற்காப்பும் கேளிக்கையும் கலந்த அந்த உலகம் தோழர்களைச் சீரழியவும் செய்துவிடும். ஆகவே பாதுகாப்பு கருதி மெல்ல ஆண் நட்புகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். அதைச் சொன்னபோது ராமசுந்தரம் சிரித்தார். 'பாலுவிற்கு எதற்கும் திட்டவட்டமான பதில் உண்டு. அதிர்ஷ்டசாலி மனிதர்' என்றார். நீங்கள் எப்படி இதைப் புரிந்து கொள்கிறீர்கள் என்றேன்.

'ஆண்கள் நெருங்கி வாழக் கூடிய சூழல் நம் சமூகத்தில் இல்லை' என்றார் ராமசுந்தரம். 'நமது சமூக அமைப்பில் ஆண்கள் உடல்ரீதியாக மிகமிகத் தனிமையானவர்கள். வயதுவந்த பிறகு அவர்கள் உடலை எவரும் அன்புடன் தொடுவதில்லை. உடலுக்குக் குலாவல் தேவை. தொடுகை மிக பிரம்மாண்டமான ஒரு நிகழ்வு உண்மையில். அதனூடாக மனிதன் சக மனிதனுக்கு மிகுந்த மனநெகிழ்வை அளிக்கிறான். ஏன் அந்த நெகிழ்வு ஏற்படுகிறது? சொற்கள் ஒருபோதும் அத்தகைய உடனடி மன நெகிழ்வை அளிப்பதில்லை. ஏனெனில் சொற்களை மனிதர்கள் தங்கள் புத்தியால் தடுக்கிறார்கள். ஆனால் தொடு உணர்வுக்கு எதிராக மனிதர்களிடம் எந்தத் தடையும் இல்லை. இந்தப் பூமி முழுக்கப் பரவி விரிந்திருக்கும் மனித உடலின் ஒரு துளியாகத் தன்னை உணர் வதனூடாக ஏற்படும் மனவிரிவே அந்நெகிழ்வைத் தருகிறது. ஏன் மனித உடல் என்று கூற வேண்டும்? மிருகங்கள் பறவைகளின் உடல்கூட நாம் கொள்ளும் முதல்கட்ட அச்சத்தையும் அருவருப்பையும் தாண்டி விட்டால் நம்மை நெகிழ வைத்துவிடுகிறது. ஓர் இயக்கத்திற்குள் ஆண்கள் மிக அந்தரங்கமாகத் தங்கள் மன எழுச்சிகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். தங்கள் கனவுகளை பகிர்ந்துகொள்ளும் இருவர் அந்த நாணயத்தின் மறுபக்கத்தையும் – அக்கனவுகளை உருவாக்கிய பலவீனங்களையும் சிறுமையுணர்வையும் – சேர்த்துப் பரிமாறிக் கொள்கிறார்கள். அந்த அந்தரங்க நிலை தொடுகையாக நீள்கிறது. தொடுகை அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்கிறது. உடல் பிற உடலுடன் இணையவும், தன்னிலையைத் துறக்கவும் தீராத வேட்கையைத் தன்னுள் கொண்டுள்ளது. கட்டியணைக்க, இறுக்க, உடலுடன் உடலாகக் கலக்க, இரண்டின்றி உணர, உடலுக்கு இருக்கும் வேட்கை பயம் தரக் கூடியது. பயம்! அந்த பயம் நமது கலாச்சாரத்தின் விளைவான தன்னிலையிலிருந்து எழுவது. ராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னது போல கடல்விளிம்புவரை வந்துவிட்ட உப்புப் பொம்மையின் பயம் அது. அந்தப் பயமே அந்தப் பேருணர்வை உடைமையுணர்வாகச் சிறுக்க வைக்கிறது. பொறாமையாகவும் துவேஷமாகவும் மாற்றுகிறது. உளச்சிக்கல்கள் அங்கு தொடங்குகின்றன.'

''ஃபிராய்டுக்கும் மார்க்ஸுக்கும் இடையே ஓரினப் புணர்ச்சி நடைபெறுவது போலிருக்கிறது'' என்றேன். ராமசுந்தரம் பீறிட்டுச் சிரித்துவிட்டார். (எத்தனை அற்புதமான மனிதர். எத்தனை திறந்த உள்ளம். கள்ளம் கபடமற்ற அந்தச் சிரிப்பு மனமாச்சரியங்களைக் கடந்தவர்களுக்கே உரியது. ராமசுந்தரத்தால் இப்போது அப்படிச் சிரிக்க முடிகிறதா தெரியவில்லை.) 'உங்கள் கூற்று மிதமிஞ்சிய இலட்சிய வாதம். பாலுவின் பேச்சு மிதமிஞ்சிய யதார்த்தம். உண்மை இரண்டுக் கும் நடுவே எங்கோ உள்ளது'' என்றேன். மீண்டும் சிரித்தார்.

தீவிரமான இலட்சியவாத இயக்கங்களில் ஏன் பெண்கள் அனேகமாக இல்லை என்பது இதனுடன் சேர்த்து யோசிக்க வேண்டிய கேள்வி. பெண்களும் பங்குபெறும் அமைப்புகளில் சாதாரண காமமே பெரும்

அடித்தளப் பிரவாகமாக இருக்கும். ஏனெனில் மனிதன் உடலையும் பகிரும்போதே தன்னை முழுக்கப் பகிர்ந்துகொள்வதாக உணர்கிறான். என் அத்தனை இலட்சியவாதிகளுக்கும் தங்கள் இலட்சியக் கனவை பகிர்ந்துகொள்ளக் கூடிய ஒரு மனைவி (காதலி?) தேவையாக இருக்கிறது? (அனேகமாக அத்தனை பேருக்கும் அது நிறைவேறாத அந்தரங்க ஏக்கம்) அது நேர்மாறான ஓர் உணர்வை சமூக ஒழுக்க வியலுக்கு ஏற்ப திருப்பிக்கொள்ளுவதன் விளைவு அல்லவா? தன் இலட்சியங்களையும் கனவுகளையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் துடிப்பு அனைவரிடமும் உள்ளதல்லவா? இதில் ஆண் என்ன பெண் என்ன? அப்த்தமாக இருக்கிறது இந்தச் சிந்தனை. அசிங்கமாகவும். ஆனால்...

இன்னொரு விஷயமும் இருக்கக் கூடும். ஆண் பெண் உறவு என்பது ஒரு பெரும் முரண் வளர்ச்சி இயக்கம். பிரபஞ்சம் முழுக்க ஆதார இயக்க விதியாக இருக்கும் முரண் வளர்ச்சி இயக்கத்தின் தூலம் அது. அதிலிருந்தே ஒருவேளை மனிதன் பிரபஞ்ச இயக்கத்தின் இந்த ஆதார விதியைக் கண்டடைந்தான் போலும். ஆணும் பெண்ணும் ஒன்றையொன்று சந்தித்து, மோதி இணைந்து, புதிதொன்றை உருவாக்கும் நேர்நிலை, எதிர்நிலைகள். ஒவ்வொரு ஆக்கத்திற்கும் இவ்விரு முனைகளும் தேவைப்படுகின்றன. ராணுவங்களில், புரட்சி இயக்கங்களில் நேர்நிலை மட்டும்தான் உள்ளது. விறைப்படைந்து காத்திருக்கும் ஓர் ஆண்குறி. ஒரு போரின், புரட்சியின் தருணத்தில் அது தன் எதிர்நிலையை சந்திக்கக் கூடும். புணர்ச்சியும் உச்சமும் சிருஷ்டியும் அங்கு நிகழக் கூடும். போரின் பெரும் கவர்ச்சியே அது ஒருவகை உடலுறவு என்பதுதான். ஒருவேளை வன்முறைக்கு இருக்கும் கவர்ச்சிக்குக் காரணமே வன்முறையின்போது நேர் - எதிர் நிலைகள் சந்திக்கும் உச்சகணம் நிகழ்கிறது என்பதுதானா? உலகமொழிகளிலெல்லாம் வன்முறைக்கும் போருக்கும் புணர்ச்சிக்கும் ஒரே கலைச் சொற்கள்தான் இதுகாறும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. போர் என்பது உடல்களின் திரள்கள் பிணைந்துருவான விராடபுருஷனும் விராட புருஷியும் கொள்ளும் பெரும் உறவு. போரும் அமைதியும் நாவலில் படைகள் புணரும் பிரம்மாண்டமான காட்சிகளின் அற்புதமான சித்தரிப்புகள் பல உள்ளன. நெப்போலியன் குன்றுமீது நின்று பார்க்கும்போது பிரஞ்சுப் படைகளும் ரஷ்யப் படைகளும் மோதிக் கலக்கின்றன. உயிர்த் திரவங்கள் ஊடுருவுகின்றன. பனிப்புகைக்குள் மிக அந்தரங்கமாக, மிக மூர்க்கமாக, நடைபெறுகிறது அது. அதில் பங்கு பெறும் ஒவ்வொருவரும் உச்சகட்ட பரவசத்தில் வெறிகொண்டிருக் கிறார்கள். அந்தத் தருணத்தில் திளைக்கிறார்கள். அப்புணர்ச்சி மிக இயல்பானது; இயற்கையின் மர்மமான ஆணைகளால் கட்டுப்படுத்தப் படுவது. அதன் அழிவை நாம் அறிய முடியும். ஆக்கம் நம் கற்பனைக்கு அப்பாற்பட்டது.

அப்படியானால் காத்திருக்கும் ராணுவங்களில், காத்திருக்கும் இயக்கங்களில், ஓரினப் புணர்ச்சி என்பது ஒரு குறியீட்டுச்

செயல்பாடுபோல. அது ஒரு பதிலிச் செயல் போலும். உண்மையான புணர்ச்சியின் ஒத்திகை போலும். நேர்நிலைகள் உரசி உதிர்ந்து வீணாகின்றனவா? எத்தனை தீவிரத்துடன் அவ்வமைப்புகள் காத்திருக்கின்றனவோ அத்தனை தீவிரத்துடன் ஓரினப் புணர்ச்சி அவற்றில் வளர்கிறது. அத்தனை சொற்களும், கோஷங்களும், நெகிழ்வுகளும், கோபதாபங்களும், குரோதங்களும் எல்லாம் அந்த இச்சையின் வெளிப்பாட்டு நிலைகள் மட்டுமே என்ற மனப்பிம்பம் எழுந்து என்னை துணுக்குற வைக்கிறது. நமது புரட்சிகர இயக்கங்களுக்குள் பரிமாறிக் கொள்ளப்படும் வெப்பம் மிக்க சொற்களும், தீவிர பாவனைகளும் எல்லாம் இப்போது பார்க்கையில் ஒரு பெரும் காமலீலை போலிருக்கின்றன. பட்டியில் அடைபட்டு முட்டி உரசும் விந்து முற்றிய பொலிகாளைகள்.

ஆனால் இந்த ஓரினப் புணர்ச்சி எல்லை மீறியது என்றால் என்ன ஆகும்? காத்திருப்பின் தொய்வையும் பதற்றத்தையும் தாண்டுவதற்குப் பயன்படுவதற்குப் பதிலாக இச்செயலில் ஒவ்வொருவரும் ரசித்து ஈடுபட்டால் என்ன செய்வது? நீண்ட காலமாக இதைச் செய்து வரும் ஓர் இயக்கம் இதற்கான நியாயங்களை முதலில் உருவாக்கிக் கொள்ளும். இதற்கான கோட்பாடுகளாக அவை வளர்ந்து முழுமை பெறும். அதன் பிறகு இதற்கான அழகியல் வகுக்கப்படும். உண்மையான புணர்ச்சியை அது ஒத்திப்போடும், அஞ்சும், நிராகரிக்கும், வெறுக்கும். என்ன சொல்வது, காலப்போக்கில் அது புணர்ச்சியை இயல்புக்கு மாறானதாகவும் எண்ணக்கூடும்...

மார்த்தாண்டம்
17.6.1955

●

'திருவிதாங்கூர் நேசனின்' ஆசிரியர் 'இசக்கி' என்ற வினோதப் பிறவியை நேற்று சந்தித்தேன். பெரிய மனிதர்களின் அந்தரங்க லீலைகளை விட்டுவிட்டு மொழிவாரி மாநிலக் கோரிக்கை என்ற 'இலட்சிய வேள்வி'யில் நேசன் குதித்துவிட்டது என்றான் இசக்கி. ஒல்லியான உடம்புமீது நீளமண்டை வளைந்தது, நெளிந்தது. என்ன விசித்திரமான குரல்வளை! அவனிடம் பேசும் எவரும் அதன் அசைவுகளையன்றி வேறு எதையும் கவனிக்க முடியாது. 'மொளியப்பத்தி என்னமாம் எழுதிக் குடுங்க சார். நல்ல புறட்சிகரமாட்டி இருக்கட்டு சாதனம்'' என்றான். அத்தனை அழுத்தமாகப் புரட்டினால் மொழி என்னத்துக்கு ஆகும் என்றேன். பெரிய மீனை விழுங்கும்

கொக்குபோல கழுத்து புடைக்க தலையைப் பின்னுக்குத் தள்ளி கக்-கக்-கக் என்ற சிரித்தான். ''மொளியாக்கும் நம்ம வாள்க்கைக்க சென்றறு கேட்டியளா? அதை பாதுகாக்காமப் போனா நம்ம பிள்ளியளுக்கு நாம உத்ரம் சொல்ல வேண்டியிருக்கும் பாத்துக்கிடுங்க'' என்றான். ''நீங்க முன்னாடி ஒரு வேப்பமரத்தப் பாதுகாக்கியதுக்கு பெரிய கலாட்டா பண்ணிட்டிய எண்ணு கேள்விப்பட்டனே'' என்றேன். மறுபடியும் கொக்கு அண்ணாந்து கொக்கரித்தது. சட்டென்று முகம் தீவிரப்பட்டு, ஓரக்கண்ணால் இரண்டு பக்கமும் கவனித்து, குரல் தணித்து, ''கடசீல என்ன ஆச்சு, அதைக் கெவுனிச்சியளா? மலையாளத்தான் அந்தால போனான், துலுக்கன் இந்தால போனான். அதாக்கும் நேசனுக்க களி. ஒரு கல்லில ரண்டு தேங்கா'' என்றான். தியானத்திலாழ்வதுபோல கண்கள் பாதி மூடிவிட்டன.

கொண்டுபோயிருந்த மூன்று கட்டுரைகளையும் ஒரு மொழிபெயர்ப்பையும் அவன் தலையில் கட்டி பதினேரு ரூபாய்க்குக் கையெழுத்துப்போட்டு ஆறுரூபாய் எண்பது பைசாவை வாங்கிக் கொண்டு வந்தேன். (''மிச்சம் சவுரியம்போல வந்து வாங்கிகிடுங்க அண்ணாச்சி. நேசன் எப்பவும் உங்க பொறத்தால உண்டுண்ணு நினைச்சிக்கிடுங்க.'') சாணித்தாள் பத்திரிகையாக இருந்த நேசன் மொழிவழி மாநிலப்பிரிவினைப் பிரச்சினையினூடாக கிடுகிடுவென்று மேலேறி தேசியப் பத்திரிகையாக ஆகியிருக்கிறது. ஐசன்ஹோவரின் எதிர்காலம் பற்றியும் அணுகுண்டின் பின்விளைவு பற்றியும் கவலைப் படுகிறது. இனி இந்த நாணல் பிறவிகள் கருத்துக்களைத் திர்மானிப் பார்கள், கலைகளைத் தரப்படுத்துவார்கள், கலாச்சாரத்தைத் திசை திருப்புவார்கள்.

சமூகத்தில் பல்வேறு குழுக்களுக்கு இடையே அதிகாரத்திற்கான பெரும்போட்டி இடைவெளியின்றி நடைபெறுகிறது. எந்தப் பிரச்சினையானாலும் அப்போட்டியைப் பிரதிபலிக்க ஆரம்பித்து, ஒரு கட்டத்தில் அதன் குறியீடாக ஆகிவிடுகிறது. மாவட்ட உருவாக்கம் என்பது இன்று குமரிசார்ந்த மண்ணில் நாயர் – நாடார் ஆதிக்கப் போட்டி யாட்டும்தான் (''நம்ம லெக்கில இப்பம் நிக்குதவன் மலையாளியாக்கும் கேட்டுதா அண்ணாச்சி. அவனெ ஒரு தட்டுத் தட்டுவம். மத்தப் பயக்களுக்கு என்ன எழுத்தா படிப்பா? இங்கதானே வருவாவ, ஏது?'' – இசக்கி) கடைசியில் என்ன ஆகும்? திருவிதாங்கூர் உடையும். குமரி மண் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக ஆகும். அதில் ஐயமேயில்லை. இப்போட்டியின் பலாபலச் சமன்பாடு அப்படித்தான். யாருக்கு லாபம்? சில அரசியல் கலைவர்கள், குறிப்பாக திருவிதாங்கூர் நேசன் (நேசனைத் திருநெல்வேலிக்கு மாத்தி ஒரு பெரிய பேஸ்மென்ட் போடுயதுக்கு இட்டமுண்டு அண்ணாச்சி. அப்பிடி விட்டுப்போடப்பிடாதே, என்ன சொல்லுதிய?) மற்றபடி இது ஒரு குறியீட்டுச் சண்டை. வெற்றியும் தோல்வியும் வேறு இடங்களில் தீர்மானமாகின்றன.

இந்த மண் என் விளைநிலம். இதன் இயல்பில் வரும் மாறுதல் என்னையும் மாற்றியமைக்கும். அதனால்தான் மிகவும் அஞ்சுகிறேன். இதை தமிழ்ப்படுத்தினாலும் சரி மலையாளமாக்கினாலும் சரி அது இதன்மீது செலுத்தப்படும் பெரும் வன்முறைதான். இதை யாரிடம் நான் பகிர்ந்துகொள்ள முடியும்? ஆட்டம் தொடங்கிவிட்டால் எத்தனை சீக்கிரமாக மனிதர்கள் கட்சி சேர்ந்துவிடுகிறார்கள்!

மார்த்தாண்டம்
19-8-1955

●

பாச்சுப்பிள்ளையின் சாயாக்கடையில் 'திருவிதாங்கூர் நேசன்' பார்த்தேன். கேரளத்தில் ஆட்சியமைப்போம் என்று கெ.ஆர்.எஸ். முழங்கியிருக்கிறார். நல்ல விஷயம்தான். ஐம்பத்திரண்டில் இந்த மனிதரிடம் சாலையில் தடையரண்கள் ஏற்படுத்தி பார்ட்டிசான் முறையில் அரசை எதிர்த்து ஆயுதப் போராட்டம் செய்யும்படி ஸ்டாலின் தூதனுப்பிச் சொன்னார். பதுங்குகுழியில் உட்கார்வதற்கு மட்டும்தான் அவருக்கு இப்போது பயிற்சி இருக்கிறது என்று கெ.கெ.எம். நக்கல் செய்தது ஞாபகம் வருகிறது. பாவம்! அவருக்கு உகந்த தொழில் இப்போதுதான் அமைந்து வருகிறது.

கட்சி ஜனநாயகத்தை ஏற்க முடிவு செய்த மறுநாள் மத்தியானம் எதுவுமே தெரியாமல் மணிமேடையருகே நடந்துகொண்டிருந்தேன். எதிரே இசக்கி வருவதைப் பார்த்தேன். சுட்டெரிக்கும் வெயில். அவன் நந்தவனத்தில் நிலவில் நடக்கும் கந்தர்வன் மாதிரி இருந்தான். அவனது வினோதமான உடலை எவரும் திரும்பிப் பார்க்காமலிருக்க முடியாது. பார்த்துவிட்டால் அருள்புரியும் பாவனையில் சிரித்து வணக்கத்தை ஏற்றுக் கொண்டுவிடுவான். ராஜ ஊர்வல கோலாகலம். என்னைப் பார்த்ததும் கண்கள் இடுங்கின. முகத்தில் ஒரு உக்கிர பாவனை. வெடுக்கென்று ஒரு சலாம் வைத்துவிட்டு "விடியப் போவது அண்ணாச்சி, ரெண்டில ஒண்ணு பாத்துப் போடலாம்" என்றான். "ஏம்லே மூதி, நேரம் உச்சயாவுது உனக்கிப்பமா விடியுது? செரி, ஒரு ரெண்டு ரூவா எடு. காலம்பறமுதல் வயிறு காலி" என்றேன். பிற் பகுதியை இசக்கியின் காதில் போடுவது சுலபமல்ல. வானைப் பார்த்து குரல்வளை குதியாட சிரித்தபிறகு "அண்ணாச்சி தமாஷடிக்கணும், கேக்கணும். எளுத்தாளன்னா சும்மாவா? சரஸ்வதி கடாட்சமுல்லா" என்றான். "செரி ஒரு ரெண்டு ரூபாவத் தள்ளு" என்றேன்.

"அப்பம் என்னவாக்கும் பிளான். இனிமே அண்ணாச்சிய மாதிரி ஆளுகல்லா வேணும் காரியங்க நடத்தியதுக்கு" என்றான். "என்னடே பினாத்துதே, இளவு வெயிலுல்லா கேறி அடிக்குது" என்றேன். இசக்கி கூர்ந்து பார்த்துவிட்டு "அப்பம் அண்ணாச்சி இண்ணைக்கி நேசன் பாக்கேல்லியா?" என்றான். "பாப்பமிடே இப்பம் என்ன கெட்டுப்போச்சி?" என்றேன். "நல்ல கூத்தாட்டுல்லா இருக்கு. நம்மக் கட்சிக்க காரியம்லா இண்ணு நாட்டில பேச்சாட்டு கிடக்குது" என்றான் இசக்கி. "என்ன செய்தானுவ புரட்சியக் கொண்டாந்துட்டானுவளா?" என்றேன். "கொண்டு வந்தாச்சு அண்ணாச்சி சாதாரணப்புறட்சி இல்ல சனநாயகப் புறட்சி. கட்சி இலக்சன்ல நிக்கப் போகுது, கேட்டியளா? இனிமே மத்தவனுவ சட்டி எடுக்கவேண்டியதுதான்." "மத்தவன்னா ஆருடே?" "மூணு நெறப் பெயவதான்." "அதுக்கு நீயும் அந்தக் கட்சி தானேடே?" "அண்ணாச்சி வெளையாடுதிய. எளுத்தாளக் கூறும்புல்லா" என்றபடி குரலைத் தணித்து "நேசனுக்கு எப்பவும் செவப்பு நெறம் குறெ உண்டு பாத்துக்கிடுங்க" என்றான். "செரி கெடக்கட்டு, நீ ஒரு ரூவா எடு" என்றேன். "ரூவாயா? ஆபீஸுக்கு வாருங்க பாக்கலாம்" என்றான். மடியையும் பையையும் காட்டினான். புஜத்தில் சுருட்டப்பட்டிருந்த சட்டைக்கையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துவிட்டேன். "அண்ணாச்சி ஆளு பாக்குது, ஆளு பாக்குது" என்று பதறினான். உலகறிந்த அறிவுஜீவியல்லவா? இன்னும் நான்கு ரூபாய் அவன் தரவேண்டும். முச்சந்தியில் வைத்துப் பிடுங்கினால்தான் உண்டு.

கெ.ஆர்.எஸ். ஒரே மேற்கோளால் இசக்கியை மண்டையில் அடித்து உட்கார வைத்துவிடுவார். இவன் அவரைப் பற்றி அவருக்கே தெரியாத செய்திகளை வெளியிட்டு சில வருடங்களில் அச்செய்திக்கு ஏற்ப அவரை மாற்றிவிடுவான். இந்தச் சண்டைக்குப் பெயர்தான் ஜனநாயகம். ஐம்பது வருடம் கழித்துப் பல்லாயிரம் மேற்கோள்களும் செய்தித் துணுக்குகளும் எஞ்சும். இந்த விவசாயத்தின் அறுவடை அதுதான். வெற்றுச் சொற்களினாலான வரலாறு. ஆனால் மனிதத் தலைகளினால் எழுதப்பட்ட வரலாற்றைவிட இது மேலானது.

மார்த்தாண்டம்
1-5-1956

•

நேற்றிரவு கையில் சாராயக் குவளையுடன் அமர்ந்திருக்கும்போது சாலையில் ஒரு வண்டி போன ஒளியில் கண்ணாடி கிளாஸும் திரவமும் மின்னின. கண்போல. மிருகங்களின் கண்களுக்குத்தான் அப்படி ஓர் உள் ஒளி உண்டு. இது எந்த மிருகம்? பாத்திரக் கடையின் பின்புறம்

குமாரசாமியின் வியாபார இடத்தில் அதிக நேரம் நிற்க முடியது. சாக்கடை வீச்சமும் உண்டு. யோசித்தபடி நடந்தேன். சாராயம் என்பது என்ன? ஒரு பானம். ஆனால் குடிக்காதபோது முதலில் தொண்டையில், பிறகு வயிற்றில், பிறகு உடல் முழுக்கப் பரவும் சாராயமில்லாமையின் வெற்றிடத்தை உணர முடிகிறது. சாராயத்தால் மட்டுமே நிரப்ப முடிகிற வெற்றிடம் அது. அருந்தியதும் சூடாகப் பாய்ந்து எங்கும் பரவுகிறது. விரல்நுனிவரை அதை உணர முடிகிறது. அதுவரை பதற்றத்துடனும் தவிப்புடனும் என்னைச் சூழ்ந்து நிற்கும் எல்லாப் பொருட்களும் மெல்ல சகஜமடைகின்றன. கட்டிடங்கள் சலிப்புடன் தங்கள் அஸ்திவாரங்கள் மீது அழுந்திக்கொள்கின்றன. மரங்களின் கிளைகள் விறைப்பை இழந்து மெல்ல அசையத் தொடங்குகின்றன. ஒலிகள் மேலும் துல்லியமடைந்து தனித்தனிச் சத்தங்களாகவும் குரல்களாகவும் மாறுகின்றன. காற்று உடலை வருடியபடிச் செல்லும்போது உடலின் வியர்வை இனிய புல்லரிப்பாக இருக்கிறது. முதலில் ஏற்படும் எண்ணம் இன்னும் சிலமணி நேரங்களுக்குக் கவலையில்லை என்பது. இனி நிதானமாக யோசிக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொள்வேன். ஆனால் யோசிப்பது அப்போது கடினம். எவ்வளவு முயன்றாலும் உதிரியான சிந்தனைகள்தான் வரும். அவையும் சம்பந்தமில்லாத சிந்தனைகள். யோசனை நிகழ வேண்டும். நிகழ்ந்துவிட்டால் சூறைக்காற்றுபோல தூசும் குப்பையும் கூளமுமாக அடித்துச் சுழன்று ஓய்ந்து அமைதி யாகும். ஓய்ந்தபிறகு எதுவுமே எஞ்சாது. மழையால் கழுவப்பட்ட கோலம்போல. கூர்ந்து பார்த்தால் வண்ணங்களின் கரைசல் தெரியும். பாதி கற்பனை, மீதி கனவு. இந்தக் காலை நேரத்து வெறுமைதான் குடியின் மிக மோசமான அம்சம். நாட்கள் சென்று மெல்லமெல்ல அப்போதுதான் பேரிழப்பாக மனதை அறையும். கைகள் நடுங்குவது அச்சமூட்டும். உடல் பற்றிய ஐயங்கள் எல்லாமே மரணம்பற்றிய பயமாக மாறும். இடது கையை நீட்டிப் பார்ப்பேன். நடுங்குகிறதா என்று நினைக்கும் கணம் அது வெடவெடக்கத் தொடங்கும். வயிற்றை அழுத்தி ஈரலைத் தொட்டுப் பார்ப்பேன். கெட்டுப்போன ஈரல் ஹார்ட் பந்துபோல இறுகியிருக்கும் என்பார்கள். இளக்கமாக இருக்கும். சில சமயம் இறுகியிருக்கும். இறுகியிருந்தால் அது இளக்கமாகத் தென்படும் வரை நம்பிக்கையுடன் மாற்றி மாற்றி அழுத்திப் பார்ப்பேன். இளக்கமாக இருந்தால் மனம் மலரும். எதுவும் ஆகவில்லை. இனிமேல் குடிக்காமல் இருந்தால் போதும். இன்னும் நாளிருக்கிறது. அவ்வளவுதான் தப்பிவிட்டேன். எல்லாப் பரவசமும் சில நிமிடங்களுக்குத்தான். காலையில் மலச்சிக்கல் இன்னொரு பிரச்சினை. அடிவயிறு கனமாக இருந்தாலும் குடல்கள் பரஸ்பரம் ஒட்டி உலர்ந்து கிடக்கும். சிலநேரத்துத் தனிமையில் எதற்குமே அர்த்தமில்லை என்றுபடும். மனிதர்களின் உடலில் அடைபட்ட உயிர் சிறைமீளத் துடிக்கிறது. பல கோடிப் பேர் உடலை செல்லரிக்கவிடுகிறார்கள். சிதைந்த பகுதியிலிருந்து உயிர் வெளியேறிவிடுகிறது. கவலைகளும் துக்கங்களும் விரக்தியும். வேறென்ன மனித வாழ்வு? படிப்படியான மரணம். எப்படிச் செத்தால்

என்ன? ஒன்று அதீத நம்பிக்கை அல்லது அதீதச் சோர்வு. இதுதான் குடிகாரனின் காலை நேரம். எல்லாம் முதல் மிடறுவரை. மீண்டும் பழைய கதை. பழைய பாதை.

சாராயத்தினூடாக எதை உள்ளே செலுத்திக்கொள்கிறேன். ஒரு மூறி மருந்தை. அது என் எண்ணங்களுக்கும் கால இடத்திற்கும் இடையே யான உறவைப் பலவீனப்படுத்துகிறது. அவற்றை என்னால் மாற்ற முடியாத அந்த இரும்புத்தனமான வரிசையிலிருந்து குலைத்து வேறு ஒரு தருக்கத்தில் அடுக்குகிறது. இந்த மங்கலான திரவத்தின் ஆத்மா எது? காற்றில் உறுமும் கரிய பனைமரங்கள் இருளின் தீவிரமான மூடிவின்மை யிலிருந்து உறிஞ்சி எடுத்த பித்து போலும் இது. பகல்வெயிலின் உக்கிரத்தில் கானலில் நெளியும் பனைமர உடல்களின் கரிய பாம்புகளின் விஷம் போலும். மாம்பட்டைச் சாராயத்தில் ஓணானைக் கொன்று சேர்ப்பதுண்டு. வேலிமீது ஓணான் ஒன்று அமர்ந்திருப்பதை ஒருநாள் கண்டேன். அதன் தலை மெல்லமெல்ல சொடுக்கிக் கொண்டது. உடல் நிறம் பச்சை கரைந்து மண்ணிறமாகியது. அந்த சோகமான கண்களைக் கூர்ந்து பார்த்தேன். அது டைனோசர் வம்சம். பூமியதிர நடந்த மூதாதையரின் ஞாபகமா? நிறம் மாற்றி வாழ்வதனூடாக அழிவை ஒத்திப்போட்ட வெற்றியின் வெறுமையா? இந்தச் சாராயம் ஒரு மௌனமான பிரார்த்தனை. வெறுமை வெளி நோக்கியது. துருத்தி நிற்பதன் துயரைக் கரைத்தழிக்கவும், கரைந்து போதலின் துயரை மிஞ்சி மீளவும் வரமருள்க! அங்கு வேறு ஏதோ கிரகத்தில் சாராயத்தாலான நதிகள் ஓடுகின்றன. சாராயத்தாலான பழுப்புநிறக் கடல் அலையடிக் கிறது. அதில் துயரமின்மை மின்னும் கண்களுடன் மீன்கள் திளைக் கின்றன. அவை குடித்துக் குடித்து செத்த குடிகாரர்களின் ஆத்மாக்கள். சாராயம் மௌனமான பிரார்த்தனை. இது விஷம். விஷங்களெல்லாமே பிரார்த்தனைகள்.

மார்த்தாண்டம்
8-8-1958

•

அடுத்தவன் முதுகில் சாட்டை விழும் வலியை உணர முடியாதவன் காதரிகமில்லாதவன் என்றார் தல்ஸ்தோய் ('நடனத்திற்குப் பின்' குறுகதை) அடுத்தவன் வலி என் வலியாவது எப்போது? நான் அவனையும் நானாக உணரும்போது. என் சுயஎல்லையை விரித்து அவனையும் இணைத்துக் கொள்ளும்போது. நம்மில் பலர் உதிர உறவுகளையும் குடும்பங்களையும் மட்டும் அப்படி இணைத்துக் கொள்கிறோம். பழங்குடிகள் தங்கள் இனத்துடன் அப்படிக் கரைந்து

விடுகிறார்கள். தேசியவாதிகள் தங்கள் தேசங்களுடன். மனிதாபிமானிகள் மனித குலத்தை. ஞானிகள் உயிர்களையும் பிரபஞ்சத்தையும் முழுக்க. சரிதான். ஆனால் அவ்வாறு சுயம் விரியும்போது கூடவே விரியும் அகந்தையை என்னவென்பது? அந்த அகந்தையல்லவா அதிகாரமாக மாறுகிறது? நான் மனிதாபிமானி! நான் ஞானி! அந்த அதிகாரத்தின் உச்சியில் ஆரோகணித்து மனிதன் கூறுகிறான், நான் உலகிடம் கருணையோடிருக்கிறேன். மன்னிக்க வேண்டும் தல்ஸ்தோய், அந்த மன எழுச்சியின் அடுத்த கட்டமே நான் உலகை சீர்திருத்தி அமைப்பேன் என்பது. அது லெனின் குரல், ஸ்டாலின் குரல், மார்க்ஸின் குரலும்கூட. உலகின் எல்லா ஞானிகளும், அறிஞர்களும், அதிகாரமேந்திய வீரர்களும் எழுப்பிய குரல். அதுதானே உங்களுக்கும் உந்துசக்தி என் குருநாதரே? யாஷ்னாபல்யானா மாளிகையை விட்டு வெறுங்கையுடன் இறங்கி நடந்தபோது என்னதான் நினைத்துக்கொண்டீர்கள்? உலகிற்காக நான் இதோ அனைத்தையும் துறக்கிறேன் என்றல்லவா? உங்கள் சொற் களிலெல்லாம் 'கேள் உலகே' எனும் பாவனை எப்படி வந்தது? அகந்தையே கருணையின் விளைநிலம். மாஸ்கோ சதுக்கத்தில் நீங்கள் கருணை வடிவமாக சிலையாகி நிற்பதை காண்கிறேன். குளிரில் நடுங்கியபடி, கந்தை அணிந்து, ஆபாசமான, குடிகாரனாக பொறுக்கியாக, ஏமாற்றுக்காரனாக, உங்கள் முன் வருகிறேன். ஒரு கல்லெடுத்து வசையுடன் உங்கள்மீது வீசுகிறேன். அந்தக் கல் என் தலைமீதும் விழுவதாக. உங்கள் ஆசி அது.

மார்த்தாண்டம்
10.8.1958

•

குடிக்காமலிரு என்று கூறும் நலம் விரும்பிகள் அனேகம். சொல்லும்போது அவர்களில் தெரியும் உண்மையான அக்கறை என்னைக் குத்துகிறது. கோபம் கொள்ளச் செய்கிறது. அவர்கள் எத்தனை தூரம் உண்மையான துயருடன் பிரியத்துடன் கூறுகிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள்மீது துவேஷம் கொள்கிறேன். ஏனென்று தெரியவில்லை. அவர்கள் தங்கள் நீதியின் பீடத்திலேறி நின்று என்னை நோக்கி விரல் சுட்டுகிறார்கள். அவர்கள் உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. மனம் தெளிந்திருக்கிறது. அவர்கள் உலகுக்கே உபதேசம் செய்யலாம். ஏன் என்னைப் போன்ற வேறு குடிகாரர்கள் எனக்கு உபதேசம் செய்வதில்லை? அவர்களல்லவா எனக்கு மேலும் மேலும் நெருக்கமானவர்கள்? ஒரு குடிகாரன் என்னிடம் உபதேசிக்க முற்பட்டால் அப்படியே அவன் தோளில் சரிந்து அழ ஆரம்பித்து விடுவேன். சொல்ல முடியாது. ஒருவேளை அவனை நான் எனனம்

செய்து கிழித்தெறிய முற்படக்கூடும். குடிக்காத தூயகுடல்ப் பெருமக்கள் முன்பு கூசிச் சுருங்கிவிடும் என் சுய கௌரவம் அவன்முன் படமெழுப்பி விஷம் துப்பக் கூடும்.

குடிக்காமலிருப்பவர்கள் அறிவதில்லை நான் குடிக்காத போதும் குடிகாரன்தான் என. குடிக்காமலிருக்கும் குடிகாரன். அவ்வளவுதான் வித்தியாசம். குடிக்காமலிருக்கும்போது என்னை மிகக் கனமாக, பரிதோர்கற்சிலைபோல உணர்கிறேன். அப்படியே கல்லித்து விழுந்து கிடக்கும் சிலை. அதை என் பிரக்ஞையால் ஒவ்வொரு கணமும் தாங்கி நிற்க வேண்டும். முழு உயிரையும் குவித்துத் தள்ளினால்தான் ஓர் அங்குலம் நகரும். மெதுவாகக் களைத்துவிடுகிறேன். அப்படியே விட்டுவிடுகிறேன். கனத்து கனத்து கனத்து அது நிற்பது கண்டு ஒரு கணம் சலிப்பும் மறுகணம் ஆங்காரமும் கொள்கிறேன். பிறகு பழிவாங்கப் புறப்படுபவன்போலக் கிளம்பிவிடுகிறேன். ஒரு முழுக் கோப்பைச் சாராயம் அந்த கருங்கல் பூதத்தைப் பறக்கச் செய்துவிடும். சருகுபோல அது தெருக்களில் அலைந்து, பதறி அலைக்கழிந்து, முட்களில் சிக்கி நடுங்கும். அப்போது முதலில் எழும் திருப்தி எனக்கெதிரான திருப்தி. பின் அதற்கடியில் தீராத சுய வெறுப்பு. அந்த கணங்களில் அந்த கனமான அமைதிக்காக ஏங்குவேன். இது ஓர் ஊசல். இதை இன்னும் ஆயிரம் வார்த்தைகளில் சொன்னாலும் தூயகுடல் ஒன்றுக்கு விளக்கிவிட முடியாது. குடிக்காமலிருக்கும் நரகத்தைவிட குடிப்பதன் நரகம் இலகுவானது, வேகமானது. இவ்வளவுதான் கூற முடியும்.

மார்த்தாண்டம்
12.8.1958

இறந்தவர்களால் நிரம்பியுள்ளது இந்த உலகம். ஒவ்வொரு மனிதனைச் சுற்றியும் ஆயிரம் இறந்தவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய கண்ணீரும் குரோதமும் இச்சையும் அவன்மீது படிகின்றன. அவைதாம் அவனை ஆட்டி வைக்கின்றன. இல்லையேல் இந்த உலகம் இப்படிப் புரிந்துகொள்ள முடியாதபடி இயங்க ஒரு நியாயமும் இல்லை. திடீரென்று ஒரு மாபெரும் தொழிற்சாலையில் தொடர்புகள் சிதறிப்போன அசைவுகள்போல உள்ளது உலக இயக்கம். கிரீச்சிட்டும், மோதி உடைந்தும், தேய்வுற்றும் இயந்திரங்கள் ஓடும் பேரோசை. ஒழுங்கின்மையின் வன்முறை. ஆனால் கூர்ந்து கவனியுங்கள். ஒழுங்கு இல்லாமலுமில்லை. ஒவ்வொரு யந்திரத்தையும் ஆவிகள் இயக்குகின்றன. அவற்றின் குரூரப் புன்னகையையும்,

பளிச்சிடும் விழிகளையும், தீர்மானமான நடைமுறைகளையும் பாருங்கள். பிறகு இந்த சிதைவியக்கம் உங்களுக்கு.வியப்பளிக்காது. ஞானிகளே, சிந்தனையாளர்களே, கடவுள்களே, மனிதனை இறந்தவர் களிடமிருந்து காப்பாற்றுங்கள். ஒரு கணமேனும் பூமியில் சுதந்திரமாக அவனை வாழவிடுங்கள். ஆனால் நீங்களும் இறந்தவர்கள். அல்லது இறந்த ஞானிகளால், சிந்தனையாளர்களால், கடவுள்களால் இயக்கப் படுபவர்கள். உங்கள் சொற்களும் செய்கைகளும் பாழ் மந்திரங்களாக நிரம்பிக் கனக்கிறது இந்த உலகம்.இறந்தவர்களால் மூடப்பட்டது இந்தச் சிறிய பூமி.

ஒன்று செய்யலாம். இநதப் பூமியை இதன் புராதன ஆவிகளுடன் இங்கேயே விட்டுவிட்டு மானுடகுலம் வேறு கோளங்களுக்குக் குடியேறிவிடலாம். புதிய மண்ணில், புதிய விண்ணின்கீழ், புதிய காற்றையும் ஒளியையும் அறிந்து வாழலாம். அப்போது ஒளி ஒளியாகவும், காற்று காற்றாகவும், பசுமை பசுமையாகவும் இருக்கும். அனுபவம் மூலம் ஒவ்வொன்றுக்கும் அவற்றுக்குரிய உண்மையான அர்த்தத்தைக் கொடுப்போம். ஒவ்வொன்றுக்கும் பெயர் சூட்டி மீட்டெடுப்போம். ஒவ்வொன்றின் முன்பும் நின்று புதிதாக நம்மை அறிமுகம் செய்துகொள்வோம். இப்போது நான் கொஞ்சம் கஞ்சா அடித்திருக்கிறேன். இல்லை என்று கூறவில்லை. ஆனால் இது உளறல் இல்லை. இது என் ஆத்மாவின் குரல். உலகத்தில் உள்ள அத்தனை பேருக்குமாகச் சொல்கிறேன். அப்படி ஒரு கோளம் விண்வெளியில் உள்ளது. அங்கு இறந்தகாலமே இல்லை. எல்லாமே நிகழ்காலத்தி லிருந்து நேரடியாக மீண்டும் எதிர்காலத்திற்குப் பாய்ந்து விடும். அங்கு மனிதர்கள் தங்களைத் தாங்களே தரிசித்தபடி வாழவும், எதையும் மிச்சம் வைக்காமல் சாகவும் முடியும். அந்தக் கோளம் அங்கே தன் அழியாத இளமையுடன், காய்கனி செறிந்த பசுமையான வனங்களுடன், ஓங்கிய மௌனமலைகளுடன், துல்லியமான வானத்துடன், மணக்கும் மண்ணுடன் நமக்காகக் காத்திருக்கிறது அங்கே தொலைவானில். இதோ இந்தத் தெருமுனையிலிருந்து பார்க்கையில் வானம் பகலொளியில் பொங்கிச் சிதறிக் குமுறிக் கிடக்கும் கண்ணாடிப் பிழம்பாகத் தெரிகிறது. அங்கே அந்த கோளம் சுடர்ந்து சுழன்று செல்கிறது போலும்.

மார்த்தாண்டம்
10.9.1958

●

ஓர் இலக்கிய விமரிசகனாக வாழ்வைப் பார்க்கும்போது இப்படிச் சொல்லத் தோன்றுகிறது. மிகமிக நீர்த்துப்போன படைப்பு. தொண்ணூறு சதத்தை வெட்டி நீக்கிவிடவும். மிஞ்சியதில் சிற்சில பக்கங்கள் மட்டுமே

முக்கியமானவை. சில வரிகளில் மட்டுமே உத்வேகம் கூடியிருக்கிறது. மாதச் சம்பளம் வாங்கி, மாதமிருமுறை முக்கிமுக்கிப் புணர்ந்து, மலச்சிக்கல் பற்றி கவலைப்பட்டு, கடன் தவணைகளைச் செலுத்தி, இறந்த வீடுகளுக்கும் கல்யாண வீடுகளுக்கும் போய் வந்து, சாவகாசமாக வாழ்ந்து தீர்க்கும் வாழ்வினூடாக சுவாரஸ்யமின்றி விரல்கள் புரட்டிச் செல்கையில் ஆழ்ந்த துயரமே என்னுள் நிரம்புகிறது. வாழ்க்கையை உத்வேகம் கொள்ளச் செய்யவே காலம் முழுக்க மனிதன் முயன்று வந்துள்ளான். அதன் பொருட்டே வாழ்வை இத்தனை சிக்கலாகவும் இத்தனை துயரம் மிக்கதாகவும் மாற்றி விட்டிருக்கிறான். வாழ்வை அதன் பொருட்டு அழிக்கவும் செய்வான். ஆதி உத்வேகத்தை அவன் வேட்டையாடும்போதும் வேட்டையாடப்படும் போதும் அடைந் திருக்கலாம். பிறகு போர்கள். கொள்ளைகள். அதிகாரச் சதிகள். பிறகு கலை இலக்கியமெனும் பதிலிகள். எப்படி என்ன செய்து இந்த வாழ்வை அர்த்தப்படுத்தலாம்? இந்தத் தேடலின் அற்புதக் கணமொன்றில்தான் மனிதன் சூதாட்டத்தைக் கண்டுபிடித்தான் போலும் (வாழ்வின் சூதாட்டத்திலிருந்து சூதாட்டம் உருவாயிற்றா? இல்லை, வாழ்வை மனிதன் சூதாட்டமாக மாற்றிக் கொண்டானா?) எது அந்த அற்புதக் கணம்? மரணத்தின் விளிம்பில் தத்தளித்து நிற்கும்போது ஆழ்மனம் கொண்ட பேருவகையைக் கவனித்து மீண்ட ஒருவனின் கண்டுபிடிப்பா அது? பிற்பாடு அவன் மலையுச்சியின் விளிம்பில் நின்று ஊசலாடி அதை அனுபவித்திருப்பான். தூங்கும் சிங்கத்தை இடறிவிட்டு ஓடியிருப்பான். தன் இறுதி உடைமையையும் சூதில் பணயம் வைத்துவிட்டு தற்செயலின் அடுத்தக் கணத்துப் பெருவெடிப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கும் சூதாடியில் ஒவ்வொரு கணமும் ஒரு யுகத்தின் அர்த்தம் கொள்கிறது. அந்த யுகத்தின் ஒவ்வொரு கணமும் இன்பம் நிரம்பியது. நியதியின் வலைகளைப் பிய்த்தெறிந்துவிட்டு தற்செயல்களினாலான பிரபஞ்சப் பெருவெளியின் மகத்தான இயக்க ரகசியம் அவனுடைய அந்தக் கணத்தில் பிரத்யட்சமாகிறது. சூதாடி அடையும் இன்பத்தைப் புவியில் வேறு யார் அடைய முடியும்? சூதாடி பெறும் ஞானத்தை எவர் பெற முடியும்? சூதாட்டம் அவனை இழுக்கிறது. ஒருபுறம் உடைமை களின், நியதிகளின் உலகம். மறுபுறம் தொடர்ந்த பெருவெடிப்பு களினூடாக தன்னைக் கண்டுதோறும் புரட்டிக் கொள்ளும் பெருவெளி. ஒருகையால் இதை இறுகப் பற்றியபடி அவன் அதை நோக்கி நகர்கிறான். அது அவனை இழுக்கிறது. விசை அதிகரிக்கிறது. இறுதிவரை பிடியை விடாமலிருக்கும்படி போராடுகிறான். பிடி நழுவிவிடுகிறது. அவன் அழிகிறான். முழுமையடைதலே முழு அழிவு.

தன் இறுதி உடைமையையும், உயிரையும், தன் முழு வாழ்வின் பொருளையும் சூதில் பணயம் வைத்து அமர்ந்திருக்கும்போது, அந்த இறுதிக் கணங்களில், சூதாடி மூன் ஒவ்வொரு வாசலாகத் திறக்கின்றன. சூடி வாசலில் வெறுமைப் பெருவெளியென பிரம்மம் வந்து நின்று புன்னகை புரிகிறது. வருக என் இனிய நண்பா. திரைக்கு இப்பால் நின்று உன்னிடம் ஆயிரம் கடவை கைகுலுக்கியிருக்கிறேன். இதுவே தரிசன நகூர்த்தம். அவன் முக்தி பெறுகிறான்.

சூதாடியின் வாழ்வின் ஒரு கணத்தின் பாரத்தை சம்சாரி தாங்கமாட்டான். அவன் முதுகெலும்பு முறிந்துவிடும்.

மார்த்தாண்டம்
16-9-1958

•

மலத்தில் நெளியும் கொக்கிப்புழு என்று என்னைப்பற்றி கெ.கெ.எம். சொன்னதாகச் செய்தி. கட்சிக்கு நான் அளித்தது சிறு ஆசனத் தொந்தரவு. இப்போது வெளியேற்றிவிட்டார்கள். குனிந்து மலப்புழுவைப் பார்க்கிறேன். உடலை ஆவேசமாக நெளித்து நெளித்துத் துடிக்கிறது. அந்தத் துடிப்பினூடாக அது தரும் அசௌகரியம் காரணமாக மனிதர்கள் ஆசன வாயைச் சொறிகிறார்கள். கை நகத்தில் ஒட்டி அதன் முட்டைகள் பரவுகின்றன. மீண்டும் பிறந்து பெருகுகின்றன. அந்தத் துடிப்பை உற்றுப் பார்க்கிறேன். இடைவிடாது தன்னைப் பிறப்பித்தபடி இருக்கும் பிரபஞ்சத்தின் துடிப்பல்லவா அது? என்ன சொல்கிறது? நான் பெருகி உலகை நிறைப்பேன் என்று! நானே உலகின் மையம் என்று! அந்தச் சிறு உயிரில் சிந்தனை இல்லை. பிரக்ஞை இல்லை. உயிர்ப் பிரபஞ்சத்தின் ஒரேயொரு ஆணை மட்டும். அந்த ஆணையே அதைத் துடிக்க வைக்கிறது.

மார்த்தாண்டம்
18-9-1958

•

ஜன்னலைத் திறந்து, பாதையில் போகும் பொறுக்கியை வேடிக்கை பார்க்கும் வீட்டு மனிதா, இது உனக்கு. வீடு உனக்குப் பாதுகாப்பல்ல. ஏனெனில் உன்னிடம் என்ன உள்ளது? அர்த்தமற்ற பயங்களும், அசட்டு உணர்ச்சிகளும், கணந்தோறும் பழமைகொள்ளும் சில பொருட்களும், மலச்சிக்கலும் தவிர? தெரு மனிதர்களை இகழாதே. உன்னால் ஒருபோதும் அவர்களைப் புரிந்துகொள்ள முடியாது. எல்லை வகுக்கப்படாத எதையும் பார்க்கவோ உணரவோ உனக்கு அனுமதி இல்லை. உனக்கு அனைத்துமே ரேஷனில் வழங்கப்படுகின்றன. காலம், வெளி, ஒளி, நீர், எல்லாமே. குடும்ப அட்டையைக் கையில் வைத்தபடி – குடும்பத் தலைவன் என்று குறிப்பிடப்பட்டிருப்பதன் அபத்தமான பெருமிதத்துடன் – மகிழ்ந்துபோன ஆத்மாவாக உன் வீட்டுக்குள் வாழ்கிறாய். கதவிடுக்கில் பீரிடுகிறது தெருவின் திறந்த காற்று. உன் ஆஸ்துமாவிற்கு அது எமன். மூடுடா கதவை.

குமித்துறை
21-10-1958

தன்னை கீழ்மகனாகவும் வெறுக்கப்படுபவனாகவும் ஆக்கிக் கொள்வதனூடாகவும் மனிதன் நுட்பமான இன்பம் ஒன்றை அடைய முடியும் என்று இப்போது அறிகிறேன். அவ்வின்பத்தின் முதல் காரணம் பிறர் கருதுவதுபோல உண்மையிலேயே தான் கீழ்மகனல்ல, அது தன் பாவனையே என்று அவன் அறிந்திருப்பதுதான். இந்தப் பிரக்ஞை தன்னை மேலோனாகவும், விரும்பப் படுகிறவனாகவும் காட்சிப் படுத்துபவனுக்கு இம்சையை அளிக்கும்போது, இவனுக்குத் தருவது ஒளிந்திருப்பதன் உவப்பை. இன்னொன்று, சுய அடையாளம் எனும் திடம் அவனுக்கு வருகிறது என்பதே. மனிதனின் பெரிய இம்சை காற்று போலவும் நீர் போலவும் வடிவற்றுத் தொடர்ந்து உருமாறி இடம்மாறி அலைந்து சுழல்வதே தன் ஆளுமையும் என்று அறிந்திருப்பதிலிருந்து வருகிறது. இங்கு நான் எப்படிப் பேச வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும், எதை யோசிக்க வேண்டும் – இதுதான் அவனது வாழ்வுக் கணங்களைப் பிசையும் பிரச்சினை. அதற்காகவே சுய அடையாளங்களை உருவாக்கிக்கொள்கிறான் மனிதன். நான் சித்தாந்தி, நான் தோழர், நான் முதலாளி, நான் சாமியார், நான் தோட்டி... அவ்வடையாளங்களை பாதிப் பழக்கத்தாலும், மீதி சிரத்தையாலும் தொடர்ந்து பேணுகிறான். கோபக்காரன், அதிருப்தி அடைந்தவன், மூர்க்கன் போன்ற அடையாளங்களைப் பேண சில சமயம் மனிதர் கொள்ளும் பாவனைகள் சிரிப்பு மூட்டுபவை. அடையாளங்களை மீறி தன் சுயம் வழியும்போது மனிதன் பதற்றம் கொள்கிறான். வெட்குகிறான். அள்ளிப் போர்த்திக்கொள்ளவும், ஓடி ஒளியவும் முயல்கிறான். பிறிதொரு சந்தர்ப்பத்தில் தன் சுயம் அவ்வடையாளமே தானா என்று எண்ணுகையில் பீதியும் சுயவெறுப்பும் கொண்டு இல்லை என நிரூபிக்க முயல்கிறான். தன் சுயம் அந்தரங்கமாகப்.. பீறிட்டு வெளியே வழிகையில் உவப்பும் பெருமிதமும் கொள்கிறான்.

'கண்ணுக்குத் தெரியாத ஒருவனின் கதை' என்று ஒரு ஆங்கிலப் படம் பார்த்தேன். ஒரு விபத்தில் உயர்மட்ட கதிரியக்கம் மூலம் ஒருவன் கண்ணுக்குத் தெரியாதவனாக ஆகிவிடுகிறான். கண்ணுக்குத் தெரியாம லிருப்பதன் சகல சௌகரியங்களுடனும், சுதந்திரங்களுடனும் அவன் அலைகிறான். ஆனால் சமூக வாழ்வு அவனுக்கு இல்லையென்றாகிறது. தனிமை அவனை வாட்டுகிறது. காதலிக்கப்படவும், காதலிக்கவும் ஏங்குகிறான். பிறரைப் பார்ப்பது மட்டுமல்ல, பிறரால் பார்க்கப்படுவதும் மனிதனுக்குத் தேவை என்று உணர்கிறான். எனவே உடைகளும் கையுறையும் தொப்பியும் அணிந்து, கனத்த முகப்பூச்சும் அணிந்து கொள்கிறான். அவனுக்குத் தெரியும் அது அவன் அணிந்துள்ள தோற்றமே என்று. அவனால் உதறிவிட்டு எங்கும் பரவ முடியும் என்று. ஆனால் முடிவதில்லை.

இதோ ஒரு ஆசாமி முருங்கைக்காய் துருத்தி நிற்கும் காய்கறிப் பையை மேஜைவைத்துவிட்டு வேட்டியை மடித்துக் கட்டுகிறான். என் வேட்டியை மூக்கவரை மேலே தூக்கி கட்டியபடி, மிகுந்த பணிவுடனும் ஒடுங்கிய

தோள்களுடனும் அவனை அணுகுகிறேன். குமாஸ்தாப் பிறவி அது. "ஐயா நிரந்தரப் புரட்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடை தர இயலுமா" என்று பரிதாபமாக, தூய ஆங்கில உச்சரிப்புடன் கேட்கிறேன். அவன் பதறி, "எஸ், எஸ்" என்று குழறி, சட்டையைத் துழாவி, ஒரு ரூபாய்த்தாளை எடுத்து தந்துவிடுகிறான். பஸ்ஸுக்குப் பணமிருக்கிறதோ என்னவோ. உடனே திரும்பி பிருஷ்டத்தை இருமுறை வறட்டு வறட்டென்று சொரிந்துகொண்டு திரும்பிவந்து இங்கு அமர்ந்து கொள்கிறேன். அந்த குமாஸ்தா என்னைப் பார்க்கும் பார்வையில் பயம், அருவருப்பு, குரோதம் இன்னும் என்னென்னவோ. ஐயா, இவ்வுணர்வுகளை அவனிடம் எழுப்ப வில்லையேல் அவன் பார்வையில் நான் ஒரு ஜடமாக, இல்லாமையாக, மாறிப்போய்விடுவேன். நான் கண்காணா மனிதன். இது என் சட்டை. இல்லாமலிருப்பதைவிட இருப்பதுமேல்; எந்த இருப்பென்றாலும்.

குழித்துறை
21-11-1958

●

நேற்று திடீரென்று ஒரு சம்பந்தமும் இல்லாமல் தல்ஸ்தோயைப் பற்றி யோசித்தேன். என் வாழ்வில் ஒரு மனிதனை எண்ணினால் எனது சகல புலன்களும் பணிகிறது எனில் அது தல்ஸ்தோய்தான். விவேகானந்தர் ஊக்க ஊற்று. காந்தி அந்தரங்க சுத்தி, மார்க்ஸ் கடல்போன்ற ஞானம், புத்தர் பேரமைதி, ஏசு மனநெகிழ்வின் உச்சம். இவையெல்லாம் ஒருவழிப்பாதைகள். இவர்களில் கீழ்மைகளை ஏற்றிப் பார்க்க முடியாது. இவர்களுடைய ஆளுமைகளைச் சுற்றி கனவின் கண்ணாடித் திரை உள்ளது. தல்ஸ்தோய் உயிருள்ளவர். சகல கீழ்மைகளும், பலவீனங்களும், சரிவுகளும் அவர்மீது ஒட்டும். மண்ணில் புரண்டு எழுந்த மெய்ஞானி அவர். இன்று நான் வாழும் விதத்தை அவரால் ஏற்க முடியுமா? கண்டிப்பாக. யஷ்னா பல்யானாவை விட்டு வெளியேறிய உடன் அவர் இறக்க நேரிட்டது. ரஷ்யாவின் தட்பவெப்பம் திறந்தவெளியில் வாழ உகந்ததல்ல போலும். வாழ்ந்திருந்தால் அவர் என்னைப் போலாகியிருப்பார். ஆனால் கீழ்மைகளில் ஒருபோதும் என்னைபோல் புதைந்து போகமாட்டார். கீழ்மைகளை ஊடுருவி, மனித சாரத்தை அடைந்திருப்பார். சித்தர் ஆகியிருப்பார்.

குழித்துறை
24-12-1958

"தல்ஸ்தோயா? தஸ்தயேவ்ஸ்கியா?" இந்தக் கேள்வியைத் தேர்ந்த இலக்கிய வாசகர் ஒவ்வொருவரும் தங்களுக்குள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். எந்தவிதமான ஐயமும் இன்றி இரண்டிலொருவரை தேர்வு செய்து கூறுபவர்களின் இலக்கிய நுண்ணுணர்வை சந்தேகப்படுவேன். அவர்கள் இருவரையுமே அறியவில்லை என்று கூடக் கூறுவேன். ஏனெனில் இந்தக் கேள்வி மிகமிக அடிப்படையானது. மானுட ஆன்மிகத் தேடலின் இரு ஆதார நிலைப்பாடுகளை இருவரும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். ஆழ்ந்த சுயவிசாரணைக்குப் பிறகு, விரிவான சுயகண்டடைதல் மற்றும் சுயவிளக்கங்களுக்குப் பிறகுதான் ஒருவன் ஒன்றைத் தேர்வுசெய்ய முடியும். முடிவை ஒரு சிறிது சந்தேகத்துடன்தான் முன்வைக்கவும் முடியும். அம்முடிவல்ல, அவ்விளக்கமும் கண்டடைதலுமே முக்கியமானது.

மானுட நன்மையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் தல்ஸ்தோய். அங்கிருந்து தொடங்கி மானுடனின் சரிவுகளில் இறங்கிச் சென்று அவனை முழுமையாகக் கண்டடைய முயல்கிறார். மானுடனின் அடிப்படை இயல்பு தீமையே என்று உள்ளார்ந்த நம்பிக்கை தஸ்தயேவ்ஸ்கியிடம் உண்டு. ஆனால் அதை ஏற்க அவர் மறுக்கிறார். பல்வேறு சொற்களில் அதைத் தன்னால் ஏற்க முடியாது என்று தனக்குத்தானே கூறிக்கொள்கிறார். அழுக்கும் உதிரமும் படிந்த உடைகளுடன் மானுட மேன்மையின் (கற்பனைப்) படிகளில் ஏறுகிறார். இவ்விருவருடைய பெண் கதாபாத்திரங்களை வைத்து இதை உறுதி செய்வேன். தூய்மையுடனும் மகத்துவங்களுடனும் அறிமுகமாகும் நடாலியா (போரும் அமைதியும்) இச்சைகளின், சபலங்களின் சரிவுகளினூடாக இறங்கி; பின்பு தாய்மையினூடாக மீண்டு; முழுமை பெறுகிறாள். அன்னாவும் சரிவின் சித்திரத்தையேத் தருகிறாள் (அன்னா கரீனினா). ஆனால் தஸ்தயேவ்ஸ்கியின் பெண் கதாபாத்திரங்கள் நெல்லி (அவமதிக்கப்பட்டவர்களும் வதைக்கப்பட்டவர்களும்), சோனியா (குற்றமும் தண்டனையும்) சீரழிவின், கீழ்மையின் அழுக்கிலிருந்து தங்கள் ஆன்மாவின் நெருப்பை எரியவைத்து சோதியாக எழுகிறார்கள். தல்ஸ்தோயின் தேவதைகள் பெண்களாகின்றனர். தஸ்தயேவ்ஸ்கியின் பெண்கள் தேவதைகளாகின்றனர்.

எது மெய்மையின் அருகே நிற்கிறது? தஸ்தயேவ்ஸ்கி நெருப்பு போல. உக்கிரம் மட்டுமே அவர் இயல்பு. தல்ஸ்தோய் நீர்போல. பனிக்துளிமுதல் அலைகடல்வரை ஆயிரம் முகங்கள் அவருக்கு. ஆன்மாவின் தவிப்பையும் தேடலையும், தனிமையையும் கண்டிப்பாக தல்ஸ்தோயைவிட தஸ்தயேவ்ஸ்கி தீவிரமாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் மானுட மனத்தின்மீது - ஏன் ஆன்மாமீது கூட - புறச் சமூகத்துக்கு உள்ள பிடிமானத்தைக் கண்டுகொள்ளவில்லை. அதனால்

தான் அவரது கதையுலகில் புற உலகமே இல்லை. திரும்பத் திரும்ப இடுங்கிய அறைகள், பனித்தெருக்கள், மதுக்கடைகள். அவையும் அவர் கதாபாத்திரங்களின் மன உணர்வின் தூல அடையாளங்கள் மட்டுமே. சூழலாலோ, வேறு எந்தப் புறச் சக்தியாலோ பாதிப்படையாத, தனித்துவம் மிக்க சுயம் கொண்ட ஆளுமைகளாகவே தஸ்தயேவ்ஸ்கி மனிதர்களைக் காண்கிறார். அவரது கதாபாத்திரங்கள் எரியம்புபோலத் தங்களை எரித்துச் சுடர்ந்தபடி கரிய பெருவெளியை ஊடுருவிச் செல்கின்றன. தல்ஸ்தோயைப் பொறுத்தவரை பிரபஞ்சத்தின், இயற்கையின் ஒரு பகுதியாகவே மனிதன் இருக்கிறான். பெருங்கானகத்தில் ஊடுருவிச் செல்லும் ராணுவத்தின் ஒவ்வொரு வீரனும் ஒருவகையில் கானகத்தின் தனி உறுப்பாகவே இருக்கிறான். முற்றிலும் தனித்துவம் கொண்ட ஆளுமை ஏதும் அவர் தரிசனத்தில் இல்லை. ஆளுமை என்பது ஒரு எதிர்வினை மட்டுமே என்று அறிந்ததே தல்ஸ்தோயின் மெய்ஞானம். இன்று அல்லது நாளை, மேற்கின் உளவிஞ்ஞானமும் அதை வந்தடையும். அப்போது தல்ஸ்தோய் இன்னும் பேருருவம் கொள்வார். தஸ்தயேவ்ஸ்கியின் கதாபாத்திரங்கள் உக்கிரமாகத் தங்களைத் தங்கள் சொந்த எரிசக்தியினால் நிகழ்த்திக் கொள்கின்றன. அந்த எரிதலின் ஒளியில்தான் அவர்களின் புறச் சூழலே நமக்குத் தெரிய வருகிறது. தல்ஸ்தோயின் கதாபாத்திரங்கள் பிரக்ஞை பூர்வமாகவோ, அல்லாமலோ தங்கள் சூழலுக்கும் சகமனிதர்களுக்கும் வாழ்க்கைச் சந்தர்ப்பங்களுக்கும் எதிர்வினையாற்றுவதை மட்டுமே செய்கின்றன. சிலசமயம் சகஜமாக உடன்படுகின்றன. சிலசமயம் தன்னகங்காரத்துடன் மூரண்படுகின்றன. அவ்வகையில் ஃபியருக்கும் போர்க்களத்து நாய்க்கும் தல்ஸ்தோய் வித்தியாசம் காண்பதில்லை. எதிர்வினைகளினூடாக மிகமிக மெதுவாக ஒரு தனியாளுமை – இது ஒருவகையில் ஒரு தோற்றம் மட்டுமே – உருவாகி வருவதைப் பார்க்கும் பேரனுபவமே தல்ஸ்தோயின் இலக்கியப் பங்களிப்பாகும். வாழ்வின் மிகமிக நிதானமான, பிரித்துக்கூடப் பார்க்க முடியாத, எதுவுமே சகஜமாகத் தோன்றக்கூடிய, பரிணாம மாற்றத்தை உலகின் வேறு எந்தப் படைப்பிலக்கியவாதியும் சித்தரித்துக் காட்டியதில்லை. நாடகத்தன்மை படைப்பாளிக்கு வாழ்வைக் குவிமையம் கொள்ளச் செய்து உக்கிரப்படுத்தி சாராம்சத்தை நோக்கி மேலேழுப்ப வசதியான ஒன்றுதான். தஸ்தயேவ்ஸ்கி நாடக ஆசிரியர், நாடகம் எழுதி உணர்ச்சிகரமான படைப்பாளிக்கு நாடகமே பிரியமான வடிவம். அங்குதான் மோதல்களினூடாகவே மொத்தப் படைப்பும் நிகழ முடியும். (நானும் நாடகங்களையே மிகவும் ஈடுபட்டு எழுதியுள்ளேன். என் சிறுகதைகளும் நாடகங்களே.) ஆனால் நாடகத்தன்மையை நம்பியுள்ள படைப்பாளி ஒருபடி சுறைவானவன். வாழ்வை, அதன் இயல்பான மந்தகதியில் வைத்துத் தீவிரப்படுத்தவும் சாராம்சப்படுத்தவும்

வல்லமை கொண்டவனே பெரும் கலைஞன். தல்ஸ்தோய் அதைச் சாதித்தார். எனவே அவர் ஷேக்ஸ்பியரை நிராகரித்தது நியாயமே. தஸ்தயேவ்ஸ்கியை அவர் ஏற்றது ஒரு நாகரிகம் கருதி மட்டுமே.

ஒருங்கிணைவுள்ள தனியாளுமைகளின் உடை வின் அவலத்தைச் சித்தரிக்கும் தஸ்தயேவ்ஸ்கியின் உக்கிரம் இன்று மேற்குக்கு உவப்பாக இருக்கிறது. ஏனெனில் அங்கு நிகழ்வது அது. மனிதக் கீழ்மைகளும் மேன்மைகளும் பீறிடும் அதிதீவிர உளநாடகம் அவர்களைக் கவர்கிறது. ஆனால் பிறிதொரு நாள் அவர்கள் உணர்வார்கள் தல்ஸ்தோயின் மலைகளைப்போல உறைந்த நிதானம் தஸ்தயேவ்ஸ்கியின் கடல் அலைகளைவிடவும் மகத்தானது என்று. இன்னும் சற்று வாழ்ந்திருந்தால், இன்னும் சற்று அறிந்திருந்தால், தஸ்தயேவ்ஸ்கி தன் தீவிர உளநாடகத் தன்மையுடன் ஒரு மெல்லிய புன்னகையையும் சேர்த்துக் கொண்டிருப்பாரோ? அப்போது இந்தக் கொந்தளிப்புகள் அடங்கி அவரும் தல்ஸ்தோய் ஆகியிருப்பாரோ? எல்லாமே உண்டு, ஆனால் எதுவுமே இல்லை என்பதே தல்ஸ்தோய் அறிந்த மெய்ஞானம் போலும். ஆகவே அவருக்கு எல்லாமே முக்கியம். கல்லும் புல்லும் வானும் மண்ணும். அவரது விரிவான சூழல் சித்தரிப்புகள் மகத்தான இத்தரிசனத்தின் விளைவுகள் மட்டுமே.

மீண்டும் கேள்வி: யார் மேலானவர்? ஞானத்தின் அமைதிக்கும், தேடலின் கொந்தளிப்புக்கும் இடையே அனுதினம் என் மனம் இதை வினவிக்கொள்கிறது. இறுதி விடையல்ல இது நண்பரே – இப்போதைக்கு தல்ஸ்தோய்தான். ஆனால் அவர் என் தஸ்தயேவ்ஸ்கியைத் தின்று செரித்துவிட வேண்டுமென்றும் விரும்புகிறேன்.*

* திருவிதாங்கூர் நேசனுக்கு எழுதப்பட்ட சிறு கட்டுரை. பிரசுரமாகவில்லை. புனிதர்களும் மனிதர்களும் என்ற நாடகப பிரதியின் முகவுரை போல இணைக்கப்பட்டுள்ளது.

•

விபத்தென்று தோன்றியது. சாலையில் ரத்தம் தேங்கிக் கிடந்தது. நகல் பார்வையிலேயே அதை ரத்தம் என்று உணர்ந்த மனம் பரபரப்படைந்துவிட்டது. பிறகு அங்கிருந்து நகர முடியவில்லை. தீவிரம் ஒரு நிறமாக மாறினால் அது அந்நிறம்தான். மெல்ல மெல்ல அடர்ந்து கொண்டிருக்கும் சிவப்பு. அதன் விளிம்புகள் வளைந்து, மெழுகுபோல பளபளத்துக் கருமை கொண்டு, மணலுடன் சேர்ந்து சுருண்டன.

அதன்மீது ஒரு மெல்லிய படலம் உருவாகியது. அப்படலச் சரும முதுமைகொண்டு, சுருக்கங்கள் நிரம்பி, உலர்ந்தது. ரத்தம் எதையெதையோ ஞாபகப்படுத்துகிறது. ரத்தம் ஒரு ஆதிக் குதூகலம். அச்சமில்லாத குதூகலம் முழுமையானதல்ல. அதன் எரியும் உப்பு மணம், அதன் மாமிச நெடி. ருசி நரம்புகளை அசந்தர்ப்பமாகத் தூண்டும் அதன் மென் கதுப்பு. வேறு எங்கிருந்தோ மண்ணுக்கு வந்து, அடையாளம் பெறாது கிடக்கும் ஒன்றைப் போல அதன் மர்மமான மௌனம். ரத்தம் ஒரு பிடிவாதமான ஈர்ப்பு. யாருடைய ரத்தம்? அவனை என் வாளால் ஓங்கி வெட்டினேன். தலையற்ற முண்டம் உதிரம் ஊறிக் கொப்பளிக்க தாறுமாறாக ஓடி விழுகிறது. அது என் மகன். விறைத்த உடலை அள்ளி மடிமீது வைத்து மார்போடணைக்கையில் உடல்மீது சூடாக வழிகிறது அந்த ரத்தம். அரைத் தூக்கத்துக் கனவில் மனம் கிளர்ந்து நெகிழ, கண்ணீரோ விந்துவோ உடல்மீது வழியும்போது ஏற்படும் வெதுவெதுப்பான அந்தரங்க ஸ்பரிசம். ரத்தம் என்பது வியர்வை, விந்து, கண்ணீர், எச்சில், மதநீர்... போர்க்களத்தில் பீமன் துச்சாதனின் ரத்தத்தை அருந்தினான். அவன் குடலில் அது விந்துவாகப் பிரிந்து அவன் உடல் வெளியெங்கும் முளைவிட்டுக் காடாகியது. அது கண்ணீராகப் பிரிந்து அவன் திசுக்கள் முழுக்கப் பரவித் தேங்கிக் கனத்தது. இல்லை, இது மானுட ரத்தமில்லை. இது ஒரு விலங்கின் ரத்தம். என்ன வித்தியாசம்? அந்த உயிர் எதுவென நாம் அறியாதபோது இதற்கு அடையாளமேதும் இல்லை. வெறும் சிவப்பு நிறம்தான் இது. ரத்தத்துக்கு ஏன் சிவப்பு நிறம்? பூக்களுக்குச் செந்நிறம் பூச்சிகளைக் கவர. பழங்களுக்குச் செந்நிறம் பறவைகளைக் கவர. ரத்தம் கவர்வது யாரை? ரத்தம் மனிதனைக் கிளர்ந்தெழவைக்கும் நிறம். ஆதிகாலம் முதல் மானுட அழகுணர்வின் மையம் அந்நிறம். உணர்வுகளில் அது உக்கிரம் என்று பொருள்படும். ருசியில் அது இனிமை. அதன் தொடுகை வெம்மையானது. ரத்தம் தியாகத்தின் நிறம். அப்படியானால் அது கொலையின் நிறம். இரக்கமின்மையின் நிறம். வலியின் நிறம். தீயின் நிறம்! ஆ, அது தீயல்லவா? மனித உடலுக்குள் திரவ வடிவம்கொண்டு துடித்துப் பீரிட்டு ஓடும் நெருப்பல்லவா ரத்தம்! அது ஜடத்தில் குடியேறிய அக்னி. வானுலகின் புனித நெருப்பான ஆபஸ். வயிற்றில் உணவை எரிக்கிறது. சிந்தையில் உணர்வுகளாகத் தழல்விடுகிறது. அதன் வெம்மையில் உடல் உயிர்ப்புக் கொள்கிறது. ரத்தத்தை நீ மண்ணில் வீழ்த்த முடியாது. உடல் விறகு, ரத்தமே தழல். நடமிடுகையில்தான் தழலுக்கு அப்பெயர். இதோ மண்ணில் விழுந்திருப்பது ரத்தமல்ல, ஆறும் கனல். இதோ கருகியணைந்துவிட்டது. கரியாகிவிடும். காலையில் உண்ணலாம். உனது தேவதைகளுக்குப் பலியிடலாம். ஒருபோதும் ரத்தத்தை உன்னால் தொடமுடியாது; அள்ள முடியாது. முடியுமா? தீயல்லவா அது? என் நாடிமீது கைவைத்து அதன் தாண்டவத் துடித்தாளத்தைக் கேள். என் கண்களில் அச்செம்மையைப் பார். என் சொற்களில் அதன் உக்கிர வெம்மையை அறி. ரத்தம் ஒரு ஊழித்தீபோல் இப்பூமிமீது படர்ந்து நின்றெரிகிறது. பல்லாயிரம் கோடி உடல்களில்

மிருக உடல்களில், மனித உடல்களில். ஜடம்மீது பிரபஞ்ச சக்தி கொளுத்திய ஆகவனீயாக்கினி அது. இப்பூமி ஒரு வேள்விக்குண்டம். இங்கு நுரைத்துக் குமிழியிடும் வாழ்வு ஒரு தழலாட்டம். நெய்யிட்டு நெய்யிட்டு இதைப் போஷிப்பது யார்? இதன் தாளத்தில் கரைந்தொலிப்பது என்ன மந்திரம்? கைநீட்டி, நா நீட்டி இந்நெருப்பு வானோக்கி எம்பிஎம்பி இறைஞ்சுவதென்ன? வானமே, அந்தி மயங்கலில் அச்சுடர்வைப் பிரதிபலிக்கும் உனது மகத்தான கணங்களிலேனும் நீ அதை அறிவாயா?

மார்த்தாண்டம்
2-1-1959

•

இரவில் கண்ட கனவில் நான் சிறுவனாக இட்டகவேலி முடிப்புரையின் கொடை விழாவில் திசைதவறி மிரண்டு அலைந்து கதறி விழித்துக் கொண்டேன். வியர்த்து அதிர்ந்து பின் குளிர்ந்த உடலுக்குள் இதயத்தை உணர்ந்தபடி இருளை வெறித்தேன். பீடியைத் துழாவியெடுத்துப் பற்ற வைத்துக்கொண்டேன். இமைகளின் அடியில் அந்தக் காட்சிகள் தங்கியிருப்பதுபோல, கண்மூடினால் அவற்றைக் காண முடியும் என்பதுபோலத் தோன்றியது. கண்ணை மூட அஞ்சினேன். ஆனால் மீண்டும் ஒருமுறை நிதானமாக, உரிய மனவிலக்கத்துடன் அக்காட்சிகளைக் காண வேண்டுமென்றும் விழைந்தேன். ஆனால் கண்மூடி, அக்கனவில் மூழ்கினால் அதன் பிரவாகம் என்னையும் ஒரு ஒளி நிழல் பிம்பமாக தன்னுள் இணைத்துக் கொண்டுவிடும் என அறிந்தேன்.

முடிப்புரைக் கொடையின் கடைசி நாள்தான் உதிரபலிநாள். பெண்களும் குழந்தைகளும் அன்று அனுமதிக்கப்படுவதில்லை. அப்பா தூங்கிய பிறகு எழுந்து சத்தமின்றி கதவைத் திறந்து குளிர்ந்த காற்று கிழக்கு நோக்கிப் பிரவாகமெடுத்த, நிலவின் ஒளியில் நிழல்கள் மூயங்கி அசைந்த, இலைச் சலசலப்பில் உயிர்த்த பின்னிரவில் இறங்கி சென்டையொலி கேட்ட திசை நோக்கி ஓடினேன். வயல்வெளியில் அறுவடை முடிந்த பிறகு உருவாகும் கட்டாந்தரைமீது பச்சைத் தென்னையோலைகளாலும் புதுச் செம்மண்ணாலும் பசுஞ்சாணியாலும் கட்டி எழுப்பப்பட்ட முடிப்புரையில் அம்மையின் நீலமுடி பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. அங்கு பந்தங்களும் பெட்ரோமாக்ஸ் விளக்குகளும் பெருக்கிய ஒளியால் இருளிலிருந்து மொண்டு எடுக்கப்பட்ட ஒரு தனி உலகம் நிழல்களால் உயிர்ப் பரபரப்புகொண்டு இயங்கியது. சிவந்த மனித உடல்கள். ஒளிரும் உடைகள். வானில்

எழுந்த தூசிமீது பரவி செந்நிற ஒளியும் இருண்ட வெளியில் மேல்நோக்கி எழுந்து நின்றிருந்தது. இரவின் இருண்ட படலத்தில் போடப்பட்ட துளையினூடாக செந்நிறப் பாதாள உலகம் ஒன்று தெரிவது போலிருந்தது. நிழல் நீண்ட பாதாள மூர்த்திகள் நெருக்கியடிக்கும் உலகம். அது ஒரு கதகளி அரங்கு என்று மறுகணம் தோன்றியது. எண்ணற்ற ஆட்டவேஷங்கள் கலந்து தழுவிச் சுழன்றாடும் மேடை. செண்டை ஒலி.

உயரமான மேட்டு வரப்பிலிலிருந்து கவனமாக இறங்கி நெற்கச்சிமுனைகள் பரவிய உலர்ந்த வயல்பரப்பினூடாக ஓடினேன். கொடைப் பறம்பு நடுவேயிருந்தது. மூத்திர வீச்சத்தாலும் ஈரத்தாலும் ஆன வளையம். பிறகு தென்னை ஓலைகளால் தற்காலிகமாக எழுப்பப்பட்ட கடை வரிசைகள். அவையெல்லாம் மூடப்பட்டிருந்தன. பத்து நாள்கள் வண்ண இனிப்புகளும் மரப் பொம்மைகளும் தட்டுமுட்டுச் சாமான்களும், அலங்காரப் பொருட்களும் பளபளக்கும், கூட்டம் மொய்க்கும் கடைகளாகப் பரபரத்தவை. படுதாக்கள் தொங்க இருண்டு கிடந்தன. பெஞ்சுகளில் காவலுக்காக உரிமையாளர்கள் தூங்கினர். ஆறு கை அழகி, மரணக் கிணறு, மின்சாரப் பெண் முதலியோர் தரிசனமளித்த அரங்குகளும் ஒற்றை விளக்குச் சுடர் எரிய, தூங்கிக் கிடந்தன. கடைச் சந்துகளில் புகையுமிழும் காடா விளக்குகள் எரிய மரப்பெட்டிகளின் அருகே பெண்கள் அமர்ந்திருந்தனர். வீச்சமான புளிப்புள்ள கள்ளும், எரிமணமுள்ள சாராயமும் அருந்திய பலர் அங்கு கூடி நின்றனர். தரையில் காறிக் காறித் துப்பினர். கனத்த குரல்கள் உலோகங்கள் உரசுவதுபோலக் கேட்டன. ஒருவர் உரக்க இருமினார். சிக் என்று தீப்பெட்டி ஒன்று உரசிக் கொள்ள ஒரு சிவந்த முகம் எரிந்து அணைந்தது. தீப்பெட்டி உக்கில் பறவையின் ஒற்றைவிழிபோல் தீவிரமாகிச் சுடர்ந்து மங்கியது. அந்தப் புள்ளி பரவி பல ஒளித்துகள்கள் நட்சத்திரங்கள்போல ஆழ்ந்தும் அமிழ்ந்தும் ஜொலித்தன. காடா விளக்கொளியில் தூக்கிக் கட்டிய வேட்டிக்குக் கீழே மயிரடர்ந்த வலுவான கால்களினாலான காடு அசைந்தபடி இருந்தது. அந்த விற்பனைக்காரி திடீரென கலகலவென்று சிரித்தாள். கூட்டத்தில் முகம் மறந்த ஒரு உத்வேகம் பரவியிருந்தது. ஒவ்வொருவரும் கதும்பி வழிந்து கள்ளாடியபடி நடந்தனர்.

முடிப்புரைமுன் ஒரு பெரிய புளியமரத்தின் அடிமரக்கட்டை பலிபீடமாக நிறுத்தப்பட்டிருந்தது. கறை உலராத புதுமரம் – அதன்மீது மஞ்சள் தூள் பரப்பப்பட்டிருந்தது. செவ்வரளி மாலையும் சுற்றப் பட்டிருந்தது. செவ்வரளிமலர்கள் நுனியில் கட்டப்பட்ட சுருக்குத்தோலை கள் தொங்கும் அலங்காரம் செய்யப்பட்ட முடிப்புரைக்குள் பெரிய கூம்புபோல அம்மனின் பரு உருவம். அதன்மீது பதிக்கப்பட்ட இரு வெள்ளிக்குமிழ்க் கண்களில் இருபுறமும் திருதிருத்த பந்தங்களின் செந்நிற ஒளி முனைகொண்டிருந்தது. பரவிய நீலமுடி. அருகே நாட்டப்பட்ட திரிசூலம். கழுகுப்பூக்சூலைகள் விரித்துச் சாத்தப்

பட்டிருந்தன. அம்மன்முன் மூன்று மணைத் தட்டுகளாக காலிப் பலகைகள் இருந்தன. அதில் வைக்கப்பட்டிருந்த பெரிய பித்தளைத் தாம்பாளத்தில் குங்குமம் குவிக்கப்பட்டிருந்தது. அதில் ஒளிவிடும் நாணயங்கள் கிடந்தன. யாருமில்லை. அம்மனின் விழிகள் அந்தத் தனிமையில் நின்றெரிந்தன. அமைதியின்றித் திரும்பியபோது அந்தப் பெரிய பள்ளிவாளைப் பார்த்தேன். அதன் கனமும், பழமையும், கூர்மையும் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தன. அதன்மீது ரத்தத்தைப் பார்த்தேன். அது பந்தங்களின் செந்நிறப் பிரதிபலிப்பு என்று பிறகு தெளிந்தேன்.

அப்பால் பெரிய மூங்கில் பட்டிக்குள் ஆடுகள் நெரித்து உரசியபடி நின்றிருந்தன. அவற்றின் சிறுநீர் புழுக்கை வீச்சமும், அங்கு பரவியிருந்த கனைப்புச் சீற்றல் ஒலிகளின் மெல்லிய படலமும், முதலில் கவனத்திற்கு வந்தன. விளக்கொளியில் அங்கு மொய்த்த ஈ கொசுக்கள் பளபளத்தன. அருகே நெருங்கியபோது ஆடுகளின் கண்கள் மின்மினிக் கூட்டங் கள்போல பச்சை நிறச் சுடர்களாகத் தெரிந்தன. அவை குளம்புகள் மிதிபட நெருக்கின. காதுகளைப் பட பட வென்று அடித்துக்கொண்டன.

செண்டைமேளம் நின்ற மௌனம் ஆடுகளைப் பதற வைத்து அங்கு பெரிய ஒலிமாறுபாட்டை ஏற்படுத்தியது. சேங்கிலைகளின் உலோக உறுமல் எழுந்தது. கோயில் முகப்பு நோக்கி ஆட்கள் குழுமினார்கள். மேலும் பல தீப்பந்தங்கள் அங்கு ஏற்றப்பட, பிற இடங்களின் விளக்குகளும் அங்கு குவிய, அப்பகுதியே புரைமுற்றத்தை மையம் கொண்டது. மெல்லப் பேச்சொலிகள் அடங்கின. பலிபீடத்தருகே கீழ்க்கரை ராமக்கணியானைப் பார்த்தேன். அவர் கால்களில் பலர் விழுந்து வணங்கினார்கள். அவர் சுங்கும களபங்களை அள்ளிப் பிரசாதமாக வழங்கினார். விரிந்த திடமான மார்புமீது சுங்குமம் பரவி வியர்வையில் கரைந்து வழிந்தது. முண்டாக்களில் பளபளக்கும் பித்தளைத் தாயத்துகள். கழுத்தின் இருபுறமும் திரிதிரியாகத் தொங்கிய கரிய சூமல் கற்றைகள். இடுப்பில் இறுக்கப்பட்ட செந்நிறக் கச்சை. அவரது சீடன் அருகே நின்றான். அவர் வாளை எடுத்துக்கொண்டதும் அமைதி முழுமையாயிற்று. அத்தனை பார்வைகளும் அந்த வாளில் இருந்தன.

கேலிக்கு தூப தீபங்கள் காட்டப்பட்டன. பலிபீடத்திற்கும் தூபம் காட்டப்பட்டது. அந்த தூபம் எடுத்துச் செல்லப்பட்டு, பட்டியிலிருந்து இழுத்து வந்து நிறுத்தப்பட்ட கொம்பன் கிடாய்க்கும் காட்டப்பட்டது. கனை தொங்கும் கழுத்தும், கனத்து அசைந்த விதைகளும், கூரிய கொம்புகளும் கொண்ட மயிரடர்ந்த கிடாய். அது செருக்கடித்தது. தும்மியபடி முன் காலால் மண்ணை உதைத்தது. அதன் நெற்றி மீது சூங்கும செந்தூரச் சாறு பூசப்பட்டது. அரளிமாலை அதற்குப் போடப்பட்டது. அதற்குப் பின்னால் வாலும் தலையும் தொட்டுக் கொள்ளும்படி பிற ஆடுகள் வரிசையாக நிறுத்தப்பட்டன. அந்தக் கிடாயைக் கொட்டுக் கும்பிட கூட்டம் நெரிபட்டபடி மூண்டியடித்தது.

அதன் கண்களைப் பார்த்தபோது எனக்கு அச்சம் ஏற்பட்டது. அது கண்கள் போலவே இல்லை. ஒரு அர்த்தமும் இல்லாத இரு உலோகக் குமிழ்கள். சேங்கிலையின் ஒலி வலுத்தது.

ஒருவன் கிடாயின்முன் ஒரு பெரிய கட்டு முருங்கையிலையைக் காட்டினான். அது பரபரவென்று வாயால் கவ்வி, உதடு படபடக்கத் தின்ன ஆரம்பித்தது. அவன் கீரைக்கட்டுடன் முன்னகர, கிடாய் கழுத்தை நீட்டியபடி தன்னையறியாமல் தொடர்ந்தது. கீரைக்கட்டை பலிபீடத்தைத் தாண்டி மறுபக்கம் நின்ற சிறுகுச்சியில் கட்டித் தொங்கவிட்டான். கிடாய் வேகமாகச் சென்று பலிபீடத்தின் மேலாகக் கழுத்தைநீட்டி அதைக் கவ்வ நாக்கால் துழாவி முயன்றது. சேங்கிலைகள் பிளிறின. ராமக்கணியான் "அம்மே, தேவீ" என்று வீரிட்டபடி வாளை ஓங்கி அதன் கழுத்தில் போட்டார். கழுத்தைத் துண்டித்தபடி வாள் பலி பீடத்தில் பதிந்து அதிர்ந்து நின்றது. தலையற்ற கிடாய் திகைத்து, சற்றுப் பின்னகர்ந்து, வாலைத் துடிப்பாக ஆட்டியபடி ஒரு கணம் நின்று, உதறி நடுங்கி, பின்பு தெறித்து விழுந்தது. பரபரவென்று கால்கள் காற்றை உதைக்க, குறுவால் மண்ணில் புரண்டு துடிதுடித்தது. ரத்தம் பலிபீடத்திலும், தரை மண்ணிலும் சூடாகக் குமிழியிட்டது. பச்சை ரத்த வீச்சம். அதை இழுத்து மறுபக்கம் போட்டார்கள். பூசாரி கிடாயின் தலையை எடுத்து அம்மன் புரையின் முகப்பில் இருந்த நீண்ட பலகை நடுவே வைத்தார். இப்போது கிடாயின் கண்கள் வலிமையான, கூர்மையான பார்வைகொண்டு கூட்டத்தை உற்றுக் கவனித்தன. அந்தக் கண் மெல்லிய ஈரப்படலத்தால் மூடப்பட்டிருப்பதாகப் பட்டது. இதெல்லாம் சில கணங்களில் வெளியே நிகழ்ந்து முடிய, எனக்குள் கணம்கணமாக அணுவணுவாக நிகழ்ந்து சென்றன. அடுத்த ஆட்டை இலேசாகத் தள்ளிவிட்டார்கள். அது வாலை ஆர்வமின்றி ஆட்டியபடி வந்து தயக்கத்துடன் பலிபீடத்தைத் தாண்டி கழுத்தை நீட்டி துண்டுபட்டது. அதன் உடல் கிடாயின் உடலுடன் பிணைந்து விலுக்விலுக்கென உதைத்துக் கொண்டது. பலகைமீது அதன் தலையும் அமர்ந்தது. அதன் வாய் இலேசாகத் திறந்திருக்க அது மெலிதாகச் சிரிப்பது போலிருந்தது. மூன்றாவது ஆடு பிரமையில்போல நடந்து வந்து பலியாகியது. பிறகு ஆடுகள் தாங்களாகவே வந்தன. வராமலிருக்க அவற்றால் முடியாது என்பதுபோல. உக்கிரமானதோர் உயிர் ஆணைக்குக் கட்டுப்பட்டவைபோல. அந்தத் தழை தொடப்படாமல் காற்றில் சிலுசிலுத்தது. பலி பீடம் ஒரு பெரிய மாமிசத் துண்டு போல விதிர்விதிர்த்தது. அப்பால் துடிக்கும் உடல்களினாலான குன்று ஒன்று உருவாகியிருந்தது. பலகைமீது வரிசையாகத் தலைகள் அமர்ந்து வருத்தத்துடன், பீதியுடன், ஏளனத்துடன், கவனமின்மையுடன், தனிமையுணர்வுடன் பார்த்தன. தேவி ஆடுகளை அழைத்துத் தன் பாதங்களில் சேர்க்கிறாள் என்பது ஐதீகம். அங்கு கூடிநின்ற பலர் கண்ணீர்விட்டு விம்மிக்கொண்டிருந்தனர். "அம்மே, மகாமாயே" என சிலர் வீறிட்டனர். சிலர் முகம் பொத்தி குனிந்திருந்தனர். சிலர் வாந்தி எடுத்தனர். மயங்கி விழுந்த சிலரை அப்புறப்படுத்தினார்கள். ஆனால்

ஆடுகள் தேவியையோ கூட்டத்தையோ பார்க்கவில்லை என்று அறிந்தேன். முன்சென்ற ஆட்டின் பின்புறத்தை மட்டுமே அவற்றால் பார்க்க முடிந்தது. அல்லது அவற்றின் மனம் அப்படியே ஸ்தம்பித்துப் போய், அவை எதையும் பார்க்காது கேளாது அறியாது ஆகிவிட்டிருக்க வேண்டும். கால்கள் மட்டும் தன்னிச்சையாக இயங்கின போலும். நிதானமாகவும் சீராகவும் அவை முன்னகர்ந்தன. அது கனவு போலிருந்தது. அந்தக் கனவு என்னில் ஊடுருவுவது போலிருந்தது. நானும் சிந்தையிழந்து வெறித்த பார்வையுடன் சதைப் பிண்டமாக ஆகிவிட்டதுபோல உணர்ந்தேன். திடீரென்று பெரும்பீதியுடன் என்னையும் அவ்வரிசையில் கண்டேன். எத்தனை முயன்றும் என்னால் குரலெழுப்ப முடியவில்லை. தலைக்குமேல் உறைந்து கனத்த பனிப்பாளமாகிவிட்ட குளமொன்றின் ஆழத்திற்குச் சென்று மூச்சுத் திணறுபவனாக உணர்ந்தேன். என்னை எவரும் கவனிக்கவில்லை. கணம் கணமாக நகர்ந்தேன். பலிபீடம் நோக்கியா என்று தெரியவில்லை. அது அருகிலா வெகு தொலைவிலா என்று தெரியவில்லை. ஒருவேளை சில கணங்கள், சில மணி நேரம், ஏன் சில வருடங்கள்கூட இன்னும் மீதமிருக்கலாம். ஆம், நேரமிருக்கிறது. நிறைய நேரம். ஆனால் முன்னகர்கிறேன். அய்யோ முன்னகர்கிறேனே! என் நேரம் குறைகிறதே. என்னைப் பிடியுங்கள். தடுத்து நிறுத்துங்கள். என்னை இந்தக் குளிர்ந்த பிரவாகத்திலிருந்து தூக்கி எடுங்கள். அச்சமும் கொலையாசையும் பரவி மடத்தனமாக வெறிக்கும் பலநூறு பார்வைகளினூடாக நடந்து நடந்து நடந்து சென்றேன். என் குதிகாலில் குளிர்ந்த முள் ஒன்று குத்தி ஏறி, ரத்தத்தினூடாக முதுகெலும்பினூடாக புறந்தலையை ஊடுருவி, மூளையைத் துளைத்துப் பிளந்தது. கால்கள் மரக்கட்டைகளாக மாற, அவற்றின்மீது என் கனத்த உடல் சம்பந்தமின்றி அமர்ந்து தள்ளாடியது. என் முன் அந்த சூடான பலிபீடம் நின்றது. செம்பட்டால் போர்த்தப் பட்டதுபோல. என் உடல் கனத்து நின்றுவிட்டது. என் பிரக்ஞை மட்டும் பலிபீடத்தைத் தாண்டியது. இரண்டிற்கும் நடுவே ஒரு சரடு இழுபட்டு இழுபட்டுத் தெறித்தது. தட்டென்று அதை அந்த வாள் துண்டிக்க நான் முன்னால் பாய்ந்து சுதாரித்து நின்று திரும்பிப் பார்த்தேன். என் உடல் கேவலமாக உதறியபடி தரையில் சரிந்து, விரல்கள் எதையோ கணக்கிடுபவை போல ஒவ்வொன்றாக மடங்கி நிமிர்ந்தன. நாங்கள் கூட்டமாக நின்று, அந்த ரத்தப் பிரவாகத்திற்கு அப்பால் விழித்த கண்களுடன் நின்ற மக்களைக் கசப்புடனும், வெறுப்புடனும், ஏளனத்துடனும் பார்த்தோம். எனக்குக் குமட்டல் எடுத்தது. சலிப்புற்றுப் பார்வையைத் திருப்ப முயன்றபோதுதான் அது சாத்தியமல்ல என்று தெரிந்தது. அந்தக் காட்சியை நோக்கி காற்றில் ஒட்டவைக்கப்பட்ட இரு விழிகள்தான் நான். மனம் கழிவிரக்கத்தால் தவித்துத் திமிறியபோது சூடாக என் கால்களை எதுவோ தொட்டது. கொழகொழவென்ற திரவம். இது கனவு. நான் வெளியே போகவே இல்லை. அரைத்தூக்கக் கனவில் மூழ்கும்போல சிறுநீர் கழித்துவிட்டிருக்கிறேன். அடாடா, காலையில் அம்மா திட்டுவாள். போர்வையையும் பாயையும் துவைத்துக் கழுவி,

படுத்திருந்த தரையையும் கழுவ வேண்டும். இல்லை, இது ரத்தம்! குமட்டலெடுக்க வைக்கும் பச்சை வீச்சத்துடன் புரைமுற்றத்து மணலில் ஊறிப்பரவிய பலி ரத்தம்.

அலறியபடி எழுந்து அமர்ந்தது அப்போதுதான். பீடிக்கட்டு முழுக்கத் தீர்ந்த பிறகு இரவின் இருண்ட வெறுமையை வெறித்தபடி நின்றேன். என்ன கனவு! எத்தனை கூர்மை! ஒவ்வொரு காட்சிக்கும் மணங்களையும் ஒலிகளையும் ஒருபோதும் அத்தனை துல்லியமாக நினை அனுபவத்தில் அடைய முடியாது. உடல் அப்போதும் பதறியபடியே இருந்தது. ஒவ்வொரு காட்சியும் புதுப்புது உணர்வுகளுடன் கலந்து விரிந்திருப்பதை அறிந்தேன். ஆனால் திரும்ப யோசிக்கையில் கலைசலான சில படங்கள் மட்டுமே ஞாபகம் வந்தன. பீடிக்காக மனம் ஏங்கியது. அந்நள்ளிரவில் பீடி வாங்க வாழைச் சந்தைக்குத்தான் போக வேண்டும். இருளில் இறங்கப் பயமாக இருந்தது. மனம் கசப்பு ஊறும் காஞ்சிரத்தடியாக இருந்தது. காறிக்காறித் துப்பினேன். யார் மீதென்று இல்லாமல் தீவிரத் துவேஷத்தால் என் அகம் கனன்றது. சில கணங்கள் கழிந்து கண்ணீர் கசிய வைக்கும் தன்னிரக்கத்தால் உருகியது. அன்று உண்மையில் ரத்தத்தை காலில் நான் உணரவில்லை. திரும்பி வந்து தூங்கிவிட்டேன். மறுநாள் காலையில் மலம் கழிக்க ஆற்று மணலில் அமர்ந்திருக்கும்போதுதான் கால்களைப் பார்த்தேன். விரல் இடுக்கு களில், நகக் கண்களில் உறைந்து உலர்ந்த ரத்தம். அன்றும் மறுநாளும் காலைக் கழுவிக்கொண்டே இருந்தேன். ஞாபகம் வரும்போதெல்லாம் மீண்டும் மீண்டும் கழுவினேன். நகக் கண்களை ஈர்க்குச்சியால் நெம்பியும் கிண்டியும் கழுவினேன். வெகுநாள் என் காலைத் தொட்டால் உடனே கைகளைக் கழுவிவிடும் பழக்கம் இருந்தது. நேற்றிரவில் இருண்ட தனிமையில் என் கால்கள் என்னுடன் இருப்பது அவ்வளவு அச்சமூட்டுவதாக இருந்தது. பயங்கரமான, ஈவிரக்கமற்ற எதிரியுடனிருப்பது போலிருந்தது.

மார்த்தாண்டம்
4-2-1959

●

இன்றும் தற்கொலைக்கு முயன்றேன். முடியவில்லை. குமித்துவை முக்குச் சரிவின் வளைவில் அதிவேகமாக லாரிகள் வரும். அவற்றின் முன் குதித்தால்போதும். ஒரு கணத்தில் எல்லாம் முடிந்துவிடும். தினம் இரு ஒருமுறையேனும் வருகிறேன். பல மணிநேரம் காத்து நிற்கிறேன். அந்த ஒரு கணநேர மனத் தயாரிப்பைக் குவித்துக்கொள்ள முடியவில்லை. எத்தனையோ முறை எம்பி எம்பிப் பார்ப்பேன். உடல் எம்பியதா

இல்லை மனம் மட்டும்தானா என்று தெரியவில்லை. பிறகு சோர்ந்து, சபித்துக் கொண்டு, மதுக்கடைக்குப் போகிறேன். விடியற்காலையில் விழிப்பு வந்ததும் அங்கு போய் எல்லாவற்றையும் முடித்துக்கொள்வது பற்றி யோசிப்பேன். இன்று கட்டாயமாக என்று படும். நிம்மதியும் பொறுமையின்மையும் ஏற்படும். பொழுது விடிந்ததும் விடிவதன் அழகைத் துளித்துளியாக ரசித்தபடி, முதல் டீயை சாப்பிடுவேன். குளிர்ந்த காலைக் காற்றில் நடந்து குழித்துறை ஆற்றைப் பார்த்து வருவேன். நீரலைகள்மீது காற்றும் ஒளியும் கலந்து பரவும்போது இதுவே என் கடைசி தினம் என்று ஜபித்துக்கொள்வேன். ஒவ்வொன்றும் அப்போது அபூர்வமான அர்த்த கனம் கொண்டுவிடும். பாதைமீது தொங்கியாடும் பசுமரக்கிளைகள், பாதச்சுவடுகள் படிந்த செம்மண் தரை, வாலை காலிடுக்கில் செருகியபடிப் போகும் செம்மண் நிற நாய், குளித்த ஈரக் கூந்தல் சொட்ட ஈரத்துண்டைப் போர்த்தியபடி போகும் பெண், வாலைச் சுழட்டியபடி கனமாக நடந்து குளிப்பாட்டப்படப் போகும் சினைப்பசு, அதை ஓட்டிப் போகிறவன் துப்பும் வெற்றிலைச் சாறு... உலகம் காட்சி ரூபமானது. ஒவ்வொரு காட்சியும் கவனித்தால் பேரின்பமூட்டும் அற்புத ஓவியம். ஆனால் அவற்றை ஏதோ ஒரு வகையில் பிரித்தறிய நமக்குத் தெரியவேண்டும். தினம் பார்க்கும் தருவியை ஓவியத்தில் பார்த்தால் பரவசமடைகிறோம். உல்லாசப் பயணம் போகும்போது ஒவ்வொரு மரமும் அழகாக இருக்கிறது. அந்த மனவிலக்கத்தை பௌத்தம் 'சங்கல்பம்' என்கிறது. அது என் மரணத் தருவாயில் கூடுகிறது போலும். மகாசங்கல்பம்!

ஆனால் முடியவில்லை. முடியவே முடியாது என்று ஒவ்வொருமுறையும் தெரிந்திருக்கிறது. எனினும் ஏன் இதைச் செய்கிறேன்? சாவின் முனையில் வாழ்வு கொள்ளும் அபூர்வமான அர்த்தத்தில் திளைக்க.

குழித்துறை
6-3-1959

•

புகாரின் எப்படி என்னை ஆட்கொண்டார்? வெகுதூரம் வந்துவிட்டபின் திரும்பிப் பார்க்கிறேன். புகாரின் ஒரு கெட்ட ஆவி போல என்னைப் பிடித்துக்கொண்டு என் நிழலாக மாறிவிட்டார். என்னிடம் இடைவிடாது அவர் பேசுகிறார். ஆணையிடுகிறார் (ஆணையிட்டுப் பழகிய குரலில்) மன்றாடுகிறார். அபூர்வமாக அழுகிறார். பெரும்பாலும் என் மன ஓட்டத்தினூடாகத் தன் சொற்களைக் கலந்துவிடுகிறார். அதன் மூலம் என் மனதின் சொற்பெருக்கை அவர் தலை

இஷ்டப்படி தீர்மானிக்கிறார். மதுவிற்கு பைசா போதவில்லை என்றும், வயிற்றில் பெருகிவரும் கனம் பற்றியும், வெயில் பற்றியும் என்னுடன் கவலைப்படுகிறார். இப்போது இவரின்றி வாழ என்னால் முடியாதென ஆகிவிட்டிருக்கிறது. சிலசமயம் அவரை நான்தான் நிழலாகப் பின்தொடர்கிறேன் என்று படுகிறது. புகாரின் என்னைத் தன்னுடன் அழைத்துக் கொள்வார். அன்று நாங்களிருவரும் ஒன்றாகிவிடுவோம். காலையிலும் மாலையிலும் என்னைவிடப் பெரியதாக இருக்கும் அவர், இரவில் பேருருக்கொண்டு என்னைத் தழுவிச் சூழ்ந்துகொள்ளும் அவர், மதியவெயிலில் என்னுடன் பிணைந்து மறைந்துகொள்கிறார். இதற்காகவே அவருடன் மதியவெயிலில் நின்று நான் பேசியதுண்டு. ஆனால் மரணத்திற்குப் பிறகு எங்களுக்குத் தடைகள் இல்லை. அப்போது எங்கள் ஆத்மாக்களுக்குத் தனித்தனியாக மனமொழி இருக்காது. ஒரே மொழியும், ஒரே பிரக்ஞையும், ஒரே துக்கமும்தான். பெருவெளியின் இருட்டில் கனத்த துயரத்தின் கரிய துளியாக நாங்கள் இருப்போம். இப்போது புகாரின் நாளுக்குநாள் பொறுமையிழந்து வருகிறார். அவருக்கு அலுத்துவிட்டது.

குழித்துறை
8-3-1959

♦

6

ஆற்றாது அழுத கண்ணீர்

КРОМЕ
ВОЙ

1

புது வெள்ளம்*

1917 நவம்பர் ஏழு. அது கொடுமையான குளிர்காலம். அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி நான்கு மாதங்களும் ருஷ்யா பூமியிலிருந்து துண்டிக்கப்படும் மாதங்கள். விண்ணிலிருந்து மனம் உறைந்த இரக்கமற்ற பனிப் படலம் இறங்கி வந்து தன் உறைந்த வெண் விரல்களினால் அந்தப் பெரும் தேசத்தை மெல்ல அள்ளி மண்ணிலிருந்து தூக்கிவிடுகிறது. பிறகு அகண்ட மௌனம் நிரம்பிய ஏதோ பாழ்வெளியில் ரஷ்யா ஒடுங்கிக் கிடக்கிறது. அப்படிக் கூற முடியாது. பனிப்பட லங்களின் உள்ளே அது தன் உயிர்ச் சக்தியை முழுக்க வெப்பமாக மாற்றிக்கொண்டு அந்தக் கடும் குளிருடன் போரிடுகிறது. கடைசி விறகுவரை எரிக்கப்படுகிறது. கடைசி நம்பிக்கைவரை சொற்களாக மாற்றப்படுகின்றன. பிப்ரவரி இறுதியில் பனி விலகுவது என்பது ரஷ்யா புதிதாகப் பிறந்து வருவதுபோல. இருண்ட கருவறைக்குள்ளிலிருந்து பனியின் வெண் ணிறப் படலத்தை மெல்ல விலக்கியபடி ஒளிமிக்க புதிய பூமிமீது, புதியவானத்தின் கீழே, பிறந்து வந்து விழுகிறது அது. அனைத்தும் உயிர்த்தெழுகின்றன. மரங்கள், பறவைகள், புழுப்பூச்சிகள். கூடவே மனிதர்களும். அது அழிந்து புதிதாகப் பிறக்கும் ரகசியமறிந்த பூமி.

ஆனால் அந்த நவம்பர் மாறுபட்டிருந்தது. பனியின் சாம்பல் நிற உறைக்குள் துப்பாக்கிகள் முழங்கின. மங்கலான பனிப்படலத்துக்கு அப்பால் வெடிப்பின் செம்மின்னல்கள் அடக்கமாகத் துடிதுடித்தபடியே இருந்தன. வெடி யோசைகளும் பனியால் போர்த்தப் பட்டே ஒலித்தன. மரண ஓலங்கள் எல்லாத் திசைகளிலுமிருந்தும் கேட்டன. குளிரில் விறைத்த செங்கற் கட்டிடங்களில் அவை எதிரொலித்து, அந்த ஜடங்களின் துயரங்களை யும் ஏற்றுக் கொண்டு, பெருகின. அவற்றை யெல்லாம் மெல்லக் கீழடக்கியபடி எழுந்தன

---

* ரஷ்யப் புரட்சியின் கதை என்ற தலைப்பில் வீரபத்ரபிள்ளை எழுதத் தொடங்கிய நூலின் எட்டாவது அத்தியாயம் இது. ஜான் ரீட். ரைஸ் வில்லியமஸ் ஆகியோரின் நேரடிப் பதிவுகள் புனைவுத் தன்மையுடன், மறு ஆக்கம் செய்யப்பட்டுள்ளன.

வெற்றிக் கூச்சல்கள். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் இதயங்களின் களிவெறியின் அழுத்தம் தாளமுடியாதபடி ஆனபோது கைகளை விரித்து, தொண்டை புடைக்க, கண்கள் தெறிக்க, இருண்டவானை நோக்கிக் கூவிய கூச்சல்களின் பேரிரைச்சல் அது!

அது விண்ணில் தூங்கும் தேவதைகளையும் புனிதர்களையும் அறைந்து எழுப்பி ஒரு செய்தியைச் சொன்னது: இனி மண்ணில் அவர்களுக்கு வேலை இல்லை. ஆயிரம் பல்லாயிரம் வருடங்களாக அவர்களை நம்பி மண்ணில் உதிரமும் கண்ணீரும் வியர்வையும் சிந்திய ஏழைகள் கிளர்ந்து எழுந்து விட்டார்கள். தங்கள் பொன்னுலகைத் தாங்களே அமைக்க சித்தமாகிவிட்டார்கள். துப்பாக்கி அவர்களுடைய புதிய தேவதையாகிவிட்டிருக்கிறது.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கின் பனியிருள் நிரம்பிய தெருக்களினூடாக களிவெறியில் திசை மறந்த தொழிலாளர்கள் குறுக்கும் நெடுக்கும் ஓடினார்கள். களநடைப் பாடல்களையும் அறுவடைப் பாடல்களையும் காதற் பாடல்களையும் பாடியபடி நடனமிட்டார்கள். திடீரென்று வானை நோக்கிச் சுட்டார்கள். பரஸ்பரம் கட்டித்தழுவிக் கொண்டார்கள். நரம்புகள் தளர்ந்து அப்படியே அமர்ந்து கதறி அழுதார்கள். இரு அமெரிக்க நிருபர்கள் அந்தக் கூட்டத்தை ஊடுருவிச் சென்றுகொண்டி ருந்தார்கள். ஒருவர் ஜான் ரீட். இன்னொருவர் ரைஸ் வில்லியம்ஸ். மாபெரும் ரஷ்யப் புரட்சிபற்றிக் கேள்விப்பட்டு அதை நேரில் பார்க்கும் பொருட்டு வந்தவர்கள் அவர்கள்.

''ஒரு தேசமே வெறிகொள்வதை இப்போதுதான் பார்க்கிறேன்'' என்றார் ஜான் ரீட். ''இந்த வெறி இந்த நகரத்தை இன்னும் நொறுக்கித் தூள் தூளாக்கி விடாததுதான் ஆச்சரியம்.''

''அப்படியும் நிகழலாம். அவர்கள் பெரிய அலைபோல ஹெர்மிட்டேஜிலும் பனிக்கால அரண்மனையிலும் நுழைந்தார்கள் என்று விடுதிக்காரன் சொன்னான். மாஸ்கோ இருக்கிறதோ என்னவோ'' என்றார் வில்லியம்ஸ்.

''என்ன வெறி! என்ன ஆனந்தம்! பிரெஞ்சுப் புரட்சி இப்படித்தான் இருந்திருக்கும்.''

ஒரு குடியானவன் கிழிந்த உடைகளும் கையில் ரைஃபிளுமாகப் பாய்ந்து வந்தான். ''தவாரிஷி! தவாரிஷி!'' என்று அழைத்தபடி முத்தமிட்டான். ரஷ்யர்களுக்குரிய வாய்ப்புண் வீச்சம் அடித்தது. ''தவாரிஷி! தவாரிஷி!'' என்று அவன் உணர்ச்சிப் பெருக்குடன் கூப்பிட்டான். கைகளை விரித்தபடி, கண்ணீர் விட்டபடி, பரவசம் கொண்ட குரலில், அச்சொல்லை மந்திரம்போல மீண்டும் மீண்டும் சொன்னான்.

''என்ன சொல்கிறான்?'' என்றார் ரீட்.

"இது விந்தையான சொல். இதை ஆங்கிலத்தில் தோழர் என்றும் சகபயணி என்றும் மொழிபெயர்க்கலாம்!"

"அது ஏன் இந்தக் கிழவனை இப்படி வெறிகொள்ள வைக்க வேண்டும்?"

"இந்தப் புரட்சியின் மந்திரங்களில் ஒன்று அது. சமத்துவத்தை, கூட்டுச் செயல்பாட்டை, ரத்த ஒற்றுமையை அது குறிக்கிறது. இன்று நீங்கள் யாரை வேண்டுமானாலும் தவாரிஷி என்று கூப்பிடலாம். அப்படிப்பட்ட நிலைமை இன்று உலகில் எந்த நிலப்பகுதியிலும் இல்லை என்பதை நினைவுகூருங்கள். கருத்துகளினாலல்ல, அந்த ஒரு சொல்லின் மாயத்தால்தான் இங்கு புரட்சி ஏற்பட்டிருக்கிறது..."

"ஒவ்வொன்றும் விசித்திரமாக, முன்பு காணக்கிடைக்காதவையாக உள்ளன. மன எழுச்சியையும் அச்சத்தையும் ஊட்டுகின்றன."

"மகத்தானவை எல்லாமே அப்படித்தான்."

அவர்கள் முதல் தடையரணுக்குச் சென்று சேர்ந்தார்கள். கையில் சூடாக புகை கமழும் துப்பாக்கியுடன் ஓர் இளம் தொழிலாளி எழுந்து "தோழர் உங்கள் அடையாளம் என்ன?" என்றான்.

ஜான் ரீட் தன் அடையாள அட்டைகளைக் காட்டினார். இளம் தொழிலாளி தலைவணங்கினான். "என் பெயர் திரிபோனோவ் தோழர். நான் ஒரு கம்மியன். ஜார்ஜியாவிலிருந்து வருகிறேன். இவன் யானிஷேவ். நெய்பூத்திலிருந்து வந்தவன்."

"வணக்கம் தோழர்களே, நாங்கள் உங்கள் தலைவர் லெனினைப் பார்க்க விரும்புகிறோம்."

பனியால் சிவந்த முகத்துடன் யானிஷேவ் சிரித்தான் "தலைவரா? அப்படி யாரும் இல்லையே. எங்களுக்கு லெனின் என்ற பெயருடைய ஒரு தோழர் இருக்கிறார், வழிகாட்டி இருக்கிறார், ஆசிரியர் இருக்கிறார்."

"ஆம், நாங்கள் பார்க்க விரும்புவது அவரைத்தான்."

"அவர் அங்கே, இந்தச் சதுக்கத்துக்கு அப்பால், ஸ்மோல்னியில் இருக்கக் கூடும்."

"அது என்ன?"

"பிரபு வம்ச ராணுவக் கல்லூரி. இப்போது அது சோவியத்துகளின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் அலுவலகம்."

"அங்கு போக விரும்புகிறோம்."

"ஆனால் இப்போது அங்குதான் கடும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. ராணுவப் பள்ளி மாணவர்கள் ஆயிரம் பேர் அப்பகுதியில் இன்னமும் இருக்கிறார்கள்."

அதற்குள் வெடியோசைகள் கேட்டன. வியவிய என விசில் ஒலிகள் கேட்டன.

''தோழர், அமருங்கள்! அமருங்கள்!''

அவர்கள் அமர்ந்ததும் ''தோழர் நீங்கள் இதுவரை போரைப் பார்த்ததில்லை என்று ஊகிக்கிறேன்'' என்றான் திரிபோனோவ்.

''ஆம், எப்படித் தெரியும்?''

''நீங்கள் கேட்ட விசில் சத்தம் துப்பாக்கிக் குண்டுகள் கடந்து போகும் ஒலி. மயிரிழை வித்தியாசத்தில் உயிர் பிழைத்தீர்கள்.''

இருவருக்கும் உடல் புல்லரித்தது. ரீட் ''கடவுளே, இப்படிப்பட்ட அபாயகரமான இடத்திலா புரட்சியின் தலைவர் இருக்கிறார்?'' என்றார்.

அவர்கள் போரில் இறங்கிவிட்டமையால் பதில் பேசவில்லை. சற்று நேரம் கழித்து ஓரிரு கூச்சல்கள் மட்டும் கேட்டு அடங்க, வெடியோசைகள் எதிரொலித்து மறைய, அமைதி திரும்பியது.

''தோழர், நீங்கள் மிக அபாயகரமான இடத்தில் இருக்கிறீர்கள்'' என்றார் ரீட்.

''ஆம், இதோ சில அடி தூரத்தில் மரணம் இருக்கிறது. மரணம் நிச்சயம். அதில் சந்தேகமே இல்லை. ஆனால் இறந்தால் என்ன? இந்தப் பத்து நாட்களில் என் வாழ்வின் அனைத்து இன்பத்தையும் நான் அனுபவித்துவிட்டேன்.'' திரிபோனோவ் உணர்ச்சி மீதுற உதடுகளை அழுத்திக் கொண்டான். ''தோழர் நான் யாரோ, யாரிடமோ, எதற்காகவோ நடத்தும் ஓர் அர்த்தமற்ற போரில் சாகவில்லை. என் சந்ததியினருக்காகச் சாகிறேன். அவர்களுக்கு சுரண்டலற்ற, அநீதியற்ற, புது உலகமொன்றைப் படைத்துத் தருவதற்காகச் சாகிறேன். ஒரு மனிதனின் வாழ்வுக்கு இதைவிட அர்த்தமுள்ள முடிவு என்ன இருக்க முடியும்?''

தாங்க முடியாத மன எழுச்சி நடுக்கமாகவும், கண்ணீராகவும் ஜாவின் ரீடில் வெளிப்பட்டது. அவர் அந்தத் தொழிலாளியை அப்படியே கட்டிக் கொண்டார்.

சில மணி நேரம் கழிந்து உதவிக்குப் படை வந்தது. தடையரண் முன்னகர்ந்தது. நிருபர்கள் ஒரு பழைய வண்டியில் ஸ்மோல்னிக்கு இட்டுச் செல்லப்பட்டார்கள். வழியெல்லாம் பழத்தோட்டத்தில் உதிர்ந்த ஆப்பிள்கள்போல உதிரம் பெருகிய பிணங்கள் கிடப்பதைக் கண்டார்கள். இரண்டு நாள் கழித்து அந்தத் தடையரணில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டதை அவர்கள் அறிய நேர்ந்தது.

ஸ்மோல்னி ஒரு பழைய கட்டிடம். ஜாரின் ருஷ்யாவின் பெரிய கனவுகளில் ஒன்று. செங்கற்களாலான பெரிய உருண்ட தூண்கள். விசாலமான வராண்டாக்கள். அகலமான படிகள். முகப்பில் தோ

வண்டிகளை நிறுத்தும் பெரிய முற்றம். அதன் முதல் மாடியிலும் பெரிய வராண்டா இருந்தது. வராண்டாவிலும் முகப்பிலும் செம்மச் செம்ம ஆட்கள் நிரம்பியிருந்தனர். முற்றமெங்கும் மனிதத் தலைகள். மனித நெடி. மனித ஓங்காரம். வண்டி அந்த அலைகளில் தள்ளி மிதந்து முன்னகர்ந்தது. பொருத்தமற்ற இறுக்கமான உடையணிந்த இளைஞன் முன்னகர்ந்து "அமெரிக்க நிருபர்களா?" என்றான்.

"ஆம்."

"வாருங்கள், தோழர் லெனின் உங்களைப்பற்றித் தனியாக விசாரித்தார்."

"எங்களைப் பற்றியா?"

"ஆம், வாருங்கள்..." நெரிபட்டபடி அவர்கள் ஊடுருவிச் சென்றனர். ஸ்மோல்னியின் வராண்டாவில் போடப்பட்ட பெரிய மேஜைக்குப் பின்னால் குட்டையான மனிதர் உட்கார்ந்திருந்தார். அவர் அடையாள அட்டைகளைப் பார்த்தபிறகு "தோழர்களே, அதோ அங்கு அமருங்கள். இரு ஜெர்மானிய நிருபர்களும் உங்களுக்குத் துணையுண்டு" என்றார்.

அவர்களை அந்தப் பெரும் கூட்டத்தின் உணர்ச்சிப் பிரவாகமே ஈர்த்திருந்தது. அந்தக் கூட்டம் ஒரே மனம் கொண்டதாக இருந்தது. நீடூரென்று ஒரு ஓலம் கேட்டது. மக்கள் சிதறி இடைவெளி விட்டனர். சதுக்கத்தின் நடுவே பெரிய கற்பீடத்தில் ஜார் நிகலஸின் பெரிய கற்சிலை இருந்தது. அதன்மீது நிறையத் தொழிலாளர்கள் பூச்சிகள்போல மொய்த்து ஏறினார்கள். ஜாரின் சிலைவிழிகள் அதே உக்கிரத்துடன் உறைந்திருக்க அவர் கழுத்திலும் கைகளிலும் வடங்கள் மாட்டப் பட்டன. வடங்களை பல நூறு கரங்கள் பற்றின. சிலை மெல்ல ஆடியது. அதில் ஏறியவர்கள் குதித்தனர். சிலையின் தலை மடேரென்ற ஒலியுடன் பிளந்து தரைமீது தட்டென்று விழுந்தது. அப்பகுதி மக்கள் சிதறினர். சிலை பீடத்துடன் அசைந்தது. தள்ளாடி மண்ணை அறைந்தபடி விழுந்தது. காது செவிடுபடும் படியான ஒலி எழுந்தது. வெறி நடனங்கள் கூளைகள், அடக்க முடியாத சிரிப்புகள், அழுகைகள். சிலைமீது தொழிலாளர்கள் ஏறி நின்று கூத்தாடினார்கள்.

"மனிதர்கள் இப்படி சுயமிழந்து ஒற்றைப் பெரும் சக்தியாக ஆக முடியுமா? இது சாத்தியம்தானா?" என்றார் ரீட்.

"சாத்தியமாகியிருக்கிறதே. மனிதத் திரள் ஒற்றை மனமும் ஒரே இலக்கும் கொள்ளும்போதுதான் வரலாறு படைக்கப்படுகிறது" என்றார் வில்லியம்ஸ்.

"பெரும் சக்தி!" என்றார் ரீட் பிரமிப்புடன். "சரியானபடி கட்டுப்படுத்தப்படாவிட்டால் இதுவே உலகை அழித்துவிடும்."

"அந்த மனிதர் ஒரு மாயாவி. இந்த பிரளயத்தின்மீது அவருக்கு முழுக் கட்டுப்பாடு உள்ளது."

"அது மிக மேலோட்டமானதாகவே இருக்க முடியும். பார்த்தீர்களல்லவா ஜாருக்கு நிகழ்ந்ததை? ஆயிரம் வருடம் இம் மக்களின் மனங்களில் ஆட்சி செலுத்தியவர் அவர்."

"ஆனால் இது வேறு யுகம்."

"ஆம், கட்டுப்பாடற்ற, மூர்க்கமான, ஆதிமானுட சக்தியின் யுகம். தங்கத்தின் யுகம் இதோ சரிகிறது. இனி இரும்பின் யுகம்..."

"இந்த மனிதர் இரும்பாலானவரா?"

"இல்லையேல் இது பேரழிவின் துவக்கம். இந்த மக்களுக்குத்தேவை ஓர் இரும்பு மனிதர். இரும்பாலான ஞானமும், இரும்பாலான சொற்களும், இரும்பாலான சித்தமும் கொண்ட மனிதர்."

"இந்த மனிதர் விளாடிமர் இலியிச் ஓர் அற்புத மனிதர் என்கிறார்கள்" எனறார் வில்லியம்ஸ்.

"எனக்கு நம்பிக்கை வரவில்லை."

"பார்ப்போம்!"

"அமைதி! அமைதி!" என ஒரு குரல் கூவியது. அமைதி அமைதி என்ற பல நூறு தொண்டைகள் கூவின. கூட்ட முகப்பு அமைதி அடைந்தது. கட்டளை கண்ணெதிரில் பரவிச் செல்வது தெரிந்தது. மெல்ல அந்தக் கூட்டமே அமைதியடைந்தது, கடல் பனியாக உறைந்தது போல.

இழுத்துப் போடப்பட்ட பீரங்கி வண்டிமீது ஒரு மனிதர் ஏறினார்.

"பீரங்கி வண்டிமீதா?" என்றார் ரீட், பொறுக்க முடியாமல்.

"வரலாறு தன் விருப்பப்படி தன்னை விரித்துக்கொள்கிறது."

"இருந்தாலும்..."

"இது இரும்பு யுகம் என்றீர்கள்."

கட்டைகுட்டையான உடலும் வலுவான தோள்களும் கொண்ட, கரிய நிற உடைகள் அணிந்த மனிதர். மேடிட்ட நெற்றியும், முழு வழுக்கையும், அழுந்திய மூக்கும், அழுந்திய சிறு உதடுகளும், குறுந்தாடியும், பளிச்சிடும் இடுங்கிய கண்ணும், குறும்புச் சிரிப்பும்...

"இவர்தான்! படங்களில் பார்த்தது போலவே இருக்கிறார்!" என்றார் வில்லியம்ஸ். அவருடைய பரபரப்பு ரீடையும் தொற்றிக்கொண்டது. இதோ வரலாற்றின் மிக மகத்தான தருணங்களில் ஒன்று நிகழப் போகிறது. ஒரு வேளை இந்தச் சம்பவத்துக்குப் பிறகு உலகமே மாறிவிடக் கூடும். மானுட குலத்தின் எதிர் காலமே இந்தத் தருணத்தில்

தீர்மானமாகப் போகிறது... இதன் ஒவ்வொரு காட்சியும், ஒவ்வொரு தகவலும், இங்குள்ள ஒலிகளும் மணங்களும், இவர் பேசப் போகும் ஒவ்வொரு சொல்லும், சொல்லுக்கிடைப்பட்ட மௌனமும் என் கவனத்தில் விழ வேண்டும். என் மனதில் ஆழப்பதிந்து என்னுடைய பிரக்ஞையின் பகுதியாகிவிட வேண்டும். பிறகு இத்தருணத்தின் சாட்சியாக நான் மிஞ்சிய வாழ்நாளைக் கழிப்பேன். என் பிறவியின் நோக்கம் ஈடேறும் தருணம் இது. ரீடின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

அம்மனிதர் பீரங்கி வண்டிமீது ஏறியதும் கைகளை உயர்த்தி வாழ்த்துச் சைகை செய்தார். உடனே கூட்டம் ஆரவாரித்தது. ஸ்மோல்னியின் பெரிய கட்டிடம் இடிந்து விழப்போவது போலிருந்தது. அவர் கைகளை ஆட்டி அமைதி என்று சைகை காட்டினார். அமைதி பரவியது. அவர் களைத்திருந்தார். தலைமுடி பறந்தது. உடைகளில் கரியும் தூசியும் படிந்திருந்தன. அவர் புன்னகையில்கூட களைப்பும் தூசியும் படிந்திருந்தன. புராதனமான, மகத்தான ஓவியம் போலிருந்தார்.

அமைதி இறுகியது. ஒரு செருமல், ஒரு துப்பாக்கியின் கிளிங் எனும் ஒலி, ஒரு பூட்ஸ் இடம்பெயரும் சத்தம் என மௌனம் மேலும் தீவிரம் கொண்டது. அமைதியில் மணங்கள் மேலேழுந்தன. ரத்தம், வியர்வை, வெடிமருந்து, மட்கும் சப்பாத்துகள், பனி ஆகியவற்றின் மணம். அவரை அந்தப் பெரும் ஜனக் கூட்டம் கூர்ந்து கவனித்தது. "தோழர்களே" என்றார் அவர். குரல் கம்மியிருந்தது. அது யாருக்கும் கேட்கவில்லை. அவர் உரக்கக் கூவினார், "தோழர்களே... நாம் இப்போது சோஷலிசக் கட்டுமானத்தைத் தொடங்கவிருக்கிறோம்..."

♦

2

வெண்கலக் குதிரைவீரன்

பத்ரன்

அலைகள் நெளிந்த நேவா ஆற்றின்கரையில
ஆழ்ந்து பேரெண்ணங்களில் நின்றான் அவன்.
அகன்ற ஆறு சுழித்துப் பாய்ந்தது.
சிறியதோர் தனி ஓடம் அதில் மிதந்தது.

அ. புஷ்கின் ('வெண்கலக் குதிரைவீரன்' துவக்க வரிகள்)

அக்டோபர் இறுதியில் நேவா துயரம்மிக்க பழைய நினைவுபோல உற்றைந்து மௌனமாகி விடுகிறது. அப்போது இரும்புக் கிராதிகள் வரம்பிட்ட கருங்கல் சுவர்களில் யாரும் இருப்பதில்லை. இலைகள் உதிர்ந்த மரங்களினாலான சாலையோரமும் எதிரே வெட்ட வெளியாகக் கிடக்கும் செனட் மைதானமும் அமர்ந்திருக்க அத்தனை உகந்த இடமல்லதான். பனியின் வெண்பொருக்கு வண்டிச்சக்கரங்களில் நொறுங்கிக் கூழாகி மீண்டும் உறைவதைக் கண்டபடி அமர்ந்திருப்பது ஓர் இனிய அனுபவமுமல்ல.

இரும்புக்கிராதிமீது பனிப் பொருக்குகள் அடர்ந்திருந்தன. அவற்றைத் தொட்டபடி, அவ்வப்போது உதிர்த்தபடி, நடந்து சென்றேன். என் காலடியோசை மூடுபனியில் எதிரொலித்தது எனக்கே கேட்டது. என்னை அது பின்தொடர்வது போலிருந்தது. என் தனிமையில் எவரோ என்னை வேவு பார்ப்பதாக எப்போதும் உணர்வதுண்டு. இந்தத் தேசத்தில் அது சகஜம்தான். எடுத்துச் சொல்ல ஒரு விஷயமுண்டு. என்னை வேவுபார்ப்பது நானேதான். மிக இளம் வயதினான நிகலாய் புகாரின். தத்துவமும் அரசியல் சித்தாந்தமும் கற்பதற்கு முந்தைய, இன்னமும் கட்சி உறுப்பினன் ஆகாத, கவிதைகளன்றி வேறெதையும் படிக்க விரும்பாத புகாரின். அவன் பாசாங்குகளில்லாத,

---

வசீலி சயாதாயெவ். ஸ்டாலின் காலத்தில் கொல்லப்பட்ட சிறுகதையாசிரியர். இவர் எழுதிய சிறுகதையின் தழுவல் இது. 'மங்களோதயம்' ஜனவரி 1956 இதழில் சில மாற்றங்களுடன் பிரசுரமாகியுள்ளது. மையக் கதாபாத்திரம் புகாரின் ஆக மாற்றப்பட்டுள்ளதே வீரபத்ரபிள்ளையின் பங்களிப்பு. அதற்கேற்ப பல மாற்றங்கள் செயயப்பட்டுள்ளன மூலக்கதை அலெக்சாண்டர் புஷ்கினின் பிரபலமான கவிதையை அடக்குமுறைச் சூழலில் புதிதாக அர்த்தப்படுத்திக் கொள்ளும் முயற்சி.

பதற்றம் நிரம்பிய, எப்போதும் குளறுபடிகள் செய்கிற, ஒல்லியான இளைஞன். தன் கழுத்து தேவைக்குமேல் நீளம் என்பது குறித்தும், உதடுகள் மிக மெல்லியவை என்பது குறித்தும் மனக்குறை கொண்டிருந்தான். உலகம் ஏன் இத்தனை மெதுவாக இயங்க வேண்டும் என்று கண்விழித்திருக்கும் வேளைகளிலெல்லாம் அவன் ஆத்மா தவித்திருந்தது. அவன் எழுதிய காதற்கடிதங்களை – ஒரு போதும் அவை தபாலில் சேர்க்கப்படவில்லை – சமீபத்தில் எனது ரகசிய நிலவறைப் பெட்டியிலிருந்து எடுத்துப் படித்தேன். எத்தனை நூறு முறை அவன் தன் உயிரையும் தனக்குரிய அனைத்தையும் அக்கணத்தில் முக்கியமெனக் கருதிய ஒன்றுக்காக, அல்லது ஒருத்திக்காக, தாரை வார்க்கச் சித்தமாக இருந்திருக்கிறான் என்று படித்தபோது விநோதமான ஒரு துக்கம் என்னை நிரப்பியது. தன் தலையைக் கொய்து காணிக்கையாக்கும் பொருட்டு உன்னதமான பலிபீடங்களை அவன் தேடியலைந்து கொண்டிருந்தான். எத்தனை மூடன்; பிரியத்திற்குரிய இனிமையான மூடன். அவனது காதலிகள் பலர் இறந்து போய்விட்டனர். சிலரை அவ்வப்போது நகரத் தெருக்களில் காண்பேன். வயதாகும்போது அழகிய பெண்களில் மிக அபத்தமான ஒன்று குடியேறிவிடுகிறது. அது என்ன என்று நேற்று வேரா ஸ்தியோனவ்னாவை சியோம்ஸ்கி அரங்கில் பார்த்தபோது தெரிந்து கொண்டேன். அவர்கள் தங்கள் அழகிய நாட்களில் தங்கள் அழகின் சிறந்த வெளிப்பாடெனக் கொண்டிருந்த அசைவுதான் அது. முதிய உடலில் அந்த நளின சலனம் நிகழும்போது கடவுள் என்ற கேலிச் சித்திரக்காரன் நம்மைப் பெருமூச்சுவிட வைக்கிறான். பாவம் வேரா. இன்று அவள் நகரக் கமிட்டி உறுப்பினர் ஒருவரின் மனைவி. அவனது குழந்தைகள் அவளுக்குச் சென்று சேரவில்லை என்பது நல்லதாகப் போயிற்று. இந்தக் கெடுபிடி நாட்களில் காதற்கடிதங்கள் மிக அபாயகரமானவை.

கல்பெஞ்சில் அமர்ந்திருந்த ஒருவன் என்னை மிகவும் கூர்ந்து பார்ப்பதை அப்போதுதான் கவனித்தேன். என் கண்களைச் சந்தித்ததும் அவன் பார்வையை விலக்கிக்கொண்டான். அவன் கவனத்தை ஈர்க்கும்படி நான் எதையோ செய்திருக்க வேண்டும். ஆனால் அது என்னை சகஜமல்ல. நான் வரலாற்று நாயகன். பிறர் காணச் சிரிப்பதோ, அழுவதோ, கோபம் கொள்ளுவதோ, மாறுபட்ட உடலசைவுகளை வெளிப்படுத்துவதோ எனது வழக்கமல்ல. தேர்ந்த இராஜதந்திரியின் அசைவுகளுக்குள் சிரத்தையுடன் பதுங்கி இருக்கிறேன்.

ஒருவேளை அவன் என்னை அடையாளம் கண்டுகொண்டிருக்கக் கூடும். அவனருகே சென்று அமர்ந்துகொண்டேன். மிகவும் இளைஞன். ஒருவேளை கட்சியில் அல்லது செம்படையில் முதல்கட்ட உறுப்பினனாக இருக்கலாம். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் என்னைக் கண்டிருக்கலாம். ஆனால் அது சாத்தியமில்லை. கடந்த இரண்டு வருடங்களில் எந்த வளியர் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் நான் கலந்துகொண்டதில்லை.

பாதுகாப்பான நேரத்திற்கு இருவரும் பாராமுகமாக இருந்தபின் நான் சகஜமாக ''இனியநாள் தோழர்'' என்று சொன்னேன். அவன் முகம் வெளிறியது. நீல நரம்போடிய கன்னங்களின் சுண்ணாம்பு வெளுப்பு என்னைச் சிறிது பயமுறுத்தியது. ஒரு மனிதன் அத்தனை வெளிறியிருத்தல் எப்படி சாத்தியம் என்று பட்டது. கூரிய மூக்கு. நீண்ட ஒல்லியான கழுத்தில் அசையும் குரல்வளை. மெல்லிய, அழுந்தி ஒட்டிய உதடுகள். எங்கோ அறிமுகமான முகம். என் மனம் ஏனோ படபடத்தது. அவனா?

''நாம் எங்கோ சந்தித்திருக்கிறோம்'' என்றேன்.

அவன் சிரித்தான்; பயந்த குழந்தை சிரிப்பது போலிருந்தது.

சிறிது இடைவெளிக்குப் பிறகு நேரடியாக ''நல்லது தோழர், என்னை நீங்கள் மிகவும் கூர்ந்து கவனித்தீர்கள். நான் யாரென்று அறிவீர்களா?'' என்றேன்.

''இல்லை, தெரியாது'' என்று பதறிய மெல்லிய குரலில் அவன் சொன்னான்.

எனக்கு சிறிது ஏமாற்றம் ஏற்பட்டது. ''என் பெயர் நிகலாய் புகாரின்'' என்றேன்.

அவன் என் பெயரை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. புன்னகைத்தான்.

''தாங்கள் கூர்ந்து கவனித்தது ஏன் என்று கூற முடியுமா?'' என்றேன். ''ஏனெனில் இந்த காலகட்டத்தில் கூர்ந்து கவனிக்கப்படுவதெனில் என்ன என்று நீங்கள் அறிவீர்கள்...''

''நீங்கள்... நீங்கள் அப்போது ஒரு... ஒரு கவிதை வரியை சொன்னீர்கள்'' என்றான் அவன். அவன் முகம் ரத்தம் பரவிய சருமப்படலமாக ஆயிற்று. தலை இலேசாக நடுங்கவும் தொடங்கியது.

''நானா? கவிதையா? எப்போது?''

''சற்றுமுன், இரும்புக் கிராதியின் பனியை உதிர்த்தீர்களே, அப்போது.''

''நான்தானா? சாத்தியமேயில்லை.''

''நிச்சயமாக அதை நான் கேட்டேன். மேலும் நான் மனதில் பாடிக் கொண்டிருந்த கவிதையில் உள்ள வரி அது.''

எனக்கு படபடப்பு ஏற்பட்டது. ''என்ன கவிதை அது?''

''அது....'' அவன் மேலும் வெட்கினான். ''அது ஒரு பழைய கவிதை. பிரபலமானது. ஒருவேளை உங்களுக்கும் மனப்பாடமாகத் தெரிந்திருக்கும்.... வெண்கலக் குதிரை வீரன்...''

என் பதற்றம் மிகவும் அதிகரித்தது. கால்களை மாற்றிப்போட்டு அமர்ந்தேன். அது அவனுக்கு இளமையில் பெரும் போதையாக இருந்த கவிதை. அதை அவன் ஆயிரம் முறையாவது இதே நேரா கரைந்

சாலையில் பாடியபடி நடந்திருப்பான். அதன் வரிகள் அவன் மூச்சு போல ஆகிவிட்டிருந்தன அன்று. ஆனால் பிறகு அதை அவன் மறந்து விட்டிருந்தான் . கடந்த பல வருடங்களில் ஒருமுறையேனும் அதை நினைவு கூர்ந்ததாக ஞாபகம் வரவில்லை.

"மன்னிக்கவும். நான் பாடிய – அதாவது நீங்கள் கேட்ட – அந்த வரிகள் எவை?"

"அவை மிகவும் துக்கம் நிரம்பிய வரிகள்" என்றான். "நான் அந்த வரிகளைப் பாடலாமா? கவிதை வரிகளை வெறுமே சொல்வது எனக்கு மிகவும் சிரமம் தருகிறது."

"பாடுங்கள்."

அவன் கனைத்து குரலைத் தீட்டிக் கொண்டான். கவிதைக்குரிய தொனியுடனும் துல்லியமான உச்சரிப்புடனும் அவன் பாடிய போது தீவிரமும் வலிமையும் மிக்க இன்னொரு ஆளுமை அவனிலிருந்து எழுந்து வந்தது.

இன்னும் வாழ்பவன் அல்ல, ஆவியும் அல்ல,
இழிந்த விலங்கும் அல்ல, மனிதனும் அல்ல
இனம்காண முடியாத ஏதோ ஒன்றாய்...

என் மார்புக்குள் கடுமையாகப் பிசையப்படுவது போன்ற வலி எழுந்தது. உடல் முழுக்க அவ்வலி பரவி, சட்டென்று கனத்த களைப்பாக மாறியது. கால்களை விரித்து நன்றாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டேன்.

"உங்களைப் புண்படுத்தி விட்டேனா?" என்றான் இளைஞன்.

"இல்லை" என்றேன். "பழைய நினைவுகள். அவை துன்பம் தருபவையா இன்பம் தருபவையா என்று பகுப்பது கடினம்..."

"ஆம்" என்றான்.

"உங்களுக்கு புஷ்கின் கவிதை மிகவும் பிடிக்குமா?"

"புஷ்கின் கவிதையைப் பாடியபடி நான் உயிர்விடுவேன்."

எனக்குள் சிறு திடுக்கிடல் ஏற்பட்டது. அந்த வரியை வேறு எவரோ எங்கோ கூறிக் கேட்டிருக்கிறேன்.

அவன் கைநீட்டி "அந்த வெண்கலக் குதிரைவீரன்... அவன் மாறவே இல்லை" என்றான். "ஆனால் அந்த முகம் மட்டும்..."

ஏறிட்டுப் பார்த்தேன். மூடுபனியின் திரை விலகி சென்ட் மைதானம் வெகுதூரம்வரை தெரிந்தது. வானில் விழுந்த ஒரு திறப்பினூடாக பளிரென்ற இளவெயில் அருவிபோலக் கொட்டிக் கொண்டிருந்தது, ஃக்தமேயின்றி. வெண்கலக் குதிரைமீது ஆரோகணித்த சக்ரவர்த்தி பீட்டரின் பெரிய சிலை ஒளிபட்டுத் தகதகத்தது. உடையின் வளைவுகளும் குதிரைப் பிடரிமயிரும் சுடர்ந்தன. குதிரை இரு கால்களையும் தூக்கி, திமிர் தெறிக்கும் தசைகள் அதிர, கழுத்தைச் சொடுக்கித் திருப்பி பாய்ந்த கணத்தில் நின்றது. அதன்மீது பீட்டரின்

உருவம் இலகுவாக அமர்ந்திருந்தது. கடிவாளத்தைப் பற்றி இழுத்த கையில் மட்டும் வலிமை தெரிந்தது. அந்த முகத்தை மிகத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. கனவும், கம்பீரமும், ஆணவமும் கலந்த அந்த முகம் மிகமிக அறிமுகமானது. வண்ண ஓவியங்களிலிருந்து எதிர்பாராத கணங்களில் உயிர்பெற்று நம்மிடம் பேசமுற்படுவது. ஆனால் வெண்கல முப்பரிமாணத்தில் அதற்கு மிகமிக அபூர்வமான ஒரு கனவுத்தன்மை வந்து விட்டிருந்தது.

''இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த நதியின் கரையில் ஒருநாள் அவன் வந்து நின்றான். அன்று விரிந்த சதுப்புக்கு நடுவே எளிதில் அண்டமுடியாத காட்டாறாக நேவா ஓடிக் கொண்டிருந்தது. இருபுறமும் இரவும் பகலும் இருள் விலகாது இரையும் சதுப்புக்காடுகள். சதுப்பு மீது ஃபின்லாந்திய மீனவர்கள் கழிகளை நாட்டி அவற்றின்மீது குடிசைகளை எழுப்பிக் குடியிருந்தனர். குடிசைகளின் புகைபோக்கிகளிலிருந்து மெல்லிய நீலப்புகைகள் மூடுபனிமீது எழுந்து பரவின. மரக்கால்களில் கட்டப்பட்ட தக்கைமர ஓடங்கள் கயிற்றை இழுத்தபடி பொறுமையற்ற நாய்கள் போல நேவாவில் விரையத் துடித்தன. நீரின்மீது மீன்பிடிப் படகுகளில் இருந்து வலைகள் சிறகுகள் போல விரிந்து சரியும். அன்று ரஷ்யாவும் இந்த நதியைப் போலவே இருந்தது. ஆற்றல் மிக்கது. தொய்வே இல்லாதது. ஆனால் அடங்காதது. ஒரு காட்டுமிராண்டி அன்னைபோல குரூரமான பேரன்பு கொண்டது.''

''ஆம், அப்படித்தான் வரலாறு'' என்றேன். அவனது தீவர் சொற்பெருக்கு எனக்கு வியப்பு தந்தது. ஆனால் அவன் பேச்சில் என் மனம் லயித்தது. கட்டுப்படுத்தும் சுயப்பிரக்ஞை இல்லாத மனிதக்குரல்தான் எத்தனை அபூர்வமாகிவிட்டது இங்கு.

''அன்று அவன் இந்தப் பாறைமீது ஏறி நதியைப் பார்த்தபடி வெகுநேரம் நின்றான். என் தேசம் கண்களில்லாத பூதம், சாளரங்களில்லாத மாளிகை என்று நினைத்தான். இங்கு ஒரு விழி திறக்கட்டும். ஒரு சாளரம் அமையட்டும். அதனூடாக ஐரோப்பாவை நாம் பார்ப்போம். உலக நாகரிகங்களின் அனைத்து நறுமணங்களும் என் ஆத்மாவுக்குள் நிரம்புக! அவன் தன் கைகளைக் தூக்கி ஆணையிட்டான்...''

''ஆம். அது இந்நகரின் ஐதீகம்...''

''இந்த நகரம் சதுப்பிலும் வனாந்தரத்திலும் முளைத்து எழுந்து வானோக்கிப் பரவியது. செம்முகில் பரவிய மாடங்கள், சகடங்கள் ஒலித்தோடும் நெடுஞ்சாலைகள், ஆர்க்கும் அங்காடிகள், அரங்குகள், அணிவகுப்புகள் நிகழும் சதுக்கங்கள், விருந்துகள், நடனங்கள், இசை. நேவாவைச் சுற்றி கல்லாலான பெரும் கரைகள் எழுந்தன. பற்பல தேசத்து கப்பல்கள் அதில் மிதந்தன. உலகம் நகர முகப்பில் வந்திறங்கியது'' அவன் பாட ஆரம்பித்தான்.

சீர்திகழும் பீட்டரின் நகரமே
வாழ்கநீ ருஷ்யாபோலத் திண்மையுடன்!
ஆர்க்கும் இயற்கை தோற்றது உன்முன்.
முன்னாள் பகைமை முற்றிலும் மறந்து
பின்லாந்திய அலைகள் ததும்பின உன்னில்...

என்னுள் குளிர்ந்த காற்று எல்லாக் கதவுகளையும் திறந்துகொண்டு பரவிச் சென்றது. கண்கள் கலங்கிவிட்டன. ஒரு பாடல், இளமையில் நம் ஆத்மாவை ஊடுருவிய பாடல், நம்மை எங்கெங்கோ கொண்டு சென்றுவிடுகிறது. நாம் அலைகடலில் தனியோடம்போல ஆகிவிடுகிறோம்.

''ஆனால் புஷ்கின் எழுதாத வரிகள் பல உண்டு'' என்றான் இளைஞன். ''இந்த நகரம் பல்லாயிரம் பின்லாந்திய மீனவர்களின் குடிசைகளை அழித்து உருவாக்கப்பட்டது. தொலைதூர செசென்யா விலும் கசகிஸ்தானிலும் துர்க்மேனிஸ்தானிலும் இருந்து கொண்டு வரப்பட்ட பல லட்சம் மக்கள் இங்கு சாட்டை நிழலில் உழைத்துச் செத்து விழுந்தனர். காட்டுமரங்களுக்கு இணையாக மனிதச் சடலங்களும் இச்சதுப்பை நிரப்பின.''

''ஆனால் இக்கவிதையில் புஷ்கின் அவ்விஷயத்தைக் குறிப்பாலுணர்த்துகிறார். வறுமை நிரம்பிய மீனவ இளைஞன் யெவ்கெனியினூடாக...''

''ஆம். நீங்கள் இக்கவிதையின் வரலாற்றுப் பின்னணி குறித்து படித்ததுண்டா?''

''அதிகம் இல்லை.''

''யெவ்கெனி புஷ்கினுக்கு மிகவும் பிடித்த பெயர். அதை இக்கவிதையில் கூறவும் செய்கிறார். யெவ்கெனி ஒனேகின் என்று ஒரு குறுங்காவியமும் அவர் எழுதியிருக்கிறார்.''

''ஆம்.''

''யெவ்கெனி பாரதீன்ஸ்கி என்ற சக கவிஞனையே புஷ்கின் அப்படிக் குறிப்பிடுகிறார். அவரது கவிதைகள்மீது, குறிப்பாக நடனம் என்ற நீள்கவிதைமீது புஷ்கினுக்குப் பித்து உண்டு. உண்மையான யெவ்கெனி ஒரு டிசம்பர் கிளர்ச்சியாளர்.* கலகத்தில் சிறைப் பிடிக்கப்பட்டு சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டார். அங்கு நோய்கண்டு இறந்தார். புஷ்கின் அவருக்கு அனுப்பப்படாத பல கவிதைக் கடிதங்கள்

---

* டிசம்பர் கிளர்ச்சி. 1825-ல் ஜாரின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து நடந்த கிளர்ச்சி. பண்ணையடிமை முறை ஒழிப்பு, சமநீதி முதலியவற்றுக்காக சிந்தனையாளர்கள் கலைஞர்கள் தலைமையில் மக்கள் கிளர்ந்து எழுந்தனர். டிசம்பர் 24-ல் கிளர்ச்சி வெடித்ததனால் அப்பெயர் பெற்றது. மிகக் கொடுமையான முறையில் ஜார் அதை ஒடுக்கினார்.

எழுதியிருக்கிறார். அவர் இறந்த பின்பும் பல வருடங்களுக்கு எழுதிக் கொண்டிருந்திருக்கிறார்..''

''அந்த வெள்ளம், அது டிசம்பர் கலகத்தைத்தான் குறிக்கிறதா?''

''ஆம், அதிலென்ன ஐயம். டிசம்பரிஸ்டுகளைப் பற்றி புஷ்கின் விரிவான நினைவுக் குறிப்புகளை எழுதியிருக்கிறார். அவற்றில் வெறிபிடித்தவர்போல அவர்கள் முகங்களை வரைந்து தள்ளியிருக்கிறார். அவற்றினூடாக 'நானும் கலந்துகொண்டிருப்பேன்' என்று பலமுறை எழுதியிருக்கிறார். பாவம் புஷ்கின், முகங்கள் அவரை இறுதிவரை துரத்தின...''

''அவர் ஏன் கலந்துகொள்ளவில்லை?''

இளைஞன் உணர்ச்சி மிகுந்த தினறலுக்குள்ளானான். பிறகு குரலை மிகவும் தூக்கி ''ஐயா அவன் கவிஞன். கவிஞன் தன் ஆத்மாவால் மட்டுமே செயலாற்ற முடியும். இரவும் பகலும் தன் கற்பனையில் அப்புரட்சியில் கலந்துகொண்டு குமுற முடியும். ஓராயிரம் முறை சுடப்பட்டும் தூக்கிலிடப்பட்டும் சாக முடியும். சைபீரியாவிற்கு ஒவ்வொருவருடனும் மீண்டும் மீண்டும் நாடு கடத்தப்பட்டுப் பனியில் உறைந்து வதைபட முடியும். அவன் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் அவன் கவிஞன்...''

அவனது திடீர் உணர்ச்சி வேகம் எனக்கு வியப்புத் தரவில்லை. அவன் இயல்பு அது என்று புரிந்து கொண்டிருந்தேன்.

இளைஞன் உடனே கூசியவன்போல உடலைச் சுருக்கிக் கொண்டான். ''இல்லை, ஒருவேளை அவன் கோழையாக இருக்கலாம். இதெல்லாம் வெறும் சாக்குப்போக்குகளாக இருக்கலாம். அவனது கவிதை தன் கோழைத்தனத்தை சொற்களால் நிரப்பும் முயற்சியாக இருக்கலாம். அவனது கவித்துவம் பிரம்மாண்டமானது. ஆகவே அவனது கோழைத்தனமும் மிகப்பெரியதுதான் போலும்...''

''அந்த வெள்ளச் சித்தரிப்பில் புஷ்கினின் ஆவேசம் வெளிப்படுகிறது'' என்றேன். ''குளிர்கால முடிவில் உறைந்த நேவாவின் இறுகிய துயரம் பரவிய மௌனம் விரிசல்விடுகிறது. பனிக்கட்டிகள் உரசி ஒலிக்க அது உறுமுகிறது. காய்ச்சல் கண்டவன் கட்டிலில் புரள்வது போல கலங்கிக் குழம்பி பொங்கிக் கொந்தளிக்கிறது...''

சீறிக் குமிழியிட்டுத் திரும்பிப் பாய்ந்து
தீவுகள் அனைத்தையும் மூழ்கடித்து
ஆறாவெறியுடன் அலையும் மழையும்
எழுந்தன! பொங்கி ஆர்த்தது பேராறு!
கொதிகல நீர்போல குமிழ்த்துத் தளும்பி
கர்ஜித்துப் புகுந்தது நகரத்தின்மீது...

அவன் குரல் ஏதோ பறவைக்குரல்போல கிரீச்சென்று சிறு நடுக்கத்துடன் இருந்தது. அக்குரலில் புஷ்கினின் கொதிக்கும் சொற்களைக் கேட்டபோது என்னுள் மிக ஆழத்தில் இருந்த பல நூறு சுரல்கள் உயிர் கொண்டன.

அந்த வெள்ளத்தினூடாக வெகுதூரம் சென்றுவிட்டேன் போலும். மனச் சித்திரங்களின் அலைகள் அடங்கித் திரும்பும்போது அவன் தன்னில் ஆழ்ந்து அமர்ந்திருந்தான். எனக்கு மிகவும் அபூர்வமாக விடியற்காலையில் விழித்துக்கொள்ளும்போது ஏற்படும் அந்த பிரம்மாண்டமான வெறுமையுணர்வு ஏற்பட்டது. அதைத் தாண்ட பேசியாக வேண்டியிருந்தது. "வெள்ளங்கள் வடியும்; இளம்தோழரே. இளமையில் அதை நாம் அறிவதில்லை" என்றேன்.

"ஆனால் யெவ்கெனி ஒரு சில கணங்களுக்கேனும் வெண்கலக் குதிரைவீரனை நேருக்கு நேராக சந்தித்தான். ஒரு கணமேனும் அவன் பார்வை அந்த ஆணவம் நிரம்பிய வெண்கலக் கண்களைச் சரிய வைத்தது" என்றான் இளைஞன். "ஒரு கணமே ஒரு வரலாறாக ஆக முடியும்..."

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பீட்டர் சதுக்க மூலையில் ராணுவப் பயிற்சிப் பள்ளியின் முகடுக்குமேல் உயர்ந்த சிங்கச்சிலையின் மீது பற்றி ஏறி அமர்ந்துகொண்டிருக்கும் யெவ்கெனியை நான் கண்டேன். அவன் கால் கீழே பிணங்களும் புதைந்த செல்வங்களும் மிதக்கும் பெருவெள்ளக் கொந்தளிப்பு. அலைநாவுகள் சுழன்றெழுந்து அனைத்தையும் நக்கியுண்கின்றன. அவன் அண்ணாந்து பார்த்த அனைத்தும், அவன் முன் தருக்கி எழுந்து நின்றிருந்த அனைத்தும், அவன்கால்கீழே நிராதரவாகச் சிதைந்து கிடந்தன. ஒரே உதையில் அவன் அந்தச் சிவப்பு மாடமுகடுகளை உதைத்துத் தள்ள முடியும். பீட்டர் ஆலயத்தின் கோபுரத்தை எற்றித்தள்ளிவிட முடியும். ஆனால் மனம் பொங்கி எழவில்லை. உவகை உடல் எங்கும் பரவவும் இல்லை. மனம் பதறிக் கொண்டிருந்தது. 'என்ன நடக்கிறது, என்ன நடக்கிறது இங்கே' என்று ஓயாது அரற்றிக் கொண்டிருந்தது. அவனுக்குள் குழம்பிப் பிரிந்து கொண்டிருந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் அவனாலேயே பகுத்தறிய முடியவில்லை. பிற்பாடு ஒவ்வொரு முறை நினைவு கூரும்போதும் அதே குழம்பிய உணர்வுகளின் பிழம்புதான் அவனூடாக கடந்து செல்லும். களைத்த விழிகளைத் திறந்து எதிரே பார்க்கையில் யெவ்கெனி தன் முன்னே வானில் ஆணவத்துடன் எழுந்த அந்த முகத்தைக் கண்டான். வெண்கலக்குதிரைவீரனின் சிலை. அதன்மீது வெள்ளத்தின் குப்பைகளும் கந்தல்களும் சுற்றியிருந்தன. குதிரையின் இடைவரை வெள்ளப்பெருக்கு அறுத்தோடியது. துள்ளி நீரைத்தாண்ட முயல்வது போலிருந்தது அது. ஒரு கணம் யெவ்கெனி திடுக்கிட்டான். பூதவடிவம் கொண்டு பீட்டர் நேரில் வந்துவிட்டதுபோல. பிறகு மனம் அடங்கி சிலையை உற்றுப் பார்த்தான். ஆணவம் நிரம்பிய அம்முகத்தில் அப்போது திகைப்பையும்

சீண்டப்பட்ட கர்வத்தின் சீற்றத்தையும் கண்டான். சூதினையுடை
பாய்ந்து அவன் எக்கணமும் சாலையைத் தாண்டி வரக்கூடும் என்
பட்டது. அந்தக் கண்களையே கூர்ந்து பார்த்தான். அவற்றி
துவேஷமும், அவமானமும், கடும்கோபமும், கொலைவெறியும்,
ஏமாற்றமும் மாறிமாறி வந்தன. ஒருகணம் - ஒரே ஒரு கணம், அந்த
அவற்றில் தெரிந்தது. யெவ்கெனி தன் மனம் துள்ளுவதை, உடல்
பரவசத்தால் நிலைபதறுவதை, உணர்ந்தான். வெற்றிக் கூ
எழுப்பவும், கைகளை வீசி ஆர்த்தெழவும் அவன் விரும்பினான்
எதுவும் செய்ய முடியவில்லை. அதற்குள் அந்த வெண்கலக் கண்களி
ஒரு ஏளனப்புன்னகை ஊறிப் பரவுவதைக் கண்டான். அலட்சியமும்,
கசப்பும், நிந்தனையும் நிரம்பிய புன்னகை. மெதுவாக அப்புன்னகை
யில் ஒரு குரூரம் நிரம்பியது. அதன் பிறகு அதை ஏறிட்டுப் பார்க்க
அவனால் முடியவில்லை.

''நான் உங்களுக்கு மிகவும் சலிப்பூட்டுகிறேனா?'' என்றான்
இளைஞன்.

கண்களைத் திறந்தேன். எனக்குக் கடும் தலைவலி. இரவில் வெகு
நேரம் தனிமையில் குடித்தபடி இருப்பேன். தனிமையில் மதுவுக்கு அந்த
தீவிரம் ஒன்று வந்துவிடுகிறது. அதன்மீதான நமது கட்டுப்பாடுகள்
மறைந்துவிடுகின்றன. அது மௌனமாக, ஒரு கூரிய நீரோடைபோல,
நமக்குள் நுழைந்தேறியபடியே இருக்கிறது. என் தலைக்குள் ஒரு பெரிய
அறை பாழடைந்து தூசி படிந்து கிடக்கிறது. உடைந்த பொருட்கள்.
அவை ஒவ்வொன்றும் நினைவுச் சின்னங்கள். இறந்த காலத்திலுள்ள
பொருட்கள் எல்லாமே மிகமிகக் கனமானவை. தங்கள் கனத்தால் அவை
மேன்மேலும் மண்ணில் அமிழ்கின்றன. அந்த அறைக்குள் எப்போதும்
ஒட்டடை பரவிய இருளும் அமைதியும் நிரம்பியிருக்கும். இரவில்,
இரவில் மட்டும், அவற்றில் ஒரு பொருள் அசையத் தொடங்கும். தட்
தட் என்று முட்டும். கிரீச் கிரீச் என்று ஊசலாடும். உரசும். உருளும். அந்
ஒலியை நிறுத்த முடியாது. பாய்ந்து சென்று எனது வோட்கா சேமிப்பை
எடுப்பேன். அந்த அறைக்குள் வோட்கா நிரம்பத் தொடங்கும். அந்
அத்தனை பொருட்களையும் மூழ்கடிக்கிறது. மெல்லமெல்ல ஓசைகள்
நீரில் மூழ்கி மழுங்குகின்றன. சில உதிரிப் பொருட்கள் மிதந்து
தத்தளிக்கின்றன. காற்று குமிழியிட்டு வெளியேறும் போது என்
உடலின் தத்தளிப்பு அடங்குகிறது. இறுதிக் குமிழியும் வெளியேறும்
போது ஒரு முழுமையை உணர்வேன். அந்த அறை கனத்து மூழ்கும்
கப்பல்போல ஒரு பெரும் கடலில் அமிழ்ந்து அடியாழத்துக்குச் சென்று
மண்ணைத் தொட்டு மெல்ல அசைந்தாடி ஓய்ந்து அமைதியடையும்.
ஆனால் மறுநாள் என் உடம்பெங்கும் வோட்கா நிரம்பிக் கனக்கும். கண்
தாங்காது நரம்புகள் தெறிக்கும். அந்தக் கண்கூசும் காலை நேரத்து
வலியையும் சோர்வையும் அப்போது பல மடங்கு தீவிரமாக
அடைந்தேன். ஆனால் இதை எப்படியும் இந்த இளைஞனிடம் கூற
முடியாது. இளைஞர்களுக்கு மது என்பது வேறு ஒரு திரவம். வெறுமே
பெருமூச்சு விட்டேன்.

''என்ன எண்ணிக் கொண்டிருந்தீர்கள்'' என்று அவன் கேட்டான்.

''வெள்ளம் இறங்குவதன் வெறுமையைப் பற்றி'' என்றேன்.

''வண்டல், அழுகிய பிணங்கள், சேற்றுடன் மட்கும் பொருட்கள், இடிபாடுகள்... மிக விரைவில் எல்லாம் உலர்ந்துவிடும். நதி தன் எல்லைகளுக்குள் அடங்கி ஏதும் நிகழாதது போலப் போகும். நம் கண்முன்பே நம் நினைவுகளும் உலர்ந்து வரலாறாக மாறும். வரலாறு எப்போதும் நம்முள் ஆழ்ந்த அவநம்பிக்கையைத் தூண்டுவதாகவே உள்ளது. வெள்ளம் நிலைத்திருக்காது, நிலைத்திருக்க முடியாது. எஞ்சுவது சுவர்களில் ஏற்பட்ட வெள்ள விளிம்பின் சேற்றுக்கோடுகள். இதுவரைக்கும் வெள்ளம் வந்தது தெரியுமா என்று நமக்குநாமே சொல்லிக்கொள்ளலாம். அதைக் கற்பனைசெய்து எவையெல்லாம் மூழ்கின என்று கணக்கிட்டு வியப்பும் துயரமும் கொள்ளலாம். வெள்ளம் என்றால் என்ன? ஒரு நிலைதடுமாற்றம். ஒரு களியாட்டம், ஒரு பைத்தியப் பீறிடல்... அதற்குமேல் ஏதுமில்லை...''

''வெள்ளம் வடிந்தபிறகு யெவ்கெனி தன் காதலியின் சேரிக்கு அவளைத் தேடிப் போகும் சித்திரம் மிகவும் துக்ககரமானது'' என்றான் இளைஞன்.

இங்கிருந்தது அவள் குடிசை அன்று
இங்கே முகப்பு, இங்கே வாசல்
இங்கே இருந்தது இனியவள் வீடு!
பெருவெள்ளம் அழித்தது அனைத்தையும்...

குமட்டலில் உடல் உலுக்குவதுபோல என் உள்ளிருந்து ஓர் அதிர்வுடன் துக்கம் எழுந்தது. உதடுகளைக் கடித்து இறுக்கி, மூச்சின் சக்தியால் விம்மலை உள்ளே அழுத்தி, வெடிக்கப் போகிறவன்போல அமர்ந்திருந்தேன். என் முயற்சியை மீறி சிறுகேவல் ஒலி வெளியேறி விட்டது. அதைக் கேட்ட மறுகணம் என் தடைகள் தகர்ந்தன. கண்ணீர்த் துளிகள் பொலபொலவென உதிர்ந்தன. என்னைச் சுற்றி வெண்ணிற மூடுபனியின் திரை சூழ்ந்து அமைத்த தனிமையில் வெகுநாட்கள் – வருடங்கள் – கழித்து நான் முழுமையாக அழுது தீர்த்தேன்.

நடந்த அழிவின் சுவடுகள் இல்லை.
நோயிறின் செம்மைக்குள் மறைந்திருந்தது
நாளின் கொடுமை. பழைய போக்கில்
நடந்தன எல்லாம். திறந்த தெருக்களில்
பற்றின்றி நடந்தனர் பெருநகர் மனிதர்.

அவனது குரலுடன் என் மனமும் துல்லியமாக இணைந்துகொண்டு அப்பாடலாகத் தன்னை உணர்ந்தது. யெவ்கெனி பித்துப் பிடித்தவன் ஆனான். தன் உடைமைகளையெல்லாம் உதறி நகரத் தெருக்களில் அலைந்தான். அந்த வரிகளின் நடுவிலிருந்து ஒருசொற்றொடர் மட்டும் வாளெனக் கிளம்பி என்னைப் பிளந்தது.

"ஏதோ கொடுங்கனவு வதைத்தது அவனை"

அதிர்ந்து போய் எழுந்துவிட்டேன். அவன் திகைப்புடன் பாடலை நிறுத்தினான். பதற்றத்தைத் தணிக்க சிலசுவடுகள் முன்னும் பின்னும் நடந்தேன். நேவாவின் பனிப்பாள வெளிமீது சாம்பல் நிற ஊனமை ஒளி பரவிக் கிடப்பதைப் பார்த்து நின்றேன்.

"அந்த பித்துபிடித்த மீனவ இளைஞனை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா" என்றான் இளைஞன்.

"யார்?"

"அது புஷ்கின் அன்றி வேறு யாராக இருக்க முடியும்? என்னால் அதைத் துல்லியமாகப் பார்க்க முடிகிறது. இரவெல்லாம் தூங்காது தவித்து, மனவலியும் குடிவெறியுமாக அவர் இங்கு வருகிறார். குளிர்காலக் காலையில் ஆள் நடமாட்டமில்லாது வெறித்த சதுக்கத்தில் நடந்து இந்தச் சிலைமுன் வந்து நிற்கிறார். டிசம்பர்க் கலகக்காரர்களின் மரணச்செய்திக்கு நகரம் பழகி விட்டிருக்கிறது. அச்சம் ஆழ்ந்த அமைதியாக மாறுவேடமிட்டு நகரைத் தழுவியிருக்கிறது. இந்த வெண்கலக்குதிரைவீரன் முன் அனாதையாக, நசுக்கப்பட்டவராக, மிச்சமின்றி அவமானப்படுத்தப் பட்டவராக புஷ்கின் நின்றார்."

வெண்கலக்குதிரைவீரனை ஏறிட்டுப் பார்த்தான் யெவ்கெனி. குதிரையின் தூக்கிய குளம்புகளுக்கு கீழே நகரம் சுருண்டு தூங்குவதைக் கண்டான். திடீரென்று அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. குதிரையின் வெண்கலச் சருமம் சிலும்பியது. அதன் வால் குலுங்கியது. பிடரி மயிர் சிதறி அசைய அது தலை தூக்கியது. சடேரென்று சாட்டை அவன்மீது பாய்ந்தது. குளம்புகள் அவன்மீது விழுந்தன. அவன் மார்புமீது ஏறி மிதித்துத் துவைத்தபடி ஓடின குதிரைகள், குதிரைப் படைகள், ஆண்டுகள், நூற்றாண்டுகள்... அவை ஓடிக் கொண்டேயிருந்தன.

அஞ்சி நடுங்கிய பித்தன் நகரத்தெருக்களில் அலறியபடி ஓடினான். வெண்கலக்குதிரையின் பேருருவம் அவனைத் துரத்தியது. நகர்த்தின் சந்துகள் எதிலும் அவனால் பதுங்க முடியவில்லை. பாய்ந்து நேவாவில் குதித்தான்.

நேவாமீது காற்று மூடுபனியை நுரைபோல அள்ளி மேற்குதிசை நோக்கி ஒதுக்கியது. பனிப்பாளங்கள் ததும்பி அசைய நதி தேங்கி நின்றது.

வெறிச்சிட்டுத் தகர்ந்த பாழ்வீடு.
அதன் வாசலில் விழுந்து கிடந்தான்
வறிய பித்தன் பிணமாக.
வழிப்போக்கர் அடக்கினர் அவனை

புஷ்கின் கவிதையை அவன் கூறி முடித்தான். அந்த வரி மீண்டும் பலமுறை என்னுள் ஒலித்து ஓய்ந்தது. நீண்ட மௌனத்தில் இருவரும் இணைந்து வெகுதூரம் சென்றோம்.

பிறகு நான் விழித்துக்கொண்டு "நன்றி! நான் கிளம்ப வேண்டும். வெகு நேரமாயிற்று" என்றேன்.

"நானும் நன்றி சொல்ல வேண்டும். இந்தக் கவிதையும் நானும் உங்களுக்காக வெகு நாட்களாகக் காத்திருந்தோம் இங்கே."

எனக்கு மின்னலைப் பார்த்தது போலிருந்தது. அதிர்ந்தபடி ஒரு கணம் நின்றபின் கைகளை மௌனமாக நீட்டினேன். அவன் தன் குளிர்ந்த மெல்லிய விரல்களால் என் கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

தனித்த குளிர்ந்த சாலையில் கனமான காலடிகளுடன் நடக்கும்போது எண்ணங்களின் முடிச்சுகளைத் தவிர்க்க விரும்பினேன். புரிந்துகொள்ள முடியாதவைகளிலிருந்து விலகிவிடுவதையே இத்தனை வருடங்களில் நான் பயின்று வருகிறேன். பாதையின் பனிபடர்ந்த பரப்பின் கற்சதுரங்கள் மிதக்கும் நேவாப் பனிப்பாளங்கள் என்ற பிரமை தந்தன. ஒன்றிலிருந்து இன்னொன்றுக்காகக் காலைத் தூக்கிவைத்து உடலை சமநிலைப்படுத்தியபடி சென்றுகொண்டிருந்தேன். வெகுதூரம் அப்படி வந்துவிட்டேன் என்று பட்டது. ஏதோ ஒரு பனிப்பாளத்தில் என் பெயர் எழுதப்பட்டுள்ளது. அது என் கால் படுவதற்காகக் காத்திருக்கிறது. குளிர்ந்து, பொறுமையின்றி அசைந்தபடி. ஏன் நேற்றிரவு நான் தூங்கவில்லை? ஏன் என் பழைய கடிதங்களையெல்லாம் படித்தேன்? ஏன் மீண்டும் மீண்டும் தூங்கும் அன்னாவின் குழந்தை முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன்? ஏன் அவனை நினைவு கூர்ந்தேன்? நேவாவின் இந்தக் கரையில்தான் பூமியில் நிலைகொள்ளாத கால்களுடன், உடலெங்கும் எம்பும் உத்வேகத்துடன், அவன் தன் வாழ்வின் மிகச் சிறந்த தருணங்களைச் செலவிட்டிருந்தான். பெரும்காற்று ஒன்று ஒவ்வொருவரையும் சுழற்றியடித்த அந்தக் காலகட்டம். இப்போது அது வரலாறு. முற்றிலும் உண்மையே ஆயினும் வரலாறு ஒருபோதும் நம்புவதற்குரியதல்ல. ஆம், நான் இங்கு வந்தது அதற்காகத்தான். ஏனெனில் கடுங்குளிரின் சீற்றலை நான் அறிய ஆரம்பித்திருந்தேன், மிகுந்த அச்சத்துடன் என் ஆத்மாவில்....

என்மீது கவிந்து பரவிய நிழலை அறிந்தேன். அது என்னைப் பின் தொடர்வதை உணர்ந்தேன். வெண்கலக் குதிரைவீரனின் நிழல்.

◆

3

பனிக் காற்று *

எம். வீரபத்ரபிள்ளை, பி.ஏ.

அரங்கு: பழமையான பெரிய ரஷ்ய வீடு ஒன்றின் முகப்பு அறை. வெளியேயிருந்து உள்ளே வர ஒரு வாசல். சமையலறைக்கும் பிற அறைகளுக்கும் போக இன்னொரு வாசல். நடுவே செங்கல்லால் கட்டப்பட்ட வளைவான கணப்பு. அதில் தீ எரிந்தபடி இருக்கிறது. கணப்புக்குமேல் வெப்ப மேடை. அதற்கு மேல் புத்தக அடுக்கு. அரங்கில் ஒரு பழங்காலத்து மேஜை. அதன்மீது சமோவார். நிலக்கரியில் எரிந்து புகைவிடுகிறது அது. வெள்ளியாலான பெரிய மெழுகுவர்த்தி பீடம்மீது இரு சுடர்கள். சாய்வு நாற்காலிகள் இரண்டு. தோலுறையுடன் ஒரு தூங்கு நாற்காலியில் கம்பளிப் பின்னலாடை அணிந்த பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தி (அன்னா) அமர்ந்து படித்துக் கொண்டிருக்கிறாள். வெளியே பனிக்காற்று வீசும் ஒலியும் பனிக்கட்டிகள் உதிரும் ஒலியும் கேட்டுக்கொண்டிருக்கின்றன. சுவர்மீது ஏசுவின் வெள்ளிச்சிலைமீது மங்கிய ஒளி.

சமையலறையிலிருந்து நடுத்தர வயதுள்ள ஒரு மாது (அம்மா) மெல்ல வருகிறாள். இளம் பெண் ஏறிட்டுப் பார்க்கிறாள்.

அம்மா: இன்னமும் தூங்காமல் இருக்கிறாயா? இப்போது நேரம் என்ன இருக்கும் என்று நினைக்கிறாய்?

அன்னா: இல்லை. எனக்கு என்னவோ வந்துவிடுவார் என்று ஓர் எண்ணம்.

அம்மா: *(மெல்ல ஒரு நாற்காலியில் அது கிரீச்சிடும்படியான கனத்துடன் அமர்ந்து)* இந்தப் பனிக் காலம்! இதுபோல பார்த்ததே இல்லை. கடவுள் நமது தேசத்தை சாத்தானுக்குத் தந்துவிட்டது போல.

அன்னா: *(திடுக்கிட்டு)* என்ன பேசுகிறாய் அம்மா? *(நான்கு பக்கமும் பார்த்து)* நீ இன்னமும் வார்த்தைகளைக் கட்டுப்படுத்தக் கற்கவே இல்லை. இப்படித்தான் அனைவரிடமும் பேசுகிறாயா?

அம்மா: *(பரிதாபமாக)* பனிப்பொழிவைச் சொன்னேன்.

* கைப்பிரதியில் உள்ள இந்த நாடகம் பிரசுரமானதாகத் தெரியவில்லை. தருவதற்கான தடயங்கள் உள்ளன. மூலம் தெரிய வரவில்லை.

அன்னா: (கடுமையாக) நீ எதைச் சொன்னால் என்ன? ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேசு.

அம்மா: பனியின் கடுமையைப் பற்றிக் கூட நாலுவரி சொல்ல முடியாது என்றால்....

அன்னா: அம்மா அம்மா! (சலிப்புடன்) உனக்கு சொல்லிப் புரிய வைக்க முடியாது.

அம்மா: என்ன தெரியும்? (பெருமூச்சுடன்) மாபெரும் அக்டோபர் புரட்சியின் போது உனக்கு மூன்று வயது. உன் தந்தை போர் முனைக்குப் போய் இரண்டு வருடம் ஆகிவிட்டிருந்தது. கடிதம் இல்லை. கையில் பணம் இல்லை. யாருமே துணை இல்லை. இந்த வீடு குளிரில் உறைந்தது அப்போதுதான். நானே குறுங்காட்டுக்குப் போய் விறகு சேகரித்து வருவேன். இந்த அறையை மட்டும் சூடுபடுத்திக்கொண்டு இரவும் பகலும் இங்கேயே இருப்போம். அய்யோ அந்தக் காலம்! இந்த வீட்டின் பிற அறைகள் விறைத்துப் போய்விடும். அங்கிருந்து எலிகளும் பூச்சிகளும் எல்லாம் இங்கு வந்துவிட்டன. அப்போது உன் பாட்டி இருந்தாள். அவளுக்கு எப்போதும் ஒரு சீமாட்டியின் தோரணை உண்டு. அப்படி வளர்க்கப்பட்டவள். கடைசிவரை புரட்சி என்று ஒன்று நடந்ததை அவள் புரிந்துகொள்ளவேயில்லை. சக்கரவர்த்திக்கு விசுவாசமான பிரஜையாக இருந்து மறைந்தாள். கேட்கிறாயா கதையை?

அன்னா: நான் எதையும் கேட்கும் மனநிலையில் இல்லை அம்மா.

அம்மா: பின்னே இந்தப் பனியில் பேசாமல் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?

அன்னா: படித்துக் கொண்டிருக்கிறேன், பார்க்கவில்லையா?

அம்மா: அதே புத்தகங்கள். எத்தனை முறை திருப்பித் திருப்பிப் படிப்பாய்?

அன்னா: நீ சொன்னதுகூட ஆயிரம் முறை திருப்பித் திருப்பி சொன்ன விஷயங்கள்தான்.

அம்மா: ஆனால் அதுபோன்ற அனுபவங்களை எத்தனை முறை சொன்னாலும் தீருமா? ஒவ்வொரு முறை சொல்லும்போதும் புதிது புதிதாக விஷயங்கள் ஞாபகம் வருகின்றன. அப்பாடா! இனி அது போன்ற நாட்கள் வராது என்று எண்ணும்போது ஏற்படும் ஆசுவாசம் இருக்கிறதே, அதுவே எல்லாத் துன்பத்தையும் சிறியதாகச் செய்துவிடும். குளிர், பசி, தனிமை, பயம், நம்பிக்கையின்மை... அப்பப்பா! எண்பது நாட்கள்! என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றே யாருக்கும் தெரியாது. விதவிதமான கதைகள். செம்படைகள் குளிர்கால அரண்மனையைத் தாக்கின, ஜார் கொல்லப்பட்டுவிட்டார் என்று ஒரு செய்தி. பிறகு செம்படைகளை வெண்படை மிச்சமில்லாமல் அழித்துவிட்டது என்று இன்னொரு செய்தி. மிகாயெலெவ்னா கிழவி பயங்கரமான கதை ஒன்று

சொன்னாள். கொல்லப்பட்ட செம்படையினரின் உடல்களை மலைமலையாக குவித்திருக்கிறார்களாம். பீட்டர் சக்கரவர்த்தி செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை உருவாக்கியதுபோல அந்த உடல்களை சதுப்பில் கொட்டி, மண் மூடி நிரப்பி, புதிதாக நிகலாய்ஸ்பர்க் என்ற ஒரு புது நகரத்தை ஜார் நிர்மாணிக்கப் போகிறாராம். அழக்கூட முடியவில்லை. கடுங்குளிர் மனதையும் எண்ணங்களையும் உறைய வைத்திருந்தது.

அன்னா: *(கிண்டலாக)* ஆ, இந்த வரி புதியது.

அம்மா: *(உதாசீனம் செய்து)* பிறகு கொலைகளும் கொள்ளைகளும் தொடங்கின. குடியானவர்களும் பொறுக்கிகளும் தெருவெல்லாம் ஆட்டம் போட்டார்கள். வீடுகளைச் சூறையாடினார்கள். பெண்களைப் பிடித்துக் கொண்டு போனார்கள். நாங்களெல்லாம் வீட்டை விட்டுவிட்டுக் கூட்டம்கூட்டமாக தேவாலயத்துக்குப் போய் அங்கு குடியேறினோம். அங்கு விறகு இல்லை. ரொட்டி ரொம்பக் கொஞ்சமாகத்தான் இருந்தது. மரச் சாமான்களை எரித்தோம். உலர்ந்த ரொட்டியும், இனிப்பில்லாத தேயிலை நீரும் மட்டும்தான் உணவு. பத்து நாள் கழிந்து உன் அப்பா வந்தார். இளவேனில் வந்தது போலிருந்தது. எங்கும் திடீரென ஒளி வந்துவிட்டதுபோல. புரட்சி வென்றுவிட்டது. செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மாளிகையில் செங்கொடி பறக்கிறது என்றார் உன் அப்பா. சித்தம் பிசகியவர்போல இருந்தார். பாடினார். என்னையும் உன்னையும் கிழவியையும் மாறிமாறி முத்தமிட்டார். திடீரென அழுதார். திடீரென நடனமாடினார். எவ்வளவு ஆனந்தம்! கிழவிக்கு எதுவும் புரியவில்லை. இருந்தாலும் சீமாட்டி பாவனையில் கம்பீரமாக "நமது தந்தை ஜாரின் வெற்றிக்காக நீ ரத்தம் சிந்தியது எனக்கு பெருமை யளிக்கிறது மகனே" என்று சொன்னாள். நாடகபாணிதான்! ஒரே சிரிப்பு அன்று. கேட்கிறாயா?

அன்னா: சொல்லு.

அம்மா: வீடு திரும்பும்போது வழியெல்லாம் உடைசல்கள். சில இடங்களில் பிணங்கள். வீட்டை உடைத்துச் சூறையாடியிருந்தார்கள். இந்த அறையெல்லாம் எலிகள் செத்துக் கிடந்தன. நூற்றுக்கணக்கான எலிகள். உன் அப்பா சிரித்தபடி புரட்சி பதுங்கும் எதிரிகளுக்கு விஷம் என்றார். புரட்சிக்குப் பிந்தைய மாஸ்கோ தெரு போலிருக்கிறது என்றார். சின்றுவிட்டது.

அன்னா: *(எழுந்து வாசல் வழியாகப் பார்த்து)* மழை நின்றுவிட்டது. பனிக்காற்றும் இல்லை.

அம்மா: ஆனால் இதுபோன்ற குளிர் எப்போதுமே வந்ததில்லை. குதிரைக்குளம்புகள்கூட வெடித்துப் பிளந்து போகும் குளிர்.

அன்னா: எங்கு போனார் என்றே தெரியவில்லை.

அம்மா: அவர் பெரிய பதவியில் இருக்கிறார். ஏராளமான அலுவல்கள் இருக்கும்.

அன்னா: மாலைக்குள் வருவதாக உறுதி சொன்னார்.

அம்மா: உனக்கு அளித்த வாக்குறுதிக்காக அவர் அனைத்தையும் உதறிவிட்டு வர முடியுமா?

அன்னா: *(சட்டென்று விசும்பி)* எனக்கு புரியவில்லை அம்மா.

அம்மா: இப்போது அழு. *(தாழ்ந்த குரலில்)* அப்போதே சொன்னேன். இது உனக்குப் பொருத்தமில்லாத திருமணம் என்று. உன் அப்பாவின் தோழர். உன்னைவிட இருபது வயது மூத்தவர். வாழ்வின் பாதிப்பங்கைப் போர்க்களத்திலும் கிராமங்களிலும் கழித்தவர். கேட்டாயா? *(மனக்குறையுடன்)* உன் கண்ணை மறைத்தது அவருடைய பதவி.

அன்னா: ஆயிரம் தடவை சொல்லிவிட்டேன் அம்மா, அவரது பதவியல்ல என்னைக் கவர்ந்தது. *(அழுத்தமான குரலில்)* அவர் நம் தேசத்தின் மகத்தான வீரர்களில் ஒருவர். லெனினுக்கும் ட்ராட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும் நண்பர். மாபெரும் சிந்தனையாளர்.

அம்மா: கவனமாக இரு என்று என்னைச் சொல்லிவிட்டு இப்போது நீயே ட்ராட்ஸ்கி பெயரைச் சொல்கிறாய்.

அன்னா: *(குழம்பி முகம் சிவந்து)* கத்தாதே அம்மா.

அம்மா: உன் கணவர் மிகவும் பெரிய மனிதர். கட்சியில் மிகப் பெரிய பதவி. நிர்வாகத்தில் மிகப் பெரிய பொறுப்பு. அவருடைய மனைவியாக இருப்பது சாதாரண விஷயமில்லை. நீ சிறிய பெண்.

அன்னா: *(முகம் மலர்ந்து)* ஆம், ஆனாலும் அவர் மனைவி நான்! *(வெடுகத்துடன்)* அவர் மனம் ஒரு சிறுவனைப்போல காதல் நிரம்பியது அம்மா. என்னை விரும்பியிருந்த நாட்களில் அவருடைய பரபரப்பும் பரவசமும் நிரம்பிய நடத்தைகள் எவ்வளவு விசித்திரமாக இருந்தன தெரியுமா? ஒரு நாள் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தோம். புஷ்கினின் ஒரு காதல் கவிதையின் சில வரிகளைச் சொல்லியபடி ஒரு மலரைப் பறித்து என்னிடம் தரவிரும்பித் திரும்பினார். மலர்களில் எதைப் பறிப்பது என்று தெரியாமல் கவிதையைச் சொல்லியபடியே கடுமாறினார். இப்போது நினைத்தாலும் சிரிப்பாக வருகிறது.

அம்மா: காதலின் இன்பம் எல்லாம் சில நாட்களுக்குத்தான்.

அன்னா: அது உன் அனுபவம். *(கோபமடைகிறாள்)*

அம்மா: *(பெருமூச்சுடன்)* புரட்சிக்குப் பின்னால் வந்த அந்த இன்பமான களிவெறி மிகுந்த சில நாட்கள். அதுபோலத்தான் காதலும்.

அன்னா: காதலின் வசந்தம் முடிவதேயில்லை அம்மா.

மாது: எனக்கு கவிதையெல்லாம் புரிவதில்லை.

அன்னா: வந்துவிடுவார். *(பெருமூச்சுடன் படிக்க ஆரம்பிக்கிறாள்)*

அம்மா: நீ காத்திரு. உனக்கு அதுவேகூட காதலின் இன்பமாகத் தோன்றும். எனக்குத் தூக்கம் வருகிறது. *(மகளை முத்தமிடுகிறாள்)* நல்லிரவு கண்ணே. காலையில் பார்ப்போம். *(போகிறாள்)*

(மௌனம் அறையில் நிரம்புகிறது. கடிகாரம் மட்டும் ஊடாக ஒலிக்கிறது. அன்னா கணப்பைத் தூண்டுகிறாள். சற்று நேரம் கழித்து எழுந்து கவிதையொன்றை உரக்கப் படிக்கிறாள்.)

சகோதரர்களே நாம்
சுதந்திரத்தின் விடி வெளிச்சத்தைப் பாடுவோம்!
பனியின் உறைவிலிருந்து மீளும்
ஒவ்வொரு பறவைக்கும் தெரியும்
ஒளியே விடுதலை என்று.
அவை தங்கள் ஆத்மாவைப் பாடலாக்கிப்
பாடுவதைக் கேட்போம்
விடுதலையே ஆனந்தம்.

அன்னா: ஆசிப்! பார்க்க எப்படி குழந்தை மாதிரி இருக்கிறார். ஆனால் சொற்கள் வழியாக ஒளிமிக்க வானத்தில் பறந்தெழ முடிகிறது அவரால். ஆசி பெற்ற மனிதன். பூமியின் கோடிக்கணக்கான மனிதர்களில் இருந்து ஒளி தனக்கென அவரைத் தேர்ந்துகொண்டிருக்கிறது.

(வெளியே கார் நின்று, கதவு திறந்து மூடி, கிளம்பும் ஒலி)

நிகிதா! *(புத்தகத்தைப் போட்டுவிட்டு முகப்புக்கு ஓடுகிறாள். வெளியே அவளுடைய உற்சாகமான குரல்)* **நிகிதா உங்களுக்காக எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது?**

(இருவருமாக மேடைக்கு வருகிறார்கள். நிகலாய் இவானோவிச் புகாரின் களைத்திருக்கிறார். நாற்காலியில் தொய்ந்து அமர்கிறார். நாற்பது வயதானவர். கன்னத்தில் கிருதா மயிர் நரைத்திருக்கிறது. கூரிய மூக்குடன் கூடிய ஒல்லியான முகமும், சிறிய உடலும் கொண்ட மனிதர். கவலை அவரை அழுத்தியிருப்பது தெரிகிறது.)

புகாரின்: நீ தூங்க வேண்டியதுதானே?

அன்னா: நீங்கள் வருவதாகச் சொன்னீர்கள்.

புகாரின்: மத்தியக்குழு கூட்டம் நடந்தது.

அன்னா: அது காலையில்தானே?

புகாரின்: இப்போதுதான் முடிந்தது.

அன்னா: இவ்வளவு நேரமா?

புகாரின்: அன்னா மிகாயெலெவ்னா உனக்குச் சொன்னால் புரியாது *(கண்களை மூடி தளர்த்திக் கொள்கிறார்.)*

அன்னா: சாப்பிட்டீர்களா?

புகாரின்: ஆம்.

அன்னா: டீ சாப்பிடுகிறீர்களா?

புகாரின்: (குழம்பி) என்ன?

அன்னா: டீ. (உற்றுப் பார்க்கிறாள்)

புகாரின்: கொடு.

(அன்னா சமோவாரில் இருந்து டீயை கோப்பையில் ஊற்றித் தருகிறாள். புகாரின் மெதுவாக உறிஞ்சுகிறார்)

அன்னா: இப்போதுதான் ஆசிப்பின் கவிதையைப் படித்தேன்.

புகாரின்: (கவனிக்காமல்) சரி.

அன்னா: ஒளிரும் சொற்கள். ஏன் ஆசிப் இப்போது வருவதேயில்லை?

புகாரின்: (திடுக்கிடுகிறார் கோப்பை சரிந்து டீ சிதறுகிறது எட்டிப் பிடித்து மெல்லவைத்துப் பதற்றத்தை அடக்க முயல்கிறார்) ஆசிப்பா?

அன்னா: என்ன ஆயிற்று உங்களுக்கு? ஆசிப்பைப் பற்றிக் கேட்டேன். ஆசிப் மான்டல்ஸ்டம். கவிஞர்.

புகாரின்: (நடுங்கும் கரங்களை உரசி, கன்னத்தில் சேர்த்தபடி) அன்னா! (நடுங்கி) உன்னிடம் ஒரு விஷயம் கூற வேண்டும்.

அன்னா: (சட்டென்று பீதியடைந்து) ஆசிப்! (பயத்தை சிறு அலறல் போன்ற ஒலியாக வெளியிட்டு) என்ன ஆயிற்று அவருக்கு?

(புகாரின் மௌனமாகத் தலைகுனிகிறார்)

அன்னா: (புகாரினைப் பற்றிக் குலுக்கி) நிகிதா, என்ன ஆயிற்று ஆசிப்புக்கு?

புகாரின்: (நடுங்கிய தளர்ந்த குரலில்) தெரியவில்லை.

அன்னா: அப்படியென்றால்?

புகாரின்: அவரை ரகசியப் போலீஸ் கூட்டிச் சென்றதாக தகவல், விசாரணைக்காக.

அன்னா: பிறகு?

புகாரின்: நாற்பது நாளாகிறது.

அன்னா: (மனமுடைந்து விம்மியழுகிறாள் அழுகையினூடாக) ஆசிப்... ஆசிப்... ஒரு குழந்தை மாதிரி...

புகாரின்: (குற்றஉணர்வு தோன்ற) ஒன்றும் ஆகியிருக்காது. விசாரணைக் கைத்தான்...

அன்னா: உங்களுக்குத் தெரியாதா? இன்று இந்த நாட்டில் விசாரணை என்றால் என்ன அர்த்தம் என்று தெரியாதவரா நீங்கள்?

புகாரின்: ஆம், நான் என்ன செய்வது?

அன்னா: உங்களுக்கு வெட்கமாக இல்லையா இப்படிக் கூற? நீங்கள் இந்த தேசத்தின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களில் ஒருவர். உயர்மட்டக் குழு உறுப்பினர்...

புகாரின்: எல்லா மனைவியரும் கணவர்களைப்பற்றி மிகையான எண்ணம் வைத்திருக்கிறார்கள். (எழுந்து) எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது...

அன்னா: நிகிதா! (கோபத்துடன்) நிகிதா, எப்படி உங்களால் இப்படி இருக்க முடிகிறது? எப்படி ஆசிப்பைக் கைவிட முடிகிறது? இந்த அறையில் அவருடன் எத்தனை இன்பமான பொழுதுகள் கழிந்திருக்கின்றன. உங்களிடம் குழந்தை போன்ற பரபரப்புடன் அவர் பேசுவதும், கண்ணீர் வழியக் கவிதை பாடுவதும் இப்போதுகூட என் கண்களைவிட்டு அகலவில்லை.

புகாரின்: (திரும்பி அமர்ந்து) நான் இன்று 'அவனிடம்' பேசினேன்.

அன்னா: யாரிடம்?

புகாரின்: (ஆவேசமடைந்து) யாரிடமா? அந்திக் கிறிஸ்துவிடம், செங்கிஸ்கானிடம், சக்ரவர்த்தி பீட்டரிடம்...

அன்னா: (முச்சை இழுத்து) மெதுவாக...

புகாரின்: இனிமேல் மெதுவாகப் பேசிப் பயனில்லை அன்னா. பேச வேண்டியதையெல்லாம் பேசிவிட்டேன்.

அன்னா: (நடுங்கி) நேரிலா?

புகாரின்: ஆம்; நேரில்.

அன்னா: அய்யோ! (தலையைப் பிடித்துக்கொள்கிறாள்.)

புகாரின்: ஆசிப்பைப் பற்றிப் பேசலாம் என்றுதான் போனேன்.

அன்னா: என்ன சொன்னார்?

புகாரின்: மிக நிதானமாக, மிகவும் நட்பார்ந்த முறையில் அமர்ந்து சொன்னார். எனது புகார்களைப் பொறுமையாகக் கேட்டார். குறிப்புகள் எடுத்துக் கொண்டார். தவறு ஏதாவது நடந்திருக்குமெனில் உடனடியாகக் களையப்படும் என்றார். அன்னா, சாத்தானுக்கு மதம் மிகவும் குரூரமையானது என்பார்கள்.

அன்னா: பொறுமையாகக் கேட்டார் என்றீர்கள்.

புகாரின்: ஆம். ஆனால் அந்தச் சிறு கண்களில் எனக்குத் தெரியாத, என்னால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாத ஒன்று இருந்தது.

அன்னா: எல்லாம் உங்களுடைய பிரமை.

புகாரின்: (சற்று நிதானமடைந்து. தீர்மானத்திற்கு வந்து) அன்னா, உனக்கு இப்போது கட்சியில் என்ன நடக்கிறது என்று தெரியாது. உன்னைப் பயமுறுத்த வேண்டாம் என்று நான் எதையும் கூறவில்லை.

அன்னா: (திடமாக அமர்ந்து) சொல்லுங்கள்.

புகாரின்: உன் தைரியத்தின் மேலும் பொறுமையின் மேலும் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு. உன்னைப்பற்றி எண்ணும்தோறும் நீ மிகமிக ஆழமானவள் என்று தோன்றியபடியே உள்ளது. அறிவுஜீவி களும், ராஜதந்திரிகளும், தளபதிகளும் தோற்கடிக்கப்பட்டார்கள். (தலையைப் பற்றியபடி) வினோதமான மன உத்வேகம். எப்போதும் இத்தகைய மன ஒட்டங்களை நான் பொருட்படுத்தியதில்லை. (தலையை உலுக்கி. தினறி) அன்னா, நீ ரஷ்யப் பெண் குலத்தின் பிரதிநிதிபோல. கடவுளே எத்தனை செயற்கையான சொற்கள்... இல்லை அன்னா (எழுந்து) உன்னை மட்டும் தோற்கடிக்க முடியாது. உன் முன்னால் மட்டும் வரலாறு மண்டியிடும். நீ அழிய மாட்டாய். இந்தப் பனிக்காலத்தை நீ தாண்டிவிடுவாய். புதிய இளவேனில் காலத்தைக் காண்பாய். (உணர்ச்சி உத்வேகத்தால் அறையைச் சுற்றிவந்து. குரல் உயர) நீ... நீ யார் தெரியுமா? கடவுளே, எத்தனை தெளிவாக இருக்கிறது. உன்னைத்தான் தஸ்தயேவ்ஸ்கியும் தல்ஸ்தோயும் சித்தரித்தார்கள். நீ தான் நடாஷா, சோனியா, நெல்லி, கிட்டி... நீ ஒருபோதும் தருக்கங்களால் மனசாட்சியை மூடுவதில்லை. சுயநலத்தாலும், அச்சத்தாலும் உள்ளார்ந்த மாண்புகளை விட்டுவிடுவதில்லை. உன்னில் ஆத்மா ஒரு போதும் உலர்ந்து போவதில்லை. ஏனெனில் நீ, நீங்கள், விளை நிலங்கள். எங்களைப்போல உடனடியாக எரிந்து தீர்ந்துவிடுபவர்கள் அல்ல. முடிவற்ற தலைமுறைப் பிரவாகத்தின் விதைகள் உங்கள் அடிவயிறு களில் உறங்குகின்றன. அவர்கள் எழுவார்கள். அவர்களை பனி ஏதும் செய்யாது. அவர்கள் எழுகையில் இந்த உறைபனிப் பாளங்கள் வெடிக்கும். நாளை... (கண்ணீர்விட்டு) எத்தனை தெளிவாக இருக்கிறது எல்லாம். எத்தனை நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. திசைதவறி பனிவெளியில் அகப்பட்டவன் உதயம் ஒளிரும் மலைச் சிகரங்களை நிமிர்ந்து பார்ப்பது போலிருக்கிறது.

அன்னா: (ஆழ்ந்த நிதானமான குரலில்) கட்சிக்குள் நிகழும் விஷயங்களைக் கூற முன்வந்தீர்கள்.

புகாரின்: ஆம். (அமைதியாகி) அன்னா கட்சிக்குள் இப்போது நீ நினைப்பதுபோல நான் முக்கியமான இடத்தில் இல்லை. நான் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விலக்கப்பட்டுவிட்டேன். காலும் ரிகோவும், காம்ஸ்கியும், பாப்பா காலினினும் கட்சியில் இப்போது எந்தப் பொறுப்பிலும் இல்லை.

அன்னா: ஏன்?

புகாரின்: புதிய பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட்டதும் எங்களுக்கு வேலையில்லை என ஆயிற்று. மத்தியக் கமிட்டியில் தொடர்ந்து அதை வலியுறுத்தினோம். ஆனால் அவனுக்கு மத்தியக் கமிட்டி ஒரு பொருட்டே அல்ல. புதிய பொருளாதாரக் கொள்கை ட்ராட்ஸ்கியை சித்தாந்தரீதியாக வீழ்த்த அவன் பயன்படுத்திய ஆயுதம். அதை வடிவமைத்த கூலிகள் நாங்கள். ட்ராட்ஸ்கி துரத்தப்பட்டாயிற்று.

அன்னா: அவர் இப்போது எங்கே?

புகாரின்: எங்கோ தென்னமெரிக்காவில் புகலிடம் கேட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இவன் கூலிப் படையை அனுப்பியிருப்பதாகவும் வதந்தி உண்டு.

அன்னா: இரண்டு முறை ட்ராட்ஸ்கியைப் பார்த்திருக்கிறேன். சிறிய மனிதர். ஆனால் மிகவும் பிடிவாதமும் தீவிரமும் உடையவர் என்று தோன்றியது. அன்று அவரைப் பார்க்கத்தான் எவ்வளவு கூட்டம்! உணர்ச்சி வெள்ளம் என்றுதான் கூற வேண்டும். அவர் எதனாலும் பாதிக்கப்படாதவராக நிதானமாக நடந்து போனார். *(நெட்டுயிர்ப்புடன்)* ட்ராட்ஸ்கி!

புகாரின்: ஆம், ட்ராட்ஸ்கி அப்படித்தான். கொந்தளிக்கும் மக்கள் வெள்ளத்தின் நடுவேதான் அவர் எப்போதும் வாழ்ந்தார். எப்போதும் உணர்ச்சிப்பிரவாகம். விவாதங்கள், சொற்பொழிவுகள். ஆனால் அவர் மிகமிகத் தனிமையானவர். அவரைச் சுற்றி கண்ணாடிக் கூண்டுபோல மௌனம் இருந்தது.

அன்னா: இனி இவருக்குத் தடைகள் இல்லை – இவருக்கு...

புகாரின்: அப்படி அவன் நினைக்கவில்லை. அவன் மலர் மெத்தைமீது நடக்க விரும்புகிறான். ஒரு சருகுகூட நெரிபட்டு ஓசையெழுப்புவதை அவனால் தாங்க முடியாது. *(கோபம் கொண்டு)* கோழை! எவ்வளவு பெரிய கோழை! குழிமுயல்போல வளைக்குள் பதுங்கி இருந்து ஒவ்வொரு சத்தத்தையும் அஞ்சுகிறான். ஒவ்வொரு அசைவிலும் எதிரியைக் காண்கிறான். அதிகாரமுள்ள கோழை மிகமிக ஆபத்தானவன்.

அன்னா: அவர் எப்படி அஞ்சாமலிருக்க முடியும்? அவர் அதிகாரத்தை அடைந்ததே சதி மூலமும், துரோகம் மூலமும்தானே.

புகாரின்: *(அதிர்ந்து)* ஆம். *(பெருமூச்சுடன்)* என்னைப் பற்றிய உன் ஆழ்மனக் கணிப்பும் இப்போது வெளிவந்துவிட்டது.

அன்னா: அய்யோ, நான்...

புகாரின்: அதில் எனக்கும் இப்போது பூரண உடன்பாடுதான் அன்னா. *(எழுந்து அமைதியிழந்து நடக்கிறார்)* முன்பு, அந்த முதல் அதிகார விளையாட்டின் போது, ஸினோவியேவ், காமனேவ் இருவரிடமும் ட்ராட்ஸ்கி அதிகாரத்துக்கு வந்துவிட்டால் அவர்களைப் போட்டி யாளர்களாகக் கருதி ஒழித்துவிடுவார் என்று அச்சுறுத்தி ஆதரவைப்

பெற்றோம். சென்ற பல நாட்களாக, மீண்டும் மீண்டும் யோசிக்கிறேன். அதை உடனடியாக அவர்கள் எப்படி நம்பினார்கள்? அந்த அச்சம் அவர்கள் அடிமனதில் இருந்தது போலும். எப்படி அது வந்தது? மகத்தான கனவுகளுடன் ஒருங்கிணைந்தவர்கள். பெரும் புரட்சி ஒன்றைத் தோளோடு தோள் சேர்ந்து நின்று நடத்தியவர்கள் எப்படி அப்படி ஐயப்பட நேர்ந்தது? ஏன் தெரியுமா அன்னா?

அன்னா: ஏன்?

புகாரின்: ஏனெனில் ட்ராட்ஸ்கியைப் பொறுத்தவரை அது உண்மை, அப்படி நடந்திருக்கக்கூடும்.

அன்னா: நிகிதா!

புகாரின்: ஆம் அன்னா, பிற எவரையும்விட ட்ராட்ஸ்கியின் உயிர் நண்பர்களான இவ்விருவரும் ட்ராட்ஸ்கியை நன்கு அறிவார்கள். ட்ராட்ஸ்கி எப்படிச் செயல்படுவார் என்பதை அவர்கள் கூடவே இருந்து அறிந்திருக்கிறார்கள். அவர்கள் பிலிப்குஸ்மிச் மிரானோவின் கதையை அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியாது.

அன்னா: யார் அவர்?

புகாரின்: உன் தந்தையின் தோழர். செம்படையின் மகத்தான தளபதிகளில் ஒருவர். எட்டு வருடம் ட்ராட்ஸ்கியின் உயிர் நண்பராக இருந்தார். மிக எளிய கசாக்கு குடும்பத்தில் பிறந்து, ஜாரின் ராணுவத்தில் படைவீரராக இருந்தார். ட்ராட்ஸ்கியால் செம்படையில் சேர்க்கப் பட்டார். அக்டோபர் புரட்சியில் கிரெம்ளினில் நுழைந்த முதல் படைப்பிரிவை நடத்தினார். 1921-ல் கசாக்குகளின் கிளர்ச்சியை அடக்கும்படி தென்முனைக்கு அனுப்பப்பட்டார். அங்கு எளிய கசாக்கு சூலப் பொதுமக்களை செம்படை சூறையாடியதைக் கண்டு மனம் பொறாது ட்ராட்ஸ்கியிடம் வாதாடினர். செம்படையின் தளபதிகளை கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் கசாக்குகளை மொத்தமாக வெண்படை ஆதரவாளர்களாக மாற்றிவிடவே இம்மாதிரி நடவடிக்கை ள் உதவும் என்று முறையிட்டார். ட்ராட்ஸ்கி அதை ஏற்கவில்லை. மிரானோவ் துரோகம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டார். சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு உத்தரவிட்டது ட்ராட்ஸ்கிதான். இன்று ட்ராட்ஸ்கியின் இடத்தில் இவன் இருக்கிறான். மிரானோவின் இடத்தில் நானிருக்கிறேன். அதே கதை. அதே உணர்வு. சில சமயம் அதே முடிவு. சில சமயம் என்ன, கட்டாயமாக...

அன்னா: நிகிதா, நீங்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்து விட்டிருக்கிறீர்கள்.

புகாரின்: அப்படி இல்லை அன்னா. இப்போது என்முன் எதிர்காலம் இல்லை. திட்டங்களும் பயங்களும் உத்வேகங்களும் இல்லை. எனவே இறந்த காலம் துல்லியமாகத் தெரிகிறது. போல்ஷவிக்குகளிடம் அடிப்படையிலேயே இந்த அம்சம் இருக்கிறது. அவர்களின் மிகச் சிறந்த

பலிகள் சகோதரர்கள் தாம். எந்தப் புரட்சியும் சோதரர்களை பலியிட்டே உருவாக முடியும் போலும்... போல்ஷவிக்குகளின் முதல் அதிகாரமே பாபத்தால், சதியால் கைப்பற்றப்பட்டது. பாபமும் சதியும் தொடர்கின்றன.

அன்னா: லெனினைப் பற்றியா கூறுகிறீர்கள்?

புகாரின்: மென்ஷவிக்குகளைப் பற்றி அவர் சொன்னவை நினைவிற்கு வருகின்றன. நினைவிற்கு வரக்கூடாது என்று திரும்பத் திரும்ப முயல்கிறேன் அன்னா. அஜீரணமான கசப்புபோல அதுவே திகட்டித் திகட்டி வருகிறது. மென்ஷவிக்குகள் சிறைக்குத் தவிர வேறு எதற்கும் தகுதியற்றவர்கள் என்றார் லெனின். புரட்சிக்கு எதிரான எந்தக் கருத்தையும் பூமியின் முகத்திலிருந்தே துடைத்து எறிந்துவிட வேண்டும் என்றார். வெளிநாட்டுக்குத் தப்பியோடாத இறுதி மென்ஷவிக்கும் புரட்சி அரசால் கொல்லப்பட்டான். புரட்சியின் களிவெறியில் நம் காதுகளும் கண்களும் மூடப்பட்டிருந்தன. புரட்சி, பூமிமீது உயிர்த்தெழுந்த மனிதகுமாரன்போல சர்வவல்லமையுடன், பூரண புனிதத்துடன், தோற்றம் தந்தது. அதன் அழிவுகள் எல்லாமே தவிர்க்க முடியாதவை என்று பட்டன.

அன்னா: இதெல்லாம் எனக்கு வியப்பாக உள்ளது. புரட்சியை ஒரு பெரும் விடியல் என்று நம்பிய தலைமுறை நான்.

புகாரின்: ஆம் விடியல்தான். நீ கெரென்ஸ்கியைப் பார்த்திருக்கிறாயா?

அன்னா: இல்லை. மென்ஷவிக்தானே அவர்?

புகாரின்: *(சிரித்து)* உரக்கவே சொல். மென்ஷவிக். எதிர்ப்புரட்சியாளன், பிற்போக்குவாதி... அன்னா மென்ஷவிக்குகள் அப்படி என்னதான் சொன்னார்கள்? படைவீரர்களின் உதவியுடன் தொழிலாளர்கள் நடத்தும் புரட்சி ஒரு போலிப் புரட்சி என்றார்கள். அது அரசாங்க மாற்றத்தை மட்டுமே ஏற்படுத்தும் என்றார்கள். புரட்சி ரஷ்ய மண்ணிலிருந்தே முளைத்தெழ வேண்டும் என்றார்கள். சோவியத் மாநாட்டில் கெரென்ஸ்கி பேசும் காட்சி ஞாபகம் வருகிறது. "தோழர்களே" என்று அவர் மூச்சிரைக்கக் கூவினார். "இந்தப் பெரும் தேசம் இன்னமும் ஒரு விவசாய நாடு. மக்களில் எண்பது சதம்பேர் இன்னமும் நிலப்பிரபுத்துவ கால அடிமை முறையில் வாழ்கிறார்கள். ஒவ்வொரு கிராமமும் துண்டுபட்டு சிதறிக் கிடக்கிறது. தொழில் வளர்ச்சியின் முதல் கதிர்கூட இன்னும் சென்றுசேராத கிராமங்கள் உண்டு. இன்னும் அரசாங்கம் என்பது மக்களுக்கும் பங்குடையது என்றறியாதவர்கள் நம் பெரும்பாலான மக்கள். அவர்களுக்கு சோஷலிசத்தைக் கற்பிப்போம். புரட்சியின் முதல்விதைகளை அங்கு ஊன்றி முளைக்க வைப்போம்" என்றார். அந்த ஒவ்வொரு சொல்லும் இரண்டு மாதம் முன்புவரை லெனினால் சொல்லப்பட்டவை.

அன்னா: பிறகு என்ன ஆயிற்று?

புகாரின்: திரும்பி வரும் போர்வீரர்களிடம் போர் முடிய வேண்டும் என்ற ஆசையும், அரசுமீது சலிப்பும் இருப்பதை லெனின் கண்டார். போர் நிறுத்தம் பற்றிய பேச்சுக்கு அவர்கள் செவிசாய்ப்பதைக் கண்டார். உடனே லெனின் தன் தந்திரத்தை வகுத்துவிட்டார். சமாதானத்திற்கான பெரும் போராகப் புரட்சியை சித்தரித்துவிட்டார். அதன் விளைவுகளே இவையெல்லாம். கெரென்ஸ்கி ஒரு தீர்க்கதரிசி. அன்று சபையில் அவர் கூவினார். ''தோழர்களே, போரில் நிராசையுற்ற படைவீரர்களும் பொறுமையிழந்து கிளர்ந்த தொழிலாளர்களும் மட்டும் அடங்கிய இந்த அணி உண்மையில் நமது பெரும் தேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. வரலாற்றின் இந்தக் கட்டம் மிகச் சிக்கலானது. விவசாயிகள் தங்கள் வரலாற்றுக் கடமையை உணரும்வரை அவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் போர்வீரர்களுக்கும் இடையேயான ஒரு சமரச சக்தியாகவே இடைக்கால அரசு இருக்க வேண்டும். இந்த அரசு சரிந்தால் இவர்களுக்கிடையே பெரும் பூசல் விளையும். ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்புகள் கொண்ட தொழிலாளர்களும் படைவீரர்களும் இணைந்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வார்கள். விவசாயிகளைச் சுரண்டி அழிப்பார்கள். இந்த தேசம் பேரழிவுக்கு ஆளாகும்'' என்றார். நான் எழுந்து அவரை நோக்கி கோழை, அதிகார வெறிபிடித்த சந்தர்ப்பவாதி என்று கூவினேன். வரலாற்றின் கூளம் என்று வசைபாடினார் ட்ராட்ஸ்கி. இன்று கெரென்ஸ்கியின் ஒவ்வொரு சொல்லும் சிலுவையிலறையப்பட்ட மீட்பர் உயிர்த்தெழுந்ததுபோல எழுந்து வருகின்றன.

அன்னா: உங்களால் அப்போது சற்றும் யோசிக்க முடியவில்லையா நிகிதா?

புகாரின்: என் மூளை அப்போது வெறியால் மூடப்பட்டிருந்தது. வெறிதான். இப்போதும் நினைவிருக்கிறது. பனிக்கால அரண்மனை தாக்கப்பட்ட செய்திவந்தபோது நான்... என்... என் ஆண்குறி விறைப்படைந்து நின்றது.

அன்னா: *(அருவருப்புடன்)* நிகிதா!

புகாரின்: அந்த உத்வேகம் மானுடனை மீறிய ஒரு பெரும் சக்தி. அது எல்லா உடல்களிலும் ஊடுருவித் தன் இச்சையை நிகழ்த்திக் கொண்டது. கெரென்ஸ்கி தப்பி ஓடியபோது அவரைக் கொல்ல உளவுப்படையை நிகோலாய் புனின் தலைமையில் ட்ராட்ஸ்கி நார்வேக்கு அனுப்பினார். ஒரு கணம்கூட அதிலிருந்த பெரும் குரூரம் என் கண்களுக்குப் படவில்லை. எத்தனை படுகொலைகள், பலிகள். நியாய அநியாயங்களின் எல்லைகள் அனைத்தும் அழிந்தன. அவை பழைய ஏதோ ஒரு காலகட்டத்திற்கு உரியவையாக ஆயின. புதிய நியாயங்கள் பிறந்து வந்த நாட்கள் அவை. மாபெரும் புரட்சி. அதற்குப் பிறகு ஒரு பறவைகூட முன்புபோல பறக்காது என்றார் லெனின். ஆனால்... அது புரட்சிதானா? வரலாற்றில் அது ஒரு வெறும் சம்பவம். மீண்டும் மீண்டும் அதைப்போல

பல்லாயிரம் பெரிய நிகழ்வுகள் வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. இனியும் நிகழும்...

அன்னா: லெனினையும் நீங்கள் நிராகரிக்கிறீர்களா நிகிதா?

புகாரின்: நான் யாரையும் நிராகரிக்கவில்லை. எனக்கு அதற்கான திடமான தத்துவ நிலைப்பாடுகள் ஏதும் இப்போது இல்லை. நான் ஐயப்படுகிறேன்.

அன்னா: புரட்சியையா?

புகாரின்: அதன் தார்மீகங்களை. இன்று நாம் காணும் ஒவ்வொன்றும் அன்று ஆரம்பித்தவை அல்லவா? மென்ஷ்விக்குகளுக்கு நாம் காட்டாத கருணையை நமக்கு ஸ்டாலின் ஏன் காட்ட வேண்டும்? கருணை என்பது சென்ற யுகத்தின் வார்த்தை என்றார் ட்ராட்ஸ்கி என்னிடம். அன்பு, இரக்கம், பண்பாடு, பாசம் எனும் எண்ணற்ற கருத்துகள் முதலாளித்துவத்தால் சுரண்டப்படும் வர்க்கத்தை நிரந்தரமாக அடிமைப்படுத்தும் பொருட்டு பயன்படுத்தப்படுபவை என்றார். பிறந்துவிட்ட புதிய யுகத்தில் புதிய தார்மீகங்களையும் விழுமியங்களையும் உருவாக்குவோம் என்றார். அவை தோழமையும் சமத்துவமும் என்றார். அந்த அரைவெளிச்சத்தில் அவருடைய சிறிய விழிகள் மின்னியது இப்போதும் நினைவிருக்கிறது. அது ட்ராட்ஸ்கியின் பார்வை அல்ல. அது அந்தப் பெரும் சக்தியின் ஒளி. ஒவ்வொருவரிலும் புகுந்து வரலாற்றை நிகழ்த்திய அமானுட வல்லமையின் துளி அது. என் கண்களும் அன்று அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்...

அன்னா: *(தடுமாறி)* நிகிதா, நீங்கள் முற்றிலும் மாறிவிட்டிருக்கிறீர்கள். உங்கள் *(தயங்கி)* உங்கள் அகம் முழுக்க இடிந்து விழுந்து கிடக்கிறது. நம்பிக்கைகள் இலட்சியங்கள் மட்டுமல்ல, எல்லாமே...

புகாரின்: ஆம். *(சட்டென்று கண்ணீர்விட்டு விசும்பி)* இனி ஏதும் மீதியில்லை. நான் வெறும் ஓடு. மண்ணில் மட்கப் போகிறேன். என் விதைகள் ஏதும் முளைக்கவில்லை. என்னுடையது எதுவும் இனி மிச்சமில்லை.

அன்னா: நிகிதா என்ன இது? நீங்களா இப்படி? *(அவரை உலுக்கி)* நிகிதா...

புகாரின்: *(அமைதியடைந்து)* உடைந்தது என் தன்னகங்காரம்தான் அன்னா. அது உடைந்தபிறகு என்னிடம் ஏதும் மிச்சமில்லை என்று உணர்கிறேன். என் மொத்த வாழ்வும் அர்த்தமில்லாமலாகிவிட்டது.

அன்னா: நிகிதா என்ன இது? எனக்கு ஒன்றும் புரியவில்லை. *(விசும்பி அழுகிறாள்.)*

புகாரின்: என் அகங்காரம் என்னை எங்கு கொண்டு வந்து சேர்ந்துள்ளது என்று பார்க்கிறேன். வெறுமை. முழுமுற்றான வெறுமை.

ஆனால் வேறு வழியே இல்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஞானிகள் கூறுகிறார்கள், அகங்காரத்தின் முடிவு வெறுமை என்று. நரகம் என்பது ஒருவன் இறுதியில் கண்டடையும் இந்த வெறுமைதான்.

அன்னா: நிகிதா! நீங்கள் உங்களை ஏனிப்படி நிந்தித்துக்கொள்ள வேண்டும்? என்ன நடந்திருந்தாலும் சரி...

புகாரின்: இது நிந்தனை இல்லை அன்னா... நான் என்னை உணர்ந்து மதிப்பிட்டுக்கொள்கிறேன். உனக்குத் தெரியுமா, இன்று நிகழ்பவை அனைத்தையும் என் உள்ளுணர்வால் ஊகித்து விட்டிருந்தேன்.

அன்னா: உண்மையாகவா?

புகாரின்: ஆம், தனிமையில், சொல்லாட்டங்களைக் கைவிட்டு அகமனம் விழித்தெழும்போது, என்ன நடக்கப் போகிறது என்பது ஒரு குளிர்ந்த பீதிபோல எனக்குத் தெரியும். உடனே அதன்மீது சொற்களை வாரிக்கொட்ட ஆரம்பிப்பேன். உருவாக்கித் திரட்டி வைத்திருக்கும் நியாயங்களால் அனைத்தையும் வகுத்துத் தெளிவுபடுத்திக் கொள்வேன். அவனை, செங்கிஸ்கானை ஒவ்வொரு முறை நேரில் சந்திக்கும் போதும் இனம்புரியாத அச்சத்தால் என் மனம் பதறும். *(பதற்றத்துடன் எழுந்து நடந்து தடுமாறி அமர்ந்து)* நினைவிருக்கிறது. ட்ராட்ஸ்கிக்கு எதிராக இவனை ஆதரிக்க நாங்கள் முடிவெடுத்த அன்று, சுப்ரீம் சோவியத் கூட்டம் நடந்த அரங்குக்கு வெளியே, ஓய்வறையில் நானும் காமனேவும், ஸினோவியேவும், ரிகோவும் இருந்தோம். புகைக்கும் அறை. நால்வருமே மிகவும் பதற்றமடைந்திருந்தோம். ட்ராட்ஸ்கி பேசி முடித்திருந்தார். காற்று அவருக்கு சாதகமாகத் திரும்பும் என்றுதான் பட்டது. என் புதிய பொருளாதாரக் கொள்கையை டிராட்ஸ்கி ஆவேசமாக நிராகரித்துப் பேசினார். ரிகோவும் காமனேவும் இடைவெளியின்றிப் புகைபிடித்தனர். ஸினோவியேவ் எப்போதும் போல குறிப்பேட்டில் நுணுக்கமாக எழுதிக்கொண்டிருந்தார். அந்தக் குறிப்பேடு அவரது போதம். அதில் அவர் தன் வாதங்களை கற்பிதம் செய்துகொள்கிறார் என்று பட்டது. ரிகோவ் என்னிடம் 'வேறு வழியில்லை' என்றார். 'ஆம்' என்றேன். 'மயிரிழையில் விஷயம் கைகூடுகிறது' என்றார் ரிகோவ் மீண்டும். உடனே எனக்கு அங்கு ஓடிய மனப்போராட்டம் என்ன என்று புரிந்தது. ஒரிரு வாக்கு வித்தியாசத்தில் தான் சுப்ரீம் சோவியத் முடிவெடுக்கப் போகிறது. இதில் வெல்லப் போதும் தரப்பில் இருந்தால் தப்பித்தோம். நால்வரில் யாராவது ஒரிருவர் இறுதி நிமிடத்தில் மாற்றி முடிவெடுத்தால்கூட அவ்வளவுதான். விஷயம் முடிந்தது. அம்மூவரில் எவர் ஏமாற்றக் கூடும் என்றே என் மனம் திரும்பத் திரும்ப ஐயத்துடன் கணக்கிட்டபடி இருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் அதே எண்ணத்தையே கொண்டிருந்தார்கள் என்று அனித்துக் கொண்டேன். என் பதற்றம் அதிகரித்தது. இறுதியில் இவன் வென்றாலும் எனக்கேற்பட்டது உடனடியாக ஒரு நிம்மதிதான்.

அன்னா: ட்ராட்ஸ்கி வந்திருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது என்றுதான் எனக்குப்படுகிறது. என்ன இருந்தாலும் அவர் அறிஞர். இவரைப்போல அல்ல...

புகாரின்: இந்த அழிவு ருஷ்ய விவசாயியின் விதி. இதை யாரும் மாற்றியிருக்க முடியாது.

அன்னா: நீங்கள் இப்படியெல்லாம் பேச முடியும் என்பதே வியப்பாக இருக்கிறது.

புகாரின்: வேறு எப்படி இதையெல்லாம் விளக்க முடியும்? இந்த நூற்றாண்டின் பேரழிவுகள், போர்கள், தேசங்களின் அழிவுகள், சரிவுகள்... மிதமிஞ்சிய சுயகர்வம் கொண்ட ஒரு மனம்தான் புரிந்து கொள்ளக் கூடிய ஓர் ஒருங்கிணைவைக் கற்பனை செய்துகொள்ள முடியும். விதியா? இல்லை. மனித குலத்தின் அகங்காரம். மண்ணின்மீது வாழ விதிக்கப்பட்டவன் மனிதன். மண்ணின் அடியில் உறங்கும் பெரும் பூதங்களை அவன் துயிலெழுப்பிவிட்டான். ஐரோப்பாவை ஒரு பெரும் பூதம் ஆட்டிப்படைக்கிறது. ஒரு பூதமல்ல, இரண்டு பூதங்கள். நிலக்கரியும் இரும்பும்! மண்ணின் அடியில் தூங்கிய ராட்சதனும் ராட்சசியும். அவை விசுவரூபம் கொண்டு எழுந்தன. அவை புணர்ந்து பெற்ற ராட்சதக் குழந்தைகள் பூமியெங்கும் நிரம்பின. கவச வண்டிகள், பீரங்கிகள், விமானங்கள், டிராக்டர்கள், மோட்டார்கள்... உலகை அவை சிதறடித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றின் பெரும்பசிக்கு கண்டங்களும் தேசங்களும் இரையாகின்றன. நாம் வெறும் துளிகள். புரட்சி! இது இரும்பின் புரட்சியல்லவா? *(கனவுடன் எழுந்து)* அன்று கிரெம்ளின் முகப்பில் இருந்தேன். கடல்போல அலையடித்து வந்த இரும்பு வெள்ளம். பயனெட்டுகள், துப்பாக்கிகள், ஹெல்மெட்டுகள்... கரி படிந்த இரும்பு. பனிக்கால அரண்மனையை அது முழுகடித்தது. ஹெர்மிட்டேஜின் அறைகளில் நிரம்பிச் சுழித்தது. கிரெம்ளினை நிரப்பியது. அன்று லெனினில் ட்ராட்ஸ்கியில் ஸ்வெஸ்திலோவில் எல்லாம் தெரிந்தது இரும்பின் பளபளப்புதான். இன்று இரும்பு டாங்கிகளாகவும் டிராக்டர்களாகவும் நமது தூய கிராமப் பகுதிகளைச் சுற்றி வளைத்து சூறையாடிக்கொண்டிருக்கிறது.

அன்னா: *(திடீர் பதற்றத்துடன்)* என்ன நடக்கிறது நிகிதா? உண்மையில் கிராமங்களில் என்னதான் நடக்கிறது?

புகாரின்: சென்ற ஏப்ரலில் மிகில்னாய் ரயில் நிலையத்தில் புகைவண்டி சிறிது நேரம் நின்றது. வெளியே எட்டிப் பார்த்தேன். திறந்த வெளியில் கிழிசல் உடைகள் அணிந்த பல்லாயிரம் விவசாயிகள் படுத்தும் கிடந்தார்கள். அவர்களைச் சுற்றி கவச வண்டிகளினாலான வேலி. துப்பாக்கி ஏந்திய காவலர்கள். பனி அவர்கள்மீது திரையிட்டிருந்தது. காற்றில் அது விலகும்போது ஒட்டி உலர்ந்த உடல்கள் தெரிந்தன. மூட்டை முடிச்சுகள். ஊடாக... குழந்தைகள்; அன்னா, குளிரில் விறைத்து, நீலம் பாரித்த குழந்தைகள்!

அன்னா: (விம்மி அழுகிறாள்) சொல்லாதீர்கள், நிகிதா.

புகாரின்: பனித்திரையில் கவச வண்டிகளின் நீல உலோக மினுமினுப்பு. துப்பாக்கிகளின் கத்திமுனைகளின் ஒளியலைவுகள். அவர்கள் சைபீரியாவிற்குப் போகும் குளக்குகள். பெரும்பாலானவர்கள் அங்கு திரட்டப்படுவதற்கு முன்பே இறந்துவிட்டிருப்பார்கள். ரயிலுக்காக வெட்டவெளியில் காத்திருக்கையில் மீதிப்பேர் சாவார்கள். சைபீரியாவுக்கு எத்தனை பேர் போய்ச் சேர்வார்கள் என்று கூற முடியாது.

அன்னா: (கிட்டத்தட்ட அலறலாக) கர்த்தரே, மீட்பரே, இது என்ன கொடுமை! (அழுதபடி) நிகிதா இது உண்மையா? நீங்கள் கண்ணால் பார்த்தீர்களா?

புகாரின்: ஆம். (தயங்கி, பின்பு பெருமூச்சுவிட்டு) கிடைத்த விவரங்கள் இதைவிடக் கொடூரமானவை அன்னா. இதுவரை ஒன்றரைக் கோடி விவசாயிகள் கொல்லப்பட்டிருப்பார்கள். ஒன்றரைக் கோடி உடல்களைக் குவித்துப் போட்டால் பீட்டர்ஸ்பர்க்கிலும் மாஸ்கோவிலும் உள்ள அனைத்து கட்டிடங்களையும்விடப் பெரிய பிணமலைகளாக இருக்கும்.

அன்னா: (முகத்தை மூடியபடி) வேண்டாம்! வேண்டாம்! (அழுகிறாள்)

புகாரின்: நான் உன்னிடம் எதையும் சொல்லவில்லை. நீ தூய மலர்போல புதிதாக இருக்க வேண்டும் என்று விரும்பினேன். உன்னிடம் திரும்பி வரும்போது பொய்யாகவேனும் நான் அனைத்தையும் உதறிவிட்டு திரும்பிவர முடிகிறது. மனித குலத்தின் எதிர்காலம்மீது சற்றேனாவது நம்பிக்கைகொள்ள முடிகிறது. குளிரில் பூச்சிகள் சுடரைத் தேடிப் போவதுபோல உன்னிடம் வருகிறேன். ஒருவேளை என்னுள் ஊறிய பாப உணர்வுதான் உன்னிடம் என்னை முதன்முதலாகப் பார்த்தபோதே ஈர்த்ததோ என்னவோ!

(அன்னா அமைதியாக குலுங்கிக் குலுங்கி அழுகிறாள். ஆழ்ந்த தனித்த மௌனம்)

புகாரின்: அன்னை ரஷ்யா அழுவது போலிருக்கிறது. (எழுந்து இன்னொருபுறமாகப் போகிறார்) பனிப்புயல் ஒன்று வரக்கூடும். வெளியே மிக அமைதியாக இருக்கிறது. மர்மமான பயங்கரமான அமைதி.

அன்னா: விவசாயிகள் ஏன் சருகுகள்போல மடிய வேண்டும்? (ஆத்திரத்துடன் ஆங்காரத்துடன்) ஆயிரம் வருடம் ஜாரின் சாட்டைகளை தாங்கும் மக்களுக்கு அச்சுரணை எங்கே போயிற்று?

புகாரின்: இது இரும்பு. யோசித்துப்பார். கவச வண்டிகளும் கனரகத் துப்பாக்கிகளும் ஒரு தனித்த ஸ்டெப்பி கிராமத்தை சுற்றி வளைக்கின்றன. எதிர்க்கக்கூடும் என்று தோன்றுபவர்களைச் சுட்டுத்

தள்ளுகின்றன. சிறைப்பட்டவர்களை இழுத்துச் செல்கின்றன. கூட்டுப் புண்ணைகளுக்கு, சைபீரியாவுக்கு. விவசாயிகள் அப்படியே மண்டியிட்டிருந்தால் ஒருவேளை உயிர் பிழைத்திருக்கலாம். ஆனால் இரும்பின் சக்தி அவர்களுக்குத் தெரியாது. அவர்களுடைய மூர்க்கமான எதிர்ப்பே முழு நாசத்திற்குக் காரணமாகிறது.

அன்னா: நிகிதா, இந்த ரத்தத்தில் உங்களுக்கும் பங்கில்லையா? மூன்றாம் காங்கிரஸில் நீங்கள் இரண்டாவது பெரும் புரட்சி என்று இதைத்தானே வர்ணித்தீர்கள்?

புகாரின்: ஆம். பாதி அறியாமை, பாதி அகங்காரம் (வறட்சியாகச் சிரித்து) ஆனால் சொன்னது சரிதான். இரண்டாவது பெரும்புரட்சிதான். முதல் புரட்சியில் லெனின் உத்தரவுப்படி கொசாக்குகளிடம் செம்படை செய்தவற்றின் தொடர்ச்சிதான் இது.

அன்னா: நிகிதா, உங்கள் கல்வியும் ஞானமும் எங்கே போயிற்று?

புகாரின்: கேள் (உடைந்து) அப்படிக் கேள். என் நெஞ்சை நோக்கி விரல் சுட்டி நீ அப்படிக் கேட்க வேண்டும். அன்னா, உன்னுடைய தூய்மையின் ஒளிமிக்க பீடத்தில் நின்றபடி நீ என்னைத் தூக்கிலிட உத்தரவிட வேண்டும். அதுதான் நியாயம். (மண்டியிட்டுத் தழுதழுத்த குரலில்) நான் மூடன், அகங்காரி, பாவி, கொலைகாரன்... ஆம், பெரும் கொலைகாரன்.

அன்னா: (அமர்ந்து புகாரினை ஆரத்தழுவி) நிகிதா! நிகிதா! (ஆவேசமாக மாறி மாறி முத்தமிட்டு தழுவி அழுகிறாள்) இல்லை நிகிதா. நீங்கள் தூய்மையானவர். உங்கள் ஆத்மா கறைபடவில்லை.

(புகாரின் அழுது மெல்ல அடங்குகிறார்)

அன்னா: நிகிதா, நீங்கள் தூய்மையானவர்.

புகாரின்: ஆம்; இப்போது. இனி நான் நிம்மதியாக சாக முடியும்.

அன்னா: என்ன பேச்சு இது?

புகாரின்: ஆம், எல்லாம் நெருங்கிவிட்டது அன்னா. சினோவியேவும் காமனோவும் கைதாகி விசாரணையில் இருக்கிறார்கள்.

அன்னா: (அதிர்ந்து) எப்போது?

புகாரின்: சில மாதங்களாக. கிரோவை விஷம் வைத்துக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். புரட்சிக்கு துரோகம் செய்தது, சதி செய்தது போன்ற பல குற்றச்சாட்டுகள்.

அன்னா: கடவுளே! சினோவியேவைப் பற்றியா அப்படி சொல்கிறார்கள்?

புகாரின்: இன்னும் சில நாட்களில் அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்கப்படுவார்கள்.

அன்னா: (மார்பில் கை வைத்து) ஏசுவே! மீட்பரே!

(பனிப்புயல் ஊளையிட்டபடி சாளரங்களினூடாகப் பீறிட்டு உள்ளே கழல்கிறது. அனைத்தும் பறந்து துடிக்கின்றன. விளக்கொளி படபடத்து அணையப் போய் மீள்கிறது. புயலின் ஊளை)

புகாரின்: அடுத்து நானும் ரிகோவும் தாம்ஸ்கியும்...

அன்னா: இல்லை இல்லை.

புகாரின்: இன்னும் எத்தனை நேரம் என்பதுதான் கேள்வி.

அன்னா: ஏன் நிகிதா, ஏன் இப்படி?

புகாரின்: ஏனெனில் இது இரும்பின் யுகம். ஆனால் நான் முந்தைய யுகத்தின் மிச்சங்களை வைத்திருக்கிறேன். பூமியை ஆள்வது இத்தகைய இயற்கை சக்திகள்தாம். சாத்தானா, மேமனா... தெரியவில்லை. அதற்கு காலந்தோறும் ஒவ்வொரு வாகனம். தேசத்திற்கு ஒரு தலைவன். நூற்றாண்டுக்கு ஒரு கருத்தியல். அந்த வல்லமையின்முன் ஞானமும் விவேகமும் வெறும் தூசி. என் அகங்காரத்தால் அதை நான் காண முடியாது போயிற்று. அதை என் விவாதத் திறனால் வளைத்து ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணினேன். நான் இந்தத் தேசத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும்போது...

அன்னா: நிகிதா, உண்மையாகவா?

புகாரின்: ஆம். அப்படி ஒரு ஆசை எனக்கு இருந்தது. அது எனக்குப் பேராசையாகவோ தகாத உத்தேசமாகவோ இருக்கவில்லை. லெனினுக்குப் பிறகு இந்த தேசத்தை வழி நடத்தும் ஞானம் எனக்குத்தான் உண்டு என்று நம்பினேன். அப்போது எனக்கு ஸ்டாலின் பயனுள்ள, வலிமையான, ஓர் ஆயுதமாக இருப்பார் என்று எண்ணினேன். லெனினுக்கு ட்ராட்ஸ்கி போல. உண்மை நேர்மாறானது. லெனின் ட்ராட்ஸ்கியின் கையில் வெறும் ஆயுதம். நான் இவனுடைய ஆயுதம். இந்நூற்றாண்டின் அத்தனை சிந்தனையாளர்களும் கலைஞர்களும் இவன் வழியாகவும் ட்ராட்ஸ்கி வழியாகவும் இயங்கும் அந்த பெரும் சக்தியின் ஆயுதங்கள் மட்டுமே. இரும்பு வழியாக அந்த சக்தி பூமிமீது பரவியபோது அதற்குத் தேவையான சொற்களை நாங்கள் படைத்துத் தந்தோம். சோஷலிசமாக, முதலாளித்துவமாக, ஏகாதிபத்திய மாக உலகமெங்கும் அது தன்னை விரித்து வைத்திருக்கிறது.

(பனிப்புயல் சுழன்றடிக்கிறது. மரங்கள் ஒடியும் ஒலி. மடேரென்று ஒரு கிளை மீதுமீது விழும் ஒலி.)

புகாரின்: இரும்பின் ஒலி கேட்கிறதா? (அவர் அப்போது பித்தனைப் போலிருக்கிறார்)

அன்னா: (கண்ணீர் வழிய) இல்லை.

புகாரின்: அது எக்கணமும் வந்துவிடும். பிறகு உன்னை நான் பார்க்க முடியாது போகலாம். நானும் குற்றத்தை ஒப்புக் கொள்ளலாம்.

அன்னா: நிகிதா, நீங்கள் அதை மட்டும் செய்யக்கூடாது. ஒருபோதும். நீங்கள் குற்றவாளியாக இறக்கக் கூடாது. நீங்கள் அவர்களுக்காக இறந்தீர்கள் என ருஷ்ய விவசாயிகள் அறிய வேண்டும்.

புகாரின்: அதில் அர்த்தமில்லை.

அன்னா: இல்லை நிகிதா, அது முக்கியம். அதுதான் உங்கள் வாழ்வுக்கும் தியாகத்திற்கும் பொருள் தரும்.

புகாரின்: ஒன்றுமில்லை. வெறுமைதான் மிச்சம்.

அன்னா: நீங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்ளக்கூடாது நிகிதா. எப்படி வதைத்தாலும். உங்களால் அது முடியும்.

புகாரின்: பூமிமீது எவரிலாவது சிறிதளவாவது பிரியம் வைத்துள்ள எவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டாக வேண்டும் அன்னா.

அன்னா: நிகிதா, எனக்காகவா? எனக்காகவா?

புகாரின்: (அமைதியாக) ஆம், உனக்காக.

அன்னா: வேண்டாம் நிகிதா. நான் ஏற்க மாட்டேன்.

புகாரின்: எனக்கு என்னைப்பற்றிய திருப்தியைத் தருவதாக எஞ்சியுள்ளது இது மட்டும்தான்.

அன்னா: நான் உயிருடன் இருக்கமாட்டேன் நிகிதா, இது உறுதி.

புகாரின்: அன்னா, மூட்டாள்தனமாகப் பேசாதே.

அன்னா: நிச்சயமாக. உங்கள்மீது ஆணையாக நான் உயிருடன் இருக்கமாட் டேன்.

புகாரின்: இந்த சிறிதளவு திருப்தியைக்கூட எனக்குத் தர மாட்டாயா?

அன்னா: நீங்கள் எனக்கு எதை மிச்சம் வைத்துவிட்டுப் போகிறீர்கள் நிகிதா? உங்களுடைய மகத்தான உயிருக்கும் கௌரவத்திற்கும் விலையாகக் கிடைத்த என் உயிரையா? இந்த சிலுவையைச் சுமந்தபடி என் அர்த்தமற்ற வாழ்வை நான் வாழ்ந்து தீர்க்க வேண்டுமா?

புகாரின்: அன்னா (சொல்ல வந்ததை நிறுத்தி) ஒன்றுமில்லை (புயல் ஓய்ந்து வீசுகிறது ஒளி அலை பாய்கிறது) அன்னா!

அன்னா: சொல்லுங்கள்.

புகாரின்: நீ சொல்வது உண்மைதான். வரலாறு நம்மால் ஊகிக்கச் சாத்தியமான எல்லைகளைக்கூட விரைவாகத் தாண்டிவிடுகிறது. ஒரு வேளை என்றாவது பனி உருகுமென்றால் நான் ஒரு குற்றவாளியாக மனிதகுலத்தின்முன் நிற்கக்கூடாது.

அன்னா: (உத்வேகத்துடன்) ஆம் நிகிதா.

புகாரின்: ஆனால் நீதிமன்றத்தில் வாதிடுவதில் அர்த்தமில்லை. எனது ஒரு சொல்கூட மிச்சம் வைக்கப்படாது.

அன்னா: அப்படியானால்...?

புகாரின்: நீ அனைத்தையும் தாண்டிவிடுவாய் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது. நீ இளவேனிலைப் பார்ப்பாய். ஒருவேளை நெடுங்காலம் தாண்டி, வேறு ஒரு யுகத்தில். ஆனால் நீ அழியமாட்டாய். நதியில் மிதக்கவிடுவதுபோல என் வாக்குமூலத்தை உன்னிடம் தந்து செல்கிறேன்.

அன்னா: (அதிர்ச்சியுடன்) நிகிதா, நீங்கள் என்னை மீளாத் துயரத்தில் தள்ளிவிடுகிறீர்கள்.

புகாரின்: என் சொற்கள் உனக்கு வாழ்வின் பொருளாக அமையும். உன்னை வழிநடத்தும். நீ அழிய மாட்டாய். நீ நிரந்தரமானவள். உன் முன்னால்தான் ரஸ்கால்நிகாஃப் தன் வாக்குமூலத்தை அளித்தான்...

அன்னா: நான் சாதாரணமான பெண், நிகிதா.

புகாரின்: உன்னை காலப்போக்கில் நீ அறிவாய் (மண்டியிட்டு) என் வாக்குமூலத்தைச் சொல்கிறேன். எதிர்கால சந்ததியினர் அறியட்டும்.

(அன்னா நடுங்குகிறாள். அவளால் நிற்க முடியவில்லை. காற்று அலையடிக்கிறது. அவள் நடுங்கும் கரங்களை மார்போடு சேர்த்து நிற்க, புகாரின் தன் வாக்குமூலத்தைச் சொல்கிறார்.

புயல் பேரோசையுடன் அறையை சூறையாடுகிறது. ஊடாக புகாரினின் சொற்கள் ஓடுகின்றன. அவளிடம் பதற்றம். பிறகு ஆழ்ந்த திடம். அவர் அழுதபடியும், ஆவேசத்துடனும், மார்பில் கைவைத்தபடியும், ஆழ்ந்தும், தன் வாக்குமூலத்தைக் கூறுகிறார். விளக்குகள் அணைந்துவிடுகின்றன. இருட்டு. புயல் ஓலை சற்றுத் தணிய இருட்டில் புகாரினின் குரல் கேட்கிறது.)

புகாரின்: ...ஆனால் எப்போதும் இப்படி இருளும் பனிமூட்டமும் இருக்காது. ரஷ்யா இளவேனிலில் ஒரு நாள் விழித்தெழும். புதிய மலர்கள்போல் இளம் முகங்கள் என் கல்லறையைத் தேடி வரும். அவர்கள் கண்ணீருடன் என்மீது குனிந்து கூறுவார்கள் – நீங்கள் எங்கள்

தோழர் புகாரின் என்று. அதுவரை எனக்கு மரணமில்லை. மண்ணுக்கு அடியில் நான் ஒவ்வொரு நிமிடமும் காத்துக் கொண்டிருப்பேன்...

(வாக்குமூலம் முடிகிறது.)

புகாரின்: விளக்கை ஏற்று அன்னா.

அன்னா: ஒரு நிமிடம் *(மெழுகுவர்த்திச் சுடரை ஏற்றுகிறாள். அறை ஒளி பெறுகிறது.)*

புகாரின்: என் சொற்களை ஒவ்வொன்றையும் நினைவு படுத்திக் கொள் அன்னா. ஒரு சொல்கூட மாறக் கூடாது. ஒரு நாள் நீ அதை வரலாற்றின் முன் மேடையேறிச் சொல்ல வேண்டியிருக்கும்.

அன்னா: மறக்க மாட்டேன் நிகிதா. ஒரு நாள்கூட விடாமல் என் இறுதி நாள்வரை தினம் இதை எனக்குள்ளாகச் சொல்லிக் கொள்வேன்.

புகாரின்: *(பெருமூச்சுடன்)* இனி காத்திருப்போம்.

அன்னா: *(அமைதியாக)* நீங்கள் எதையாவது சாப்பிட வேண்டும் நிகிதா. பசித்திருப்பீர்கள்.

புகாரின்: பசி! ஆம் *(எழுந்து)* பசிதான். தாகம்தான், ஆனால் *(தலையைத் தடவியபடி)* என் பசியும் தாகமும் அடங்க இன்னும் எத்தனையோ வருடங்கள் ஆகும்.

(மீண்டும் பனிக்காற்றின் ஊளை.)

புகாரின்: இந்தப் பனிக்காற்று மாஸ்கோ முதல் சைபீரியாவரை பரவியிருக்கிறது. அனைத்து நீர்ப்பரப்புகளையும் உறைய வைத்து விட்டது.

(வெளியே கார் நிற்கும் ஒலி.)

அன்னா: *(அச்சத்துடன்)* நிகிதா!

புகாரின்: *(நிதானமாக)* அமைதியாக இரு. உன் தைரியமெல்லாம் தேவையாகும் தருணம் இது.

அன்னா: *(மனமுடைந்து)* நிகிதா, எங்காவது ஓடிவிடுங்கள், தயவு செய்து *(அவரை பிடித்துக்கொண்டு அழுகிறாள்.)*

புகாரின்: *(விடுவித்துக்கொண்டு)* உளறாதே. தைரியமாக இரு. மறந்து விடாதே. நீ உயிரோடு இருந்தாக வேண்டும். எந்த வார்த்தையையும் மறந்து விடாதே.

அன்னா: மறக்க மாட்டேன் நிகிதா.

(வெளியே பூட்ஸ் ஒலிகள். கதவுகள் திறக்கப்படும் ஒலிகள். விசாரிப்புகள் மெல்லிய குரல்கள்.)

புகாரின்: கடும் குளிர். நீ இதைவிடக் குளிரை சந்திக்க நேரலாம் அன்னா. உன் ஆத்மா குளிர்ந்துவிடக் கூடாது. (அவளை முத்தமிடுகிறார்) நான் அவர்களைப் போய் வரவேற்கிறேன். (போகிறார்)

அன்னா: நிகிதா... நிகிதா!

(கடல் அணையப் போகிறது. ஓலமிடும் பனிக்காற்று. பறக்கும் துணிகள். தாள்கள். அன்னாவின் நடுங்கும் விரல்கள் விளக்கைப் பொத்துகின்றன. அவள் கரங்களுக்குள் சிறு செந்நெருப்பு.)

◆

4

விசாரணைக்கு முன்

புரோஹரவ் *

சுதந்திர மொழிபெயர்ப்பு: வீரபத்ரன்

காலை பத்துமணிக்கு முதற்சுற்றுக் காவல் மாற்றப்பட்டபோது எனக்கு அன்று குளியல் மற்றும் சலவை தினம் என்று அறிந்தேன். இந்த விசாரணைக் கொட்டடியில் மாதம் ஒருமுறை தான் இதற்கு அனுமதி. அந்த நாளும் எப்போது வேண்டுமானாலும் வரக்கூடும். காவலன் சப்லீத்ஸ்கி என் அறைக்கதவுக்கு அப்பால் நின்று "நல்லது அந்திரியான், இன்று உனக்கு சோப்பின் தினம் போலிருக்கிறதே" என்றான். அவனுக்கு மிகவும் உயர்குடித்தனமாக பேசுவதாக நினைப்பு. சாளரம் வழியாக எட்டிப் பார்த்து "என்ன சொல்கிறாய்?" என்றேன். "அங்கே பட்டியலில் உன் பெயர் இருப்பதைப் பார்த்தேன்" என்றான்.

சிறு பரபரப்பு என்னைத் தொட்டது. அறைக்குள் அதன்பிறகு இருப்பது பெரிய வதையாக ஆகிவிட்டது. உடல் மிகவும் அழுக்காகவும் பிசுக்குடனும் இருப்பதை உடனடியாக உணர ஆரம்பித்தேன். இனி குளிப்பதுவரை இப்பிரக்ஞை மாறாது. ஆனால் இது குளியல் மட்டுமல்ல. இரண்டு வழிகளில் தான் நான் திறந்தவெளியுடனும் சக மனிதர்களுடனும் தொடர்புகொள்ள முடியும். விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப் படுகையிலும் குளியல் அறையிலும். விசாரணையின்போது சக மனிதர்கள் ஒவ்வொருவர்மீதும் நமக்கு ஏற்படும் கடும் துவேஷம் காரணமாக அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அசைவும் தாங்க முடியாத இம்சையாகவே இருக்கும். குளியலறை அப்படியல்ல, அங்கு மனிதர்கள் நிர்வாணமாக இருக்கிறார்கள்.

---

* அந்திரியான் புரோஹரவ், ஸ்டாலின் காலத்தில் மரண தண்டனைக்குள்ளான இறையியலாளர். 'சிலுவையும் ஆவியந்திரமும்' என்ற நூல் மூலம் பரவலாக அறிமுகமாகியிருந்தார். 'அழிவை நோக்கி ஒவ்வொரு நாளும்' என்ற பெயரில் அவரது சிறைக்குறிப்புகள் அவருடைய மரணத்திற்குப் பிறகு பிரசுரமாகின. பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. அதன் ஒரு அத்தியாயத்தின் மறு ஆக்கம் இது. வழக்கம்போல இதுவும் (மலையாளத்தில்) கைப்பிரதியாகவே எஞ்சிவிட்டது. கைப்பிரதியில் இரு இதழ்கள் இதைத் திருப்பி அனுப்பியதன் தடயங்கள் உள்ளன.

சப்லீத்ஸ்கி சுமுகமான ஆள். செசென்களுக்குரியபுரா இத் தொற்றம் உள்ளூர அதிராத வன்முறையற்ற சுபாவம். ''அதற்குள் தயாராகி விட்டாய் போலிருக்கிறதே'' என்று சிரிப்புடன் கேட்டான். ''ஆம், என்ன செய்வது?'' என்று நானும் சிரித்தேன்.

"துணைச் சிறை அதிகாரிமீது நிதி ஒழுங்கு சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் தெரியுமா?'' என்றான் அவன் முகமெங்கும் குரலில். "நீண்ட நாளாக நடக்கும் விஷயம்தான். இறைச்சிக் கடையில் இவரது சகாக்கள் இருக்கிறார்கள்.'' சப்லீத்ஸ்கிக்கு இந்தச் சிறையே உலகம். அவனறிந்த அரசியல் இந்த அதிகார அமைப்புக்குள் நிகழ்வது தான். ஆனால் இதில் படிப்படியாக நமக்கும் தீவிரமான ஈடுபாடுகளும் பக்கச் சார்புகளும் வந்துவிடுகின்றன. இங்கும் அதே உளவல், குழு சேரல், குழிபறித்தல் எல்லாம் உண்டு. மனிதனுக்கு மனித நாடகத்தில் எப்படியாவது பங்கெடுத்தாக வேண்டியிருக்கிறது. இந்த அரைப்புத்தித் தடியனின் சொற்களினூடாக நானும் இந்த சிறை அரசியலைக் கற்பனை செய்துகொண்டு இந்த வெற்று அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் அமைதி இழந்து நடைபழகுகிறேன். தூக்கமின்றிப் படுத்து ஒரு தரப்புக்காக வாதாடுகிறேன். துவேஷங்களைக் கற்பனை மூலம் வளர்த்துக்கொண்டு எனக்கு இம்மிகூட சம்பந்தமில்லாத சிலர்மீது கொலைவெறிகொள் கிறேன். சிரிப்புதான் வருகிறது. எத்தனை அபத்தமான கோமாளிகளாக மனிதர்களைப் படைத்துவிட்டான் கடவுள்.

மேலும் ஒரு மணிநேரம் கழிந்து இரு காவலர்கள் வந்து உரிய சடங்கு முறைகளுடன் அறையைத் திறந்தார்கள். ''கைதி எண் அறுநூற்றுப் பதினெட்டு, வா வெளியே'' என்றார்கள். என் உடை மற்றும் போர்வைகளுடன் வெளியே வந்தேன். வெளியே மேலும் குளிராக இருப்பது போலிருந்தது. பிரமைதான். ஆனால் எனக்குக் கால்கள் நடுங்கின. முதல் முறையாக சிறைவிட்டு வெளிவந்து வெட்டவெளியில் நின்றபோது நான் விழுந்தேவிட்டேன்.

குளிர்ந்த நீண்ட வராண்டா வழியாக நடந்தோம். மறு எல்லையில் ஒரு பெரிய அறை இருந்தது. அங்கு எட்டுபேர் தங்கள் மூட்டை களுடன் வந்திருந்தார்கள். அவர்கள் முகங்கள் சாம்பல் நிறமாக வெளுத்திருந்தன. கண்கள் இறந்த மிருகங்களின் கண்கள் போலிருந்தன. அத்தனை பேரும் ஒன்றுபோலவே இருந்தார்கள். முகத்தில் சதை அமைப்பில் மட்டுமே சிறு வித்தியாசம். முகம் சற்று நீளம், தாடை சற்று அகலம், வாய் சற்று இறுங்கல் – இப்படி. மற்றபடி ஒரே மனிதனின் பற்பல பிரதிபிம்பங்கள் போலிருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து அமர்ந்தபோது நானும் அவர்களைப் போலவேதான் இருக்கிறேனா என்று ஐயம் எற்பட்டது. இல்லை என்னை நான் பிரித்தறிவதே ஒரு நல்ல விஷயம். என் மனதில் இன்னும் சுயப்பிரக்ஞை மிஞ்சியுள்ளது. ஒருவேளை அவர்களுக்கும் இருக்கக்கூடும். இந்த சாம்பல்நிற முகங்களுக்கு அப்பால் அவர்கள் மனம் எண்ணங்கள் கொப்பளிக்கும் ஆழியாக இருக்கக்கூடும்

என் வருகையை அவர்கள் சிறு விழியசைவால் கூடப் பொருட்படுத்தவில்லை.

அறைக்குள் மேலுமிருவர் வந்தனர். ஒன்று அதே பிணமுகம். ஒருவன் குள்ளன். அவன் பார்வையிலும் உடலசைவுகளிலும் ஓயாத பரபரப்பு தெரிந்தது, எலி போல. முகத்தில் ஒரு விதமான ஒளி. ஏதோ அறுபட்டு நிற்பதுபோல; ஏதோ பெரிய நகைச்சுவையைச் சொல்லப் போவதற்கு முந்தையை கணம்போல. அறையிலிருந்தவர்களை மாறி மாறிப் பார்த்தான். என் கண்களைச் சந்தித்தான். புன்னகையுடன் விடுவிடுவென நடந்து என்னருகே வந்து அமர்ந்தான். உடனே பேச ஆரம்பித்தான். ''குளிக்கும்போது பாடக் கூடாது என்கிறான் மிரோனவ். குளிக்கும்போது தண்ணீர் மட்டும் ஏன் பாடுகிறது? அதைக் கேட்கிறார்களா யாராவது? ஏனென்றால் அது வெகுதூரம் தாண்டி வருகிறது. அதை அங்கே சைபீரியாவிலிருந்து குழாய் வழியாகக் கொண்டு வருகிறார்கள்.'' அவன் கண்களின் பாப்பாக்கள் விபரீதமாகக் விரிந்தன. புன்னகை பெரிதாகியது. ''அங்கிருந்து கெட்ட ஆவிகளின் அடங்காத ஆத்மாக்கள் தண்ணீர் வழியாக வருகின்றன. மேதகையீர் தாங்கள் அறிவீர்களா? நேற்றிரவு என் அறையில் கூஜா சிரித்தது. ஏன் சிரிக்க வேண்டும் அப்படி? குளிர் காலம்தான் இன்னும் ஆரம்பமாகவில்லையே? இலையுதிர் காலம் எப்போது முடியும்...?''

அவன் முதலில் என்னை நெருங்கியபோது எனக்குள் ஓர் ஆறுதல் ஏற்பட்டிருந்தது. நான் இன்னும் செத்துவிடவில்லை என்று அதனூடாக அறிந்தேன். இப்போது முதலில் ஏற்பட்ட துணுக்குறலுக்குப் பிறகு இன்னொரு ஐயம் என்னை அரிக்க ஆரம்பித்தது. நான் நிதானமாகத்தான் இருக்கிறேனா? என் மனதின் கரைகள் இன்னமும் இருக்கின்றனவா? ஆனால் அதை எப்படி நான் சோதித்துக் கொள்வது? என் மனம் முன்பு போல இல்லை என்பதை அறிவேன். தனிமைக் கொட்டடிகளில் மனம் நம்முடன் எப்போதும் குளிராகவும் கனமாகவும் இருந்தபடியே இருக்கிறது. மனதை நாம் கவனிக்காதபோது ஒன்றுமில்லை. கவனிக்க ஆரம்பித்தால் பீதிகொள்ள ஆரம்பித்துவிடுகிறோம். அதன் ஒழுங் கின்மையும் அர்த்தமின்மையும் இலக்கின்மையும் நம்மைப் பதற வைக்கின்றன. நாம் ஒழுங்காகவும் சாதாரணமாகவும்தான் இருக்கிறோம் என்பதற்குப் புற நிரூபணம் தேவையாகிறது. ஆனால் அதற்கு சிறையறைக்குள் வாய்ப்பே இல்லை. சில சமயம் என் மனம் என்னை மீறிப் பாய்ந்தோட ஆரம்பித்துவிடும். வண்டிக் குதிரைகள் பீரங்கி ஒலியில் மிரண்டுவிட்டதுபோல. அதை நிறுத்தவோ திசைதிருப்பவோ முடியாமல் அமர்ந்து பதைபதைத்துத் தவிப்பேன். எங்காவது அது மோதி நிற்கையில் அந்த இடமும் சூழலும் முற்றிலும் புதியனவாக மிரளவைக்கும். பின்பு அதீதமான களைப்பால் சில மணி நேரம் தூங்க முடியும். விழித்தவுடன் அதைத் திரும்ப எண்ணித் துணுக்குறுவேன். என் மனதுக்கு என்ன ஆயிற்று என்று பதற்றம் கொள்வேன். ஒன்றுமுதல் பத்தாயிரம்வரை விடாது எண்ணிப் பார்ப்பேன். ஊடே எண்ணங்கள் உடைத்துப் பாயும். ஒருபோதும் முழுக்க எண்ண முடிந்ததில்லை. அது

பதற்றத்தை அதிகரிக்கும். இந்த விசாரணை முகாமில் மிகப் பெரும்பாலானவர்கள் மனநிலை தவறிவிடுகிறார்கள். சிலசமயம் மனமே இல்லாது வெறும் பிரக்ஞை மட்டுமாக ஆகிவிடுகிறார்கள். அதன் பிறகுதான் அவர்கள் 'பதப்படுத்தப்பட்டு' நீதி மன்றங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். அங்கு 'முறைப்படி' விசாரணை நடந்து தண்டனை வழங்கப்படுகிறது. அந்த நீதிபதி ஏதும் செய்ய முடியாது; மரணதண்டனை தருவது தவிர. காரணம் சம்பந்தப்பட்ட ஆசாமி ஏற்கனவே செத்து மட்க ஆரம்பித்துவிட்டிருப்பான். இதோ இந்த அறையில் இருப்பவர்களில் இந்த எலியைத் தவிர பிறரை நானே எவ்வித மனத்தடையுமின்றி மரணத்துக்கு அனுப்புவேன். எலி சலிக்காது பேசிக் கொண்டிருந்தான். மாஸ்கோவையும் சைபீரியாவையும் இணைக்கும் பாலமாகவே அனைத்தையும் அவன் கண்டான். காற்று, வானம், சூல்கள் எல்லாம். பைத்தியங்கள் அப்படித்தான். ஒரு குறிப்பிட்ட வகை கருத்துச் சட்டகம் அவர்களிடம் இருக்கிறது. அது மடைபோல. அதன் வழியாக அவர்கள் கொட்டியபடியே இருப்பார்கள்.

இளநிலை அதிகாரி ஒருவர் இரு காவலர்களுடன் அறைக்குள் வந்தார். "குஸ்மிச் வாயைமூடு" என்று காவலன் அதட்டினான். எலியின் ஒலி நின்றது. அதிகாரி மிகவும் இளைஞன். பெண் ஆண் வேடம் போட்டது போலிருந்தான். விறைப்புடன் அனைவரையும் பார்த்தபடி அறைக்குள் நடந்தான். இந்த நடைப்பிணங்களிடம் அவன் எந்த அதிகாரத்தை அனுபவிக்க முடியும்? நம் அதிகாரம் எதிர்ப்பினூடாகவே பிரதிபலித்து நமக்குத் தெரிகிறது. அவன் என் கண்களைச் சந்தித்தால் கண்டிப்பாகத் தாக்குவான் என்றுபட்டது. என் பார்வையை நிலம் நோக்கிச் சரித்து தோள்களைப் பிறர்போலவே குறுக்கிக் கொண்டேன். கனத்த பூட்சுக் கால்கள் என் முன் சில கணங்கள் தயங்கின. என்மீது கனத்த கூரிய பார்வை வருடிச் சென்றது. அவன் வெளியேறியதும் சுருங்கி ஒடுங்கிய என் ஆளுமை மீண்டும் விரிந்து இயல்பு நிலைக்கு வந்தது. அதற்கு இதயத்துடிப்பு அதிகரித்து மூச்சு வாங்க ஆரம்பித்திருந்தது. எலி குஸ்மிச் சற்றுமேயின்றித் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். எனக்குப் பீதி ஏற்பட்டது. இப்போது அவனுக்கும் எனக்குமிடையே ஜன்னல் வித்தியாசம் அவன் உதடுகள் அசைகின்றன என்பது மட்டும்தான் என்றுபட்டது.

குளியலறைக்குள் வரிசையாக நுழைந்தோம். சோப்பு வாசனையும் நீராவியும் அங்கு மூச்சடைக்க வைக்கும்படி நிரம்பியிருந்தன. பல திசைகளுக்குக் கண்கள் தெரியவில்லை. பார்வை தெளிவடைந்ததும் அந்தப் பெரிய கூடம் நிறைய சிவந்த மனித உடல்களைக் கண்டேன். என் மனம் கிளர்ந்தெழுந்தது. உடைகள் அபத்தமானவையாகவும், ஆழ்ந்து நிரம்பிய ஆபாசச் சுமைகளாகவும் தோன்றின. அவற்றை கழற்றி சோப்பு நிரம்பித் தளதளத்த இளம்சூடான சலவைத் தொட்டிக்குள் மூழ்கினேன். சூடான தண்ணீரில் சோப்புக்கு ஒரு காரநெடி வருகிறது. எனக்கு மிக உவப்பான நெடி அது. சிறுவயதின் இனிய ஞாபகங்கள் கனவுகளில் வரும் கிளர்ச்சியும் நெகிழ்வும் எனக்கு ஏற்பட்டன. ஆனால்

எந்த ஞாபகமும் எழவில்லை. படுத்துக்கொள்ள இடம் கிடைக்குமா என்று பார்த்தேன். எல்லா பெஞ்சுகளிலும் ஆள் இருந்தது. பல பெஞ்சுகளில் இணைந்த இரு உடல்கள். ஆரம்ப கட்டத்தில் இது மிகவும் தேவையாக இருக்கிறது. எவ்வளவோ பதற்றங்களை இது குறைக்கிறது.

ஒரு பெஞ்சு காலியாயிற்று. அங்கு விரைந்து சென்று படுத்துக் கொண்டேன். நன்றாக நீட்டிக்கொண்ட பிறகுதான் நீராவியின் இதமான வெப்பத்தையும் வியர்வை சுரப்பதன் இனிய களைப்பையும் உணர முடிந்தது. கண்களை மூடிக்கொண்டேன். உறைந்து கிடந்த ரத்தம் உருகி உடலுக்குள் ஓட ஆரம்பித்ததைக் கண்களுக்குள் காண முடிந்தது. மெல்ல மெல்ல 'என் அகத்தின் இறுகிய முடிச்சுகள் நெகிழ ஆரம்பித்தன. வயிற்றுக்குள் ஒரு பதைப்பாகவும் தொண்டையில் ஓர் இறுக்கமாகவும் உதடுகளில் ஒரு துடிப்பாகவும் ஓர் உத்வேகம் எழுந்து வந்தது. விம்மலாக அது வெளியேறியபோது என் கடைசித் தடையும் அறுந்தது. கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது. காதுகள் சூடான கண்ணீரால் நிரம்பின. வெகுநேரம் கழித்து கண்ணீர் வறண்டு மனம் வெறுமை கொண்டிருப் பதை உணர்ந்து பெருமூச்சுடன் சுயநினைவு பெற்றேன். சற்று எழுந்து அமர்ந்துகொண்டபோது பக்கத்து பெஞ்சில் ஒருவர் தலைக்குமேல் தன் கைகளை மடித்து வைத்தபடி அமர்ந்திருப்பதைக் கண்டேன். பார்வைகள் சந்தித்தபோது அவர் முகம் மிக அறிமுகமானதாகத் தோன்றியது. அவர் நட்புடன் சிரித்தபடி ''இன்னமும் நாம் அழ முடிகிறது. இது ஒரு மகத்தான விஷயம்தான் இல்லையா?'' என்றார்.

அந்தக் குரல், அதிலிருந்த கனிவு, பல்லாயிரம் கிலோமீட்டர் தூரத்தைத் தாண்டி எங்கிருந்தோ வருவது போலிருந்தது. எவ்வளவு தூரம் வந்து விட்டிருக்கிறேன்! ''ஆம்'' என்றேன். ''நீங்களும் அழுதீர்களா?''

''நான் ஒவ்வொரு முறையும் அழுவேன். அதுவும் ஒரு குளியல்தானே?''

''உண்மை'' என்றேன். எனக்கு ஒருவித மனநிறைவு ஏற்பட்டது. ''இங்கே மனிதர்கள் மத்தியில்தான் இப்படி அழமுடிகிறது. தனிமையில் சுவர்கள் நடுவில் அழும்போது நம்மை நாமே கேவலமாகவும் அபத்தமாகவும் உணர நேர்கிறது.''

''நான் ஒருபோதும் தனிமையில் அழுவதில்லை'' என்று அவர் சொன்னார். ''அழக்கூடாது என்று எனக்குக் கட்டளையிடுவேன். எனது கட்டளைகளை அனேகமாக நான் மீறுவதில்லை.''

அந்தத் திடம் என்னை குலுக்கிவிட்டது. ''நீங்கள்...'' என்று இழுத்தேன். திடீரென்று என் ஞாபகம் திறந்துகொண்டது ''நீங்கள் புகாரின் அல்லவா?''

அவர் புன்னகையுடன் ''ஆம்'' என்றார்.

"வணக்கம் தோழர். நீங்கள் இங்குதான் இருக்கிறீர்களா? எதிர் பார்க்கவேயில்லை. உங்களைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி." என் உளறலை நானே உணர்ந்து நிறுத்திக்கொண்டேன்.

புகாரின் மெல்ல சிரித்தார்.

"என் பெயர் அந்திரியான் புரோஹரவ். நான் ஒரு இறையிலாளனாக இருந்தேன்."

"இருந்தீர்கள்...?"

"ஆம், வெகுகாலம் முன்பு."

அந்தச் சங்கடமான அமைதியைத் தவிர்க்க விரும்பினேன். ஆனால் ஏதும் பேச முடியவில்லை.

"நீங்கள் தொழிற்புரட்சி பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறீர்கள் அல்லவா" என்றார் புகாரின்.

"ஆம்" என்றேன். எனக்குள் ஏற்பட்ட பரபரப்பான சந்தோஷம் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. 'சிலுவையும் ஆவி யந்திரமும்' நானே அபத்தமாகவும் அதிகப் பிரசங்கித்தனமாகவும் உணர்கிற பழைய நூல். பழையதோர் விலைப்பட்டியல்போல ஒவ்வொரு வரியும் நகைப்புக் கிடமானதாக ஆகிவிட்டது அதில். ஆனால் அதை புகாரினைப் போன்ற ஒருவர் படித்திருப்பதும், ஞாபகம் வைத்திருப்பதும் இந்நிலையிலும் பெரிய அங்கீகாரமாகப்படுகிறது எனக்கு. உலகியல் கவர்ச்சிகளில் மிகமிக வலுவானது எழுத்தாளனுக்கு தன் எழுத்துமீது இருக்கும் பற்று. ஆனால் என் பரபரப்பை முகத்தில் காட்டாமலிருக்கும் திடம் எனக்கிருந்தது.

"ஆர்வமூட்டும் நூல்" என்றார் புகாரின். 'சிலுவையை எந்திரங்களுக்கு எதிரான ஒரு தேடலாக நீங்கள் உருவகித்திருந்தீர்கள் இல்லையா? இடையனின் வளைதடியே சிலுவை. இடையர்கள் எங்கும் தங்குவதில்லை. தொலைதூரப் பசுமை நோக்கிச் சென்றபடியே இருக்கிறார்கள். எந்திரங்கள் தங்கிவிடுபவர்களுக்குரியவை என்று எழுதியிருந்தீர்கள்."

"பழைய நூல்" என்றேன்.

"நூல்களில் அப்படி பேதமில்லை" என்றார் அவர்.

பேச்சை மாற்றும் பொருட்டு நான் "தோழர் புகாரின், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது ஒரு விபரீதமான காலகட்டம்தானே? இல்லை, இவையெல்லாம் இப்படித்தான் என்றுமே இருந்து வந்துள்ளனவா? இவைபற்றித் தெரியாத ஒரு பாதுகாப்பான உலகில்தான் நாம் இதுவரை வாழ்ந்து வந்தோமா?"

புகாரின் தன் ஈரத் தலைமயிரைக் கோதி நீவி விட்டார். "இல்லை தோழர் அந்திரியான். இதுபற்றி உறுதியாக ஏதும் கூறுவதற்கில்லை. என்னிடம் இப்போது எவ்விதமான உறுதிப்பாடும் இல்லை" என்றார்.

"ஏன்?" என்றேன்.

"ஒரு தத்துவ ஆசிரியனாக என்னை நான் கற்பனை செய்துகொண்ட காலம் இருந்தது. இப்போது எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. இன்று நான் வாழ்வது திட்டவட்டமான பொருட்களும் புரிந்துகொள்ளக்கூடிய இயக்கங்களும் இல்லாத ஓர் உலகில். நான்கு பக்கமும் வெண்ணிறச் சுவர்களினாலான அறை. இரவும் பகலும் இல்லாதபடி எப்போதும் சீரான ஒளி. எப்போதும் துல்லியமான மௌனம்..."

"தோழர் நீங்கள் வதையறையிலேயா இருக்கிறீர்கள்?"

"ஆம். என் விசாரணை இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ளது. என் பிரக்ஞைகளை முற்றிலும் நொறுக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கிறது."

"மௌனச் சிறையில் எவரும் ஆறுமாதம் தாக்குப் பிடித்ததில்லை என்பார்கள்..."

"ஆம், மௌனச் சிறைதான். சுவர்களின் தூய வெண்ணிறத்துக்கு சொற்களையெல்லாம் உறிஞ்சிவிடும் வல்லமை உண்டு. மனதின் சொற்களைக்கூட. ஆரம்ப நாட்களில் என் மனம் பிரம்மாண்டமான ஆலைபோல புகைவிட்டபடியும் ஓலமிட்டபடியும் இயங்கி சொற்களை உற்பத்திசெய்து குவித்தபடி இருந்தது. பிறகு அதன் எந்திர உறுப்புகள் தேய்ந்தன. ஓசையின் கடூரம் குறைந்தது. மூலப் பொருட்கள் இல்லாமலாயின. உற்பத்தியான சொற்களும் வெண்சுவர்களில் மறைந்தன. இப்போது என் இயந்திரம் உராய்வே இல்லாமல் மிக மௌனமாக ஓடிக்கொண்டிருகிறது. எதையும் உற்பத்தி செய்யாமல். நான் உளறுகிறேனா?"

"இல்லை. ஆனால் ஏதோ நாடக உரையாடல் போலிருக்கிறது..."

"இருக்கலாம். இப்போது என் பேச்சு முழுக்கப் படிமங்களால் நிரம்பியுள்ளது. வெளியுலகிலிருக்கும் ஒவ்வொன்றும் நமக்குள்ளும் இருப்பதை மிகத் துல்லியமாக உணர முடியக்கூடிய இடம் இது. அவையெல்லாம்தான் சொற்களாகவும் படிமங்களாகவும் உள்ளன. அவற்றைக்கொண்டே நாம் பேச முடிகிறது, யோசிக்க முடிகிறது. நீங்கள் பேச முன்வந்தபோதுகூட நான் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்." புகாரின் தளர்த்திக்கொண்டார். "உங்களுக்கு சலிப்பாக இல்லையல்லவா?"

"சொல்லுங்கள்" என்றேன்.

"மனம் என்பது இருவகையான செயல்பாடுகள் பின்னி உருவாகும் ஒரு ஓட்டம்தான். தருக்கமும் படிமமும். ஒன்று பலவீனமாகும்போது இன்னொன்று வலுப்படுகிறது. ஒன்று இன்னொன்றின்மீது படிய மூற்படுகிறது. தத்துவவாதி தருக்கத்தின் சரடைப் பின்தொடர்கையில் கவிஞன் படிமங்களின் சரடைப் பின்தொடர்கிறான். இரண்டும் அதீத

நிலைகள். அதீதநிலைகள் மூலம் மட்டும் அடையப்படக்கூடிய சில தருணங்கள் மன இயக்கத்தில் உண்டு. தத்துவவாதியும் கவிஞனும் அவற்றைத் தங்கள் மிகச் சிறந்த படைப்புக் கணங்களில் தொட்டுவிடக் கூடும். ஆனால் இவ்விரு ஓட்டங்களும் ஒரேயளவு தீவிரத்துடன் ஒன்றையொன்று பயன்படுத்திக் கொண்டபடி இயங்கும் படைப்பூக்கமே முழுமையானது. இப்போது எனக்கு புஷ்கின் கவிதைகளைவிடவும் மார்க்ஸின் சித்தாத்தங்களைவிடவும் தஸ்தயேவ்ஸ்கி, தல்ஸ்தோய் ஆகியோரின் புனைவுலகம்தான் மகத்தானதாகப் படுகிறது. முந்தைய இருவரும் அரை உண்மைகளை அழுத்தம் தந்து முன்வைப்பவர்கள்...''

"புஷ்கினைப் பற்றியா அப்படிச் சொல்கிறீர்கள்?''

"ஆம், அவருடைய கவியுலகம் கற்பனாவாத மரபின் சிகரங்களில் ஒன்று. உச்சகட்ட மன நெகிழ்வு படிமங்களாக மாறுவதையே அவர் கவிதைகளில் காண்கிறோம். 'வெண்கலக் குதிரைவீரனின்' வரிகளை நேற்று நினைவு கூர்ந்தேன். அதிகாரத்தின் ஆணவத்தின் முன்பு தோற்கடிக்கப்பட்டு சிதைந்து அழியும் சாமானியனின் துக்கத்தைக் கூறிய கவிதை அது. அந்தப் பெருவெள்ளம்... அந்த வெள்ளம் அடங்கி அனைத்தும் சகஜநிலைக்குத் திரும்பியபிறகு அந்தப் பெருவெள்ளத்தின் பிரளயகணத்தில் புஷ்கின் அறிந்த தரிசனத்திற்கு நேர் எதிரான ஒன்று கட்டுப்படக்கூடும். அதை நாம் புஷ்கினின் கவியுலகில் தேடினால் கிடைக்காது. மார்க்ஸின் மகத்தான தருக்கம் கையில் அகப்பட்ட அனைத்தையும் அடுக்கி வானளாவிய கோபுரம் ஒன்றைக் கட்டி அதன் மீது ஏறி நின்று உலகைத் தொகுத்துப் பார்க்கிறது. அதனருகே இன்னும் உயரத்தில் சின்னஞ்சிறு குருவி ஒன்று அனாயாசமாக நீந்திக் கொண்டிருக்கும். அப்பறவையின் பார்வைக் கோணத்தை மார்க்ஸின் சித்தாந்தத்திற்குள் நாம் காண முடியாது. பெரும் காவிய கர்த்தர்களும் நாவலாசிரியர்களும் அப்படியல்ல. அவர்களுக்கு இரண்டு தரிசனத் தளங்களும் உண்டு. இரண்டு வகை மனஇயக்கங்களும் ஒன்றோடொன்று முட்டிமோதி, ஒன்றையொன்று உண்டு செரித்து ஒவ்வொன்றையும் இருபக்கங்களையும் தொட்டுத் தெளிவுபடுத்தியபடி, முன்னகர்வதை அவர்கள் படைப்புலகில் காணலாம்.''

எனக்கு அது புதிதாக இருந்தது. நான் அதுவரை காவியகர்த்தர்களையும் நாவலாசிரியர்களையும் தத்துவத்தையும் கவிதையையும் இணைக்கக் கூடியவர்கள் என்றே எண்ணியிருந்தேன். அதைச் சொன்னேன்.

''ஆம். அப்படித்தான் இதுவரை கூறப்பட்டிருக்கிறது'' என்றார் புகாரின். ''உண்மைகளைத் தத்துவம் அறிகிறது, உணர்வுநிலைகளை கலை அறிகிறது. நடுவே ஒரு பாலமாகப் புனைகதையாளன் இயங்குகிறான் – தி மிட்ரி மெலக்கோவின் வரி இது. ஆனால் தோழர், பெரும் நாவலாசிரியர்கள் ஒருபோதும் தத்துவ தரிசனங்களைக் கடன்

வாங்கி அவற்றுக்குக் கவிதைமொழியைத் தர முயல்வதில்லை. கவித்துவ வெளிப்பாடுகள்மீது தத்துவச் சட்டகத்தை வைத்து அழுத்தவும் முயல்வதில்லை. அவர்கள் தாங்களே தத்துவவாதிகளாகவும் கவிஞர் களாகவும் இருக்கிறார்கள். தாக்குதலுக்குத் தரைப்படையையும் வான்படையையும் ஒரே சமயம் அனுப்பும் தளகர்த்தர்கள் அவர்கள். அவர்களில் கவித்துவத்தின் கால்களாக தருக்கமும் தருக்கத்தின் சிறகுகளாகக் கவித்துவமும் செயல்படுகிறது. புஷ்கினும் மார்க்ஸும் சந்திக்கும் புள்ளியில்தான் தஸ்தயேவ்ஸ்கி பிறக்கிறான்.''

''தோழர், இதை நீங்கள் முன்பு எழுதியிருக்கிறீர்களா?''

''நான் இங்கு வருவதற்கு முன்பு இலக்கியத்தைப் பொருட்படுத்தியதே இல்லையே...''

''அது பற்றி வருந்துகிறீர்களா?''

''ஆம், கண்டிப்பாக. தத்துவம்மீது கொண்ட அதீத நம்பிக்கை காரணமாக அனைத்துக் கவித்துவங்களையும் அசட்டுப் பலவீனங் களாகவேப் பார்த்தேன். எனக்கும் லெனினுக்கும் ட்ராட்ஸ்கிக்கும் அத்தனை மார்க்ஸிய சித்தாந்திகளுக்கும் இந்தத் தவறு நிகழ்ந்தது. இந்த தவறு செய்யாத ஒரே கம்யூனிஸ்ட் மார்க்ஸ்தான். மொத்த மார்க்ஸிய தரிசனத்தையும் ஒரே வரியில் நிராகரிக்கும் ஒரு பெருங்கவிஞனைக்கூட அவரால் தடையின்றி ஏற்க முடிந்திருக்கும்...''

அவரது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். சிறைப்பட்டு இறுதி நாட்களை எண்ணுபவர்போல அவர் தோற்றமளிக்கவில்லை. ஒரு விடுமுறை வாசஸ்தலத்தில் மாணவர்களுடன் உரையாடியபடி தங்கியிருக்கும் பேராசிரியர் போலிருந்தார். மனதின் விந்தையான பாவனைகள் பற்றியே அப்போது எண்ணிக் கொண்டிருந்தேன்.

''சிறைப்பட்ட பிறகு சில நாட்களிலேயே என் மனம் தருக்கத்தை உதறிப் படிமங்களின் கூத்தாக மாறிவிட்டது. மழைக்கு முன் பறவைகள் கும்மாளமிடுமே அதுபோல. அது ஒரு கட்டற்ற படைப்பூக்க நிலை. சில படிமங்களும் தரிசனங்களும் கண்டிப்பாக மகத்தானவை. சில அர்த்தமற்றவை. சில பயங்கரமானவை. பெரும்பாலானவை அபத்தமானவை. பிறகு பறவைகள் தரையிறங்கிப் படிந்தன. மீண்டும் மூளை விழித்துக்கொண்டது. எனது அறையின் பத்தடிக்குப் பத்தடி அளவை என் மனதை அளக்கும் அளவுகோலாக மாற்றிக் கொண்டேன். கச்சிதமான காலடிகளுடன் இருபதுமுறை அதைச் சுற்றி வருகையில் மன ஓட்டத்தின் ஒரு அலகு ஆகிவிடும். ஒரு நாளைக்கு நூறுமுதல் முன்னூறு அலகுவரை யோசிப்பேன். பெரும்பாலும் எதிர்கால சந்ததிக்கு நான் கூற வேண்டிய விஷயங்கள். என் தரப்பு நியாயங்கள். எனது நீதிமன்ற வாக்குமூலத்தை எப்படியும் ஆயிரம் தடவையாவது மீண்டும் மீண்டும் அமைத்திருப்பேன். ஒரு கட்டத்தில் அதுவும் சலித்துப் போயிற்று. என் கால்கள் காலவெளியைப் பகுக்க அதற்கேற்ப மனம் தன் களஞ்சியத்திலுள்ள சொற்களை மாற்றிமாற்றி அடுக்கியபடி இருப்பதை

ஒரு நாள் உணர்ந்தபோது துணுக்குற்றேன். உங்களுக்குத் தெரியுமா, சிந்தனை என்பது ஒரு ஆரம்பநிலையில்தான் கிளர்ச்சி தரும் அனுபவம். பழகிவிட்டால் ஒரு குறிப்பிட்ட சட்டகத்திற்குள் குறிப்பிட்ட பாணியில் சிந்தித்தபடியே போக முடியும். அதற்கு முடிவே இல்லை. அதன்பிறகு தான் இந்த தரிசனத்தை அடைந்தேன். சிந்தனையைக் கவித்துவத்தால் சிதறடிக்க வேண்டும். பிறகு கவித்துவத்தை சிந்தனையால் ஒழுங்கு படுத்த வேண்டும்.'' புகாரின் பெருமூச்சுவிட்டார். சிரித்தபடி, ''வேடிக்கையாக இருக்கிறது இல்லையா? இந்த மாதிரி மரணத்தின் விளிம்பில் நிற்கையில் இலக்கிய விசாரம் செய்வது? அறிவுஜீவுகளுக்கு விவஸ்தையே இல்லை.''

நானும் சிரித்துவிட்டேன்.

புகாரின் மேலும் சிரித்தபடி ''இதோ இவர்களைப்போலத்தான் நாமும்'' என்றார். இருவர் உடல்களை இணைத்துக்கொண்டிருந்தனர். ''இவர்களில் எவரும் அதிகபட்சம் ஒரு வருடத்தை தாண்டப் போவதில்லை. அதை அறியாத எவரும் இங்கு இல்லை. ஆனால்...''

''இப்படிச் செய்பவர்கள் துவக்ககாலக் கைதிகள்தான்'' என்றேன். ''அவர்களுக்குத்தான் காலம் தாங்க முடியாததாக இருக்கிறது. பெரும்பாலோர் ஆரம்ப நாட்களில் மிதமிஞ்சி சுயபோகம் செய்கிறார்கள். காமம் நிரம்பிய பகற்கனவுகளில் திளைக்கிறார்கள். ஒருநாளைக்கு எட்டு நடலை சுயபோகம் செய்பவர்கள்கூட உண்டு. ரத்த அழுத்தம் குறைந்து மயங்கி விடுவார்கள். ஒரு சிலர் இறந்தும் போயிருக்கிறார்கள். காலத்தை ஒரு சித்திரவதையாளனாகப் பணிக்கமர்த்தியிருக்கிறார்கள் இங்கு. காலத்தை ஏமாற்றத்தானே மனிதன் காமத்திற்கு இத்தனை பூதாகார வடிவம் தந்தான்.''

''இறையியலாளர் உங்களை விட்டு நீங்குவதில்லை'' என்று புகாரின் உரக்கச் சிரித்தார். ''உங்களுக்கு சுயபோகம் உண்டா? இல்லை, இவர்களைப் போல...''

''பாதிரிமார்கள் பாவம் என்று கருதுவதை மிக அந்தரங்கமாகவே செய்ய முடியும்'' என்றேன். இருவரும் சிரித்தோம். ''ஆனால் எனக்கு ஏனோ பெண்கள் ஞாபகம் வருவதில்லை. கிறிஸ்துதான் ஞாபகம் வருகிறார்'' என்று சிரிப்புக்கிடையே சொன்னேன்.

புகாரின் மேலும் உரக்கச் சிரித்தார். ''பெண்கள்தான் கிறிஸ்துவின் மணப்பெண்ணாக முடியும் என்றில்லையே'' என்றார்.

''நீங்கள்?'' என்றேன்.

''என் அறையில் விளக்கு அணைவதே இல்லை. வெளிச்சத்தில் அதைச் செய்வது மிகவும் சங்கடமானது. எனக்கல்ல, என்னிடம் வரும் பெண்களுக்கு.'' புகாரின் வெட்கிச் சிரித்தபடி கூறினார். ''குறிப்பாக அன்னா... மிகவும் கூச்சமானவள் அவள்.''

எனக்கும் மிகவும் சங்கடமாக இருந்தது. அன்னா எங்கோ இருக்கும் ஒரு பெண், பிம்பமல்ல.

"நான் இந்தக் கைதிகளைப் போன்றவனல்ல என்ற பிரக்ஞையை என்னால் கடக்கவே முடியவில்லை. எனவே எனக்கு இதுபோல் சாத்தியமில்லை. கனவுகளில் அது நிகழ்ந்தால்தான் உண்டு. அதற்குக் குறைவேயில்லை." புகாரின் மீண்டும் சிரித்தார். "ஒருவேளை ட்ராட்ஸ்கியோ ஸ்வெஸ்திலேவோ லெனினோ இங்கிருந்தால் நாங்கள் இதைச் செய்யமுடிந்திருக்கும்." இருவரும் தீவிரமாக குலுங்கிக் குலுங்கிச் சிரித்தோம்.

"மனம் ஒரு சட்டகமாவதுபற்றிச் சொன்னீர்கள் தோழர். அதுமிகவும் ஆபத்தானது" என்றேன். "ஒரு காரணமும் இல்லாமல் ஒரு பத்து பதினைந்து சொற்றொடர்கள் நம் வழியாகச் சென்றபடியே இருக்கும். இது சாதாரணமாகவும் நிகழ்வதுதான். சாதாரண நிலையில் நாம் அதைக் கவனித்தால் உடனே அதை நிறுத்திவிடமுடியும். இங்கு ஒரு கட்டத்தில் நம்மால் அச்சொற்றொடர்களை எத்தனை முயன்றாலும் நிறுத்த முடியாமல் போகும். அவற்றைத் திசைதிருப்பவோ மாற்றியமைக்கவோ கூட முடியாது. சொற்களின் வதையிலிருந்து தப்பத்தான் – இருங்கள் தோழர், காலம் என்ற சித்திரவதையாளனின் ஆயுதம்தான் சொற்கள், இல்லையா – பகற்கனவுக்கும் சுயபோகத்திற்கும் போகிறான் மனிதன். பின்பு அதுவும் ஒரு வதையாக ஆகிவிடும். காலம் பிரதிபலிக்காத எதும் இல்லை. காலத்தைப் பிரதிபலிக்கும் எதுவும் நம்மை வதைக்கின்றன இங்கு. பகற்கனவுகளும்கூட அதேபோல ஒரு நிரந்தரமான பாணியை அடைகின்றன. ஒரே பகற்கனவை மீண்டும்மீண்டும் கால ஆரம்பிக்கிறோம். எத்தனை முயன்றாலும் அதைத் தடுக்க முடிவதில்லை. ஒரு கட்டத்தில் மனம் பகற்கனவுகளும் பாழ்சொற்களும் கலந்த ஒரு பெரும் அருவியாகக் கொட்டுகிறது. கரையோரப் பாறை வழுக்கலில், புல்பூண்டுகளைப் பற்றியபடி, கையும்காலும் பதைக்க பிரக்ஞை பதறித்துடிக்க நாம் நின்றுகொண்டிருக்கிறோம். மிக கணிசமானவர்கள் விழுந்துவிடுகிறார்கள்..."

"இந்தப் படிமத்தை நீங்கள் பாபத்தைப்பற்றி விளக்க பயன்படுத்தியிருந்தீர்கள் அல்லவா?"

சிரித்துவிட்டேன். "உங்களுக்கு இறையியலாளர்மீது உள்ள ஏளனம் எப்போதும் உள்ளது, தோழர் புகாரின்."

"மனம் என்பதும் பாவம் என்பதும் உண்மையில் வேறு வேறல்ல என்ற தெளிவை நோக்கிச் செல்கிறீர்கள்..."

எனக்கு சிரிப்பு புரைக்கேறிவிட்டது. எப்படிப்பட்ட நிலையில் எப்படிப்பட்ட இடத்தில் இப்படி சிரிக்கிறோம் என்ற பிரக்ஞை ஏற்பட்டபோது மனம் தன்னிலைக்கு மீண்டது.

"இங்கிருந்து ஒருவன் மீண்டு சென்றால் பெரும் படைப்பாளியாக ஆகிவிடக்கூடும்" என்றார் புகாரின். "அவன் எதைப் பற்றி எழுத வேண்டுமோ அதுமட்டும் உள்ள உலகம் இது. தஸ்தயேவ்ஸ்கிக்கு அந்த வரம் கிடைத்தது."

புன்னகைத்தபடி "தோழர் ஒன்று கேட்கலாமா" என்றேன்.

"கேளுங்கள்."

"எல்லாம் முடிந்து விடுதலை ஆகும்போது நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள்?"

புகாரின் ஒருகணம் அதிர்ந்தார். முகம் சிவந்து மூக்கு ரத்த நிறமாயிற்று. கண்கள் கோபத்தால், தன்னிரக்கத்தால், துவேஷத்தால் மாறிமாறி உயிர் கொண்டு பின்பு பளீரென்று சிரித்தன. வெடிச் சிரிப்பில் அவரது தாடை குதியாட்டமிட்டது. தோள்கள் குலுங்கின. அச்சிரிப்பைப் பார்த்தபடி இருந்தபோது எனக்குக் குற்றவுணர்வு எழுந்து உடலெங்கும் பரவியது.

"மன்னித்துவிடுங்கள் தோழர், தயவு செய்து..." என்றேன்.

"இல்லை, நீங்கள் கேட்டது சரிதான்" என்றார் புகாரின். ஆழ்ந்த மெல்லிய குரலில் "எந்த நிலையிலும் மனிதனுக்கு எதிர்காலம் தேவையாக ஆகிறது. தற்கொலைக்கு முந்தைய கணத்தில்கூட." அவர் தலையை ஆட்டினார். "நீங்கள் உளகித்தது சரிதான் தோழர். நான் ஒரு பெரும் நாவலாசிரியனாக என்னைக் கண்டுகொண்டிருக்கிறேன். நீங்கள்?"

"நான் ஒரு புதிய மதத்தை நிறுவவிருக்கிறேன்" என்றேன். "அது சாத்தானையே தன் கடவுளாகக் கொண்டிருக்கும்."

"அப்படியா?"

"நீங்கள் எண்ணுவது புரிகிறது தோழர். இது மனக்கசப்பின் தோற்றலைப்பாடு அல்ல. இது ஒரு தெளிவான தரிசனம். சாத்தானை நாம் சார்ந்து கவனித்ததில்லை. யார் அவன்? பிளேட்டோ அல்லவா? சாக்ரடீஸ் அல்லவா? இவ்வுலகைப்பற்றி மண்ணில் நின்று யோசித்த மேதைகள் அவர்கள். எது உண்மையிலேயே முக்கியமோ அது பற்றிப் பேசியவர்கள். அதிகாரமே உலக வாழ்வின் சாரம். அதை அளிப்பவை இரண்டையும் வலிமையும். சாத்தான் அவற்றின் கடவுள்..."

புகாரின் தலையசைத்தார்.

"கிறிஸ்தவம் பெரும் சோர்வை உலகமெங்கும் பரப்பிவிட்டது தோழர். உலகியல் மறுப்பையும் சரணாகதியையும் அது கற்பித்தது. பலவீனையப் புனிதப்படுத்தியது. கிறிஸ்து யார்? தோல்வி அடைந்த ஓர் இலட்சியவாதி. அவரது தோல்வி தவிர்க்க முடியாதது. இருக்கும்

விஷயங்களுக்குப் பதிலாக இல்லாத விஷயங்களை முன்வைக்க முயன்ற கனவுஜீவியின் சரிவு அது. அந்தத் தோல்வியை இரண்டாயிரம் வருடங்களாகக் கிறிஸ்தவம் மானுடத்தின் ஆகப் பெரிய இலட்சியமாக முன்னிறுத்தியது. கிறிஸ்துவின் முகம் காட்டுவது என்ன? துக்கம், புறக்கணிப்பு, தனிமை, நிராசை ஆகிய உணர்வுகளல்லவா? நமது வீடுகளில் அனைத்திலும் சிலுவையேறிய ஏசு, என் தேவனே என்னை ஏன் கைவிட்டீர் என்று ஓயாமல் கூவியபடி இருக்கிறார். அதை வழிபட்டவர்கள் தோல்வியிலும் சரணாகதியிலும் துக்கத்திலும் இழப்பிலும் முழுமையையும் ஆனந்தத்தையும் காண்பவர்களாக ஆனார்கள். அவர்கள்மீது திருச்சபை பெரும் அதிகார பீடமாக எழுந்தது. பாதிரிகளை, புனிதத் தந்தைகளை ஊக்கம்கொள்ள வைத்தது பைபிள் அல்ல. சாக்ரடீஸும் பிளேட்டோவும்தான். தங்கள் அபிக்களில் அவர்கள் அதையெல்லாம்தான் படித்தார்கள். அவர்கள் வழிபட்டது போகத்தையும் அதிகாரத்தையும். அவர்களது கடவுள் சாத்தான்தான். அவர்கள் அனைவருமே சாத்தானைப்போல பெரும் பிரசங்கிகள் என்பதை கவனியுங்கள். ஐரோப்பிய வரலாறு என்பது கிறிஸ்துவை மக்களிடையே பரப்பியதன் மூலம் சாத்தான்கொண்ட வெற்றியின் கதைதான்.''

புகாரின் மீண்டும் புன்னகை புரிந்தார்.

''என்ன சொல்கிறீர்கள் தோழர், மனிதனின் இயல்பான நிலை வெற்றியும் மகிழ்ச்சியும் களியாட்டமும் அல்லவா? இச்சையும் வலிமையும்தானே அவனது ஆதாரங்கள்? அதிகாரம்தானே அவனது இலட்சியம்? சொல்லுங்கள். இந்த ஏழை மக்களுக்கு நாம் சாத்தானை எடுத்துச் செல்ல வேண்டும் தோழர். அடிமைகளாகவும் ஆட்டுமந்தை களாகவும் வாழும் மக்களுக்கு இன்று சாத்தானின் இச்சையும் வலிமையும்தான் தேவை. இரண்டாயிரம் வருடங்களாக உலகிலுள்ள அத்தனை அரசாங்கங்களும் திருச்சபையையே தங்கள் முன்மாதிரியாகக் கொண்டுள்ளன. பைபிள்களையும் கிறிஸ்துக்களையும் புனிதர்களையும் படைத்துத் தங்கள் பிரஜைகளுக்குத் தந்து நுகத்தடிகளையும் பலிபீடங் களையும் நோக்கி அவர்களை அணிவகுக்கச் செய்கின்றன அவை. அந்த அதிகாரத்தை உடைக்க சாத்தானின் வீரியத்தால் மட்டுமே முடியும் தோழர்...''

புகாரின் ''மிகுந்த கோட்பாட்டுத் தெளிவுடன் பேசுகிறீர்கள் தோழர் அந்த்ரியான்'' என்றார். ''இப்படியே மிக விரிவாக உங்களால் பேச முடியும் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் இந்தத் தெளிவுக்கு நீங்கள் தந்த விலை மிக அதிகம்; இல்லையா?''

''விலையா? என்ன விலை?''

''உங்கள் ஆத்மாவிற்கு மிக முக்கியமானவையாகப் படும் அத்தனை விஷயங்களையும் ஈவிரக்கமின்றிப் பொசுக்கி அழித்துவிட்டு நீங்கள்

இந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருப்பீர்கள் என்று என்னால் ஊகிக்க முடிகிறது'' என்றார் புகாரின்.

நான் கடும்கோபம் கொண்டேன். அந்தக் கோபம் எப்படி கணநேரத்தில் என் உடம்பெங்கும் பரவி, திகுதிகுவெனத் தழல்விட்டது என்று இப்போது யோசித்தபோது புரியவில்லை. பாய்ந்து எழுந்து, வலிப்புபோல் முகமும் உடலும் இழுபட்டு அதிரக் கத்தினேன். அவரை பசப்புக்காரன் என்றும் பொய்யன் என்றும் சொன்னேன். அவரது சொற்கள் இரண்டாயிரம் வருடங்களாக நயவஞ்சகப் பாதிரிமார்களால் கற்பிக்கப்பட்ட கேவலமான ஒழுக்கநெறிகளிலிருந்து பிறப்பவை என்றேன். வெகுஜனத் துரோகி என்றும், ஆளும் வர்க்கத்தின் கூட்டிக் கொடுப்பவன் என்றும், கோழை என்றும் அவரை வசைபாடினேன். அவை போதாது என்று மனம் தாவவே கடைசிக் கட்டத் தாக்குதலாக அவரது தண்டனை அவருக்கு உகந்ததுதான் என்று கூவினேன். மின்சார நாற்காலியில் அவர் மூளை கருகிச் சாகும்போது அவருக்கு உகந்ததையே அடைகிறார்...

புகாரின் அதே குரோதத்தைப் பிரதிபலித்து எனக்கு அளித்தார். ஆனால் மிகவும் கட்டுப்பாட்டுடனும் நிதானத்துடனும். ''ஏன் தோழர், அப்படியானால் நீங்கள் எதன் பொருட்டு மின்நாற்காலியில் அமரவிருக்கிறீர்கள்? ஒருவேளை நான் அமர்ந்த அதே நாற்காலியில் நீங்களும் அமர்வீர்கள்...''

அத்தனை பெரிய மனவெறுமையை நான் அதற்குமுன் அடைந்ததில்லை. அழக்கூட முடியவில்லை. அழுவதற்கும் சொற்கள் தேவை. களைப்புடன் சாய்ந்துவிட்டேன்.

''இதிலெல்லாம் எந்தவித அர்த்தமும் இல்லை தோழர் அந்திரியான்'' என்றார் புகாரின். ''நம்மைவிட கறிப்பன்றிகள் மேல். அவை சாவுக்கு முந்தைய கணங்களில்கூட சகஜமாக இருக்கின்றன. சித்தாந்தங்களையும் விளைவுகளையும் உருவாக்கி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதில்லை.''

அச்சொற்களை ஓர் அசரீரிக் குரல்போலக் கேட்டேன். எனக்கு ஏனோ மிகவும் மூச்சுத் திணறலாக இருந்தது. ஒரிரு சொற்கள் இருந்தால்கூடப் போதும், மனதை அதைவைத்து நிரப்பிக்கொள்ளலாம். மனம் என்பது ஒரு கலைடாஸ்கோப் அன்றி வேறென்ன? ஒரிரு சொற்களின் வண்ணங்கள். முடிவற்ற பிம்ப மாற்றங்கள்.

வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தோம் (இது ஒரு பிரமைதான். மொத்தம் மூன்று மணி நேரம்தான் குளியலுக்கு அனுமதிக்கப் பட்டிருந்தது.) சற்று தள்ளி உயரமான நடுத்தர வயது மனிதர் தன் பெஞ்சிலிருந்து எழுந்து போவதும் பிறர் அவரை வணங்குவதும் தெரிந்தது. ''அவர் பெயர் அந்திரெய் பெத்ரோவிச் கிரின்யேவ்'' என்றேன். ''வெண்படையின் ஒரு பிரிவுக்குத் தளகர்த்தராக இருந்தார்.''

"அவரை ஏன் விசாரணை செய்கிறார்கள், சுட்டுத்தள்ளாமல்?" என்றார் புகாரின். "அதுதானே மரபு?"

"இவர் களத்தில் காயம்பட்டுக் கைதியானவர். கடுமையாக முயன்று இவர் உயிரைக் காப்பாற்றி இங்கு வைத்திருக்கிறார்கள். இனி பகிரங்க விசாரணை, துப்பாக்கி குண்டுகள்... அவ்வப்போது சிலரை இவ்வாறு முறைப்படிக் கொல்லவேண்டிய அவசியம் இருக்கலாம். நீதி இல்லை என்று எவரும் கூறிவிடக் கூடாதே..."

"அழகிய மனிதா" என்றார் புகாரின்.

"அவர் பிரபு. அவரது தந்தை சூரின்பெக் குபெர்னியாவில் கவர்னராக இருந்தவராம். முதற்கட்ட விசாரணையை முடித்துவிட்டார்கள். மிகக் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டார் என்று கேள்வி. அவரது அறையில் ஒரு கருவி இருக்கிறது. அவர் ஆழ்ந்து தூங்கி குறட்டைவிட ஆரம்பித்ததும் அது அலறி அவரை எழுப்பி விட்டுவிடுமாம். அவர் அறைக்கு வெளியே நாளில் பெரும்பகுதியில் விசித்திரமான உராய்வு ஒலிகளும் கிரீச்சிடல்களும் கேட்கும்படி கருவிகளை அமைத்திருக் கிறார்களாம். நிறையக் கதைகள். இதற்குள் அவர் இங்கு ஒரு வீரபுருஷன் ஆகிவிட்டார். எந்தச் சித்திரவதையும் அவரை முறிக்க முடியவில்லை. பிரபுக்களுக்குரிய முறையில் நெஞ்சு விரித்து, தலை நிமிர்த்தி, விசாரணை கமிசாரை 'குடியானவப் பயலே' என்று அழைத்து, தன் விசுவாசம் ஜாருக்கு மட்டும்தான் என்றாராம்."

"அவர் ஒரு படைவீரர்" என்றார் புகாரின். "தூய்மையான, கலப்படமேயில்லாத, போர்வீரர். அத்தகையோரை உருவாக்கவே பல நூற்றாண்டுகளாக மன்னராட்சிமுறை முயன்று வந்துள்ளது. தத்துவங் கள், மனோபாவங்கள், சடங்குகள், குறியீடுகள், பயிற்சி முறைகள்என்று பல விஷயங்கள் இதன் பொருட்டு படிப்படியாக உருவாக்கி மேம்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவரைப் போன்ற பல்லாயிரம் போர் பல்வேறு விசுவாசங்களுக்காக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சாவை நோக்கிச் சென்றிருக்கிறார்கள்..."

"நீங்களும் ஒரு வீரர்..."

"இல்லை. வீரன் என்றால் அவன் வீரன். படைக்களத்தில் அதைப் பார்த்திருக்கிறேன்."

"அவனா"

"அவன்தான். மரணம் அவனுக்கு ஒரு பொருட்டேயல்ல. தன் மரணம் பிறர் மரணம்..." என்றார் புகாரின். "அதை ஒரு மகத்தான குணநலனாக என்று நம்ப நமது மன்னராட்சிப் பாரம்பரியம் நமக்குக் கற்பித்திருக்கிறது. ஆனால் உண்மையில் அது ஒருவகையான சுரணையின்மை; அதன் விளைவான மூர்க்கம். பீரங்கி நோக்கிப் பாய்ந்து செல்லும் மாபெ எந்திரங்களுக்குரிய நற்குணம் அது..."

"தோழர் புகாரின், உயிராசையையும் அதன் விளைவான சஞ்சலத்தையும் கோழைத்தனத்தையும் நியாயப்படுத்துகிறீர்களா...?"

"உயிராசையைக் கேவலமாக ஏன் எண்ண வேண்டும்? அது இயல்பானது. வாழ்வு மீதான காதலின் விளைவு அது. தோழர் அந்திரியான், எனக்கு வாழ்ந்து போதவில்லை. மண்ணும் காற்றும் வானும் ஒளியும் நீரும் என் புலன்களுக்குப் பேரின்பம் தரக் கூடியவையாகவே இப்போதும் உள்ளன. அவ்வின்பத்தை அத்தனை சுலபமாகத் துறக்க என்னால் முடியாது. அதே சமயம் எனக்கு வாழ்வு வெறும் போகவெளியும் அல்ல. ஐம்புலன்களுக்கு நடுவே அவற்றை ஆளும் ஓர் ஆத்மாவும் எனக்குள்ளது. அதற்குரிய தேடல்களும் தோல்வுகளும் எனக்கு உண்டு. இவையிரண்டு தளங்களுக்கும் இடையே தீராத மோதல் உண்டு. அதன் விளைவாக சஞ்சலங்களும் சமரசங்களும் உண்டு. ஒரு ஜெகூட் பாதிரிபோலவோ, இந்தப் பிரபுவைப் போலவோ மரணம் நோக்கி நடந்துசெல்ல என்னால் முடியாது. அதைப் போலவே எதையும் செய்து, எப்படியும் வளைந்து உயிர் வாழவும் என்னால் இயலாது. இரண்டுமே ஆத்மா மூடப்பட்ட அற்பர்களின் இயல்பு... வீரம் என்பது ஒரு குருட்டு மூர்க்கம்தான்."

எனக்கு மீண்டும் மிகவும் மூச்சுத் திணறியது "தோழர் புகாரின்" என்றேன் இருமியபடி. "தோழர், நீங்கள் எதன் பொருட்டு இச்சிறைக்கு வந்தீர்களோ அதில் உங்களுக்கு உறுதிப்பாடு இல்லையென்றால் நீங்கள் மிகப்பெரிய வெறுமையை அல்லவா சந்திக்க வேண்டியிருக்கும்?"

"நான் கோழையோ வீரனோ அல்ல தோழர் அந்திரியான். நான் ஓரளவு சஞ்சலம் கொள்கிறேன். சமரசம் செய்துகொள்வது குறித்தும் பூசை நக்கி வாழ்வது குறித்தும்கூட கற்பனை செய்துகொள்கிறேன். எப்படியாவது வாழ்வை நீடித்துக்கொள்வது குறித்த பகற்கனவுகளே என்னை இந்தக் குளிரில் வெதுவெதுப்பாக வைத்திருக்கின்றன. எவ்வளவும் சிறுமையின் கசப்பை விழுங்கி விட்டு வாழ்தலின் இன்பத்தைக் கற்பனைசெய்து தினைப்பேன். பிறகு குற்றவுணர்வு கொண்டு திரும்பி என் இலட்சியங்களையும் நம்பிக்கைகளையும் ஆத்தழுவிக் கொள்கிறேன். விவாதங்களாலும் உணர்ச்சிகளாலும் அவற்றை வளர்த்துக்கொள்கிறேன். இந்த ஊசலாட்டம் என்னில் மட்டுமல்ல."

"ஆனால் நான்..."

"இருங்கள் தோழர், நீங்கள் பொய் ஏதும் கூற வேண்டியதில்லை. உங்கள் பிம்பங்கள் எல்லாம் நானும் அணிபவையே. உங்கள் [illegible]த்திற்கு உங்கள் விரிவான விவாதங்களே சான்று. அந்தப் [illegible] அதிகபட்சம் பத்து சொற்றொடர்கள்தான் இருக்கும். ஜெகூட் [illegible]யைபோல..."

"ஆம், உண்மைதான்" என்றேன். கடைசி ரயிலையும் தவறவிட்டு விட்டவனில் ஏற்படும் நிம்மதி எனக்கு ஏற்பட்டது. நம்ப மாட்டீர்கள், சீக்கிரம் மரண தினம் வந்தால்கூட நல்லதுதான் என்று தோன்றியது.

"ஆனால் என் உறுதிப்பாடுகள் என்ன என்பதுபற்றி எனக்கு ஏதும் தெளிவில்லை தோழர்" என்றார் புகாரின். "மிகில்னாய் ரயில் நிலையத்தில் அந்த பயங்கரக் காட்சியைக் காண்பதுவரை தொடர்ந்து சமரசம் செய்துகொண்டுதானிருந்தேன். அதற்கு முன்பும் பெரும் மனப்போராட்டங்கள் இருந்தன. அவை கொந்தளித்து ஓயும்போது எனது கட்டுப்பாடின்றியே மனம் சமரசம் நோக்கியே நகரும். சமரசம் செய்துகொள்வதற்கு மிக அவசியமானது உரிய நியாயங்களை கண்டு பிடிக்கும் தருக்கத்திறன். எனவேதான் அறிஞர்களும் மேதைகளும் எளிதாக் சமரசம் செய்துகொள்கிறார்கள்." புகாரின் மனம் கொந்தளிப்படைவது தெரிந்தது. "அந்த ரயில் நிலையத்திற்கு ஒரு விபத்து காரணமாகவே என் ரயில் போக நேர்ந்தது. அங்கு சென்றிராவிட்டால் அதைக் கண்டிருக்க மாட்டேன். இப்போதும் சுப்ரீம் சோவியத் உறுப்பினராக இருந்திருப்பேன். அங்கு.... அங்கு குழந்தைகள் கூட்டம் கூட்டமாக செத்துப் பனியிலுறைந்து கிடந்தன. உறைபனிக் கிடங்கில் மீன்கள் போல, விழித்த கண்களுடன். பிணங்களின் உடல்மொழியை கவனித்ததுண்டா?"

"இல்லை."

"நீங்கள் போர்முனைக்குச் சென்றதில்லை அல்லவா? போரும் அமைதியும் நாவலைப் படித்தால்கூடப் போதுமானது. அத்தனை விரிவாக துல்லியமாக சித்தரிக்கிறார் தல்ஸ்தோய்..." புகாரினின் விரல்கள் நடுங்குவதைக் கண்டேன். "பிணங்களின் உறைந்த இறுதி முகபாவனையிலும் உடல் விழுந்து கிடக்கும் அமைப்பிலும் வெளிப்படும் குறிப்புகளினாலான மொழியை போர்க்களம் சென்ற எவரும் மறக்க முடியாது. சில பிணங்கள் மன்றாடும். சில பிணங்கள் அதிர்ச்சியும் அச்சமும் பெருவியப்பும் கொண்டிருக்கும். சில பிணங்கள் அப்போதும் தப்பி ஓடிக்கொண்டிருக்கும். பதற்றத்துடன் எதையோ கூற முற்படும் பிணங்களும், வலிப்புபோல ஒரு வக்கிரச் சிரிப்புடன் கிடக்கும் பிணங்களும்தான் அதிகம். கசப்புடனும் ஏளனத்துடனும் துவேஷத்துடனும் கூடிய பலவகை சிரிப்புகளை பிணமுகங்களில் காணலாம். வெறியுடன் விழித்தபடி தாக்கவரும் பிணங்கள் உண்டு. மிக அபூர்வமாகவே அமைதியான முகத்துடனோ புன்முறுவலுடனோ இறந்து கிடக்கும் பிணங்களைப் பார்க்க முடியும். பெரும் தளகர்த்தர்களுக்கு இந்த மொழியில் பிணங்களுடன் உரையாட முடியும். நெப்போலியன் அப்படிக் களத்திற்கு வந்து பிணங்களுடன் சல்லாபிக்கும் காட்சியை தல்ஸ்தோய் தீட்டிக்காட்டுகிறார்..."

"ஆம், படித்ததுண்டு. ஆனால் இது உங்கள் கற்பனை..."

"மிகில்னாய் ரயில் நிலையத்தில் நான் கண்ட பட்டினிப் பட்டாளத்தில் பிணங்கள் அனைத்தும் ஒரேபோல சரணாகதி பாவனையில் மண்ணை

அனைத்தபடி கிடந்தன. எவ்வளவு முடியுமோ அவ்வளவுதூரம் உடலைக் குறுக்கி, ஒருவரோடொருவர் ஒட்டி, புழுக்கள்போல... அவர்கள் முகத்தில் அவர்கள் எதையோ பற்றிக்கொண்டிருப்பது போலவோ, ஒளித்து வைத்துக்கொண்டிருப்பது போலவோ, ஒரு பாவனை.'' புகாரினின் முகம் மிகவும் வெளுத்துவிட்டது. விரல்களால் முகத்தை மூடிக்கொள்ள முயன்றார். விரல்கள் வலிப்பு கண்டவை போலிருந்தன.

எனக்கும் அந்தக் கடும் குளிரை உணர முடிந்தது, உடலுக்குள்.

''அதன்பிறகும் சஞ்சலம் இருந்தது. இப்போதும் உண்டு. ஆனால் என் சிந்தனையும் கற்பனையும் ஓய்ந்த எல்லையில், கிட்டத்தட்ட சரணாகதி ஆகும் தருவாயில், உடலை அதிரவைத்தபடி ஓர் உணர்வு என்னை ஊடுருவிச் செல்லும். சாத்தியமில்லை சாத்தியமில்லை என்று என் பிரக்ஞை வீரிட்டலறுகிறது. என்னால் சமரசம் செய்துகொள்ள முடியாது என்பது தீவிரமான உறுதியுடன் தெரியும். ஒரு கணம் அது பற்றிய உவகையும் மறுகணம் சலிப்பும் துயரமும் வந்து மனம் அலைக்கழியும். சில மணி நேரம் கழித்து எழுச்சிகள் அடங்கியபிறகு மீண்டும் உயிராசை எழும். மீண்டும் இளமைக்கால நினைவுகள்... இளமைப்பருவ நினைவுகள் மனிதனிடமிருந்து பறிக்கவே முடியாத சொத்து...''

''ஆம்'' என்றேன். ''அவை இருப்பதுவரை மனிதர்கள் எங்கும் வாழ்ந்துவிட முடியும்.'' என் கண்கள் கலங்கிவிட்டன, அதைச் சொல்லும்போது.

''நமது ருஷ்யக் கிராமங்களில் வாழ்வது மனிதனுக்கு வாழ்க்கை அளிக்கும் வரங்களில் ஒன்று'' என்று புகாரின் உத்வேகத்துடன் சொன்னார். ''மரங்கள் அடர்ந்த கிராமத்துப் பாதைகள், பனிபடர்ந்த காட்டாறுகள், புராதன மாதா கோயில்களின் மணியோசை, உழப்பட்ட புதுவயலின் வாசனை, அந்தியின் நீளும் ஒளி, இரவில் கதவைத் தட்டும் குளிர்காற்று... அப்படிப்பட்ட கிராமங்களில் ஒன்றில் அன்னாவுடன் ஒரே ஒரு வருடம் வாழ்ந்தால்கூடப் போதும்.'' புகாரின் பெருமூச்சு விட்டார். மீண்டும் மீண்டும் பெருமூச்சுவிட்டார். ''இனி திரும்பவே முடியாது, தோழர். இனி எதுவும் செய்ய முடியாது. மிகில்னாய் ரயில் நிலையத்தில் விதி எனக்கு சூனியம் வைத்துவிட்டது. அந்த காட்சி ஒரு கொட்ட ஆவிபோல என்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. என்னால் எதுவுமே செய்ய முடியாது...''

எல்லா சொற்களும் விலகிப்போக மரணம் மட்டும் துலங்கி நிற்கும் அபூர்வமான கணங்கள் அவை. பீதியோ துயரோ பதற்றமோ இன்றி பார்த்திருந்தேன். விளக்கங்கள் இல்லாத, அர்த்தங்கள் இல்லாத, எதிலும் பொருத்தம் கொள்ளாத ஒரு துண்டுபடுதல். அதை நெருங்குகையில் நமது அறியும் கன்னிலையும் துண்டுபட்டுப் போய்விடுகிறது. அப்போது மரணம் அறியப்படாததாகி எனவே இல்லாததாகிவிடுகிறது.

உண்மையில், மரணத்தை நாம் அறிய முடியாது. அதிகபட்சம் அதன் முந்தைய கணம்வரை போக முடியும். அந்த முந்தைய கணம் என்பது வாழ்தலின் கணம்தான். வாழ்வில் பலவாறாகப் பிரதிபலிக்கும் மரணமே நாம் அறிந்தது.

முதல் விசில் அடித்தது. எங்கும் பரபரப்பு பரவியது. பலர் பிரிந்து தங்கள் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.

புகாரின் என்னிடம் "சாத்தானைப்பற்றிக் கூறினீர்களே தோழர், அது உண்மை. சாத்தான் மிகுந்த இனிமையுடன் நம்மை அணுகுகிறார். மாறாக கிறிஸ்து ஒரு தீப்புண் ஏற்படுவதுபோல நம்மில் நிகழ்கிறார். நமது ஆத்மாவில் அந்தப் புண் ஒருபோதும் ஆறுவதில்லை. ஒவ்வொரு கணமும் அதன் வலியை அனுபவிக்கிறோம். நம்மை அது மரணம் நோக்கி இட்டுச் செல்வதை அறிகிறோம். ஆனால்..." புகாரின் உணர்ச்சியினால் திணறினார். "ஆனால்... இதை எப்படிச் சொல்வேன். இந்த ஆறாத ரணம் என்னில் இருப்பது எனக்குப் பெருமை தருகிறது. விலைமதிப்பற்ற ஆபரணம் ஒன்று என் ஆத்மாவில் தொங்குவது போலிருக்கிறது."

"நாம் கிளம்ப வேண்டும். இனி அதிக நேரமில்லை" என்றேன்.

"ஆம்" என்றபடி புகாரின் எழுந்தார். "என் புண்ணின் மகத்துவம் இந்தக் குருட்டு மூர்க்கர்களைக் காணும்போது எனக்கேற்படும் குமட்டலில் இருந்துதான் தெரியவருகிறது."

"ஆனால் அவனுக்கு அம்மரணத்திற்கு அர்த்தம் உண்டு. அதில் நிம்மதியும் மகிழ்ச்சியும்கூட இருக்கலாம். நமக்கு? நம்முன் வெட்ட வெளியல்லவா? கடைசிக் கணத்தில் நாம் பார்க்கப் போவது பெரும் சூனியத்தை அல்லவா?"

"தெரியவில்லை" என்றார் புகாரின். "என் விதியை இந்த ரணத்திற்கு ஒப்படைத்துவிட்டேன். அந்த கடைசித் தருணத்து தரிசனம் பற்றி எதுவுமே என்னால் கூற முடியவில்லை. சூனியமாக இருக்கலாம் அல்லது... அல்லது... ஏதும் சொல்ல முடியாது... யாரறிவார்?"

எனக்கு ஓர் இம்சையுணர்வு ஏற்பட்டது. அந்தக் கடைசிக் குமிழியின் வண்ணஜாலத்தையும் உடைத்துவிட என் மனம் பரபரத்தது. "ஏன் தோழர், இதுவும் ஒரு மரணமுனைச் சமாளிப்பாக ஏன் இருக்கக் கூடாது?"

"இருக்கலாம், இருந்துவிட்டுப் போகட்டும்" என்றார் புகாரின் சாதாரணமாக.

இரைச்சலிட்டபடி என்னுள் தன்னிரக்கமும் தனிமையும் பொங்கி மதகுகளை அறைந்தன. "நல்லது தோழர், எல்லாம் நல்லபடி நடக்கட்டும்" என்றபடி பிரிந்தேன். சுடுநீர்த் தாரையில் நின்று கொண்டபோது என் உடம்பு ஏமாற்றத்தில் துடித்துக்கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

எனக்கு என்ன ஆயிற்று என்று கேட்டுக் கொண்டேன். சோப்பு போடுகையில் ஒரு வீச்சில் அதை அறிந்தேன். என் ஆத்மாவில் அப்படிப்பட்ட ரணம் ஏதும் இல்லை. அது நிகழவேயில்லை. அந்த அதிர்ஷ்டம் எனக்கில்லை...

உடைகளை வெப்பகாற்று பீறிடும் உலர்யந்திரத்தில் காய வைத்தேன். உலரும் ஆடையைப் பார்த்திருந்த போது இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சுருங்கி வெறும் கனவாக என்னுள் மறைவதை அறிந்தேன். உடைகளை அணிந்துகொண்டதும் பிறிதொருவனாக ஆனேன். நிர்வாணமும் மனப் பீறிடல்களும் எல்லாம் அபத்தமான ஒரு நாடகம் போலத் தெரிந்தன. தலைகுனிந்து தனித்து நடந்தபோது ஒரு வலிப்பு வந்து முடிந்ததுபோல களைப்பாக இருந்தது.

விரைவில் புகாரின் மீதான விசாரணை தொடங்கியதாக அறிந்தேன். மிகக் கடுமையான உளவதையின் விளைவாக அவர் பேதலித்துப் போனதாகவும், விசாரணையில் அனைத்துக் குற்றங்களையும் ஒப்புக் கொண்டதாகவும் சொன்னார்கள். என் விசாரணையின் இறுதிக்கட்டம் நடந்து கொண்டிருந்தபோது அவர் கொல்லப்பட்டார். அப்போது அச்செய்தி எனக்கு எவ்வித மனச்சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் என் விசாரணையின் முடிவற்ற பதற்றத்தை, சித்தம் கலங்கி அடியாழத்திலிருந்து எழுந்து அனைத்து மானுடர்மேலும் பரவும் கடும் குரோதத்தை, கனத்துகனத்து வரும் அச்சத்தை அப்போது அணுஅணுவாக அனுபவித்துக்கொண்டிருந்தேன்.

✦

5

உறைபனி*

எம். வீரபத்ரபிள்ளை, பி.ஏ.

(அரங்கு: கந்தலான குளிர்கால உடைகள் அணிந்த மக்கள் குவியல் குவியலாகத் தூங்கும் நீண்ட அறையே அரங்கு பாதிப்பேரின் முகம் தெரிய வில்லை. வெளியே பனிக்காற்றின் ஊளை. மரத் தாலும் வைக் கோலாலும் கட்டப்பட்ட குடிசை அது. அரங்கின் நடுவே ஒரு மரத்தொட்டி. கணப்பு எரியவில்லை.

தூங்கும் கும்பலில் இருந்து ஒரு பெண் எழுந்து தள்ளாடி நடக்கிறாள். குவளை ஒன்றைத் தேடி எடுத்து மரத்தொட்டிக்குள் விட முயல்கிறாள். தொட்டி டங்க் என்று ஒலியெழுப்ப அவள் ''அடக் கடவுளே'' என்று கூவுகிறாள்.

படுத்திருந்த இளம்பெண் எழுந்து அமர்ந்து கைகளை உடலில் இறுக்கியபடி. ''காத்யா அது நீயா?'' என்கிறாள்)

காத்யா: நான்தான். தாகம் தாங்க முடிய வில்லை என்று பார்த்தேன் (மனமுடைந்து) இதோபார், இந்த டர்னிப்சூப்கூட உறைந்து கல்லாகிவிட்டது.

அன்னா: (எழுந்து வந்து குனிந்து பார்த்து) உண்மைதான். நான் எதிர்பார்த்தேன். இப் போது என்ன செய்வது? விறகு சிறிது இருந்தால் சூடுபடுத்தலாம்.

காத்யா: சைபீரியப் பனிக்கட்டி பற்றி உனக்கு என்ன தெரியும்? இதை உருக்குவது அத்தனை எளிய விஷயமல்ல. மேற்பொருக்கு இறுகி விட்டிருக்கும். உள்ளே வெற்றிடம் இருப்பதால் உடைக்கவே முடியாது.

அன்னா: பனியாலான நரகம். ஆறுகள், குளங்கள், கடல்கள் அனைத்துமே பாறையாகி விட்டிருக்கின்றன. எங்கும் துளி வெப்பம் இல்லை. (பெருமூச்சுவிட்டு) நம் பிதா ஏன் இப்படி ஒரு இடத்தை பூமிமீது படைத்தார்!

காத்யா: நீ சொன்னாயே, நரகம்...

அன்னா: நரகத்திற்கு வருமளவு நாமெல்லாம் என்ன பாவம் செய்தோம்?

---

* முதல் நாடகத்தின் இரண்டாம் பகுதியாக எழுதப்பட்ட நாடகம் இது. ஆனால் தொடர்ச்சி மிகவும் குறைவுதான். பிரகுரமாகவில்லை.

காத்யா: நேற்று ஒரு அரைப்பைத்தியம் சொன்னது: பூமிமீது பாப புண்ணியங்களின் இலக்கணங்களெல்லாம் மாறிவிட்டனவாம். எது பாவம், எது புண்ணியம் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அந்தந்த ஊர் சுமிசார்களுக்கு விடப்பட்டிருக்கிறதாம். நீ பார்த்திருக்கிறாயா, அந்தப் பைத்தியத்தை? அதன் பேச்சு இங்கு பலருக்கும் நல்ல வேடிக்கையாக இருக்கிறது.

அன்னா: இங்குதான் பைத்தியங்களுக்குக் குறைவே இல்லையே.

காத்யா: அதெல்லாம் மனம் பிளந்துபோன ஜென்மங்கள். அழுகையும், சுவரில் முட்டிக்கொள்ளுவதும், வலிப்பும். அவற்றைப் பார்த்தாலே வயிற்றைக் கலக்குகிறது. அச்சம் பிறகு வெறுப்பாக மாறுகிறது. இந்தப் பைத்தியம் அப்படியல்ல. எப்போதும் வினோத மான மகிழ்ச்சியுடன் இருக்கிறான். விளங்கிக்கொள்ள முடியாத ஒரு தீர்க்க தரிசனத்துடன் இருக்கிறான். எப்படிப் பாடுகிறான் தெரியுமா? என்ன குரல்! பத்து வயதுப் பையனின் குரல்.

அன்னா: சரி விடு. இதை என்ன செய்வது?

காத்யா: (எட்டிப் பார்த்து) பாறை. இதை என்ன செய்வது. இங்குள்ள எல்லா ஜடங்களையும் எரித்தாலும் இதை உருக்க முடியாது. (சோர்ந்து தரையில் அமர்ந்து) தாகம் தாங்க முடியவில்லை அன்னா. என் ரத்தமே பாலாக மாறி நிகிதாவுக்குப் போகிறது. உடலுக்குள் ஈரம் முற்றிலும் உலர்ந்து போவதுபோல இருக்கிறது. நேற்று இந்த சூப்பில் எலி விழுந்துவிட்டது என்று யாரும் சாப்பிடவில்லை. இப்போது இதுவும்...''

அன்னா: இதை நம்மால் உடைக்க முடிந்தால்...

காத்யா: உடைத்து?

அன்னா: கூடு செய்து பார்க்கலாம்.

காத்யா: எப்படி? ஒரு துளி விறகு இங்கு இல்லை. நேற்று மதியமே மடக்கே இருண்டிருந்தது. பெரியமலைகள்போல கருமேகங்கள் மிதந்து வருவதைப் பார்த்தேன். இப்போது பனிச்சூறை வீசுகிறது. அனேகமாக நாளை பெரும்பனிப்புயல் வீசக்கூடும். எத்தனை பேர் உறைந்து சாவார்கள் எத்தனைபேர் மிஞ்சுவார்கள் என்று கூறமுடியாது. (மனம் உடைந்து விசும்பி விசும்பி அழுகிறாள்) இறந்துவிட்டால் போதும். எல்லா துன்பமும் முடிந்துவிடும். இந்தக் குளிர். இடைவெளியே இல்லாத இந்த வெளிச்சம். (விசும்பல் சிறுவலிப்பாக மாறுகிறது) முடிவே இல்லை. அதிகபட்ச தூரம் பார்த்தாலும் இதே சாம்பல்நிறப் பனிவெளி (வலிப்பு நின்றிருக்கிறது) வெட்டவெளி, வெட்டவெளி! வெறுமை! (கிரீச்சிடு கிறாள். தலையிலடித்துக்கொண்டு அழுகிறாள் உடல் வலித்து இழுக்கிறது தரையில் தொய்ந்து. மெல்ல தளர்கிறாள்)

அன்னா: (அசையாமல் பார்த்தபடி நின்று) காத்யா...

காத்யா: (தளர்ந்து தரையில் விழுந்திருக்கிறாள்) நிகிதா, நிகிதாவிற்கு ஒன்றுமேயில்லை. இந்தப் பனி நரகத்தில்...

அன்னா: காத்யா, உனக்கும் அது தொடங்கிவிட்டது.

காத்யா: *(பதறி)* எது? என்ன சொல்கிறாய்?

அன்னா: இங்கு வருபவர்களைப் பனி மெல்ல ஊடுருவுகிறது காத்யா. அவர்கள் மனமும் உறைந்து இறுகிவிடுகிறது. விரிசல்கள். பிறகு உடைவு. *(தயங்கியபடி)* நீ இப்போது கத்திய விதம்...

காத்யா: இல்லை, நன்றாகத்தானே இருக்கிறேன். எனக்கு ஒன்று மில்லை. *(முச்சிரைக்க)* அன்னா உண்மையைச் சொல். நான் நன்றாகத்தானே இருக்கிறேன்?

அன்னா: அனேகமாக.

காத்யா: *(மனம் கலங்கி)* என் நிகிதாவிற்கு யாருமில்லை...

அன்னா: முக்கியமான ஒரு விஷயம் உண்டு காத்யா. நாம் நிரபராதிகள். அந்த குமுறல் அடங்காமல் நாம் சாகக் கூடாது. அப்படி செத்தாலும் இதேபோன்ற பனிவெளிதான் காத்திருக்கிறது.

காத்யா: கடவுளே... மீட்பரே...

அன்னா: இப்போது ஒன்றும் ஆகவில்லை. நீ உன்னைத் திரட்டிக் கொண்டால் போதும். உனக்குள் இன்னும் கொஞ்சம் வெப்பம் இருக்கிறது. அது நிகிதாமீது உனக்குள்ள பிரியம். அதைத் தக்கவைத்துக் கொள். மனம் தளர்ந்தால் அவ்வளவுதான்...

காத்யா: எத்தனை நாள் அன்னா? இந்த முடிவற்ற பனிப் பாலைவெளி...

அன்னா: ஆனால் ஏதாவது ஒரு திசைமுடிவில் அது முடிவுக்கு வந்துதானே ஆக வேண்டும்? உலகம் பனிப்பாளங்களினாலான ஒன்று அல்ல. அங்கே தூரத்தில் கணப்புகள் எரியும் அறைகள் கொண்ட நகரங்கள் உள்ளன. அங்கே செய்தித்தாள்கள் தினம் வருகின்றன.

காத்யா: *(பெருமூச்சுடன்)* அன்னா, தாகம் தாங்க முடியவில்லை.

அன்னா: இரு. இதை உடைக்க முடியுமா என்று பார்க்கிறேன். *(சுற்றி முற்றும் பார்க்கிறாள். சுவரில் ஒரு பனி உடைக்கும் சம்மட்டி இருக்கிறது. அதை எடுத்து வருகிறாள்.)*

காத்யா: எச்சரிக்கை, அன்னா நீ தொட்டியை உடைத்து விடுவாய்.

அன்னா: பார்ப்போம்... *(ஓங்கி அடிக்கிறாள். டங்கார ஒலியுடன் தொட்டி அதிர்கிறது. மீண்டும் மீண்டும் அடிக்கிறாள்.)*

காத்யா: அது பனிதானா?

அன்னா: ஆம், உள்ளே குமிழிகளில் வெற்றிடம் உள்ள பனி. *(மீண்டும் அடிக்கிறாள். தொட்டி சரிந்து உருள்கிறது. அன்னா தடுகிறாள். உள்ளிருந்து தொட்டி வடிவமான பனிப்பாறை உருண்டு வெளிவந்து, அசைந்து நிற்கிறது.)*

காத்யா: வெறும் தண்ணீர்! எத்தனை தெளிவாக இருக்கிறது பார். மனிதர்கள் இதன்மீது செத்து விழுந்தும்கூட இதை மாசுபட வைக்க முடியவில்லை.

காத்யா: இதையா உடைக்கப் போகிறாய்?

அன்னா: (மீண்டும் அடிக்கிறாள். பாறை நெக்குவிடவில்லை) முடியுமென்று தோன்றவில்லை. (சோர்ந்து சம்மட்டியை வைத்துவிடுகிறாள்)

காத்யா: உடைத்தால்கூட என்ன செய்வாய்? நெருப்புக்கு எங்கே போவாய்? பனியைத் தின்றால் உன் குடல் குளிர்ந்துபோகும். உடனே மரணம்தான். எலியா செத்து ஒருவாரம் ஆகவில்லை.

அன்னா: (களைப்புடன் அமர்ந்து) ஆம்...

குரல்: (குவிந்து கிடந்த இருவர் எழுந்து) என்ன ஆயிற்று, விடிந்து விட்டதா?

காத்யா: இரவு முடிந்துவிட்டது. அவ்வளவுதான்.

கிழவன்: பனிப்பாறை! இங்கே எப்படி வந்தது அது?

தாடிக்காரன்: என்ன ஒளி அதற்கு!

அன்னா: இது நமக்கு இன்றைய உணவு என்று நினைக்கிறேன்.

கிழவன்: உளறாதே.

அன்னா: வெளியே பனிப்புயல் சூழ்ந்துவிட்டது. இன்று யாரும் வெளியே போக முடியாது. வேலை இல்லையேல் உணவும் இல்லை.

ஒரு கிழவி: (எழுந்து) கடவுளே இது நம் சூப் அல்லவா?

(அவர்கள் அதை அணுகி தொட்டும் உருட்டியும் பார்க்கிறார்கள்)

தாடிக்காரன்: இதுவா நம் உணவு? இதை எப்படிக் குடிப்பது! துளி விறகுகூட இல்லை.

(வெளியே ராணுவ விசில் காத்யா ஓடிப்போய் தூங்கும் நிகிதாவை எடுத்துக் கொள்கிறாள்)

கிழவி: அவன் வருகிறான். சாத்தானின் மகன். இலியிச் நீ ஒழுங்காக வம்பாக அடிபட்டு சாகாதே. முகத்தில் அந்த வெறுப்பு இல்லை. உணவையில்லை.

இலியிச்: (தாடியை வருடியபடி) பயப்படாதீர்கள் நிகாலாயெவ்னா. அப்படியானால் நான் இதற்குள் பலமுறை செத்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் மறைக்கத்தான் இந்த தாடி, கல்லறைமீது புல்போல.

(எல்லாரும புன்னகை புரிகிறார்கள்)

வெளியே குரல்: முகாம் ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு. சோதனைக்குத் தயாரா?

இலியிச்: செத்துப் போனவர்களிடம்தான் அந்த வினா.

(மீண்டும் புன்னகைகள்.)

குரல்: அமைதி!

(விசில் ஒலிக்க ஒரு வீரன் உள்ளே வருகிறான். செம்படையின் சீருடை மிடுக்கான தோற்றம்.)

வீரன்: ஒழுங்காக நில்லுங்கள். வரிசை!

(வரிசை அமைகிறது.)

வீரன்: *(பனிக்கட்டியைப் பார்த்து)* இது என்ன?

இலியிச்: சூப், மேன்மை தங்கிய தோழர்.

வீரன்: *(உற்றுப்பார்த்து புரிந்துகொண்டு)* அடடே *(சிரித்து)* உங்களுக்கு இனி தனியாக திட உணவு தேட வேண்டியதில்லை. நல்லதாகப் போயிற்று. *(காலால் அதைத் தட்டி)* பல நாட்களுக்கு வரும். ஒரு வாரத்திற்கு உருகாது. *(விசில் ஊதி)* ஒழுங்கு! வரிசை! *(நிற்கும் எட்டு பேரை எண்ணுகிறான். மூவர் படுத்திருக்கிறார்கள்)* அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா?

இலியிச்: அவர்களிடமே கேட்கலாமே.

வீரன்: ஆம், அது நல்ல யோசனை *(விசில் ஊதி)* படுத்திருப்பவர்களில் எழுந்திருக்காதவர்கள் உடனடியாக அடக்கம் செய்யப்படுவார்கள்.

(மூவரும் அசையவில்லை.)

இலியிச்: மேன்மை தங்கியவரே, அவர்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டார்கள்.

வீரன்: ரொம்ப நல்லது இலியிச். இங்கே நீங்கள் ஒருவித ஒழுங்கு வைத்திருக்கிறீர்கள். எப்போதும் எண்ணிக்கை மூன்றைத் தாண்டு வதில்லை. *(பிணங்களிடம்)* உங்கள் இச்சைப்படியே ஆகட்டும் தோழர்களே. புரட்சி வணக்கம். *(வெளியே போகிறான் விசில் ஒலிகள் கட்டளைகள்)*

கிழவி: சைத்தானின் மகன்.

காத்யா: அதில் நடாலியா உண்டு. நேற்றுகூட அவளுடைய சொந்த ஊர்பற்றி பேசிக்கொண்டிருந்தாள். பாவம் சிறு பெண். படித்தவள்.

இலியிச்: படிப்புக்கு பிரயோசனம் உண்டு நிகாலயெவ்னா, அவர்கள் தான் சீக்கிரம் சாகிறார்கள்.

(அனைவரும் புன்னகை புரிகிறார்கள்.)

கிழவி: (புன்னகையுடன்) இலியிச், உன் பேச்சு அப்படியே விஷம்.

இலியிச்: புத்திசாலிகள்! பனிப்புயலை அவர்கள் தேர்ந்தெடுத்ததனால் படுத்தபடி சாக முடிந்தது.

(எல்லாரும் இலேசாக சிரிக்கிறார்கள்.)

வீரன்: (குரல்) ஒழுங்கு! வரிசை! அமைதி!

(வீரர்கள் சிலர் உள்ளே வருகின்றனர். பிணங்களைக் கால்களைப் பற்றி இழுத்துச் செல்கின்றனர்.)

வீரன்: நல்லது தோழர்களே. இன்று உங்களுக்கு வேலை இல்லை. மிக மோசமான புயல் வந்துகொண்டிருக்கிறது. (பனிப்பாறையை பூட்ஸ் காலால் தட்டி) திட உணவும் இருக்கிறது. மகிழ்ச்சியாக இருங்கள்...

கிழவி: (உடைந்து போய், அழுதபடி) மேன்மை தங்கியவரே, மீட்பரே, கருணை காட்டுங்கள். கைப்பிடி விறகு கொடுங்கள். இல்லையேல் நாங்கள் யாருமே மிஞ்சமாட்டோம் ஐயா...

வீரன்: நீ என்ன சபை?

கிழவி: (நம்பிக்கையடைந்து) ரஷ்யன் ஆர்த்தடக்ஸ் சபைதான் ஐயா, நாங்கள்?

வீரன்: நானா? நான் ரஷ்யன் மாடர்ன் சபை ஹஹஹா! (கடுமை பெற்று. ஆனால் குரலின் வேடிக்கை மாறாமல்) கிழவி உனக்கு யெகோவாமேல் நம்பிக்கை உண்டா?

கிழவி: உண்டு மேன்மைதங்கியவரே, உண்டு.

வீரன்: யெகோவா நெருப்பின் கடவுள். அதை வணங்கு.

கிழவி: (புரியாமல் அரைச் சிரிப்புடன்) தங்கள் உத்தரவு மேன்மை தங்கியவரே. நீங்கள் கருணை மிக்கவர் ஐயா...

வீரன்: (சலிப்புற்று) மூடப்பிறவி. (வெளியேறுகிறான்.)

கிழவி: (புரிந்துகொண்டு ஓடிப்போய் மண்டியிட்டு கதறி) ஐயா பனிப்புயல் வருகிறது ஐயா. கருணை காட்டுங்கள் தேவனே ஐயா...

(வீரன் போய்விடுகிறான். கிழவி கைகளில் முகம் பொத்தி அழுகிறாள்)

இலியிச்: நிகாலாயெவ்னா நீங்கள் கெஞ்சுவதைப் பார்த்தால் உங்களுக்குள் இன்னும் நிலக்கரி மிஞ்சியிருப்பது போலிருக்கிறது. பயப்படாதீர்கள். இன்னும் ஒருவாரம் இந்த பூமியின் இன்பத்தில் நீங்கள் நீளக்கலாம்.

கிழவி: (துவேஷத்துடன் திரும்பி) சீ வாயை மூடு. நாஸ்திகப் பாவி. பூமியில் மனிதர்களை வாழும்படி உத்தரவிட்டுத்தான் கர்த்தர் அனுப்புகிறார். கர்த்தரைப் பழிக்கிறாயா நீசனே?

இலியிச்: (புன்னகையுடன்) அப்படியானால் சரி.

(ஒவ்வொருவராக அமர்கிறார்கள் ஒடுங்கிக்கொள்கிறார்கள் நிகிதா விழித்துக்கொண்டு அழுகிறான்)

காத்யா: ரூரூரூ... வேண்டாம் அழாதே என் கண்ணே, என் செல்லமே.

(நிகிதா அழுகையை நிறுத்திவிட்டு எல்லோரையும் பார்க்கிறான் பிறகு தாயின் மார்பைப் பற்றுகிறான்)

கிழவி: பாலை நிறுத்து என்றேன். இல்லையேல் நீ உலர்ந்து சாவாய்

காத்யா: பிறகு என்னதான் கொடுப்பது?

கிழவி: உன் உயிரை உறிஞ்சிவிடுவான் பெண்ணே...

(நிகிதா உறிஞ்சிவிட்டு கால்களை உதைத்து வீரிட்டு அழுகிறான்.)

கிழவி: (அனுதாபத்துடன்) பால் இல்லையா?

காத்யா: ரத்தம்கூட இல்லை. தாகம் உயிரை வாட்டுகிறது.

கிழவி: என்னிடம் வா என் ஜார் சக்கரவர்த்தியே. உனக்கு பாட்டி முத்தம் தருவேன்.

நிகிதா: போ. நீ சூனியக்காரி. பாபா யகா மாதிரி இருக்கிறாய்.

கிழவி: நான் ஒரு சூனியம் வைக்கவா?

கிழவி: (கையை அசைத்து உடையில் எங்கோ இருந்து சிறு ரொட்டியை எடுக்கிறாள்) இதோ ரொட்டி...

நிகிதா: (குதித்து, அலறியபடி ஓடிப்போய் அதைப் பிடுங்கி, வெறியுடன் தின்றபடி) நீ நல்ல பாட்டி.

கிழவி: (முகச் சுருக்கங்கள் விரிய சிரித்தபடி) குட்டி ஓநாய்! குட்டி ஓநாய்...

நிகிதா: (தின்று முடித்து, அதிருப்தியுடன்) இன்னும் ரொட்டி வேணும்.

கிழவி: நாளைக்கு மீதி.

நிகிதா: (சமாதானமடைந்து) நாளைக்கு நான் இரண்டு ரொட்டி சாப்பிடுவேன். (பனிக்கட்டியைப் பார்த்து) அம்மா இங்கே பனிப்பாறை! ஹையா! நான் இதை வைத்து விளையாடவா?

இலியிச்: நேற்று ராத்திரி சான்டாகிளாஸ் தாத்தா இங்கு வந்திருந்தார். குட்டி நிகிதாவிற்கு விளையாட இதைத் தந்துவிட்டுப் போனார்.

நிகிதா: கிறிஸ்துமஸ் தாண்டி ரொம்ப நாளாகிறதே.

இலியிச்: அவர் ரொம்ப தூரம் வரவேண்டுமே.

நிகிதா: எனக்கே எனக்கா? அம்மா இதை எப்படி விளையாடுவது?

காத்யா: இலியிச் நீங்கள் அவனைத் தூண்டிவிட வேண்டாம். அவன் தூங்க வேண்டும். விழித்திருந்தால் அவனுக்குத் தாகமெடுக்கும்.

நிகிதா: எப்போது பார்த்தாலும் தூங்கு தூங்கு என்கிறாய்; போ.

இலியிச்: தூங்கினால் கனவில் விளையாடலாம்.

நிகிதா: (பனிப்பாறையைத் தடவிப்பார்த்து) நான் பனி நடனம் ஆடுவேன். எனக்குத் தெரியும். (உற்சாகமடைந்து) பைத்தியக்கார மாமா!

காத்யா: எங்கே?

நிகிதா: அதோ (வாசல்வழியாக சுட்டிக்காட்டி) அன்று பார்த்தோமே.

காத்யா: ஏன் இந்தக் கடும்பனியில் ஓடிவருகிறார்?

(வாசலில் ஓசை பனித்துளிகள் உடலில் இருந்து சிதற. செந்நிறத் தாடியும் முன் வழுக்கையும் உடைய கனத்த குட்டையான மனிதர் ஒருவர் வருகிறார்)

நிகிதா: பைத்திய மாமா! பாட்டு... அந்தப் பாட்டு!

அன்னா: (திடுக்கிட்டு) ஆசிப், நீங்களா? ஆசிப்!

ஆசிப் மான்டல்ஸ்டம்: (அவளை அறியாமல்) பனிப்புயல், பனிப்புயல் வருகிறது!

நிகிதா: பைத்திய மாமா நாம் பனிநடனம் ஆடலாம்.

ஆசிப்: என்னை அடிக்கிறார்கள்.

காத்யா: யார்?

ஆசிப்: புலினின், மித்யா எல்லாரும்...

காத்யா: ஏன்?

ஆசிப்: ரொட்டி சாப்பிட்டேன்.

நிகிதா: மாமா நான்கூட சாப்பிட்டேன், ரொட்டி.

கழுதை: இதே வேலைதான். திருடித் தின்று, அடிவாங்கிவிட்டு அழுவது.

காத்யா: உங்கள் ரொட்டியை தின்ன வேண்டியதுதானே?

ஆசிப்: அது விஷம்! (மிரண்டு நாற்புறமும் பார்க்கிறார்)

இலியிச்: விஷம் வைத்துவிடுவார்கள் என்று பயமாம்.

காத்யா: ஏன்?

இலியிச்: ஏனென்றால் தன்னை ஒரு கலிலேயர் என்று இது எண்ணிக் கொள்கிறது. கார்க்கிக்கு விஷம்தானே வைத்தார்கள்.

அன்னா: ஆசிப் என்னைத் தெரிகிறதா?

காத்யா: இவரைத் தெரியுமா உனக்கு?

அன்னா: எங்கள் குடும்ப நண்பர். பெரும் கவிஞர்.

இலியிச்: அப்படியானால் விஷத்திற்குத் தகுதியானவர், ஐயமில்லை.

நிகிதா: மாமா ஒரு பாட்டு பாடுங்கள்.

ஆசிப்: இது என்ன பனிப்பாறை?

இலியிச்: திட உணவு. சூப்.

ஆசிப்: உறைந்துவிட்டது. இங்கு எல்லாமே உறைந்துவிட்டன. சொற்கள் உறைந்துவிட்டன. கவிதை உறைந்துவிட்டது. சங்கீதம் உறைந்து விட்டது. கனவுகள்கூட உறைந்துவிட்டன. பனிப்புயல்! *(அந்தப் பாறையை பயத்துடன் பார்த்து)* எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறது! மாஸ்கோவிலிருந்து.

நிகிதா: ஒரு பாட்டுப் பாடுங்கள் மாமா.

அன்னா: ஆசிப் நான் புகாரினா. என்னைத் தெரிகிறதா?

ஆசிப்: *(உரக்கச் சிரித்து)* பெரும்புரட்சியின் கண்ணீர் மழையுறைந்த பனிவெளியில்... தோழர்களே நாம் நடனம் ஆடுவோம்.

(ஆசிப் நடனமாடுகிறார் நிகிதாகூட ஆடுகிறான்.)

இலியிச்: மகிழ்ச்சியான ஆத்மாக்கள்.

கிழவி: *(பெருமூச்சுடன்)* அந்தக் காலத்தில் நாங்கள் வசந்தகாலத்திலும் அறுவடை நாட்களிலும் ஆடுவோம். *(ஜன்னலினூடாகப் பார்க்கிறாள்)* சாம்பல் நிறம். வானம், பூமி, திசைகள் எங்கும் சாம்பல் நிறம். எப்போதாவது கனவு வந்தால் அதுவும் சாம்பல்நிறம். *(மீண்டும் பெருமூச்சுவிட்டு)* ஸ்டெப்பியில் இப்போது தீவனப்பயிரின் காலம். பனிவருவதற்குள் விதைத்துவிடுவோம். பனிக்குள் விதை தூங்கும். பனியுருகும்போது முளைத்துப் பெருகும். வசந்தத்தில் ஸ்டெப்பி பசும்புல்லால் மூடப்பட்டிருக்கும். குட்டிப் பனி ஓநாயின் முடிகள்போல புல்தளிர்கள். அவை காற்றில் அலைபாயும். இளம் பச்சைநிற ஒளியாக இருக்கும் அங்கு. சில சமயம் ஏதோ நினைவில் ஸ்டெப்பி புல்லரிப்பது போலிருக்கும். ஸ்டெப்பி அதன் வீரர்களை நினைவுகூர்கிறது என்று சொல்வோம். *(தளர்ந்த குரலில்)* என் உடல் ஸ்டெப்பியில் அடக்கம் செய்யப்பட்டால்... அதைத்தவிர இப்போது நான் ஆசைப்படுவது ஏதுமில்லை. என் துக்கமெல்லாம் ஸ்டெப்பியின் கரியமண்ணில் மட்க வேண்டும். என் கனவுகள் மலர்ச் செடிகளாக முளைத்து இளவெயிலில் ஒளிர வேண்டும். ஸ்டெப்பியின் மலர்மணம் அங்கு புதைக்கப் பட்டவர்களின் ஆத்மா என்று சொல்வார்கள்.

இலியிச்: நன்றாகவே பேசுகிறாய் நிகாலயவ்னா, கவிதைபோல...

காத்யா: ஸ்டெப்பியில் இப்போது யார் இருப்பார்கள்? நம் பிரியத்திற்குரியவர்களெல்லாம்... (குரல் உடைந்து) ஸ்தானோவ் வீட்டைவிட்டு வெளியே இழுத்துத் தள்ளப்பட்டு துப்பாக்கிக் கட்டையால் அடித்தே கொல்லப்பட்டார். ஸ்டெப்பியில் ஒன்றுமில்லை நிகாலயெவ்னா, அதன் ஆத்மாவைச் சூறையாடிவிட்டார்கள்.

நிகிதா: ஸ்டெப்பியில் மண் உண்டு. கரிய மண். அம்மா சொன்னாள்.

இலியிச்: இப்போது அது மட்டும்தான். வெறும் மண்.

காத்யா: மண்ணுக்குள் விதைகள். உறங்கும் விதைகள்...

கிழவி: புனிதர்களின் தூய ஆவிகள் செம்பருந்துகளாக மாறி ஸ்டெப்பிமீது வட்டமிடும். அவை வான்வெளியில் சுழன்று சுழன்று பிரார்த்தனை புரியும். ஒரு கணத்தில் சூரியனை பிரதிபலித்து தங்கநிறம் பெற்று ஒளிவிடும். (கண்ணீருடன் மண்டியிட்டு) கர்த்தரே... மீட்பரே... மீண்டும் ஒரு கணம் அம்மண்ணில் வாழ முடியுமா? இந்தப் பனிப்பாளங்களுக்கு அடியில் அவர்கள் என்னைப் புதைத்தால் என் ஆத்மா குளிர்ந்து புதைந்து கிடக்கும். அதற்கு மீட்பே கிடையாது. கடவுளே.... கர்த்தரே... மீட்பரே (கிழவிக்கு அந்த சைபீரிய வலிப்பு ஏற்படுகிறது.) அம்மா நீதானா? அம்மா ஸ்டெப்பியில் நீ மணக்கிறாயா? நிகலாய்... (உரக்க கிரீச்சிட்டு தலையை ஓங்கி ஓங்கி அறைகிறாள்.) என் தலையை உடையுங்கள், என் தலையை உடையுங்கள். அய்யோ, யாராவது சீக்கிரம் உடைத்துவிடுங்கள். உள்ளே ஒரு பறவை சிறகடிக்கிறது, பிராண்டுகிறது, கொத்துகிறது... ஐயோ... (எழுந்து சுவரை நோக்கி மண்டையை முட்ட ஓடுகிறாள் பிறர் பிடிக்கிறார்கள். கிழவி தொய்ந்து சரிகிறாள். அழுது துவண்டு தரையில் படிகிறாள்.)

இலியிச்: இந்த சைபீரிய வலிப்பு ஓர் உச்ச கட்டம். அதன் பிறகு நாம் மீறிறங்கியாக வேண்டும். மிக இன்பமான அனுபவம் அந்த சரிவு. நம் நரம்புகள் தளர்கின்றன. உடம்பில் வெம்மையின் படலமொன்று பரவுகிறது. இன்னமும் உயிரோடிருக்கிறோமென்ற சிந்தனை தரும் தூய்மையான பரவசம். உயிர் வாழ்வதற்குப் புதிய புதிய நியாயங்கள் கிடைக்கின்றன. அற்புதமான உருவெளிக்காட்சிகள் வருகின்றன (சிரித்தபடி) சென்றமுறை நான் மாஸ்கோவின் மதுக்கடையொன்றில் ஜிப்ஸிகளின் நடனத்தைப் பார்த்தபடி வோட்கா அருந்துகிறேன். பக்கத்து இருக்கையில் யார் தெரியுமா, தோழர் லெனின். தன் இடுங்கிய கண்களைச் சிமிட்டியபடி தோழர் லெனின் சிரித்தார்.

நிகிதா: தோழர் லெனின் என்றால் என்ன?

இலியிச்: தோழர் லெனின் என்றால் விடுதலை என்று அர்த்தம்.

நிகிதா: விடுதலை என்றால்?

இலியிச்: *(சிரித்தபடி)* உனக்கு எப்படிச் சொல்லித் தருவது? இங்கேயே பிறந்து வளர்ந்தவன் நீ. இங்கே விடுதலை என்றால் மரணம் என்றல்லவா அர்த்தம்.

ஆசிப்: *(குனிந்து தன்னையிழந்து அமர்ந்திருந்தவர், திடமாக எழுந்து, உரத்த கணீர்க் குரலில்)* விடுதலை என்றால் நீதி என்று அர்த்தம்! நீயும் நானும் அவனும் சமம் என்று அர்த்தம். உனக்கும் எனக்கும் அவனுக்கும் உரியதெல்லாம் ஒவ்வொருவருக்கும் உரியதே என்று அர்த்தம் *(பைத்தியச் சிரிப்புடன்)* விடுதலை என்பது ஒரு நடனம். விடுதலை என்பது ஒரு பாடல். விடுதலை! விடுதலை! விடுதலை! *(ஆடுகிறார். ஆடியபடியே பாய்ந்து வெளியேறுகிறார்.)*

இலியிச்: பைத்தியங்களிடம் கடவுள் கருணையோடிருக்கிறார்.

அன்னா: ஆசிப்! ஒரு காலத்தில் அவர் கவிதைகளைக் கேட்க மாஸ்கோ நகரில் இளைஞர்கள் குழுமுவார்கள். *(கண்ணீருடன்)* ஆஸிப் ஒரு குழந்தை. குழந்தைகளுக்குரிய மகத்தான உலகில் வாழ்பவர்.

(மீண்டும் அமைதி பரவுகிறது. பனிப்புயல் ஊளையின் அமைதி.)

நிகிதா: அம்மா தாகம்...

காத்யா: சும்மா இரு நிகிதா!

நிகிதா: தண்ணீர்!

காத்யா: *(கோபத்துடன்)* என் ரத்தத்தைக் குடி, சைத்தானே.

கிழவி: குழந்தையை எதற்குத் திட்டுகிறாய்?

காத்யா: என் உடல் தாகத்தில் எரிகிறது. எந்தக் கணமும் செத்து விடுவேன்.

அன்னா: இதை மட்டும் உடைக்க முடிந்தால்...

காத்யா: இது உடையவே உடையாது...

அன்னா: *(மீண்டும் சம்மட்டியை எடுத்தபடி)* பார்ப்போம் *(அடிக்கிறாள். சம்மட்டி தெறிக்கிறது.)*

கிழவி: இது சைபீரியப் பனி.

அன்னா: கடவுளே! *(சரிகிறாள்.)*

கிழவி: பனிக்கட்டியின் மையத்தில் வெப்பத்தின் ஒரு துளியை வைத்தார் கர்த்தர் என்பார்கள். இந்தப் பனியின் நடுவில் சாத்தான் வைத்த வெற்றிடம் இருக்கிறது.

இலியிச்: இந்தப் பனி ஒரு வரம். நம் ஒவ்வொருவர்மீதும் இம்மாதிரி பனிமலைகள் ஏறி அமரப் போகின்றன. அப்படியே உறைந்து

அகாலத்தில் நிற்போம். நமக்கு மேலே வரலாறு நிகழும். ஒருநாள் நம்மைத் தோண்டி எடுப்பார்கள். நமது கடைசி உடை, கடைசி உணவு. கடைசிப் புன்னகை எல்லாம் அவர்கள் காண்பார்கள். கிழவி, வரலாற்றை நோக்கிச் சிரிக்க உனக்கு ஒரு வாய்ப்பு. யார் கண்டது, உன் சடலம் ஒரு பொருட்காட்சிசாலையைக்கூட அலங்கரிக்கக்கூடும்.

காத்யா: என்னால் தாகத்தைத் தாங்க முடியவில்லை. என்னால் இனி ஒரு கணம்கூடப் பொறுக்கமுடியாது கடவுளே! கடவுளே! *(அழுது கூவி)* கடவுளின் கருணை என்கிறார்களே அது எங்கு போயிற்று! கருணை! அப்படி ஒன்றே உண்மையில் இல்லையா? வெறும் வார்த்தைதானா?

இலியிச்: தண்ணீர் தண்ணீர் எங்கெங்கும்! குடிக்க இல்லை ஒரு சொட்டு.

காத்யா: *(வெறியுடன்)* நிறுத்துங்கள். சொற்கள்! சொற்கள்! இந்தப் பனிக் கல்லறைக்குள் நாம் பேசிப்பேசியே சாகிறோம். நான் செத்துக் கொண்டிருக்கிறேன் அம்மா...

அன்னா: இரு காத்யா, ஏதாவது செய்யலாம். இரு.. *(ஓடிப் போய் வெளியே எட்டிப் பார்த்து)* உதவி! உதவி...!

இலியிச்: சவ அடக்கத்திற்கு ஒரு எண்ணை சேர்த்துக்கொள்வார்கள்; அதுதான் அவர்கள் செய்யக்கூடிய உதவி.

அன்னா: சற்று பொறு காத்யா. ஏதாவது செய்யலாம்.

காத்யா: *(வெறியுடன்)* என்னால் தாங்க முடியவில்லை அன்னா. தாகம் தாங்க முடியவில்லை. நான் செத்துவிடுவேன்.

அன்னா: இரு. *(மீண்டும் சம்மட்டியால் அடிக்கிறாள். கணீரென்று ஒரு வில்லை பனி உடைந்து சிதறுகிறது. காத்யா வெறியுடன் பாய்ந்து அதை எடுக்கிறாள்.)*

காத்யா: *(பித்தின் உவகையுடன்)* சூப்! தண்ணீர்! *(அதை கடிக்கிறாள்.)*

அன்னா: காத்யா இரு, அதை சாப்பிடாதே. இரு, சூடு பண்ணலாம் என்று முனைகிறாள்.)

காத்யா: *(கடித்து மெல்ல முயன்றபடி)* சூப்! சூப்! *(அவளுக்குப் பிரக்ஞையே போய்விட்டது)*

அன்னா: இந்தத் தொட்டியை உடைத்தாவது... யாரிடமிருக்கிறது தீப்பெட்டி?

காத்யா: *(தின்று முடித்து)* கடவுளே என்ன நிம்மதி! தீ அணைவது போல!

இலியிச்: அம்மா! எனக்கு? எனக்கு சூப்!

அன்னா: காத்யா, என்ன செய்துவிட்டாய்? இங்கு யாரும் பனியை சாப்பிடலாகாது...

நிகிதா: எனக்கு சூப்!

காத்யா: (மெல்ல முகம் மாறி) அன்னா! (பீதியுடன்) எனக்கு வயிறு வலிக்கிறது. ரொம்ப வலிக்கிறது. (வயிற்றைப் பற்றியபடி குனிகிறாள்.)

அன்னா: காத்யா, இதோபார்.

இலியிச்: அவளுக்கு விடுதலைச் சீட்டு வந்துவிட்டது.

நிகிதா: (சுவாரஸ்யத்துடன்) சாகப் போகிறளா?

அன்னா: (ஓடிப்போய் வாசல் வழியாக எட்டிப் பார்த்து) உதவி! உதவி! உதவி!

இலியிச்: அன்னா, இதையெல்லாம் நீ உனது மனசாட்சியை திருப்தி செய்யத்தான் செய்கிறாய் என்றால் பிரயோசனமில்லை. பேசாமல் உடகா.

காத்யா: வலிக்கிறதே. வலிக்கிறதே... (கூச்சலிட்டு. துடித்து. அமர்ந்து. உடல் அதிர்கிறாள்.)

கிழவி: கர்த்தர் அவளுக்கு அமைதி அளிக்கட்டும்.

நிகிதா: (உற்றுப் பார்த்து) சாகிறாளா? அன்றைக்கு இவானிச்கூட இப்படித்தான் செத்தான்!

(காத்யாவின் உடல் வலிப்பு கொள்கிறது. அமைதியாகிறது.)

அன்னா: காத்யா! காத்யா! (உசுப்புகிறாள்.) யாராவது வந்து பாருங்கள்!

(திடுக்கிட்டு உணர்ந்து) காத்யா...!

நிகிதா: (ஆர்வத்துடன்) இறந்துவிட்டாளா?

கிழவி: அவள் ஆத்மா அமைதியில் உறங்கட்டும். நல்ல பெண்.

(சிலுவை போடுகிறாள். பிறரும் சிலுவை போடுகிறார்கள்.) ஓரமாக இழுத்துட்
போடு அன்னா. இனி அந்த சைத்தான்மகன் நாளைதான் வருவான்.

(பனிக்காற்றின் ஊளை. மெல்ல இருள்கிறது. பனிப்புயல் தாக்குகிறத
ஊளை. அரங்கில் அரையிருளில் அந்தப் பனிக்கட்டி மின்னுகிறது.)

கிழவி: பனிக்குக் கண் உண்டு என்பார்கள். இது சைபீரியாவின் கண்...

இலியிச்: ஒரு வழியாக ஒரு தினம் தாண்டப் போகிறது. நம் ஆயுளை
இந்த தூரம்வரை நீட்டித்துவிட்டோம். நினைக்கவே திருப்தியாக
இருக்கிறது.

கிழவி: இருட்டவில்லை. இது புயல்மூட்டம்.

அன்னா: இது மதியம்தான்.

கிழவி: எதுவாக இருந்தால் என்ன? படுக்க வேண்டியதுதான்.

நிகிதா: பாட்டி எனக்குத் தாகம்.

கிழவி: படு குழந்தை. தூங்கினால் கனவில் தண்ணீர் வரும். நிறைய தண்ணீர்.

நிகிதா: எனக்கு கனவிலும் பனிதானே வருகிறது.

இலியிச்: படுப்போம்.

(படுக்கிறார்கள். நிகிதா காத்யாவின் அருகே படுக்கப் போகிறான்)

அன்னா: (திடுக்கிட்டு) நிகிதா!

நிகிதா: என்ன அன்னா?

அன்னா: நீ பாட்டியருகே படு.

நிகிதா: ஏன்?

கிழவி: உன் அம்மா இறந்துவிட்டாளே.

நிகிதா: அன்றைக்கு இறந்துபோன மிகிதின் பக்கத்தில் படுத்தேனே.

கிழவி: அதை இழுத்துப்போடு. பிண வரிசையில் படுக்கப் பிடிக்கவில்லை.

இலியிச்: ஆம், நானும் நினைத்தேன். (எழுந்து காத்யாவை இழுந்து போடுகிறான்)

நிகிதா: (மகிழ்ந்து) அவள் சாகவில்லை! அவள் தலை ஆடுகிறது.

அன்னா: வேண்டாம் இலியிச். அவளை விடுங்கள்.

கிழவி: பின்னே பிணத்துடன் படுக்கவா?

அன்னா: ஒவ்வொரு நாளும் நாம் பிணத்துடன்தானே படுக்கிறோம்?

கிழவி: அது தெரியாமல். தெரிந்தபிறகு எப்படி?

அன்னா: காலைவரை அவள் இங்குதான் இருப்பாள்.

இலியிச்: அதற்கு ஏதும் செய்ய முடியாது. குறைந்தபட்சம் இந்த சிறு [illegible]யாசமாவது நமக்கும் பிணத்திற்கும் இடையே இருக்கட்டும் (காத்யாவை இழுத்து தள்ளிப் படுக்கவைக்கிறான்)

அன்னா: எத்தனை குரூரம்!

இலியிச்: அதெல்லாம் அங்கே, சூரியன் தினமும் உதிக்கும் பூமியில் [illegible]ள்ள சொற்கள். பேசாமல் படு. நாளை வேலை இருக்கும்.

(படுக்கிறார்கள்)

நிகிதா: *(கிழவியின் அருகே படுத்து)* கதை சொல்லு பாட்டி.

கிழவி: என்ன கதை?

நிகிதா: ஸ்டெப்பியின் கதை. அதுதான் எனக்குப் பிடிக்கும்.

கிழவி: ஸ்டெப்பியில் கதகதப்பான வெயில் இருக்கும். எங்கு பார்த்தாலும் பசுமை...

(மெல்ல அனைவரும் தூங்கிவிடுகிறார்கள். அன்னா மட்டும் அமர்ந்திருக்கிறாள். அந்தப் பனிக்கட்டியின் ஒளி அதிகரிக்கிறது. வினோதமான நீலப்பச்சை ஒளி. ஒளி விரிந்து அரங்கு அமானுடத் தோற்றம் கொள்கிறது.)

அன்னா: *(எழுந்து சன்னல் வழியாகப் பார்த்து)* நிலவு! பனி ஒரு கண்ணாடி வெளிபோல அதைப் பிரதிபலிக்கிறது. *(உலவுகிறாள் மீண்டும் அமர்கிறாள்.)* என் சிந்தனைகள் சிதறுகின்றன. இந்த ஒளிக்கு ஒரு பிரமையூட்டும் தன்மை இருக்கிறது. *(மீண்டும் நடக்கிறாள் மீண்டும் அமர்கிறாள்)* நீல நிற ஒளி. பைத்தியத்தின் நிறம் இதுதான். இளநீல நிறம். *(மீண்டும் பதற்றத்துடன் உலவுகிறாள்.)*

காத்யா: *(எழுந்து விறைப்புடன் அமர்ந்து. உறைந்த பொம்மை முகத்தில் ஒரு பிணச்சிரிப்புடன்)* மரணம் என்பது ஒரு சிறை மாற்றம்.

அன்னா: ஆ! *(பதற்றத்துடன் கண்களை மூப்டி பிறகு திறந்து)* காத்யா நீயா?

(காத்யாவின் பிணம் அப்படியே உறைந்து கிடக்கிறது.)

அன்னா: *(தலையைப் பிடித்தபடி)* எனக்குள் எல்லா கட்டுப்பாடுகளும் சிதறுகின்றன. என் மனம் ஒரு பெரிய கூச்சலாக உள்ளது. *(ஓரக் கண்ணால் காத்யாவைப் பார்த்து)* இது காத்யா இல்லை. இது பிணம். பிணம் பேசுமா? இது என் பிரமையா? கடவுளே! கடவுளே! *(கண்களை மூடிக்கொண்டு தலையை இறுகப் பற்றிக்கொள்கிறாள். முகத்தில் நரம்புகள் புடைக்கும் உக்கிர பாவம்.)*

காத்யா: *(எழுந்து அமர்ந்து அன்னாவைத் தொட்டு)* அன்னா!

அன்னா: காத்யா? நீதானா?

காத்யா: *(உறைந்த பிணச் சிரிப்புடன்)* வா, இங்கே குளிரே இல்லை.

அன்னா: *(கிரீச்சிட்டு அலறியபடி எழுந்து சுவரோடு ஒட்டி நின்றபடி)* இலியிச், பாட்டி, ஆசிப்...

(காத்யா உறைந்த பிணமாகப் படுத்திருக்கிறாள் படிகம்போல சுடரும் பனி ஒளி)

அன்னா: காத்யா!

(புயலின் தொலைதூர மீட்டல்)

அன்னா: காத்யா!

(நீல ஒளி)

அன்னா: *(மெல்லத் தெளிந்து)* இல்லை பிரமை. பிரமைதான் *(எழுந்து வெளியே பார்த்து)* பனி நீலவெளி. மூடி வேயில்லை அதற்கு. பனியை மடித்துத் திசைகளாக்கிச் செய்த சிறை. இதிலிருந்து மீட்பே இல்லை. *(தலையை உலுக்கி)* என் பார்வை இல்லாமலாகிறது. இளநீல நிறம் மட்டும் தெரிகிறது *(தலையை அறைந்து)* ஒருவேளை உண்மை இதுதான். பிற எல்லாக் காட்சிகளும் பிரமைகள்தான். வெறுமை! *(மயிரைப் பற்றி இழுத்து)* ஆ அம்மா! அம்மா! *(வலிப்பு)*

இலியிச்: *(கண்களைத் திறந்து சற்று எழுந்து)* ஆ! அவளுக்கு மறுபடியும் ஒரு உச்சம். வேடிக்கைதான், பெண்களுக்கு சீக்கிரமே வந்துவிடுகிறது. *(திரும்பிப் படுக்கிறான்.)*

அன்னா: அம்மா! அம்மா! *(வெறியுடன் சுவரில் தலையை முட்ட ஓடுகிறாள். தடுக்கி விழுகிறாள். எழுந்து மண்டையை மடேரென்று முட்டுகிறாள். மீண்டும் முட்டப் பாயும்போது)*

குரல்: அன்னா!

அன்னா: *(நின்று)* யார்?

குரல்: அன்னா, வேண்டாம்.

அன்னா: *(பரவசமாக)* நிகிதா! நிகிதா!

(நீலநிற புகைப்பிம்பமாக புகாரின் அமானுடமாக நகர்ந்து உள்ளே வருகிறார்.)

அன்னா: நிகிதா! நிகிதா! வந்துவிட்டீர்களா? *(பரவசவெறியுடன் ஓடி. நின்று திகைத்து)* ஆனால் நிகிதா...

புகாரின்: வரமுடியும் அன்னா. ஆனால் அதற்கு அனுமதி வேண்டும்.

அன்னா: அனுமதியா?

புகாரின்: எனக்குக் காவல் உள்ளது, அன்னா.

அன்னா: *(எட்டிப் பார்த்து)* ஆ! பனி ஓநாய்கள்! நிகிதா, இவையா உங்களுக்குக் காவல்?

புகாரின்: ஆம், அப்படித்தான் விதி.

அன்னா: நன்றாக இருக்கிறீர்களா நிகிதா? என்னைப் பார்த்தீர்களா நான்... *(வெறி கொண்டு)* இந்த நரகத்தில் வாழும்படி எதற்கு உத்தரவிட்டீர் நிகிதா? என்னால் தாங்க முடியவில்லை. நானும் வருகிறேன். உங்களுடன் இருக்கிறேன்.

புகாரின்: இது முடிவற்ற பனிவெளி அன்னா. இது ஓநாய்களின் உலகம்.

அன்னா: நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்.

புகாரின்: அப்போது நாமிருவருக்குமே மீட்பிருக்காது. நீ உயிரோடிருந்தால் ஒரு நம்பிக்கை மீதமிருக்கிறது.

அன்னா: இல்லை நிகிதா. எனக்கு நம்பிக்கை இல்லை. நான் அனைத்தையும் இழந்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் என்னை மிகையாக மதிப்பிட்டுவிட்டீர்கள்.

புகாரின்: உன் உலகில் இன்னமும் இரவு பகல்கள் உள்ளன. மாறும் தினங்கள் உள்ளன. சக மனிதர்கள் உள்ளனர். அனைத்திற்கும் மேலாக முன்னோக்கி நகரும் காலம் உள்ளது.

அன்னா: நிகிதா!

புகாரின்: நானிருக்கும் உலகை உன்னால் கற்பனைகூட செய்ய முடியாது.

அன்னா: இங்கே எதை நம்பி வாழ்வது? தியாகம், அன்பு, நீதி, கருணை எந்த வார்த்தைக்கும் இங்கு பொருள் இல்லை நிகிதா.

புகாரின்: ஆனால் அந்தச் சொற்கள் இன்னும் உன் ஞாபகத்தில் உள்ளன.

அன்னா: எனக்கு சமாதானங்கள் வேண்டாம் (ஆவேசம் வந்து) இல்லை இனிமேல் தாங்க மாட்டேன். இந்த குளிர்ந்துறைந்த உலகில் இனி வாழ மாட்டேன்.

புகாரின்: (துயரத்துடன்) எனக்காக அன்னா, எனக்காக!

அன்னா: நிகிதா! நிகிதா! கடவுளே, என்ன வதை இது!

புகாரின்: இப்போதும் உன்னால் கடவுளை கூப்பிட முடிகிறது.

அன்னா: எனக்கு ஒன்றுமே புரியவில்லை நிகிதா.

புகாரின்: அன்னா! பனி, அது எத்தனை கொடூரமானதாக இருப் பினும், அதனால் எதையும் நிரந்தரமாகப் போர்த்திவிட முடியாது. நூறாண்டுகள் ஆகட்டும், அது உருகியே தீர வேண்டும். உயிரோடிருந்த போது என் உள்மனதில் நீதியின்மீது முழு நம்பிக்கை இருந்ததில்லை. ஏனெனில் நான் சித்தாந்தி. சிந்தனைத்திறன் மீதுதான் என் நம்பிக்கை இருந்தது. நீதியோ என் சிந்தனையின் கடைசி எல்லைக்கு அப்பால் இருந்தது. (புகாரின் தனியனாக கனத்த தலையுடன் மெல்ல நடக்கிறார்) அன்னா, நீதி என்பது ஒரு நடைமுறை அல்ல; ஓர் ஒழுங்கு அல்ல, ஒரு நம்பிக்கை அல்ல. நீதி என்பது... நீதி என்பது ஒரு போதும் நம்மால்

முழுக்க அறிந்து கொள்ள முடியாத ஓர் உணர்வு. பூமியின் அத்தனை மனிதர்கள்மீதும் சூரிய ஒளிபோல அது பிரபஞ்சவெளியிலிருந்து பாயியிறங்குகிறது. காற்று போல அனைவரையும் இணைத்திருக்கிறது. பூமிமீது மனிதர்கள் நிரந்தரமல்ல. மனிதன் அறியும் எதுவும் நிரந்தரமல்ல. நீதி நிரந்தரமானது.

அன்னா: (ஆங்காரத்துடன்) இந்தச் சொற்கள் எனக்கு எந்த நம்பிக்கையையும் தரவில்லை. என்னை மன்னியுங்கள் நிகிதா.

புகாரின்: உன்மனம் புரிகிறது அன்னா. நீயும் சிந்தனைத் திறம் மிக்கவள். சிந்தனைத் திறனே நம்மை நீதியிலிருந்து விலக்குகிறது. சுயநலத்தின்மீது நம்மை ஏற்றி வெகுதூரம் இட்டுச் செல்கிறது. ஒருவன் எத்தனை தூரம் பாமரனோ அத்தனை தூரம் நீதிக்கு அருகில் இருக்கிறான். எத்தனை தூரம் வெகுளியோ அத்தனை தூரம் நீதிக்கு அருகில் இருக்கிறான். நம் தேவமகன் சும்மா சொல்லவில்லை - நாம் குழந்தைகள் போல ஆகாவிடில் அவனருகே நெருங்க முடியாது என்று. நாம் நீதியின்பால் பசிதாகமுடையவர்களாக இருக்க வேண்டும் என்று. நீதி பசி போல, தாகம் போல, இயற்கையின் ஒரு சக்தி. இயற்கையைப் புரிந்து கொண்டால் அதையும் புரிந்துகொள்ள முடியும். இயற்கையின் உள்ளே வாழ்ந்தால்தான் நீதியை வாழ்வாகக் கொள்ளவும் முடியும்.

(புகாரின் புகை ஒளிப்படலமாக நகர்கிறார். அரங்கு நடுவே வந்து நிற்கிறார்.)

ஆனால் நான் அறிவின் குழந்தை. இயற்கையை வெல்வது பற்றிய கனவுகளை வரைந்தவன். இயற்கையுடனான பெரும் போருக்கு எப்போதும் துடித்தவன். அது நீதிமீது நான் தொடுத்த போர். இன்று இங்கு நிற்கும்போது எத்தனை தெளிவாக இருக்கிறது எல்லாம்! அன்னா ஒவ்வொரு தருணத்திலும், என் மீட்பர் என்னருகே நின்றிருந்தார். தன் நீதியின் சொற்களை ஒவ்வொருமுறையும் அவர் என்னிடம் சொன்னார். அன்பு என்பதும், தியாகம் என்பதும், கருணை என்பதும், நீதி என்பதும் வெறும் சொற்களல்ல அன்னா. ஏனெனில் அவற்றை நம் மீட்பர் உச்சரித்திருக்கிறார். அவற்றுக்கு அழிவே இல்லை. எந்தப் பனிப் பாறையின் அடியிலும் அவை விதைகளாக உள்ளன. முளைக்கும் போது அவை பனிமலைகளை உடைத்துப் புரட்டும். இதை நம்பு. நம்பு அன்னா. அச்சொற்களை நான் புறக்கணித்தேன். தருக்கங்களால் அவற்றை முடினேன். அப்போது என்னருகே நம் மீட்பர் நின்று கெஞ்சினார். நான் நான் என்று என் கர்வம் எகிறியபோது அவர் கைநீட்டி என்னை தடுக்க முயன்றார். கோடிக்கணக்கான மக்களின் விதியுடன் நான் விளையாடியபோது அவர் மனமுடைந்து கண்ணீர் விட்டார். ஏசுவின் நீதிக்கை உதறி எறிந்தேன். இப்போது அவர் என்னருகே நின்ற சொற்களை மட்டும் காண்கிறேன். இந்தப் பனிவெளியின் மறு கோடியில் அவர் எனக்காகக் காத்திருக்கிறார். நான் தொலைந்துபோன ஆடு. ஆனால் அவர் அங்கே, தொலைவில், வெகு தூரம்... அன்னா இந்த

ஓநாய்கள்... என்னைக் கைவிட்டுவிடாதே! என் நம்பிக்கையைச் சிதைத்து விடாதே! அன்னா... அன்னா...

அன்னா: நிகிதா! இல்லை நிகிதா! நான் தோற்க மாட்டேன்.

புகாரின்: (பின்னால் பற்றி இழுக்கப்பட்டவர்போல நகர்ந்து) அன்னா கைவிட்டுவிடாதே அன்னா...

(வெளியே மறைகிறார். 'அன்னா... அன்னா கைவிட்டு விடாதே' என்ற குரல் தேய்கிறது. ஓநாய்களின் ஊளைகளும்.)

அன்னா: (அலறலாக) நிகிதா!

இலியிச்: (திடுக்கிட்டு விழித்து) என்ன குரல் அது.

அன்னா: நிகிதா! நிகிதா! வந்திருந்தார்!

இலியிச்: யார் புகாரினா? நல்ல கதை!

அன்னா: அதோ நீலநிறப் பனிவெளியில் தனித்து நடந்து போகிறார். வெண்ணிறப் பனி ஓநாய்கள் புடைசூழ... நிகிதா!

இலியிச்: உருவெளிக் காட்சியா? சரிதான். பயணச்சீட்டு எடுத்துவிட்டாய்.

அன்னா: இல்லை இலியிச். எழுந்துபார். இதோ தொய்ந்த தோள்களுடன் துயரம் நிரம்பிய நடையுடன் நிகிதா. என் அருமை நிகிதா.

இலியிச்: படு பேசாமல். (படுக்கிறான்.)

அன்னா: நிகிதா. (பெருமூச்சுடன் தணிந்து) ஒருவேளை பிரமைதானோ?

நிகிதா: (எழுந்து) அம்மா, அம்மா... (பரபரவென நாற்புறமும் பார்க்கிறான். காத்யாவைப் பார்த்து எழுந்தோடி அவளருகே அமர்ந்து கோட்டின் பித்தான்களைப் பிரிக்கிறான்.)

அன்னா: நிகிதா, என்ன செய்கிறாய்?

நிகிதா: ரொம்ப தாகம்.

அன்னா: விடு அவளை. அவள் இறந்துவிட்டாள்.

நிகிதா: எனக்கும் தாகம். நானும் சாவேன்.

அன்னா: வா. உனக்கு சூப் தருகிறேன்.

நிகிதா: சூப்பா எங்கே?

அன்னா: இரு (சம்மட்டியை எடுத்து ஒரேயடியாக அடிக்கிறாள். பனிரொ அது உடைந்து சில்லுகளாகத் தெறிக்கிறது.)

நிகிதா: ஆ! உடைந்துவிட்டது.

அன்னா: இரு! (ஒரு சில்லை எடுத்து சிறு குவளையில்போட்டு தன் கோட்டுக்குள் செருகியபிறகு குனிந்து ஒடுங்கி அமர்கிறாள்)

நிகிதா: அன்னா நீ குளிர்ந்து செத்துவிடுவாய்.

அன்னா: இல்லை. கொஞ்ச நேரம் பொறு. இது உருகிவிடும்.

நிகிதா: தீ எங்கே?

அன்னா: உள்ளே இருக்கிறது.

நிகிதா: உண்மையாகவா?

அன்னா: ஆம், ஆனால் இது வேறு ஒரு தீ. பல மடங்கு கூடான தீ.

நிகிதா: எனக்கும் தீ வேண்டும்.

அன்னா: தருகிறேன்; நிச்சயமாக.

◆

6

கடுங்குளிர் கவிதைகள் *

1. இந்த நூற்றாண்டு

இந்த நூற்றாண்டில் நாம் பிறந்திருக்கலாகாது
மகத்தான மனங்கள்
மகத்தான கனவுகளுக்குப்பின்
திடுக்கிட்டு விழித்த காலம்இது

அவர்களுக்கு மனிதப்பெருந்திரள் ஒரு நதி
அணைகட்டித் திசைதிருப்புவார்கள்

ஒரு மிருகம்
சங்கிலியிட்டு சவுக்கசைப்பார்கள்

ஒரு நூல்
திருப்பித்திருப்பி உரையெழுதுவார்கள்

சகோதரர்களே
வெந்த மனதுடன் நாம் விடும் கண்ணீர்
அவர்கள் பார்வையில் படுவதேயில்லை
மகத்தானவை பிற எல்லாவற்றையும்
மறைத்துவிடும் திறன் கொண்டவை.
தீர்க்கதரிசிகளை புனிதர்களை ஞானிகளைத்
தாண்டியும் ஒரு காலம் உண்டு
கனவுகளற்ற ஒழுங்குகளற்ற கருணையற்ற காலம்
மனிதர் மிருகங்களாக இருந்த காலம்
நாம் சாகவேண்டிய காலம் அதுவே.

வஞ்சிக்கப்பட்டு வதைக்கப்பட்டு
காறி உமிழப்பட்டு
சதைக்குவியல்களாக ஓலங்களாக
நாம் செத்து விழும்போது
அதற்கு ஓர் அர்த்தமிருந்திருக்கும் அப்போது.
ஒவ்வொன்றும் இத்தனை கனமாக நம்மீது
அழுந்தியிருக்காது அப்போது.

---

* சைபீரியாவில் ஒரு சிறைவாசி (அல்லது பலர்) எழுதிய கவிதைகள் இவை. ஆஸிப் மன்டல்ஸ்டம் எழுதியவை என்ற பெயரில் வீரபத்ரபிள்ளைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர் அவற்றை மொழிபெயர்த்திருக்கிறார் ஆஸிப் மன்டல்ஸ்டம் கவிதைகளின் சாயல் இவற்றில் குறைவு மொழிபெயர்ப்பு சற்று சுதந்திரமானது.

2. எறும்பு தின்னி

எறும்பு தின்னியின் நிதானம்.
திடமான கால்களுடன் மந்தமான கண்களுடன்
தனமாக அசைந்து செல்கிறது.
அதன் குளிர்ந்த நாக்கு
எறும்புப் புற்றுகளுக்குள் நெளிந்தேறுகிறது.
அதன் குளிர்ந்த மூச்சு
அங்குள்ள கூடுகளைச் சிதறடிக்கிறது.
உள்ளே ஓலங்கள்
உயிரின் குருட்டு வெறி
தினம் அது காண்பது அக்காட்சி.
மரணம் ஒரு பெரும் பதற்றம்
என அது அறிந்தது.
எனவே
வாழ்வு ஒரு நிதானமான நடை எனப்
புரிந்துகொண்டது.

3. வாக்களிக்கப்பட்ட பூமி

நீண்ட பயணத்திற்குப் பிறகு
நாம் வந்து சேர்ந்த இந்த
வாக்களிக்கப்பட்ட பூமியில்
தேவதூதர் முகங்கள்
ஏனிப்படி இறுகியிருக்கின்றன?
தேவதைகள் ஏன் அஞ்சி நடமாடுகின்றன?
கரிய செங்கோல் ஏந்தி
அரியணை அமர்ந்திருக்கும் நமது பிதா
ஏன் ஒருமுறைகூடப் புன்னகைக்கவில்லை?

இந்த இடத்தில் பாடுவதற்கென்று
ஒரு பாடல் வைத்திருந்தேன்.
ஆயிரம் வருடக் கனவுகளில் இருந்து
என் தோழர்களின் களமரணங்களில் இருந்து
என் தனிமையின் முடிவற்ற உருகலில் இருந்து
இதை எழுதினேன்.
இதைப்பாட இப்போது அனுமதியுண்டா?
ஆடலின்றி இதைப் பாடமுடியாது.
சிம்மாசனம் விட்டிறங்கி
முள்முடியுடனும் சிலுவையுடனும்
அவனும் நம்முடன் சேர்ந்து ஆடாமல்
இந்த ஆட்டம் நிறைவுறாது.
நண்பர்களே
வாக்களிக்கப்பட்ட இந்த பூமியில்
இதற்கு உத்தரவு உண்டா?

4. இரு பறவைகள்

வல்லூறு ஆற்றல் மிகுந்த பறவை
காற்றின் படிக்கட்டுகள்
அதன் கண்களுக்கு மட்டுமே தெரியும்
பூமி ஒரு கசங்கிய போர்வை அதற்கு.

சிட்டுக்குருவி சின்னஞ்சிறியது
திசைகள்மீது எம்பித் தாவுகிறது
வானம் அதற்கு
தொலைதூரத்து ஒளிக்கடல்.

இரு பறவைகள்.
இரண்டிலிருந்தும் வானம்
சமதூரத்தில் இருக்கிறது.

5. காலை ஒளி

இன்று காலை சிறிது ஒளி வந்திருக்கிறது
பனியின் கனம் குறையக் கூடும்
என் உறைந்த எண்ணங்கள்மீது
இளவெயில் பரவுகிறது
மென்மையான மலர்கள் விரிகின்றன
மிக மெல்லியவை, உதிர நுரைபோல
அவற்றைத் தொட அஞ்சுகிறேன்
அவை உதிர்ந்துவிடும் என்பதை அறிவேன்.
கூயோ கனியோ விதையோ ஆகாத
பூசண மலர்கள் அவை
(இறந்தவற்றின்மீது பூசணமே வளரும்)
ஆயினும் மகிழ்ச்சியடைகிறேன்
என் கைகளை உரசியபடி
சுறுசுறுப்புக் கொள்ளவும்
சட்டைப் பட்டியை இழுத்துவிட்டுக்கொண்டு
'நல்லது நண்பர்களே இன்னும் மீதமிருக்கின்றன சில'
என்று சொல்லியபடி
புதிய தினத்தைத் தொடங்கவும் முயல்கிறேன்
இன்று காலை வந்த சிறு ஒளி
ஏன் வந்ததென்று தெரியாது
ஆயினும்
இதற்காகவே வந்தது என
கற்பனை செய்துகொள்கிறேன்.

6. வடுக்கள்

மகத்தான எண்ணங்கள் என்னில் எழுகையில்
எனக்குப் பசி மறந்து போகவேண்டும்
ஒளிமிகுந்த கனவுகளிலிருந்து விழித்தெழுகையில்
கடும்குளிர் என்னைத் தாக்காமலிருக்க வேண்டும்
எத்தனை இழிவானது மனிதனாக இருப்பது
ஒரு சிறு ஆயுதம் நம்மை மண்டியிட வைக்கிறது
ஒரு சிறு ஆசை நம்மை
தேவதூதர்களையும் மறுதலிக்க வைக்கிறது
என்ன மிஞ்சுகிறது பிறகு
இந்தக் கனவுகளைத் தவிர
நாம் சிலுவையில் அறையப்பட்டவர்கள்
உயிர்த்தெழுதலின்றி மரிப்பவர்கள்
கனவுகளே ஆணிகள்
ஐந்தல்ல ஆயிரம்
என் புனித வடுக்கள்.

7. காவியம்

இரங்கற் பாடல்களினாலான ஒரு காவியம்
இதுவரை யாரும் எழுதியதில்லை.
ஒவ்வொரு வரியும் ஒரு ஆத்மாவுக்கு
ஒவ்வொரு சொல்லும்
சிதைந்துபோன ஒரு கனவுக்கு
ஒவ்வொரு எழுத்தும்
ஒரு துயர நினைவுக்கு.

அப்படியொரு காவியத்தை எழுதினால்
அதற்கு முற்றுப்புள்ளியே போடமாட்டேன்
கண்ணீருடன் அவ்வப்போது
காற்புள்ளிகள் வைப்பேன்
எல்லையற்ற நிம்மதியுடன் முக்காற்புள்ளிகள்
பரவசமூட்டும் ஒரு கனவாக முற்றுப்புள்ளி
என்முன் மிதந்துகொண்டிருக்கச் செய்வேன்

இரங்கற் பாடல்களினாலான காவியத்தில்
மலைகளும் சமவெளிகளும் புட்களும் பூக்களும்
சதுப்புகளும் வனமிருகங்களும் இருக்காது.
பனிவிரிந்த சாம்பல்நிற வெட்டவெளி அது
காற்று உலாவும் குளிர்ந்த மௌனப்பரப்பு.

இரங்கற் பாடல்களினாலான காவியத்தில்
ஒரே வரி மீண்டும் மீண்டும் வரக்கூடும்
ஒரே சொல் மீளாது ஒலிக்கக்கூடும்
அச்சொல் ஒருவேளை
வெறுமொரு விசும்பலாக இருக்கக்கூடும்.

இரங்கற்பாக்கள் உதிரும் இலைகள்போல
அவ்வளவுதூரம் அர்த்தமற்றவை வெறுமையானவை
உதிர்க்கும் மரத்தைத் தவிர
மீதி அனைவருக்கும்.

8. மண்

இறந்த குழந்தையை தானே புதைக்கும்
தாய் ஒருத்தியை நேற்றுப் பார்த்தேன்.
பிடிப்பிடியாக மண்ணை அள்ளி
மெதுவாக சொரிந்துகொண்டிருந்தாள்
பிஞ்சுக் கால்கள் மறைந்தன.
குட்டிக் கைகள் பிறகு.
உருண்ட சிறு முகத்தை மெல்ல வருடினாள்
மென்மையான மண்ணை அள்ளி
மெதுவாகப் பரப்பினாள்.
ஒவ்வொரு பிடி மண்ணாக
மெல்ல மெல்ல...
அம்மா
இந்த பூமியையே அள்ளி எடுத்துவிடுவாயா?

9. மலைகளின் அடியில்

மலைகளைப் போன்றது துயரம்
கண்களை நிறைத்தெழும் வடிவற்ற எழுச்சி
அப்பால் இன்னொன்று சற்று மங்கலாக
அப்பாலும் திசைநீட்சியில் அவை உள்ளன
பனிமூடிய மேகமிறங்கிய சிகரங்கள்
குளிர்ந்துறைந்த சரிவுகள்.

துயரம்போலவே மௌனமானவை மலைகள்
மிகமிகத் தனிமையானவை.
பனியில் ஓசையின்றிப் புதைந்து மறைகின்றன.
அப்போது ஒரு சிகரத்தின் அதிநுனியில்
கண்மூடி அமர்ந்திருப்பேன்.

நிலவொளியில்
துயரம்போலவே கம்பீரமானவை மலைகள்
எண்ணம் தாவித்தாவி சிகரங்களைக் கடந்து
ஓர் அபார உச்சியில் சென்று சேரும்
சில கணங்களுக்கு.

உதயத்தில் மலைகள்
உருகி வழிந்து ஒளிபெறுகின்றன.
வானவில் சூடி அவை
வெட்கிச் சிவப்பதையும் கண்டதுண்டு
இப்போது என் கற்பனைகளை வழிமறிக்கும்
இருண்ட பேருருவங்கள் இவை.
என் நம்பிக்கையோ இவற்றை
விலகவைக்கப் போதுமானதல்ல.

அவை இருக்கட்டும்
இல்லையேல் இந்தப் பெரும்பனியில்
நான் துணையற்றுப் போய்விடுவேன்.

10. பனி உருகும் ஒலி

காலம் என்பது சிதறாத மௌனம்
மௌனமோ
கேளாத ஒலிகளின் தொகை.

இந்த தனித்த குளிர்ந்த இரவில்
இருண்ட தொலைவுகளில்
உறைந்த ஏரிகளும் நதிகளும்
ஏதோ தீர்மானித்துக் கொண்டவைபோல
உள்ளூர விரிசலிட்டு நொறுங்குகின்றன.

பனிக்காற்று இன்னமும் வீசிக் கொண்டிருக்கிறது
தூரமான மந்திரவாதியைப்போல
தொடுபவற்றையெல்லாம் அது கல்லாக்குகிறது
நிருப்பிப் பார்ப்பவர்களை எல்லாம்
உப்புச்சிலையாக ஆக்குகிறது
நிசைகள்மீது வெண்திரைகளை இழுத்துவிடுகிறது
மலைகளைத் தழுவி உண்டுவிடுகிறது.

பனிக்காற்று நம்மை
ஒன்றைப் பற்றியே திரும்பத் திரும்ப எண்ண வைக்கிறது
நாம் புன்னகைக்கும்போது உதடுகளும் கன்னங்களும்
விரிசலிட்டு ரத்தம் கசிகின்றன.

நாம் கைகுலுக்கும்போது
உலர்ந்த மரக்கட்டைகள் உரசிக் கொள்கின்றன.
பனிக்காற்று நாம் ஒருபோதும் பார்த்திராத,
நம்மால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாத
பெரும் வல்லமையொன்றின் மூச்சு.

ஆனால் இந்த இரவில்
ஆகள் ஏன் உறுமியபடி உடைய வேண்டும்?
ரிகளின் ஆழம் ஏன் விரிசலிட வேண்டும்?
உள்ளே உயிர்பெறுவது என்ன?

அன்பே
வெகுகாலம் முன்பு
ஆம், மிகத் தொலைகாலத்தில் என்றோ
காம் புணர்ந்துவிட்டு வந்த ஒரு விதையா அது?
அன்பே அதுதானா?
ஆமென்று சொல்லமாட்டாயா?
இந்தக் குளிரில், இந்த இரவில்
ஆமென்று மட்டும் சொல்லிவிட மாட்டாயா?

11. சாம்பல் நிறம்

சாம்பல்நிறம் உண்மையில் எதன் நிறம்?
உறைந்து கிடந்த பிணங்களின் சருமங்களில்
அதைப் பார்த்தேன் அன்று.
பைன்மரக் காடுகளின் தரை சாம்பல்நிறம்
முதிர்ந்த பனி சாம்பல்நிற விரிவு.

நினைவிருக்கிறதா அன்பே
உன்னை நான் முதலில் முத்தமிட்டபோது
'பச்சைத் தழல்கள்போல துடித்த காட்டுமரக்கிளைகள்?

இந்த வானும் இந்த மண்ணும்
இந்தக் காற்றும்
இங்கு எழும் எண்ணங்களும்
சாம்பல் நிறமானவை.
பூசணம்பூத்த ரொட்டியும் குளிர்ந்த சூப்பும்
ஈரமான சப்பாத்துகளும்
காவல் வீரனின் சவுக்கும்
அவன் வரும் குதிரையும்
சாம்பல் நிறமாக இருப்பதைப் புரிந்துகொள்கிறேன்
ஆனால் சவப்பெட்டி ஏன் சாம்பல்நிறமாக இருக்க வேண்டும்?
புதைகாட்டில் முளைக்கும் காளான்கள்
ஏன் சாம்பல் நிறமாக இருக்க வேண்டும்?

என் சாம்பல்நிறப் படுக்கையில் படுத்தபடி
ஒளிரும் வண்ணமலர்களினாலான பூமியின் மறுபாதியை
என்னுள் கற்பனை செய்ய முயல்கையில்
சாம்பல் நிறம் மட்டுமே தெரிகிறது.
பனிபடர்ந்த ரயில் சன்னலின் கண்ணாடி மீது
மூச்சின் ஆவி பரந்து துளிக்க
கடைசி முத்தத்தை நீ அழுத்திய அன்று
அன்பே உன் உதடுகளும்கூட
சாம்பல் நிறமாகவா இருந்தன?

அன்பே, இவ்வளவுதான் கூறமுடிகிறது
கடவுள் மிகமௌனமாக மட்கிக்கொண்டிருக்கிறார்.

12. சிறந்த தூக்கம்

நிரபராதிகளின் ரத்தம்
அதற்கு நிறமில்லை மணமில்லை
விழித்திருக்கும் எவர் கண்ணிலும் படுவதில்லை
நிரபராதிகளின் ரத்தம்
மெல்ல உறைந்து மண்ணில் மறைந்து
ஒரு ரகசியமாகவே எஞ்சுகிறது.
தேடிவரும் சல்லிவேர்கள் அதிர்கின்றன.

நிரபராதிகளின் ரத்தத்திற்குப் பிடிவாதம் அதிகம்
இந்த மலர்ச்செடிகளின் மகரந்தம்
இதன் தளிர்களின் மாமிச மென்மை
அதன் உயிரின் முளை.
இந்த மலைச்சரிவில் தேன்குடிக்கும் வண்டுகள் அறியும்
மிக்கனமான, மிகமிக மௌனமான ஒரு ரகசியம்.

நண்பா, உன் சன்னல் கண்ணாடிக்கு அப்பால்
படபடத்து உள்வரத் துடிப்பது என்ன?
அதைத் தவிர்க்கிறாய் உணவருந்துகிறாய்
தூதப்பான போர்வையைப் போர்த்திக்கொண்டு
விளக்குகளை அணைத்துக்கொண்டு படுக்கிறாய்
அந்தப் படபடப்பு பேரோசையாகிறது.

நிரபராதிகளின் ரத்தம்
நிலில் சர்வ வல்லமை கொள்கிறது
அன்முன் கொடுங்கோலர் மண்டியிடுகிறார்கள்
சிந்தாந்தங்கள் உருகிவிடுகின்றன.
ஆனால் தூக்கம் காலம்போல
அனைத்தையும் மூடிவிடும் சக்தி கொண்டது.

நினிக்க காலையில்
பனிசொட்டும் ஜொலிப்புகளில்
உன் கண்ணாடிக் கதவின் மறுபக்கம்
ஒரு கண் ஒட்டியிருப்பதைக் காண்கிறாய்
தூயக்காது விழித்த பார்வை
சிறுதுநேரம் தான்
வெய்யின் வெப்பத்தில் அது உதிரும்
மண்ணில் சிதைந்து அழியும்.

பொதித்திருக்கிறாயா?
உன்னை எளிதாக நாம் தூங்கமுடிகிறது.
இப்படுவதற்கு எவ்வளவு அமைப்புகளை
நாம் கண்டுபிடித்திருக்கிறோம்.
மிக மெல்லிய மெத்தை, விரிப்புகள்,
தூதப்பான போர்வை, சுகந்தம், மெல்லிசை
சௌகரியமான எதிர்பார்ப்புகள், பிரார்த்தனைகள்
அனைத்தையும் நியாயப்படுத்தும் தருக்கங்கள்.

13. விடுதலை

குழந்தைகளைக் கொல்வது எளிது
கொடூரமாக கொல்வது இன்னும் எளிது
கால்களைப் பற்றிக் கிழிக்கலாம்
வாய்க்குள் கோடரிப்பிடியைப் புதைக்கலாம்
தூக்கிவீசி பயனெட்டைக் காட்டலாம்.

பேசும் குழந்தையைவிட
பேசாத குழந்தையைக் கொல்வது எளிது
முகம் பார்த்து சிரிக்கும் குழந்தையைவிட
பால்மணக்கும் பிஞ்சைக் கொல்வது எளிது
பெயரிடப்பட்ட குழந்தையைவிட
பெயரற்ற ஆத்மாவைக் கொல்வது எளிது.

குழந்தைகளைக் கொல்லாமல்
எங்கும் நாகரிகங்கள் உருவானதில்லை
அந்த தேவதை நிரபராதிகளை பலிகேட்பது
குழந்தைகளே அதன் முதல் தேர்வு.

குழந்தைகளைக் கொல்வதன் மூலமே
நாம் பெரும் வலிமைகளை அடைகிறோம்
குழந்தைகளைக் கொஞ்சிவளர்க்கும் சமூகங்கள் எவையும்
பிறகு நம்மை வெல்ல முடியாது.
நமது எந்திரங்கள் அச்சத்தில் ஓடும்
நாம் தொட்டதும்
வால்காவும் ஆபும் எனிசியும் லீனாவும் எரியும்

குழந்தைகளைக் கொல்லப் பயிற்சி தேவை
நிறைய சொற்களை மறந்துவிட வேண்டும்
நிறைய சொற்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்
சொற்கள் மந்திரமாக வேண்டும்
மந்திரக்கோலுடன் ஒரு மாயாவி வேண்டும்.

நன்றாக என் கண்களைப் பாருங்கள்
வேறு எதையும் பார்க்க வேண்டாம்
நானே வழியும் ஜீவனும் ஒளியுமாக இருக்கிறேன்.

பார்த்தீர்களா, எங்கு வந்துவிட்டோம் நாம்?
புதிய உலகம்! வலிமையே நீதியென ஆன உலகம்!
புரட்சி என்பது வேறு என்ன?
புரட்சி என்பது விடுதலை.

ஆம் நண்பரே
விடுதலை!

14. புன்னகை

சுதந்திரமே சமத்துவமே
மகத்தான இலட்சியங்களே,
ஒருபோதும் உங்களைக் கண்டதில்லை.
உங்களைக் காண்பவர்கள் ஒருவேளை
வெட்கித் தலைகுனியக் கூடும்.
யாரறிவார்
அங்கியின் நுனியால் வாய்மறைத்து
கண்ணீர் கனக்கும் முகத்துடன்
நீங்களும் நினைவுகூரக்கூடும்
தூக்குமேடைகளை, சவ ஊர்வலங்களை,
போர்க்களங்களை, பசித்து இறந்த குழந்தைகளை.

தேவதைகளே
சகோதரர் சிரங்களை வெட்டியெறிந்தும்
தசைநார்களை மீட்டி உங்கள் புகழ்பாடியும்
நூற்றாண்டுகளாக வழிபட்டோம் உங்களை
உங்கள் வருகை நிகழவில்லை.
வழிதவறிவிட்டீர்கள் போலும்
உங்கள் காலடிச்சுவடை ஒருவர் கண்டார்
மட்கியழியும் குழந்தையுடல் அருகே.
இன்னொருவர் கண்டார்
புறக்கணிக்கப்பட்ட தியாகிகளின் வீட்டுமுன்
இன்னொருவர் கற்பழிக்கப்பட்டுப் பித்தான
பெண்ணின் அறைவாசலில்.

ஒருபோதும் எவரும்
நீங்கள் அமர்ந்திருந்த தடத்தைக் கண்டதில்லை.
சாந்தியே இல்லாத ஆத்மாக்களா நீங்கள்?
நீங்கள் இச்சித்ததுண்டா இதையெல்லாம்?
சுதந்திரமே சமத்துவமே
மகத்தான இலட்சியங்களே
ஒரேயொருமுறை நீங்கள் இவ்வழி வரவேண்டும்.
உடனடியாகத் திரும்பிவிடலாம்.
எங்களின் குட்டிக் குழந்தையை
அள்ளி மார்போடணைத்தபடி நீங்கள்
ஒரு துளிக் கண்ணீர் விட வேண்டும்
(வேனம்! அது எளிதில் நொறுங்கிவிடும்
துயரங்களின் சிறு மூட்டை)
சுதந்திரமே சமத்துவமே
மகத்தான கனவுகளே
அப்போது நாங்கள்
இழந்தவற்றையெல்லாம் நினைவுகூர்ந்து
கொஞ்சம் புன்னகைப்போம்,
அடங்காத பெரும் துயரை விழுங்கி.

15. இரு மருங்கும்

சலனம் மிகுந்த இரவின் மௌனத்தில்
இந்தப் பனிவெளியின் பொந்துகளில் எங்கும்
மெல்ல முளைத்து அருவப்பேருருவாய் ஓங்கி
வெளிநிறைக்கும் கனவுகளை
ஒருபுறம் பார்த்துக்கொண்டிருக்கிறது வரலாறு
கண்ணீரின் கதகதப்புடன்
மறுபுறம் அதிகாரம்
மீசைக்குள் உறைந்த இளஞ்சிரிப்புடன்.

16. தேவன் மொழி

பொருளின்றிச் சிதறும் இச்சொற்களால்
வருக்கான மொழியை உருவாக்குகிறோம் நாம்?
ட்பரே நீர் இதைக்கேட்க வரப்போவதில்லை
இந்த மொழி உமக்குப் புரிவதில்லை
ஏனெனில் இதில் எம் பாவங்களை அறிக்கையிட முடியாது.
இது சாத்தானின் மொழியும் அல்ல
மது துயரங்களின் ஒலி அவனுக்கு ஒரு பொருட்டேயல்ல
அறிவாளிகளின் தருக்கத்திற்கும்
வினர்களின் கண்ணீருக்கும்
அப்பால் இருக்கிறது எங்கள் மொழி.

ஆண்டவரே
னிவெளியில் மட்கும் மரக்கிளைகள்போல
சிதைந்த கரங்களை விரித்துப் பரவி
டம்மை அழைக்கிறோம்
ங்கு வந்து உறைபனியின் மொழியை அறிக.
மது பாவங்களை மன்னித்தருள்க.
றகு
மது பாவங்களை நாங்கள் மன்னிக்கிறோம்.

17. தூய மரணம்

எப்படிச் சாகின்றன பறவைகள்!
பறந்தபடியிருக்கையில் ஒரு கணம் முறிய
அவற்றின் உடல் சுழன்று மண்மீதிறங்கும்
ஆத்மா உத்வேகம் தீராது மேலே பறக்கும்
அல்லது ஒருவேளை
பிரியமான மரக்கிளையொன்றில்
அரைக்கண் மூடி அமர்ந்து
உதிரும் சிறகுகளை ஒவ்வொன்றாக நீவியபடி
மெல்ல துடிப்படங்கும்
எப்படியானாலும்
பறவைகள் மரிப்பதை யாரும் பார்ப்பதில்லை.
பிற பறவைகள்கூட.
துல்லியமான பரிசுத்தமான மரணம்.
என் தேவனே, என் மீட்பரே,
இந்த வதைமுகாமில் இந்தக் கடுங்குளிரில்
என்மீது பறவைகள் பறப்பதை மட்டும் தடுத்துவிடுங்கள்
பறவைகளைக் காணாமல் சாக
எனக்கு வரம் கொடுங்கள்.

18. கடிதங்கள்

தபால் வசதி அனுமதிக்கப்படாத ஊர்களில்
பலநூறு கடிதங்கள் தினம் எழுதப்படுகின்றன.
அவை காற்றில் குளிர்போல
கனத்துத் தொங்குகின்றன.
சிறு காற்றின் வருடலில்
மழையாகி அவர்கள்மீதே விழுகின்றன.
குளிர்ந்து அவர்களைச் சுற்றி இறுகிவிடுகின்றன.
கடிதங்களின் கடுங்குளிரில் அவர்கள் தூங்குகிறார்கள்
அப்போது வெப்பமான காற்றை
அவர்கள் கனவு காண்கிறார்கள்
வானில் ஒளியாக சொற்கள் பரவ
ஆத்மாக்கள் அவற்றை உண்ணும்
ஒரு மகத்தான தினத்தைக் காண்கிறார்கள்
பின்பு விழித்தெழுந்து கண்ணீர் விடுகிறார்கள்
மறுநாள் மீண்டும்
இறுகும் பனியை உடைத்தெழுந்து
கடிதங்களை எழுதத் தொடங்குகிறார்கள்.

19. இந்த நாடகம்

நீ நம்பியிருந்த ஒவ்வொன்றும் உடையும்போது
சிதிலங்களைப் பொறுக்கி
மீண்டும் மீண்டும் அடுக்குகிறாய்
உன்னுள் உறையும் உன் தந்தையின்
குளிர்ந்த யதார்த்தத்துக்கு எதிராக
உன்னுள் உன் மகன் எழுப்பும்
ஆர்ப்பரிப்புமிக்க வாதங்களை
ஊசலாடும் மனதுடன் பார்த்திருக்கிறாய்.
நீ தேடுவது நேற்றையோ நாளையோ அல்ல
இன்று உன் பாதம் ஊன்றும் ஓரடி மண்ணை.
நீ உன் தனிமையில் விடும் பெருமூச்சு
நீ கைவிடப்பட்டவன் என்பதற்காக அல்ல
ஒருபோதும் உன்னைப்போல் உன் தந்தை
நம்பியதில்லை என்பதற்காக.
சிலசமயம் நீ பூக்கும் புன்னகை
உன் கனவுகளுக்காக அல்ல
ஒருபோதும் உன்னைப்போல் உன்மகன்
அவநம்பிக்கை கொள்வதில்லை என்பதற்காக.

20. யாருக்காக?

யாருக்காக எழுதப்படுகின்றன கவிதைகள்?
இன்னும் சூரியன் உதிக்கிறது
ஒளிபட்ட பனிப்பாறை போல
அவ்வளவு கடும் குளிருடன்.
எலும்பைத் துளைக்கும் அதன் புன்னகை
மலர்கள் மலர்கின்றன
தொடும்போதே உதிர்கின்றன.
இன்னும் மிச்சமிருக்கின்றன என நான்
அள்ளியள்ளித் திரட்டும் நம்பிக்கைகளை
உடைக்கிறது தூரத்து ஓலம்.
கையேந்தி நின்று ரொட்டிக்காக மன்றாடும்
இந்தச் சிறுகுழந்தை கேட்கவில்லை
யாருக்காக எழுதிக் கொண்டிருக்கிறேன்
இக் கவிதைகளை என்று.

✦

7

மறக்கப்பட்ட புனிதவதியுடன் ஒரு சந்திப்பு

ரணில் குணசிங்கெ*

மாஸ்கோவிலிருந்து இருநூறு கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து தர்கிஸ்க் கிராமத்தை அடைய வேண்டும். மிகுந்த பொறுமை தேவைப்படக் கூடிய பயணம் அது. இரும்புத் திரை இருந்த நாட்களில் நான் பலமுறை ரஷ்யக் கிராமங்களுக்குக்கூடச் சென்றதுண்டு. கூட்டுப் பண்ணைகளைப் பார்வையிடுவது, லட்சியத் தொழிலாளிகளைச் சந்தித்து உரையாடுவது என்று. அப்போதெல்லாம் பயண ஏற்பாடுகள் முன்னதாகவே செய்யப்பட்டிருக்கும். 'அனைத்தும் அறிந்த' ஒரு வழிகாட்டி கூடவே இருப்பார். பெரும்பாலும் அவர் மிக இனிமையாகப் பேசக்கூடியவராகவும், கம்யூனிஸ்டு கட்சிமீது ஆழ்ந்த பற்று உடையவராகவும், உலகின் எதிர்காலம்பற்றிய கவலை நிரம்பியவராகவும், என் தேசத்து இடதுசாரி இயக்கங்கள் பற்றிய அக்கறைகொண்டவராகவும் இருப்பார். பயணத்திலும் சரி, பிற நிகழ்ச்சிகளிலும் சரி, குளறுபடிகளே இருக்காது; சில 'எதிர்பாராத' இனிய நிகழ்ச்சிகளைத் தவிர. ஒரு முறை கூட்டுப் பண்ணை விவசாயிகள் தங்கள் பண்ணைக்கு ஓர் இலங்கை எழுத்தாளன் வருகை தந்ததுபற்றி அறிந்து எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்து, வேலைகளை நிறுத்திவிட்டு சேர்ந்திசைப் பாடல் ஒன்றை தேர்ந்த குழுபோல சுருதி சுத்தமாகப் பாடினார்கள். அது ஆசியாவின் பெருமையைப் பற்றிய பாடல். அவர்கள் அதை விசேஷமாகப் பயிற்சி செய்யவில்லை என்றும், ஓய்வு நேரங்களை அவ்வாறு தொழிற்சாலையில் பாடல் பாடியும் ஆடியும் செலவிடுவதாகவும் தெரிந்து கொண்டேன். முன்பெல்லாம் ருஷ்யப் பயணம் என்பது பலமுறை படித்த ஒரு நூலை மீண்டும் படிப்பதுபோல. எனினும் அதன் கவர்ச்சி என்னை எப்போதும் இழுத்துக் கொண்டிருந்தது. ஏனெனில் நான் எல்லா நூல்களிலும் வரிகளுக்கிடையிலும் வாசிக்க முயற்சி செய்பவன். அவ்வாசிப்பு பலசமயம் என் கற்பனை என்பது என்னை சோர்வடையச் செய்வதில்லை. உண்மைக்கு நாம் ஒருபோதும்

---

* சிங்கள - ஆங்கில எழுத்தாளரும் மார்க்ஸிய அறிஞருமான ரனில் எழுதிய 'பனியுருகிய பிறகு' என்ற தொகை நூலில் இருந்து எடுக்கப்பட்ட பகுதி.

முழுக்க அறிந்துவிட முடியாத முகங்கள் பல உண்டு என்ற ஆழமான நம்பிக்கையே ஓர் அறிவுஜீவியின் அடிப்படைத்தகுதி என்று நம்புகிறேன்.

இப்போது எதுவும் இல்லை. மாஸ்கோவின் தேசிய சுற்றுலாக்கழக வாசலில் அங்கீகாரம் பெற்றவர்களும் பெறாதவர்களுமாக வழிகாட்டிகள் மூட்டி மோதுகிறார்கள். 'டாலர் டாலர்' என்று காய்ச்சல் வந்ததுபோல மொத்த நகரமே பிதற்றுகிறது. அங்கீகாரமில்லாத வழிகாட்டிகள் 'எல்லா இன்பங்களும்! எட்டு டாலர்! கனவானே' என்று ஆங்கிலத்தில் கூவுகிறார்கள். எல்லா இன்பங்களுக்காகவும் வந்துள்ள ஐரோப்பியர் அத்தகைய வழிகாட்டிகளை பேரம் பேசி அமர்த்திக் கொள்கிறார்கள். ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் அறிவிப்புப் பலகைகள் அறிமுகமில்லாதவர்களை, அங்கீகாரமில்லாத வழிகாட்டிகளை நம்பி எங்கும் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கின்றன. ஆனால் பயணிகளில் பெரும்பாலோர் சிறிது உத்வேகத்தைத் தேடி வந்தவர்கள். அவர்களுக்கு வரலாற்றில் ஆர்வம் இல்லை. பிரெஞ்சுக் கதையொன்றில் வருவதுபோல இறந்துபோன மனைவியின் கல்லறைமீது விபசாரியை அழைத்துவந்து படுக்க வைத்துப் புணரும் கணவனின் மனநிலையில் அவர்கள் இருக்கிறார்கள். சிறிது போதை, நிறைய விபசாரம், ஆபத்தில்லாத சில்லறைக் குற்றங்கள் - இதுவே அவர்கள் இலக்கு. உடைந்துபோன மார்க்ஸ் லெனின் சிலைகள்மீது – மார்பிலோ தலைமேலோ – ஏறி நின்று சில புகைப்படங் களும் எடுத்துக்கொள்ளவேண்டும். பல வழிகாட்டிகள் வழிகாட்டி களேயல்ல என்பது அவர்களுடைய மார்புகள் பிதுங்கி வெளித்தெரியும் விதம், உடலசைவுகள், பார்வைகள், குரல்கள் மூலமே ஊகிக்கக் கூடியதாக உள்ளது. இன்றைய ரஷ்யாவில் அரசால் ஊக்குவிக்கப்பட்டு வளர்ந்து பிரதான தேசிய வருமான மார்க்கமாக உள்ள தொழில் விபச்சாரம்தான் என்று என்.கெ. கூறியிருந்தார். பிச்சையெடுப்பதும் தீருடுவதும் உபதொழில்கள். நடாலியா என்றால் – தல்ஸ்தோய் வாசகனை மலரவைத்து தூய மலரொன்றை ஆத்மாவில் மணக்க வைக்கும் பெயர் – இன்று விபசாரியின் குழூஉக்குறிப் பெயர் என்று சொன்னார்கள்.

எந்த அளவுக்கு வழிகாட்டிகள் உள்ளனரோ அந்த அளவுக்கு உதவிகரமான வழிகாட்டிகள் இல்லை. எனது தேவை மிக அடிப்படையான ஒன்றுபோலக் கருதப்பட்டது. ''கனவானே, நீங்கள் கீழைதேசத்து சோஷலிஸ்டா?'' என்றார் அதிகாரி. என்ன சொல்வது? ''ஆம், கிட்டத்தட்ட'' என்றேன். ''ப்ரோய்க்கா விதியில் விசாரித்துப்பாருங்கள். அங்கு சில சோஷலிஸ்டுகள் வாழ்கிறார்கள்'' என்றார். இரண்டு நாள் மாஸ்கோவில் தங்கும்படி நேர்ந்தது. ஏற்கனவே இங்கு பதினாலுமுறை வந்துள்ளேன். 'பனி உருகும்' காலகட்டத்தில், குடியரசுகள் பிரியும் காலகட்டத்தில், பிரிந்துபோனபிறகு எல்லாம்கூட வந்துள்ளேன். பெரும் சரிவு ஒன்றையே முன்பு காண முடிந்தது. அச்சரிவுக்கான அறிகுறிகளை

கடந்த இருபது வருடங்களாக ரஷ்யாவில் கண்டும் வந்தேன். விவசாயத்தில் பெரும் வீழ்ச்சி, பெருகும் தரிசு நிலங்கள், உற்சாகமில்லாத சந்தைக்கூடங்கள். எப்படி ரஷ்யா சரிந்தது என்பதல்ல, எப்படி அது மூப்பது வருடம் தாக்குப் பிடித்தது என்பதே என் வியப்பாக உள்ளது. ரஷ்யாவின் அனைத்து உற்பத்தி அமைப்புகளும் தங்கள் உயிரோட்டத்தை இழந்து, எண்ணற்ற கட்டுப்பாடுகளினாலும், சடங்கு முறைகளினாலும், ஊழலினாலும் படிப்படியாக செயலிழக்க ஆரம்பித்தது அறுபதுகளிலேயே மறைக்க முடியாதபடி தெரிய ஆரம்பித்தது. அது குறித்த என் கட்டுரைகளை சிலரேனும் இப்போது நினைவு கூரலாம். அது சோவியத் திட்டமிடலில் உள்ள பிரச்சினை, கம்யூனிசத்தில் உள்ள குறை அல்ல என்று பிற இடதுசாரி அறிஞர்களைப் போலவே நானும் நம்பினேன். கடைசி வளத்தையும் சுரண்டுவதன் மூலம், தடையற்ற வன்முறை மூலம், மூப்பது வருடங்களைக் கடத்திவிட்டார்கள். கம்யூனிசம் விழுந்தபோது மிஞ்சிய ரஷ்யா உயிரிழந்துபோன ஒரு சமூகம். 'இது வெறும் ஒடு கனவானே. இதன் உயிர் போய் பல வருடங்கள் ஆகின்றன. இப்போது சதையும் செல்லரித்து மட்கிவிட்டது' என்றார் ஒரு கல்லூரிப் பேராசிரியர்.

இன்று மாஸ்கோவில் மாறாதது குளிர் மட்டும்தான். அதிகார வர்க்கத்தின் குளிர்ந்து இறுகிய நிதானம், அதற்குக் கீழே வெகு ஆழத்தில் தெரிபவர்கள்போல குடிமக்கள், இதுதான் நான் கண்ட பழைய மாஸ்கோ. பொதுமக்களின் பரிபூரணமான தனிமை, பழக்கமாக ஆகி மெல்ல உடலசைவுகளிலும் கலந்துவிட்ட எச்சரிக்கை, எங்கும் எப்போதும் காணக்கிடைக்கும் நிசப்தமான ஒழுங்கு எல்லாம் போயிற்று. ஒரு பெரும் தேசம் கூச்சங்களை மறந்து, கட்டுப்பாடுகளை இழந்து, உயிர்வாழ்தலுக்காக ஒருபுறமும் ஆபாசமான போகங்களுக்காக மறுபுறமும் அலைமோதுவதைக் கண்டேன். இரு தரப்புக்கும் டாலர் என்பதே மந்திரமாக இருந்தது. நீங்கள் முக்கியமான ஒரு தெருவில் சந்தடியில் நின்றுகொண்டிருக்கும்போதுகூட இளம்பெண் ஒருத்தி (நடாஷா) உங்களை விபசாரத்திற்கு அழைக்கும் சைகைகளைக் காட்ட வாய்ப்பு உள்ளது. அல்லது குளிரில் நீலம் பாய்ந்த குழந்தையுடன் ஒரு அன்னை (தஸ்தயேவ்ஸ்கியின் நெல்லி!) டாலர் போடும்படி விடாது மன்றாடுகிறாள். இரவு வாழ்க்கை ஒருவித வெறியோடு இங்கு செயல்படுகிறது. பாரிஸில் பழையதாகிவிட்ட அத்தனை காம வக்கிரங்களும் இங்கு குவிந்து கிடக்கின்றன. ஆண் பெண்களுக்கான சுயபோகக் கருவிகளை தெருவில் குவித்து விற்கிறார்கள்! (இதை அனுமதித்திருந்தால் ஒருவேளை பெரிஸ்ட்ராய்க்காவே வந்திருக்காது என்றார் பேராசிரிய நண்பர்.) ஒவ்வொரு ருஷ்யனும் அடுத்த கணம் என்று ஒன்று இல்லை என்பதுபோல வெறியுடன் இருக்கிறான்.

கடைசியில் விரும்பிய வழிகாட்டி கிடைத்தாள். காதரைன், பழைய சக்ரவர்த்தினியின் பெயர். காதரைன் வாசிலியேவா. தன்னை கேட் என்று கூப்பிடும்படி பலமுறை சொன்னாள். காதரைனை அப்படி சுருக்கிக் கொள்வது ஐரோப்பிய பாணி. ரஷ்யாவில் காத்யா என்பார்கள்.

உக்ரைனில் ஆசிரியையாக இருந்தவள். அங்கு பள்ளிகளை மூடிவிட்டார்கள். ரஷ்யர்களைத் துரத்தியும் விட்டார்கள். அம்மாவின் சகோதரர் ஒருவர் இங்கு அரசுப் பணியில் இருப்பதால் அறுநூறு டாலர் லஞ்சம் தந்து அரசு வழிகாட்டி என்ற வில்லை கிடைத்தது. 'பாருங்கள், இந்த நகரில் இப்போது மிகவும் கிராக்கியான வேலை இதுதான்.' எனக்கு அவள் பேச்சு புரியவில்லை. அவளுக்கு சுற்றுலாக் கழகம்தான் சம்பளம் தருகிறது, ரூபிளில். 'அதை அப்படியே பிச்சைகாரனுக்குப் போட வேண்டியதுதான். அவன் ஒருவேளை சாப்பிடுவான். "பிறகு என்ன வருமானம்? " 'டாலர் கிடைக்கும். பயணிகள் தருவார்கள்' எனக்குக் கோபம் வந்தது. 'அவர்கள் சும்மா தரமாட்டார்களே' என்றேன். 'ஆம், அது மிகவும் சிறிய வேலை. ஐரோப்பியர் அவசரக்காரர்கள், சீக்கிரம் முடிந்துவிடும்' என்று என்னைப் பார்த்து கண்சிமிட்டினாள். மாஸ்கோவில் பயணிகள் பார்க்க விரும்பும் இடங்கள் அவளுக்கு நன்கு தெரியும். உணவுக்காகக் கையேந்தும் குழந்தைகள் நிரம்பிய சேரிகள், மக்கள் குப்பைகளைத் துழாவி அழுகிய ரொட்டித் துண்டுகளைப் பொறுக்கும் குப்பைமேடுகள், மூன்று முக்கிய மாதாகோயில்கள்.

நான் தேடிச் சென்ற சோஷலிஸ்ட் கசப்பான முகம் கொண்ட முதியவர். செம்படையில் இருந்தவர். சைபீரியப் பகுதியில் உதவி முகாம் கமிசாராக இருந்து பென்ஷனுடன் ஓய்வு பெற்றவர். பென்ஷனுக்கு இப்போது மதிப்பில்லை, ஒரு டம்ளர் வோட்கா அளவுக்குக்கூட. கணப்பு இல்லாத அந்தப் பழைய அறை குளிர்ந்து உறைந்திருந்தது. வீட்டுக்குள்ளும் சைபீரியப் பனிக்கோட்டு அணிய வேண்டிருந்தது அவருக்கு. தங்கம் சில பதக்கங்களாக இன்னும் சிறிது மிஞ்சியுள்ளது. அதன் பிறகு தற்கொலைதான். துப்பாக்கியில் குண்டுபோட்டு, தயாராக வைத்திருக்கிறேன் என்றார். நான் அவரைப் பார்க்கப்போனது அவருக்குப் பிடிக்கவில்லை. சோஷலிஸ்ட் ஒரு பொருட்காட்சிசாலைப் பொருள் அல்ல என்றார். புகாரினின் விதவையைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னேன்.

"புகாரினா?" என்று வியப்புடன், குரோதத்துடன் கேட்டார். "சோஷலிசத்தைக் காட்டிக் கொடுத்த துரோகி. அவனைப் போன்ற துரோகிகளால்தான் கம்யூனிசம் அழிந்தது."

அவரைப் பொறுத்தவரை சோஷலிச நடைமுறையில் பெரிய தவறுகள் நடந்துவிட்டன. முதல் பிழை குருஷ்சேவ் ஆட்சிக்கு வந்தது. ஆரம்ப கட்டத்திலேயே குருஷ்சேவ் அடையாளம் காணப்பட்டு களையெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அது தோழர் ஸ்டாலினின் தவறு. குருஷ்சேவ் களையெடுக்கப்படாதது தோழர் பிரஷ்னேவின் தவறு. இந்த இரு தவறுகளும்தான் சோஷலிஸ்டு அமைப்பின் வீழ்ச்சிக்குக் காரணம். 'வேறு என்ன?' என்று என்னிடம் வியப்புடன் அவர் கேட்டார். "இன்று என்ன நடக்கிறது பார்த்தீர்களல்லவா? இந்த நாட்டின் இளைய தலைமுறை போதையில் அழிகிறது. மட்டுமீறிய மதம், வக்கிரங்கள்..."

நான் பணிவுடன் ''முன்பே இது மது அடிமைகளின் தேசம்தானே?'' என்றேன்.

''வோட்கா ரஷ்யாவின் பானம்'' என்று சீறினார். ''இன்று மார்ஃபினும் பிரவுன் சுகரும் அல்லவா நடமாடுகின்றன!'' நான் பதில் கூறவில்லை.

''தோழர் ஸ்டாலினின் தீர்க்க தரிசனத்தை எண்ணி வியக்கிறேன். சோஷலிசத்தை அதன் எதிர்சக்திகள் வீழ்த்த முடியாது, உள்ளிருக்கும் ஐந்தாம்படைகள்தான் வீழ்த்த முடியும் என்றார் அவர். மகத்தான களையெடுப்பின்போது நான் சிறிது ஐயமும் சஞ்சலமும் கொண்டது உண்மை. ஆனால் இப்போது தெரிகிறது அன்று அவர் அதைச் செய்திருக்காவிட்டால் 1940 களிலேயே ரஷ்யா இன்றைய நிலைக்கு வந்திருக்கும்.''

என்னை அவர் 'இளைஞரே' என்று அழைத்தார். பழைய தவாரிஷி என்ற அழைப்பைக் கேட்க விரும்பினேன். ஒரு காலத்தில் அந்த சொல் இங்கு காற்றுபோல சகஜமானது.. ஒரு பக்கம் மிதமிஞ்சிய – செயற்கையான – இனிமையுடன் அது கூறப்படும். மறுபுறம் கூரிய ஆயுதம்போல அதிகாரத்துடன் கூறப்படும். நான் ஒருமுறை அவரை தவாரிஷி என்று கூப்பிட்டேன். அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. கவனித்தார் என்பது நிஜம். கண்களில் ஒரு சிறு மாறுதல், குண்டூசி குத்தினால் வரும் வலி போல. ஆனால் நல்ல மனிதர். ஒருவேளை பழைய முதுபெரும் கமிசார்களுக்கான குழூஉக்குறியாக அச்சொல் ஆகிவிட்டதோ என்னவோ.

சீர்கெட்டுக் கிடந்த சாலையில் அன்னா புகாரினாவைப் பார்க்க அவ்வளவு தூரம் சென்றது ஒரு சிரமமான அனுபவம். கிராமத்தை அடைந்தபோது எனக்கு எழுந்து நிற்பதே சிரமமாக இருந்தது. மடிப்பு மடிப்பாக தரிசு பூமி வந்தபடியே இருந்தது.

''இதெல்லாம் கூட்டுப்பண்ணை நிலங்களா?'' என்றேன்.

''இப்போது அரசு நிலம். குத்தகைக்குப் பெற்று விவசாயம் செய்யலாம்'' என்றாள் கேட். ''ஆனால் அதில் பொதுவாக எவருக்கும் ஆர்வம் இல்லை. முதலீட்டுக்குப் பணம் வேண்டும். பொருட்களை இலாபகரமாக விற்க முடியாது. திருட்டும் போகும். ஒரு மூட்டை முள்ளங்கியை விற்க எட்டு இடங்களில் லஞ்சம் தர வேண்டும். வாகனங்கள் இல்லாததனால் பல ஊர்களில் முள்ளங்கி மலைகள் அழுகுகின்றன. அதைவிடப் பன்றி வளர்ப்பது இலாபகரமானது. பன்றியை நாமே தின்றுவிட வேண்டும், அவ்வளவுதான்.'' அந்தச் சிக்கல்களுக்கு வெளியே இருப்பதன் உற்சாகம் கேட்டிடம் இருந்தது. கிராமத்தின் பொதுக்குடியிருப்பை பிற்பகலில் சென்றடைந்தோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டப்பட்ட பெரிய கருங்கல் கட்டிடம். மொத்தம் எழுபது வீடுகள் அதில் உண்டு என்ற அறிவிப்பு வெளியே

திருந்தது. கட்டிடத்தைச் சுற்றி இருபது அடி உயரமான மதில்சுவர். அதன்மீது துருப்பிடித்து சரிந்த முள்கம்பி வேலி. மிகப்பெரிய இரும்பு வாசல் கதவு. அது திறந்து தரையில் அழுந்தி துருப்பிடித்து நின்றது. கட்டடம் வெடித்து பாசிபிடித்து புராதனக் கோட்டைபோலிருந்தது. முற்றத்தில் காய்கறிகள் பயிரிடப்பட்டிருந்தன. இறைச்சிக்காக வளர்க்கப்படும் பன்றிகளின் கொட்டில்கள் பல இருந்தன. கற்கள் சரிந்த அபாயகரமான படிவழியாக ஏறி நாற்பதாவது குடியிருப்பின் கதவைத் தட்டினோம். ஓர் இளம்பெண் திறந்தாள்.

வசீலிசா எகொரொவ்னா அருகே ஒரு செருப்புத் தொழிற்சாலையில் தொழிலாளி. ஆலைத் தொழிலாளி ஒருவனின் விதவை. ஒரு மாதமாக உற்பத்தி குறைப்பு, கதவடைப்பு. எனவே வீட்டில் இருந்தாள். கடுமையான முகம் கொண்ட உயரமான பெண். முப்பது வயது தாண்டியிருக்கும். அன்னாவின் தொலைதூரத்துச் சொந்தம். அன்னா புகாரினா ஓய்வெடுப்பதாகவும், விருந்தினர்களைச் சந்திக்கும் நிலையில் அவள் இல்லை என்றும் கூறினாள். பத்து டாலரில் நேர் மாறாக ஆகி, எங்களுக்காக அன்னாவை கொலைசெய்யவும் தயாரானவளாக மாறினாள். அன்னாவிற்கு அவளது பேட்டிகள் மற்றும் உரைகளின் நாப்புரிமை வந்தது, டாலரில். வசீலிசாவின் உறவு அந்த டாலரை அடியொற்றியது என்பதை உணர்த்துவது சிரமம் அல்ல. அவள் உள்ளே வளர்த்த கிசுகிசுப்புகள் மூலம் அன்னாவைத் தயாரிப்பது கேட்டது. பிறகு வெண்ணிறக் கழுத்துக் குட்டையும் சாம்பல் நிறக் கோட்டும் அணிந்தவளாக அன்னா புகாரினா மெல்ல நடந்து வந்தாள். பழைய நாற்காலியில் அமர வைக்கப்பட்டாள்.

அன்னாவிற்கு எழுபத்தொன்பது வயது. அதைவிடப் பலமடங்கு வயதானவளாகத் தெரிந்தாள். அழுகிய டார்ணிப் பழம் போல முகம் எங்கும் நெருக்கமான சுருக்கங்கள். வாய் பழைய தோற்பையின் கிழிசல் போல இருந்தது. மட்கிய செர்ரி போல கண்கள். உடம்பு மடங்கியபடியே இருந்தது. தலை தனியாகவும், உடம்பு தனியாகவும், கைகள் தனித்தனியாகவும் ஆடும்போது அவள் பழுதுபட்டு இயங்கும் ஓர் யந்திரம்போல இருந்தாள். கைகள் மிதமிஞ்சி ஆடாமலிருக்கும் பொருட்டு தொடைகளுக்கு அடியில் வைத்து இறுக்கிக் கொண்டாள். அப்போது முழங்கை வெடவெடத்தது. என்னை அர்த்தமின்றிப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். எந்த உணர்வும் இல்லை. காத்திருப்பவளாகவும் தெரியவில்லை. அப்படியே, சும்மா அமர்ந்திருந்தாள். அப்படி எதைப்பற்றி பேசுவது என்று தெரியவில்லை. உண்மையில் எல்லாம் அர்த்தமற்றதாகப் போய்விட்டது.

எட்டு வருடம் முன்பு, 1986-ல் புகாரினின் வழக்கை சோவியத் உச்ச நீதிமன்றம் திரும்பவும் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. அவள் கோர்பசேவுக்கு எழுதிய கடிதம் மிகவும் புகழ்பெற்றது. அதைத் தொடர்ந்துதான் கோர்பசேவ் பகிரங்க விசாரணைக்கு உத்தரவிட்டார். நீதி மன்றத்திற்கு வந்து அவள் நாற்பத்தேழு வருடம் முன்பு தன் கணவர்

தந்துவிட்டுப் போன இறுதி வாக்குமூலத்தை ஒப்பித்தாள். ஏழு முறைக்கு மேல் ஒருசொல்கூடப் பிசகாமல் அதைக் கூறினாள். அன்று அன்னா ஒரு காவிய நாயகி போலப் பார்க்கப்பட்டாள். அவளைக் காண நீதிமன்றத்தில் பெண்களும் ஆண்களும் குவிந்தனர். அவளைப் பார்த்ததும் பெண்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழுதனர். இருபுறமும் நின்றவர்கள் அவள் நடந்துபோன பாதையை மறித்து அவளை ஒருமுறை தொட்டுப்பார்க்க முண்டியடிக்கும் காட்சி திரும்பத்திரும்ப தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. அவளுக்கு உயர்மட்டப் பாதுகாப்பு இருந்தது. வழக்கின்போது தளராத கம்பீரத்துடன் அவள் அமர்ந்திருந்தது, கேள்விகளுக்குப் பதறாமல் பதிலளித்தது, தன் கணவரின் ஐம்பது வருடம் மூந்தைய கூற்றுகள் ஒவ்வொன்றையும் துல்லியமாக நினைவு கூர்ந்து கூறியது எல்லாமே மகத்தான காவியக் கதாபாத்திரங்களால் மட்டும் முடியக்கூடிய விஷயங்களாக இருந்தன. அன்று எல்லா இதழ்களும் அவளையும் புகாரினையும் பற்றித்தான் எழுதின. அவர்களுடைய பழைய புகைப்படங்கள் எங்கோ வரலாற்றின் ஆழங்களில் இருந்தெல்லாம் தோண்டி எடுக்கப்பட்டன. இடைவிடாத பத்திரிகைச் சந்திப்புகளால் அவள் திணறினாள். அன்னா தன் சைபீரிய வாழ்வின் கொடுமைகளைக் குறித்து பேச விருப்பப்படவில்லை. அவற்றை மறக்கவே விரும்பினாள். ஆனால் அது பற்றிய கற்பனைகள் பரவ ஆரம்பித்ததும் பேசத் தொடங்கினாள். முப்பது வருடம் கூட்டுப் பண்ணைகளில் நடவு இயந்திரங்களையும் அறுவடை இயந்திரங் களையும் இயக்கியது பற்றி, பற்பலமுறை கற்பழிக்கப்பட்டது பற்றி, டர்ணிப் கிழங்குகளையும் முலாம்பழங்களையும் பச்சையாகச் சாப்பிட்டு செலவிட்ட நாட்களைப்பற்றி, முதலில் அவளுடன் முகாமிலிருந்த நூற்றியெழுபது பேரில் அவள் தவிர பிற அனைவரும் இறக்க நேர்ந்தது பற்றி, பிறகு காண நேரிட்ட பல்லாயிரம் பிணங்களைப் பற்றி, தன் பிரியமான வளர்ப்பு மகன் நிகிதா கண்ணெதிரில் சம்மட்டியால் மண்டை பிளக்கப்பட்டுக் கொல்லப்பட்டது பற்றி, அவன் சவ அடக்கத்திற்குப் போய் ஒரு பிடி மண் போட அதிகாரிகள் அனுமதிக்காதது பற்றி, மூன்று முறை வந்த அபாயகரமான நிமோனியா பற்றி, அப்போதும் தொடரும் மோசமான கீல்வாதம் பற்றி... அத்தனை துயரங்களிலும் அவள் புகாரினின் வாக்குமூலத்தை திரும்பத் திரும்ப மனதுக்குள் சொல்லிக் கொண்டிருந்தாள். அத்துடன் ஏழு புனிதர்களின் பிரார்த்தனைகளையும் சொல்லிக் கொண்டிருந்தாள் என அவள் கூறியபோது கத்தோலிக்க உலகம் கண்ணீர்விட்டது. உலகமெங்கும் ஊடகங்களில் அவள் கதை கற்பனைப் பூச்சுடன் மீண்டும் மீண்டும் வந்தது. சைபீரியாவிற்கு வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்டவர்கள் ஏறத்தாழ இரண்டு கோடிப்பேர் என்றால் எஞ்சியிருப்பவர் சில நூறு பேர்தான். அவர்களில் அன்னா போல நினைவாற்றலுடனும் தைரியத்துடனும் இருந்தவர்கள் யாருமில்லை. பெரும்பாலானவர்கள் மனம்தளர்த்து பைத்தியமானவர் களாகவே இருந்தனர். சைபீரியாவில் அத்தனை வருடம் வதை முகாம்களில் வாழ்ந்து மீண்டவள் அவள் ஒருத்தி மட்டுமே என்று

கூறலாம். சதையின் மீதான ஆத்மாவின் வெற்றி என்று அவள் வாழ்வை கார்டினல் ஃபிரடரிக் கார்ட்னர் குறிப்பிட்டது ஒரு முக்கியமான மேற்கோளாக மாறியது. அவளையே ஒரு புனிதவதி என்று மக்கள் நம்ப ஆரம்பித்தனர். அவளை நேரில் கண்டு அவள் உடைகளை முத்தமிடவும், அவள் உடலைத் தீண்டவும் மாஸ்கோவில் கத்தோலிக்கர் குழுமினார்கள்.

புகாரின் குற்றமற்றவர் என்ற தீர்ப்பு வந்தபோது 'நீதி ஒருபோதும் தோற்காது. ஏனெனில் நீதி என்பது நம் மீட்பர் கூறிய சொல்' என்று அவள் கூறினாள். எவ்விதமான பதற்றமும் இல்லாமல், பல நூறு காமிராக்கண்கள் பார்த்திருக்க, உலகின் பார்வையில் நின்றபடி அதைச் சொன்னாள். அச்சொற்கள் ஒரு புனித ஆத்மாவால் மட்டுமே கூறப்படத்தக்கவை என்று நம்பப்பட்டது. திடீரென நுரையடங்குவது போல எல்லாம் மாறிற்று. தேசம் உடைந்தது. பண மதிப்பு சரிந்தது. சுதந்திரச் சந்தையும் சுதந்திர நடமாட்ட உரிமையும் வந்தன. வறுமை, விபச்சாரம், குற்றங்கள், பக்தி எல்லாமே பேருருவம் கொண்டன. அன்னா வரலாற்றின் ஒரு பகுதியாக மாறினாள். வரலாற்றில்தான் எத்தனை மாமனிதர்கள், தியாகிகள், புனிதர்கள். அவர்களையெல்லாம் புத்தகங்களாகவும் சிலைகளாகவும் மாற்றி அலமாரியில் வைத்துவிட்டுத் தான் மனிதர்கள் பூமியில் வாழ முடிகிறது. என் முன் அமர்ந்திருக்கும் இந்த மூதாட்டி ஏதோ பழைய வரலாற்றுப் புத்தகத்தில் உள்ள மங்கிய செம்மண் நிற லித்தோ வெட்டு ஓவியம் போலத்தான் இருந்தாள்.

ஏதாவது கேட்க வேண்டும் என்று பட்டதால் ''வசதியாக இருக்கிறீர்களா?'' என்றேன்.

''பிரச்சினை ஏதும் இல்லை'' என்றாள்.

''பாட்டிக்கு தினமும் மாதாகோயில் போக முடியவில்லை என்று மனக்குறை. தினமும் ஏழெட்டுமுறை பிரார்த்தனை புரிவாள்'' என்றாள் சீலிசா. அவள் எங்களைக் கத்தோலிக்கர்கள் என எண்ணியிருக்கலாம்.

''உங்களுக்கு பணப் பிரச்சினை உண்டா?''

''இல்லை'' என்றார். காது நன்றாகக் கேட்கும் நிலையில் இருந்தது எனக்கு சற்று வியப்பாகவே இருந்தது.

''இப்போது உங்களை மக்கள் மறந்துவிட்டார்களே'' என்றேன்.

''ஆம்'' என்று உணர்ச்சியின்றிக் கூறினாள்.

''அது உங்களுக்கு வருத்தம் தருகிறதா?''

''ஏது?''

''நீங்கள் புறக்கணிக்கப்படுவது?''

''எனக்குப் பணம் வருகிறது. இவள் என்னை நன்றாகவே பார்த்துக் கொள்கிறாள். நல்ல பெண்.''

"அதில்லை, இப்போது நீங்கள் உங்கள் தேசத்து மக்களுக்கு ஒரு பொருட்டாகவே இல்லையே, அதைப் பற்றிக் கேட்டேன்."

"அப்படியா?" என்றாள். அவளுக்கு என் கேள்வி புரியவில்லை.

அவளை மேலும் சீண்டும் பொருட்டு, "மக்கள் புகாரினா, யார் அது என்கிறார்கள்" என்றேன்.

எவ்விதமான உணர்ச்சியும் இல்லாமல் "ஆம், காலம் மாறிவிட்டது" என்றாள். முதல்முறையாகப் புன்னகை புரிந்தாள். அது அந்தச் சொற்கள் சரிவர அமைந்துவிட்டதனால் வந்த திருப்தி. பிறகு பெரும்பாலான கேள்விகளுக்கு அந்த வரியையே பதிலாகச் சொன்னாள்.

இறுதியாக என் மனதை அதுவரை அரித்த கேள்வியை கேட்கும் துணிவைக் காட்டிவிட்டேன். அதைக் கேட்டமைக்காக இப்போது வெட்கப்படுகிறேன். ஆனால் கேட்காமல் என்னால் திரும்பியிருக்க முடியாது. "உங்கள் தியாகங்கள் எல்லாம் அர்த்தமற்றுப் போய்விட்டன என்று படுகிறதா?" என்றேன். முதல்முறையாக என் கேள்வி முதுமையின் திரையை மீறி அவளுக்குள் சென்றது போலும். முகத்தில் வலி தெரிந்தது. கண்கலங்கி அழ ஆரம்பித்தாள். கண்ணீர் முகச்சுருக்கங் களில் பரவி வழிந்து கழுத்துக் குட்டையில் சொட்டியபடியே இருந்தது. வெட்கமும் குற்றவுணர்வும் கலந்து தவித்தபடி அமர்ந்திருந்தேன். அவள் கரகரத்த குரலில் "ஐம்பது வருடங்கள்" என்றாள். "கடவுளே, எத்தனை நீண்ட வருடங்கள்." மீண்டும் விசும்ப ஆரம்பித்தாள். கிளம்பலாம் என்று எண்ணினேன்.

"என்ன கேட்டீர்கள்? என் கஷ்டங்களுக்கு என்ன அர்த்தம் என்றா?" நான் குன்றிப் போனேன்.

"நம் கர்த்தரை அவர்கள் பொய் விசாரணைக்குப் பிறகு சிலுவையில் அறைந்தார்கள். அவர் உயிர்த்தெழுந்தார். அவர் பட்ட கஷ்டங்களுக்கு என்ன அர்த்தம்?" என் முதுகில் ஒரு குளிர்ந்த தொடு உணர்வாக அதை அறிந்தேன்.

"அர்த்தம் பற்றி என்ன சொல்ல? அது..." அவள் கையை மேலே தூக்கி காட்டினாள் "அது அவருக்குத் தெரியும். பூமியில் அவர் அதை அறிந்தார்..." மீண்டும் மௌனமாக அழ ஆரம்பித்தாள்.

விடைபெற்றுத் திரும்பும்போது அவள் சொன்ன அந்த உவமைதான் என் மனதில் நிரம்பியிருந்தது. கிறிஸ்து உயிர்த்தெழுத்தார். உண்மை உயிர்த்தெழும். ஆனால் உடனே அவரை மகத்துவம் பெற்ற வடிவமாக தேவாலயங்களில் நிலைநிறுத்திவிட்டு மக்கள் மீண்டும் தங்கள் போக்கில் வாழ்கிறார்கள். சிலைகள் வரலாற்றில் கரையொதுங்கியவை. அப்படி யானால் தியாகம் என்பதற்கு என்னதான் அர்த்தம்? அர்த்தம் ஏதும் இல்லை என ஒரு கணமும், நாம் புரிந்துகொள்ள முடியாத பெரும் அர்த்தம் உண்டு என்று மறுகணமும் தோன்றியபடியே உள்ளது. ♦

7

அறத்தாறிதுவென...

СОБСТВЕН

1

இரகசியப் பேச்சாளன்

பத்ரன்*

புறநகரில் அந்நேரத்தில் ஓரிரு தெரு விளக்குகள் எரிந்ததே அதிசயம். மஞ்சளான வெளிச்சம் இருட்டின் திரைமீது பலவிதமான மிதக்கும் படங்களை வீழ்த்திக்காட்டி மர்மத்தையும் அச்சத்தையும் உருவாக்கிக் கொண்டிருந்தது. குண்டும் குழியுமான சாலை நிழலும் ஒளியும் பரவி, ஏதோ கனவுலக நிலப்பரப்பு போலிருந்தது. ஓரமாகத் தேங்கிய சாக்கடையில் கரிய நீர் களதளத்தது. ஓரிரு பன்றிகள் அங்கு படுத்திருக்கக் கூடும். முனகலும், உறுமலும், சீறுமூச்சும் கேட்டன. வெகு நேரமாக பஸ்ஸுக்குக் காத்திருந்தேன். மணி எட்டரை இருக்கும். பசித்தது. அப்போது அந்த வழியில் பஸ் ஏதும் உண்டா என்று தெரியவில்லை – மனிதர் எவரும் கண்ணில் பட வில்லை; அதாவது விசாரிக்கும்படியான மனிதர் கள். இரண்டு குடிகாரர்கள், ஒரு தொழு நோயாளிப் பிச்சைக்காரன், மட்கும் உடை களுடன் ஒரு தெருப் பைத்தியம் – அரை இருளில் அது எந்தப் பாலினம் என்றுகூடத் தெரியவில்லை – ஆகியோர்தான் அவ்வழியாக அது வரையில் கடந்து சென்றனர். நேரமாக ஆக எனக்கு பயம் அதிகரித்தது. எதிரே இடிந்து போன ஒரு கொட்டகை. அதன் சுவர்மீது தெருவோர முள்செடியின் கிளையொன்று பெரிய மரம்போல நிழல் காட்டி ஆடியபடி சிலுசிலுத்தது.

வண்டியைத் தள்ளியபடி ஒருவன் போனான். என்னைப் பார்த்து அவன் ஆச்சரிய மடைந்ததுபோல இருந்தது. அவனிடம் கைகாட்டினேன். "இப்பக்கமாக பஸ் ஏதும் வராதா?" என்றேன்.

"பஸ்ஸா?"

"ஆமாம்."

"இந்தப் பக்கமாக ஒரே ஒரு பஸ்தான். அது போயிருக்குமே."

---

* மங்களோதயம் (மலையாளம்) 1957 ஜனவரி இதழில் பிரசுரமான சிறுகதை இது. வீரபத்ரபிள்ளை எழுதிய சிறுகதை என்பதற்கான ஆதாரங்கள் குறிப்புகளில் உள்ளனவோ என்னவோ ஒரு தொகுப்பு போடும் பொருட்டு வீரபத்ரபிள்ளை எழுதி வைத்த கதைகளில் ஒன்று இது

என் மனம் அதை அறிந்திருந்தது. ''பஸ் பிடிக்க இனி எங்கே போக வேண்டும்?''

''மூன்று ரோட்டில் பஸ் வரும். ஆனால் கொஞ்சம் நடக்க வேண்டும்.''

''இந்தப் பக்கமாகவா?''

''நீங்கள் ஒன்று செய்யலாம். அந்த கப்பிக்கல் சாலை வழியாக குறுக்காக ஏறிப் போகலாம். ரெயில்வே கேட் வரும். இடது பக்கம் திரும்பினால் கார்த்திக் சினிமா தியேட்டரின் பின்புறம் போகலாம். அதன் சந்துவழியாக ஏறினால் மறுபக்கம் தேசிய நெடுஞ்சாலை. அங்கே எக்ஸ்பிரஸ் பஸ் சிலசமயம் நிற்கும். கண்டிப்பாக லாரியாவது கிடைக்கும்.''

''ரொம்ப நன்றி'' என்றேன். நடக்க ஆரம்பித்தேன்.

''அந்த ரயில்வே கேட் அருகே...'' என்று அவன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

''என்ன?''

''ஒன்றுமில்லை நீங்கள் நேராகப் போங்கள்.''

மீண்டும் நன்றி சொல்லிவிட்டு நடந்தேன். நிறைய இடங்களில் சாக்கடை ஊடறுத்த பாதை. நல்ல இருட்டு. கற்கள் இளகி தரையில் உருண்டு கிடந்தன.

வழியோரமாக ஒரு வெளிச்சம். ஒரு சிறு வளைவு. அதில் அறிவிப்புத் துணி. 'மானுட மீட்புத் தியாகிகள் சங்கம். எட்டாவது மாநிலப் பயிற்சி முகாம்.' உள்ளே ஒரு சிறு அரங்கு. முகப்பில் நிறைய சைக்கிள்கள் இருந்தன. எனக்கு குழப்பமாகவும் ஆர்வமாகவும் இருந்தது. நகரிலிருந்து தள்ளி இந்த மர்மமான, ரகசியமான, இடத்தில் ஒரு பயிற்சி முகாம் நடக்கிறது. பெயரைப் பார்த்தால் ஏதோ ரகசிய வழிபாட்டு இயக்கம் போலிருந்தது. எனக்கு அப்போது இம்மாதிரி வழிபாட்டு முறைகள்மீது ஒரு கவர்ச்சி இருந்தது. மத்தியவர்க்க அச்சம் நமக்கெதற்கு வம்பு என்று பயமுறுத்தினாலும் மீறி உள்ளே சென்றேன். என்னை கவனிக்க யாரும் இல்லை. உள்ளே மங்கலான பல்பு எரிந்த ஒற்றை அறையில் சுமார் நூறுபேர் சிலைபோல அமர்ந்து ஒரு நடுத்தர வயது மனிதரின் கம்பீரமான பேச்சை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தூண்மறைவில் நிழலுடன் கலந்து நின்றுகொண்டேன்.

மிக அற்புதமான மனிதர் அவர். அவருடைய தோற்றத்தை விளக்க திரும்பத் திரும்ப கம்பீரம் என்ற சொல்லைத்தான் கூற வேண்டியிருக்கும். மிக உயரமானவர். ஆனால் அதற்கேற்ற பருமன் கொண்ட கட்டான உடல். திடமான தோள்களும் ஒடுங்கிய இடையும் வலுவான கழுத்தும் கொண்ட ஆணழகர். விசித்திரமான நீள் சராயும் அங்கியும் அணிந்திருந்தார். அவர் முகம் பரந்த நெற்றியும், எடுப்பான கூரிய

முக்கும், சிறிய செவிகளும், மெல்லிய சிவந்த உதடுகளும், அகலமான வலுவான தாடைகளும், அழுந்திய மோவாயுமாக கிரேக்கச் சிற்பங்களைப் போல இருந்தது. அல்லது அராபிய முகமா? அல்லது இன்னும் புராதனமான ஏதோ சாயல். செமிட்டிக் சுடுமண் சிற்பங்களில் காணப்படும் முகம், புராதன ஓவியங்களை நினைவுறுத்தும் முகம். கண்டிப்பாக அது சகஜமான சமகால முகம் அல்ல. சாலமோன், அல்லது சீசர், அல்லது அக்பர், அல்லது ராஜராஜ சோழன் – அடாடா எவ்வளவு சரியாக கூறிவிட்டேன். அறிவும், அதிகாரமும், வீரமும், தந்திரமும் கலந்த அந்த முகம் சக்கரவர்த்திகளுக்கு மட்டும் இருப்பது. அவர் பேசிய மொழி முதலில் புரியவில்லை. அல்லது கவனிக்காமலிருந்ததனாலும் இருக்கலாம். பிறகு ஓரிரு சொற்கள் புரிபடத் தொடங்கின. பின்பு அது நேரடியாகச் சென்று மனதின் அடியாழங்களை அதிர வைத்தது. இது எப்படி என்று விளக்குவது சாத்தியமில்லை. வெறும் பிரமை என்று கூறுவதனால் அப்படி அதை மறுத்துவிட முடியாது. அந்த ரகசியக் கூட்டத்தின் தலைவர், ஒரே பேச்சாளர், அவர்தான் என்றுபட்டது. பேச்சு ஏறத்தாழ முடியப்போகும் தருணம் அது. சமகால செயல்திட்டங்கள், எதிர்காலத்துக் கனவுகள் எல்லாம் ஏற்கனவே பேசப்பட்டுவிட்டிருந்தன.

"எப்படி இவற்றை நாம் செய்ய முடியும் என்ற ஐயப்படுகிறீர்கள். அந்த சிறு ஐயம் இப்போது இந்தப் புத்தார்வத்தின் அடியில் மெல்லிய ஒரு வினாவாகத் துடித்துக் கொண்டிருக்கிறது. இங்கிருந்து நீங்கள் கிளம்பும்போது அந்த வினாவின் குறுகுறுப்பை உணர்வீர்கள். பிடிவாதமாக உங்கள் மனதுள் அது இயங்கியபடி இருக்கும். இன்றிரவு படுக்கும்போது இருளிலும் தனிமையிலும் அந்த வினா மெல்ல வளர ஆரம்பிக்கும். அதன் பிடியில் உங்கள் உறுதிப்பாடுகள் மளமளவென முறியும். அதன் உடல் சகலத்தையும் சுற்றி வளைத்து உங்களை செயலறச் செய்துவிட்டிருக்கும். அதன் இமைக்காத கண்களும், திறந்த வாயும் உங்களை விழுங்க முற்படும்போது; அதன் விஷமூச்சு உங்கள் மீது படும்போது, பதறி எழுந்து பயங்கரமான வெட்டவெளியாக உங்கள் தனிமையை உணர்வீர்கள். இங்கு பேசப்பட்டவை எல்லாம் வெகுதூரத்தில், அடிவானத்திற்கு அருகே, ஏதோ முணுமுணுப்புகளென மங்கிச் சென்றுவிட்டிருக்கும். படுக்கையில், தெருவில், அறைகளில், ஆள்கூட்டத்தில் நீங்கள் அடையும் அந்தத் தனிமையுணர்வின் முடிவற்ற மியர்த்தத்தை இப்போது நான் அறிகிறேன். ஆகவே நண்பர்களே, உங்கள் குளிர்ந்த ஆத்மாவின் அடியாழத்தைப் பார்த்து திடமாக இதைக் கூற விரும்புகிறேன். உங்களால் அனைத்தும் முடியும். ஏனெனில் நீங்கள் தனியர்களல்ல."

அரங்கில் நீண்ட பெருமூச்சொன்று பரவிச் சென்றது.

"ஆம் தோழர்களே! அந்த நெளியும் புழுவை கனத்த பூட்ஸ் கால்களால் மிதித்துக் கூழாக்கிவிடுங்கள். நம்மால் முடியாதவை என ஒன்றுமில்லை. நமது கரங்களால் நாம் செய்யக் கூடியவை மகத்தானவை, நூறுவற்றவை. அதற்கு ஆதாரம் என்ன? நண்பர்களே, சிறந்த ஆதாரம்

நமது உடல்தான். திரும்பி உங்கள் உடல்களைப் பாருங்கள். எத்தனை அற்புதமான படைப்பு. அதன் துல்லியமான வடிவம், அதன் ஒத்திசைவு, அதனூடாக ஓடும் உயிரின் பிரவாகம். அனைத்துமே செயலுக்காகவும், வெற்றிக்காகவும் மட்டுமே. இந்த உடலை நீங்கள் நியாயப்படுத்திக்கொள்ள முடியும். இந்த உடல் அதன் வடிவம் மூலம் உங்களுக்கு ஒரு கடமையை விடுக்கிறது. செயலாற்றுக! உங்கள் முன் ஒரு சவாலை முன்வைக்கிறது. வென்று செல்க! அது நின்றுவிடாதே என உங்களிடம் மன்றாடுகிறது. நீங்கள் சோர்வுறும்போது அது வலிமை களை இழந்து வெறும் சதைக் குவியலாக ஆகிவிடுகிறது. அழுகி நாறத் தொடங்குகிறது. மண்ணை நோக்கி கனத்திறங்கத் தொடங்கிவிடுகிறது. அதற்கு அது கோரும் செயலூக்கத்தை நீங்கள் அளித்தால் மேன்மேலும் வல்லமை கொள்கிறது. அப்போது மிக அற்புதமான ஓர் உண்மையை உணர்வீர்கள். எந்த வெற்றியும் உடலின் உள்ளே உறையும் வெற்றிக்கான தாகத்தின் முன் ஒரு வெற்றியே அல்ல. எதுவும் அதற்கு சிறு துளியே. ஒவ்வொரு உடலும் இந்த முழுப் பிரபஞ்சத்தையும் வெற்றி கொள்ளும் இச்சையுடன் படைக்கப் பட்டுள்ளது. அந்த இச்சையே மண்ணின் உப்புகளில் இருந்தும் புரோட்டீனில் இருந்தும் இந்த உடலை உருவாக்கிக் கொண்டுள்ளது. தன்னைத் தூலமாக சாத்தியமாக்கிக் கொண்ட பெரும் இச்சையே மானுட உடல். படைப்பு சக்தியின் படைப்புகளில் ஆகச் சிறந்ததும் புனிதமானதும் இந்த இச்சையே. இந்த இச்சையே பிரபஞ்சங்களை ஆக்குகிறது. இந்த இச்சையைக் கட்டவிழ்த்து விடுங்கள். அதன் முதற் கட்டை மட்டும் நீங்கள் அறுத்துவிட்டால் போதும், மீதித் தடைகளை அதுவே நொறுக்கும். அது பிரபஞ்சத்தை வெல்லும். ஏனெனில் அது அதற்காகவே படைக்கப்பட்டது.

"முதல் உலகப் போரில் நடந்த சம்பவம் இது. ஜெர்மானிய துருப்புகளால் எகிப்தியப் பாலைவனம் கைப்பற்றப்பட்ட போது அதை மீட்க இந்தோ ஆங்கில ராணுவம் அனுப்பப்பட்டது. பாலைவனத்தில் ஒரு மணல்மேட்டின்மீது ஜெர்மானிய யந்திரத் துப்பாக்கி நாட்டப் பட்டிருந்தது. சுற்றிலும் வெட்டவெளி. புதையும் மணல். அந்த துப்பாக்கி இடைவெளியின்றி ஆங்கிலப் படைகளை நோக்கி மரணத்தை உமிழ்ந்தது. அதை வெல்லாமல் முன்னகர முடியாது என்று ஆயிற்று. ஆங்கிலக் கமாண்டர் தன் கூர்க்காப் படையினரிடம் அந்தக் குன்றுநோக்கி அணிவகுத்துப் பாய்ந்து சென்று பீரங்கியைக் கைப்பற்றும்படி உத்தரவிட்டான். மழைபோல பொழிந்த குண்டுகளை நோக்கி, நேர் எதிராக, கூர்க்காப் பட்டாளம் பாய்ந்து சென்றது. பிணங்கள் சரிய, பிணங்களை மிதித்தபடி, முன்படைவீரனே பின்படை வீரனுக்கு அரணாக அமைய, அப்படை முன்னேறிச் சென்றபடியே இருந்தது. சில நிமிடங்களில் அது மணற்குன்றை நெருங்கியது. அதன் எஞ்சிய ஒரே வீரன் குன்றில் ஏறி, ஜெர்மானியரை நோக்கிப் பாய்ந்தான். அச்சத்தால் பீடிக்கப்பட்ட அவர்கள் உடனடியாக சரணடைந்தனர். அங்கு மூப்பது ஜெர்மானியர் இருந்தனர். ஆனால் ரத்தத்தில் மூழ்கி வெறியுடன்

எழுந்தவந்த சின்னஞ்சிறு கூர்க்கா அவர்கள் பார்வையில் யுத்த தேவனாகவே பட்டான். அந்த குன்று கைப்பற்றப்பட்டது. போர் முன்னேறியது!

"அந்த வீரர்களினூடாக ஓடியது ஒரு மிகப் பெரும் உத்வேகம். அது அந்தக் கூர்க்காப் படையின் அத்தனை உடல்களையும் ஒரு சரடில் இணைத்தது. ஒருடலாக்கியது. அந்த பிரம்மாண்டமான உடல்தான் ஆயிரம் கால்களுடன், பல்லாயிரம் கரங்களுடன், ஒரே பார்வையுடன் மரணத்தை நோக்கிப் பாய்ந்து, அதை வென்று, தன் இலக்கை அடைந்தது. அங்கு ஐயமிருக்கவில்லை. சஞ்சலம் இருக்கவில்லை. ஒரு துளித் தயக்கம்கூட இருக்கவில்லை. உத்தரவு பிறந்த மறுகணமே படை முன்னோக்கிப் பாயத் தொடங்கிவிட்டது. ஒருவன் ஒரு கணம் தயங்கினால்கூட மொத்தப் படையும் தடுமாறி அங்கேயே பிணமாகியிருக்கும். மொத்த மரணத்திற்கும் அர்த்தமில்லாமல் ஆகியிருக்கும். அந்த இறுதி வீரனின் வெற்றிதான் பிற அனைத்து மரணங்களுக்கும் அர்த்தம் தந்தது. அன்று அந்த உடல்கள் தங்கள் கடிவாளங்களை அறுத்தன. தங்கள் உடலின் ஆதி இச்சையே தாங்களாக ஆயின. அவ்விச்சையே அன்று அந்தக் களத்தில் முன்னகர்ந்து பாய்ந்து சென்றது. அங்கு மானுட உடலின் சிறந்த தருணங்களிலொன்று சாத்தியமாயிற்று.

தோழர்களே! அந்தக் கடிவாளம் எது? அந்த துளி அச்சம் என்பது என்ன? அந்த உள்ளார்ந்த சஞ்சலம் எங்கிருந்து வருகிறது? அதை நாம் அறிய வேண்டும். அதை நேருக்கு நேராகப் பார்க்க வேண்டும். அப்போதே நாம் நம்மை அறிய முடியும். அதன் பிறகே நமது விடுதலை நமக்குச் சாத்தியமாகும்."

என் பின்னால் ஒருவன் வந்து நின்றிருப்பதை அப்போதுதான் உணர்ந்தேன். அவன் வந்த ஒலியோ, நின்ற ஒலியோ சற்றும் கேட்கவில்லை. எனவே சற்றுப் பயந்து விட்டேன். இருளில் அவனை சரிவரப் பார்க்க முடியவில்லை. ஆனால் மிக மெலிதாக, மிகத் தீவிரமாக அழுதுகொண்டிருந்தான் என்று புரிந்தது. இதை அறிய அவனைப் பார்க்கவோ கேட்கவோ வேண்டுமென்பதில்லை. அவனுடைய அழுகையை என் உடல் வழியாக அறிந்ததே அவனை நான் உணர வைத்தது.

"நமது தனித்தன்மை என நாம் எண்ணும் சுயப் பிரக்ஞையே அந்தக் கடிவாளம் தோழர். நான் என எங்கு உணர்கிறோமோ அங்கு நமது வல்லமைகளையெல்லாம் இழந்துவிடுகிறோம். உடலை கால இடத்தில், வரலாற்றுத் தருணத்தில், பறித்து நிறுத்திவிட முயலும் அந்த ஆகாபத்தை எப்போது உடைக்கிறோமோ அன்றுதான் மானுடனுக்கு விடுதலை. மானுடத்தின் அத்தனை துயரங்களுக்கும் காரணம் இதுதான். சுயப்பிரக்ஞையெனும் கறியில் மனமெனும் சரடால் பிணைக்கப்பட்ட உடல் முடிவின்றி சுற்றிச்சுற்றி வருகிறது. வரலாற்றின் துயரமென்பது சிறைப்பட்ட உடலின் வதையேயாகும். கட்டுண்ட உடல்கள். பலனின்றி மட்கி அழியும் உடல்கள். சிருஷ்டியின் அற்புதமான

கனவுகளல்லவா அவை! அர்த்தமின்றி மனதைச் சுமந்தபடி அலை அலைந்துஅலைந்து சரிவதையே உலகமெங்கும் காண்கிறேன். அல்லது மனதைக் கீழிறங்கி வைத்துவிட விரும்பி குகைகளிலும் தனியறை களிலும் அமர்ந்து போராடுகின்றனர். உடலைப் பட்டினியிட்டு நோயுற வைத்து வதைக்கின்றனர். மனதை வெல்ல உடலை ஒடுக்குகிறார்கள். மூடர்கள். அவர்கள் மனமோ நொய்ந்த உடலைத் தின்று பேருருக் கொள்கிறது. செய்ய வேண்டியது என்ன? உடலை விடுதலை செய்வதுதான். விடுதலை பெற்ற உடல் மனதை உதறி விட்டுக் காட்டுக் குதிரையெனப் பாய்ந்து சென்றுவிடும். அதன்மீது எதுவும் அமர்ந்து சவாரி செய்துவிட முடியாது. ஆகவே நான் மெய்யாகவே உங்களுக்குக் கூறுகிறேன் உங்கள் உடலினூடாகவே மீட்பு சாத்தியமாக உள்ளது. மானுடம் என்பது உடல். உன் உடல் அல்ல; என் உடல் அல்ல. நம் உடல்கூட அல்ல. உடல். அவ்வுடலாகத் தன்னை நிகழ்த்திக்கொண்ட மூல இச்சை. அதுவே மானுட சாரம். அவ்விச்சை தேடும் இலக்குதான் மானுட முழுமை. நாம் நம் உடலினூடாக அம்முழுமையை நோக்கிச் செல்ல வேண்டும். அந்த முழுமையில் மரணம் இல்லை. தனிமை இல்லை. எனவே துக்கமில்லை. அங்கு மட்டுமே துக்கமில்லை. எனவே நான் உங்களுக்குச் சொல்கிறேன், எங்கு துக்கமில்லையோ அங்குதான் நீங்கள் உங்களை முழுமை செய்கிறீர்கள்.

"முழுமை என்றால் என்ன? நாம் துளிகள், பிரபஞ்ச இச்சையோ வெள்ளம். நாம் சுடர்கள், பிரபஞ்ச இச்சையோ பெருநெருப்பு. அதனுடன் இணையும்போது நாம் இல்லை. நாம் அதுவாக இருக்கிறோம். நமது சுயப் பிரக்ஞையாகிய கடிவாளத்தால் நம் இச்சாசக்தியைக் கட்டிப்போட்டிருக்கிறோம். அது தரையை உதைத்து, சீறி, வால் சுழற்றி, பிடரி சிலிர்த்து, துடித்தபடி கட்டிற்குள் சுற்றி வருகிறது. அதன் வலிமையை அஞ்சுகிறோம். அது நம்மை அடையாளமின்மை யின் வெளியில் கொண்டுசென்று விட்டுவிடும் என கிலியடைகிறோம். இந்த அச்சமே நம்மைத் துயரங்களுடன் பிணைக்கிறது. தனிமைக்கும் மரணபயத்துக்கும் ஆதாரம் இதுவே.

"கடிவாளத்தை அறுப்பவனே வீரன். அன்று அந்தப் பாலைவனத் தில் மாண்ட ஒவ்வொரு கூர்க்கா வீரனும் சுயப்பிரக்ஞையை வென்ற மாவீரன். எனவே மகாஞானியும்கூட. குகைகளில் ஒடுங்கி மனதை அஞ்சிப் பிதற்றும் வெளிறிய உடலில் ஞானமில்லை. கட்டிலில் படுத்து மரணத்தை அஞ்சிப் பதறும் மட்கும் உடலில் ஞானமில்லை. கடிவாளத்தை அறுத்து இலக்கு நோக்கிப் பாயும் உடலில் அக்கணங் களில் பெருகிப் பிரவாகமெடுப்பதே மெய்ஞானம். எனவே நான் உங்களுக்குச் சொல்கிறேன், அறிவது எதுவும் ஞானமல்ல. ஆவதே ஞானம் எனப்படும்.

அனைத்து மதங்களும் வலியுறுத்துவது தியாகத்தையே. அனைத்து மெய்ஞானமும் தியாகத்தினூடாகவே அடையப்பட முடியும் என்றுதான் மானுட குலம் கண்டடைந்துள்ளது. ஏனெனில் தியாகத்தின் கணத்தில்

நாம் நமது சுயத்தை இழக்கிறோம். இந்த மண்ணில் ஒவ்வொரு துளியும் தியாகத்தால் உருவானது. தியாகத்தின் உதிரத்துளிகளின்மீது நின்று அவற்றை உண்டு அவற்றை சுவாசித்து நாம் வாழ்கிறோம். கடைசிக் கணம்வரை வதைபட்டவர்கள், இறுதி உடைமையையும் துறந்தவர்கள், உதிரம் சிதற மண்ணில் சரிந்த கோடிகள். அவர்களே வாழ்வை வாழ்ந்தவர்கள். தங்கள் வாழ்வின் மிகச்சிறந்த கணங்களை அடைந்தபின் மடிந்த ஞானிகள். அந்த கூர்க்காப் படைவீரர்களின் உச்சகட்ட தருணம் எது தோழர்களே? தின்று குடித்து புணர்ந்து அவர்கள் உந்திவிட்ட வருடங்களின் நீண்ட வரிசையா? இல்லை; இல்லவே இல்லை. தலைவனின் உத்தரவு ஒலித்ததும் படையெனும் உயிர்ப்பிரவாகத் தற்குத் தன் உடலையும் உயிரையும் ஒப்படைத்துவிட்டு முன்னால் பாய்ந்து, விழுந்து, உயிர் துறக்கும் கணம்வரையிலான ஒரு சில நொடிகள் மட்டுமே. இதை எவரும் மறுக்க முடியாது. சுயமறுப்பும் தியாகமும்தான் மானுடப் பரிபூரணத்தின் ஒரு வழிப்பாதைகள்...''

பின்னால் நின்றவன் என்னருகே நெருங்கி நின்றான். அப்படியே சொட்டச்சொட்ட குளிர்நீரில் குளித்து வந்தவன்போல அவனிடமிருந்து குளிர் வீசியது. அது பாசி பிடித்த நீர்நிலையின் நீர். அவனிடமிருந்து நீர்ப்பாசி மணத்தது. அல்லது மட்கும் புல்மணமா அது?

மேடையில் பேச்சாளரின் தீவிரம் ஒருமுகப்பட்டு, சுருதி குறைந்தது. பேச்சு முடியப்போகும் தருணம் என உணர்ந்தேன். ''முற்றத்தில் இறங்கிப் பாருங்கள். மானுட வெள்ளம் ததும்புகிறது. அதில் உங்கள் உடலுக்குரிய இடம் காலியாக இருப்பதைக் காண்பீர்கள். அதில் உங்களை மீதமின்றிப் பொருத்திக் கொள்ளுங்கள். உடலாகுங்கள். முழுமையை அடைகிறீர்கள். உங்களை நீங்கள் முழுமையாக இழக்கும்போதுதான் உங்கள் வென்தன்னை கைவிடுகிறானோ அவனே தன்னைக் கண்டடைகிறான். ஆமென்.''

'ஆமென்' என்று கூட்டம் எதிரொலித்தது. பேச்சாளர் தலைவணங்கி படியிறங்கினார். அவரை சிலர் சூழ்ந்து ஏதேதோ பேசினர்கள். கைதட்டல்கள் ஒலிக்க கரைந்தது.

கனவிலிருந்து விழித்துக்கொண்டவன்போல சுயப்பிரக்ஞை அடைந்தேன். எத்தனை மகத்தான பேருரை! இதற்கு எதிராகத் தர்க்கங்கள் எதுவும் நிற்க முடியும் என்று படவில்லை. இப்படி ஒரு பேருரை மானுட சாத்தியம்தானா என்றே அச்சமாக இருந்தது.

என் பின்னாலிருந்தவன் திடீர் உத்வேகத்துடன் பேச்சாளரை நோக்கி பாய்ந்தான். ''நில்லுங்கள், எனக்குப் பதில் சொல்லிவிட்டுப் போங்கள்'' என்றான்.

பேச்சாளர் நட்புப் புன்னகையுடன் ''சொல்லுங்கள்'' என்றார்.

''நீங்கள் பேசியபோது என்னைப் பற்றி சொன்னீர்கள். இந்த வழியாக என்னை அறிந்த எவரும் எப்போதும் நடமாடியதில்லை. எனவே எனக்கு மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. உங்கள் குரலைத் தேடித்தேடி இங்கு வந்தேன்'' என்றான். அவன் முகத்தில் ஒளி பரவியபோது என் மனம் பீதிகொண்டது. இல்லை, இது கனவுதான் என்று என்னை சமாதானம் செய்து கொண்டேன். ''நீங்கள் கூறிய சொற்களை ஒரு துளிகூட விடாமல் கேட்டேன். அவை போதையூட்டுபவை. ஆனால் பேச்சு முடிந்த மறுகணம் என் பழைய வெறுமையையே மீண்டும் சந்திக்க வேண்டியிருந்தது.'' சட்டென்று கோபத்துடன் பேச்சாளரின் சட்டையைப் பிடித்துக்கொண்டான். ''பசப்பு! வெறும் பசப்பு. அர்த்தமற்ற சொற்களை அள்ளிக் கொட்டி உண்மையை உயிருடன் புதைத்துவிட்டுப் போகிறாய். சதிகாரா, பாவி...'' அவன் உடம்பு நடுங்கியது.

''யார் நீ? அதைச் சொல் முதலில்'' என அவர் நிதானமாகத் தன்னை விடுவித்தபடி கேட்டார்.

''நான்... என்னைப் பற்றித்தான் நீர் சொன்னீர். பத்து வருடங்களுக்கு முன் எகிப்தில் அந்தப் பாலைவனத்தில் மரணமடைந்த கூர்க்காப் படையின் கடைசி வீரன் நான். அந்தத் துப்பாக்கியை நான்தான் கைப்பற்றினேன். எனக்கு விக்டோரியா கிராஸ் பதக்கம் கிடைத்தது.''

''வாழ்த்துக்கள் தோழர். உங்களைச் சந்தித்தது பெரும் உவகையைத் தருகிறது. உங்களைப் போன்ற பெரும் வீரரை இப்போதுதான் சந்திக்கிறேன். இது ஒரு பெரும் பேறு எனக் கருதுவேன்.'' பேச்சாளர் அவன் கைகளைப் பற்றிக் குலுக்கினார். ''நீங்கள் அடைந்த வெற்றி எதிரிகளின் குண்டுகளுக்கு எதிரானதல்ல. உங்களுக்கு எதிரான வெற்றி அது. தன்னை வென்ற வீரன் உலகை வெல்கிறான். தாந்தேயின் தெய்வ நாடகம் கூறும் நரகவெற்றி அதுதான் இல்லையா? மகிழ்ச்சி! மிக மகிழ்ச்சி...''

அவன் சற்றுக் குழம்பினான். பிறகு மூர்க்கமாகக் கூவினான். ''பசப்பு, வெறும் பசப்பு! மீண்டும் அதே இனிமையான, உத்வேகமூட்டும் பொய். பாவி. ஏமாற்றுக்காரா, உன்னை கொல்லத்தான் போகிறேன்...''

''உங்கள் கோபம் எனக்குப் புரியவில்லை நண்பரே. நான் கூறியதில் தவறிருந்தால் கூறுங்கள். திருத்திக்கொள்கிறேன்.''

அவன் உதடு துடிக்கத் தடுமாறினான். விசித்திரமான குரலில் பயங்கரமாக ஊளையிட்டு அழ ஆரம்பித்தான். உடலும் ஒலியும் துடித்து நெளியும் அப்படிப்பட்ட ஓர் அழுகையை நான் பார்த்ததே இல்லை.

அவன் மெதுவாக தணிந்ததும் பேச்சாளர், ''சொல்லுங்கள், என்ன ஆயிற்று உங்களுக்கு?'' என்றார்.

"இதோ இந்தப் பாதையில் ரயில்வே கேட் ஒன்று இருக்கிறது. அங்குதான் இருபது வருடம் முன்பு நான் விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்தேன்." அவன் சொன்னான். அது எனக்கு வியப்புத் தரவில்லை என அறிந்தேன். "இத்தனை நாள் இங்குள்ள இடுகாட்டில் முட்செடிகளுக்கு கீழே மௌனமாக மட்கிக் கொண்டிருந்தேன். எண்ணங்கள் மட்டும் பெருகிப்பெருகி என்னை அழுத்திக் கொண்டிருந்தன. முடிவற்ற வெறுமை. சிந்தனை வெறுமையின் எல்லைவரைக்கும் போய் களைத்துச் சரியும். மனமுடைந்து அழுவேன். ஓயில்லாமல் கதறிக்கதறி அழுவேன். ஓய்ந்து ஒரு சில கணங்களுக்கு அமைதியும் இன்பமும் அடைவேன். பிறகு மீண்டும் வெறுமை. எனக்கு மீட்பே இல்லை என்றுபட்டது. என்மீது பரவிய மண்மீது புதிய உலகம் மிகவேகமாக உருவாகி வளர்வதைக் கண்டேன். ஒவ்வொரு நாள் கழியும்போதும் அவ்வுலகிலிருந்து நானறிந்த உலகம் விலகிவிலகிப் போவதைக் கண்டேன். நான் வாழ்ந்த இடங்கள் மாறின. மனிதர்கள் மறைந்தார்கள். கட்டிடங்கள் பாழ்பட்டு இடிந்து புதிதாகப் பிறந்தன. ஏன் மலைகளும் பாறைகளும்கூட மெதுவாகத் தோலுரித்துக்கொண்டு புது வடிவம் கொண்டன. என்னைப் பற்றிய நினைவு எல்லா மனங்களிலிருந்தும் மறைந்தது. என் மனைவி மறைந்தாள். என் குழந்தைகள் புதிய உலகில் புதிய மனிதர்களாக வளர்ந்து எழுந்தனர். இன்னும் சில வருடங்களில் என்னுடைய வாழ்வின் எந்தத் தடயமும் மிஞ்சாமல் ஆகிவிடும். நான் வாழ்ந்ததும் மறைந்ததும் எனக்கு மட்டுமே தெரிந்த விஷயங்களாகிவிடும். எத்தனை கோடி மனிதர்கள் மறைந்தனர். தடயங்களின்றிப் போயினர். அந்தப் பெரும் பிரவாகத்தில் நானும் ஒருவனாகிவிடுவேன். அப்போது என் பிரக்ஞை என்ன ஆகும். அதற்கு பேச வாயிருக்காது. கேட்கக் காதிருக்காது. அது தன்னை உணர ஓர் உடல் இருக்காது. ஆயினும் அது அமைதியிழந்து தவிக்கும். வெறும் ஒரு தவிப்பாக அது இவ்வெளியில் மீதமிருக்கும்." அவன் உடலை உலுக்கினான் "ஆ! எத்தனை பயங்கரமாக இருக்கிறது. ஒருவேளை இதைப் போல கோடி கோடி மானுட ஆத்மாக்களின் தவிப்புகளினால் ஆனதுதானா இந்தப் பெருவெளி? அது தலைக்குமேல் வானம் எனப் பெருகி நின்று தவிக்கிறது. தன் முழு இருப்பாலும் ஒவ்வொரு மானுடனையும் கூவி அழைக்க முயல்கிறது. மனிதர்கள் அதை அறியாதவர்களாக மண்ணில் பிறந்து, உண்டு, புணர்ந்து, இனிமையும் சோர்வும், கனவும் நனவுமாக வாழ்ந்து மறைகிறார்கள். கொடுமை!" அவன் மீண்டும் கேவிக்கேவி அழ ஆரம்பித்தான். பசித்துத் தளர்ந்து போகும் குழந்தையொன்றின் அழுகைபோல பலவீனமான அழுகை.

"நண்பரே உமது பிரச்சினையில் நான் எப்படித் தலையிட முடியும்?" என்றார் பேச்சாளர்.

"நீர் என்னைப் பற்றிப் பேசியதைக் கேட்டபோது மீட்பு கிடைத்துவிட்டது என்று பட்டது. பரபரப்புடன் கண்ணீர் விட்டபடி, பிரார்த்தனை செய்தபடி, இங்கு ஓடிவந்தேன். ஆனால் நீர் என்னை ஏமாற்றிவிட்டீர். நீர் மீட்பரல்ல."

"எப்படி?" என்றார் அவர், அதே புன்னகையுடன்.

"ஏனெனில் நீர் இங்கு அந்தப் பாலைவனப் போரைப் பற்றிப் பேசியபோது பிற்பாடு நடந்தது என்ன என்பதை அறிந்திருக்கவில்லை."

"என்ன நடந்தது அப்படி?"

"அன்று அத்தனை எதிரிகளும் சரணடைந்த பிறகு, வெற்றியுடன் நான் கைதூக்கித் திரும்பியபோது, மணல்வெளியில் சரிந்து கிடந்த தோழர்களின் பிணக் குவியலைக் கண்டேன். என் வயிறு உறைந்து கல்லாயிற்று. அதற்குள் என் படை ஓடிவந்து என்னை அள்ளிக் கொண்டது. ஆம், அவர்கள் அப்பிணங்களை மிதித்துத் துவைத்தபடி தான் ஓடிவந்தனர். வெற்றிக் களிப்பு. மதுவெள்ளம். கெய்ரோவிற்குக் கொண்டு செல்லப்பட்டேன். விக்டோரியா கிராஸ் பட்டம் பெற்றேன். காயங்களுக்காக ஆஸ்பத்திரியில் நானிருக்கையில் போர் முடிவுற்றது. என்னால் ஊர் திரும்ப முடியவில்லை. மீண்டும் அந்தப் போர்க் களத்துக்குப் போனேன். அது மீண்டும் யாரும் விரும்பாத, யாரும் உரிமை கோராத, வெறும் பாலைவனமாக மாறிவிட்டிருந்தது. பழுத்த செம்பழுப்பு நிற வெட்டவெளி. அந்தப் பாறாங்கல்லை என் அடிவயிற்றில் உணர்ந்தேன். அருகாமையில் இருந்த பஸ்தா என்ற நகருக்குப் போய் சாப்பிட்டேன். விடுதியில் படுத்து சிறிது தூங்கினேன். மறுநாள் அதிகாலை எனக்கு ரயில். நள்ளிரவில் விழிப்பு வந்தது. அன்று நிலவு நாள். பாலைவன நிலவுதான் நிலவுகளில் அற்புதமானது. பித்துப் பிடிக்க வைக்கும் இளஞ்சிவப்பு நிறமும் உக்கிரமான வெறுமையும் கொண்டது. கால்கள் என்னை அந்தப் போர்நிலத்துக்குத்தான் இட்டுச் சென்றன. போகாமலிருந்திருக்கலாம் என ஏங்காத நாள் பிறகு இல்லை. என் இம்சை தொடங்கியது அங்கு அந்த இரவில்தான். அந்தப் பாலைநிலம் வானின் அரை வெளிச்சத்தில் சாம்பல் நிற அலைகளாகக் கிடந்தது. மேகம்விட்டு நிலவு விலகியதும் வெண்ணிற உறைகடலாக மாறியது. அந்த இடத்தை நெருங்க நெருங்கப் பலவிதமான ஒலிகளைக் கேட்டேன். பெருங்கூட்டம் கலைவதுபோல சந்தடி. ஆனால் அது மங்கலான ஒலியாகவும் இருந்தது. அருகே நெருங்கியபோது முதலில் ஏதும் தெரியவில்லை. புகைமூட்டம் போலிருந்தது. பிறகு சாம்பல்நிற நிழலுருவங்களைக் கண்டேன். அவர்கள் என் மடிந்த ராணுவத் தோழர்கள். அவர்கள் அங்கு நெருக்கியடித்தபடியும், ஒருவரை யொருவர் திட்டி வசைபாடிக் கொண்டும், நிராசையால் மனமுடைந்து அழுதபடியும் மூட்டிமோதிக் கொண்டிருந்தனர். வெகு நேரம் கழித்துதான் என்ன நடக்கிறது என்பது புரிந்தது. அவர்கள் அங்கிருந்து வெளியேற முயன்றார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரே திசையில் ஒருடலாக குறிப்பிட்ட இலக்கு நோக்கி வெடித்துப் பாய்வதற்கு மட்டுமே பயிற்சி இருந்தது. அவர்களுடைய ஆத்மாக்களுக்கோ தனித்தனியான இலக்குகள் இருந்தன. அவை தனித்து இயங்கின. அவர்கள் கால்பாதைகளும் முற்றிலும் தனித்தனியாவை. எனவே அவர்கள் பரஸ்பரம் மூட்டிமோதிக் கொண்டனர். ஒருவரையொருவர்

தடுத்துக் கொண்டனர். இடம்பெயர முடியாது புழுக்குவியல்போல நெளிந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கூவி அழைத்தேன். அவர்கள் என் குரலைக் கேட்கவில்லை. அவர்களை என்னால் தொடவும் முடியவில்லை. விடியும்வரை கூவியபடி, பதறி அழுதபடி, அங்கு நின்றேன். பிறகு மயங்கி விழுந்துவிட்டேன். மறுநாள் எழுந்து திரும்பி வந்தேன். இந்தியா வந்து சேர்ந்தேன். நைனிடாலில் என் சொந்த கிராமத்தில் என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. கண்களை மூடினால் மூட்டிமோதும் தோழர்களின் ஓலங்கள்தான் இருந்தன. எனவே வீட்டை உதறி, துறவியாகக் கிளம்பினேன். அலைய அலைய மனப்பாரம் அதிகரித்தபடியேதான் வந்தது. என் இறுதிக் குருநாதர் ராமேஸ்வரம் போ, அங்குள்ள கடலில் எல்லாவற்றையும் கரைத்துவிடு என்றார். எனவே இங்கு வந்தேன். ராமேஸ்வரம் கடலில் நீராடினேன். என் பாரம் இம்மியும் குறையவில்லை. என் மீட்பு கண்ணுக்குப் படவில்லை. உடைந்த மனதுடன் திரும்புகையில் இந்த ரயில்வே கேட் அருகே விபத்து நிகழ்ந்தது. இங்கு புதைக்கப்பட்டேன்.''

பேச்சாளரின் சிரிப்பு வலுத்தது. ''நீர் புரிந்து கொண்டது சரி. உமது மீட்பு என்னிடமில்லை.''

அவன் கோபம் கொண்டான். ''அப்படியானால் நீ ஏன் உபதேசம் செய்கிறாய்?''

"ஏனெனில் அது என் கடமை.''

"யார் நீ?''

பேச்சாளரின் வாய் திறந்தது. இரு விஷப்பற்களின் நடுவிலிருந்து மெல்லிய இரட்டை நாக்கு தீக்கொழுந்துபோல நீண்டு படபடத்தது. கண்கள் இமைக்காத மணிக்கோளங்களாயின.

"நீயா?'' என அவன் அலறினான். நான் பயமே வடிவானேன்.

"நானேதான். ஓசிபர். நீங்கள் என்னை சாத்தான் என்பீர்கள்.'' அவர் ஊளையிட்டுச் சிரித்தார்.

"பாவி! பாவி!'' என அவன் வீரிட்டான்.

"பாவமே என் தர்மம்'' என்றார் அவர். குரல் இப்போது மெல்லிய பெண்ணிடலாக ஆகிவிட்டிருந்தது. உடைக்குள் உடல் வளைய நெளிய மொழிந்தது ''உன் மீட்பு ஏன் நிகழவில்லை என நீ அறிய மாட்டாயா என்ன?''

"இல்லை. தெரியாது.''

"அய்யகோ, சாத்தானிடமே பசப்பா? நீ ராமேஸ்வரம் கடலில் நீராடும்போது புரோகிதன் அங்குள்ள புராதனமான சடங்கு பற்றிக் குறிப்பிட்டானே நினைவுள்ளதா? உனக்கு மிக மிகப் பிடித்தமானது எதுவோ அதை விட்டுவிடும்படிச் சொன்னானே, அப்போது நீ எதை விட்டாய்?''

அவன் அதிர்ந்தவன்போல பின்னடைந்தான்.

"நீ அந்த விக்டோரியா கிராஸ் பதக்கத்தை உனது உள் பையிலிருந்து எடுத்தாய். அதை நீட்டியபோது அருகே நின்ற ஒரு புரோகிதன் இது தங்கம் போலிருக்கிறதே இதை வீச வேண்டாம். இது ஒரு சம்பிரதாயம் மட்டும்தான் என்றான். திரும்ப உள்ளே வைத்துக் கொண்டாய்."

"ஆமாம், அது..."

"அஹ்ஹஹ்ஹா! அது நான்தான்."

"பாவி, பழிகாரா" என்று அலறியபடி அவன் திரும்பினான். "இப்போதே அதைப் போய் எடுத்து..."

"இனி நீ என்ன செய்ய முடியும்? அது ஒரு பௌதிகப் பொருள். அதை நீ தொடக்கூட முடியாது. அந்தக் கதை முடிந்துவிட்டது."

அவன் உடைந்து போனவனாகத் திறந்த வாயுடன் நின்றான்.

அந்த கம்பீரமான மனிதர் இப்போது பாம்பாக மாறி உடைகளை உருவிவிட்டு வெளியேறினார். பாம்பு படமெடுத்தது. "உனது எஜமானை சந்திக்கும் பேறு கிடைத்தமைக்கு மகிழ்வாயாக. என் ஆசீ உனக்கு என்றுமுண்டு" என்று ஹிஸ்ஸிட்டு நெளிந்து மறைந்தது.

அந்த மனிதனை உற்றுப் பார்த்தேன். மட்கிப் பாசிபடிந்த அந்த முகம் தாள முடியாத ஏமாற்றத்தில், துயரத்தில், வெட்டிவெட்டி இழுத்துக் கொண்டிருந்தது. அவனை சமாதானம் செய்யும்படி ஏதாவது கூற ஆசைப்பட்டேன். ஆனால் என் குரல் அவனை எட்டாது என அறிந்தேன். இல்லை ஒருவேளை நானும் இறந்துவிட்டேனா என்ன?

♦

2

இறுதி யந்திரம் *

எட்டு இருபது முதல் ஒரு மணி நேரத்தை அவருக்காக அதிபர் ஒதுக்கியிருந்தார். விருந்தினர் அறையில் அந்த ஒல்லியான பரட்டைத் தலை மனிதர் தன் கருவியுடன் காத்திருந்தார். முன்பக்கம் கண்ணாடி விழி ஒன்றும் சில பித்தான்களும் கொண்ட சதுரமான எந்திரம் அது. விருந்தினர் அறை மிகவும் குளிராக இருந்தது. எந்தவிதமான உடையணிந்தாலும் அந்தக் குளிர் எலும்புகளைத் துளைத்தேறும் என்று பட்டது. பரட்டை மனிதர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். இன்னமும் ஐந்து நிமிடங்கள் இருந்தன. கடிகார முள் மிக மெதுவாக நகர்ந்தது. அவர் தன் உபகரணத்தை இன்னுமொருமுறை சரிபார்த்துக் கொண்டார். திருப்தி ஏற்பட்டது. ஒற்றைக் கண்ணில் செருகப்பட்டிருந்த கண்ணாடியை எடுத்து சிறிய பட்டுக் கைக்குட்டையால் பதற்றத்துடன் பலமுறை துடைத்தார். தூக்கிப் பார்த்த பிறகு பொருத்தினார். அப்போது அழைப்பு வந்தது. சிவப்பு நிற சீருடையும் அதில் பொற்பதக்கங்களும் அணிந்த காவலன் கம்பீரமாகவும் மெதுவாகவும் நடந்து வந்து, மிக மெல்லிய குரலில் ''உங்கள் நேரம் தோழர்'' என்றான். அவர் அவசரமாக எழுந்தபோது மனம் துடிக்க ஆரம்பித்தது.

பெரிய அறை அது. அதுவும் குளிர்ந்து உறைந்து கிடந்தது. மேலே வெகு உயரமான கூரையிலிருந்து தொங்கிய விளக்குகளிலிருந்து கூசவைக்கும் ஒளி அறையெங்கும் சிதறியிருந்தது. அதில் மூன்று பேர் அமர்ந்திருந்தனர். முகங்கள் குளிர்பதனப் பெட்டியில் வெகுகாலம் வைக்கப்பட்ட வை போலிருந்தன. கண்கள் பனிக்குண்டுகள். தன் கருவியை வைத்து விட்டு அவர் மூவருக்கும் வணக்கம் கூறினார். அவர்கள் மிக மெல்லிய குரலில் பதில் வணக்கம் கூறினார்கள். குளிர் அதிகரிப்பது போலப் பட்டது.

''நான் ரெமிங்கோ ரோமலோடான்''என்றார் அவர். ''விஞ்ஞானி. என் கருவியை இங்கு காட்ட உத்தரவு பெற்றிருந்தேன்.''

---

* ஆசிரியர் பெயரின்றி கைப்பிரதித் தொகுப்பில் காணப்படும் இந்தக் கதை தமிழாக்கமா மொழிபெயர்ப்பா என்பது தெரியவில்லை கையெழுத்து ஆசிரியருடையது

அவர்கள் தங்களை முறையே கிரிகோர் வசீலியேவ்ஸ்கி, யெவ்கெனி ஃபதயேவ், இவான் டாவிடோவ் என்று அறிமுகம் செய்து கொண்டனர். அவர்கள் அதிபரின் உயர்மட்ட விஞ்ஞான ஆய்வுக்குழு மற்றும் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள். கிரிகோர் அதன் தலைவர்.

"நீங்கள் எந்த தேசத்தவர்?" என்றார் கிரிகோர்.

சற்று வெட்கியபடி "உண்மையைச் சொல்லப் போனால் எனக்கு தேசமில்லை. நான் ஒரு ஜிப்ஸி" என்றார் டான். "ஐரோப்பிய தேசங்கள் முழுக்க நாங்கள் துரத்தப்பட்டபடி இருக்கிறோம். என் தந்தை ஒரு ஜெர்மானியர் என்று என் கண்களை வைத்துச் சொல்கிறார்கள். என் பெயருக்கு ஸ்பானிஷ் ஒலி உள்ளது. ஆனால் அதற்கு ஸ்பானிஷ் அர்த்தம் ஏதும் இல்லை. ஒலி மட்டும்தான்." டான் மீண்டும் பல்யமான முறையில் சிரித்தார்.

அவர்கள் புன்னகை புரிந்தனர்.

"இந்த இயந்திரத்தைக் கண்டுபிடித்து ஒரு வருடமாயிற்று. இதுவரை விற்க முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டு இங்கு வர அனுமதி பெற்றேன்."

வெளியே ஒரு சிறு ஓசை கேட்டது. உடனே மூவரும் கல்லென உறைந்து நின்றனர். டான் எழுந்து பல்யமாக நின்றார். குளிரின் அலை ஒன்று வந்தது. சீரான காலணியோசைகள் கேட்டன. மெய்க்காவலர் இருவர் புடைசூழ அதிபர் மிடுக்காக நடந்து வந்தார். குட்டை மயிர் ராணுவத்திற்காகவே உருவான தாடையகன்ற சதுர முகம். சிறிய மூக்குக்குக் கீழே கச்சிதமான முறுக்குமீசை. மங்கலான சிறிய கண்கள். அவற்றில் ஓர் இறுக்கம் இருந்தது. அதிபர் வந்ததும் மூவரும் ஓசையின்றித் தலை வணங்கினர். டானும் அதையே செய்தார். அதிபர் அமர்ந்து மிக மெல்லத் தலையசைத்ததும் அனைவரும் அமர்ந்து கொண்டனர்.

தரையும் சுவர்களும் பனிப்பாளங்களாக மாறிவிட்டவைபோல் அறை குளிரில் விரைத்திருப்பதை டான் உணர்ந்தார்.

அதிபரின் விழியசைவைக் கண்டு கிரிகோர் உயிர்பெற்றார். "திருவாளர் டான் ரெமிங்கோ ரோமலோ. உங்கள் கருவியின் பயன் என்ன?"

"மேதகையீர், இது ஒரு உயர்சக்தி வாய்ந்த அழிப்பான். இது வரலாற்றை அழிக்கும் சக்தி உடையது. தங்களுக்கு விருப்பமில்லாத பகுதிகள் ஏதும் வரலாற்றில் இருக்குமெனில் இதன் உதவியுடன் எவ்விதத் தடயமும் இல்லாமல் அழித்துவிட முடியும்."

"விளக்குங்கள்" என்றார் ஃபதயேவ் "இது ஒரு வரலாற்று நூலிலுள்ள பக்கங்களை இல்லாமல் செய்துவிடுமா?"

"இல்லை மேன்மை தங்கியவரே. இது உண்மையான வரலாற்றையே அழிக்கும்."

இவான் "நீங்கள் கூறுவது வியப்பளிக்கிறது" என்றார். "ஏற்கனவே இங்கு உயர்சக்தி வாய்ந்த சில புகைப்பட அழிப்பு உபகரணங்கள் உள்ளன. புகைப்படங்களில் உள்ள நாம் விரும்பாத பகுதியை அவை துல்லியமாக இல்லாமல் செய்துவிடக் கூடியவை. இது அவ்வகைப்பட்ட யந்திரமா?"

"இல்லை மேதகையீர், அவை புகைப்பட அழிப்பான்கள். நூல்களை அழிப்பவை உண்டு. சில கருவிகள் நினைவுகளை அழிக்கும். இது அப்படியல்ல. இது பரிபூரண வரலாற்று அழிப்பான். வரலாற்றில் ஒரு பகுதியை முற்றிலும் இல்லாமல் செய்துவிடும். நீங்கள் குறிப்பிட்டவை வரலாற்றின் வெறும் தடயங்கள் மட்டுமே."

அதிபர், சேவகர்களுக்கு ஏதோ குறிப்பு அனுப்பினார். அவர்கள் கட்டுகட்டாக நூல்கள் ஆல்பங்கள் ஆகியவற்றுடன் வந்தபடி இருந்தனர்.

கிரிகோர் "உங்கள் யந்திரம் போதிய அளவு நம்பிக்கையை ஏற்படுத்தவிலையோ என ஐயப்பட இடமிருக்கிறது" என்றார்.

"தாங்கள் சோதித்துப் பார்க்கலாம், மேதகையீர்" என்றார் டான்.

"ஒருவரை வரலாற்றிலிருந்து நீக்க இதை எப்படிப் பயன் படுத்துவது?" என்றார் கிரிகோர்.

"மிக எளிது. இக்கருவியின் ஒளிப் பீரிடல் முன்பு அந்நபரின் முழுப்பெயர், அல்லது புகைப்படம், அல்லது உடல் உறுப்பு, அல்லது உடைகள் போன்று நேரடியாக சம்பந்தமுள்ள பொருட்கள் ஆகியவற்றில் ஒன்றை வைத்து இந்த நீலப்பித்தானை அழுத்தினால் போதும்."

"இறந்துவிடுவாரா?"

"இல்லை பிரடு, பிறக்கவேயில்லை என்று ஆகிவிடுவார்."

"நம்பவே முடியவில்லை" என்றார் இவான் டாலிடோவ்.

"தோழர் டான்" என்றார் அதிபர். அவர் குரல் மெலிதாக இருந்தது. "நீங்கள் உங்கள் கருவியை இயக்கிக் காட்டலாமே."

"உத்தரவு மேன்மைதங்கியவரே."

"மாதிரிக்கு தோழர் கிரிகோரையே எடுத்துக் கொள்ளுங்கள்."

கிரிகோர் முகம் சவம்போல ஆயிற்று. நிமிர்ந்து நிற்க முயன்றார். கரங்கள் மட்டும் துடித்துக் கொண்டிருந்தன. டான் அமைதியாக தன் கருவியைத் திருப்பிக் குறிபார்த்தார். கிரிகோரின் தலை இறுகி சற்று கூனலானார். வாயின் விளிம்புகள் அழுந்த மடிந்து, பின்பு முகம் ஒருபக்கமாகக் கோணிக்கொண்டது. டான் கருவியை இயக்கியதும் நீல நிறமான ஒளி விரிந்து கிரிகோர்மீது பரவியது. அவர் உடல் ஒரு முறை உதறிக்கொண்டது. ஒரு கேவல் ஒலி எழுந்தது. ஒளி அணைந்தபோது கிரிகோர் நின்றிருந்த இடம் காலியாக இருந்தது.

பிற உடல்கள் விறைப்பு தளர்ந்து சகஜநிலை பெறும் அசைவுகள் ஏற்பட்டன.

அதிபர் மெல்லிய குரலில் ''எழுத்து வடிவில் கிரிகோரின் பெயர் உள்ளதா என்று பாருங்கள்'' என்றார். இவான் கலைக்களஞ் சியங்களையும் யென்கெனி ஃபதயேவ் அரசு ஆவணங்களையும் புரட்ட ஆரம்பித்தார்கள்.

''அப்படி ஒரு பெயரே இல்லை'' என்றார் இவான்.

''வியப்புதான். அப்படியோரு பெயர் இவற்றில் கையாளப்பட்ட தடயமே இல்லை'' என்றார் யெவ்கெனி ஃபதயேவ். வரலாற்று நூல்கள் பிற ஆவணங்கள், அரசு அறிக்கைகள், பிறப்பு விவரப் பட்டியல், கல்வி நிலைய ஆவணங்கள், பாஸ்போர்ட் பதிவுகள் உட்பட எங்கும் அப்பெயர் இருக்கவில்லை. வரலாற்றிலிருந்து அதற்குமுன் அழிக்கப் பட்டவர்களின் பெயர்களடங்கிய ரகசியக் கோப்பில்கூட அப்படி ஒரு பெயர் இல்லை. புகைப்படங்களில் கிரிகோர் நின்றிருந்த இடங்களில் ஒன்று வேறு நபர்கள் இருந்தனர்; அல்லது மறுபக்கம் தெரிய காலியாக இருந்தது.

''அற்புதம்தான் தோழர்'' என்றார் இவான்.

அதிபரின் உத்தரவுக்கு ஏற்ப வெளியேயிருந்து ஒரு பெண்மணியும் அவள் மகனும் வந்தனர். இருவரும் இயந்திரங்கள்போல இருந்தனர்.

கிரிகோரின் பெயரை முழுமையாகச் சொல்லி, அந்தப் பையனிடம் அவரைத் தெரியுமா என்று இவான் கேட்டார்.

பையன் புரியாது முகத்தை சுளித்தான். தாயைப் பார்த்தான். ''இல்லை'' என்றான்.

''உங்களுக்கு?'' என்றார் இவான் தாயிடம்.

''இல்லையே, யார் அவர்? ஏதாவது ராஜத் துரோகியா?'' என்றாள் அவள் குழப்பத்துடன்.

இவான் அழுத்தமாக, ''திருமதி நடாலியா, உங்கள் கணவர் பெயர் என்ன?''

''இவான் செர்கியேவிச். கம்மியர். இறந்துவிட்டார்.''

''உங்கள் முழுப் பெயர்?''

''நடாலியா இவானவ்னா.''

''உன் தந்தை பெயர் என்ன?'' என்றார் ஃபதயேவ்.

''இவான் செர்கியேவிச்'' என்றான் பையன். ''என் பெயர் திமிட்ரி இவானோவ்.''

அதிபர் தலையசைக்க அவர்கள் வெளியேறினர். ஃபைல்களும் நூல்களும் அகற்றப்பட்டன. அதிபர் முதல்முறையாகச் சற்றுப் புன்னகை புரிந்தார்.

"தோழர் இவான்!''

"உத்தரவு தோழர்.''

"தோழர் கிரிகோரின் இடத்தை இனிமேல் தாங்கள் நிரப்பலாம். தாங்கள் அவரைவிடவும் தகுதியானவர்.''

இருவரும் சற்றுக் குழம்பினர். இவான் மெல்லிய குரலில் ''தோழர், மன்னிக்க வேண்டும். உத்தரவு புரியவில்லை'' என்றார்.

அதிபரின் கண்கள் இடுங்கின.

"உயர் மட்டத் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவில் நாங்கள் இருவர்தான் உறுப்பினர்கள். நான் தலைவர். இவர் செயலர். தாங்கள் சற்றுமுன் கூறிய பெயரை நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை.''

ஃபதயேவ் ''தாங்கள் ஒருவேளை அப்பெயருள்ள எவரையேனும் நியமிக்க விரும்பியிருக்கக்கூடுமோ?'' என்றார்.

அதிபரின் முகம் சிரிப்பில் மலர்ந்தது. ''நீங்கள் போகலாம்'' என்றார். அவர்கள் வெளியேறியதும் எழுந்து ''அருமையான இயந்திரம். அற்புதமான கண்டுபிடிப்பு. இதை நான் வாங்கிக் கொள்கிறேன்'' என்றார்.

"நீங்கள் என் மீட்பர்'' என்றார் டான்.

"இதை எவ்வாறு இயக்குவது என்பதை ஒருமுறை எனக்குத் தனிப்பட்ட முறையில் காட்டுங்கள்.''

"உத்தரவு தோழர், இப்போது சற்றுமுன் காட்டியது போல.''

"சற்றுமுன் காட்டினீர்களா? எப்போது?''

"இப்போது ஒருவரை வரலாற்று நீக்கம் செய்து காட்டினேனே...''

"இப்போதா, இங்கா, யாரை?'' என்றார் அதிபர் குழப்பத்துடன்.

டான் குழம்பினார். ''ஆனால்'' என்றார். அவருக்கும் நினைவு வரவில்லை. ''மன்னிக்கவும் சற்று குழம்பிவிட்டேன் – பித்தானை அழுத்திவிட்டேன்'' என்றார்.

"எப்படி இதைக் கண்டு பிடித்தீர்கள். இதன் சூத்திரம் என்ன?'' என்றார் அதிபர்.

"இது என் வம்ச ரகசியங்களில் ஒன்று'' என்றார் டான். ''நான் ஜிப்ஸி, நாடோடிகள் இனம் இந்த புவியெங்கும் பரவி நிரம்பியிருந்தது. ஆயிரம் ஆண்டுகளாக எங்கள் இனக்குழுக்கள் இவ்வாறு வரலாற்றிலிருந்து மறைந்தபடி உள்ளன. இப்போது சிலரே எஞ்சியிருக்கிறோம். தொலைந்து போன என் மூதாதையரில் ஒருவர் வழி தவறி என் கனவுக்குள் நுழைந்துவிட்டார். அவரது பாடலில் இதற்கான ரகசியம் இருந்தது.''

அதிபர் சிரித்தார். ''வரலாற்றில் இருப்பதைவிட இல்லாமலிருப்பதே வசதியானது. இனிமையானது. ஏனெனில் அங்கு அச்சம் இல்லை அல்லவா?''

"ஆம் பிரபு. ஜிப்ஸிகளைவிட அதை அறிந்த வம்சம் எது?"

"ஆனால் வரலாறு என்பது ஓர் அதிகார வெளி. அதிகாரம் இல்லாமல் என்னால் இருக்க முடியாது" என்றார் அதிபர். ஒரு கணம் அவர் மனிதனானார். "களைத்துச் சோர்ந்தாலும் சுமந்தாக வேண்டும். வெகுதூரம் வந்துவிட்டேன். இனிமேல் திரும்ப முடியாது."

"இது மிக ஆபத்தான இயந்திரம் மேன்மை தங்கியவரே" என்றார் டான். "இது எப்போதும் உங்கள் அருகிலேயே இருக்க வேண்டும். உங்கள் படுக்கையறையில், உங்கள் நேரடிக் கண்காணிப்பில்."

"ஆம், மிகவும் நன்றி டான்" என்றார் அதிபர். "வரலாறு எனக்கு மிகவும் அசவுகரியமானதாக இருந்து வந்தது. இனிப் பயமில்லை. உங்களுக்கான பணம் வெளிநாட்டு வங்கிகளுக்கு வரும். நீங்கள் போகலாம். எனக்கு வேலைகள் பல உள்ளன."

டான் வணங்கி விடைபெற்றார். வெளியே அவருக்காக வண்டி நின்றது. தங்குமிடத்திற்குச் சென்றதும் மனைவியிடம் இரைந்தார். "கிளம்பு மரியா. இக்கணமே நாம் கிளம்புகிறோம். ஆசிய நாடுகள் எதற்காவது..."

"பெரும் பணம் கிடைக்குமென்றீர்கள்.."

"ஆம், அதை வைத்து நாம் என்ன செய்ய முடியும்? தங்கத்திற்காக உலகையே உழுது புரட்டிய ஐரோப்பா நம்மை சும்மா விடுமா? கிளம்பு."

அவர்கள் அடையாள அட்டைகளையும் அனுமதி உத்தரவுகளையும் காட்டிக் கிளம்பினார்கள். மாலை விமானம் வானில் ஏறிய பிறகு மரியா கேட்டாள் "அப்படியானால் அந்த யந்திரத்தை ஏன் விற்றீர்கள்?"

"விற்கவில்லை. அதிபருக்கு என் அன்பளிப்பு அது" என்றார் டான்.

"உங்களைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை."

"அசடே" என்றார் டான் சிரித்தபடி "அந்த அழிக்கப்பட்ட வரலாறுகள் எங்கு செல்கின்றன என்கிறாய்? அவை அந்த யந்திரத்திற்குள் சேமிக்கப்படுகின்றன. அது அவரது படுக்கையறையில் தலைமாட்டில் எப்போதும் இருக்கும். அதை அழிக்க முடியாது. நிறுத்தக் கூட முடியாது. அதற்குள் வேறு ஒரு வரலாறு நிலைக்காத படங்களாக ஓடியபடியே இருக்கும். அழிக்கப்பட்டவர்களினால் ஆன வரலாறு."

மரியா "அடப் பாவமே" என்றாள்.

"ஒருவேளை அதுதான் உண்மையான வரலாறு" என்றார் டான். "அதற்கு அவர்தான் முதல் சாட்சி." பிறகு விமானமே அதிர்ந்து திரும்பிப் பார்க்கும்படி பைத்தியக்காரத்தனமாக உரக்கச் சிரித்தார்.

3

மெல்லிய நூல்

பத்ரன்*

பாபு மிகவும் களைத்திருந்தார் என்று பட்டது. தீதி வந்து இரவு உணவிற்குப் பிறகு அவர் சீக்கிரமே தூங்கிவிடுவார் என்றும், இரவு உணவும் சற்று முன்னதாகவே வேண்டும் என்றும் சொன்னாள். சோகன் ராமுக்கு அது சற்று ஆசுவாசமாக இருந்தது. வேகவைத்த இரு வாழைப்பழங்களும் ஒரு கிண்ணம் கீரையும் ஒரு கோப்பை ஆட்டுப்பாலும்தான் அவரது உணவு. சிறுசீசாவில் அரை அவுன்ஸ் தேன் மறக்காமல் எடுத்து வைக்க வேண்டும். அவர் உண்டு படுத்துவிட்டால் அவனும் படுத்து விடலாம்.

சோகன்ராமுக்கும் மிகவும் களைப்பாக இருந்தது. காலையில் அவன் பாபுவுடன் வெகுதூரம் நடக்க வேண்டியிருந்தது. பாபு வுடன் அவரது வேகத்திற்கு ஈடுகொடுத்து நீண்ட தூரம் நடப்பது அவனுக்குப் பழக்கம் தான் என்றாலும் இந்தப் புது ஊரின் நில அமைப்பும் தட்பவெப்ப நிலையும் மிகவும் சிரமம் தந்தது. அடிக்கொருதரம் நீரோடைகள், நீர்க்குட்டைகள். அவற்றிலிருந்து எழும் நீராவியில் தாவரங்கள் மட்கும் மணமும் நீர்ப்பாசி மணமும் சேற்று மணமும் கலந்து மூச்சடைக்க வைத்தது. யாருமே சட்டை போட வில்லை. தலைமயிரைச் சுருட்டி முன்நெற்றியில் குடுமியாகக் கட்டியிருந்தார்கள். மூக்கின் ஒலியையும் சேர்த்துக்கொண்டு பேசும் அவர் கள் மொழியும் மிக விசித்திரமானது. சோகன்ராம் சீக்கிரமே சலித்துச் சோர்ந்துவிட்டான். பாபு சென்ற இடமெல்லாம் மக்கள் வந்தபடியே இருந்தார்கள். வணங்கிவிட்டு பவ்யமாக விலகி நிற்பவர்கள். மடாதிபதியிடம் பேசுவதுபோல வாய்பொத்தி வினயமாக சில வரிகள் பேசு பவர்கள். சில பெண்கள் பாபுவின் பாதங்களைப் பணிந்ததுமே விம்மிவிம்மி அழ ஆரம்பித்து விட்டார்கள். கைகளால் முகத்தைப் பொத்திய படியும், தலை குனிந்தபடியும் அவர்கள் தவிக்க; போலியான கடுமையுடன் உள்ளூர் காங்கிரஸ்

---

* வீரபத்ரபிள்ளை எழுதிய இக்கதை பிரசுரமாகவில்லை இதன் இரண்டு பிரதிகள் இரண்டுவகை முடிவுகளுடன் கைப்பிரதியில் உள்ளன 1955 ல் எழுதப்பட்டதாக இருக்கலாம்

காரர்கள் அவர்களை விலக்கினார்கள். கட்சித் தொண்டர்கள், உள்ளூர்ப் பிரமுகர்கள் வந்துகொண்டே இருந்தார்கள்.

சாம்பல் நிற சூட் அணிந்த வழுக்கைத் தலை மனிதர் பாபுவின் நேரத்தை நிறைய எடுத்துக்கொண்டார். அவர் பெரிய பதவியோ கல்வியோ உடையவராக இருக்க வேண்டும். அவர் முகத்தில் ஒற்றைக் கண் கண்ணாடி ஒட்டியிருந்தது. அவர் ஆவேசம் கொள்ளும்போது அது விழுந்துவிடும் என்று பட்டது. இடைவெளி இல்லாமல் பேசினார். சோகன் ராமுக்கு ஆங்கிலம் இந்திய உச்சரிப்புடன் பேசப்பட்டால்தான் புரியும். பாபு அதிகமாகப் பேசுகிறவர்கள் முன் மௌனமாகிவிடுவார். கண்களில் ஒரு கூர்ந்த அவதானிப்புப் பாவனையை அப்படியே நிலை நிறுத்திக்கொள்ள அவரால் முடியும். அவரது கரங்கள் இராட்டினத்தில் துல்லியமாக இயங்குவதையும், நூல் சீரான திரியாக நீண்டு சுருண்டு திரள்வதையும் கவனித்தால்தான் அவர் தன்னை விடுவித்துக் கொண்டிருப்பதை அறிய முடியும். ஆனால் வருபவர்களில் வெகுசிலர் – அதிகமும் பெண்களும் குழந்தைகளும் – தவிர பிறர் எப்போதும் சுழன்றபடி இருக்கும் இராட்டினத்தைக் கவனிப்பதில்லை. சிலருக்கு அதன் இயக்கம் அவர்கள் பேச்சைத் தடைசெய்வது போலவும் தோன்றும். முன்பு விதர்ப்பாவில் ஒரு சிறுவன் ''பாபுஜீ நீங்கள் ஏன் இராட்டினத்தைச் சுற்றும்போது பேசுகிறீர்கள், தப்பு இல்லையா?'' என்று கேட்டான். பாபு அன்று வெகுநேரம் வாய்திறந்து உடல் குலுங்க சிரித்துக் கொண்டிருந்தார்.

சூட் அணிந்த கனவானுக்குப் பிறகு டர்பனும், வெண்ணிறக் கோட்டும், பெரிய நாமமும் அணிந்த வயோதிகர் பாபுவிடம் வெகு நேரம் பேசினார். நிதானமான ஆங்கிலத்தில் அவர் ஆத்மாவின் நித்தியத்தன்மை, பரமாத்மா ஜீவாத்மாவிடம் கொள்ளும் உறவின் லீலைகள் ஆகியவை பற்றிப் பேசினார். நடுநடுவே அவர் கேட்ட சில கேள்விகளுக்கு பாபு எளிமையாகப் பதில் அளித்தார். இறுதியில் பாபு ''ஆத்மா பற்றி என்னால் ஏதுவும் சொல்லமுடியாது. எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நீங்கள் கேட்டால் இந்த ராட்டைபற்றி நிறையப் பேச முடியும்'' என்றார். வயோதிகர் திகைப்புடன் ஒரு கணம் மாறிமாறிப் பார்த்தார். அவர் முகம் சிவந்து கண்களில் கோபம் பரவியது. அவர் தன்னைத் தணிவித்துக் கொண்டது சுற்றுமிருந்த கூட்டத்தைக் கண்டதனால் என்று தெரிந்தது. பாபு தண்ணீர் கொண்டு வரும்படிச் சொன்னார். சோகன்ராம் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தபோது வயோதிகர் அவனைக் கூர்ந்து பார்த்தார். முகத்தில் ஆழ்ந்த மடிப்புகள் விழுந்தன. ''இந்த இளைஞர் யார் என்று நான் அறியலாமா'' என்று மெல்லிய உறுதியான குரலில் கேட்டார். சோகன்ராம் தன் மண்டையில் உதிரம் சூடாகக் குமிழியிட்டு எறுவதை உணர்ந்தான். தினமும் பலமுறை நிகழும் சம்பவம். அபூர்வமாகவே அந்த வினா சொல் வடிவம் கொள்கிறது. ஆனால் சோகன்ராமின் உடல் முழுக்கப் பரவி விழித்துக் கூர்ந்திருக்கும் ஒரு நுட்பமான புலன் பிற எண்ணங்களைக்கூடத் தொட்டறிந்துவிடும்.

பாபு அவருக்கு மிகவும் பழகிப்போன சகஜபாவனையுடன் ''இது என் அணுக்கத் தொண்டர், சோகன்ராம்'' என்றார்.

வயோதிகர் மேலும் கண்களை இடுக்கியவராக ''தாங்கள் வைசியர். வைணவர் என்றும் கேள்வி உண்டு. இவரது முக அமைப்பு...'' என்றார்.

சோகன்ராம் எங்கும் பார்க்காத பார்வை ஒன்றை பயின்றிருந்தான். அவனை மொத்தப் பிரபஞ்சமும், மொத்த ஜடமும் பார்த்துக் கொண்டிருந்தது.

''நான் வைணவன். இவர் ஹரியின் மைந்தன்'' என்றார் பாபு.

வயோதிகரின் குரல் மூச்சிளைப்புடன் மேலெழுந்தது ''இதற்கு தர்ம சாஸ்திர அனுமதி உண்டா?''

''தேவையில்லை. அனுமதி ராமனிடமிருந்து எனக்குக் கிடைத்தது.''

''இது வெட்டிப்பேச்சு'' என்றார் வயோதிகர்.

''ராமனிடம் நான் பேசினேன். உங்களால் பேச முடிந்தால் கேட்டு உறுதி செய்துகொள்ளலாம்'' என்றார் பாபு புன்னகையுடன்.

வயோதிகர் கடும்கோபத்துடன் எழுந்து எதுவும் பேசாமல் நடந்தார். பாபு ''ராம் ராம்'' என்றபடி ராட்டினத்தைச் சுழற்றினார். சுருண்டு முறுகிய நேர்த்தியான நூல் வெளிவந்து சீராக வட்டையில் சுற்றுவதை சோகன் ராம் பார்த்தான். பிசிறற்ற அந்த இயக்கம் பார்க்கப் பார்க்க மனதில் அமைதியைக் கொண்டு வந்தது. எழுந்து வெளியே நடக்கும்போது அறைக்குள் உடல்கள் தளர்வுகொள்வதை அறிய முடிந்தது. அறையை விட்டு வெளியே வந்ததும் அவனும் புதிய காற்றுக்குள் இறங்கியது போல உணர்ந்தான். மனதின் ஆழத்தில் இன்னதென்று தெரியாத ஆதுரம் ஒன்று ஏற்பட்டது. அதைத் தவிர்க்க முயல்கையில் பெருகி உடலைக் கனக்க வைக்கும் ஏக்கமாக அது மாறியது.

அந்த ஏக்கம் எப்போதோ முளைத்து வளர்ந்து வளர்ந்து வருகிறது. பார்வானில் அவனது கிராமத்திற்குத் திரும்ப வேண்டும் என்ற ஏக்கமா அது? ஆனால் அங்கு என்ன இருக்கிறது அவனுக்கு? பூமிகார்களின் உண்களில்படாது நடமாட வேண்டும். அப்படியும் வாரம் ஒருமுறை கல்லடியோ செருப்படியோ கிடைத்துவிடும். இரவு பகல் எந்நேரமும் ஜாதிபற்றி. வெளிச்சம் இருக்கும் நேரமெல்லாம் கடும் உழைப்பு. முன்பு கஜமான உரையாடலாகத் தோன்றிய வசைச் சொற்களில் ஒன்றே ஒன்று போதும், இன்று அவனை அந்த இடத்திலேயே உருக்கிச் சாம்பலாக்கிவிட. அவனுடைய உறவினர்களும் சுற்றத்தினரும் இளம்பருவத் தோழர்களும் அங்குதானிருப்பார்கள். மலமும் குப்பையும் காறும் பிய்ந்த குடிசைகளில் தொற்றுநோய்களும் தீரா நோய்களும் நிம்பிய உடல்களுடன் குடி, துணுக்குறச் செய்யும் கொடும் வன்முறை, ரூக்கமான அன்புகள், உறவுகள், ஆங்காரமான பரஸ்பர ரிவேஷங்கள், அறுபடாது நீளும் வம்புகள், பொறாமைகள், கோழைத்

தனங்கள், சதிகள், அங்குள்ள காற்றில் ஒரு மூச்சுகூட இனி அவன் விட முடியாது. அவர்களுடைய உணவில் ஒரு கவளம்கூட இனி அவன் உண்ணமுடியாது. அவர்களிடம் ஒரு சகஜமான புன்னகையைக்கூட இனி பரிமாறிக் கொள்ள முடியாது. படித்த நூல்களும், சென்ற ஊர்களும், சந்தித்த மனிதர்களும் அவனை வெகுதூரம் இட்டுவந்து சேர்த்தாயிற்று. நினைவுகள்கூட திரும்பிப் போய் பாதியில் தேய்ந்து மறையும் தூரம். இனி அவனுக்குத் திரும்பிப் போக ஓர் இடமில்லை. மீண்டும் பழைய சோகன்ராமாக மாறினால் திரும்பிவிடலாம். ஆனால் அது சாத்தியமில்லை. இழந்தது எதை, அந்தப் பழைய சோகன்ராமையா?

ஆறு வருடம்முன்பு தன் கிராமத்திற்கு வெளியே சேரிக்குளத்தின் சேற்றில் மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது புழுதிச் சாலை வழியாக ஒரு சிறு குழு நடந்து வருவதைக் கண்டான். அவர்களை நெருங்கிப் போய் புதர்களில் ஒளிந்தபடி கவனித்தான். தாக்க வருவார்களானால் எதிர்கொள்ளக் கையில் கல் இருந்தது. முகப்பில் வந்த வயதான கரிய மனிதர் – சோகன்ராம் அவரது பெரிய காதைப் பார்த்து பன்றிக்காது என்று சொல்லிச் சிரித்துக் கொண்டான் – அவனை பார்த்துப் புன்னகை செய்து, ''உன் பெயர் என்ன?'' என்றார். சோகன்ராம் அவனுக்கு தெரிந்ததிலேயே மிக ஆபாசமான வார்த்தையை ஆக்ரோஷமாகச் சொல்லிவிட்டு, ''பன்றிக் காதுப்பயலே!'' என்று கூவியபடி ஓடினான். சற்று தூரம் ஓடிய பிறகுதான் எவரும் பின்தொடரவில்லை என்பது தெரிந்தது. எனவே திரும்பி வந்தான். மீண்டும் 'பன்றிக்காது' என்று கூவினான். அந்த வயோதிகர் சிரித்தபடி ''நான் கேட்டதற்கு நீ பதில் கூறவில்லையே, உன் பெயர் என்ன?'' என்று கேட்டார். சோகன்ராம் தனக்குத் தெரிந்த ஆபாச வார்த்தைகளை எல்லாம் படுவேகமாக உதிர்த்தான். ஓடத் தயாராக நின்று காத்திருந்தான். அந்த மனிதர் வாய் திறந்து சிரித்துவிட்டு பேசாமல் நடந்தார். சோகன்ராம் கெட்ட வார்த்தைகளைக் கூவியபடி பின்னால் நடந்தான். அவர்கள் அவனைப் பொருட்படுத்தவில்லை. அவனுக்கு தர்மசங்கடமாக இருந்தது. ஆட்டத்தில் தோற்று விட்டது போலவோ, திருடும்போது அகப்பட்டுக் கொண்டுவிட்டது போலவோ, நிர்வாணமாகப் பெண்கள்முன் நிற்க நேரிட்டது போலவோ. சோகன்ராம் தன் கூச்சலை நிறுத்திக்கொண்டு நகங்களை முரட்டுத்தனமான கடித்துப் பிய்க்க ஆரம்பித்தான். ஒருகம் பிய்ந்து காந்தல் எடுத்தது. அந்தக் காந்தல் உடலெங்கும் பரவியது.

கிராம எல்லையை அடைந்ததும் அந்த மனிதர் திரும்பிப் புன்னகை செய்தார். அவரும் குழுவினரும் கிராமத்திற்குள் நுழைந்து மறைய சோகன்ராம் அங்கேயே நின்றான். வெயில் ஏறி மண்டையைக் கொதிக்க வைத்தது. கால்கள் கடுத்து மரக்கத் தொடங்கின. அங்கிருந்து போய்விட பலமுறை மனதால் முயன்றும் முடியவில்லை. அவர் திரும்பி வரும்போது ஒரு சாணி உருண்டையை வீசிவிட்டு ஓடிவிட வேண்டும் என்று கற்பனை செய்தான். அதற்காகவே அங்கு நிற்பதாக எண்ணிக்

கொண்டான். அல்லது ஒரு பெரிய கல்லைத் தூக்கி அவர் மண்டைமீது
விட்டு ஓடிவிட வேண்டும். வழுக்கை மண்டை உடைந்து ரத்தம்
வழியும். சோகன்ராம் சிரித்துக் கொண்டான். செம்புழுதிப்
பாதையெங்கும் அவன் செவிப்புலன் பரவியிருந்தது. எல்லா ஒலிகளும்
ாத ஒலிகளாகக் கேட்டு பரபரப்புகொள்ள வைத்தன. வெயில் சாயத்
தொடங்கிய பிறகுதான் அவர்கள் திரும்பினார்கள். மிகவும் அமைதியாக,
மிகவும் களைத்துப் போய் நடந்தார்கள். கிராமத்தில் அவர்களுக்கு
வாவேற்போ, தண்ணீரோ கிடைக்கவில்லை என்று தெரிந்தது. அவர்
நெருங்க நெருங்க தன் ஒரு கால் தன்னிச்சையாகப் பதறுவதை
சோகன்ராம் உணர்ந்தான். வயிறு கெட்டித்து மூத்திரம் முட்டியது. அவர்
அவனைக் கண்டதும் புன்னகை புரிந்தார். மெல்லிய குரலில் "உன்
பெயர் என்ன?" என்றார். சோகன்ராம் வாயை அசைத்தான். வாய்
ாத்துப்போய் இருந்தது. அவர் மீண்டும் "உன் பெயர் என்ன" என்றார்.
சோகன்ராம் அடிவயிற்றிலிருந்து ஓர் ஆக்ரோஷம் பொங்கி வந்து
தன்னை உலுக்கியபடி கதறலாக வெளிப்படுவதை அறிந்தான்.
அப்படியே அமர்ந்து கேவிக்கேவி அழுதான். அவர் அவனருகே வந்து
அவன் தலைமீது தன் கரங்களை வைத்தார்.

அன்று அவர்கள் அவனுடைய சேரிக்கு வந்து தங்கினார்கள்.
பரபரப்பும், குழப்பமும், இனம்புரியாத எரிச்சலுமாக சேரி திண்டாடியது.
அவன் அவர் காலடியிலேயே அமர்ந்திருந்தான். அவரது உடலின்
தொடுகையைவிட்டு விலகவேயில்லை. அவரது உடலில் முதுமைக்
குரியசிறு நடுக்கம் இருந்தது. அது அவனுக்கு மிகமிக அந்தரங்கமான ஒரு
உரையாடல் போலிருந்தது. மறுநாள் அவன் குளித்துவிட்டு தீதி கொடுத்த
வேட்டியையும் கட்டிக்கொண்டான். அவர் அவன் தோளில் கைவைத்து
"என்னுடன் வருகிறாயா" என்றார். அவன் தலையசைத்தான். அவரது
கரங்களும் கால்களைப் போலவே பெரியவை, கனமானவை. அவர்
பத்தின் சுமை அவன் தலையை அழுத்தியது.

இந்த ஆறு வருடங்களில் சோகன்ராம் அதிகம் அவரைத் தொட
தோன்றதில்லை. அபூர்வமான தற்செயல் தொடுகைகள்தான். ஆனால்
அவரது தொடுகையை எப்போதும் அவனால் உணர முடியும்.
தெளிவாக அரைவிழிப்பின்போது அதன் அந்தரங்கமான நடுக்கம்,
வெம்மை, கூடவே கனமும். ஏன் அத்தனை கனம் அவற்றுக்கு?
சமயம் அந்தக் கனம் அவனை அழுத்தி இறுக்கி மூச்சுத் திணற
வைக்கும். திணறித் திணறி பயந்து விழித்துக்கொள்வான்.

உடைசி விருந்தாளியும் போனபிறகு தீதி வந்து பாபுவிற்கு உணவு
கொடுத்தாளா என்று கேட்டாள். சோகன்ராம் வாழைப் பழங்களை எடுத்துக்
கொடுத்துவிட்டுப் போனான். அப்போது வெளியே குரல்கள் கேட்டன.
சோகன்ராம் சலிப்புடனும் கோபத்துடனும் எட்டிப் பார்த்தான்.
ஆயுதபாணிகளாக அணிந்த, கரிய, திடமான மனிதர் கரிய இளைஞர்கள்
சிலர் சூழ நின்றிருந்தார். உரத்த குரலில் அவர்கள் பேசினார்கள்.
அவர்களைத் தடுக்க முற்பட்ட சேவாதளத் தொண்டர்களும் உரத்துப்
பேசினார்கள்.

தீதி வெளியே வந்து ''என்ன விஷயம் கணபதி?'' என்று கேட்டாள். ஒருவர் ''பாபுவைப் பார்க்க வேண்டுமாம். பாபு இனி எவரையும் பார்க்க மாட்டார் என்றால் கேட்க மாட்டேன் என்கிறார்கள்.''

''யார் இவர்?''

''இவர் பெயர் அய்யன்காளி. உள்ளூர்த் தலைவர்'' என்றார் கணபதி.

''பாபு மிகவும் களைத்துவிட்டாரே'' என்றாள் தீதி.

அய்யன்காளியுடன் வந்த இளைஞன் ''வணக்கம் அம்மா; என் பெயர் சிண்டன். நாங்கள் வெகுதொலைவிலிருந்து வருகிறோம். திருவிதாங்கூரின் மறு எல்லையில், இரணியல் என்ற ஊரில் இருந்து. அவ்வளவு தூரம் நடந்துதான் வரவேண்டும். இங்கு நாங்கள் வண்டிகளிலும் பொதுவழிகளிலும் நடமாட முடியாது. வயல்வரப்புகள் வழியாக வருகிறோம். அதிகாலையில் கிளம்பியும் இப்போதுதான் வந்து சேர முடிந்தது'' என்றான்.

''அது உங்கள் விஷயம்'' என்றார் கணபதி. ''பாபு மிகவும் களைத்திருக்கிறார் என்று சொன்னது காதில் விழுந்ததல்லவா?''

''ஆனால் பாபு நாளைக் காலை கிளம்புகிறார் என்றார்கள்'' என்றான் சிண்டன்.

''ஆம், நீங்கள் அடுத்த முறை பார்க்கலாம்.''

''எப்போது?''

''சொல்ல முடியாது, எப்படியும் இரண்டு வருடத்திற்குள் வர நேரும்.''

''இரண்டு வருடமா? ஒருவேளை எங்களில் எவரும் அப்போது உயிருடன் இல்லாது போகக்கூடும்'' என்றான் சிண்டன். அங்கு சட்டென்று குளிர் பரவியது போலிருந்தது.

தீதி ''உள்ளே வாருங்கள்'' என்றாள். அதுவரை ஒரு சொல்கூடப் பேசாமல் கரியசிலைபோல நின்ற அய்யன்காளி படியேறினார். அவரது பிரமிப்பூட்டும் உயரமும், தாடை விரிந்த சதுர முகமும், பெரிய தொங்கு மீசையும், வலிமையின் ஒளி நிரம்பிய கண்களும் ஏதோ வரலாற்றுக் கதாபாத்திரம்போல பிரமை கூட்டின. அவர் கையிலிருந்த மூங்கில்தடி முற்றிப் பழுத்து, கைபட்டுத் தேய்ந்து, பொன்னிறமாக இருந்தது. அவரது சீடர்கள் அனைவர் கரங்களிலும் கம்பு இருந்தது. இயல்பாகக் கம்புடன் நடந்தார்கள். கம்பு அவர்கள் உடலின் ஓர் உறுப்பு போலிருந்தது.

சோகன்ராம் ஆர்வத்தைக் காட்டாமல் கணபதியிடம் ''யார் இவர்?'' என்றான்.

"புலையர்தலைவன் அய்யன்காளி" என்றார் கணபதி "பெரிய போக்கிரி. சண்டியன். மூப்பது கொலை செய்திருப்பதாகப் பேச்சு. அய்யன்காளிப்படை என்ற ஒரு துஷ்டக் கும்பல் வைத்திருக்கிறான். அவன் கேட்டதைக் கொடுக்காதவர்களை வெட்டிப் போட்டு கொள்ளையடித்து கொளுத்திவிட்டுப் போய்விடுவான்."

ஒருவர் "பொன்னுதிருமேனியின் நாயர்படை என்னதான் செய்கிறது?" என்றார், கோபத்துடன்.

"அவனுக்கு ரெஸிடென்ட் துரையின் உதவி இருக்கிறதே" என்றார் கணபதி. "கலிகாலம்."

"இங்கே எதற்கு வருகிறான்?"

சோகன்ராம் அறைக்குள் நுழைந்தான். அய்யன்காளி பாபுவின் எதிரே அமைதியாகத் தரையில் அமர்ந்திருந்தார். பிறர் கூடி நின்றனர். சிண்டன் அய்யன்காளியைவிட்டு மரியாதையாகத் தள்ளி அமர்ந்திருந்தான். உரையாடல் நடந்துகொண்டிருந்தது.

சிண்டன் "உங்கள் கருத்தை அறிய விரும்புகிறோம்" என்றான்.

பாபு "அநீதியை நீதியால் எதிர்க்க வேண்டும். கொடுமையை கருணையால், துவேஷத்தை அன்பால். என் மனம் அதைத்தான் சொல்கிறது" என்றார்.

"நாயினும் கேவலமாக நாங்கள் வதைக்கப்படும்போது, எங்கள் பெண்கள் கற்பழிக்கப்படும்போது, எங்கள் குழந்தைகள் அடிமைகளாக்கப்படும்போது, நாங்கள் எப்படி அகிம்சையும் தர்மமும் பேச முடியும்?"

"அகிம்சையும் தர்மமும் வதைபடுபவர்களுக்கும் அநீதி இழைக்கப்படுபவர்களுக்கும் உரிய போராட்ட முறைகள்" என்றார் பாபு.

சிண்டன் கோபத்துடன் எழுந்துவிட்டான் "டேய் மாடா, உடலைக் காண்பிடா மனித தெய்வத்திற்கு."

மாடன் தன் மேலாடையைக் கழட்டினான். சோகன்ராம் பதைப்புடன் அந்த பயங்கரக் காட்சியைப் பார்த்தான். முதுகும் மார்பும் ரத்தமும் சீழும் உலர்ந்து பாளமாக இருந்தன. புண் விரிசல்விட்டு வெடித்து நீர் பரவியிருந்தது. அறையெங்கும் விறைப்பு ஒன்று பரவியது.

"இவனைத் திருவட்டார் கோயிலைச்சுற்றி கரைநாயர்கள் சென்டு முறை மண்தரையில் போட்டு இழுத்தார்கள்" என்றான் சிண்டன். "இவன் செய்த தவறு ஓடிப்போன எருமையைப் பிடிக்க கோயில் வளாகத்தில் நுழைந்ததுதான். அந்தக் கோயிலின் ஆயிரம் எக்கர் நிலத்திலும் நாங்கள் பல்லாயிரம் பேர் தினம் பயிர்வை சிந்தி உழைக்கிறோம். ஆதிகேசவனுக்குப் படைக்கும் சோறு நாங்கள் மிதித்து பிரித்துக் கற்றையிலிருந்து உதிர்த்தெடுக்கும் நெல். ஆனால்..."

பாபு சலனமற்றவராக இருந்தார். அவரது ராட்டை சீராக ஓடி நூலை முறுக்கி நீட்டி வட்டையில் சுற்றியபடி இருந்தது.

''சொல்லுங்கள், அடிபட்டால் பாம்பு கூட தலைதூக்கி சீறி எழுகிறது. கன்றுகூட முட்டவருகிறது. ஆயிரம் வருடங்களாக மனிதப் புழுக்களாக வாழ்ந்து செத்த வம்சம் நாங்கள். எங்களிடம் வந்து அகிம்சை பற்றிப் பேச உங்களுக்கு என்ன யோக்கியதை? அந்தக் கரைநாயர்களை வீடு புகுந்து அடித்தோம். அவர்கள் குலதெய்வத்தின் கோயிலில் மலம் கழித்தோம். அது எங்கள் உரிமை.''

''நீங்கள் செய்தது அவர்கள் செயலுக்குக் காரணம் கற்பிக்கிறது'' என்றார் பாபு. ''வன்முறையே எப்போதும் வன்முறைக்கான நியாயங்களை வழங்குகிறது.''

''உங்கள் மனைவியை நாங்கள் கற்பழித்தால், உங்கள் குழந்தைகளின் குதத்தில் முள்முருக்குக்குச்சியைக் குத்தி ஏற்றினால், அதன்பிறகு எங்களிடம் இப்படி பேச முடியுமா உங்களால்?''

''கண்டிப்பாக பேசுவேன்'' என்றார் பாபு. ''அதில் எனக்கு இம்மியும் ஐயமில்லை. அப்படி ஐயமின்றி உணர்ந்த பிறகுதான் அகிம்சை பற்றிய என் முதல் சொல்லை இன்னொரு மனித உயிரிடம் சொன்னேன். இப்போது என்னுடன் என் மனைவியும் குழந்தைகளும் இல்லை. நான் அனுமதி தருகிறேன். என்னை நீங்கள் அடிக்கலாம், வதைக்கலாம். அதன் பிறகு எனது பிரக்ஞை மாறுகிறதா என்று சோதிக்கலாம்!''

சிண்டன் சட்டென்று குன்றினான். சமாளித்தபடி ''அப்படிச் செய்ய எங்களால் முடியாது என்று உங்களுக்குத் தெரியும்'' என்றான்.

''ஆம்'' என்றார் பாபு. ''ஆனால் உங்கள் தலைவரைப் போன்ற ஒரு மனிதர் விரும்பினால் இமையைக்கூட அசைக்காமல் அதைச் செய்ய முடியும்.'' பாபுவின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை ஏற்பட்டது. அவர் கண்கள் அய்யன்காளியின் கண்களைச் சந்தித்தன. ஆனால் அவர் முகம் உணர்ச்சியின்றி கற்சிலை போலவே இருந்தது.

பாபு தொடர்ந்தார். ''ஆயிரம் வருடம் நீங்கள் கொடுமைப்படுத்தப் பட்டீர்கள் என்றால் அதற்கு முதற்காரணம் நீங்கள்தான். இந்த இழிநிலைக்கு முற்றிலும் தகுதியானவர்களாக இருந்தீர்கள் நீங்கள்.''

இளைஞன் கடும்கோபத்துடன் ஓர் முன் எட்டு எடுத்துவைத்து, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். வெறுப்பினால் விகாரமடைந்த முகத்துடன் ''இதைச் சொன்னதற்கு உங்கள் முகத்தில் நான் காறி உமிழ வேண்டும்''என்றான்.

''அது என் கருத்தை மாற்றுவதில்லை'' என்றார் பாபு. ''அநீதிக்கு அடிமைப்படும் மக்கள் உண்மையில் அநீதியுடன் சமரசம் செய்து கொண்டவர்கள். உங்கள் குலத்தில் மிகப் பெரும்பாலானவர்கள் அந்த வாழ்வுக்குப் பதிலாக மரணத்தைத் தேர்வு செய்திருந்தால் ஒன்று உங்கள் குலம் அழிந்திருக்கும், இல்லை வென்றிருக்கும்.''

அமைதியில் பாபுவின் ராட்டை சீராகச் சுழன்றது.

"சமரசங்களில் வெல்வது நமது பலவீனம். சமரசங்களுக்குப் பிறகு நாம் கோபமும் துவேஷமும் கொண்ட வர்களாகிறோம். வன்முறை அவ்வுணர்வுகளின் வெளிப்பாடுதான். பிறர்மீது மட்டுமல்ல, நம்மீதே அவ்வன்முறை திரும்புகிறது. எந்துபவனின் ரத்தம் விழாமல் வாள் முயாது."

"வாள் இல்லையேல் எங்களுக்கு ரத்தமும் மிஞ்சாது" என்றான் இன்னொரு இளைஞன்.

"உங்கள் எதிரிகளிடமும் வாள்கள் இருக்கின்றன. இன்னும் அதிகமான வாட்கள். இன்னும் பயிற்சி உடைய வாட்கள். அவர்களிடம் இல்லாத ஒரே ஒரு ஆயுதம்தான் உங்களிடம் உள்ளது. அது நீதி. நீதி உங்களை தைரியவான்களாக்கும். அநீதி உள்ளூர அச்சத்தையே ர்ப்பும்." பாபு சொன்னார். அவரது முகத்தில் அபூர்வமான அந்த னவுத் தோற்றம் ஏற்பட்டது. "வன்முறைக்கு நம்மை மாற்றும் சக்தி உண்டு. அது நம் எதிரிகளைப் போன்றவர்களாக நம்மையும் ஆக்குகிறது. அது வெற்றியல்ல. பெரும் தோல்வி. நம்மை மேம்படுத்திக் கொள்வதே உண்மையான போராட்ட முறை."

சிண்டன் "வெற்றுத் தத்துவம்" என்றான். "நடைமுறை உங்களுக்குத் தெரியாது. ஆயிரம் வருடம் அடிபட்டுச் சுருண்டு கிடந்த வம்சம் நாங்கள். அந்த அடிகளின் வலிகள் எல்லாம் சேர்ந்து எங்கள் ஆத்மாக்கள்மீது கோழைத்தனமாக மூடிக்கிடக்கிறது. திரும்பி எழுந்து நாங்கள தரும் ஒரு அடி உண்மையில் செயலாக மாறாத ஓராயிரம் ஆகளின் குழந்தை. அதை மறக்க வேண்டாம்."

"நெய்யூரில் ஒருமுறை ஒரு குறுப்பின் வீட்டை நாங்கள் சாகியபோது அவனது தலைப்புலையன் சொன்னான்: 'அப்படி யட்டும்! அப்படியானால் புலையனின் அடி நாயர்மீது படும்' என்று. சாமி ஐயா, நாங்கள் ஒரு அடி கொடுக்க வேண்டுமானால் மல்லாந்து ருந்த ஆதிகேசவனையும் அனந்த பத்மநாபனையும் மார்புமீது மிதித்து ருத்தாண்ட வேண்டியுள்ளது" என்றான் இன்னொரு இளைஞன்.

"அவர்கள் தூக்கத்தை நீங்கள் ஏன் கலைக்கக் கூடாது? சங்கு ஊதுடன் அவர்களை உங்கள் தரப்பில் நின்று போராடும்படி ஏன் ழைக்கக் கூடாது?"

"அவை பிராமணனின் மலக்குவியல்கள்" என்று கூவினான் ன். "அந்தப் பாவத்தின் துளிகூட எங்கள் விடுகளில் விழக் து."

பாபு மெல்ல வட்டையைக் கழட்டி இன்னொன்றை மாட்டினார். ங்கைக் கொண்டியில் மாட்டி சக்கரத்தை சுழட்டிவிட்டார். அது விர்ர் டதொடங்கியது.

"ரத்த பலி கேட்கிற தெய்வங்கள் எங்களுக்கு உண்டு. வாகனங்கள் இல்லாமல் தரைமீது நிற்கும் தெய்வங்கள். எங்கள் மாடனும் சுடலையும் காடனும் கறுப்பனும் எங்களுடன் வந்தால் போதும்."

"குழந்தையை மார்பில் ஏந்திய தாய் தெய்வங்கள் உங்களுக்கு இல்லையா? அவை வருமா உங்களுடன்?"

சிண்டன் பொறுமை இழந்தான் "இவருடன் என்ன பேச்சு நமக்கு? ஆயிரம் வருடம் பேசிப் பேசியே நம்மை அடிமையாக்கிய வஞ்சகக் கூட்டத்தின் பூசாரி இவர். அய்யா வாருங்கள், கிளம்புவோம்..."

ஆனால் அய்யன்காளி அசையாமல் அமைதியாக இருந்தார். அவர் பார்வையை பாபு சந்தித்தார். இருவர் கண்களும் பேசிக் கொண்டன.

"உங்களுடன் என்னால் பேச முடிகிறது" என்றார் பாபு. "இந்தச் சொற்களாலல்ல. இவைகளை என்னாலேயே முழுக்க நம்ப முடியவில்லை."

அவர் பெருமூச்சுடன் எழுந்தார். அவரது தடி தரைமீது கிடந்தது. அதை பாபு கவனித்தார்.

அவர் கனத்த தணிந்த குரலில் "உங்கள் தர்ம நியாயங்கள் எதுவும் எனக்கு புரியவில்லை" என்றார். "எனக்கு ஆங்கிலம் சரிவர புரிவதில்லை. எந்த மொழியும் முழுக்கப் புரிவதில்லை." அவரது குரலின் கனத்த கார்வைக்கு அவரைப் போலவே கரிய நிறமும் கம்பீரமும் இருப்பது போலப்பட்டது சோகன்ராமுக்கு. "ஆனால் நான் உங்களுக்கு ஒரு வாக்குறுதியைத் தர முடியும். இனி அந்தக் கழி எனக்குத் தேவையில்லை. ஏனெனில் அதன் பலத்தில் நான் இல்லை என்று இப்போது தெரிந்து கொண்டேன். அதற்கு உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். நான் செய்து கொண்ட ஒரே சமரசம் அதனுடன் செய்து கொண்டதுதான். இனி அதுவுமில்லை."

பாபு புன்னகை புரிந்தார்.

"நாம் மீண்டும் சந்திப்போம் என்று தோன்றவில்லை" என்றார் அய்யன்காளி. "ஆகவே உங்களுக்கு கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். வெல்லும் தருணங்களில் இருக்கும் இதே மனவலிமை தோற்கும்போதும், புறக்கணிக்கப்படும்போதும், கொல்லப்படும் போதும் உங்களுக்கு இருக்கவேண்டும். நீங்கள் இதுவரை கேட்ட குரல்கள் எல்லாம் வானத்திலிருந்து வந்தவை. இது பாதாளத்திலிருந்து வரும் குரல். வருகிறேன்."

நிமிர்ந்த தலையுடன் அவர் திரும்பி நடந்தார். பாபுவின் [illegible] நின்றுவிட்டிருப்பதை சோகன்லால் கவனித்தான்.

அய்யன்காளியின் சீடர்கள் குழம்பித் தவித்தார்கள். சிலர் கழிகளை விட்டார்கள். அவர்களைப் பார்த்தபின் பிறரும் கழிகளை தரையில் விட்டார்கள். சிண்டன் மட்டும் தன் கழியை எடுத்து, வினோதமான

இறுக்கத்துடன் தூக்கிப் பிடித்துக்கொண்டான். அவன் நண்பனும் அவனைப் பார்த்தபின் கழியை எடுத்துக்கொண்டான். பிறர் அவர்களையும் அய்யன்காளியையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு தடுமாறி நடந்தார்கள். சிண்டன் கோபமும் வெறுப்பும் கடுமையாகப் பரவிய முகத்துடன் தனித்து நடக்க பிறர் விடுவிடுவென்று நடந்து முன்னே சென்ற அய்யன்காளியைத் தொடர்ந்தனர்.

பெருமூச்சுடன் பாபு ராட்டினத்தை முடுக்கினார். அதன் ஒலியில் ஒரு தாளம் இருந்தது. அதற்கேற்ப நூல் கொடும்பிரிபட்டு அறுந்தது. பாபு அதை இணைத்து மீண்டும் இயக்கினார். மீண்டும் திரிந்து அறுந்தது. அவரது விரல்களுக்கும் ராட்டினத்திற்கும் இடையேயான ஒத்திசைவு பிறழ்ந்துவிட்டதுபோலும். மீண்டும் மீண்டும் மீண்டும் நூல் அறுந்தது. பாபுவின் தலை மிகவும் குனிந்துவிட்டது. தன் அனைத்து சக்தியையும் இராட்டினம்மீது செலுத்த முயன்றார். ஆனால் விரல்கள் நடுங்கின. அவர் முயல முயல நடுக்கம் அதிகரித்தது. பாபு சலித்துப் போய் "ஹே ராம்!" என்று அதை விட்டுவிட்டு விலகினார். அப்போது அவர் முகத்தைப் பார்த்தபோது சோகன்ராமின் உள்ளுக்குள் எதுவோ மீனந்து முறிவது போலிருந்தது. பாபு தீர்மானத்துடன் மீண்டும் ராட்டையை எடுத்தார். தன்னை கடைசித் துளிவரை அவர் திரட்டிக் கொண்டிருந்தார். அந்த அழுத்தத்தைத் தாங்க முடியாது சோகன்ராம் வெளியேறினான். இருட்டு எங்கும் விறைப்பான கரிய திரையைப் போல நின்றது. தன் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டான். உடம்பு அந்த அளவுக்குக் களைத்திருந்தபோதும்கூட மனம் பதைத்தபடி இருந்ததனால் தூக்கம் வரவில்லை.

அறைக்குள் விளக்கு அணையவில்லை. ராட்டினம் தொடர்ந்து சுழன்றது. ஆனால் அந்த ஒலியில் சுருதி கூடவில்லை என்று அவன் அறிந்தான். சிடுக்காகும் அந்த நூல் ஒலியாக மாறி அவனைச் சூழ்வதுபோல, அச்சிடுக்கு தன் சிந்தனையோட்டத்திலும் நிகழ்வது போல, தன்னிலிருந்து அது விரிந்து இருட்டில் பரவி நிறைவது போல... அது இறுகி இறுகி வந்தது. தலைக்குள் ஒரு நரம்பு அறுந்துவிடும் போலிருந்தது. ஓர் உச்ச கணத்தில் அவன் எழுந்து "நிறுத்துடா கிழட்டு நாயே!" என்று கத்தினான். இல்லை கத்தவில்லை. ஒரு கணம் ஆறுதலும் தேறு மின்னதிர்ச்சிபோல ஒரு துடிப்பும் ஏற்பட்டது. 'ராம் ராம்" என்ற ஜபித்தபடி பாய்ந்து எழுந்தான். தன் உடலையும், அந்த இடத்தையும் பந்தவன்போல இறங்கி ஓடினான். தென்னைமரங்கள் காற்றில் டக்க, நிழல்கள் ஆடும் தோட்டத்தில் பலர் தூங்கிக் கொண்டிருந்தனர். ப்பால் கரிய பளபளப்புடன் ஒரு குளம் நெளிந்தது. வானம் சாம்பல் ங்களினாலான பிரவாகமாக உறைந்து கிடந்தது. எங்கோ ஒரு ன்று நிலவு இருக்கிறது. சோகன்ராம் தன் உடம்பின் நடுக்கத்தை ர்ந்தாலும் அதை தவிர்க்க வேண்டும் என்று எண்ணி "ராம் ராம் ராம்" று பிடிவாதமாக ஜெபித்தான். அந்தச் சொல்வரிசை சம்பந்தமின்றி

எங்கோ ஓடி மறைய, மனம் உடைந்து சுழன்று முட்டி மோதிச் செல்லும் அர்த்தமற்ற ஓட்டமாக இருந்தது. வானம், பூமி, ஒளி, நிழல்கள், மணம், ஒலிகள் அனைத்துமாகி, அனைத்திலும் தனித்துத் தவித்திருக்கும் அவள். ஒரு மெல்லிய ரீங்காரமாக சுவர்க்கோழியின் ஒலி அனைத்தையும் இணைத்துப் பின்னி ஒற்றையிருப்பாக ஆக்கியது. ஒரு மெல்லிய நூல் போல ஒவ்வொன்றையும் ஊடுருவிச் சென்றுகொண்டிருந்தது அது. அதனுடன் இணைந்து அவன் பிரக்ஞையும் நீண்டு நீண்டு அனைத்தையும் பின்னி வளைத்துக்கொண்டது. அனைத்தும் அவனைச் சுற்றி மீண்டும் உருக்கொண்டன. மெல்ல அவன் அமைதியடைந்தான். இனி ஒன்றும் இல்லை. எல்லாம் சரியாகிவிட்டது. மீண்டும் மீண்டும் பெருமூச்சுவிட்டான். ஆனால் மனதின் ஏதோ ஓர் அதிஎல்லையில் ஒரு குரல் மெல்லிய பிடிவாதமான முணுமுணுப்பாகத் தன் இருப்புணர்த் தியது. இல்லை, அது மெல்லிய சரடு. மிக மெல்லிய சரடு. மிகமிக மெல்லிய சரடு. ராம் ராம் ராம். சோகன்ராம் கைகூப்பிப் பிரார்த்தனை செய்தான். ஒருபுறம் மனம் நெகிழ்ந்து விரிந்து கரைந்து பரவ, மறுபக்கம் அந்த ரகசியக் குரலின் எச்சரிக்கையும் தொடர்ந்தது. திரும்பிச் செல்லும் போது அந்த ராட்டையின் ஒலி சீரடைந்து விட்டிருக்க வேண்டும் என்று சோகன்ராம் மீண்டும் மீண்டும் வேண்டிக்கொண்டான்.

குறிப்பு:

கேரள தலித் பெருந்தலைவரான அய்யன்காளியின் சுதந்திரச் சித்தரிப்பு இக்கதையில் உள்ளது. 1863-ல் வெங்ஙானூர் என்ற கிராமத்தில் பிறந்த அய்யன்காளி கல்வியறிவு இல்லாதவர். நாராயண குருவால் உத்வேகமூட்டப்பட்டு தீண்டாமைக்கும் சாதிக் கொடுமைகளுக்கும் எதிராகப் போராட ஆரம்பித்தார். 1905-ல் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரகரான சதானந்த ஸ்வாமிகளின் தூண்டுதலின் பேரால் புலையர் மகாசபை என்ற அமைப்பை நிறுவினார். அடிமுறை நிபுணரும் வர்ம வைத்தியருமான அய்யன்காளி தன் சீடர்களைத் திரட்டி உருவாக்கியிருந்த அய்யன்காளிப்படை வன்முறையையே போராட்ட உத்தியாகக் கொண்டிருந்தது. 1937 ஜனவரி 10 தியதிதான் அய்யன்காளி காந்தியை நேரில் சந்தித்தார். அய்யன்காளியை கௌரவிக்கும் பொருட்டு வெங்ஙானூரில் நடந்த பெரும் கூட்டத்தில் காந்தி தலைமை ஏற்றுப் பேசினார். ஆனால் அதற்கு பத்துப் பதினைந்து வருடம் முன்பு ஒரு சந்திப்பு நடந்ததாகக் கூறப்படுகிறது. அந்த சந்திப்புதான் இக்கதையில் கற்பனையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. 1941 ஜூன் 18-ல் காளி மரணமடைந்தார்.

4

புனிதர்களும் மனிதர்களும்

எம்.வீரபத்ரபிள்ளை பி.ஏ.,

அரங்கு: ஒரு ரஷ்யப் புகைவண்டி நிலையத்தின் காத்திருப்பு அறை உக்ரைன் பிராந்தியத்தைச் சார்ந்தது பிரபுக்களுக்காக வடிவமைக்கப்பட்டது ஆனால் மோசமாகச் சிதைந்துவிட்டது. தோல்உறை போடப்பட்ட இருக்கைகள் பிய்ந்து பஞ்சு பறக்கின்றன பலவகையான தட்டுமுட்டுச் சாமான் களும் உடைசல்களும் குவிந்து கிடக்கின்றன பின்புறம் பெரிய கண்ணாடிச் சன்னல். நிறைய விரிசல்களுடன்.

அறையில் ஐந்துபேர் காத்திருக்கிறார்கள் நெடுநேரமாகக் காத்திருப்பவர்கள் போன்ற தோற்றம் ஒருவர் செம்படையின் கர்னல் வயதானவர் சீருடையும் பதக்கங்களும் அணிந்தவர். பதற்றத்துடன் சுருட்டை மென்று துப்பியபடி, புகைபிடித்தபடி இருக்கிறார். அருகே அவரது மனைவி எலிசா எகோரெவ்னா மிக வெளிறிய மெலிந்த முகத்தில் எப்போதும் ஒருவகையான இறுக்கமும் அமைதியும். கழுத்தில் வெள்ளிச் சிலுவை அணிந்திருக்கிறாள். தொடர்ந்து அதைப் பற்றியபடி பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறாள் ஒருவித வெறியுடன் மத நம்பிக்கையைப் பற்றிக்கொண்டிருப்பவள்.

குமாஸ்தா இவான் இவானிச் லாப்கின் அடக்கமான, எங்குமே தன்னைக் காட்டிக் கொள்ளா திருக்கும் திறன்கொண்ட. ஒல்லியான ஆள். மிக அமைதியாக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உட்கார்ந்திருப்பான் அவன் மனைவி லிசவெத்தா இவானினா எளிமையான இல்லத்தரசி. அவள் விரல்கள் எப்போதும் பின்னலாடை பின்னியபடி இருக்கின்றன அவர்கள் குழந்தை தத்யானா துருதுருவென்று எதையாவது செய்தபடி தனக்குள் பேசியபடி இருக்கும் நாலுவயதுப் பெண். பொதுவாக ஒவ்வொரு கதாபாத்திரமும் தனது மன ஓட்டத்தில் ஆழ்ந்திருக்கிறது வேறு இருவர் பேசும் போது பிறர்

• வீரபத்ரபிள்ளையின் கைப்பிரதிகளில் மிகுந்த அடித்தல் திருத்தல்களுடன். தேதிபோடாத தாள்களாக இருக்கும் இந்நாடகம்தான் அவருடைய கடைசிப் படைப்பிலக்கியம் ஒருவேளை அவரது கடைசி எழுத்தாகவும்கூட இருக்கலாம் நீலகண்டபிள்ளை இதை பெற்றுக்கொண்ட தேதி 22 12 1958 வீரபத்ரபிள்ளை இறந்த தேதியை ஒட்டியே வருகிறது. இதை நீலகண்டபிள்ளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிரதி என்று குறித்திருக்கிறார் தாள்கள் சரிவர அடுக்கப் படாததினால் அவருக்கு அப்படித் தோன்றியிருக்கக் கூடும்.

அதை கவனிப்பதில்லை. தத்யானாகூட தன் விளையாட்டினூடாகவே பிறருடன் பேச்சில் ஈடுபடுகிறாள்.

காட்சி தொடங்கும்போது தொலைவில் கண்ணாடிக் கதவால் அழுத்தப்பட்ட மங்கலுடன் மனிதக் கூப்பாடுகள் கதறல்கள் அழுகைகள் சில வேட்டுச் சத்தங்கள் ராணுவ ஊர்திகள் மற்றும் விசில்களின் ஓசைகள். இந்த ஒலியே நாடகத்தின் பிரதான பின்னணி இசை. சந்தர்ப்பத்துக்கு ஏற்ப இது பெருகியும் தணிந்தும் அரங்கை நிறைக்கக் கூடும்)

கர்னல் : (அசௌகரியமாக உணர்ந்தவராக எழுந்து கனைத்து) மணி என்ன ஆகிறது எலிசா? வெகு நேரமாகிறதே.

எலிசா : (பிரார்த்தனையை நிறுத்தாமல்) பத்து மணி தாண்டிவிட்டது.

கர்னல் : (கோபமடைந்து) எப்போது பார்த்தாலும் முகத்தில் இதே மரணக்களை. நீ என்ன பிணமா பேயா? (உரக்க) நான் ஒரு பிணத்துடன்தான் வாழ்கிறேனா?

எலிசா : (பிரார்த்தனையினூடாக) ஆமாம்.

கர்னல் : உன்னைத்தான் சொன்னேன். (எலிசா பிரார்த்தனையைத் தொடர்கிறாள்) சனியன்! பீடை!

(இருளில் ஒரு சிரிப்பு. இருண்ட மூலை ஒன்று குரல் கொடுக்கிறது.)

இருண்ட மூலை : சைபீரியாவிற்கல்லவா போகிறீர்கள் மேன்மை தங்கியவரே. பிணங்களுடன் பேசக் கற்றுக்கொள்வது நல்லதுதான்.

கர்னல் : யார்? யாரது? (கோபமாக எழுந்து) யார் அதைச் சொன்னது?

(இருள் அமைதியாக இருக்கிறது.)

கர்னல் : (ஏளனத்துடன்) பேசியதும் ஒரு பிணம்தானா? கோழைகள். முணுமுணுக்கும் அற்பர்கள்....

(திரும்பி அமர்கிறார். பதற்றத்துடன் சுருட்டை எடுத்தபடி இருட்டை நோக்கித் தலையசைக்கிறார்.)

கர்னல் : கோழைகளின் முணுமுணுப்பை ஒருபோதும் வரலாறு பொருட்படுத்துவதில்லை...

(பின்னணியின் அழுகைக் குரல்கள் வலுக்கின்றன.)

கர்னல் : (கோபத்துடன்) பிசாசுகள். வாயை மூடிக்கொண்டு கவுரவமாகச் செத்துத் தொலைந்தால் என்ன? (புகையை இழுத்துவிட்டபடி) இங்கு எப்படி மனிதர்கள் தூங்க முடியும்?

இருண்ட மூலை : சைபீரியாவில் இது உங்களுக்குத் தாலாட்டாக மாறிவிடும் மேன்மை தங்கியவரே.

கர்னல் : (துப்பாக்கியை உருவியபடி எழுந்து) யாரடா அவன்? கோழை! துரோகி! (டார் டாரென்று சுடுகிறார்.)

(வெளியேயிலிருந்து செம்படைவீரன் ஓடிவருகிறான்)

செம்படை வீரன்: (சல்யூட் அடித்து) என்ன நடந்தது தோழர்?

கர்னல் : (கை நீட்டி) அங்கு... ஒரு துரோகியின் கேடுகெட்ட வாயை முடினேன்....

(அரங்கில் பிறர் ஆர்வமிழந்து தங்கள் உலகுக்குத் திரும்புகிறார்கள் கோடுகள் அவர்களுக்கு மிகவும் பழகியவை)

செ.வீ. : (அவர் சுட்டிக்காட்டிய இடத்துக்கு விளக்கை நகர்த்தி வைக்கிறான் ஒரு மில்லை) தோழர், இங்கா அவன் இருந்தான்?

கர்னல் : (உதாசீனத்துடன்) கோழைப்பயல்... ஓடியிருப்பான்.

செ.வீ. : தோழர், இங்கு யாருமே இருந்திருக்க முடியாது. வேறு இடத்திற்கு நகரவும் முடியாது....

கர்னல் : கோழைப்பயல்... இருட்டு...

செ.வீ. : (அவரை வினோதமாகப் பார்த்தபடி) நான் வருகிறேன் தோழர்.

கர்னல் : சரி. எப்போது முடியும் இந்த ரகளைகள்?

செ.வீ. : தெரியவில்லை தோழர்.

கர்னல் : குளக்கு நாய்கள். கவுரவமாகச் சாகவும் தெரியாத புழுக்கள்....

(வீரன் போகிறான்)

கர்னல் : இருண்ட மூலைகள்! (சுருட்டை மென்று துப்பியபடி) இருண்ட மூலைகளில் ஒளிந்திருக்கிறார்கள்...

இருண்ட மூலை : விசிறிக் காகிதம்போல உன் உலகம் மடிந்து மடிந்து செல்கிறது எகோர்; மூலைகள் பெருகிப்பெருகி வருகின்றன.

கர்னல் : (வெளிறி) பேய்கள், பிணங்கள்...

மைப்கின் : தோழர், ரயில்கள் எப்போது வருமென்று தங்களால் கூற ியுமா?

கர்னல் : வரும். இல்லையேல் நாம் காத்திருக்க வேண்டியதில்லை அல்லவா?

மைப்கின் : ஆம் தோழர்.

கர்னல் : நாம் காத்திருப்பதே அவை வரும் என்பதற்கு ஆதாரம். ரிகிறதா?

மைப்கின் : (பணிவான குழப்பத்துடன்) ஆம் தோழர்.

கர்னல் : இது புரட்சியின் காலகட்டம். ஒவ்வொன்றுக்கும் தடைகள் ம்.

இருண்டமூலை : தடையின்மையே புரட்சி என்று நம்பினார்கள் பழைய மூடர்கள்.

கர்னல் : *(வெறிகொண்டு)* வாயை மூடுடா நாயே...

லாப்கின் : நான் ஒன்றுமே சொல்லவில்லை தோழர். *(பயந்து எழுந்து நிற்கிறான்.)*

கர்னல் : போய் உட்கார். இல்லையேல் சுடுவேன்...

லாப்கின் : *(ஓடிப்போய் அமர்ந்து)* உத்தரவு தோழர்.

(திடீரென்று வேட்டுகள் ஒலிக்கின்றன. அவற்றின் சுடர்கள் பளிச் பளிச் என்று கண்ணாடிச் சன்னலுக்கு அப்பால் அதிர்கின்றன. குழந்தையுடன் ஒரு பெண் ஓடிவருகிறாள். நைந்து கிழிந்த கந்தல் உடைகள். மெலிந்து வெளிறிக் குளிரில் நீலம் பாரித்த முகம். பீதியும் மூச்சிரைப்புமாக திறந்த வாய். விரிந்த விழிகள். கண்ணாடிச் சுவரில் அவளது கரமும் குழந்தைக் கரமும் ஊன்றிப்படிய, பின்புறம் வேட்டுகள் சுடர்ந்து அதிர்கின்றன. குண்டு பாய்ந்து அவள் சரிகிறாள். இரு செம்படைவீரர்கள் அவளை இழுத்துச் செல்கிறார்கள்.

அரங்கில் அனைவரும் எழுந்து பார்த்து நிற்கிறார்கள். எலிசா பிரார்த்தனையில் மீண்டும் மூழ்குகிறாள்.)

கர்னல் : யாரங்கே... என்ன அது?

செ.வீ. : *(உள்ளே ஓடிவந்து வணங்கி)* ஒருசிறு தவறு தோழர். ஒரு குளக்குப் பெண் எப்படியோ காவல் வளையத்தை மீறி ஓடிவந்துவிட்டாள்.

கர்னல் : எப்படியோ என்றால்...

செ.வீ. : கழிவுநீர்க் குழாயினூடாக வந்துவிட்டாள் தோழர். உடனே பார்த்துத் துரத்த ஆரம்பித்துவிட்டோம்.

கர்னல் : கவனம்.

(அமர்கிறார், பிறரும் அமர்கிறார்கள்.)

எலிசா : இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு ஏரோது மன்னனின் படைகளிலிருந்து கர்த்தரும் மேரியும் இப்படித்தான் தப்பியிருக்க வேண்டும்.

கர்னல் : *(உரக்கச் சிரித்து)* இம்முறை பிடித்து சுட்டுத்தள்ளிவிட்டோம் எலிசா...

எலிசா : கழிவுநீர் குழாய் எந்தக் காலத்திலும் உண்டு வரலாற்றில்.

லாப்கின் : சீமாட்டியே *(தயங்கி)* அப்படியானால் வரலாறு என்பது எப்போதும் இதேபோன்ற அகதிக் கூட்டமும் ராணுவமும் மட்டும்தானா?

கர்னல் : *(சிரித்து)* அடடா, தத்துவார்த்தமான கேள்வி. *(மேலும் சிரித்து)* அத்துடன் இந்த கண்ணாடிச் சுவரையும் இதற்குள் இப்படிக்

காத்திருக்கும் நம்மையும் சேர்த்துக்கொள். உருவகம் முழுமையாகி விடும். (திடீரென்று கனத்து) நாமெல்லாம் வெறும் பார்வையாளர்கள்.

இருண்ட மூலை : பார்வையாளர்களாக நடிப்பவர்கள்.

கர்னல் : வாயைமூடு பிசாசே....

தத்யானா : (இழுத்துச் செல்லப்படும் குளக்குப் பெண்ணைப் பார்த்து) அம்மா அது பேய்தானே?

லாப்கின் : சும்மாயிரு தாத்யா.

தத்யானா : பேய்தான். அதன் முகம் வெள்ளையாக இருந்தது. ரொம்பப் பாவமான பேய். (யோசித்து) ஏன் அதை இழுத்துச் செல்கிறார்கள் அப்பா? அவர்கள் யார்?

எலிசா : அவர்கள் தேவதூதர்கள். குழந்தை, நம் மீட்பரையும் மாதாவையும் சொர்க்கத்துக்கு இட்டுச் செல்கிறார்கள்.

கர்னல் : சரியாகச் சொன்னாய் எலிசா. ஏரோது மன்னனிடமிருந்து தப்பி இரண்டாயிரம் வருடம் அவர்கள் உலகில் அலைந்து திரிந்தார்கள். இப்போது நாங்கள் கண்டுபிடித்து உரிய இடத்திற்கு பத்திரமாக அனுப்பிவிட்டோம்.

இருண்ட மூலை : உரிய இடங்களில் உரியவை அமர்ந்து விடுவதே சோஷலிசம் எகோர்...

கர்னல் : (வெறிகொண்டு) வாயை மூடு சைத்தானே... சுட்டுத் தள்ளிவிடுவேன்...

தத்யானா : அவர் சுவரைப் பார்த்துப் பேசுகிறார்... அப்பா அவருக்குப் பைத்தியமா?

கர்னல் : (மனம் தளர்ந்து) ஓ.... (பின்னால் சாய்ந்து) களைப்பாக இருக்கிறது.

தத்யானா : அப்பா அவருக்குப் பைத்தியமா?

லாப்கின் : வாயைமூடு தாத்யா. அம்மாவிடம் போ...

தத்யானா : (கிசுகிசுப்பாக) யாரிடம் பேசுகிறார்?

லிசவெத்தா: தாத்யா இங்கே வா.

(தத்யானா அம்மாவிடம் போய் அமர்கிறாள்.)

லிசவெத்தா : என்ன அதிகப் பிரசங்கம் தாத்யா, நீ நல்ல பெண்தானே?

தத்யானா : ரொம்ப ரொம்ப நல்ல பெண். ஏழைப்பெண் சின்ட்ரெல்லா மாதிரி நல்ல பெண்.

லிசவெத்தா: அப்படியானால் பேசாமல் இரு!

தத்யானா : நல்ல பெண்கள் பேசக் கூடாதா?

லிசவெத்தா : *(சலித்து)* ஓ... உன்னிடம் பேசவே பயமாக இருக்கிறது.

தத்யானா : அம்மா அந்தக் கையடையாளங்களைப் பார்த்தாயா?

(எல்லாரும் திரும்பிப் பார்க்கிறார்கள். கண்ணாடிச்சுவரில் அன்னை, குழந்தை ஆகியோரின் ரத்தம் படிந்த கையடையாளங்கள் ஒளியில் மின்னுகின்றன.)

கர்னல் : அதை அழியுங்கள் யாராவது.

லாப்கின் : இந்தப் பக்கமிருந்து அதை அழிக்க முடியாதே தோழர்.

கர்னல் : ஒவ்வொருமுறை வெளியே பார்க்கும்போதும் இது தெரியும். இதன் வழியாகவே நாம் வெளியே பார்க்க முடியும்.

லாப்கின் : அழிந்துவிடும் தோழர். பனி கொட்டுகிறதல்லவா?

கர்னல் : பார்ப்போம்...

(அனைவரும் அதைப் பார்த்தபடி, பார்க்கமலிருக்க முயன்றபடி, அமர்ந்திருக்கிறார்கள்.)

லிசவெத்தா : *(சலித்து)* கடவுளே! எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது...

(மெதுவாக இனிய இசையொன்று ஒலிக்க ஆரம்பிக்கிறது. அரங்கின் ஒளி மாறுபடுகிறது.)

தத்யானா : பாட்டி, யார் புல்லாங்குழல் வாசிப்பது?

எலிசா : கேட்கவில்லையே...

தத்யானா : பூவின் மணம். என்ன பூ அது?

எலிசா : எனக்குத் தெரியவில்லையே அம்மா.

தத்யானா : பாட்டு! யாரோ பாட்டுப் பாடுகிறார்கள். ரொம்ப நல்ல பாட்டு...

எலிசா : எனக்குத் தெரியவில்லையே!

தத்யானா : போ. நீ பொய் சொல்கிறாய்.

(வெளிச்சம் அதிகரிக்கிறது. தூய வெண்ணிற உடையுடன், வெண்சிறகுகளும் மலர்களினாலான மணிமுடியும் அணிந்த எட்டு வயதுச் சிறுவன் வருகிறான். ஒரு கையில் தூபக் குடுவை, மறுகையில் புனித நீர்க் குப்பி.)

தத்யானா : அய்யோ அவனுக்கு சிறகு இருக்கிறது... வெண்புறா மாதிரி சிறகு...

எலிசா : யாரிடம் பேசுகிறாய் கண்ணே?

தத்யானா: இதோபார் பாட்டி, சிறகுள்ள அண்ணா... ஏழு புனிதர் கதையில் படம் போட்டிருக்கிறதே அதேமாதிரி அண்ணா.

லிசவெத்தா : *(மன்னிப்புக் கோரும் குரலில்)* அவள் அப்படித்தான், சம்பந்தமின்றி உளறுவாள்.

எலிசா: குழந்தைகள் எங்கும் விருப்பமான உலகைப் படைத்துக் கொள்கிறார்கள். *(பிரார்த்தனையில் ஈடுபடுகிறாள்)*

தத்யானா : நீ கப்ரியேல் தேவன்தானே? எனக்குத் தெரியும். நான் படம் பார்த்தேன்.

கப்ரியேல் : *(தத்யானாவிடம்)* தள்ளி நில்லுடி மக்குக் கழுதை, குப்பியைத் தட்டிவிட்டுவிடுவாய். *(கையிலிருந்த தூபத்தாலும் புனித நீராலும் அப்பகுதியை சுத்தம் செய்கிறான்.)*

தத்யானா : *(பின்னால் நடந்தபடி)* நீ கப்ரியேல் அண்ணாதானே?

கப்ரி: ஆமாம். நீதானே தத்யானா? அக்டோபர் பதினெட்டு; சைபீரியாவில் குவெல்லோப் கிராமம்?

தத்யானா : அங்கு என்ன?

கப்ரி: அங்கு தான் நீ... *(தவிர்த்து)* ஒன்றுமில்லை. இரு, ஒரு சிறிய வேலை இருக்கிறது, முடித்துவிட்டு பேசலாம்.

தத்: என்ன செய்கிறாய்?

கப்ரி : இது புனித தூபம், புனித தீர்த்தம். இப்பகுதியைச் சுத்தப்படுத்துகிறேன்.

தத்யா : *(தரையைப் பார்த்து)* அழுக்காகத்தானே இருக்கிறது? சுத்தமே ஆகவில்லையே.

கப்ரி : *(சிரிப்பை அடக்கி)* மெல்லப் பேசுடி கழுதை. மேலே கேட்டுவிடப் போகிறது. இதெல்லாம் ரொம்பப் பழையகாலச் சடங்குகள். பிரயோஜனமே இல்லை. சொன்னால் கேட்டால்தானே? *(குரலைத் தாழ்த்தி)* எப்படிக் கேக்கும். காது மந்தம். கண் தெரியாது. கிழம்.

தத்யானா : யார்? *(ரகசியமாக)* யார்?

கப்ரி: *(ரகசியமாக)* பிதா. பரலோகத்தில் இருக்கும் பரமபிதா என்பீர்களே அதுதான்.

தத்யானா : பாவம் தாத்தா. அவரை நான் பார்க்க முடியுமா?

கப்ரி: அக்டோபர் ஏழு. இன்னும் கொஞ்சம் நாள்தானே. நான் வந்து உன்னைக் கூட்டிச்செல்கிறேன்.

தத்யானா : அங்கே எப்படி இருக்கும்?

கப்ரி: ரொம்ப கும்மாளமாக இருக்கும். ஏகப்பட்ட குழந்தைகள். இந்தக் கிழம்தான் அவ்வப்போது கூப்பிட்டு வைத்து அறிவுரை

கூறுகிறேன் என்று கழுத்தை அறுக்கும். மற்றபடி பெரியவர்கள் அங்கே வரமுடியாது.

தத்யானா : உண்மையாகவா? அப்பா அம்மா?

கப்ரி: யாருமே வர முடியாது. *(சிரித்து)* இந்தக் கிழம்கூட அடிக்கடி வராது. பிள்ளைகள் பின்னால் வந்து கிள்ளிவிட்டு ஓடிப்போகும்.

தத்யானா : பாவம் தாத்தா. தாத்தாவையெல்லாம் கிள்ளவே கூடாது. கெட்ட குழந்தைகளை மட்டும்தான் கிள்ள வேண்டும்.

கப்ரி: கிழத்துக்குப் பெரிய கொம்பன் என்று நினைப்பு. இவ்வளவு பெரியு தாடி அதற்கு. எனக்குத் தாடி இருக்கே, உனக்கு இருக்கா என்று ஆட்டி ஆட்டிக் கேட்கும். குழந்தைகளுக்கு எங்காவது தாடி முளைக்குமா? அதுகூடத் தெரியாது. மக்கு ஜென்மம். தாடி மட்டும் இருந்தால் போதுமா?

தத்யானா : ரொம்ப நீளமான தாடியா?

கப்ரி: பின்னே? கால்வரை வரும்.

தத்யானா : உண்மையாகவா?

கப்ரி: சத்தியமாக...

தத்யானா : நானும் வருகிறேன் அண்ணா.

கப்ரி: இன்னும் கொஞ்ச நாள்தானே *(விரல்விட்டு எண்ணி)* பத்து நாள் *(தடுமாறி)* இல்லை பதினொரு நாள் *(தலையைச் சொறிந்து)* பத்து நாள்தானே... ஆமாம், பத்துநாளில் நான் வருவேன். உன்னைக் கூட்டிப்போவேன்.

தத்யானா : பொய். நீ ஏமாற்றுகிறாய்.

கப்ரி: இல்லைடி மக்கு. உண்மையிலேயே வருவேன். அப்போது நீ சைபீரியாவில் இருப்பாய். உனக்கு கடுமையாக சுரம் அடிக்கும். வைக்கோல் படுக்கையில் படுத்துக்கொண்டு வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பாய். நான் வெண்பனி வழியாக சறுக்கி இறங்கிவருவேன். பதினொரு நாள்... இல்லை. *(கணக்குப் போட்டுக் குழம்புகிறான்)*

தத்யானா : உனக்கு எண்ணவே தெரியவில்லையே! பெரியவனாக வேறு இருக்கிறாய்.

கப்ரி: எனக்கு கணக்கே தெரியவில்லை தாத்யா! எண்ணும்போது விரல்கள் தப்புத்தப்பாக மடங்கி விடுகின்றன.

தத்யானா : நீ எத்தனாம் வகுப்பு?

கப்ரி: அங்கே பள்ளிக்கூடமே இல்லையே.

தத்யானா : உண்மையாகவா *(மகிழ்ந்து, ஐயம்கொண்டு)* பொய். நீ பொய் சொல்கிறாய்.

கப்ரி: சத்தியமாக. அது ஒரு பெரிய பூந்தோட்டம். அங்கு எல்லாமே உண்டு. பூக்கள், மிருகங்கள், பறவைகள். ஆனால் விஷமுள்ளதோ கடிக்கக்கூடியதோ இல்லை. இஷ்டப்படி சுற்றி அலைந்து நமக்கு விருப்பமானதை நாமே படிக்கவேண்டியதுதான். அதனால் அங்கே எல்லாருக்கும் அவரவர் கைவிரல்கள் அளவுக்குத்தான் எண்ணத் தெரியும். சில ஆறுவிரல் குழந்தைகள் உண்டு. அவர்கள்தான் கணக்கில் கெட்டிக்காரர்கள்.

தத்யானா : நானும் வந்துவிடுவேன். இங்கே எல்லாரும் பெரியவர்கள். சாமி சிலைகள் மாதிரி உம்மென்று இருக்கிறார்கள்.

கப்ரி: சரி, நான் வருகிறேன்.

தத்யானா : இப்போது எதற்கு வந்தாய்?

கப்ரி: இங்கே ஒரு புனிதர் மரணமடையப் போகிறார். இதோ இந்த பெஞ்சில். அவரை இங்கிருந்துதான் நான் அழைத்துப் போவேன். இடத்தைப் புனிதப்படுத்த வந்தேன்.

தத்யானா : புனிதர் என்றால் தாத்தாவா?

கப்ரி: ஆமாம், ஒன்று தாத்தா இல்லாவிட்டால் குழந்தை. இந்தத் தாத்தா குழந்தைகளுக்காக நிறையக் கதைகளெல்லாம் எழுதியிருக்கிறார். லேவ் தல்ஸ்தோய் என்று பெயர்.

தத்யானா : ஆமாம், ஆனால் அவர்தான் ரயில் நிலையத்தில் ரொம்பநாள் முன்பு இறந்துவிட்டாரே.

கப்ரி: இறக்கவில்லை. இத்தனை நாள் ஊர்ஊராக துறவியாக அலைந்து திரிந்தார். ஒரு புதிய கிறிஸ்துவ மதத்தை உருவாக்கி மக்களிடையே பரப்ப முயன்றார்.

தத்யானா : எதற்கு?

கப்ரி: வேறு வேலையில்லை. யாருமே கிழத்தைப் பொருட்படுத்த வில்லை. மனமுடைந்துபோய் சரி, புனிதராக ஆகிவிடுவோம். அப்படியாவது ஜனங்கள் நமது பேச்சைக் கேட்கிறார்களா பார்ப்போம் என்று இங்கு வந்திருக்கிறார். இதோ வருகிறார்.

தத்யானா : புனிதரை கும்பிட வேண்டும்...

கப்ரி: ஆமாம். இந்த பெஞ்சு புனித இடமாகிவிடும். அவருக்கு சிலையெல்லாம் வைப்பார்கள். பாவம் கிழம், உயிரோடு இருக்கும் புனிதருக்கு நான் புனிதர் இல்லை என்று கூறும் சுதந்திரமாவது உண்டு. சரி, எனக்கு நேரமாகிறது. (தயங்கி) உனக்கு 'உள்ளே வெளியே' ஆட்டம் தெரியுமா?

தத்யானா : ரொம்ப நன்றாகத் தெரியும்.

கப்ரி: (மலர்ந்து) அங்கே அத்தனை குட்டிகளையும் நான் ஜெயித்து விட்டேன். நீ வந்துவிட்டால் நாம் ஆடலாம்.

தத்யானா : என்னை யாருமே தோற்கடிக்க முடியாது.

கப்ரி: வவ்வவ்வே. நான் இதுவரை தோற்றதே இல்லை.

தத்யானா : நான் உன்னைத் தோற்றுத் தூளியாட வைப்பேன்.

கப்ரி: வவ்வவ்வே, போடி.

தத்யானா : நீ போடா.

கப்ரி: போடி சப்பை மூக்கி.

தத்யானா : போடா கோழிச்சிறகா, வெள்ளைக் கொக்கு...

கப்ரி: *(திணறி)* போடி போடி போடி வவ்வவ்வே... *(கிள்ளிவிட்டுப் பறந்து போகிறான்.)*

தத்யானா : ஆ, கிள்ளிவிட்டுப் போகிறான். தெண்டத்தடியா தெண்டத் தடியா...

எலிசா: என்னம்மா கண்ணு!

தத்யானா : கிள்ளிவிட்டுப் போகிறான் பாட்டி. கோழிச்சிறகன்.. கொக்கன்...

லிசவெத்தா: கொஞ்ச நாளாகவே இப்படித்தான் இருக்கிறாள் அம்மணி.ரொம்ப பயமாக இருக்கிறது.

எலிசா : குழந்தைகள் அப்படித்தானிருக்கும். நீ என்னிடம் வா கண்ணே.

கர்னல் : *(சலிப்புற்று எழுந்து)* ஓ எத்தனை சலிப்பு மிக்க இரவு. பைத்தியம் பரவுகிறது. எங்கும் பைத்தியக்காரர்கள் நிரம்பிவிட்டார்கள். *(கோபத்துடன்)* இந்த குளக்குகளின் வாய்களைக் கட்டி ரயிலேற்றினால் என்ன? எதற்கு இப்படிக் கூப்பாடு போடுகிறார்கள். *(சலிப்பும் கோபமுமாக)* ரயில் எப்போது வரும்?

லாப்கின் : எனக்கு எப்படித் தெரியும் தோழர்?

கர்னல் : யாருக்கும் தெரியாது. யாருக்கும் எதுவும் தெரியாது. எங்கும் தெளிவு என்பதே இல்லை.

இருண்ட மூலை : தெளிவில்லாதவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு பூரண ஆயுள்.

கர்னல் : *(பதறி)* யாரடா அது? முன்னால் வந்து பேசு. முணுமுணுக்காதே...

தத்யானா : *(களுக் என்று சிரித்து)* அந்தத் தாத்தா எப்போதும் சுவரிடம்தான் பேசுகிறார்.

கர்னல் : வாயை மூடு (கோபத்துடன்) அடங்காத குழந்தைகள், செத்து உறைந்த மனைவிகள். மட்கிப் போன சேவகர்கள்... (தலையை உதறி) ஓ... நரகம்! நரகம்!

(கிரீச்சென்று கதவு திறந்து ஒரு தளர்ந்துபோன கிழவர் தள்ளாடியபடி வருகிறார் அலையும் துறவி. தலை நடுங்குகிறது. திரிதிரியாக வயிற்றைத் தொட்ட தாடி. அழுக்கடைந்த கிழிந்த உடை. ஒரு காலத்தில் மிக ஆஜானுபாகுவாக இருந்தவர் இப்போது கனத்த எலும்புகளிலிருந்து தசைகள் தளர்ந்து தொங்கும் கூன்விழுந்த உடல். கண்களை மறைக்கும் நரைத்த புருவம்.)

துறவி: (தள்ளாடி வந்து) கிறிஸ்துவுக்குத் துதிகள் உரித்தாகுக. நான் சற்று அமரலாமா?

லிசவெத்தா : தாங்கள் இங்கு அமர வேண்டும் தந்தையே.

துறவி: (அமர்ந்து) நன்றி குழந்தை. உனக்கு என் ஆசி. (கால்களை நீட்டி) அப்பாடா, வந்து சேர்ந்துவிட்டேன். (தளர்ந்து சரிந்து) இதுதான் அந்த இடம். அந்த பெஞ்ச். என் உடலுக்கு அது நன்றாகத் தெரிகிறது.

லிசவெத்தா : தாங்கள் எந்த ஊருக்குப் போகவிருக்கிறீர்கள் தந்தையே?

துறவி : வெகுதூரம். எத்தனை தூரம் என்று தெரியவில்லை.

லிசவெத்தா : அங்கு யார் இருக்கிறார்கள்?

துறவி : என் தந்தை. என் உறவினர்கள்.

லிசவெத்தா: உங்கள் தந்தையா? (புன்னகைத்து) நீண்ட ஆயுள் கொண்ட குடும்பம் போலிருக்கிறது.

துறவி : மரணமேயில்லாத குடும்பம். (சிரிக்கிறார்.)

(கதவு மிகப்பலமாகக் கிரீச்சிட்டு வேகமாகத் திறந்து அதிர்கிறது முற்றிய போதையில் தள்ளாடியபடி ஒரு கிழவர் உள்ளே வருகிறார். கிழிந்துபோன பழைய உடை. சிறிய உடல். முகத்தில் சிதறிய பரவிய தாடி. யாரையோ தேடுகிறார். துறவியைப் பார்த்ததும் போதையில் கைநீட்டி சுட்டிக்காட்டுகிறார். அது அவருக்கே அவர் காட்டிக்கொண்டது. துரிதமான காலடிகளுடன் வந்து அருகே பெஞ்ச். விளிம்பில் அமர்ந்து. குழறிய குரலில் உடனே பேச ஆரம்பிக்கிறார்.)

வந்தவர் : நீங்கள்தானா? உள்ளே நுழையும் பாதத் தடங்களைத்தான் பார்த்தேன்; பனியில். பெரிய பாதங்கள். நான்... என்னைத் தெரிகிறதா?

துறவி : (அடையாளம் கண்டு முகம் மலர்ந்து) நீங்கள்தானா? சூதாடி.

சூதாடி : ஆம் நான்தான். நான் போகுமிடங்களிலெல்லாம் உங்கள் காலடிகளைக் காண்கிறேன். ஆனால் சந்திக்க முடிந்ததேயில்லை. இப்போது, இறுதியாக.

துறவி : ஆம், இறுதியாக. *(பெருமூச்சுடன்)* என் மனம் குலையும் தருணங்களிலெல்லாம் உங்களுடைய போதைச் சிரிப்பு தொலைவில் கேட்பது போலிருக்கும்...

சூதாடி : *(பரபரப்புடன்)* உங்களைச் சந்தித்துவிட்டேன்... நான் ஒரு கேள்வி கேட்கவேண்டும் உங்களை.

துறவி : சூது முடிந்துவிட்டதா?

சூதாடி : முடிந்துவிட்டது. இனி பணயம் வைக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆனால் *(எழுந்து தீவிரம்கொண்டு)* எல்லாவற்றையும் தோற்ற பிறகு ஒன்று தெரிந்தது. தோற்பதற்குச் சமானமாக சிலவற்றைப் பெற்றும் வந்திருக்கிறேன். சூதாடியின் காலிச் சட்டைப் பைகளில் நிரம்பியிருப்பது என்ன? ஒவ்வொன்றும் இல்லாமலான பிறகு இப்பிரபஞ்சத்தில் எஞ்சியிருப்பது எதுவோ அது. என்னால் அதன் கனத்தைத் தாங்க முடியவில்லை. இதை வைத்து எந்த சூதாட்டத்தை நான் ஆட முடியும்? இதை எப்படி நான் இழக்க முடியும் *(கரங்களை உரசியபடி நடந்து)* வாழ்நாளெல்லாம் உடைமை என்பது சூதுப் பணயம் என்றே பொருள் கொண்டு வந்திருக்கிறேன்.

துறவி : நான் எப்படி உங்களுக்கு உதவ முடியும் என்றே தெரியவில்லை. என் வாழ்நாள் முழுக்க ஒவ்வொன்றையும் சொல்லாக மாற்றிவிட முயன்றேன். இப்பிரபஞ்சத்தை முழுக்க அப்படி மாற்றிவிடக் கனவு கண்டேன். ஆனால் நம்மிலிருந்து பிரியும் ஒரு சொல் தானிருந்த காலி இடத்தை நம்மில் விட்டுச் செல்கிறது.

சூதாடி : ஒரு விமரிசகன் எழுதினான், உங்களுக்கு சொல் ஒரு பிரார்த்தனை, எனக்கு ஒரு சூதாட்ட நாணயம் என்று...

துறவி : ஆம். விக்டர் ஃபெலின்ஸ்கி. முழு மூடன். ஆனால் அதை அறியாமலே இறந்துபோகும்படி ஆசியளிக்கப்பட்டவன்.

சூதாடி : சூதாட்ட மேஜைமீது பணயமாக வைக்கப்பட்ட நாணயம் மௌனமாக, உக்கிரமாகப் பிரார்த்தனை புரிவதை கவனித்திருக்கிறேன்.

துறவி : *(புன்னகைத்து)* ஆம், பிரார்த்தனைகள் ஒவ்வொன்றும் இறைவனுடனான சூதாட்டங்கள் என்று நானும் அறிவேன்.

தத்யானா : *(ஊடே புகுந்து)* தாத்தா நீங்கள்தான் சொர்க்கத்துக்குப் போக வந்திருக்கும் புனிதரா?

துறவி : ஆம் கண்ணே.

தத்யானா : யார் இவர்?

சூதாடி : நரகத்திற்குப் போகப்போகும் புனிதர்.

தத்யானா : நரகத்தில் பள்ளிக்கூடம் உண்டா? நரகமா, சொர்க்கமா, எது நன்றாக இருக்கும்?

துறவி : நரகத்தில் கொடும் துயரங்கள் உண்டு குழந்தை. அதனால் அங்கு இறைவனும் இருப்பார். சொர்க்கத்தில் எல்லாவிதமான போகங்களும் உண்டு. அங்கு சாத்தான் அப்போகங்கள் மீது நின்று நிரசனம் செய்வான். (குனிந்து தத்யானாவை அணைத்து) நீ எங்கே போக விரும்புகிறாய்?

தத்யானா : அம்மா பிரார்த்தனை செய்தபிறகு சொர்க்கத்துக்குப் போவதாகச் சொல்வாள். (யோசித்து) நான் எங்கே போவது? நான்தான் பிரார்த்தனையே செய்வதில்லையே; வேறு குழந்தைகளைப் பற்றித் தானே நினைப்பேன். (மலர்ந்து) நான் குழந்தைகளின் சொர்க்கத்துக்குப் போவேன். அங்கு கடவுளும் சாத்தானும் எல்லாம் குழந்தைகளாக மாறினால்தான் வரமுடியும். இரண்டு பேரையுமே நான் 'உள்ளே வெளியே' விளையாட்டில் தோற்கடிப்பேன். (சிரிக்கிறாள்) இரண்டு பேரும் தோற்றுப்போய்விடுவார்கள். ரொம்ப அழுவார்கள்... ஆளுக்குப் பத்து தோப்புக்கரணம்.

துறவி : என் கண்ணே... (உணர்ச்சி தீவிரத்தில் அவருக்கு வழக்கமான நெஞ்சு வலிப்பு ஏற்பட்டு ஒரு கையும் வாயும் இழுத்துக்கொள்கின்றன) என் தேவதையே, இளவரசியே... (கண்ணீருடன் அவள் தோளை அணைத்து முத்தமிடுகிறார்)

தத்யானா : நீ பயந்தாங்குள்ளித் தாத்தா. அழுகிறாய் பார்...

துறவி : (குழந்தையை தலைமீது கைவைத்து ஆசி அளித்து) நீ வானம் போன்ற பெண் அம்மா. ஒளி மறையாத வானம் (சிரிப்பில் முகம் கனிய) உனக்கு நடாஷாவை தெரியுமா?... கிட்டியை?

துறவி : (நினைவு கூர்ந்து. உணர்ச்சியுடன் முரட்டுத்தனமாக அவளைத் தன் பக்கமாகத் திருப்பியபடி) உனக்கு நெல்லியைத் தெரியுமா?... சோனியா?

தத்யானா : அவர்கள் எல்லாம் என் தோழிகள். மாஸ்கோவில் இருக்கிறார்கள். அங்கே நாங்கள் பூங்காவில் விளையாடுவோம்.

துறவி : (மனமுருகி) விளையாடுங்கள் அம்மா... முடிவில்லாமல். இந்த பூமி முழுதும் உள்ளவரைக்கும் விளையாடுங்கள். உங்கள் சிறுகால்கள் மிதித்தால் மரத்துப்போன இந்தப் பூமிக்கு உயிர் வரவேண்டும். புத்தம் புதிய ஒரு உலகை நீங்கள்தான் பெற்றெடுக்க வேண்டும்.

விசுவெத்தா : (எழுந்து வந்து) தத்யானா வா இங்கே (மன்னிப்புக் கோரும் குரலில்) மன்னிக்க வேண்டும் தந்தையே, குழந்தை சற்று அதிகப் பிரசங்கி, செல்லமாக வளர்த்துவிட்டோம்.

துறவி : (மிதமிஞ்சிய பரவசமும். போதையின் வெறிப்புமாக) அன்பில் முகங்களால் மட்டுமே இந்த உலகம் அவளிடம் உரையாட

விசுவெத்தா : (விசுவெத்தாவிடம்) எங்கு செல்கிறாய் குழந்தை?

லிசவெத்தா : வெகுதூரம், தந்தையே. சைபீரியாவிற்கு. அங்கு இவருக்கு வேலை மாற்றலாகியுள்ளது.

துறவி : பிரார்த்தனை செய்தபடி இரு.

லிச : ஆம் தந்தையே. நான் எப்போதுமே பிரார்த்தனை செய்தபடி இருப்பேன். பின்னல் வேலை செய்யும்போது ஒவ்வொரு முடிச்சுக்கும் ஒரு முறை மீட்பரை எண்ணுவேன். என் கைவிரல்கள் மனமாக மாறிவிடும்.

துறவி : அதுதான் நம் அன்னையர் காட்டிய வழி. தங்கள் தூய கண்ணீரால் பின்னிய உடைகளை அணிவித்து குழந்தைகளை வளர்த்தார்கள்.

லிச : *(அடிபணிந்து)* தங்கள் ஆசி தந்தையே.

துறவி : கிறிஸ்து உன்னை ஆசீர்வதிப்பார்.

கான்ஸல் : *(அசௌகரியமடைந்து)* அங்கே என்ன பேச்சு? *(கிழவர்களிடம்)* உங்களைப் பார்த்தால் பைத்தியங்கள் போலிருக்கிறதே, இங்கே எப்படி வந்தீர்கள்?

துறவி : எங்களுக்கு அனுமதி உள்ளது.

கான்ஸல் : யார் தந்த அனுமதி?

துறவி : மேலிடம்.

கான்ஸல் : *(தணிந்து)* மன்னிக்க வேண்டும் மூத்த தோழர். புரட்சியின் படை வீரன் என்ற முறையில் நல்லெண்ணத்தால்தான் கேட்டேன். தங்கள் பயணம் வெல்க.

(வேட்டுச் சத்தம். கண்ணாடி ஒளிர்கிறது. ஓர் உயிர்வதை அலறல் ஒலித்து ஓய்கிறது.)

சூதாடி : *(உடல் பதற எழுந்து)* என்ன? என்ன? *(அந்த கையடையாளங்களைப் பார்க்கிறார்)* ஆ... அவை என்ன?

துறவி : சிலுவைகள். *(மனம் கசந்து சிரித்து)* நூற்றாண்டுகளுக்குமுன் நம் ஆத்மாவின்மீது ஒரு சிலுவையின் பாரம் ஏற்றி வைக்கப்பட்டது. இப்போது சிலுவைகள் மலையெனக் குவிகின்றன.

சூதாடி : என்னால் இதைப் பொறுக்க முடியாது. நான்... *(எழுந்து கிளம்புகிறார்.)*

துறவி : உம்மால் அங்கு போக முடியாது. இந்தக் கண்ணாடிச்சுவரை நீரும் நானும் தாண்ட முடியாது.

சூதாடி : ஏன்?

துறவி : ஏனெனில் இது நம் ஞானம். (மீண்டும் கசப்புடன் சிரித்து) ஞானமென்பது இதுதான். கற்சுவர்கள் அனைத்தும் கண்ணாடிச் சுவர்களாக மாற, உலகம் வெட்டவெளியாகும் நிலை. அவ்வெட்ட வெளியின் நடுவே தனிமையின் சிறையில் நாம் அடைபடுகிறோம்.

சூதாடி : அபத்தமான உருவகம். (குரல் ஓங்க) நான் என்ன செய்ய வேண்டும் இப்போது? என் உடம்பும் ஆத்மாவும் எரிகின்றன.

துறவி : எரியவிடும். அந்த நெருப்பே நமது ஆத்மாவிற்கு ஒளி.

சூதாடி : (கடும் கோபத்துடன்) என் ஆத்மா இருளில் அலையட்டும். சேற்றில் மட்கட்டும். (நரம்பு நோயாளிக்குரிய கிரீச்சிட்ட குரலில்) ஒளியை வெறுக்கிறேன். ஒளி ஒரு சாபம்.

துறவி : நீர் இன்னமும் சூதாடிதான். கையில் பணயமாக இன்னமும் ஸ்மிஞ்சியுள்ளன.

சூதாடி : (தணிந்து, சோர்ந்து அமர்கிறார்.) உண்மை. அதனால்தான் எனக்கு நிம்மதியில்லை. என் முடிவு நிகழவும் இல்லை. சொல்லுங்கள், நான் என்ன செய்ய வேண்டும்?

துறவி : எனக்கு ஏதும் தெரியவில்லை.

சூதாடி : எதற்கு இங்கு வந்தீர்கள்? உங்களுக்கு ஒரு வழி தெரிந்திருக்கிறது. அது என்ன? அதை அறியவே நானும் இங்கு வந்தேன்.

துறவி : ஓர் உள்ளுணர்வின் கட்டளை. தெரியுமல்லவா வோலாவோ மலை நிலையத்தில் 1910-ல் இதேபோல ஒரு பெஞ்சில் நான் அமர்ந்திருந்தேன். மரணம் மிக அருகாமையில் இருந்தது.

சூதாடி : அது வரலாறு.

துறவி : அப்போது என் அருகே ஒருவர் வந்து நிற்பதை உணர்ந்தேன். வெளிறிய ஆடைகள் என்னை உரசின. அவர் தன் இனிய குரலில் என்னிடம் மகனே என்னுடன் வருகிறாயா என்றார். ஆம் என்றேன். அவருடன் வருவதற்காகவே யாஷ்னா பல்யானாவையும் பண்ணை யையும் துறந்தேன். என் நூல்களையும் உலகப் புகழையும் துறந்தேன். நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கிடக்கிறேன் என்றேன். அவர் ஏமாற்றம் கொள்வது தெரிந்தது. அவரைக் கவரும் பொருட்டு என்ன சொல்வது என்று நான் குழம்பிக்கொண்டிருக்கும்போதே அவர் விலகிச் சென்றுவிட்டார். நான் எழுந்து வெற்று வானைப் பார்த்து சுடுகண்ணீர் விட்டேன். பின்னர் உறைந்த விரிநிலங்களில் அலையத் தொடங்கினேன்.

சூதாடி : (அவருக்கு மிகவும் பழக்கமான அந்த குரூரமான கூர்மையுடன்) நானும் தியாகமும் துர்நாற்றம் வீசும் அழகிய மலர்கள்.

துறவி : (அந்நிலையிலும் புண்பட்டு) பியோத்தர்.... (சமாதானமடைந்து) உண்மைதான்.

சூதாடி : அதை நீங்கள் இழந்து விட்டீர்களா?

துறவி : இங்கு அது தெரியவரும்.

எலிசா : தூயவர்களே, ஒன்று கேட்கலாமா?

கர்னல் : எலிசா நீ வாயைமூடு.

எலிசா : (உதாசீனம் செய்து) புனிதர்களே, நான் பெரும்பாவி, படிப்பற்றவள். மனம் ஒன்றி ஒரு கணம்கூடப் பிரார்த்தனைபுரிய முடியாதவள். ஆனால் என் ஆத்மா வேகிறது. என் மனமெங்கும் வலி நிரம்பியுள்ளது. சொல்லுங்கள். இதெல்லாம் எதற்கு? இந்த மானுட அழிவு, எண்ணத் தொலையாத இந்தத் துக்கம்...

கர்னல்: தோழர்களே, இவள் சில சமயம் துரோகியின் சொற்களை எதிரொலித்துவிடுகிறாள். எலிசா யெகோரெவ்னா, உனக்கு எத்தனை ஆயிரம் முறை கூறுவது இது ஒரு யுகப் பிறப்பின் தருணம். வலியும் ரத்தமும் இன்றிப் பிரசவம் இல்லை. மாபெரும் புரட்சிக்குப் பிறகு சமூகத்தை ஒழுங்கு செய்யும் பிரம்மாண்டமான பணி நடைபெறுகிறது. சில அழிவுகள் தவிர்க்க முடியாதவை.

எலிசா : சொல்லுங்கள் தந்தையரே. இந்த உதிரத்திற்குப் பொறுப்பேற்பவர்கள்யார்? (கோபத்துடன்) நமது குழந்தைகள், இன்னும் பிறக்காத நமது குழந்தைகள், இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் இல்லையா? அவர்களுக்கு நாம் விட்டுச் செல்வது இந்தப் பாவப் பெருஞ்சுமையா? (வெறிகொண்டு. படிப்படியாக நரம்பு நிலைகள் பதறி) இந்தக் கண்ணீர், இந்த சாபங்கள், ரத்தம்... (குரல் கிரீச்சிட) இந்த ரத்தம்! இதெல்லாம் கடைசியில் எங்கள் வயிற்றில்தான் வந்து படிய வேண்டுமா? (வயிற்றைப் படீரென்று அறைகிறாள்.)

(அந்த ஒலியில் அறையில் இருக்கும் அனைவரும் திடுக்கிடுகிறார்கள் எலிசா கேவிக்கேவி அழுகிறாள்.)

கர்னல் : அவளுக்கு நரம்புப் பதற்றம் உண்டு தோழர்களே...

துறவி : நான் பிரார்த்தனை புரிகிறேன் அம்மா.

சூதாடி : (எழுந்து ஆவேசமாக) நான் பொறுப்பேற்கிறேன் அம்மா. இந்தப் பாவத்திற்கு பதிலாக நான் என் உயிரையும் ஆத்மாவையும் பணயம் வைக்கிறேன்.

துறவி : இன்னொரு சூதுப்பலகை கிடைத்துவிட்டது உமக்கு.

சூதாடி : வாயை மூடும். உமது பிரார்த்தனை ஓர் அழுகிய உடல். அதன்மீது வரலாற்றின் ராணுவங்களும் அகதிக் கூட்டங்களும் நடந்து செல்கின்றன. எஞ்சுவது உமது வீங்கிச்சிவந்த கர்வம். உமது

பிரார்த்தனைக்கு எதிர்முனையில் அந்த நாற்றமடிக்கும் கர்வம் அமர்ந்து மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

துறவி : *(வாயடைந்துபோய்)* இருக்கலாம். ஆம், அதுவே உண்மையாக இருக்கலாம். ஆனால் எனக்கு வேறு வழியில்லை.

சூதாடி : *(குரூரமாக)* நீர் ஏன் சிலுவை ஏறக்கூடாது?

துறவி : உயிர்த்தெழ முடியாதவர்கள் சிலுவையில் ஏறக்கூடாது.

சூதாடி : என்னை விடப் பெரிய சூதாடி நீர். கருணையை வைத்துப் புனிதத்துக்கு ஆடினீர். இதோ மரணத்தை வைத்து நிரந்தரத்துவத்திற்கு ஆடுகிறீர்.

துறவி : *(உடல் நடுங்க)* உமது வருகையின் நோக்கம் இப்போது புரிகிறது. *(மண்டியிட்டுக் கண்ணீருடன் பிரார்த்தனை புரியத் தொடங்குகிறார்)*

சூதாடி : எனக்கும் புரிகிறது. நான் பார்த்ததிலேயே பெரிய சூதாட்டத்தை இதோ காணப்போகிறேன். பிரார்த்தனை, கண்ணீர், தியானம். காய்கள் உருளட்டும்.

(துறவி கண்ணீர் கொட்ட, பிரார்த்தனை செய்கிறார்)

தத்யானா : அவர் இரவுணவு சாப்பிடவில்லையே, பிறகு ஏன் பிரார்த்தனை செய்கிறார்.

சூதாடி : அவரது இரவுணவு வரலாற்றுடன். அதன் விசேஷ விருந்தினர் மாளிகையில், சக புனிதர்களுடன் அமர்ந்து. ரத்தம் போன்ற மது. வேக வைக்கப்பட்ட இதயங்கள். தேனில் ஊறிமிதக்கும் துயரம் நிரம்பிய கண்கள். பதற்றத்தில் பிணைத்துக்கொண்ட பொரித்த விரல்கள். ஓ... எத்தனை குரூரமான உணவு. இவன் மனிதனல்ல. மனிதர்கள் கோழைத்தனத்தால் கண்மூடிக்கொள்கிறார்கள். இவன் புனிதன். அகந்தையால் கண்களை மூடிக் கொள்பவன். *(கோபத்துடன்)* புனிதர்கள்... சொற்களினூடாக உலகுக்குப் போதையூட்டி பேரழிவுக்கு வழிவகுக்கும் துரோகிகள்.

லிலிவெத்தா : தந்தையே, உங்களுக்குப் பிரார்த்தனையில் நம்பிக்கை இல்லாமலிருக்கலாம். நீங்கள் ஒருவேளை... *(தயங்கி)* ரகசிய வழிபாட்டாளராகக்கூட இருக்கலாம்.

சூதாடி : ஆமாம். ரகசிய வழிபாட்டாளன்தான். எனது இறைவன் சாத்தான். அவனது குரல் தெள்ளத்தெளிவானது. அவனிடம் கண்ணீர் இல்லை. பதப்படும் சொற்களும் இல்லை.

லிலிவெத்தா : உங்கள் இறைவனை நீங்கள் வணங்குங்கள். அவரை நிந்திக்காதீர்கள்.

சூதாடி : தன்னை வணங்க உத்தரவிடுபவனல்ல எனது கடவுள். பிறரது வேடங்களை, கண்ணீரின் திரைகளை, பிரார்த்தனையின் கீழ்மையைக் கிழித்து வீசவே அவன் உத்தரவிட்டிருக்கிறான்.

லிச : எனக்குப் புரியவில்லை. அவர் யாருக்கு என்ன தீங்கு இழைத்தார்...?

சூதாடி : அதோ அந்த கண்ணாடிச் சன்னலில் தெரியும் கையடையாளங்கள்... அவற்றுக்கு அவர் என்ன பதில் கூறுகிறார்? அந்த ஏழைகள் செய்த பிழை என்ன? இவரும் இவரது மூதாதையரும் சொன்னவற்றை அப்படியே நம்பியது மட்டும்தான். இப்போது அந்தச் சொற்கள் எல்லாம் நீர்க்குமிழிபோல உடைந்து மறைவதை அவர்கள் நிராசையுடனும் ஆங்காரத்துடனும் அறிகிறார்கள். நீதி, கருணை, தியாகம், அன்பு... தூ... (ஒங்கித் தரையை உதைத்து) அவற்றின்மீது அவர்கள் ஆத்மாக்கள் காறி உமிழ்கின்றன. (ஒங்கி கைகளை மார்மீது அடித்து, வெறியுடன் வலிப்புடன் மேடையில் நடந்து சுழன்று) அவர்கள் வாட்களை நம்பியிருக்க வேண்டும். அட, மண்ணிலிருந்து கருங்கற்களைப் பொறுக்கி அவற்றை நம்பியிருக்க வேண்டும். அவை திடமானவை, பௌதீகமானவை. அவை மாயைகளல்ல.

லிச : (நடுங்கியபடி) ஐந்தையே, தாங்கள் கட்டற்ற நதி போலிருக்கிறீர்கள். எனக்குப் பயமாக இருக்கிறது.

சூதாடி : ஏன் பயம்? பயம் என் மீதல்ல. அந்தத் துவாலையைக் கீழே போடு. ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு முடிச்சாகப்போட்டு அத்துவாலையால் இவ்வுலகை மூடிவிட நினைக்கிறாய். இதோபார் உனது ஆயிரம் பல்லாயிரம் துவாலைகளால் இந்தக் கையடையாளத்தை அழித்துவிட முடியுமா?

லிச : ஓ... மீட்பரே, என்ன இது? (தலையைப் பற்றிக்கொண்டு குனிகிறாள்.)

சூதாடி : நீ அசடாகவோ வெகுளியாகவோ வேடமணிய வேண்டாம். பெண்ணே, நான் சூதாடி. இந்த உலகின் சூதாட்டங்களின் உள்ளோட்டங்களையெல்லாம் அறிந்தவன். அந்தத் துவாலை ஒரு சூதாட்டம். ஒரு முடிச்சை நீ போடுகையில் மறுமுடிச்சை உன் மனதில் போடுபவன் எதிர்முனைச் சூதாடி.

லிச : (கோபமடைந்து) நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! (அவள் உடல் குலுங்குகிறது. விசும்பி அழுகிறாள்.)

கர்னல் : இது சற்று அத்துமீறிவிட்டது. (சூதாடியிடம்) தோழர், தாங்கள் சற்று அத்துமீறிவிட்டீர்கள். ஒரு சக மனிதனின், குறிப்பாக பெண்களின் கவுரவத்தைக் குலைக்க உங்களுக்கு உரிமை இல்லை.

சூதாடி : அதுதான் என் வேலையே. கவுரவங்களைக் குலைத்தல்.

கர்னல் : உம்மை இனி இங்கு அனுமதிக்க முடியாது. நீர் வெளியேறலாம். இது தகுதியுடையோர் தங்கும் அறை.

இருண்ட மூலை : தகுதி அக்கண்ணாடியின் கனத்தால் தீர்மானிக்கப் படுவது.

கர்னல் : என்ன? *(வெறிகொண்டு)* என்னையே கிண்டல் செய்கிறாயா? மூடப்பதரே *(ஓங்கி சூதாடியை அறைந்து, பிடித்து இழுத்து வெளியே தள்ளி, தலையை சாத்தி)* கேடு கெட்ட கிழவன். கூளம். செத்தைக் கூளம்.

லாப்கின் : ஆமாம், மேன்மை தங்கிய தோழர். அனைவரையும் பெரும் பாவிகளென உணர வைத்துவிடுகிறான்.

கர்னல் : இம்மாதிரி குப்பைகளை அள்ளி வீசி இந்தப் பூமியை சுத்தம் செய்வோம்.

இருண்ட மூலை : ஆனால் அவர்களே மண்ணுக்கு எரு.

கர்னல் : என்ன சொன்னாய்?

லாப்கின் : நான் ஏதும் சொல்லவில்லையே ஐயா...

கர்னல் : சொல்லவில்லையா? *(வெறுப்புடன் விழித்துப் பார்த்து)* வாயைக் காவலில் வை. இந்நாட்களில் ஒரு புற்றுநோய்ப் புண்ணைவிட ஆபத்தானது அது.

லாப்கின் : ஆம் தோழர். நான் அறிவேன்.

இருண்ட மூலை : *(சிரித்து)* பேசாத வாய் கீழிறங்கி இதயத்திற்குப் போய்விடுகிறது.

கர்னல் : *(எரிச்சலின் உச்சத்தில் திணறி, பின்பு தளர்ந்து)* முணுமுணுக்கும் கூப்பர்கள்! பைத்தியங்கள்! *(அமர்ந்து)* பைத்தியங்களின் உலகம்...!

(தூவி பிரார்த்தனை செய்கிறார்)

[illegible] : நறுமணம்! பாட்டி அது என்ன பூ?

[illegible] : என்ன மணம்?

[illegible] : பூமணம்!

(பெரியேல் அவசர அவசரமாக வருகிறான். கையில் ஒரு பெரிய வெண்ணிற [illegible])

[illegible] வந்துவிட்டாயா *(ஓடிப் போய்ப் பிடித்து கிள்ளி)* கிள்ளிவிட்டா [illegible]...?

பெரியேல் கள்ளிநில்லு குட்டி. எனக்கு வேலை இருக்கிறது.

தத்யானா : என்ன வேலை?

கப்ரி : வேறு என்ன? புனிதர்களை அழைத்துச் செல்வதுதான். இந்த அசட்டுக் கிழங்கள் ஏன் அங்கு வரவேண்டும். அங்கேயும் கூடிக்கூடி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும். இங்கே இன்னொன்று இருந்தே எங்கே?

தத்யானா : யார் கோபக்காரத் தாத்தாவா?

கப்ரி : ஆமாம்.

தத்யானா : அவரைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள்.

கப்ரி : ரொம்ப நல்லது. அதை நான் சைபீரியாவில்தான் சந்தித்து கூட்டிச் செல்ல வேணடும்; தூக்குமேடையிலிருந்து. *(ஒரு தாளை உருவுகிறான்.)*

தத்யானா : என்ன அது?

கப்ரி : மீட்புப் பத்திரம். இதைப் படிக்க வேண்டும்.

தத்யானா : எதற்கு?

கப்ரி : சடங்குதான். வேறு வேலை இல்லை. நீ சிரிக்கக் கூடாது. எனக்கும் சிரிப்பு வரும் பிறகு.

தத்யானா : சிரிக்கவில்லை. *(சிரிப்பை அடக்குகிறாள்.)*

கப்ரி : சிரிக்காதே. கிள்ளுவேன்.

(தியானிக்கும் துறவியின் நெற்றியை மலரால் தொட்டு எழுப்புகிறான்.)

துறவி : *(சிலிர்த்து, உடல் விதிர்விதிர்க்க எழுந்து)* ஆ... என் தேவனே நீதானா?

கப்ரி : *(படிக்கிறான்)* எழுக! உங்கள் நேரம் வந்துவிட்டது. சொர்க்கத்தின் பொன்னொளிர் வாசல்கள் உங்களுக்காகத் திறக்கவிருக்கின்றன. மண்ணுலகின் மாந்தர் நினைவில் இக்கணம் ஒரு மகத்தான தருணமாக என்றென்றும் நிலைப்பதாக.

துறவி : *(அவன் கரங்களைப்பற்றி முத்தமிட்டு)* என் வாழ்வு நிறைவு பெற்றது. நெடுங்காலம் என் கனவின் உச்சங்களில் நான் விழைந்த தருணம். ஆனால்...

கப்ரி : *(படிக்கிறான்)* லேவ் தல்ஸ்தோய் எனும் நீ உன் பிதாவிற்கு என்றும் பிரியமானவனாக இருந்தாய். அறிதலும் அறிந்ததைத் துறத்தலுமாகக் கழித்த நூற்றியிருபது வருட வாழ்வில் ஒவ்வொரு நாளும் ஒருமுறையேனும் உன் பிரக்ஞையின் ஊசல் ஆடி மேலெழுந்து உன் பிதாவின் பாதங்களைத் தொட்டு மீண்டது. இறுதியில் இதோ ஞானமெனும் படிகளில் ஏறி ஞானமின்மையின் தூய்மையை அடைகிறாய். உன் பிதாவின் கருணை இதோ உன் சிரத்தை வருடுகிறது.

மண்ணில் உன் பணி முடிவடைந்தது. விண்ணில் உன் ஆத்மா ஒரு நறுமலராக விரியவிருக்கிறது. ஆமென்.

துறவி : ஆனால்... (சஞ்சலத்துடன்) தூயனே, என் இதயம் வலிக்கிறது. என்னுள் நிறைவும் இன்பமும் இல்லை. இதோ இந்த இரு அடையாளங்கள். இவை மட்டுமே இப்போது என்னில் மிஞ்சியுள்ளன.

கப்ரி : உன் பிதாவின் அரண்மனைக்கு வருக. (தோளைத்தொட்டு எழுப்புகிறான். அவர் அவனைப் பின்தொடர்கிறார். அவர் உடல் மட்டும் பெஞ்சு மீது கிடக்கிறது.) வருகிறேன் தத்யானா. அங்கே பிள்ளைகளிடம் உன்னைப் பற்றிச் சொன்னேன். உனக்குப் 'புதிய முயல் பழைய முயல்' பாட்டு தெரியுமா என்று தான்யா கேட்டாள்.

தத்யானா : தெரியுமே (உற்சாகமாக) புதிய முயல் பழைய முயல். பூவைத் தின்னும் குட்டிமுயல். புல்லைத் தின்னும் பெரியமுயல்....

கப்ரி : தான்யா ரொம்ப நல்ல பெண். நிறைய பாட்டு தெரியும் அவளுக்கு. அவளுடன்தான் நான் விளையாடுவேன். நடாஷா கெட்டவள். நான் அவளுடன் காய். நீயும் காய்விட்டுவிடு, என்ன?

தத்யானா : ஏன்?

கப்ரி : நீ என் கட்சிதானே?

தத்யானா : அந்த நடாஷா என்ன செய்வாள்?

கப்ரி : அப்புறமாகச் சொல்கிறேன். இதோபார் கிழம் முசுமுசு என்று அழுகிறது. கொண்டு சேர்த்தால்தான் நிம்மதி.

(துறவி அந்தக் கண்ணாடிச் சன்னலைப் பார்த்து கண்ணீர் விட்டபடி போகிறார்.)

எலிசா : (துறவியின் உடலைப் பார்த்து) என்ன ஆயிற்று அவருக்கு? (உற்றுப் பார்த்து) கடவுளே (எழுந்து தொட்டுப் பார்த்து) அய்யோ...!

லிசவெத்தா : நிஜம்மாகவா? (கண்களில் நீர் தளும்புகிறது. சிலுவை போட்டுக்கொள்கிறாள்)

கர்னல் : பிணங்கள். பிணங்களைப் பார்க்காமல் ஒரு நாள்கூடத் தாண்டுவதில்லை.

எலிசா : கடவுளே இது என்ன? (துறவியின் தலைமீதிருந்து ஒரு வெண்ணிற மலரை எடுத்து) இதைப் பார்த்தீர்களா!

கர்னல் : ஏதாவது பூசண மலராக இருக்கும்.

லிச : நான் இதுவரை இப்படியொரு மலரைப் பார்த்ததேயில்லை. என்ன அழகு! என்ன தெய்வீகமான மணம்?

எலிசா : இது எப்படி வந்தது இங்கு?

தத்யானா : இது அவன் கொண்டு வந்தது. கப்ரியேல் அண்ணா.

லிச : யார்?

தத்யானா : கப்ரியேல் அண்ணா! வெண்ணிறமாக அங்கி போட்டு பெரிய சிறகுகளுடன் இருந்தானே?

லிச : உளறாதே கழுதை!

எலிசா : இல்லை. அவள் எதையோ பார்த்திருக்கிறாள். இந்த மலர்... ஆம் ஞாபகமிருக்கிறது. இதை நான் ஃபெலினியின் ஓவியத்தில் பார்த்திருக்கிறேன். இது தேவமலர். புனிதர்களின் ஆத்மாவை சொர்க்கத்திற்குத் தொட்டெழுப்பிச் செல்ல தேவதூதன் இதை எடுத்து வருவான்.

லிச : அப்படியானால் *(சட்டென்று தத்யானாவைப் பற்றி அணைத்து)* ஐயோ என் குழந்தை! அவள் மட்டும் ஏன் அதைப் பார்க்கிறாள். அவள்...

எலிசா : குழந்தைக் கண்களுக்கு மட்டும்தான் தெரியுமோ, என்னவோ?

லிச : இல்லை அம்மணி. என் ஆத்மாவிற்குத் தெரிகிறது. அய்யோ *(குழந்தையை இறுக அணைத்து)* என் உள்மனதில் ஒரு பதற்றம் இருந்தபடியே இருக்கிறது. இவளைப் பார்க்கும் போதெல்லாம் என் வயிறு பதைபதைக்கிறது. என் குழந்தை... *(அழுகிறாள்.)*

எலிசா : ஏன் தேவையின்றி பயப்படுகிறாய்? இதோ நம் முன் புனிதர் சொர்க்கத்திற்குச் சென்றிருக்கிறார்... எகோர்.

கர்னல் : அவர் புனிதரில்லை. புனிதர்களை எங்கள் கருத்தியல் அனுமதிப்பதில்லை.

இருண்ட மூலை : *(உரக்கச் சிரித்து)* புனிதர்கள் இல்லாது பொன்னுலகு இல்லை தோழர்.

கர்னல் : வாயை மூடுடா பழிகார நாயே.

எலிசா : நாம் கொண்டாட வேண்டும். நம் கண்முன் இதோ ஒரு அற்புதம் நிகழ்ந்துவிட்டிருக்கிறது. யாராவது மாதா கோயிலுக்குச் செய்தி தெரியுங்கள். இதோ இந்த பெஞ்சு... இந்தத் தருணம்... *(மனம் பொங்கி)* ஓ தேவனே! எத்தனை உன்னதம்!

(ஒவ்வொருவரும் பரவசமடைகிறார்கள். சடலத்தின் முன் மண்டியிட்டு வணங்குகிறார்கள். பிரார்த்தனை செய்கிறார்கள். கர்னலைத் தவிர லிசவெத்தாவும் எலிசாவும் அழுகிறார்கள்.)

தத்யானா : தாத்தா ஏன் நாற்றமடிக்கிறார்?

லிச : யார்?

தத்யானா : இந்தத் தாத்தாதான். அவர் உடம்பு நாறுகிறது.

லிச : வாயை மூடு! அதிகப் பிரசங்கிக் கழுதை.

லாப்கின் : இந்த அறை பழையது. எலிகள் செத்திருக்கலாம்.

எலிசா : நாற்றமா? நறுமணமல்லவா வீசுகிறது? தேவமலர்!

தத்யானா : அது இல்லை பாட்டி. இந்தத் தாத்தாவின் நாற்றம்.

எலிசா: அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசாதே. போ அந்தப்பக்கம்.

தத்யானா : தாத்தாதான் நாற்றமடிக்கிறார்.

எலிசா : லிசவெத்தா, உனக்கு ஏதேனும் தெரிகிறதா?

லிச : இல்லையே.

எலிசா : வேண்டுமென்றே சொல்கிறாள்.

கர்னல் : (தயங்கி) சிறிதளவு நாற்றம் ஏற்பட்டிருக்கிறதோ என்று சந்தேகமாக இருக்கிறது.

எலிசா : வாயை மூடுங்கள். நீங்களெல்லாம் நாத்திகப் பாவிகள். அழுகி நாறுவது உங்கள் ஆத்மாதான்.

கர்னல் : உன் நாத்திகத்தை இந்தப் பிணம் போக்கிவிடுமென்றால் சரி.

எலிசா : வாயை மூடுங்கள்! (கோபத்தில் நடுங்குகிறாள்)

லாப்கின் : சிறிய நாற்றம்தான்.

லிசவெத்தா : லாப்கின், உங்கள் எஜமான விசுவாசம் இங்கு தேவையில்லை.

கர்னல் : நாற்றம் தாங்க முடியவில்லை.

(நாற்றம் பரவுகிறது முகங்களிலும் உடல்களிலும் அதைத் தவிர்க்கும் பாவனைகள். புறக்கணிக்கும் எத்தனங்கள் கர்னல் விசிறிக்கொள்கிறார் தத்யானா மூக்கைப் பிடித்துக்கொள்கிறாள்)

லாப்கின் : வயோதிக உடல்.

கர்னல் : நோயுற்றிருக்கக் கூடும்.

லிச : அவரது ஆத்மா தூய்மையாக இருந்தது.

எலிசா : ஆம். ஆத்மாவே புனிதமானது.

லிச : அம்மணி, எனக்கும் நாற்றம் தாங்க முடியவில்லை.

எலிசா : மனப்பிரமைதான். இந்த அழுகிநாறும் அறை, நம்மை பித்துப் பிடிக்க வைக்கிறது.

லிசவெத்தா : ஆம். கடவுளே, என்ன நாற்றம்!

எலிசா : எல்லாம் பிரமை.

(நாற்றம் அனைவரையும் மூழ்கடித்தாயிற்று விசிறுகிறார்கள் வலைகிறார் உரிமாறுகிறார்கள்)

தத்யானா : அம்மா வாந்தி வருகிறது.

(கதவு கிரீச்சிட்டுத் திறக்கிறது. சூதாடிக் கிழவர் மேலும் குடித்து, மேலும் தறிகெட்டு, தள்ளாடி வருகிறார். தடுமாறி, ஒரு பெருத்த ஏப்பம்விட்டு, அறை நடுவே நின்று, சிரமப்பட்டுக் கண்களைத் திறந்து பார்க்கிறார்.)

சூதாடி : என்ன இங்கு அமைதி? *(திருப்தியுடன்)* நான் உலகிலேயே பெரிய நாவலாசிரியன் பியோத்தர் தஸ்தயேவ்ஸ்கி. நான் வரும்போது அப்படித்தான் அமைதி தேவை. *(ஏப்பம் விட்டு)* வோட்காவில் தண்ணீர் சேர்க்கிறார்கள் அயோக்கியப் பதர்கள். *(மூக்கைச் சுளித்து)* என்ன நாற்றம் அது? பாசிபிடித்த புராதனக் கட்டிடங்களின் நாற்றம். *(சுற்றுமுற்றும் பார்த்து)* புதைந்த நகரங்களின் வண்டல் நாற்றம். நூற்றாண்டுகள் மட்கும் நாற்றம். *(ஓங்கித் துப்பி)* வரலாற்றின் துர்நாற்றம்.

தத்யானா : தப்பு. இது இந்தத் தாத்தாவின் நாற்றம்.

சூதாடி : *(சிரித்து)* நினைத்தேன். கிழவன் அங்கிக்குள் ஒரு புட்டி வோட்காவாவது வைத்திருப்பான் என்று, போட்டுவிட்டுக் காலை நீட்டிவிட்டான். *(விக்கல் எடுத்து)* பழைய கட்டை. ஆனால் ஒரு புட்டிவரை போகும். ராட்சதக் கிழவன். *(ஏப்பம் விடுகிறார்.)*

தத்யானா : தாத்தா செத்துப் போய்விட்டார்.

சூதாடி : *(திடுக்கிட்டு)* யார்?

எலிசா : தந்தையே, இங்கு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. இதோ *(வெண்மலரைக் காட்டி)* இந்த தேவமலர் அவர் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்தது. *(பரவசத்துடன்)* அவரை பரமபிதா தன் மெய்ஞான மலரால் ஆசீர்வதித்தார். அவர் புனிதராகிவிட்டார்.

சூதாடி: *(தள்ளாடியபடி வந்து, சடலத்தருகே நின்று உற்றுப் பார்த்து)* புனிதரா, இவரா? இவர் புனிதரில்லை. இவர்... *(உரக்கச் சிரித்து)* இவர் வேடதாரி. எந்த ஆஷாடபூதியும் தன் ஆத்மாவுக்கு நேர்மையாக இருப்பான். இந்த மேதை அதையும் வித்தகமாகக் கண்ணீர்விட்டு ஏமாற்றிவிட்டான். அழுகி நாறாமல் எப்படியிருப்பான்?

எலிசா : *(கோபத்துடன்)* தந்தையே, நீங்கள் அத்துமீறுகிறீர்கள்.

சூதாடி : த்தூ... வாயை மூடு பிணமே. இப்போது எதற்கு நீ இந்த அழுகும் பிணத்திலிருந்து ஒரு புனிதனை உருவாக்க முயல்கிறாய் என்று அறியாத மூடனா நான்? நான்... *(மார்பில் அறைந்து)* நான் சூதாடிகளின் ஞானி! புனிதராம் *(காறித்துப்பி)* இந்தப் பாழடைந்த அறைக்குள், இந்த இழிந்த காத்திருப்பில் உங்களுக்கு ஒரு புனிதர் தேவைப்படுகிறதா? த்தூ...

(அனைவரும் விறைப்புற்று நிற்க, சூதாடி வெறிகொள்கிறார்)

சூதாடி : அங்கே இலட்சக் கணக்கில் நிரபராதிகள் செத்து விழுகிறார்கள். அவர்களுடன் உடைந்து சிதறி அழிந்துகொண்டிருக்கிறது மொழி. பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்ட மொழி. மனித குமாரனும் உபதேசிகளும் பேசிய மொழி. சித்தாந்தங்களும் கோட்பாடுகளும் நெறிகளும் நிரம்பிய மொழி. செத்த உடல்போல புழுத்து மட்குகிறது அது! நாற்றம்! (குமட்டி) குமட்டலெடுக்கச் செய்யும் நாற்றம். அன்பு, கருணை, பாசம், நீதி, தர்மம், மீட்பு, முழுமை – த்தூ (ஓங்கித் தரையை மிதித்து) கேடுகெட்ட நாய்களா, இங்கே இந்தக் கண்ணாடிக் கதவுக்கு இப்பால் இருந்து மீட்பு குறித்துக் கனவு கண்டபடி காத்திருக்கிறீர்கள், ஒன்றும் அறியாதவர்கள்போல. சொர்க்கம் திறந்து உங்களில் ஓர் அற்பப்பதரைப் புனிதனாக அழைத்துக்கொண்டது என்று கற்பனை செய்தபடி. நீங்கள் நடுத்தர வர்க்கம். உங்களுக்கு சொர்க்கமில்லை, நரகமும் இல்லை. இரண்டுக்கும் நடுவே முடிவேயில்லாத பாழ்வெளி உங்களுடையது. உங்கள் ஆத்மாவின்மீது அதிகார பீடங்களின் மலம் தூவிந்து கிடக்கிறது. உங்கள் சமரசங்களின் மலம். (குமட்டி) அதன் நாற்றம் இது...

எலிசா : நாங்கள் என்ன செய்திருக்க வேண்டும் தந்தையே?

சூதாடி : ஆயிரமாயிரம் வருடங்களாக நீங்கள் எதைச் செய்து வருகிறீர்களோ அதையே இப்போதும் செய்கிறீர்கள். உங்கள் சரணைகெட்ட அறிவின் கண்ணாடிச் சுவருக்கு அப்பால் ரத்தமும் சதையுமாக வரலாறு வழிந்து போகிறது. வரலாறு... (திடீர்த் தெளிவுடன்) வரலாறு என்பது சாத்தானின் நாடக மேடை! (உடனே குழம்பி) அபத்தமான உவமை. ஏதோ நாடக வசனம் போல. என் மண்டையிலிருந்து வோட்கா இறங்கத் தொடங்குகிறது. மேன்மை தங்கிய தோழர், உங்களிடம் ஒரு ஐம்பது கோப்பெக் இருக்குமா?

வ்ளால் : இல்லை.

சூதாடி : நீங்கள் எனக்கு ஐம்பது கோப்பெக் தந்தால் வரலாறு குறித்து ஒரு நல்ல கட்டுரை அல்லது உரை எழுதித் தருவேன். ஜெனரல் போல்கின் எனது உரைகளைப் பேசியிருக்கிறார். என் பெயர் தஸ்தயேவ்ஸ்கி. கேள்விப்பட்டிருப்பீர்கள்...

வ்ளால் : எனக்கு ஆர்வமில்லை.

சூதாடி : இது வரலாறுமீது ரத்தமழை பெய்யும் தருணம் தோழர்.

வ்ளால் : இல்லை, இது வரலாற்றின் திருப்புமுனைத் தருணம்.

சூதாடி : உண்மை. ஆனால் வரலாற்றின் ஒவ்வொரு தருணமும் இதைப் போன்ற திருப்புமுனைத் தருணங்கள்தாம். வரலாறு தன்னை முழுவின்றி அழித்து ஆக்கிக்கொண்டிருக்கிறது. எப்போதும் தன் உடலின் ஒரு பகுதியை ரத்தமும் நிணமும் வழியக் கடித்து தின்று கொண்டிருக்கும்

வினோத மிருகம் அது. எப்படிப்பட்ட கற்பனை பார்த்தீர்களா தோழர். நீங்கள் ஐம்பது கோப்பெக்குகள் தாராளமாகத் தரலாம். இரண்டு கோப்பை வோட்காவின் விலைதான்.

கர்னல் : ஆளை விடும்.

சூதாடி : எப்படி வரலாறு இயங்குகிறது? அதன் ஒவ்வொரு உறுப்பும் வளரத் துடிக்கிறது. திடீரென்று ஓர் உறுப்பு வளர்ந்து பிற உறுப்புகளை அழித்துவிடுகிறது. அல்லது – உங்களுக்குப் பிடிக்குமென்றால் வரையறை மாதிரி எழுதித் தருகிறேன். வரலாறு தன் முந்தைய கணங்களை மறதிக்குத் தள்ளுவதனூடாகவே வளர்ச்சியடைகிறது. வரலாற்றை நிகழ்த்துபவை இரண்டு வல்லமைகள். மக்களின் இச்சை. மக்களின் உடல் சக்தி. அவை சரிவர இணையும் விகிதமே வரலாற்றின் திசையையும் இயங்கு முறையையும் தீர்மானிக்கிறது. எப்படி?

கர்னல் : *(சலிப்புற்று)* உம்மால் பேசாமல் இருக்க முடியுமா இல்லையா?

சூதாடி : புனிதர்களைப் பற்றிக்கூட நீங்கள் அருமையான வரிகளைக் கூற முடியும். உங்கள் சுயசரிதையில் இந்த சந்தர்ப்பத்தை எழுதும் போது கட்டாயம் தேவைப்படும். மறதிக்குத் தள்ளப்படும் கடந்தகால வரலாறு அல்லது அழிக்கப்பட்ட வரலாறு அங்கு குற்ற உணர்வாகத் தேங்குகிறது. நொதித்து நுரைக்கிறது. அவற்றைக் குறியீடுகளாக மாற்றி வெளியே எடுத்து வழிபட ஆரம்பிக்கும் போதுதான் மனிதனுக்கு ஆறுதல் கிடைக்கிறது. புனிதர்கள் குறியீடுகளே. எனவே பேரழிவின் போது மனித குலத்திற்குப் பெரும்புனிதர்கள் தேவைப்படுகிறார்கள். புனிதன் என்பவன் அகங்காரம் கொண்டவன். தன் நேர்மை குறித்தோ, ஞானம் குறித்தோ அகங்காரம் கொண்டிருப்பவன். அவ்வகங்காரத்தை வெல்ல அவன் தன்னை எளிமைப்படுத்திக்கொள்கிறான். துறக்கத் தொடங்குகிறான். உடனே அவனது அகங்காரம் நேர் எதிர்த்திசையில் வளர்ந்து பூதாகர வடிவம் கொள்கிறது. அதை அடையாளம் காணும் மனிதகுலம் அதை மேலும் மேலும் தூண்டி வளர்க்கிறது. அகங்காரத்தின் பாரம் தாங்க முடியாமல் ஆகும்போது அந்த அசட்டு மனிதன் தன்னைப் பலி தருகிறான். புனிதன் ஆகிவிடுகிறான். குறிப்பை நீங்கள் இவ்வாறு முடிக்கலாம் தோழர், புனிதன் என்பவன் நாமனைவர் பொருட்டும் வரலாற்றுக்குத் தரப்பட்ட நரபலியன்றி வேறல்ல.

கர்னல் : உமக்கு நான் ஒரு கோபெக்கூட தரப்போவதில்லை.

சூதாடி : வோட்கா இல்லையேல் என்னால் பேச முடியாது. பேசாத சொற்கள் என் தலையை அறையும்.

கர்னல் : போய் சாகும்.

சூதாடி : *(சோர்ந்து)* அம்மணியீர், தங்களிடம் ஒரு இருபது கோபெக் இருக்க வாய்ப்புண்டா? *(யோசனை கிடைத்து. மலர்ந்து. எலிசாவிடம்)* அம்மணி இந்தப் புனிதர் குறித்து அற்புதக் கதைகள் சிலவற்றை நான் கூற முடியும். ஒரு கதைக்கு பத்து கோபெக்.

எலிசா : (பேசாமலிருக்கிறாள்)

சூதாடி : சரி, ஐந்து கோபெக்.

லாப்கின் : தந்தையே தாங்கள் விரும்பினால் இந்த வோட்காவை அருந்தலாம். (அரைப்புட்டி வோட்காவை தருகிறான்)

சூதாடி : நன்றி நன்றி (ஆவலாகப் பாய்ந்து பிடுங்கி மடமடவென்று குடித்து முடித்து) ஆ! எத்தனை ஆறுதல்.

எலிசா : தந்தையே நீங்கள் ஞானி. நீங்கள் கூறுங்கள். நான் என்ன செய்திருக்க வேண்டும்? (திடீரெனப் பெருகிய மனக் கொதிப்புடன்) கடந்த பதினைந்து வருடங்களாக என் இதயம் உருகிக் கொதித்தபடி இருக்கிறது. வெறுமை மிகுந்த வானம் நோக்கி மீண்டும் மீண்டும் கேட்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும். நான் ஏதும் செய்யவில்லை. ஆனால் என் கரங்கள் முழுக்க நிரபராதிகளின் ரத்தம். (எழுந்து கிரீச்சிட்ட குரலில்) நான் யாரிடமும் பகிரமுடியாது இதை. வானை அண்ணாந்து பார்க்கையில் என்னுள் நிந்தனை நிரம்புகிறதே. கசப்பு என் சொற்களையெல்லாம் களிம்பேற வைக்கிறதே.

சூதாடி : சூதாட்டம்! மனிதர்களின் சூதாட்டத்தைக் கண்டு சலித்துப் போயிருக்கிறேன். இல்லை, விண்ணுலகிலிருந்து பரமபிதாதான் மனிதர்களைக் காய்களாக்கி பாதாள உலகுடன் சூதாடுகிறாரா?

எலிசா : ஆம் தந்தையே, (குரல் உடைந்து) என்ன செய்ய வேண்டும் என்று என் ஆத்மா அறியும். எல்லாம் பசப்புதான். அதை ஒத்திப் போட முயல்கிறேன். புறக்கணிக்கத் தவிக்கிறேன். (உடைந்து) நான் பெரும் பாவி.

சூதாடி : இந்தத் தருணத்தில் நிரபராதிகள் என்று எவரும் இருக்க முடியாது; கொல்லப்படுகிறவர்களைத் தவிர. பாவம் இந்த மண்ணிலும் காற்றிலும் பரவியுள்ளது. நாம் உண்பதும் உயிர்ப்பதும் பாவத்தையே. அதை வெல்ல வானை நோக்கிக் காறி உமிழ்ந்த பிறகு நாம் செத்து விழ வேண்டும்.

கர்னல் : எதற்காக இங்கே வந்து கத்துகிறாய்? மனிதர்கள் ஏனிப்படி சதா பேசுகிறார்கள் என்றே தெரியவில்லை.

இருண்டமூலை : பிறர் குரலைக் கேட்காமலிருக்க எளிய வழி அதுதான் சோமர்.

கர்னல் : (மனமுடைந்து) அய்யோ என் மண்டை தெறிக்கிறது. பிணங்கள்! நாமெல்லாம் மட்கும் பிணங்கள். நம் அழுகிய மூளையிலிருந்து புழுக்கள்போல சொற்கள் வெளிவந்து குவிகின்றன.

சூதாடி : (பிணத்தைப் பார்த்து) புனிதச் சடலம்! பரலோகத்தில் இப்போது அவர் தேவபாடகர் இசைக்க, பரமபிதாவுடன் இரவுணவு அருந்துவார்.

விண்மலர்களின் தேவமணத்தில் தூங்குவார். அதை ஈடு செய்ய இங்கு அவர் உடல் அரு: ியாகவேண்டும்.

லிச : தந்தையே, உங்கள் நிந்தனை விஷம் மிக்கது. கண்ணீருடன் நமது புனிதர் பிரார்த்தனை செய்ததைக் கண்டேன். அந்தப் பிரார்த்தனை பொய்யா?

சூதாடி: பொய். ஆபாசமான பொய். அந்த மனிதரின் பிரார்த்தனை எப்படி நடந்தது தெரியுமா? இந்தக் கண்ணாடிச்சுவர் அடையாளங்கள் மீது அவரது மனமும் சொற்களும் சிக்கியிருந்தன. முட்புதரில் சிக்கிய கந்தலாடையை எடுப்பதுபோல அவர் மெல்ல அதிலிருந்து தன்னைப் பிரித்துக்கொண்டார். அவரைப் போன்ற புனிதர்களின் பிரார்த்தனைக்கு அதுதான் பொருள். அவர்களைப் பிறர் அறிய முடியாது. சூதாடி அறிய முடியும். ஏனெனில் அதுவும் ஒரு சூதாட்டம். *(சிரித்து)* இந்தப் புனிதரைப் பற்றி நான் இவர் உயிரோடிருக்கையிலேயே எழுதிவிட்டேன். கரமசோவ் சகோதரர்களில் தந்தை சோஷிமா பற்றிப் படித்திருப்பாயே.

லிச : படித்ததில்லை தந்தையே.

சூதாடி : ஆனால் மேகங்களின்மீது கால்வைத்து ஏறி அவர் விண்ணுலகு நோக்கிப் போகும்போது அந்தக் கந்தலில் ஒரு முள் மிஞ்சியிருப்பதை அவர் அறிந்திருக்க மாட்டார். ஏனெனில் சூதாடிகளுக்கு சூது ஒருபோதும் முற்றிலும் முடிவதில்லை. மலர்ந்து சிரித்தபடி அவர் போகும்போது ...

தத்யானா : தாத்தா, அந்தப் பெரிய தாத்தா அழுதபடிதான் போனார்.

லிச : தாத்யா!

தத்யானா : நான் பார்த்தேன். அந்தத் தாத்தா கப்ரியேல் அண்ணாவிடம் ஏதோ கேட்கப் போனார். மேலே ஏறும்போது குனிந்து பார்த்தபடியே இருந்தார். இப்படி மார்பைப் பிடித்தபடி அழுதார்.

சூதாடி : *(சொல்லிழந்து போய்)* உண்மையாகவா? *(ஓடிவந்து தத்யானாவைப் பற்றி, உலுக்கி)* உண்மையாகவா? அழுதாரா? அழுதபடிதான் சென்றாரா?

தநயானா : ஆமாம். நான் பார்த்தேன்.

சூதாடி : ஆ! *(அடிபட்டவர்போல ஸ்தம்பித்து நிற்கிறார் தலையை ஆட்டியபடி சுதாரித்து அரங்கைச் சுற்றி வருகிறார்)* விசித்திரம்! விசித்திரம்!

லிச: புனிதர்கள் சொர்க்கத்திற்கு அழுதபடி போவதில்லை.

சூதாடி : *(பெருமூச்சுடன்)* ஆம். அவர் அப்படித்தான் செல்வார். ஏனெனில் இந்த மண்ணில் பிறந்த புனிதர்களிலேயே அவர் வித்தியாசமானவர். ஒருபோதும் அவர் மண்ணை நிராகரித்ததில்லை *(மெதுவாகப் பரவசமகொண்டு)* லேவ் தல்ஸ்தோய்! எத்தனை மகத்தான

பெயர்! துன்பத்தாலும் பாவத்தாலும் கறைபட்ட மனம்கூட நம்பிக்கையுடன் உச்சரிக்கத் தகுதியான இரண்டாவது பெயர் (உடைந்து) என் ஆசானே! என் மீட்பனே... இதோ என்னால் காண முடிகிறது. உமது கண்ணீர் பரமபிதாவை சஞ்சலம்கொள்ள வைக்கிறது. சொர்க்கத்தின் மலர்களில் கண்ணீரை நிரப்புகிறது. (மண்டியிடுடு) இதோ இறுதியில் பூமியின் கண்ணீர்க் கடலில் இருந்து ஒரு துளி விண்ணை எட்டிவிட்டது. (நெகிழ்ச்சியும், உத்வேகமும், போதையும் கலந்து குமுறி அழுகிறார்) அநீதியின் மத்த ஆற்றில் கை முக்கி கடவுளின் மனசாட்சிமீது அழியாத தடமொன்றை அவர் பதித்துவிட்டார். (பிரார்த்தனைபோலக் கரம குவித்து வானை பார்க்கிறார்.)

(அரங்கு அதிரும் இடி யோசை கனத்த அசரீரிக் குரல்கள் எழுகின்றன)

அசரீரி : அவர் புனிதர்களுள் மகத்தானவர். அவர் கடவுளுக்குச் சாத்தானையும் சாத்தானுக்குக் கடவுளையும் அறிமுகம் செய்து வைத்தவர்!

அசரீரி : அவர் நினைவு ஓங்குக! அவர் அகந்தையின் கடைசித் துளியையும் கண்ணீராக மாற்ற முடிந்த மனிதர்.

(ஒளி மீனகிறது அசரீரிகளைப பிறர் கேட்கவிலலை)

சூதாடி : தன் இறுதிச் சூதாட்டத்தில் அவர் வென்றுவிட்டார். (பெருமூச்சுடன்) இனி என் சூதாட்டம்.

லிச என்ன சொல்கிறீர்கள்?

சூதாடி . என் இடம் எது என்று எனக்கு எப்போதும் நியமிருந்ததில்லை. அது தேவாலயமோ அரண்மனைகளோ ஞான சபைகளோ அல்ல. சிறைகள், விபச்சார விடுதிகள், மதுக்கடைகள், சாலையோரக் குப்பைக்குழிகள்... எங்கு ஆத்மாக்கள் தங்களைத் தாங்களே காறி உமிழ்ந்து கொள்கின்றனவோ அங்கு.

லிச சைபீரியாவிற்கா போகிறீர்கள்?

சூதாடி : ஆமாம். வெகுநாள் கழித்து மீண்டும். உனக்குத் தெரியாது போனதே, பல வருடங்கள் முன்பு நடந்தது இது. சைபீரியாவில் ஒரு நிலவறையருகே நாங்கள் எட்டுப் புரட்சியாளர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டோம். என் கண்ணெதிரே மூன்று சக புரட்சியாளர்கள் சுடப்பட்டனர். அவர்களுடைய கழுத்து தவிர வேறு எதையும் யாரும் பார்க்கவில்லை. மனிதக் கழுத்து எந்த அளவு விகாரமாக மாறுமென்பதையும் தெரியுமா? ஒவ்வொரு தோழருடனும் ஒருமுறையென என்னும் மீண்டும் தூக்கிலேற்றப்பட்டேன். என் முன்னால் இருவர் ஒரேமீதி. இரு மனிதர்களினாலான ஒரு சுவர். அப்போல் மரணத்தின் நிழலை உடையணிந்த காவலன். என்னிடம் நீ என் பிரார்த்தனை கேட்கவில்லை என்று கேட்டான்.

லிச : நீங்கள் பிரார்த்தனை புரியவில்லையோ?

சூதாடி : இல்லை. அந்த நினைப்பே வரவில்லை. என் உடல் பதறிக் கொண்டிருந்தது. எந்த மரத்திலும் அமர முடியாத பறவைபோல என் மனம் அர்த்தமற்று அலைமோதியது. அதே சமயம் அந்தக் காட்சியை புள்ளி புள்ளியாகக் கூர்ந்து கவனித்துக் கொண்டுமிருந்தேன். மகத்தான ஓவியமொன்றை ரசிக்கும் ரசிகனைப்போல. இன்னும் கூறப் போனால் அந்த ஒரு சில நிமிடங்களையே என் வாழ்நாள் முழுக்க வாழ்வின் பேரியக்கமாகச் சித்தரித்து எழுதப் போகிறேன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நான் சாகக்கூடும் என்று என் உள்மனம் நம்பவேயில்லை. அப்படிச் செத்தால் அந்த அதிதீவிரமான அனுபவம் எனக்கு நேர்ந்ததற்கு அர்த்தமேயில்லாமல் ஆகிவிடுமல்லவா? *(சிரித்து)* அது எழுத்தாளனின் மாயை. தன்னை முதன்மையாகவும் இறுதியாகவும் அவன் எழுத்தாளனாகவே நினைத்துக் கொண்டிருக் கிறான். அத்தனை பேரும் தன்னை அப்படித்தான் எண்ணுகிறார்கள் என்றும் எண்ணிக்கொள்கிறான். கடவுள்கூட அப்படி நினைப்பதாகக் கனவு காண்கிறான். தனக்கு நிகழ்வதெல்லாம் தன்னால் எழுதப்படும் பொருட்டு எங்கிருந்தோ அனுப்பப்படுபவை என்று எண்ணுகிறான். *(மேலும் சிரித்து)* ஒவ்வொரு விசேஷ ஞானமும் ஒரு குறிப்பிட்ட வகைப் பேதைமையின் விளைவே.

லிச : அன்று என்ன நடந்தது?

சூதாடி : அந்தக் கரிய உடை மனிதன் என்னைக் குரோதத்துடன் உற்றுப் பார்த்தான். பிரார்த்தனை செய், உனக்கு நான் அமைதியைத் தருகிறேன் என்றான். பிரார்த்தனை புரிய எதிர்முனைமீது நம்பிக்கை தேவை, அல்லது தன் சொற்கள்மீது நம்பிக்கை தேவை. இரண்டுமில்லை என்னிடம் என்றேன். அவன் கோபத்தில் கொதித்தான். நமது ஆட்டம் முடியவில்லை பியோதர் என்று சொன்னபிறகு நடந்து கூட்டத்தில் மறைந்துவிட்டான். அப்போது ஒரு ஆச்சரியத்தை கவனித்தேன். எனக்கு முன்னால் நின்ற கைதியை காவலன் முன்னால் போ என்று உத்தரவிட்டான். அவ்விரு சொற்களுக்கு நடுவேயிருந்த காலத்தில்தான் இவை அனைத்தும் நிகழ்ந்து முடிந்தன.

லிச : நீங்கள் ஒரு புனிதர் தந்தையே!

சூதாடி : நான் புனித பாபி. அப்படி விக்டர் ஃபெலின்ஸ்கி எழுதினால். அன்று என்னை ஒரு படைவீரன் குதிரைமீது ஜாரின் விடுதலை உத்தரவுடன் வந்து காப்பாற்றினான். நான் சூதாட்டத்திற்குத் திரும்பினேன். இதோ ஆட்டம் முடிந்துவிட்டது. மீண்டும் அங்கு போக வேண்டும். அவனைச் சந்திக்க வேண்டும். (சூதாடி உத்வேகத்துடன் வேகமாக நடக்கிறார் திடீரென நிற்கும்போது அவர் முகம் ஒளிவிழுந்து சுடர்விடுகிறது) அவருக்கு ரயில் நிலைய மேடை. எனக்குத் தூக்கு மரம். அவர் கண்ணீர்விட்டார். நான் காறி உமிழ்வேன்.

கர்னல் : (ஏப்பம் விட்டபடி) என்ன இந்த இரவு விடியவே விடியாதா? பகலில் இந்த ஓலங்கள் பிற ஒலிகளில் மறைகின்றன. பகலில்தான் நாம் தூங்க முடிகிறது.

சூதாடி : இந்தக் கண்ணாடி. இதை உடைப்பேன். இதனூடாகவே நான் அங்கு போக முடியும். (ஓடிப் போய் அதை மோதுகிறார் பலவீனமான மோதல். கீழே விழுகிறார் மீண்டும் மோதுகிறார்)

கர்னல் : அடேய் குடிகாரக் கிழவா... பிடியுங்கள் அவனை...

சூதாடி : தள்ளிப்போடா மனிதப் புழுவே.

(கர்னல் ஓடிப்போய் சூதாடியைப் பற்றி இழுக்கிறார். அவர் திமிற. மாறி மாறி அறைகிறார்)

எலிசா : எகோர்; அவர் புனிதர்.

கர்னல் : இவன் எதிர்ப்புரட்சிக்காரன்.

(மீண்டும் அறைகிறார் பிடியிலிருந்து தப்பிய சூதாடி வேகமாக கண்ணாடிச் சுவர்மீது மோத ஏற்கனவே விரிசல் விட்டிருந்த அது பிளந்து விழுகிறது.)

லாப்கின் : அய்யோ...

கர்னல் : மடையன்! மடையன்!

(சூதாடி கண்ணாடியினூடாக மறுபகக்ம போயவிடுகிறார்)

லாப்கின் : பனிக்குளிர் காற்று....

(குளிர்ந்த காற்றும். வயிற்றைக் கிழிக்கும் ஓலங்களும் அரங்கை நிறைக்கின்றன உடைகள் பறக்க. மெழுகுவத்திகள் அணைய. பயங்கரமான தோற்றம்.)

லிசவெத்தா : குளிர்கிறதே...

கர்னல் : அந்தப் பெட்டிகளை எடுத்து அடுக்குவோம். இல்லையேல் குளிர்ந்தே சாக வேண்டியதுதான்.

(அங்கிருந்த உடைசல் மேஜைகள் பெட்டிகளால் சுவரை மூடுகிறார்கள் அபரபப்ப பயமும் நிரம்பிய கணங்கள் துளை மூடப்படுகிறது. காற்று தணிகிறது. லிசவெத்தா மெழுகுவத்தியை ஏற்றுகிறாள் மீண்டும் சகஜ நிலை)

மத்யாஷ... : ஏன் அம்மா காற்று அப்படிக் கதறி அழுகிறது?

லிசவெத்தா : வாயை மூடு சனியனே. (சலிப்புடன் பின்னலைத் தொடர்கிறாள்)

கர்னல் : அப்பாடா! என்ன நிம்மதி. கொலைகாரக் கிழவன். நம்மை நிரந்தரமாக்கட்டிவிட இருந்தான்.

இருண்டமூலை : ஒருவழியாகப் பாவமன்னிப்பு கேட்கும்போது நம்பிக்கையிட திட்டவட்டமான ஒரு பாவம் உனக்குக் கிடைத்துவிட்டது ஏழாவர்.

கர்னல் : யாரது? வெளியே வாடா மூடா.

இருண்ட மூலை : இதோ உனது மீட்பருக்கு முகம் கிடைத்துவிட்டது எகோர். காறி உமிழும் புனிதர்.

கர்னல் : நிறுத்துங்கள்; சதிகாரப்பாவிகளா, கோழைகளா. ஆ! *(தலையைப் பற்றியபடி அமர்ந்து கண்களை மூடி உடல் நடுங்குகிறார்)*

எலிசா : இந்தப் புனிதரை என்ன செய்வது?

லிசவெத்தா : விடியட்டும். அதற்குப் பிறகுதான் ஏதும் செய்ய முடியும்!

எலிசா : இந்த நாற்றம் என் அடிவயிற்றைத் தாக்குகிறது. கடவுளே என்ன நாற்றம்!

இருண்ட மூலை : *(முணுமுணுப்பாக)* நறுமணப் புனிதர்களின் யுகம் முடிந்தது. இது நம் ஆத்மாவில் அழுகி நாறும் புனிதர்களின் காலம்.

எலிசா : போதும் நிறுத்து, பாவி! பாவி!

கர்னல் : *(திடுக்கிட்டு)* எலிசா யாரிடம் பேசுகிறாய்?

எலிசா : முணுமுணுக்கிறார்கள்... எலிகள்...

(பல்லை நறநறவென்று கடிக்கிறாள்)

கர்னல் : எலிசா!

தத்யானா : ஹையா, இப்போது இந்தப் பாட்டியும் சுவரிடம் பேசுகிறாள்.

கர்னல் : எலிசா, இதோபார்!

எலிசா : *(விழித்துக்கொண்டவள்போல)* எகோர்! *(பாய்ந்து அவரைப் பற்றி உலுக்கி அழுதபடி)* எகோர்... எனக்குப் பயமாக இருக்கிறது. என் கைகளைப் பிடித்துக்கொள்ளுங்கள். எனக்குப் பயமாக இருக்கிறது. என்னைத் தனியாக விட்டுவிடாதீர்கள்....

கர்னல் : எலிசா என் கண்ணே *(அவளை மார்புடன் அணைத்தபடி)* நாம் எளிய மனிதர்கள் எலிசா. விதவிதமாக பாவனை செய்வதனூடாக அனைத்தையும் தாண்டி வாழ்ந்துவிடலாம் என்று கற்பனை செய்யும் பேதைகள்.

லாப்கின் : ஆம் தோழர், நான் வெறுமொரு குமாஸ்தா. என்னிடம் சொற்கள் குறைவு. ஆனால் ஒரு கேள்வி இருக்கிறது. அதை மாற்றி மாற்றி வேறுவேறு சொற்களால் எனக்கு நானே கேட்டுக்கொள்கிறேன். தோழர்... *(ஆங்காரமாக)* புனிதர்கள் தங்கள் இறுதிப் பிம்பத்தில் அமைதி காண்கிறார்கள். அதிகார வெறியர்கள் இறுதித் தோல்வியில் அமைதி காண்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கெல்லாம் சுய அடையாள மிருக்கிறது. சொர்க்கத்திலோ நரகத்திலோ பட்டியலில் அவர்கள் பெயர் இருக்கிறது. ஆனால் *(கண்கள் கலங்கி முகம் சிவந்து)* அடையாளங்களில்லாத இந்த மனிதத் திரள்... இவர்களுக்கு எது அமைதியைத் தரும்?

கானல் : பதில் கூற நான் ஒன்றும் புனிதனல்ல.

லாப்கின் : நீங்களும் என்னைப் போன்ற எளிய மனிதர்தான் தோழர். உங்கள் சீருடையும் பதக்கங்களும் அதை மறைப்பதில்லை. இதோ நமது ஆத்மாவின் மூடிய கதவுகள்மீது காறி உமிழ்ந்துவிட்டுப் போனார் ஒருவர். கண்ணீர் உதிர்த்துவிட்டுப் போனார் இன்னொருவர். சொல்லுங்கள், நீங்களும் நானும் என்ன செய்யக்கூடும். அடையாளங் களின்றிச் சாவதன் மூடிவற்ற நரகத்தை இந்தப் புனிதர்களுக்கு எப்படி நம்மால் புரியவைக்க முடியும்? அடையாளங்களின் பொருட்டே நாம் நமது ஆத்மாவை சிறையிலடைத்திருக்கிறோம் என்று கூறினால் அதை அவர்கள் எப்படி எடுத்துக் கொள்வாகள்? கண்ணீர் விடுவார்கள். காறி உமிழ்வார்கள்... அவர்கள் புனிதர்கள். அவர்கள் அதைச் செய்யலாம். புனிதர்களை நாம் வணங்குவோம். அவர்கள் ஆசிகளையும் சாபங்களையும் நமது சிரங்களில் சூடுவோம். ஆனால்...

கானல் : அவர்கள் நம்மை விடமாட்டார்கள். இந்தத் துர்நாற்றம் நம் ஆத்மாவில் குடியேறும். சந்ததிகளுக்கும் பரவிச் செல்லும்.

லாப்கின் : ஆம் ஐயா, நாம் நடுத்தர வர்க்கத்துக் கோழைகள். நமது ஆத்மா ஓர் இரும்புப் பல்லக்கு. அதில் அவர்கள் பயணம் செய்கிறார்கள். (மனமுடைந்த குரலில்) சாக முடியவில்லையே. அதோ அந்தப் பஞ்சைக் கூட்டங்களைப்போல ஊளையிட்டு அழுதபடியும் வானை நோக்கி சபித்தபடியும் செத்து மண்ணில்படிய முடியவில்லையே. (கோபம் கொண்டு) அந்த கையடையாளங்களைப் போல ஒரு வெற்றுத்தடமாக எஞ்ச ஒருபோதும் நான் தயாராக மாட்டேன். எத்தனை இழிவு! எத்தனை சிறுமை! எனக்கும் இது நிகழலாம். ஆனால் அதன் கீழே இவான் இவானிச் லாப்கின், முதல்நிலைக் கணக்கெடுப்புக் குமாஸ்தா, வென்ஸ்டெய் கிராமம் என்று எழுதியிருக்க வேண்டும். உண்மை ஐயா, இந்த இருண்ட காலகட்டத்தில் என்னைப்போன்ற ஒரு நடுத்தர வர்க்கத்தினன் ஆசைப்படுவது பகிரப்படாத ஒரு கல்லறையும், ஒரு நடுகல்லும் மட்டும்தான். அதற்காக நான் என்னைச் சுற்றி இன்னும் நூறு கண்ணாடிச்சுவர்களை எழுப்பிக்கொள்வேன். வாலாட்டுவேன். பூட்சுகளை நக்குவேன். (எதிர்பாராத விதத்தில உடைந்து நொறுங்கி) மீப்பரே, தேவனே, என்ன வாழ்க்கை! என்ன வாழ்க்கை! என் தேவனே, ஏகவே! (உடல் குலுங்கத் தேம்பிக் குமுறி அழுகிறான் அந்த அழுகை பின்னணி அழுகைகளில் கலக்கிறது)

(அமைதி திரும்புகிறது லாப்கின் மீண்டும் ஒண்டிச் சுருண்டுகொள்கிறான்)

தத்யானா : அப்பா வோட்கா சாப்பிட்டால்தான் இப்படி அழுவார். (யோசித்து) வோட்கா வெங்காயம் போல...

கானல்: எலிசா பொழுது விடியப்போகிறது. நாம் ஓர் இரவைத் தாண்டி விட்டோம்.

எலிசா : ஆம். ஓர் இரவு. நல்ல விஷயம்தான்.

லிசவெத்தா : *(பின்னலாடையைப் போட்டுவிட்டு)* விடிந்துவிட்டதா?

எலிசா : அதை நீ முடிக்கவே இல்லை.

லிசவெத்தா : இல்லை அம்மணி, நான் ஒரு கண்ணிகூடப் பின்ன வில்லை. *(சலித்த குரலில்)* ஒரு சில கண்ணிகள் முன்னகர்வேன். பின்பு என் விரல்கள் பின்னகர்ந்து அம்முடிச்சுகளை அவிழ்க்க ஆரம்பித்து விடும். இதை நான் தொடங்கி வெகுநாளாகிறது.

(அரங்கில் அமைதி படர்கிறது. சில நிமிடங்களில் சிலைத்தன்மையும் மங்கும் இருளும் ஏற்படுகின்றன.)

தத்யானா : ஏன் திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டீர்கள் எல்லாரும்? பேச்சு முடிந்துவிட்டதா? *(தரையிலிருந்து அந்த மலரை எடுத்து)* அய்யோ தேவமலர். ஏன் இது யாருக்கும் வேண்டாமா?

(யாரும் அவளைக் கவனிக்கவில்லை)

இதைத் தாத்தாவுக்கு வைக்கவா? *(தயங்கி)* தாத்தா நாற்றமடிக்கிறார். நானே வைத்திருப்பேன். *(வீம்பாக)* இது என்னுடையது. *(உரக்க)* என்னுடையது. *(பதிலுக்குக் காத்து)* தரவே மாட்டேன். அழுதாலும் தர மாட்டேன்.

(மலரை மார்போடு சேர்க்கிறாள். அரங்கு முற்றிலும் இருள அவளும் மலரும் மட்டும் பொன்னிற ஒளியில் நிற்கிறார்கள். இனிய இசை தொடங்கி வலுக்கிறது. வெகுநேரம் துள்ளி விளையாடுகிறது அந்த இசை கனவு நிரம்பிய இசை. ததும்பியும் நுரைத்தும் பீறிட்டும் சுழித்தும் அலைத்தும் பெருகி நிறைகிறது. குழந்தைகள் விளையாடும்போது மட்டும் விண்ணுலகு எழுப்பும் மகத்தான இசை.)

8

நிழல் நடனம்

Keine Rechte ohne Pflichten

1

நாகர்கோயில்
8/12/94

அன்பிற்குரிய அருணாசலம் அவர்களுக்கு,

உங்கள் கடிதம் கிடைத்து வெகு நாட்களா கின்றன. பதில் போடும் மனநிலை அமைய வில்லை. என் பெரிய நாவலின் பணியில் இருக் கிறேன். வாழ்வின் அந்திப் பருவத்தில் விடை களால் நிரம்பியுள்ளது நம் மனம். அவ்விடைகளில் ஒன்றைக்கூட முன்வைக்காமல் சொந்த வாழ்வையே ஒரு நாவலாக எழுத முடியுமா என்று முயல்கிறேன். வெறும் சம்பவங்கள், சர்வ சாதாரணமான சம்பவங்கள். அவற்றுக்கு அர்த்த முண்டு என்றால்தான் வாழ்வுக்கு அர்த்தமுண்டு. அந்த எளிய உலகில் இருந்து உங்கள் கடிதம் பிடரியில் அறைந்து வெளியே இழுக்கிறது. அதை எதிர்கொள்ள நான் தயங்கியதற்குக் காரணம் இதுவே.

என்னை நிராகரித்தும் விமரிசித்தும் எழுதியது குறித்து நீங்கள் வருத்தப்பட வேண்டியதில்லை. துரதிர்ஷ்டவசமாகவோ அதிர்ஷ்டவசமாகவோ எனக்கு மிகமிக நெருக்கமானவர்களில் என்னை ஏற்றுக்கொள்பவர்கள் என்று எவரும் இல்லை. எனவே நீங்கள் தைரியமாகவும் உற்சாகமாகவும் மேலும் விளாசலாம்.

உங்கள் கடிதத்தை மீண்டும் படித்தேன். இங்கிருந்து சென்றபிறகு உங்கள் மனம் கொண்ட சஞ்சலங்களனைத்திற்கும் அக்கடிதத்தில் சரியான பதில்கள் உள்ளன. இம்மாதிரி பதில்களை நாம் நம்மை நோக்கி நேரடியாகக் கூறிக்கொள்ள முடிவதில்லை. பார்த்தீர்களா (கற்பனையாக வேனும்) நமக்கு ஒரு முன்னிலை தேவைப் படுகிறது. இதன் பொருள் என்ன? அறிவு என்று கூறப்படுவது உண்மையில் உரையாடலின் ஒரு தரப்பு மட்டுமே என்றா? உங்கள் கடிதத்தில் நான் ஒரு முன்னிலை மட்டும்தான். எனினும் அதற்கு பதில் எழுதமுற்படுகிறேன். இப்பதில் நான் எனக்கு உங்களிலூடாகக் கூறிக்கொள்வதாக இருக்கலாம். என் மனம் இதை ஏற்கிறதா பார்ப்போமே.

நான் அன்று உங்களிடம் பேசியபோது முன்வைக்கப்பட்ட உணர்வுகளும், அவ்வுணர்வு

களை உருவாக்கிய மதிப்பீடுகளும் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ யுகத்தைச் சார்ந்தவை என்றும்; புரட்சிகர, சோஷலிச சமூகம் தனக்குரிய மதிப்பீடுகளைத் தானே உருவாக்கிக் கொள்ளும் என்றும் உங்கள் கடிதத்தில் கூறியிருந்தீர்கள். வர்க்கங்களுகெல்லாம் பொதுவான அறம் என்று ஏதுமில்லை என முடித்திருந்தீர்கள். உங்கள் கடிதத்தின் சாரமே உண்மையில் இந்த கருத்துதான்.

பல்வேறு விவாதங்களில் கடந்த எழுபது வருடங்களாக மீண்டும் மீண்டும் கூறப்பட்ட வாதம்தான் இது; 'உங்கள் அறம்வேறு, எங்கள் அறம்வேறு.' 'நமது ஒழுக்கமும் அவர்கள் ஒழுக்கமும்' என்ற பிரபலமான கட்டுரையினூடாக ட்ராட்ஸ்கியே இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தான். இதற்கு எங்களுக்கு அறத்தில் நம்பிக்கையில்லை என்றுதான் அர்த்தம். அறம் என்பது என்ன? எனக்கும் உனக்கும் அவனுக்கும் பொதுவானதாக எந்த மதிப்பீட்டை நான் முன்வைக்கிறேனோ அதுவே என் அறம் என்பது. என் அறம் 'எம்மவருக்குள்' மட்டுமே அடங்கும் என்றால் மானுடம் என்ற ஒன்றை நான் ஏற்கவில்லை என்றுதான் முதல் பொருள். ஆனால் அது நடைமுறையில் சாத்தியமில்லை. நீயும் நானும் அவனும் மானுடர்கள் என்பதை முத்தரப்பும் ஒரே குரலில் நிராகரித்தால்கூட நிராகரித்துவிட முடியாது. நாம் ஒரே மண்மீதும் ஒரே வான்கீழும் வாழ்ந்தாக வேண்டும். போரிடும்போதும் வெறுக்கும்போதும்கூட நாம் மானுடர்களே.

என் அறத்தின் ஒரு சிறுபகுதியையேனும் நீ ஏற்றாக வேண்டும். உன் அறத்தின் அதற்கிணையான அளவு பகுதியை நான் ஏற்க அதுவே என் நிபந்தனையாகும். என் அறத்தை நீ பூரணமாக நிராகரிக்கிறாய் என்றால் மண்ணில் நான் உயிர்வாழ்வதையே நீ நிராகரிக்கிறாய் என்றுதான் அர்த்தம். நம்மிருவரில் ஒருவர் மட்டுமே இப்பூமியில் வாழ முடியும் என்று நான் கருதுவதாகத்தான் அர்த்தம். அப்போது உன்னை அழிக்க நான் எதுவும் செய்ய முடியும். எல்லாமே அனுமதிக்கப்பட்டுவிடும். (கடவுள் இல்லையேல் எல்லாமே அனுமதிக்கப்பட்டுவிடும் என்று தஸ்தயேவ்ஸ்கியின் இவான் அஞ்சினான்) நூற்றாண்டுகளாக பரஸ்பரம் கொன்றொழிப்பதையே ஒரே இலக்காகக்கொண்டு போரிட்டு வரும் இனக்குழுக்கள் பழங்குடிச் சமூகங்களில் உண்டு. எத்தனையோ நூற்றாண்டுகளாக புலி வெள்ளாட்டைத் தின்று வருகிறது. ஆனால் பூரண அழிவு நிகழவில்லை. ஏனெனில் இயற்கை அந்த கொடும்போருக்கு நடுவில் தன் அறத்தை நிலைநாட்டியுள்ளது. இயற்கையின் அறத்தை மீறி, ஏதேனுக்கு வெளியே முதுகெலும்பை நிமிர்த்தி நடந்து வந்து, மானுடன் அடைந்ததே கலாச்சாரம். வலிமையற்றதும் வாழ வேண்டும் என்று அது கூறும். அனைத்தும் சமமே என்று அது கனவு காணும். எனவே கருணை என்றும் நீதி என்றும் அறங்களை வகுக்கும்.

மிகக் குரூரமான போர் நடைபெறும் இடங்களில்கூட இந்த மானுட அறங்களின் ஒரு தளம் எஞ்சியிருப்பதைக் காணலாம். போரில் உன்னைக் கொல்வேன்; ஆனால் உன் குழந்தைகளைக் கொல்லமாட்டேன். உன் நகரங்கள்மீது குண்டுமழை பொழிவேன்; ஆனால் நீ பேச்சுவார்த்தைக்காக அனுப்பும் தூதனைக் கொல்லமாட்டேன். எத்தனை எத்தனை பொதுப்

புரிதல்கள் அப்படி. சில ரகசியமானவை. சில வெளிப்படையானவை. சில உணர்வுபூர்வமானவை. சில வசதி கருதியவை. அவற்றை ஏற்காதவர் என்று உண்மையில் எவரும் கிடையாது. நிரபராதிகள் கொல்லப்படுகிறார்கள் என்று, கலைப்பொருட்கள் அழிக்கப்படுகின்றன என்று, அவதூறுப் பிரச்சாரம் செய்யப்படுகிறது என்று முறையிடாத வன்முறை இயக்கம் ஏதும் இன்றுவரை இல்லை. கடந்த எழுபது வருடங்களாக இத்தகைய அறமீறல்களை முதலாளித்துவ அமைப்பு செய்கிறது என்பதே கம்யூனிஸ்டு களின் முதன்மையான குற்றச்சாட்டாக இருந்து வந்துள்ளது. அதாவது தத்துவார்த்தமாக இவையனைத்தும் அவர்களாலும் அதர்மமாகவும் அற எல்லைமீறலாகவும்தான் கருதப்படுகின்றன. இவ்வறங்கள் மானுட பொதுவானவை என்பதில் அவர்களுக்கும் மாற்றுக்கருத்து இல்லை. அப்படியானால் எங்கு இந்த 'உங்கள் அறம், எங்கள் அறம்' என்ற பேச்சு எழுகிறது? அறஎல்லையைத் தாங்கள் மீறும் போது, அதை நியாயப் படுத்துவதற்குத்தான். இதுதான் அப்பட்டமான உண்மை.

சரி, அறம் என்பதை நீங்கள் உணர்வுபூர்வமாக ஏற்க வேண்டியதில்லை. அதற்குப் புனிதமோ, தெய்வீகத்தன்மையோ அளிக்க வேண்டியதில்லை (நீடித்து நிற்கும் அறங்களெல்லாம் உணர்வுபூர்வமாகி, படிமங்களாகி, புனிதமும் தெய்வீகத்தன்மையும் கொண்டுவிடுகின்றன என்பது உண்மையேயாயினும்) அறம் என்பதை ஒரு பரஸ்பர ஒப்பந்தத்தளம் என்றும், ஒரு வசதி என்றும் மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். அப்போதுகூட நீங்கள் அவற்றை மறுக்க முடியாது. எதன் பொருட்டு நான் உன்னை அழிக்க எண்ணுகிறேன்? உன்னை அழிப்பது எனக்கு ஓர் உயிரியல் கடமை அல்ல. அது எனக்கு ஒரு கொள்கை. அதன் பின்னால் ஒரு தரிசனம், ஒரு நிலைப்பாடு உள்ளது. அந்தத் தரிசனம், நண்பரே, ஓர் அறமல்லவா? அவ்வறத்தை மானுடப்பொதுவாக உருவகிக்கும்போதல்லவா அதன்மீதான எனது சார்பு ஓர் அடிப்படை மானுட உணர்வாக ஆகிறது?

பொது அறங்களை நிராகரிக்கும் இயக்கங்களும் நிறுவனங்களும் தற்காலிகமாக வெற்றிகளை அடைந்துவிடக் கூடும். ஆனால் நீண்டகால அளவில் ஏற்படப்போகும் மோசமான தோல்விகளின் முன்னோடியே அவ்வெற்றிகள். எப்போராட்டத்திலும் மிகப்பெரிய சக்தி நமது பக்கத்து நியாயத்தின்மீதான ஆழ்ந்த நம்பிக்கையேயாகும். அது உள்ளுணர்வு சார்ந்தது. உணர்வுபூர்வமானது. அந்த உணர்வும் உள்ளுணர்வும் சஞ்சலமடையக் கூடியவை என்பதனால்தான் மேற்பரப்பில் ஓயாது விவாதம் நிகழ்ந்தபடி இருக்கிறது. அது ஒரு மேல்மட்ட அலை. தருக்கம் மூலம் எதையும் வரையும் நம்ப வைத்துவிட முடியாது. சித்தாந்தங்கள் ஒரு முகாந்திரமே யாகும். அவற்றின் சொல்லிடைவெளிகளில் உள்ள உள்ளுணர்வும், உணர்வெழுச்சிகளுமே பிறரைப் பாதிக்க முடியும். பொது அறங்களை நாம் மீறும்போது நம் ஆழத்தில் ஒருபோதும் சரிசெய்ய முடியாத விரிசல் ஒன்று நிகழ்ந்துவிடுகிறது. அதன்பிறகு எனக்கு இப்படி நிகழலாமா, இது நியாயமா என்ற ஆங்காரம் நம் அடிவயிற்றிலிருந்து பீறிடாது. நமது நீதியுணர்வுதான் பயங்கரமான போர்ஆயுதமாகிறது. அணையாத நெருப்பாக தலைமுறைச் சந்ததிகளுக்கு அதுதான் கைமாற்றப்படுகிறது. நமது நீதியுணர்வு

உடைபட்ட பிறகு நம்மிடம் எஞ்சுவதென்ன? வாழ்க்கை ஒரு வலியை விளையாட்டு என்ற வனநீதியல்லவா? முதுகு வளைந்து ஏதென் தோட்டத்திற்குள் மீண்டும் நுழைந்துவிடுகிறோம்.

பின்பு நாம் வெல்லும்போது அது வலிமையின் வெற்றி அழிக்கப்படும்போது தவிர்க்க முடியாத முடிவு. அப்படி எண்ணை நேர்வதே அழிவின் முற்றுப்புள்ளி. இதை நீங்கள் நம்புவீர்களா? அழியும் கணத்தில் மிகக் கணிசமான மனிதர்கள் தாங்கள் அழிக்கப்படுவதை மிக உள்ளாழத்தில் ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனெனில் எந்த ஆட்டத்தின்படி அவர்கள் பிறரை அழித்தார்களோ அதே விதிப்படிதான் அவர்களும் அழிக்கப்படுகிறார்கள். ஆட்டவிதி உருவாகி, போராட்டம் ஆட்டமாக மாறும்கணம் ஒரு முக்கியமான பரிணாமப்புள்ளி. அதன்பிறகு ஆட்டம் ஆட்டத்திற்குள்ளாகவே நின்றுவிடுகிறது. வேறு எதற்காகவும் அது நிகழவில்லை. அது வேறு எதற்கும் பிரதிநிகழ்வல்ல. ஒருவேளை எளிய குறியீட்டுத்தளம் மட்டும் அதற்கு இருக்கலாம். ஆட்டத்தின் கோபதாபங்களும் வெற்றி தோல்விகளும் எல்லாம் அதற்குள்ளாகவே முடிந்துவிடுகின்றன. நண்பரே, உரிமைப் போராட்டங்கள் போர் – ஆட்டங்களாக மாறும் தருணத்தில் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கத்தைக் கைவிட்டுவிடுகின்றன. பிறகு அவ்வுரிமைகள் ஆட்டத்திற்கான வெற்றிப்பரிசுகள் மட்டுமே. என்வே தோல்வியில் அவற்றை இழப்பதும் நியாயமாக ஆகிவிடுகிறது. போருக்குப் பின் வெல்லப்பட்ட நகர்களை சூறையாடும் உரிமை தங்களுக்கு உண்டு என்று புராதன ராணுவங்கள் நம்பின. போர்க்கைதிகளை அடிமைகளாக்குவது போர்நியதியாக இருந்தது. அந்நிலையில் கொள்ளையிடப்படுதலும் அடிமையாக்கப்படுதலும் நியாயமே என அவை ஏற்றுக் கொண்டன. ஆனால் மானுட உரிமை என்பது கொள்ளைச் செல்வம் அல்ல.

எதை நான் ஒவ்வொரு மானுடனுக்கும் உரியது என்று கருதுகிறேனோ அதையே என் பிறப்புரிமையாகவும் கருத முடியும் அல்லவா? உயிர்வாழும் உரிமை, சமத்துவத்திற்கான உரிமை, தன்மானத்திற்கான உரிமை. ஏதாவது ஒரு நிபந்தனையின் பெயரால், ஒரு சந்தர்ப்பத்தின் பொருட்டு, அதைப் பிறருக்கு மறுப்பேன் என்றால் அதே நிபந்தனைகளின் பொருட்டு அது எனக்கு மறுக்கப்படுவதையும் தத்துவார்த்தமாக ஏற்றுக்கொள்கிறேன் அல்லவா? ஆனால் உரிமை என்பது நிபந்தனைகளில்லாதது. சமரசங்களுக்குத் அப்பாற்பட்டது. அத்தகைய உரிமைகளின் பொருட்டே நான் உயிரைத் தர முடியும். என் சந்ததிகளின் உயிரைப் பணயம் வைக்க முடியும். என் வாழ்வின் இறுதி உடைமையையும் வைத்துப் போரிட முடியும். கூறுங்கள் நண்பரே, அத்தகைய ஒரு போரின் அடித்தளமே மானுட அறம்தானே? அப்போராட்டத்தில் மானுட அறத்தின் எல்லை எப்படி மீறப்பட முடியும்?

சிங்கம் ஆட்டை அடித்துத் தின்பதே வன நீதி. அதை ஆடும் சிங்கமும் சொர்க்கத்தில் பேசிக் கையொப்பமிட்டிருக்கின்றன. வயிறு நிரம்பிய சிங்கத்தின் முன் குட்டி ஆடு துள்ளிவிளையாடும். அந்த ஒப்பந்தத்தின் வரம்பு அது. அதை சிங்கம் ஒருபோதும் மீறிவிட முடியாது. மாறாக மனிதன் இயற்கை விதிகளை மீறிவிட்டான். ஒவ்வொரு மானுட உரிமையும்

இயற்கை விதிக்கு எதிரான அறைகூவலேயாகும். பிரபஞ்ச நியதியால் அல்ல, மானுட ஒப்பந்தத்தால் அளிக்கப்படுவை அவை. மானுடக் கலாச்சாரம் உருவாக்கும் பொதுஅறங்களே அவ்வுரிமைகளை நிலைநாட்டும் பின்புலச் சக்திகள். வலிமையே விதி என்றால் அவையெல்லாம் இயல்பாகவே ரத்து ஆகும். மனிதன் இயற்கை விதிக்கும் கட்டுப்படாதவனாதலினால், தஸ்தயேவ்ஸ்கி பயந்ததுபோல, எதுவும் நியாயப்படுத்தப்பட்டுவிடும். ஆனால் இறுதி நபர் கொல்லப்படுகையில்கூட அணையாத உள்ளக் கொதிப்பாகவே உரிமைப் போர் இருக்க முடியும். உரிமைப் போராட்டம் எந்நிலையிலும் மீற முடியாத எல்லை ஒன்று உண்டு. எந்த உரிமையை அடையும் பொருட்டு அது போராடுகிறதோ அந்த உரிமையை அது ஒருபோதும் பிறருக்கு, தன் எதிரிக்குக்கூட, மறுக்க முடியாது.

ரஷ்ய வரலாற்றுக்கு வருகிறேன். ரஷ்ய வரலாறு ஓர் உதாரணம் மட்டுமே. மனித வரலாற்றின் எப்பகுதியும் அதன் மொத்தத்தை மிகச்சரியாகப் பிரதிநிதித்துவம் செய்யும். ரஷ்யாவில் நாடகம் முடிந்துவிட்டது. இனி அதை வரலாற்றின் பலத்தால் தூக்கி நிறுத்த முடியாது. கோஷமிட்டு திரையிடவும் முடியாது. அந்நாடகத்தில் ஒரு சிறு அளவிலேனும் நாம் பங்கு வகித்திருக்கிறோம். எந்த விஷயங்களுக்கு எதிராக அங்கு புரட்சி நடந்ததோ அவ்விஷயங்களே புரட்சியின் பொருட்டும் நிகழ்த்தப்பட்டன. சுரண்டல், நியாயற்ற அதிகாரம், மாற்றுக்குரல்கள் மீதான ஒடுக்குமுறை... ஒரே வித்தியாசம் – எந்த ஜார் சக்கரவர்த்தியும் தன் அதிகுரூரமான கனவில்கூட கற்பனை செய்துவிட முடியாத மானுடப் பேரழிவு.

நான் சிறுவயதில் இடதுசாரி இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்த போது ஒரு சிறுகுழு ட்ராட்ஸ்கியவாதிகளாக இருந்தது அறிஞர்கள். கல்விமான்கள் அவனைப் போற்றினர். ராமகந்தரம் அந்தரங்கத்தில் ஒரு ட்ராட்ஸ்கியவாதி. மாபெரும் மனிதாபிமானியாகவும் தத்துவவாதியாகவும் ட்ராட்ஸ்கியை மதிப்பவர்கள் இன்றும் உலகமெங்கும் உண்டு. ஐசக் டொயிட்ஷர் என்ற மார்க்ஸிய வரலாற்றாளர் ட்ராட்ஸ்கியின் 1935-ம் வருடத்திய நாட்குறிப்புகளை ஆய்வுசெய்து எழுதிய கட்டுரைகளை மேடையில் படித்தேன். அப்போது அவன் நாடுகடத்தப்பட்டு ரகசியக் கொலைகாரர்களால் வேட்டையாடப்படுபவனாக மெக்ஸிகோவில் இருந்தான். தன் குடும்பத்தை எண்ணி மனம் பதைக்கும் தந்தையை அக்குறிப்புகளில் காணலாம். சித்திரவதைக்குள்ளான அவன் மகள் ஸினைதா 1933-ல் பெர்லினில் தற்கொலை செய்துகொண்டாள். அரசியல் சிந்தனையாளனாகிய மகன் செர்ஜெய் கைது செய்யப்பட்டு விசாரணையிலிருந்தான்; ஸ்டாலினிய விசாரணை என்றால் என்னவென்று தெரியுமே. இவைபற்றி மனவேதனையுடன் எழுதும் ட்ராட்ஸ்கி, ஜூடாக நோர் குடும்பம் 1918-ல் புரட்சியின் நாட்களில் கொடூரமாகக் கொல்லப்பட்டதை நினைவு கூர்கிறான் வலுவான வாதங்களுடன் அந்தக் கொலையை அவன் நியாயப்படுத்துகிறான். அந்நினைவு அவனுக்கு எவ் வாறிருந்தது என்று டொயிட்ஷர் ஆய்வு செய்கிறார். அவன் மனதில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தப் படுகொலையிலிருந்துதான் அனைத்துப்

பேரழிவுகளும் தொடங்குகிறது என அவனது உள்மனம் அறியும். ஜார் குடும்பம் விட்டுவைக்கப்பட்டிருந்தால் வெண்படையினர் முன்வைத்துப் போராட ஓர் உயிருள்ள பதாகையாக அவர்கள் ஆகியிருப்பார்கள் என்கிறான் ட்ராட்ஸ்கி. ஜார் குடும்பம் கொல்லப்பட்டதனூடாக புரட்சிப் படையினர் வீழ்த்தவே முடியாத பெரும்சக்தி ஒன்று வீழ்த்தப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையை அடைந்தனர். அது ஒரு பெரும் குறியீடு என்கிறான் ட்ராட்ஸ்கியைப் போன்ற பெரும் தத்துவஅறிஞன் எதையும் மறுக்கமுடியாத தருக்கங்களால் நிறுவிவிட முடியும். அனைவரையும் நம்பவைத்துவிட முடியும்; தன்னைத் தவிர.

1918 ஜூலை 17-ம் தேதி சோவியத் நாட்டில் எக்காரென்பெரி நகரில் ஒரு வீட்டில் ஒளிந்திருந்த ஜார் குடும்பம் புரட்சிப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு சுட்டு வீழ்த்தப்பட்டது. ஜார் இரண்டாம் நிகலஸ், அவன் மனைவி அலக்சான்ட்ரா பியாதரெவ்னா, குழந்தைகள் தத்யானா, ஒல்கா, அனெஸ்தாசியா, மரியா, அவர்களுடைய மருத்துவர், பணியாட்கள், தாதிகள் ஆகியோரடங்கிய பதினொரு பேர் கொல்லப்பட்டனர். அவர்கள் வளர்ப்பு நாயும் சுடப்பட்டது. கடந்த இரண்டு வருடங்களில் இந்தப் படுகொலைகள் பற்றி ரஷ்யாவில் பலநூறு பக்கங்கள் எழுதப் பட்டுவிட்டன. பெரிஸ்த்ரோய்க்காவில் கிளம்பி வந்த முக்கியமான புதைகுழிகளில் ஒன்று இது. பலகோடி மனிதர்கள் கொன்றொழிக்கப்பட்ட ஒரு தேசத்தில் இந்த மரணம் மட்டும் ஏன் முக்கியத்துவம் பெறுகிறது? அது மன்னர் குலம் என்பதனாலா? அது மட்டுமல்ல, அது குறியீட்டு ரீதியானது. அது ஒரு தொடக்கப் புள்ளி. அதுதான் பொது அறத்தின் எல்லை மீறல் புள்ளி.

ஜார் 'ஆட்டத்தில்' தோற்றவர்; சரி. அவரது குழந்தைகள், வேலையாட்கள், நாய்? மாபெரும் புரட்சியின், வரலாற்றின் சாரமாக எழுந்த உணர்ச்சிப் பெருவெள்ளத்தின் முன்பு இந்த 'சிறு' மரணங்கள் அற்ப விஷயங்கள் என்று எழுபது வருடங்களாக நமக்குக் கூறப்பட்டது. இன்று புரட்சிவெள்ளம் வடிந்து வண்டலும் உலர்ந்துவிட்டது. இந்த விஷமுள் மேலும்மேலும் முனைகொள்கிறது. ட்ராட்ஸ்கி எழுதும்போது இம்முடிவை எடுத்தது லெனின்தான் என்று ஸ்வெஸ்திலோவை மேற்கோள் காட்டித் தெளிவாகவே குறிப்பிடுகிறான். அம்முடிவை வெளிப்படையாக எடுக்கும் துணிவு லெனினுக்கு இருக்கவில்லை. இதுதான் தொடக்கம். இதன்மூலம் போல்ஷவிக்குகள் பல தடைகளை ஒரே தாவலில் தாண்டினார்கள். எதையும் செய்வதற்கான சுதந்திரமும் வலிமையும் அவர்களுக்குக் கிடைத்தது. மென்ஷவிக்குகளை வேட்டையாடினார்கள். கசாக்குகளையும் குலக்குகளையும் அழித்தொழித்தார்கள். குரொன்ஸ்ட்ராட் கிளர்ச்சி மீது ட்ராட்ஸ்கி தலைமை தாங்கி நடத்திய அடக்குமுறையே ரஷ்ய வரலாற்றின் முதல் வெகுஜனப் படுகொலை. ஆரம்பத்தில் போல்ஷவிக்குகளை வெல்ல முடியாதவர்களாக ஆக்கியது இந்த மனத்தடையின்மையே. ஆனால் ஒரு கட்டத்தில் அவர்கள் வியப்புடன், பேரச்சத்துடன், பதைபதைப்புடன் ஒன்றைக் கண்டடைந்தார்கள். அவர்கள் அனைவருமே ஓர் 'அறமற்ற' பிராந்தியத்திற்கு வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு முன்பாக

தடையின்மையின் வெட்டவெளி என்றால், முதுகுக்குப் பின்னால் பாதுகாப்பின்மையின் வெட்டவெளி. வெட்டவெளியில் நிற்பது சாதாரண விஷயமல்ல. படுகொலை யந்திரம் பாரபட்சமற்றது என்பதை அவர்கள் அறிந்தார்கள். ட்ராட்ஸ்கி கொடூரமாகக் கொல்லப்பட்டான். ஆனால் அவன் ஆடிய ஆட்டத்தின் விதிப்படி அது பரிபூர்ணமாக நியாயப்படுத்தப்படக் கூடிய ஒரு முடிவுதான். ட்ராட்ஸ்கிதான் முதல்முதலாக 'புரட்சிகர அறம்' பற்றி பேசியவன். பிற அறங்களை அந்தப் பேரறம் பூமியிலிருந்து அகற்றும் என்று அவன் கூறினான். அவனது நியாயங்களின்படித்தான் ஸ்டாலின் தன் படுகொலைகளை எல்லாம் செய்து முடித்தான். வலுவான வாதங்களை, அறுபது வருடம் உலகில் சரிபாதியை நம்ப வைக்குமளவு துல்லியமான காரணங்களை, நிபுணர்களின் உதவியுடன் ஸ்டாலின் உருவாக்கினான். தருக்கபூர்வமானதெல்லாம் உண்மையென்றும், உரிய காரணங்கள் உடையதெல்லாம் நியாயம் என்றும் நம்புவதே அறிவைப் பேதமையின் உச்சமாக ஆக்குகிறது. துரதிர்ஷ்டவசமாக பூமியின் அறிஞர்கள் ஏறத்தாழ அனைவருமே அப்படி நம்புகிறவர்கள்தான். என்ன வித்தியாசம் என்றால், நாங்கள் கூறும் தருக்கங்களும் காரணங்களும் மேலும் துல்லியமானவை என்று அவர்கள் கூறுவார்கள்.

எந்த சித்தாந்த முறைமையின் அடிப்படையிலும் நான் ஸ்டாலின் காலத்துக் கொடுமைகளைக் கண்டிக்கவில்லை. மானுடப் பொது அறத்தின் முன் அவன் செய்தது பெரும்பாவம் என்று என் ஆன்மா கூறுகிறது. என்னைப் படைப்பாளியாக ஆக்குவது – என் மூளையை மீறி - அந்த ஆன்மாவின் இயக்கமேயாகும். அம்பு பட்டு விழுந்த பறவையைக் கண்டு கவிஞனின் அடிவயிற்றிலிருந்து எழுந்த சொற்களே ஆதி கவிஞனின் ஆதிவரிகள். 'மா நிஷாத' – கொடியவனே வேண்டாம்! அது கலைஞனின் அடிப்படை மன எழுச்சியின் சொல் வடிவம். கவிதையில் மட்டுமே அதற்கு உரிய சொற்கள் உண்டு.

தன் வாழ்நாள் முழுக்க ஸ்டாலினும் மானுட அறம் பற்றியே பேசி வந்தார் என்பதை இங்கு ஞாபகப்படுத்துகிறேன். தான் செய்த அனைத்தையும் மனிதாபிமானத்தின் பெயராலேயே அவர் நியாயப் படுத்தினார்; அவை தனிமனிதக் கருணைக்கும் மனிதாபிமானத்திற்கும் அப்பாற்பட்ட வரலாற்று ரீதியான மனிதாபிமானமும் கருணையுமாகும் என்றார். தன் மீதான குற்றச்சாட்டுகளை மானுடப் பொது உண்மையின் அடிப்படையில் நிராகரிப்பதாகவே சொன்னார். ஸ்டாலின் மீதான 'அவதூறு'களுக்கு எதிராகவே கம்யூனிசத் தொண்டைகள் அதிகம் வாய்ந்துள்ளன. 'அய்யோ இது அவதூறு!' என்பவன் என்ன சொல்கிறான், அவதூறு என்பது அநீதிகரமானது, உனக்கானாலும் எனக்கானாலும் என்றல்லவா? 'என்மீதான அவதூறு ஓர் அநீதி; நான் செய்யும் அவதூறு என் அடிக்கோலியலின்படி ஒரு போராட்ட ஆயுதம்' – இப்படி நீங்கள் அவர்களோயானால் பிறகு நாம் எதைப் பற்றிப் பேசமுடியும்? நீங்களும் நானும் ஏற்கும் பொதுத்தளத்தில், உங்கள் சொற்களுக்கும் என் சொற்களுக்கும் ஒரே அர்த்தம் உருவாகும் மொழிக் களத்தில்தான் நீங்களும்

நானும் பேசிக்கொள்ள முடியும். ஒவ்வொரு சொல்லும் தனக்குப் பின்னால் மானுட அர்த்தம் என்ற பெரும் பின்னணியைக் கொண்டுள்ளது. வாழ்வின் சுந்தர்ப்பங்களில் அந்த அர்த்தம் தன்னைப் புதிதுபுதிதாகப் பிரதியெடுத்த படியே உள்ளது; அவ்வளவுதான். சொற்களை மறுப்பது எளிதல்ல. ஒரு சொல்லைக் கடைந்தெடுக்கப் பல்லாயிரம் ஆண்டுகளை, ரத்தத்தை, கண்ணீரை, வியர்வையை மானுடகுலம் செலவிட்டுள்ளது. அன்பு, கருணை, நீதி, தியாகம், சமத்துவம், உரிமை - இவையெல்லாம் சொற்கள்கூட அல்ல, இவை மானுட ஒப்பந்தங்களின் சாரங்கள். அறங்கள். இந்த ஒவ்வொரு சொல்லும் ஒரு கடற்சங்குபோல. காதோடு சேர்த்து வைத்தால் கடலலை ஒலி கேட்கும். நண்பரே, அது உதிரக் கடலின் அலை.

என்னால் தொடர்ந்து எழுத முடியவில்லை. கைகளுக்கு பலக்குறைவு ஏற்படுகிறது. மனம் தனிமைகொண்டு கனக்கிறது. இதை இப்படியே விட்டுவிட்டு எழுந்து சென்று ஜன்னல் வழியாக இருண்டு வெளுத்த இரவை பார்த்து நிற்கிறது என் மறுபாதி. உலகில் கோடானுகோடி ஏழை மக்கள் இன்னும் ஈவிரக்கமின்றி சுரண்டப்படுகிறார்கள். பசித்தழிகிறார்கள். வதைபடுகிறார்கள். அவமதிக்கப்படுகிறார்கள். கற்பழிக்கப்படுகிறார்கள். கொன்று குவிக்கப்படுகிறார்கள். செய்தித்தாள் ரத்தம் தோய்ந்த பொட்டலக் காகிதம்போல மனதைத் தினமும் திடுக்கிட வைக்கிறது. அநீதியின் கடல் கொந்தளிப்பின்மீது என் தக்கைமிதவையில் சமன்செய்து தள்ளாடி நின்றபடி, அன்பென்றும் நீதியென்றும் தியாகமென்றும் உரிமையென்றும் பேசுகிறேன். அதோ இருளைப் பார்த்து நிற்கும் அவனுடைய தொங்கிய தோள்களை, அவன் விடும் பெருமூச்சின் பாரம்மிக்க அசைவை, பார்க்கிறேன். வாழ்நாளெல்லாம் அவன் கண்டது கசப்பை மட்டுமே எனப் பிற எவரைவிடவும் நான் அறிவேன். மிக அந்தரங்கமாக அவனை மார்போடணைத்து மூடாமூடா என்று கண்ணீர் விடுகிறேன். கொதிக்கும் லாவாக் குழம்பு இந்த பூமி. மேல்பொருக்கு எப்படியோ குளிர்ந்துவிட்டது. தற்செயலாக இருக்கலாம். மிகக் குறுகிய காலத்து அபத்தத் தொடர் விளைவுச் செயலாகவும் இருக்கலாம். அந்த குளிர்ப்பொருக்குமேல் சோலைகளும் சுனைகளும் நிரம்பிய இந்த வாழ்வு உருவாகியுள்ளது. இதோ எரிமலை, பூகம்பம், நில வெடிப்பு. சாக்தேயர் இயற்கையைப் பேரழிவாகப் பார்த்தனர். உதிரபலி கேட்கும் வெறிகொண்ட அன்னையாக. என் மதம் குழந்தையையே கடவுளாக ஏற்கும். அரைஞாண் குலுங்க, சிறுபண்டியசைய, குழல் சுருள் பறக்க சிரித்து வரும் பெண் குழந்தையை.

நண்பரே, என் சொற்கள் உங்களுக்கு எட்டுகின்றனவா? கிறிஸ்துவின் ஆத்மா உருகி எழுந்த சொற்கள் மனுக்குலம் முழுக்க கேட்டன. என் ஆத்மா சஞ்சலம் மிக்கது. எனது தார்மீகம் சமரசக் கறைபடிந்தது. எனது கண்ணீர் குற்றவுணர்வு கலந்தது. எனவே என் குரல் பரிதவித்தபடி மூடிய வாசல்களை தட்டித் தட்டி ஓயும் இரவுப் பாடகனின் களைத்த பாடல் போலிருக்கிறது. இளம் நண்பரே, இந்த இரவில், பூமியிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டதாகப்படும் இந்த தனியறையில், ரவாண்டாவின் பிணமலைகளையும் ஆப்கானிஸ்தானின் உறுப்பிழந்த குழந்தைகளையும், யாழ்ப்பாணத்துப் பிணைக்குழிகளையும் எண்ணி என் இதயம் நொறுங்குகிறது. எப்படி இந்த

துக்கம் என்னுள் முளைத்தது? என்னை அவர்களுடன் பிணைப்பது எது? எந்த சக்தி அவ்வலியை என் வலியாக ஆக்கியது? கண்ணுக்குத் தெரியாத ஓர் ஜடகம். அதையே மானுட அறம் என்கிறேன். அதை அவன் கடவுள் எனலாம். இவன் உதிரம் எனலாம். அதற்குப் பெயரிடும் திறன் மனிதனுக்கு இல்லை.

இந்தப் பூமியில் பெரும் அநீதி நிகழாத கணம் ஒன்று இல்லை. ஆனால் இன்னமும் அநீதியை இங்கு நியாயப்படுத்த முடியவில்லை. சால்ஜாப்பு கூறலாம். தருக்கங்களை அடுக்கலாம். ஆனால் அநீதி அநீதியல்ல என்று ஆவதில்லை. சோவியத் பரிசோதனை மனிதனுக்குக் கற்பிக்கும் பாடம் இதுதான். நீதியை ஒளித்துவைக்க முடியாது. புதைத்துவிட முடியாது. ஏனெனில் நீதி ஒரு இனத்திற்கு, மண்ணிற்கு, வர்க்கத்திற்கு மட்டும் உரியதல்ல. அது மானுடகுலத்திற்குப் பொதுவான ஒன்று. நான் கல்விமான். என்மூளை புழுதிபடிந்த சொற்களின் கிடங்கு. என் சமையற்கார மாமியை நீங்கள் சந்திக்க வேண்டும். சேப்பங்கிழங்குக் கூட்டும் வெண்டைக்காய்ப் பொரியலும் தவிர அவளுக்கு வேறு ஒன்றும் தெரியாது. ஆனால் ஓர் அநீதியை அநீதியல்ல என்று உங்கள் தத்துவ மேதைகள் அத்தனை பேர் சேர்ந்தாலும் அவளை நம்பவைக்க முடியாது. அவளைப்போன்ற அசடுகள், மக்கு ஜென்மங்கள், இப்பூமியில் கோடானுகோடிப் பேர் உள்ளனர். தத்துவம் அவர்களுக்குப் புரிவதேயில்லை. அவர்களுக்குப் புரிவது நீதியின் கண்ணீர் மட்டுமே. ஆயிரம் வருடம் அவர்கள் செய்த பிரார்த்தனையே ஒரு மானுட உடல்மீது கிறிஸ்துவை உருவாக்கி எடுத்தது.

என் எழுத்துக்களினூடாக நான் எக்கருத்தையும் முன்வைக்கவில்லை. எந்த சித்தாந்தப் பேரமைப்பையும் கட்ட முயலவில்லை. கருத்துக்களை அஞ்சி வீட்டுக்குள் பதுங்கிக்கொண்ட ஒரு கோழையின் நடுக்கத்தையே அவை முன் வைக்கின்றன. மேலும் சற்று நுழைந்து பார்த்தால் ஒருவேளை கருத்துக்களால் தோற்கடிக்கப்பட்டவனின் கண்ணீரை நீங்கள் பார்க்கலாம். அந்தக் கண்ணீர் பிற மனிதர்களின் கண்ணீரைத் தேடுவதைக் காணலாம். ஆதிகவியை காளிதாசன் 'கண்ணீரைப் பின்தொடர்ந்தவன்' என்கிறான். இரைஞ்சப் பறவையின், சிதையின், மனிதகுலத்தின் கண்ணீரை. மனிதர்களும் கலைஞர்களும் பின்தொடர்வது கண்ணீரை மட்டுமே. மதச் சித்தாந்திகளால், தத்துவஞானிகளால் அரசியல் பிரசங்கிகளால், பாறைகளாக மாற்றப்படும் சொற்கள்மீது தன் ரத்தத்தைப் பூசி அவற்றைத் துடிக்கும் மாமிசத்துண்டுகளாக ஆக்குவதே எழுத்தாளர்களின் வேலையாகும். பிறிதொருவனுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராகத் தன்னுயிரைத் தரத் தயாராகும் கோடானுகோடிப் புனிதமூடர்கள் இன்னும் இப்பூமியில் உள்ளனர். அவர்களுக்காகவே இலக்கியம் எழுதி வரிக்கப்படுகிறது.

இந்தக் கடிதம் ஒரு வெட்கத்தைத் தருகிறது. என் எழுத்தை மிகுந்த சுயபிரக்ஞையுடனும் சொற்கட்டுப்பாட்டுடனும் எழுதுவதே என் வழக்கம். இக்கடிதம் ஒரு வலிப்புபோல என்னை மீறி நிகழ்ந்து அடங்கி விட்டிருக்கிறது. இதை என்னால் திரும்பப் படிக்கவே முடியாது. எனது மிக

அருவருப்பான அசைவுகளை இதில் நான் பார்க்க நேரலாம். என்னை ப்லவீனமானவனாகப் பார்க்க எப்போதும் நான் விரும்பியதில்லை. என் எழுத்திலுள்ள வலுவான சுயப்பிரக்ஞைக்குக் காரணம் இதுதான் என்று படுகிறது. இந்த உணர்வு என்னில் ஏற்படுவதற்கு என் வாழ்நாளின் மிகச் சிறந்த பகுதியை முழுக்க பலவீனமானவனாக, நடைப்பிணமாகவும் படுக்கை நோயாளியாகவும் கழித்தேன் என்பதுகூடக் காரணமாக இருக்கலாம். மூளைமீது ஓடும் மின்னல்தான் வலிப்பு என்கிறார்கள். உயர்மின்னழுத்த மின்னலால் மின்னூட்டம் தாறுமாறாகி சிதறிக் கிடக்கின்றன என் சொற்கள். இதுவழி ஒரு மின்னல் கடந்து சென்றது என்பதற்கு மட்டுமே இவை சான்றாகும்.

இதை எழுதிவிட்டு நான் அவனிடம் திரும்புவேன். அவன் தோளை ஆறுதலாக மெல்லத் தொடுவேன். திடுக்கிட்டு அவன் திரும்பிப் பெருமூச்சுடன் பார்க்கையில் ஒரு கணமாவது அவன் மனச்சுமையை ஆறுதலடையச் செய்யும் நம்பிக்கை நிரம்பியபுன்னகையொன்றை என்னால் அளிக்க முடியும் என்றுபடுகிறது. ஆனால் நள்ளிரவுக்குப் பின் அவன் மீண்டும் விழித்தெழக் கூடும். புண்களை வருடியபடி விடியவிடிய கண் விழித்துப் படுத்திருக்கக் கூடும். அவன் ஒருபோதும் நிம்மதி கொள்வதில்லை.

தங்கள்,

எஸ். எம். ராமசாமி

♦

2

அருணாசலம் தயங்கி நின்றான். அந்த வீடுதானா என்று உறுதியாகக் கூற முடியவில்லை. அப்பகுதியில் எப்போதோ ஏதோ கனவில் நடமாடியதுபோல ஞாபகம் இருந்தது. அம்மன் கோயில் ஆபாசமான கான்கிரீட் கூம்புடன் இருந்தது. ஒரு அய்யர் அந்தவேளையிலும் ஏதோ செய்து கொண்டிருந்தார். சாலையில் ஓரிரு லாரிகள் ஒதுங்கி நிற்க, ஆட்டோ ஒன்று பீறிட்டுச் சென்றது. காம்பவுண்டுக்குள் மூங்கில்புதர் ஒன்று காற்றில் சிலுசிலுத்தது.

பான்ட் அணிந்த, பிராமண முகமுள்ள பெண் ஸ்கூட்டரில் வந்தாள். முன்னிருக்கையில் ஒரு பையன். ஒல்லியான, சுறுசுறுப்பான, அறிமுக மான முகம். ''யாரைப் பார்க்கணும்?'' என்றாள் அந்தப் பெண். பையன் ''நீங்க எஸ்.எம்.ராமசாமிங் கிறவரைத்தானே பாக்கணும்?'' என்று கேட்டான். ''குட்டி நீ சும்மா இரு'' என்றாள் பெண். ''அவுங்க தாடி வச்சிருக்காங்கல்ல'' என்று பையன் மேலும் பேச முற்பட, பெண் அவனைப் பின்புறமாக மெல்லக் கிள்ளி அடக்கியபடி ''உள்ள வாங்க'' என்றாள்.

''என் பேரு அருணாசலம். சாரைப் பாக்கணும்'' என்றான். உள்ளே சென்றதும் நினைவு தெளிவு பெற்றது. தயக்கத்தின் கனம் கூடியது. திரும்பி விடலாம் என்றுபட்டது. தீவிரமான விவாதங் களுக்கு அவன் தயாராக இல்லை. ராமசாமியுடன் தவிர்க்க முடியாதபடி தீவிரம் இணைந்துள்ளது. சஜகமாக இருக்கவே அவன் விரும்பினான். ஆனால் அந்தக் குறிப்புகளுடன் தனித்து இருக்கவும் அஞ்சினான். வெளியே கிளம்பினால் மனிதர்கள் சம்பந்தமற்றவர்களாக நடமாடினார் கள். அவனுக்கு ராமசாமியிடம் மட்டும்தான் பேசமுடியும் என்று பட்டது. ஏன்? மறைமுகமாக வீரபத்ரபிள்ளையைப் பற்றியே அவன் பேச விரும்புகிறான்போலும். வேறு காரணம் ஏதுமில்லை. மூச்சு திணறுவது போலப் பட்டது.

இன்னொரு பெண் வந்து, ''சார் மாடியில இருக்கார். கூட ஒருத்தர் இருக்கார். நீங்க தனியாப் பாக்கணுமா?'' என்றாள்.

''இல்ல, நான் பிறகு வாறேன்.''

அருணாசலத்திற்கு ஆறுதல் ஏற்பட்டது.

''உங்களை மேல வரச் சொன்னார்.''

''இல்ல, நான் வாறேன்'' என்று திரும்பினான். எதை அஞ்சுகிறேன்? எதிர்கொண்டால்தான் என்ன? ராமசாமி வீரபத்ரபிள்ளை குறிப்புகள் பற்றி என்ன சொல்லப்போகிறார் என்று அறியாமல் அவனால் முழுமையாகப் பின் திரும்ப முடியாது. மனம் கற்பனையில் அவ்வுரையாடலை நிகழ்த்த ஆரம்பித்துவிடும்.

''மேல வரச்சொன்னார்'' என்றாள் அப்பெண்.

''சரி'' என்று உள்ளே நுழைந்தான். சற்று இருண்ட ஹாலைத்தாண்டி உள்ளே போய் விரிந்த டைனிங்ஹால் வழியாக இடப்பக்கம் போனான். வெளியே இறங்கி, விலாப்பக்கம் ஏறிய மாடிப்படிகளைத் தாண்டி, மொட்டைமாடியை அடைந்தான். செம்மண்ணிறத் தரையோடுகள் பரவிய தரையும், காற்றின் அலைகளும், திறந்த வானமும் சேர்ந்து மனதை ஆசுவாசம் கொள்ளவைத்தன. மொட்டைமாடி நடுவே ஓட்டுக்கூரையின் நுனி செந்நிறக் கோபுரம்போல நின்றது. அதனருகே நாற்காலிகளில் ராமசாமியும் ஒரு இளைஞனும் அமர்ந்திருந்தார்கள். அருணாசலம் வணக்கம் சொன்னதும் ராமசாமி நட்பில் மலர்ந்த புன்னகையுடன் ''வாங்க'' என்றார். இளநீலத்தில் டி ஷர்ட் அணிந்திருந்தார். மூக்குக் கண்ணாடிச் சில்லுமீது மாலை ஒளியின் சாயம் இருந்தது. அவர் எழுந்து ஓர் இரும்பு நாற்காலியை விரிக்க முயல அவன் வாங்கி அதை விரித்தான்.

''சோர்வா இருக்கிற மாதிரி இருக்கு'' என்றார் ராமசாமி.

''இல்லியே'' என்றான் அருணாசலம். ''சரியாத் தூக்கம் இல்லை. அதான்.''

ராமசாமி புன்னகையுடன் மேலே பேச இருந்தால் பேசு என்பதுபோல பேசாமல் அமர்ந்திருந்தார். விரல்களால் நாற்காலி கைமீது தாளமிட்டார். வேறெங்கோ பார்த்தபடி சற்று அரைக்கவனத்துடன் இருப்பது போலவும் பட்டது. அருணாசலம் அந்த இளைஞனைப் பார்த்தான். குட்டைத்தாடி கரிய கற்றையாக அடர்ந்த வட்டமுகம். மெல்லிய கண்ணாடி. சில நிமிடங்கள் கழிந்தன. அருணாசலம் பேசப் போவதில்லை என்று உணர்ந்ததுபோல ராமசாமி ''உங்க விஷயம்தான் பேசிட்டிருந்தோம்'' என்றார்.

''அப்படியா?''

''உங்க விஷயம்னா வீரபத்ரபிள்ளைபத்தி. அந்தக் குறிப்புகள் பத்தி இவர்ட்ட சொல்லிட்டிருந்தேன். இவர்தான் அருணாசலம்.''

இளைஞன் நட்புடன் சிரித்தான்.

''இவர் கெ.என்: ஜோணின்னு... மலையாள எழுத்தாளர். ரெண்டு புஸ்தகம் எழுதியிருக்கார். நக்சலைட் இயக்கத்தில இருந்திருக்கார். இப்பகூட சில இடதுசாரி இயக்கங்கள்ல சம்பந்தப்பட்டிருக்கார். நம்ம ஊர்தான்...''

''கதை எழுதுவீங்களா?'' என்றான் அருணாசலம்.

''இல்லை, அரசியல் கட்டுரைகள்தான்.''

அருணாசலம் தலையசைத்தான்.

''திடீர்னு ஏன் உங்களுக்கு இப்படி ஒரு அக்கறை வந்தது?'' என்றான் ஜோணி.

''சும்மாதான்.''

''இந்த ஒரு நபர் விஷயத்தில மட்டும் உங்க மனசாட்சி விழித்தெழ ஏதாவது காரணம் உண்டா?''

அருணாசலம் கோபம் கொண்டான். ஆனால் என்ன சொல்வது என்ற தெரியவில்லை. ''இல்லை எனக்கு ஒரு ஆர்வம் வந்தது...'' என்றான்.

''அரசியலியக்கங்களில் இந்த மாதிரி விஷயங்கள் ரொம்ப சகஜம். ஒவ்வொரு இயக்கத்திலயும் ஒவ்வொரு பத்தாண்டிலயும் ஒரு சதவீதம் உறுப்பினர்கள் வெளியே தள்ளப்படறாங்கன்னு சொல்லலாம். அதுக்கும் மேலே போனாத்தான் பிரச்சினை இருக்குன்னு அர்த்தம்.''

''இது நியாயம்னு சொல்றீங்களா?''

''அப்படி இல்லை. நியாய அநியாயம்னு பாக்கிறதில அர்த்தமில்லை. இதில பல சிக்கலான உள்ளோட்டங்கள் இருக்கு. பத்து வருஷமா இதை கூர்ந்து கவனிச்சுட்டு வாறேன். ஆண் பெண் உறவுக்கு அடுத்தபடியா சிக்கலான விஷயம் இயக்கங்களுக்கும் தனிமனிதர்களுக்கும் இடையேயான உறவுதான். அடையாளப் பிரச்சினை, ஆதிக்கப் பிரச்சினை, அகங்காரப் பிரச்சினை எல்லாம் இருக்கு இதில. ஒவ்வொரு கேஸும் ஒரு தனி உலகம். ஆனா நம்ம உளவியலாளர்கள் யாரும் இந்த உறவைப் பத்தி அதிகமா யோசிச்சதில்லை.''

அருணாசலத்தால் உட்கார முடியவில்லை. அசைந்து அமர்ந்தான். நாற்காலி கிரீச்சிட்டது. ராமசாமி திரும்பிப் பார்த்தார். அவனுக்கு சிறிது கூச்சம் ஏற்பட்டது.

''இயக்கம், தனிமனிதங்கிற உறவு ஒண்ணும் புதிசு இல்லை'' என்றார் ராமசாமி. ''சமூகமும் தனிமனிதனும்ங்கிற உறவோட ஒரு மாறுபட்ட வடிவம்தான் அது. சமூக அமைப்புகளுக்கும் தனிமனிதர்களுக்கும் இடையேயான உறவு விரிவா ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கு.''

''அந்த உறவுக்கும் இதுக்கும் இடையே மிக முக்கியமான வித்தியாசம் ஒண்ணு இருக்கு: லட்சியவாதம்'' என்றான் ஜோணி. ''சமூகத்திற்கும் மத்த அமைப்புகளுக்கும் பொதுவானதா சில விதிமுறைகளும், நம்பிக்கைகளும், நோக்கங்களும் மட்டும்தான் இருக்கு.''

''லட்சியவாதம் இல்லைங்கிறீங்களா?''

''லட்சியவாதத்தோட சில அம்சங்கள் உண்டு. அதெல்லாம் நீண்ட காலப் பழக்கத்தில சில விதமான குறியீடுகளா மாறியிருக்கும். தமிழ்

சமூகத்தில் தாலி மாதிரி. இல்லேன்னா சடங்குகள். ஆனா இயக்கம்கிறது முழுக்க முழுக்க இலட்சியவாதத்தால மட்டும் கட்டியமைக்கப்பட்டு, முன்னெடுத்துப் போகப்படற ஒரு விஷயம். இயக்கத்திற்கு ஒரு நிறுவன அமைப்பு இருக்கலாம். பற்பல நிறுவன அமைப்புகள்கூட இருக்கலாம். ஆனா இயக்கம் வேற, நிறுவனங்கள் வேறதான். எல்லா நிறுவன அமைப்புகளிலயும் விதிமுறைகள் இருக்கு; கூடவே விதிவிலக்குகளும் இருக்கும். ராணுவத்தில் உருக்கு மாதிரிக் கட்டுப்பாடு இருக்கும். ஆனா ஜவான்கள் ராத்திரியில் தண்ணியடித்துவிட்டு மேஜரின் மனைவியைப் பத்தி ஆபாசமா பாடி ஆடலாம். அதாவது இளைப்பாறலுக்கு இடம் இல்லாத அமைப்பு ஏதும் இல்லை. கற்புக்கு விபச்சாரம் மாதிரி. ஆனா இயக்கங்களோட கதயே வேற. அது ஏரோப்ளேன் மாதிரி. புரப்பல்லர் காத்தாடிதான் இலட்சியவாதம். அது பயங்கர வேகத்தில சுத்திட்டே இருக்கணும். முன்னால பாய்ஞ்சுட்டே இருக்கிறவரைக்கும்தான் மிதக்கவும் முடியும். கொஞ்சம் தளர்ந்தாகூட கீழே சரிய ஆரம்பிச்சிடும். என்ன சொல்றீங்க அருணாசலம் சார்?''

அருணாசலம் திடுக்கிட்டு ''என்னது?'' என்றான்.

''இன்னைக்கு உங்க கட்சி ஒரு இயக்கம் இல்லை, நிறுவனம்தான். ஏரோப்ளேன் இல்லை, வீடுதான் இல்லையா.''

''தெரியல்ல'' என்றான் அருணாசலம். அவனுக்கு எதுவும் புரியவில்லை. கிளம்பலாம் என்றுபட்டது. ஆனால் ராமசாமி என்ன நினைப்பார்?

ராமசாமி ''அப்ப பிரச்சினை இலட்சியவாதத்துக்கும் அன்றாட வாழ்வுக்கும் உள்ள பிரச்சினைதான்'' என்றார்.

''கிட்டத்தட்ட'' என்றான் ஜோணி. ''வருஷக் கணக்கில இலட்சியவாத உத்வேகத்தை தக்கவைச்சுக்க நம்மால பெரும்பாலும் முடியறதில்லை. குறிப்பா இளமைப் பருவத்தில இருக்கிற தீவிரம் நாற்பது வயசுவாக்கில சரசரன்னு சரியத் தொடங்குது. நாப்பது வயசு ரொம்ப சிக்கலான ஒரு காலகட்டம் சார். அப்ப என்ன நடக்குதுன்னே சொல்லமுடியாது. பலசமயம் பலருக்குத் தன்னுடைய சொந்த இருப்பையும் வாழ்க்கையையும் மையமாக்கியே எல்லாத்தயும் யோசிச்சுப் பாக்கிற மனநிலை வந்திடுது. லாபநஷ்டக் கணக்கு வந்திடுது. அப்ப ரொம்ப சூட்சுமமா இலட்சியவாதத்துக்குள்ள ஒரு விரிசல் விழுந்திடுது. அதை அந்தரங்கமா உணர ஆரம்பிக்கிறப்பத்தான் அவிசுவாசத்தைப் பயந்து மூர்க்கமா ஜெபம் பண்ற பக்தன் மாதிரி சகல சக்தியாலயும் நம்மைத் தூண்டிவிட்டு வெறியேத்திக் கிடறோம். அந்த சக்தி கொஞ்ச நாள் ஓடும். சில சமயம் அம்பது வயது வரைக்கும்கூட. சட்டுனு எரிபொருள் தீர்ந்துபோய் வண்டி குளிர்ந்து நின்னுடும். இதான் ஆரம்பத்தில ரொம்ப ஆச்சரியமா நமக்கு தோற்றமளிக்குது. திகுதிகுன்னு கொழுந்துவிட்டிருக்கிற தோழர் திடீர்னு அணைஞ்சு குளிர்ந்து போயிடறார். சார், எங்க தோழர் ஒருத்தர் இப்ப பெரிய ஜோசியர் தெரியுமா?''

ராமசாமி சிரித்தார். ''வேற வகையான ஜோசியம்.''

ஜோணியும் சிரித்தான்.

''இயக்கங்களாலகூட வருஷக் கணக்கில தொடர்ந்து உத்வேகத்தை தக்கவைச்சுக்க முடியறதில்லை'' என்றான் ஜோணி. ''உடம்பில ஒரு பகுதி தொடர்ந்து கல்லா மாறிட்டிருக்கிற மாதிரி இயக்கங்களோட ஒரு பகுதி நிறுவனமா ஆயிட்டே இருக்கு. நிறுவனங்களுக்கு வேறு வகையான ஆட்கள் தேவை. புரட்சிக்காரன் கட்சி அலுவலகத்தை நிர்வாகம் பண்ண முடியாது. உத்வேகத்தை இழக்கிற தோழர்கள் அப்படியே ஓரே படிஞ்சு இந்த நிறுவனங்களில சேர்ந்துட்டே இருக்கிறாங்க. இவங்களுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் இடையே ஒரு போர் நடந்திட்டே இருக்கு. உத்வேகமான இயக்கங்களில நிறுவன ஆசாமிகள் வெளியே தள்ளப்படுவாங்க. உத்வேகமில்லாத இயக்கங்களில இலட்சியவாதிகள் வெளியே தள்ளப்படுவாங்க. இது ஒரு ஆட்டவிதி. அவ்வளவுதான். முப்பது வருஷம் கட்சிக்காகத் தியாகம் பண்ணினவங்களைத் தூக்கி வீசும் இயக்கங்கள் உண்டு. தங்களோட சிறந்த புதிய உறுப்பினர்களைத் தூக்கி வீசற இயக்கங்களும் உண்டு.''

''இங்க பிரச்சினை அதில்லை'' என்றார் ராமசாமி. ''இவர் வெளியேற்றப்பட்ட விதம், அதுக்கான காரணம் விவாதத்துக்கே வர முடியாமப்போனது, அவரை பிறகு அப்படியே இருட்டடிப்பு செஞ்சது – இதெல்லாம்தான் பிரச்சினை.''

''இயக்கம்கிறது ஒரு உளவியல் ரீதியான அமைப்பு. அதிலயும் குறிப்பா இலட்சியவாதம் மாதிரி மனுஷனுக்கு சகஜமா இல்லாத ஒரு உத்வேகத்தை சார்ந்து கட்டியெழுப்பப்பட்டிருக்கிற ஒண்ணு அது. அதைப் பாதுகாக்கணும்னா எப்பவும் ஒரு மூர்க்கம் இருந்தே ஆகணும். நான் ஒரு இயக்கத்தோட தலைவனா இருந்தா ஒருபோதும் சந்தேகவாதிகளை அதுக்குள்ள இருக்க விடமாட்டேன். சந்தேகம்னு ஒண்ணு சாத்தியங்கிறதையே என் இயக்க உறுப்பினர்கள் அறியக் கூடாதுன்னுதான் நினைப்பேன். ஒரு சந்தேகி ஒரு பெரிய இயக்கம் முழுக்க சந்தேகத்தோட விதைகளை விதைச்சுட்டுப் போயிடுவான். அவனை முழுசா ஒழிச்சுக் கட்டறதத் தவிர எனக்கு வேற வழி இல்லை.''

ராமசாமியின் கண்கள் மங்கின. அவர் அதை நுட்பமாக உள்வாங்காதது போல ஒரு தோற்றம் ஏற்பட்டது. ஆனால் அவர் உள்ளூர சீண்டப்பட்டு விட்டார் என்று உள்ளுணர்வால் அருணாசலம் அறிந்தான்.

''அப்ப பொய், அதாவது அவதூறு ஒரு நல்ல ஆயுதம்ங்கிறீங்க...''

''ஆமாம், எங்க எதிரிகள்கிட்டேயும் அது இருக்கிறவரைக்கும் எங்களுக்கும் பொய் ஒரு முக்கியமான ஆயுதம்தான்...''

ராமசாமி தலையை ஆட்டினார், அப்படியா என்பதுபோல் பிறகு கண்ணாடியைக் கழற்றி கண்களை அழுத்திவிட்டுக்கொண்டார். அருணாசலத்தைப் புதிதாகப் பார்ப்பது போலப் பார்த்தார். ''உங்களுக்கு இந்தக் கைப்பிரதிகள் உதவியா இருந்ததா?'' என்றார்.

''ஆமா.''

''சில இடங்கள்தான் என்னை ரொம்ப பாதிச்சது'' என்றார் ராமசாமி. ''திரும்பிப் பார்க்கிறப்ப வாழ்க்கை ஒரு பெரிய பாதை மாதிரி தெரியுது. அதில் மிகச் சில விஷயங்கள் மேலதான் இப்போ ஆர்வம் வருது. என் பழைய கம்யூனிஸ்டு வாழ்க்கை பற்றி நினைக்க அதிக உற்சாகமா இல்லை. ஆனா என் சின்ன வயசு அனுபவங்கள்... உதாரணமா திற்பரப்புக்கு ஒருமுறை போய் அருவில யானையைக் குளிப்பாட்டறதப் பாத்தோம், நானும் என் மாமாவும். அற்புதமான ஓவியம் மாதிரி இருக்கு. யானை அப்படியே பாறையா ஆயுடுச்சு. பாறைகளெல்லாம் யானை மாதிரி தெரிய ஆரம்பிச்சிடிச்சு. அதுமாதிரி சில அற்புதமான படங்கள் இவர் குறிப்புகளில இருக்கு. அதுதான் எனக்கு முக்கியமா பட்டது...''

''ரொம்ப சீரழிஞ்சிருக்கார்'' என்றான் ஜோணி.

''இல்லைன்னுதான் சொல்லணும்'' என்றார் ராமசாமி. ''ரொம்ப கீழ்த்தரமான அனுபவங்கள். ஆனா அதையெல்லாம் பதிவு செஞ்சது யார்? ஒவ்வொரு அனுபவத்தையும் விலகி நின்னு கூர்ந்து கவனிச்சுக் குறிச்சுக்கிறது யார்? அதான் வீரபத்திர பிள்ளை. அவரோட ஆளுமையே அதுதான். சத்தமேயில்லாம ஒரு பெரிய விவாதத்தில ஓரமா உக்காந்திருப்பார். அவர் அங்க இருக்கிறதயே எல்லாரும் மறந்திடுவாங்க. அந்த மாதிரி ஆள் அவர். அந்தக் குறிப்புகளை அவர் விரிவா எழுதியிருக்கலாம்...''

''நாடகங்கள் உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டான் அருணாசலம். மிக எளிய அந்தக் கேள்வியை ஏன் அப்படி உத்வேகத்தால் நடுங்கும் உதடுகளுடன் கேட்கிறோம் என்று அவனுக்குப் புரியவில்லை.

''பிடிச்சிருக்குண்ணுதான் சொல்லணும். முதல் விஷயம் வீரபத்ரபிள்ளை எல்லாத்தயும் ரொம்ப முன்னாடி, இன்னைக்குள்ள எந்த நாடக உத்திகளும் அறிமுகமாகாத காலத்தில எழுதியிருக்கார். நாடகங்களை உணர்ச்சி மிகுந்த உரையாடல்களா அமைக்கிறது அந்தக்கால பாணி. இந்த நாடகங்களில தல்ஸ்தோயோட 'இருட்டின் வலிமை' நாடகத்தோட பாதிப்பு ரொம்ப இருக்கு. நிறைய சொல்லியாகணும்ங்கிற தவிப்பு இருக்கு இவர்ட்ட. நிறைய தகவல்கள். அன்னைக்கு அந்தத் தகவல்கள்லாம் ரொம்ப அபூர்வமான, முக்கியமான தகவல்களா இருந்திருக்கணும். பனிப்புயல்னு ரெண்டு நாடகம் இருக்கு இல்லையா''

''பனிக்காற்று முதல் நாடகம். உறைபனி இரண்டாம் நாடகம்.''

''முதல் நாடகம் யதார்த்தமா இருக்கு. ரெண்டாம் நாடகம் கொஞ்சம் சர்-ரியலிசப் பாணியில. அந்தப் பனிப்பாளம். வெறும் அலிகரின்னும் சொல்லலாம். கிடைச்ச தகவல்களை வைச்சு கற்பனையிலயே பனிக்காலத்தை உருவாக்கியிருக்கார்ங்கிறது பெரிய விஷயம்தான். அந்த கதாபாத்திரங்களோட விட்டேத்தியான மனோபாவம், பிறர் மரணத்து மேல ஏற்படற அலட்சியம், மரணத் தருவாயிலயும் சிரிக்க முயற்சி பண்றது எல்லாம் ரொம்ப உக்கிரமா இருக்கு. அதே சமயம் கொஞ்சம் மிகையாகவும். தல்ஸ்தோய் வரக்கூடிய ஒரு நாடகம் இருக்கே...''

''புனிதர்களும் மனிதர்களும்'' என்றான் அருணாசலம்.

''ஆமா, அது ஒரு வசன நாடகம். காட்சிரீதியா அதை கற்பனை செஞ்சுக்க முடியலை. பெர்ட்னார்ட் ஷா நாடகம் மாதிரி. குறிப்பா வரலாறு பத்தில்லாம் பேசற இடம் ஷாவோட 'மேன் ஆப் டெஸ்டினி' நாடகம் மாதிரி இருக்கு. பொதுவா இவரோட நாடகங்களில, ஒரு மூர்க்கம், மிதமிஞ்சிப் போற தன்மை, இருக்கு. கட்டுங்கடங்காமப் போற எதுவும் கலையொருமையைப் பாதிக்கும். கலைன்னா அழகுதான். ஆனாலும் கலையில அழகுகூட கட்டுக்கடங்கித்தான் இருக்கணும்...''

''இதுகூட உங்களோட விசேஷமான பார்வையத்தான் காட்டுது'' என்றான் ஜோணி. ''உங்க அழகியலையே கட்டுப்பாட்டுவாதம்னு பேர் வச்சிடலாம்னு படுது. கலை, வாழ்விலிருந்து உன்னதங்களை உருவாக்க முயற்சி பண்ற ஒரு மன எழுச்சிதவிர வேறு இல்லை. கட்டுப்படுத்தறப்ப அந்த எழுச்சியத்தான் கட்டுப்படுத்தறோம். அப்ப வேறு என்ன சிறப்புகள் இருந்தாலும் கலைக்கு அதோட அடிப்படையான நோக்கம் இல்லாம ஆயிடறது. சப்ளிமேஷன் இல்லாம சிறந்த கலை இல்லை. கட்டுப் பாடில்லாத தீவிரம், போதை, மூர்க்கம் இதெல்லாம் இல்லாம சப்ளிமேஷன் சாத்தியமும் இல்லை.''

''சப்ளிமேஷன் வேணும்தான். ஆனா அதை சூட்சுமமான மொழிச்சலனம் வழியா நடத்திக் காட்டறதுதான் இன்னைக்குக் கலைஞனோட சவால்... ''

''மூர்க்கமும் கட்டுப்பாடில்லாமையும் இல்லேன்னா தல்ஸ்தோயும், தஸ்தயவேஸ்கியும் உண்டா?''

''அவங்க ரொமான்டிக் யுகத்தோட கடைசிக் கட்டத்தில நிற்கிறவங்க. அந்தக் காலம் முடிஞ்சாச்சு.''

''இல்லை. நீங்க சொல்ற சமநிலையோட காலம்தான் முடியப் போகுது. அய்யாயிரம் வருஷமா கலை பித்தா, மனப்பொங்குதலாத்தான் இருந்து வந்திருக்கு. கட்டுப்பாடுள்ள கலைங்கிறது இடையில ஒரு அம்பது வருஷம் மனுஷ மனம் முயற்சி பண்ணிப்பாத்த ஒரு வழிமுறை. அதுக்குக் காரணம் இயந்திரங்களும் தொழிற்புரட்சியும் பெளதிகவாதமும்தான். அந்தக்காலம் முடிஞ்சாச்சு. சமநிலை போகக்கூடிய தூரத்தைவிட பித்து போகக்கூடிய தூரம் அதிகம்.''

ராமசாமி புன்னகைத்தார். ''எனக்கு இந்த நாடகங்களோட வேகம் கொஞ்சம் மிகைன்னுதான் படுது...''

''காரணம் நீங்க அதை அன்றாட வாழ்வோட ஒப்பிடறீங்க. நாடகமேடையோட உணர்வுரீதியான ஒழுங்குக்கு அதில உள்ள சம்பவங்கள் எந்த அளவு பொருந்தி வரணும்னு மட்டும்தான் நாம பாக்கணும். இந்த நாடகங்கள்ல ஒருவிதமான இளாசிக் தன்மை இருக்கு. அது ரொம்ப முக்கியமான விஷயம்னுதான் படுது'' என்றான் ஜோணி.

''என்னுடைய கணிப்பில அந்த அபத்த நாடகம்தான் குறிப்பிடும்படியா இருக்கு. அதில உள்ள நகைச்சுவை கொஞ்சம் தரந்தாழ்ந்ததா இருந்தாகூட பல இடங்கள் அற்புதமான ஒரு அபத்த நிலையில இருக்கு... இப்பகூட இந்த தளத்தில ஒரு மலையாள அபத்த நாடகம் இருக்குன்னு சொல்லிட முடியாது.''

''சி.ஜெ. தாமஸ் ஒரு அபத்த நாடகம் எழுதியிருக்காரே'' என்றான் ஜோணி.

''ஆமா, இதுவும் கிட்டத்தட்ட அதே காலகட்டம்தான். அப்பதான் அபத்தநாடகம்ங்கிற கருத்து மேல்நாட்டில உருவாகுது. பெக்கட் எல்லாம் எழுத ஆரம்பிக்கிற காலகட்டம். சி.ஜெ. நாடகத்தில வாழ்க்கையோட பொதுவான அபத்தம் பற்றிய ஒரு சித்திரம்தான் இருக்கு. அதுல ஒரு சின்ன புத்திசாலித்தனம் தெரிஞ்சிட்டே இருக்கு. அப்புறம் அபத்த நாடகம்னாலும் ஒரு கட்டுக்கோப்பு இருக்கு அதுக்கு. இது சுத்தமான அபத்த நிலையில இருக்கு. கதாசிரியரே நாடகத்தில மாட்டிக்கிறார். ஒரு கட்டத்தில நாடகமான்னுகூட சந்தேகம் வந்திடுது. எல்லாத்துக்கும்மேல வரலாற்றிலயும், மானுட சிந்தனையிலயும் மையத்தில இருக்கிற அபத்தத்தையும் வெறுமையையும் இந்த நாடகம் ஒரு அளவு வரை சொல்லுது.''

''எனக்கு ரொம்ப பயமா இருக்கு. அதைப் படிக்கிறப்ப'' என்றான் அருணாசலம்.

''பயமா?''

''ஆமா, அதுக்குள்ள நானும் மாட்டிகிடற மாதிரி.''

'அப்படியா?'' என்றார் ராமசாமி. ஆனால் அதை அவர் தொடரவில்லை.

''எனக்கு ஒண்ணுு புரியல்லை''என்றான் ஜோணி. ''இந்திய அரசாங்கம் போரில் கொன்றவர்களைவிட அதிகமானவர்களை சொந்த நாட்டுக்குள்ள, போலீஸ் நடவடிக்கைகளில தீர்த்துக் கட்டியிருக்கு. வங்காளத்தில மட்டும் நக்சலைட்டுகள்னு சொல்லிப் பத்தாயிரம் பேரைச் சுட்டுத்தள்ளியிருக்காங்க. அவங்கதான் வங்காளத்தோட மிகச் சிறந்த இளைஞர்கள்னு சொன்னா யாருமே மறுக்க முடியாது. அந்தப் படுகொலைக்கு அரசாங்கத்துக்கு சகல ஒத்துழைப்பும் கொடுத்து, கிராமம் கிராமமா கூட்டிக்கிட்டுப் போய் காட்டிக் குடுத்தது இரு கம்யூனிஸ்டு கட்சிகள். ஏன் நம்ம மனிதாபிமானிகளுடைய ரத்தம் நக்சலைட்டுகள் கொல்லப்பட்டா மட்டும் கொதிக்கிறதில்லை?''

''நீங்க அதிகாரத்திற்கு வந்திருந்தா இந்த - என்ன வார்த்தை அது? மறந்து போச்சு – ஆமா – திரிபுவாதிகள். அவங்களை என்ன செஞ்சிருப்பீங்க?''

'மக்கள் மத்தியில ஒரு பொது விசாரணை...''

''சீனா பாணி விசாரணை?''

ஜோணி சிரித்தான்.

''சரி, டியானன்மன் கிளர்ச்சியில சீனா அரசு செய்தது பத்தி என்ன நினைக்கிறீங்க?''

''ஏகாதிபத்தியம் உசுப்பிவிட்ட ஒரு கிளர்ச்சி அதுன்னு சின்னக் குழந்தைக்கும் தெரியும்'' என்றான் ஜோனி. ''சீன அரசாங்கத்தை மிரட்டி சில வணிக ஒப்பந்தங்களில சாதகமான முடிவுகளை எடுக்க வைக்க திட்டமிட்டு நடத்தப்பட்ட கிளர்ச்சி அது. அதை சீன அரசு ஒடுக்கித்தான் ஆக வேண்டியிருந்தது. அதை முளையிலேயே கிள்ளாம இருந்தா அழிவு பல மடங்கா ஆகியிருக்கும்.''

''அதாவது அங்க நடந்தது ஒரு போர்?''

''ஆமா; போர்தான். ஒரு அரசாங்கம் தன் அடிப்படைக் கருத்தியல்மேல நடத்தப்படுற ஒரு தாக்குதலைப் போர்னுதான் எடுத்துக்கும்.''

''அப்ப இந்த விஷயம் வெறும் மனிதாபிமானத்தை மட்டும் வச்சுத் தீர்மானிக்கிறது இல்லை. நீங்க நடத்தினதும் ஒரு போர்தான். அதுக்கு விளைவுகள் என்னன்னும் உங்களுக்குத் தெரியும். உங்க கணக்கு தவறிப்போச்சு. உடனே மனிதாபிமானம்னு பேசிட முடியுமா? இந்தியா முழுக்க கிட்டத்தட்ட பதினஞ்சாயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம்னு பொதுவா வச்சுக்கலாம். இயக்கத்தில சம்பந்தப்பட்டவங்க ஒரு அம்பதாயிரம் பேராவது மன்னிப்பு கிடைச்சு, புதிசா தங்கள் வாழ்க்கையை அமைச்சிட்டிருக்காங்க. அரசாங்கத்தில பொறுப்பான வேலைல இருக்கிறவங்க ஒரு இருபது பேரையாவது எனக்குத் தனிப்பட்ட முறையில தெரியும். பலபேரு இன்னைக்கு ஒரு இளமைக்கால சாகசம் மாதிரி இனிப்பான ஞாபகமா அதை வச்சிருக்காங்க. ஒரு கம்யூனிச தேசத்தில இதே மாதிரி ஆயுதம் தாங்கின கிளர்ச்சி நடந்திருந்தா என்ன ஆகியிருக்கும்? இங்கதான் நாம யோசிக்கணும்.''

''மறுபடியும் உங்க இடத்துக்கே வந்திட்டிங்க.''

ராமசாமி புன்னகைத்தார்.

''இந்த விஷயங்களை இந்த மட்டத்தில பேசறதே தப்பு. கருணை, நியாயம் இதுக்கெல்லாம் அரசியல் தளத்தில அர்த்தங்களே வேற'' என்றான் ஜோனி. ''ஒரு குழந்தை கைய நீட்டினா மனமிரங்கி அஞ்சு ரூபாய்த் தாளை எடுத்து நீட்றது தனிப்பட்ட முறையில கருணைதான். அதே ஆள் அந்தக் குழந்தையை அப்படி ஆக்கின சுரண்டல் அமைப்போட விசுவாசியா இருக்கிறவரைக்கும் அரசியல்ரீதியா அவன் கருணை உள்ளவன் இல்லை.''

''ஒரு பழைய கேஸ் ஞாபகம் வருது'' என்றார் ராமசாமி. ''ஒரு மலையாள எழுத்தாளர் இதேபோல ஒரு பசித்த குழந்தைக்குப் பிச்சை போட்டபோது பக்கத்தில் நின்னுட்டிருந்த தோழர் சொன்னாராம் அவர் புரட்சியை காமடைப்படுத்துறார்னு...''

''அது ஒரு கொச்சையான வாதம்தான். ஆனா அதுக்குள்ள உள்ள தத்துவம் சரியானது. கருணை நியாயம் எல்லாத்துக்கும் அரசியல் ரீதியா வேற

அர்த்தங்கள் உண்டு. தனிமனித அர்த்தத்தில கருணையும் நியாயமும் உள்ள அரசியல் இயக்கம் ஒண்ணு இதுவரை சாத்தியமானதே இல்லை.''

''ஏன் இனிமேல் சாத்தியமாகக் கூடாது?''

ஜோணி சிரித்தான். ''சரியான கோழிக்கனவு அது.''

''இந்த மாதிரி பல கோழிக்கனவுகள் உண்மையா ஆகியிருக்கு. இலக்குகளைவிடவும் வழிமுறைகளைப்பற்றி கவலைப்பட்ட இயக்கங்கள் பூமிமேல இந்த நூற்றாண்டில உருவாகியிருக்கு. அடைஞ்சது குறைவா இருக்கலாம். ஆனா காந்தியோட இயக்கம் அதில மிக முக்கியமான ஒண்ணு. காந்தி ஒரு அரசியல் தீர்க்கதரிசிங்கிற முறையில மத்த அத்தனை பேரை விடவும் முக்கியமானவர்னு நினைக்கறேன்.''

''இது ஏ.கெ. நாற்பத்தேழின் நூற்றாண்டு.''

''இல்ல, இதுதான் உண்மைல ஆயுதங்கள் முற்றாக அர்த்தத்தை இழந்திருக்கிற நூற்றாண்டு. இந்த நூற்றாண்டிலதான் போர்ல வெற்றியும் தோல்வியும் முடிவும் கிடையாதுன்னு திட்டவட்டமா நிரூபணமாயிருக்கு. ஆயுதம் அதை வச்சிருக்கிறவனையும் சேந்து தாக்கும்னு ஆயிருக்கு. அதைப் புரிஞ்சுக்காதவங்க இருக்கலாம். இஸ்லாமிய நாடுகளும் ஆப்ரிக்க நாடுகளும் ஆயுதத்தால அழிஞ்சிட்டிருக்கு; சொந்த ஆயுதங்களால. ஒரு வெறியில ஒருத்தன் கடப்பாறையை முழுங்கிட்டான்னு வைச்சுக்குங்க. அது மாதிரிதான் இன்னைக்குப் பல போரிடும் தேசங்கள் இருக்கு. உகாண்டா, எதியோப்பியா, கம்போடியா, இலங்கை...''

''உரிமைப் போராட்டங்களைக் கொச்சைப்படுத்தற பேச்சு இது'' என்றான் ஜோணி கோபத்துடன்.

''உரிமைப் போராட்டங்களுக்குப் பிறகு மிஞ்சுறது என்ன? ஏன் அதை யாரும் கணக்கு பார்க்கிறதில்லை? கிஞ்சு போன நிலம், சுடுகாடு மாதிரி ஊர்கள், தலைக்கு மேல ஒண்ணு இல்லாட்டி ரெண்டு சர்வாதிகாரிங்க... இதுக்காகத்தானா அத்தனை இலட்சியவாதமும், தியாகமும், பேரழிவும். வெட்கமாயில்லை?''

சிறிது நேரம் அமைதி நிலவியது. ராமசாமி கண்ணாடியைத் திரும்ப அணிந்துகொண்டார். ''தஸ்தாயெவ்ஸ்கி கேட்டான்: குற்றம்ங்கிறது சார்பு நிலையுள்ளது, தண்டனை முழு முற்றானது; அதனால குற்றத்துக்கு எப்படி வன்முறை தண்டனையாகும்னு. உரிமை, இலட்சியவாதம் எல்லாம் சார்பு நிலையானவை. ஆனா துப்பாக்கி முழுமுற்றானது. ஆயுதம் சமூகத்தை மாற்றாது, அழிக்கும். புற்றுநோய் மாதிரி வதைச்சு, துடிதுடிக்க வைச்சு கொல்லும். ஏன்னா...'' திடீரென்று மனம் உத்வேகம் பெற்றதில் ராமசாமி எழுந்து நின்றார். ''தீ கக்குற ஒரு ஆயுதம் அதை ஏந்துறவனை தானேதான் தீர்மானிச்சுக்கிறது. உலகம் முழுக்க இலட்சியவாதிகள்தான் முதலில் ஆயுதங்களை எடுப்பாங்க. அதுக்கு உயிர் கொடுப்பாங்க. பிறகு ஆயுதம் தனக்குப் பொருத்தமானவங்களைத் தானே தேர்ந்தெடுத்துக்கொள்ளும்.

அவங்களுக்கு அந்த ஆயுதங்களை மாதிரியே அபாயகரமானவங்களா, ஆயுதத்தோட கச்சிதமான மறுபாதியா, இருப்பாங்க. அவங்களோட முதல்பலி இலட்சியவாதிகள்தான். எல்லா ஆயுதப்புரட்சிகளும் சர்வாதிகாரிகளையும் கொலைவெறிபிடிச்ச ராணுவங்களையும்தான் உருவாக்கியிருக்கு. வரலாற்றில ஒரேயொரு விதிவிலக்குகூட இல்லை.''

ஜோணி மீண்டும் கோபமடைந்தான். ''ஹிட்லரையும் ஸ்டாலினையும் ஒரே இடத்தில வைக்கிறீங்க.''

''இல்லை ஸ்டாலின் இன்னும் பெரிய மானுட விரோதி.''

ஜோணி உரக்க ''இது பூர்ஷுவா பேச்சு'' என்றான்.

ராமசாமி அமர்ந்தார். ''காலின் கிராஸ்னு ஒருத்தர் ஹிட்லர்பத்தி ஒரு புத்தகம் எழுதியிருக்கார். அதில முன்னுரையில ஹிட்லரையும் ஸ்டாலினையும் ஒப்பிடறார். முதல் விஷயம் ரெண்டு பேரும் அடிப்படையில் ராணுவ வீரர்கள். ரெண்டு பேருக்கும் கனரகத் தொழில் மேல மோகம். ரெண்டு பேரும் கற்பனை இல்லாம ஆக்ரோஷமா பேசக் கூடியவங்க. ரெண்டு பேருக்கும் தேசிய வெறிதான் ஆயுதம். ஆனா ரெண்டு பேருக்குமே அவங்க ஆண்ட தேசியத்தில வேர்கள் இல்லை. ஹிட்லர் ஆஸ்திரியாக்காரன். ஸ்டாலின் ஜார்ஜியாக்காரன். ரெண்டு பேருக்கும் அறிவுஜீவிகள்மேல மேலுக்கு ஏளனமும், உள்ளூர தேவைக்குமிஞ்சின பயமும் உண்டு. ரெண்டு பேருக்கும் கட்டிடக் கலையில மோகம் உண்டு. ரெண்டு பேருக்கும் ஜனநாயக நடைமுறைகள் எதிலயும் நம்பிக்கை இல்லை. ரெண்டு பேரும் மிக அபாயகரமான அளவுக்கு மானசீகமான தனிமையில் இருந்தாங்க. ரெண்டு பேருக்கும் தூக்கமில்லாமை நோய் உண்டு. ரெண்டு பேருக்கும் உளவுத்துறைமேல மிதமிஞ்சின நம்பிக்கை. ரெண்டு பேருக்கும் அவங்களை மிஞ்சின பிரச்சார நிபுணர்களும் படுகொலை நிபுணர்களும் கிடைச்சாங்க. கோபல்ஸுக்கும் ஜாடனோவுக்கும், ஹிம்லருக்கும் பெரியாவுக்கும் உள்ள ஒத்துமையப் பாத்தா பயம் வரும். ரெண்டு பேரும் படுகொலையை கனரகத் தொழில் மாதிரி பிரம்மாண்டமான அமைப்பா வளர்த்து எடுத்தாங்க. ரெண்டு பேரும் இனத்துவேஷம் மிகுந்தவங்க. அவனுக்கு யூதர்கள், இவனுக்கு கசாக்குகள். ஆனா வித்தியாசமும் இருக்கு. ஒரேயொரு வித்தியாசம். இன்னும் இருபது வருஷம் முழுமூச்சா அப்பாவி மக்களைக் கொன்னிருந்தாதான் ஹிட்லரால ஸ்டாலினை எட்டியிருக்க முடியும். போரில் ஹிட்லர் தோத்தான். சாத்தான்னும் அந்திக் கிறிஸ்துன்னும் முத்திரை குத்தி மானுட விரோதியா அவனை வரலாற்றில பதிய வச்சாங்க. ஸ்டாலின் ஜெயிச்சார். மானுட குலத்தை காத்தருளிய மாவீரன் ஆனார். உயிர் வாழ்ந்திருந்த காலம்வரை அவர் செஞ்ச எதுவும் முழுமையா உலகுக்குத் தெரியவரலை. தெரிஞ்ச பிறகும்கூட உலகிலேயே மிக அதிகமான மக்கள் மதிக்க, வழிபட்ட தலைவரா அவர் இருந்தார். இந்த நிமிஷம்கூட இன்னும் அவரை வழிபடற லட்சக்கணக்கான பேர் இருந்துட்டிருக்காங்க. ஸ்டாலினுக்கு முன்னாலயும் பின்னாலயும் வரலாற்றில சர்வாதிகாரிகள் உண்டு. ஆனா இந்த அளவுக்கு அங்கீகாரம் பெற்ற இன்னொரு சர்வாதிகாரி இல்லை. இன்னும் சொல்லப் போனா மானுட குலம் கண்ட நிலையே

கொடுமையான சர்வாதிகாரி ஸ்டாலின்தான். உயிர்வாழுறப்ப வரலாற்றின் குப்பைக் கூடைக்கு போய்ச் சேராத ஒரே சர்வாதிகாரியும் அவர்தான். ஏன்?''

''மார்க்ஸிசம், இல்லையா?''

''சித்தாந்தம். அதை மார்க்ஸிசம்னா அப்பிடி. ஹிட்லருடையது தேசிய சோஷலிசம். ஸ்டாலின் உள்ளூர்ல பேசினதும் அதுதான். ஆனா உலக அளவில ஒரு சர்வதேசிய சோஷலிசம் பேசினார். ஹிட்லர்ட்ட இருந்த சித்தாந்தம் தருக்கபூர்வமா அபத்தமான ஒண்ணு. ஆனா தர்க்கபூர்வமா வலுவான ஒரு சித்தாந்தம் ஸ்டாலினுக்கு இருந்தது. நாளைக்கு இன்னும் தர்க்கபூர்வமான சித்தாந்தத்தோட ஒருத்தர் ஸ்டாலின் மாதிரி இருந்தார்னா அவரை எப்படி உலகம் ஒதுக்கமுடியும்? மார்க்ஸியத்தோட வாதத்திறன் உலகம் முழுக்க மோசமான சர்வாதிகாரிகளுக்கு ஆயுதமா இருக்கத்தான் பயன்பட்டிருக்கு. சீனாவில கலாச்சாரப் புரட்சி எப்படி நடந்ததுண்ணு இப்ப தகவல்கள் வந்திட்டிருக்கு. ஏன் போல்பாட்டும் கம்யூனிஸ்ட்டுதானே!''

ராமசாமியின் உத்வேகம் அடங்கியது. அவர் பெருமூச்சுவிட்டார்.

''மாவோவைப்பத்தி யோசியுங்க. தத்துவஞானியான ஆட்சியாளன்னு பிளேட்டோ கண்ட கனவு வரலாற்றில முதல்முறையா நிறைவேறினது மாவோ அதிகாரத்தை அடைஞ்சபோதுதான். என்ன நடந்தது? அழிவு அழிவு. நினைச்சுப் பார்த்தா நாம மனுஷனா கையும் காலும் தலையுமா இருக்கிறதுக்கே வெட்கப்படச் செய்ற அளவுக்கு கொடுமைகள், பயங்கரங்கள்... சித்தாந்தம்னாலே எனக்குப் பயமா இருக்கு. இப்ப சொன்னீங்களே எல்லாத்துக்கும் அரசியல்ல வேற அர்த்தம்னு. எப்படி அந்த வேற அர்த்தம் வருது தெரியுமா? சிந்தாந்தப் படுத்தறது வழியாத்தான். யேசுவின் அளவிட முடியாத கருணையை சித்தாந்தப்படுத்தினா ஆப்ரிக்க நாடுகளில குடிநீர்ல விஷம் கலக்கி மதம் மாத்தற துணிவு வரும்கருணையே உருவான புத்தர் பேரைச் சொல்லி இனவெறியைத் தூண்ட முடியும். சித்தாந்தம் எதையும் எப்படியும் மாத்திடும்னு படுது; ஒரு கொடூர மந்திரவாதிய மாதிரி. சித்தாந்தங்களையும் சித்தாந்திகளையும் நான் பயப்படறேன்.''

''கொடுமைகளை நான் நியாயப்படுத்தலை ஆனால்...'' என்றான் ஜோணி.

ராமசாமி ஆவேசமாக இடைமறித்தார். ''இப்ப சொன்னீங்களே எதையும் நியாயப்படுத்தலைன்னு. இத இப்ப சொல்றீங்க. நாம பேசற ஒவ்வொரு விஷயமும் நடந்து அம்பது வருஷம் கழிச்சு. வரலாறு எல்லாத் திரைகளையும் கிழிச்சு வீசின பிறகு. நேத்தைக்குவரை உலகம் பூரா கம்யூனிஸ்டுகள் என்ன சொன்னாங்க? இதே நாகர்கோவில்ல மூலைக்கு மூலை மேடைபோட்டு கெ.ஆர்.எஸ்ஸும், ராமசுந்தரமும், பாலுவும் பேசியிருக்காங்க; சோவியத் ரஷ்யாபத்திக் கூறப்பட்ட ஒவ்வொரு விஷயமும் அபாண்டமான பொய்ணு. வெளிவந்தது ஆயிரத்தில ஒரு பங்கு. அதைச் சொன்னவன் மனசாட்சி மேல மண்ணை வாரிப் போட்டுக்கத் துப்பில்லாத நாலு மடையன். அவனை துரோகின்னும் கைக்கூலின்னும் கூசாம பிரச்சாரம் செய்தாங்க உங்க மகத்தான தலைவர்கள். அவங்கள்லாம்

வாயில் விரலை வைச்சா கடிக்கத் தெரியாத பாப்பாக்கள் இல்லை. ஒண்ணும் ரெண்டும் பத்தும் தடவை ரஷ்யாவுக்குப் போய்ட்டு வந்தவங்க. அம்பது வருஷம் மனசறிஞ்சே அப்பட்டமான பொய்யைத் திருப்பித் திருப்பி சொன்னாங்க. ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் இவங்களை நம்பி காதையும் மனசையும் திறந்து வச்சிட்டு உக்காந்திருக்கிற கூட்டங்களில உணர்ச்சிப் பெருக்கோட மார்மேல கையவச்சுட்டு சொன்னாங்க. அப்ப இவங்களுக்கு உண்மையில அந்த மக்களைப் பத்தின மரியாதை என்ன? இனம் நூறு தடவை மக்கள் மக்கள்னு இவங்க பேசறதுக்கு என்னதான் அர்த்தம்? மக்கள் அங்க செத்திட்டிருக்காங்க, லட்சக் கணக்கில, கோடிக் கணக்கில. போயி உக்காந்து அந்த ரத்தத்தில கை நனச்சுட்டு வந்து, மாளுடம் பேசினாங்க. இவங்க பேசற மேடைகளில, இவங்க எழுதின புஸ்தகங்களில எல்லாம் ரத்தம் கறுப்பா உறைஞ்சு கிடந்தது. எப்படி அய்யா இவங்க ராத்திரி தூங்கினாங்க? தூங்க முடியும்? ஏன்னா இவங்கள்லாம் அறிஞர்கள், சித்தாந்திகள், பாறாங்கல்லையே செரிக்கிற குடல் இருக்கிறவங்க..." ராமசாமி மூச்சிரைத்தார். "உங்க மகத்தான மனிதாபிமான எழுத்தாளர்கள் இருக்காங்களே.. நாப்பது வருஷம் இடைவிடாம சோவியத் ரஷ்யாவையும், ஸ்டாலினிசத்தையும் தூக்கிப் பிடிச்சிருக்காங்க. ஒவ்வொரு தகவலா வெளிவர வெளிவர, மேலும் மேலும் தீவிரமா வாதாடியிருக்காங்க. இப்ப அவங்க என்ன சொல்றாங்க? ஒரு வார்த்தை? அவங்க உண்மையா நம்பினாங்கன்னா வெட்கிக் கூசியிருக்க வேணாம்? மூமுக்குள்ள கதவச் சாத்திட்டு புழுங்கிட்டு கிடக்க வேணாம்? நாலுபேர் முன்னாடி நின்னு மனிதாபிமானம் பத்தி பேச எப்படி நாக்கு எழுது அவங்களுக்கு? அப்ப அவங்களுக்கும் தெரியும், அவங்களை வாசிச்சவங்களுக்கும் தெரியும் எல்லாம் பொய்னு. ஒரு எழுத்தாளனுக்கு மிக மிக அந்தரங்கமானது எதுவோ அதில பண்ணிட்ட சமரசம் அது. அதுக்குப் பிறகு அந்த எழுத்தில ஒரு வரியில கூட உண்மை இல்லை. இருக்கிறது சொல்றவனுக்கும் கேக்கிறவனுக்கும் வசதியா, உண்மைங்கிற முகமூடியைப் போட்டுட்டு மேடைக்கு வந்த பொய். எப்ப தன் உள்ளார்ந்த நம்பிக்கை உடைஞ்சதோ அப்ப கனவுகளை உதறிட்டு, தன்னோட பலவீனங்களோட இழுப்புக்குப் போய், ஈரழிஞ்சு, தெருவில கிடந்து செத்தானே வீரபத்ரபிள்ளை, என் பார்வையில அவன்தான் னவனுன். அவன் அடைஞ்சதுதான் வெற்றி. சித்தாந்தத்தோட கோயில் முற்றத்தில வயிற்றைக் கிழிச்சு ஹராகிரி பண்ணி செத்தவன் அவன்."

ராமசாமி விரலால் காற்றில் எழுதினார் பிறகு உத்வேகம் குறையாத குரலில் தொடர்ந்தார்..

"அறுபத்தியொண்ணில ரயில்வே ஸ்ட்ரைக்ல ஒம்பதுபேர் குண்டடி பட்டு செத்தாங்க. அப்ப இங்க அத்தனை தொழிற்சங்கங்களும் தெருத் தெருவா அஞ்சலி ஊர்வலம் போனாங்க ரஷ்யாவில மொத்த மக்கள் தொகைல பாதிப்பேர் பிள்ளைகுட்டிகளோட செத்து மடிஞ்சப் பொலாங்கன்னு அந்தத் தேசத்தோட புதிய தலைவர் உயர்மட்ட கமிட்டில சூசாரபூர்வமா அறிவிச்ச வருஷம் அது. அதுக்குப்பிறகும் அங்க கருணை இருந்த சோஷலிச கட்டுமானந்தான் நடக்குதுன்னு ஆணையிட்டாங்க இப்ப வெட்ட வெளிச்சமான பிறகும்கூட வார்த்தைகளை

வாரியிறைச்சு வரலாற்றை மூடிடலாம்னு நினைக்கிறாங்க. சில குழந்தைங்க வெளிக்குப் போய்ட்டு அதை மறைக்கிறதுக்காக அதுமேலயே உக்காந்திருக்குமே அதுமாதிரி இருக்கு கட்சி. சில தவறுகள் நடந்திருக்கலாம்னு இப்ப நீட்டிச் சொல்றார் கெ.ஆர்.எஸ். சரி, ஒப்புக் கிடறீங்க இல்லியா? அப்ப அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டினவங்களை ஒழிச்சுக் கட்டினது பத்தி இப்ப என்ன சொல்றீங்க? அப்ப அவங்க மேல சுமத்தின அவதூறுகளுக்கு மன்னிப்பு கேக்கிற மனப்பக்குவம் உண்டா உங்களுக்கு? காந்தி கேப்பார். ஏன், அப்பிடியொரு தப்பை செய்திருந்தா அவர் உயிரோடயே இருந்திருக்க மாட்டார். ஏன்னா காந்தியிசம்னு ஒண்ணு இல்லை. இருந்தது ஒரு தனிமனிதனோட அந்தராத்மா மட்டும்தான். அதை கிண்டல் பண்ணாத கம்யூனிஸ்டு இல்லை. உங்க சித்தாந்தம் படுகொலைகளுக்குத் திரைபிடிக்கத்தான் அம்பது வருஷமா பயன்பட்டது. உங்க அந்தராத்மா மேல பாறாங்கல்லைத் தூக்கி வச்சிருக்கீங்க. இன்னைக்கு கம்யூனிஸ்டுகள் தியாகங்களுக்கு விலை கேக்கிறாங்க. தர்ம நியாயம் பேசறாங்க. ஒருத்தனுக்கும் யோக்கியதை கிடையாது. போல்பாட்டுக்கு வால்பிடிச்ச ஒருவன் தனிப்பட்ட முறையில ரொம்ப யோக்கியன்னா என்ன அர்த்தம் இருக்கு? வதைமுகாம் கமிசாரா இருந்தவன் பொய்யே பேசாத நேர்மையாளன்னா, அவனைப் பாராட்ட முடியுமா? இந்திய அரசியல்ல கோமாளிங்க உண்டு, மதவெறியனும் சாதிவெறியனும் உண்டு. ஆனா கம்யூனிஸ்டுகள் அளவுக்கு மனசாட்சியை உறைய வைச்சவன் வேற இல்லை. நேர்மையில்லாத அறிவாளி மாதிரி பயங்கரமானவன் வேறு யாரும் இருக்க முடியாது. தனிமனிதனோட அயோக்கியத்தனத்தைவிட சித்தாந்தத்தோட அயோக்கியத்தனம் பல மடங்கு அபாயகரமானது...''

''இது வெறும் துவேஷமாத்தான் எனக்குப் படுது.''

''அது மட்டும்தான் உங்களால சொல்ல முடியும். அம்பது வருஷமா நீங்க சொன்ன ஒவ்வொண்ணும் பல்லிளிச்சாச்சு. ஓர் உதாரணம் சொல்றேன். 1989-ல் நவம்பம் 20 முதல் 24 வரை புகாரெஸ்ட் நகரத்தில ருமேனிய கம்யூனிஸ்டு கட்சியோட தேசிய மகாநாடு நடந்தது. அதோட ரிப்போர்ட்ட வெட்டி வச்சிருக்கேன். ஏன்னா பத்துவருஷம் கழிஞ்சு இப்படி நடந்ததுன்னு சொன்னா யாருமே நம்ப மாட்டாங்க. அதில் நிகலா சௌஷஸ்க்யூ ஏறத்தாழ அஞ்சு மணிநேரம் பேசறார். அதுக்கு 101 தடவை பயங்கர கைதட்டல் கிடைச்சது. 62 தடவை உறுப்பினர்கள் எந்திரிச்சு நின்னு வாழ்த்தி கூச்சல் போட்டாங்க. சௌஷஸ்க்யூ ஆண்ட காலத்தில ருமேனியாவில நடந்த வளர்ச்சிகளைப் ற்றிப் பேசறார். மறுநாளைக்கு ருமேனியா முழுக்க அதுதான் பேச்சு. மக்கள் பரவசம் அடைஞ்சு ரோட்ல நடனமாடறாங்கன்னு செய்தி. மொத்த ருமேனியால இருந்தும் தேர்தல்ல ஜெயிச்சு வந்த பிரதிநிதிகள்தான் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் – அங்க ஒரு கட்சித் தேர்தல்தான்னாக்கூட – அப்டீன்னு ஞாபகம் வச்சுக்குங்க. அந்த மாசக்கடசில பெரிய மக்கள் புரட்சி வெடிச்சு அந்தாளைத் தூக்கி வீசினாங்க. கூண்டில நிறுத்தி விசாரணை பண்ணி, மரண தண்டனை விதிச்சாங்க. அப்ப மக்கள் போடற கூச்சலை, அவங்க அங்க ஆடற ஆட்டத்தை, நேரடியா டி.வில

காட்டினாங்க. அந்த மாதிரி ஒரு அதிருப்தி ஒரு ஆரம்ப அளவிலகூட மக்கள்ட்ட இருக்குன்னு நீங்க அவங்க குடுத்த செய்திகளை வச்சு ஊகிக்க முடியாது. அம்பது வருஷம் கம்யூனிஸ்டு கட்சி உலகம் முழுக்க வெளியிட்ட கட்சி அறிக்கைகள், மேடைப் பிரச்சாரங்கள், பத்திரிகைச் செய்திகள் எல்லாமே இதே மாதிரித்தான். இண்ணைக்கு அதையெல்லாம் மறுபிரசுரம் பண்ணினாலே போதும், கட்சி கலகலத்துடும். தங்களுக்குள்ளே –கூட உண்மையைப் பேசிக்க முடியாத இந்தக் கூட்டம் அம்பது புஸ்தகம் படிச்சு, அரை மணிநேரம் பிரசங்கம் பண்ணினா புரட்சியாளர்களும் மனிதாபிமானி களும் ஆயிடுவாங்களா? இன்னைக்கு அரசியல் ஒழுக்கம் பத்திப் பேசறாங்க. என் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நேர்மையாத்தான் இருந்தேன்னு சொல்ற தகுதி உள்ள ஒருத்தன் இவங்களில உண்டா? மக்களைப் பத்திப் பேச என்ன யோக்கியதை இவங்களுக்கு? முதலில அம்பது வருஷம் மக்களை ஏமாத்தினதுக்கு மன்னிப்பு கேட்கட்டும். அப்புறமா பேசட்டும் மத்ததையெல்லாம்...''

''சரி, அப்படி வச்சுக்கிட்டாக்கூட சித்தாந்தத்த எப்படி நிராகரிக்க முடியும்? ஒரு நடைமுறைல வந்த குளறுபடிகள் இதெல்லாம்.''

''இதுவும் இப்ப உள்ள பல்லவி. நடைமுறைதான் தோத்துப் போச்சு, சித்தாந்தம் தோக்கலை. எனக்கு புரியலை. நூறு வருஷத்தில உலகம் முழுக்க ஏழை ஜனங்களை கோடி கோடியா பலி வாங்கி, மோசமான சர்வாதிகாரிகளை மட்டும் உருவாக்கி, ஆட்டம் போட்ட ஒரு சித்தாந்தம். இனப்படுகொலைகளுக்கு நியாயம் கற்பிக்க அதைப் பயன்படுத்தி யிருக்காங்க. இந்த நிமிஷத்திலகூட அது உலகத்ல பல பகுதிகளில் பெரிய அடக்குமுறை சக்தியா இயங்கிட்டிருக்கு. ஆனா சித்தாந்தரீதியா அது நியாயமானது, மனிதாபிமானம் நிறைஞ்சது. என்னய்யா அர்த்தம்? சஞ்சீவி மருந்து, சாப்பிட்டா ஆள் காலி, எனக்குப் புரியலையய்யா. முப்பது வருஷம் யோசிக்கும் புரியலை. பிணக்குவியல் மேல நின்னுட்டு விவாதம் பண்ற மேதாவித்தனம் எனக்கு இன்னும் வரலை.''

ஜோணி சட்டென்று ஓர் உத்வேகத்துடன் ''சார் முன்னாடி ஆயுதத்தைப் பத்தி நீங்க பேசினதில உள்ள ஒரு மிக முக்கியமான பிரச்சினையை இப்ப சொல்லவா?'' என்றான். அவன் உடல் பரபரத்தது. ''மரணத்தை நீங்க பார்க்கிறதுக்கும் ஒரு இலட்சியவாதி பார்க்கிறதுக்கும் இடையில உள்ள வித்தியாசம்தான் அது. மரணம் உங்களுக்கு ஒரு வெறும் முடிவுதான். அழிவுதான். ஆனா இலட்சியவாதிக்கு மரண நுனிங்கிறது ஒரு மனிதனுக்குச் சாத்தியமான ஆளுமை உச்சத்தோட தருணம். ஆயுதப் போராட்டம் ஆயுதத்தோட பலத்தால வெற்றி பெறுவதில்லை. ஆயுதத்துக்கு முன்னால மனித ஆளுமை அதன் சிதிலங்களையும் சிதறல்களையும் எல்லாம் பூரணமா தோற்கடித்து முழுமையை அடையுது பாருங்க, அதான் வெற்றியோட ரகசியம். இதை உங்களுக்கு மத்த விஷயங்களை தருக்கரீதியா விளக்கிறது மாதிரி முன்னால விளக்கிச் சொல்ல முடியாது. ஏன் கொல்லணும்? அப்படான் கொல்லப்படவும் வாய்ப்பிருக்கு. அப்பதான் சமரசமே இல்லாம ரெண்டுல ஒன்னுங்கிற நிலைமை வருது. ஒரு போராட்டத்தோட உச்சப்புள்ளி

அதுதான். இந்த அம்சம் இருக்கிறவரைக்கும் போராட்டங்களில ஆயுதம் இருக்கும்.''

''மறுபடியும் நீங்க மனுஷனைக் குறைச்சு மதிப்பிடறீங்க'' என்றார் ராமசாமி. ''துப்பாக்கிங்கிற புறப்பொருளின் நிழல்ல ஒருபோதும் மனிதனோட ஆளுமை குவியாது. அது அவனோட பயத்தின் குறியீடில்லியா? அது தன்னைக் காக்கும்னு நினைக்கிறவரைக்கும் அவன் அதுக்கு அடிமைதான். மத்த சிதறல்களை அவன் தொகுக்கலாம். ஆனா துப்பாக்கி அவனை மையத்தில கீறி ரெண்டா பிளந்துடும். துப்பாக்கி ஏந்திக் களத்துக்குப் போகிறவன் தனக்குள்ள மிகப் பெரிய போராட்டத்தோடத்தான் போவான். அம்மா முந்தானையப் பிடிக்கிற குழந்தை மாதிரிதான் அதைப் பிடிச்சுட்டுப் போவான்... யோசிச்சுப் பாருங்க, ஒரு மனிதனால ஒரு உச்ச கட்டத்தில ஓங்கி இறக்கமுடிகிற கடைசிச்சீட்டு அவனோட சொந்த உயிர்தான். அதை களத்தில இறக்கி வைக்கிறப்ப, அந்தத் தருணத்தில மட்டும்தான், அவனோட ஆளுமை முழுமையடையுது. பத்தாயிரம் பேர் சண்டையில இறந்தா ஒண்ணும் நடக்காது. பத்து பேர் உண்ணாவிரதமிருந்து இறந்தா அந்த மண்ணும் வானமும் நடுங்கிடும்.''

''மறுபடியும் உங்க மேடைக்கு வந்திட்டிங்க. எல்லாத்தையும் சித்தாந்தப்படுத்திட்டு சித்தாந்தத்தை நிராகரிக்கிறேன்கிறீங்க.''

ராமசாமி பெருமூச்சு விட்டார். ''ஆமா, அது ஒருவகையில உண்மைதான். மறைமுகமா இதை நான் சித்தாந்தமா தான் மாத்தறேன். இல்லைன்னா நான் எதுக்கு இதை வாதிட்டு நிறுவணும்? பழைய பாதிரி கேட்ட மாதிரி, தெய்வத்துக்கு எதுக்கு இத்தனை சத்தம்?''

அருணாசலம் எழுந்தான். ''நான் போறேன்.''

''ஏன் அவசரமா?''

''எனக்கு பயமா இருக்கு.''

ராமசாமி திடுக்கிட்டவர்போல அவனைக் கூர்ந்து பார்த்தார்.

''பிணங்கள்லாம் சாகல்ல சார். எல்லாம் நடமாடிட்டுதான் இருக்கு தெரியுமா? சைக்கிள்ல பஸ்ல லாரியில எல்லாம் எங்க பாத்தாலும் பிணங்கள் நடந்து போகுது. பிணங்கள். ஆனா கண் மட்டும் காக்காக் கண்...''

இருவரும் அதிர்ந்து போவது தெரிந்தது. அவன் ஏதோ குழப்பமாகப் பேசிவிட்டான் என்பதை அருணாசலம் உணர்ந்தான். சரி செய்துவிட வேண்டும் என்று பட்டது. ஆனால் சொற்கள் ஞாபகத்தில் இறுகிக் கிடந்தன.

''உட்காருங்க'' என்றார் ராமசாமி ''பேசிட்டு அப்புறமா போகலாம்.''

''எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. நான் நீலகண்ட பிள்ளைக்கு எழுதுனலெட்டர்ல அவர் இங்கிலீஷ்ல மேட்டர் எழுதிப் போட்டார். அதை டாக்டர் வாசித்திட்டார். ஆனா எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. காந்தி போல இருக்கேன்.'' அருணாசலம் புன்னகைத்தான். தீ யுகத்தி

உல்லாசமாகத் தோள்களை அசைத்தான். ஆனால் அவர்கள் அவன் நினைத்தது போல அவன் சகஜமாக இருப்பதாக எண்ணவில்லை. மிகவும் தெகைத்தவர்களாகப் பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள். பிணங்களைப் பற்றி என்னவோ சொன்னார்களே... பேச்சைத் தொடர்ந்து நடத்தினால் ஒருவேளை அவன் சகஜமாக இருப்பதாக அவர்கள் எண்ணக் கூடும். அவன் யோசித்தான். ''பிணங்களுக்கு பயங்கரமான பசி சார். பல கோடிப் பிணங்கள். ஹிட்லர் ஸ்டாலின் போல்பாட் கெ.ஆர்.எஸ். எல்லாரும் ஆட்களைக் கொன்னுட்டே இருங்காங்க. அதுக்குப் பிறகு பிணங்களும் ஆட்களைக் கொல்லுது. நிழலா மாறிப் பின்னால அலைஞ்சு ரத்தத்தைக் குடிச்சுடுது. பிணங்களுக்கு சோறு போடணுமானா நம்மகிட்ட போதிய அளவு அரிசி ஸ்டாக் இல்லை. அதனால பிணங்கள் பசிச்சு அலையுது.'' அருணாசலத்திற்கு புதிய ஒரு சிந்தனை உருவாயிற்று. ''ஆனா பிணங்கள் உயிரோட இருக்கிற நமக்கு பலி போடுது சார். அவங்க குழித்துறை ஆத்தில வாவுபலிக்க முதநாள் பலி போடுதாங்க. அதுக்க பேரு காவு பலி. நாமல்லாம் பிணங்க போடுத பலிச்சோத்த தின்னுட்டு வாழுதோம். தத்துவம் பேசுதோம். அங்க சோத்துக்குப் பஞ்சமில்ல. அவங்க பலி போடல்லண்ணா நாம பசிக்கு தாங்கிக்கு செத்து போயிடுவோம். அப்பம் அதாக்கும் காரியம். பிணப்பலி. நாம தின்குதது அதுதான். ஒரு வாய் சோறிலகூட பிணத்துக்க ரத்தம் உண்டு. மோந்து பாத்தா மணக்கும்.'' மிக மடத்தனமாக எதையோ பேசிவிட்டோம் என்று உறுதியாயிற்று. நிறுத்திக்கொண்டான். சிறு தவிப்புடன் ''எனக்குப் பிரச்சினை ஒண்ணும் இல்லை சார். நான் ரொம்ப தெளிவாட்டு காரியங்களை சிந்திக்குதேன்'' என்றான்.

''உட்காருங்க. உங்க வீட்ல ஃபோன் உண்டா?'' என்றார் ராமசாமி.

''ஃபோனா...'' அருணாசலம் புரிந்து கொண்டான். ''எனக்கு ஒரு பிரச்சினையும் இல்ல சார். நீங்க கவலைப்படாதீங்க. பத்திரமா போயிடுவேன்.'' இயல்பாக நடக்கத் திட்டமிட்டு நடந்தான். ஒரு தோளைத் தூக்கியபடி மிக மெல்ல நடப்பதாகப்பட்டது. என்ன அபத்தம் இது. சரியான பைத்தியம் போலவே நடந்து கொள்கிறேன் என்று எண்ணினான். எது செய்தாலும் தவறாக ஆகிறது. எல்லாரும் சேர்ந்து பைத்தியம் என்றே சொல்லிவிடுவார்கள். உடனே பயங்கரமான அச்சம் எழுந்தது. வயிறு நடுங்கி முதுகெலும்பைத் தொட்டது. வேகமாகப் பாய்ந்து படிகளில் இறங்கினான்.

◆

3

உலுக்கியபடி அருணாசலம் எழுந்து கொண்டான். உடம்பில் அதிர்வு மிஞ்சியிருக்க அரையிருட்டைப் பார்த்தான். நாகம்மையும் கௌரியும் தூங்கும் மூச்சொலி. ஜன்னலுக்கு வெளியே ஒளி ஊடுருவ ஆரம்பித்திருந்த இருட்டு. பறவைகளின் பரபரப்பான குரல்கள். காக்கைகள் பிடிவாதமாகக் கரைய, கூடவே ஏதோ தோல் வாத்தியம்போல ஒரு பறவை உப்உப் என்று கூறிக் கொண்டிருந்தது. உடம்பு முழுக்க அசதியாக இருந்தது. கால் தசைகள் கடுத்தன. நேற்றிரவு எப்படி, எப்போது வீடு வந்து சேர்ந்தோம்? கைப்பிரதியின் சொற்கள் வழியாக நடந்தது போலிருந்தது ஞாபகம். எவ்வளவு பைத்தியக்காரத் தனமான கற்பனை. எப்போதோ வீடு வந்து விழுந்து தூங்கியிருக்க வேண்டும். ஆனால் ஆரோக்கியமான முழுமையான தூக்கம். மனம் தெளிந்து நிச்சலனமாகத் ததும்பி நிற்பது போலிருந்தது. அவ்வளவுதான், எல்லா அலைக்கழிப்புகளும் முடிந்துவிட்டன.

எழுந்து பின்கட்டுக்குப் போனான். உமிக்கரியையும் துண்டையும் எடுத்துக் கொண்டான். சோப்புப் பெட்டியை சிறிது நேரம் தேட வேண்டியிருந்தது. வெகுநாள் எங்கோ ஊருக்குப் போய்விட்டுத் திரும்பிவந்து வீட்டைப் பார்ப்பது போலிருந்தது. சட்டையையும் போட்டுக் கொண்டான். தென்னந்தோப்பு வழியாக ஒற்றையடிப்பாதை சென்றது. தங்க நிறக் குரும்பைகள் விழுந்து கிடந்தன. சருமத்திற்குரிய உயிர்ப் பளபளப்பு அவற்றுக்கு இருந்தது. தலைக்கு மேல் பறவைகளின் ஒலியும், தென்னை ஓலைகளின் சடசடப்பும் கேட்டது. காற்று குளிரத் தழுவியபடி கடந்து சென்றது. தவிட்டைப் புதரில் இலைகளின் குலுக்கம் குதூகலமானதாக இருந்தது. அமைதியான ஓய்வான காலை என்று அருணாசலம் நினைத்துக் கொண்டான். பதற்றம் இல்லை. நிதானம். எவ்வளவு அமைதி. மனதின் எண்ணங் களைக்கூட நிதானமாக்கி நத்தை போல ஒவ்வொரு மணல்பரு மேலும் ஏறியிறங்கி ஸ்பரிசித்தபடி நகர வைக்கும் அமைதி.

ஆசீர்வாதம் சிறு ஓடையில் வாழைத் தடிகளால் தடைவைத்து அணை கட்டிக் கொண்டிருந்தான். தென்னங்கீற்றுகளை முடைவதற்காக ஊற

வைக்கப் போகிறான். நீரில் குப்பைகள் வளைந்து சுழித்தன. அவை ஒரு கணம் அருணாசலத்தின் மனதையும் சுழித்து அலைபாய வைத்தன. கண்களை விலக்கிக்கொண்டான்.

''சகாவு குளிச்சியதுக்கா?''

''ஆமா.''

''புரோகிராம் வல்லதும் உண்டா?''

''ஒண்ணுமில்லடே, காலம்பற எந்திரிச்சுப் போட்டேன்.''

''இதா காலம்பற? நல்ல கூத்து. நான் அம்பது குட்டை சாணி சொமந்தாச்சு.''

''அது உனக்க காலை, இது எனக்க காலை.''

ஆசீர்வாதம் சிரித்தான்.

தென்னந்தோப்பின் சரிவில் இறங்கினான். மண்சரிவின் விளிம்பில் சளைமரத்துத் தடிகளைப் போட்டுப் படிகட்டியிருந்தார்கள். யாரோ காக்கோட்டையில் நீர் சேந்துவதன் தடம் தெரிந்தது. நீரின் கோடு வளைந்து சென்றது. சிவப்பு நிறமாகப் புதர்ப்பூக்கள் பூத்துப் பரவிய சதுப்பினூடாக ஆற்றில் இறங்கினான். மணல்வெளி அதிகமாக மிதிபடாமல், இரவு வீசிய காற்றின் அலைகள் தடமாகப் பதிந்திருக்க, மௌனமாகப் பரவிக் கிடந்தது. அதைப் பார்த்தபடி ஒரு கணம் நின்றான். ஆற்றின் கண்ணாடிப் பாள நீர்ப்பரப்பு காலையொளி சுடர மெல்ல சிலுசிலுத்தபடி கிடந்தது. யாருமே இல்லை. அது அவனுக்குப் பிடித்திருந்தது. சிறு வயதிலிருந்தே தனியாக ஆற்றில் குளிப்பது அவனுக்குப் பிடிக்கும். ஆறு அப்போது மிக அந்தரங்கமான அனுபவமாக இருக்கும். உடைகளைக் கழற்றி, துண்டை கட்டிக்கொண்டு, உடலைக் குறுக்கியபடி ஆற்றில் இறங்கினான். குளிரில் உடம்பு நடுங்கியது . ஆவேசமாக மூழ்கி எழுந்தபோது இனம்புரியாத உற்சாகம் வந்து, சிரித்தான். சிரித்தபடியே சுற்றிலும் பார்த்தான். அதற்குள் ஒளியின் சுடர்வு அதிகரித்திருந்தது. மூச்சை இழுத்து மார்பை நிறைத்தான். அந்த ஒளி பரவிய காற்றை உள்ளுக்குள்ளும் நிரப்புவதுபோல. எவ்வளவு அமைதி! எவ்வளவு அமைதி! ஒருகணம் அந்த அமைதி அசாதாரணமாக, நம்ப முடியாததாக, கனவாக இருந்தது. மறுகணம் இயல்பானதாக, கரைத்துக் கொள்வதாக இருந்தது. அமைதிதான் இயல்பானநிலை. இயற்கை அமைதியின் பருவடிவ வெளி. வானம், பூமி, நீர், காற்று எல்லாம். இயற்கையிலிருந்து துண்டிக்கப்பட்ட மனம் அமைதியிழக்கிறது. தாயைப் பிரிந்த குழந்தைபோல அடங்காது விம்முகிறது.

நேற்றிரவுவரை எவ்வளவு இம்சை. எத்தனை அச்சங்கள், சஞ்சலங்கள். அழுத்தமான தருக்கங்களின் சங்கிலித் தொடராக முன்னேறிப் பாயும் மனம் ஒரு கனவுப் படிமத்தில் முட்டிச் சிதறி, படிமங்களினாலான ஒரு பெரிய கண்ணாடிச் சிதறல்போல ஆகி, பரவிச் செல்லும். சுயப்பிரக்ஞை மீண்டதும் அதில் ஒரு படிமத்தை மட்டும் ஒரு கணநேரம் நிலையாக நிறுத்தி, அதை

தருக்கத்தால் வகுக்க ஆரம்பித்து, படிப்படியாக மனதை ஒழுங்கு செய்வான். மீண்டும்... போதும். மனம் என்ற கொடுங்கனவு. இப்போது அது ஒரு பழைய ஞாபகம்போல வெகு தூரத்திற்கு அப்பால் தெரிந்தது. அவன்தான் ஒருவேளை எல்லாவற்றையும் மிகைப்படுத்திக்கொள்கிறானா? சில சிதறிய மனநிலைகள் வந்து போகாத மனிதர்கள் உண்டா? கூட்டம் கூட்டமாக பரல்மீன்கள் தன்னைச்சுற்றி மொய்ப்பதைக் கண்டான். பார்க்கப் பார்க்க அவற்றின் எண்ணிக்கை அதிகரிப்பதை வியந்தான். ஒருகணம் நிலைத்திருப்பவையாகவும் மறுகணம் துடிதுடிப்பவையாகவும் அவை மாறிமாறித் தோற்றம் தந்தன. 'காலத்தில் வழியும் ஆற்றில் காலப்பிரக்ஞை யற்ற மீன்கள்.' யாருடைய கவிதை வரி அது? வண்ணநிலவன்? ஆம், குளத்துப்புழை ஆறுபற்றிய கவிதை. மீன்கள் எதற்குப் படிமங்கள்? எண்ணங்கள்தான். அவை ஆற்றின் திசைக்கு கட்டுப்பட்டவை அல்ல. கவனமின்றி இருக்கையில் வந்து கிள்ளி, திரும்புகையில் அடியாழத்தில் மறைந்து, அவை என்னுடன் விளையாடுகின்றன. ஆழத்து நீல இருளில் அவை முட்டையிட்டு, பொரித்து பெருகியபடியே உள்ளன. காலப் பிரக்ஞையற்ற மீன்கள். அல்லது காலத்திற்கு சம்பந்தமில்லாத ஓர் உலகில் வசிப்பவை அவை. காலம் சுழித்து நெளிந்து ஓடிக் கொண்டேயிருக்கிறது. கவனிக்கையில் ஓட்டமாகவும், கவனிக்காதபோது ஓர் இருப்பாகவும் காலமெனும் ஆறு. அது காத்திருப்பதில்லை. 'காலமே சற்றுப் பொறு, வெட்டவெளியிலிருந்து என் மலரை இதோ பறித்து வருகிறேன்' பசுவய்யா. முதலில் படித்தபோது, வெட்டவெளி என்ற சொல்லாட்சி வெட்டப்பட்ட வெளி என்ற மன அர்த்தத்தை உருவாக்கித் துணுக்குற வைத்தது. என் மலர். அவரவர் மலர். யார் பறித்திருக்கிறார்கள் அம்மலரை? அது நீலப்பரப்பில், வானப்பிம்பம் நெளியும் நீர்ப்படலத்தில், புத்தம்புது வண்ணத்துடன் விரிந்திருக்கிறது. உள்ளே மர்மமான கொடிகள் பின்னிப்பிணைந்து உருவான, பசும்நில ஆழம். தொட்டவுடன் வானம் கலைந்து விலக, கொடிகள் உயிர்பெற்று பாம்புடல்களென நெளிந்தாடுகின்றன. 'காலமே என்னை எங்கு இட்டுச் செல்கிறாய், என் உணர்வுகளில் நான் குழம்பிச் சரிகிறேனே.' பசுவய்யாவின் காலம் ஒரு கடல். அலையடிக்கும், முடிவின்றி சுயம்வெளிக்கும். ஆனால் நகராது. 'இரவில் தூக்கத்தின் விழிப்பில் நெருங்கி நெருங்கி வருகிறது கடலோசை.' யாருடைய வரி அது? சுகுமாரனா? இல்லை. மலையாளக் கவிதைகளின் ஒரு தொலைதூரச் சாயல். ஆம். அது ஜெயமோகன் கவிதை. அவனை அன்று பார்த்தேன். கர்வமும், அசட்டுத் தனமும், வாயாடித்தனமும் கலந்த வினோதமான இளைஞன். ஆனால் அவன் கவிதைகள் எழுதியிருக்கிறான். அதன் ஒரு வரி ஞாபகத்திலும் வருகிறது. குளித்த உடல் நடுங்கியது. வெகு நேரமாயிற்றா? எழுந்து தலை துவட்டினான். 'என் காலமே உன் மடியில் பைத்தியங்கள் நிம்மதி யானவர்கள்.' யார்? சுகுமாரன். பைத்தியங்கள் – அந்தச் சொல் தீச்சுடர்போல மூளையைச் சுட்டுத் துளைத்தது. உடம்பு வெலவெலக்க ஏறி விரைந்து நடந்தான். மணல்மீது ஒரு காலடிச்சுவடு சென்றது. மணற்பரப்பில் யாருமில்லை. யாருடைய காலடிச்சுவடு அது? மீண்டும் வேகமாக நடந்தான். அது அவனுடைய காலடிச் சுவடுதான். ஆனால் அவனுக்கு

கொண்டிருந்தன. மண்டபத்தில் ஒரு செம்பு இருந்தது. வேறு யாருமில்லை. கருவறையில் ஒரேயொரு சிறு சுடர்மணி மட்டும் அசையாமல் நின்றது. கருமையான பளபளப்புடன் உருண்டு திரண்ட லிங்கம் செவ்வரளி மாலை சாத்தப்பட்டு இருந்தது. மனதுக்குள் உறைந்த ஒரு ஞாபகம்போல, அமைதியாக, திடமாக, முடிவின்றி அமர்ந்த ஓர் இருப்பு. அந்த மௌனம் மிக அந்தரங்கமாக மனதில் நுழைந்து, ஒவ்வொரு மூடப்பட்ட வாசல்களாகத் தொடாது திறந்து, உள்ளே சென்றபடியே இருந்தது. லிங்கத்தையே பார்த்தான். கன்னங்கரிய நிறம். எண்ணெய்க் கறுப்பு. தார்க்கறுப்பு. ஏன்? ஏனெனில் மன ஆழத்தின் நிறம் கருமை. கருமை கண்களை நிறைத்து விட்டதுபோலிருந்தது. அது ஒரு சிலையாக இல்லாமலிருப்பதுதான் தனக்கு இவ்வளவுதூரம் ஈர்ப்பைத் தருகிறதுபோலும். அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. இருண்டவெளி படுவேகமாகச் சுழன்றால் உருவாகித் தெரியும் மைய அச்சு இப்படியிருக்கும். குழந்தைத்தனமான கற்பனை என உடனே ஒதுக்கினான். ஏனிப்படி அதை அர்த்தப்படுத்த முயல வேண்டும்? அது ஒரு இருப்பு. ஓர் அகமன பிம்பம். அது இங்கு ஸ்தாபிக்கப்பட்டு எத்தனை வருடங்கள் ஆகியிருக்கும்? கோயிலை, ராமவர்மா ஆயில்யம் திருநாள் கட்டினார். அப்படியானால் ஐநூறு வருடம் முன்பு. ஆனால் லிங்கம் அதன்முன்பே அங்கிருந்தது. ஆதிகாலத்தில் ஏதோ பெயரற்ற காட்டாளன் அதை ஸ்தாபித்திருக்கலாம். தன் ஆழ்மன உத்வேகம் தாளமுடியாத கட்டத்தை அடைந்ததும் அவன் கண்ணீரும் பதைப்புமாக ஒரு கல்லை எடுத்து, செதுக்கி, இன்னொரு கல்மீது வைத்து, தன் அறியமுடியாத ஆழத்தை அதுவென ஸ்தாபித்து வணங்கியிருக்கக்கூடும், ஆறுதல் பெற்றிருக்கக் கூடும். அதற்குப் பின்பு எத்தனை தலைமுறைகள். மனிதர்கள் அதன்முன் வணங்கி விழுகிறார்கள். வரம் கேட்கிறார்கள். அபயம் கோருகிறார்கள். எவ்வளவு கருமை. கருமைதவிரப் பிற வண்ணங்கள் எல்லாமே மிக அபத்தமான, மேலோட்டமான நிறச் சிதறல்கள். எல்லா நிறங்களின் அடியிலும் கருமை உள்ளது. எல்லா நிறங்களும் இறுதியில் கருமையாகும். எவ்வளவு உக்கிரமான பேரமைதி அக்கருமைக்கு!

நாற்புறமும் பார்த்தான். அந்த உத்வேகத்தை ஒருபுறம் கூச்சமாகவும், மறுபுறம் சிலிர்ப்பாகவும் உணர்ந்தான். தயக்கம் நிரம்பிய சில கணங்களுக்குப் பின் கைகளைக் கூப்பினான். இரு கைகளும் இணைந்து குவிகையில் மனதில் அதுவரை பிரிந்திருந்து இணையத் துடித்த இரு எல்லைகள் இணைவது போலிருந்தது. பிடரியிலிருந்து முதுகு வழியாகப் புல்லரிப்பு இறங்கியது. கண்கள் பனித்துவிட்டன. பெருமூச்சுகள்தான் கிளம்பி வந்தன. ஏதாவது பிரார்த்தனை செய்ய வேண்டும். எதை வேண்டுவது? மறுகணம் முயற்சியில்லாமலே கௌரி நன்றாக இருக்க வேண்டும் என்று மனம் கோரியது. பிறகு நாகம்மைக்காக வேண்டிக் கொண்டான். அதற்குள் எல்லாத் தடைகளும் விலகி, மனம் உருகி நாற்புறமும் பரவியது. தனக்காக வேண்டிக் கொண்டான். தன் மனம் சிதைந்து பரவுவது பற்றி, அபாயகரமான அதன் விளிம்புகள் தென்படுவது பற்றி. 'எனக்கு புத்தி நிலையா இருக்கணும். என் மனசுக்கு ஒண்ணும் ஆயிடப்படாது' என்று திரும்பத் திரும்ப மன்றாடினான். அப்படியானால் அவனை ஈர்க்கும் அந்த

மர்மமான ஆழங்கள்? ஒன்றும் வேண்டாம். எதையும் தெரிந்துகொள்ள வேண்டாம். ஞானமே இன்றி இப்படி சரணடைந்து விட்டால் போதும். இந்த முழு நிறைவை ஒருபோதும் ஒருவிதமான ஞானமும் தர முடியாது. ஆயினும் என் மனதில் ஒரு துளி அந்த மர்மங்கள் நோக்கியே இழுபடுகிறது. அதை வெல்ல வேண்டும். அந்தக் கசடை என் மனம் ஜீரணித்துவிட வேண்டும். மனம் ஒரு இருள்வெளி. அதன் நீள, அகல, முடிவின்மையை இந்த லிங்கத்தை மையமாக்கி வளைபாதையாகச் சுழற்றிக் கட்டிவிட முடிந்தால்... லிங்கத்தின் முன்னிலை மிகப்பெரிய மலை ஒன்றின் முன்னிலை போலிருந்தது.

'டிங்' என்று மணி ஒலித்தது. போத்தி தார் பாய்ச்சப்பட்ட வேட்டியும் பூணூலுமாக உள்ளே போனார். அவன் கூச்சத்துடனும், பதைப்புடனும் நாற்புறமும் பார்த்தான். ஓடிவிட எண்ணினான். வேறு யாராவது பார்த்திருப்பார்களா? போத்தி பார்த்திருப்பாரே. ஊரில் அவருக்குத் தெரியாத யாருமில்லை. கோயிலுக்கு வந்த தோழர் அவருக்கு ஒரு வெற்றியாகப் படக்கூடும். அதை அவருடைய வைதிகம் கொண்டாடக்கூடும். போத்தி சிரிப்பை அடக்கியபடி தட்டை எடுப்பது போலிருந்தது. ஆனால் அவர் வந்தபோது முகம் சாதாரணமாகவே இருந்தது. அறிமுகமான புன்னகையுடன், விபூதியும் அரளிமலரும் தந்தார். "நாகம்மையக் காணுமே'' என்றார். அவள் இங்கு அடிக்கடி வருகிறாளா? அவனுக்கு வியப்பும் சிறு கோபத்தீற்றலும் எழுந்தது. ''வில்வங்காய் கேட்டிருந்தா. எடுத்து வச்சிருக்கேன். சாயந்தரம் வரச் சொல்லுங்கோ.'' சரியென்று தலையாட்டினான். விபூதியைப் பார்த்தான். ஒரு மென்மையான மணம் அதற்கிருந்தது. போடலாமா என்று தயங்கினான். ஆனால் போத்தி புண்படக்கூடும். போட்டுக்கொண்டான். நெற்றிமீது ஒரு தொடு உணர்வு போல அது இருந்தது.

ஏழெட்டு பேர் பேசியபடி உள்ளே வந்தார்கள். அனைவரும் தெரிந்த முகங்கள். தேவி தோட்டத் தொழிலாளர்கள். ஒருவன் அவனைக் கண்டதும் "வணக்கம் தோழர்'' என்றான். பிறரும் நட்புடன் வணக்கம் கூறினார்கள். "எல்லாரும் என்ன கூட்டமாட்டு?'' என்றான் அருணாசலம். அவர்கள் சற்றும் வித்தியாசமாக உணரவில்லை என்பது அவனுக்கு நிம்மதியைத் தந்தது.

"இண்ணைக்கு எட்டேக்கர் புதுவெட்டு தொடக்கம் தோழர்'' என்றான் சங்கரன். ''சங்கக் கிளை சார்பாட்டு ஒரு வழிபாடும், வில்வ அர்ச்சனையும் உண்டு.''

''ஓகோ'' என்றான் அருணாசலம் ''எல்லாருக்கும் ஓ.டி. வருமா?''

''கொஞ்சம் வரும்'' என்றான் சங்கரன்.

''உங்க வீடு பக்கமா?''

''இங்க இலந்தயடிப்பள்ளம். பக்கமாட்டுதான்.''

''என்ன வழிபாடு?''

''சக்கரைப் பாயாசம். ஒன்பதுகொலை வாழைப்பழம் உண்டு. பின்ன பூவு, எளநீரு...''

''ஆற்றுக்கு மறுகரையில தேடிவந்தபெருமாள் கோயிலிலயும் ஒரு வழிபாடு உண்டு தோழர். அங்க அப்பமும், தெரளியும் நேர்ச்ச. தோழர் நாராயணன் அங்க வந்திட்டுண்டு.''

''பெரிய கோலாகலம்தான்'' என்றான் அருணாசலம். ''ஒ.டி. வெட்டுண்ணா சும்மாவா. போடு போடுங்க. சரி, நான் வாறேன்...''

''இருந்து, பிரசாதம் சாப்பிட்டு போகலாமே.''

''இல்ல, ஒரு வேலை இருக்குடே வாறேன்'' என்றான் அருணாசலம். இப்போதுகூட அந்தப் பிரசாசத்தை அவர்களுடன் சேர்ந்து சாப்பிட தன்னால் முடியவில்லை என்று எண்ணிக் கொண்டான். ஒரு பிம்பத்தை உருவாக்கிக்கொண்டுவிட்டால் பிறகு எளிதில் அதை உதறி வெளியேற முடிவதில்லை. சுயபிம்பம் ஒரு வீடுபோல. அதன் ஒவ்வொரு இடத்தையும் ஒருவன் நுட்பமாக மையப்படுத்திக் கொண்டிருக்கிறான். ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குப் போகலாம். திண்ணையிலும் புழக்கடையிலும் காற்றாட அமரலாம். அக்கூரையை உதறி வெளியேறுவது சாத்தியமில்லை. வேண்டுமானால் இன்னொரு வீடு கட்டிக்கொண்டு அங்கு குடியேறலாம். இங்கிருந்து ஒவ்வொரு பொருளாக அங்கு கொண்டு போகவேண்டும். அருணாசலம் புன்னகைத்தான். இப்போது அவன் அதைத்தான் செய்துவருகிறானா?

திடீரென்று அருணாசலத்திற்கு ஜோணி ஞாபகம் வந்தது. அவன் பேசும்போது தீவிரமான உணர்ச்சியில் அவனுடைய கண்ணாடிச்சில்லுகள் மின்னி மின்னி அணையும் சித்திரம் எழுந்தது. அன்று அவனுடைய பேச்சுதான் அருணாசலத்தை பெரிதும் ஊடுருவுவதாக இருந்தது. ஆனால் அதில் ஒரு சொல்கூட அப்போது ஞாபகம் வரவில்லை. அவன் அன்று பேச பலமுறை முயன்று ராமசாமியின் உணர்ச்சி வேகத்தால் தடுக்கப்பட்டு பின்னகர்ந்து கொண்டிருந்தான் என்று தோன்றியது. அவனை பிறிதொரு சந்தர்ப்பத்தில் சந்தித்து விரிவாகப் பேசவேண்டும் என்று எண்ணிக்கொண்டான். அதற்கு ராமசாமிக்கு ஒரு கடிதம் போடவேண்டும். அன்று நடந்த குளறுபடிகளுக்கு மன்னிப்பு கேட்டும், ஜோணியைப் பற்றி விசாரித்தும். அருணாசலம் ஜோணியைப்பற்றி நினைத்தபடியே நடந்தான். ♦

4

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய எஸ்.எம்.ஆர்.
அவர்களுக்கு,

தங்களைச் சந்தித்து நீண்ட நாட்களாகின்றன. புத்தக அச்சு வேலை நடைபெறுகிறது. மாநில மாநாடு ஒன்றை திரிச்சூரில் கூட்டுவதும் திட்ட மிடப்பட்டுள்ளது. இவ்வேலைகள் ஓயும்வரை நான் மத்திய கேரளத்திலிருந்து வெளியே நகர முடியாது. நலமாக இருக்கிறீர்களல்லவா? நானும் நலமே.

அன்று தங்களுடனான தீவிரமான உரையாடல் அந்தத் தொழிற்சங்கத் தோழர் திடீரென்று சமநிலை தவறிப்பேச ஆரம்பித்ததனால் சிதறிவிட்டது. அவர் எப்படி இருக்கிறார்? அன்று என்னுடைய கருத்துக்களை நான் யோசித்துத் தொகுத்துக் கூற முடியவில்லை. கூறப்படாத சொற்கள் முளை விட்டு வளர்கின்றன. உங்கள் கருத்துக்களையும் பலமுறை யோசித்து நண்பர்களுடன் விவாதித்துப் பெருக்கிக் கொண்டேன். இக்கடிதத்தில் இவற்றைப் பதிவு செய்வது என்னைப் பொறுத்த வரை எனது நிலைப்பாட்டைக் காலத்திற்கு முன்பாக பதிவு செய்து வைப்பதுபோல.

அன்று அந்தத் தொழிற்சங்கவாதியின் குலைவு என்னை மிகவும் உலுக்கிவிட்டது என்பது அதைப்பற்றித் தொடர்ந்து யோசித்துக் கொண்டிருந்ததிலிருந்து தெரியவந்தது. அறிவு ரீதியான செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனை வரையும் மனநிலைப் பிறழ்வு அச்சுறுத்துகிறது. கணிதமேதை பாஸ்கல் தன் டைரியில் ஒவ்வொரு நாளும் தனக்குப் பைத்தியம் பிடிக்காமலிருப் பதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தினார் என்று படித்தது ஞாபகம் வருகிறது. அந்த அச்சம் இல்லாத அறிவுஜீவி இல்லை. அவன் தனது பெரிய சொத்தாகவும், வலிமையாகவும், ஏன் வாழ்வின் சாரமாகவும் கொண்டிருக்கும் அறிவியக்கம் என்பது எத்தனை மேலோட்டமான ஒன்று என்று அந்நிலை அவனை எச்சரிக்கிறது. சாதாரணமான ஒரு நரம்புப்பதற்றம் ஒரு மாமேதையின் ஐம்பது

எஸ் எம் ராமசாமிக்கு அனுப்பப்பட்ட இக்கடிதங்கள் அவரால் அருணாசலம் பார்வைக்கு அனுப்பப்பட்டன ஏதோ ஒரு குழப்பத்தில் இவற்றை ஸ்ரீநாராயணா கல்லூரி நிர்வாகத்தினரிடம் அருணாசலம் குறிப்புகளுடன் இணைத்து வைத்திருந்தார்

வருடத்துக் கல்வியையும் தியானத்தையும் சிதறடித்துவிடக்கூடும். காமராஜ் சிலைக்காகப் போராடிய பையன்கள் நாகர்கோயில் நகராட்சி நூலகத்தைச் சூறையாடியதை ஒருபோதும் மறக்க மாட்டேன். அரை லட்சம் நூல்கள் கிழிந்து சிதறி, காற்றில் அலைமோதியும், சுழன்றும், புதர்களில் ஒட்டிப் படபடத்தும், பரவிக் கிடந்த அப்பரப்பு ஒரு பேரறிஞனின் பைத்திய மனம் போலிருந்தது. அது சொற்களின் அலைத்தொடர்க் குமுறல். நானும், நீங்களும், நாமனைவரும் அச்சொற்கடலின் துளிகள் மட்டுமே. சொற்களை அடுக்குவதில் மட்டுமே நாம் மாறுபட்ட ஒழுங்குகளைக் கொண்டுள்ளோம்.

நரம்பியலில் இன்று மிகப்பெரிய சிந்தனைப் பாய்ச்சல்கள் நடைபெற்று வருகின்றன. புலன்களும், அறிதல்களும், ஞாபகங்களும், சிந்தனையும், கற்பனையும் எல்லாம் நரம்புக் கட்டுமானங்களும் அவற்றின் இயக்கவிதிகளும் மட்டுமே என்று நிறுவிவிட்டார்கள். அப்படியானால் தார்மீக உணர்வும், உரிமையுணர்வும், முன்னேறும் துடிப்பும் எல்லாம் என்ன? வெளியே ஜடவுலகமாக பெருகிப்பெருகிப் பரவியுள்ள அதே பொருள்தான் உள்ளே மூளையாகவும் வடிவம் கொண்டுள்ளது. புரோட்டீன், அமீனோ அமிலங்கள், பிற ரசாயனக் கலவைகள், மின்னலைகள். அப்படியானால் ஜடமே ஜடத்தைப் பார்க்கிறது. மூளையும் புற உலகும் ஒன்றையொன்று மாறிமாறி வடிவமைக்கின்றன. அப்படியானால் மனம் என்பது என்ன? அது கதிரியக்கம்போல ஒரு ஜட நிகழ்வுதானா? மனப்பிரபஞ்சம் ஜடப் பிரபஞ்சத்தின் ஒரு அதிர்வு வரிசை மட்டும்தானா? இந்த மாபெரும் சார்பியக்கத்தின் பொருளை இதற்குள் ஒரு துளியாக இயங்கியபடி மனிதன் அறியக்கூடுமா? சிலசமயம் எல்லாம் தெள்ளத் தெளிவாக இருக்கிறது. அப்போது மன ஆழத்துச் சலனம் ஒன்று இத்தெளிவு ஒரு பாவனையே என்று சொல்லியபடியே இருக்கிறது. சிலசமயம் எல்லாமே சிதறி அர்த்தமற்றுக் கிடக்கின்றன. அப்போது அதே ஆழ்மனம் சற்று அமிழ்ந்து போனால் தொட்டுவிட சாத்தியமான ஒரு முழுமுதல் உண்மையை உணர்வதாக எண்ணிச் சிலிர்ப்புக் கொள்கிறது.

ஓர் இடதுசாரி அரசியல் செயலாளன் இப்படி எழுதுவது குறித்து நீங்கள் வியப்பு கொள்ளக்கூடும். எந்திரத்தனமாக இயங்கியலை அனைத்திற்கும் ஆதாரமாகக் கண்ட மார்க்ஸியர் இப்போது புற எல்லைகளுக்கு நகர்த்தப்பட்டுவிட்டார்கள். ஐன்ஸ்டீனின் சார்நிலைவாதத்திற்குப் பிறகு மெய்யியல் ரீதியாக மார்க்ஸியம் எதிர்கொண்ட சவால்கள் பற்பல. இயங்கியல் பொருள் முதல்வாதம் பிரபஞ்சவியல்ரீதியாக செல்லுபடியாகக் கூடியது அல்ல என்று, மெலுகின்களின் கழைக் கூத்தாட்டங்களை மீறி, நவீன பௌதிகம் நிறுவிவிட்டது. இன்று பிரபஞ்சவியல் தரிசனம் ஏதுமின்றி, மண்ணில் ஒரு எளிய எந்திரமாகக் கைவிடப்பட்டுக் கிடக்கிறது செவ்வியல் மார்க்ஸியம். மண்ணில் வாழும் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு செயலுக்கும் மனிதர்களுக்கு பிரபஞ்சவியல்ரீதியான அகத்தொடர்பு தேவையாக ஆகிறது. இந்நிலையில் லௌகீகமாகக்கூட செவ்வியல் மார்க்ஸியம் பயனற்ற மோட்டாவான பழைய இயந்திரமாக மாறிச் கொண்டிருக்கிறது. மார்க்ஸியத்தின் ஆத்மாவுடன் உரையாட முடிந்த எவருக்கும் இந்த உண்மை உள்ளூரத் தெரியும். ஆகவேதான் அவர்கள்

அனைவருமே மார்க்ஸியத்திற்கு அப்பால் நகரும் தேடல் கொண்டவர்களாக இருக்கின்றனர். பிறர் வெறும் விசுவாசிகள். அவர்களுக்கு மார்க்ஸியத்திடமுள்ள உறவு கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையேயான உறவுபோல. நடுவே வானுக்கும் பூமிக்கும் இடையேயான தூரம் உண்டு.

மேற்சுத்திய மார்க்ஸியம் இன்று மேலைத்தேய ஆன்மிக மரபுகளுடனான உரையாடலினூடாக தனக்கென ஒரு மெய்யியலை உருவாக்க முயல்கிறது என்று படுகிறது. அதற்கிணையாக இங்கும் ஒரு கீழை மார்க்ஸிய மெய்யியலுக்கான அவசியம் உள்ளது. அதற்கு மிகமிக உதவியானது பௌத்த மெய்யியல். (பௌத்த மெய்யியலைக் கற்றறிந்த ஒரே மார்க்ஸிய அறிஞர் ராகுல சாங்கிருத்தியாயன்தான். ஆனால் ராகுல்ஜி கற்றதுபோல எவரும் எந்த மெய்யியலையும் கற்கலாகாது.) பௌத்த மெய்யியல் ஞானத்தை விசேஷம், சாமானியம் என்று பிரிப்பது மிக முக்கியமானது. விசேஷ ஞானத்தின் உள்ளுறை சாமானிய ஞானத்தின் உள்ளுறையுடன் கொள்ளும் உரையாடலே முக்கியமானது. இவ்வுரையாடல் இலட்சியவாதத் தன்மை கொண்டது, எனவே குறியீட்டுரீதியானது. ஒவ்வொரு வாழ்க்கை முறைக்கும் சுயமான பிரபஞ்ச தரிசனமும், அதன் விரிவாக்கமான மெய்யியலும் தேவை. அவை குறியீட்டு மொழியிலேயே இருக்கும். இக்குறியீட்டு மொழியை எந்த அமைப்பும் தன் முன்னோடி அமைப்புகளிடமிருந்து பெற்றுக்கொண்டு, தன் சக அமைப்புகளுடன் உரையாடுவதன் மூலம் வளர்த்துக்கொண்டுதான் முழுமை செய்துகொள்ள முடியும். மார்க்ஸியம் தன் குறியீட்டு மொழியை மதங்களிலிருந்தே உருவாக்கிக்கொள்ள முடியும். மதம் பழங்குடிச் சடங்கு முறைகளிலிருந்து தன் குறியீட்டு மொழியைப் பெற்றது. இதுவும் இயங்கியல்ரீதியான ஒரு பரிணாம வளர்ச்சியே. மார்க்ஸியர் மதத்தைப் பூரணமாக நிராகரித்து விட்டமையினால்தான் மார்க்ஸிய மெய்யியல் வெறும் நடைமுறைவாதமாக மெலிந்து நின்றுவிட நேர்ந்தது. பிரபஞ்சம் ஓர் அறியமுடியாமை. அனுபவத்திற்கு எட்டிய பிரபஞ்சத்தினூடாக நாம் கற்பனையை விரித்துப் பிரபஞ்சத்தை அளக்க முயல்கையில் உருவாவது குறியீட்டு மொழி. இவ்வாறு கற்பனை மூலம் இகவாழ்வை பிரபஞ்ச நியதியுடன் இணைப்பதை செவ்வியல் மார்க்ஸியம் ஒருவகை அதிகார / சுரண்டல் உத்தியாகமட்டும் கண்டு வந்துள்ளது. ஆனால் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு செயலுக்கும் மனிதனுக்கு ஒரு பிரபஞ்ச நியாயிகரணம் தேவைப்படுகிறது. மிகமிகப் பூர்வநிலைகளில் உள்ள பழங்குடிகளுக்குக்கூட இவ்வாறு தங்கள் ஒவ்வொரு வாழ்க்கைச் செயலையும் பிரபஞ்ச சலனத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது. அதற்குரிய ஐதீகங்களும் சடங்குகளும் அவர்களுக்குத் தேவையாகின்றன. ஒரு முதிரா பழங்குடிச் சமூகம்கூட மார்க்ஸியத்தைவிட அதிகமாக மெய்யியலை – குறியீட்டு மொழியை – கொண்டிருக்கும் என்று படுகிறது. மார்க்ஸியம் தன் மெய்யியல் வறுமையினாலேயே இன்று கூசி நிற்கிறது. அதன் மெய்யியலை வலுப்படுத்துவதே இன்று செய்ய வேண்டிய பணி. பிற கலாச்சார / அரசியல் நடைமுறைகள் தற்காலிகமானவையும், மேலோட்டமானவையும் மட்டுமே.

★ ★ ★

நேற்று முன்தினம் கெ.ஆர். வந்திருந்தார். இரவெல்லாம் பேசினோம். கெ.ஆர். இப்போதும் அதே உற்சாகத்துடன், ஐம்பதுகளின் செவ்வியல் மார்க்ஸிய வீம்புடன் இருப்பது ஒரு பக்கம் வேடிக்கையாகவும் மறுபக்கம் உள்ளார்ந்த மன எழுச்சியை ஊட்டக் கூடியதாகவும் இருக்கிறது. அவரைப் பொறுத்தவரை மார்க்ஸியமே ஒரே விடுதலை மார்க்கம். (''இறை தூதர்களால் இறக்கியருளப்பட்டது'') அது தவறிழைக்கச் சாத்தியமேயில்லை. எனவே டி.கெ.வேணு அவர் பார்வையில் மார்க்ஸிய சிந்தனையாளரே அல்ல. வெறும் திரிபுவாதி. மார்க்ஸியத்தில் குறை கண்டுபிடிக்க அமெரிக்காவால் அனுப்பப்பட்ட ஐந்தாம்படை, இன்னும் பிறவற்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள். (குழந்தை உள்ளமும் அப்பழுக்கற்ற இலட்சிய வாழ்வும் உள்ள கெ.ஆர். போன்ற ஒரு மாமனிதனுக்குள் டி.கெ.வேணு மீது இருக்கும் கடுமையான தனிப்பட்ட துவேஷம் மிக ஆச்சரியம் தரக்கூடிய ஒன்று. இது மானுட ஆளுமையின் எல்லைகளைக் காட்டுகிறதா இல்லை, அரசியல் கலாச்சாரத் தளங்களில் உள்ள இலட்சியவாதத்தின் எல்லையைக் காட்டுகிறதா? இந்த மனநிலையைப் பல மேதைகளிடமும் கர்ம வீரர்களிடமும் ஏற்கனவே கண்டுள்ளேன். அரசியல் கலாச்சாரத் தளங்களில் உள்ள தீவிரச் செயல்பாடுகளும், தியாகங்களும், இலட்சியக் கனவுகளும், சிந்தனைகளும் மனிதனின் அகங்காரத்தைக் கரைத்தழிப்பதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. அவை ஒருவனில் தீவிரமாகச் செயல்படும் காலங்களில் அகங்காரம் அழுத்தப்பட்டு, குறுக்கப்பட்டு மனமூலைக்குத் தள்ளப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் மட்டும் அது சில மன விரிசல்களினூடாகப் பீறிட்டுக் கிளம்புகிறது. இலட்சியவாதமும் சித்தாந்தமும் வலுவிழக்கும் முதுமையில் அந்த அகங்காரம் பொங்கி மேலெழுந்து எங்கும் நிரம்பி நாறுகிறது; துவேஷங்களாகவும், சுயமையப் பார்வையாகவும், பிற அற்பத்தனங்களாகவும். இலட்சியவாதிகளையும் சிந்தனையாளர்களையும் படைப்பிலக்கியவாதிகளையும் அவர்கள் முதுமையில் சந்திப்பது குமட்டல் தரும் அகங்கார தரிசனமாகவே இருக்கிறது.)

மாத்ருபூமி வார இதழில் டி.கெ.வேணு எழுதிய கட்டுரை ஒன்றைப்பற்றி அன்று பேசினோம். நரம்பியலின் வளர்ச்சி பழைய 'அறிதலா இருத்தலா' என்ற தருக்கத்தின் பற்பல அடிப்படைகளை மாற்றியமைப்பது பற்றி வேணு எழுதியிருந்தார். மானுட சிந்தனையின் பற்பல அம்சங்கள் மூளையின் நரம்பமைப்பால் தீர்மானிக்கப்படுபவை. ஆகவே ஏதாவது ஒரு இயற்கை நிகழ்வால் (உதாரணமாக உலகளாவிய பெரும் கதிர்வீச்சு) மானுட மூளையின் அமைப்பிலும் இயங்குமுறையிலும் அடிப்படையான மாற்றம் ஒன்று ஏற்படுமென்றால் அதற்கேற்ப மொத்த சமூக அமைப்பும், வாழ்க்கை முறையும், அதிகாரக் கட்டுமானமும் மாறிவிடக் கூடுமா? ஆம் என்று கூறுவோமெனில் வேணு கேட்கச் சாத்தியமான அடுத்த கேள்வி இன்னும் சுவாரஸ்யமானது. அப்படியானால் மானுட மூளையின் நரம்பமைப்பின் சகஜமான பிரதிபலிப்புதானா மானுட சிந்தனையும் சமூகமும் அரசமைப்பும் எல்லாம். பொருளாதார அடிக்கட்டுமானமும் அப்படித்தான். எனவே மானுட மூளையை மீறி மானுடன் ஏதும் செய்து விட முடியாது என்றாகிறது.

அதாவது எது செய்தாலும் அது மானுட மூளையின் நரம்பமைப்பின் சாத்தியங்களுக்கு உள்ளேதான் நிகழும். அப்படியானால் கலாச்சார / அரசியல் / ஆன்மீக நடவடிக்கைகளின் உண்மையான அர்த்தம் என்ன? வேணுவைத் தெரியுமே, அடிப்படைக் கேள்விகளை மூர்க்கமாக எழுப்புவதில் அவர் நிபுணர்.

கே.ஆர். விவாதங்களைக் கூர்ந்து கவனித்தபடி வந்தவர் ஊடே புகுந்து, ''தம்பிகளா, அப்படியானால் ஒரு தொழிலாளிவர்க்க சர்வாதிகார அரசு தன் மக்களுக்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட மூளை அறுவை சிகிச்சையை செய்துவிட்டால் சமூகத்தை நிரந்தரமாக விரும்பியபடி மாற்றியமைத்து விடலாமே?'' என்று மிகுந்த நம்பிக்கையுடன் கேட்டார். வாய்விட்டுச் சிரித்துவிட்டோம். பிறகு என் உடம்பு சிலிர்த்தது. உயிரணுவியல் வளரும் வேகத்தைப் பார்த்தால் ஓர் அரசு தன் குடிமக்களின் மூளையமைப்பை முழுக்க நிரந்தரமாக மாற்றியமைப்பது சாத்தியம் என்றே படுகிறது. விஞ்ஞானம் எப்போதும் நவீன சர்வாதிகாரிகளின் அடியாள். ஸ்டாலினைப் போன்ற ஒருவர் இத்தகைய முயற்சியில் சற்றும் தயங்காமல் இறங்கக்கூடும். அதன் விபரீத பலன்கள் பிரமிப்பூட்டுபவை. சமூகத்தைப் போலவே மூளையைப் பற்றியும் மனிதனுக்குத் தெரிந்தது துளி, தெரியாதது கடல். ஒன்று செய்ய இன்னொன்று நிகழ்ந்தால் என்ன ஆகும்? ஒரு தேசத்து மக்கள் முழுக்க சக மனிதர்களை எவ்வகையிலும் உணரவோ அறியவோ முடியாதவர்களாக ஆனால்? ஒரு தேசத்து மக்கள் முழுக்க இறந்த காலமோ எதிர்காலமோ பற்றிய எவ்விதப் பிரக்ஞையும் இல்லாதவர்களாக ஆகிவிட்டால், ஒரு தேசத்து மக்கள் முழுக்க பேசும் மொழிக்கும் நினைவில் வைத்திருக்கும் மொழிக்கும் இடையே உறவே இல்லை என்ற நிலையை அடைந்தால் எப்படி இருக்கும்? நினைக்கவே பயங்கரமாயிருக்கிறது. ஆனால், நடந்தவற்றை வைத்துப் பார்த்தால் வரலாற்றில் இது நடக்கவும் கூடும் என்றே படுகிறது. இரவில் தனித்து டீ குடிக்கச் செல்கையில் விரைவிலேயே அது நடக்கப் போகிறது என்ற எண்ணம் ஏறிஏறி வந்தது. சிகரெட்டுகளாகப் புகைத்தபடி இருந்தேன். பிரபாகரனும் அதைத்தான் யோசித்தான் போலும். ''தோழர் அப்படியானால் வரலாற்றின் அக இச்சை, பரிணாமத்திற்கான துடிப்பு, இங்கு எப்படிச் செயல்படும்?'' என்று கேட்டான். ''அத்தனை மனிதர்களின் மூளையையும் மாற்றியமைப்பது என்பது வரலாற்றின் மூளையைக் குடைவதற்கு சமம். வரலாற்றுக்கும் பைத்தியம் பிடிக்கும்'' என்றான் ஜோசப் கடுக்காச்சேரி. என் உடலில் ஷாக் அடித்துப்பட்டதுபோல இருந்தது. பைத்தியம் பிடித்த வரலாறு! ஒரு மார்க்ஸிய மாணவியைப் பொறுத்தவரை வரலாறு என்பது பரிணாம வளர்ச்சியை, அதாவது சுய மேம்பாட்டை, உள்கிடக்கையாகக் கொண்ட மாபெரும் மானுடப்பிரவாகம். அதன் உள்ளார்ந்த நல்லியல்புமீதும், வல்லமைமீதும் அவனுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்கும். வரலாறுதான் அவனது கடவுள். கடவுளுக்கு மூளை குழம்பிப் போனால்? எனது சொந்த ஊர் அருகே இருக்கும் வேலி முடிப்புரை என்ற அம்மன் கோயில் உண்டு. அங்குள்ள தேவிக்கு வருடத்தில் பதினெட்டு நாள் பைத்தியம் பிடிக்கும். அவளை வழிபடுகிறவர்களுக்கும் அப்பைத்தியம் பரவும். கோயிலில் இருந்து இறங்கி

வயல்வெளியில் கொண்டு சென்று வைத்து, ரத்தபலியைக் கொட்டி, அப்பைத்தியத்தைக் குளிர்வித்து, அவளை அடக்கி அமரவைப்பார்கள். உலகமெங்கும் ஆயிரக் கணக்கான சிறு தெய்வங்களுக்கு பைத்தியம் பிடிக்கிறது. வரலாறு என்ற முழு முதல் கடவுளுக்குப் பைத்தியம் பிடித்தால்... ஓடிப்போய் மூளை சிதறும்வரை மதுவருந்தினோம். வந்து படுத்ததும் தெரியாது; தூங்கியதும் தெரியாது. எழுந்து டீகூட குடிக்காமல் இதை எழுதுகிறேன்.

உங்கள் கேள்விகள் மிகத் தீவிரமான முறையில் அனைத்தையும் தொகுத்துக்கொள்ளத் தூண்டுபவை. மார்க்ஸியர்களின் அறம் என்ன என்ற அடிப்படை வினா உங்கள் உரையாடலின் அடியோட்டமாக எப்போதும் உள்ளது. மார்க்ஸியர்கள் இந்த உலகத்தை ஒரு பெரும் சுரண்டல் களமாகக் கருதுகிறார்கள். இங்குள்ள மானுடவாழ்வுதுக்கம் நிரம்பியதாக இருப்பதற்கு இதுவே காரணம். யேசு இவ்வுலகு பாபத்தின் துக்கத்தால் நிரம்பியுள்ளது என்றார். புத்தர் அறியாமையும் ஆசையும் விளைவிக்கும் துக்கத்தால் நிரம்பியுள்ளது என்றார். மார்க்ஸியம் அத்தரிசனங்களின் தொழிற் புரட்சிக்குப் பிந்தைய, பரிணாமவாதத்திற்குப் பிந்தைய நீட்சியே என்று படுகிறது.

மார்க்ஸிய மெய்யியல் எங்கு புத்தருடனும் கிறிஸ்துவுடனும் முரண்படுகிறது? மனிதம் என்பதை தனிமனிதர்கள் என்றே கிறிஸ்துவும் புத்தரும் பார்த்தார்கள். தனிமனிதர்களை நோக்கியே அவர்கள் பேசினார்கள். அவர்கள் கூறும் மீட்பும் தனிமனிதர்களுக்கு உரியது. மார்க்ஸ் மானுடப் பெருந்திரளை நோக்கி, அதை ஒற்றைப் பேரிருப்பாக உருவகித்துப் பேசினார். அவர் கூறும் தீர்வும் மனிதத் திரள் அடையச் சாத்தியமானதுதான். பௌத்தக் கிறிஸ்தவ மெய்யியல்கள் மனிதனின் சமூக அமைப்பைக் கணக்கில் கொள்ளாமையினால் குறைபாடுள்ளவையாக ஆகின்றன. மோசமான சுரண்டலும், ஒடுக்குமுறையும் நிரம்பிய ஒரு சமூகச் சூழலில் தனிமனிதன் தன்னளவில் மீட்புக்காக என்ன செய்ய முடியும்? அங்குதான் மார்க்ஸியம் பேச முற்படுகிறது. தாங்கள் ஒவ்வொருவருக்கும் உழைக்கவும் அனுபவிக்கவும் அறியவும் அதிகபட்ச வாய்ப்பைத் தரும் ஒரு சமூக அரசியல் அமைப்பை மானுடகுலம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று அது கூறுகிறது. அது ஓர் இலட்சியக் கனவாக இருக்கலாம். ஆனால் அந்தக் கனவு இல்லாமல் முன்னகர்வது சாத்தியமில்லை. மார்க்ஸியம் இல்லையேல் இன்றைய சுதந்திர ஜனநாயக அரசுகள் எதுவுமே உருவாகியிருக்க முடியாது. அனைத்து நலம் நாடும் அரசுகளும் அக்கனவு நோக்கி நகர்ந்ததன் பல்வேறு படிநிலைகளேயாகும். ஆனால் பழங்கால மார்க்ஸியர் இதுவே போதுமானது என்று நம்பினார்கள். சிறந்த சமூக அமைப்பு உருவாகும்போது அச்சமூகத்தின் ஒரு துளிமட்டுமான தனிமனிதனும் சிறந்தவனாக ஆகத்தானே வேண்டும்? சிறப்பான தனிமனிதர்கள் உருவானால் அத்தனிமனிதர்களின் தொகுப்பாக சிறந்த சமூகம் தானாகவே உருவாகிவிடும் என்ற பழைய கோழிக்கனவின் எதிர்க் கோழிக்கனவு மட்டுமே இது. தனிமனிதன் ஒரு சமூக உறுப்பு மட்டுமல்ல. சமூகமும் தனிமனிதர்களின் தொகுப்பு மட்டுமல்ல. ஒருவனில் உள்ள சமூக

மனிதனுக்கு அடியில் பற்பல அடுக்குகள் உள்ளன. உயிரியல்புகளால், புரிந்து கொள்ளவே முடியாத இயற்கை நியதிகளால் இயக்கப்படும் ஆழங்கள். சமூகம் இயற்கையின் பல்லாயிரம் அமைப்புகளின் நீட்சியும் பிரதிபலிப்பும் ஆகும். சமூக அமைப்பின் இயங்கு முறையில் எந்தத் தத்துவ மேதையும் ஜனித்துவிட முடியாத பல்லாயிரம் சக்திகள் ஜடுபாவுகளாக இயங்குகின்றன. தனிமனிதனும் சரி, சமூகமும் சரி, திட்டவட்டமான அமைப்பும் இயங்குமுறையும்கொண்ட இயந்திர ரூபங்களல்ல அவை உயிர் அமைப்புகள். உயிர் நாம் ஒருபோதும் முழுக்க அறிந்துவிட முடியாத பிரபஞ்சத்தின் ஒரு துளி: எனவே எதையும் நாம் முழுக்க அறிந்துகொள்வது சாத்தியமல்ல.

செவ்வியல் மார்க்ஸியத்தின் தவறு அது மீதமின்றி வகுத்துவிடச் சாத்தியமான ஜட அமைப்புகளாக சமூகத்தையும் தனிமனிதர்களையும் உருவகித்தது என்பதே. தனிமனிதர்களை அது வெறும் சமூக ஜீவிகளாக மட்டும் வகுத்துக்கொண்டது. எனவே ஒரு அரசியல் செயல்பாடு மூலம் ஒரு சமூகத்தின் பெரும்பான்மை மக்களை (அல்லது ரஷ்யாவில் போல்ஷவிக் புரட்சியில் நடந்ததுபோல வலிமையான சிறுபான்மையை) ஒரு சமூக அமைப்புத் திட்டத்திற்கு ஒப்புக்கொள்ள வைப்பதே போதுமானது என்ற எளிய நடைமுறைத் தீர்வுக்கு அது வந்தது. சமூக அமைப்பு, வெளியேயிருந்து மாற்றப்பட முடியும் என்றும், அம்மாற்றம் சமூகத்தின் ஒவ்வொரு துளியையும் முற்றாக மாற்றிவிடும் என்றும் லெனினும் ட்ராட்ஸ்கியும் கனவு கண்டனர். பேரழிவின் விஷ ஊற்று இந்த அடிப்படையான தரிசனத்தில்தான் உள்ளது.

ஒரே சமயம் சமூகப் புரட்சியும் தனிமனிதப் புரட்சியும் நடைபெறும் ஒரு மாறுட இயக்கத்தையே இனி நாம் கனவு காண வேண்டும். சித்தாந்தங்கள் என்பவை கனவுகாணும் திறனை இழந்துவிட்ட மனிதர்கள் அதை தருக்கத்தால் ஈடுகட்டிவிட முயலும்போது உருவாகக் கூடியவைதாமா? அரை உண்மையை இழுத்து நீட்டி முழு உண்மையாகக் காட்டும் அறிவு ஜாலங்களா அவை? மார்க்ஸியத்தின் அரசியல் கனவு மகத்தானது என்று இன்றும் நம்புகிறேன். அதற்கான போராட்டத்தில் சாக எக்கணமும் தயாராக இருக்கிறேன். அதேசமயம் அது ஒவ்வொரு தனிமனிதனையும் அதிகபட்சப் பிரபஞ்ச ஒத்திசைவுடன் வாழச் செய்யும் ஆன்மீக சாரத்தையும் தனக்குள் கொண்டிருக்க வேண்டும் என்றும் விழைகிறேன். மதங்களை வீணாக எதிர்த்து, ஒரு எதிர்மதமாக நின்றிருந்தது மார்க்ஸியம் இதுவரை. எனவே மதங்களின் எதிர்மறை அம்சங்கள் முழுக்க ஒன்றுவிடாமல் அதற்கும் வந்தன. (நாம் எதை எதிர்க்கிறோமோ அதைப் போலவே ஆகிவிடுவோம்.) இன்று மார்க்ஸியம் மதங்களுடன் திறந்த விவாதம் ஒன்றுக்கு முயல வேண்டும். தனிமனிதனை நோக்கியும் அது பேச முற்பட வேண்டும். கீழை மரபில் பௌத்தத்தின் நீட்சியாகவே மார்க்ஸியம் தன்னை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். (ஆனால் புத்தரை செருப்பாலடிக்க மக்களைத் தூண்டினார் மாவோ. அவரது கலாச்சாரப் புரட்சி சீனாவை உதிரத்தில் மிதக்கடித்தது) அரசியல்ரீதியாகவும் ஆன்மீகமீதியாகவும் ஒரே சமயம்

போராடக்கூடிய, ஒன்றையொன்று நிரப்பிக்கொள்ளும் இரு தளங்களாலான, ஒரு மாஞ்ட இயக்கமாக மார்க்ஸியம் மாற வேண்டும். இது கனவுதான். ஆனால் பெரிய கனவுகள் தேவையாகும் காலகட்டம் இது. வறண்டு சலித்துக் கிடக்கும் இந்த நுகர்வோர் யுகத்தின் இதயத்தைப் பிளந்தபடி அப்பெருங்கனவுகள் முளைத்து எழ வேண்டும்.

★ ★ ★

நேற்று விடுபட்ட இடத்திலிருந்து கடிதத்தை மீண்டும் எழுதுகிறேன். சமூக அமைப்பை மாற்றுவது குறித்த போராட்டத்தில் வன்முறையின் பங்கு குறித்து உங்கள் கருத்துகளைக் கூறினீர்கள். வன்முறைக்கு அழிவு என்ற ஒரேயொரு அர்த்தத்தை மட்டுமே நீங்கள் தருகிறீர்கள். (பழந்தமிழ் மரபு மறம் என்ற சொல்லையே வன்முறைக்கும், அநீதிக்கும், அறத்திற்கு எதிர்ப்பதமாகவும் பயன்படுத்தியது.) உங்கள் வாதம் இலட்சியத் தன்மை கொண்டது. நான் நடைமுறையில் அதைப் புரிந்துகொள்ள முயல்கிறேன்.

மாஸ்கோ உயிரியல் காட்சிசாலையில் நடந்த ஒரு பரிசோதனை பற்றி படித்தது ஞாபகம் வருகிறது. திறந்த வளைப்புக்குள் புலிகளும் சிங்கங்களும் கரடிகளும் மான்களும் பசுக்களும் ஓநாய்களும் இன்னும் பல்வேறு மிருகங்களும் ஒன்றாகக் கூடிவாழும் காட்சியைப் பார்வையாளர் காண நேர்ந்தது. கூர்ந்து கவனித்தவர்கள் ஒவ்வொரு மிருகமும் தனக்குரிய இடத்தை மானசீகமாக வகுத்துக் கொண்டு அந்த எல்லைக்குள்ளேயே சுற்றி வந்ததைக் கண்டார்கள். அது எப்படி நடந்தது? முதலில் அவ்விலங்குகள் கனத்த வேலிகளினாலான தனித்தனி பகுதிகளில் போடப்பட்டன. அவை வேலிகளை பிராண்டின, அறைந்தன, தாவ முயன்றன. மறுபக்கத்தில் உள்ள மிருகங்களின் வாசனை அவற்றை அமைதியிழக்க வைத்தது. படிப்படியாக அவை வேலிகளுக்குப் பழகின. பிறகு வேலிகள் அகற்றப்பட்டு மெல்லிய மின்சாரக் கம்பிகளினாலான எல்லைகள் வகுக்கப்பட்டன. பிற்பாடு அதுவும் அகற்றப்பட்டது. விலங்குகளில் ஒரு சூழல் மெல்லப் பழக்கமாக ஆகிறது. பிறகு அப்பழக்கம் அதன் உடலியக்கத்தில் கலந்து அதன் அடிப்படை விலங்கியல்பாக மாறிவிடுகின்றது. இதையே ஆக்கநிலை மறிவினை என்று உயிரியல் குறிப்பிடுகிறது. இந்த ஆக்கநிலை மறிவினை பரம்பரைகளுக்கும் பரவக் கூடியது. பருந்தின் நிழலைக் கண்டதும் முட்டைக்குள்ளிருந்து அப்போதுதான் வெளிவந்த கோழிக்குஞ்சு ஓடிப்போய் பதுங்கிக்கொள்ளும். ஆக்கநிலை மறிவினையை விலங்குகளால் மீற முடியாது.

இந்த 'சொர்க்கத்தில்' ஆடுகள் தினமும் தாங்களாகவே நடந்து வந்து புலி சிங்கங்களுக்கு தங்களைப் பலி தருகின்றன என்று வைத்துக்கொள்வோம். இந்த மொத்த அமைப்பும் சில மிருகங்களின் நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்டது என்று கருதுவோம். ஆக்கநிலை மறிவினையை தற்செயலாக மீறும் விலங்கு உடனடியாகக் கொல்லப்பட்டு எல்லைக் கோட்டில் கிடத்தப்படும் ஒரு சட்ட அமைப்பும் இயங்குவதாகக் கொள்வோம். இந்த அமைப்பு எதைப் பிரதிநிதித்துவம் செய்கிறது?

நடைமுறையில் இவ்வமைப்புக்குள் துளிகூட வன்முறை நிகழாமல் இருக்கலாம். பற்பல தலைமுறைகள் அவ்வமைதி நீடிக்கலாம். ஆனால் இது வன்முறை இல்லாத அகிம்சை அமைப்பா? வன்முறையால் ரத்தபலியால் உருவாக்கப்பட்டவை அல்லவா அந்த எல்லைகள்? வன்முறை இன்றி ரத்தமின்றி அவற்றை மீறுவது எப்படிச் சாத்தியம்? சமூகம் கருத்துக்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது. அக்கருத்துக்கள் வன்முறையின் லேசர் பாதுகாப்பு வளையம் உடையவை. உதாரணமாக தேசியம். அன்றாட அனுபவத்தில் அது பாடப் புத்தகத்திலும், ரூபாய் நோட்டிலும் உள்ள ஒரு விஷயம். அதை மீற முயலுங்கள், சாணக்கியன் முதல் சர்தார் பட்டேல் வரையிலான ஒரு பெரும்படையின் கூரிய கோடிவாட்கள் பொங்கி வந்து உங்களை பலி கொள்ளும். சவால் விடாதவரை வன்முறை தூங்கும் பூதம்தான். அன்புள்ள ராமசாமி, உங்கள் அழகிய வீட்டில், கதகதப்பான படுக்கையில், புத்தகங்களுக்கு நடுவே நீங்கள் இருப்பதுவரை உங்களைப் பொறுத்தவரை வன்முறை என்பது அழிவு மட்டும்தான். எங்களுக்கு அது சுய அடையாளம், எதிர்ப்பு, எதிர்காலம். எனவே அது ஆக்கமும் ஆகும்.

அன்று உங்கள் உரையாடலில் ஆயுதமேந்துபவனின் ஆளுமை பற்றிச் சொன்னீர்கள். அது ஒரு கோணம்தான். ஆயுதமேந்திப் போரிடச் சென்ற அனுபவம் உங்களுக்கு ஒருமுறையேனும் இருந்திருந்தால் இதன் மறுபக்கம் தெளிவாகியிருக்கும். பீகாரில் ஆறு வருடங்களுக்கு முன் ஒரு தாக்குதலுக்குச் சென்ற அனுபவம் எனக்கு உண்டு. துப்பாக்கி அன்று எனக்கு எதுவாக இருந்தது என்பதை விளக்க இன்று என் சொற்களஞ்சியத்தை முழுக்கச் செலவிட வேண்டும்.

இப்படிச் சொல்ல முயல்கிறேன். ஒவ்வொரு வாழ்க்கைச் சந்தர்ப்பத்திலும் எனது சுயம் மாறுபடும் தரப்புகளாகப் பிரிந்து பிரிந்து சமரிட்டபடி இருப்பதாகவே தோன்றி வந்துள்ளது. சிறுவயதில் கடைகளுக்குப் பால் ஊற்றித் திரும்பும்போது பால் செம்புகளுக்குள் நண்டுகளைப் பிடித்துப் போட்டு விளையாடுவோம். செம்பு இடைவிடாது பேசியபடி இருக்கும். நண்டுகள் பின்னி நெளியும். அனேகமாக எந்த நண்டும் வெளியே வராது. ஒன்றை இன்னொன்று பிடித்து இழுத்துவிடும். அந்தச் செம்புதான் என் மனம். வெளிவரும் நண்டு ஒரு தற்செயல்தான். அதன் காலைக் கவ்வி அடுத்த நண்டு உள்ளே இழுக்கிறது. என் ஆளுமையின் வெளிப்பாடாக இதுவரை நிகழ்ந்த ஒவ்வொன்றும், எனது ஒவ்வொரு கருத்தும் இவ்வாறு தற்செயலாகத் ததும்பிச் சிதறியவையே. இயல்பாகவும் இன்றியமை யாமலும் என்னில் சுயமுனை குவியும் தருணங்கள் மிகமிகக் குறைவு என்பதே எனது மிகப்பெரிய இம்சை. அந்த அபூர்வத் தருணங்களில் நான் வேறு ஒருவனாக மாறி மீள்வதை மிகுந்த வியப்புடனும் பீதியுடனும்தான் பிறகு என்னால் நினைவுகூர முடிகிறது; அத்தருணங்களில் எனது சக்தி எனக்கு நடுக்கம் தருகிறது. சில கணங்கள்தான். சிதறிப் பரந்து அழிகிறேன்; சொல்பொரு சிறுநுரைபோல.

ஆனால் ஆயுதமேந்திக் கிளம்பிய கணத்தில் அவ்வாயுதமாக எனது ஆளுமை குவிமுனை கொண்டதை ஒரு பேரனுபவம் என்றே கூறுவேன். போர்க் களத்தில் மரண முனையில் சிப்பாய்கள் எவ்வளவு உச்சகட்ட மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என்பதை தல்ஸ்தோய் போரும் அமைதியும் நூலில் அற்புதமாகச் சித்தரித்திருப்பது ஞாபகம் வருகிறது. அந்த உவகை எங்கிருந்து வருகிறது? மனம் என்ற ஓயாத விவாதம் நின்றுவிட்டதனால் ஏற்படுவது அது. சஞ்சலங்களழிந்து இது நான் என உணர முடியும் ஒருமையுணர்வு தரும் களிப்பு அது. இருநிலையின்றி ஒரு செயலை ஆற்றும்போது செயலாகவே நாம் ஆகிவிடும் அத்வைத அனுபவம் தரும் பரவசம் அது. ஆயுதத்தை முதலில் பார்த்தபோது இறந்த உடலைப் பார்க்கும் போது ஏற்படும் அச்சம் மிகுந்த ஆர்வம் வருவதை அறிந்தேன். அதுவும் மரணத்தின் தூலம்தான். மரணம் நமக்கும், நம் எதிரிக்கும், அனைவருக்கும் பொதுவானதும், அதீதமானதுமான பேரிருப்பு என அப்போது நம் ஆழ்மனம் அறிகிறது. ஆயுதத்தின் முதல் தொடுகை பிணத்தை முதன்முதலாகத் தொடுவதற்கு நிகரானது. பிற்பாடு அதன் சிறுசிறு இயந்திர நுட்பங்களில் ஆர்வம். அது நம் கையில் இயங்கத் தொடங்கும்போது அதன் அழிவுச் சக்தியை, உக்கிரமான அதன் வெளிப்பாட்டை மனம் நம்மையறியாமல் ரசிக்க ஆரம்பித்துவிடுகிறது. தகர டப்பாவை அடிக்கும் குழந்தை அந்தப் பேரொலியை தன் கையே எழுப்புகிறது என்று எண்ணி மகிழ்வதுபோல அந்த வல்லமையை எனது என்று உணர்ந்து உள்ளம் பூரிக்கிறது. அது அப்பொருள்மீது பிரியம்கொள்ளச் செய்கிறது. ஆயுதம் வைத்திருக்கும் போது கையாலும் மனதாலும் அதை சதா வருடியபடியே இருக்கிறோம். அது நம் கனவில் வருகிறது. அதன் பருவடிவம் நம்மை ஆட்கொள்கிறது. அதன் கனம், கருமை, உலோகப் பளபளப்பு, எண்ணை வாசனை, புகைநெடி, குளுமை... மன்னிக்க வேண்டும் ராமசாமி, கடிக்கவரும் நாயைப் பார்த்துக் கல்லை எடுத்துக்கொள்பவன் அக்கல்மீது கொள்ளும் உணர்வே நீங்கள் குறிப்பிட்டது. பயிற்சி பெற்ற வீரன் ஆயுதத்திடம் கொள்ளும் உணர்வு நேர் மாறானது. அது அவனுக்கு அவனைவிட மேலான அவனுடைய சுயமேயாகும். என் ஆளுமையே முனைகொண்டு, பருவடிவு பெற்று, என் கையில் அமர்ந்திருக்கிறது. அதன்பிறகு நான் சுமந்து செல்வது அள்ளவோ அளக்கவோ முடியாத சொற்களாலும் படிமங்களாலும் ஆன ஒரு மனப்பெருவெளியை அல்ல; திட்டவட்டமான, கச்சிதமான, தூலமான ஒன்றாக மாறிய என் மனதை. ஒரு சிறு தீண்டலில் உக்கிரம் பெற்று ஒரு நெருப்பை உமிழக்கூடும். அது நான் சுடர்ந்தெழும் கணமும்கூட. போரில் பங்குபெற்ற ஒவ்வொருவனும் தன் வாழ்வில் ஆகச் சிறந்த கணமாக போர்த்தருணத்தையே கூறுவான்.

கருத்தியலின் ஒரு தரப்பை பிறர்மீது வைத்து வெற்றிபெறும் பொருட்டு மட்டும் வன்முறை கையாளப்படுவதில்லை. அது ஓர் இறுதிச் செயல்பாடு மட்டுமே. முதலில் கருத்தியலின் தன் தரப்பை தனக்கே நிறுவித் கொள்வதற்கு வன்முறை அவசியமாகிறது. ஏனெனில் சகஜநிலையில் எந்த

மனித மனமும் எந்தக் கருத்தையும் பூரணமாக நம்பி ஏற்பதில்லை. மனித மனமெனும் பிரம்மாண்டமான விவாதக்களத்தில் வெறும் ஒரு தரப்பாக அது ஆகிவிடுகிறது. வலுவான நம்பிக்கையாக ஆகாதபோது எந்தக் கருத்தும் ஒரு பௌதிக சக்தியாக ஆவதில்லை. மரணத்தின் கீழ் மனித மனம் முனை கொள்ளும்போது அம்முனை அக்கருத்தாக இருக்கச் செய்ய ஆயுதத்தால் முடியும். ஆகவே ஒருவகையில் ஆயுதம் என்பது தூலம்கொண்ட கருத்தும்கூட. இதன் பொருட்டு நான் கொல்வேன், இதன் பொருட்டு நான் சாகவும் செய்வேன் என்று கூறும்போதுதான் அந்தக் கருத்துக்கு ஒரு பௌதிக சக்தியாக இயங்கும் வலிமை வருகிறது. ஆயுதமேந்திய கருத்தியலமைப்பு ஒன்று தன் உறுப்பினர்களுக்கு அளிக்கும் அழுத்தமான நம்பிக்கையையும், அதன் விளைவான முனைகொண்ட ஆளுமையையும் ஆயுதமேந்தாத ஓர் அமைப்பு ஒருபோதும் தரமுடியாது. அவ்வமைப்பு தனிமனித மனதின் விரிவாக்கமாக முடிவற்ற விவாதக் களமாக இருக்கும். ஒரு கட்டத்தில் விவாதத்திற்காக விவாதம் என்று அது ஆகும். விவாதத்தில் பயிற்சி உடைய ஒருவர் எதையும் நியாயப்படுத்திவிட முடியும். எதற்கும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துவிட முடியும். இப்பாதுகாப்பு கிடைக்கும்போது அற்பத்தனங் களும் சுயநலங்களும் கோழைத்தனங்களும் தருக்க முகமூடியுடன் அரங்குக்கு வந்து ஆட்டம் போடும். அந்த ஆபாசப் பெருநாடகம் ஏற்கனவே எங்கும் நடந்துகொண்டிருக்கும் வாழ்வின் ஒரு குறியீடோ பிரதிபலிப்போ ஆகவே இருக்கும். வாழ்வை இம்மிகூட அதனால் மாற்றியமைக்க முடியாது. காந்தியின் காங்கிரஸ் அப்படிப்பட்ட நிலையிலேயே எப்போதும் இருந்தது. சிற்சில போராட்ட உச்சங்களின்போதுதான் அதற்குள் ஆளுமை உச்சம் நிகழ்ந்துள்ளது. அதை உருவாக்கியதும் ஆயுதமே. வெள்ளையரின் ஆயுதம். ஆம், காந்தியும் ஆயுதங்களை நம்பியே இருந்தார்; எதிரி கையில் இருந்த ஆயுதங்களை. அது அஹிம்சையல்ல; மிக ஜாக்ரதையான சுயஹிம்சை. எல்லைக் கோட்டை மெல்லத் தொட்டுச் சீண்டும்படி கற்பித்தார் அவர். எல்லைக்கோடு இருப்பதும், அது வன்முறையாலானதாக இருப்பதும் அப்போதுதான் மக்களுக்குப் புரிய வந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின்மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கையை சிதைப்பது மட்டுமே காந்தியின் நோக்கம். வரம்புகளைச் சீண்டி, பிரிட்டிஷ் அமைப்பின் உள்ளுறைந்த மௌன வன்முறையை வெளியே இழுத்துப் போடுவதே சத்யாக்ரகப் போர் முறையாகும்.

ஒரு தற்காலிக உத்தியாக, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள், பயன்மிக்க போராட்ட உத்தி என்று காந்திய வழிமுறைகளை ஒத்துக்கொள்கிறேன். நியாயமாக நடந்துகொள்கிறேன் என்று கூறிக்கொள்கிற, அதைத் தனக்குத் தானே நம்புகிற, பிறரை நம்பவைப்பது குறித்துப் பதற்றம் கொண்டிருக்கிற, ஓர் எதிரி அதற்குத் தேவை. மிகச் சிறிய சமூகமான பிரிட்டிஷார் பாதி உலகை ஆண்டது பிரிட்டிஷ் நீதி, நிர்வாக, குடிமை அமைப்புகள் அவர்கள் ஆண்ட பகுதிகளிலிருந்த அமைப்புகளைவிடத் தரமானவை என்பதனால்தான். அவர்களால் ஆளப்பட்டவர்கள் அவர்களை நம்பி ஏற்றுக்கொண்டார்கள்.

'வெள்ளையனின் பொறுப்பை' அதிகம் நம்பியவர்கள் கறுப்பர்கள். ஆகவே 'நீதி வழுவுவதும்' வன்முறையைச் சார்ந்து இயங்க நேர்வதும் பிரிட்டிஷாரைப் பொறுத்தவரை தற்கொலைக்குச் சமம். இப்பலவீனமே காந்தியால் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. எப்போதும் பிரிட்டிஷ் நீதியின் வளாகத்திற்கு உள்ளே நின்றபடி பேசவே காந்தி முயன்றார். தன் இயக்கத்தை ஒரு வன்முறைக் கிளர்ச்சியாகவோ, அரசமைப்புக்கு எதிரான கலகமாகவோ எவரும் முத்திரை குத்திவிட வாய்ப்புத் தராதபடி அவர் மிக விழிப்புடன் இருந்தார். ஒவ்வொரு முறையும் பிரிட்டிஷ் நீதிமன்றத்துக்கு வந்து, குற்றவாளிக் கூண்டில் ஏறி நின்று, தன் தரப்பைக் கூறி, தண்டனையை ஏற்க அவர் தயங்கியதில்லை. சட்ட மறுப்பின்போதுகூட பிரிட்டிஷ் சட்டங்களையல்ல, மாறாக தான் ஏற்காத ஒரு குறிப்பிட்ட சட்டத்தை மட்டுமே அவர் மீறினார். அதாவது பிரிட்டிஷ் அதிகாரத்தின் தார்மீகத்தை இழக்க வைப்பதும், அதன்மீது தன் தார்மீகத்தை நிலைநாட்டுவதும் காந்தியின் உத்திகள். ஒரு ஜனநாயக மக்கள்நல அரசில் மக்கள் போராட்டங்கள் இப்படி இருக்கலாம்.

காந்திக்கு ஸ்டாலினும் ஹிட்லரும் வகித்த 'வரலாற்றுப் பாத்திரங்கள்' குறித்த தகவல்கள் முழு உருவத்தில் தெரிந்திருக்கவில்லை. அதற்கு முன்னதாக அவர் மரணமடைய நேரிட்டது. அவ்வரசுகளின் அதிகாரம் பெரும்பாலும் ராணுவரீதியானது. அதை நியாயப்படுத்தவே (பிரச்சாரத்திற்கு) கருத்தியல்கள் பயன்படுத்தப்பட்டன. ஓர் அதிகாரத்தை எந்த அடிப்படைத் தாங்கி நிற்கிறதோ அதைத் தாக்கித் தகர்க்காமல் அவ்வதிகாரத்தை இம்மியும் மாற்ற முடியாது. அதிகாரம் தார்மீகங்களால், நம்பிக்கைகளால், இன உணர்வுகளால், இன்னும் பற்பல கருத்தியல் காரணிகளால், ராணுவ பலத்தால் நிலைநிறுத்தப்படுகிறது. ராணுவரீதியான அதிகாரம் ராணுவபலமின்றி ஒருபோதும் எதிர்க்கப்பட முடியாது.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம் உண்டு. காந்திக்கு மனித மனதின் அடிப்படையான நல்லியல்பு குறித்து ஆழமான நம்பிக்கை இருந்தது. அதை என்னால் ஏற்க முடியவில்லை. மனிதமனம் பெரிதும் பழக்கத்தால் இயங்குவது. பழகிவிட்டால் ஒரு மனிதனால் எதுவும் செய்ய முடியும். சத்யாக்ரகிகளைக் கொல்ல வெள்ளையரசு ஒரு அரசுத் துறையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். முறைப்படி தேர்வு நடத்தி ஆட்களை நியமனம் செய்திருக்க வேண்டும். சீருடைகளும் பணியடுக்கு முறையும் பணி வரன்முறைகளும், வழிகாட்டுதல்களும், ஊதிய விகிதங்களும் வகுத்திருக்க வேண்டும். அது படிப்படியாக மொத்த காந்தியவாதிகளையும் கொன்று ஒழித்துவிட்டிருக்கும். அதன் ஒவ்வொரு உறுப்பினனுக்கும் தான் செய்வது தன் பணியை மட்டுமே என்றும், ஒட்டுமொத்த அமைப்பின் செயலுக்கு தான் பொறுப்பல்ல என்றும், சுயசமாதானம் உருவாகி விட்டிருக்கும். அதற்கேற்ப வேலைப்பங்கீடு இருக்கவேண்டும். ஒருவன் கொலை செய்யப்பட வேண்டியவர்களை பட்டியலிட்டு அடையாளப்படுத்த வேண்டும். ஒருவன் பதிவேடுகளைத் தயாரிக்கவேண்டும். ஒருவன்

பரிந்துரை செய்ய, மேலிடத்தில் எங்கோ ஒருவன் எதுவுமே தெரியாமல் உத்தரவில் கையெழுத்திட வேண்டும். ஒருவன் கைது செய்வான், சிறை வைப்பவன் இன்னொருவன். சிலருக்கு விஷவாயு அறைகளைச் சிறப்பாக பராமரிப்பது மட்டுமே வேலை. விஷவாயு அறையின் பித்தானை அமுக்குகிறவன் ஒரு அழகிய குளிர்ந்த அறையில் இருந்தபடி வண்ண விளக்குகள் தரும் குறியீடுகளுக்கு ஏற்ப அதைச் செய்வான். அந்தப் பித்தான்களுக்கும் ஒரு தட்டச்சுப் பொறியின் பித்தான்களுக்கும் அவனைப் பொறுத்தவரை எந்த விதமான வித்தியாசமும் இருக்காது. அந்தப் பெரிய யந்திரத்தின் முன்பு சத்தியாக்ரக போராட்டம் நடத்துவது என்பது தானியங்கி ரயில்முன் படுத்து ரயில்மறியல் செய்வது போல.

இன்னும் யோசித்தால் அந்த யந்திரத்தின் உறுப்பாகச் செயல்படும் ஒவ்வொரு மனிதனும் அந்த வேலையை ரசிக்க ஆரம்பித்திருப்பதைக் காணமுடியும். அந்த வேலை அவனுக்கு ஒரு சுய அடையாளத்தையும், சமூகத்தில் பங்கையும், சமூகத்தின்மீது அதிகாரத்தையும் அளிக்கிறது. அரசமைப்புடன் அவனுக்கு அது தொடர்பு ஏற்படுத்துகிறது. அதை மேலும் மேலும் சிறப்பாகச் செய்வதனூடாகவே அவன் தான் கொண்டிருக்கும் அனைத்து சமூக முக்கியத்துவங்களையும் பெருக்கிக் கொள்ள முடியும்; அதாவது வாழ்வில் முன்னேறுவது என்பது அதுதான். ஆள்காட்டி வேலையில் இருப்பவன் பித்தானை அமுக்கும் வேலையைப் பெறுவதற்காக போட்டித் தேர்வு எழுதுவான்.

நேரடி வன்முறையில் ஈடுபடுபவன்கூட சில நாட்களில் தனக்குரிய நியாயங்களை உருவாக்கிக்கொள்வான். எந்தக் கசாப்புக்காரனும் ஈவுகாருண்யத்தால் இரவுத் தூக்கத்தை தொலைப்பதில்லை. பழகிவிடும், எதுவும். விஷவாயுக் கிடங்கில் கொல்லப்பட்ட சத்யாக்ரகிகளின் பற்களைப் பிடுங்கி சுத்தம்செய்து சேமிக்கும் பொறுப்பில் உள்ள 'தொழிலாளிகள்' மிக சிறப்பாக அதை செய்து தங்களை மேம்படுத்திக்கொள்வார்கள். தன் அருமைக்குழந்தையின் பாற்பல்லில் வ்லி என்றால் டாக்டரைத் தேடி ஓடுவதற்கும் தன் தொழிலுக்கும் இடையே முரண்பாடு எதுவும் அவனுக்குத் தென்படாது.

மீண்டும் மார்க்ஸியத்திற்கு. மார்க்ஸியமே அதிகாரத்தின் உள்ளுறைகளைப்பற்றி இன்று மானுடம் தெரிந்துகொண்டுள்ள அனைத்து ஞானங்களையும் சாத்தியமாக்கிய முதல்கட்ட வினாக்களை எழுப்பியது. சமூகம் அதிகாரத்தாலானது என்று முதலில் கண்டுகொண்டது அதுவே. முதலில் பொருளாதார அதிகாரத்தை, பிறகு கருத்தியல் அதிகாரத்தை, பிறகு லோக்கார அதிகாரத்தை அது கண்டடைந்தது. இத்தரிசனங்களைத் தொகுத்துக் கொண்டு அது முன்னகர வேண்டும். அது இன்றுவரை கண்டடையாதது தார்மீகத்தின் அதிகாரம். ஒரு தார்மீகம் அதைவிட மேலான இன்னொன்றால் மட்டுமே வெல்லப்பட முடியும். ஒரு கருத்தியல் உறுதியான தார்மீகம் மட்டுமே மானுட மனங்களை ஊடுருவ முடியும். தார்மீகத்தின் கையில்தான்

அதிகாரம் நன்மை பயக்கும். ஆயுதம் ஆக்க சக்தியாக ஆகும். அப்படிப்பட்ட தார்மீக அடிப்படை கொண்ட ஒரு பெரும் சக்தியாக மார்க்ஸியம் மாற வேண்டும். தீவிரமான தார்மீகத்தின் பின்னால் தருக்கம் விசுவாசமான நாய்போல பின்தொடரும். என் கனவு இதுவே.

அன்புள்ள எஸ்.எம்.ஆர், உங்களுக்கு இதை எழுதும்போது என் மனம் நம்பிக்கையால் நிரம்பியுள்ளது. மார்க்ஸியப் பொருளியல் தவறிழைத் திருக்கலாம். அதன் அரசியல், அதிகார ஆட்டமாக மாறிச் சீரழிந்திருக்கலாம். சார்நிலைவாதமும் நுண்ணலகு இயந்திரவியலும் அதன் தத்துவமையத்தைக் குறுக்கி வெறும் நடைமுறைவாதமாக மாற்றி விட்டிருக்கலாம். அதன் சாரத்தின் சாரமான கனவு – பூரண மானுட விடுதலை என்ற தரிசனம் – மானுட குலத்தின் மனதில் விழுந்துவிட்டது. அது மீண்டும் மீண்டும் முளைத்தபடிதான் இருக்கும். ஒருவேளை இதுநாள்வரை அதன் அரசியலும் தத்துவமும் பொருளியலும் அத்தரிசனத்தை திரையிட்டிருக்கலாம். இன்று துல்லியமாகி எழுந்துள்ள அதன் அகஒளி இனி பிற ஒளிகளுடன் கலந்து புதிய இடங்களுக்குப் பரவக்கூடும். பெரும் கனவுகள் மானுட குலத்தை ஒருபோதும் விட்டு நீங்காது. அவையே மனிதனை விலங்கிலிருந்து இதுவரை வேறுபடுத்தி வந்துள்ளன. பெரும் கனவுகளைக் கொண்டி ருக்கையில், பெரும் கனவுகளுக்காகப் போரிடுகையில், பலியாகுகையில் தான் மானுட வாழ்க்கை பூரணமாகும். இப்போதும் மானுடகுலத்தின் முன் உள்ள மகத்தான கனவு மார்க்ஸியமே.

அன்புடன்,

கே.என்.ஜோணி

♦

5

அன்புள்ள எஸ்.எம்.ஆர்.,

திரிச்சூரில் நேற்று ஆற்றூர் ரவிவர்மா வீட்டுக்குச் சென்றிருந்தேன். ஒரு அறிவுச் சூழலின் கருத்தியல் மையமாக இருப்பவர் மிகக்குறைவாகப் பேசுபவராகவும், விளையாட்டுத்தனம் மிக்கவராகவும் இருப்பது மிகவும் வியப்புத் தருகிறது. இவரைச் சந்திக்க மிகவும் பிந்தி விட்டோம் என்று பட்டது.

உங்கள் கடிதம் கிடைத்தது. மார்க்ஸியத்திற்கு மெய்யியல் வறுமை என்றால் ரிஷி அடிக்கவே வந்துவிடுவார் என்ற சொல்லியிருந்தீர்கள். உண்மையில் இங்கு அம்மெய்யியலின் போதாமையை உணர்ந்த முதல் அறிஞர் அவர்தான். மதங்களிடமிருந்து அதைப் பெறுவது குறித்து பேசியவரும் அவரே. ஆனால் அதை மார்க்ஸியம் மதங்களுக்கு ஞானஸ்நானம் தரவேண்டும் என்ற தோரணையிலேயே அவரால் கூற முடிகிறது. அவரது மார்க்ஸிய ஈடுபாட்டில் உணர்வுப்பாங்கு மிக அதிகம். அது இயல்பானதும், அவசியமானதும், மதிக்கப்பட வேண்டியதுமான ஓர் உணர்ச்சியாகும். வணங்கப்படும் இலட்சியமே வெல்லும். பகுப்பாய்வு செய்யப்படும் இலட்சியம் ஏற்கனவே இறந்தாயிற்று. எனது மார்க்ஸிய விமரிசனங்களை, காதலியைப்பற்றி ஓயாமல் பேசுகிற, பேசித் தீராத, காதலனின் உணர்வுகளாகவே நீங்கள் கொள்ள வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் அறிவியக்கத்தின் மத்தியில் செயல்படுபவர் என்ற முறையில் உங்களுக்கு மதங்களுடன் எவ்வித உறவும் இல்லை என்றும், அது அவசியமெனப் படவில்லை என்றும் எழுதியிருந்தீர்கள். இந்நூற்றாண்டின் நடைமுறை வாதச் சித்தாந்தம் ஒன்று மதங்களுடன் என்ன உறவைக் கொள்ளமுடியும் என்றும் கேட்டிருந்தீர்கள்.

இரண்டு நுட்பமான பிழைகளைச் செய்கிறீர்கள். உங்களுக்கு மதத்துடன் வெளிப்படையான புறவயமான உறவுதான் இல்லை. உங்களுக்கு திடமான ஒழுக்கவியலும் (எதிக்ஸ்) மதிப்பீட்டியலும் (ஆக்ஸியாலஜி) இருக்கிறது. ஆகவே உங்களுக்கு மெய்யியலும் உண்டு. அம்மெய்யியலின் உணர்வுரீதியான சாரம் மதங்களிடமிருந்து

உங்களுக்குக் கிடைத்ததேயாகும். அம்மெய்யியலை உங்கள் அந்தரங்க மொழியாடல் சார்ந்து வெளிப்படுத்துவதனால்தான் மதங்களுடன் நேரடியான உரையாடல் உங்களுக்குத் தேவையில்லாமல் இருக்கிறது. உன்னதம், சாரம், அறம், ஆன்மா என்று நீங்கள் குறிப்பிடுபவற்றை இப்போது மிகக்குறுகிய ஒரு உள்வட்டத்திற்குப் புரியும்படித்தான் உங்களால் கூற முடிகிறது. மரபிலிருந்து எதையும் பெற்றுக்கொள்ளாத தனிநபர் குறிமொழியாக உங்கள் படைப்பு மொழி இருப்பதே உங்கள் எழுத்தின் மிகப்பெரிய பலவீனம். மேலும் விரிவான தீவிரமான தளத்தில் உங்கள் படைப்பியக்கம் நடைபெற்றிருக்குமெனில் நீங்கள் மதங்களின் குறியீட்டுமொழியை நாடியிருக்கக் கூடும். அக்குறியீடுகளை உங்களுக்காக மறுபடைப்பு செய்து கொண்டிருக்கக் கூடும். மதங்களுடன் ஆக்கபூர்வமான ஒரு தீவிர விவாதம் உங்களுக்கு நிகழ்ந்திருக்கும். நிகழாது போனது துரதிர்ஷ்டமே.

இரண்டாவது அம்சம் மதங்களை பிற நவீனத்துவ, மார்க்ஸிய சிந்தனையாளர்களைப் போலவே நீங்களும் ஒரு நம்பிக்கைக் கட்டுமானமாகவும், அதிகாரக் கட்டுமானமாகவும் மட்டும் பார்க்கிறீர்கள். அது தேடல்களின் வெளியும்கூட. மதங்களை உருவாக்கும், மாற்றியமைக்கும் மானுட எழுச்சிகள் அனைத்தையும் கணக்கில் கொண்டு யோசிப்பவர்களுக்குக் கிடைப்பது இந்த முகமே. அந்தத் தேடல்தான் மதங்களுக்கான குறியீட்டு மொழியை உருவாக்கியுள்ளது. அனைத்து அற, ஒழுக்க, விழுமியங்களும் மதங்களில் வேர்கள் உள்ளவையே. மதத்துடனான சம்பிரதாய மார்க்ஸியர்களின் உறவு 'மதம் மக்களுக்கு அபின்' என்ற மார்க்ஸின் மேற்கோளில் தொடங்கி அங்கேயே முடிந்துவிடுகிறது. மார்க்ஸ் எந்தச் சந்தர்ப்பத்தில் அப்படிச் சொல்லியிருந்தாலும் சரி, அப்படிச் சொல்ல நேர்ந்தது துரதிர்ஷ்டவசமானது என்றே படுகிறது. மதம் குறித்த மார்க்ஸின் அணுகுமுறை மேலும் விரிவானது; எனினும்கூட அவரது பார்வையின் மையமாக இந்த வரி இருந்தபடியேதான் உள்ளது. ஒப்பிடுகையில் மார்க்ஸை விடவும் எங்கல்ஸ் விரிவான பார்வைகொண்டிருந்தார் என்று தெரியும். குறிப்பாக 'குடும்பம் தனிச்சொத்து...' நூலின் பின்னணியில் பார்க்கும்போது மதத்தை ஓர் அதிகாரத் தந்திரமாகவோ, ஒடுக்குமுறைக் கருத்தியலாகவோ மட்டும் பார்க்காமல், பழங்குடி வாழ்வின் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளின் நீட்சியாக அதைப் பார்க்க அவரால் முடிந்துள்ளது.

அறிவொளி காலம் (அல்லது ஐரோப்பிய மறுமலர்ச்சி காலம்) நாம் வரலாற்றை அணுகும்விதத்தில் அத்தனை எளிதாக, மாற்றிவிட முடியாத ஒரு முறைமையை உருவாக்கிவிட்டிருக்கிறது. பகுத்தறிவு (அதாவது பௌதிக விதிகள் சார்ந்த புறவய உலகப் பார்வை) எங்கு தொடங்குகிறதோ அதுவே வரலாற்றின் தொடக்கப்புள்ளி என்று அது கருதியது. அதற்கு முந்தைய காலங்களை ஒட்டுமொத்தமாக 'வரலாற்றுக்கு முந்தைய காலக் கூட்டம்' என்று உருவகித்தது. யோசித்துப் பார்த்தால் மனிதகுலம் புதை பொருளாய்வில் (வரலாற்றாய்விலேயேகூட) எப்போதும் பகுத்தறிவின் தடயங்களேயே தேடி வந்துள்ளது என்பது தெரியவரும். பகுத்தறிவையும் கலாச்சாரத்தையும் ஒன்றெனக் கருதிய ஒரு காலகட்டத்தின் திருஷ்டியே

மார்க்ஸியம். லூயிஸ் மார்கனின் மானுடவியலின் ஆதாரவிதியே பகுத்தறிவின் அளவுகோலை வைத்து மானுட இனங்களைத் தரப்படுத்து வதுதான். அந்த அணுகுமுறையின் தொடர்ச்சியே எங்கல்சில் உள்ளது.

ஆனால் இந்த 'பகுத்தறிவுக் காலம்' என்பது மானுடனின் பரிணாம வரலாற்றில் மிகமிகச் சிறிய ஒரு பகுதி மட்டுமே. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பதோ மிகப் பெரிய ஒரு வெளி. அதில்தான் இன்று மனிதனின் ஆதார இயல்புகள் என்று கூறப்படும் அனைத்து அம்சங்களும் பிறந்து பரிணாமம் கொண்டு வந்துள்ளன. அப்பகுதியைக் கணக்கில் கொள்ளாமல் மனிதவரலாற்றைப் பற்றிப் பேசும் பேச்சுக்கள் பயனற்றவை. அப்பகுதியை அறிய இன்று நம்முன் உள்ள மிகச் சிறந்த ஆவணப்பதிவு மதமே.

எல்லா மதங்களும் பழங்குடி வாழ்வின் நம்பிக்கைகளின் நீட்சியே. ஓர் உதாரணம் சொல்கிறேன். இடையில் ஏசுவை ஏந்திய மாதா தூய சேவியர் வழியாக குமரி மாவட்டம் வந்தபோது அந்த மாதாவின் முப்பதாயிரம் வருடம் முந்தைய வடிவம் இங்கு கோயில் கொண்டிருந்தது – மேலாங்கோட்டு அம்மனாக. இன்று மேற்கத்திய மானுடவியல் குறியீட்டியலின் துணையுடன் இத்தகைய படிமங்களைப் பின்தொடர்ந்து 'வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தின்' ஆழங்களுக்குள் செல்வத் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மனிதனின் புறவயப் பார்வையின் வேர்களை ஆழ்மண்ணில் தேடிப்போன சோவியத் மானுடவியலாளர்களே இதற்கு முன்னோடிகள். பிறகு வந்த கிளாட் லெவிஸ்ட்ராஸ் ஒரு திருப்புமுனை என்பதில் ஐயமில்லை. ஆனால் கோசாம்பியின் 'ஐதிகமும் உண்மையும்' நூலைப் படிக்கும்போது எழும் அந்த ஐயம் லெவிஸ்டராஸின் 'பண்படா மனம்' நூலைப் படிக்கும்போதும் எழுகிறது. இந்த அறிஞர்கள் எந்த அறிவுத் தளத்திலிருந்து பேசுகிறார்களோ அவை – மானுடவியலும், வரலாறும், அரசியல் சித்தாந்தமும் – அறிவொளிக் காலப் பகுத்தறிவுவாதத்தின் விளைவாக உருவானவை. அவற்றின் அடிப்படையான பகுப்பு – தொகுப்பு முறைகள் அறிவொளிக் காலத்தின் மிகப் பெரிய சிருஷ்டியான அறிவியங்கியலின் (எபிஸ்டமாலஜி) நியதிகள் சார்ந்தவை. இந்த ஆய்வு முறைகளினூடாக அவர்கள் பழங்குடிப் படிமங்களைப் பின்தொடரும்போது சென்றடையும் இடம் மிகமிக எல்லைக்குட்பட்டதேயாகும். உண்மையில் அது பழங்குடிப் படிமங்களுக்கு சமகாலம் சார்ந்த அர்த்தங்கள் தருவதில் போய் முடிகிறது, அவ்வளவுதான்.

நமது மனம் அறிவின் விதிகளுக்குட்பட்டு இயங்கவில்லை என்றும், அது நன்னிச்சையான ஒரு படிமப் பிரவாகமாக உள்ளது என்றும் மேற்கத்திய உளவியல் அறிய நேர்ந்ததே பகுத்தறிவுவாதத்திற்கு விழுந்த முதல் பெரும் அடி. அதற்கு பிராய்டைவிட யுங்கே பெரிதும் காரணம். அப்படிமங்களின் மூலங்களைத்தேடி மதத்தில் நுழைந்து பழங்குடி வாழ்வில் ஊடுருவிச் செல்லும்போது வரலாறு என்பது பற்றிய புதியதோர் புரிதல் நமக்குக் கிடைக்கிறது. வரலாறு என்பது மார்க்ஸ் கருதியதுபோல பகுத்தறிவின் பரிணாமம் மட்டுமல்ல. அது படிமங்களின் பரிணாமமும்கூட. என் புரிதலின்படி இரண்டாவதே உண்மையான வரலாறு. எனது

அம்மாவுடனான உறவை மேலாங்கோட்டு அம்மன் தீர்மானிக்கும் விதமே வரலாற்றில் நான் அறிய வேண்டிய மிகப் பெரிய புதிர். அதற்கு அறிவொளிக் கால ஆய்வுமுறைகள் உதவாது. பகுப்பும் தொகுப்பும் வெறுமே அர்த்தப்படுத்தலாகவே முடியும். அதற்கு நான் மேலாங்கோட்டு அம்மனை மேலும் நெருங்கி அறிய வேண்டும். நான் புறக்கணிக்கும்தோறும் என் ஆழ்மனத்தில் அவள் வலிமை பெறுகிறாள். உணர்வுபூர்வமாக அவளை நான் நெருங்கும்தோறும் அவள் வடிவம் துலக்கம் பெறுகிறது. மேலாங்கோட்டு அம்மனை பகுத்தறிவது வெறும் மூளை விளையாட்டு. வழிபடுவது தப்பித்தல். தியானித்து அருகே செல்வதே நான் செய்யக்கூடிய விஷயம்.

பகுத்தறிவைப் பகுத்தறிந்து ஒரு நூற்றாண்டை மானுடகுலம் செலவிட்டாயிற்று. இனி பகுக்கப்படாத உள்ளறிவை அதன் முழுமைநிலையிலேயே தியானித்தறிய அது முயல வேண்டும். மதத்தை நோக்கிய ஒரு பார்வை என்று நான் குறிப்பிடுவது இதையே. அது மதத்துக்குத் திரும்புதல் அல்ல. வரலாற்றின் இயக்கத்தில் திரும்புதல் என்ற விஷயமே இல்லை. மதம் ஒருபோதும் என் தந்தைக்குத் தந்த பொருளை எனக்குத் தருவதில்லை. நான் பகுத்தறிவு யுகத்தினூடாக வந்தவன் என்பதை இனி எந்நிலையிலும் மறுக்கவோ புறக்கணிக்கவோ முடியாது.

இன்று மதம் ஓர் அதிகாரக் கட்டுமானம் என்பதை மறுக்கவில்லை. அமைப்புகளை உருவாக்கும், நம்பிக்கைகளைப் பயிரிடும் வயல் அது. அதற்கும் மேலாக அது தயார்நிலை விடைகளின் சூப்பர் மார்க்கெட். ஆனால் இவைமட்டுமல்ல மதம். அது மிகப்பிரம்மாண்டமான ஒரு தேடலின் வரைபடமும் கூட. அத்தேடலின் வினாக்கள் இன்னமும் அதில் உள்ளன. இன்னும் சொல்லப்போனால் மதம் தன் வினாக்களைக் கூர்மைப்படுத்தும் பொருட்டு (அல்லது உருவம் தரும் பொருட்டு) படிமங்களை உண்டு பண்ணுகிறது. அப்படிமங்களை விடைகளாக அது காலப்போக்கில் மாற்றவும் செய்கிறது. மதத்தின் ஒவ்வொரு விடையும் காலத்தால் சற்று செயலிழக்கச் செய்யப்பட்ட வினாவே. விஷத்திற்கு விஷத்தால் முறிமருந்து தயாரிப்பதுதான் மதத்திற்குள் வழிபாடு என்ற பெயரில் நடைபெறுகிறது.

பழங்குடிப் படிமங்கள் வாழ்வின் இயக்கத்தினூடாகத் திரண்டு அகமனதில் உருவானவை. தன் தேடலுக்கு அவற்றை எடுத்தாண்டது மதம். புராதனமனம் தாய்மையின் நெகிழ்வின், அடைக்கலத்தின் உருவமாகக் கண்டடைந்த படிமம் சேய் ஏந்திய தாய். அது மேலாங்கோட்டு அம்மனாகி, உணவூட்டும் மண்ணாகி, இயற்கையாகி, ஆதிபராசக்தியாகி விரியும் அதிதீவிரப் படைப்பியக்கம்; நம்மால் அத்தனை எளிதில் புறக்கணித்துவிடக் கூடியதல்ல. அறிவொளி காலகட்டத்தால் இயந்திரப்படுத்தப்பட்ட நமது மூளை நம்மை அப்படிமங்களிலிருந்து துண்டித்துவிட்டிருக்கிறது. இதுவே நம்மை எளிய விடைகளுடன் தேங்கிவிடச் செய்கிறது.

'தேடல் – படிமங்கள் – வழிபாடு – அதிகாரம்' என்பதே மதம் இயங்கும் சூத்திரம். இதுவே வரலாறு இயங்கும் சூத்திரமும் என்று படுகிறது. மனித மனமும் இப்பாதையில்தான் இயங்குகிறது. எனவேதான் ஒவ்வொரு அறிவியக்கத்தையும் காலப்போக்கில் நாம் மதமாக மாற்றிக்கொள்கிறோம்.

மார்க்ஸியம் ஒரு சோட்டா செமிட்டிக் மதம். ஆனால் பெரும் மதங்களுக்கு அவற்றின் சாரமாக ஒரு மெய்யியல் அடித்தளம் உள்ளது. அதிகாரம் உருவான உடனேயே அம்மெய்யியலில் இருந்து அவ்வதிகாரத்தை எதிர்க்கும் மாற்று சக்தியும் முளைத்துவிடுகிறது. அது அம்மதத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது. கிறிஸ்தவத்திலும் இஸ்லாமிலும் பௌத்தத்திலும் இந்துமதங்களிலும் எல்லாம் இப்படிப்பட்ட புதிய பிரிடல்கள் மீண்டும் மீண்டும் உருவெடுப்பதை வரலாற்றில் காணலாம். ஆனால் மார்க்ஸியம் உலகமெங்கும் அதிகார அமைப்பாக உறைந்தபோது புதிய எதிர்ப்பியக்கம் எதையும் மார்க்ஸியத்தின் சாராம்ச தரிசனம் தன்னிலிருந்து பிறப்பிக்கவில்லை. உருவான எதிர்ப்பியக்கங்கள் எல்லாமே மார்க்ஸியத்திற்கு எதிரான கருத்துநிலைகளால் உருவாக்கப்பட்டவை. இறுக்கமான நடைமுறை விதிகளினாலான இஸ்லாமிலிருந்துகூட சூஃபிசம் என்ற அதிதீவிர மாற்றுப் போக்கு உருவாயிற்று. மார்க்ஸியத்தில் அப்படி ஏதும் நிகழவேயில்லை. இதனால்தான் மார்க்ஸியத்தின் பெயரால் கட்டப்பட்ட அதிகார பீடங்கள், வரலாற்றின் போக்கில் இயல்பான மரணத்தைத் தழுவும்போது மார்க்ஸியமே சரிந்துவிட்டது எனும் பிரமை ஏற்படுகிறது. (மேற்கத்திய கல்வித்துறை மார்க்ஸியம் ஒரு சொற்சிலம்பம். அதை நான் இம்மியும் பொருட்படுத்தவில்லை. மார்க்ஸியம் அதன் உண்மையான தீவிரத்துடன் ஒருபோதும் கல்வித்துறைக் குறுங்குழுவாதமாக இயங்க முடியாது. மார்க்ஸியத்தின் பிடம் மக்களின் இதயம்.) இதற்குக் காரணம் அதன் மெய்யியல் வளர்ச்சியின்றி சும்பிக்கிடந்தது என்பதே. மார்க்ஸியவாதிகளில் மிகச் சிறந்த கவித்துவ உத்வேகம் மார்க்ஸில்தான் காணக் கிடைக்கிறது என்பதே இதற்குச் சான்று. கம்யூனிஸ்ட் அறிக்கையின் ஒளி பெற்ற வரிகளுக்கு ஒப்புசொல்லத் தகுதிபடைத்த பத்து வரியை நூறு வருட மார்க்ஸிய அறிவியக்கத்தால் உருவாக்க முடியவில்லை. ஒரு பக்கம் நடைமுறைவாதமாகவும் மறுபக்கம் கல்வித்துறைக் குறுக்கல்வாதமாகவும் மார்க்ஸியம் உலர்ந்து வறண்டு போனதற்குக் காரணம் இதுவே. இந்த நூற்றாண்டில் மிகச் சிறந்த கவிமனங்கள் அனேகமாக அனைத்தும் மார்க்ஸியம்மீது ஐயம்கொள்ள நேரிட்டதற்கும் காரணம் இதுவே.

ஆத்மா, இறைவன், பலி, மீட்பு, சொர்க்கம், நரகம், பாவம், புனிதம், விங்கம், விஷ்ணு, சிலுவை, புண்டரீகம், யோகபுத்தன், காபா, நெருப்பு எல்லாமே மார்க்ஸியம் இனிப் பேச வேண்டிய மெய்யியலுக்கான மொழியின் சொற்கள் மட்டுமே. அவை பழைய மதங்களை நம்புகிறவர் களுக்கு இறுதி விடைகளாக இருக்கக் கூடும். மார்க்ஸியன் அவற்றின் மௌனத்தை உடைத்து அவற்றை பெரும் சலன சக்திகளாக, வினாக்களாக, மாற்ற வேண்டும். அணுக்கட்டுமானத்தை எலக்ட்ரானால் தாக்குவது போன்றது இது. பெரும் சக்திக் கொந்தளிப்பாக அது விரிந்து பரவக்கூடும். அதில் பேரழிவும் உண்டு என்பதை மறுக்கவில்லை. மதங்களும் அழிவினூடாகப் பிறந்தவை தானே?

இதுவரை மார்க்ஸியம் அதன் அரசியல் செயல்திட்டங்களாலும், சித்தாந்தங்களாலும் அடையாளம் காணப்பட்டு வந்தது. அவை முளைத்து பரவிய காலத்தில் கனிந்து விதைகளை விட்டுவிட்டு மறையும் தாவரங்கள்

மட்டுமே. மெய்யியலே விளைமண். மார்க்ஸிய மெய்யியலின் ஆதார தரிசனம் உடைமையின்மையும் சமத்துவமும் இக விடுதலையும் ஆகும். ஒருபோதும் மானுடகுலம் இப்பெரும் கனவை விட்டுவிட முடியாது. மண்ணில் இதுவரை மனிதமனம் கொண்ட உச்சங்கள் அனைத்தையும், நெகிழ்வுகள் அனைத்தையும், இப்பெருங்கனவுக்கு உரமாக்குவோம். அதற்கு உலகின் பேரிலக்கியங்கள் அனைத்திலுமிருந்து கண்ணீரைத் திரட்டுவோம். அனைத்து தரிசனங்களிலுமிருந்து தருக்கங்களைத் திரட்டுவோம். அனைத்து மதங்களிலுமிருந்து படிமங்களைத் திரட்டுவோம். அது பேருருவம் கொள்ளும்போது மார்க்ஸேகூட அதில் ஒரு துளியாகத் தெரியக்கூடும். இந்த சோர்வின், வீழ்ச்சியின் வரலாற்றுக் காலகட்டத்தில் நின்றபடி, 'கனவு! மேலும் கனவு! மேலும்மேலும் கனவு' என்று கை தூக்கி ஆர்ப்பரிக்க விழைகிறேன். களப்பலிகளின் அர்த்தமின்மை தோண்டி யெடுக்கப்படும் இந்த நூற்றாண்டின் இறுதியில் நின்றபடி 'வாருங்கள் நமது கனவுகளுக்காக களப்பலியாவோம்' என்று அறைகூவுகிறேன்.

அன்புடன்,

கெ.என்.ஜோணி

♦

9

ஆயிரம் மௌனங்கள்

"அடிப்படைப் பிரச்சினைகளுக்காகத் தீவிரமாகப் போராடும்போதும் ஜனநாயக முறைகளைக் கடைப்பிடித்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ள ஓர் இயக்கம் நம்முடையது. ஜனநாயகத்தின் அடிப்படை எதிர்த்தரப்பின் இருப்பையும் நியாயங்களையும் அங்கீகரிப்பதாகும். பலசமயம் இது தொழிலாளி வர்க்கத்தை மிக இக்கட்டான நிலைமைகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறது. எப்படி நாம் நமது உதிரத்தை உண்டு கொழுக்கும் சுரண்டல் முதலாளிகளின் இருப்பை ஏற்க முடியும்? கொள்ளை லாபமடிக்கும் இடைத்தரகர்களின் இருப்பை நாமல்ல, எந்த ஒரு தன்மானமுள்ள தொழிலாளியும் ஏற்க முடியாது..." கதிர் நிதானமான அழுத்தமான குரலில் பேசினான். அந்தப் பள்ளிக்கூட அறையில் ஏறத்தாழ ஐம்பதுபேர் இருந்தார்கள். பெரும் பாலானவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் தோரணையைப் பெற்றிருந்தார்கள். மேடையின் வலதுபக்கம் சிவந்த நிறமுள்ள கண்கள் தெரியாத மனிதர் முகத்தை சாய்த்துப் பிடித்து கூர்ந்து கேட்டபடி இருந்தார். நடுவே அவைநாயகரான ஆபத்து காத்த பிள்ளை அண்ணாச்சி வழக்கமான கயதிருப்திச் சிரிப்புடன் அமர்ந்திருந்தார்.

"பாட்டாளி இன்றும் ஒரு வாய்ச்சோறுக்காக, எளிய கல்விக்காக, குறைந்தபட்ச தங்குமிடத்திற்காகவே போராடுகிறான். உலகில் உள்ள அனைத்து செல்வங்களையும் அவன்தான் உருவாக்கினான். பதிலுக்கு அவன் கோருவது உயிர் வாழும் உரிமையை. இதில் பேரம் பேசுவது என்பது எவ்வளவு பெரிய அபத்தம்! எத்தனை கேவலம்! தொழிலாளிக்கு சுரண்டும் வர்க்கத்தை ஒழித்துக் கட்டவும், அவர்கள் உருவாக்கிய கலை பண்பாடு அனைத்தையும் மண்ணோடு மண்ணாக்கவும் பரிபூரணமான உரிமை உள்ளது. மார்க்ஸ் விடுத்த அறைகூவல் அதுதான். அந்த அறைகூவல் இப்போதும் அவன்முன் அப்படியேதான் உள்ளது.

"ஆனால் நடைமுறையில் தொழிலாளி தன் போராட்டங்களில் இழந்ததுதான் அதிகம். அடைந்தது மிகமிகக் குறைவு. உலகமெங்கும் கம்யூனிஸ முயற்சிகளில்தான் மானுடகுலம் கண்ட மிகப்பெரிய மானுடப் பேரழிவுகள் உருவாகியுள்ளன என்பது இன்று ரகசியம் அல்ல. ஆகவே தன் இலக்கு எதுவாக இருப்பினும் தன் வழிமுறைகளைப் பற்றி தொழிலாளி

மறுபரிசீலனை செய்தாக வேண்டியுள்ளது. அந்த மறுபரிசீலனையின் விளைவாகவே இங்கு ஜனநாயகப் பாதைக்குத் திரும்பினோம் என்பதை நாம் அறிவோம். இப்போது உலகளாவிய தளத்தில் நடைபெறும் மறுபரிசீலனையின் ஒரு பகுதியாக நாமும் நம்மைப் பற்றி மறுபரிசீலனை செய்தாக வேண்டும். அதன் ஓர் அம்சமாகவே நம்மீது கடும் விமரிசனங்களை முன்வைத்து கடந்த காலத்தில் நம்மைப் பிரிந்து சென்ற ஒவ்வொருவரையும் அழைத்து வந்து உங்கள் விமரிசனங்களைச் சொல்லுங்கள் என்றோம். இங்கு மூத்த அறிஞர் தோழர் கெ.கந்தசாமி - ரிஷி அவர்கள் தன் விமரிசனங்களை முன்வைத்தார்.

''சம்பிரதாய மார்க்ஸியக் கொள்கைப்படி தொழிலாளிகளும் விவ்சாயிகளும் இணைந்து வலுவான அமைப்புகளைக் கட்டியெழுப்ப வேண்டும். அவற்றை கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் ஒருங்கிணைக்க வேண்டும். அரசாங்கம் எந்தெந்த அமைப்புகளினூடாக இயங்குகிறதோ அந்த நிறுவனங்களையெல்லாம் சீர்குலைத்து, நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கவேண்டும். பலவீனமாகித் தள்ளாடும் அரசுமீது ஆயுதமேந்தித் தாக்குதல் நடத்த வேண்டும். அதிகாரத்தைக் கைப்பற்றி, கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஒன்றை அமைத்து, பொதுவுடைமைப் பணிகளைத் தொடங்கவேண்டும். பொதுவுடைமை முதிர்ந்து கம்யூனிச சமூக அமைப்பு மலரும். அப்போது அரசு உதிர்ந்துவிடும்.

''தோழர்களே, நான் சொல்லிவரும்போதே இங்கு ஒரு சிரிப்பு பரவியது. தோழர் கந்தசாமிகூட புன்னகை புரிந்தார். இன்று உங்களில் சிரிப்பை வரவழைக்கும் இந்தத் திட்டம் அறுபது வருடம் முன்பு ஒரு மகத்தான கனவாக இருந்தது. எல்லா மகத்தான கனவுகளையும்போல அதுவும் கோடிக் கணக்கில் பலிகொண்டது.

''இந்த செயல்திட்டத்தின் முதல் பிசகு என்ன? தொழிலாளிகளும் விவசாயிகளும் ஒரே தரப்பில் உள்ள இருவகையினர் மட்டுமே என்று மார்க்ஸ் கருதினார். உண்மையில் அப்படி அல்ல. இருதரப்பினரும் சுரண்டப்படுகிறார்கள். ஆனால் ஒரு பொருளாதாரக் கட்டுமானத்தில் இருவரும் எதிரும் புதிருமான சக்திகள். தொழிலாளி என்பவன் யார்? விவசாயியின் உபரியை சுரண்டி மறு உற்பத்தி செய்யும் ஓர் அமைப்பின் உறுப்பினன் அவன். அதிகமாக விவசாயிகள் சுரண்டப்படும்போதுதான் தொழில்துறை வளர முடியும். போனஸைப் போராடி அடையும் தொழிலாளி விவசாயியின் ரத்தத்தில் அதிகப் பங்கு கேட்டுப் போராடும் ஒருவன்தான். ஆயிரம் பிரசங்கங்கள் போட்டு மூடினாலும் இதை இருதரப்பினரும் உள்ளூர அறிவார்கள். பஞ்சுக்கும் கரும்புக்கும் அதிக விலை கேட்டு விவசாயி போராடுகிறான். அந்த அதிகவிலை மூலம் லாபம் குறைந்தால் உடனடிப் பாதிப்பு தொழிலாளிக்குத்தான். இருதரப்பினரும் சேர்ந்து குற்றம் சாட்ட ஒரு பூர்ஷுவா அரசு இருந்தால் தற்காலிகமாக இப்பிரச்சினையை அரசியல் தளத்தில் சமாளித்துவிடலாம். வேறுசில இடங்களில் நேரடியாகவே இம்முரண்பாடுதல் வந்துவிடும். பவானி ஆறு மாசுபடுவதை எதிர்த்து விவசாயிகள்

போராடினால் அவர்களை அடிக்க சவுத் இந்தியன் விஸ்கோஸ் தொழிலாளர்கள் கம்புகளுடன் போக வேண்டியுள்ளது.

''சோவியத் ரஷ்யாவில் நடந்ததற்குப் பின்னணியில் உள்ளது இந்த மோதல்தான். சோஷலிசக் கட்டுமானத்தின் அடிப்படையாக லெனினும் ஸ்டாலினும் கனரகத் தொழில்களையே கண்டனர். வேறு வழியில்லை. ஏனெனில் புரட்சியை நடத்தியவர்கள் தொழிலாளர்கள். கனரகத் தொழில்கள் வளர விவசாயிகளை மூர்க்கமாகச் சுரண்டியாக வேண்டும். அதற்குத்தான் அங்கு கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்பட்டன. கட்டாய உழைப்பு முகாம்கள் உருவாயின. ஒன்றரைக் கோடி விவசாயிகள் செத்து மடிந்தனர். அதாவது நடந்தது ஒரு போர். அந்தப் போர் லெனின் காலத்தில், செம்படையின் நேரடியான தலைமையின்கீழ் தொடங்கிய ஒன்றுதான். அதற்கு இன்று வலுவான ஆதாரங்கள் உள்ளன. கஜகிஸ்தானிலும் தாஜிகிஸ்தானிலும் ட்ராட்ஸ்கியின் செம்படை செய்த வன்செயல்கள்தான் ரஷ்யப் பேரழிவின் துவக்கப்புள்ளிகள். கனரகத் தொழில்கள் நேரடியாக இராணுவத்துடன் சம்பந்தப்பட்டவை. கனரகத் தொழில் வளர்ச்சி உண்மையில் ராணுவ வளர்ச்சியெனவே பொருள்படும். இரண்டு உலகப் போர்களுக்குக் காரணமானது அது. விளைவாக விவசாயிகளுக்கும் உதிரித் தொழிலாளர்களுக்கும் எதிராக ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்கமும் ராணுவமும் அடங்கிய ஓர் அணி உருவாகிறது. முதலாளித்துவ நாடுகளில் இவ்வுறவு மறைமுகமானதாக, கொள்கை மற்றும் நம்பிக்கைரீதியானதாக உள்ளது; கம்யூனிச நாடுகளில் நேரடியானதாக உள்ளது. நவீன சர்வாதிகாரிகள் உருவாவது இந்த இணைப்பினால்தான். தேசியவெறியும் போர்வெறியும்கொண்ட அரசுகள் உருவாவதும் இந்த இணைப்பி னூடாகவே. இன்றுள்ள அமெரிக்காவும் சீனாவும் எல்லாம் இப்படிப்பட்ட சக்திகள் அன்றி வேறல்ல.

''செவ்வியல் மார்க்ஸியத்தின் இரண்டாவது அடிப்படைப் பிசகு நிறுவனங்களைக் கைப்பற்றி அதை மாற்றியமைப்பது அல்லது செயலிழக்க வைப்பது பற்றிய திட்டத்தில் உள்ளது. ஒரு நிறுவனத்தை அல்லது அமைப்பைக் கைப்பற்றுவதென்பது ஓர் அதிரடி நடவடிக்கை அல்ல. படிப்படியாக நீண்டகால அளவில் செய்யப்படும் நடவடிக்கை. அந்த நடைமுறைப் போக்கில் அந்த அமைப்பு அல்லது நிறுவனத்தின் விதிமுறைகளை ஓர் எல்லைவரையிலேனும் ஏற்றுக்கொண்டு, தொடர்ந்த சமரசங்கள் மூலம் முன்னகர்ந்துதான் இலக்கை அடைய முடியும். அந்நிலையில் நாம் அதைக் கைப்பற்றும்போது அது நம்மைப் பாதியளவு மாற்றிவிட்டிருக்கும். நாமும் அதை பாதிப்பங்கு மாற்ற முடியும். அவ்வளவுதான். சமூக அமைப்புகள் எதையும் தலைகீழாக மாற்ற முடியாது என்று இன்று நிரூபணமாகிவிட்டது. போலந்தில் தொழிலாளர் கூட்டமைப்புதான் புரட்சியரசைத் தூக்கி வீசியது என்பதை இதற்கு ஓர் அடிக்குறிப்பாகச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

''மூன்றாவது சிக்கல்தான் மிக அடிப்படையானது, மிக ஆதாரமானது. இன்னும் சொல்லப் போனால் மார்க்ஸியத்தின் சரிவுக்கே முக்கியக்

காரணமாக அமைந்தது. அடிப்படையில் வன்முறையையே தன் இறுதி நடவடிக்கையாக மார்க்ஸியம் முன்வைக்கிறது. எனவே அதன் அனைத்து வெற்றிகளும் ராணுவ இயல்பையே அடிப்படைத் தேவையாகக் கொண்டுள்ளன. அதாவது கட்சி நடவடிக்கை என்றால் ஒரு சமூகத்தைப் படிப்படியாக ராணுவமாக மாற்றுவதுதான்.

''தோழர்களே, ராணுவம் என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் திரள். ராணுவம் என்றால் ராணுவப் பயிற்சி என்றுதான் பொருள். பயிற்சிதான் அதன் பலம், எண்ணிக்கை அல்ல. பிரிட்டனின் சிறுபடைகள் பெரிய இந்தியப் படைகளைச் சிதறடித்த வரலாறு நமக்குண்டு. ஆகவே ராணுவம், தன்னளவில் எண்ணிக்கையை முதல் வலிமையாகக் கருதும் ஜனநாயகத்திற்கு நேர் எதிரான ஒன்று. ராணுவப் பயிற்சியில் சீராக கால்கைகளை எடுத்துவைத்து நடக்கும் பயிற்சிதான் முதன்மையானது. இல்லையேல் அது ஆள் கூட்டமாக முட்டிமோதிச் சிதறும். பிறகு பொதுக் குறியீடுகளைப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றும் பயிற்சி. அடுத்த கட்டமாக அதிகாரம் படிப்படியாகப் பரவிக் கீழிறங்கும் திட்டவட்டமான நிர்வாக அமைப்பு ஒன்று அவசியமாகிறது. இறுதியாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன் தனியாளுமையை நிராகரித்து ராணுவத்தின் ஒரு பகுதியாகத் தன்னை அடையாளம் காணும் மனநிலையை ஒவ்வொரு வீரனிலும் உறுதிப்படுத்துவது தேவையாகிறது. ராணுவம் என்பது மனிதர்களினாலான ஒரு பெரும் இயந்திரம்.

இயந்திரம் என்பது ஒரு நோக்கம், அதற்கான திட்டம், அதை இயற்றும் பௌதிக அமைப்பு ஆகிய மூன்று விஷயங்களின் கூட்டு. இயந்திரத்தின் ஒவ்வொரு உறுப்புக்கும் இயந்திரத்தின் நோக்கம் தவிர வேறு இருத்தல் நியாயம் இல்லை. அந்த இயங்கு திட்டத்தில் தன் பணியை ஆற்றுதல் தவிர வேறு வாழ்வும் இல்லை. ராணுவமெனும் மனித யந்திரத்தில் ஒரு வீரன் என்பவன் திட்டவட்டமான வாழ்க்கை நோக்கும், வாழ்தல் முறையும் உள்ளவன். நேற்றுவரை உலகம் முழுக்க கம்யூனிஸ்டு கட்சி என்பது ஓர் யந்திரமாகவே உருவகிக்கப்பட்டது. பொதுவான கனவை அது அளித்தது. பொதுவான செயற்திட்டத்தையும் அமைப்பையும் உருவாக்கியது. அதில் மக்களை இணைத்து அவர்களை இயந்திர உறுப்புகளாக ஆக்கியது. வரலாற்றில் அதற்கு முன்பு இஸ்லாம் மட்டுமே மக்களை ராணுவமாக்கும் கருத்தியலை முன்வைத்தது. ராணுவம் உச்சியில் குவிந்ததாக வேண்டும். அங்கு ஒரு சர்வாதிகாரி, ஒரு தளபதி இருந்தேயாக வேண்டும். அவர்தான் இயந்திரத்தின் இச்சாசக்தியின் குவிமையம் அல்லது குறியீடு. உலகில் எங்கும் இஸ்லாமும் கம்யூனிசமும் சர்வாதிகாரிகளையும் ராணுவ ஆதிக்கத்தையுமே உருவாக்கியுள்ளன. அவை ஒருபோதும் ஜனநாயகத்தை மலரவிடுவதில்லை. இயந்திரத்தின் அடியில் எத்தனை நீர் ஊற்றினாலும் பூ மலர வாய்ப்பில்லை.

விவசாயிகளைவிட அதிகளவில் யந்திரத் தன்மை உடையவன் தொழிலாளி. அவன் ஒரு அரைப் படைவீரன். அவனால் மிக எளிதில் தன்னை படைவீரனாக மாற்றிக்கொள்ள முடியும் என்பது வரலாற்றில் பலமுறை

நிரூபிக்கப்பட்டுள்ளது. மார்க்ஸ் கூறியதும் இதுதான்; ஆனால் அவர் அதை தொழிலாளியின் விழிப்புணர்வாகவும், ஒன்றுபடும் இயல்பாகவும் விளங்கிக் கொண்டார். மிக உயிர்ப்புடன் இயங்கும் நிலம் என்ற பேரமைப்புடன் இணைந்து வாழ்பவர்கள் விவசாயிகள். நிலம் நிச்சயத்தன்மை இல்லாதது. கணம்தோறும் மாறுவது. அதனுடன் மனிதனுக்குள்ள உறவு அந்தரங்கமானது. விவசாயி ஒவ்வொரு கணத்திலும் தன் சொந்தக் கற்பனையையும் முடிவெடுக்கும் திறனையும் பயன்படுத்தியாக வேண்டும். படிப்படியாகத் தன்னைத் தனித்துவமும் உள்விரிவும் உள்ளவனாக மாற்றியபடியே போகிறான் விவசாயி. அதே சமயம் தொழிலாளியும் சரி, படைவீரனும் சரி திட்டவட்டமான இயங்குமுறையில் தங்கள் பணியை திரும்பத் திரும்பச் செய்வதன் மூலம் பழக்கத்தின் திறமையையே விருத்தி செய்துகொள்கிறார்கள். தன்னை எளிமைப்படுத்தியபடியே போகும் போக்கு இது. விவசாயி ஒரு தனித்த இருப்பு. அவன் ஓர் அமைப்பின் துளி அல்ல. அவனே ஒரு தனி அமைப்பு. விவசாயியை ராணுவமாக்குவது என்பது அவனை அழிப்பதுதான். ரஷ்யாவில் நடத்தது அதுதான். கூட்டுப்பண்ணைகளை அழித்து விவசாயி களைத் தொழிலாளிகளாக மாற்றினார்கள். மாறாதவர்கள் அழிக்கப்பட்டனர். விளைவாக விவசாயம் முற்றிலுமாக அழிந்தது.

"ஆகவே, மார்க்ஸியத்தின் அடிப்படையில் ஆயுதப் புரட்சி இருக்கும்வரை அது எங்குமே விவசாயிகளுக்கு எதிரானதாகவே இருக்கும்; இதுவரை அப்படித்தான் என வரலாறு சாட்சியப்படுத்துகிறது. ராணுவப்படுத்தல் என்பது சமூகத்தின் சகஜ இயக்கத்திற்கு நேர் எதிரான ஓர் இயக்கம். சமூகம் பிரிந்துபிரிந்து பரவுகிறது. 'பொது'க்களிலிருந்து முடிவின்றி 'தனி'க்களை உருவாக்குகிறது. 'சிறப்பு'களைக் கண்டுபிடிக் கிறது. முட்டிமோதி முன்னேற அறைகூவுகிறது. ஆனால் ராணுவமாதல் சமூகத்தின் மீது சமப்படுத்தும் உருளையை உருட்டிச் செல்கிறது. அதில் அனைத்துவகை சிறப்பியல்புகளும் நசுங்கி அழியும். லட்சங்களில் பலிகளின் எண்ணிக்கையைப் பட்டியலிடும் 'கனரக' அரசுகள் உருவாகும். செவ்வியல் மார்க்ஸியம் இந்த நூற்றாண்டுக்குப் பொருந்தாத ஒன்று. கற்கோடரி போலவோ எலும்பு முனை ஈட்டி போலவோ ஒரு புராதன ஆயுதம் அது.

"தோழர்களே, மார்க்ஸியத்தின் அத்தனை அடிப்படைப் பிசகுகளையும் ஒரேயொரு அம்சத்தைச் சேர்ப்பதன் மூலம் சரிசெய்துவிடலாம். 'ஜனநாயகம்'. விரிவான அர்த்தம் உடைய சொல் அது. அதன் அடிப்படைகள் என்ன? தங்கள் இருப்பை உணரவும் முன்வைக்கவும் சாத்தியமுள்ள அனைத்தையும் தற்காலிகமாகவேனும் அங்கீகரிப்பது முதல் விஷயம். அவை இயல்பாக மோதிக் கொள்ளவும், வென்றவை மேற்செல்லவும் கூடிய நிலை ஏற்படுத்துவது இரண்டாவது விஷயம். அதாவது போட்டியும், வெற்றிதோல்வியும், ஏன் அழிவும்கூட இயல்பாகக் கருதப்படும் ஒரு தளம் அது. ஒன்றோடொன்று முரண்படும் பல்வேறு சக்திகளுக்கு இடையேயான சமநிலைப் புள்ளிகளை இணைத்துப் போடப்படும் ஒரு கோலமே வாழ்வு என நம்புவதுதான் ஜனநாயக மனநிலை.

''ஜனநாயகம் எப்படிப் பிறந்தது? கூர்ந்து பாருங்கள். உடலியங்கியல், உயிரியல் ஆகிய துறைகளின் வளர்ச்சி சமூகவியலில் பிரதிபலித்ததன் விளைவு அது. பல ஜனநாயக விதிமுறைகளின் தந்தை டார்வின் எனில் அது மிகையல்ல. உயிர் தன் சாத்தியங்களைப் பெருக்கிக்கொள்கிறது. அவற்றை மோதவிடுகிறது. ஆகச் சிறந்ததை ஏற்று முன்னகர்கிறது. அதுவே ஜனநாயகத்தின் ஆதார இயக்கம்.

''தோழர்களே, மார்க்ஸியத்தில் ஜனநாயகம் நுழையும்போது பாட்டாளிகளின் தரப்பு என்பது ஒன்றோடொன்று முரண்படும் பலநூறு, பல்லாயிரம் சக்திகளின் தொகுப்பு என்றே அறியப்படும். அதில் இரு பெரும் சக்திகள் விவசாயிகளும் தொழிலாளிகளும். சமூக இயக்கத்தின் பற்பல சக்திகளில் ஒன்றுதான் பாட்டாளிகளின் தரப்பு. இந்நிலையில் கட்சியமைப்பின் பணி என்ன? பல்வேறுபட்ட இயக்கங்களுக்கு இடையே உராய்வை சுமுகப்படுத்தும் உருளைகள், உயவுப்பொருட்கள்தான் கட்சியும் அதன் பல்வேறு அமைப்புகளும். இது ஒரு தளம். இன்னொரு தளத்தில் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதியாக இந்தப் போட்டி இயக்கத்தில் பங்காற்றுகிறது.

''அப்படியானால் பாட்டாளி வர்க்கப் போராட்டம் எப்படிப்பட்டது? அன்டானியோ கிராம்ஷி அதை மிக அற்புதமான ஒரு சொல் மூலம் விளக்குகிறார். 'நிலையுத்தம்'. அடைந்ததைத் தக்கவைத்தபடி, மேலும் அடைய முயல்வது. உரிமைக்கான தாகத்தை தொடர்ந்து வளர்த்தெடுப்பது. போராட்டமும் சமரசமும் மாறிமாறி நிகழ்வது. சமரசத்துக்கான போராட்டம், போராட்டத்துக்கான சமரசம். விரும்பியோ விரும்பாமலோ இன்று தொழிற்சங்கத் தளத்தில் நடைபெறுவது என இதையே காண்கிறோம்.

''அப்படியானால் புரட்சி என்ன ஆயிற்று என்று கேட்கிறீர்கள். புரட்சியை ஒரு சம்பவமாக, ஒரு திருப்புமுனையாகப் பார்க்கும் பார்வையை நாம் கைவிட வேண்டும். புரட்சி என்பது உடலில் உயிர் வளர்வதுபோல படிப்படியாக, இடைவிடாது நடைபெறும் ஒரு வளர்சிதை மாற்றம். இதை மிஷெய்ல் ஃபூக்கோ நுண்புரட்சி என்கிறார்.

''அன்டானியோ கிராம்ஷி பற்றி தோழர் கந்தசாமி இங்கு விரிவாக விளக்கினார். அரசாங்கம் வன்முறைமூலமல்ல, கருத்துநிலைமூலமே நிலைநிறுத்தப்படுகிறது. சிவில் சமூகத்தில் இந்த ஆதிக்கக் கருத்துநிலை பாலில் நெய்போலப் பரவியுள்ளது. அக்கருத்துநிலையை மாற்றுவதே போராட்டம் என்பது. கருத்துக்களைப் படிமங்களாக்கி நிலைநிறுத்தும் சடங்குகளை உடைப்பதும், கருத்துக்களைத் தன் அலகுகளாகக் கொண்டிருக்கும் நம் புழக்கமொழியை சிதறடித்து மாற்றுமொழியை உருவாக்குவதும்தான் இன்றைய புரட்சிச் செயல்பாடு. இனிப் போராட்டம் தெருக்களில் இல்லை; விவாதங்களில் உள்ளது. இனிப் போராட்டம் தோட்டாக்கள் வழியாக அல்ல; சொற்களினூடாகவே. மாவோ பின்வாங்கட்டும். 'அதிகாரம் மொழியினூடாக' என அவருக்கு நாம் கூறுவோம். நாம் உருவாக்க வேண்டியது கருத்துகளின் அராஜகத்தை. அந்தப் புயல் இங்குள்ள அனைத்தையும் தகர்த்துவிடும். இப்போது இங்குள்ள

கருத்துநிலை புராதன சனாதனக் கருத்து நிலையேயாகும். இது பழங்குடி கருத்துநிலைகளைத் தின்று உடலாக்கிக்கொண்டது. இஸ்லாம் ஐரோப்பிய வயிற்றைக் கிழித்து எடுப்போம். உயிர் பெறச் செய்வோம். இதன் சமரச ஒப்பந்தங்களை உடைப்போம். இன்று அவசியமான புரட்சி இதுதான் கருத்துப் புரட்சி.

"மார்க்ஸியத்தின் தார்மீக அடிப்படைகளைப் பற்றிக் கூறியபடி இப்பேச்சைத் தொடங்கினேன். அந்த தார்மீக அடிப்படை இப்போதும் அப்படித்தான் உள்ளது. உழைப்பவன் உயிர்வாழும் உரிமைக்காகப் போராடும் நிலைமையில்தான் இப்போதும் இருக்கிறான். அந்நிலை தொடரும்வரை மார்க்ஸியமே உலகின் மீட்புக்கான ஒரே பாதை. உலகை மாற்றும் ஒரே கருத்துநிலையும் அதுதான். அதன் அரசியல் நடைமுறை மட்டுமே தோற்றுவிட்டது. அதை நாம் மாற்றியமைக்க வேண்டும். அதுவே இன்றுள்ள அடிப்படைப் பிரச்சினை. இங்கு நான் எழுப்பியது அது சார்ந்த சில சாத்தியங்களைப் பற்றிய வினாக்களை மட்டுமே. நாம் தொடர்ந்து சிந்திப்போம். இது சிந்தனையாளர்கள்மீது வரலாற்றின் முழுப் பொறுப்பும் சுமத்தப்பட்டிருக்கும் காலம். நன்றி."

கலைசலான கைத்தட்டல்கள் ஒலிக்க, கதிர் வாயை கைக்குட்டையால் ஒற்றியபடி அமர்ந்தான்.

◆

2

மதிய உணவிற்காக ஒவ்வொருவராகப் பிரிந்து சென்றனர். எல்லாருக்கும் ஒரே ஓட்டலில்தான் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் சிறுசிறு குழுக்கள் இயல்பாகவே உருவாயின. அருணாசலம் தயங்கி நின்றான்.

ஒருவர் அவன் தோளைத்தொட்டு, ''தோழர் சாப்பிட வரலியா?'' என்றார். யார் என்று தெரியவில்லை ''சாப்பிடணும்'' என்றான். ''அப்பம் வாங்க'' என்றார் அவர்.

எதிரே நாலைந்துபேர் கும்பலாகச் சென்று கொண்டிருந்தார்கள். நடுவே கந்தசாமியை ஓர் இளைஞன் கைப்பிடித்து இட்டுச்சென்று கொண்டிருந்தான்.

''அவர்தான் கந்தசாமி'' என்றார் கூட வந்தவர். ''ரிஷின்ற பேரில எழுதறார். பெரிய மார்க்ஸிய அறிஞர். நீங்க 'இன்று' பாக்கிறதுண்டா, சிறுபத்திரிகை? இப்ப நின்னு போச்சு...''

அருணாசலம் ''ஓகோ'' என்றான்.

''வாங்க அறிமுகம் செய்து போடலாம். நீங்கள் பார்க்க வேண்டிய ஆளுல்லா?''

கும்பலை நெருங்கியதும் அருணாசலத்தின் கூட வந்தவர் வேகமாக நடந்து நெருங்கிச் சென்று ''ஐயா நான் லாரன்ஸ். போக்குவரத்துத் தொழிலாளி யூனியன். கோவையில பாத்திருக்கம்'' என்றார். கந்தசாமி கைநீட்டினார். அவர் கையைப் பிடித்ததும் புன்னகைத்தபடி ''நல்லா இருக்கீங்களா? பாத்து ரொம்ப நாளாச்சு'' என்றார். அருணாசலம் அவர் பார்த்து என்று சொன்ன சொல்லாட்சியில் சற்று திடுக்கிட்டான். ''ஐயா இவர் பேரு அருணாச்சலம். உங்களை சந்திக்கப் பிரியப்படுதாரு'' என்றார் லாரன்ஸ். ''எந்த அருணாசலம்? ரப்பர்த் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில ஒரு அருணாசலம் உண்டு. இதழுக்கு நிறையக் கடிதங்கள் போட்டிருக்கார். ஒரு கட்டுரைகூட எழுதியிருக்கார்'' என்றார் கந்தசாமி. ''செரியாப் போச்சு போங்க; அவருதான். வாங்க தோழர்.''

அருணாசலம் முன்னகர்ந்தான். கந்தசாமியின்

கரங்கள் வியர்வையுடன் மென்மையாக இருந்தன. மெல்லிய குரலில் நல்லா இருக்கிங்களா?'' என்றார். ''ஆமா.'' ''பாக்கணும்னு ரொம்ப நாளா ஆசை.'' அருணாசலம் மீண்டும் அந்த சொல்லால் பாதிப்பு அடைந்தான். 'ஐயா வாங்க சாப்பிடலாம்'' என்றார் ஒருவர். கூட்டமாக நடந்தார்கள்.

கந்தசாமி ஓர் இளைஞனிடம் ''என்ன சுரேஷ், நீங்க என்ன நினைக்கிறீங்க, இன்னைக்கு கதிர் பேசினது பற்றி?'' என்றார்.

''ரொம்ப போல்டா பேசறார்.''

''அது அவர் எப்பவுமே பேசறதுதானே?''

''அவருக்கு அறிவுஜீவின்னு பட்டம் இருக்கு. என்ன வேணுமானாலும் பேசலாம். மத்தவங்க இப்படிப் பேசினா இதுக்குள்ள மேலேருந்து ஓலை வந்துரும்.''

''மாசிலாமணி மாதிரி ஒரு பின்னணிப் படை இருந்தா நான்கூட இதைவிடப் பெரிய அறிவுஜீவி ஆயிடுவேன்'' என்றான் ஓர் இளைஞன்.

''முன்னால கட்சிக்கு உள்ள இப்படிப் பேசினார். இப்ப பொது மேடையில ஆரம்பிச்சாச்சு. பயமா இருக்கு.''

''என்ன பயம்?''

''இல்ல, இப்ப உள்ள தொண்டர்களுக்கு கம்யூனிஸ்ட் அறிக்கையையே படிக்க வாய்ச்சிருக்காது. இவரு போய் ஃபூக்கோ, சாக்கோன்னு எடுத்து விடுதாரு.''

''பி.சி. சாக்கோவா, அவரு காங்கிரஸ்காரருல்லா?'' என்றார் ஒரு நாடுக்காரர்.

கந்தசாமி சிரிக்கவில்லை. பிறர் உரக்கச் சிரித்தார்கள்.

கந்தசாமி ''அவரு பேசினது பத்தி உங்க கருத்து என்னன்னு கேட்டேன்'' என்றார்.

''இனிமே கம்யூனிசம்னா ஒரு மாதிரி தொழிற் சங்கவாதமும், பிரசங்கமும் மட்டும்தான் என்கிறாரு. புரட்சி, சமூக மாற்றம் மாதிரி விஷயமெல்லாம் ஜூறுகா போட்டிடலாம்கிறாரு.''

''சரி, உங்க கருத்து என்ன?''

''சமூகமாற்றம் இல்லாம சங்கம் நடத்துயதுக்கு என்னத்துக்கு இத்தாம்பெரிய சித்தாந்தமும் மயிரும்? தத்தா சமந்து பத்து நாட்டுத் தப்பாக்கிய வச்சுகிட்டு நம்மைவிடப் பெரிய சங்கம் நடத்தறான்''

தொழிலாளி வர்க்கங்கிறது ஒரு ஒற்றைப் படையான சக்தி இல்லைன்னு சொல்றார். பலவிதமான ஜனநாயகப் போக்குகளுக்கு நடுவில உள்ள சமரசப் புள்ளி மாதிரி கட்சி இருக்கணும்னு சொல்றார்.''

''அது உண்மைதான். இப்ப கட்சிக்க முழு நேர வேலையே சங்கங்களுக்குள்ள சமரசம் செஞ்சு வைக்கிறதுதான்.''

''மாசிலா கட்டப்பஞ்சாயத்து பண்றதாக்கூட ஒரு பேச்சு இருக்கு.''

''அதுக்கு மேல என்ன புரிஞ்சுகிட்டீங்க?'' என்றார் கந்தசாமி.

''எல்லார்கிட்டயும் சுமுகமா பேச்சு வார்த்தை நடத்திட்டே இருக்கிறது. அவனுக அசந்து சலிச்சுப் போறப்ப நைசா பதவிக்கு வந்திடறது.''

''இதுக்கு ஜகஜித்சிங் தீசிஸ்னு கட்சியில பேரு'' என்றான் ஒருவன். அனைவரும் சிரித்தார்கள், கந்தசாமியைத் தவிர.

கந்தசாமி ''கட்சிய கட்டறது ராணுவத்த உருவாக்கிறதுக்கு சமமா இருக்குன்னு சொல்றாரே அதைப்பத்தி என்ன நினைக்கிறீங்க'' என்றார்.

''ஆமா, அப்பிடித்தான் இருக்கணும். போலீசுன்னு சொன்னா தொடை நடுங்குத பயலுவள வச்சுட்டு என்ன பண்ணுயது? அதிகம் பேரு வேணாம்யா, ஒரு பத்து பேரு போதும். இப்ப மேட்டூர் பக்கம் பிரேமா மில்லுன்னு ஒரு மில்லு இருக்கு. மொத்த தொழிலாளிங்க நாற்பது. அதில நம்மாளு எட்டுபேருதான். ஆனா எட்டுபேரும் செம முரடனுங்க. இடுப்பில சைக்கிள் செயின், பனியனுக்குள் பட்டாக் கத்தியோடத்தான் வருவானுங்க. அங்க அவன் வச்சதுதான் சட்டம். ஒரு பய கேக்க முடியாது. ஆகஸ்டு பதினைஞ்சுக்கு செங்கொடிதான் ஏத்தணும்னு சொல்லிடுங்க தோழர், ஊர்ல எந்தத்தாளி கேக்குறான்னு பாப்பம்னு சொல்றான். ஹெஹெஹெஹெ...''

கந்தசாமி முதன்முறையாகப் புன்னகை புரிந்தார்.

ஓட்டல் வாசலில் ஓர் இளைஞன் நின்றிருந்தான். ஜிப்பாவும் பாண்டும் அணிந்திருந்தான். அருணாசலம் அவன் யாரென்று தெரியாமலேயே அவன்மீது துவேஷம் எழுவதை உணர்ந்தான். அவன் அருகில் வந்து கைகளை நீட்டி கந்தசாமியைத் தொட்டு ''ஐயா, நான் ஜெயமோகன்'' என்றான்.

''அடடா நீங்களா வாங்க...''

''நீங்க வரதா சொன்னாங்க. இன்னைக்கு தருமபுரி திரும்பறேன்.''

''அப்பவே வந்திட்டீங்களா?''

''ஆமா, எனக்கு கதிர் பேச்சு கேட்கப் பிடிக்கும்.''

''நல்லாத்தான் பேசறார். வாங்க சாப்பிடலாம்.''

நாற்காலிகளில் அமர்ந்ததும் கந்தசாமி ''சைவமா அசைவமா?'' என்றார்.

''சைவம்தான். ஏன்?''

''நான் அசைவம் சாப்பிடறதில்லை. சர்க்கரை நோய் இருக்கு'' என்றார் கந்தசாமி.

உணவு பரிமாறப்பட்டது. எல்லாரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். கந்தசாமி கைகளால் மேஜையின் காலியிடத்தை துழாவினார். அப்போதுதான் அனைவருக்கும் உறைத்தது. நாலைந்துபேர் அவர் கைகளைப் பிடிக்கக் கைநீட்டினார்கள். ஒருவர் அவர் கையைப்பற்றி சோறுமீது வைத்தார். ஒருமுறை எது எங்க இருக்குன்னு அடையாளம் காட்டிடுங்க'' என்றார் கந்தசாமி.

சாப்பிட்டுப் படியிறங்கும்போது கந்தசாமி ''அப்புறம் சொல்லுங்க ஜெயமோகன், என்ன விசேஷங்கள்? நாவல் என்ன ஆச்சு?'' என்றார்.

''பப்ளிஷர் தேடிக்கிட்டிருக்கேன்.''

''அப்ப விஷ்ணுபுரம் இப்ப வராது.''

''இலங்கைத் தமிழர் இருக்க என்ன பயம்? சிலர் பணம் அனுப்பறேன்னு சொல்லியிருக்காங்க. பத்மநாப அய்யருக்கு எழுதியிருக்கேன். பாப்பம்.''

''கதிர் பேச்சு பத்தி என்ன நினைக்கிறீங்க?''

''ரொம்ப சாமர்த்தியமான பேச்சு. இந்த நூற்றாண்டுச் சிந்தனைகளை விரிவா தெரிஞ்சு வச்சிருக்கார். சாமர்த்தியமா எல்லாத்தயும் மடிச்சு மடிச்சு அவருக்குத் தேவையானபடி மாத்திக்கிறார்.''

''உதாரணமா?''

''இது பின் நவீனத்துவ யுகம்னு சொல்றாங்க. அதை ஏத்துக்காத என்னை மாதிரி ஆட்கள்கூட பின்நவீனத்துவத்தின் சில அடிப்படைகளை ஏத்துக்கிடறோம். சர்வதேசத்தன்மைகொண்ட பெருங்கனவுகளுக்கு இனிமே பூமியில இடமில்லை. அந்தக் கனவுக்கு தர்க்கநியாயம் தாறதுக்காக வரலாற்றைக் குறிப்பிட்ட வகையா அடுக்கிக் காட்டற வித்தைக்கும் இனிமே நிற்க இடம் இல்லை. மார்க்ஸிசம்தான் மானுடகுலத்தோட கடைசிப் பெரும் கனவு. பெரும் கனவுகள் பெரிய பலிகளை வாங்கும். புரட்சிகள் நெப்போலியனிசத்தை உருவாக்கும்ங்கிறது மாதிரி. இனிமே பெருங் கனவுகளும் வேண்டாம். வரிசைப்படுத்தப்பட்ட வரலாறும் வேண்டாம். பலிகளும் வேண்டாம்.''

''பின்ன என்ன வேணும்?''

''ஒவ்வொரு சூழலியும் மனுஷனுக்கு ஒவ்வொண்ணு தேவைப்படுது. விடுதலை, நீதி, கருணை எல்லாத்துக்கும் இடத்துக்கு ஒரு அர்த்தம். காலத்துக்கு ஒரு அர்த்தம். மக்கள் தங்களுக்குத் தேவையானதை தங்கள் வாழ்க்கையிலயிலிருந்து உருவாக்கட்டும். அதுக்காக போராடட்டும். அந்த பிராந்தியப் போராட்டங்களும் தற்காலிகக் கனவுகளும் தன்போக்கில இணைஞ்சு பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். பண்ணாட்டியும் ஒண்ணும் இல்லை. உலகத்தோட மூலைமுடுக்கெல்லாம் நுழைஞ்சு, அங்க உள்ள சொற்களையெல்லாம் மாத்தியமைச்சு, அங்கேயுள்ள கனவுகளை யெல்லாம் அழிச்சு, பொதுக் கனவுகளையும் பொது நடைமுறையையும் ஒண்டுபண்ணுற பெருங்கதையாடல்கள் மனுஷகுலத்திற்கு அழிவைத்தான்

தரும். அதாவது அது பெரிய கனவு. அதுக்காக மத்த சின்ன கனவுகளை கூசாம அழிக்கலாம்னு அது சொல்லும். இது பின்நவீனத்துவக் கருத்து. இதை இப்ப நான் ஏத்துக்கிடறேன். ஆனா கதிர் இப்ப பின்நவீனத்துவ ரீதியா ஒரு பெருங்கதையாடலை உருவாக்கிக் காட்டறார்.''

''இந்தப் பெருங்கதையாடல்களினால மனுஷனுக்கு எந்த நன்மையும் இல்லைங்கிறீங்களா?''

''நன்மை நடந்திருக்கு. வைதிகம், சைவம், வைணவம், கிறிஸ்தவம், இஸ்லாம் எல்லாம் பெருங்கதையாடல்கள்தாம். அவை மனிதகுலத்துக்கு நிறைய நன்மைகள் செய்திருக்கு. ஆனா அவை எடுத்துக்கிட்ட மானுடப் பலிகளோட, அவை இன்னிக்கும் முன்வைக்கிற அடக்குமுறைகளோட, அந்த நன்மைகளை ஒப்புநோக்கிப் பாத்தா அதெல்லாம் மலைக்கு முன்னால கூழாங்கல் மாதிரி ஆயிடுது. கழுவேத்தல்கள், வதைமுகாம்கள், உயிரோடு எரிக்கிற சடங்குகள், நட்டநடு ரோட்டில கல்லெறிஞ்சு கொல்லுற புனிதக் கடமைகள், சிலுவைப் போர்கள், ஜிகாத்துகள்... வரலாறே இந்த பெருங்கனவுகளால ரத்தச் சகதியாக் கிடக்கு. எல்லா தேசியவாதங்களும் பெருங்கனவுகள்தான். பாரதமாதா, தமிழன்னை... பலிகேட்கிற தேவதைகள் எல்லாமே. கத்திக்கும் துப்பாக்கிக்கும் நிகழ்ந்த பலியே கோடிக் கணக்குலன்னா அணுகுண்டுக்கு என்ன நிகழும்? வேணாம்.''

கந்தசாமி சிரித்தார். அருணாசலம் தன் உடல் மெல்ல நடுங்குவதை உணர்ந்தான். மிக மெலிதாக ஒரு வீச்சம் அடிக்க ஆரம்பிப்பது போலிருந்தது. கருகும் சதையின் மணம். அவன் முகத்தைச் சுளித்தான். அதை ஜெயமோகன் வியப்புடன் பார்ப்பதை அறிந்தான்.

''கதிர் இன்னொரு திரிபு வேலையும் செய்றார்'' என்றான் ஜெயமோகன். ''பின்நவீனத்துவ சிந்தனையாளர்களும் சரி, அவங்களோட தீவிரமா மாறுபடற கார்ல் பப்பர் மாதிரி அறிஞர்களும் சரி, மேற்கத்திய சிந்தனைக்கு அடிப்படையா இருக்குற பைனரிமுறைமை பத்திக் கடுமையா விமரிசிக்கிறாங்க. எந்த விதமான பைனரியும் அடிப்படையில விஷயங்களை முழுமுற்றா நிர்ணயிச்சுக்கிற போக்கில இருந்துதான் தொடங்குது. ஒரு விஷயத்தை நாம் திட்டவட்டமா எல்லை வகுத்துக்கிட்டோம்னா அதுக்கு வெளியில உள்ளதெல்லாம் அது அல்லாதது ஆயிடுது. பைனரி தொடங்கியாச்சு. பிறகு இந்த ரெண்டு விஷயங்களுக்குள்ள உள்ள வேறுபாடுதான் நமக்கு முக்கியமாப்படும். நவீனசிந்தனையோட அடிப்படையே எதையும் ஒரு குறிப்பிட்ட பேசுதளத்தில, ஒரு குறிப்பிட்ட கால சந்தர்ப்பத்தில, மட்டும் வச்சு தற்காலிகமா வரையறுத்துக்கிறதும் தற்காலிகமா எல்லைப்படுத்திக்கிறதும்தான். அதாவது எந்த நிர்ணயமும் முற்றானது இல்லை. எல்லாமே சார்நிலையானதுதான். ஆனா இன்னைக்கு கதிர் பேசறப்ப எல்லாத்தயும் திட்டவட்டமா நிர்ணயிச்சுக்கிட்டார். நாம அவங்கங்கிற பைனரிய ரொம்ப வலியுறுத்தினார். இது அவர் தெரிஞ்சே செய்ற புரட்டு...''

''நீங்க எப்பவுமே இப்படித்தான் ஜெயமோகன். மானசீகமா ஒரு பீடத்தில நின்னுட்டு பேச ஆரம்பிச்சிடறீங்க...''

நரைத்த தலையும் கையில் கறுப்புத் தோல் பையுமாக ஒருவர் வந்தார்.

"ஐயா நான் கவிஞர் கரியமால். சந்திக்க இதுவரை அமையவில்லை."

"வணக்கம். என்ன பண்றீங்க?"

"புரட்சிக் காவியம் ஒண்ணு எழுதறேன் அய்யா, புதுவிடியல்னு..."

"அதில்லை. என்ன வேலை?"

"தமிழாசிரியர் பணியும் உண்டு. ஐயாவுக்கு என் கவிதைத் தொகுப்பு ஒண்ணு கொண்டு வந்தேன். மொத்தம் பதினெட்டு தொகுப்பு உண்டு அய்யா. இது மறுபதிப்பு" அவர் ஒரு புத்தகத்தைத் தந்தார். அதில் அட்டையில் சம்மட்டியால் ஒருவன் பூமியைக் கட்டியிருந்த சங்கிலியை உடைக்க முயன்று கொண்டிருந்தான். கந்தசாமி நூலைத் தடவிப் பார்த்தார்

"என்ன பேரு?"

"கரியமால்."

"இல்ல, தொகுப்புக்குப் பேரு..."

"சிகரங்களை நோக்கி. அந்தப் பேர்ல ஒரு கவிதை உள்ளார இருக்கு ஐயா. இப்ப முப்பது வருஷம் ஆகுது எழுதி. அப்ப அதைப் படிச்சிட்டு தோழர் பாலன் அப்பிடியே விம்மிவிம்மி அழுதார் பாருங்க, ஒரு மணிநேரம் அழுதார். நம்ம எஸ்.வி.காளன்தான் சமாதானம் செஞ்சார்."

"ரொம்ப நாளா கட்சியில இருக்கீங்க போல..."

"முப்பத்துமூணு வருஷமாச்சு. எனக்கு வேலை கிடைச்ச வருஷம் கட்சி சேந்தது. அதுக்கு முன்னால இளைஞர் அமைப்பில இருந்தேன். இப்ப ரிடயர் ஆயாச்சு."

"இப்ப முதியோர் அமைப்பில இருக்கீங்களா?" என்றான் ஜெயமோகன்.

"இல்லய்யா, இப்ப மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளராக இருக்கேன். சார் யாரு?"

"இவர் பேரு ஜெயமோகன், எழுத்தாளர்."

"அப்பிடியா, சந்தோஷம். ஒருநாள் எடுத்திட்டு வாங்க. படிச்சிட்டு இருந்தங்கள் எதுனா சொல்றேன்."

"ரொம்ப உபகாரம்" என்றான் ஜெயமோகன்.

"அடுத்த அமர்வு எப்ப?"

"சாயந்தரம்தான், வாங்க."

நடந்தபோது கரியமால் உரக்க "அய்யா புதுக்கவிதை பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?" என்றார்.

"எதாயிருந்தாலும் கவிதையா இருக்கணும்."

''அதெப்பிடிங்க சொல்றீங்க? இப்ப ஒரு கட்சின்னா அதுக்கு தளமட்டக்குழு, மாவட்டக்குழு, மத்தியக்குழு, பொலிட்பீரோன்னு இருக்கு இல்லிங்களா? சும்மா ஆயிரம் பேரு கூடி சிந்தாபாத்னு கத்தினா கட்சி ஆயிடுங்களா? அமைப்பு வேணாமா? ஒழுங்கு வேணாமா? என்ன செய்யணும்னு உத்தரவுபோட நாலு தலைவன் வேணாமா?''

''அருமையான கருத்து'' என்றார் கந்தசாமி, புன்னகையுடன். ''கட்சி முன்னபின்ன இருந்தாலும் பொலிட்பீரோ ஸ்ட்ராங்கா இருக்கணும்.''

''பெண்ணுக்கு கற்பும், ஆணுக்கு வீரமும், கண்ணுக்கு ஒளியும், கருத்துக்குத் தெளிவும், சொல்லுக்குப் பொருளும், கவிதைக்கு யாப்பும், வில்லுக்கு நாணும், வித்தைக்கு குருவும் - அப்டீன்னு நான் ஒரு கவிதைல சொல்றேன். தோழர் எம்.கெ. படிச்சுட்டு அப்பிடியே கட்டிப் பிடிச்சுட்டாரு; கடலூர் மாநாட்டிலே.''

''அப்ப நான் வரேன்'' என்றபடி ஜெயமோகன் கிளம்பினான்.

''சரி பார்க்கலாம்'' என்றார் கந்தசாமி.

''அவனைப் பாத்தா நம்ம ஆள் மாதிரி இல்லியே'' என்றார் கரியமால்.

''அவன் யாரோட ஆள்னு அவனுக்கே தெரியாது'' என்றார் கந்தசாமி.

''திமிர் பிடிச்ச பய.''

''ஏன் அய்யா, அவன் உங்க சிஷ்யன்னு சொல்றாங்களே, உண்மையா?''

''அப்படியும் சொல்லலாம்'' என்றார் கந்தசாமி. ''அந்தப் பழியை நான் மறுக்கப் போறதில்லை...''

''பெரிய கொம்பன்னு நெனைப்பு.''

கரியமால் ''அய்யா இந்த சிகரங்களை நோக்கிங்கிற கவிதையை மட்டுமாவது நீங்க படிக்கணும். அதில சொல்றேன் 'செம்பட்டுச் சேலைதனை இடை சேர்த்தாயே! செவ்வரளி மலர்களையே குழல் சேர்த்தாயே! உம்பர் போற்றும் உலியானாவை ஈன்றளித்தாயே! உனக்குண்டோ ஈடெங்கள் சோவியத்தாயே...' ரொம்ப உணர்ச்சிகரமான கவிதை அய்யா. இதிலே என்ன விசேஷம்னா...''

அறை வந்துவிட்டது. கந்தசாமி சிறுநீர் கழித்துவிட்டு வந்து மெத்தையில் படுத்தார். உடனே கரியமால் தொடங்கினார். ''ரஷ்யத்தாய் எப்படி அய்யா பூவச்சு புடவ கட்டுவாள்னு எம்.கெ. கேட்டார். ஆனா நாம தமிழ்க்கவிஞர். தமிழ்ப் பண்பாட்டுப்படித்தான் எழுதணும். அதை மட்டும் எங்கிட்ட மாத்த சொல்லிராதீங்க; வேற என்ன சொன்னாலும் கேட்குதேன்னு ஓங்கிச் சொல்லிட்டேன். புரட்சி கிடக்குது கழுதை; அதுக்காக நாம நம்ம பண்பாட்ட விட்டுர முடியுமா, சொல்லுங்க.''

''அய்யா வணக்கம்'' என்றபடி ஒரு மெலிந்த இளைஞன் உள்ளே வந்தான். கந்தசாமியை அணுகி அவர் கரங்களைத் தொட்டு ''அய்யா நான் கவிஞர் செம்புலன். முற்போக்கு க- ...றல இருக்கேன்.''

"எப்பவுமே போர்க்கோலம்தான் போலிருக்கு" என்றார் கந்தசாமி.

"தங்கள் இதழுக்கு நான் நிறைய கவிதை அனுப்பறதுண்டு ஐயா. இன்னைக்குகூட பதினெட்டு கவிதைகள் அனுப்பினேன்."

"நீங்கதானா அது? நீங்க அனுப்புற கவிதையெல்லாம் வேற எடங்களிலயும் பிரசுரமாயிடுதே."

"அதுங்கய்யா, நிறைய அனுப்பறப்போ சமயங்கள்ல மறந்து போயிடுது."

"ஆனந்த விகடன்லகூட எழுதறீங்க போலிருக்கு."

"ஆமாங்கய்யா, சமீபத்தில கூட கோமணம்னு ஒரு கவிதை வந்தது. அதுக்க முன்னாடி கண்ணாடிக் காதல்னு ஒண்ணு."

"படிக்கலை."

"தேர்தல் முடிந்தது, பல கட்சிக்கொடிகள் வண்ணக் கோமணங்களாக - இது இப்ப வந்த கவிதை."

"சொல்லுங்க பாப்பம்."

"இவ்வளவுதான் அய்யா கவிதை. படம்லாம் போட்டு பெரிசா முக்கா பக்கத்துக்கு போட்டிருந்தான்."

கரியமால் ஊடே புகுந்தார். "நான்கூட எழுதியிருக்கேன் அய்யா 'ராத்திரி ராஜாக்கள்'ன்னு ஒரு கவிதை. என் 'செம்புரட்சியை நோக்கி ஒரு சிம்புட் பறவை'ங்கிற தொகுப்பில இருக்கு. 'ஓட்டுப் போட கூட்டிவந்த எங்க ராஜாவே, கோட்டுசூட்டு போட்ட ராசாவே, எங்க ஓட்டைக் கோமணம் மாத்த வேணுங்க நோட்டைத் தாருங்க, ரூபா நோட்டைத் தாருங்க'ன்னு தொடங்கும். எண்பதில எலக்ஷன்ல இந்த பாட்டைக் கேசட்டா போட்டாங்க. ரொம்பப் பிரபலம். கிராமங்களில ஓட்டைக் கோமணம் போடுய்யான்னு கேட்டுக் கத்தறான். ஹெஹெஹெக்."

"உங்க பேருக்கு என்ன அர்த்தம்?" என்றார் கந்தசாமி இளம் கவிஞரிடம்.

"இதுவா? ஒரு பழைய பாட்டில செம்புலம்னு வரும். அத்த இப்படி மாத்தி வச்சுக்கிட்டேன்."

"என்ன அர்த்தம்?"

"செம்புலம்னுதான்."

"செம்புகலம்மாதிரி இருக்கு" என்றார் ஒருவர்.

செம்புலன் பேச்சை மாற்றும் பொருட்டு "இப்ப நிறைய இருண்மைக் கவிதைகள் வருதுங்களே" என்றான்.

"அப்படீன்னா?"

"புரியாத கவிதைகள்..."

''இப்ப உங்க கவிதைகள்கூட-த்தான் பச்சைமாலுக்கு புரியலை.''

''பச்சைமால் இல்லிங்கய்யா, கரியமால்.''

''எனக்கு அதில வித்தியாசம் இல்லியே.''

புலவர் கொப்பளித்து சிரித்தார்.

''அதில்லய்யா ரொம்ப இருண்மையா...'' என்றான் செம்புலன்.

''சரியா சொல்லுங்க.''

''அதில்ல... அதாவது,,, ரொம்ப பிற்போக்குத்தனமா, தனிநபர் வாதமா...''

''அதாவது...''

''அதாங்க மேட்டிமைவாதமா, குறுங்குழுவாதமா... ஒரு மாதிரி அராஜகமா...''

''சரி விடுங்க. தி.க.சியை உங்களுக்கு எப்படிப் பழக்கம்?''

''கார்டு போடுவாருங்க.''

'எவ்வளவு போட்டிருப்பார்?''

''எம்பத்தாறு கார்டுங்க.''

''அடடே, அவ்வளவு கவிதையா எழுதிட்டீங்க?''

''அவ்வளவுதான் பிரசுரமாகியிருக்கு.''

கந்தசாமி திடீரென்று சலிப்படைந்தார். ''அப்ப நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கட்டுமா'' என்றார்.

''சரிங்க'' என்றபடி கவிஞர்கள் கலைந்தனர். அருணாசலமும் எழுந்தான்.

''நீங்க உக்காருங்க. உங்க கிட்டே நிறையப் பேசணும்'' என்றார் கந்தசாமி.
''கதிர் சில விஷயங்கள் சொன்னார்.''

அருணாசலம் அமர்ந்தான்.

3

அருணாசலம் இனம்புரியாத தவிப்புடன் அமர்ந்திருந்தான். கந்தசாமி ''சொல்லுங்க உங்க பிரச்சினை என்ன?'' என்றார்.

''பிரச்சினை ஒண்ணுமில்லையே.''

''கதிர் லேசா சொன்னார்?''

''கதிரை உங்களுக்குத் தெரியுமா?''

''ரொம்ப நாளா தெரியும். என் பத்திரிகையில கட்டுரைகள் எழுதியிருக்கார்.''

''நீங்க மார்க்ஸியத்தை நம்புறீங்களா?''

''ஆமா, நான் கடைசி மூச்சுவரை ஒரு மார்க்ஸிஸ்டுதான்'' என்றார் கந்தசாமி நிதானமாக.

''இப்ப கதிர் பேசினது மார்க்ஸிசமா?''

''கதிர் பேசற பல விஷயங்கள் நான் சொல்லிட்டிருக்கிற விஷயங்கள்தான். தமிழ் நாட்டில கிராம்ஷி பத்தி முதன்முதலாக நான்தான் பேசினேன். சோவியத் பரிசோதனை தோல்வின்னு இப்ப உறுதியானபிறகு நான் சொல்லிவந்த பல விஷயங்களைப் பரவலா ஏத்துக்க ஆரம்பிச் சிருக்காங்க.''

''எனக்கு கதிர் பேச்சு பாதி புரியலை'' என்றான் அருணாசலம்.

''நீங்க கிராம்ஷியை முறையா படிக்கணும்'' என்றார் கந்தசாமி. ''மார்க்ஸிசத்துடைய தத்துவ அம்சத்தை ஒரு கோடு மாதிரி மனசில வச்சு பாருங்க. ஹெகல்ல இருந்து தொடங்கலாம். ஹெகல் மனித வரலாறு என்பது முரண்பட்ட சக்திகள் பரஸ்பரம் போராடறது வழியா முன்னகரக்கூடிய ஒரு இயக்கம் அப்படீன்னார். இதுதான் இயங்கியல். வரலாற்றுக்கு ஒரு இலக்கு இருக்கு. மேலான சமூகத்தையும் மேலான மானுடனையும் நோக்கி அது முன்னேறிட்டிருக் குன்னு சொன்னார். இதுதான் ஹெகலோட வரலாற்றுப் பொருள்முதல்வாதம்ங்கிற கருத்துமுதல்வாத தரிசனம்.''

''ஆமா.''

''மார்க்ஸ் இதில இருக்கிற கருத்துமுதல்வாத அம்சத்தை நீக்கிட்டுப் பார்த்தார். ஹெகலோட

தரிசனப்படி மேலான சமூகமும் மேலான மானுடனும் வரலாற்றுக்கு முன்னாலயே, வரலாற்றுக்கு அதீதமா, இருக்கக் கூடிய கருத்துக்கள். வரலாறுன்றது அந்தக் கருத்தின் பௌதிகமான வெளிப்பாடு மட்டும்தான். மார்க்ஸ் பௌதிகமான சக்திகள் தங்கள் போக்கில இயல்பா முரண்பட்டும், ஒன்று கலந்தும், முன்னகரக்கூடிய தன்னிச்சையான ஒரு பிரவாகமா வரலாற்றை உருவகிச்சார். இதுதான் மார்க்ஸியத்தின் தத்துவ அடிப்படை.''

''ஆமா.''

''மார்க்ஸ் பௌதிகசக்திகள்னு சொல்றப்ப பொருளாதார அடிப்படைகளைத்தான் சொன்னார். உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகள்னு அதை வரையறுத்து அடித்தளம்னு பேர் குடுத்தார். எல்லா சமூக மாற்றமும் பொருளாதார அடிக்கட்டுமானத்தில ஏற்படக் கூடிய மாற்றங்களினால தான் வரும்னு சொன்னார்.''

''அதுதான் அடிப்படைப் பாடம்.''

''ஆனா லெனின் அதை மாத்தினார். கலாச்சார, அரசியல் அமைப்புகளின் முயற்சியினால் மேற்கட்டுமானத்தில வரக்கூடிய மாற்றத்தினாலேயே சமூகத்தை மாத்தமுடியும்னு சொன்னார். மார்க்ஸின் தத்துவப்படி பொருளாதாரக் காரணிகளினால் இயல்பா புரட்சி வரணும். லெனின் அரசியல் நடவடிக்கை மூலம் புரட்சியைக் கொணடு வந்தா. லெனின் ரஷ்யாவில நடத்தினது அதுதான். விழிப்புற்ற ஒரு சிறுபான்மையினர் அரசியல் நடவடிக்கை மூலமா புரட்சியைக் கொண்டுவந்து, பொதுவுடைமை சமூகத்தை உருவாக்க ஆரம்பிச்சாங்க. இது வால் நாயை ஆட்டிவைக்கிற மாதிரி. ரஷ்யாவில நடந்த சகல குளறுபடிகளுக்கும் காரணம் தடியால அடிச்சுப் பழுக்கவைக்க லெனின் செஞ்ச முயற்சிதான்.''

''புரட்சியை நிராகரிக்கிறீங்களா...?''

''அது மக்கள் புரட்சி இல்லை. ராணுவப் புரட்சிதான். போல்ஷெவிக்குகளுக்கு எப்பவுமே தங்கள்கிட்ட இருக்கிற அதிகாரம் வரலாற்று சக்திகளின் பின்புலம் இல்லாததுங்கிற பயம் இருந்தது. எதிர்த்தரப்புகளை அளவுக்கு மீறிப் பயப்பட்டாங்க. கெரன்ஸ்கியை ஒழிச்சுக்கட்டவும், ஜார் குடும்பத்தை வேரோட பிடுங்கவும் லெனின் காட்டின அவசரம்; கசாக்குகளை நசுக்க ட்ராட்ஸ்கி காட்டின மூர்க்கம்; எல்லாத்தயும் நாம இப்படித்தான் புரிஞ்சுக்க முடியும். அதுதான் ஸ்டாலினிசத்தில வந்து முடிஞ்சது.''

அருணாசலம் எல்லாம் மிக எளிதாக இருப்பதுபோல உணர்ந்தான். ஆதாரங்களே இல்லை. ஆனால் இத்தகைய எளிமை சாத்தியம்தானா? இது வெறும் பிரமையா?

''எங்க அரசாங்கம் வலுக்கட்டாயமா பொருளாதார அடிப்படைகளை மாத்த முயற்சி பண்ணுதோ அங்க போராடிவு இருக்கும். ஒரு இடத்தில ஒரு சந்தைகூடுது அது அங்க கூடறதுக்கு எத்தனையோ சமூகக் காரணங்கள் இருக்கும். உளவியல் காரணங்கள் இருக்கும். வரலாற்றுப் பின்புலம்

இருக்கும். சமயங்களில அது சந்தைங்கிறதுக்கும் மேல ஒரு குறியிடாகக்கூட இருக்கும். ஒரு கலெக்டர் வந்து நாலு நாள்ல சந்தைய மாத்தினான்னா அது அழிவைத்தான் உண்டுபண்ணும்.''

''ஆமா, சில இடங்களில பச்சைப் பசேல்னு காடு வளந்து கிடக்கும். வெட்டி ரப்பர் வச்சா தரிசாயிடும்'' என்றான் அருணாசலம்.

''இயற்கையோட குழந்தைதான் சமூகம். ரெண்டும் இயந்திர அமைப்புகள் இல்லை. உயிர்கள். நமக்கு உயிர் இயக்கம் பற்றித் தெரிஞ்சது ரொம்பக் கொஞ்சம். எல்லாத்தயும் எந்திரமா பாக்கிற மனோபாவம் அன்னைக்கு இருந்தது. செவ்வியல் மார்க்ஸியத்திலயும் அது உண்டு. அந்தப் பார்வைதான் இயற்கையையும் சமூகத்தையும் வசதிக்கேற்ப நினைச்ச மாதிரி மாத்திக்கலாம்ங்கிற தன்னம்பிக்கைய - திமிரைன்னு சொல்லணும் - மனுஷனுக்குக் குடுத்தது. நாகரிகம் தொடங்கி இருபதாயிரம் வருஷமாச்சு. இந்த நூறு வருஷத்தில் இயற்கைய மனுஷன் நாசம் பண்ணியாச்சு. மனுஷன் இயற்கையோட எஜமான்னு எங்கல்ஸ் சொன்னார். ரொம்பத் தப்பு. அவன் இயற்கையோட ஒரு பகுதி. இயற்கையையும் சமூகத்தையும் மாத்தணும்னு கனவு காணுறப்போகூட மனுஷன் அவைகளோட துளியாகத்தான் இருக்கான். அப்ப அந்தக் கனவே இயற்கையும் சமூகமும் உருவாக்கிக்கிற ஒண்ணுதான். தொழில்புரட்சி, பிறகு எந்திரிகவாத சிந்தனை, தொடர்ந்து பரிணாமவாத உயிரியல், விளைவா மார்க்ஸியம்ங்கிற பெரும்கனவு...''

''அந்தக் கனவு கலைஞ்சாச்சுன்னு இப்ப சொல்றாங்க...''

''நான் அப்படி நினைக்கல்லே'' என்றார் கந்தசாமி. ''இன்னொரு பெரும் கனவு வர்றதுவரை மார்க்ஸியம் இருக்கும். மதங்களும் தேசியங்களும் எல்லாம் பெருங்கனவுகள்தான். அந்தக் கனவுகளுடைய சாராம்சம் முதிர்ந்து உருவானது மார்க்ஸியம். மார்க்ஸியத்தோட சாரம் கனிந்து இன்னொரு கனவு வருமானால் மார்க்ஸியம் உதிரும். அதுவரை இருக்கும்.''

''பெருங்கனவுகள் தேவையில்லைன்னு ஜெயமோகன் சொன்னானே?''

''அவன் மூடன்'' என்றார் கந்தசாமி வேகமாக. ''மனுஷங்க நாம்னு நினைக்கிறவரை பெருங்கனவுகள் இருக்கும். தன் கனவை தன்னைச் சார்ந்தவர்களுடைய கனவா ஆக்குவான் மனிதன். மனித குலத்தோட கனவா அதை ஆக்கவும் முயற்சி செஞ்சிட்டேதான் இருப்பான். கலைகளும் இலக்கியமும் அந்த முயற்சியோட விளைவுகள்தான். தத்துவமும் சரிசனங்களும் அந்த முயற்சியால பிறக்கிறவைதான்...''

''இப்ப பின் நவீனத்துவவாதிகள் பெருங்கதையாடலை உதறிட்டு எழுதறாங்க.''

''ஆமா. ஆனா பெருங்கதையாடல்கள் இப்பவும் மனித மனங்களில கறியிருக்கு. அதையெல்லாம் கலைச்சுப்போட்டும் ஏளனம் செய்தும் இவங்க எழுதறாங்க. இது நிழல். நிஜம் இருக்கிறதனாலதான் நிழல் சாத்தியம். பெருங்கனவும் பெருங்கதையாடலும் இல்லைன்னா இலக்கியமும் இல்லாம ஆயிடும்.''

''அப்படி ஆகிற காலம் வந்தா...''

''மனித உடல்ங்கிற பொதுமை இருக்கிற வரைக்கும் மண்ணில் மனுஷன் 'நான் என்றால் மானுடம்' அப்டீன்னு சொல்லிட்டுத்தான் இருப்பான்.''

அருணாசலம் அந்த அபூர்வமான சொல்லாட்சியில் ஆழ்ந்து சற்றுநேரம் அப்படியே அமர்ந்திருந்தான். பிறகு பெருமூச்சுடன் ''இந்த ஞானத்தை அடைய நாம் கொடுத்த பலிகள் எவ்வளவு கோடி'' என்றான். ''நம்ம தரிசனம் அத்தனை உயிர்களுடைய பாரத்தை மறுதட்டில வைச்சா நிக்குமா?''

''நம்முடைய தனிமனித ஒழுக்கவியலை வைச்சு வரலாற்றைப் பார்க்கக் கூடாது.''

''அந்த ஆத்மாக்கள்? அவங்களுக்கு என்ன பதில்?''

''நீங்க பதில் சொல்லணும்னு ஏன் நினைக்கிறீங்க? நீங்க யார் அதுக்கு?''

அருணாசலம் குழம்பினான்.

''நீங்க வரலாற்றை உங்களை விலக்கிட்டுப் பார்க்கிறீங்க. வரலாறு உங்களுக்கு உங்ககூட பேசற சக இருப்பு. அது உங்க தன்னகங்காரத்தோட உச்சம். ஆனா வரலாறு கடல் மாதிரி. நீங்க துளி மணல்.''

''எனக்கு மனம் ஆறல்ல. எத்தனை கோடி பலிகள். நான் மார்க்ஸியத்தை நம்பற வரைக்கும் நானும்தான் அதுக்கு பொறுப்பு.''

''வரலாற்றில் ஒவ்வொரு காலடிக்கும் ரத்த அலை அடிக்குது. அது ஏன்? நம்மால அதைப் புரிஞ்சுக்க முடியுமா? ஆனா இனிமே அதை நாம தவிர்க்கலாம். ஏன்னா மானுட ரத்தம்ங்கிறது திரும்ப அள்ள முடியாதபடி தரையில சிந்துற ஒரு அபூர்வமான பொருள்னு இப்ப நமக்கு தெரியும்.''

''இதெல்லாம் வெறும் சொற்கள் தோழர்.''

''மார்க்ஸியத்தை விடுங்க. நியாயம் தருமம்னு நீங்க இப்ப சொல்றீங்களே அதில ஏதாவது ஒரு பண்புக்கூறை மட்டும் எடுத்துக்கிடுங்க. அதை நிலைநாட்ட உலகம் தந்த பலிகளை உங்களால கணக்கிட முடியுமா? இப்ப சொன்னீங்களே நிரபராதிகள் கொல்லப்படக் கூடாதுன்னு. பழங்குடி சமூகங்களில அப்படி ஒரு கருத்தே கிடையாது. மாற்றான் எல்லாருமே கொல்லப்பட வேண்டிய ஆட்கள்தான். பழங்குடி சமூகங்களை இணைத்து தேசம்ங்கிற அமைப்பை உருவாக்கக் கடல் மாதிரி ரத்தம் சிந்தப்பட்டிருக்கு. பிறகு தேசங்களுக்குள்ள போர்கள். சர்வதேசியம், மானுட குலம்ங்கிற கருத்துகள் ரெண்டு உலகப்போர் முடிஞ்சு, பத்து கோடிபேர் பலியாகி நாம பெற்ற ஞானங்கள்.''

''இந்தப் பண்புக்கூறுகள் அந்த ரத்தத்தை நியாயப்படுத்தும்கிறீங்களா?''

''இல்லைன்னு சொல்ல நாம நீதிபதிகள் இல்லை. நாம சொல்லற தீர்ப்புக்குத் தலைவணங்க வரலாறு நம்ம முன்னாடி வந்து நிக்கலை.''

''எனக்கு பயமா இருக்கு'' என்றான் அருணாசலம். ''என் நம்பிக்கை கள்மீது எனக்கு பயமா இருக்கு. மகத்தான மனுஷங்களைக்கூட அது கொலைக்காரங்களா ஆக்கியிருக்கு.''

கந்தசாமி சற்றுத் திகைத்தார். அவருக்கு சொற்கள் அடைத்துக்கொண்டன.

''வரலாறு என்னை அழுத்துது. ஒரு பாவபாரம்போல.''

''வரலாற்றுக்கு அதுக்கான இயக்கப்போக்கு உண்டு. தேசியங்கள் உருவானபோது பேரழிவுகள் நடந்தது. பிறகு தேசியங்களுக்குள்ள பொதுவிதிகள் உருவாச்சு. தொழிற்புரட்சி வந்தப்ப உலகளாவிய வணிகம் பேரழிவுகளை உருவாக்கிச்சு. வணிக நடைமுறைகள் உருவாச்சு. சோவியத் ரஷ்யாவில நடந்தது என்ன? எளிமையா சொல்லப் போனா ஆதார உற்பத்தி அமைப்புக்கும் மறு உற்பத்தி அமைப்புக்கும் இடையே நடந்த போர் அது. அந்த இரு அமைப்புகளுக்கும் நடுவே இன்னும் பொதுவிதிமுறை உருவாகலை. வரலாறு தன் நியதிகளை உருவாக்கத் தன் பலிகளைக் கொடுக்குது...''

''அப்ப சித்தாந்தமும் தலைவர்களும் எந்தத் தப்பும் செய்யலையா?''

''நம்முடைய புராண மரபில ஒரு சொல் வழக்கு உண்டு, எமன் கொலைப்பழி ஏற்கமாட்டான் அப்டீன்னு. உயிரை எடுக்கிறது எமன். ஆனா அதுக்கு ஒரு தேங்காயாவது மண்டைல விழுந்தாகணும். ஸ்டாலினும் ட்சியும் சித்தாந்தமும் தங்களையறியாமலேயே அந்த வரலாற்று மோதலில் வரலாற்று சக்திகளோட கருவிகளா ஆனாங்க. ஸ்டாலின் ஒரு சக்தியோட ஆயுதம்னா புகாரின் இன்னொரு சக்தியோட ஆயுதம். ஆதார உற்பத்தி மைப்பைத் தோற்கடிச்சு கடைசி ரத்தத்தையும் குடிச்சது மறு உற்பத்தி மைப்பு. அதன்பின் உணவு இல்லாம பிறகு பட்டினியில செத்தது. ரெண்டும் கட்டிப்பிடிச்சு பிணமா கீழே விழுந்திச்சு.''

''அப்ப தப்பு மார்க்ஸியம் பேர்ல இல்லை, இல்லியா?''

''தப்பு சரின்னு பாக்க வேணாம். நடந்தது வரலாறு. நான் லெனினின் நோக்கத்தை மட்டுமல்ல, ஸ்டாலினின் நோக்கத்தைக்கூட இப்ப றுக்கலை. அவங்க ஒரு சித்தாந்தத்துக்குள்ள இருந்தாங்க. அந்த சித்தாந்தத்தில இருந்த அடிப்படைக் கோளாறு அவங்க வழியா சில ளைவுகளை உண்டு பண்ணிச்சு, அவ்வளவுதான். அந்தக் கோளாற இப்ப நாம சரி பண்ண முடியும். இப்ப நாம செய்ய வேண்டியது அதுதான்.''

''அப்ப இப்ப நாம நம்பற சித்தாந்தத்தோட அழிவுசக்தியை எப்பிடிக் ண்டுபிடிக்கிறது? நம்மையறியாமலே நாமளும் பேரழிவுகளுக்குக் காரணம் ாயிட்டோம்னா?''

''ஒண்ணும் செய்ய முடியாது. எல்லா சித்தாந்தங்களும் மனுஷனுடைய ல்லைக்குட்பட்ட ஞானத்தில இருந்தே பிறந்து வருது. மார்க்ஸா இருந்தாலும்கூட மனித சிந்தனை மிகமிக பலவீனமானதுதான். வரலாற்றின் ரு துளியை மட்டும்தான் அதால பார்க்க முடியும். அறிய முடியும்.

மறுபக்கம் ஒண்ணு உண்டு. அந்த முனை வரலாற்றுக்கு உள்ளே இருக்கு. அது வழியா வரலாறு இச்சைப்படுது, தன்னை நிகழ்த்திக்குது.''

''இல்லை அய்யா'' என்று பெருங்குரலில் கூறியபடி அருணாசலம் எழுந்தான். ''சித்தாந்தம்கிறது வரலாறு நோக்கி மனித மனம் விரியறதனால பிறக்கிறது இல்லை. தன்னகங்காரம் நோக்கி சுருங்கிறதனால பிறக்கிறது. எல்லா சித்தாந்தங்களும் ஒரு உண்மையை ஊதிப்பெருக்கி, மறு உண்மையை மிதிச்சு மண்ணுக்குள்ள அழுத்தித்தான் உண்டாக்கப்படுது.'' அருணாசலம் தன் மனம் திறந்து சொற்கள் பீறிடுவதை அறிந்தான். ''என்ன நடக்குதுண்ணு சுற்றிலும் பார்க்கிறான் மனுஷன். வாழ்க்கை பிய்ச்சுட்டு ஓடுது. பரபரன்னு இருக்கு. புரியாம விழிக்கிறான். அப்ப அவனுக்குள்ள சாத்தான் கிசுகிசுக்க ஆரம்பிச்சிடறான். நீ பெரிய மேதை. உன் மூளை இந்த பிரபஞ்சத்டைவிடப் பெரிசு. உனக்குப் புரியாத ஒண்ணு உன்னைச் சுத்தி நடக்கலாமா? நல்லாக் கவனிச்சுப்பாரு. நல்லா ஒவ்வொண்ணா அடுக்கிப் பாரு. தெரிஞ்சிடப் போவுது. என்ன பெரிய வாழ்க்கையும் வரலாறும்! இங்க தானய்யா சித்தாந்தங்கள் பிறக்குது. ஒவ்வொரு மேதையும் தனக்குத் தெரிஞ்சமாதிரி வரலாற்றை அடுக்கிக் காட்டறான். ஒவ்வொண்ணும் ஒவ்வொரு அடுக்கு. அகங்காரம் மேதைமையோடு சேருறப்பதான் சித்தாந்தம் பிறக்குது. அகங்காரம் அறியாமையோட சேருறப்ப அதுமேல நம்பிக்கையும் பிறக்குது.''

கந்தசாமி அமைதியானார்.

''ஒழுக்கமும் தியாகமும் நிறைஞ்ச தன்னலமில்லாத தலைவர்கள் அம்பது வருஷம் நரம்புகள் உடையற மாதிரி பொய் சொல்லியிருக்காங்கய்யா. மானுடகுலம் கண்ட ஆகப்பெரிய பேரழிவை நியாயப் படுத்தி யிருக்காங்க...''

''இப்படிப் பின்னால திரும்பிப் பார்த்து குழம்பிட்டிருக்கிற காலமில்லை இது'' என்றார் கந்தசாமி. ''இன்னைக்கு சுரண்டல் பிரம்மாண்ட வல்லமையா மாறியிருக்கு. அதுகிட்ட சாட்டையும் துப்பாக்கியும் இல்லை. அணுகுண்டும் கம்ப்யூட்டரும் இருக்கு. நம்மை ஏகாதிபத்தியம் அழிச்சிட்டிருக்கு. நம்ம வளங்கள் அழியுது. நம்ம உடல்கள் கெடுது. நம்ம கலாச்சாரம் சீரழியுது. ஏகாதிபத்தியம் இன்னைக்கு நம்மை பயமுறுத்தலை. நம்மை அது மனோவசியம் பண்ணுது. நாம அதை விரும்பி வரவேற்றுத் தலைமேலே தூக்கி வச்சிட்டிருக்கோம். நீங்களும் நானும் சிந்திக்கிறதிலகூட ஏகாதிபத்திய விஷம் கலந்திருக்கு.''

அவர் பேசப்பேச அருணாசலம் தன் நம்பிக்கையை மீண்டும் பெற்றான். அவர் அளித்தது பிரம்மாண்டமான ஒரு புதைமணலின் சித்திரம். ஆனால் அது அவனில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியது. அப்புதைமணலை அடையாளம் கண்டவனாகவும், அதிலிருந்து தப்பும் வழி தெரிந்தவனாகவும் தன்னை உணர்ந்தான்.

''இந்தச் சூழ்நிலையில உலகம் முழுக்க சுரண்டப்படற மக்களுக்கு மார்க்ஸிசம்தான் ஒரே ஆயுதமா இருக்கு. ஒருவன் தனக்குள்ளயும் தன்

சமூகத்திலயும் செயல்படற ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் கருத்தியலை மார்க்ஸியம் வழியாத்தான் அடையாளம் காண முடியும். மார்க்ஸியம் மட்டும்தான் எதுத்துப் போராடறதுக்கான இலக்கையும், வழிமுறையையும் குடுக்கிற ஒரே சித்தாந்தம். சுரண்டல் உலகளாவியது. அதனால அதுக்கு எதிரான போராட்டமும் உலகளாவிய ஒண்ணுதான். அந்தப் போராட்டத்துக்கு அவசியமான அடித்தளம் ஒரு உலகளாவிய பெருங்கதையாடல்தான். இது உண்மை. மார்க்ஸிசத்தில் குறைகள் இருக்கலாம். அந்தக் குறைகளுக்காக நாம அதை நிராகரிச்சா பிறகு என்ன மிஞ்சும்? போராடத் தெரியாத மக்களா, அடிமைச் சவங்களா மண்மேல வாழறதா? மார்க்ஸிசத்தைவிட தீவிரமான ஒரு போராட்ட ஆயுதம் கிடைக்கிறதுவரை மார்க்ஸிசத்தை உலகம் கைவிட முடியாது. ஏன்னா மார்க்ஸிசம் ஒரு எதிர்ப்புச் சக்தி. உடம்புக்கு நோய் எதிர்ப்பு சக்தி எப்படியோ அப்பிடி. எங்க அந்த சக்தி பலவீனமா இருக்கோ அந்தப் பகுதி உடனே அழுக ஆரம்பிச்சிடும். அழுக வைக்கிற கிருமி எல்லா இடத்திலயும் நிறைஞ்சிருக்கு.''

அருணாசலம் தலையாட்டினான்.

''இன்னைக்கு அறிவுஜீவிகளுக்குப் பெரிய பணி காத்திட்டிருக்கு. வரலாறு பெரிய சவாலை நமக்கு விடுக்குது. இன்னைக்கு அறிவுதான் பெரிய ஆயுதம்னு நிரூபணமாயிருக்கு. அந்த ஆயுதத்தை வச்சு நாம என்ன செய்தோம்னு நம்ம சந்ததி கேட்கும். நம்ம அகங்காரத்தை சமனப் படுத்திக்கிறதுக்கும், சொந்த திருப்திக்காக சதுரங்கம் விளையாடறதுக்கும் அதைப் பயன்படுத்தினோம்னா நம்ம குழந்தைகளுக்கு மிகப் பெரிய துரோகம் செய்றதாத்தான் அர்த்தம்.''

அருணாசலம் பெருமூச்சுடன் ''ஆமாம் தோழர்'' என்றான்.

''நீங்க புரிஞ்சுகிட்டதில எனக்கு ரொம்ப சந்தோஷம் தோழர். அறிவைக் கூர்மையா வச்சுகிடுங்க. உணர்ச்சிகள் அதை மழுங்கடிக்க விடாதீங்க. அறிவுதான் பலம்'' என்றார் கந்தசாமி.

அருணாசலம் காற்றில் எம்பித் தத்தளித்தபடி இருந்த தன் பிரக்ஞைமீது ஓர் எடைக்கல் வைக்கப்பட்டதை உணர்ந்தான். பிரக்ஞையின் ஓரம் துடிதுடித்தபடியேதான் இருந்தது. ஆயினும் இனி பறந்தலைதல் இல்லை. அது நிம்மதியைத் தந்தது. அவன் விடை பெற்றுக்கொண்டான்.

♦

4

தெருவில் இறங்கியதும் அருணாசலம் நீண்ட நாட்களுக்குப்பிறகு தனிமையின் இனிமையை அறிந்தான். பக்கத்து டீக்கடையில் ஒரு டீ சாப்பிட்டான். டீ சுவையாக இருந்தது. அந்தி மங்கலில் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த சாலை புத்தம்புதிதாக இருந்தது. உயிர்த் துடிப்பு அதில் பரவியிருந்தது. தன்னை ஒவ்வொரு கணமும் அழுத்தும் ஜடத்தின் பாரத்துக்கு எதிராக உயிர்கொள்ளும் துடிப்பு அது. அந்தக் கூட்டத்தில் கரைந்தபடி நடக்க வேண்டும் போலிருந்தது. இனி இம்சைகள் இல்லை. எத்தனை பைத்தியக்காரத்தன மானகற்பனைகள், உணர்வெழுச்சிகள். வியப்பாக இருந்தது. அதையெல்லாம் எண்ணியது அவன்தானா? அவன் அவனேயறியாத பற்பல ஆளுமை களின் தொகுப்பா? மனதை ஒரு சதுரங்கப் பலகையாக ஆக்கியிருந்த அருணாசலத்தின் ஆழத்திலிருந்தா அந்தப் புயல் கிளம்பியது! அவன் படித்த நூல்கள், தெளிந்த சித்தாந்தங்கள், சிந்தனைத்திறன் எல்லாம் மேற்பரப்பில்தானா? ஆனால் இப்போது எல்லாம் கட்டுக்குள் வந்துவிட்டது. தன் ஆழம் எவ்வளவு என்பதை அவன் புரிந்து கொண்டுவிட்டான். சித்தாந்தஞானம் மூலம் அதை அளந்தும் விட்டான். இனி அது அவனைப் பயமுறுத்தாது. அதைத் தாண்டிவிட்டான். அந்தப்புயல் கடந்து வெகுதூரம் சென்றுவிட்டது.

பூக்கடைமுன் நின்றான். நாகம்மை நினைவு வந்தது. பாவம் இந்த இரண்டு மாதங்களில் எத்தனை மனவேதனைப்பட்டிருப்பாள். எவ் வளவு பிரார்த்தனைகள்! எவ்வளவு வேண்டு தல்கள்! அவள்மீது தன் சுமையை உரிமையுடன் சுமத்த அவன் எப்போதும் தயங்கியதில்லை. உள்ளூர அவளை எவ்வளவு பொருட்படுத்தி யிருந்தாலும் நடைமுறையில் அலட்சியம் தான் செய்திருக்கிறான். எல்லாக் கணவர்களையும் போலத்தான் அவனும். எல்லாக் கணவர்களுக்கும் உள்ளூர மனைவிமீது பிரியமும் அச்சமும்தான். அதனால்தான் மனைவியை அலட்சியம் செய்யும் போது போலியானதோர் தைரியமும் ஆண்மை யுணர்வும் ஏற்படுகிறது. அவன் அவளைப் பொருட் படுத்துமளவு சாவகாசத்துட ன் இருக்கவில்லை. தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தான்.

குழந்தைமீது அவனுள் ஊறும் பிரியம் எவ்வளவு என அவன் மட்டுமே அறிவான். தனிமையின் தருணங்களில் கௌரியின் குழந்தைமுகம் நினைவு வருகையில் அப்படியே கசிந்து பரவிவிடுகிறது சித்தம். ஆனால் நடைமுறையில் அதை எடுத்துக் கொஞ்சக்கூட நேரமில்லை. வீடு திரும்பியதும் பாப்பாவை எடுத்து முத்தமிட வேண்டும். கொஞ்சவேண்டும். நாகம்மையை அருகே அமர வைத்து தன்னுள் பொங்கும் அன்பை வெளியிட வேண்டும். எப்படி என்று எண்ணியபோது அருணாசலம் புன்னகைத்துக் கொண்டான். அவளிடம் அந்தரங்கமாக இருக்கும் தருணங்களில் பேச்சு அவனை அடித்துக்கொண்டு போகும். பேச்சை நிறுத்தவே முடிவதில்லை.

பூவுடனும் இனிப்புடனும் அருணாசலம் வீடு திரும்பியபோது நாகம்மை வாசற்படியில் அமர்ந்திருந்தாள். அவனைக் கண்டதும் எழுந்து வேகமாக ஓடிவந்து ''எங்க போனிய?' என்றாள்.

''ஒரு மாநாடு இருந்தது'' என்றான் அருணாசலம் .

''சொல்லிட்டு போகலாமில்ல.''

''பாப்பா எங்க?''

''தூங்குது.''

''இனிப்பு வாங்கிட்டு வந்தேன், பாப்பாக்கு.''

அவள் முகத்தின் பதற்றம் சற்று தணிந்தது ''குடுங்க, காலைல குடுப்பம்'' என்றாள். பூவை அவளுக்குக் கொடுத்தான். இரு கைகளையும் தூக்கி அதைச் சூடும்போது அவள் கண்களில் பரவிய பிரகாசத்தை மகிழ்வுடன் உற்றுப் பார்த்தான்.

''என்ன பார்வை?'' என்றாள் சிணுங்கலாக.

''ஏன் பார்க்கப்பிடாதா?''

''பாத்துதான் கிடக்கே...''

அவள் அவளைப் பிடிக்க கை நீட்டினான். அவள் லாகவமாக விலகியபடி ''சாப்டறியளா?'' என்றாள்.

''எடுத்துவை.''

அவள் உள்ளே போனதும் அவன் பாயில் படுத்திருந்த கௌரியைப் பார்த்தபடி சட்டையைக் கழட்டினான். வியர்வைநெடி அடித்தது. மெல்ல அமர்ந்து கௌரியின் குண்டுக் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான். பிஞ்சுக் கைகளைக் குவித்து சுருண்டு தூங்கிக்கொண்டிருந்தது. பகல் விழிப்பில் முழுக்க ஆச்சரியத்தால் மேலேறியிருக்கும் மென்மையான புருவங்கள் தூங்கிய பிறகும் அப்படியே தொடர்ந்தன. சிறிய சிவந்த நாசிகளின் இணைப்பில் எச்சிலின் சிறு குமிழ் இருந்தது. சற்று தட்டையான குழந்தை மூக்கு. சுருள் முடிகள் ஒட்டிய நெற்றி. குழந்தை! எவ்வளவு அழகான வார்த்தை. அதைச் சொல்லச் சொல்ல நாக்கு நெகிழ்வதுபோல.

கௌரி ''அது மாணாம்'' என்றபடி புரண்டு படுத்தாள். தூக்கத்தில் எதை மறுக்கிறாள் என்று புரியவில்லை. அவள் கால்கீழே சூடாக சிறுநீர் பரவியது. அவன் அவளை மெல்லத் தூக்கி விலக்கிப் போட்டான். ''மூஞ்சு பாக்க'' என்று அர்த்தமின்றி ஏதோ சொன்னாள்.

நாகம்மையின் காலடியோசை கேட்டது. மெல்ல வந்து தாடையை அசைத்து ''என்ன?'' என்று கேட்டாள்.

''இங்க வா.''

''சாதம் எடுத்து வச்சிருக்கு.''

''வர்டின்னா.''

வந்து அமர்ந்தாள். மேற்பாதங்களில் மஞ்சள் பூசியிருந்தாள். ஈரத்தால் வெடிப்புகள் பரவிய உள்ளங்கால். பளபளக்கும் நகங்கள். நாகம்மையின் உடம்பில் எப்போதும் ஒரு குளுமையைக் கற்பனை செய்யமுடிகிறது.

''என்ன?'' என்றாள் அவள்.

''பாப்பாவைப் பார்த்தேன்.''

''தூங்கிறப்ப பார்க்கப்பிடாது.''

''பாத்தா என்ன?''

''இப்பிடியெல்லாம் கேட்டா பதில் சொல்றது கஷ்டம். பார்க்கப்பிடாது. பெரியவங்க சொல்லியிருக்காங்க.''

''எதுக்காகன்னு தெரியாம எப்படி நம்பறது?''

''பெரியவங்க நம்மைவிட நிறைய குழந்தைகளைப் பெத்து வளத்தவங்க. எல்லாத்துக்கும் காரணம் சொல்லணும்னு இல்லை.''

''எதை அவங்க கண்டுபிடிச்சாங்கன்னு சொல்லலாம் இல்லியா?''

நாகம்மை புன்னகையுடன் ''அப்படியெல்லாம் பேத்துப்பேத்து சொல்றவங்க அதையெல்லாம் கண்டுபிடிக்க முடியாதோ என்னமோ'' என்றாள்.

அருணாசலம் சற்று அதிர்ந்தான். புன்னகையுடன் ''ஆமா, நிஜந்தான்'' என்றான்.

''பாப்பாவுக்கு ரொம்ப மனக்குறை.''

''என்னவாம்?''

''அப்பா முத்தமே குடுக்கிறதில்லை. ஆனந்தியோட அப்பா தினோமும் முத்தம் குடுக்கிறார்னு சொல்லுவா.''

அருணாசலம் கண்ணீரின் விளிம்புவரை மனம் நெகிழ்ந்தான். பேச முடியாது மார்பு அடைத்தது. ''நான் ரொம்பக் கண்மூடித்தனமா இருந்துட்டேன்.''

''அதெல்லாம் இல்லை.''

''ஒப்புக்குச் சொல்லாதே...''

''இல்லிங்க... நீங்க எவ்வளவு அன்பா இருக்கிறீங்க...''

''குடிக்கலை... சூதாடலை... இல்லியா?''

''உளறாதீங்க.''

''இதுவும் குடிமாதிரிதான். சூதாட்டம் மாதிரித்தான்...''

நாகம்மை குழந்தையைப் போர்த்திவிட்டாள். அவள் கன்னத்தின் பூனை மயிர் மின்னியது. கழுத்து மடிப்பில் வியர்வையின் வழவழப்பு.

அருணாசலம் அவள் பாதங்களில் கையை வைத்தான். ''உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன் நாகம்'' அதற்குமேல் சொல்வத் தெரிய வில்லை.

நாகம்மை உதட்டைக் கடித்தபடி வேறு எங்கோ பார்த்தாள். கண்களில் நீர் முட்டியது. அவன் அவள் தோளைத் தொட்டான் அப்படியே சரிந்து அவன் மடிமீது விழுந்து குலுங்கி அழ ஆரம்பித்தாள். அவள் தலைமயிரை, புறங்கழுத்தை, முதுகை மெல்லத் தடவினான்.

அழுது முடித்து புத்துணர்ச்சியுடன் நாகம்மை எழுந்தாள். ''சாப்பிட வாங்க'' என்றாள்.

எழுந்து அவள் தோளைப்பற்றியபடி நடந்தான். அவள் நடையில் துள்ளல் இருந்தது. முகம் களைபெற்றிருந்தது. மஞ்சள் பூசப்பட்ட வட்ட முகம். பெரிய கண்கள். எவ்வளவு மங்கலமான தோற்றம். ஒவ்வொரு அசைவிலும் சகஜமான நளினம். அவளை ரசித்துப்பார்த்தே வெகு நாளாயிற்று. திருமணமான புதிதில் அவளுடைய மறைக்கப்பட்ட உறுப்புகளின் கிளர்ச்சியும், உடல் தோற்றத்தின் குறைபாடுகள் என அவன் எண்ணியவற்றின் மனச்சுளிப்பும் ஒரே சமயம் அவனில் இருந்தது. பிறகு அந்தரங்க உறுப்புகள் அவற்றின் மர்மங்களை இழந்தன. தோற்றக்குறைகள் தங்கள் துருத்தலை இழந்தன. அவள் உடல் அவள் ஆளுமையாக ஆயிற்று. அவள் உடலைப் பார்க்கும்போது அவளையும், அவளை எண்ணும்போது அவள் உடலையும் மனம் கற்பனை செய்துகொண்டது. அழகாக இருக்கிறாளே என்று அவளைப்பற்றி அவன் எண்ணிக்கொண்ட சந்தர்ப்பங்கள் பல இருந்தன. முகத்தில் செவ்வொளி விழ விளக்கைக் கவிந்து ஏற்றும்போது, கழுவிய பாத்திரத்துடன் சமையலறைக்கு ஓடும்போது, சலித்துக் கொண்டபடி எதையாவது தேடும்போது. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நடிகை சரிதா அழகாக இல்லை என்று ஒரு தோழர் சொன்னபோது அவன் வியப்புடன் ஊடே புகுந்து நடிகைகளிலேயே அவள்தான் தன் பார்வைக்கு அழகாகப்படுகிறாள் என்றான். ஏன் என்று பிறர் கேட்டபோது அவனால் பதில் கூற முடியவில்லை. சற்று யோசித்தபிறகு அவள் மட்டும்தான் எப்படியிருந்தாலும், எது செய்தாலும் பெண் மாதிரி இருக்கிறாள் என்றான். எல்லோரும் சிரித்தார்கள். முதல்முறையாக

அப்போதுதான் நாகம்மையின் தோற்றம் தன்னுள் எத்தனை ஆழமாக ஊறிப்போயிருக்கிறது என்று அறிந்தான். இவள் சரிதா போலவா இருக்கிறாள்? இவள் அதுபோல குண்டு இல்லை... ஆனால்...

''என்ன நினைப்பு? மறுபடியும் ஆரம்பிச்சாச்சா?''

''இப்ப உன்னைப்பத்தித்தான் நினைச்சேன்.''

''சும்மா.''

''நிஜம்தான். என் மனசில பொம்பிளை அழகுன்னா உன் அழகுதான் இருக்கு.''

''அது வேண்டாம். நான் அழகு இல்லை. அது எனக்குத் தெரியும்.''

''நிஜம்மாவா அப்பிடி நினைக்கிறே? அசடு.''

''நிஜம்மாவே அழகா?'' என்றாள் முகத்தை ஏந்தியபடி, குழந்தைபோல. அவன் அவளை இறுகத் தழுவிக்கொண்டான். மாறிமாறி உதட்டிலும் கன்னங்களிலும் கழுத்திலும் தோள்களிலும் முத்தமிட்டான். அவள் உடல் சற்று இறுக்கமாக முரண்டியது. பிறகு நெகிழ்ந்து அவன் உடலில் பரவி ஒட்டிக் கொண்டது.

பிறகு அவள் சற்றுத் திமிறி ''விடுங்க'' என்றாள். ''சாதம் ஆறிட்டிருக்கு.''

அவன் சாப்பிட அமர்ந்தான். ''நீயும் சாப்பிடு'' என்றான். அவளும் தட்டு போட்டுக் கொண்டாள்.

''சமைக்கவேயில்லை, குழம்பு மட்டும்தான் இருக்கு. காலைல கிளம்பிப் போன உங்களைப் பத்தி தகவலே இல்லை. மனசே சரியில்லை.''

''பரவாயில்லை, குழம்பே நல்ல மணமா இருக்கு.''

''குழம்பு மணமெல்லாம் தெரியுமா மூக்குக்கு?''

அருணாசலம் சிரித்தான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது நாகம்மை பக்கத்துவீட்டு சமாச்சாரங்கள் சிலவற்றைச் சொன்னாள். பேச்சில் ஈடுபடுகையில் அவள் குரலில் வேகமான சரளம் ஒன்று வரும். அது அவனை அப்படியே ஆட்கொண்டது.

''அம்பது பவுன், ஒரு லட்சம் ரூவா எண்ணி வாங்கிட்டு பெண்ணைக் கட்டிக்கிட்டாங்க. மாப்பிள்ளைக்கு என்ன தொழிலுண்ணு கேட்டா பைனான்ஸ்ண்ணு சொல்லியிருக்காங்க. கடையும் பளபளப்பா இருந்திருக்கு. கல்லியாணம் கழிஞ்ச பிறகு கேட்டா இப்பம்தானே பைசா கைக்கு வந்திருக்கு, இனிமேதான் ஃபைனான்ஸுக்கு வெளியே விடணும்னு சொல்லியிருக்காவ. கிழவி இங்க வந்து மூக்க சிந்தினா. நாகம், இங்கிலீஸ நம்பி ஏமாந்திட்டோமிட்டி. இங்கிலீஸ் வார்த்தையச் சொல்லி ஏமாத்திப்பிட்டாவடீன்னு ஒரே அழுகை. என்ன வார்த்தை மாமீன்னு கேட்டேன். பைனாஞ்சின்னு சொல்றா. ஒரே சிரிப்பு. பெண்ணுக்கு பயலுக்க

மீசையப் பாத்தது முதல் ஒரு எளக்கம். நான் இவரத்தான் கெட்டுவேள், இவருதான் என் சொப்பனத்தில் வெள்ளைக் குதிரைல வந்ததுண்ணு ஒரே மட்டா நின்னாளாம். மயிருக்கு ஆசப்பட்டு போனியே, உன் வாழ்க்கை மயிராப் போச்சேன்னு கிழவி பதம் எடுத்துப் பாடினா. போட்டும் மாமி, இந்த மட்டுக்கும் பயலுக்கு மீசையாவது இருக்கே. சம்முகவடிவு வீட்டுக் காரனுக்கு அதுவும் பொற்றயில புல்லுமுளைச்சது மாதிரில்லா இருக்குண்ணு சொன்னேன். சிரிச்சிட்டா...''

நாகம்மைக்கு கல்யாணம், மறுவீடு, குழந்தை பிறப்பு முதலியவைதான் எப்போதும் செய்திகள். இடைவிடாது ஊரில் கல்யாணங்களும் குழந்தை பிறப்புகளும் நடைபெறுகின்றன போலும். சாப்பிட்டு முடித்ததும் பாத்திரங் களைப் புறவாசலுக்குக் கொண்டுபோய் போட்டாள். ''நீங்க போய் படியுங்க, இப்ப வந்திருதேன்'' என்றாள்.

''இல்ல நாகம், உன் பக்கத்திலயே இருக்கேன்.''

''அய்யடா, இது எப்ப சவலைப்பிள்ளை ஆச்சு?''

அவன் ஒரு பாத்திரத்தை எடுக்கப் போனான்.

''வைங்க அங்க. நல்ல கூத்து. வீட்டுக்காரரு பத்துப் பாத்திரம் தேய்க்கிறதா?''

''ஏன் தேச்சா என்ன?''

''தேய்க்கப்பிடாது. தேச்சா எனக்குத்தான் தோஷம்.''

அருணாசலம் அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். பிரகாசமான முகத்துடன் அவள் பேசியபடியே இருந்தாள்.

''திருநெல்வேலிக்குப் போயி சம்பாச்சோறுண்ணு கேட்டா நடக்குமா? மல்லிப்பூ சாதம்ணு சொல்லிட்டு களிமாதிரி டொப்பியரிசிய வடிச்சுப் போட்டிருக்காக... இவரு திருவனந்தபுரம் மூத்தபிள்ளை. தட்டில சோறு போடுறப்ப தகரக் கூரைல மழை பெய்ற மாதிரி சத்தம் கேட்கணும். கோபிச்சிட்டு வந்திட்டார். கேக்கணுமா கதை? ஒரே சண்டை. இவோ ஒண்ணு சொல்ல, அவோ ஒண்ணு சொல்ல நடுவில பூந்து அந்த வீட்டு மனுசரு ஒண்ணு சொல்லியிருக்கான் பாருங்க, சிரிப்புண்ணா அப்பிடிச் சிரிப்பு. கேரளாப்பக்கம் சாதமும் குழம்பும் எம்.எஸ்.விஸ்வநாதன் பாட்டில பாட்டும் மியூசிக்கும் இருக்கிறாப்பில தனித்தனியா அது பாட்டுக்கு கெடக்குமாம். சிரிச்சிட்டாங்க சிரிச்சிட்டாங்கண்ணு இவோ கெடந்து துள்ளுதாக. மறுவீடு போன சீர் இப்படியாச்சா...''

எவ்வளவு மாறுபட்ட ஓர் உலகம் என்ற எண்ணம் அருணாசலத்திற்கு ஏற்பட்டது. எவ்வளவு சுவாரஸியங்கள், கோபதாபங்கள். அதை ரசனைமிக்க, ஆழமில்லாத, அற்ப உலகம் என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் எவ்வளவு அபத்தம்! எல்லாம் ஒரே உலகம்தான். ஒரே மனிதர்கள்தான்.

பாய் போட்டு படுத்துக்கொண்டு அவன் யோசித்துக்கொண்டிருந்தான்.

அவளுடைய உலகத்திற்கும் தன் உலகத்திற்கும் இடையே என்ன வித்தியாசம்? தன் உலகில் விவாதமும் சண்டையும் அதிகம். சித்தாந்தம் உண்டு. அவள் உலகில் சகஜமான புத்திசாலித்தனமும் உணர்வுகளும் மட்டும்தான். சித்தாந்தம் மட்டும்தான் வித்தியாசம். ஆனால் அந்த சித்தாந்தம் உலகை அறிந்துகொள்ளவும், மனிதர்களை மதிப்பிடவும், உணர்வுகளை வகைப்படுத்தவும் இம்மியும் பயன் இல்லாதது. அது மாறிமாறி ஓட்டைவிழும் படகு. பாய்ந்து பாய்ந்து ஓட்டைகளை அடைத்தபடியே இருக்க வேண்டும். கையில் கிடைத்த அனைத்தையும் சுருட்டி அடைக்க வேண்டும். கடைசிப் பொருளையும் எடுத்துச் செருக வேண்டியிருக்கும் சில சமயம். படகுக்கு கீழே கடல். அலையடிக்கும் முடிவற்ற கடல். எல்லா சித்தாந்தமும் இதேபோல ஓட்டைப்படகுகள்தான். ஏன் இந்தப் படகுகள்? உதறிவிட்டுக் கடலில் குதித்தால் என்ன? கடல் விழுங்கிவிடும். அதன் ஆழம், அதன் விரிவு. அது நம் சுயத்தை இல்லாமலாக்கிவிடும். அதுதான் காரணம். நமது சுயம். அதைத் தக்கவைத்துக் கொள்ளவே இந்தப் படகு.

தலையணையுறை மாட்டியபடி நாகம்மை ''என்ன யோசனை?'' எனறாள்.

''ஒண்ணுமில்லை'' என்றான். ''இன்னைக்கு கந்தசாமின்னு ஒருத்தர்கூடப் பேசினேன்.''

''கண்ணில்லாதவர் தானே?''

''எப்பிடி தெரியும்?''

''ஒரு தடவை சொல்லியிருக்கீங்க.''

''அவருடைய பேச்சு எனக்கு ஒரு தெளிவைக் குடுக்கிறது மாதிரி இருந்தது. வரலாறுன்ற புரிஞ்சுக்க முடியாத பெரும் பிரவாகத்தில நாம அதிகபட்சம் செய்யக் கூடியது என்னன்னு சுருக்கமாட்டு சொன்னார்.''

''மூணு மணி நேரம் பேசினாரா?''

''நீ கிண்டல் பண்றே.''

'இல்லை. எதுக்கு இம்பிடு வார்த்தைகளை வாரி இறைக்கிறீங்க? நீங்களும் சரி, அவுகளும் சரி. மௌனமா இருக்கிறதுதான் உத்தமம்னு ஆயிரம் பக்கத்துக்கு புஸ்தகம் எழுதுவீக. எனக்கு ஒண்ணும் புரியலை.''

''தெளிவு படுத்திக்கணும்ல?''

''பேசிப்பேசி ஒண்ணையும் தெளிவுபடுத்திக்க முடியாது. தெளிவு இருக்க இடத்தில பேச்சு இருக்காது.''

எவ்வளவு பளீரென்று சொல்கிறாள் என்று வியப்பு ஏற்பட்டது அவனுக்கு.

''எல்லாம் தவளைக் கூச்சல் மாதிரி. அத்தை சொல்வா, தவளை நான் இருக்கிறேங்கிறதத்தான் க்றென், க்றென்னு வா கிழிய கத்திட்டிருக்குன்னு. அதுமாதிரி.''

''ஆனா...''

''போதும் பேசினது'' அவள் அவனை அள்ளி அணைத்தாள். ''நியாயத்தில விட்டுக்குடுக்காம இருக்கிறதுக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கு? விட்டுக்குடுக்க ஆரம்பிக்கிறப்பதான் பேச்சு தொடங்குது. நிறையப் பேசறவுங்க யாரும் பிறத்தியாருக்காகப் பேசல்லை. தனக்குத்தானேதான் பேசிக்கிறாங்க.''

''அப்டீன்றியா?'' என்றான் அருணாசலம் மந்தமாக.

''ஆமான்றேன்'' என்று சிரித்தபடி அவனை அவள் இழுத்துக் கொண்டாள். அவள் உடம்பின் மென்மை, அதன் வெம்மை, அவளுடைய மெல்லிய சிணுங்கல். அருணாசலம் தன்னை சில கணங்களுக்கேனும் அவளுக்குப் பூரணமாகச் சமர்ப்பித்தான்.

பிறகு விழித்துக் கிடந்தபடி தன் எண்ணங்கள் களைத்த புரவிகள்போல விரிந்த வெளியில் மெல்ல நடந்து பரவுவதை உணர்ந்து, பின்பு புகைமூட்டம் போலப் பரவும் தூக்கத்தை உணர்ந்து – விழித்துக்கொண்டபோது நள்ளிரவு தாண்டியிருந்தது. எதற்கு விழித்துக் கொண்டான்? யார் எழுப்பியது? மனம் ஏன் படபடவென்று துடிக்கிறது? ஏன் அறை அப்படி விறைத்து நிற்கிறது? ஏன்? அறைமூலையில் அவர் நின்றிருந்தார் தெரிந்த மனிதர். மிக நெருக்கமானவர். யார்? புகை வடிவம் போல. அது யார்?

அந்த முகம் சோர்ந்து, களைத்து மங்கலடைந்திருந்தது. பழைய காலண்டர் ஓவியங்களில் எப்போதோ பார்த்திருந்த நரகவாசிகளின் கண்களில் தெரிந்த பதைப்பும் துயரமும். அவன் எழுந்து ஒரு அடி எடுத்து வைத்து ஏதோ கேட்க முற்பட்டான். பிறகு மேலிட வயிறு இறுகி அப்படியே நின்றான். கைகள் நடுங்குவதை சற்றுக் கழிந்து உணர்ந்தான். மெல்லிய குரல் வெகுதொலைவிலிருந்து கேட்பது போலிருந்தது. ''அருணாசலம், பயந்துராதே அருணாசலம்'' நீங் என்று வெளியே, அல்லது தன் தலைக்குள்ளேயே, ஏதோ கிழிபட்டு விரையும் ஒலி, பொசுங்கும் மயிர் எரியும் பிறகு தடதடக் தடதடக் என்று தலை நரம்புகள் துடிக்கும் ஒலி, பேரொலி.

10

தலைகீழ் வெளியில்

ПРОЛЕТАР

1

தூக்கத்திலிருந்து விழித்தபோது பூமியைப் பிளந்து வெளியேவந்து சூரிய ஒளியில் கண் விழித்தது போலிருந்தது. ஆஸ்பத்திரியை காலையில் ஃபினாயில் விட்டுக் கழுவியிருந்தனர். அதன் வாடையும், பக்கத்து கக்கூஸின் வாடையும் கலந்து எழுந்தன. தொலைவில் வெளிநோயாளிப் பிரிவின் ஓசைகளும், அதற்கு அப்பால் தேசிய நெடுஞ் சாலையின் இரைச்சலும் கேட்டன. அந்த ஓசைகள் ஒரு வகையில் ஆறுதலும், திருப்தியும் அளித்தன. உயிர்த்துடிப்பும், திட்டவட்டமான அர்த்தமும் உள்ள இயக்கம் ஒன்று மிக அருகே நடந்து கொண்டிருக்கிறது. அதை அவன் சில எட்டுகள் எடுத்து வைத்து அடைந்து, கலந்துவிட முடியும். அல்லது அங்கிருந்து ஒருவர் வந்து அவனைப் பார்க்க முடியும். ஒன்றும் பயமில்லை.

வார்டில் அனைவரும் தூங்கிக்கொண்டிருந் தார்கள். ஒரு சிலர் தூக்கத்திலேயே மெல்லிய குரலில் பேசியபடி இருந்தார்கள். சிலர் அடிக்கடி உடலை முறுக்கியபடி நெளிந்து அடங்கினர். ஒருவர்கூட இயல்பாகத் தூங்கவில்லை. ஒன்று பிணம்போல – அருணாசலத்திற்கு பகீரிட்டது – தூங்கினர். அல்லது உடலை இடைவெளியின்றி நெளித்தபடி தூங்கினர். அவனுக்குத் திடீரென்று வியப்பு ஏற்பட்டது. அங்குள்ள எவருக்கும் உடம்புக்கு எதும் இல்லை. சொல்லப் போனால் ஆரோக்கியமில்லாத எந்த உடலும் அங்கு இல்லை. அத்தனை பேருக்கும் பிரச்சினை மனம்தான். ஆனால் அவர்களுடைய சமனின்மை உடம்பில் தெரிந்தது. உடம்பு என்பது என்ன? மனதின் மீது போடப்பட்ட சதைப் பொட்டலம் தானா?

அருணாசலம் எழுந்து ''சிஸ்டர்'' என்றான்.

குண்டான நர்ஸ் வந்து ''என்ன?'' என்றாள். அவனை அவள் பார்த்த பார்வையில் மனிதர்களை அடையாளம் காணும் தோரணையே இல்லை என்பது அவனைத் துணுக்குற வைத்தது.

''டாய்லட் போகணும், பல் தேய்க்கணும்.''

''ஓகோ, வாங்க.''

அவளைப் பின்தொடர்ந்தபோது திடமாகக் கால்களை எடுத்துவைத்து நடந்தான். உறுதியான,

சொரசொரப்பான கான்கிரீட் தரை. சுவர்கள் வெண்மையாகவும், திடமாகவும் இருந்தன. சுவர்களைக் கைகளால் தொட்டபடி நடப்பது நிம்மதி தருவதாக இருந்தது. நிலையற்ற, தூலமில்லாத, எதைப்பற்றியும் யோசிப்பதில்லை என்று எண்ணிக்கொண்டான். திட்டவட்டமான வடிவமும், உபயோகமும் கொண்ட பொருட்களைப் பற்றி மட்டும் யோசிக்க வேண்டும். சுவர்கள், கதவுகள், படிகள்... அவற்றின் உபயோகம்தான் அவற்றின் அர்த்தம். உபயோகத்திற்கு ஏற்ப உருவானது அவ்வடிவம். ஒருவேளை அவற்றின் வடிவம் வேறுவிதமான உபயோகத்திற்கும் பொருத்தமானதாக இருந்தால் அவற்றை அப்படி வடிவமைத்தவர்கள் அறியாத வேறுபல அர்த்தங்கள் அவற்றுக்கு உண்டு என்று ஆகிறது. அவற்றை எப்படி அறிய முடியும்? அவை மர்மமான முறையில் முடிவின்றி விரிபவை. கதவைத்தொட நீட்டிய கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான்.

''சிஸ்டர்'' என்றான்.

''ஏன்?''

''நான் என் படுக்கைக்குப் போறேன்.''

''ஏன் இப்ப?''

''இந்த கதவையும் படியையும் பாத்தா பயம்மா இருக்கு ஸிஸ்டர்.''

''நான்தான் கூடவே வாறேன்ல.''

''இல்ல ஸிஸ்டர்'' அருணாசலம் பின் நகர்ந்தான். ''கதவெல்லாம் ரொம்ப மர்மமான விசயங்கள் தெரியுமா? நம்பப்பிடாது.''

''நில்லுங்க, சொன்னாக் கேளுங்க.''

அருணாசலம் திரும்பி, மூச்சிரைக்க ஓடி, தன் படுக்கைக்கு வந்துவிட்டான். படுக்கையில் சப்பணமிட்டு அமர்ந்தபோது, மனம் அமைதி அடைந்தது.

நர்ஸ் பின்னால் வந்து, கோபத்துடன் ''விளையாடுதியா? வா போஹாம...'' என்றாள்.

''கொஞ்சம் கழியட்டு சிஸ்டர். நாகம்மை வரட்டு.''

''அவிய மத்தியான்னம்தான் வருவாவ.''

''பரவால்லை, வரட்டு.''

நர்ஸ் போன பிறகு தனிமையாக உணர்ந்தான். படுக்கை உயிருடன் அசைவது போலிருந்தது. பெருமூச்சுடன் நெளிந்து சோம்பல் முறித்தது அது. அவன் விதிர்விதிர்த்து, எழுந்து நின்று, கூர்ந்து பார்த்தான். இதைக் கூர்ந்து பார்த்துப் புரிந்து கொள்ளவேண்டும் என்று எண்ணிக்கொண்டான். தருக்க ரீதியாகப் புரிந்து கொள்ளவேண்டும். எவ்வளவு அபத்தமான பிரமைகளை மனம் எழுப்பிக்கொள்கிறது! தொட்டுப் பார்த்தான். சதையில்லை,

துணிதான். ஆயினும் ஏறியமரத் தைரியம் வரவில்லை. இது என்ன? கட்டில் மெத்தை. இதை இரண்டு தளங்களில் பிரித்துப் பொருள்கொள்ள முடியும். ஒரு கட்டில் என்பது ஒரு பொருளாதார அலகு. இரண்டாயிரம் ரூபாய் விலை இருக்கும். தேக்குமரம் என்றால் இன்னும் விலை அதிகம். சிற்ப வேலைப்பாடு இருந்தால் இன்னும் அதிக விலை. மரம், தச்சர்கள் ஆகியவை உற்பத்தி சக்திகள். தச்சுவேலை என்பது உற்பத்தி உறவு. கட்டில் என்ற உபயோகமே அதன் மதிப்பு. அதுவே அதன் விலை. அப்படியானால் தேக்குச் சிற்ப வேலைப்பாடுகள்? அவை மேற்கட்டுமானம். முதலிரவுக்கு ஆகிவந்த கட்டில்களைப் பயன்படுத்துவார்கள். பிரசவத்துக்குப் பயன்படுத்தும் கட்டில்களை மரணத்திற்குப் பயன்படுத்த மாட்டார்கள். அதென்ன மரணத்துக்குப் பயன்? கட்டில் ஒரே சமயம் இரு உலகங்களில் இருக்கிறது. சரிதானே தோழர்? இவ்விரு தளங்களிலும் கட்டில் என்பது படுக்கும் பொருட்டு செய்யப்பட்டது என்ற உறுதியான நோக்கம் உள்ளது. இதை யார் உறுதி செய்து கொள்வது? நிற்கட்டும்; கட்டில் என்ற பெயர் எந்த உலகைச் சார்ந்தது? பெயரை மாற்றி கக்கூஸ் என்று சொன்னால் நீ என்னடா செய்வாய்? அருணாசலம் சிரித்தான். ஆம், அது ஒரு பிரச்சினைதான். நடுவே துளைபோட்டு இதை கக்கூஸ் போகப் பயன்படுத்தினால் இது என்ன செய்யும்? அவனுக்குப் பரபரப்பாக இருந்தது. அதன் மர்மங்களில் ஒன்றை அவன் புரிந்து கொண்டுவிட்டான். அதை வெல்ல அவனால் முடியும். கட்டிலில் ஏறியமர்ந்து மலம் கழித்தான். வேட்டியை சரிவரக் கட்டிக் கொண்டு நன்றாக ஏறிமர்ந்து, கட்டிலை உலுக்கினான். ஜடமாக இருந்தது. அது முழுதாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்று உணர்ந்தான். ''அப்படி வா வழிக்கு'' என்று சொல்லிக் கொண்டான்.

சற்றுநேரம் கழிந்து பசியை உணர்ந்தான். பசி ஒரு தவிப்புபோல இருந்தது. அதுவரை தீவிரமான ஏதோ எண்ணங்களில் ஆழ்ந்திருந்ததை அறிந்தான். என்ன எண்ணங்கள்? யோசித்தபோது ஏதேதோ படித்த வரிகள்தான் ஞாபகம் வந்தன. கட்டில் பற்றி வீரபத்ரபிள்ளை எழுதிய குறிப்புகள். கட்டிலின் அர்த்தம் பற்றி. திடீரென்று அந்தத் துர்நாற்றத்தை அறிந்தான். எட்டிப்பார்த்து திடுக்கிட்டான்.

''நர்ஸ்! நர்ஸ்!... ஸிஸ்டர்!''

குண்டு நர்ஸ் ஓடி வந்தாள். வந்ததுமே அவளுக்குத் தெரிந்து விட்டது. ''என்னய்யா வேலை செய்திருக்கே?'' என்றாள்.

''யாரோ தெரியலை ஸிஸ்டர். பரம ஆபாசமா இல்ல இருக்கு'' என்றான் அருணாசலம். ''இதென்ன ஆஸ்பத்திரியா இல்ல...''

நர்ஸ் வெளியே சென்று குரலெழுப்பினாள். இரு உதவியாளர்கள் வந்தனர். ஒருவன் திடகாத்திரமானவன். அருணாசலத்தை நேராக அணுகி ''என்னலே இது?'' என்றான்.

''நான் பாக்கேல்ல, யாரோ தெரியாம வந்து...'' என்று அவன் கூறி முடிப்பதற்குள் அடி விழுந்தது.

''பட்டிப் பயலே, கள்ளமா சொல்லுத?''

''நான் பாக்கேல்ல. பாத்த உடனே கூப்பிட்டு சொன்னேன்...'' அருணாசலம் அந்த அடியால் அதிர்ந்து போனான். அதைவிட அவன் அந்த காரியத்தைச் செய்தான் என அவர்கள் நம்புவது பயங்கரமாக இருந்தது.

''கள்ளமா சொல்லுத?'' மீண்டும் முகம் பொத்தி அடி விழுந்தது. அருணாசலம் ஸ்தம்பித்துவிட்டான்.

''இன்னி ஒருக்கா இப்பிடி ஆனா, தாளி உன்னை சவிட்டிப் பிதுக்கி எடுத்துப் போடுவன் கேட்டியா?''

''நான் இல்ல...''

''வாயமூடுலே தேவ்டியாமோனே.'' மீண்டும் மூர்க்கமான அடி.

அருணாசலம் பீதியுடன் சுவர் ஓரமாக ஒண்டிக் கொண்டான். எதுவும் புரிந்துகொள்ள முடிவதாக இல்லை. எல்லாமே பரம அபத்தமாக இருக்கின்றன. பசி வேறு.

''ஸிஸ்டர் பசிக்குது.'''

''உம்ம பெஞ்சாதி வருவா. வாய மூடிட்டு கிடவே'' என்றான் முரட்டு உதவியாளன். ஒல்லியான ஆள் அறையை சுத்தம் செய்தான். அவர்கள் போன பிறகு அமைதி ஏற்பட்டது. எழுந்து அமர்ந்திருந்த வெளுத்த, ஒல்லியான முகமுள்ள நோயாளி பழுத்த பற்களைக் காட்டி அனுதாபமாகச் சிரித்தான். ''மேலயாக்கும் மூணாவது மாடி. அங்க ஃபேன் இல்ல. பைப்பு உண்டும்.'' அவன் சொன்னான் ''தண்ணி குடிச்சா வீடு ஒழுகுது. வீடு கெட்டினா தண்ணீல போகுதில்லியா அதுமாதிரியாக்கும், கேட்டுதா?'' மீண்டும் அனுதாபத்துடன் சிரித்துவிட்டு அவன் படுத்துக் கொண்டான்.

அருணாசலம் பீதியுடன் நடுங்கியபடி அமர்ந்திருந்தான். இது என்ன உலகம்? எதுவுமே நிச்சயமில்லாமல் மாறிக்கொண்டிருக்கின்றன. இங்கு எப்படி வாழ முடியும்? அதாவது பைத்தியம் என்றால் இதுதான்; எல்லாமே உடனடியாக மாறியபடி இருப்பது. இப்போது அவன் மனதில் நிலைத்த தன்மை பற்றிய ஒரு உருவகம் உள்ளது. எனவேதான் இந்த மாறும்தன்மை பீதியைக் கிளப்புகிறது. அந்தப் பிரக்ஞையும் இல்லாமல் போனால் பிறகு மீள முடியாது. இருட்டில் தொலைந்து போய்விட வேண்டியதுதான். முழுப் பைத்தியமாக தன்னை அவன் கற்பனை செய்து பார்த்தான். பீதியைத் தாங்க முடியவில்லை. அழுத்தத்தில் உடல் வெடித்துவிடும் என்று பட்டது. அலற வேண்டும் போலிருந்தது; எங்காவது ஓடிவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் எது செய்தாலும் அது பைத்தியத்தின் அறிகுறியாகவே கருதப்படும். பற்களை இறுகக் கடித்து, முஷ்டி பிடித்து, தன்னை அடக்கினான். மீண்டும் மெத்தைமீது அமர்ந்துகொண்டான்.

எல்லாம் எதற்காக? ஒன்றுமே இல்லாத விஷயங்களுக்காக. அவன் வயதை வைத்துப் பார்த்தால், அவன் அடைந்த இடம் ஒரு சாதனை. தொழிற்சங்க அமைப்பில் இனி அடுத்த கட்டம் தேசிய அளவில்தான்

இருபது வருடம் தீவிர ஈடுபாட்டுட ன் உழைத்து, பலவற்றை இழந்து, அடைந்தவற்றைத் தொகுத்து, அவன் வந்தடைந்த இடம் அது. ஒரு படியில் நின்றபடி அடுத்தபடியைக் கட்டியெழுப்பி வானத்தில் ஏறுவதுபோல. பிறகு தலைகுப்புறக் குதித்தான். எதற்கு? அதைப்பற்றி யோசிக்க மனம் தயங்குகிறது. எத்தனை தூரம் உந்தினாலும் அத்திசை நோக்கி பிரக்ஞை நகர்வதில்லை. இன்று அதைப்பற்றி விரிவாக யோசித்துவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

வெகுநாளாக எண்ணியிருந்த இலக்கை அவன் அடைந்தான். அதுதான் தொடக்கம். இலக்குகளை அடைந்ததும் வருவது வெறுமை. அதை வெல்ல அபாயகரமான எதையாவது செய்ய விரும்பினான். அல்லது உள்ளூர அவனுக்கு அவன் அடைந்த உலகியல் பதவி ஒரு பொருட்டேயல்ல என்று நிரூபித்துக்கொள்ள விரும்பினான். அவனை ஒரு அசாதாரண ஆளுமையாகக் கற்பனை செய்துகொள்ளும் சுகம் அதில் ஈடுபட்டபோது கிடைத்தது. வரலாற்றினால் பழிவாங்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, செய்நன்றி மறக்கப்பட்ட, ஒரு புனிதன்! புதைந்துபோன ஒரு மகத்தான இருப்பு. கண்டடையப்படுவோம் என்ற நம்பிக்கையின் பலத்தில் செய்யப்பட்ட முயற்சி அது. புகாரின் கண்டடையப்பட்டார். வீரபத்ரபிள்ளை கண்டடையப்பட்டார். ஆனால் வரலாறு விசித்திரமானது. கண்டடையப் படாவிட்டால்? அப்படியே புதைந்து மண்ணில் கிடந்தால்? அது மரணத்தைவிடக் கொடியது. பூரணமான இன்மை. அப்படி ஆகாது என அவனால் உறுதியாக உணர முடிந்தது. மண் ஒரு மனம். மனதின் மேல்மண் உயிர்களடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பது? மண்ணிலிருந்து மறைந்தவை அனைத்தும் அங்குள்ளன. புதைவு என்பது ஒரு சேமிப்பே. ஆழ்மண் வேர்களில் உயிர் நிரப்பும் பிரம்மாண்டம். மனிதனுக்குக் கோயில் சிலைகள் வேண்டும். மனிதர்கள் அழிவார்கள். சிலைகள் அழிவதில்லை. நிரந்தரம் பெறுவதற்கான ஒரு விளையாட்டு அவன் ஆடியது. அந்தச் சூதில் சுவனமாகவே அவன் காய்களைச் சுழற்றினான்.

நிரந்தரத்தன்மை! இப்போது தெரிகிறது எதுவும் நிரந்தரத்தன்மை கொண்டதல்ல. தோண்டியெடுக்கப்பட்ட புகாரின் வேறு ஒருவர்; வீரபத்ரபிள்ளை வேறு ஒருவர். மனிதர்கள் மண்ணை, இறந்தக்காலத்தைத் தோண்டுவதில்லை. நிகழ்காலத்தை, தன்னைச் சுற்றியுள்ள காற்றைத்தான் தோண்டுகிறார்கள். இந்த அவஸ்தைக்கு என்ன ஈடு? போலியான ஒரு நிரந்தரத் தன்மையா? அருணாசலம் தலையை அறைந்து கொண்டான்! அபத்தம்! அபத்தம்! ஒரு போலிக் கற்பனைக்காக நிஜ சித்ரவதையை விலை கொடுத்து வாங்குவதென்றால்? நான் நிரந்தரமில்லை. இந்தக் கட்டில், சுவர்கள் எதுவும் நிரந்தரமில்லை. இந்தத் தரை ஒரு பாய்போல சுருண்டு விடக்கூடும். தரை அசைவது போலத் தோன்றி, ஒருகணம் திடுக்கிட்டு எழுந்துண்டான்.

எத்தனைபேர் விளக்கிச் சொன்னார்கள்! அறிவுரை கூறினார்கள், திட்டிப் பார்த்தார்கள் மன்றாடினார்கள். அவன் உள்மனதில் ஊறிய அகங்காரத்தை அவர்கள் அறியவில்லை. மண்டை கனத்து, அக்கனத்தை

ஏதாவது பாறையை மோதி உடைத்து காலி செய்யத் தவிக்கும் பறவை ஒன்று புராணங்களில் வரும். அவர்களுக்கு அந்த இம்சை புரியாது. அபத்தமான, தற்கொலைத்தனமான, பித்து அது என்று பட்டது அவர்களுக்கு. வீரபத்ரபிள்ளை, புகாரின், ஆசிப் மன்உல்ஸ்டெம் எல்லாரும் அவனைப் போன்றவர்கள்தாமா? புரட்சிக்காகக் களத்தில் மாண்ட அத்தனை பேரும் அப்படித்தானா? ஏன், வரலாறு முழுக்க நம்பிக்கையின் பொருட்டும், இலட்சியங்களின் பொருட்டும் இறந்த அத்தனை பேரும் அவனைப் போன்று மூடர்கள்தாமா? வேறென்ன? தர்மத்துக்காகச் செத்தவர்கள், மார்க்கத்திற்காக செத்தவர்கள், சிலுவைப் போர்களில் செத்தவர்கள், புரட்சிகளில் செத்தவர்கள் அத்தனைபேருக்கும் கடவுள் மேலே ஒரே சொர்க்கத்தைத்தான் உண்டுபண்ணியிருக்கிறார். அவர்களால் கொல்லப் பட்டவர்களுக்கும் அதுதான் இடம். அங்கு கிருஷ்ணனும், நபியும், மார்க்ஸும், ஏசுவும் ஷிப்ட் முறையில் நிர்வாக வேலை செய்கிறார்கள். ஒவ்வொருவனும் அங்கு தன்னால் கொல்லப்பட்டவனை சுமந்து திரிய வேண்டும். மிலேச்சனா, அஞ்ஞானியா, காஃபிரா, எதிர்ப்புரட்சிக்காரனா யாருக்கு எடை அதிகம்? அருணாசலத்திற்குச் சிரிப்பு வந்தது. யோசிக்கும்தோறும் சிரிப்பு வலுத்தது. வாய்விட்டு, உடல் குலுங்க, சிரிக்க ஆரம்பித்தான். அங்கு கீதையும், குர்ஆனும், பைபிளும், மூலதனமும் அண்டாக்களில் வேகவைத்துப் பரிமாறப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் உணவாக மாற்றுத்தரப்புப் புஸ்தகம். 'அய்யா ரொம்ப கசக்குது அய்யா. தொட்டுக்க கொஞ்சம் மூலதனம் தருவியளா?' 'வாய மூடுல, செம்படை நாயே. இதென்ன உங்கப்பன் வீடா? நரகமாக்கும். போட்டதத் தின்னுட்டுப் போவியா?' 'ஐயா வீரசொர்க்கம்னு சொன்னாவளே.' 'ரெண்டும் ஒண்ணுதான்யா. பேசாம தின்னுட்டுப் போறியா இல்லியா?' சிரிப்பு வந்து அருணாசலத்திற்கு புரைக்கேறியது. இருமினான்.

உள்ளிருந்து ஒரு பெண் வந்தாள். கையில் ஒயர் கூடை. முகம் வெயிலில் நடந்து களைத்திருந்தது. எங்கோ தெரிந்த முகம். அருணாசலம் அவளையே கூர்ந்து பார்த்தான். அவனுடைய சிரிப்பைப் பார்த்து அவள் சற்று அரண்டு போயிருப்பது தெரிந்தது. எனவே முகத்தைத் தீவிரமாக வைத்தபடி ''பசிக்குது'' என்றான்.

''எப்பிடிங்க இருக்கீக?'' என்றாள் அவள். கையிலிருந்த ஒயர் கூடையை கட்டில்மீது வைத்தபிறகு, முந்தானையால் தன் முகத்தைத் துடைத்தாள். ''எழுதி

அருணாசலம் அவளை கடுமையாகப் பார்த்து வச்சதயெல்லாம்தான் உம்புருஷன் படிச்சுப் படிச்சு கிழிச்சுப் போட்டானே'' என்றான். அவளை அருணாசலத்தின் வீட்டில் பார்த்த ஞாபகம் வந்தது. அவள் பெயர்கூட நாகம்மையோ நீலம்மையோ வரும். நாகம்மைதான். பிள்ளைமார் வீட்டுக்களையுள்ள பெண். அருணாசலம் அந்தவகையில் கொடுத்து வைத்தவன்தான். நமக்குத்தான் வாய்த்ததே காட்டு எருமை. புத்திகெட்டுப்போய்க் குப்புற விழுந்தது. எல்லாவற்றிலும் குப்புற விழுந்து விட்டாயிற்று. இனிஎன்ன?

அவள் அவனுக்கு முன் கூடையிலிருந்து டிபன் பாக்ஸை எடுத்துப் பரப்பினாள். ஒன்றின் மூடியைத் திறந்தாள். சாம்பார் சாதம் வாசனை தூக்கியடித்தது. அப்படியொரு சாம்பார் வீடுகளில் – வீடுகளில் என்ன சைவப்பிள்ளைமார் வீடுகளில்தான் – கிடைக்கும். இதைச் சொல்லத் தடையாக என்ன கம்யூனிசம் வேண்டிக் கிடக்கிறது, சனியன். அவள் ''சாப்பிடுங்கள்'' என்றாள். அவன் அவளுடைய மஞ்சள் பூசப்பட்ட வட்ட முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். அவள் கூந்தல் கற்றையொன்று எண்ணெய்ப் பிசுக்கின்றிப் பறந்தது. அதை தலைசாய்த்து ஒதுக்கி காதில் செருகினாள். ''சாப்பிடுங்க'' என்றபடி மஞ்சள் நுனியுள்ள விரல்களால் சாம்பார் சாதத்தை எடுத்து ஊட்டினாள். அருணாசலம் மனம் பொங்கி அழுதான். கண்ணீர் வழிந்தது. தொண்டையில் சாதம் அடைத்துக் கொண்டது. அவள் முந்தானையால் கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

''நான் பெரிய தப்பு செய்து போட்டன். பேசாம உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு எங்கியாம் வேலை செய்ஞ்சுட்டு இருந்திருக்கலாம். கம்யூனிசம் சித்தாத்தம்னு சீரழிஞ்சுட்டேன். மண்ணாப் போயிட்டேன். கெதியில்லாமப் போயிட்டேன்.''

''எல்லாம் செரியாப் போயிடும். சாப்பிடுங்க.''

''என்னத்தை செரியாக? எனக்க காலம் முடிஞ்சாச்சு. வீணாப் போயாச்சு. எனக்கு இனி ஒண்ணுமில்ல. நீ அருணாசலம்கூட சந்தோஷமாட்டு இரி.''

'சரி, நீங்க சாப்பிடுங்க.''

அருணாசலம் கூடையில் பரப்பியிருந்த செய்தித்தாளை எடுத்தான். அதில் செய்தி இல்லை. ஒரு நாடகம் இருந்தது. வியப்புடன் படித்தான். அவன் எழுதிய அங்கத நாடகம்.

''அய்யோ இது எனக்க நாடகம்லா.''

''எங்க?''

''இங்க பாரு. நான் எழுதின நாடகம் 'ஒநாயும் மனிதனும் சேர்ந்து வாழ்வது எப்படி' இத எப்படி இதில போட்டான் எனக்ககிட்ட கேக்காம?''

அவள் பேசாமல் கண்ணீரைத் துடைத்தாள். அருணாசலம் படிக்க ஆரம்பித்தான். அவள் விடைபெற்றுப் போனதெல்லாம் அவன் காலத்திற்கே வரவில்லை.

◆

2

ஓநாயும் மனிதனும் சேர்ந்து வாழ்வது எப்படி?

[ஒரு யதார்த்த நாடகம்]

எம்.வீரபத்ரபிள்ளை பி.ஏ.

காட்சி - 1

விசாலமான ஒரு ஆஸ்பத்திரி வார்டுதான் அரங்கு. பின்புறம் நோக்கித் திறக்கும் ஒரு வாசல். சுவர்கள், கட்டில்கள், படுக்கைகள் எல்லாமே வெண்ணிறம். பல அடுக்கான படுக்கைகளில் நோயாளிகள் வெண்ணிற சீருடையில்.

கட்டியங்காரன்போல ஒருவன் சிரித்தபடி வருகிறான். நளினமான உடலசைவுகளுடன் மும்முறை வணங்குகிறான்.

கட்டி : பெரியோர்களே, தோழர்களே, ரசிகப் பெருமக்களே வணக்கம். இங்கு இன்று ஒரு நாடகம் நடைபெறவிருக்கிறது. இது ஒரு யதார்த்த நாடகம். மானுடரெல்லாம் கருத் தொருமித்து மகிழ்வாக இருப்பதன் பொருட்டு இயற்றப்பட்ட நாடகம் இது. தெளிவான கதை இல்லையாயினும் ஆழ்ந்த உட்கருத்து உண்டு இதில். அது கொண்டு நல்லாப் பாக்கணும் கேட்டுதா? *(குழம்பி, தெளிந்து)* ஹிஹி... நமக்கு இந்த செந்தமிழ் வசனம் செரிப்பட்டு வரேல்ல கேட்டியளா. இது தொழில்முறை நாடகமும் இல்ல. பின்ன நாம என்னத்துக்கு கெடந்து ஒலத்தியது? நாம ஒண்ணுக்குள்ள ஒண்ணா – ஏது? நாம நேரிட்டு காரியங்களப் பேசி, பாலிஸாட்டு போலாம். அதாக்கும் கணக்கு. இந்த நாடகமும் அந்தமாதிரியாக்கும். ஒருமாதிரி ஒரு மாதிரி... என்ன இளவுடே அது? – அதாக்கும் மத்தது – ஆமா... யதார்த்த நாடகம். எழுதினது நம்ம வீரபத்திரபிள்ளை. தொடுவட்டி சந்தைலே கெடப்பாரு. சிக்கு வீரபத்தரபிள்ளை, கொட்டுவடி சகாவு எண்ணெக்கெ பேரு உண்டும். முன்னால கம்யூனிஸ்ட்டுக் கட்சியில இருந்தாரு. என்னமோ பிரச்சினைன்னு தொரத்திப் போட்டாவ. என்ன பிரச்சினைண்ணு கேட்டியள்னா... *(யோசித்து)* ஒரு மானுடப் பிரச்சினை! மக்கள் அரசாங்கத்தை உருவாக்குவதா, இல்லை அரசாங்கம் மக்களை உருவாக்குவதா எங்கியாம் *(கண்ணடித்து)* இதுக்காச்சுட்டி

அபத்த நாடகப் பாணியில் எழுதப்பட்ட இந்த முழு நீள நாடகத்தின் முதல் காட்சிகள் கிடைத்துள்ளன. பிற காட்சிகளுக்கான குறிப்புகள் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. பிரசுரமாகாத கைப்பிரதி.

ஆளைப் பொறத்தாக்குவாவளா? சங்கதி மத்ததுதான். எது? ஹெஹெஹெஹெ....

(ஒரு நோயாளி எழுந்து வந்து சந்தேகத்துடன் கட்டியங்காரனிடம்)

நோயாளி : எதுக்குச் சிரிக்கிற, அடிவ்டு மாதிரி?

கட்டி : உமக்க அம்மைக்க தாலி. செண்ணு படும்வே. (அரங்கிடம்) பைத்தியமாக்கும். காரியமாக்காண்டாம். (புன்னகைத்து) அப்பம் அதாக்கும் சொல்லி வந்த காரியம். ஒரு நாடகம். யதார்த்த நாடகம்...''

நோயாளி : என்ன நாடகம்?

கட்டி : அய்யரே, உம்மகிட்டதானேவே சொன்னேன். செண்ணு கிடவும் வேய். (திரும்பி) பைத்தியமாக்கும். ஒட்டலு வச்சிருந்தாரு. ஒரு நாளைக்கு ஒரு கிறுத்திருமக்காரப் பெய ஏன் அய்யிரே உளுந்தம் வடைக்குமட்டும் ஒட்டை இருக்குண்ணு கேட்டுட்டு அவன் போக்குக்கு போயிட்டான். அய்யர் வேதாந்தமாட்டு சிந்திச்சு சிந்திச்சு இந்தக் கெதிக்கு வந்து போட்டாரு. செண்ணு கிடவும்வேய் அய்யிரே, முளிக்காம...

அய்யர் : நான் ஒரு விஷயம் சொல்றேன்.

கட்டி : சொல்லி இளவெடும், சீக்கிரம்.

அய்யர் : எனக்கு ஒரு ரோகமும் இல்ல. பகவான் கடாட்சத்திலே க்ஷேமமாட்டு இருக்கேன். அன்யாயமா என்னை இங்க புடிச்சு போட்டிருக்கா. இது பைத்யாற ஆஸ்பத்ரி இல்லையோ? வேதாந்திக்கு இங்க என்ன வேலை?

கட்டி : இது இங்க உள்ள அம்பிடுபேரும் சொல்லுத தினசரி மந்திரம்தான். பைத்தியத்துக்கு எங்கியாம் அது பைத்தியம்னு தெரியுமா? விபரமும் அறிவும் உள்ள பெரியவுங்க முறையாட்டு கூடிப்பேசி தீருமானிக்குத காரியமாக்கும் அது. செரி அது நிக்கட்டு, சொல்லி வந்தது நாடகத்துக்க காரியமாக்கும். நாடகத்துக்க பேரு... பேரு (யோசித்து) 'நோயும் மனிதனும் சேர்ந்து வாழ்வது எப்படி?' உபயோகமான விஷயம். எழுதினவன் பீயேக்காரனாக்கும். சும்மா டப்பால நண்டு பிடிச்சு போட்டதுமாதிரி இங்கிலீஷ்லே பேசுத ஆளு. அப்பம் காரியமில்லாம எறுதமாட்டாரு. (உற்சாகமாக) அப்பம் சங்கதி கிளியர். உங்களுக்கு பிரச்சனை இல்லைண்ணா நாடகத்த தொடங்கிப் போடலாம். இந்தா பாட்டி, ஒன்னத்தான். இங்க கொண்டுவந்து எதுக்கு வெதனிலை கல்லுதே, டங்கு டங்குண்ணு? நாடகம் போடாண்டாமா? தம்பி உக்காருப்பா, அமதி அமதி! சைலேன்ஸ்! அப்பம் நாடகம் தொடக்கம். விசில்!

(விசில் ஒலிகள்)

விசில் ஊதியாச்சு! (மகிழ்ந்து) அதெல்லாம் கரெக்டா நடந்தும். அமதி!

(விசில் ஊதியபடி ஒரு காவலன் ஓடி வருகிறான்)

காவலன் : பாரா உஷார்! *(கட்டியங்காரனைப் பார்த்து)* டேய் எவம்லே அது நிக்குதது? என்ன மயிருக்குடே உனக்கெல்லாம் கட்டிலு போட்டிருக்குது? *(ஓங்கி அடித்து)* போலேய், செண்ணு பொத்திக்கிட்டு படுலே. எளவுக்குப் பிறந்த பைத்தியங்கள வச்சு மாரடிக்குதேன். *(கட்டியங்காரன் ஏதோ சொல்ல முயல அடித்து. இழுத்து. படுக்கவைத்துவிட்டு மூச்சினைக்க)* பைத்தியாறப்பயவளுக்கு மருந்தும் மந்திரமும் போடுத இடமாக்கும் இது. அல்லாம போற வாற ஏரப்பாளிய கூடியிருந்து பாத்து சிரிக்குத எடமில்ல. *(கோபித்து)* என்னவே வாயி கிளியுது? இங்கென்ன நாடகமா போடுதாவ? *(மேலும் கோபம்கொண்டு)* ஆஸ்பத்திரிண்ணா ஒரு ஒளுங்கு வேணும். பைத்தியாற கூத்தாட்டு இல்ல இருக்கு. பாரா உஷார்! *(விசில்)*

(வெளியே வராண்டாவில் ஓசைகள் தள்ளுவண்டியில் எவரோ அழைத்து வரப்படுகிறார்கள்)

காவலன் : புதுப்பார்ட்டியாக்கும். மைக்குவச்சு பிரசங்கம் தொடங்கின காலம் முதல் நாட்ல பைத்யம் பெருத்துப் போச்சு.

அய்யர் : அய்யா ஷமிக்கணும்.

காவலன் : என்னவே?

அய்யர் : சொன்னா நம்பணும். எனக்கு ஒரு குழப்பமும் இல்லை. நான் ஒரு நாளைக்கு எதுக்கும் இருக்கட்டும்னு வடையை எண்ணிட்டு துளையையும் தனியா எண்ணிப் பார்த்தேன். அதுக்குப்போய் என் பார்யாள் இங்க கொண்டுவந்து சேத்துட்டள்.

காவலன் : உட்காருடே... டாக்டர் வாறாரு...

(டாக்டரும் தள்ளுவண்டியில் ஒரு நோயாளியும் வருகிறார்கள்)

டாக்டர் : என்னய்யா முப்பத்தாறு, என்ன பிரச்சினை?

காவலன் : ஒண்ணும் இல்லிங்கய்யா.

டாக்டர் : மாத்திர சாப்பிட்டியா?

காவலன் : ஆமா.

டாக்டர் : பின்ன எதுக்கு நிக்கிற? உன் பெட்டு என்ன? போயிப் படு...

(காவலன் தடுமாறிவிட்டு. போய்ப் படுத்துக்கொள்கிறான்)

டாக்டர் : இந்தாளை எங்க படுக்க வைக்கிறது மாசிலாமணி?

கம்பவுண்டர் : இங்கியே ஓரமா படுத்துக்கிடுவான் அய்யா. அங்கயும் தெருவிலதானே உறக்கம் இளவெடுத்த பயலுக்கு. *(நோயாளியிடம்)* ஏம்லே, ஓரமா கெ ந்துக்க. இது பைத்தியாற ஆஸ்பத்திரியாக்கும்.

உனக்க கட்சி இல்ல கண்டமானிக்கு பேசுயதுக்கு. கேட்டியா? ஒழுங்கா இல்லாட்டி சவிட்டி குடலைப்பிதுக்கி எடுத்துப் போடுவம்.

கட்டி : ஐயா உங்க பேரு?

டாக்டர் : படும் ஓய். வேய் முன்னூற்றாறு, எம்வே முழிக்குதீரு? பேசாம தூங்குங்க எல்லாரும். (போகிறார்கள்)

நோயாளி : ஐயா எம்பேரு வீரபத்ரபிள்ளை.

கட்டி : நீரு 'ஒநாயும் மனிதனும் சேந்து வாழ்வது எப்படி'ன்னு ஒரு நாடகம் எழுதீட்டுண்டா?

வீர : (எழுந்து கைகூப்பி) யாரும் குழம்பிட வேண்டாம். இது நான் எழுதின நாடகம்தான்.

அய்யர் : (எழுந்து கைகூப்பி கண்ணீர் மல்க) ராஜா நன்னாயிருப்பே. என்னை விட்ருடா. எனக்கு ஒண்ணுமே இல்ல...

கட்டி : எதுக்கு அய்யரே அலட்டுதே? இது நாடகம்லா. கூடிப்போனா ஒரு மணிநேரம். வேஷத்தைக் கலைச்சுட்டு பஜ்ஜி, டீ சாப்பிட்டுட்டு வீட்டுக்குப் போகப்போற. அதுக்குள்ள என்ன கொள்ளை?

அய்யர் : அப்ப என்னை டாக்டராப் போடு. அந்த கம்பவுண்டர் பயலை நாலு பூசை வைக்கிறேன். கட்டேல போறவன், பிராமணன்னு ஒரு மட்டுமரியாதை குடுக்கிறனா பார்.

வீரபத்ர : (திரும்பிக் கும்பிட்டு) யாரும் பதற்றப்பட வேண்டாம். இது நாடகம்தான். ஒரு சித்தாந்தத்தின் அடிப்படையில் சமூகத்தை மாத்தியமைச்சா என்னென்ன கேலிக்கூத்தெல்லாம் உண்டாகும்னு காட்றதுக்காக இதை எழுதியிருக்கேன்.

கட்டி : பைத்தியக்கார ஆஸ்பத்திரின்றது ஒரு குறியீடு.

வீர : (கோபமடைந்து) என் வசனத்தை நானே சொல்லிக்கிறேன். நீ உஞ்சோலியப் பாரு.

மேல்தட்டுப்படுக்கை நோயாளி : எவண்டாவன், பிச்சைக்காரப்பயல்? சத்தம் போடாம தூங்குற வழியப் பாருங்கடா டே ய்...

வீர : (புண்பட்டு) சகோதரா, இப்படிப் பேசலாமா? நாமெல்லாம் ஒரே நாடகத்து கதாபாத்திரங்கள்...

கட்டி : உலகமெ ஒரு நாடகமேடை. நாமெல்லாம் நடிகர்கள்.

வீர : பிலேய், எனக்க வசனத்தை நீ பேசாதே. இடுப்பு தாத்து சவிட்டிப் போடுவேன்.

விழுவர் : ம்மயிரு. போடாடே ய் (ஆங்காரமாக) ஆண்டவா இந்தப் பைத்தியாற சைத்தான்களால தூங்கவும் முடியாம போச்சே. தூங்குங்கடா டே ய்!

வீர : *(திடுக்கிட்டு)* இந்த வசனம் நாடகத்ல இல்லியே. ஓய் கட்டியம்.

கட்டி : என்னய்யா?

வீர : மேல இருக்கிறவன் யார்?

கட்டி : பகவான்.

வீர : ஐயோ *(தலையிலடித்து)* அதைக் கேக்கலை அய்யா. இந்த மேல்தட்டு கதாபாத்திரமா நடிக்கிறது யாரு?

கட்டி : குட்டி சங்கரன். டாப்பிங் தொழிலாளி, மேலத் தோட்டம்.

வீர : இவன் ஆரு சொல்லிக்குடுத்த வசனத்தவே பேசறான்? எளவு, இதென்ன நாடகமா இவன் அப்பன் வீட்டுக் கௌங்கா, போட்டு மயக்கியதுக்கு?

கட்டி : *(சமாதானமாக)* குட்டி சங்கரா, வசனத்தக் கேளு. அய்யா நீங்கள் சொன்னது உண்மையாக இருக்கலாம். ஆனால் வர்க்கங்கள் அழிவதில்லையே.

வீர : *(கைப்பிரதியை பார்த்து)* ஆமா இதாக்கும் நான் எழுதிய வசனம். இந்த மயிரான் என்ன பேசுதான்?

மேல்தட்டு நோயாளி : நீ ஆருடே?

வீர : *(கம்பீரமாக)* நான் நாடக எழுத்தாளர்.

மேல்தட்டு நோயாளி : சரி உனக்க நம்பர் என்ன? பெட் எங்க?

வீர : குட்டிசங்கரா இது நாடகம். நீ உனக்க போக்கில பேசிட்டே போனா எப்படி, சொல்லு? வசனம்னு ஒண்ணு இருக்கோ இல்லியோ?

மேல்தட்டு நோயாளி : *(ஆங்காரமாக)* அய்யோ, அய்யோ, பைத்தியாறப் பயலுக உறங்கவும் விடமாட்டானுவளே... யம்மா மூளை கொழம்புதே. *(அழுகிறார்.)*

காவலன் : *(எழுந்து)* இங்க என்னவே சத்தம்!

மேல்தட்டு நோயாளி : இந்தப் பைத்தியாறப் பயல வந்து இடபிடிக் கூத்தடிக்குதானுவளே. கேக்க ஆளில்லியா? மனுஷனை ஒரு நாழி கண்ணடய்க்க விடமாட்டானுவளா?

காவலன் : *(நிதானமாக)* டேய் உனக்க நம்பர் என்ன?

வீர : *(அமைதியாக)* லாரன்சு, ஒரு தப்பு நடந்து போச்சு. மேலே இருக்கிறவன் குட்டிசங்கரன். எளவு வசனத்த மறந்துபோட்டு பினாத்துதான்.

காவலன் : *(சாந்தமாக)* சரி, அத நாம பிறவு பேசுவம். முதல்ல நீரு உம்மபெயர் நக்குப் போவும்.

வீர : லாரன்சு, நான் நாடகத்த எழுதினவன்.

காவலன் : எழுதும்வே. அதுக்கு ஒரு பிரச்சினையும் இல்ல. இங்கதானே கொஞ்ச நாளைக்கு இருக்கப் போறீரு.

வீர : நாம இப்ப நடத்திட்டிருக்க நாடகத்தச் சொன்னேன்.

காவலன் : *(சிரித்து)* ஆமா ஆமா, நாடகம்தான். இப்பம் படுங்க. பிறவு பேசலாம். *(வீரபத்ரபிள்ளையைப் பிடித்து)* வாரும், உம்ம பெட்டு எங்க?

கட்டி : லாரன்சு, சொல்லுததக் கேளு. இது நாடகம். நீ மறந்து போயிட்டே. நம்ம தோழர் வார்ணீஷ் வீரபத்ரபிள்ளை எழுதின நாடகம்டே இது.

காவலன் : *(பரிவாக சிரித்து)* எல்லாமே நாடகம்தானே. வாங்க, படுத்து ரெஸ்ட் எடுங்க.

வீர : இங்கபாரு, நாடகப் பாடம்...

காவலன் : *(கோபம் கொண்டு)* குடும்வே அதை *(பிடுங்கி)* டாக்டர் வாற நேரம்...

கட்டி : வீரபத்ரா நான் போறேன். எனக்கு இந்தப் பைத்யாறக் கூத்தல இடமில்ல. நாடகமும் அவன் அம்மைக்க அரைஞாணும். *(கிளம்புகிறார்.)*

காவலன் : *(எட்டிப்பிடித்து)* எங்கே ஓடுதீரு? உம்மகிட்ட நான் படுக்கல்லா சொன்னேன்.

கட்டி : *(ஆவேசமடைந்து)* விடுடா கையை... விளையாடுதியா? நாளைக்குத் தோட்டத்துக்கு வா. பத்துநாளைக்கு உனக்கு ஆப்சென்ட் போட்டாத்தான் புத்தி வரும்.

காவலன் : *(பொறுமை இழந்து)* படுடே டேய்.

கட்டி : லாரன்சு.

காவலன் : *(ஓங்கி அறைந்து)* உனக்கு அடிதான்டே புரியும். *(மீண்டும் அறைந்து)* படுடே.

கட்டி : அய்யோ லாரன்சு... *(அடி)* இல்லை படுத்திடறேன். அய்யோ நாருகோ *(அடி)* எனக்கு ஒண்ணும் புரியலையே. நிஜமாட்டே அடிக்கிறானே *(அடி மேல் அடி விழ சுருண்டு படுக்கிறார்)* எனக்கு ஒண்ணும் புரியில்லியே. பைத்தியம் புடிச்ச மாதிரி இருக்கே. *(விம்மி அழுகிறார்)*

மேல்தட்டு கிழவர் : *(கொல்லென்று சிரித்து)* இங்க பாருடா கதய. பைத்தியம் பிடிக்காம யாராவது இங்க வருவாவளா?

வீர : *(தன்னம்பிக்கையுடன்)* லாரன்சு, நீ நாடகத்த புரிஞ்சுக்கலை. இந்த சீன்ல இப்படி இல்லை.

காவலன் : வாய மூடிட்டு படுக்குதியா, சாத்தட்டுமா?

வீர : லாரன்சு, நீ இப்ப வரப்பிடாது...

காவலன் : வாய மூடுல நாயே. *(அடித்து)* படுலே தேவ்டியா மவனே.

வீர : *(திடுக்கிட்டு)* கைய நீட்டுதியா டேய்...

காவலன் : *(ஓங்கி அறைந்து)* படுலே...

கட்டி : வீரபத்ரா படுத்திடு. அவனுக்கு என்னமோ இளகிப்போட்டு...

வீர : *(குறுகிப்படுத்து, மனமுடைந்து)* எனக்கு ஒண்ணுமே புரியல்லியே. எனக்க நாடகம் மாதிரியே இல்லியே.

கட்டி : என்னமோ தப்பு இருக்கு. நான் அப்பவே யோசிச்சேன்.

வீர : உள்ள பூந்து வேற வல்ல பயவளும் நாடகம் போடினுமா, திரிபுவாதிகள்?

காவலன் : வாய மூடுங்கடே. *(கம்பீரமாக)* பிற்போக்குவாத, சாம்ராஜ்யத்துவ, வகுப்புவாத, திரிபுவாத, முதலாளித்துவ, குறுங்குழுவாத, தனிநபர்வாதப் பயலுவளா. அடிச்சாத்தான் வழிக்கு வருவிய...

அய்யர் : ஐயா!

காவலன் : என்னலே?

அய்யர் : நான் ஸ்தாணு அய்யர். மணிகண்ட விலாசம் ஓனர். நேக்கு ஒண்ணுமில்லை. விட்டிருங்கோ.

வீர : அய்யா, நானும் இங்க ஒரு நாடகத்தல நடிக்க வந்தவனாக்கும். வீரபத்ரபிள்ளைன்னு ஒரு குடிகாரப்பயலுக்க வேஷம். நாடகம் முடிஞ்சதும் என்னை விட்டுருங்க...

கட்டி : நான் கட்டியங்காரன். எனக்க வசனத்த பேசியாச்சு. இப்பிடி பிடிச்சு படுக்க வச்சிட்டியளே ஞாயமா? தெய்வம் பொறுக்குமா?

வீர : *(மகிழ்ந்து)* ஆமா *(பிரதியைப் பார்த்து)* இப்ப சரியா வருது. இப்ப நீரு பேசுத வசனம்லாம் நாடகத்தல வருது. மேல பேசும்.

கட்டி : இது நான் எனக்க சங்கு பொட்டி பேசுத வசனம். எனக்க சொந்த வசனம்.

வீர : *(கைப்பிரதியைப் படித்து, தலையாட்டி)* கரெக்ட்.

கட்டி : ஓய் விளையாடுதீரா? மனுஷனைப் பைத்தியாறன் ஆக்குதீரா? பொளந்து போடுவேன்.

வீர : *(தலையசைத்து திருப்தியுடன்)* பொளந்து போடுவேன். மேல சொல்லும்.

கட்டி : *(பயந்து போய்)* ஓய் நீரு விளிச்சேருண்ணு இந்த நாடகத்துல நடிக்க வந்தேன். சதிச்சுப் போடாதியும். பிள்ள குட்டிக்காரனாக்கும்.

வீர : *(மகிழ்ந்து)* தன்மயத்துவத்தோட சொல்லுதீரு. வசனம்னா இப்படிச் சொல்லணும். சபாஷ்!

கட்டி : *(அழுது)* ஓய் என்னை விட்டுரும். நான் போறேன். உன்னை நம்பி வந்தேன்...

வீர : *(பிரதியைப் பார்த்து)* என்னை எனக்க பாட்டுக்குப் போகவிடும்.

கட்டி : என்னை எனக்க பாட்டுக்குப் போகவிடும்...

வீர : *(படிக்கிறார்)* நான் இனிமே சென்மத்தல நாடகத்தல நடிக்க மாட்டேன்.

கட்டி : நான் இனிமே சென்மத்தல நாடகத்தில நடிக்க மாட்டேன். சரியா?

வீர : இப்படி ஒப்பிக்கப்பிடாது. கண்ணீர்விட்டு, தொண்டை இடறிட்டு சொல்லணும்....

கட்டி : *(உணர்ச்சிப்பிரவாகமாக)* நான் இனிமே சென்மத்தில நாடகத்தல நடிக்க மாட்டேன்.

வீர : *(மகிழ்ந்து)* பிரமாதம். தூள் கௌப்பிப் போட்டீர்.

கட்டி : *(மகிழ்ச்சியுடன்)* இந்த சீன்ல இம்பிடுதானா?

வீர : அம்பிடுதான் *(நிறைவுடன்)* இனிமேதான் நாடகம் களைகட்டும். கொஞ்சம் குளப்பம் வந்து போட்டு. சரி அது போட்டு. உனக்க அடுத்த வசனம் என்ன, ஞாபகம் இருக்கா?

காவ: *(சிரித்து)* அப்பம் அதாக்கும் கத. *(குரல் மாறி)* கெடவும் ஓய். அடி நொறுக்கிருவேன்.

வீர : இப்பிடி இல்லியே வசனம்... *(படிக்கிறார்)* இந்த அமைப்பு மாற்ற முடியாதது. வரலாற்று ரீதியானது. நிச்சய வெற்றி அடைவது. *(நிமிர்ந்து)* இதாக்கும் உம்ம வசனம்.

காவலன் : விட்டா என்னையே பைத்தியமாக்கிடுவீரு. படுக்குதீரா இல்லியா. *(அடிக்க வருகிறான்)*

வீர : *(பாய்ந்து படுத்து)* இந்தப் பயலுக்கு என்ன ஆச்சு, மூளை ஸ்லம்பிப் போச்சா?.

காவலன் : நாறப்பயலுவளா, பைத்தியம் பிடிச்சா ஒளுங்கா இருக்கணும். போட்டு குளப்புதியளா? சீவிப் போடுவன்....

கட்டி : பிள்ளைவாள், அவனுக்க வசனம் எனக்க வசனத்தக் காட்டியும் உறைப்பா இருக்கே...?

வீர : உமக்குப் போகப்போக நல்ல வசனம்லாம் உண்டும்வே.

(வாசல் திறந்து டாக்டர் வருகிறார். கூடவே கம்பவுண்டரும்)

டாக்டர்: *(நின்று கொண்டிருக்கும் காவலனிடம்)* என்னவே மூப்பத்தாறு, உம்ம பெட்டு எங்க?

காவலன் : தோ, அங்க... *(நாணிக் கோணுகிறான்)*

டாக்டர் : போய்ப் படும்வே.

காவலன் : *(போய் படுத்துக்கொண்டு)* நான் அம்மாகிட்ட சொல்லிடுவேன். நீ கெட்டவன்.

கட்டி : டாக்டர் வேஷம் போட்டிருக்கது யாரு, நம்ம குமரேசன் தானே?

டாக்டர் : *(வெளியே பார்த்து)* உள்ளே வாங்க.

மேல்தட்டு நோயாளி : டாக்டர் எப்ப நாடகம் முடியும்? எனக்கு ஒண்ணுக்கு வருது.

வீர : அமைதியா இருங்க. டாக்டரு அவருக்க வசனத்த சொல்ல வேண்டாமா?

டாக்டர் : *(பொறுமையை சிரமப்பட்டுத் தக்கவைத்தபடி)* இங்க வந்தாலே மறை கழண்டிரும். வாங்க...

வீர : குமரேசன், ரிகர்சலிலேயே சொன்னேன் மறை இல்லை. மரை. ம்ம்ம்மரை!

டாக்டர்: ஷட்அப்.

(அருணாசலமும் நாகம்மையும் வருகிறார்கள்)

நாகம் : ரொம்பபேரு இருக்காவளே டாக்டர். இவரு வேற ரொம்ப பயருதாரு...

டாக்டர் : இப்ப தனியா வைக்கக் கூடாதும்மா. எப்பவும் அப்சர்வேஷன்ல இருக்கணும். ஹெவி டிரக்ஸ் குடுத்திருக்கம்.

அருணா : *(பயத்துடன்)* நாகம், இந்த நாடகத்தில நான் நடிக்க மாட்டேன்.

நாகம் : *(கண்ணீரை அடக்கியபடி)* இப்படித்தான் டாக்டர், எப்ப பாத்தாலும், நாடகம் நாடகம்னு...

கட்டி : பரவாயில்லை சரியாயிடும். அருணாசலம் சார், பயப்படாதீங்க. அதான் உங்க பெட்.

அருணா : நாகம், நான் வேணுமானா டாக்டரா நடிக்கிறேன்.

நாகம் : படுத்திட்டிருங்க. நானும் இங்கதான் இருப்பேன்.

அருணா : எனக்கு ஒரு வசனம்கூட ஞாபகமில்லையே நாகம்... ரொம்ப பயமாயிருக்கே.

நாகம் : பேசாம கண்ணைமூடிப் படுத்துக்கிடுங்க. டாக்டர் இருக்காரு. நான் இருக்கேன்...

வீர : (குழப்பமாகிப் பிரதியை பார்த்து) வசனம் இப்பிடி இல்லியே. கண்ணை இமை பிரிவதுண்டே ா கண்ணாளா... அதாக்கும். சொல்லு பாக்கலாம்.

நாகம் : (பயந்து) என்னது?

டாக்டர் : கொஞ்சம் உளறல் இருக்கும். இல்லைண்ணா இதுக பைத்தியம்னு நாம கண்டுபிடிக்க முடியாதே. ஹெஹெஹெ! வாங்க.

கட்டி : டாக்டருக்குப் போய் இப்பிடியா வசனம் எழுதுவாவ? அபத்தமா இருக்கு.

வீர : (கோபம்கொண்டு) இது எனக்க நாடகம். என் இஷ்டப்படி எழுதுவேன்.

அய்யர் : (உளே புகுந்து) என்னை விட்ருங்கோ நான் சொஸ்த மாயிட்டேன்.

கட்டி : ஓய் துளைவடை. உமக்குத்தான்வே சொன்னது கிளிக்குச் சொன்னது மாதிரி. நாடகம் இன்னும் முடியல்ல. முடிஞ்ச உடனே போயிடலாம்.

அய்யர் : எப்ப முடியும்?

வீர : இன்னும் நான் எழுதி முடிக்கலையே.

அய்யர் : சீக்கிரம் எழுதி முடியேண்டா வெனியனே.

வீர : (குரூரமாக) பார்ப்பனிய ஆதிக்கத்துக்கு ஒரு சாவுமணி! ஹெஹெஹெ...

அய்யர் : ஷாபம் போட்டுருவேன். பூணூலைப் பிடிச்சுண்டு ஷபிச்சிருவேன்.

வீர : நீ உண்மையில ஒரு புலையனாக்கும். சண்டம் புலையன்னு பேரு. சிவப்பா இருக்கேருண்ணு உமக்கு அய்யர் வேஷம் குடுத்தேன்.

அய்யர் : (பதறி) ஷிவா ஷிவா... தெய்வதோஷம்!

வீர : (கம்பீரமாக) நானே தெய்வம். படை த்தல் காத்தல் அழித்தல் எம்தொழில். ஹெஹெஹெ...

அய்யர் : நான் என்ன பண்ணுவேன்! ஒண்ணுமே புரியல்லியே!

கட்டி : நாடகத்தை விட்டுட்டுப் போய்ட்டா நீரு அய்யர் இல்லை. புலையன்...

அய்யர் : (அலறி) நான் எங்கியும் போகலே...

கட்டி : போகாம எப்பிடியய்யா... நாடகம் இப்ப முடிஞ்சுடுமே!

அய்யர் : (உடை நது போய) முருகா எம்பெருமானே, ஒண்ணுகா, ஒலஞ்சனா...

கட்டி : மிச்சம் நாமாவளியயும் சொல்லிட்டு அப்பிடி ஒதுங்கும்.

வீர : பார்ப்பனிய சூழ்ச்சியால கொஞ்சம் குழப்பம் ஆயிப்போட்டு. உங்க பேரு அருணாசலம் இல்லியா?

அருணா : ஆமா.

வீர : அப்பா பேரு?

அருணா : சிவசுடலைமுத்து.

வீர : பல்லிவால் அறுந்தாப்ல இருக்கு! *(தந்திரமாக)* அம்பிடுதானா பேரு?

அருணா : சிவசுடலைமுத்து பிள்ளே.

வீர : நம்மாளு. *(குதூகலமாக)* வேய் கட்டி, கேட்டேரா நம்ம ஆளாக்கும்.

கட்டி : *(ஆர்வமாக)* சைவமா, நாஞ்சிலா?

அருணா : சைவப்பிள்ளமாரு. மூவத்துக் கோட்டைனம்.

வீர : அப்பிடிப்போடு *(கட்டியங்காரன் தோளில் அடித்து)* எந்தக் கரை?

அருணா : தாழக்குடி.

வீர : தாழக்குடில பண்ணையார் நடனகணபதியா பிள்ளையத் தெரியுமோ?

அருணா : எனக்கு அவ்வோ மாமா முறைவேணும். பொண்ணெடுத்த வகையில.

வீர : அவுக எனக்கு தம்பி மொறை! *(சினேகமாக)* நெருங்கிட்டோம். *(தணிந்த குரலில்)* பாத்து பாலீஷாட்டு போகணும் மாப்பிள்ளை. இது நானாஜாதிப்பயவ இருக்கிற எடம். ஒண்ணுபோல ஒண்ணு இருக்காது. பாப்பாவைப் பாத்தப்பவே நினைச்சேன், நம்ம களை தெரியுதேண்ணு... மாலட்சுமி மாதிரி ஒரு தொலக்கம். ஏது...

குரல் : பெருமதிப்புக்குரிய தாய்மார்களே, தோழர்களே, சபைப் பெருமக்களே, வணக்கம். குலசேகரம் ஹாஸ்ய கலாமந்திர் அளிக்கும் எட்டாவது நகைச்சுவை நாடகம் இப்போது இங்கு தொடங்கவிருக்கிறது. *(டொடொய்ங் இசை)*

கட்டி : என்னடா இது மயிரு கதயாட்டு இருக்கு...?

அய்யர் : அந்த நாடகத்ல அய்யர் வேஷம் போடறவன் யாரு?

குரல் : நாடக ஆக்கம் எம்.வீரபத்ரபிள்ளை பி.ஏ! இசை சுப்பு சண்முகம்! இயக்கம் எல்.ஆர்.நாராயணபிள்ளை!

அருணா : ஆமா.

வீர : நம்ம நாடகம். (மகிழ்கிறார்)

குரல் : ஒநாயும் மனிதனும் சேர்ந்து வாழ்வது எப்படி? (இசை) இதோ உங்கள் முன்னிலையில்...

வீர : (உரக்கச் சிரித்து) நம்ம நாடகத்தயே வேற எவனோ போடப்போறான். மாட்டிக்கிட்டான் ஹெஹெஹெ...

கட்டி : அதுக்கு ஏன் உங்க பேரை சொல்றான்?

வீர : ஆமா செரிதானே? (குழம்புகிறார்)

(ஒருவன் மேடைக்குள் ஓடி வந்து பதறி ..)

வந்தவன் : அண்ணாச்சி மறந்துட்டியளா, ஸ்க்ரீனை தூக்கியாச்சு. நாடகம் தொடங்கப் போவுது...

வீர : ஹெஹெஹெஹெ... நாடகம் தொடங்கி கொறெ நேரம் ஆவுதுடே மச்சான்.

வந்தவன் : எந்த நாடகம்?

கட்டி : அண்ணாச்சி நீங்க...

வந்தவன் : என்னடே இது, லேய் லாரன்சு நாடகம் உண்டா இல்லியா? ஸ்க்ரீனைத் தூக்கியாச்சு பாத்துக்க...

மேலிட நோயாளி : தம்பி இது பைத்தியக்கார ஆஸ்பத்திரி. நீ இங்க இப்ப அட்மிட் ஆகியிருக்கே.

வந்தவன் : யாரு நானா?

வீர : தம்பி, கொஞ்சம் குழம்பும். ஆனா ரொம்ப சின்ன விஷயம்... இது ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி. இதுக்குள்ள ஒரு நாடகம் போடறம். அந்த நாடகத்ல ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி வருது. அதில ஒரு நாடகம் போடுறாவ...

(முண்டாசு தலையைப் பிய்த்து. குழம்பி ஓடி வருகிறான்)

அருணா : தெளிவாப் பேசுறிய அண்ணாச்சி. உங்க நாடகத்த படிச்சேன் சிரிச்சு சிரிச்சே வயிறு புண்ணாப் போச்சு....

அய்யர் : அந்த நாடகம்தான்வே இது.

அருணா : எது?

அய்யர் : நாம நடிக்குற நாடகம். நான் ஸ்தாணு அய்யர். மணிகண்ட விலாசம் ஓனர். கிளாட் டு மீட் யூ... நீங்க அம்பது வருஷம் கழிச்சு வாறீங்க.

அருணா : புரியலியே.

அய்யர் : நீங்க இருக்கிறது தொண்ணூத்து நாலுல. நாங்க அம்பத்தெட்டில. அதச் சொன்னேன்.

அருணா : அய்யோ பேய்...

அய்யர் : அஷ்டு. பேய் எங்கியாச்சும் தரைல நிக்குமோ? நின்னாலும் அதுக்குப் பைத்யம் புடிக்குமோ? புடிச்சாலும் அதுக்கு ஆஸ்பத்ரி வைப்பாளோ?

அருணா : எனக்குக் குழப்பமா இருக்கே. பைத்தியம் பிடிச்சாப்ல இருக்கே...

கட்டி : நாடகத்தப் படிச்சதை சொல்லிட்டிருந்தீரு...

அய்யர் : தொபுகடீல்னு உள்ள விழுந்துட்டார்.

மேலிட நோயாளி : தம்பி, நாடகத்த மட்டும் கவனமா படிக்கணும். ஒரமா படிச்சுட்டுப் போறது நல்லது. காலு தடுக்கினா உள்ளே விழுந்துடுவே. இப்ப என்னைப்பாரு, உள்ள விழுந்து நாலுமாசமாவுது. நாடகம் முடிஞ்சா போயிடலாம்னு இருக்கேன். இளவு முடியவே மாட்டேங்குது...

அய்யர் : இந்தாளுதான் எழுதியே முடிக்க மாட்டேங்கிறான் துஷ்டப்பாவி...

கட்டி : இவரு பாவம். இவரு நடிக்குதாரு. வீரபத்ரபிள்ளை இவருக்க வேஷம்.

அருணா : என்னது, அப்ப இவரு வீரபத்ரபிள்ளை இல்லையா?

வீர : நல்ல கதை. அது இந்த நாடகத்ல என் வேஷம். இப்ப நீங்க அருணாசலமா நடிக்கலியா?

அருணா : அய்யோ இல்ல... நான் நிஜ அருணாசலம்.

கட்டி : அப்ப அருணாச்சலமா நடிக்குதது யாரு?

அருணா : தெரியலியே...

கட்டி : அப்ப நீருதான் நடிக்கேரு.

அருணா : (பயந்து எழுந்து) விட்டுருங்க அண்ணாச்சி பயமா இருக்கு அண்ணாச்சி. நான் போயிடறேன்?

அருணா : நாகம்மை... நான் அருணாசலம்...

(அத்தனை பேரும் கொல்லென்று சிரிக்கிறார்கள்)

கட்டி : உள்ள வந்திட்டா இதான் பிரச்சினையே. வேய், இது உம்ம வேஷம். ஒரு நடிகன் ஒருபோதும் கதாபாத்திரமா தன்னை மாற்றக் கூடாது. ஒரு உள்பிரக்ஞை இருக்கணும்.

அருணா : அப்ப நான் யாரு?

வீர : இந்த நாடகத்தில உள்ள அடிப்படைப் பிரச்சினை இது. இந்த வசனம் அடிக்கடி வரும்.

அருணா : நான் போறேன்... எனக்கு பயமா இருக்கு... (அலறுகிறான்)

கட்டி : வெளியே பாத்தேரா, இருட்டு. அதுக்குள்ள நீரு போயிட்டா மிஞ்ச மாட்டேரு. உமக்க பேரும், உளரும், உடம்பும், முகமும், குரலும், மனசும் ஒரு இளவும் மிஞ்சாது. அப்படி நிறைய பேரு கரைஞ்சு போயிட்டுண்டு.

அருணா : (பீதியால் ஒடுங்கி) ஆனா இந்த நாடகம் ரொம்பப் பழசு. பத்தம்பது வருஷம் பழசு.

வீர : அதுக்கு என்ன இப்போ?

குரல் : காட்சியமைப்பில் ஏற்பட்ட குளறுபடிகளுக்கு மன்னிக்க கோருகிறோம். நாடகம் இதோ தொடங்கவிருக்கிறது.

கட்டி : சொல்லுததக் கேளும். நாடகம் ஒரு கலைப்படைப்பு. அழியாம நிரந்தரமாட்டு இருக்கும். அதுவும் இது அமர இலக்கியம் வேற. ரெண்டு அட்டைக்கு நடுவில பத்திரமா இருப்பேரு. ஒரு பய புரட்டிப்பாக்க மாட்டான். பத்து வருசம் கழிஞ்சு மறுபதிப்புகூட வந்தாலும் வரும். இந்தா மூப்பத்தாறு வருஷமாட்டு கல்லுகுண்டாட்டு இருக்கம். ஒரு குறயும் இல்ல.

வீர : ரெண்டு மூணு விமரிசகப் பெயக வந்து தொட்டுப் பார்த்தாவ. நூசூறு நாலு போட்டேன். ஓடிப் போயிட்டாவ.

கட்டி : இது பின்ன அபத்த நாடகம் வேற. பின்நவீனத்துவ பயல வந்தாலும் ஒரு மயிரும் ஆட்டிக்கிட முடியாது ஹெஹெஹெஹெ...

வெளியே குரல் : பாரா உஷார். எவன்டாது பத்தாம் வார்டுல விளக்கப் போட்டுட்டு? உறங்குதியளா, இல்லை வந்து சாத்தட்டுமா?

அருணா : (திகிறி) நான் போறேன்...

(விளக்கு அணைகிறது)

அருணா: அய்யோ இருட்டு! பயமா இருக்கே அம்மா! நாகம்...

(காட்சி முடிவு)

காட்சி 2

(ஆஸ்பத்திரி வார்டு அருணாசலம் தூங்கி எழுந்து கட்டில்மீது அமர்ந்திருக்கிறான். சோர்ந்த முகம் ஒரு பெண்மணி கூட்டிப் பெருக்குகிறாள்)

அருணா : ஸிஸ்டர்!

பெண் : என்ன?

அருணா : என்னை எப்ப டிஸ்சார்ஜ் செய்விய?

பெண் : நல்ல கூத்தால்ல இருக்கு. டாக்டரிட்ட கேக்காம தூப்புக்காரிட்டயா கேப்பாவ?

அருணா : எனக்கு ஒண்ணும் இல்ல. நான் நல்லாத்தான் இருக்கேன்.

பெண் : சரி, அப்படியே படுத்துக்கிடுங்க. டாக்டர் இப்ப வருவாவ.

(டாக்டரும் நாகம்மையும் வருகிறார்கள்)

டாக்டர் : என்ன தூங்கி முழிச்சாச்சா? எப்படி இருக்கிய?

அருணா : நல்லாயிருக்கேன் டாக்டர்.

(டாக்டர் பரிசோதிக்கிறார்)

அருணா : நேத்து இருட்டில பயந்தே போயிட்டேன் நாகம். இருட்டுண்ணா சாதாரண இருட்டில்ல. (பீதியுடன் அவள் கையைப் பிடித்து) இருட்டுண்ணா என்ன தெரியுமா? காக்கா. பலகோடிக் காக்காய்கள் சேந்துதான் இருட்டு உருவாயிருக்கு. எல்லாமே பலிகிட்டாம அத்து அலையுத காக்காய்கள்... காக்காய்கள் காத்தா மாறி ராத்ரில ஜன்னல் ஜன்னலா மூட்டி அழுதிட்டிருக்கு.

டாக்டர் : படுங்க. நல்லா தூக்கம் வரும். ஊசி போட்டிருக்கேன்.

அருணா : பசி தாகமெடுத்து அவுக அலையும்ப நாம எப்பிடி தூங்க முடியும்? (மனமுடைந்து) அவுக மனசு அடங்கல்லியே. மண்ணில அவங்க ரத்தம் ஆறல்லியே. அவங்க ஆத்மா தவிச்சு அலையுதே...
(அழுகிறான்)

வீர : (திருப்தியுடன்) அவ்வளவுதான். உங்க வசனம்தான் தாடகத்திலேயே மையமா வருது. உசாரா பேசிட்டிய.

கட்டி : கண்ணில தண்ணி வந்துபோட்டு போங்க. கத்ருபமாக பேசிட்டிய.

அருணா : (கண்ணீரை துடைத்து. திருப்தியுடன்) இனிமே நான் என்ன செய்யணும்?

(நாகம்மையும் டாக்டரும் போகிறார்கள்)

வீர : இனிமே கொஞ்ச நேரத்துக்கு உங்களுக்கு வேலை இல்லை. பாத்துட்டே இருங்க. செரி, எல்லாம் சொன்ன மாதிரி நில்லுங்க... வேய் கட்டியம், கையை ஏம்வே சட்டுவம் மாதிரி வச்சிருக்கேரு, சாதாரணமா நில்லும்வே. ரைட்...

(காவலன் சிறகுகள்போல கைகளை விரித்தபடி வருகிறான் அவன் முகத்தில் ஒரு அலகு ஓட்டப்பட்டிருக்கிறது)

காவலன் : (கைத்தாளத்தைக் கொட்டி நடனமிட்டபடி) அச்சுதம், மாதவம், ராமநாராயணம்! ஃபல்குனம் கேசவம், வாசுதேவம் ஃபஜே...

அய்யர் : கருடாழ்வாராக்கும் (துண்டை இடுப்பில் கட்டி) கும்பிடுங்கோ! நாராயணா நாராயணா...

கட்டி : ஓய் பாப்பான், டி.டி. கோசாம்பி என்னவே சொல்லியிருக்காரு? மத்திய பஸ்தர் பகுதியில் வாழ்ந்த பழங்குடிகள் கும்பிட்டு வந்த ஒரு பறவைக் கடவுளாக்கும் கருடன். அதை ஆரியர்கள் பிடிச்சுட்டாங்க.

அய்யர் : ஆரியபவன் சைவம்தானே?

கட்டி : கெட்டுது குடி. ஓய், வரலாற்றுரீதியான பௌதிகவாத இயங்கியல் அணுகுமுறைப்படி விஷ்ணு பூர்ஷுவா, கருடன் பாட்டாளி. அதைத் தெரிஞ்சுக்கிடும் முதல்ல.

கருடன் : (மூக்கைக் கழட்டி. சொறிந்து திரும்ப மாட்டி) கோசர்ம்பின்றது யாரு, பௌத்தன்தானே!

கட்டி : ஆமா, தெரியுமா?

கரு : ஹெஹெஹெ... எண்ணூறு வருஷம் முன்னால அவனை ஒரு தர்க்கசபையில ரெண்டு மீசாம்ச பிராமணனுங்க தோக்கடிச்சு எனக்குப் படைச்சானுவ. அருமையா உப்பும் மொளகாப் பொடியும் தூவி... (சப்புக் கொட்டி) பொதுவா கழுவேத்தின பௌத்த ஜைன ஆசாமிகளை லிரும்பிச் சாப்பிடுவேன். (பிரியமாக) ஏன் தம்பி இப்பல்லாம் ஞானசபை இல்லியா?

கட்டி : இப்பல்லாம் கேஸ் சேம்பர்தான். சாப்பிட்டா நீரும் வுந்துடுவீரு.

கரு: *(சோர்வுடன்)* இந்த பௌத்தன் என்ன சொல்லுதான்?

கட்டி : நீரு பழங்குடித் தெய்வம்னு...

கரு : சீச்சி, ஆதாரமில்லாத பேச்சு. நான் இண்ணைத் தேதி வரை பழையது சாப்பிட்டதில்லை.

வீர : ஓய் கட்டியம், அது புராதன ஜென்மம்வே. அதுகிட்ட போய் சொல்றீரே. ஓய், கருட நாயுடு, இது பத்து ரெண்டாயிரம் வருஷம் முந்தின கதை. நீரு ஆதிவாசிகளுக்க தெய்வம். உம்மை ஆரியன் பிடிச்சு பழக்கி விஷ்ணு வாகனமாக ஆக்கிப் போட்டான்.

கரு : *(அதிர்ந்து)* என்னையா?

கட்டி : உம்ம தாத்தாவ... வாயப்பாரு!

கரு: *(குழம்பி)* ஒண்ணுமே புரியலியே. *(துணிந்து)* அதெல்லாம் பொய்யி.

கட்டி : வாயமூடும்வே, அறிவிருக்கா? வரலாறுன்னா உங்க நாயுடம்மா சுடுத தோசையில்ல புரட்டிப் புரட்டிப் போட. ஆதார பூர்வமாட்டு நிரூபிச்ச விஷயங்களாக்கும் எல்லாம். எப்படிவே நீரு மறுக்கிறீரு? மறுத்துட்டுப் போயிடுவீரா?

கரு: *(பயந்து)* அதாவது... இது எனக்க சொந்த விஷயம் ஆனதுனால...

கட்டி : சொந்த விசயமா? வரலாறு உம்ம சொந்த விஷயமா? என்ன திமிர் இருக்கணும்...

வீர : நாயுடுகாரு, உமக்கோ வயசாச்சு. சின்னப்பயல்களிட்ட எதுக்கு வம்பு? ஒத்துக்கிட்டு பேசாம இருந்திடும்.

கரு: நீரு பேசுவீரு *(கண்ணீருடன்)* நான் விஷ்ணு வாகனம். எட்டாயிரத்தறுநூறு கோயிலில எனக்கு மண்டகப்படி உண்டு. மண்ணை வாரிப் போட்டுடாதிய...

கட்டி : வாயமூடும் வேய். வரலாறுண்ணா மறுக்க முடியாத உண்மைன்னு அர்த்தம். வாயத்திறக்கிறவனுவளை வரலாறு முழுங்கும். வரலாறுன்னா என்னான்னு நெனைச்சேரு. எங்க வரலாற்று நாயகர்கள் விரிச்சுப்போட்டு உக்காருத பாயாக்கும் அது.

மேல்தட்டுக் கிழவர் : பாவிகள், பைத்தியம்னா இப்பிடியா? ஒருவேளை கண்ணுமூட விடமாட்டியளா?

வீர : ஓய் உம்ம வசனத்த மட்டும் பேசும் நீரு...

மே.த.கி: *(கோபாவேசமாகி)* நாடகமா? உம்ம அம்மைக்க இருவத் தெட்டு. பிலேய்... *(உடைந்து)* தூங்கவிடும் வேய். உமக்கு முத்தல். எனக்குத் தொடக்கம். நாடகம் நாடகம்னு என்னையும் உம்ம மாதிரி ஆக்கிடாதியும். *(அழுது)* உம்மை கையெடுத்துக் கும்பிடுதேன்.

கட்டி : தூங்கினா நாடகம் முடிஞ்சுடுமே...

மே.த.கி. : (வெறிகொண்டு) ஐயோ, ஐயோ, ஐயோ! (மண்டையில் அடித்துக் கொண்டு அழுகிறார்.)

கரு : யாரந்த மானுடப்பதர்?

கட்டி : பைத்தியமா நடிக்கிறார்.

கரு : அடடே எதுக்கு?

கட்டி : நாடகத்ல அவன் ரோல் அது.

கரு : என்ன நாடகம்?

கட்டி : உம்ம தாத்தாவ... வாயப்பாரு.

வீர : (எரிச்சலுடன்) வேய் நாயுடு, உம்ம வசனத்தை சொல்லும் வேய்.

கரு : (முழித்து, இளித்து) மறந்துட்டேன்.

வீர : (கைப்பிரதியைப் பார்த்து) ஆபத் பாந்தவனாகிய...

கட்டி : (மலர்ந்து) ஆமா.. சொல்லிடறேன்.

வீர : அமைதி. கவனியுங்க. வசனம் வருது.

கரு : ஆபத் பாந்தவனும், அனாத ரட்சகனும், பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனுமாகிய எம்பெருமான் விஷ்ணு எழுந்தருளும் செய்தியுடன் யாம் வந்தோம். (பபப்பாங் இசை)

அய்யர் : பகவானே, ஒரு விண்ணப்பம்!

கரு : எழுதிக் குடும். மேல ஃபார்வேட் பண்றேன்.

(இசையுடன் நடனமிட்டு ஓரமாகப் போய் உறைகிறார்.)

வீர : அடுத்து சேஷாவதாரம்!

(டாக்டர் நெளிந்து நடனமிட்டபடி வருகிறார்.)

சேஷன் : உஸ்ஸ்... என்ன வெயில். உஸ்ஸ் உஸ்ஸ்...

அய்யர் : சேஷாவதார மூர்த்திக்கு ஆத்மப் பிரணாமம்.

சேஷன் : யாம் சேஷன். இங்கு எல்லாருக்கும் அடையாள அட்டை தரப்பட்டுள்ளதா?

வீர : இது என்ன வசனம்? (குழம்புகிறார்.)

சேஷன் : பக்தா, எம்மைப்பற்றி டி.டி.கோசாம்பி என்னும் அசுரன் அவதூறு கிளப்பியுள்ளதாக அறிந்தோம். அவனை ஹதம் பண்ணவே யாம் இப்போது அவதரித்தோம்.

கட்டி : கோசாம்பி பிராமணனில்லியோ?

சேஷன் : அது இப்பிறப்பில். த்ரேதாயுகத்தில் இவன் பிரசண்ட விகடன் என்ற பேரான அசுரனாக இருந்தான். இவனுக்கு ஒரு தம்பி, ஜனியர் விகடன். இவர்களுக்கும் எனக்கும் லடாய்.

அய்யர் : திவ்யமான புராணம். என்ன காரணத்தால் லடாய் உத்பவிச்சதோ?

சேஷன் : *(கண்ணடித்து)* பலான மேட்டர்தான்.

அய்யர் : *(அரைச் சிரிப்புடன் குரல் தாழ்த்தி)* பார்ட்டி யாரு?

சேஷன் : உளர்வசி!

அய் : ஹெஹெஹெ! செம கட்டை. மகளிர்மட்டும்ல பாத்தேன். அம்மாமி வேஷத்ல கலக்கறா...

சேஷன் : அன்று நாம் அவனை வதம் செய்தோம். அவன் சாகும் தருவாயில் என்னை சபித்தான். என்னை நீர் ஹதம் செய்தீர், கலியுகத்தில் உம்மை நாம் ஹதம் செய்வேன் என்றான்.

அய்யர் : பாபி!

சேஷன் : மகாபாபி. அப்போது அவனை அங்கு வந்த ஒரு பசு நக்கியது. கோ அவனை சாம்பியதால் அவன் கோசாம்பி என்று பிராமண ஜென்மம் எடுத்து பிறந்தான்.

அய்ய : எதுக்கு இப்பேர்க்கொத்த மகாபாபிகள்லாம் பிராமண ஜென்மம் எடுக்கணம்?

கட்டி : புராணம் எழுதணுமே. அய்யரே நீரு அந்தப் புராணத்தை படிச்சேரா?

அய்யர் : எங்க? துளைவடை போட்டே நம்ம ஆயுசு போச்சு துளைவடை வேதாந்தம்னு பேருமாச்சு.

சேஷன் : அஞ்சற்க. அதுவே ஞான மார்க்கமாகும். வடை நம் உடல். துளை ஆத்மா. துளையைச் சுற்றியே வடை உள்ளது. ஆயின் துளையோ வெறும் இன்மையே ஆகும். முடிவிற் பெருகும் பெரும்பாழ் அதுவே.

அய்யர் : *(மடேலென விழுந்து)* அய்யனே ஞானமடைந்தேன். ஆசாரியனே...

சேஷன் : மைந்தா, நீ படித்துளாயா கோசாம்பியின் நவீன புராணம்?

கட்டி : அங்கிங்க புரட்டிப் பாத்தேன். மித்ஸ் அன்ட் ரியாலிட்டின்னு பேரு இங்கிலீஷ் பாஷைல. சமஸ்கிருதத்தில ஐதீக சத்ய விருத்தாந்த மாலிகா. மார்க்ஸிய வேதாந்த ஞான சாரமாகிய புராணம்.

சேஷன் : *(துயரத்துடன்)* அதில் அந்த மகாபாவி எம்மைப்பத்தி பரம ஆபாசமா சில விஷயங்கள் சொல்லியிருக்கான்னு கேள்விப்பட்டேன்.

கட்டி : யாரு சொன்னது?

சேஷன் : வேற யாரு, நாரதன்தான். கேனப்பய அதை தேவ கன்னிகைகள் கிட்டயெல்லாம் சொல்லி இப்ப என்னைப் பாத்தா தேவ்டியா மிண்டைக நமுட்டுச் சிரிப்பு சிரிக்கிறாளுக.

வீர : (ஆர்வமாக) அது என்ன அப்படி அவதூறு?

சேஷன் : நான் அசல் ஸ்ரீரங்கம் வடகலை. என் வாயால அதை எப்படி சொல்லுவேன்?

கட்டி : நீரு நாகர்களோட தெய்வம்னு சொல்லியிருக்கு.

சேஷன் : அப்படிச் சொன்னா பரவாயில்லை இவன்...(கூசி, தயங்கி) இந்தப் பாவி என்னை குறி வழிபாட்டின் அடையாளம்னு சொல்லிப் போட்டானே...

கட்டி : குறி! அப்டின்னா குறிப்பான் எது? (புரிந்து) ஒஹோஹோ ஆஹாஹா! (சிரிக்கிறான்)

வீர : புண்படுத்தாதீரும் வே. பாவம் அய்யங்காரு கண்ல தண்ணி வந்து போச்சு. விடும்வே. நாக்கில நரம்பில்லா பெயல நாலும் பேசுவானுவ...

கரு : எம்பிடு நேரம் இப்டிக் கைய விரிச்சுட்டு நிக்கிறது? அந்தாளை வந்து கோயில் கொண்டருளி, இளவெடுக்கச் சொல்லும். அடுத்தாளு அரங்கேற வேண்டாமா?

அய்யர் : தேவரீர் எழுந்தருளல் வேண்டும்.

(சேஷன் நடனமிடு கோயில் கொண்டருள்கிறார்)

வீர : ஒரு வழியா இதுமட்டும் பெரிய குழப்பம் இல்லாம நடந்து போட்டு. வேய் கருடன், கைய விரிச்சுட்டு நில்லும்வே. சிக்கன் சிக்ஸ்டி பைவ் மாதிரி தொங்கப் போடாம, இளவு...

(கதவு திறக்கிறது இரண்டு நர்ஸ்கள் வருகிறார்கள் அருணாசலத்தை பரிசோதித்து மாத்திரை தந்து ஊசி போடுகிறார்கள்)

அருணா : ஸிஸ்டர் நீங்களும் நாடகத்தில உண்டா?

நர்ஸ் : படுங்க. காலைல சரியாயிடும் (கட்டியங்காரனிடம்) என்ன மாணிக்கம் சார் இண்ணைக்கும் நாடகமா?

கட்டி : செம கலக்கல் நாடகம் ஸிஸ்டர். (வெடகி) எனக்கு கட்டியங்காரன் வேஷம்.

நர்ஸ்-2 : மாத்திரை சாப்பிட்டியளா?

கட்டி : அப்பவே சாப்பிட்டுட்டேன். தண்ணிகூட குடிச்சுட்டேன். அப்புறமாட்டு ஒண்ணுக்குப் போனேன்.

நர்ஸ் - 1 : சரி, நாடகம் முடிஞ்சதும் சமத்தா படுத்துத் தூங்குங்க.

(கிளம்புகிறார்கள்)

நர்ஸ் - 1 : என்னடி இது, எப்ப பார்த்தாலும் நாடகம், நாடகம்னு...

நர்ஸ் - 2 : *(சிரித்து)* இந்த ஒரு வார்டிலதான் அடிதடி இல்ல. நாடகத்தோட போயிடும்.

(போகிறார்கள்)

(திடீரென்று பின்னணியில் கோரஸ்)

இதுஸ்ரீ மகாபாரத கதை ஓஓ
மகாபாரதக் கதை
ஒரு கதைக்குள் பலகதை
பலகதைக்காய் ஒரு கதை
இது ஸ்ரீ மகாபாரதக் கதை
சத்ய தர்மங்கள் சாஸ்வதம்
எனும் தர்ம சம்ஹிதை தன் கதை
இது ஸ்ரீ மகாபாரத கதை'

(சங்கொலி, மணியோசை, பரபரப்பான இசை ஸ்டாலின் மீசையுடன் சுருட்டிவிட்ட ஜிப்பாக் கையும், காதில் துண்டு பீடியும், கழுத்தில் சிவப்புக் கைக்குட்டையுமாக கெ கெ எம் வருகிறார் மிடுக்காக நடந்து சேஷ கருட வாகனங்களுக்கு நடுவே அபய வரத கைமுத்திரைகளுடன் நின்றருள்கிறார்)

கோரஸ் (பயங்கர உச்சரிப்பில்)

யதா யதா ஹி தர்மஸ்ய
க்லானிர் பவதி பாரத
அப்யுத்தான மதர்மஸ்ய
ததாத் மானம் ஸ்ருஜாம்யஹம்
பரித்ராணாய சாதூனாம்
வினாசாயச துஷ்க்ருதாம்
தர்ம சம்ஸ்தாபனார்த்தாய
சம்பவாமி யுகே யுகே

(சங்கு, சேகண்டி, மணி ஓசைகள்)

அய்யர் : (கை மணியுடனும் தீபாரதனைத் தட்டத்துடனும் முன்வந்து) ஓம் வசுதேவாய நமஹ: ஓம் சுரேஸாய நமஹ: ஓம் கிருதாய நமஹ: ஓம்....

கட்டி : வோய் பாப்பான், என்னவே விளையாடுதீரா? இங்க பருத்திநூலொதிகளும் உண்டு. தமிழில சொல்லும் வேய். எங்களுக்கும் புரியவேணாமா?

அய்யர் : அதான் பிரச்சினையே ஸ்வாமி. (பரிதாபமாக) புரிஞ்சிடுமே.

கெ.கெ.எம். : என்னத்தயாம் ஒதி சட்டுனு சோலிய முடியுங்கடே. நின்னு காலு கடுக்குது.

அய்யர் : பரம்பொருளே போற்றி! சித்தாந்த ரூபா போற்றி! வரலாற்றுப் பொருளே போற்றி! புரட்சியழுதே போற்றி! புதுயுக சிற்பி போற்றி!

(மலர்கள் சாத்தி, தூபதீபம் காட்டி, முறைப்படி வழிபாடு செய்கிறார் பிறர் கைகூப்பியும், தலைக்குமேல் கைகூப்பி எம்பியும் பரவசமாக சாமி கும்பிடுகிறார்கள்)

அய்யர் : பிரசாதம் எடுத்துக்குங்கோ (தட்டை நீட்டி சுற்றி வருகிறார்)

கட்டி : தவாரிஷி, அடியேங்களை காத்தருளல் வேண்டும்.

அய்யர் : தவாரிஷிகளுக்கெல்லாம் தலைவன் எம்பிரான். அவனைப் பரம்பொருள் என்றன்றி வேறெங்ஙனம் அழைக்கலாகும்?

வீர : தவாரிஷி! தவாரிஷி! (பரவசமடைகிறார்)

அய்யர் : ஓய், உம்ம கிட்டதானே ஓய் சொன்னேன்?

கெ.கெ.எம் : (அறிதுயில் விழித்துப் புன்னகையுடன்) பக்தா அவரை வையாதே. இந்த அவதாரத்தில எமது திருநாமம் அதுவாகும்.

அய்யர் : சுவாமின், எங்களுக்கு தேவரீர் திவ்ய அவதார புண்ய புராணத்தைக் கூறியருளல் வேண்டும்.

கெ.கெ.எம். : மடச் சனியனே, அறிவு வேண்டாமா? ஊத்த வாயும் அவனும். எங்கியாம் சாமி நேராட்டு புராணத்த சொல்லுமா?

அய்யர் : பின்ன நாங்க எப்பிடி கேட்டு இழவெடுக்கிறது? சொல்லித் தொலையுமே.

கெ.கெ.எம். : முனிகளில் நான் கபிலன். இப்போது தீர்க்கதரிசி அவதரிப்பார்.

(வெளியே மணியோசை)

கட்டி : வரப்போவது யார்? அந்த ஞானத்திருவுரு யாது?

வீர : அதான் வராகளே. வாய மூடிட்டு இருமே; ஊடாலப்பூந்து பிரான்டாம.

குரல்

ராகுல் ஏன் மேட்சுக்கு வரலை?
ம்ம்ம பல்லுவலி
பல்லுவலியா அப்பிடினா என்ன?
அடிக்கடி கிருமிகளினால

கெ.கெ.எம். : (திடுக்கிட்டு) பக்தா இது என்ன பாசுரம்?

வீர : இது விளம்பரம்.

கெ.கெ.எம். : யாமே பரம்.

அய்யர் : கொஞ்சம் பொறுமையாகத்தான் இருமே. இப்ப நாங்கல்லாம் இல்லியா? பதினஞ்சு நிமிஷத்துக்கு ஒருக்கா இதுமாதிரி வந்திட்டேதான் இருக்கும்...

(உள்ளே கொக்கரக்கோ எனும் ஒலி)

கட்டி : கோழியா? யார்டாது?

(இடையில் கோழியுடன் ஒருவர் வருகிறார்.)

வந்தவர் : உன்னையே நீ அறிவாய். தத்வமசி.

கட்டி : ஐயா யாரோ?

வந்தவர் : யாம் கீழை மண்ணிலே கபிலர். மேலை மண்ணிலே சாக்ரடீஸ். பாடபேதம் பலவிதம்.

கட்டி : புரட்சி வணக்கம் ஆதி தோழர். இதென்ன கோழி?

கபிலர் : பாரச்சனியன். இதைச் சுமந்து மாரடிக்க ஆரம்பிச்சு வருஷம் மூவாயிரம் ஆச்சு.

கட்டி : எப்பிடி?

கபிலர் : இது நான் அஸ்க்ளோபீஸுக்கு கொடுக்க வேண்டிய கோழி. கடன் வாங்கியது. திருப்பிக் குடுக்கிறதுக்குள்ள பாலாழி மதனம் தொடங்கிப்போட்டு. அந்தப் பக்கம் பாகன் வம்சம். இந்தப் பக்கம் செமிட்டிக் வம்சம். பெரிய வடம்வலி. கலக்கிப் போட்டானுவ. நம்ம மேற்பார்வையிலதான் சம்பவம்.

கட்டி : இயங்கியலமுதம் விளைந்த புண்ய ஐதீகமல்லவா. (மெய் சிலிர்க்கிறான்.)

கபிலர் : விஷமும் உண்டு. அதை நான் குடிச்சேன். பெஞ்சாதி ஓடிவந்து...

கட்டி : (உற்சாகமாக) கழுத்தைப் பிடிச்சிட்டாள்! தெரியும். ஐயனே, நீலகண்டனே...

கபிலர் : அது வேற கதை. இவ சண்டாளி. வாயப்பிடிச்சிட்டா. நேர பரலோகம் வந்திட்டேன். கோழிய கிரீட்டோ கிட்டே குடுத்திட்டு வந்தேன். பாவிப்பய சூப் போட்டுட்டான். கடன் பாக்கி நிக்குது.

கட்டி : பரலோகத்தில செட்டில் பண்ண வேண்டியதுதானே?

கபிலர் : எப்பிடி? அவன் நரகத்தல இல்ல இருக்கான்? நான் இருக்கியது இயங்கியல் சொர்க்கம்லா?

கோழி : ரிபப்ளிகோ கோ! ரிபப்ளிகோ கோ!

கட்டி : அதென்னது, விசித்திரமா கத்துது?

கபிலர் : ஹிஹி நான்தான் பழக்கிலேன். எனக்க தத்துவமாக்கும் அது... ஹெஹெஹெஹெ...

கட்டி : என்ன தத்துவம்?

கரு : அதாகப்பட்டது த்ரோதாயுகத்திலே நான் சாங்கிய காரிகை...

வீர : கைவிளக்கேந்தின காரிகைதானே?

கபிலர் : (நொந்துபோய்) வேய், குழப்பாதீரு. இது எனக்க புஸ்தகம்... அதில நான் ரிபப்ளிக்குனு ஒரு பூலோக சொர்க்கத்த உண்டாக்குறதுக்கு உண்டான மாஸ்டர் பிளான் ஒண்ணு போட்டேன். இதாக்கான்ற ஊரில அத நடமொறப்படுத்தவும் பாத்தேன்...

கட்டி : இரும், அது பிளேட்டோ இல்லியோ?

கபிலர் : ஹெஹெஹெ.... அது எனக்க புனைபேரு. மேற்கோள் இல்லாம எப்பிடி சித்தாந்தம் பேசறது? எனக்கானா முன்னோடி யாரும் இல்லை. பாத்தேன் பிளேட்டத் திருப்பி பிளேட்டோன்னுட்டேன்.

கட்டி : அது என்ன சித்தாந்தத்தின் அடிப்படையில் கட்டமைக்கப் பட்டது?

கபிலர் : சத்வ ரஜோ தமோ குணங்கள் சரிசமமா இருக்கிற நிலைமைக்குப் பேரு ஆதி கம்யூனிசம். அப்ப பொதுகுணம் சாந்தம். பிறகு ஒரு பெருவெடிப்பு. டண்டமார். பிறகு முக்குணமும் குழம்பிப் போயி நாலுவர்ண அமைப்பு உருவாச்சு. இட்டு ஈகோண்ணு ரெண்டு வர்க்கம். நடுவால சூப்பர் ஈகோண்ணு ஒரு பெட்டிப் பூர்ஷுவா வர்க்கம். பெரிய கலாட்டா ஆயிப்போச்சு. கட சீல புரட்சி. பிறகு முக்குணமும் சமமாட்டுஇருக்கிற கம்யூனிச அமைப்பு மறுபடியும் வந்திடும். சூத்ர வைஸ்யாதிகள் பிராமண க்ஷத்ரியர்களுக்குக் கட்டுப்பட்டு க்ஷேமமா இருப்பாங்க. செம்படையும், கூட்டுப்பண்ணையும், பொலிட் பீரோவும் ஒரே படித்துறைல தண்ணி குடிக்கும். அதான் ரிபப்ளிக்கு. பப்ளிக்குக்கு நேர ஆப்போசிட்டு. பூமியில இதுதான் சொர்க்கம்னு சொல்லலாம். ஓம் சத்.

அய்யர் : ஓம்! ஓம்! ஓம்!

கெ.கெ.எம். : போட்டு அறுக்கிறானே கிளவன். இவன உள்ள அனுப்பிப் போட்டு ரம்பையும், ஊர்வசியும் வந்து ஒரு டான்ஸ் போட்டாத்தான் ஒரு டெம்போ கிட்டும். நாடகம்னு சொன்னா கலையம்சம் வேண்டாமா? இளவு, புஸ்தகம் படிக்கியது மாதிரில்லா இருக்கு.

கபிலர் : அந்த ஆதி இயற்கைல...

கெ.கெ.எம். : (பொறுமை இழந்து) போயி குந்தி வெளிக்குப் போவும். போய்யா...

(சேஷன் கபிலரை உள்ளே தள்ளிவிடுகிறார்)

கெ.கெ.எம். : தத்துவம் பேச கண்ட எடம். இதென்ன பள்ளிக்கூடமா? எனக்க வெளையாடல் இன்னும் பாக்கி நிக்குவு.

கட்டி : பெறவு என்ன ஆச்சு?

கெ.கெ.எம். : துள்ளாதியும். அதச் சொல்ல ஆளு வருது. *(கம்பீரமாக)* எம் பௌராணிகர் இப்போது அவதாரம் எடுப்பார்.

வீர : முத பௌராணிகர் நம்ம முஸ்தபாக் கண்ணுதானே? எங்க காணும்? தூங்கிட்டானா?

(உள்ளே 'பஜகோவிந்தம் பஜகோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே' பாடல் சிப்ளாக் கட்டை ஒலி)

அய்யர்: ஆச்சார்ய ஸ்வாமிகள் பராக்! பராக்! ஒத்துங்கோ! ஒத்துங்கோ! ஜயஜய சங்கர! ஹரஹர சங்கர!

வீர : உமக்கு இந்த டயலாக் இல்லியே!

அய்யர் : ஹிஹி. உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.

(உள்ளிருந்து ராமசுந்தரம் ஜிப்பா, சோடாப் புட்டிக் கண்ணாடி, புத்தகச் சுமையுடன் வருகிறார்)

ராம: நளினீ தலகத ஜலமதி தரளம்
தத்வத் ஜீவன மதிசய சபலம்!
பஜகோவிந்தம் பஜ கோவிந்தம்
கோவிந்தம் பஜ மூடமதே.

அய்யர் : *(நெக்குருகி)* தன்யனானேன். இப்ப பாடின பாட்டுக்கு தாத்பர்யம் சொல்லி வைத்தால் க்ஷேமம்.

ராம : இந்த லோகத்லே பலவிதமான லீம்ப்ஸ் இருக்கு. அதுல தாமரை இலை, லோட்டஸ் லீம்ப், ரொம்ப சிரேஷ்டம். அதுமேல தண்ணீத்துளி அதாகப்பட்டது வாட்டர் ட்ராப் அசஞ்சாடிண்டே இருக்கு. அதே மாதிரி ஜீவனம், அதாகப்பட்டது லைம்ப், அதிசய சபலம்; அதிசயமான விதத்தில தத்தளிச்சிண்டிருக்கு. முதலாளித்துவ பொருளாதார அமைப்போட நிலையின்மைய பகவத்பாதாள் தெய்வீக உவமையா எடுத்துச் சொல்றார் இதிலே.

அய்யர் : புண்யம், புண்யம். கேட்க நூறு கோடி தவம் செய்யணுமே.

கட்டி : ஜகத்குரு கனிந்தருளி தவாரிஷியவதார திருப்பெரும் புராணத்தினை அடியேங்களுக்கு திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்.

ராம: *(உற்சாகமாக)* அதுக்காத்தானேங்காணும் மெனக்கெட்டு வேசம் கெட்டி வந்திருக்கேன்? ஆடு அறுக்கிறதுக்குள்ள கொட்டை சுட்டு திங்கணும்னு அலைஞ்சா எப்பிடி? பொறும்.

அய்யர் : (பரவசமாகி) தெய்வீக உவமை! தெய்வத்தின் குரல்!

கட்டி : (பதறி) முஸ்தபா வாய நீட்டிட்டியே...

வீர : அலம்பாதியும். அவன் ஒரு மாதிரி பாலீஷோட்டு போறான். விட்டு பிடிப்பம்.

ராம : (சிப்ளா கட்டையை தட்டி) ஆதௌ கீர்த்தனா ரம்பத்திலே

அய்யர் : ஆமா...

ராம : ரம்பத்திலே...

அய்யர் : ஆமாமா...

ராம : மண்ணுலகின் திலகமெனப் பொலிந்த ரஷ்ய தேசம் தனிலே...

அய்யர் : ஆமா...

ராம : ஜார் வம்சம் என்றொரு அசுர வம்சம் ஆட்சி புரிந்து வந்தது. இதற்கு 'ஜாரே சகாம்சே அச்சா' என்ற மெய்க் கீர்த்தியே சான்றாகும்.

அய்யர் : போடு, ஆமாமா!

ராம : அவ்வமிசத்து இறுதி மன்னன் நிகலாய் இரண்டாமன். இவனாகப் பட்டவன் அனேஹ துஷ்க்ருத்யங்கள் பண்ணியும், பசுக்களையும் புரலட்டேரியன்களையும் ஹதம் செய்தும் மகா பாபம் செய்தான். அவனது கொடுமை பொறுக்காத தேவர்கள் மோர்க்கடலில் பள்ளி கொண்டிருந்த எம்பெருமானின் திவ்ய பாதங்களை வணங்கி...

அய்யர் : சுவாமின், அது பாற்கடல் இல்லியோ?

ராம : அது அப்ப. துவாபர யுகத்திலே ஒரு மகாபாபி அதை உறைகுத்திப் போட்டான். நாறிட்டுக் கிடக்கு இப்ப.

கட்டி : கதயச் சொல்லும்வே.

ராம : தேவர்கள் வணங்கி, நாசி பொத்தி, பணிந்து கண்ணீர் உகுத்து அய்யனிடம் மன்றாடினார்கள்.

அய்யர் : ஆகாகா!

ராம : விஷ்ணுவாகப்பட்டவர் தன் மலர்விழி திறந்து இவ்வாறாக அருளிச் செய்தார். (ஆர்மோனிய இசை) அஞ்ச வேண்டாம் வானவரேஎ.... ஐயம் தெளிவீர் நீரேஎ... என்றருளினார். ஏற்கனவே சீமி கபிலன் கனவு கண்டதுபோல இவ்விஷயங்களை யாம் ஒரு மாதிரி செட்டப் பண்ணி விட்டோம்.

கட்டி : (அதிர்ந்து) முஸ்தபா (நொந்து) முஸ்தபா, டேய்...

ராம : (கடுப்பாகி) கிடவும்வேய்... ஒருவசனம் ஒளுங்கா சொல்ல விடமாட்டானே, ஸைத்தான்.

அய்யர் : நீங்க திருவாய் மலருங்கோ ஸ்வாமின்.

ராம : பகவானாகப்பட்டவர் உடனே தன் கருட சேஷி வாகனங்களை மண்ணுக்கு அனுப்பினார். அவர்கள் மார்க்ஸாச்சார்யர் எங்கல்ஸாழ்வார் என்ற திவ்ய நாமம் கொண்டு அவதரித்தார்கள். ஒருவர் முடவர் ஒருவர் குருடர். முடவர் நடப்பார் குருடர் வழிகாட்டுவார் (குழம்பி) செரியாவேல்லியே (தெளிந்து) நேர மாத்தியாக்கும். அதாவது குருடர் வழிகாட்டுவார் முடவர் நடப்பார்.

கட்டி : முஸ்தபா! (மனமுடைந்து) முஸ்தபா கொல்லாதடே...

ராம : யா ரஹ்மான்! இந்த பெலாலுக்க நாடகத்ல நடிக்க வந்ததுக்கு வல்ல முட்டு சந்திலயும் போயி ஒஸான் பணி எடுக்கலாம். சக்காத்துக்கு நடிக்கியதுமில்லாம...

வீர : வேண்டாம்வே கட்டி; விடும். சளமாக்கிப் போடுவான். அடங்குடே முஸ்தபா. உன்னிஷ்டப்படி நடி.

கோழி : ரிபப்ளிகோ கோ! ரிபப்ளிகோ கோ!

வீர : (திடுக்கிட்டு) இதெங்க வந்தது?

கட்டி : இது புதுயுகம் தேடும் சிம்புட் பறவை!

கெ.கெ.எம். : அப்பமே கெவுனிச்சேன். கிழவன் நைசாட்டு விட்டுட்டுப் போயிட்டான். தொரத்துடே சனியன.

கட்டி : ஆயிரம் வருசமா தத்துவஞானிகளை கூவியெழுப்பின புரட்சிக் கோழி!

கருடன் : நான் வேணுமானா அதை கையில் வச்சுகிடுதேன். (சப்புக் கொட்டி) சிக்கன் சாப்பிடப்படாதுண்ணு வைத்தியர் சொல்லியிருக்கார்.

(கோழியைப் பிடிக்க முடியவில்லை)

அய்யர் : நீரு கதய சொல்லும் ஸ்வாமின். இப்பிடியே போனா நாடகத்த எப்பிடி முடிக்கிறது?

ராம : அந்த இரட்டை ஆச்சாரியர் கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ என்கிற பதிகமும் மூலதனம்ங்கிற காவியமும் எளுதினாங்க. சைடில ஹெலன் டெமுத்துன்ற சூடிக்கொடுத்த சுடர்க்கொடியோட தில்லறை தமாஷும் உண்டு.

அய்யர் : தெய்வீகம்.

ராம : தேவர்கள் லண்டன்ங்கிற திருத்தலத்துக்கு வந்து ரிஷிகளைப் பணிந்து வணங்கி கிரந்தங்களை ஐயம்திரிபறக் கற்றுத் தெளிந்தார்கள். அப்போது ரிஷியானவர் திருவாய் மலர்ந்து இவ்வாறு அருளிச் செய்தார். ஹம்பர்களே...

கட்டி : முஸ்தபா (உடல் நடுங்குகிறார்)

ராம : (கோபித்து) இவன் யாருவே, எடயில பூந்து கத்துயதுக்கு? நானிங்க உயிர விட்டு வசனம் சொல்லுதேன். தோலைக்களட்டினா காக்கிலோ கறி தேறாத பெய; பேசவாறான்...

வீர : விடும்வே கட்டி. கசாப்புக்கடைக்காரன் இந்தமட்டும் சமாளிச்சுப் போறான், அதைப் பாத்தேரா நீரு? நீ மேல போடே முஸ்தபா.

ராம : ரிஷியானவர் சொன்னார். இந்த நூல்களிலே வேண்டிய தீர்க்க தரிசனம் உண்டு. படிச்சுப் பாருங்கடே. சங்கதி கிளினாட்டு தெரிஞ்சுப்போயிடும். இதாக்கும் கித்தாப்புக. (நூல்களைப் பிரித்துப் படித்து) ராதுகா பதிப்பகம், மாஸ்கோ. டாஸ் காப்பிட்டல் நாலு வால்யூம். ரிக், யஜூர், சாமம், அதர்வம்னு பேரு நாலுக்கும். கடசீ வேதம் பிராக்டிகல். ஹோமம், கூட்டுப்பண்ணை, ஜந்துபலி, நரபலி, இத்யாதி...

அய்யர் : அந்த கிரந்தங்களோட தாத்பர்யம் என்னவென்று சொல்லியருளினா நன்னாருக்கும்னு படறது.

ராம : மூணாம் வால்யூம் எடுங்க. எங்கல்சு எழுதின சுவிசேஷம். மூன்றாம் அத்யாயம் ஏழு எட்டாம் வசனங்கள். புரட்சிக்கு அன்பானவர்களே, இந்த இனிய காலையில் தேவ வசனத்தைக் கேட்போமாக.

கட்டி : (படிக்கிறான்) அப்போது பாலைவனத்திலே வெட்டுக் கிளிகளைத் தின்றபடியும் சுனை நீரை அருந்தியபடியும் ஒருவன் அலைந்து திரிந்தான். அவன் புரட்சிக்கு ஸ்நானம் செய்விப்பவனாக இருந்தான்.

ராம : ஆட்டுக்குட்டிகளே, இவ்வாறாக வேதத்தில் படித்ததும் தேவர்கள் ரஷ்யாவுக்கு திரும்பினார்கள். அங்கு இலெனின் என்ற புரட்சி வீரன் தோன்றினான். இவன் மகா மாயாவியாக இருந்தான் என்பது 'இலெனின் உளன், உளனெனின் இலன்' என்ற பாடலால் அறியப்படுகிறது.

அய்யர் : ஆகா!

ராம : ஆகா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி. அசுரன் வீழ்ந்தான். தேவர்கள் பூமாரி சொரிந்தனர். இவ்வாறு 'அவன் கட்டமண்ணாப் போவான்' என்ற தீர்க்கதரிசியானவர் சொன்ன வாசகம் பலிக்கு மாறாயிற்று.

அய்யர் : பிறகு?

ராம : படிடே தம்பி. மார்க்ஸு எழுதின சுவிசேஷம் பத்துக்கு பதினெட்டு படி.

கட்டி : (நூலைப் புரட்டி) நானோ உங்களுக்குத் தண்ணீரால் ஸ்நானம் செய்விப்பேன். எனக்கு பின்னால் வருபவன் உங்களுக்கு ரத்தத்தால் ஸ்நானம் செய்விப்பான்.

அய்யர் : *(புல்லரித்து)* அடாடா!

ராம : அந்த தீர்க்கதரிசனம் பலிக்கும்படியாகப் பிறந்தவர்தாம் நம் தவாரிஷியவதார மூர்த்தி.

அய்யர் : பரம்பொருளே! முழுமுதலோய்!

ராம : நம்ம ரோல் அம்பிடுதேன். இனி மிச்சத்த மத்தவன் சொல்வான்.

(வெளியே குரல்: 'பூர்ணமிதம் பூர்ணமதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே பூர்ணச்ய பூர்ண மாதாய பூர்ணமேவா வசிஷ்யதே...'' கெ.ஆர்.எஸ் நிதானமாக உள்ளே வருகிறார்.)

கெ.கெ.எம். : வருக பக்தஞானியே, உம்வரவு நல்வரவாகுக.

கெ.ஆர்.எஸ். : அடி... அடி... அடி...

கட்டி : ஆள் பாக்கிறது மாதிரி இல்ல, அடிதடிப் பார்ட்டி போலிருக்கு.

கெ.கெ.எம். : பொறும். அவர் சற்று சொற்பிறழ்வு உள்ளவர், நாக்கு போதாது.

கட்டி : செந்நாப் போதார்?

கெ.ஆர்.எஸ். : அடி அடி தொழுதேன் அய்யனே.

கெ.கெ.எம். : அமர்க அந்தணரே.

கோழி : ரிபப்ளிகோ கோ! ரிபப்ளிகோ கோ!

வீர : *(கோபித்து)* இந்த சனியன் ஒண்ணு எடம்பொருள் தெரியாம...

கெ.ஆர்.எஸ். : எதுவும் பூரணமே. அதுவும் பூரணம். இதுவும் பூரணம் எதை எப்பிடிப் போட்டாலும் மிஞ்சுவது பூரணமே! அதனாலே எதைப்பத்தியும் கவலைப்பட வேண்டாம் *(சிரித்து)* எல்லாத்தயும் படிப்படியாட்டு பூரணமாக்கிப் போடலாம்.

அய்யர் : ஓம் தத் சத்!

கெ.கெ.எம். : எடுத்து விடும்மே.

கெ.ஆர்.எஸ். : எம்பிரான் அவதரித்தது ஜார்ஜியாவிலே. அங்கு அவர் இளமையில் உறியாடி, வோட்கா திருடியுண்டு, கோபிகா வஸ்திராபகரணம் செய்து, காளிங்க மர்த்தனம் பண்ணின கதைகள் சோவியத் கதைக்களஞ்சியம் பாகம் ஒண்ணிலே விரிவா சொல்லியிருக்கு. குறிப்பா சொல்லணும்னா பூதனா மிகாயெலெவ்னா என்கிற குளக்கரக்கிளை அய்யன் முலையுறிஞ்சியே கொன்றதை சொல்லணும். அய்யனின் உணவுப் பழக்கத்தை காட்டும் கதை என்பதோட இது சிற்காலத்தில புதிய பொருளாதாரக் கொள்கைங்கிற பேர்ல உக்ரைன் தேசத்தில பிரயோகிக்கப்பட்டதும் வரலாறு.

அய்யர் தீர்க்க தரிசனமகாப்பிரபோ!

கே.ஆர்.எஸ். : இரண்டாம் உலகப்போரிலே அய்யன் ஆல்ப்ஸ் மலையைப் பிடுங்கி குடையாக்கி தன் மக்களை ஏவுகணைகளிலிருந்து காத்ததும் ஐதீகம்.

அய்யர் : அய்யனே, ஆல்ப்ஸ் பாணியே, அடி தொழுதேன் ஆண்டவனே.

கே.ஆர்.எஸ். : குளக்குகள்ங்கிற அசுர வம்சத்தை பூண்டோட அழிச்சு அய்யன் குளக்கு கதை முடித்த பெருமாள் என்று அறியப்படலானார்.

அய்யர் : புண்யம்! புண்யம்!

கே.ஆர்.எஸ். : பக்தி பழுத்த காலகட்டம் அது. உண்ணும் வெற்றிலை, பேசும் சித்தாந்தம், புகைக்கும் துண்டுபீடி, குடிக்கும் சிங்கிள் டீ எல்லாம் அய்யனே என்றிருந்த பரமபக்தர்கள் உருவானாங்க. ரணதிவாழ்வார்னு ஒருத்தரை அய்யன் முதுகைத் தடவி நம்மாழ்வார்னு சொன்னதாகவும் கதை உண்டு. அய்யன் புகழ் சொல்லி மாளாது. ஆனா இங்கசீன் முடியுது. போட்டு இழுக்கப்பிடாது பாருங்க. வேண்டியவங்க சோவியத் கலைக்களஞ்சியங்களில அய்யனோட சகஸ்ரநாமங்களை அகர வரிசைப்படி பார்க்கலாம். இப்ப அய்யன் பூரண அலங்கார விபூஷிதனா காட்சியளிப்பார்.

அய்யர் : ஒத்துங்கோ! ஒத்துங்கோ.

கட்டி : யோவ் பாப்பான், தமிழ்ல சொல்லுய்யா...

அய்யர்: (பரிதாபமாக) இது தமிழ்தாங்க.

கட்டி : (ஏமாற்றமாக) அப்பிடியா, கேட்டுக் கேட்டு இதையும் மந்திரமாக்கும்னு நெனைச்சிட்டேன்.

(கே கே எம். அபய வரத ஹஸ்தங்களுடன் நிற்க மணியோசை சங்கொலி)

குரல் :

இது ஸ்ரீ மகாபாரத கதை ஓஓ
மகாபாரத கதை!

வேறொரு குரல்: நிகழ்ச்சியின் இப்பகுதியை வழங்கியோர் ஸ்மித் லைன் அன்ட் பீச்சாம்.

வீர : (திருப்தியுடன்) ஒரு வழியா நாடகம் முடிஞ்சது. இனி ஒரு சீன் பாக்கி. முடிச்சா இளவ ஏறக்கட்டிட்டு போய்ச் சேரலாம்.

அருணா : (பயந்து எழுந்து) இல்ல, இது நாடகமில்ல. இது நிஜம். இது பைத்தியக்கார ஆஸ்பத்திரி.

வீர : படும்வே. உமக்கு இப்ப டயலாக் இல்ல.

அருணா : எல்லாம் எனக்க பிரமயாக்கும். நான் உம்ம நாடகத்த விடாம படிச்சேன். கனவில நீரு வந்தேரு. இல்ல கனவில்ல (குழம்பி) அய்யோ

ஒண்ணுமே புரியல்லியே (அழுது) பயமா இருக்கே பயமா இருக்கே... அம்மா! நாகம்! நாகம்! (அலறுகிறான்)

வீர : எப்பிடி பாத்தோஸ்? (பெருமிதமாக) மானுடப் பேருணர்வுகளின் மோதலே நாடகம்!

கட்டி : ஆனா கொஞ்சம் ஓவர்.

வீர : (திரும்பி) ஸ்கிரீனைப் போடுவே. சீன் முடிஞ்சு மணிக்கூர் ஒண்ணாவுது. தூக்கிட்டு நிக்குதான்.

கோழி : ரிபப்ளிகோ கோ! ரிபப்ளிகோ கோ!

வீர : (கடுப்பாகி) சனியனைக் கொல்லுடே.

(திரை)

காட்சி 3

(டாக்டர் அருணாசலத்தைப் பரிசோதிக்கிறார் அருகே நர்ஸ்.)

டாக்டர்: கண்ணைத் திறங்க...

(அருணாசலம் திறக்கிறான்)

டாக்டர்: காதில ஏதாவது சத்தம் கேக்குதா?

அருணா: இந்தப் பைத்தியக்காரனுங்க போடற சத்தம்தான்...

டாக்டர்: சாப்பிட்டிங்களா...?

அருணா: நாகம்மை!

டாக்டர்: மனைவி ஊட்டினாங்களா? நாக்கை நீட்டுங்க.

அருணா: நாக்கில நாம பேசின விஷயங்கள்தானே டாக்டர் இருக்கும். பேசப் போற வசனங்களை எப்படிக் கண்டுபிடிப்பீங்க?

டாக்டர்: படுத்துக்குங்க.

அருணா: பாவம், இவருக்கு வசனமே குடுக்கலை (அனுதாபத்துடன்) சோட்டா கேரக்டர்போல இருக்கு. டாக்டர், போஸ்ட்மேன், போலீஸ்லாம் அப்பிடித்தான்.

(டாக்டர் போகிறார்)

வீர: (எழுந்து சிரித்தபடி) போட்டுக் குளப்பிட்டீரய்யா. அவரு டாக்டர். நாடகம் இனிமேதான் துடக்கம்.

கே.கே.எம்.: பக்தா நிண்ணு நிண்ணு காலு கடுக்குது.

வீர: இந்த நாடகத்ல உமக்கு நிண்ண பெருமாள் வேஷமாக்கும்.

கே.கே.எம்.: இடையில ஒரு அரைமணிக்கூர் அனந்தசயனம் கிட்டினா கொள்ளாம்.

வீர: பாப்பம்.

ராம : *(ஊடே புகுந்து)* இந்த திரு அவதாரத்திலே அய்யனின் திருவிளையாடல்கள் தொடங்கப் போகின்றன. வாழி நலம் சூழ.

கெ.கெ.எம். : என்னத்தை சூழ்ந்து என்னத்தை நொட்டுயதுக்கு... காலுவலி கொல்லுது மனுசன...

(ஒருவன் பாய்ந்து வருகிறான்.)

வந்தவன் : அய்யனே, அபயம் அபயம்!

கெ.கெ.எம். : என்னடா பக்தா?

வந்தவன் : *(ராமசுந்தரத்தை வணங்கி)* அய்யனே, அடியேங்களைக் காத்தருள்க!

ராம : சொல் பக்தா.

கெ.கெ.எம். : நான்தான் கேக்கிறன்ல *(கோபமாக)* சாமி இங்க இருக்கு, பூசாரிட்டயா வரம் கேக்கிற? எரப்பாளி.

வந்தவன் : கட்சி நடமொற இருக்கு. த்ரு பிராப்பர் சானல். சலம்பாம ஒதுங்கி நில்லும்வே. *(திரும்பி)* அய்யனே என் பெயர் வராகமுகன். ஹைமலோக வாசி.

ராம : ஹிமபூமியில் என்ன செய்கிறீர்கள் நீங்கள்?

வந்தவன் : கற்பகவிருட்ச அபிவிருத்தி நிலையம் ஒண்ணு, ஒருங்கிணைந்த காமதேனு வளர்ப்பு முகாம் ஒண்ணு இருக்கு. *(குரலைத் தணித்து)* வாரம் ஒருமுறை யாகம் நடத்தி சகல தேவதைகளையும் பிரீதி செய்துவிடுவோம்.

ராம : பலிமிருகம்?

வந்தவன் : குளக்குகள்தான். சில சமயம் கசாக்குகளும் அகப்படுவ துண்டு.

ராம : திரிபுவாதிகள்?

வந்தவன் : அந்த வம்சமே அழிஞ்சுபோச்சு எஜமான்.

ராம : நன்று. இப்போது என்ன பிரச்சினை?

வந்தவன் : அவிஸில் பங்கு குறைவதாக ஓரிரு தேவதைகள் லந்து பண்ணுகின்றன. *(நாத்தழுதழுக்க)* அதனால் என்னையே பலியாக்கப் போவதாக வதந்தி...

ராம : பயப்படாதீரும். வரலாறு அனைத்துமறியும். அதற்குப் பெரும்பசி.

கட்டி : வரலாறு, அது எங்க?

ராம : மூடா, நமது கொட்டிலில் தீனிபோட்டு அதை வளர்ப்பது எதற்கென்கிறாய்?

கட்டி : அதுவா?

ராம : நம்ம புரட்சி விஞ்ஞானிகள் டி.ரெக்ஸ், டிரைனேசரஸ் அப்பிடீன்னு ரெண்டுவித வரலாறுகளை உண்டு பண்ணியிருக்காவ. மாஸ்கோ சர்வதேச உயிரியல் பூங்காவில சுற்றுலாப் பயணிகளுக்கு காட்டறது சைவப் பிராணி. மொத்து மொத்துண்ணு கால்வச்சு நடந்து தழையத்தின்ணு சாணிபோட்டு தேமென்னு கிடக்கும். மத்தது அசல். அண்டர் கிரவுண்ட்ல அதுக்கு தாமசம். வேண்டிய நேரத்தில குளக்கு, கசாக்கு, திரிபுவாதி அப்பிடீன்னு ஒரு உருப்படிய கொண்டுவந்து கெட்டி ஒரு பட்டன அமுக்குவாவ.... டய்ய்ய் டய்ய்ங்னு மியூசிக்.

அய்யர் : மெய் சிலுக்குது.

ராம : மாஸ்கோல நான் தங்கியிருக்கப்ப ஒரு தடவ அதன் சத்தத்தக் கேட்டேன். டம்ளர்ல வச்ச ஓட்கா குலுங்குது. என்னப்பா இதுண்ணு ஓட்டல் பய்யனைக் கேட்டேன். பயராதிய சார், இது வரலாறோட காலடிச் சத்தம்ன்றான். அதுக்கே எனக்க குண்டி குளுந்து போச்சு.

அய்யர் : அந்த அசைவப் பிராணிய அங்க கன்ட்ரோல் பண்ணித்தானே வச்சிருக்காங்க. என்னமாம் ஆயி நம்ம மேல திரும்பிட்டா?

ராம : ஹெஹெஹ... கரென்ட் ஓடுற கம்பிவேலி போட்டு பக்காவா வச்சிருக்கா...

அருணா : அது அப்ப. இப்ப பிச்சிட்டு வந்து தொம்சம் பண்ணிட்டுது. நான் சினிமால பாத்தேன்.

ராம : இறந்த காலத்தில இப்பிடி அனாவசியமா வந்து குளப்பினா நாங்க எப்பிடி சித்தாந்தங்களைக் கட்டி எழுப்புயது? ஒரு நியாயம் வேண்டாமா?

கோழி : ரிபப்ளிகோ கோ! ரிபப்ளிகோ கோ!

ராம : இதென்னடே தொந்தரவு...

கட்டி : கூவிக் கூவி சோஷலிசத்த விடியவச்ச சாக்ரடீஸின் கோழி.

ராம : என்ன சொல்லுது குக்குடம்?

கட்டி : வரலாற்றுக் குப்பைல எங்கியோ அது ஒரு மூட்ட போட்டிச்சாம். அடை காக்கலாம்னு பாத்தா காணுமாம். ரெண்டாயிரம் வருஷமா தேடிட்டிருக்கு.

அய்யர் : நாமளும் ஒரு வரலாறு வளக்கணும் தோழர்.

ராம : குடுத்தாவளே. கூண்டில போட்டு எடுத்துட்டு வந்தம். அப்பப்ப ஒத்தமும் குடுத்துப் பாத்தம். எளவு, நம்ம பருவநிலையில்லா அதுக்கு வினையா இருக்கு. தலையத் தலைய ஆட்டிக்கிட்டு ஒணான் மாதிரி இருக்கு பத்து மூப்பது வருசமா. மாசம் மூணு தடவ நிறமும் மாறும்.

வராகமுகன் : அய்யா எனக்க காரியம்.

ராம : ஆமா, மறந்துட்டேன். அடேய் ஹிமவான் நீ போய் தீவிர வளர்ச்சித் திட்டம்கிற பேர்ல இன்னும் ரெண்டு கூட்டுப்பண்ணை தொடங்க இதனால் உத்திரவிடப்படுகிறது. எல்லா தேவதைகளையும் சாந்தி பண்ணிடு.

கெ.கெ.எம். : பார்த்தா, பார்த்துவா!

கட்டி : எதை?

கெ.கெ.எம். : நீயே இப்புதிய திட்டத்தின் மத்தியப் பார்வையாளர்.

கட்டி : அய்யனே கூட்டுப்பண்ணையில் கூடியிருப்பவர்கள் என் சொந்த ரத்தம். எம் உறவினர்.

கெ.கெ.எம். : *(அறியும் புன்னகை)* கூறும்.

கட்டி : என் உடலில் நடுக்கமும் மயிர் சிலிர்ப்பும் உண்டாகின்றன. கையிலிருந்து கோல் நழுவுகிறது. என் உடல் எரிகிறது. கேசவா, என்னால் நிற்க முடியவில்லை. மனம் சுழல்கிறது. கேடுடைய சகுனங்களையும் காண்கிறேன்.

வீர : *(உற்சாகமாக)* கலக்கிட்டீரு. அடுத்த வசனம் இன்னும் டக்கரா இருக்கும். எடுத்து விடும்.

கட்டி : *(கண்ணீருடன்)* ஐயனே, போரில் சுற்றத்தாரை கொல்லுதலில் நன்மையை நான் காண்கிறேனில்லை. வெற்றியையும் ராஜ்யத்தையும் இன்பங்களையும் வேண்டுகிலேன். கோவிந்தா, யார் பொருட்டு நாம் ராஜ்யத்தையும் போகங்களையும் இன்பங்களையும் நாடுகிறோமோ அவர்களாகிய ஆச்சாரியார் தந்தையர் மக்கள் மாதுலர், பேரர், சம்பந்திமார், சக கட்சி உறுப்பினர், பொலிட்பீரோ தோழர்கள் முதலியோரின் உயிரையும் செல்வங்களையும் கவர்ந்து நாம் இன்புற்றிருப்பது எங்ஙனம்?

கோழி : ரிபப்ளிகோ கோ! ரிபப்ளிகோ கோ!

கட்டி : சமத்துவ சுந்தர பொன்னுலகு பொலிகன்னு சொல்லுது.

வீர : தொரத்துடே சனியனை.

கெ.கெ.எம். : பார்த்தா இதோ கீதை காட்டும் பாதை, மறு பதிப்பு.

குரல்கள் : *(ஊடே)* பாரம்பரியம்தான். மாடர்ன் டெக்னிக்தான். இப்போது பெறுங்கள் அசல் சுவை. இது ஃபில்டர்க் காபியைப் போன்றே சுவையானது.

கெ.கெ.எம். : *(பொறுத்து)* அர்ஜுனா, ஆரியர்க்கு அடாததும் சுவர்க்கத்தைத் தடுப்பதும் புகழைப் போக்குவதும் கட்சி விசாரணைக்கும் களையெடுப்புக்கும் வழிவகுப்பதுமான இவ்வுள்ளச் சோர்வு எங்கிருந்து உன்னை வந்தடைந்தது? துயரத்துக்குரியவர் பொருட்டும் அல்லார்

பொருட்டும் துயருறுகிறாய். ஞானியரது நல்லுரையும் பகர்கிறாய். இறந்தார்க்கோ இருப்பார்க்கோ புலம்பார் மார்க்ஸிய பண்டிதர்.

கோரஸ் : பார்த்தனின் பரம சங்கடம் தீரவே
பகவான் கீதை அருளினரே
பாரினில் அனைவரும் கேட்டுய்யவே
பக்தன்முன் கீதை வந்ததுவே
இது ஸ்ரீ மகாபாரத கதை ஓஓ
மகாபாரத கதை!
(சங்கு மணியோசை)

கெ.கெ.எம். : தனஞ்சயா, யோகத்தில் நிலைபெற்று, பற்றற்று, வெற்றி தோல்விகளை சமமாகக் கண்டு, புரட்சியில் ஈடுபடு. நடுநிலைமையே யோகம் என்று அழைக்கப்படும். வெல்லும் தரப்பே தர்மமாகும். இவர்களையெல்லாம் கொல்வது நீயல்ல. இவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று காலம் உத்தரவிட்டுள்ளது. நானே காலம், நீ என் கருவி.

கட்டி : இவர்கள் என்ன தவறு செய்தனர் பிரபு?

கெ.கெ.எம். : வர்க்கத்துவயம் மயா சிருஷ்டம்.

கெ.ஆர்.எஸ். : ஐயன்தான் இரு வர்க்கங்களையும் உருவாக்கினவர். அவை ஒன்றையொன்று அழிப்பது அவர் இச்சை.

கட்டி : அனியாயமாட்டில்ல இருக்கு? ஏன் அப்பிடி இச்சிக்கணும், கொழுப்பு கூத்தாடுதோ?

கெ.கெ.எம். : நானே ஆக்கமும் ஆழிவும். நானே துவக்கமும் முடிவும். நானே இருப்பும் இன்மையும். பார்த்தா, பிலே, நீ இனியும் ஆளை மனசிலாக்கேல்ல. கண்ணைத் தெறந்து பாருலே, சவத்தெளவுக்குப் பிறந்த பயலே. *(சமாளித்து)* என் சிறப்புகளில் சிலவற்றை உனக்குக் கூறுகிறேன். அவற்றுக்கு முடிவேயில்லை.

(கெ.கெ.எம்மை மீறி குரல்...)

இப்ப இருக்கா நிறம்? சுவை? திடம்?
ஓ இருக்கு...
மூன்று குணமுள்ள த்ரீ ரோஸஸ் டீ

கெ.கெ.எம்.: *(பேரொலியுடன்)*

மதுக்களில் நான் ஓட்கா
நதிகளில் நான் வோல்கா
சித்தாந்தங்களில் நான் இயங்கியல்
காலங்களில் நான் டிசம்பர்

(ஒலி மாறுதல்)

தண்டிப்பவரில் நான் சோவியத்
வெற்றியில் நான் அரசுடைமை
ரகசியங்களில் நான் பிராவ்தா
ஞானிகளில் நான் மௌனம்
குடாகேசா என் பெருமைகளுக்கு முடிவேயில்லை.

கட்டி : இறைவா அதைப் பார்க்க என்னால் இயலும் என்று எண்ணுவீராயின், யோகீஸ்வரா, உமது அழிவற்ற உருவத்தை எமக்குக் காட்டுவீராக!

கெ.கெ.எம். : விருஷ்ணியே, நானே புவனம், நானே சமதர்மம், நானே நீதியும் நீதிபதியும். நானே சித்தாந்தமும் நடைமுறையும், நானன்றி வேறில்லை என்று உணர்க.

(பயங்கர வெடிச்சத்தம். வீரபத்ரபிள்ளை மேடையில் வெடிகளைக் கொளுத்துகிறார். புகை ஊடே கெ.கெ.எம். வாயை அகலத் திறக்கிறார்)

குரல் : வாய் துர்நாற்றம் உங்கள் பிரச்சினையா
கவலை வேண்டாம்.
கோல்கேட் பற்பொடி வாய் துர்நாற்றத்தைப் போக்கி
ஈறுகளை பலப்படுத்துகிறது. கோல்கேட்!

கட்டி : சகல பிரபஞ்சங்களும் சகல ஜீவராசிகளும் உமது வாயிலிருந்து உற்பத்தியாகின்றன. உமது வாயால் உண்ணப்படுகின்றன. ஞானிகள்அதை பிளாக்ஹோல் என்கிறார்கள் *(அழுது)* ஐயனே உமது விஸ்வரூபத் தோற்றம் என் சித்தத்தை பிரமை கொள்ள வைக்கிறது. அனேகம் கட்சிகள். அனேக தொழிற்சங்கங்கள், எண்ணற்ற கலாச்சார இயக்கங்கள், நீரே வலதுசாரியென்றும் இடதுசாரியென்றும் புரிந்து கொண்டேன். நீரே பொலிட்பீரோ சாவி. *(நெக்குருகி. பரவசமாகி. நடனமிட்டு)* பால்டிக் தேசங்களில் உமது ராணுவம் பெருகி நிறைகிறது. கரிபியன் தீவுகளில் உமது ஒற்றர் படை பரவுகிறது. ஆசிய தேசங்களில் உமது பக்தர்கள் நிறைகின்றனர். மகாரூபா, நீர் இல்லாத இடமே இல்லை என்று தெரிந்துகொண்டேன். *(அஞ்சி நடுங்கி அமர்ந்து அரற்றி)* ஐயனே உமது வானளாவிய வடிவம் என்னை அஞ்ச வைக்கிறது. உம் உண்மையான சொரூபத்தைப் பார்க்கும் திராணிஎனக்கில்லை. *(வணங்கி)* உமது எளிய ரூபத்தில் திரும்பிவந்து தோற்றம் தந்தருளல் வேண்டும்.

கெ.கெ.எம். : *(புன்னகையுடன்)* பார்த்தா, பார்த்தாயா?

அய்யர் : என்ன அனியாயம்! சாமி இப்பிடி மாறிட்டிருந்தா சடங்கு சாத்திரம் எப்பிடி இழவெடுக்கிறது? சங்கதி கொள்ளாம். நம்ம டிஸைப்பில மண்ணை போட்டா சாமீண்ணு பாக்க மாட்டேன். குங்குமம்னு சொல்லி மிளகாய்ப் பொடிய அபிஷேகம் பண்ணிவிட்ருவேன், ஆமா.

கெ.கெ.எம். : அய்யோ என்றம்மே... *(சமாளித்து)* பயத்தில உளறிட்டேன்... *(சிரித்து)* இல்ல... இனிமே இல்ல..

அய்யர் : நீரு எதுக்குவே இப்ப ராமனா மாறினீரு?

கெ.கெ.எம். : (விழித்து) நான் இப்ப கிருஷ்ணன்லா?

அய் : நாசமா போச்சு. ஓய், கைல வில்லு ஆருக்குவே இருக்கும்?

கெ.கெ.எம். : ஆமால்ல ஹெ...ஹெ... அவசரத்தில மாறிப்போச்சு. ஏதாவது ஐதீகம் சொல்லி சமாளிச்சிடும்வே...

வீர : ஓய் மூஸ்தபா, இப்ப உம்ம வசனம்வே. சொல்லும்.

ராம : (திடுக்கிட்டு) என்னத்த ஹராமச் சொல்லி, என்னத்த மய்யத்து எடுக்க? மனியனப் போட்டு பாடாப்படுத்துதியளே மக்கா, என்னவே வசனம் அப்பீடி?

வீர : அவதாரங்கள் ஆண்டவனின் முகங்களன்றி வேறல்ல.

ராம : (ஆர்வமின்றி) அவதாரங்கள் ஆண்டவனின் முகங்களன்றி வேறல்ல.

வீர : (படிக்கிறார்) ஐயம் தீர இயம்புவேன் கேளாய்.

ராம : ஐயம் தீர ஏம்புவேன் கேளாயி.

வீர : என்னவே உமக்குப் பதவிப் பிரமாணமா செய்து வைக்குதேன்?

ராம : என்னவே உமக்குப் பதவிப் பிரமாணமா செய்து வைக்குதேன்?

வீர : (கடுங்கோபம்கொண்டு) கெட்டுது குடி. வேய் இது வசனமில்ல.

ராம : (அரைத் தூக்கத்தில்) கெட்டுது குடி. ஓய் இது வசனமில்லை.

வீர : (கொதித்து) விளையாடுதீரா? சவிட்டிப்போடுவேன்.

ராம : (விழிக்காமல்) விளையாடுதீரா? சவிட்டுப் போடுவேன்.

வீர : (பாய்ந்து மென்னியைப் பிடித்து) தூலுக்கப் பயலே, ஆட்டமா ஆட்டுதே, ஓடுல...

ராம : (விழித்து) உம்ம்ம் (உதறுகிறார்)

வீர : (பிடிவிட்டு பரிதாபமாக) ஓய் சளமாக்கிப் போட்டீரே.

ராம : அதுக்கண்டு இப்படியா? அந்தக் கித்தாப்ப இஞ்சதாரும். புரிச்புத்தி களுதைப்புத்தி. (நூலை வாங்கி) சவத்தெளவுக்கு ஒரு மய்யத்துக்க கனமுண்டு. படிச்சு சொல்லுயதுண்ணா சாமானிய வினையாட்டா? (படிக்கிறார்) பக்தர்களே ஐயனின் பத்து அவதாரங்களை அடியேனுங்கு எடுத்தியம்ப கடமைப்பட்டுள்ளேன்.

அய்யர் : ஓம் மச்சாய நமஹ, ஓம் கூர்மாய நமஹ ஓம்...

வீர : இரும்வேய் பாப்பான். இதுக்கு அர்த்தம் தெரியுமா?

அய்யர் : நல்ல கூத்து. அர்த்தம் தெரிஞ்சா பாப்பான் மந்திரம் சொல்ல தெரியுமா?

ராம : ஒண்ணொண்ணா சொல்லும்வே.

அய்யர் : ஓம் மச்சாய நமஹ!

ராம : ஆதியந்தமில்லாத தத்துவக் கடலிலே எம்பெருமான் மீனாக அவதரித்தார். அங்கியே மத்த மீனையெல்லாம் பிடிச்சு முழுங்கிட்டு நீஞ்சி விளையாடினார்.

அய்யர் : ஓம் கூர்மாய நமஹ!

ராம : பிறவு பெம்மானுக்கு கையும் காலும் முளச்சது. கரையோரமா வந்து படுத்துண்டு அந்தப் பக்கமா தத்துவத் தண்ணி குடிக்க வாற ஜந்துக்களுக்கு வீடுபேறு அருளிண்டிருந்தார்.

அய்யர் : ஓம் வராஹாய நமஹ!

ராம : பிறவு எம்பெருமான் லோகோத்தாரண நிமித்தம் கரையேறி வந்தார். நனைஞ்ச எடம் பாத்து நோண்டி ஒவ்வொரு அஸ்திவாரமா தோண்டினார்.

அய்யர் : ஓம் நரசிம்ஹாய நமஹ!

ராம: ஜாராசுரன்ற துஷ்டனைக் கொல்ல பாதி மிருகமா பாதி மனுஷனா மாறி, குளிர்கால அரண்மனை வாசப்படி மேல வச்சு கிழிச்சு குடலை உருவினார் எம்பிரான்.

அய்யர் : ஓம் வாமனாய நமஹ!

ராம : ஆரம்பத்தில அய்யன் மூணடி உயரமா இருந்தாரு. கிழக்கு ஐரோப்பால மூணடி வய்க்க இடம் கேட்டாரு. மூணடி வச்சு என்ன பண்ணப் போறான், வெளிக்குப் போகப் போறான் போலிருக்குன்னு நினைச்சு எடுத்துக்கோன்னாவ. முதல் அடி போலந்து, ரெண்டாம் அடி ஜெர்மனியும் செக்கும். மூணாம் அடி வானத்தில நிண்ணுது. எனக்கு கால் வைக்க எடமெங்கேண்ணு அசரீரி உலகம் முழுக்க கேட்டுது.

கட்டி : (ஊடே புகுந்து. மார்பில் அறைந்து) ஊணின காலை வாரி விட்டுப்போட்டானுவளே. இப்பம் அய்யன் அந்தரத்தில நிக்குதாரே...

அய்யர் : ஓம் மோஹினியாய நமஹ!

ராம : உலகை மயக்க உளம் கொண்டான் பெம்மான். மோகினி அவதாரம் எடுத்தான். கடைக்கண் பார்வையில ரிஷிகள்லாம் பிளம்பர் தேடி ஓடற நிலைமை. மான் குடிச்சது சகுந்தலையாச்சு. அம்புறாக்குடத்தில் விழுந்தது கிருபராச்சு. புஸ்தகங்களில விழுந்தது முளைச்சு சித்தாந்தங்களாச்சு. லைப்ரரிகள்லாம் நிறஞ்சு போச்சு. ஒரு துளி தவறுதலா 'மேக்கப் கலையும் முகமூடி தயாரித்தலும்'ங்கிற புஸ்தகத்தில விழுந்து மார்க்ஸிய அழகியல்னு ஒண்ணு பிறந்தது. அதப்பாத்து மத்த புஸ்தகங்களுக்கு லவ்வு. புஸ்தகங்களுக்குள்ள சண்டை. செம கலாட்டா.

அய்யர் : ஓம் பலராமாய நமஹ!

ராம : கலப்பை ஏந்திய விவசாயியானார் பிரான்.

அய்யர் : ஓம் கிருஷ்ணாய நமஹ!

ராம : சக்கரமேந்திய தொழிலாளி. கீதை சொல்லும் புரலட்டேரியன்.

அய்யர் : ஓம் ராமாய நமஹ!

ராம : மாயமானுக்க பின்னால ஓடி, சூர்ப்பனகை மூக்கறுத்து, ராவணவதம் செய்த பெருமாள். பத்துதலையும் மாறிமாறி முளைச்சது. அய்யனுக்கு ஃபுல்டைம் தலைவெட்டுதான் தொழிலு. அது நடந்தது பத்தம்பது வருசமா.

அய்யர் : ஓம் கல்கியாய நமஹ!

ராம : ஒம்பது வெளையாட்டும் ஆடி முடிச்சு அய்யன் ஒரு எலைமேல படுத்து ரெஸ்ட் எடுத்தாரு. அப்ப கோர்பசேவுன்னு ஒரு காராச்சேவுக் கடைக்காரன் அய்யனை மொள்ள தூக்கி கடலில போட்டுட்டான். நடுக்கடலில அய்யன் அனாதயா அலையுதாரு. இப்படியாக சார்ல்ஸ் டார்வின் எனப்பட்ட ரிஷியாகப்பட்டவர் கூறின பரிணாம வரலாறு பத்தும் அய்யனில் உத்பவிச்சு முடிஞ்சது. ஓம் தத் சத்.

அய்யர் : ஓம்! ஓம்! ஓம்!

(பின்னணியில் வள் வள் வள் ஒலி.)

கட்டி: யாரு அது?

கெ.கெ.எம். : எமது மெய்க்காவல் படை.

(மூன்று ஓநாய்கள் ஓடி வருகின்றன.)

அய்யர் : பிடியுங்கோ, வன்ய ஜந்துக்கள். கடிச்சு கிடிச்சு வச்சிடப் போவுது.

கெ.கெ.எம். : இது கிட்டன்நாயர். இது கோவிந்தன் நாயர். இது பாலன் நாயர். சுருக்கமாட்டு கெ.ஜி.பி.ன்னு சொல்றது ஹெஹெ. (குரலைத் தணித்து) உயிருக்க விஷயம்னு வாறப்ப எனவனத்தானே நம்ப முடியுது? கேட்டிருப்பீக, தேர்ட் திருவிதாங்கூர் நாயர் பிரிகேட்.

ஓநாய்கள்: (கோரஸாக) ஒற்றுமை! உலக சமாதானம்! ஒற்றுமை! உலக சமாதானம்!

அய்யர் : ஓநாய்லாம் பேசுமோ?

ஓநாய் : இது குறியீட்டு நாடகம். பேசலாம்; தப்பில்லைன்னு சொல்லியிருக்காவ.

கட்டி : (மகிழ்ந்து) நாடகம் முடியப் போவுது. இப்பவாவது நலைப்புக்குப் பொருத்தமாட்டு ஒரு சீன் வருதே!

வீர : ஹெஹெஹெ, மறந்து போய்ட்டேன்!

கெ.கெ.எம். : கிட்டன் நாயர் சித்தாந்த ஊளையிடுவாரு. வர்க்க எதிரிகளைக் குரைக்கிறது, வேண்டப்பட்டவங்களை நக்கிறது இதெல்லாம்கூட செய்வாரு. கோவிந்தன் நாயர் எஜமானுக்கு வாலாட்டுவாரு. மூணாவது ஆளு பாலன்நாயரு. மோப்ப அணி. பார்ப்பனியத்தை எங்க புதச்சு வச்சாலும் பிராண்டி எடுத்துடுவாரு.

வீர : இதுல ஹைபிரீட் உண்டோ?

கெ.கெ.எம். : நல்ல கத. கார்த்திகை மாசமானா பால்பாயின்ட் பேனாவத் தட்டிக்கிட்டு கிளம்பிடுங்க. அப்ப பிடிச்சாக் கிட்டாது.

(காவலன் ஓடி வருகிறான்)

காவலன் : மன்னா தீய செய்தி.

கெ.கெ.எம். : கூறுக காவலா...

காவலன் : விரித்த தலை, ஆனால் கொற்றவை அல்லள்! அழுத கண்ணீர்! ஆனால் காளியும் அல்லள்! சிந்திய மூக்கு, ஆனால் பிடாரியும் அல்லள்! கையில் சிலம்புடன் ஒருத்தி.

கட்டி : விஜயகுமாரியாக இருக்கும். ஆள் எப்படி நல்ல குண்டா?

காவலன் : கண்டமானிக்கு பேசுறா எஜமான். தாற சில்லிச் சம்பளத்துக்கு குந்தம் பிடிச்ச நொட்டியதுமில்லாம பெண் சொல்லும் கேக்கணும்னு சொன்னா நடக்குத காரியமா?

கெ.கெ.எம். : உள்ள அனுப்புடே, நிண்ணு சலம்பாம...

(கையில் சிலம்புடன் தலைவிரிகோலமாக நாகம்மை வருகிறாள்)

அருணா : நாகம், இதென்னட்டி கோலம்?

ஓநாய்கள் : உலக சமாதானம்! ஒற்றுமை! உலக சமாதானம்!

நாகம் : *(ஆவேசமாக)* தேரா மன்னா, செப்புவதுடையேன்....

கெ.கெ.எம். : *(பக் என்று சிரித்து)* சொப்பு வச்சு விளையாடுற பிராயமா எனக்கு, நல்ல கூத்து!

நாகம் : என் கணவர் குற்றமற்றவர்.

ராம : உனக்க பேரும் ஊரும் என்ன, அதைச் சொல்லு முதலில். அத்துகிட்டு வந்த பசு மாதிரி இருக்கே...

நாகம் : பதியெழுவறியா பழங்குடி கெழிஇய பார்புகழ் ரஷ்யா என் தேசம் அதிலே.

ராம : சுருக்கமா. இந்த பாரும்மா அனுப்புனர், பெறுநர், பொருள், ஐயா... இந்த மாதிரி எழுதிக் குடுக்கணும் இது சர்க்காராபீஸாக்கும். கேட்டியா?

நாகம் : என் பெயர் அன்னா புகாரினா - என் கொழுநன் பெயர் புகாரின்.

ராம : *(எழுதி)* முழுப்பெயர்?

நாகம் : நிகலாய் இவானோவிச் புகாரின். மன்னா உனது ஓநாய்கள் என் கொழுநனைக் கொன்றுவிட்டன.

கே.கே.எம். : ஓநாய்களா, கொலையா, என்னடா இது புதுக்கதயா இருக்கு. அம்மணி இந்த பிராணிகளைப் பாரு, இதுமாதிரி சாந்தமான தெய்விக முகங்கள் வேற பார்த்திருக்கியா?

ஓநாய்கள் : *(கோழியை நக்கி)* உலக சமாதானம்! ஒற்றுமை! உலக சமாதானம்!

கோழி : *(உற்சாகமாக)* ரிபப்ளிகோ கோ!

நாகம் : என் கணவரும் நானும் இங்கு எனது காற்சிலம்புகளில் ஒன்றை விற்பதற்கு வந்தோம். அதை திருட்டுச் சிலம்பு என்று சேட்டு சொல்லிவிட்டான். இந்த ஓநாய்கள் அவன் பேச்சைக் கேட்டு... *(உரக்க அழுது)* என் ராசா வருவாரிண்ணு ராத்ரிலே காத்திருந்தேன். என் ராசா வரேல்லியே என் ராத்ரிபூ வாடிப் போச்சே...

ராம : த்த்த ந்தாம்மா...

நாகம் : *(ஆக்ரோஷமாக)* கஞ்சி காச்சி வச்சு, கருவாடு சுட்டு வச்சு, எஞ்சாமி வாறதுக்கு எம்பிடு நாள் காத்திருந்தேன்! கஞ்சி ஆறிப் போச்சே! கருவாடு நாறிப்போச்சே! ஆங்...

ராம : ந்ந்தா ந்ந்தாம்மா நிப்பாட்டு. இப்ப நிப்பாட்டப் போறியா இல்லியா?

நாகம் : *(படுவேகமாக மூகனைச் சிந்தி)* என் வச்ச பூ வாடலியே! வாசனத்தூள் போகேலியே ஏங்க்...

ராம : *(உரக்க)* நிப்பாட்டுண்ணா....

நாகம் : *(நிறுத்திவிட்டு)* கத்தாதீருவே. நீரு ஆருவே, பேஷ்கார் தொரயா? ராசாவுக்க அடப்பதாங்கிதானே? எளவாம கெடவும்.

ராம : *(குன்றி)* வாய நீட்டாத முத்தம்மா. இது உனக்க மார்க்கெட் இல்ல, ராசாங்கமாக்கும்.

நாகம் : ஓ, ஒரு ராசாங்கம். உனக்க வீட்டுக்காரி காய்கறிப் பைசா எட்டணா பாக்கி நிக்குவு. நீரு வாயக்காட்டுதீரு.

ராம : *(சுமுகமாக)* இது நாடகம். இதில கத வேற.

நாகம் : *(சகஜமாகி, முந்தியை அவிழ்த்து)* அது கெடக்குவு. அய்யிரே உம்மட்ட தடைப் போயில உண்டா? எனக்க கையில உணக்க போயில்தான் இருக்கு.

அய்யர் : பளுத்திலயா? முறமுறன்னு இருக்குமே. ஒரு சூருட்டுக்கு எடு

(துண்டால் தரையைத் தட்டிவிட்டு அமர்கிறார்கள்.)

நாகம் : அய்யிரே, உமக்கு இங்க எப்பிடி துட்டு?

அய்யர் : தட்டுக்காசு மேவரும்படி உண்டு. ஒப்பேத்திட்டு போலாம்.

நாகம் : கெட்டினவனாக்கும் போனது. கள்ளுகுடியனானாலும் வீட்டுக்கொரு ஆண்தொணையா, பிள்ளியளுக்கு அப்பனா இருந்தான். இனிம அபத்தத்தில வல்லதும் பற்றிப்போனா அப்பனாட்டு ஆரக்காட்டுயது? ஒரு துகெ கேட்டு வாங்கிக் குடும். *(குரலைத் தாழ்த்தி)* உமக்குண்டானதை குடுத்துடுதேன்.

கெ.கெ.எம். : பக்தா, என்ன சொல்கிறாள் அரக்கி?

நாகம் : *(பொங்கி)* அரக்கி உனக்க மத்தவ. பாத்துப் பேசுடே மயிராண்டி! சகாவுண்ணு பாக்க மாட்டேன். அந்தி மயங்கின பிறவு மோந்து மோந்து வருவியே அப்ப தெரியல்லியோ அரக்கிண்ணு? போட்டு அரக்கிப் போடுவன் பாத்துக்க.

வீர : முத்தம்மை, அடங்குட்டி...

நாகம் : வசனத்த சொல்லும்வே, கிணாட்டாம.

ராம : மன்னா, நமது அரசு ஒரு அநீதி இழைத்துவிட்டது. ஒரு நிரபராதி கொல்லப்பட்டுவிட்டான்.

கெ.கெ.எம். : ஆ! எம் செங்கோலா வளைந்தது!

ராம : மன்னா அது வில்.

கெ.கெ.எம். : எதுவானால் என்ன, வளைந்துவிட்டதே!

ராம : ஸ்த்ரீயே, உன் வழக்கை என் நீதியரசர் விசாரிப்பார்!

கெ.ஆர்.எஸ். : அனைத்தும் பூரணமே. ஓம் தத் சத். ஸ்த்ரீயே உமது கையிலுள்ள சிலம்பை எடு.

நாகம் : *(நீட்டி)* இதுதான் என் காற்சிலம்பு.

கெ.ஆர்.எஸ். : மீதி முக்காற் சிலம்பு எங்கே?

நாகம் : *(விழித்து)* இதுதான் இருக்கு.

கெ.ஆர்.எஸ். : இது அரச சபை. இங்கு முழு சாட்சியங்கள் தேவை. மன்னா மனுவை தள்ளுபடி செய்யலாம்.

கெ.கெ.எம். : பாப்பம்டே. வேற வல்ல பிடியும் கிட்டுமா பாரு.

கெ.ஆர்.எஸ். : இதோ *(திரும்பி)* ஸ்த்ரீயே உன் சிலம்பில் என்ன எழுதியுள்ளது தெரியுமா?

நாகம் : எனக்குப் படிக்கத் தெரிஞ்சா நான் எதுக்கு முக்காத்துட்டுக்கு இஞ்ச நாடகமாட வாறேன்?

கெ.ஆர்.எஸ். : சின்ன இலுப்பம்விளை அப்பாவு நாடார்! சி.ஐ.ஏ.!

கெ.கெ.எம். : ஆ! என் உதிரம் கொதிக்கிறதே!

(சேஷன் அவருக்கு ரத்த அழுத்தம பார்க்க, கருடன் ஊசி போடுகிறான்)

நாகம் : இதென்ன கூத்து; கெட்டினவன் செத்தா பத்தாயிரம்னு நலத்திட்டம் இருக்கே?

கெ.கெ.எம். : அடிப்பாவி! நீயா குலஸ்த்ரீ? போடி! (ஆவேசமாக) அம்பது வருசம் சைபீரியாவில் அசோகவனத்தில சாணி அள்ளு. அதுக்குப்பிறகு அக்கினிப் பரீட்சை. பஸ்ட் கிளாஸ்ல பாஸானாத்தான் விடுதலை. (ஆர்மோனிய இசை ஆவேசமாக சுழன்றாடி) கண்ணெதிரில் நில்லாதே காமினியே! பெண்ணெனவே எண்ணமாட்டேன் போய்விடுக! ஆ... ஆ... (பாடி நிற்கிறார்)

அருணா : நாகம், போயிடாதே! நான் அனியாயமா செத்துட்டேன். என் ஆத்மா சாந்தி அடயல்ல.

கெ.ஆர்.எஸ். : யார் நீர்?

அருணா : நான் புகாரின்.

கெ.கெ.எம். : (அசமஞ்சமாக) என்ன புகார்?

கெ.ஆர்.எஸ். : அய்யனே, இவன்தான் முயலகன். காதைப் பாத்தியளா?

கெ.கெ.எம். : (பரவசத்துடன்) என்ன நடனம்? ஊர்த்துவம் ஆடவா? துஷ்டநிக்ரகம் பண்ணி ரொம்ப நாளாச்சு. (கெஞ்சலாக) ஆசையா இருக்கு.

ராம : அம்பிடு தூக்கினா பின்ன உம்மால கால எறக்கிக்கிட முடியாது. மையமாட்டு மதி.

நாகம் : நாயப் பிடியுங்கோ. அப்பம் நம்ம நடிப்பு முடிஞ்சுதா அய்யிரே?

கட்டி : நாயில்ல ஓநாய். ஒழிஞ்சா பாஸ்டர்நாக்கோட டாக்டர் ஷிவாகோ படி. இது குறியீடாக்கும் கேட்டியா?

ஓநாய் 1 : (ஆவலாக) என்ன குறியீடு?

கட்டி : கெட்டுது குடி. போலீஸ்காரன்லாம் எலக்கியம் படிச்சா உருப்பட்ட மாதிரிதான்.

(நாகம் போகிறாள்)

கோழி ரிபப்ளிகோ கோ!

கட்டி : பாருங்கடே, பத்து ரெண்டாயிரம் வருசமா என்னத்துக்கு குறியீடுண்ணு தெரியாமலேயே கூவிட்டிருக்கு. அதப்பாத்து படியுங்கடே.

அருணா : நாகம்மை என்னை மறந்துராதே.

ராம : பிடியுங்கடே அவனை.

அருணா : (கதறியபடி) எனக்க ஆத்மா சாந்தியடயல்ல.

ராம : அசுர ஆத்மா சாந்தியடய வழியிருக்கு.

(அருணாசலத்தைக் குப்புற வீழ்த்தி கெ கெ எம் ஏறி நின்று ஒற்றைக் காலைத் தூக்கி நடனம் ஆடுகிறார் ஒருவர் உடுக்கும் மற்றொருவர் மத்தளமும் அடிக்க அய்யர் பூசை செய்கிறார்)

அய்யர் : ஓம் ஷிவாயம்! ஷிவ நமஷிவாயம்!

ராம் : (கனிந்துருகி) குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும், இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே. (மணியோசைப் பக்திப் பரவசச் சூழல்)

வீர : இப்ப மீட்பரு வாற நேரம்.

(அணியறைக்குள் இசை வலுக்கிறது அரங்கிற்கு ஒருவர் கம்பு ஊன்றி தட்டுத்தடுமாறி வருகிறார் உடல் முழுக்க வலை சுற்றியிருக்கிறது)

கட்டி : மீட்பரு யாரு, ஸ்பைடர் மேனா...

வீர : ஸ்பைடர்மேன் உனக்க மத்தவன். தாத்தா கொசுவலைக்குள்ள தூங்கிட்டு அப்பிடியே எந்திரிச்சு வாறாரு. உறக்கத்தில நடக்குத ரோகமிண்ணு தோணுது... (குரலை தூக்கி) பாட்டா எங்க போறீரு..

வந்தவர் : அகிம்சை! சத்தியம்! புலனடக்கம்!

கட்டி : ஓ, இவுரு மத்தவரு (சிரித்து) தாத்தா வளி தவறிப் போட்டோவ்? இஞ்ச நாங்க மீட்பர எதிர்பாத்துட்டு இருக்கம். நாடகம் முடியப் போவுதில்லா.

வந்தவர் : உலகத்த அகிம்சை மீட்கும்.

கட்டி : அப்ப நீரு?

வந்தவர் : நான் அகிம்சைக்க போதகன்.

கட்டி : அப்பம் செரி (மேலும் கீழும் பார்த்து) நல்ல தன்னடக்கம். ஏம்வே பெரிசு, இதென்னதுவே வலை?

வந்தவர் : வலை இல்ல குழந்தே. நூலு. கதர் நூலு...

கட்டி : அடப்பாவி. எப்பிடிவே இதுக்குள்ள மாட்டினீரு. எளவு பட்டுப்புழு சுத்திக்கிட்டது மாதிரியில்லா சுத்திக்கிட்டிருக்கேரு...

வந்தவர் : மைந்தா, என்னைக் காப்பாத்த மாட்டாயா?

வீர : என்னவே சங்கதி?

வந்தவர் : நான் என் பாட்டுக்கு ஒரு மூலையில ராமநாமம் ஜெபிச்சுட்டு வலை பின்னிட்டு இருந்தேன். அப்பப்ப ஒண்ணு ரெண்டு பூச்சிக வந்து மாட்டும். அகிம்சையாட்டு ஒரு கடிகடிப்பேன். உறிஞ்சிப்போட்டு அகிம்சையாட்டு ஒக்காந்திருப்பேன்.

வீர : பிறவு...

வந்தவர் : என்ன ஆச்சு எண்ணு எனக்கு இப்பவும் தெரியல்லய்யா. நூலு எனக்க மேல கேறி சுத்திப் போட்டு. அவுக்கப் போனா பின்னயும் சுத்துது. இந்தக் கெதி ஆயிப்போட்டேன். அம்பது வருஷமா ஒரு வாய் அகிம்சைக்கும் வழியில்லாம அத்து அலையுதேன்.

வீர : இந்தக் கூத்திலே நீரு எங்கள மீட்க வந்தேராக்கும்?

வந்தவர் : வளி இருக்கு கொழந்தே. நீ மொள்ளமா இந்த நூலை அவுத்து எடுத்துப்போடு. இதவச்சு ராட்சச அசுர வம்சத்த மூழுக்க கெட்டிப் போடலாம். பிறவு மருத்துவா மலையப்பிடுங்கி இதில் கட்டி கன்னியாகுமாரி கடலில போட்டு அந்தப் பக்கம் வெள்ளக்காரனும் இந்தப் பக்கம் நாமளும் நின்னு கடஞ்சா அமுதம் கிட்டும்... அக்மார்க் அமுதம்... அதத் திண்ணா...

வீர : (சலிப்புடன்) வேய் கட்டி, சில்லற இருக்காவே.

கட்டி : (துழாவி) இல்லியே.

வீர : வல்லதும் போட்டு அனுப்புடே. பாவம் பெரிசு மினகெட்டு வந்திருக்கு.

வந்தவர் : என்னை அவுத்து விடுவியளா? நான் உலகத்த மீட்கணும். ஒருபாடு வேலை கிடக்கு பாக்கி...

வீர : அதில நாங்க மாட்டிக்கிடுயதுக்கா? அஸ்கு புஸ்கு!

(உள்ளே பாதிரியின் குரல் 'ரட்சகர் வருகிறார்')

வந்தவர் : (கபக் கென்று சிரித்து) நான் அப்பமே வந்தாச்சு. அவன பாக்கேல்ல போலிருக்கு.

வீர : ஒதுங்கி எடுத்து நில்லும்வே. இடயில கேறி நின்னு அனத்தாம. வயசானா வீட்டில் கிடக்கணும்.

வந்தவர் : எப்பிடி கிடக்கியது? இந்த வலை இருக்கும்பம் ஒரு அகிம்சையும் செய்யப் பளுதில்லையே.

கட்டி : எனக்கு வாற வரத்தில இந்தாளைப் பிடிச்சு அகிம்சை பண்ணிப் போடுவேன்... மாறி நிக்கச் சொல்லுங்க.

வீர : செரி. நேரம் போவுது. இப்படி ஒரோத்தராட்டு கேறிவரத் தொடங்கினா நாடகம் நடந்து முடி ஞ்சது மாதிரிதான். தள்ளி நில்லும்வே.

வந்தவர் : ஹேராம்! *(ஓரமாக நகர்கிறார்)* என்ன நாடகமோ... *(முணுமுணுவென்று)* உலகத்த மீட்டதுக்குப் பிறவுதான் ஓரமா உக்காந்து நாலு ராமநாமம் சொல்லி முக்தி அடயணும். அதுக்கும் விடமாட்டானுவ. *(கெஞ்சலாக)* அய்யா பத்து நாப்பது வருசமா எறும்புக்கடியும் கொசுக்கடியும் கொண்டு பொறுதி முட்டுதேன். அவுத்து விடுங்கய்யா, புண்ணியமாட்டு போகும் *(வன்மத்துடன்)* கைமட்டும் ஒண்ணு விட்டு கிட்டினா ஒரு பத்து கொசுவயாவது அகிம்சை பண்ணிப் போட்டுத்தான் மறுவேலை.

வீர : *(கோபத்துடன்)* வாய மூடிக்கிட்டு கிடவும்வே *(பரவசமாக)* மீட்பரு வாற நேரம்!

(ஒரு பாதிரியார் உள்ளே வருகிறார்.)

பாதிரி : அஞ்ஞானிகளே கேட்கக் கடவீர்! ஏசு வருகிறார்.

வீர : யார்ரா இவன்? நம்ம நாடகத்ல இப்படியொரு கதாபாத்திரமே இல்லியே.

கட்டி : அவன் பப்புவா நியூகினியாவிலயே கேறிப்போயிடறான். பின்னயாக்கும் உம்ம நாடகம்.

பாதிரி : மனந்திரும்புங்கள்! பாவிகளே, மனத்திரும்புங்கள், ஏசு வருகிறார்! மீட்பர் வருகிறார்! பூமியை நியாயந் தீர்க்க வருகிறார்.

கட்டி : இதைச் சொல்லியே பாதி உலகத்த முழுங்கிட்டானுவ. ஆயிரம் வருசமாட்டு ஆளைக் காணவும் இல்லை.

பாதிரி : இதோ அவர் மேகக் கூட்டங்களுடனே வருகிறார். நியாயத் தீர்ப்பு நாள் நெருங்குகிறது! ஆமென்!

(பாதிரியார் போகிறார் உள்ளே ''ஏசு வருகிறார்'' குரல். பிறகு ''ஆத்தாடி! வந்தேபுட்டான்யா'' என்ற வியப்புக் கூக்குரல்)

கட்டி : வந்திட்டானா, அடப்பாவி!!

(கதிர் நிமிர்ந்து நடந்துவர பின்னால் இரண்டு கூலியாட்கள் ஒரு பெரிய சிலுவையைச் சுமந்து வருகிறார்கள்.)

கதிர் : பாத்து ஓரமா வைப்பா, மொள்ள... *(இறக்குகிறார்கள்)* எவ்வளவுப்பா?

கூலி : பாத்து போட்டு குடுங்க. எளவு, இரும்புக் கனமாக்கும்... ஒரு அம்பது ரூவா...

கதிர் : ஆளுக்கு பாதி எடுத்துக்கிடுங்க.... *(பணம் தந்து திரும்புகிறான்)* கொள்ளையடிக்கிறானுங்க.

கெ.கெ.எம். : யாரிவன்?

கதிர் : தெரிதா.

கெ.கெ.எம். : தெரியலியே; ஆரு, நம்ம சம்வம்பிள்ளைக்க...?

கதிர் : கடசீ அவதாரம். எல்லாத்தயும் கட்டுடைக்கப் போறேன்.

கெ.ஆர்.எஸ். : என்னது?

கதிர் : பாத்துப் பேசும்வே. பிடிச்சு கட்டுடைச்சுப் போடுவேன், ஏற்கனவே பத்து நாப்பதெண்ணத்த உடச்சாச்சு. பிறவு வண்டியிளுக்கத் தான் வாயக்கு, பாத்துக்கிடும்...

கெ.ஆர்.எஸ். : என்றெ குருவாயூரப்பா... (சமாளித்து) ஆத்தாடி, நான் இல்ல...

ராம : நான்தான் உரையாசிரியர், பாஷ்யம் அய்யங்கார்...

கதிர் : அதெல்லாம் பழைய உரை. இப்பல்லாம் புதிய உரைதான். அரங்கின்றி வட்டாடல். அதாவது உரைக்கு உரை. உவ்வுரை. அது தெரியுமா உமக்கு...

ராம : இல்லியே...

கதிர் : அப்ப ஓரமாப் போவும்.

கட்டி : மீட்பரே தங்கள் தத்துவ தரிசனம் என்னவோ?

கதிர் : பின்நவினத்துவம்! (பயங்கர பின்னணி இசை)

கட்டி : இதை அடியேங்களுக்கு விளக்கியருளல் வேண்டும்.

கதிர் : ஒண்ணும் ஒண்ணும் எவ்வளவு?

கட்டி : ரெண்டு (உற்சாகமாக) இம்பிடுதானா?

கதிர் : தப்பு. ஒண்ணுக்கும் இன்னொண்ணுக்கும் நடுவில கொஞ்சம் காலியிடமிருக்குல்லியா? அதையும் சேத்துக் கூட்டணும். ரெண்டும் கொஞ்சம் இடமும்னு வரும். இதான் பின்நவினத்துவக் கணக்கு.

அய்யர் : கமிக்கணும். மூடன் கேக்கறேன்; எந்த யுகம்னாலும் பூஜை நாங்கதான். அதனால் பின்நவின மந்திரத்த மட்டும் சொல்லிப் போட்டா கேமம்.

கதிர் : 'தத்வமசி' அவ்வளவுதான்.

அய்யர் : யதேஷ்ட மம். ஓம் தத்வமசியாய நமஹ! ஓம் மசிதத்வமாய நமஹ! ஓம் தவஸித்மாய நமஹ! ஓம் தவத்மனியாய நமஹ!

ராம : இரும்வே அய்யரே. ஓய் இதை விளக்கும் பாக்கலாம்.

கதிர் : இது மூலபாட மம். இதை எப்பிடி வேணுமானாலும் படிக்கலாம். அதெல்லாம் அவரவர் வாசிப்பு. ஸ்ரீமத் ரோலான் பார்த்தாச்சார்ய ஸ்வாமிகள் இதை தத் • துவம் • அஸின்னு பிரிச்சு வாசிச்சு, மூலப்பிரதி, மாகன்னு ரெண்டு இருக்குன்னார். இது தவைதமாகும்.

அய்யர் : சிரேஷ்டம்!

கதிர் : தெரிதா மகாபாதாள் இதை தத்துவம் + அஸின்னு ரெண்டா பிரிச்சு பிரதி இல்லை வாசகன் மட்டுமேன்னு வாசிச்சார். எல்லாமே நாமதான். அகம் பிரம்மாஸ்மி. பிரக்ஞானம் பிரதியாஸ்மி. இது அத்வைதம்.

அய்யர் : தெய்வீகம்.

கதிர் : கார்ல் பப்பர் சுவாமிகள் தத் + வம் + அஸின்னு இதைப் பிரிச்சுப் பாக்கிறார். பிரதி வாசகன் வாசிப்புன்னு மூணு இருக்குன்னு சொல்றார். இதுவே விசிஷ்டாத்வைதமாகும் என்றறிக.

அய்யர் : திவ்யம்!

ராம : *(கோபித்து)* வேய் அய்யர், உமக்கு இப்ப என்னவே புரிஞ்சது?

அய்யர் : நாங்க மறையோர். மறைஞ்சிருந்தாத்தான் பேஷ்ம்போம்.

கெ.ஆர்.எஸ். : *(குறட்டைவிட்டுத் தூங்கியவர் திடுக்கிட்டு விழித்து. அவசரமாக வாயைத் துடைத்து)* இவ்வாறு ஜனநாயக ரீதியான பிரசங்கம் வழியா புரட்சியைக் கொண்டுவந்து, பிரசங்கமில்லாத ஒரு சமத்துவ ராஜ்யம் அமைக்கலாம்... ஓம் தத் சத்.

கட்டி : ஓய், இங்க புதுப்புது விஷயமா வந்து அலம்பிட்டுருக்கு.

கெ.ஆர்.எஸ். : புது விஷயம்தானே, இயங்கியல் பொருள்முதல் வாதம்...

கட்டி : நாசமாப் போச்சு. ஓய் வீரபத்ர பிள்ளை, இதை அப்பிடி ஓரமா ஒதுக்கிப் போடும்வே. வேணுமானா ஓணம் விஷு சிறப்பு மலருக்கு ஒரு கட்டுரை வாங்கிப் போடலாம், ஆத்மா சாந்தி அடயட்டும்.

ராம : *(தலையைச் சொறிந்து)* தத்வமசி, எங்கியோ கேட்டமாதிரி இருக்கு.

கதிர் : திரும்பிப் பார்ப்பவர் உப்புத் தூணாகக் கடவர்.

கட்டி : ஓரமாத் தள்ளி நில்லும்வேய். உம்ம காலம் முடிஞ்சது. லைப்ரரில நிம்மதியாட்டு இரும். பைன்ட் பண்ணி வைப்பாவ. பத்து வருஷம் கழிஞ்சு எவனாவது முனைவர் ஆய்வுக்கு முனையறதுவரை தேமென்னு இருக்கலாம்.

வீர : மிஸ்டர் கதிர். *(தயங்கி)* ஐயா, *(மீண்டும் தயங்கி)* அய்யா, என் நாடகம் இப்படி இல்ல.

கதிர் : நீங்க யாரு?

வீர : நாடக ஆசிரியர்.

கதிர் : இப்பம்தானேவேய் சொன்னேன், நீரு இல்ல. செத்துட்டீரு.

வீர : என்னது?

கதிர் : டாக்டர் பார்த்த உம்ம நாடியப் பிடிச்சுப் பார்த்தப்ப குளுந்துபோய் இருந்துதாமே. ஆதர் இஸ் டெட்டுனு எழுதியே குடுத்திட்டாரு.

வீர : ஆனா நான் இருக்கேனே.

கதிர் : சும்மா இருந்தாப் போருமா? விஞ்ஞானரீதியாட்டு இருக்கணும்வே. தத்துவரீதியாட்டு இருக்கணும்.

வீர : கதிரு, அய்யா, சார் (மன்றாடி) கதிரு, ராஜா...

(கதிர் திரும்பியே பார்க்கவில்லை)

வீர : கதிரு..ஓய்... கதிரு... அய்யா (அழுது புலம்புகிறார்)

கதிர் : அய்யரே... உமக்கு கம்ப்யூட்டர் தெரியுமா?

அய்யர் : கத்துண்டாப் போச்சு. ஆச்சுவலி வெள்ளைக்காரன் வந்தப்ப முதல்ல இங்க்லீஷ் கத்துண்டது என் கிராண்ட் ஃபாதர், ஒண் மிஸ்டர் லட்சுமி நரசிம்மய்யர். சில்வர் டீத் ஆரட்டர்னு சொல்லுவா. வெள்ளியில பல் கட்டிட்டிருந்தர். சிரிச்சார்னா கோர்ட்டுலயே கைதிகள் பேதி போயிடுவாங்க.

வீர : கதிர், வே கருணைகாட்டும் வே. அய்யரே பாவம் பாரும்வே. இம்பிடுநாள் உம்மை எழுதினேனே வேய்...

(அழுது புலம்பி விழுந்து. உறைகிறார்)

கதிர் : பரிணாம சக்கரத்தில அடுத்த கட்டமா புது அவதாரம் வருது.

கட்டி : வேற கிருஹத்து ஜீவனா? பிரிடேட்டர், டெர்மினேட்டர்.. மூணு கண்ணு, இரும்புப்பல்லு, ஆறு காது... அதெல்லாம் ஷ்வாஸ்நெகர் எடுத்தாச்சே....

கதிர் : (கெ.கெ.எம்மிடம்) ஓய் நீரு முதல்ல அந்த அப்பாவி மேலேருந்து எறங்கும். சர்வாதிகாரப் பாவி. ஒழிச்சுக்கட்டிப் போடுவேன்.

கெ.கெ.எம். : எம்மையா இறங்கு என்றாய்?

கதிர் : உம்மைத்தான்வே.

கெ.கெ.எம். : நன்றாக என்னைப்பார்! (இறங்குகிறார்)

கதிர்: உடம்பெல்லாம் மிஷின்கண்ணாக்கி சுட்டபோதிலும் குத்தம் சொல்லாதே.

அருணா : (எழுந்தோடி வந்து) மீட்பரே என் ஆத்மாவை ரட்சியும்.

கதிர் : இரும்வே, சோலி இருக்குல்ல? முதல்ல இந்தாளுக்க கதய முடிப்பம்.

கெ.கெ.எம். : அற்பா, என் சக்கராயுதத்தால் உன்னை...

கதிர் : டாக்டர் பார்த்த உம்ம நாடியப் பிடிச்சுப் பார்த்தப்ப குளுந்துபோய் இருந்துதாமே. ஆதர் இஸ் டெட்டுனு எழுதியே குடுத்திட்டாரு.

வீர : ஆனா நான் இருக்கேனே.

கதிர் : சும்மா இருந்தாப் போருமா? விஞ்ஞானரீதியாட்டு இருக்கணும்வே. தத்துவரீதியாட்டு இருக்கணும்.

வீர : கதிரு, அய்யா, சார் (மன்றாடி) கதிரு, ராஜா...

(கதிர் திரும்பியே பார்க்கவில்லை)

வீர : கதிரு..ஓய்... கதிரு... அய்யா (அழுது புலம்புகிறார்)

கதிர் : அய்யரே... உமக்கு கம்ப்யூட்டர் தெரியுமா?

அய்யர் : கத்துண்டாப் போச்சு. ஆச்சுவலி வெள்ளைக்காரன் வந்தப்ப முதல்ல இங்க்லீஷ் கத்துண்டது என் கிராண்ட் ஃபாதர், ஒண் மிஸ்டர் லட்சுமி நரசிம்மய்யர். சில்வர் டூத் ஆரட்டர்னு சொல்லுவா. வெள்ளியில பல் கட்டிட்டிருந்தர். சிரிச்சார்னா கோர்ட்டுலயே கைதிகள் பேதி போயிடுவாங்க.

வீர : கதிர், வே கருணைகாட்டும் வே. அய்யரே பாவம் பாரும்வே. இம்பிடுநாள் உம்மை எழுதினேனே வேய்...

(அழுது புலம்பி விழுந்து. உறைகிறார்)

கதிர் : பரிணாம சக்கரத்தில அடுத்த கட்டமா புது அவதாரம் வருது.

கட்டி : வேற கிருஹத்து ஜீவனா? பிரிடேட்டர், டெர்மினேட்டர்.. மூணு கண்ணு, இரும்புப்பல்லு, ஆறு காது... அதெல்லாம் ஷ்வாஸ்நெகர் எடுத்தாச்சே....

கதிர் : (கெ கெ எம்மிடம்) ஓய் நீரு முதல்ல அந்த அப்பாவி மேலேருந்து எறங்கும். சர்வாதிகாரப் பாவி. ஒழிச்சுக்கட்டிப் போடுவேன்.

கெ.கெ.எம். : எம்மையா இறங்கு என்றாய்?

கதிர் : உம்மைத்தான்வே.

கெ.கெ.எம். : நன்றாக என்னைப்பார்! (இறங்குகிறார்.)

கதிர்: உடம்பெல்லாம் மிஷின்கண்ணாக்கி சுட்டபோதிலும் குத்தம் தீக்கமே.

அருணா : (எழுந்தோடி வந்து) மீட்பரே என் ஆத்மாவை ரட்சியும்.

கதிர் : இரும்வே, சோலி இருக்குல்ல? முதல்ல இந்தாளுக்க கதய முடிப்பம்.

கெ.கெ.எம். : அற்பா, என் சக்கராயுதத்தால் உன்னை...

கதிர் : சக்கராயுதமா? அதை நான் தோசைக்கல்லாட்டுல்ல வாசிக்கேன்.

கெ.கெ.எம். : *(குழம்பி)* அப்படியானால் கதாயுதம்?

கதிர் : அது மத்து.

கெ.கெ.எம். : *(கலங்கி)* ஐயகோ, என் செய்வேன்!

அய்யர் : எம் பெருமானே, உலகளந்தோய்!

கெ.கெ.எம். : சொல்லு பக்தா...

அய்யர் : சீ, தள்ளி நில்லும்வே பரட்டக் கிளவா. சாமி கும்பிடுறப்ப குறுக்க வாறியா? கந்தா கதிர்வேலா!

கெ.கெ.எம். : அப்ப எனக்க கெதி?

கதிர் : உமக்குத்தான் மெட்ராஸ் மியூசியத்தில தனி ஷெல்ப் ஏற்பாடு செய்திருக்கு.

கெ.கெ.எம். : *(பீதியுடன்)* அங்கபோய் நிக்கவா?

கதிர் : ஏன் அலக்சாண்டரும் நெப்போலியனும் நிக்கலியா? உமக்கென்ன தீனம்?

கெ.கெ.எம். : கதிரு, நான் உனக்க எடுபிடியாட்டு இங்கியே ஒரமாட்டு நின்னுக்கிடுதேன்...

கதிர் : உம்ம மாதிரி பாவிகளுக்கு சொர்க்கத்தில எடமில்ல. இனிம ஜனநாயக யுகமாக்கும். நவரும்வே.

கெ.கெ.எம். : எனக்கு வயசாச்சு. எனக்கு ஒரு கெதியில்ல. *(கண்கலங்கித் தழுதழுக்கிறார்.)*

கதிர் : நிண்ணு ஊளைபோடாதியும்வே. உமக்குத் தொணைக்கு ஆளிருக்கு. *(சொடக்கு போட்டு அழைக்க, ஓநாய்கள் ஓடிவருகின்றன.)* இது என்ன மாடல்?

அய்யர் : நாப்பது மாடல். ஆனா உழைக்கும்.

கதிர் : *(ஓநாய்களைத் தட்டிப்பார்த்து)* ஃபினிஷிங் ஸ்மூத்தா இல்ல *(ஒரு ஓநாயின் கண்களைக் கழற்றி எடுக்கிறான்)* லென்ஸ் அப்படியே இருக்கு.

ஓநாய் - 1 : அய்யா, கண்ணில்லாம நாங்க எங்க போவம்?

கதிர் : ஓநாய்க்கு எதுக்குடே கண்ணு? மூக்கும், வாயும், வாலும் போதாதா?

கட்டி : சரி, கிளம்புங்க.

(கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் இசை முழங்க. ஓநாய்கள் புடைசூழ, கூவித் தேம்பி அழுதபடி கெ.கெ.எம். போகிறார்.)

கதிர் : இந்தாரும் இதைப் போட்டுக்கிடும். (லென்சை நீட்டுகிறான்)

அய்யர் : வித் பிளஷர் சார். (உள்ளே போகிறார்)

அருணா : அய்யா பத்துகோடி அத்து அலைஞ்ச ஆத்மாக்கள் உங்களை நம்பி இருக்கு. பசிதாகமெடுத்த ஆத்மாக்களய்யா.

கதிர் : பிராஸ்பெக்டஸ் எப்டீண்ணு பாக்கட்டு...

(அய்யர் ஜீன்ஸ், டீ ஷர்ட், கலைந்த தலை, சோடாப்புட்டிக் கண்ணாடி சகிதம் கூயிங்கம் மென்றபடி வருகிறார்)

கதிர் : எப்பிடியிருக்கு மிஸ்டர் ஸ்டான் அய்யர்?

அய்யர் : ஜஸ்ட் ஃபைன் சொர்.

கதிர் : லெட்ஸ் ஸ்டார்ட், மிஸ்டர் அய்யர்.

அய்யர் : (கம்ப்யூட்டரை இயக்கி) டேட்டால்லாம் ஓ.கெ. சார். இதில் நாம நூத்து எண்பது மிலியன் மெகாபைட்வரை போலாம். ஸ்கை, பட் லிமிடட்.

கதிர் : (கையிலிருந்த சிறு லாப்டாப் கம்ப்யூட்டரில் விரலோட்டி) எம்.டு.ஃபோர், பீட்டா.

அய்யர் : (மும்முரமாக) குட் சார்.

(வேலையில் மூழ்குகிறார்கள்)

அருணா : அய்யா, கருணை காட்டுங்கய்யா...!

கதிர் : (தலைதூக்காமல்) சில்லறை இல்லப்பா.

அருணா : அய்யா, சாந்தி கிட்டாத்த ஆத்மாக்களய்யா.

கதிர் : மிஸ்டர் அய்யர், திஸ் ஃபெலோ இஸ் வெரி க்யூரியஸ்.

அய்யர் : பட் வி ஹேவ் டு ஹேவ் எ குட் பிக்சர் சொர்.

(இருவரும் வேலையில் ஆழ்கிறார்கள்)

அருணா : அய்யா பசிதாகமெடுத்து அலையுறோமே...

அய்யர் : (எரிச்சலுடன்) பாருங்க மிஸ்டர்...

அருணா : புகாரின், நிகலாய் புகாரின்.

அய்யர் : யா. மிஸ்டர் புக்கரைன். உங்க புக்காரை நாங்க எலுதிக் கிற்றோம். வி வில் கிவ் யூ எ நம்பர். ஸீ-ரொம்ப ஆட்மாக்கல் பெண்டிங் இருக்கு. ஃபைல் பண்ணனும், இன்டக்ஸ் பண்ணனும். ஸி... அடுக்கே எ ஃப்பூ இயர்ஸ்ஆயிடும். அப்புறமா அந்த சிலுவைய நாட்டனும். டோன்ட் பி ஹரி. ஹரிஹரின்னு சொல்லிண்டு இருங்கோ.

கதிர் : (கம்ப்யூட்டரைத் தட்டி) வேதா த்ரீ. சூக்தா ஒன் ட்வன்டி போர். பிராமனா எய்ட். ஆன்.

(கம்ப்யூட்டர் குரல்)

ஹம்டி டம்ட்டி சேட் ஆன் எ வால்
ஹம்டி டம்டி ஹேவ் எ கிரேட் ஃபால்
ஆல் த கிங் ஆன்ட் கிங்ஸ் மென்
கான்ட் மேக் ஹம்டி டம்ப்டி இன்டு ஒன்

அய்யர் : தோ பாத்தேளா? சீக்கிரமே எல்லாம் சரியாயிடும்னு கம்ப்யூட்டரே சொல்லுது. சோஷலிசம் வில் கம் அகெய்ன். லெட்ஸ் கோ அஹெட் சர்.

(வேலை)

அருணா : *(விம்மியழுது)* கெதியில்லாத ஆத்மா அய்யா... பசிதாங் மெடுத்த ஆத்மா அய்யா...

வீர : *(எழுந்து)* என்னய்யா இன்னுமா நாடகம் முடியலை.

கோழி : ரிபப்ளிகோ கோ...!

கதிர் : வாட் இஸ் திஸ்?

அய் : சிக்கன், நல்ல நாட்டுக்கோழி. நெய் முத்தல்...

கதிர் : யூ மேன், மேக் இட் ஏ குட் சூப். *(கட்டியங்காரன் கோழியைப் பிடிக்கிறான். அது கூவுகிறது உள்ளே போகிறான்)*

வீர : ஒரு கோழிக்கனவின் முடிவு! செம தலைப்பு. அடுத்த நாடகத்துக்குப் போட்ரலாம்.

கதிர் : சார், அப்ப நாடகம் முடிஞ்சதுல்லா?

வீர : சுபம். மங்களம்.

(எல்லாரும் கூடி எழுந்து நின்று 'மங்களம் மங்களம் ஜெய ஜெய மங்களம் மங்களம் மங்களம் ஜெய சுப மங்களம்' பாடுகிறார்கள்)

அருணா : என்னது, நாடகம் முடிஞ்சு போச்சா? அதெப்பிடி எனக்கு ஒரு வழி சொல்லாம?

வீர : அருணாசலம், நாடகம் முடிஞ்சுச்சு. அடங்கு.

அருணா : எப்படியா முடியும்? பத்து கோடி கெதிகிட்டா ஆத்மாக்களாக்கும் அலையுதது.

வீர : இது நாடகம்வே. போய் படுங்க. கலாட்டா பண்ணாதிய.

அருணா : *(விம்மியழுது)* கெதி கிட்டா ஆத்மாவாக்கும். பசிக்குதே. தாங்க முடியல்லியே.

கட்டி : ஆகப்பாடே பிரச்சினையாச்சே. நாடகம் முடிஞ்ச பிறகும் ஒருத்தன் கதாபாத்திரமாட்டு இருந்தா என்ன செய்யியது? ஓய் அர்ணாசலம்.

வீர : வேற நாடகப் பாத்திரம்தான் இப்ப அவர்ட்ட பேசமுடியும். வேய் சுப்ரமணி, நீரு அய்யராட்டு ஒரு நாலு வார்த்தை பேசும்வே....

அய்யர் : அஸ்கு புஸ்கு... திரும்பிப் போயிட்டு நானும் மாட்டிண்டு முழிக்கவா...?

கதிர் : அருணாசலம்... இல்ல புகாரின்! நிகலாய் புகாரின், வேய்...

அருணா : ஆ! வரலாறு என்னை விளிக்குது!

கட்டி : முத்தல் கேஸு. எங்கியாம் பைத்தார ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் தள்ளுங்கடே.

மேல்தட்டு நோயாளி : இன்னுமா நாடகம் முடியலை? பாவிகளா, தூங்கவே விடமாட்டியளா? ஈஸா, முருகா, இந்தப் பைத்தியங் கள்ட்டேருந்து என்னைக் காப்பாத்தப்பா...

கதிர் : மீசக்காரன் வாற நேரம். படுப்பம்.

(வெளியே 'பாரா உஷார்!')

கட்டி : அப்ப இவன்?

வீர : அப்பிடியே விட்ரலாம். பழகினா வாழ்க்கையே நாடகமாயிடும். நாடகம் வாழ்க்கையா ஆறது மாதிரி.

கட்டி : (மகிழ்ந்து) அடாடா, அப்ப எம்பிடு பெரிய நாடகம்! (புல்லரித்து) எம்பிடு கதாபாத்திரங்க! எம்பிடு சம்பவங்கள்! நடிச்சிட்டே இருக்கலாம்...

வீர : ஆனா கதை இருக்காதே.

கதிர் : இதில் மட்டும் என்ன கதயாம்?

(விசில். 'பாரா உஷார்')

வீர : மீசக்காரன் வாறான். படுத்திடுவம். மணி பன்னன்டாச்சுபோல...

அருணா : அய்யா, ஆத்மா சாந்தியடயல்ல அய்யா.

கட்டி : அய்யோ இவன வச்சுகிட்டு என்ன பண்ணுய்துண்ணு தெரியல்லியே,,,,

கதிர் : வழியிருக்கு. வேய் புகாரின். அதோ அதப் பாத்தீரா?

அருணா : சிலுவை!

கதிர் : அது என்ன தெரியுமா? தியாகத்துக்க குறியீடு. அத நீரு தூக்கி வச்சுகிட்டு நின்னாத்தான், வரலாறு உம்ம கெவுனிக்கும். பிடியும்வே...

(நான்கு பேராக சிலுவையைத் தூக்கி அருணாசலத்தின்மீது ஏற்றி வைக்கிறார்கள்)

கட்டி : பாத்து... மொள்ள...

அருணா : அம்மா ஆத்தா. (முனகுகிறான்)

கதிர் : இத வச்சிட்டு இனிமே ஓடியாடிப் பொலம்ப முடியாது. எறக்கி வய்க்கவும் மனசு வராது. கொஞ்ச நாளைக்கு தொந்தரவில்லை.

கட்டி : தூங்குவம்டே. எளவு ராத்ரில்லா தாண்டுது.

வெளியே காவலன் குரல் : பத்தாம் வார்டு பைத்தியாறனுவளும் படுத்தாச்சு. அப்பாடா.

(விளக்கு அணைகிறது)

அருணா : *(வலி முனகல்)* அம்மா, தாங்க முடியலியே அம்மா.

குரல் : நாட்டோரே, நல்லோரே, குலசேகரம் ஹாஸ்ய கலா மந்திர் அளித்த எட்டாவது நகைச்சுவை நாடகம் 'ஓநாய்களுடன் சேர்ந்து வாழ்வது எப்படி' *(டொய்ங்ங்)* இங்கு நிறைவு பெறுகிறது.

அருணா : *(தேம்பும் ஒலி)* அய்யோ கனக்குதே அம்மா.

குரல் : ரசிகப் பெருமக்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். வணக்கம்.

குரல் : பாரா உஷார்.

(வலி முனகல். இருட்டில் சிலுவை ஏந்திய புகாரின் மட்டும் தெரிகிறார்)

(திரை)

♦

11

உயிர்த்தெழுதல்

1

உயிர்த்தெழுதல்

தினியாழ்வின்

பனிப்பொழிவு நின்றுவிட்டிருந்தது. புதிய பனி தரையில் பொருக்குப்படலமாக விரிந்திருந்தது. அதிகமாக வழுக்குவது இதுதான். புகாரின் கனத்த கால்டிகளைத் தூக்கிவைத்து நடந்தார். சற்றுமுன் ஓய்ந்த பனிச்சூறை மேகங்களைத் தள்ளி வெகுதொலைவுக்குக் கொண்டு சென்று விட்டதுபோலும். வானம் வெளுக்க ஆரம்பித்தது. பார்வை சற்றுத் துலங்கியது. வானமும் பூமியும் சாம்பல் நிறமான முடிவற்ற வட்டப் பரப்பாக நீண்டு அகன்று கிடந்தன. ஒரு கணம் அவர் நடப்பது வானிலா மண்ணிலா என்ற ஐயம் ஏற்பட்டது. வெகுதூரத்தில் பனிச்சூறை மலைச்சரிவில் இறங்கும் ஒலி பல்லாயிரம் சீழ்க்கைகள்போல ஒரு கணமும், பல்லாயிரம் அழுகுரல்கள்போல மறுகணமும் கேட்டது. ஒளி மேலும் அதிகரித்தது. வானம் எண்ணைக் காகிதம்போல சன்னமாக ஒளியைக் கசியவைத்தது. சாம்பல்நிற கிராபைட் தகடுபோல பூமி அதை மௌனமாகப் பிரதிபலித்தது.

புகாரின் தன் மென்மயிர்க் கோட்டை இழுத்து அணிந்து கொண்டார். அது ஒரு காலத்தில் மிக விலை உயர்ந்ததாக இருந்திருக்கக்கூடும். இப்போது மிகவும் நைந்திருந்தது. அதற்குள் வைத்துத் தைக்கப்பட்ட மென்பஞ்சு பல இடங்களில் வெளியே பிதுங்கித் தெரிந்தது. பித்தான்கள் இல்லாததனால் அதை சணல் நாரால் இறுகக் கட்டியிருந்தார். அவரது சப்பாத்துகளும் மிகவும் சிதிலமடைந்திருந்தன. பழக்கமில்லாத சைபீரியக் குளிரில் அவர் முகம் சிவந்து தோலுரிந்து ரணமாக இருந்தது. கண்கள் நீர்த்துளிபோல மின்னிக்கொண்டிருந்தன. கைகளை உரசியபடி நின்றார். தன் முன் தெரிந்த பாதையற்ற வெளி நீட்சியை நிமிர்ந்து பார்த்தார். "நல்லது. இனி நான் வழியைக் கண்டுபிடித்துக் கொள்வேன்" என்றார். அது ஓர் எண்ணமாக இருந்ததா அல்லது சொற்களாக மாறிற்றா என்று

புஷ்கினுக்கு முந்தைய ருஷ்யாவின் முக்கியமான அங்கதக் கவிஞர் தினியாழ்வின். அவர் பெயரில் எழுதப்பட்ட இக்கதை அசலானதா, தழுவலா, மொழிபெயர்ப்பா என்று தெரியவில்லை. ஆசிரியர் யாரென ஊகிப்பதும் கடினமில்லை. இது வீரபத்ரபிள்ளையின் கைப்பிரதிக்கட்டில் இருந்தது.

அவரால் நிதானிக்க முடியவில்லை. அவர் பேசி பல நாட்கள் ஆகிவிட்டிருந்தன. நாட்கள் என்ன, வருடங்கள். அல்லது யுகங்களா? அல்லது ஒருவேளை அவர் இதுவரை பேசியதே இல்லை. விரைந்து ஓடும் அர்த்தமற்ற எண்ணங்களின் கலைந்த பரப்பாக இருந்தது மனம். எண்ணங்களின் பரஸ்பர உறவின்மை அடிக்கடி அவருக்குத் தெரிந்து, ஒருமுறை அச்சமும் மறுமுறை வியப்பும் எழுந்தது.

தன்முன் வெளித்த பனித்தரையில் தடம் ஏதும் உள்ளதா என்று புகாரின் குனிந்து பார்த்தார். வெகு தூரத்திற்கு அப்பால்தான் ஒருமுறை அவர் அந்த இரு பாதத்தடங்களைக் கண்டார். பிறகு பனிச்சூறை அனைத்தையும் மூடி கர்ஜித்துப் பொழிந்து ஓய்ந்தது. அதன் பிறகு இருட்டுதான் மிஞ்சியது. அந்த இருட்டில் காலால் மட்டுமே மண்ணை உணர முடிந்தது. அந்தப் பாதத்தடம் மண்ணில் சென்றபடி உள்ளது என்ற நம்பிக்கை அந்த இருளில் வழிநடத்தியது. அது பொய் நம்பிக்கை யாகவும் இருக்கலாம். ஏனெனில் அந்தப் பாதத்தடம் இல்லையென்றால் அவர் நடப்பதற்கே அர்த்தம் இல்லை. நின்றால் மறுகணமே பனியில் உறைந்து புதைந்து போய்விடக்கூடும். ஒருவேளை பிறகெப்போதும் அந்தப் பனிப்பாளங்களுக்கு அடியிலிருந்து அவர் உடல் வெளிவராது போகலாம். ஆனால் அந்தப் பாதத்தடம் தற்செயலாகத் தன் கண்ணுக்குப் பட்டதல்ல என்று அவருக்கு உள்ளூர உறுதியாகத் தெரிந்தது. அதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. ஆகவே அது அவரைக் கைவிட வாய்ப்பில்லை. ஆனால் ஏதும் தெரியவுமில்லை.

கண்கள் மேலும் மேலும் தெளிவடைந்து வந்தன. பனிவெளி மேலே எழுந்து தொலைதூர விளிம்புகளில் வானில் இணைந்தது. வானம் எல்லாத் திசைகளிலும் வட்டமாக வளைந்திறங்கி பனிப்பரப்பில் தொட்டிருந்தது; மூடப்பட்ட பெரும்சிப்பியொன்றின் உள்ளே இருப்பது போல. தொடுவிளிம்புகளில் பிரகாசமான நீலநிறக்கோடு ஒன்று உருவாயிற்று; மூடிய கதவுகளின் இடுக்குவழியாக வான் ஒளி தெரிவதுபோல. இந்த நீலச்சாம்பல்நிற சிப்பிக்கு வெளியே பிரகாசமான வானம் ஒன்று இருக்கிறது. தரையில் அந்தப் பாதத்தடம் தெரிந்தது. பனியில் திடமாகப் பதிந்து, சீரான இடைவெளிகளுடன், அது சென்றது. மெலிந்த மனிதன் ஒருவனின் பாதத்தடம் அது. அவன்...

தொடுவானக் கோடு மேலும் அகலமாயிற்று. சிப்பி மூடியின் விளிம்பு மெல்ல திறப்பது போலிருந்தது. நீலநிறமான ஒளி பனிவெளிமீது பரவியது. பனிக்குள் அகஎதிரொளிப்பு நிகழ்ந்து அது அலையலையாகப் பரவியது. அலைகளில்லாத கடல்போல மெல்லத் ததும்பி விரிந்து கிடந்தது பனிவெளி. புகாரின் தன் உடம்பெங்கும் களைப்பின் கனத்தை உணர்ந்தபோதிலும்கூட மனதில் உற்சாகம் நிறைவதை அறிந்தார். நீண்ட பயணம் நிறைவுறப் போகிறது. ஒருவேளை இன்றிரவே.

உடனே திருப்பிப்பார்க்கத் தோன்றியது. தனக்குப் பின்புறம் கரிய சுவர்போல அதுவரை அடர்ந்திருந்த இருட்டு இல்லாமலாகிவிட்டதை உணர்ந்ததும், முதுகு பாதுகாப்பின்மை கொண்டு நுண்ணுணர்வுப்

பரப்பாகி அதிர்ந்தது. ஒரு கோடி நரம்பு நுனிகள் விழித்தெழுந்து காத்திருந்தன அங்கு. மிக அருகே மெல்லிய சலனங்களை மனதால் கேட்டார். சற்றுநேரம் அவர் நின்றபோது அவை ஒரு மடிப்பிலிருந்து மேலேறின. அவர் நிற்பதைக் கண்டதும் அவை நின்றன.

பனி ஓநாய்கள். அவை அந்த நீலநிற ஒளியில் கண்ணாடிச் சிற்பங்கள் போலிருந்தன. தலைமீது விடைத்து நின்ற காதுகளிலும், கரிய நாசியின் இருபுறமும், வெண்பட்டுமயிர்கள் சிலிர்த்து நிற்பது பின்புற மங்கலின் பகைப்புலத்தில் துல்லியமாகத் தெரிந்தது. இரண்டு ஓநாய்கள் முதலில் ஏறி வந்தன. மூன்றாவது ஓநாய் பாதி உடல் தெரிய நின்றது. முதல் ஓநாய் தலையைத் திடமாகத் தூக்கி நாசியைக் காற்றுக்கு ஏந்தியபடி அசைவின்றி நின்றது. அது அங்கு நிற்பதை ஏற்கனவே அறிந்திராத ஒருவர் அதை அப்போது பனிப்பரப்பிலிருந்து பிரித்தறிந்துவிட முடியாது. இரண்டாவது ஓநாயின் உடல் ஆங்காங்கே சிலிர்ப்பது தெரிந்தது. மூன்றாவது ஓநாய் பிடரி மயிரின் மெல்லிய தோகை விரிந்து சிலுசிலுக்க, தலைகுனிந்து பனியை முகர்ந்தது; திரும்பிப் பார்த்தது. நான்காவது ஓநாயின் காதுகளும் நாசியும் தெரிந்தன. அவை மெல்ல கால்மாறியபடி, வால்நுனியை ஆட்டியபடி கூர்ந்து நின்றன.

அவை அவரைத் தொடர ஆரம்பித்து வெகு நாளாயிற்று. எப்போது என்பதே அவருக்கு நினைவில்லை. அவற்றின் முகங்களை அடிவயிற்றில் ஒருவித இறுக்கமாகப் பரவிய திகிலுடன் பார்த்தார். அவற்றுக்குக் கண்கள் இருக்கவில்லை. கண்களிலிருந்த இடத்தில் இரு கரிய குழிகள் மட்டும் இருந்தன. அவற்றின் நாசிகள் கரிய வண்டுகள் போல வழிகாட்டியபடி அவற்றை இட்டுவருவது போலிருந்தது. அல்லது நாசிகளின் நுனிகளில் கட்டப்பட்ட கண்காணா சரடால் யாரோ அவற்றை இழுத்து வருவதுபோல. அவற்றுக்கும் அவருக்கும் இடையேயான தூரம் குறைவதேயில்லை. அவர் எத்தனை முயன்றும் அதை அதிகரிக்கவும் முடியவில்லை. அவை உண்மையில் வெறும் பிரமைதானா என்று ஐயமுட்டுமளவு அவை மௌனம் மிக்கவையாக, காலடியோசைகூட இல்லாதவையாக இருந்தன.

புகாரின் பெருமூச்சுடன் தன்னைத் திரட்டிக்கொண்டு மேலே நடந்தார். சைபீரியா ஓநாய்களின் பூமி என்று படித்ததுண்டு. பனிவெளியை தங்கள் எல்லையடையாளங்கள் மூலம் சிறு பிராந்தியங்களாகப் பிரித்துக்கொண்டு அவை ஆள்கின்றன. நான் எல்லை மீறி வந்த ஓநாய் போலும். அல்லது எல்லைகளில்லாத ஓநாய். பின்தொடரப்பட்டு, துரத்தப்பட்டு, குதறப்பட்டு அழிய விதிக்கப்பட்ட ஜீவன். ஏனெனில் எனக்குக் கண்கள் உள்ளன. என் எல்லைகளைத் தாண்டி என்னால் பார்க்க முடியும். ஆனால் என் அழிவிற்கு ஓர் அர்த்தம் உண்டு. அது இன்று தெரிந்துவிடும். இவ்விரவு.

பனியின் உள்ஒளி அதிகரித்தது. எங்கும் நீலம் அலையலையாக நெளிந்தது. கண்களை மூடினாலும் கண்களுக்குள் நீலத்தின் நெளிவு. காற்றேயில்லை. கடுங்குளிரே அப்படி ஒளிவடிவு கொண்டது போலும்.

நடுநடுங்கியபடி மனம் அதன்மீது ஒரு நீல இறகுபோலப் பறந்து சென்றது.

பனிச்சரிவின் இறக்கத்தில் ஒரு சிறு கரியநிறக் குவியல் தெரிந்தது. நெருங்கியதும் அது ஒரு மனிதன் என்று கண்டார். கிழிந்த ராணுவக் கோட்டும், நைந்த சப்பாத்துகளும், ஆட்டுத்தோல் தொப்பியும் அணிந்த படைவீரன் உடலைக் குறுக்கி முழங்காலிடுக்கில் முகம் சேர்த்து ஒடுங்கி அமர்ந்திருந்தான். காலடியோசை அவனை எழுப்பியதுபோல நிமிர்ந்து பார்த்தான். பிணத்தின் வெறிப்பு போலிருந்தது அப்பார்வை.

புகாரின் நின்றார். அவர் மனம் துயரம் தாங்காது கனத்தது. அவன் தோளில் மெதுவாகத் தன் கையை வைத்து ''தோழர்'' என்று கூப்பிட்டார். அச்சொல் அவர் உள்ளுறைந்த பனியையெல்லாம் உருக்கி விட்டது போலிருந்தது. ''தோழர் இங்கே என்ன செய்கிறீர்?''

படைவீரன் பலவீனம் காரணமாக பேச சிறிதுநேரம் எடுத்துக் கொண்டான். நொய்ந்த குரலில் ''இங்குதான் நான் கொல்லப்பட்டேன் தோழர். இங்கிருந்து நகர்ந்தால் இந்த அடையாளமும் எனக்கு இல்லாமலாகிவிடும்'' என்றான்.

புகாரின் தொண்டையை இறுக்கிய குளிரை சிரமப்பட்டு விழுங்கினார். ''என்னுடன் வாரும்'' என்றார். அவன் கை நீட்டினான். புகாரின் அவனைத் தூக்கி எழுப்பினார். அவனிலிருந்து வினன் மட்கும் பனிப்பூசணத்தின் வீச்சம் எழுந்தது. ''நான் மட்கிக் கொண்டிருந்தேன் தோழர்.''

''வாரும்.''

அவர்கள் மெல்ல நடந்தனர். எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அடுத்த பனிச்சரிவில் இன்னொரு கரிய குவியல் தெரிந்தது. படைவீரன் ''அதோ'' என்று கைநீட்டினான். அந்தக் கையை புகாரின் பயத்துடனும் அருவருப்புடனும் பார்த்தார். தோல் மட்கிச் சுருங்கிய சாம்பல் நிறக் கரம். அது பனிக்கட்டி போலிருக்கக்கூடும் என எண்ணினார். ''நீர் கசாக்கா?'' என்றார்.

''ஆம் தோழர்.''

''உமது பெயர்?''

''நிகிதின்.''

''உமக்கு மனைவி குழந்தைகள் உண்டா?

''அவர்கள் இங்கு ஏதோ முகாமில் இருக்கிறார்கள் தோழா.

''உயிருடனா?''

''தெரியவில்லை.''

அந்த கரிய குவியல் ஒரு குடியானவன். மட்கிய வைக்கோலை சப்பாத்துக்களுக்குப் பதிலாக கைகால்களில் இறுகச் சுற்றியிருந்தான். அவன் உடைகள்மீது காளான்கள் பூத்திருந்தன. அவனைக் குனிந்து பார்த்தார் புகாரின். அவனது மங்கிய விழிகளைப் பார்த்து கனிவுடன் ''தோழர்'' என்று கூப்பிட்டார். ''உங்கள் பெயர் என்ன?''

அவன் உணர்ச்சியற்ற குரலில் ''மிகாயிஷ்கா'' என்றான்.

''நீர் பஷ்கீரியனா?''

''ஆம் தோழர்'' அவன் எழுந்தான். உணர்ச்சியற்ற குரலில் ''நீங்கள் யார், மீட்பரா? நியாயத் தீர்ப்பு தினம் வந்துவிட்டதா?'' என்றான்.

''தெரியவில்லை மிகாயிஷ்கா. ஆனால் இன்று நாம் அனைத்தையும் தெளிவுபடுத்திக்கொள்ளலாம். வாருங்கள்.''

அவன் திரும்பி சற்று நடந்து பனிப்படுக்கையை கையால் தட்டி ''லிஸ்ஸி லிஸ்ஸி'' என்று கூப்பிட்டான். ''பலூஷ்கா, பலூஷ்கா எழுந்திரு.''

பனி பிளந்தது. உள்ளிருந்து வெளுத்து உறைந்த ஒரு பெண்ணின் சடலம் எழுந்து அவர்களைப் புரியாமல் பார்த்தது.

மிகாயிஷ்கா அதே உணர்ச்சியற்ற குரலில் ''எழுந்திரு! நம்மை அழைக்க இதோ மீட்பர் வந்துவிட்டார்'' என்றான்.

''அப்படியா!'' என்றபடி அவள் தன் சாம்பல்நிற விரல்களில் அப்பியிருந்த பனித்துகள்களை உதறினாள். ''மீட்பரா வந்துவிட்டார்?'' என்று நம்பிக்கையின்றி புகாரினைப் பார்த்தாள்.

புகாரின் ஏதோ சொல்ல முனைந்தார். ஆனால் சொற்கள் வெளிவரவில்லை. அவள் சற்று பரபரப்படைந்து, ''லிஸி! லிஸி! இதோ பார், லிஸி'' என்று தன்னருகே பனித்தரையைத் தோண்டினாள். ஒரு சிறுமியின் சடலம் தெரிந்தது. அதைத் தட்டி உசுப்பி எழுப்பினாள். சிணுங்கியபடி அது எழுந்தது. கூட்டத்தை வியப்புடன் பார்த்தது.

''அம்மா இவர்தான் மீட்பரா? இவர் வந்த பிறகு நான் விளையாடப் போகலாம் என்றாயே.'' எழுந்து ஓடிவந்து புகாரினின் கைகளை தன் குளிர்ந்த விரல்களால் பற்றிக்கொண்டாள். ''நான் உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று ரொம்ப நாட்களாக நினைத்தேன்.''

''என்ன விஷயம்?''

''நான் உயிரோடு இருந்தபோது, இரவு தூங்குவதற்கு முன்பு அம்மா ஜெபம் செய்யச் சொல்வாளல்லவா?''

''ஆமாம்.''

''அப்போது நான் ஜெபம் செய்ய மாட்டேன். வெறுமே உதடுகளை மட்டும் அசைப்பேன். நீங்கள் ஏமாந்துவிட்டீர்கள்தானே?''

''லிஸி என்ன இது?'' என்றாள் தாய்.

''பரவாயில்லை'' என்றார் புகாரின் ''நான்கூட சிறுவயதில் அப்படித்தான் செய்வேன்.''

''நீங்கள்தான் மீட்பராயிற்றே. நீங்கள் ஏன் ஜெபம் செய்ய வேண்டும்?''

''நான் தேவதூதன் இல்லை குழந்தை.''

''பொய்.''

''நானும் உன்னைப் போலவே கொல்லப்பட்டவன், நிரபராதி.''

''அப்படியானால் எதற்கு எங்களை எழுப்பினீர்கள்?'' குடியானவன் கோபமாகக் கேட்டான். ''எங்கு கூட்டிச் செல்கிறீர்கள்?''

''நாம் ஒருவரை சந்திக்கப் போகிறோம்.''

''யாரைச் சந்திப்பது? ஜார் சக்கரவர்த்தியையா? இல்லை அதிபரையா? யாரைச் சந்தித்து என்ன? ஐயா கேளும். எனக்கு ஒரு வெஸ்டா சுற்றளவு நிலமும் நான்கு குதிரைகளும் இருந்தன. சொந்தமாக ஒரு சிறு மரவீடு இருந்தது. என் உளரில் தினம் சூரியன் உதிக்கும். குதிரைகளோடு சேர்ந்து நானும் என் மனைவியும் உழைத்தோம். என் தந்தையும் அந்த மண்ணில்தான் உழைத்தார். அங்கேயே இறந்து போகும் ஆசி அவருக்குக் கிடைத்தது. என் மண்...'' அவனால் பேச முடியவில்லை.

புகாரின் அவன் தோளில் மெல்லத் தட்டினார்.

''ஐயா பார்த்தீர்களல்லவா, நானும் என் குடும்பமும் இந்த கூட்டுப்பண்ணை வயலில் உறைந்து செத்தோம். பனியில்... முடிவேயில்லாத பனியில்... இத்தனை நாள் இங்கு கிடந்தோம்.''

''வாருங்கள் தோழர், என்னுடன் வாருங்கள்.''

''வந்து எதற்கு? யாரிடம் நான் போய் நியாயம் கேட்க முடியும்? எனக்கு நியாயம் சொல்ல இந்த பூமியிலும் வானத்திலும் யாரும் இல்லை ஐயா.''

புகாரின் அப்போதுதான் தன்னைச் சுற்றி சிறுகூட்டம் கூடியிருப்பதைப் பார்த்தார். பனியில் உறைந்த பிணமுகங்களில் ஆண்களும் பெண்களும் எல்லா வயதினரும் இருந்தனர். முகங்கள் உணர்ச்சிக் கொந்தளிப்பில் நெளிந்துகொண்டிருந்தன.

''என்னுடன் வாருங்கள்'' என்றார் புகாரின். தன் மார்பில் கை வைத்தபடி. ''நான் உங்களில் ஒருவன். எனக்கொரு செய்தி வந்தது. அதன்படி சென்று கொண்டிருக்கிறேன். என்னை அழைப்பவன்... அவனிடம் கேட்போம் இதெல்லாம் என்ன என்று!''

''நியாயத் தீர்ப்பு நாள்!'' என்று ஒருவன் கூவினான். உடனே கூட்டத்தில் பல குரல்கள் ''நியாயத் தீர்ப்பு நாள்!'' என்ற கூவ ஆரம்பித்தன. ஒலிகள் இணைந்து இரைச்சலாயின.

''எனக்குத் தெரியவில்லை'' என்றார் புகாரின். ''எனக்கு எதுவுமே தெரியவில்லை. எனக்குக் கிடைத்த செய்தி மிகவும் தெளிவற்ற ஒன்று. அரைத் தூக்கத்தில் வரும் மனப்பிம்பம்போல. ஆனால்...'' அவர் தரையைச் சுட்டிக்காட்டினார். ''இந்தப் பாதத் தடத்தைப் பாருங்கள். இது தெளிவாக இருக்கிறது. திட்டவட்டமாக நம்மை இட்டுச் செல்ல முயல்கிறது..''

''நாங்கள் இம்மாதிரி தீர்க்கதரிசிகளை இனி எப்படி நம்புவது அய்யா?'' என்றான் ஒரு வயோதிகன். செம்படையின் சீருடையை அவன் அணிந்திருந்தான். ''எங்கள் நம்பிக்கைகளல்லவா எங்கள்மீது பனிமலைகள்போல இடிந்து சரிந்தன.''

''நம்ப மாட்டோம்! நம்ப மாட்டோம்!'' என்று கூட்டம் கூவியது.

புகாரின் திரும்பி தான் வந்த பாதையைச் சுட்டிக் காட்டினார். அங்கு தூரத்தில் பனிமடிப்பொன்றின்மீது இளநீலநிறப் பனிச்சிற்பங்கள் போல ஓநாய்கள் நின்றன. ''அவை நம்மைப் பின்தொடர்கின்றன, பார்த்தீர்களல்லவா?''

''ஓநாய்கள்'' என்று கூட்டம் அச்சத்துடன் சொன்னது. ''அவைதான்! அவைதான்!''

''அவை நம்மைத் தொடர்கின்றன. ஆனால் நம்மை அணுக அவற்றால் முடியவில்லை. நமது தசைகளை உண்ண அவை விரும்புகின்றன. ஆனால்...'' புகாரின் தன் இருகரங்களையும் மார்புமீது வைத்து அழுத்தினார். ''நாம் இன்னமும் அழியவில்லை தோழர்களே. நமது மட்கிய மாமிசத்திற்குள் இன்னமும் ஏதேதோ மிஞ்சியுள்ளது. இன்னமும் காதலும், பாசமும் நம்மில் உள்ளன. நமது நாக்குகளில் கூறப்படாத சொற்களின் ஈரம் உள்ளது.''

''ஆம், அனைத்தையும்விட மேலாக எங்களிடம் இன்னொன்றும் உள்ளது தோழர்'' என்றான் ஒரு செம்படைவீரன். ''அதை உங்களால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது. அது வஞ்சிக்கப்பட்டவர்களின் சூழுறல். நீதி கிடைக்காது அழிந்தவர்களின் தகிப்பு. இல்லை, இதெல்லாம் இல்லை. அது ஒரு பெரிய இடைவெளி. இந்தப் பூமியைத் தூக்கிப் போட்டாலும் நிரம்பாத இடைவெளி அது...''

''நானும் வஞ்சிக்கப்பட்டவனல்லவா தோழரே?'' என்றார் புகாரின்.

''இல்லை, நீங்கள் தோற்கடிக்கப்பட்டவர். உங்கள் கணிப்புகள் கவறின. நீங்கள் ஆட்டத்தை இழந்தீர்கள். நீங்கள் வேறு உலகைச் சேர்ந்தவர். வேறுவகை மனிதர்.''

ஒரு கிழவன் முண்டியடித்து முன்னால் வந்தான் ''தோழர், நீங்கள் வரலாறு முழுக்க நிரம்பியிருப்பவர்கள். வீரர்கள், ராஜதந்திரிகள், அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள். நீங்கள் வரலாற்றை நிகழ்த்துவீர்கள். பிறகு அதை விருப்பப்படி எழுதியும் வைப்பீர்கள். நாங்கள்?''

''நாங்களா?'' என்றான் ஒரு வீரன் துவேஷத்துடன் சிரித்தபடி. ''நாங்கள் வெறும் எண்கள். அந்த எண் என்ன என்பதைக் கூட அறியாதவர்கள். தோழர் உங்களுக்குப் பெயர் உண்டு. எங்களுக்கு? மேன்மை தங்கியவரே, இங்குள்ள ஒருவர் பெயரையாவது உங்களால் கூற முடியுமா?''

புகாரின் தொய்ந்த தோள்களுடன் நின்றார். கூட்டம் அவரைச் சுற்றி முண்டிமுண்டி நெருங்கியது.

''நீங்கள் எங்களவர் அல்ல தோழர். நீங்கள் வேறுவகை மனிதர்.''

''நீங்கள் வேறு! நீங்கள் வேறு!'' என்று கூட்டத்திலிருந்து கலைசலான ஒலி எழுந்தது.

புகாரின் அந்தத் ததும்பும் கூட்டத்தை ஊடுருவிப் பார்த்தார். அவர் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன. பிறகு பேச ஆரம்பித்தபோது அவர் சொற்கள் கனமாக உருண்டு வந்தன. ''ஆம் தோழர்களே!, நான் வேறு வகையானவன். அது உங்கள் அனைவரையும்விட நன்றாகவே எனக்குத் தெரியும். அந்த வேறுபாடு மிக அடிப்படையானது. தோழர்களே, நீங்கள் ஒவ்வொரு முறையும் நாங்கள் என்றீர்கள். நான் எப்போதுமே நான் என்றுதான் சொல்கிறேன்.''

கூட்டம் குழம்பி அலைமோதியது.

''தோழர்களே, என்னுடைய தனிமையை ஒருபோதும் உங்களால் புரிந்துகொள்ள முடியாது. தீர்க்கதரிசிகள்மீதும், வீரர்கள்மீதும், கவிஞர்கள்மீதும், அறிஞர்கள்மீதும் கவிந்துள்ள தனிமையின் பாரம் தான் அவர்களுடைய சாபம்.''

''தீர்க்கதரிசிகளைப் பார்த்தால் நாங்கள் இனி காறி உமிழ்வோம்'' என்றான் ஒரு கிழவன். நெருங்கி முண்டி முன்னகர்ந்து தன் பிய்ந்த செருப்பைக் காட்டி ''என் செருப்புதான், என் செருப்புதான் இனி'' என்றான்.

''நான் தீர்க்கதரிசி இல்லை'' என்றார் புகாரின். ''நான் தனியன்!'' அவர் குரல் திடம் பெற்றது. ''தோழர்களே, இந்தப் பனிவெளியின் அடியில் நீங்கள் குளிர்ந்து உறைந்து காத்திருக்க ஆரம்பித்து எத்தனை நாளாகிறது? உங்கள் ஆத்மாக்களும் குளிர்ந்து உறைந்துவிடவில்லையா? ஆனால் நான் என் தனிமையின் முடிவில்லாத இருளில் ஒருகணம்கூட தூங்காமல் காத்திருந்தேன். பிரக்ஞையால் வெளி முழுக்கத் துழாவியபடி இருந்தேன். எனக்குத்தான் அழைப்பு வந்தது. எனக்கு மட்டும்தான். நான்

உங்களை எழுப்பியது என் மனதிலுறிய கனிவினால் மட்டுமே. உங்களுக்கும் எனக்கும் இடையே ஒருபோதும் தாண்டமுடியாத இடைவெளி உண்டு என்பதை நான் அறிவேன். நீங்கள் தனியர்களை வெறுக்கிறீர்கள். அவர்களை அஞ்சும்போது வணங்கி அடிபணிவீர்கள். அவர்கள் உங்களை வதைத்தாலும் கொன்றாலும் மௌனமாக ஏற்பீர்கள். அச்சம் அகலும் கணம் கல்லெறிய ஆரம்பிப்பீர்கள். ஆனால் என் தனித்த பீடத்தில் நின்றபடி என் இரு கரங்களையும் நீட்டி சகோதரர்களே என்று கூப்பிடும்போது என் மனம் கரைவதை நீங்கள் அறிய மாட்டீர்கள். என் அகங்காரம் கரைந்து, என் இருப்பு பூரணத்துவம் பெறும் கணம் அது.''

கூட்டத்தின் பின்னாலிருந்து ஒருவன் பிதுங்கி முன்வந்தான். ''அவன் தீர்க்கதரிசி இல்லையாம். ஆனால் தீர்க்கதரிசிபோலப் பேசுகிறான்'' என்று பிறரிடம் சிரித்தபடி சொன்னான். வெறுப்புடன் ''மேன்மை தங்கியவரே, தாங்கள் தீர்க்கதரிசி அல்ல என்பதுதான் தங்கள் தீர்க்க தரிசனமா?'' என்றான்.

புகாரின் பெருமூச்சுடன், ''என்னைத் தொடரும்படி எவரையும் நான் கட்டாயப்படுத்தவில்லை'' என்றார். மெதுவாகத் திரும்பி நடந்தார். அவரது பனிக்குல்லாயின் பிசிறுகள் நீல ஒளியில் சுடர்ந்தன.

''தாத்தா'' என்றது ஒரு கீச்சுக்குரல். ''நான் உன்னுடன் வருகிறேன்.''

புகாரின் நின்றார். லிஸி அவரை நோக்கி ஓடி வந்தாள். ''தாத்தா நான் உன்னுடன் வருகிறேன்.''

''லிஸி இங்கே வா...''

''வரமாட்டேன். இனியும் படுக்க முடியாது என்னால். நீ போ. நீ கெட்ட அம்மா.''

ஒரு பையன் ''நானும் வருவேன்'' என்றபடி ஓடி வந்தான். அவன் செம்பட்டை மயிர் பறந்தது. புகாரின் இரு கரங்களையும் விரித்து அவனை அள்ளிக்கொண்டார். மேலுமிரு குழந்தைகள் ஓடிவந்தன. பிறகு இன்னும் இரண்டு. அவையெல்லாம் சிதிலமாகிவிட்ட உடலிலும் குழந்தைத் தன்மை தெரிய இருந்தன. குப்பைக்கூடையிலிருந்து பொறுக்கப்பட்ட பொம்மைகள் போல. கை உடைந்தவை, நைந்தவை, கால் உடைந்தவை, கண் குருடானவை, அழுக்கு அப்பியவை. அவை அவரைத் தொட்டன. முண்டியடித்தபடி 'போவோம், போவோம்'' என்று துடித்தன. புகாரின் கூட்டத்தை ஒருமுறை பார்த்த பிறகு நடந்தார். கூட்டம் குழந்தைகளைப் பிடிக்க முயன்றது. திரும்ப அழைத்தது. வைதது. பிறகு அதுவும் சபித்தபடி, அழுது அரற்றியபடி அவர்களைத் தொடர்ந்தது.

குழந்தைகள் உற்சாகமாக இருந்தன. வெகுநாட்கள் அவை ஒளியையே பார்த்ததில்லை போலும். டானியின் அகலதிரொளிப்பு ஒளியே அவற்றை பரவசப்படுத்தியது. சலசலவென்று கலைந்து

சத்தமிட்டபடியும், குறுக்கும் நெடுக்கும் கலைந்து ஓடியபடியும், சிலசமயங்களில் பூசலிட்டும் அவை நடந்தன. கலைந்த சிகையும் கன்றிய முகமும் உள்ள ஒரு சிறுவன் புகாரினின் அருகே மெதுவாக நடந்தான். அவ்வப்போது அவன் உடல் புகாரின்மீது உரசியது. ஓரிரு முறைகளுக்குப் பிறகுதான் அது தற்செயல் அல்ல என்று அவருக்குப் புரிந்தது. அவன் தலைமீது தன் கைகளை வைத்துப் புன்னகைத்தார். பையன் அவர்மீது நன்றாக ஒட்டிக் கொண்டான். ''உன் பெயர் என்ன?'' என்றார் புகாரின்.

''மித்யா'' என்றான் பையன். ''நீங்கள் இயேசுதானே?''

''இல்லை. என் பெயர் புகாரின்.''

''அவர்கள் உங்களைச் சிலுவையில் அறையவில்லையா?''

''இல்லை, தூக்கிலிட்டார்கள்.''

''நான் ஒன்றுமே செய்யவில்லை மாமா. நான் ரொம்ப நல்ல பையன். படைவீரனிடம் பசிக்கிறது, ரொட்டி தா என்று கேட்டேன். அவன் என் வயிற்றில் பயனெட்டால் குத்திவிட்டான்! செத்துப் போய்விட்டேன். வடு இருக்கிறது, பார்க்கிறீர்களா?''

''வேண்டாம், வேண்டாம்.''

அதற்குள் பையன் தன் வயிற்றைக் காட்டினான். சிவந்த ரணம பிளந்து நின்றிருந்தது. ''ரொம்ப வலித்தது தெரியுமா'' என்றான் மித்யா பெருமை தொனித்த குரலில். ''எனக்கு விக்கலாக வந்தது. அப்புறம்தான் செத்துப் போனேன்.''

பிற குழந்தைகள் புகாரின் பையனிடம் கனிந்ததைப் பார்த்தன. ''மாமா எங்களுக்கும் தழும்புகள் இருக்கின்றன'' என்றபடி சட்டைகளைத் தூக்க ஆரம்பித்தன.

புகாரின் ''வேண்டாம் வேண்டாம்'' என்று மறுத்தார். அவர் மனம் உடைந்துவிடும் போலிருந்தது. ஆனால் குழந்தைகள் அதை உற்சாகமானதோர் விளையாட்டாக மாற்றிவிட்டிருந்தன. ''க்கு பாத்தியா, ப்புண்ணு...?'' என்று ஒரு இரண்டு வயது குழந்தை கண்கள் மலர சிரித்தபடி சொன்னது. ''மாமா இவன் புண்ணு சின்னது. என் புண்ணு பெரியது. வானம்போல பெரியது.'' ''வானம்போல எங்காவது புண் இருக்குமா போடி.'' ''மாமா இவன் கிள்ளுகிறான்.'' ''ஒட்டடைக்குஞ்சி ஒட்டடைக்குஞ்சி.'' ''பாருங்கள் மாமா ஒட்டடைக்குஞ்சு என்கிறான்.''

''அப்படியென்றால் என்ன?'' என்றார் புகாரின் அந்தப் பையனிடம்.

பையன் வெட்கி ''கெட்ட வார்த்தை'' என்றான். கூசி, கண்ணீர் மல்கி, ''இனிமேல் சொல்ல மாட்டேன்'' என்றான்.

''புகாரின் மாமா, அவன் கெட்ட பையன். சிலுவைமீது ஒன்றுக்குப் போனான்.''

''அவன் நல்ல பையன்'' என்றான் புகாரின். அவனை அணைத்தபடி ''உன் பெயர் என்ன?''

''வான்யா.''

''வான்யா, உன் அப்பா அம்மா எங்கே?''

''எனக்குக் காய்ச்சல் வந்தபோது படைவீரன் என்னைத் தூக்கி வண்டியிலிருந்து வெளியே போட்டுவிட்டுப் போனான். அம்மாவும் அப்பாவும் வண்டியில் இருந்து அழுதார்கள். அங்கே!'' அவன் கீழ்த்திசையில் சுட்டிக் காட்டினான். ''அங்கே அவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். நான் செத்துப் போய்விட்டேன்.''

''புகாரின் மாமா, எனக்கு வடுவே இல்லை'' என்றது ஒரு பெண் கவலையுடன்.

ஏழெட்டுக் குழந்தைகளும் தங்களுக்கும் வடு இல்லை என்று வருந்தின.

''நீங்களெல்லாம் தோற்றுப் போய்விட்டீர்கள்'' என்றான் ஒரு உயரமான பையன்.

''நீதான் தோற்றுப் போனாய். மூக்குத் தடியா.''

''காத்யா, உன்னை அடிப்பேன்.''

''மூக்குத்தடியா, மூக்குத்தடியா...''

''பாருங்கள் மாமா...''

''அமைதி அமைதி'' என்றார் புகாரின். ''இப்படியா சண்டை போடுவது?''

''கிறிஸ்துவைப் பார்த்ததும் நாங்களெல்லாம் உங்கள் பின்னால் வரிசையாக நிற்போம். சத்தமே போட மாட்டோம்.''

''யார் சொன்னது, கிறிஸ்துவைப் பார்க்கப் போவதாக?''

''அம்மாதான் சொன்னாள். அவளுக்கு நிறைய கதை தெரியும். சூரியனைக்கூடப் பார்த்திருக்கிறாள். அவள் ஊர் உக்ரேய்ன் தெரியுமா? ரொம்ப தூரம். அவ்வளவு தூரம்...''

''கிறிஸ்துவைப் பார்த்தால் நாங்கள் ஜெபம் செய்வோம்'' என்றாள் ஜெ. ''எனக்கு ஏழு புனிதர் ஜெபம் தெரியும். முழுக்கவே தெரியும்.''

புகாரினால் எவரிடமும் பேச முடியவில்லை. ஒருவரிடம் பேசினால் பிறர் ஊடே புகுந்து வேறு எதையாவது பேசினார்கள். குழந்தைகள் மிகவும் மனக்கிளர்ச்சியடைந்திருந்தன. ஒவ்வொரு குழந்தையும் அதை ஒவ்வொரு விதமாக வெளிப்படுத்தின. அவர் அருகே ஒரு பெண் குழந்தை அடிக்கடி உடம்பை நெளித்து இறுக்கியபடி கிளுகிளுத்துச் சிரித்தபடியே இருந்தது. ஒரு சிறுவன் அவரிடம் ஏதோ பேச

முற்படுவதும் தயங்குவதுமாக முட்டி மோதினான். பனியின் ஒளி அதிகரித்தது. அத்தனை பேரும் நிழல்களாக ஆகும்வரை. கண்கள் கூசின. தரை தெரியவில்லை. புகாரின் தரையை அந்தப் பாதத்தடத்திற்காகக் கூர்ந்து பார்த்தார். குழந்தைகள் கூர்ந்து பார்த்தன. வெகு எளிதாக கண்டுபிடித்து குதூகலித்தன.

லிஸி ''ஏசுவின் கால்தடம்'' என்றாள் ''அய்யோ, இதை நான் பார்த்திருக்கிறேன்.''

புகாரின் ''எப்போது?'' என்றார்.

''நான் காய்ச்சலாகப் படுத்திருந்தபோது ஒருநாள் யாருமேகூட இல்லை. என் நெற்றியை யாரோ தொட்டார்கள். கண் திறந்து பார்த்தால் யாருமில்லை. இந்தக் காலடித்தடம் மட்டும் பனியில் இருந்தது.''

''நானும் பார்த்திருக்கிறேன்'' என்றான் ஒரு பையன் ஆவலுடன் மூச்சிரைத்தபடி.

அத்தனை குழந்தைகளும் அதைப் பார்த்திருக்கின்றன என்று கூவின. பொய்யா, மெய்யா, கற்பனையா என்று கூற முடியவில்லை. அவை பாதத்தடத்தைத் தொடர்ந்து ஓடின.

புகாரின் பின்னாலிருந்து சிலர் கூட்டமாகத் தன்னருகே வந்து விட்டிருப்பதை அறிந்தார். ஒரு கிழவன், நீண்டதாடியும் சணல் அங்கியும் மெலிந்த உடலுமாக இருந்தவன், அவரை நெருங்கி தாடியும் வாய் நாற்றமும் அவர்மீது படும்படி முகத்தோடு முகம் சேர்த்து அவர் கண்களை உற்றுப் பார்த்தான். ''நீர் உண்மையிலேயே தீர்க்கதரிசி தானா?''

''நான் அப்படிக் கூறவில்லை.''

''கர்த்தர் வரும் தகவல் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''என்னை நம்புங்கள். வருவது கர்த்தரா என்றுகூட எனக்குத் தெரியாது. நான் அப்படிச் சொல்லவும் இல்லை.''

கிழவன் பளிச்சிட்ட கண்களுடன் அவனைக் கூர்ந்து பார்த்தான். 'என் பெயர் தாம்ரிக்கோ. பாதிரியாராக இருந்தேன். மூப்பத்தெட்டு வருடமாக பைபிளை வரிவரியாகப் பாடம் சொல்லி வந்தேன். என்னை நீ ஏமாற்ற முடியாது. நான் ஜார்ஜியன். ஜார்ஜியர்கள் கடுமையான வர்கள். மறக்காதே.''

''நான் தீர்க்கதரிசி இல்லை'' என்றார் புகாரின். ''நான் யாரையும் அழைக்கவுமில்லை, ஒரே ஒருவனைத் தவிர, அதுவும் மனம் இளகிய ஒரு கணத்தில் அழைத்துவிட்டேன்.''

''இப்போது இப்படிச் சொல்கிறாயா? திரும்பிப் பார். எத்தனை பெரும் கூட்டம்! புதைகுழிகளில் இருந்து எழுந்து வந்தபடியே

இருக்கிறார்கள். அவர்கள் உன்னைப் பார்த்ததே இல்லை. பின் வரிசையிலிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டு வருகிறார்கள்...''

புகாரின் திரும்பிப் பார்த்தார். பனிவெளி கரிய நிழலுருவங்களால் ஏறத்தாழ மூடப்பட்டிருந்தது. புதர்க்காடு அசைவதுபோல கூட்டம் அசைந்தது. புகாரின் மூச்சை இழுத்து விட்டபடி ''இத்தனை பேர்களா?'' என்றார்.

''நீங்கள் என்ன கண்டீர்கள் தீர்க்கதரிசியே'' என்றார் பாதிரியார். ''இது மிகச்சிறிய ஒரு பகுதி. விஷக் கோடையில் ஈசல்கள் செத்து விழுவது போலல்லவா மனிதர்கள் இறந்தார்கள், கூட்டம் கூட்டமாக! பசி, குளிர், பயங்கரநோய்கள், பயம், துக்கம், அவமானம் என மரணத்திற்குத்தான் எத்தனை முகங்கள்!''

''எத்தனை பெரிய கூட்டம்!''

''அவர்கள் உங்களைப் பின்தொடர்கிறார்கள். கண்ணீர்விட்டு அரற்றியபடியும், தோத்திரங்களைப் பாடியபடியும் பின்தொடர் கிறார்கள். நியாயத் தீர்ப்பு நாளில் கிறிஸ்து வந்திறங்கும் புனிதபூமிக்குக் கூட்டிச் செல்வீர்கள் என்று நம்புகிறார்கள்.''

புகாரின் கடுமையாகக் கோபம் அடைந்தார். ''இன்னமும் புனிதபூமி பற்றிய கனவு இவர்களிலிருந்து விலகவில்லையா என்ன? பட்டது போதாதா இவர்களுக்கு?''

''மக்கள் என்னதான் செய்வது? அவர்களுடைய வாழ்வு இம்மிகூடப் பொறுக்க முடிவதாக இல்லை. வெளியேற ஒரு வழிதான் இருக்கிறது. அதுதான் இந்தக் கனவு. இதையும் அவர்கள் விட்டுவிட வேண்டுமா? அமைதியாக மட்கி அழிய வேண்டுமா?''

''கொடூரம்'' என்றார் புகாரின்.

''மூப்பது வருடங்களாக நான் என் மக்களுக்கு ஊட்டி வந்தது போலியான நம்பிக்கை என்று எனக்கு நன்றாகத் தெரியும்'' என்றார் தாம்ரிக்கோ பாதிரியார். ''ஆனால் அவர்களுடைய மீட்பற்ற இருண்ட வாழ்வை நோக்கி நான் வேறு என்னதான் சொல்ல முடியும்? யேசுவைப் பற்றிப் பேசும்போது அவர்கள் முகம் மலர்வதையும், கண்கள் பிரகாசிப்பதையும், காண்பேன். பசியால் செத்துக்கொண்டிருப்பவன் கனவில் ரொட்டியைக் காணும்போது அடையும் பரவசம் அது. மகனே உன் மனம் மலர்ந்ததா, கண நேரமேனும் உன் ஆத்மா விடுதலையை அறிந்ததா என்று என் மனம் அரற்றும். இந்த ரொட்டி வெறும் கனவு குழந்தை. இந்தத் தோற்றம் உன் பசியை ஆற்றாது என எப்படி அவனிடம் கூற முடியும்? நண்பரே, சைபீரியாவில் என் மக்கள் கூட்டம் கூட்டமாக செத்து அழிந்தனர். அப்போது அவர்கள் என்னிடம் கேட்பார்கள், தந்தையே என்ன இது, ஏனிப்படி ஆகிறது என்று. புரியாமல், தாங்க முடியாத அதிர்ச்சியில் வாயடைந்து போனவர்களாக, உடம்பு எரியும் ஆத்திரத்துடன், மார்பு பிளக்கும் துயரத்துடன்,

வெறியாவேசத்துடன், ஈனஸ்வரத்தில் – எத்தனையோ பேர் விதவிதமாகக் கேட்டிருக்கிறார்கள். அதையே அவர்களைவிட உக்கிரமாக நான் என்னை நோக்கிக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் நான் பதில் சொல்வேன். கிறிஸ்து மகத்தான தியாகங்களை எதிர்பார்க்கிறார் என்று. துயரங்கள்தான் சொர்க்கத்துக்கான படிக்கட்டுகள் என்று. அவர்கள் சமாதானமடைந்தார்களா? இல்லை. அதை என்னால் உறுதியாகக் கூற முடியும். ஆனால் அவர்கள் முகம் சற்றுத் தெளியும். நம்பிக்கையினால் அல்ல. நம்பவும் ஒரு முகாந்திரம் உண்டு என்ற உணர்வால். அந்தச் சொற்கள்கூட முன்கூட்டியே அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். நான் என் வாயால் அதைச் சொல்லுவதைக் கேட்கும் பொருட்டுதான் என்னிடம் வந்தார்கள்.'' கிழவர் விம்மியழுதார். கண்ணீர் தாடிமீது சொட்டி உருண்டது. ''ஏழை மக்கள், வரலாறு முழுக்க ஏமாற்றப்பட்ட, சுரண்டப்பட்ட, கொன்று குவிக்கப்பட்ட, மக்கள். அந்தி தவிர வேறு எதையும் அறியாதவர்கள். அவர்கள் நம்புவதற்கு இப்பூமியில் நீதியென ஏதுமில்லை ஐயா. எனவே வானத்தில் நீதி உண்டு என்று அண்ணாந்து பார்க்கிறார்கள். ஆனால் விஞ்ஞானம் சொல்கிறது, வானம் என்று ஒன்று இல்லை, அது வெறும் தோற்றம் என்று. இருக்கலாம். விஞ்ஞானிகள் பாதிரிமார்களைவிட அறிவாளிகள் என்பதில் ஐயமே இல்லை. ஆனால் வானமும் இல்லாவிடில் எப்படி இம்மக்கள் ஒரு கணமாவது இளைப்பாற முடியும்? விஞ்ஞானம் அவர்களுடைய வானத்தைப் பறித்துவிடாமல் இருகைகளாலும் தடுக்க முயன்றேன். என் முப்பதாண்டுகால சேவை அதுதான்.''

''வானம் என்பது விஞ்ஞானத்தால் அளவிட முடியாதது'' என்றார் புகாரின். ''வானம் மிக மிக அகன்றது. அளவுகளுக்கும் கணிப்புகளுக்கும் அப்பாற்பட்டது.''

கிழவர் அவர் தோளைப்பற்றினார். ''அப்படியானால் இவர்களுக்கு நம்பிக்கைக்கு இடமுள்ளது என்கிறீர்களா? ஐயா ஏமாற்றாதீர்கள். தயவு செய்து சொல்லுங்கள். ஆத்மாவில் கைவைத்துச் சொல்லுங்கள். வானம் திறக்குமா? மீட்பர் வரக்கூடுமா? வானில் மனிதமனம் எட்ட முடியாத ஏதோ ஓர் எல்லையில் சொர்க்கம் என்பது இன்னும் இருக்கக்கூடுமோ?''

புகாரின் தன் இதயத்தில் கூரிய வலியை உணர்ந்தார். ''எனக்கு அது தெரியவில்லை தந்தையே. என் ஆழ்மனம் உணர்வதைச் சொல்கிறேன். மீட்பர், சொர்க்கம், நியாயத் தீர்ப்பு... எனக்கு இவைபற்றி எதும் தெரியாது. என் இதயம் அழுத்தமாக திரும்பத் திரும்பக் கூறுகிறது, இப்பாதங்களைத் தொடரும்படி. அங்கு என் கேள்விகளுக்குப் பதில் உண்டு என்று. வேறு எதுவும் நானறியேன்.''

''அதுபோதும் அதுபோதும்'' என்றார் கிழவர் உத்வேகத்துடன். ''நாங்கள் இங்கு பனியில் புதைந்து பல வருடங்கள் தாண்டிவிட்டன. ஓநாய்கள் எங்கள் உடலைத் தேடியலைவதன் பாத ஒலிகளைத் தவிர

வேறு எதையும் எங்கள் தலைக்குமேல் கேட்ட தில்லை. இதுபோதும். இதை நம்பி வருகிறோம். புதைகுழிகளில், குளிர்ந்து கிட க்க இனி எங்களால் முடியாது. தீர்க்கதரிசியே, வழிகாட்டியே'' கிழவரின் உடல் நடுங்கியது. துடிக்கும் கரங்களை மேலே தூக்கினார். ''பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே, உமது ராஜ்யம் வருவதாக. உமது நீதி வெல்வதாக. உமது கருணை ஒளிபெற்ற கரங்களாக எங்கள் எளிய நெற்றிகள்மீது படிவதாக. எம்மை உ யிர்த்தெழ வைப்பீர் ஐயா. துயரங்களின் வடுக்கள் தாங்கி, காலத்தில் மட்கி மண்ணாகி, நிற்கும் எங்களைப் பாருமய்யா. உமது நாமம் என் நாவுகளில் எரியட்டும். உமது வார்த்தை எமது பாதங்களுக்குத் தீபமாகட்டும். உமது செங்கோல் பூமியையும் வானத்தையும் இணைக்கும்படிப் பேருருவம் கொண்டு எழுவதாக! பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பரமபிதாவே, உமது மகிமைகள் வெல்க. உ மது ராஜ்யம் வருவதாக. உமது நாமம் மூவுலகங்களையும் ஆள்க. உ மது கருணை எங்கள் ஆத்மாக்கள்மீது பெய்க. ஆமென்!''

''ஆமென்'' என்ற எதிரொலி மிகப்பெரிய மூனகலாக, காற்றலை போலப் பரவிச் சென்றது. அந்தப் பெருங்கூட்டம் மண்டியிட்டிருப்பதை புகாரின் கண்டார். மார்பின்மீது கைவைத்து அழுத்திக் கொண்டார். அந்த இறுக்கம் மார்பில் குளிராக, வலியாக மாறிமாறிக் குடைந்தது. பிரார்த்தனைக்காக மண்டியிட்ட மக்கள் அப்படியே அமர்ந்திருந்தனர். எங்கும் எதிர்பார்ப்புமிக்க அமைதி நிரம்பியிருந்தது. அவர் பேசக்கூடும் என அவர்கள் எதிர்பார்ப்பது போலிருந்தது. புகாரின் பேச விரும்பினார். ஆனால் அவர்கள் எதிர்பார்த்திருக்கும் சொற்களைத் தன்னால் பேச முடியாது என்று அறிந்தார். அந்தப் பிரக்ஞை அவரை மௌனமாக்கியது.

தாம்ரிகோ பாதிரியார் தன் பளிச்சிட்ட விழிகளால் அவரைப் பார்த்தார். தூண்டுவதுபோல, வற்புறுத்துவதுபோல. புகாரின் பேசப் போவதில்லை என்று உணர்ந்ததும் அவர் தன் கைகளைத் தூக்கினார்.

''குழந்தைகளே'' என்றார் பாதிரியார். அவர் மார்பு விம்முவதை, முகம் நெகிழ்வதை, உணர முடிந்தது. ''துன்பப்பட்டவர்களே, அநீதிக்கு இரையானவர்களே, ஏமாற்றப்பட்டவர்களே, தோற்கடிக்கப்பட்டவர் களே, அவமதிக்கப்பட்டவர்களே, வலிநிரம்பிய ஆத்மாக்களைச் சுமந்து திரிபவர்களே, என் மக்களே'' அவர் குரல் இடறியது. கைகளை உத்வேகத்துடன் பலமுறை ஆட்டினார். பேசமுடியாது திணறினார். கம்மிய குரலில் ''உங்களுக்குச் சமாதானம்'' என்றார். உத்வேகத்தைத் திரட்டிய பிறகு ''கிறிஸ்துவின் மாசற்ற நாமத்தினாலே உ ங்கள் அனைவருக்கும் சமாதானம். கருணையின் எல்லையான பிதாவின் நாமத்தினாலே உங்களுக்குச் சமாதானம்'' என்று கூவினார்.

கூட்டத்தில் அதிருப்திபோல தோன்றிய ஒரு மெல்லிய சலசலப்பு பரவி மறைந்தது. பாதிரியாரின் உணர்ச்சி வேகத்தின் தூய்மையே அவர்களைக் கட்டிப்போட்டிருப்பது என்று பட்டது.

''நாம் கல்லறைகளில் பெருமூச்சுடனும் கண்ணீருடனும் காத்திருந்தோம். என் குழந்தைகளே, பிரார்த்தனை செய்தபடியும் மன்றாடியபடியும் நாம் விழிந்திருந்தோம். கிறிஸ்துவே எங்களுக்கு இது நிகழலாமா, எங்களுக்கு இது நியாயம்தானா என்று பல்லாயிரம்முறை, கோடிமுறை கேட்டுக்கொண்டோம். மூச்சுபோல நம்மில் ஓடியது அந்தக் கேள்வியே. அந்தத் தீயில்தான் இப்பனிவெளியில் நம் ஆத்மாவைக் கதகதப்பாக வைத்திருந்தோம்.''

ஆங்காங்கு விம்மல்கள் வெடித்தன. சற்று நேரத்தில் அந்தப் பெரும் கூட்டமே விசும்பிவிசும்பி அழ ஆரம்பித்தது. புதர்க்காடு மீது மழை நிரம்பிப் பெய்வதுபோல துயரம் கொட்டிக்கொண்டிருந்தது. கண்ணீர் தாரைதாரையாக வழிய, துடிக்கும் உதடுகளுடன், விரித்த கரங்களுடன், பாதிரியார் நின்றார். அழுகை வலுத்தபடியே போயிற்று. குழந்தைகள் தங்கள் பெற்றோரின் அழுகைகண்டு தாங்களும் அழுதன.

''நிரபராதிகளே'' என்றார் பாதிரியார். புகாரின் அச்சொல் தன் இதயத்தில் ஒரு குளிர்ந்த வாள் போல இறங்குவதை உணர்ந்தார். உடம்பு வலியில் துடிதுடித்தது. ''நிரபராதிகளே, பெயரில்லாத அடையாளங்களில்லாத மக்கள் கூட்டமே, நம்மை நோக்கி நம் தேவனின் அழைப்பு வந்திருக்கிறது.'' பாதிரியார் ஆவேசமாகக் கூவினார். ''ஆம் குழந்தைகளே, நமது தேவனின் அழைப்பு. நமது மீட்பர் வருகிறார். நியாயத் தீர்ப்பு நாள் வந்து விட்டது. கல்லறைகளிலிருந்து எழுந்து வரும்படி அவர் அறை கூவுகிறார். நமது விடுதலைக்கணம் இதோ சாத்தியமாயிற்று.''

ஆனால் கூட்டம் அச்சொற்களை ஏற்று எதிரொலிக்கவில்லை. அமைதியாக கண்ணீர் நிரம்பிய கண்களை விழித்தபடி பார்த்திருந்தது.

பாதிரியார் கணீரென்ற குரலில் பேச ஆரம்பித்தார், ''என் குழந்தைகளே, தலைமுறைகளுக்குமுன் கருணைக்கடலான பரமபிதா தம் ஒரே பேறான புதல்வனை இந்தப் பூமிக்கு அனுப்பினார். கன்னி பெற்ற புதல்வனாக கிறிஸ்து இந்த மண்ணில் பிறந்தார். பாவிகளே மனந்திரும்புங்கள் என்ற அவருடைய குரல் இந்தப் பாலைவனங்களிலும், பனிவெளிகளிலும், மலைகளிலும், வனாந்தரங்களிலும் அலைந்தது. நமது பாவம் அவரை சிலுவையில் அறைந்தது. எந்தையே இவர்களை மன்னியும், இவர்கள் செய்வதென்ன என்று இவர்கள் அறியார் என்று கூறி அவர் மரணமடைந்தார். மூன்றாம் நாள் அவர் உயிர்த்தெழுந்த போது மானுடகுலத்திற்கு ஒரு செய்தியை அளித்தார். அதுதான் நம்மை இதுநாள்வரை இட்டுவந்த தீர்க்கதரிசனம். ஆம், கிறிஸ்து மீண்டும் வருவார். அன்று அத்தனை புதைகுழிகளும் திறக்கும். அத்தனை பாவிகளும் நிரபராதிகளும் விழித்தெழுவர். தீமையும் நன்மையும் துல்லியமாக எடைபோடப்படும். சொர்க்கமும் நரகமும் தீர்மானிக்கப்படும். நிரபராதிகளின் ஆத்மாவைத் துளைத்திருக்கும் ரணங்கள் அப்போது ஆறும். அதன் பிறகு நம்மால் பறக்க முடியும். இந்தப் பனிப்பரப்பைவிட்டு நாம் எழுவோம். ஒளி நிரம்பிய வானில்

இறகுகள் போல நாம் மிதந்து அலைவோம். அப்போது நினைக்க இனிய விஷயங்களின்றி வேறேதும் இருக்காது. அன்பு மொழி தவிர வேறேதும் நம் செவி கேட்காது. திகட்டாத இனிமையை மட்டுமே நம் நா அறியும். வண்ணங்களின்மீது ஒளிபரவும் எழிலை மட்டுமே நம் கண் காணும். பொன்னுலகம்! ஆம், அதன் பொருட்டுதான் நாம் இத்தனை துயரங்களையும் அனுபவித்தோம். இத்தனை வலிகளுக்கும் அவமானத்திற்கும் என்ன அர்த்தம் என்று நம் மனம் முடிவின்றி குடைந்ததே, இப்போது அறிக. இதுதான். இந்த மீட்பின் பேரின்பம்தான். மீட்பு! மறுமை! விசுவாசிகளே எழுக! துயரங்களை உதறி இருளிலிருந்து ஒளி நோக்கி எழுக!''

அந்தக் கூட்டம் மெல்ல உத்வேகம் அடையும் அசைவு புகாரினை நடுங்க வைத்தது.

''இதோ கிறிஸ்து மேகங்களுடனே வருகிறார் என்கிறது வேதாகமம். இனி அவர் மாட்டுத் தொழுவத்தில் எளிய மனித குமாரனாக வரமாட்டார். சுடரும் வைரக் கிரீடமும், செம்பழுப்பு நிற அரச உடையும் அணிந்து, ஒளிவீசும் செங்கோல் ஏந்தி, வானவில் பாலம் வழியாக நடந்திறங்கி வருவார். அப்போது பூமி மின்னல்களால் கிழிபடும். இடியால் காற்று அதிரும். சொற்களெல்லாம் மௌனத்திற்குத் திரும்பிவிடும். நம் மீட்பரின் நாமம் மட்டுமே எஞ்சியிருக்கும்.''

''விசுவாசிகளே'' எனத் தொடர்ந்தார் பாதிரியார். ''நீங்கள் துன்பப்பட்டீர்கள், தோற்கடிக்கப்பட்டீர்கள், அவமதிக்கப்பட்டீர்கள், கிறிஸ்து இறங்கி வந்ததும் நாம் அனைவரும் நமது கரங்களை விரித்தபடி அவரை நோக்கி ஓடுவோம். எம் தேவனே எம்மை ரட்சிப்பீராக, எமது காயங்களுக்கு மருந்தாவீர், எமது கண்ணீருக்கு நீதியாவீர் என்று கூவுவோம். நம் ரட்சகர் தம் பொற்கரங்களால் நம்மைத் தொடுவார். நம்மை நோக்கிக் கனிந்து புன்னகைப்பார். அப்போது சைபீரியப் பனி இளகும். புத்தம் புதிய இளவேனில் இப்பாழ்மண்ணில் பூத்தெழும்.''

''தேவனே, மீட்பரே'' என்று அரற்றியது கூட்டம்.

''வேதாகமம் கூறுகிறது விசுவாசிகளே, 'பூமிக்கு சமாதானத்தைக் கொண்டுவர வந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தையல்ல, கூரிய பட்டாக்கத்தியையே கொண்டு வந்தேன்.' ஆம், வருகிறது தேவனின் வாள். 'எனது சொற்களோ இருபுறமும் கூர்மையுள்ள வாட்கள்.' வருகிறது தேவனின் ஒளிரும் வாள்; அது தேவனின் வஞ்சம். கேளுங்கள் நிரபராதிகளே கிறிஸ்து சொன்னார் 'வஞ்சம் என்னுடையது. எனது பழி உறங்குவதில்லை.' தேவனின் அடங்காத சீற்றம் பொங்கி வருகிறது. மாடமாளிகைகளை, கவச வண்டிகளை, துப்பாக்கி முனைகளை, சவுக்குகளை, குதிரைக் குளம்புகளை, செங்கொடிகளை, டிராக்டர்களை அது சாம்பலாக்கும். குளிர்விக்க முடியாத கொடுந்தீ அது. தேவனின் மகத்தான கோபத்தை வணங்குவோம். தேவனின் மைந்தர் நாம் என களிகூருவோம். ஆடிப்பாடுவோம். ஆர்ப்பரித்து

முன்னேறுவோம். இதோ வந்துவிட்டது நிரபராதிகளின் தினம். பாடுங்கள். தேவனைத் துதித்து ஆடுங்கள், மகிழ்ந்து கொண்டாடுங்கள்!''

கூட்டம் ஆர்ப்பரித்தது. கொந்தளித்து எழுந்தது. சிரிப்பும் அழுகையும் அரற்றலும் அலறலுமாகக் குமுறியது.

''நமது தீர்க்கதரிசியின் பாதங்கள் நம்மை இட்டுச் செல்லட்டும்! முன்னேறுக, முன்னேறுக!''

புகாரின் நடந்தார். தன் வலிக்கும் இதயத்தை கரங்களால் அழுத்தி உதடுகளைக் கடித்து இறுக்கினார். 'நீ இந்த கண்ணீருக்குப் பதில் கூறியாக வேண்டும். உனக்கு வேறு வழியில்லை. நீ வர வேண்டும். உனது நீதி கோபம் கொண்ட ஒரு கோடி சிம்மங்களாக கர்ஜனை புரியவேண்டும். ஆம், நீ வந்தேயாக வேண்டும்' அவர் மனம் ஆவேசமாகக் குமுறியது. 'நீ வராவிடில் இந்நிரபராதிகளின் கண்ணீருக்கு பொருளில்லை யென்றாகும். நீதி ஒரு பாழ்கனவென்று ஆகும். நான் உன் பாதங்களைத் தொடர்ந்து இதோ வருகிறேன். என் பயண முடிவில் உருவிய வாளுடன், நீதியின் வனநெருப்புடன், நான் உன்னைச் சந்திக்காவிடில் என்னை நான் பிளந்து போடுவேன். உன் பெயரைக் கூறியபடி என் ஆத்மாவை சாத்தானுக்கு அளிப்பேன். தீமையின் தூலமாகி, இப்பூவுலகில் அழுக்காக, அழிவாக, பாபமாகப் படருவேன். புனிதங்களைக் காறி உமிழ்வேன். இருளே நான் என்று வெறிக் கூத்தாடுவேன்!' அவர் மனம் வெறிகொண்டு பீறிட்டது. அவர் உடல் உத்வேகம் தாளாது தள்ளாடியது. தாக்கப்போகிறவர்போல நடந்தார். குழந்தைகள் மௌனமாகிப் பின்தொடர்ந்தன.

மலைகளுக்குக் கீழே நிழல் விரிந்திருந்தது. மேலே வானம் இளநீலத் தகடாக இருந்தது. அலையலையாக விரிந்த பனி பூமி. எங்கிருந்து வருகிறது இந்த ஒளி என்று புகாரின் ஒரு கணம் வியந்தார். தூரத்தில் ஒரு தனித்த உருவம் தெரிந்தது. புகாரின் தன் மனம் அதிர்வதை அறிந்தார். இல்லை இது இன்னொரு பிணம் என்று எண்ண முயன்றார். ஆனால் அந்தப் பாதத்தடம் அவ்வுருவில் இணைந்தது. அவர் மனதின் உள்ளே ஒரு குரல் இனம்புரியாது ஆர்த்தெழுந்தது. கூட்டம் பயத்துடனும் உத்வேகத்துடனும் நின்றுவிட்டது. பின்புற வரிசைகளிலிருந்து குழப்பமான கூக்குரல்கள் எழுந்தன. பிறகு அமைதி பரவியது, கடல் பனியிலுறைவதுபோல.

அவ்வுருவம் சிறிதாக இருந்தது. முகம் தெரியவில்லை. அவனுக்குப் பின்புறம் பனிக்குன்று ஒன்று நீலநிற ஒளியைச் சிதறடித்தபடி தகதகத்தது. அவன் தன் இரு கைகளையும் தூக்கினான்.

''இது அவனில்லை. இது வேறு யாரோ'' என்றார் பாதிரியார்.

''பார்ப்போம்'' என்றபடி புகாரின் நடந்தார். பாதிரியார் பின்தொடர்ந்தார்.

பனிமீது நின்ற மனிதனும் நெருங்கி வந்தான். அவனைப் படிப்படியாகத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அவனுடைய செம்பழுப்பு நிறத் தலைமயிர் கலைந்து கிடந்தது. சூழற் சுற்றைகள் தோள்மீது விழுந்து கிடந்தன. தாடி செந்நிறப் புகைச்சுருள்கள் போல முகத்தில் பரவியிருந்தது. அவனுடைய கண்களை புகாரின் சந்தித்த போது அவருடைய உறுதிப்பாடுகள் எல்லாம் உடைந்து ஒரு ஆழ்ந்த கேவல் வயிற்றிலிருந்து புறப்பட்டு வாயை அடைந்தது. அழுதபடி அவனை நோக்கி ஓடி மண்டியிடாது கடைசிக் கணத்தில் அவரது தன்னுணர்வு தடுத்தது. அகலமான அந்த விழிகளில் கோபம் இல்லை. துக்கம் மட்டும்தான் இருந்தது. ஆனால் மீட்புக்கான தவிப்போ, நிராசையோ, கோபமோ, புரிந்து கொள்ளமுடியாமையின் பரிதவிப்போ இல்லாத பரிசுத்தமான துக்கம். துல்லியமான நீலத்தடாகங்களிரண்டு பனியில் உறைந்து கிடப்பதுபோல. புகாரின் அசைவின்றி அப்படியே நின்றார். அவன் அவரைப் பார்த்ததும் பரிவுடன் புன்னகை புரிந்தான். முகம் பார்த்து முதற் சிரிப்பு சிரிக்கும் குழந்தையின் மாசற்ற புன்னகை அது.

பாதிரியார் முன்னகர்ந்து ''இது அவனில்லை. இது அவனில்லை. இது ஏதோ அனாதை'' என்று கூவினார். அவருக்கு மூச்சுத் திணறியது. பிறகு அவன் பாதங்களைப் பார்த்தார். அவர் உடல் தூக்கிவாரிப் போட்டது. மார்பில் கை வைத்தபடி ''பிதாவே இது அவன் பாதங்கள்தான்! எப்போதும் என் ஜெபத்தில் இவற்றைத்தான் பார்ப்பேன்! அப்படியானால்...'' என்று தடுமாறினார்.

மறுகணம் அவரில் கோபம் பொங்கியது. ''துரோகி, ஏமாற்றுக்காரா'' என்று கூவினார். கூட்டத்தை நோக்கி வெறியுடன் ''அவன் மீண்டும் அப்படியே வந்திருக்கிறான். கந்தலும் தூசியுமாக வந்திருக்கிறான்'' என்று அலறினார்.

கூட்டம் சலசலத்தது. பாதிரியார் ஆங்காரம் மிக்க குரலில் வீறிட்டார். ''ஏமாற்றிவிட்டான். அவன் நீதியின் வாளுடன் நியாயம் தீர்க்க வரவில்லை. உடைந்த ஜெபமாலையுடன் மீண்டும் சிலுவையேற வந்திருக்கிறான். பாவி! இரக்கமற்ற பாவி!''

''நம்மை என்னவென்று நினைத்தான்'' என்று சீறினான் ஒரு படைவீரன். ''நாமென்ன மந்தைகளா?''

''கொல்லுங்கள் அவனை. இம்முறை அவனை நாமே கொல்வோம்'' என்று ஒரு குரல் சீறியது.

''கொல்லுங்கள்! கொல்லுங்கள்!'' என்று கூவியபோதிலும் கூட்டம் அலைமோதியபடி தயங்கி நின்றது.

அவன் தன் இரு கைகளையும் விரித்து ''அன்புக்குரியவர்களே'' என்றான். அவன் குரல் கனவில் வெகுதொலைவிலெனக் கேட்கும் இனிய இசை போலிருந்தது.

ஒரு குரல் ''பேசாதே மோசக்காரா'' என்று கூவியது. இன்னொரு குரல் ''பசப்பப் பார்க்கிறான் வாயாடிப் பயல்'' என்றது.

அவன் கனிந்த மெல்லிய குரலில் ''என் குழந்தைகளே'' என்றான்.

ஒரு துண்டுப் பனி வந்து அவனைத் தாக்கியது. அவன் தடுமாறியபடி பின்னால் சரிந்தான். கூட்டம் சாபங்களைக் கூவியது. அவன் எழ முயல்கையில் இன்னொரு பனித்துண்டு அவனைத் தாக்கியது. பிறகு பனித்துண்டுகளும் கட்டிகளும் அவன்மீது பொழிந்தன. அவன் தரையில் குனிந்தமர்ந்து மௌனமாக அந்தத் தாக்குதலை ஏற்றான். புகாரின் ஒரு கணம் அனைத்தையும் ஒரு கொடுங்கனவு எனப் பார்த்து நின்றார். பின்பு அலறியபடி பாய்ந்து அவனைத் தன் உடலால் மறைத்தார். பனி அவரைத் தாக்கியது. தலையில் தாக்கிய ஒரு பனிப்பாளம் கண்களுக்குள் ஒளியாகச் சிதறியது. வலியை உணர்ந்ததும் தலை சுழன்றது. புகாரின் ''நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!'' என்று அலறினார். கைகளை வேக வேகமாக ஆட்டினார். ஒரேயொருவன் ஓங்கின பனிப்பாளத்தை எறியும்போது அவர் பார்வையை சந்தித்துத் தயங்கினான். பிறகு மீண்டும் கையைத் தூக்கினாலும் அவனால் எறிய முடியவில்லை. கீழே போட்டுவிட்டான். அந்தச் செயல் ஒரு பெரிய தடையாகப் பிறரைக் கட்டியது. வெறி குமுறியபோதிலும் பனிப்பாளங்களைக் கீழே போட்டுவிட்டு கூட்டம் அடங்கியது. பாதிரியார் கோபத்துடன் ''வாருங்கள், நாம் திரும்பிச் செல்வோம்'' என்றார். அவர்கள் திரும்பினர்.

''எங்கு போவது? மீண்டும் அந்தக் குளிர்ந்த புதைகுழிகளுக்கா?'' என்றது ஒரு குரல்.

கூட்டம் அதிர்ந்தது. ''புதைகுழிகளுக்குத் திரும்புவதா?'' என்று பல இடங்களில் பலர் கூவுவது கேட்டது. தொடர்ந்து எங்கும் பேச்சொலிகளும் கூக்குரல்களும் எழுந்தன.

''தந்தையே, எங்களுக்கு வழிகாட்டுங்கள். நாங்கள் எங்குதான் போவது?'' என்று ஒரு செம்படைவீரன் பாதிரியாரிடம் கேட்டான்.

பாதிரியார் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றார். பிறகு குரோதத்துடன் ''நாம் நமது இடுகுழிகளில் மட்கினாலும் சரி, இவனிடம் போகக் கூடாது குழந்தைகளே'' என்று கூவினார். ''இந்தப்பாவி நமது பிராத்தனைகளை அலட்சியம் செய்தவன். நமது கண்ணீரைக் கேலிக்கூத்தாக்கியவன். இவனை ஏற்பதைவிட நாம் நம் புதைகுழிகளில் அழுகி நாறலாம். நமது ஆத்மாக்களை பனி ஓநாய்களுக்கு விட்டுத் தரலாம். அவையேனும் பசியாறட்டும். அவை நம்மைக் கிழிக்கட்டும். குதறட்டும். நார்நாராக உரிக்கட்டும். அப்போதாவது புரியுமா இந்தப் பாவிக்கு நம் ஆத்மாவின் தவிப்பு?''

பாதிரியார் காலை ஓங்கி உதைத்தார். ஆக்ரோஷமாகக் காறித் துப்பினார். ''வாருங்கள் தோழர்களே, இனி இங்கு என்ன வேலை நமக்கு? நாம் பிதாவாலும் புறக்கணிக்கப்பட்டவர்கள். நமக்கு மீட்பு

இல்லை. ஆம், இன்றோடு அது தெளிவாயிற்று. மீட்பு என்பது வெறும் பிரமை. நம்மை ஏமாற்றும் பொறி அது. அது நமக்குத் தேவை இல்லை.''

கூட்டம் ஓசையிட்டபடி அவரைச் சூழ்ந்தது. தொலைதூரத்தில் அவர் குரல் எட்டாத பகுதிகளில் மனமுடைந்த அழுகை மட்டும் கேட்டது.

பாதிரியார் வெறியில் பைத்தியம் போலிருந்தார். ''ஆடிப் பாடுங்கள் நிரபராதிகளே. நாம் மீட்பற்றவர்கள். இருளே நம் ஒளி என்று கூறுவோம். சதியே நமது நீதி என்று கூறுவோம். ஓங்கும் வாளே நமக்கு ஆசி என்று கூறுவோம். உதைக்கும் காலையே முத்தமிடுவோம். நடனமிடுங்கள், கூத்தாடுங்கள்! இதோ நமது காலம் வந்துவிட்டது. ஆ! எத்தனை தெளிவாக உள்ளது எல்லாம்! நாம் ஏமாந்துவிட்டோம் குழந்தைகளே. ஆயிரமாயிரம் வருடங்களாக ஒளியை எதிர்பார்க்கும்படி நாம் கற்பிக்கப்பட்டோம். ஒளி ஒளி என்று தவித்து நம்மை அழித்துக் கொண்டோம். ஒளி அவர்களுக்குரியது. தேவதூதர்களுக்கும், ஞானிகளுக்கும், மன்னர்களுக்கும் உரியது. நமக்குரியது இருள்தான். ஒளியின் கடைசி விதையையும் செரித்துக்கொண்ட இருள். இருளின் அரசு வருக! இருளின் தேவர்களே வருக! இருளின் மகத்தான வல்லமைகளே, உங்கள் மீட்பை நாடுகிறோம். எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆம், இதுதான் தீர்க்க தரிசனம். குழந்தைகளே இனி நாம் இருளை வழிபடுவோம். ஆ! ஆ! ஆ!'' பாதிரியார் வெறிக் கூச்சலுடன் நடனமிட்டார்.

ஆனால் கூட்டம் அப்படியே நின்றது. பாதிரியார் களைத்துச் சுழன்று விழுந்தார். உடல் விம்ம வானைப் பார்த்தார். கைகளைத் தூக்கி ஒலியின்றி ஆட்டினார். மார்பு உடையும் ஒலியுடன் ''என் தேவனே, எம்மை ஏன் கைவிட்டீர்?'' என்று கூவினார். ''எமது நம்பிக்கைகளை ஏன் சிதறடித்தீர் தேவனே? உமக்குக் கருணையே இல்லையா? எங்கள் மீட்பனே.'' அவர் அப்படியே குப்புற விழுந்து மூர்ச்சையானார்.

கூட்டம் அழுதபடி அமர்ந்தது. சிலர் விழுந்துவிட்டனர். சற்று நேரத்தில் அந்தப் பெருங்கூட்டமே உடைந்து கதறி அழுது கொண்டிருந்தது. புகாரின் தன் கால்களை எம்பி அந்த எல்லை தெரியாத கூட்டத்தைப் பார்த்தார். அழுகையில் அது அலைமோதுவதைக் கண்டார். இதயம் வலிதாங்காமல் தெறித்தது. இருகைகளாலும் மார்பைப் பற்றியபடி குப்புற விழுந்தார். அருகே அவன் மண்டியிட்டுப் பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்தான். அவன் உடம்பெங்கும் ரத்தமாக இருந்தது. புகாரின் திடீரென்று சீற்றம் கொண்டார்.

''இதோ பார்'' என்றார் புகாரின். ''நீ உண்மையிலேயே தேவகுமாரன் என்றால் ஏன் இந்தக் கோலத்தில் வந்தாய்?''

அவன் புன்னகை புரிந்தான்.

''இந்த ஏழை மக்களின் தாபமும் குமுறலும் உனக்கு ஒரு பொருட்டே இல்லையா?''

அவன் புன்னகை மாறவில்லை.

ஆங்காரத்துடன் ''சொல்லு, நீ இந்த நிரபராதிகளின் கண்ணீருடன் விளையாடுகிறாயா?'' என்றார்.

அவன் மௌனம் கலையவில்லை.

புகாரினின் கோபம் அணைந்தது. தன் இதயத்தைப் பற்றியபடி ''தேவனே உம்மை நான் அறிவேன். உம் முன் என் அந்தரங்கம் பணிவு கொள்கிறது. வெகுகாலம் முன்பு உக்ரைனில் மிகில்னாய் ரயில் நிலையத்தில் நான் உம்மை முதன்முதலாக அறிந்தேன். துயரத்தில் செத்துக்கொண்டிருந்த ஏழை விவசாயிகளின் அருகே உமது பாதத் தடத்தைக் கண்டேன். ஏசுவே பிற்பாடு நான் எந்தச் சித்தாந்தத்தையும் நம்பவில்லை. எதற்கும் விசுவாசத்தை அளிக்கவில்லை. உமது குரல் என் அந்தரங்கத்தில் ஒலித்ததே அதைத்தவிர எதற்கும் செவி சாய்க்கவில்லை'' புகாரின் தழுதழுத்தார். ''உமக்காக நான் அனைத்தையும் இழந்தேன். அன்னாவை, என் கௌரவத்தை, உயிரை... ஆனால் இன்று உம்மீது என் மனம் எரிச்சல் கொள்கிறது. உம்மை வெறுக்க விரும்புகிறேன். கூறும் என் மீட்பரே. இத்தனை ரத்தமும் கண்ணீரும் எதற்கு?''

அவன் புன்னகை ஒளிரும் பார்வையுடன் அவரைப் பார்த்தான். உதடுகள் அசையவில்லை.

புகாரின் சட்டென்று வெறிகொண்டார் ''சொல்லு! நீ மனித குமாரனென்றால் சொல்லியே ஆகவேண்டும். எதற்காக நீ உன்னை இப்படி வதைத்துக் கொள்கிறாய்? உன் வேதனைக்கும் கண்ணீருக்கும் என்னதான் அர்த்தம்? அரண்மனைகளில் போப்பாண்டவர்கள் தங்கச் சிம்மாசனங்களில் அமர்ந்து உன் பெயர் சொல்லி மதுவருந்துகின்றனர். ஏகாதிபத்தியம் உன் பெயர்கூறி உலகமெங்கும் பரவி அடிமை கொள்கிறது. ஏழைகள் உன் பெயர் சொல்லிப் பசித்து வலித்து அழுது மரிக்கிறார்கள். மூடா மூடா!'' அவர் குரல் உடைந்தது. மனம் நழுவிச் சென்றது ''என் தேவனே, எதற்காக இப்படி நீர் உமது தெய்வீகப் பிறப்பை வீணடித்துக் கொண்டீர்? எதற்காகச் சிலுவையில் ரணவேதனைப்பட்டு மாண்டீர்? என் தேவனே, ஆயிரம் வருடங்களாக நீர் வல்லவராகத் திரும்பி வருவீர் என்று ஏங்கினோமே... உமக்கு தோற்கடிக்கப்பட்ட நீதியின் தாபம் புரியவேயில்லையா?''

புகாரின் சொற்களுக்காகத் தவித்தார். அவன் சிந்தனையில் ஆழ்ந்துபோய் இருப்பதைக் கண்டார். அவன் முகம் மிகப் புராதனமான ஏதோ ஓவியம் போலிருந்தது. மகத்துவமும் மர்மமும் நிரம்பிய ஓவியம். மிக அண்மையிலிருப்பினும் தொட முடியாதது.

''தேவனே, மகத்தான இலட்சியம் ஒன்றுக்காக நான் என் உயிரைப் பணயம் வைக்கிறேன். அந்த இலட்சியம் ஓர் அபத்தமான பகல்கனவுதான் என்று காலம் நிரூபிக்கிறது. என்னுடைய தியாகம் அப்போது வெறும் கேலிக் கூத்தாகிவிடுகிறதல்லவா?''

அவன் பெருமூச்சுவிட்டான்.

''உமது நாவில் பதில் இல்லை என்பதை நான் அறிவேன். வீணாகிப் போன ஒரு மகத்தான தியாகமே உமது வாழ்வும். இன்று இந்தப் பனிபூமியில் இடியென இறங்கும் நீதியின் வாளுடன் நீர் வந்திருந்தால் ஒருவேளை அனைத்திற்கும் பொருளிருந்திருக்கும். ஆனால் நான் உள்ளுர அறிந்திருந்தேன். அது இப்போது தெரிகிறது. உம்மால் உமது எல்லைகளைக் கடக்க முடியாது. நீர் வெறும் பலிதான். எம்மைப் போலவே அர்த்தமற்றுப் போன ஒரு பலிதான் நீரும்.''

அவன் தலைகுனிந்து சிலைபோல அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றி காற்றுவெளியே உறைந்துவிட்டது போலிருந்தது. அழுது அரற்றும் கூட்டத்தை ஏறிட்டுப் பார்த்தார் புகாரின். அவர் மனம் மீண்டும் பொங்கியது. ''இந்தக் கூட்டத்தைப் பாரும். தியாகிகளும், பலிகளும், பாபிகளும் அடங்கியது இது. உண்மை என்றும் மகத்தான இலட்சியம் என்றும் நம்பப்படும் ஒன்று நம்மை ஆக்ரமித்து பலி கொள்ள வைக்கிறது; பலியாக வைக்கிறது. பல கோடி உயிர்கள் மண்ணில் சரிந்தபின் காலத்தில் அது பொய் என ஆகிறதெனில் என் தேவனே, அத்தனை ரத்தமும் கண்ணீரும் எப்படிப் பொருள்படும்?''

அவனில் அசைவே இருக்கவில்லை. ஆனால் அவன் கேட்கிறான் என்பது மட்டும் புரிந்தது.

''சொல்லும் என் கர்த்தரே. நீர் தேவகுமாரன் என்றால் கூறும், கூறும் கூறும். நீர் ஊமையா? செவிடா? தேவாலயப் பதுமைதானா? சொல்லும்.''

புகாரின் வெறியுடன் எழுந்து தன் மார்பில் ஓங்கி அறைந்தார். ''சொல்லும். சொல்லாவிடில் இங்கே இக்கணமே என் ஆத்மாவை நரகங்களுக்கு ஒப்படைப்பேன்.''

ஆட்கூட்டம் ஆர்ப்பரித்தது. ''சொல்லும்! சொல்லும்! நீர் தேவனெனில் சொல்லியே ஆக வேண்டும்! என்ன அர்த்தம்! எங்கள் மரணத்திற்குப் பொருள் என்ன?''

அவன் எழுந்து இருகைகளையும் விரித்து ''என்னருகே வாருங்கள் குழந்தைகளே'' என்றான்.

''வரமாட்டோம். நீர் மீட்பர் என்றால் கூறும். எங்களுக்கு என்ன அர்த்தம்?''

''என்னிடம் வாருங்கள். உங்கள் ரணங்களின் வலிகளையெல்லாம் நான் ஏற்றுக்கொள்கிறேன்.''

''வரமாட்டோம். நீர் எங்களை வஞ்சித்த பாவி. சாத்தானைவிடக் கொடியவன்...''

''என் குழந்தைகளே உங்கள் புண்களைப் பங்கிடவே வந்தேன். என்னிடம் வருக.''

''போ! போ!'' என்று அலறியது வெறிகொண்ட கூட்டம். ''போ! போய்விடு!''

''எங்களுக்காக உதிரத்தால் பழிதீர்க்க சாத்தான் தயாராகக்கூடும் என்றால் இனி அவனே எங்களுக்குக் கடவுளும் மீட்பனும்'' என்றார் புகாரின். ''ஆம், இனி ரத்தம் மட்டுமே எமது புண்ணை ஆற்றும். நீதியின் ரத்தம். இல்லையெனில் அநீதியின் ரத்தம்!''

''சாத்தானிடம் போவோம்! சாத்தானிடம் போவோம்.'' ஒருவன் கூச்சலிட்டான். மொத்தக் கூட்டமும் அதை எதிரொலித்தது.

''உங்களுக்காக என் வலிக்கும் இதயத்தைக் கொண்டுவந்தேன். அதை நீங்கள் உதாசீனம் செய்கிறீர்கள் என்றால் நான் செய்யக் கூடுவது இதுதான்'' என்றான் அவன். வானை நோக்கிக் கரங்களை விரித்தபடி ''உங்கள் பொருட்டு என் பிதாவிடம் வேண்டிக் கொள்கிறேன்.'' தள்ளாடியபடி அவன் திரும்பினான்.

லிஸி முன்னால் ஓடி வந்தாள் ''ஏசு மாமா, நான் உங்களுடன் வருகிறேன்.''

''ஏசு மாமா நானும்'', ''ஏசு மாமா நான் அல்யோஷா. நானும் வருகிறேன்.'' கூட்டத்திலிருந்து பிஞ்சுக் குரல்கள் ஒலித்தன. ''பிடியுங்கள், பிடியுங்கள் குட்டி சைத்தான்களை'' என்று சிலர் கூவினார்கள். ஆனால் குழந்தைகளைப் பிடிக்க முடியவில்லை. அவை நான்கு பக்கமும் அவனைச் சூழ்ந்துகொண்டன. அவன் இரு கரங்களையும் விரித்து அவர்களை அணைத்துக்கொண்டான்.

லிஸி அவன் உடலைத் தொட்டு ரத்தத்தைப் பார்த்தாள். அவளால் தாங்க முடியவில்லை. ''ஏசுவே மீட்பரே, நீர் எங்கள் தேவனல்லவா? உமக்கு ஏன் இத்தனை புண்கள்...'' என்று விம்மியழுதாள். குழந்தைகள் எல்லாம் கண்ணீர்விட்டன. அவன் புண்களைத் தொட்டுப் பார்த்தன. சில குழந்தைகள் அவனை முத்தமிட்டன.

அவன் கனிவுடன் லிஸியின் தோள்களைத் தொட்டான். ''உன்மீது புண்கள் இருக்கும்வரை எனக்கும் புண்கள் வேண்டாமா என் செல்லமே'' என்றான். ''நான் உன் தேவனல்லவா?''

''வேண்டாம் தேவனே. நீங்கள் எங்களுக்காகப் புண்பட வேண்டாம்'' என்றான் ஒரு பையன். ''உங்கள் புண்களையெல்லாம் வேண்டுமானால் எங்களுக்குத் தந்துவிடும்.''

''ஏன்?'' என்றான் அவன். ''நான் யார் உனக்கு?'' என்று சிரித்தான்.

''ஏனெனில் நீர் எங்கள் தேவன். நான் எப்போதுமே உம்மை நினைத்துக்கொண்டிருந்தேன் யேசுவே. கஷ்டத்திலெல்லாம் என்

தேவனே எம்மோடிரும் என்று ஜெபித்தேன். நீர் எம்மோடிருந்தீர்'' என்றான் பையன்.

''யேசுவே நான் பசியோடு அழுது தூங்கியபோது நீர் வந்து என் நெற்றியை முத்தமிட்டீரல்லவா?'' என்றாள் ஒரு சிறுமி. ''அப்போது உமது மூச்சு என் தலைமயிர்மீது பட்டது. கண்களைத் திறந்தால் நீர் போய்விடுவீர் என்று பயந்து நான் பேசாமல் படுத்திருந்தேன்.''

அவன் புன்னகையுடன் அவர்களை மார்போடு தழுவிக் கொண்டான். குழந்தைகள் மனம் பொங்க அவனை மொய்த்துக் கொண்டன. பசியாலும் பிணியாலும் இறந்த மெலிந்த குழந்தைகள். வெட்டிக் குவிக்கப்பட்ட ஊனமுற்ற குழந்தைகள். ஆறாத புண்களை ஏந்திய குழந்தைகள். பனியில் உறைந்த மெல்லிய விரல்களும், மட்கிய கந்தல் உடைகளும் கொண்ட குழந்தைகள். அவன் அக்குழந்தைகளில் ஒன்று போலிருந்தான். ரத்தமும் அழுக்கும் பரவிய அவன் உடைகள் அவர்கள் உடைகளைப்போலவே இருந்தன. அவனுடைய மலர்ந்த கண்கள் அவர்களுடைய தெளிந்த விழிகள்போலவே இருந்தன.

''புண்கள் மிகவும் வலிக்குமே தேவனே'' என்றாள் எலிசா. ''உமக்கு வலிக்கிறது அல்லவா? என்னிடம் மருந்து இல்லை. ஆனால் எனக்கு வலிக்கும்போது அம்மா முத்தம் தந்து அந்த வலியை அவள் எடுத்துக் கொள்வாள்.'' எலிசா அவன் முழங்கால் ரணத்தை முத்தமிட்டாள். ''வலி போயிற்றா?'' என்று எதிர்பார்ப்புடன் கேட்டாள். உடனே பிற குழந்தைகளும் அவனை முத்தமிட ஆரம்பித்தன. ''வலி போயிற்றா ஏசுவே'' என்று ராகம்போட்டு அலை கேட்டன. சிறிது நேரத்தில் அது ஒரு உற்சாகமான விளையாட்டாக ஆயிற்று. அவன் சிரித்தபடி ஆகச்சிறிய ஒரு குண்டுக்குட்டியைத் தூக்கினான். அது தளர்நடை போடும் ஒன்றரை வயதுக் குழந்தை. அதன் இரு கைகளும் வெட்டப்பட்டிருந்தன. அது கண்களிலும், மென்கதுப்பிலும், முகம் முழுக்கவும் சிரிப்புடன், கால்களும் மூளித்தோள்களும் துள்ளி நெளிய, உதட்டை மிகவும் குவித்து அவனை முத்தமிட முயன்றது. பிற குழந்தைகள் அவனை நோக்கிக் கைநீட்டியபடி ''ஏசு மாமா நான்... என்னையும்'' என்று கத்தின.

அவன் ''அத்தனை பேரையும் மாமா மார்புமீது ஏற்றி வைத்துக் கொள்வேன். அத்தனை பேருக்கும் மாமா உதடு வலிக்க முத்தம் தருவேன். அத்தனை பேரும் என் செல்லங்கள் அல்லவா!'' என்றான். குழந்தைகள் கூவிக் கிரீச்சிட்டன. குதூகலித்தன. எங்கும் சிறு கைகால்கள் துடித்தன.

அவன் திரும்பி புகாரினைப் பார்த்தான். அவன் கண்கள் திடீரென்று இரு நீலச்சுடர்களைப் போல தகதகத்தன. புகாரின் மிதமிஞ்சிய அச்சத்துடன் பின்னடைந்தார்.

''கண்டம் என் நீதியென்றால் இந்த ஒவ்வொரு குழந்தை பொருட்டும் இப்பூமியை மும்முறை அழிப்பேன்'' என்றான் அவன்.

புகாரின் மடங்கி சரிந்து இரு கைகளையும் நீட்டி மறுத்தபடி வீறிட்டார். ''வேண்டாம் என் தேவனே, உமது கோபத்தை பாபத்தால் கருத்த இந்தப் பூமி தாங்காது. வேண்டாம்.''

கூட்டம் பின்னடைந்தது. பாதிரியார் எழுந்து அவனைப் பார்த்தார். அவர் வாய் உணர்ச்சியால் நெளிபட்டது. அவனுடைய கண்களின் உக்கிரம் குழந்தைகளுக்கு மட்டும் தெரியவில்லை போலும். அலை தொடர்ந்து குதூகலித்தன. பாதிரியார் மண்டியிட்டார். ''என் தேவனே, அகங்காரம் நிரம்பிக் கனக்கும் இப்பாவியின் ஆத்மாவை ரட்சியும் தேவனே'' என்று அழுதார்.

கூட்டத்தின் முன்வரிசை பதைத்து நின்றது. ஒவ்வொருவராக மார்பில் கைசேர்த்து மண்டியிட்டனர். அழுகைகள் மன்றாடல்களுடன் அவர்கள் பணிந்தனர். சற்று நேரத்தில் மொத்தக் கூட்டமும் அடங்கியது. அதன் ஆத்மா ஒற்றைப் பேருருவாக மண்டியிட்டு அவன்முன் இறைஞ்சியது.

''எனது வார்த்தை இருபுறமும் கூர்மையுள்ள வாள்'' என்றான் அவன். மிக மெல்லிய அக்குரல் ஒவ்வொருவருக்கும் கேட்டது. ஒவ்வொரு உடலும் அச்சத்தில் விறைத்தது.

''எனது கோபத்தின் அக்னி இதோ உள்ளது. நீதிமான் என்று தன்னை அந்தரங்கமாக உணரும் ஒரே ஒருவர் பொருட்டுகூட இப்பூமியை அழிக்க நான் சித்தமாக உள்ளேன்'.'

கூட்டம் திகிலில் பனியுருளைகள்போல ஸ்தம்பித்தது. காற்று மட்டும் மெல்ல வீசியது.

புகாரின் மெல்லிய குரலில் சொன்னார். ''தேவனே, நாங்கள் நீதிமான்கள் அல்லர். உன்முன் பாவத்தையன்றி வேறெதையும் அறிக்கையிட எங்களால் முடியாது'' என்றார்.

கூட்டத்திலிருந்து ஒரு வயோதிக மாது, ''ஐயா இந்தக் கரங்களால் உம்மீது பனிப்பாறையை எறிந்தபோது என் பாபச்சுமை முழுமை பெற்றது. இனி உம் பாதங்களைப் பார்க்கவும் எனக்குத் தகுதியில்லை'' என்றாள்.

புகாரின் ''எங்கள் அகங்காரமே எங்களை பாபத்திலும் துயரத்திலும் ஆழ்த்தியது தேவனே. உமது கரங்களால் எமது மனங்களைத் தொடும். தெளிந்தசுனைபோல எங்களை ஆக்கும்'' என்றார்.

''உங்கள் துயரங்கள் அனைத்தையும் நான் பெற்றுக்கொள்கிறேன். உங்கள் பாபங்களையெல்லாம் நான் சுமக்கிறேன்'' என்றான் அவன். ''ஏனெனில் என் பிதாவின் குமாரர்களில் நானே கடையன் என்று எப்போதும் உணரும் எளிமை எனக்கு அருளப்பட்டுள்ளது.''

அவன் கையிலிருந்த குழந்தை பொறுமையிழந்து அவன் கன்னத்தில் தன் தலையால் மோதியது. ''ந்தா ந்தா'' என்று அவனை அழைத்தது. அவன் சிரித்தபடி அதன் கன்னத்தை மூக்கால் நிமிண்டினான்.

''மாமா நாம் போய் விளையாடுவோம்'' என்றாள் லிஸி.

''போகலாம்'' என்றான்.

''எவ்வளவு நேரம்தான் பேசுவது? நான் விளையாடியே ரொம்ப நாள் ஆகிறது.''

''இரம்மா'' என்று அவள் தலையைத் தடவினான். கையில்லாத குழந்தை அவனைத் தலையால் முட்டும் விளையாட்டைக் கண்டு கொண்டது. அதன் குண்டுக் கன்னங்கள் குழிந்தன. நான்கு பால்பற்களுடன் வாய் சிவப்பாக விரிந்தது. நீலநிறக் கண்கள் இடுங்க, அழுந்திய மூக்கு பிதுங்க, மகிழ்ந்து சிரித்தது.

''குழந்தைகளே, நான் என் தந்தையிடம் போகிறேன். என்னுடன் வருகிறீர்களா?''

''நாங்கள் வருகிறோம்'' என்று குரலெழுப்பி ரகளை செய்தன குழந்தைகள்.

''உங்கள் தந்தை திட்டுவாரா?'' என்றது ஒரு குட்டி.

''திட்டவே மாட்டார்'' என்றான், அவள் கன்னத்தைத் தட்டி.

''தப்பு செய்தால் திட்டுவார். இல்லையா மாமா?'' என்றான் அல்யோஷா.

''என் தந்தையின் கண்ணில் குழந்தைகள் செய்வது எதுவுமே தவறு இல்லை'' என்றான் அவன். திரும்பி ''உங்களில் எவரால் கனமற்ற மனதுடன் என்னைத் தொடர முடியுமோ அவர்கள் வரலாம்''என்றபடி கிளம்பினான்.

''தேவனே உமது மகத்துவம் எமக்குப் புரிகிறது'' என்று கூவினார் பாதிரியார். ''ஆயினும் எங்கள் இதயங்கள் இரும்புபோல கனக்கின்றன. எங்கள் புண்கள் எரிகின்றன. எங்கள் வஞ்சம் எங்களைத் தகிக்கிறது ஐயா.''

அவன் திரும்பினான். ''எம் மக்களே, உங்கள் துயரம் எங்கிருந்து தொடங்குகிறது என்று பாருங்கள். உங்களைவிட அதிகத் துயரங்களை இக்குழந்தைகள் அடைந்தார்கள். உங்களைவிடப் பெரும் அநீதி இவர்களுக்கு இழைக்கப்பட்டது. ஆனால் இவர்களுடைய இதயம் கோடைகால மென்பஞ்சுபோல எளிதாக இருக்கிறது.

''ஆகையால் மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் மனம் திரும்பி குழந்தைகளைப்போல ஆகாவிடில் எந்தையின் உலகிற்குள் ஒருபோதும் உங்களால் நுழைய முடியாது.

''துயரமடைந்தோர் அறிக, பிறர் பொருட்டு துயர்கொள்ளுதலே மானுடமனம் கொள்ளும் உணர்வுகளில் மகத்தானது. வலி கொள்பவர் அறிக. பிறர் பொருட்டு கொள்ளும் வலியே உடல் கொள்ளும் உணர்வுகளில் மகத்தானது.

''கொல்லப்பட்டோர் அறிக. நீதியின் பொருட்டு கொல்லப்படுதலே மானுடனுக்குத் தரப்படும் உயர்ந்த வெகுமதி. அவமதிக்கப்பட்டோர்

அறிக. நீதியின் பொருட்டு அவமதிக்கப்படுதல் நம் பிதாவின் முன் உயர்ந்த கௌரவம் என வைக்கப்படும்.

''ஏனெனில் தியாகிகளின் ரத்தமே பூமியை சுத்திகரிக்கிறது. நிரபராதிகளின் கண்ணீர் பூமியில் மீண்டும் மீண்டும் முளைத்தெழுகிறது.

''ஆகவே நான் மெய்யாகவே உங்களுக்குக் கூறுகிறேன். நீதியின் பொருட்டு பசிதாகமுள்ளவர்களாக இருங்கள். நீதியின் பொருட்டு உங்களை பகிஷ்காரம் செய்துகொள்ளுங்கள். நீதியின் பொருட்டு உங்களைச் சிரச்சேதம் செய்துகொள்ளுங்கள்.

''தியாகிகள் அறிக. அடைவதற்காகத் தியாகம் செய்பவன் அனைத்தையும் இழக்கிறான். இழப்பதற்காகத் தியாகம் செய்பவன் அனைத்தையும் அடைகிறான்.

''தியாகிகள் அறிக. இலக்குகளுக்காகத் தியாகங்கள் செய்யப்படுவதில்லை. இலக்குகளோ மண்ணில் குறிக்கப்படுகின்றன. தியாகங்களோ என் பிதாவிற்கு முன்பாகக் கணக்கிடப்படுகின்றன.

''நிரபராதிகள் அறிக. மரணம் இறுதியல்ல. படுகொலைகள் மண்ணில் நிகழ்த்தப்படுகின்றன. விண்ணில் மதிப்பிடப்படுகின்றன.

''ஆகவே நான் மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் மண்ணில் விதைகளாக இருக்கிறீர்கள். மட்கியழியா விதைகள் ஒருபோதும் முளைப்பதில்லை.

''பலியானவர்களுக்குச் சொல்கிறேன், உங்களை பலிகொண்டோரை நேசியுங்கள். அவர்களுக்காகப் பிரார்த்தனை புரியுங்கள். அவர்கள் தங்களை சாத்தானுக்கு ஒப்புவித்து உங்களை நமது பிதாவிற்கு முன்பாக சேர்க்கிறார்கள்.

''பலியானவர்களுக்குச் சொல்கிறேன். நீதியின் பொருட்டு உங்கள் சந்ததிகளும் பலியாகப் பிரார்த்தியுங்கள்.

''ஏனெனில் நீதி அத்தகையது. வாழ்க்கை மண்ணில் நடக்கிறது. நீதி விண்ணிலிருந்து இறங்குகிறது. நீதி ஒருபோதும் தன் கூர்மையை இழப்பதில்லை.

''நிரபராதிகளாகிய என் மூதாதையர் என் பொருட்டு இறந்தனர்.என் உணவும் நீரும் என் கதகதப்பான போர்வையும் அவர்கள் கண்ணீரே என்று சொல்லிக்கொள்ளுங்கள்.

''நிரபராதிகளாகிய எங்கள் கண்ணீர் எம் சந்ததிகளுக்கு உணவும் நீரும் கதகதப்பான போர்வையும் ஆகக்கடவதாக என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்.

''காலம் என் பிதாவின் கூர்ப்பட்டயம். அது உயிர்களைத் துணிக்கும். நகரங்களைத் துணிக்கும். அனைத்து ஞானங்களையும் துணிக்கும். நீதியின் பாதங்கள்முன் அது சரியும்.

''ஏனெனில் நீதி என் பிதாவின் இச்சையாக உள்ளது. எனக்கிடப்பட்ட ஆக்ஞையாக உள்ளது. பூமிமீது மக்களின் விதியாக

உள்ளது. எப்போதும் அப்படி யே இருக்கும் என்று நான் மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

"ஆமென்."

அவன் பெருமூச்சுடன் திரும்பிக் குழந்தைகளைப் பார்த்தான். கையில்லாத குழந்தை அவன் தோளில் தலைவைத்துத் தூங்கி விட்டிருந்தது. அதன் உள்ளங்கால்களின் வெளுப்பு கிழிந்த சப்பாத்தினூடாகத் தெரிந்தது. அவன் குழந்தைகளை அழைத்தபடி முன்னகர்ந்தான். தரைமீது பனிப்படலம் புகைபோல இறங்கியிருந்தது. குழந்தைகளுடன் படிமீது ஏறுவதுபோல அதன்மீது அவன் ஏறினான். அந்தரத்தில் அவர்கள் ஏறிச் சென்றனர்.

கூட்டம் விழி பிதுங்கப் பார்த்து நின்றது. பாதிரியார் அலறியபடி முன்னால் ஓடி "என் கர்த்தரே, என் மீட்பரே, என்னைக் கைவிடாதிரும்" என்று கூவினார். கூட்டம் பின்னால் ஓடி கைநீட்டி அழுதது.

"உங்கள் இதயம் இலகுவாயிற்று என்றால் வரலாம்" என்றான் அவன்.

"தேவனே, உமது வார்த்தை ஒவ்வொன்றும் என்னை சுத்தப்படுத்தியது. எனக்கு இனி ஞானமும் இல்லை. வஞ்சம் என ஏதும் மீதியுமில்லை. ஆயினும் என்னால் எழ முடியவில்லையே" என்றார் புகாரின்.

கூட்டத்திலிருந்து பலூஷ்கா முன்னால் ஓடினாள். "லிஸ்ஸி எங்கே போகிறாய்? இரு... இரும் தேவனே" என்று காற்றில் தாவியேறி லிஸியை அடைத்தாள்.

அவன் "ஸ்திரீயே, உனது முலைப்பால் உன்னை ரட்சித்தது" என்றான் அவன்.

பெண்கள் கூட்டம் கூட்டமாக ஓடினார்கள். தங்கள் குழந்தைகளைக் கூவி அழைத்துக் கைநீட்டினார்கள். வானில் தாவி ஏறி அவர்களை அணைத்து முத்தமிட்டுச் சிரித்து அழுதார்கள். வானில் குதூகலமாக அவர்கள் நிரம்பினார்கள்.

கிழிந்த கந்தல்களும், பரட்டைத் தலையும் கொண்ட பைத்தியம் ஒன்று பாய்ந்து மேலேறியது. உடனே பிற பைத்தியங்களும் உரக்கச் சிரித்தபடி படி ஏறிச் சென்றன.

"புகாரின் மாமா" என்று கூவியபடி லிஸி கைநீட்டினாள். "என் கைகளைப் பற்றிக்கொள்ளுங்கள் சீக்கிரம்."

புகாரின் ஓடி அவளது மெலிந்த கரங்களைப் பற்றினார். கால்களில் காற்று படிபோலத் தட்டுபட்டது.

"தொப்பைத் தாத்தா" என்றபடி ஒரு பயல் பாதிரியாருக்குக் கை நீட்டினான். பாதிரியார் திகைத்து "என் மீட் பனே; நீதானா? இவ்வளவு நாள் என்னுடனே இருந்தாயே. உனக்கா இத்தனை நாள் வேதாகமம் சொல்லித் தந்தேன்? உன்னையா தண்டித்தேன்" என்று கூவினார். பயல் "பிடித்துக்கொள்ளுங்கள் தாத்தா, அழுதபடி விழுந்துவிட

போகிறீர்கள்'' என்றான். பாதிரியார் அவன் கைகளைப் பற்றி ஏறி அவன் காலடியில் சரிந்தார்.

''பலூஷ்கா என்னை விட்டுவிடாதே. எனக்கு நீயன்றி யாருமில்லை'' என்று மிகாயிஷ்கா கூவினான். ''என் தவறுகளை யெல்லாம் மன்னித்து விடு.''

''வாருங்கள் பிடித்துக்கொள்ளுங்கள்'' என்று பலூஷ்கா கை நீட்டினாள். அவன் ஓடிப்போய் அக்கைகளைப் பற்றி ஏறி அவளை அணைத்து, ''என் கண்ணே, இப்போதும் நீதான் என்னைக் காப்பாற்றினாய்'' என அழுதான்.

அத்தனை கூட்டமும் ஓடி வந்தது. தங்கள் குழந்தைகளையும் மனைவிகளையும் நண்பர்களையும் நோக்கி கை நீட்டியது. பற்றி, தொங்கி, மேகம்மீது ஏறிக்கொண்டது. விண்ணின் நீலப் பிரகாசத்தில் அன்பின் கண்ணீரும் முத்தங்களும் நிரம்பியிருந்தன. அவன் கையில்லாத குழந்தையை மெல்லத் தோள் மாற்றினான்.

''மாமா, அதை மட்டும் ஏன் நீங்களே வைத்திருக்கிறீர்கள்?'' என்றான் பெட்யா.

''ஏனெனில் இதற்குத்தான் யாருமே இல்லை'' என்றான் அவன்.

பின்பு ஏகாந்தமான பனிவெளியில் மௌனம் எஞ்சியது. பனி ஓநாய்கள் மட்டும் வானை ஏறிட்டு முகர்ந்தபடியும் மண்ணைப் பிராண்டியபடியும் நின்றிருந்தன. சில ஓநாய்கள் அமர்ந்து வானை நோக்கி முகம் தூக்கி வயிற்றை எக்கி ஆவேசமாக ஊளையிட்டன.

♦

12

மிஞ்சும் சொற்கள்

1

அன்புள்ள கதிர்,

உங்கள் கடிதம் கிடைத்தது. உங்கள் குரலைப் போலவே தெளிவும், திடமும் உடையகடிதம். என் எண்ணங்கள் மிகவும் குழம்பிச் சிதறி அலை கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தும் சிறந்த எதிர்முனையாக உங்கள் கடிதம் இருந்தது.

வீரபத்ரபிள்ளைபற்றி நான் எழுப்பிய பிரச்சினைகளைக் கட்சி மிக வெற்றிகரமாக எதிர்கொண்டுவிட்டது என்று எழுதியிருந்தீர்கள். ஒரு தொண்டர்கூட அதன் பொருட்டு எதிர்க்குரல் எழுப்பவில்லை என்று கூறினீர்கள். அப்படித்தான் நடக்கும் என்று நானும் அறிவேன். என் தொழி லாளிகளைப் பிற எவரைவிடவும் தெளிவாக நான் அறிவேன். என் தரப்பை எதிர்கொள்ள நான் ஒன்றரை மாதம் மனநல விடுதியில் இருந்த விஷயத்தை கட்சி முக்கிய ஆயுதமாகப் பயன் படுத்தும் என்பதும் நான் ஊகித்ததே. கட்சியும் என் கட்சியல்லவா?

நான் இழந்தவை என்னென்ன என்று பட்டியலிட்டிருந்தீர்கள். அடைந்தது எதுவும் இல்லை என்று நிரூபித்திருக்கிறீர்கள். வீரபத்ர பிள்ளைமீது நான் கொண்ட ஆர்வம் ஒரு தற்காலிகத் தற்கொலை என்ற உங்கள் கணிப்பு எனக்கு ஏனோ உவப்பையே அளித்தது. அதை ஒரு பகுதித் தற்கொலை என்று மேலும் பொருத்தமாகக் கூறுவேன். ஆனால் உங்கள் புரிதலில் மிக முக்கிய மான பிழை ஒன்று உள்ளது. வீரபத்ரபிள்ளை பிரச்சினையை எழுப்புவதன் மூலம் எதையோ அடைய நான் திட்டமிட்டிருந்ததாகவும், அத் திட்டம் பலிக்காது போனமையினால் ஏமாற்ற மடைந்திருக்கக்கூடும் என்றும் ஊகித்திருக் கிறீர்கள். உண்மையில் நான் எதிர்பார்த்தது ஒருவிதமான நிம்மதியை மட்டும்தான். நீண்டகாலம் என்னுள் நெருடிய ஒரு முள் பிடுங்கப்பட்டபின் ஏற்படும் நிம்மதி. ஆனால் அடைந்தது நிறைவுணர்வை. என் வாழ்விற்கு அர்த்தம் தருவது எதுவோ அதை கண்டடைந்துவிட்ட, செய்ய வேண்டியது என்ன என்று ஐயமின்றித் தெளிவாகிவிட்ட, நிறைவு அது.

உங்கள் புன்னகையை இப்போது என்னால் காணமுடிகிறது. உங்கள் முகம் மனக்கண்முன்

வரும் போதெல்லாம் ஓயாது ஒலிக்கும் உங்கள் குரலின் பின்னணியிலேயே அதைப் பார்க்க முடிகிறது. தியாகமும் இலட்சியவாதமும் முந்தைய நூற்றாண்டுகளுக்குரிய குணநலன்கள் இல்லையா? ''பழங்குடியினர் தங்களை ஒரு கூட்டு ஆளுமையாக மட்டும் பார்த்தார்கள். அதிலிருந்துதான் தியாகமே உயர்ந்த வாழ்வுநிலை என்ற கருதுகோள் உருவாகி, இருபது நூற்றாண்டுகாலம் உலகை ஆண்டது. இது தனியாளுமை மட்டும் எஞ்சிய நூற்றாண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தத்துவத்தில் தோன்றி, சமூகவியல் மற்றும் மதம் வழியாக அரசியலுக்கு வந்த தனிமனிதன் என்ற கருத்துநிலை இப்போது மனிதனின் ஒரே மனநிலை ஆகிவிட்டது. இனி தியாகம் என்பது டைனோஸரஸ் முட்டைபோல வியப்பூட்டும், ஆராயத் தூண்டும், அச்சம் தரும் கற்பனைகளை எழுப்பும், ஐதீகங்களில் பின்னிப் பிணைந்திருக்கும், அர்த்தமற்ற ஓர் உருண்டை அது'' என்று 'இலட்சியவாதங்களும் அரசியலும்' என்ற கட்டுரையில் எழுதியிருந்தீர்கள். இருபத்தோராம் நூற்றாண்டு திண்ணங்கள் இல்லாதது. எதுவுமே உறுதியானதல்ல என்கையில் எதன் பொருட்டும் எதையும் இழப்பது அறிவுடைமையாகாது என்று எழுதியிருந்தீர்கள். கதிர், உங்களிடம் விவாதிக்க என்னால் முடியாது. எத்தனை தெளிவாக, மிகச்சரியான சொற்களைத் தேர்ந்து, அடுக்கிப் பேசமுடிகிறது உங்களால்! சித்தாந்தங்களிலும் கோட்பாடுகளிலும் ஈடுபடுபவர்களின் மனம் இரும்பாலும், மின்சாரத்தாலும், கணிப்பொறியாலும் ஆனது. அதன் பயங்கர வல்லமையை அஞ்சுகிறேன். என் விரல்கள் அதன் ஆக்ரோஷ இயக்கத்தினூடே மாட்டிவிடும் என்று பயப்படுகிறேன். இக்கடிதத்தை எழுத ஆரம்பிக்கும் போது இருந்த நம்பிக்கைகூட இப்போது எனக்கு இல்லை.

பைத்தியத்திலிருந்து மீண்டபிறகு - இது ஒரு பெரிய கதை. என்னால் எழுத முடியாது - மீண்டும் பைத்திய நாட்களை நினைவுகூரும்போது என்னுள் முதலில் எழும் பதற்றத்தையும் அச்சத்தையும் தாண்டி ஒரு ஆர்வமும் பரவசமும் ஏற்படுகிறது. இதைப்பற்றி ஒரு சித்தாந்தி என்ற முறையில் நீங்கள் யோசிக்க வேண்டும் கதிர். மனப்பிறழ்வு ஓர் இடைவெளி. அல்லது இளைப்பாறல். தினம் கான்கிரீட் கட்டிடங்களினூடாக வாழ்பவர்கள் சில தினங்கள் காட்டுக்குள் உலவி வருவதுபோல. சிந்தனை மூலம் வாழ்வை அறிய விரும்பும் எவரும் அவ்வப்போது சிறு மனப்பிறழ்வுகளுக்குச் சென்று வருவது மிக உசிதமானது என்பது என் எண்ணம். என் மனப்பிறழ்வுகளில் முக்காலங்களும், வரலாறும், நிகழ்தளமும், புனைவும், யதார்த்தமும் கலந்துவிட்டதை அறிந்தேன். இதுதான் மிக முக்கியமானது கதிர். நாம் வாழும் இந்த உலகம் பௌதிகவிதிகளின் இரும்புப் பிடிக்குள் சிக்கியுள்ளது. இங்கிருந்து நாம் சிந்திப்பவையெல்லாம் அவ்விதிகளின் நீட்சியாகவோ, அல்லது அவ்விதிக்குக் கட்டுப்பட்ட சிறு விலகல்களாகவோ மட்டுமே உள்ளன. இந்தக் காலத்தில், இந்த இடத்தில் செல்லுபடியாகும் உபயோக மதிப்புள்ள சிந்தனைகளை மட்டுமே இங்கிருந்துகொண்டு நம்மால் உருவாக்க முடியும். காலத்தையும் இடத்தையும் தாண்டிச் செல்ல இப்பூமியின் பௌதிக

ஒழுங்கைக் கலைத்துப் போட்டேயாக வேண்டும். மனம் கலையும்போது ஒன்று தெரியவரும். பூமியின் பௌதிக ஒழுங்கு என்பது உண்மையில் நமது மூளையின் பௌதிக ஒழுங்கேயாகும்.

ஆரம்பத்தில் காரண காரியமற்று சிதறிய உலகம் ஏற்படுத்தும் இம்சை சாதாரணமானதல்ல. ஏதோ தொழில்நுட்பக் கோளாறினால் உங்கள் தொலைக்காட்சி தறிகெட்டு காட்சி சிதறி ஓட ஆரம்பித்தால் அதிகபட்சம் எத்தனை நேரம் அதை உங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அதை உங்களால் நிறுத்த முடியவில்லை. பரபரக்கிறீர்கள். மின்பொறிகளுக்காகத் தேடிச் சலிக்கிறீர்கள். அதைப் பார்க்காமலிருக்க முயல்கிறீர்கள். உங்கள் அறையில் புற உலகம் என இருப்பது அது மட்டுமே. கதிர், கற்பனைசெய்து பாருங்கள். என்ன செய்ய முடியும்? மனம் கலையும் அனுபவமே மனிதன் எதிர்கொள்ளும் மிகப் பெரிய வன்கொடுமை. அது ஒரு பாறாங்கல்லைத் தூக்கி உங்கள் மூளையை நசுக்குவதுபோல. அந்த இம்சையின், அச்சத்தின் கணங்களில் ஒவ்வொரு இடைவெளியிலும் என் பிரக்ஞை மீளவே தவித்தது. ஏதோ ஒரு தருணத்தில் எனக்கு நாகம்மையின் பிடி கிடைத்தது. நான் அவளைப் பற்றிக்கொண்டேனா இல்லை அவள் என்னைப் பற்றிக் கொண்டாளா என்று தெரியவில்லை. சிதறிய நிகழ்பிம்பங்கள் கொப்பளித்தோடிய அந்த நதிப்பிரவாகம் என்னை இழுத்தது. என் கை தெறித்து, விரல்கள் உடையப்போயின. எப்படியோ நாகம்மை என்னை இழுத்துக் கரையேற்றிவிட்டாள். ஈரம் சொட்டச்சொட்ட என்னைத் தன் அணைப்பிற்குள் இழுத்துக்கொண்டாள். இருண்ட படுக்கையறை. அவள் விழிகள் மென்மையாக மின்னிக்கொண்டிருந்தன. என்னை முத்தமிட்ட படியும் அணைத்தபடியும் குமுறி அழுதாள். அழும் அவளை அச்சத்துக்காட்பட்டவனைப்போல அணைத்துக்கொண்டேன். இறுக்கி நெரித்துக் கொல்ல விழைபவன்போல. கதிர், இந்தக் கடிதம் அந்தரங்கமானது. எனவே இதை எழுதுகிறேன். அவள் யோனிதான் என்னை ஒரு புள்ளியில் நிலைநிறுத்தியது. இப்போது எழுதுகையில்கூட பரவசம் உண்டாகிறது. அது மாறாததாக, படுவேகமாக இயங்கும் ஒரு வட்டத்தின் அசைவற்ற புள்ளியாகப் பட்டது. அதில் என்னை இணைத்துக்கொண்டதும் தறிகெட்டுப் பரவிய பிம்பவெளி அப்படியே உறைந்தது. அவள் வயிற்றுக்குள் வேறு ஒரு காலம் உள்ளது. நாமறிந்த பிம்பங்கள் எல்லாம் இறந்தகாலத்தவையும் நிகழ்காலத்தவையும் ஆகும். அந்தச் சதைக் குகையின் இருண்ட பிலங்களுக்கு அப்பால் உள்ளது எதிர்காலம். நாம் ஒருபோதும் அறிய முடியாத எதிர்காலம். என் சதை நீட்சி வழியாக அதைத் தொட எம்பினேன். ஏதோ ஒரு கணத்தில் தொட்டுவிட்டேன். எதிர்காலமே நமக்கு வாழ்வின் அர்த்தத்தைத் தர முடியும். இறந்தகாலம் பிரமைகளை தருகிறது. நிகழ்காலம் பிம்பங்களைத் தருகிறது. எதிர்காலம் நம்பிக்கையை, உத்வேகத்தைத் தருகிறது. அவளுக்குள் இருந்து வேறு ஒரு பக்கமாக, ஒருகதவைத் திறந்து, புத்தம் புதிய மனிதனாக, நான் இறங்கி பூமிக்கு வர முடியும். உளறுகிறேன் என்று புரிகிறது. நிறுத்திக்கொள்கிறேன். நான் மீண்டுவிட்டேன் கதிர். அவள் என்னை மீண்டும் பெற்றெடுத்து, மடியிலிட்டு சீராட்டி, உணவூட்டி, வளர்த்தெடுத்தாள். அவள் என் அன்னை.

மனச் சஞ்சலத்தின் நாட்களில் நான் சென்ற சிவாலயம் ஒன்றின் காட்சிகள் மனதில் வருகின்றன. விண்ணையும் மண்ணையும் இணைக்கும்படி எழுந்த பூதரூபமான லிங்கம். ஆனால் அது ஆவுடைமீது அமர்ந்திருக்க வேண்டும். ஆவுடை இல்லாத லிங்கம் அர்த்தமற்ற கற்பிண்டம் மட்டுமே. லிங்கமே ஞானமும் செயலும் ஆகும். ஆயினும் ஆவுடையே அதை நிலை நிறுத்தும் அடித்தளம். ஆவுடை சக்தியின் தாய்மைப் பீடம். தாய்மை பெண்களுக்குரியது என்று எண்ணியிருந்தேன். புரட்சியில் பெண்கள் இல்லாததனாலேயே அது பேரழிவைச் சந்தித்தது என்றும் எண்ணி யிருந்தேன். இப்போது தெரிகிறது ஆவுடை ஒவ்வொரு மனதிலும் உண்டு. நம் ஞானமும் தீரமும் அதில்தான் முளைத்தெழ வேண்டும். அதில்தான் அடங்கவும் வேண்டும். அதில்லாத எழுச்சி வெறும் அகங்காரக் கொப்பளிப்பு. சரிந்து பூமிமீது விழுகையில் பேரழிவு.

உங்களுக்கு இதெல்லாம் அபத்தமாக, பைத்தியக்காரத்தனமாகப் படும் என்பது புரிகிறது. உங்களை வாய்விட்டுச் சிரிக்கவைக்கக்கூடிய ஒரு தகவலையும் கூறுகிறேன். நண்பர்களிடம் கூறி இனிப் பல வருடங்கள் நீங்கள் சிரிக்கலாம். அந்த அளவு பித்துக்குளித்தனமான செயல் அது. சென்ற பௌர்ணமி தினத்தன்று திருவட்டார் ஆற்று மணலில் நான் ஒரு சமஸ்தாபராத பூஜைக்கு ஏற்பாடு செய்திருந்தேன். உள்ளூர் தினசரிகளில் அறிவிப்பும் தந்திருந்தேன். பிறர் அதை வெறும் கேலிக்கூத்தாக மட்டுமே கருதுவர் என்றும், நானும் பாஸ்கரனும் மட்டுமே எஞ்சுவோம் என்றும் நினைத்திருந்தேன். மாறாக எண்பத்தாறு பேர் வந்திருந்தனர். முன்னாள் கம்யூனிஸ்டுகளும், நக்சலைட்டுகளும் மட்டுமல்ல, பொதுமக்களும், கட்சி உறுப்பினர் சிலரும்கூட வந்திருந்தார்கள். பாக்காலை அச்சுதக் கணியாரின் புரோகிதத்தில் அனைவரும் பூசை செய்தோம். மூன்று நாட்கள் முழு உபவாசமிருந்து அங்கு வந்திருந்தோம். பசி மந்தமானபோது மனமும் மந்தமடைந்துவிட்டது போலிருந்தது. நிலா வானில் பெரிய மஞ்சள் நிற வட்டமாக ஏறி வந்திருந்தது. குளிர்ந்த நீரில் குளித்தோம். ஈர உடையுடன் சமையல் செய்தோம். மணற்பரப்பில் அடுப்புச்சுவாலைகள் திகுதிகுவென எரிந்தபோது நிழல்கள் எங்கும் நெளிந்தன. அந்த நிழல்களினூடாக நிழல்களாக பல ஆத்மாக்களும் கலந்து நிற்பதுபோலப்பட்டது. ஒன்பது வகை உணவுகளை சமைத்து முழு வாழையிலைகளில் பரிமாறினோம். புதுத்துணியும் வாய்க்கரிசியும் படைத்தோம். கணியார் மந்திரங்களைச் சொன்னார். ஏதோ ஆதிமலையாளப் பிரார்த்தனை. நினைப்பிற்கெட்டாத் தொலைவில் எங்கள் மூதாதையரான பழங்குடிகள் அதைச் சொல்லியிருக்கலாம். ஏதோ ஆதி மூதாதை குற்றவுணர்வின் சிகரமேறி, வானைத் தொட்டு மனம் விரிந்தபோது, அடைந்த மந்திரம். நானும் சுற்றமும் தெரிந்தும் தெரியாமலும் செய்துள்ள அனைத்துப் பிழைகளுக்கும், மறதிகளுக்கும், கர்வத்திற்கும், சூட்சும சரீரிகளாக அங்கு வந்துள்ள மூதாதையரிடம் மன்னிப்புக் கோரினோம். ஒவ்வொருவரும் பெயர்களை நினைத்துக்கொள்ளும்படி கணியார் கூறியபோது நான் புகாரினை, வீரபத்ரபிள்ளையை, ஆஸிப் மன்டல் ஸ்டமை, கார்க்கியைப் பெயர் தெரியாது மறைந்த அனைத்துத் தியாகிகளையும் பலிகளையும் எண்ணிக்

கொண்டேன். விரல்நுனியை அறுத்து சோறுமீது ஒரு துளி உதிரத்தை வீழ்த்தினோம். ஒரு மணிநேரம் நீண்டுநின்ற சடங்கு முழுக்க என் உடம்பு அதிர்ந்தபடியே இருப்பதை உணர்ந்தேன். பலிச்சோற்றை ஆற்றில் மூழ்கியபடி பின்னால் சரித்து மிதக்கவிட்டோம். ஆறு மிக மெல்லிய ஒலியுடன் நீர்வாய் திறந்து அப்பலிச் சாதத்தை உண்டது. எங்கும் அமைதி நிரம்பியிருந்தது. பலர் விம்மிவிம்மி அழுவதையும் கண்டேன். மேலே நட்சத்திரங்கள் பல்லாயிரம் விழிகளுடன் பார்த்து நின்றன.

திரும்பும்போது எனக்கு ஓர் எண்ணம் உதித்தது. என்றோ ஒரு நாள், ஒரு நதியில், இப்படி ஒரு சமஸ்தாபராத பூஜையில், என் பெயர் உச்சரிக்கப்படும் போதுதான் எனக்கு அளிக்கப்பட்ட வாழ்வு முழுமையை அடைய முடியும் என்று. அந்த எண்ணம் எனக்கு அப்போது அளித்த உத்வேகத்தையும், என் நரம்புகளிலெல்லாம் பெருகிய துடிப்பையும் என்னால் ஒருபோதும் உங்களுக்குக் கூறிப் புரியவைக்க முடியாது.

என் மனப்பிறழ்வின் பயணத்தில் அவனைச் சந்தித்தேன். மானுட குலம் கொண்ட மிகப் பெரிய பலி அவன்தான். அவன் ரத்தத்தின்மீது அமர்ந்துதான் இன்று நீங்களும் நானும் அத்தனை நியாயவாதங்களையும் பேசுகிறோம். என் ஞானம் சைபீரியப் பனிவெளியில், கடுங்குளிரில், கொல்லப்பட்ட நிரபராதிகளின் அழுகைக் குரல்கள் பின்னணியில் ஒலிக்க, ஏசுவிடமிருந்து நேரிடையாகப் பெற்றுக்கொண்டது. மீண்டும் குழப்புகிறேன். கினியாழ்வின் என்ற பெயரில் எழுதப்பட்டு, வீரபத்ரபிள்ளையின் கைப்பிரதியில் இருந்த ஒரு சிறுகதையையே குறிப்பிடுகிறேன். அக்கதை எழுத்துகளில் இருப்பதைவிட பலமடங்கு உக்கிரத்துடன் என்னில் நிகழ்ந்தது. புகாரின் ஆகமாறிய நான் கிறிஸ்துவை சந்தித்தேன். அது ஓர் உச்சநிலை. வீரபத்ரபிள்ளையினூடாக, புகாரினூடாக, நான் செய்த பயணத்தின் இறுதிக்கணம். அவனை தொட்டு உலுக்கி அவனிடமிருந்து என் விடைகளைப் பெற்றேன்.

கிறிஸ்து ஒரு மனிதனல்ல எனக்கு. அப்படி ஒரு மனிதன் வாழவே இல்லை என்றுகூட ஒருவர் கூறலாம். அவன் வெறும் கற்பனையாகவே இருக்கக்கூடும். துன்பமும் அவமானமும் அடைந்த மனங்களின் வழியாக அவன் பிறந்து வளர்ந்து முழுமை பெற்றிருக்கக்கூடும். அவன் ஒரு முகம் கூட அல்ல. அத்தனை மகத்தான முகங்களும் அவனுடையதேயாகும். தியாகம் தியாகத்தினாலேயே அர்த்தமுய முழுமையும் பெறுகிறதேயொழிய விளைவுகளினால் அல்ல என்றான் அவன். தியாகத்தை தியாகம் மூலமே கௌரவிக்கவும், பதில் தரவும் முடியும் என்றான். தியாகத்திற்கு தியாகமே நன்றியாகும் என்றான். ஏன், தியாகத்தை தியாகம் மூலமே புரிந்துகொள்ளக் கூட முடியும். உளறுகிறேன் இல்லையா? இதைவிடவும் பித்துக்குளித் தனமான சொற்களால் மட்டுமே இன்னும் பொருத்தமாகவும் தெளிவாகவும் அதைக் கூற முடியும். குழந்தையின் மழலை மூலமோ, பித்தனின் உளறல் மூலமோ, கனவின் குமுறல் மூலமோ. அப்போதுகூட அது மொழி ஒலிக்கும் அர்த்தத்திற்கும் கட்டுப்பட்டது. மொழியைச் சிதறடித்துவிடும் மன

நெகிழ்வின் நுனியில், ஒரு துளிக் கண்ணீர் மூலம் இதைத் துல்லியமாகக் கூறிவிட முடியும்.

நேற்று ஒருவன் எனக்கு எழுதியிருந்தான். அவன் பெயர் ஜெயமோகன், அவனை எஸ்.எம்.ராமசாமி, கந்தசாமி (ரிஷி) இருவருக்குமே மாணவன் என்கிறார்கள். சில கதைகளும் இருநாவல்களும் எழுதியிருக்கிறான். உணர்ச்சிகரமாக மொழியைக் கையாள அவனால் முடியும் என்று பட்டது. பிற்போக்குவாதி என்றும் வகுப்புவாதி என்றும் நம் தோழர்கள் குறிப்பிட்டார்கள். நம் தோழர்கள் ஒருவனை அவசரமாக முத்திரை குத்திக் கூச்சலிடும்போதே அவன் முக்கியமானவன் என்பது தெளிவாகிவிடுகிறது அல்லவா? எனக்கு அவனது அடையாளம் இப்படி தெளிவற்று இருப்பது மிகவும் பிடித்திருக்கிறது. இருமுறை அவனை சந்தித்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் என்னுள் ஊறிய எரிச்சல் ஞாபகம் உள்ளது. அவனது கர்வம், வெகுளித்தனமான நீண்ட பேச்சு, அலட்சியம் எல்லாம் கலந்த விசித்திர ஆளுமை நம்மைத் தொந்தரவு செய்வது. அவன் எழுத்தாளன் இல்லையேல் அவனுக்கு நண்பர்களே இருக்கமாட்டார்கள். இப்போதும் எனக்கு அவன்மீது நம்பிக்கை எழவில்லை. அவனால் அழ முடியுமா என்று தெரியவில்லை. கினியாழ்வினின் இந்தக் கதை ஒவ்வொருமுறையும் கண்ணீர்விட்டபடி இதைப் படிக்கிறேன். எழுதியது எவராக இருப்பினும் இதை எழுதும்போது சில தருணங்களில், சில வரிகளில், கிறிஸ்துவை மிக அருகே அவன் உணர்ந்திருக்கிறான். அதிர்ஷ்டசாலி அவன். இந்த இளம் எழுத்தாளன் அதை எப்படிப் பெயர்த்தெழுதப் போகிறான்? பிரதியெடுக்கும் போது அவன் கைநடுங்குமா? உதடுகள் அழுந்த, மனம் குமுறி எழ, அவன் கண்ணீர் உகுப்பானா? அவன் என் கைப்பிரதிகளைக் கேட்டு எழுதியிருக்கிறான். இதை ஒரு நாவலாக ஆக்க விரும்புகிறானாம். இந்நாவலை எவர் படிப்பார்கள்? சித்தாந்தக் கர்வமும், தனிநபர் காழ்ப்பும் நிரம்பியவர்கள் என் கிறிஸ்துவை எப்படிக் காண முடியும்? எப்படி அவர்களால் இந்தப் பக்கங்களில் உள்ள ரத்தத்தையும் கண்ணீரையும் அறிய முடியும்? மீண்டும் அவர்கள் அதே சித்தாந்தங்களையும், கணக்கு களையும்தான் பிரயோகிப்பார்கள். கினியாழ்வினின் இக்கதையை எடுத்து வைத்து ஓர் உலர்ந்த மனம் விவாதத்தில் ஈடுபடுவதைக் கற்பனை செய்கையிலேயே என் உடலும் மனமும் பதறுகின்றன. ஆனால் கிறிஸ்துவுக்கு பாதுகாப்புத்தர எனக்கென்ன தகுதி? எத்தனை மோசமான அகங்காரம் அது. அவன் காணாத ஞான விவாதங்களா? அவன் அறியாத அவமதிப்பா?

இன்று கைப்பிரதிகளை அந்த எழுத்தாளனுக்கு அனுப்பிவிட்டேன். ஆனால் ஒன்று மட்டும் நிபந்தனை விதித்தேன். தலைப்பு நான் சூட்டுவதுதான். 'பின்தொடரும் நிழலின் குரல்.' புகாரினை, வீரபத்ரபிள்ளையை, என்னைப் பின்தொடர்ந்தது எங்கள் நிழல்கள்தாம். நிழலை ஒருவன் ஒருபோதும் தவிர்க்க முடியாது. அது மறுபாதி. அது நம்முடன் இடைவிடாது உரையாடுகிறது. ஒளியைத் தன்முன் கண்டு நடக்கும் ஒவ்வொருவர் பின்னாலும் நிழல் தொடர்கிறது. நிழலின் குரலை ஒருபோதும் நாம் புறக்கணித்து விடக்கூடாது.

நாம் மீண்டும் சந்திப்போம். சந்தித்தபடியேதான் இருக்கப் போகிறோம். வெவ்வேறு பெயர்களிலும், முகங்களிலும், காலம்தோறும். நீங்கள் குறிப்பிட்ட இரு நூல்களும் எம். முகுந்தராஜ் கைவசம் உள்ளன. உங்களுக்குத் தரும்படி அவரிடம் கூறியுள்ளேன். வேறென்ன?

சத்யாவிடம் என் பிரியமான விசாரிப்பைக் கூறவும். குழந்தை பிரவீன், குட்டிநீனா ஆகியோருக்கு என் பிரியமான முத்தங்கள்.

நாகர்கோயில்
8-12-96

உங்கள் அன்புள்ள,
அருணாசலம்

◆

2

அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய அருணாசலம் அவர்களுக்கு,

நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். போன மாதம் பார்க்க வந்திருந்தேன். தூங்கிக் கொண்டிருந்தீர்கள். டிராங்குலைசர் மாத்திரை களை சாப்பிட்டிருப்பதனால் மறுநாள்வரை தூங்கக் கூடும் என்று உங்கள் மனைவி சொன்னார் கள். பாப்பாவிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு திரும்பினேன். (எங்கப்பா புஸ்தகம் படிப்பார். புஸ்தகம் இல்லாமலும் படிப்பார் – இது கௌரியின் கண்டுபிடிப்பு. அப்படியே அம்மா மாதிரி வருகிறாள். பிரமாத மாகப் படிப்பாள் என்று தோன்றுகிறது.) நீங்கள் முழுக்க சுகமாகி ஓரிரு கூட்டங்களிலும் கலந்து கொண்டதாக ராமசாமி எழுதியிருந்தார். நான் மறுபடியும் அங்கு வர முடியவில்லை. விஷ்ணு புரம் அச்சேறிவிட்டது. பிரதி அனுப்பியிருக் கிறேன், தனித் தபாலில். ஆர்வமிருந்தால் படிக்கவும்.

அடுத்த நாவலாக உங்கள் கதையை எழுதலாம் என்று திட்டமிட்டேன். ராமசாமியும் ஊக்கமூட்டி னார். (அவருக்கு விஷ்ணுபுரம் பிடிக்கவில்லை. மண்மீது அந்நகரம் இல்லை என்று பெரிய மனக்குறை.) ஆனால் எழுத முயன்றால் வடிவமே உருவாகவில்லை. சலிப்பும் கோபமுமாக பல நாட்கள் சென்றன. யதார்த்தவாதபாணியில் பாதிவரை எழுதி அப்படியே விட்டுவிட்டேன். பிறகுதான் நான் செய்த தவறு புரிந்தது. பல்வேறு உள்போக்குகளும் பல்வேறு தரப்புகளும் உள்ள இந்த விஷயத்தை அனைத்தையும் உருக்கிக் கலந்து ஒற்றை வடிவமாக ஆக்கி எழுதுவது இதற்கு நியாயம் செய்வதாகாது. எனவே பாதிக்குமேல் உங்களிடமிருந்து பெற்ற கைப்பிரதிகளை அப்படியே பயன்படுத்திக்கொண்டேன். (தனிப் பட்ட கடிதங்களையும் உரிமையுடன் பயன் படுத்திக்கொண்டிருக்கிறேன்.) அவற்றை முறைப் படுத்தியமையில்தான் எனது புனைவுத் திறன் உள்ளது. நூலை அச்சுக்கு தந்திருக்கிறேன்.

இதை தொகுத்து முடித்ததும் எனக்கு ஏற்பட்ட முதல் மனப்பிம்பம் அடிபட்ட குழந்தை அம்மாவிடம் ஓடுவதுபோல அத்தனை

கதாபாத்திரங்களும் மதத்தை நோக்கி, ஆண்டவனை நோக்கி ஓடுவதுதான். கெ.கெ.எம், புகாரின், நீங்கள். இதற்கு நீங்கள் கூறப்போகும் பதிலை ஊகிக்கிறேன். 'அப்படி ஓடுகிறார்கள் என்பது ஒரு நிதரிசனம். அது ஏன் என்று வேண்டுமானால் நீ எழுதி எழுதிக் கண்டுபிடி. ஓடக்கூடாது என்று சொல்ல உனக்கு உரிமை இல்லை. வாழ்க்கை நீ எழுதும் நாவல் அல்ல.' அப்படித்தானே? உண்மைதான். போனவருடம் கெ.கெ.எம்மை சந்தித்தேன். கிருஷ்ணன் கோயில் வைகுண்ட ஏகாதசி விழா சம்பந்தமாக படுஉற்சாகமாக ஈடுபட்டிருந்தார். நாடகம் நடத்தப் போகிறார் என்று தெரிந்தது. 'கிருஷ்ண லீலா'வில் அவர்தான் குசேலர் என்றார்கள். எனது ஆர்வங்களை அவர் இம்மிகூடப் பொருட்படுத்தவில்லை. அது வேறு ஒரு நபர் என்று தோன்றியது. மனிதர்களின் உடல் ஒரு பொட்டலம். உள்ளடக்கம் நாமறியாமல் மாறிவிடுகிறது.

நீங்கள் வேறு ஒரு தளத்தில் இயங்குகிறீர்கள் என்பது புரியாமலில்லை. மதச் சடங்குகளையும், நம்பிக்கைகளையும், ஏன் கடவுள்களையும்கூட நீங்கள் குறியீடுகளாகவே பார்க்கிறீர்கள். உங்கள் அகத்தரிசனங்களை உங்களுக்கு நீங்களே தெளிவுபடுத்திக்கொள்ளும் பொருட்டே மதத்திலிருந்து குறியீடுகளைப் பெற்றுக்கொண்டீர்கள். பிறகு அக்குறியீடுகளினாலான ஒரு மொழியை உருவாக்கி அதில் தொடர்ந்து பேசுகிறீர்கள். ராமசாமிக்கு நீங்கள் எழுதிய கடிதத்தில் லிங்கம் என்பது இச்சாசக்தி என்றும் ஆவுடையே கருணை என்றும் கூறியிருக்கிறீர்கள். உதகபலி, சமஸ்தாபராத பூஜை, ஆத்மாக்களின் சாந்தி என்று நீங்கள் கூறுபவை எல்லாமே குறியீடுகள்தாம் என்று புரிகிறது. இக்குறியீடுகள், அவை குறியீடுகள் என்பதனால் தொடர்ந்து புதுப்புது அர்த்தங்களை அடையும். புதிய புதிய இடங்களுக்கு நகரும். நாளை சமஸ்தாபராத பூஜை ஒரு விழா ஆகலாம். பொருட்காட்சி ஒன்று கூடவே இணைக்கப்படலாம். அதை ஸ்மித்க்லைன் அண்ட் பீச்சாம் நிறுவனம் 'வழங்க' முற்படலாம்; யார் கண்டது? ஆனால் குறியீடுகள் இன்றி நாம் எதையும் பேசமுடிவதில்லை. அரூபமான மன எழுச்சிகளை குறியீடுகளாகவே நமக்குநாமேகூடப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே நமது முன்னோர் மாட்டிக்கொண்ட அதே விஷ வியூகத்தில்நீங்களும் மாட்டிக் கொள்கிறீர்கள். அரூப உணர்வுகளைத் தூலமாக ஆக்க குறியீடுகளைப் பயன்படுத்துகிறீர்கள். அக்குறியீடுகள் புதிய புதிய அரூப உணர்வுகளைப் பிறப்பிக்கும்.

ஆவுடையும் லிங்கமும் உங்களுக்கு ஒரு தத்துவத்தின் தூல வடிவங்கள். கருணை.கொண்ட புரட்சி என அதற்கு சொல்வடிவம் தருவீர்கள். (என்ன சொன்னாலும் பயன் ஒன்றுதான்.) யோசித்துப் பாருங்கள், பல்லாயிரம் வருடங்களாக அவை அரூபமான பற்பல மன உணர்வுகளை முதலில் பிரதிபலித்தும், பிறகு பிரதிநிதித்துவம் செய்தும் வந்துள்ளன. மெல்ல அவை பதில்கள் ஆயின. நாளடைவில் இறுதி விடைகளாயின. அவ்விறுதி நிலையில் அவைகொண்ட மௌனத்தைத் தாண்டி அவை எப்படி நவீன காலத்துடன் உரையாட முடியும் என்று எனக்குப் புரியவில்லை. லிங்கம் என்பது அடங்கிப் போன ஆயிரம் கோடி வினாக்களின் மையப்பதிலாக மாறிய வெறுமை அல்லவா? அம்மௌனத்தில் நீங்களும் மூழ்கி மறையவே

வாய்ப்புகள் அதிகம். அதற்கு உங்களுக்குப் பல்லாயிரம் முன்னோடிகள் இங்குள்ளனர். அதன் மௌனத்தை நீங்கள் கலைத்தால்... பார்க்கலாம்.

இறுதி விடைகளைக் குறித்து மிகவும் அஞ்சுகிறேன். இந்நாவல் உண்மையில் கினியாழ்வின் கதையுடன் புனைவுரீதியாக முடிந்துவிட்டது. ஆனால் நமது வாழ்வனுபவம் நம்மை மேலும் முன்னகர வைக்கிறது. மானுட அறம் பற்றிய அடிப்படை வினாக்களினூடாக நீங்களும், வீரபத்ரபிள்ளையும், புகாரினும் முன்னகர்கிறீர்கள். விடையே இல்லாத, மானுடம் உள்ளளவும் ஓயவும் செய்யாத, வினாக்கள் அவை.

விடையாக ஆளுக்கொரு கனவினை அல்லது குறியீட்டை உருவாக்கிக் கொள்கிறீர்கள். அது உங்களை ஆறவைத்து, இகஉலகில் இம்சையின்றி மேலும் வாழ வழிவகுக்கிறது. பரிகாரங்களினூடாகவே மண்ணில் நாம் வாழ்கிறோம் இல்லையா? இந்த ஆவுடைலிங்கத்தையும் சமஸ்தாபராத பூஜையையும் கண்டுபிடிக்காவிட்டால் நீங்களும் ஒரு சந்தையில் செத்துக் கிடக்க வேண்டியதுதான். பாவம் வார்னீஷ் வீரபத்ரபிள்ளை, கடைசிவரை அவருக்கு முழுத்திருப்தி தரும் படிமம் ஒன்றை உருவாக்கிக்கொள்ளவே முடியவில்லை. அன்புள்ள அருணாசலம், இந்த ஆவுடைலிங்கம் ஒரு விடை என்றால் அவ்வளவுதான் கதை. தேடலின் தொடக்கம் என்றால் நல்லது. ஆனால் கனகச்சிதமாக கூறப்படும் எதுவும் ஏற்கனவே முடிவுக்கு வந்து விட்ட ஒன்றே. ஆனால் அந்த ஆத்மாக்கள்... சாந்தியடையாத பலகோடி மனக்கொதிப்புகள், இருண்டவானத்தில் தூங்காது விழித்திருக்கும் கண்கள். – அவை உங்களுக்குள் மனத்திற்கும், ஆழ்மனதிற்கும், நனவிலிக்கும் அப்பால் உள்ள மேலும் பிரம்மாண்டமான ஒரு மனதில் உள்ளவை அல்லவா? அதை வான்மனம் (சிதாகாசம்) என்கிறது மரபு. பித்ருலோகம் இருப்பது அங்குதான். நீங்கள் போடும் பலிச்சோறு அங்கு சென்று சேரும் என்று படவில்லை. பல நூறு வருடங்கள் தொடர்ந்து அப்பலிச்சோறு மூலம் ஒரு படிக்கட்டு ஒன்றை உருவாக்கினால்தான் ஒருநாள் உங்கள் வாரிசுகளில் ஒருவரின் பலிச்சோறு அங்கு சென்று சேர முடியும். அதுவரை மானுட குலத்தின் சிதாகாசம் தவிக்கும் விண்மீன் கண்களின் பெருவெளியாகவே இருக்கும்.

ஒன்று சொன்னால் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே? தல்ஸ்தோய், தஸ்தயேவ்ஸ்கி படைப்புகளைப் படிக்கும்போது எனக்கு ஒரு வியப்பு மனதை அறையும். என் 'நாவல்' என்ற விமரிசன நூலில் இதைப் பற்றி கூறியிருக்கிறேன். எத்தனை மகத்தான வினாக்களை எழுப்பிக் கொள்கிறார்கள் அவர்கள்! அவ்வினாக்களின் இறுதிக்கணத்தில் பதிலின்மையின் திறந்தவெளியில் நின்றபடி பகற்கனவு ஒன்றை நெய்து விரித்துக் காட்டிவிட்டு விடைபெறுகிறார்கள். காலத்தின் போக்கில் அவ்வினாக்கள் மேலும் உக்கிரம்கொண்டு எரிய, அந்த பகற்கனவுகள் மட்கி நைந்து பரிகாசத்திற்குரியனவாகக் கிடக்கின்றன. இருபதாம் நூற்றாண்டை போரற்ற காலகட்டமாக கற்பனை செய்த தல்ஸ்தோயும், 1984-ல் மனிதர் களிடையே துவேஷங்கள் மறைந்துவிடும் என்று கனவு கண்ட தஸ்தயேவ்ஸ்கியும் ('அப்பாவியின் கனவு' படித்திருப்பீர்களே)

மறுகன்னத்தைக் காட்டச் சொன்ன கிறிஸ்துவுக்கு உகந்த சீடர்கள்தாம். புகாரினும், வீரபத்ரபிள்ளையும், நீங்களும் தல்ஸ்தோய் அறையப்பட்ட சிலுவையை (ரயில் நிலைய பெஞ்சு, இல்லையா?) வணங்க வேண்டியவர்கள். ஒரு புதுச் சித்தாந்தம் மண்டையில் ஊறுகிறது; சொல்லவா? அடிப்படை வினாக்களை எழுப்பிக்கொண்ட எவரும் அசட்டுக் கனவுகளில் அடைக்கலம் கண்டுகொள்கிறார்கள். எத்தனை தூரம் வினாக்கள் தீவிரமடைகின்றனவோ அத்தனை தூரம் விடையின் அசட்டுத்தனமும் தீவிரமடைகிறது. கிறிஸ்துவின் விடையின் அசட்டுத்தனத்தை அடைய நீங்களெல்லாம் இன்னும் வெகுதூரம் போக வேண்டும்.

புகாரிவைப் பிடித்து மேகங்களுக்குத் தூக்கியது கிறிஸ்துவல்ல; லிஸிதான். அது அன்னா பெற்றிருக்கூடிய குழந்தை. நான் புரிந்துகொண்டது இவ்வளவுதான். என்னால் உங்களையும் சரி, வீரபத்ரபிள்ளையையும் சரி, புகாரினையும் சரி, சற்றும் புரிந்துகொள்ள முடியவில்லை. உங்கள் மன உத்வேகங்களும் பரவசங்களும் எனது தட்டையான உலகில் மிகையான நாடக நடிப்பு போலிருக்கின்றன. ஆனால் நீங்கள்தான் மானுடத்தின் மிகச் சரியான பிரதிநிதிகள் என்றும் படுகிறது. என்னால் புரிந்துகொள்ள முடியாமலிருப்பது மனித மனம்தான், வரலாறுதான். எளிய மகத்துவங்கள் மண்ணில் பூக்கும்போதும் வானை நோக்கி நிமிர்ந்து ஏங்கும் இந்த அற்புதமான, அபத்தமான, உயிரினத்தை அறிய நான் இன்னும் எத்தனை நாவல்கள் எழுதவேண்டும்!

ஒன்று செய்யலாம். எழுதிக்கொண்டே இருக்கலாம். எழுதி முடிக்கும்போதுதான் இந்த வெறுமையும் துக்கமும். அடுத்த நாவலைத் தொடங்கிவிட்டேன். 'அசோகவனம்'. ஏன் அந்தப் பெயர் என்று தெரியவில்லை. நாவலை எழுதிய பிறகுதான் கூற முடியும். எழுதியபடியே இருக்க வேண்டியதுதான். எழுதும்போது நான் தோல்வியற்றவன், துயரமில்லாதவன்.

தங்கள்

ஜெயமோகன்

தருமபுரி

12-8-98

◆

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி நம் காலகட்டத்தின் பெருங்கனவொன்றின் சரிவு. அத்தகைய எழுச்சி வீழ்ச்சிகளினாலானதே வரலாறு. அப்படியெனில் இக்கனவுகள் கொண்ட கோடிக்கணக்கான பலிகளுக்கு என்ன அர்த்தம்? இலட்சியவாதம், தியாகம் ஆகியவை வரலாற்றின் பெரும்பரப்பில் எப்படிப் பொருள்படுகின்றன? ஓர் இடதுசாரி அறிவுஜீவியினூடாக இவ்வினாக்களின் அலைகள் குமுறி ஓய்வதன் கதை இந்த நாவல். மானுட அறத்தின் அடிப்படைகளைக் குறித்த ஒரு தேடல்.

தமிழினி

ஓவியங்கள்: வான்கா